FREEDOM AT MIDNIGHT



# நள்ளிரவில் சுதந்திரம்



டொமினிக் லேப்பியர் - லேரி காலின்ஸ்

# நள்ளிரவில் சுதந்திரம்

## (FREEDOM AT MIDNIGHT)

டொமினிக் லேப்பியர்
லேரி காலின்ஸ்

**மின்னூலாக்கம் : செல்லா**

தமிழில்
வி. என். ராகவன்
மயிலை பாலு

அலைகள் வெளியீட்டகம்
சென்னை - 600 024.

மின்னூலாக்கம்

செல்லா

www.minnoolakam.blogspot.com

ஆசிரியர்களின் பிற நூல்கள்

O Jerusalem!
Is Paris Burning?
Or I'll Dress You in Mourning
Mountbatten and The Independent India
Mountbatten and The Partition of India
The Fifth Horseman

உரிமை © டொமினிக் லேப்பியர் மற்றும் லேரி காலின்ஸ், 1997

அனைத்து உரிமைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிப்பாளரிடமிருந்து எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் இந்த நூலின் எந்தப் பகுதியையும் எந்த வடிவத்திலும் பயன்படுத்தக் கூடாது.

விலை : 250 ரூபாய்

நள்ளிரவில் சுதந்திரம் ○ ஆங்கில மூலம் : டொமினிக் லேப்பியர் – லேரி காலின்ஸ் ○ தமிழாக்கம் வி.என்.ராகவன், மயிலை பாலு ○ முதல் பதிப்பு ஆகஸ்டு 2001 ○ வெளியீடு : அலைகள் வெளியீட்டகம், 25 தெற்குச் சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை 600 024. தொலைபேசி : 4815474. ○ அச்சுக் கோர்ப்பு – அச்சாக்கம் : வைகை பிரிண்டர்ஸ், சென்னை – 600 002. ○ அட்டை முகப்பு வடிவமைப்பு ஓவியர் N. ரவிச்சந்திரன், ○ அட்டை அச்சாக்கம் : பிரிண்ட் ஸ்பெஷாலிட்டிஸ், சென்னை – 600014. ○ நூலாக்க விவரம் : டெம்மி 1/8, பக்கங்கள் : 680, 16 கி.மேப் லித்தோ, 10 புள்ளி எழுத்து, அட்டைக் கட்டு.

# அணிந்துரை

தமிழகத்தில் அறிவுச் செழுமை வளர்வதற்கும், பல துறைகளில், பல மட்டங்களில் பயன்ளிப்பதற்கும் உள்ள தடைகளில் ஒன்று தமிழில் மொழிபெயர்ப்புகள் பெருமளவில் இல்லாமை. அறிவு அசுர வேகத்தில் வளரும் இன்றைய காலத்தில் பல மொழிகளின் சிறந்த படைப்புகள் தமிழில் கிடைக்கப் பெறுவது தமிழ் மக்களின் வளர்ச்சிக்கு ஆதாரத் தேவையாகும். மற்ற பல உலக மொழிகளின் நூல்கள் இல்லாவிட்டாலும், நவீன இந்தியாவின் வாழ்வுடன், விதியுடன் இரண்டறக் கலந்து விட்ட ஆங்கில மொழி நூல்களேனும் அவை வெளிவந்தவுடனேயே தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

தமிழில் ஒவ்வொரு துறையிலும் மூல நூல்களும், மொழி பெயர்ப்புகளும் பெருமளவு வெகு விரைவிலேயே வெளிவரும் என்ற எதிர்பார்ப்புகள் ஐம்பதுகளில் இருந்தன; ஆனால் விரைவிலேயே பொய்த்து விட்டன. தமிழ் வழிக்கல்வி ஆதரவற்ற அனாதையாகிவிட்டதும், குறிப்பாக உயர் கல்வியில் கைவிடப்பட்டதும் இதற்கு ஒரு காரணம். தமிழ் அரசியலாகி, மொழி அரசியலின் தாக்கம் தமிழ் நாட்டை வளைத்து ஆக்ரமித்துக் கொண்டாலும், தமிழ் வழிக்கல்வி ஆங்கிலத்திற்கு அடி பணிந்து விலகிக் கொண்டு விட்டது. இதன் காரணமாகவும் தமிழில் மொழி பெயர்ப்புகள் வெளிவருவதற்கான தேவை வளரவில்லை. தமிழில் மொழிபெயர்ப்புகள் இல்லாமை இன்று தமிழ் வழிக் கல்வியை எதிர்க்கும் அணியினருக்குச் சாதகமான வாதமாகவும் ஆகிவிட்டது.

இந்தப் பின்னணியில் 'நள்ளிரவில் சுதந்திரம்' என்ற மொழி பெயர்ப்பு நூல் வரவேற்புக்குரியது. இது ஒரு வரலாற்று நூல் என்பது இதன் முக்கியத்துவத்தை இன்னும் உயர்த்துகிறது. தமிழகப் பல்கலைக் கழகங்களில் வரலாற்றுப் பாடத்தின் தரம் மிகவும் தாழ்ந்து கிடக்கின்றது. வரலாறு நம் கல்விக் கூடங்களில் எவரும் வேண்டாத, விரும்பாத பாடமாக, கடைநிலை மாணவனின் கடைசி புகலிடமாக இருப்பது அதன் தரத் தாழ்வுக்கு ஒரு காரணம். ஆனால், வரலாறு இன்றி ஒரு சமுதாயம் வாழ இயலாது. அதனை வாசல் வழியாக விரட்டினால், புழக்கடை வழியாக உள்ளே புகுந்து நம்மைப் பேயாகப் பிடித்து ஆட்டும்.

இன்று அதுதான் நம் நாட்டில் நடக்கிறது. வரலாறு அரசியலாகி இருக்கிறது. இந்திய அரசியலின் போக்கை நிர்ணயிக்கும் பூதாகார சக்தியாக வரலாறு இன்று உருக்கொண்டிருக்கிறது. பெரும் வக்கரிப்புகளுக்கு ஆளாகி, இந்திய மக்களைப் பிரிக்கும் துவேஷக் கருவியாகியுள்ளது. வரலாறு மத வெறியர்களினால் 'ஹைஜாக்' செய்யப்பட்டு விட்டது.

இதற்கு ஒரு காரணம் வரலாற்றின் புறக்கணிப்பு. கல்வி நிலையங்களிலும், வெகுஜன அரங்கத்திலும் வரலாறு கொச்சைப்படுத்தப்படுகிறது. அதன் அறிவுத் துறைக்குரிய விஞ்ஞான நியதிகளின் அடிப்படையில் உருவான வரலாறு அல்ல

நாம் கற்பதும், அறிவதும், இந்நிலை மாற வேண்டுமென்றால், வரலாறு காப்பாற்றப்பட வேண்டுமென்றால், சிறந்த நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, ஆங்கிலம் நன்கு புரியாத பெரும் பகுதியிலான மக்களுக்குக் கிடைக்கப் பெற வேண்டும்.

'நள்ளிரவில் சுதந்திரம்' சுதந்திர இந்தியாவும், பாகிஸ்தானும் உதயமான பிரளய காலத்தைப் பற்றியது. மனித வரலாற்றின் மிகப் பெரிய சாம்ராஜ்யமான பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அஸ்தமனம் அதன் உயிர் நாடியான இந்திய உப கண்டத்தில் எவ்வாறு நிகழ்ந்தது என்பதைப் பல ஆண்டுகளின் ஆய்வின் அடிப்படையில் விவரிக்கும் நூல். உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற அதே கட்டத்தில், மனித வரலாற்றின் மிகப் பெரிய, மிகக் கொடிய மக்கள் புலப்பெயர்வு நிகழ்ந்தது. பல லட்சம் மக்கள் தாங்கள் பிறந்த மண்ணைவிட்டு அகதிகளாய் ஓடினர் அக்காலத்தின் அரசியல் கொந்தளிப்புகள், சாதாரண மக்களையும் ஆட்டிப்படைத்த வெறித்தனங்கள், சூறையாடப்பட்ட லட்சக் கணக்கான மனித உயிர்கள், அரசியல் சூட்சமங்கள் இவற்றை வரலாற்று உணர்வுடனும் எளிதாக வாசித்து ரசிக்கத் தகுந்த வண்ணமும் எழுதப்பட்ட நூல் இது.

இந்நூலின் முதல் பதிவு 1975இல் வெளிவந்தவுடனேயே மிகவும் பிரபலமடைந்தது. இந்தப் புதிய பதிப்பு இந்திய சுதந்திரத்தின் 50வது ஆண்டு சிறப்புப் பதிப்பாக வெளிவந்துள்ளது. இதன் இரு ஆசிரியர்கள் டோமினிக் லாப்பியர், லாரி காலின்ஸ் இரு வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களது கூட்டுப்படைப்புகள் தனித்துவம் கொண்டவை. இருவரும் ஒன்றாக ஆய்வு செய்து, ஒரே சமயத்தில் தத்தம் மொழிகளாகிய ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் எழுதி, ஒரே சமயம் வெளியிட்டனர். நூலின் முக்கிய ஆதாரமாக அமைந்தது பிரிட்டிஷ் ஆட்சியின் கடைசி வைஸ்ராயான மௌண்ட் பாட்டனின் (நூலின் நாயகன் அவர்தான் என்று சில விமர்சகர்கள் கருது கின்றனர்.) ஆவணக் களஞ்சியமும் அவருடன் ஆசிரியர்கள் நிகழ்த்திய நேர் காணலின் 30 மணி நேர ஒலி நாடாப் பதிவுமாகும். நூல் உலகெங்கும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் மொழிபெயர்க்கத்தான் இத்தனை காலம் ஆகியிருக்கிறது.

நூலில் விவரிக்கப்பட்டிருக்கும் நெஞ்சை உருக்கும் மாபெரும் சோக நிகழ்ச்சிகள் நடந்தேறி அரை நூற்றாண்டுக்கு மேல் ஆகி விட்டன. ஆனால், அன்றைய துவேஷம் இன்னும் தணியவில்லை. புதுப்புது அவதாரங்களும் எடுக்கின்றது. இந்தியா பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே விரோதங்கள் குறைய விடாமல் அவ்வப்பொழுது நெய் ஊற்றி வளர்க்கப்படுகின்றன. இரு நாடுகளிலும் கொள்கை உருவாக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் பெரும்பாலும் போர்க்குணம் கொண்ட கழுகுகள்தான். இவர்களின் உந்துதலால் இரு நாடுகளும் பயங்கரமான ஆயுதப் போட்டியில் ஈடுபட்டுள்ளன; ராணுவ செலவைக் கடுமையாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. போரின் விளிம்பில் எப்பொழுதுமே நின்று கொண்டிருக்கின்றன. இப்பொழுது இரு நாடுகளும் அணு ஆயுதங்களையும் பெற்று விட்டதனால் போர் மூண்டால் ஏற்படப் போவது சர்வ நாசம் என்ற அச்சம் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

அது மட்டுமல்ல. இந்தியாவில் பாகிஸ்தான் எதிர்ப்பு என்பது நம் நாட்டு இஸ்லாமியர் எதிர்ப்பாகவும் மாறுகிறது. மத அடிப்படை . வாதத்தின் எழுச்சியும், அதன் விளைவாக சிறுபான்மை இனத்தவர் மேல் தொடுக்கப்படும் தாக்குதல்களும், பாபர் மசூதி இடிப்பும், பம்பாய்க் கலவரமும், இன்று கிறிஸ்துவ மதத்தின் மீதும், மக்கள் மீதும் ஏவப்படும் அவதூறுகளும், தாக்குதல்களும் இவை அனைத்தும் மதமே மக்களின் அடையாளம் (identity) என்கின்ற விபரீதச் சித்தரிப்பின் விளைவுகள்.

'நள்ளிரவில் சுதந்திரம்' பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இறுதிக் கட்டங்களில் வளர்ந்த பிரிவினை வாதத்தையும், அதனைத் தொடர்ந்த மதக் கலவரங்களையும், குருதி வெள்ளத்தில் மக்களும், மனிதமும் மாய்ந்து மடிந்ததையும் நெஞ்சுருக விவரிக்கிறது. மகாத்மா காந்தியும், மற்றவர்களும் பற்றியெரியும் தீயை அணைக்க பட்ட பாட்டையும் விவரிக்கிறது. அந்தப் பக்கங்களை வாசிப்பவர்கள் இன்று விசிறிவிடப்படும் மதவெறி நம் சமுதாயத்தை எங்கே கொண்டு விடுமோ என்று ஒரு நிமிடமேனும் நின்று சிந்திக்காமலும், அச்சம் கொள்ளாமலும் இருக்க முடியாது. அந்த சிந்தனையும், அச்சமும், அதில் உதயமாகக் கூடிய விவேகமும் இன்று நமது பெரும் தேவை. வரலாற்றின் தவறுகளிலிருந்து படிப்பினை பெற மறுப்பவர்கள் அவற்றை மீண்டும் இழைக்கும் நிலைக்குத் தள்ளப்படுவர் என்பது பழமொழி. வரலாற்றின் எச்சரிக்கையாக இந்த நூல் இருக்குமென்றால், அது மகத்தான பணியாகும்.

நூல் மொழி பெயர்ப்பாளர்கள் திரு. மயிலை பாலு, திரு. வி.என். இராகவன் இருவரின் இந்த முதல் முயற்சிக்கு என் வாழ்த்துக்கள். அவர்களுக்குத் துணை நின்ற அனைவருக்கும் நன்றி.

*21.5.2001*
சென்னை

**டாக்டர் வே. வசந்திதேவி**
முன்னாள் துணைவேந்தர்
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம்

# மொழி பெயர்ப்பாளர்களின் முன்னுரை

"நள்ளிரவில் பெற்றோம்
இன்னும் விடியவே இல்லை"

என்ற புதுக்கவிதை வரிகள் பலரின் மனங்களில் பசுமரத்தாணிபோல் ஆழப்பதிந்து விட்டவை.

இந்தியாவுக்குச் சுதந்திரம் ஏன் நள்ளிரவில் வழங்கப்பட்டது என்ற கேள்வியைக் கேட்டால் பல பேரிடமிருந்து பலவிதமான விடை கிடைக்கும். சரியான விடை 'Freedom at Midnight' (நள்ளிரவில் சுதந்திரம்) என்ற இந்த நூலில் கிடைக்கிறது.

1947ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த பின் இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின் போது இந்துக்களும் முஸ்லீம்களும் பட்ட துயரங்கள் இதில் ரத்தத்தால் எழுதப்பட்டுள்ளன. இது போல் இன்னொரு கொடுமை எங்கேயும் நிகழக்கூடாது என்ற எண்ணம் எழாதவர் மனிதராகவே இருக்க முடியாது. எதிர் எதிர் திசையில் குடிபெயர்ந்து நடந்து செல்லும் மக்கள் நமது இதயங்களில் கால் பதித்து வலியை ஏற்படுத்துகிறார்கள். சுதந்திரம் என்றால் என்னவென்று அறியாத கிராமங்களின் மக்களும் கூட மதவெறிக்கு பலியானார்கள். இந்தச் செய்திப் பதிவு இன்றைக்கும் அப்பாவிகள் மதவெறிக்கு இரையாவதை நினைவுபடுத்துகிறது.

இனியொரு ரணகளம் இந்தியாவில் வேண்டாம்; மதங்களின் பெயரால் ரத்தம் சிந்த வேண்டாம் என்ற எண்ணத்தை இந்த நூலின் சில அத்தியாயங்கள் உணர்த்துகின்றன. பழைய அவலங்களின் பதிவும் மனித இதயங்களில் இருக்கும் மாச்சரியங்களை அகற்ற உதவும். அந்தச் செயலுக்கு இந்த நூல் பயன்படும் என்று நம்பலாம். மதவெறியர்களின் வஞ்சகச் செயல்களை அடையாளம் காணவும் - எச்சரிக்கை செய்யவும் கூட இந்த நூல் உதவும்.

வெளிநாட்டு எழுத்தாளர்களின் பார்வையில் இந்தியாவின் கடைசி வைஸ்ராயாக இருந்த மவுண்ட்பேட்டன் பிரபுவின் பேட்டிகள் ஆவணக்காப்பகத் தகவல்கள் பிரிட்டிஷாரிடம் பணியாற்றிய அதிகாரிகள் தெரிவித்த கருத்துக்கள் கள ஆய்வுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது இந்த நூல். பெரும்பாலும் மவுண்ட்பேட்டனையே மையமாகக் கொண்டிருக்கும் இந்த நூல், இந்திய சுதந்திரப் போராட்டம் என்றாலே காந்தி, நேரு, ஜின்னா, படேல் என விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே ஹீரோக்கள் என்று சித்தரிக்கும் போக்கிலிருந்து மாறவில்லை.

வரலாற்று நிகழ்வுகளை ஆண்டுகள் வாரியாகத் தொகுத்துத்தரும் பழமையான பாட நூல் வடிவத்திலிருந்து மாறுபட்டு ஒரு புதிய பாணியில் வரலாற்றைக் கூற முடியும் என்பதற்கு இந்த நூல் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிப்பும் அடுத்த அத்தியாயத்தின் தொடுப்பும் இடைநிறுத்தாமல் நூலினைப் படிக்கத் தூண்டுகிறது. மூல நூலாசிரியர்களின் இந்தக் கருத்தோட்டத்தை அப்படியே மொழி பெயர்ப்பிலும் தந்திட முயற்சி செய்துள்ளோம். முழு வெற்றி பெற்றிருக்கிறோமா என்பதை வாசகர்கள் தான் சொல்ல வேண்டும்.

ஃபிரான்சையும் அமெரிக்காவையும் சேர்ந்த எழுத்தாள இரட்டையர்களான லேரி காலின்ஸ், டொமினிக் லேப்பியர் ஆகியோரின் 'Freedom at Midnight' என்ற ஆங்கில நூலினைத் தமிழில் ஆக்க வேண்டும் என்ற பெருமுயற்சியில் ஈடுபட்டவர் அலைகள் வெளியீட்டகத்தின் தோழர் பெ.நா. சிவம் அவர்கள். "வாசகர்களைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை; வாசகர்களை நாம் தான் உருவாக்குகிறோம்" என்பதில் உறுதியாக இருக்கும் தோழர் சிவம் அவர்கள், வயலில் எவ்வளவு விளைந்தாலும் விதைக்கான நெல்லைத் தெரிவு செய்து பாதுகாக்கும் விவசாயி போல நிகழ்காலச் சந்தையை மட்டும் கருதாமல் எதிர்காலச் சந்ததியினருக்குத் தேவையான நூல்களைத் தெரிவு செய்து பதிப்பித்து வருபவர்.

அப்படிப்பட்ட நூல்களின் வரிசையில் ஒன்றாகவே 'Freedom at Midnight' என்ற இந்த நூலையும் தெரிவு செய்து மொழியாக்கம் செய்யும் பணியை எங்களிடம் ஒப்படைத்தார். தீக்கதிர் பத்திரிக்கைக்கு செய்திகளை மொழி பெயர்த்து தருவதைப் பணியாகக் கொண்டிருந்த எங்களுக்கு 600 பக்க நூலினை மொழி பெயர்த்தது புதிய அனுபவத்தைத் தந்தது.

தமிழ்கூறு நல்லுலகிற்கு இப்படியொரு மொழியாக்க நூலைப் படைக்கும் வாய்ப்பினை எங்களுக்கு அளித்துள்ள அலைகள் வெளியீட்டகத்தாருக்கு எங்களின் இதயமார்ந்த நன்றி என்றும் உரித்தாகும்.

நாளிதழ் பணிகளுக்கிடையே நூல் மொழி பெயர்ப்புக்கு ஊக்கமளித்து தேவைப்பட்ட போது விடுப்புக்குக்கூட அனுமதி அளித்து உதவிய தீக்கதிர் ஆசிரியர், பொறுப்பாசிரியர் மற்றும் நிர்வாகிக்கும் எங்களின் நன்றி உரியதாகும்.

ஆங்கில நூலில் இடம் பெற்ற வரைபடங்களை மொழி பெயர்ப்பு நூலுக்குத் தகவாகக் கொண்டுவர உதவி செய்த தோழர் சுப.செல்வத்துக்கும் நன்றி உரித்தாகும்.

சான்றோன் எனக் கேட்கும் போதுதான் ஈன்ற பொழுதில் தாய் பெரிதுவப்பாள். அது போல வாசகர்களின் கருத்துக்கள் தான் எங்களையும் இந்த நூலையும் செழுமைப்படுத்தும். அதனை ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

**வி.என்.ராகவன்**
**மயிலை பாலு**

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | நிழற்படங்களும் வரைபடங்களும் | 12 |
| | புதிய பதிப்புக்கான முன்னுரை | 15 |
| | முகவுரை | 28 |
| 1. | 'ஆளவும் அடிமைப்படுத்தவும் விதிக்கப்பட்ட ஓர் இனம்' | 31 |
| 2. | 'தனித்து நட, தனித்து நட' | 49 |
| 3. | 'இந்தியாவைக் கடவுளிடம் விடுங்கள்' | 64 |
| 4. | அழிந்து கொண்டிருக்கும் அரசுக்கு இறுதி முரசு | 108 |
| 5. | ஒரு முதியவரும் அவரின் தகர்ந்த கனவும் | 131 |
| 6. | மதிப்புக்குரிய ஒரு சிற்றிடம் | 183 |
| 7. | அரண்மனைகளும் புலிகளும், யானைகளும் அணிகலன்களும் | 194 |
| 8. | கிரகங்களால் சபிக்கப்பட்ட ஒரு நாள் | 215 |
| 9. | வரலாற்றில் பெரும் சிக்கலான பிரிவு | 243 |
| 10. | 'நாம் எப்போதும் சகோதரர்களாகவே இருப்போம்' | 290 |
| 11. | உலகம் உறங்கிய வேளையில் | 329 |
| 12. | 'சுதந்திரத்தின் அழகிய விடியல்' | 366 |
| 13. | 'நமது மக்கள் பைத்தியமாகி விட்டார்கள்' | 397 |
| 14. | வரலாற்றின் மாபெரும் புலம் பெயர்வு | 438 |
| 15. | 'காஷ்மீர் – காஷ்மீர் மட்டுமே !' | 474 |
| 16. | பூனாவிலிருந்து இரண்டு பிராமணர்கள் | 491 |
| 17. | 'காந்தி இறக்கட்டும் !' | 512 |
| 18. | மதன்லால் பாவாவின் வஞ்சம் | 547 |
| 19. | 'காவலர் நம்மைப் பிடிக்கு முன் நாம் காந்தியை முடிக்க வேண்டும்' | 564 |
| 20. | இரண்டாவது சிலுவையேற்றம்' ! | 590 |
| | முடிவுரை | 613 |
| | அவர்கள் என்னவானார்கள்? | 627 |
| | நன்றியுரை | 631 |
| | நூல் பட்டியல் | 639 |
| | குறிப்புகள் | 649 |
| | பெயர் முதற் குறிப்பகராதி | 665 |

# வரைபடங்கள்


| | |
|---|---|
| இந்தியா : அதிகார மாற்றத்திற்கு முன்னும் பிரிவினை செய்யப்பட்ட நாளன்றும் | 26 – 27 |
| பஞ்சாப் | 285 |
| வங்கம் | 305 |
| காஷ்மீர் | 479 |

# நிழற் படங்கள்

1. வைஸ்ராய் மாளிகை ஊழியர்கள் – பிராட்லேண்ட்ஸ் ஆவணக் காப்பகம் (பிராட்லேண்ட்ஸ் ஆவணக் காப்பகம் மவுண்ட்பேட்டன் தனிப்பட்ட முறையில் பராமரித்து வந்ததாகும் – மொ–ர்)
2. 'இரண்டு முட்களுக்கிடையே ஒரு ரோஜா' – பிராட்லேண்ட்ஸ் ஆவணக் காப்பகம்
3. காந்தியும் எட்வினா மவுண்ட்பேட்டனும் – பிராட்லேண்ட்ஸ் ஆவணக் காப்பகம்
4. வைஸ்ராய் மாளிகை தோட்டத்தில் நேரு – ரெஃப்ளக்ஸ்
5. பாட்டியாலா மகாராஜாவின் முடிசூட்டு விழா – ஆசிரியரின் தொகுப்பு
6. பிகானீர் மகாராஜா எடைக்கு எடை தங்கம் பெறுதல் – கீ ஸ்டோன் நிழற்படங்கள்
7. 'அரை நிர்வாணப் பக்கிரி' – கேமரா பிரஸ்
8. 1931 ஆம் ஆண்டு லண்டனில் ஜின்னா – ஆசிரியரின் தொகுப்பு
9. கராச்சியில் கடைசியாக இருந்த பிரிட்டிஷ் படைகளை ஜின்னா பார்வையிடுதல் – பிராட்லேண்ட்ஸ் ஆவணக் காப்பகம்
10. 1947 ஆம் ஆண்டு ஜூன் 3 ஆம் தேதி, மவுண்ட்பேட்டனுடன் இந்தியத் தலைவர்கள் – பிராட்லேண்ட்ஸ் ஆவணக் காப்பகம்
11. சர் சிரில் ரேட் கிளிஃப் – ஆசிரியரின் தொகுப்பு
12. கவர்னர் ஜெனரலாக மவுண்ட்பேட்டன் – லலித் கோபால்
13. கராச்சிக்கு மவுண்ட்பேட்டன் வருகை – பிராட்லேண்ட்ஸ் ஆவணக் காப்பகம்
14. பெஷாவரில் மணல் மேடான பாதையில் மவுண்ட்பேட்டன் தம்பதியர் தட்டுத்தடுமாறி நடந்து வருதல் – பிராட்லேண்ட்ஸ் ஆவணக் காப்பகம்
15. பஞ்சாபில் சர் இவான் ஜென்கின்சுடன் மவுண்ட்பேட்டன் – பிராட்லேண்ட்ஸ் ஆவணக் காப்பகம்
16. 1948 ஆம் ஆண்டு பிப்ரவரியில் இந்திய நுழைவாயில் (Gate way of India)) – ஆசிரியரின் தொகுப்பு
17. காந்தி தனது பேத்திகளுடன் – ஆசிரியரின் தொகுப்பு
18. காந்தியைக் கொன்றவர்கள் – கொலை முயற்சிக்கு முன் – ஆசிரியரின் தொகுப்பு
19. கொலையுண்ட காந்தி ரோஜாமலர் படுக்கையில் – பிராட்லேண்ட்ஸ் ஆவணக் காப்பகம்
20. காந்தி சிதையின் முன் மவுண்ட்பேட்டனும் மற்றவர்களும் – பிராட்லேண்ட்ஸ் ஆவணக் காப்பகம்

'இந்தியாவை ஆளும் பொறுப்பு ஆய்ந்தறிய முடியாத இறைவனின் அருளால் பிரிட்டிஷ் இனத்தின் தோள்களில் சுமத்தப்பட்டிருக்கிறது'

– ரட்யார்ட் கிப்ளிங்

'இந்தியாவை இழப்பது நமக்கு இறுதியாகவும் அழிவாகவும் இருக்கும். இது நம்மை ஒரு எளிய சக்தியாகக் குறைக்கும் நடவடிக்கையின் பகுதியாய் இருக்கப் போவது நிச்சயம்'

– **வின்ஸ்டன் சர்ச்சில்**

மக்களவைப் பேச்சு,

பிப்ரவரி 1931

'பல ஆண்டுகளுக்கு முன் விதியுடன் ஒரு சந்திப்புக்கு நாம் காலம் குறித்திருந்தோம். இப்போது நமது உறுதிமொழியை நிறைவேற்றும் காலம் வந்திருக்கிறது........ நள்ளிரவில் மணியடிக்கும் நேரம், உலகம் உறங்கும் வேளையில் இந்தியா வாழ்வுக்காகவும் விடுதலைக்காகவும் விழித்தெழும் ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது. வரலாற்றில் இப்படிப்பட்ட வாய்ப்பு அரிதாகவே கிடைக்கும். நாம் பழமையிலிருந்து புதுமையில் அடியெடுத்து வைத்திருக்கிறோம்; ஒரு யுகம் முடிந்திருக்கிறது ; வெகு காலமாக அடக்கி வைக்கப்பட்டிருந்த தேசத்தின் ஆன்மா விடுதலை அடைந்திருக்கிறது...'

– **ஜவஹர்லால் நேரு**

இந்திய நாடாளுமன்றத்தில் உரை

புதுடில்லி, ஆகஸ்ட் 14, 1947

# நள்ளிரவில் சுதந்திரம் புதிய பதிப்புக்கான (1997) முன்னுரை

கடந்து செல்லும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் குறிப்பிடத்தக்க சில சம்பவங்கள் நிகழ்கின்றன. உண்மையில் அவை இவ்வாறு குறிக்கப்படுகின்றன: 'வரலாறு இங்கே உருவாக்கப்பட்டது' அல்லது 'காலம் காலமாக மனித குலம் கடந்து வந்த பாதையில் புதிய விடியலை உருவாக்குவதற்கான புதிய திருப்பம் இங்கே ஏற்பட்டது.' இப்படிப்பட்ட ஒரு சம்பவம் 1914ஆம் ஆண்டு ஜூன் 28ஆம் தேதி நிகழ்ந்தது. சரயேவோ நகரில் கோமகன் ஃப்ரான்ஸ் ஃபெர்டினாண்டைக் (Franz Ferdinand) கொல்வதற்காக கேவ்ரிலோ பிரின்சிப் (Gavrilo Princip) ஒரு கூட்டத்திலிருந்து வெளிப்பட்டான். இந்தச் சம்பவம் தான் ஐரோப்பாவின் சாலைகளைக் கசாப்புக் கடையாக்கும் முதல் உலக யுத்தத்திற்குக் காரணமானது. அதே போல் 1942 ஆம் ஆண்டு சிகாகோவில் ஒரு குளிர்கால நாளில் என்ரிகோ ஃபெர்மி (Enrico Fermi) அணு ஆயுத சகாப்தத்தைத் துவக்கி வைத்தார். அன்று அவர் அணுப்பிளவு சோதனையை நிகழ்த்தினார்.

நாம் வாழும் நூற்றாண்டின் இறுதிக் கட்ட வரலாற்றில் இவற்றுக்குச் சமமான இன்னொரு முக்கிய சம்பவமும் நிகழ்ந்தது. புதுடில்லி வைஸ்ராய் மாளிகையின் கொடிக்கம்பத்தில் இந்திய நட்சத்திரம் இடம் பெற்றதால், பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்த யூனியன் ஜாக் (Union Jack) கொடி, 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 - 15ஆம் தேதிகளுக்கு இடைப்பட்ட நள்ளிரவில் அதிலிருந்து இறங்கி தனது கடைசிப் பயணத்தை மேற்கொண்ட நொடிகளில் தான் அந்த முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. அந்தப் பெருமை மிகு பதாகைக்கு விடை கொடுக்கும் நேரத்தில் உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கான 40 கோடி மக்களுக்கு சுதந்திரம் கிடைத்தது - பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதற்கும் மேலான ஒரு செய்தியும் அப்போது பறைசாற்றப்பட்டது. இந்தப் புவிக்கோளின் பெரும்பகுதியை அடிமைப்படுத்தி, 450 ஆண்டுகளாக, ஐரோப் பாவைச் சேர்ந்த கிருத்தவ வாரிசுகளான வெள்ளையர்கள் ஆட்சி செய்து வந்தனர். இந்த ஏகாதிபத்திய சகாப்தத்திற்கு முடிவு நெருங்குகிறது என்பதை யும் அது காட்டியது. அந்த நள்ளிரவில் ஒரு புது உலகம் பிறந்தது. அடுத்த ஆயிரமாவது ஆண்டின் நுழைவாயில் வழியாக அந்த உலகம் நம்முடன் பயணம் செய்யும். முரண்பாடான கனவுகளும் அபிலாஷைகளும் கொண்ட மக்களும் கண்டங்களும் விழிப்புணர்வு பெற்றதும் புதியதுமாக அந்த உலகம் இருக்கும்.

மிகச்சிறந்த நாடகம் போன்ற சம்பவம் அது. அந்த இரவில் நாடகத்தின் முக்கியப் பாத்திரங்களாக யார் யாரெல்லாம் இருந்தார்கள் தெரியுமா? ஏர்ல் ஆஃப் பர்மா (Earl of Burma) என்ற பிரிட்டிஷ் கடற்படையின் தளபதியாக இருந்தவரும், தனது கொள்ளுப்பாட்டியான விக்டோரியா மகாராணியின்

பெயரால் அறிவிக்கப்பட்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, இந்தியாவுக்கு அனுப்பப்பட்டவரும், இந்தியாவின் கடைசி வைஸ்ராயுமான லூயி மவுண்ட்பேட்டன் இருந்தார். மாசற்ற குணமும், நன்னடத்தையும், கூர்த்த மதியும் கொண்டவரான, கொந்தளிப்பு மிகுந்த மூன்றாம் உலக நாட்டின் முதல் தலைவராகப் போகிறவருமான ஜவஹர்லால் நேரு இருந்தார். அமைதியான, ஆரவாரமற்ற, ஒரு தவறுக்குப் பாத்திரமான, பிரிந்து செல்லும் பிரிட்டிஷ் அரசிடம், புதியதொரு இஸ்லாமிய தேசத்தை உருவாக்க வேண்டும் என்பதை உறுதியுடன் வலியுறுத்திய, அந்த இரவு நேரத்திலும் உடல் நிலைக்கு ஒவ்வாத சோடா கலந்த விஸ்கியை சுவைத்துக் கொண்டிருந்த முகமது அலி ஜின்னா இருந்தார்.

இவர்கள் எல்லாருக்கும் மேலாக, மெலிந்த உடல் கொண்ட அஹிம்சாவாதியும், சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை 'மறுகன்னத்தைக் காட்டுதல்' என்ற எளிய நடைமுறையின் மூலமே முடிவுக்குக் கொண்டு வந்தவருமான மோகன்தாஸ் கரம்சந்த் மகாத்மா காந்தி இருந்தார். தொலைக்காட்சி இல்லாத, வானொலிப் பெட்டிகளும் அரிதாக இருக்கிற, அவரது நாட்டு மக்களில் பெரும்பாலோர் எழுத்தறிவு பெறாத கால கட்டத்தில் தகவல் தொடர்பில் தாம் ஒரு வல்லுநர் என்பதை காந்தி நிரூபித்தார். அவர் எண்ணியதை எளிமையாகச் சொல்லி, அது மக்களின் ஆன்மாவுடன் கலந்ததே இதற்குக் காரணம். வரலாற்று நிபுணர்களோ பத்திரிகை ஆசிரியர்களோ இந்த நூற்றாண்டின் சிறந்த ஆண் அல்லது பெண்ணைத் தேர்வு செய்ய முற்படுவார்களானால் காந்தியின் பெயர் அந்தப் பட்டியலில் மிக உயர்ந்த இடத்தில் இருக்கும் என்பது நிச்சயம்.

இந்தச் சிறப்பான தருணத்தில் இரண்டு இந்தியாக்களுக்கிடையேயான முரண்பாடுகள் ஓரளவு தெரிந்தன. வங்கப்படை வீரர்கள், புலிவேட்டைகள், பசுமையான போலோ மைதானங்கள். தங்க முகபடாம்களுடன் அரசவை யானைகள் ஆகியவற்றைக் கொண்ட, பட்டுத் தலைப்பாகை அணிந்த மகாராஜாக்கள், செருக்கு மிகுந்த 'மேம்சாப்கள்' (மணமான ஐரோப்பிய மங்கையர்), உற்சாகம் அளிக்கும் காட்டின் நடுவே அமைக்கப்பட்ட கூடாரங்களில் தனிப்பட்ட முறையில் விருந்து கால உடைகளுடன் சுகங்களை அனுபவிக்கும் இளமையும் அறிவாற்றலும் மிக்க ஐசிஎஸ் (Indian Civil Service - இப்போதுள்ள ஐ.ஏ.எஸ்.க்கு ஈடானது அன்றைய ஐசிஎஸ் மொ-ர்) ஆகியோரின் எதேச்சாதிகாரம் அந்த இரவில் முடிவுக்கு வரப்போகும் இந்தியா ஒன்று. பலவகை மக்கள், கலாச்சாரங்கள், மொழிகள், மதங்கள் என்ற சுமையுடன் நவீனத்துக்காகவும் தொழில் வளர்ச்சிக்காகவும் போராடும், அடிக்கடி பஞ்சமும் பட்டினியும் விரக்தியும் நிலவும் நிலையில் புதிய விடியலுக்காகக் காத்திருக்கும் இந்தியா மற்றொன்று.

இத்தகைய சவால்களும் சவால்களுமே 'நள்ளிரவில் சுதந்திரம்' என்ற இந்த நூலை எங்களை எழுதத்தூண்டியவை. இந்த நூலின் மூலப்பதிப்பு 1975ஆம் ஆண்டு வெளியானபோது பாராட்டுகள் குவிந்தன. குறிப்பாக நூலாசிரியர்களைப் பாராட்டுகின்றவையாக அவை இருந்தன. விரிவான விமர்சனங்களுக்கு உட்பட்ட இந்த நூல் பெரும் வெற்றியை ஈட்டியது. ரிச்சர்ட் ஆட்டன்பரோவின் 'காந்தி' திரைப்படம் தயாரிக்க இந்த நூல் உந்து சக்தியாக இருந்தது

*என்று இந்தப் படத்திற்குத் திரைக்கதை எழுதியவரும் இதற்காக அகாடமி விருது பெற்றவருமான ஜான் பிரைலி (John Briley) கூறினார். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் இந்த நூல் ஏராளமாக விற்பனையானது. எதிர்பார்த்தது போலவே இந்திய துணைக் கண்டத்திலும் இந்த நூல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒரு காலத்தில் சார்லஸ் டிக்கன்ஸ், விக்டர் ஹியூகோ ஆகிய எழுத்தாளர்களுக்கு அளிக்கப்பட்ட கவுரம் போல, இந்த நூலும் இந்தியாவில் புத்தகங்கள் வெளியாகும் எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டன. அது மட்டுமல்ல அனுமதி பெறாமலேயே குறைந்த பட்சம் 34 பதிப்புகள் வெளியாகி விட்டன. இது சட்ட விரோதமாக இருந்தாலும் இந்த நூலுக்குப் பெருமை சேர்ப்பதாகும். இருப்பினும் மன உளைச்சல் கொண்ட பாகிஸ்தான் அரசு இந்த நூலைத் தடை செய்தது. ஏன்? இஸ்லாமிய தேசத்தின் நிறுவனரான முகமது அலி ஜின்னா தனது காலை உணவான முட்டைகளுடன் பன்றி இறைச்சித் துண்டையும் சேர்த்துக் கொள்ளத் தயங்கியதில்லை என்ற தகவல் இந்த நூலில் இடம் பெற்றுள்ளது. அவரின் செயல் சாதாரண மனிதத் தவறு தான். அதே சமயம் மறுக்கப்பட முடியாததும் ஆகும்.*

*ஐம்பதாவது ஆண்டு சுதந்திரதின விழாவையொட்டிய புதிய பதிப்புக்காக மூலப் பிரதியை ஆய்வு செய்தோம். இந்த நூல் திருத்தப்பட வேண்டும் அல்லது மாற்றி எழுதப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழலாம் என்று நாங்கள் நினைத்தோம். இந்த நூலில் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் நடந்து முடிந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன என்பதாலும், முதல் பதிப்புக்குப் பின்னும் கூட பல ஆண்டுகள் ஆகிவிட்டதாலும், தகுதிவாய்ந்த சில பகுதிகள் மட்டும் திருத்தப்பட்டுள்ளன. இதற்காக மவுண்ட் பேட்டன் பிரபுவிடம் பேட்டி கண்ட 30 மணி நேர ஒலி நாடாக்களை மீண்டும் கேட்டோம். மேலும் இந்த நூலில் இடம் பெற்றுள்ள மற்ற மூலாதாரங்களையும் ஆய்வு செய்தோம்.*

*இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரத்தின் 50ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் நேரத்திலும் அரை நூற்றாண்டு காலமாக இவற்றுக்கிடையே யான பகைமை நீடிக்கவே செய்கிறது. இரு நாடுகளும் இப்போது அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளன. தேவைப்பட்டால் இவற்றைப் பயன்படுத்தப் போவதாக அச்சுறுத்துகின்றன. இதனால் உலகின் மிகவும் அபாயகரமான பகுதியாக இது உருவாகியுள்ளது. தங்கள் நாட்டுக்குள் பயங்கரவாதம் தூண்டி விடப்படுவதாக இரு நாடுகளும் பரஸ்பரம் குற்றம் சாட்டுகின்றன. காஷ்மீரின் கொரில்லா இயக்கப் பின்னணியில் பாகிஸ்தானின் கைவரிசை இருப்பதாக இந்தியா கூறுகிறது. கராச்சியிலும் பஞ்சாபின் சில பகுதிகளிலும் ஏற்படும் வன்முறைகளுக்குப் பின்னணியில் இந்தியா இருப்பதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டுகிறது.*

*உண்மையில் தீர்க்க முடியாத பிரச்சனையின் மையமாக இருப்பது எழில் மிகு காஷ்மீர் பள்ளத்தாக்குதான். இந்தப் பகுதியில் பெரும்பான்மையினராக வாழும் மக்கள் இந்திய அரசின் கீழ் அதிகாரிக்கும் ஒடுக்குமுறைக்கு ஆளாகிறார்கள். இந்தப் பகுதியின் எதிர்காலம் பற்றித் தீர்மானிக்க மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் மீண்டும் கூறி வருகிறது. அப்படி நடத்தப்பட்டால் சுதந்திரமான பகுதி அல்லது*

பாகிஸ்தானுடன் இணைவது என்பது தான் பெரும்பாலான மக்களின் கருத்தாக இருக்கும் என்பது நிச்சயம். இருப்பினும் இந்தப் பிரச்சனை முடிவுக்கு வராமல் நீடிக்கக் காரணம், இந்திய அரசு இந்த வாய்ப்புகளில் ஏதாவது ஒன்று பற்றி பரிசீலிக்க நினைத்தால் கூட இந்தியாவில் உள்ள முஸ்லீம் சிறுபான்மையினர் மீது இந்து தீவிரவாதிகள் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவார்கள். இந்த வன்முறை இதுவரை காஷ்மீர் கண்டிராத அளவுக்குப் பெரிதாக இருக்கும்.

சுதந்திரத்திற்குப் பின்னர் காஷ்மீர் பகுதி பாகிஸ்தானுடன் சேர்வதை விட இந்தியாவுடன் சேர்வதற்கு முடிவு செய்ததற்காக பாகிஸ்தானியர்களில் பெரும்பாலோர் மவுண்ட்பேட்டன் பிரபுவைக் குற்றம் சாட்டுகிறார்கள். உண்மையில் இந்தக் குற்றச்சாட்டு சரியானதும் அல்ல; நியாயமானதும் அல்ல. மாறாக, இந்தப் பிரச்சனைக்கு அமைதியான தீர்வு ஏற்பட மற்றெவரையும் விட மவுண்ட்பேட்டன் மிகவும் முயற்சி செய்தார். காஷ்மீரின் ஹிந்து மகாராஜா வான ஹரிசிங் தனது மாகாணத்தை பாகிஸ்தானுடன் சேர்ப்பதென்ற முடிவை ஏற்றுக் கொள்ள, இந்திய அரசியல் தலைவர்களான ஜவஹர்லால் நேரு, வல்லபபாய் படேல் ஆகியோரின் ஒப்புதலை மவுண்ட்பேட்டன் பெற்றார் (அதிகார மாற்ற விதிகளின்படி, இந்தியாவின் மன்னராட்சி மாகாணங்களின் ஆட்சியாளர்கள் தங்கள் பகுதியை இந்தியாவுடன் இணைப்பதா பாகிஸ்தா னுடன் இணைப்பதா என்பதை அங்குள்ள பெரும்பாலான மக்களின் விருப் பத்தைக் கணக்கில் கொண்டு தான் முடிவு செய்ய வேண்டும்)

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், காஷ்மீரை பாகிஸ்தானுடன் சேர்ப்பதற்கு இணங்குமாறு ஹரிசிங்கிடம் கேட்டுக் கொள்வதற்காக ஆகஸ்ட் 15ஆம் தேதிக்கு சில நாட்கள் முன்பாக மவுண்ட்பேட்டன் ஸ்ரீநகருக்குச் சென்றிருந்தார். அங்குள்ள ட்ரிக்கா நதியில் ஒருநாள் முழுவதும் படகு வீட்டிலிருந்தபடி மீன்பிடிப்பில் ஈடுபட்டுக்கொண்டு இந்த நடவடிக்கைகள் பற்றி மகாராஜாவிடம் மவுண்ட்பேட்டன் வலியுறுத்தினார்.

'ஹரிசிங்!' அவர் அரசரிடம் கூறினார். 'நான் சொல்வதைக் காது கொடுத்து கேளுங்கள். எதிர்கால இந்தியாவின் அரசு அதிகாரத்தில் அமரப் போகிற வர்களின் முழுமையான ஒப்புதலுடன் ஒரு செய்தியை உங்களிடம் சொல்லவே நான் இங்கு வந்திருக்கிறேன். உங்கள் ஆட்சிப்பகுதியில் பெரும்பாலான மக்கள் முஸ்லீம்களாக இருக்கிறார்கள். அதனை பாகிஸ்தானுடன் சேர்ப்பதென்று நீங்கள் முடிவு செய்தால் அதனை அவர்கள் புரிந்து கொள்வார்கள்; ஆதரிக்கவும் செய்வார்கள்!'

சிங் மறுத்தார். சுதந்திர தேசம் ஒன்றுக்குத் தலைமை தாங்கவே தாம் விரும்புவதாக அவர் மவுண்ட் பேட்டனிடம் கூறினார். சிங்கை ஒரு வடிகட்டிய முட்டாள் என்று கருதிய வைஸ்ராய், இப்படிப் பதில் சொன்னார்: 'நீங்கள் மட்டும் சுதந்திரமாக இருக்க முடியாது. உங்கள் சமஸ்தானம் இரு பக்கங் களிலும் வேற்று நிலங்களால் சூழப்பட்டது. உங்களின் நிலப்பகுதி அதிகம். ஆனால் மக்கள் தொகை குறைவு. உங்களின் அணுகுமுறை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மோதலை உருவாக்கும். போரிடும் இரண்டு நாடுகளை நீங்கள் அண்டை நாடுகளாகப் பெறப் போகிறீர்கள். உங்கள் பகுதி ஒரு போர்க்களமாகப் போகிறது. அதுதான் நடக்கும். நீங்கள் எச்சரிக்கையுடன் இல்லாவிட்டால் ஆட்சியை இழப்பதோடு உயிரையும் இழப்பீர்கள்.'

*இவ்வளவுக்குப் பின்னும் சிங் தனது நிலையில் பிடிவாதமாக இருந்தார். மீண்டும் வைஸ்ராயாகப் பயணம் செய்த போது மவுண்ட்பேட்டனை அதிகார பூர்வமாக சந்திக்க அவர் மறுத்து விட்டார். சுதந்திர தினம் வந்தது; சென்றது; ஆனால் ஹரிசிங் ஊசலாட்டத் தோடு தான் இருந்தார். காஷ்மீரின் எதிர்காலம் பற்றி அதிகாரபூர்வமாக அவர் முடிவெதையும் எடுக்கவில்லை. இலையுதிர் காலம் ஒன்றின் பிற்பகுதியில் பழங்குடி இனத்தினர் சேர்ந்து பாகிஸ்தான் வழங்கிய ஆயுதங்களுடன் ஸ்ரீநகரை நோக்கி வந்தார்கள். அப்போது புதுடில்லியிடம் உதவிகோரி ஒரு அதிகாரியை சிங் அனுப்பினார். அந்த சமயத்தில் புதிய இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த மவுண்ட்பேட்டன், இந்தியாவுடன் இணைவதாக முறைப்படி ஒப்பந்தத்தில் மகாராஜா கையெழுத்திடவில்லையென்றால் தாம் அங்கு இந்திய ராணுவத்தை அனுப்பி வைக்க இயலாது என்று நேருவிடம் கூறிவிட்டார். இதன் பின்னர் இந்தியாவுடன் காஷ்மீர் இணைவதற்கான ஒப்பந்தம் ஒன்றுடன் தூதர் ஒருவர் ஸ்ரீநகருக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பெரும் தயக்கத்துடன் சிங்கும் அதில் கையெழுத் திட்டார். அதன் பிறகு இந்தியப் படைகள் விமானத்தின் மூலம் காஷ்மீருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அந்தப் படைகள்தான் இப்போதும் அங்கு இருக் கின்றன. இலையுதிர் கால நாளொன்றில் பிறந்த அந்தப் பிரச்சனை இன்னமும் நீடிக்கிறது. இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை விஷமாக்கிக் கொண்டிருக்கிறது.*

*எட்வினா மவுண்ட்பேட்டனுக்கும் ஜவஹர்லால் நேருவுக்கும் இடையே காதல் விவகாரம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த வதந்திகள் பற்றி இதன் பக்கங்களில் குறிப்பிடப்படவில்லையே என்று 'நள்ளிரவில் சுதந்திரம்' நூலின் வாசகர்கள் பலரும் தெரிவித்தனர். இந்த வதந்திகள் பற்றி எதையும் குறிப்பிடுவதில்லை என்று நாங்கள் நன்கு உணர்ந்தே முடிவு செய்தோம். எட்வினாவுக்கும் நேருவுக்கும் இடையே தனிப்பட்ட, நெருக்கமான உறவு இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. இருப்பினும் அவர்களின் உறவு உடல் சம்பந்தமற்ற ஆத்மார்த்த காதல் என்பதற்கு மாறாக அப்போதும் ஆதாரங்கள் இல்லை; இப்போதும் ஆதாரங்கள் இல்லை. எட்வினாவுக்கும் நேருவுக்கும் இடையேயான உறவு எப்படிப்பட்டதாக இருப்பினும் நேரு தனது மண வாழ்க்கையின் இறுதிப்பகுதியில் ஆண்மையற்றவராக இருந்தார் என்றும் அவரது மணவாழ்க்கை கூட இதனால் பாதிக்கப்பட்டதாகவும் நேருவின் சொந்தத் தங்கையான திருமதி விஜயலட்சுமி பண்டிட்டே எங்களுடனான உரையாடலில் ஒரு முறை வலிய வந்து கூறினார். ஆண்களின் பாலுணர்வுக்கு முக்கியத்துவம் அளிக்கும் இந்தியச் சமூகத்தில், அன்புக்குரிய சகோதரர் பற்றி அவரது சகோதரியே இந்த விஷயத்தில் பொய் சொல்வார் என்று நினைப்பது மிகவும் சங்கடமானது. இந்தியச் சுதந்திரத்திற்குப் பின் பிரதமராக இருந்த நேருவின் அரக மாளிகைக்கு எட்வினா மவுண்ட் பேட்டன் இரண்டு முறை வந்திருப்பதாக அந்த மாளிகையின் காவலராக இருந்தவர் கூறுகிறார். இருப்பினும் அவர்கள் படுக்கையைப் பகிர்ந்து கொண்டதற்கான ஆதாரம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்கிறார் அவர்.*

*இந்தியத் தலைவர்களுடன் மவுண்ட்பேட்டன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வந்தார். இதில் சில ரகசியங்கள் பற்றி தனது மனைவி எட்வினாவுடன் விவாதித்திருக்கிறார். நேருவிடம் அதிகார பூர்வமாகத் தம்மால் சொல்ல முடியாத சில விஷயங்களை சாதாரண முறையில் தெரிவிப்பதற்கு ஒரு*

கருவியாக எட்வினாவை அவர் பயன்படுத்திக் கொண்டார். இதனை மவுண்ட்பேட்டன் வேண்டுமென்றே செய்தார்.

நள்ளிரவில் சுதந்திரம் நூலின் பதிப்புகளைத் தொடர்ந்து கவனித்து வந்த போது, இந்த நூல் மவுண்ட் பேட்டனுக்கு ஆதரவானது என்கிற குற்றச்சாட்டு எங்கள் மீது சுமத்தப்பட்டது. இதனை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். பொதுவாக இந்தியாவின் கடைசி வைஸ்ராய் மீது இரண்டு முக்கிய விமர்சனங்கள் இருந்தன. ஒன்று, 1947 ஆகஸ்டில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அதிகாரத்தைக் கைமாற்றுவதில் அவர் அவசரம் காட்டினார். மற்றொன்று, இதைத் தொடர்ந்து நடந்த பயங்கரமான நரவேட்டைகளைத் தடுத்து நிறுத்த போதிய முயற்சிகளை அவர் மேற்கொள்ளவில்லை.

குலைநடுங்குகிற அந்த வாரங்களில் எவ்வளவு பேர் கொல்லப்பட்டார்கள் என்பதை எவரும் எப்போதும் அறிய முடியவில்லை. இந்தச் சம்பவங்களில் 2,50,000 பேர் இறந்ததாக மவுண்ட்பேட்டன் கூறுகிறார். நன்கு தெரிந்தே செய்யப்பட்ட குறைந்த மதிப்பீடு இது என்பதில் சந்தேகமில்லை. இந்த எண்ணிக்கை அரை மிலியன் (5 லட்சம்) அளவுக்கு இருக்கலாம் என்று அந்தக் காலகட்டத்தின் வரலாற்றாசிரியர்களில் பெரும்பாலோர் கூறுகிறார்கள். சிலரோ இறந்தவர்கள் எண்ணிக்கை 2 மிலியன் (20 லட்சம்) இருக்கலாம் என்கிறார்கள்.

துயரம் மிக்க இந்தச் சம்பவங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவாக இருந்தாலும், இந்த அளவுக்குப் பேரழிவு ஏற்படும் என்று இந்திய அதிகாரத்தில் இருந்த எவரும் அப்போது எண்ணிப் பார்க்கவில்லை. இந்த நூல் தயாரிப்புப் பணியின் போது, இந்தியாவின் பல மாகாணங்களைச் சேர்ந்த கவர்னர்கள், வைஸ்ராய்க்கு அனுப்பி வைத்த வாராந்தர அறிக்கைகள் அனைத்தையும் படித்தோம். பஞ்சாபில் இருந்த சர்.இவான் ஜென்கின்ஸ் (Sir Evan Jenkins), வடகிழக்கு மாகாணங்களில் இருந்த சர் ஓலஃப் கரோ (Sir Olaf Caroe) போன்றோர் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் ஆட்சியின் சிறந்த புத்திசாலித்தனமான ஐசிஎஸ் அதிகாரிகள் என்று பெயர் பெற்றவர்கள். இவர்கள்தான், ஆண்டுக்கணக்கில் இல்லாமல், மாதக்கணக்கில் மட்டுமே இந்தியாவில் அனுபவம் பெற்ற வைஸ்ராய்க்கு ஆலோசனை வழங்கி வந்தார்கள். இருப்பினும் பிரிவினைக்குப் பின் இப்படிப் பேரலையாக வன்முறை வெடிக்கும் என்று ஒரு அறிக்கையும் கணிக்கவில்லை.

நேரு, பட்டேல், ஜின்னா, லியாகத் அலிகான் ஆகிய இந்தியா மற்றும் பாகிஸ்தானின் அரசியல் தலைவர்கள், எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அதிகாரத்தைத் தங்களிடம் கைமாற்றித் தந்திட வேண்டும் என்று ஒரே குரலில் மவுண்ட்பேட்டனை வற்புறுத்தினார்கள். இவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற ஆண்டுக்கணக்கில் சண்டையிட்டவர்கள்; தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டவர்கள் அதிகாரம் தங்களுக்குக் கிடைப்பதில் எந்தவிதத் தாமதமும் இருக்கக்கூடாது என்பது அவர்கள் விருப்பம். அவர்களின் உள்ளத்துள் இருந்த எண்ணங்கள் எதுவாக இருப்பினும், மவுண்ட் பேட்டனுடன் நடத்திய, பதிவு செய்யப்பட்ட பேச்சுக்களின் படி இந்தியாவில் பிரிவினை வந்தால் நேரப் போகும் அபாயங்களை இவர்கள் அனைவருமே குறைத்துதான் மதிப்பிட்டார்கள். ஒருவேளை அப்படி ஏதாவது நிகழ்ந்தால் எந்தப் பிரச்சனையையும் சமாளிக்கும் திறன் தங்களுக்கு இருப்பதாகவும் அவர்கள் மிகைப்

படக் கூறினார்கள் ஒரே ஒரு குரல் மட்டும்தான் இந்தியத் துணைக் கண்டத்தைத் திணறடிக்கப் போகிற அந்த சோகத்தின் பரிமாணங்களை ஊகித்தறிந்தது. அதற்குரியவர்தான் காந்தி. 1947 கோடை காலத்தின் நடுப் பகுதியில் அந்த அஹிம்சா மூர்த்தி கூறியதை எவரும் கவனிக்கவில்லை.

'எவ்வளவு பெரிய தவறு நடந்து விட்டது' மவுண்ட்பேட்டன் எங்களிடம் ஒப்புக் கொண்டார். 'மோசமான நிலைதான் இது. இப்படி நடக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்படுவார்கள்; இரண்டு பக்கமும் குடிபெயர்வார்கள் என்று எவரும் கணித்தறியவில்லை. ஒருவர் கூட நினைக்கவில்லை.'

'இது போன்ற கணிப்பு அதிகாரபூர்வமான இடத்திலிருந்து வந்திருந்தால் வித்தியாசமாக ஏதாவது செய்திருப்பீர்களா' என்று அவரிடம் நாங்கள் கேட்டோம்.

'நான் வித்தியாசமாக எதையும் செய்திருக்க மாட்டேன்; செய்யவும் முடியாது' என்பது அவரின் பதிலாக இருந்தது. 'வேண்டுமானால் அந்தத் தலைவர்களை ஒன்றாகக் கூட்டி, "நாம் இந்தப் பிரச்சனையை எதிர் கொண்டுள்ளோம். என்ன செய்யப் போகிறோம்?" என்று கேட்டிருக்கலாம். "நாங்கள் அதிகாரத்தைக் கைமாற்ற முடியாது" என்று அவர்களிடம் கூறியிருக்க முடியும். ஆனால் அவர்கள் ஒரு போதும் அதனை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள்.'

விளைவுகளைக் கண்டபின் சிலர் ஒரு யோசனை கூறுகிறார்கள். இரண்டு புதிய நாடுகளின் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்ட மவுண்ட்பேட்டன், எல்லைகள் சம்பந்தமான சர் சிரில் ராட்கிளிஃபின் (Sir Cyril Radcliffe) முடிவுகளை வெளியிடாமல் நிறுத்தியிருக்கலாம் என்பதுதான் அந்த யோசனை. அப்படிச் செய்திருந்தால் தற்காலிகமாகவாவது லட்சக்கணக்கான மக்கள் குடிபெயர்ந்து செல்வதைத் தவிர்த்திருக்கலாம் என்று அவர்கள் வாதிடுகிறார்கள். ஒரு வேளை இப்படியும் நடந்திருக்கலாம் அல்லது நிச்சயமற்ற நிலைமை, ஏற்கெனவே எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றி வன்முறையை மேலும் அதிகமாக்கியிருக்கலாம்.

இந்த நூலில் நாங்கள் வெளிப்படுத்தியிருக்கும் முக்கியமான ஒரு தகவல், 1947 கோடை காலத்தில் மவுண்ட்பேட்டனுக்குக் கிடைக்காமல் போனது. காசநோயினால் ஜின்னா இறந்து கொண்டிருந்தார் என்ற உண்மைதான் அது. அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர்களிடம் நாங்கள் பேசினோம். அந்த சமயத்தில் ஜின்னாவின் வாழ்நாள் ஆறு மாதத்துக்கும் குறைவாகத்தான் இருந்திருக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர் இந்தத் தகவல் தனக்குத் தெரிந்திருந்தால் இந்தியாவில் தனது செயல்பாடு, உண்மையில், முற்றிலும் வித்தியாசமாகத்தான் இருந்திருக்கும் என்பதை மவுண்ட்பேட்டனே ஒப்புக் கொண்டார். இந்தியா ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்கான முயற்சிக்கு ஜின்னா மிகப்பெரும் தடையாக இருந்தார். ஜின்னா இறந்து கொண்டிருக்கிறார் என்பது தெரிந்திருந்தால், அவரது மரணம் வரை காத்திருந்திருக்கலாம் என்பதை மவுண்ட்பேட்டன் ஒப்புக் கொண்டார். இப்படி நடந்திருந்தால் ஒரு வேளை சுதந்திர பாகிஸ்தான் உருவாகாமலேயே போயிருக்கலாம்.

இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரம் அடைவதற்கான பணியை அவர் வேக வேகமாகச் செய்தார் என்ற குற்றச்சாட்டைப் பொறுத்த வரை ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். 1947 ஜனவரியில் இந்திய வைஸ்ராயாக மவுண்ட்பேட்டன் நியமிக்கப்பட்ட போது அவரிடம் கிளெமண்ட் அட்லி (Clement Attlee) கூறிய விஷயங்களில் ஒன்று அதிகார மாற்றத்தை விரைவில் முடிக்க வேண்டும் என்பதாகும். அந்த நேரத்தில் இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரம் என்பது உளுத்துப் போயிருந்ததை இருவருமே அறிந்திருந்தனர். போர்க்காலத்தின் போது பெரும்பாலான இந்திய சிவில் சர்வீஸ் அதிகாரிகள் தங்கள் பணிகளில் ஆர்வம் காட்டவில்லை. ரஷ்யாவுடன் செசன்யா நீடிக்க ரஷ்யப் படைவீரர்கள் உயிர் துறக்க சித்தமாய் இருந்த அளவுக்குக் கூட பிரிட்டனுடன் இந்தியா நீடிப்பதற்காக இந்தியாவிலிருந்த இங்கிலாந்து ராணுவத்தினர் உயிர்த் தியாகம் செய்ய ஆர்வம் காட்டவில்லை. 1946 ஜூலையில் முஸ்லீம் லீகினர் கல்கத்தாவில் நேரடி நடவடிக்கை தினம் அறிவித்த 72 மணி நேரத்தில் 26,000 இந்துக்கள் கொல்லப் பட்ட கோரக் காட்சிகள் மவுண்ட்பேட்டனின் நினைவில் வட்டமிட்டுக் கொண்டே இருந்தன. பிரிட்டிஷ் அரசுக்கு சவால்விடும் இது போன்ற இன்னொரு சம்பவம் 1947இல் நடந்திருந்தால் இங்கிலாந்தின் அதிகார அமைப்பில் உள்ள பலவீனத்தை அது அம்பலப்படுத்தியிருக்கும். எனவே இந்தியாவின் நிர்வாகத்தையும் காவல்துறையையும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்தியர்களின் கைகளில் ஒப்படைப்பதற்கு மவுண்ட்பேட்டன் முன்னுரிமை கொடுத்தார். தேசத்தின் நிலைமையில் இந்த முடிவுக்கு வருவது அவருக்குக் கட்டாயமாகி விட்டது. மேலும் அவரை இந்தியாவுக்கு அனுப்பியவர் அவருக்கு இட்ட ஒரு கட்டளையும் ஆகும் இது.

'நமது மக்கள் பைத்தியமாகி விட்டார்கள்' என்ற தலைப்பில் 13ஆவது அத்தியாயத்தில் இடம் பெற்ற ஒரு 'சொலவடை' இந்திய வாசகர்கள் பெரும்பாலோர் மனதைப் புண்படுத்தி விட்டது. தகுதிக் குறைவாகவும் இது கருதப்பட்டது. இது பற்றிய எங்களின் கருத்தைத் தெரிவிக்க வேண்டியுள்ளது. பிரிவினைக்குப் பின் இந்தியாவை வன்முறைகள் மோசமாக உலுக்கிக் கொண்டிருந்த சமயம் 1947 செப்டம்பர் 6 சனிக்கிழமையன்று சிம்லாவிலிருந்து திரும்பிய மவுண்ட் பேட்டன் தனது இல்லத்தில் நேருவையும் படேலையும் சந்தித்த போது அவர்களைப் பற்றி தெரிவித்த கருத்துதான் அது. இந்த இரண்டு தலைவர்களும் 'தண்டனை பெற்று திருந்திய பள்ளிச் சிறார்கள் போல காணப்பட்டார்கள்' என்று அவர் கூறினார்.

இந்தச் சொலவடை எத்தகைய உணர்வுகளை ஏற்படுத்தும் என்பதை அறியாமலேயே அவர் சொல்லி விட்டார் என்று ஒருவர் கூறலாம். இருப்பினும் உண்மை என்னவென்றால், எங்களுக்குப் பேட்டியளித்தபோதும் இதே வார்த்தைகளை மவுண்ட்பேட்டன் கூறியது ஒலி நாடாவில் பதிவாகியுள்ளது. ஒரு வாரம் கழித்து அவருடனான பேட்டியிலும் அந்தச் சம்பவத்தை விவரிக்க இதே சொலவடையைத்தான் பயன்படுத்தினார். அந்த இரண்டு மனிதர்களும், 'திக்பிரமை பிடித்த இரண்டு பள்ளிமாணவர்களைப்போல் இருந்தார்கள்... தங்களைத் தாக்கியது என்ன என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை' என்று அவர் கூறினார்.

நள்ளிரவில் சுதந்திரம் நூல் வெளியிடப்படும் முன் அதன் கையெழுத்துப் படியை இந்தியாவின் கடைசி வைஸ்ராய் படித்தார். ஆனால் இந்த சொலவடை

பற்றி கருத்து எதையும் அவர் தெரிவிக்கவில்லை. இந்திய வாசகர்களில் பெரும்பாலோரின் விமர்சனங்களுக்குப் பின்னும் இந்தச் சொலவடையை நீக்கும்படியும் அவர் எங்களைக் கோரவில்லை. பொருத்தமற்றதாக எங்களால் கருதப்பட்டாலும் அவரின் வார்த்தைகளைத் தணிக்கை செய்யும் அதிகாரம் நூலாசிரியர்களுக்கு இருக்கிறதா என்ன? அப்படி இருப்பதாக இந்த நூலின் முதல் பதிப்பின் போதும் நாங்கள் நினைக்கவில்லை; அதே உணர்வுதான் இந்தப் புதிய பதிப்பின் போதும் எங்களுக்கு இருந்தது.

நள்ளிரவில் சுதந்திரம் என்ற நூலின் மூலப் பதிப்பு வெளியிடப்பட்ட ஆண்டுகளில் எங்கள் இருவருக்கும் மவுண்ட்பேட்டனுடன் நெருக்கமான தொடர்பு இருந்தது. இந்த நூலின் வெற்றி குறித்து அவர் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். மேன்மை தங்கிய ராணி, அன்பிற்குரிய இளவரசர் சார்லஸ், பிரதமர் ஹூரால்ட் வில்சன் (Harold Wilson) ஆகியோருக்கு நூலின் பிரதிகளைக் கொடுத்து மற்றப் பணிகளை ஒதுக்கி இதனைப் படிப்பதில் கவனம் செலுத்து மாறு ஒவ்வொருவரிடமும் வலியுறுத்தினார்.

பிராட்லேண்ட்ஸ் எஸ்டேட்டில் மவுண்ட்பேட்டன் தனது சொந்த ஆவணக் காப்பகத்தை முறைப்படியாகப் பராமரித்து வந்தார். தீப்பிடிக்காத அறைகளைக் கொண்ட இதில் அவரது வாழ்க்கையில் கிடைத்த ஒவ்வொரு துண்டு காகிதத்தையும் பாதுகாத்து வந்தார். அவருக்குப் பெயர் சூட்டும் போது அச்சிடப்பட்ட அழைப்பிதழ் முதல், கடைசியாகக் கலந்து கொண்ட அரசமுறை விருந்துக்கான அழைப்பிதழ் வரை அந்த ஆவணக் காப்பகத்தில் இருந்தன. எதிர்காலத்தில் தனது வாழ்க்கை வரலாற்றை எழுதுவோருக்கு இது அடிப்படையாக இருக்கட்டும் என்று அவர் விரும்பினார். அப்படி எழுதிய நூலிலிருந்து கிடைக்கும் ராயல்டியை தனது பேரக்குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்ளவும் விரும்பினார். அவருடன் சேர்ந்து பணி செய்த ஆண்டுகளில் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுத யாரை நியமிக்கப் போகிறீர்கள் என்றால், கேலி செய்வார். தன்னைத்தானே அந்த வேலைக்கு நியமித்திருப்பதாகக் கூட அவர் சொல்வதுண்டு. ஒரு சமயம் எங்களை வியப்பிலாழ்த்தும் வகையில் ஒன்றை அறிவித்தார். அவர் இறப்பதற்கு ஓராண்டுக்கு முன்னால் போலியான அதிகாரத் தொனியுடன் சில சமயங்களில் இப்படிக் கூறினார். 'நீங்கள் இருவரும் தான் எனது வாழ்க்கை வரலாற்றை எழுதவேண்டும் என்று நான் முடிவு செய்து விட்டேன்.'

'லூயி பிரபு! இந்த நூற்றாண்டின் மிக முக்கிய ஆங்கிலேயர்களில் ஒருவர் நீங்கள். உங்கள் வரலாற்றை எழுதும் பணியை ஒரு அமெரிக்கனிடமும் ஒரு ஃபிரஞ்ச்காரனிடமும் ஒப்படைத்தால் உங்கள் நாட்டு நிர்வாகம் அதனை தேசத்துரோகச் செயலாகக் கருதக்கூடும்' என்று நாங்கள் ஆட்சேபம் தெரி வித்தோம்.

எங்கள் பதிலைக் கேட்டு மவுண்ட்பேட்டன் சிரித்தார். ஆங்கிலேய நிர்வாகம் பற்றி நாங்கள் இருவரும் எவ்வளவு குறைவாகத் தெரிந்து வைத்திருக்கிறோம் என்பதையே இந்தப் பதில் காட்டுவதாக அவர் கூறினார். எந்தத் தருணத்திலும் அந்த அமைப்பின் மீது தாம் அளவான மதிப்பே வைத்திருப்பதாகவும் குறிப் பிட்டார். சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் இது பற்றி பேசினார். எங்களின் நிர்ணயிப்பை ஏற்றுக் கொள்வதாக ஆவணக் காப்பகத்தின் புரவலரும் மவுண்ட் பேட்டனின் மருமகனுமான ஜான் ப்ரபோன் பிரபு (Lord John Brabourne)

எங்களிடம் கூறினார். இது எங்களுக்கு ஆறுதலாக இருந்தது. ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை பேராசிரியர் ஹக் தாமசை (Hug Thomas) இந்தப் பணிக்குப் பரிசீலிக்கலாம் என்று நாங்கள் யோசனை கூறினோம். ஆனால் இந்த விஷயத்தில் அவரது சிந்தனை தெளிவாக இருந்தது. பழைய உணர்வு களுடனேயே அவர் இருந்தார். இருப்பினும் ஒரு முடிவும் ஏற்படாமலேயே மவுண்ட்பேட்டன் இறந்து விட்டார் எனவே அதிகார பூர்வமாக அவரது வரலாற்றை எழுத ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் பணி பாதியிலேயே நின்று விட்டது. ஆனால் அவரது மருமகன் அந்தப் பணிக்கு நள்ளிரவில் சுதந்திரம் நூலின் தொகுப்பாசிரியர் (Editor) பிலிப் ஸிக்ளரைத் (Philip Ziegler) தெரிவு செய்தார்.

மவுண்ட்பேட்டன் பிரபு தனது இறுதிக் காலத்தில் இருதய நோயால் பாதிக்கப்பட்டார் என்பது ஒரு சிலருக்கே தெரியும். பணிகளில் உணர்ச்சி வசப்படக்கூடாது, வேலைப்பளுவை குறைத்துக் கொள்ள வேண்டும் என்று அவரது மகள்களும் மருத்துவரும் அறிவுரை கூறினார்கள். நல்ல நோக்கத் துடனான இந்த அறிவுரைகளை அவர் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

லண்டனில் கின்னர்டன் (Kinnerton) வீதியில் உள்ள அவரது இல்லத்தில் அவரைச் சந்தித்த ஆண்டுகளில் ஒரு சமயம் எங்கள் உரையாடல் மரணத்தின் பக்கம் திரும்பியது. காந்தியின் மரணம் அவரைக் கவர்ந்தது. ஏனெனில் தனது வாழ்நாளில் எதைச் சாதிக்க வேண்டும் என்று பாடுபட்டாரோ அதைத் தனது மரணத்தில் சாதித்து விட்டார் மகாத்மா இந்தியாவில் வகுப்பு வாத வன் முறைக்கு முடிவு கட்டிவிட்டார் என்று அவர் கூறினார். காந்தியின் மரணத் துக்கு ஓர் அர்த்தமும் பரிமாணமும் கிடைத்து விட்டது. இத்தகைய முடிவு மனி தர்களில் சிலருக்குத்தான் வாய்க்கிறது. வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், இது போன்ற முடிவுதான் தனது வாழ்நாளின் இறுதியில் தனக்கு அமைய வேண்டும் என்ற உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துவதாக அவரது உரை யாடல் இருந்தது.

ஒவ்வொரு கோடைகாலத்திலும் குடும்ப விடுமுறை காலத்தை அயர்லாந்தில் உள்ள க்ளாஸிபான் (Classiebawn) இல்லத்தில்தான் அவர் கழிப்பார். 1979 ஆகஸ்ட் மாதத்திலும் இதற்கான தயாரிப்பில் ஈடுபட்டிருந்தார். அவர் புறப் படுவதற்கு ஒரு நாள் முன்னர் இந்த நூலின் ஆசிரியர்களில் ஒருவருடன் தொலைபேசியில் பேசினார்.

'லூயி பிரபு! போகிற இடத்தில் எச்சரிக்கையாக இருங்கள்! அயர்லாந்து குடியரசு ராணுவத்தின் (IRA) கொடியவர்கள் உங்கள் மீது குறி வைத்திருக் கிறார்கள்' என்று நூலாசிரியர் எச்சரித்தார்.

மறுமுனையிலிருந்து பதில் வந்தது: 'அன்புள்ள லேரி, இந்த விஷயங்களில் நீங்கள் எவ்வளவு குறைவாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள் என்பதை மீண்டும் வெளிப்படுத்தி விட்டீர்கள் அயர்லாந்து பிரச்சனையில் எனது எண்ணங்கள் என்ன என்பதை அயர்லாந்துக்காரர்கள் நன்றாகவே புரிந்து வைத்துள்ளனர். எந்த வகையிலும் எனக்கு அங்கே ஆபத்து இல்லை' என்றார் மவுண்ட்பேட்டன்.

பதினைந்து நாட்களுக்குப் பின் ஐஆர்ஏ கொலையாளிகளால் அவர் கொல்லப்பட்டார். காலை வேளையில் கடலில் உறவினர்களுடன் உல்லாச

மாகப் பய கு செலுத்த முற்பட்ட போது, அதில் மறைத்துவைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது. இதில் மவுண்ட்பேட்டனுடன் அவரது சம்மந்தியும் (மருமகன் ஜான் பார்போன் பிரபுவின் தாயார்) ஒரு குழந்தையும் கொல்லப் பட்டனர்.

மவுண்ட்பேட்டன் வாழும் போது இது நடந்திருந்தால் ஒரு மூதாட்டி யையும் ஒரு குழந்தையையும் கொன்றவர்களை அவர் கண்டனம் செய்திருப்பார். அவரையே கொன்றபின் செய்வதற்கு என்ன இருக்கிறது? மவுண்ட்பேட்டன் மற்றும் அவரது தந்தையின் வாழ்நாளில் முக்கியப் பங்கு வகித்த எல்லையற்ற கடல் பரப்பில் இப்போது அவர் இறந்து போனார். இவரது மரணம் வடக்கு அயர்லாந்தில் கொலையின் விசுவாசிகளுக்கும் குடியரசுப் படையினருக்கும் கொஞ்சமாவது மனமாற்றத்தை ஏற்படுத்தியிருக்குமா? அப்படி ஏற்படுத்தாத பட்சத்தில் தனது முடிவைத் தகுதிவாய்ந்ததாக அவர் கருதமாட்டார் - அவரால் மிகவும் புகழ்ந்துரைக்கப்பட்ட மகாத்மா காந்தியின் மரணத்தோடும் இதனை எவரும் ஒப்பிடமாட்டார்.

'வடக்கு அயர்லாந்தில் ஒரே இனமக்கள், சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்த ஒரே கடவுளை வணங்கும் மக்கள், தங்களுக்குள் வெட்டிச் சாய்த்துக் கொள்ளும்போது, இந்தியாவில் இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு சாவதை மேற்கு நாட்டவர் எப்படிக் குறை கூற முடியும்?' என்று நள்ளிரவில் சுதந்திரம் நூலுக்கான பணியின் போது அவர் அடிக்கடி எங்களிடம் கூறுவார்.

மவுண்ட்பேட்டன் மரணமடைந்து சற்றேறத்தாழ 20 ஆண்டுகள் கடந்த பின்னும் அவரது தியாகமும், அவரைப் போலவே அவருக்குப் பின்னால் பலர் செய்த தியாகங்களும் வடக்கு அயர்லாந்து மக்களிடம் சிறிதளவு மனமாற்றத்தை ஏற்படுத்துவதில் கூட வெற்றி பெற முடியவில்லை. காந்தியின் மரணம் இந்திய நாட்டு ஆண்களிடமும் பெண்களிடமும் ஏற்படுத்திய விளைவுகள் கூட மவுண்ட்பேட்டன் மரணத்தால் இங்கே (வடக்கு அயர்லாந்தில்) ஏற்படாதது துரதிருஷ்டமே!

**லேரி காலின்ஸ்**

**டொமினிக் லேப்பியர்**

*டிசம்பர் 1996*


அதிகார மாற்றத்துக்கு முன்
இந்தியா
பிரிட்டிஷ் இந்தியா
மன்னர் மாநிலங்கள்
இந்தியா அல்லது பாகிஸ்தானுடன் சேர
ஒப்புக் கொள்ளாத மன்னர் மாநிலங்கள்
ஸ்ரீநகர்
ராவல்பிண்டி
லாகூர்
பஞ்சாப்
பலுசிஸ்தான்
சிம்லா
புதுடில்லி
ஜெய்ப்பூர்
ராஜபுதனம்
கராச்சி
ஆக்ரா
லக்னோ
பாட்னா
பீகார்
பூடான்
ஷில்லாங்
கல்கத்தா
மத்திய
மாகாணங்கள்
ஹைதராபாத்
ஒரிசா
பம்பாய்
சென்னை
திருவாங்கூர்
இலங்கை



15 ஆகஸ்டு 1947
பிரிவினை நாளன்று
இந்தியா
ஜம்மு
ஸ்ரீநகர்
காஷ்மீர்
ராவல்பிண்டி
பஞ்சாப்
இமாச்சல்
பிரதேசம்
மேற்கு
பாகிஸ்தான்
பெப்சு
டில்லி
ஆக்ரா
லக்னோ
ஆஜ்மீர்
ஜெய்ப்பூர்
ராஜஸ்தான்
கட்ச்
புஜ்
ராஜ்கோட்
சௌராஷ்ட்ரா
மத்திய
இந்தூர்
போபால்
ரேவா
விந்திய
பிரதேசம்
மத்தியபிரதேசம்
நாக்பூர்
பீகார்
பாட்னா
மே.
வங்கம்
கல்கத்தா
அசாம்
ஷில்லாங்
மணிப்பூர்
திரிபுரா
கிழக்கு
பாகிஸ்தான்
கட்டாக்
ஒரிசா
பம்பாய்
ஹைதராபாத்
கர்நூல்
ஆந்திர
மைசூர்பிரதேசம்
பெங்களூர்
கூர்க்
சென்னை
திருவனந்தபுரம்
திருவாங்கூர்
கொச்சின்
இலங்கை
அந்தமான் நிக்கோபார்
தீவுகள்

# முகவுரை

*பம்பாயின் வளைகுடாப் பகுதியில் நீரால் சூழ்ந்த கூம்பான சிறிய நிலப்பகுதியில் மஞ்சள் நிறக் கல்லாலான வலுமிக்க அந்த வளைவு வானத்தை உரசிக் கொண்டு தனது கம்பீரத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. அந்த வளைவின் மேடையிலிருந்து சரிந்து சென்று கடல் நீரைத் தொடும் பகுதியில் வளைகுடாவின் மெல்லிய அலைகள் நீர் நிலையில் கிடக்கும் பாசிபடிந்த இடிபாடுகளையும் குப்பைக் கூளங்களையும் மெல்ல வருடி அசைக்கின்றன. செம்மாந்து நிற்கும் அந்த வளை வின் நிழலில் ஒரு விசித்திர உலகம் உள்ளது. பாம்பாட்டிகள், ஜோசியர்கள், பிச்சைக்காரர்கள், சுற்றுலாப் பயணிகள், சோம்பேறித்தனமும் போதைப் பழக்கமும் உள்ள நீளமாகத் தலைமுடி வளர்த்த ஹிப்பிகள், ஆதரவற்றவர்கள், அமைதியற்றப் பெருநகரில் செத்துப் பிழைக்கும் கூட்டத்தினர் எனக் கலந்தது அந்த உலகம். அங்குள்ள வளைவின் மேற்புறத்தில் இப்போதும் படிப்பதற்கு ஏற்றாற் போல் ஒரு வாசகம் பொறிக்கப் பட்டுள்ளது. ஆனாலும் இதனைப் படித்தறிய எவரின் தலையும் நிமிர்வதில்லை. அந்த வாசகம் இதுதான். '1911 (MCMXI) டிசம்பர் 2ஆம் தேதி இந்தியாவை ஆளும் பிரிட்டிஷ் மன்னர் ஐந்தாம் ஜார்ஜும் ராணி மேரியும் இந்தியாவுக்கு வந்திறங்கியதை நினைவு கூர்வதற்காக நிறுவப்பட்டது.'*

*மிகப்பெரிய சாம்ராஜ்யம் என்று உலகம் அறிந்த பேரரசின் வெற்றி வளை வாக விளங்கியது இந்திய நுழைவாயில் (Gate way of India). பிரிட்டிஷாரின் தலைமுறையினர் பலர் தங்களின் கிராமங்களையும் ஸ்காட்லாந்தின் குன்று களையும் கடந்து காவியப் புகழ் வாய்ந்த இந்தியக் கடற்கரை நோக்கி வரும் போது விசைப்படகின் மேல் தளத்திலிருந்து பார்த்தால் அவர்களின் கண்களுக்கு முதலில் தோன்றுவது இதன் ஓங்கி உயர்ந்த வடிவம்தான். ராணுவ வீரர்கள், சாகசம் புரிவோர், வணிகர்கள், நிர்வாகிகள் எனப் பலரும் இந்த நுழைவாயில் வழியாகத்தான் இந்தியாவுக்கு வந்தார்கள். பேரரசின் பெருமைமிகு சொத்தாகக் கருதப்படும் இடத்தில் அமைதியை நிலைநாட்டவும், வென்றடக்கிய துணைக் கண்டத்தைச் சுரண்டவும், ஆளப்பிறந்த இனம் என்ற அசைக்க முடியாத எண்ணத்துடனும் தங்களின் பேரரசு என்றென்றும் நீடித்திருக்க விதிக்கப் பட்டது என்ற சிந்தனையுடனும் வெள்ளையர்களின் சுமையை ஏற்றுக் கொள்ள வும் இவர்கள் வந்தனர்.*

*இவையெல்லாம் இப்போது ஒதுங்கி தொலைதூரத்துக்கு விலகிவிட்டன. இன்று 'இந்திய நுழைவாயிலும்' நினவே (Nineveh), டைர் (Tyre) (நினவே டைக்ரிஸ் நதிக்கரையில் இருந்த அசிரியா நாட்டின் பிற்காலத்திய தலைநகராக இருந்தது. இங்கே இருந்த அரண்மனைகளும் நூலகமும் கி.மு.612இல் மெடேக்கள் மற்றும் பாபிலோனியர்களால் அழிக்கப்பட்டன. டைர் கி.மு. 12-8ஆம் நூற்றாண்டு காலத்தில் துறைமுக நகரமாக இருந்து அழிந்தது மொர்) போன்ற மற்றொரு கற்குவியலாகவே உள்ளது. அரை நூற்றாண்டுக்கு முன்பே இது முடிவடைந்த ஒரு சகாப்தத்தின் மறக்கப்பட்ட சின்னமாகி விட்டது.*

# நள்ளிரவில்
# சுதந்திரம்

ஒன்று

# 'ஆளவும் அடிமைப்படுத்தவும் விதிக்கப்பட்ட ஓர் இனம்'

### *லண்டன், புத்தாண்டு தினம், 1947*

*ஒரு மகத்தான தேசத்தின் திருப்தியற்ற குளிர்காலமாக அது இருந்தது. லண்டன் நகரின் மேல் இருந்த குளிர்ந்த மழை மேகம் போல் சோகமும் கவிந்திருந்தது. ஒரு புத்தாண்டு நாளில் பிரிட்டனின் தலைநகர் உற்சாகமிழந்து இவ்வளவு சோகமான மனநிலையை பெற்றிருந்தது மிகவும் அரிதாகும். அந்த நகரின் விழாக்கால காலை வேளையில் ஒரு ஆண் முகச் சவரம் செய்து கொள்ளவோ, ஒரு பெண் குளிப்பதற்கு தொட்டியின் பகுதியை நிறைத்துக் கொள்ளவோ கூட எந்த வீட்டிலும் சுடுதண்ணீர் இல்லை. புத்தாண்டை லண்டன்வாசிகள் படுக்கையறைகளில் தான் கொண்டாடினார்கள்; கடும் குளிர் காரணமாக அவர்களின் மூச்சுக்காற்றும் சுருள் சுருள் புகையாக வெளிவந்தது. முந்தைய நாள் அருந்திய மதுவின் மிச்சசொச்ச போதையுடன் சிலர் அந்த நாளைக் கொண்டாடினார்கள். புத்தாண்டு தினத்தின் முதல்நாள் இரவில் மது விற்கப் படும் இடங்களில் ஒரு பாட்டில் விஸ்கியின் விலை 8 பவுண்டாக இருந்தது. (பிரிட்டனின் நாணயம் பவுண்ட் இதன் தற்போதைய மாற்று மதிப்பு ஒரு பவுண்டுக்கு ரூ. 70 ஆகும். மொ-ர்).*

*வீதிகள் எல்லாம் வெறிச்சோடிக்கிடந்தன. கிழிந்த பழைய சீருடை களோடும், எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக வைத்துப் பாதுகாக்கப்பட்டதும் ஓட்டையானதுமான துணிகளோடும் நடைபாதைகளில் பரபரப்பாக சென்று கொண்டிருந்த மக்கள் சிடுசிடுப்போடு உற்சாகமற்ற ஜந்துகள் போல காணப்பட்டார்கள். பிரிட்டனில் அரிதாகக் கிடைத்த ரேஷன் பெட்ரோலை குற்றவுணர்வுடன் செலவழித்துக் கொண்டே திருட்டுப் பூதம் போல ஒரு சில கார்கள் ஊர்ந்து கொண்டிருந்தன. இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின் லண்டன் நகர வீதிகளில் ஒரு வித நெடி பரவியிருந்தது. குண்டு வீச்சில் தகர்ந்த ஆயிரக்கணக்கான கட்டிடங்களின் சாம்பல், இலையுதிர் கால மூடுபனி போல எங்கும் பரவி ஒரு வித துர்நாற்றத்தைப் பரப்பியது.*

*இத்தகைய உற்சாகமற்ற துயரம் நிறைந்த அந்த நகரம்தான், வென்றடக்கும் ஒரு தேசத்தின் தலைநகராக இருந்தது. பதினேழு மாதங்களுக்கு முன்பு தான், மனித குலத்தின் மிகக் கடுமையான ஒரு போரில் பிரிட்டன் வெற்றி பெற்றிருந் தது. அவர்களின் சாதனைகளும், இக்கட்டான சூழ்நிலையில் வெளிப்படுத்திய தீரச்செயல்களும், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உலகத்தை வியப் படையச் செய்தன.*

இருப்பினும் இந்த மாபெரும் வெற்றிக்கு அவர்கள் கொடுத்த விலை பிரிட்டனை சீரழித்து விட்டது. பிரிட்டனின் தொழில்கள் நசிந்து போயின. நிதி நிலை திவாலானது. ஒரு காலத்தில் பெருமதிப்புடன் இருந்த பவுண்ட், ஸ்டெர்லிங் நாணயங்கள் அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் டாலர்களால் மட்டுமே உயிர் பிழைத்துக் கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டது. போருக்கு அளிக்கப்பட்ட நிதியால் ஏற்பட்ட கடனை அடைக்க முடியாமல் கஜானா காலி யானது. வார்ப்புக் கூடங்களும் தொழிற்சாலைகளும் எல்லா இடங்களிலும் மூடிக்கிடந்தன. இரண்டு மிலியனுக்கும் (20 லட்சத்துக்கும்) அதிகமான பிரிட்டிஷ் காரர்கள் வேலையற்றிருந்தார்கள் 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட நிலக்கரி உற்பத்தி மிகவும் குறைந்து போனது. இதனால் ஒவ்வொரு நாளும் பிரிட்டனின் சில பகுதிகளில் பலமணி நேரத்துக்கு மின்சாரம் கிடைக்காத நிலை ஏற்பட்டது.

உணவுப் பொருள்கள், எரிபொருள்கள், அருந்தும் பானங்கள், மின்சாரம், காலணிகள், துணிமணிகள் எனப் பயன்படுபொருள்களுக்குக் கடும் தட்டுப்பாடு என்ற நிலை நீடிக்கும் எட்டாவது ஆண்டாகத்தான் லண்டன் வாசிகளுக்கு இந்தப் புத்தாண்டும் பிறந்தது. இரண்டு விரல்களை உயர்த்திக்காட்டியும் ('V for Victory') கட்டை விரலை உயர்த்திக் காட்டியும் ('Thumbs Up') ஹிட்லரைத் தோற்கடித்து வெற்றியை வெளிப்படுத்திய மக்களுக்கு இப்போது 'பட்டினி கிட, குளிரில் நடுங்கு' என்பது தாரக மந்திரமாகி விட்டது.

அண்மையில் கடந்து சென்ற கிருஸ்துமஸ் விடுமுறை காலத்தில் பதினைந்து குடும்பங்களில் ஒன்றில் தான் கோழிக்கறியுடனான உணவு கிடைத்தது. கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது பல குழந்தைகள் வெறும் கையோடுதான் இருந்தன. விளையாட்டுப் பொருள்கள் மீது அரசு 100 சதவீத விற்பனை வரி விதித்திருந்தது. லண்டன் நகர வீதிகளில் உள்ள கடைகளின் சன்னல்களில் 'உருளைக்கிழங்கு இல்லை,' 'இறைச்சி இல்லை', 'நிலக்கரி இல்லை', 'சிகரெட் இல்லை', 'விறகு இல்லை' என 'இல்லை' வார்த்தை சேர்ந்த அறிவிப்புப் பலகைகள் நிறைந்திருந்தன. பிரிட்டனின் அந்தப் புத்தாண்டு விடியலை மிகப் பெரிய பொருளாதார நிபுணர் கடுமையான வர்ணனையுடன் ஒரேவரியில் படம்பிடித்தார். 'நாம் ஓர் ஏழை நாட்டினர், அதற்கேற்ப வாழ நாம் கற்றுக் கொள்ள வேண்டும்' என்று ஓராண்டுக்கு முன்பு ஜான் மேநார்ட் கீன்ஸ் (John Maynard Keynes) நாட்டு மக்களுக்குக் கூறினார்.

புத்தாண்டை வரவேற்று ஒரு கோப்பை தேநீர் தயாரிப்பதற்குக் கூட போதிய அளவு சுடுநீரைப் பெற்றிருக்கவில்லையென்றாலும் லண்டன் வாசிகள் வேறொரு வசதியைப் பெற்றிருந்தார்கள். இங்கிலாந்துக்காரர்கள் என்பதால் இந்தப் பூவுலகின் கால் பகுதியில் உள்ள நாடுகளுக்குத் தாராளமாகச் சென்று திரும்புவதை உறுதி செய்யும் நீலம் மற்றும் தங்க நிறத்திலான பிரிட்டிஷ் பாஸ்போர்ட்டுகளை அவர்கள் வைத்திருந்தார்கள். உலகின் வேறெந்த நாட்டு மக்களும் இத்தகைய உரிமையைப் பெற்றிருக்கவில்லை. தன்னாட்சி உரிமை பெற்ற நாடுகள், நேரடி ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள், காப்பாளராக இருந்து ஆட்சி செய்யும் நாடுகள், சார்பு நாடுகள், குடியேற்ற நாடுகள் எனப் பிரத்யேகத் தன்மை கொண்ட பல வகை நாடுகள் 1947ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தின் போதும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் தான் இருந்தன. லண்டனில் கணப்பு வசதியில்லாத வீடுகளில் குளிரில் நடுங்கும் நிலையில் ஆங்கிலேயர்கள் இருந்த போதும், தமிழர்கள், சீனர்கள், தென் ஆப்பிரிக்க நாடோடி இனத்தவர்கள்,

திராவிட இனத்தின் முன்னோடிகள், ஆஸ்திரேலியர்கள், கனடா இனத்தினர் என 560 மிலியன் (56 கோடி) மக்களிடம் அவர்களே செல்வாக்கு செலுத்தி வந்தனர். பேர்ட் தீவு, (Bird Island), பிராம்பிள் திட்டு (Bramble Cay), ரெக் ரீஃப் (Wreck Reef) போன்ற பலரும் அறியாத சிறு பகுதிகள் முதல் மிகப் பெரியதும் மக்கள் நெருக்கம் உள்ளதுமான ஆசியா, ஆப்பிரிக்கா நாடுகள் வரை உலகில் உள்ள சுமார் 300 நாடுகள் மீது அன்றைய காலைப் பொழுதிலும், அவர்களால் உரிமை கொண்டாட முடிந்தது. பிரிட்டனின் செருக்கு அப்போதும் அர்த்த முள்ளதாகவே இருந்தது. அந்தப் புத்தாண்டு தினத்தின் காலைவேளையில் சோர்ந்து கிடக்கும் மத்திய லண்டன் பகுதியில் உள்ள பிக்பென் (Big Ben) கடிகாரம் ஒவ்வொரு தடவை மணியடிக்கும் போதும் பிரிட்டிஷ் சாம்ராஜ் யத்தின் ஏதாவது ஒரு பகுதியில் உள்ள கொடி மரத்தில் யூனியன் ஜாக் கொடி உயர்ந்து கொண்டிருந்ததுதான் இதற்குக் காரணம்.

ஒப்பிட்டுப் பார்த்தால் சீசரோ (Caesar), சார்லிமேனோ (Charlemagne) கூட இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்துக்குத் தலைமை தாங்கியதில்லை. உலக வரை படத்தில் முந்நூறு ஆண்டுகளில் பிரிட்டன் ஆட்சிப் பரப்பைக் குறிக்கும் செந்தூரம் (Scarlet) வண்ணம் மேலும் மேலும் பரவிக் கொண்டேயிருந்தது. இது பள்ளி மாணவர்களின் கனவுகளையும், வணிகர் களின் ஆசையையும், சாகச வீரர்களின் லட்சியங்களையும் தூண்டியவண்ணம் இருந்தது. பிரிட்டனின் கச்சாப் பொருள்கள், தொழிற்சாலைகளை அதிகரித்து தொழிற்புரட்சிக்கு வழி வகுத்தது. இவற்றில் உற்பத்தியானப் பொருள்களுக்கு அதன் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பாதுகாப்பான சந்தை கிடைத்தது. 'தங்கத்தின் வலிமை யாலும், தொழிற் சாலைகளின் கரும்புகையாலும், வென்றடக்கிய ரத்தச் சிவப் பாலும்' சாம்ராஜ்யம் உருவானதால் 50 மிலியனுக் கும் (5 கோடிக்கும்) குறைவான மக்கள் தொகையைக் கொண்ட ஒரு சிறிய தீவு நாடு இந்தப் பூமியின் மிகவும் சக்திவாய்ந்த நாடானது; லண்டன் உலகின் தலைநகரானது.

வெறிச்சோடிக் கிடந்த வீதிகளின் வழியாக தலைநகர் லண்டனின் மையப் பகுதியை நோக்கி ஏறத்தாழ ரகசியப் பயணம் போல ஒரு கருப்பு நிற ஆஸ்டின் பிரின்சஸ் கார் இப்போது வந்து கொண்டிருந்தது. இந்தக் கார் பக்கிங்காம் அரண்மனையைக் கடந்து மால் வீதி நோக்கித் திரும்பிய போது அதில் ஒற்றையாய் இருந்த பயணி தனது கண்முன் கடந்து செல்லும் ராஜபாட்டையை உற்சாகமின்றி கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டே வந்தார். எத்தனை முறை இந்த வீதியில் சாம்ராஜ்ய வெற்றி விழாக்களை பிரிட்டன் கொண்டாடியிருக் கிறது என்பதை அவர் மனக்கண்முன் கண்டார். அரை நூற்றாண்டுக்கு முன் 1897 ஜூன் 22ஆம் தேதி விக்டோரியா மகாராணியின் வைரவிழா கொண்டாட் டம் நடந்தபோது அவரின் மிக நீண்ட அலங்கார வாகனம் ஒலியெழுப்பியபடி இந்த வீதிக்குள் வந்தது. வாகனத்தைத் தொடர்ந்து கூர்க்காக்கள், சீக்கியர்கள், பத்தானியர்கள், ஆப்பிரிக்காவின் கோல்ட் கோஸ்ட்டைச் சேர்ந்த ஹாசாஸ் (Hausas) இனத்தினர், சூடான் நாட்டின் ஃபுஸ்ஸி உஸ்ஸிக்கள் (Fuzzy Wuzzies) சைப்ரஸ், ஜமாய்க்கா, மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள், ஹாங்காங் நாட்டின் சீனர்கள், போர்னியோவின் வேட்டைக்காரப் பிரிவினர், ஆஸ் திரேலியா, நியூசிலாந்து, தென்ஆப்பிரிக்கா, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வர்கள் என சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த பலரும் தத்தம் இனத்தின் இசைக் கருவி களின் ஓசைகளுடன் மால் வீதியில் அணி வகுத்தனர். அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் இப்போதுள்ள ஆங்கிலேயர்களுக்கும் இவர்களின் சந்ததியர்க்கும்

சிறப்புமிக்கக் கனவுகள்தான். இவையெல்லாம் இவர்களிடமிருந்து பறிக்கப் பட்டு ஏகாதிபத்திய சகாப்தம் மடிந்து கொண்டிருக்கிறது. தவிர்க்க முடியாத இந்த வரலாற்றின் அங்கீகாரமாகத்தான் பிரமாண்ட விழாக்களுக்கு சாட்சியாக இருந்த ராஜபாட்டையில் அந்தக் கருப்பு நிற ஆஸ்டின் பிரின்சஸ் கார் தன்னந் தனியாகப் போய்க் கொண்டிருந்தது.

அந்தக் காரிலிருந்த மனிதர் தனது இருக்கையில் சாய்ந்தார். ஸ்விட்சர்லாந்தில் சூரிய ஒளி பரவிய பனிச்சறுக்குப் பிரதேசத்தை இந்நேரம் அவர் மகிழ்ச்சியுடன் கண்டு களித்துக் கொண்டு இருந்திருக்க வேண்டும். ஆனால் ஒரு அவசர அழைப்பு கிருஸ்துமஸ் விடுமுறையை அனுபவிக்க விடாமல் தடுத்து விட்டது. அந்த அழைப்பால் சூரிச்சுக்கு சென்று அங்கிருந்து பிரிட்டிஷ் விமானப்படை விமானத்தின் மூலம் நார்த்தோல்ட் (Northolt) விமான நிலையத்துக்கு வர வேண்டியதாயிற்று.

அவரது கார் நாடாளுமன்ற வீதியைக் கடந்தது. பின்னர் ஒரு குறுகலான சந்தில் திரும்பி, ஏறத்தாழ உலகில் மிக அதிகமாகப் புகைப்படம் எடுக்கப்பட்ட தாகக் கருதப்படும், டவுனிங் தெரு 10ஆம் எண் இல்லத்துக்குச் சென்றது. (டவுனிங்தெரு 10ஆம் எண் இல்லத்தை 1680இல் உருவாக்கியவர் சர் ஜார்ஜ் டவுனிங். அவரது பெயரைத்தான் அந்தத் தெரு பெற்றுள்ளது. இந்தக் கட்டிடம் 1721ஆம் ஆண்டு முதலாம் ஜார்ஜ் மன்னரால் இங்கிலாந்து பிரதமர் சர் ராபர்ட் வால்போல் (Sir Robert Walpole) இடம் அளிக்கப்பட்டது. அதன் பிறகு இந்தக் கட்டிடம் இங்கிலாந்து பிரதமர்களின் அரசு இல்லமானது - மொ-ர்) எளிமை யான மரவேலைப்பாடு கொண்ட அந்த இல்லத்தின் கதவோடு உலகம் ஆறு ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டிருந்தது. இந்த இல்லத்தில் கருப்பு நிறக் கோட் அணிந்து, வாயில் ஒரு சுருட்டுடனும், கையில் ஒரு பிரம்புக்கோலுடனும், வெற்றியைக் குறிக்கும் வகையில் 2 விரல்களை ('V') உயர்த்திக் காட்டிய ஒரு மனிதர் இருந்தார். இந்த இல்லத்தில் இருக்கும் போது வின்ஸ்டன் சர்ச்சில் என்ற அந்த மனிதர் இரண்டு பெரிய யுத்தங்களை நடத்தினார். ஒன்று அச்சு நாடுகளைத் தோற்கடிக்க நடந்த போர்; மற்றொன்று பிரிட்டிஷ் சாம்ராஜ் யத்தைப் பாதுகாப்பதற்காக நடந்த போர்.

இருப்பினும் இப்போது டவுனிங் தெரு 10ஆம் எண் இல்லத்தில் புதிய பிரதமர் ஒருவர் காத்திருக்கிறார். அவர் ஒரு சோஷலிஸ்ட் தலைவர். 'தன்னடக்க மானவர் என்பதோடு எதற்கும் பணிந்து விடக்கூடியவர்' என்று இவரைப் பற்றி சர்ச்சில் இகழ்ச்சி பேசியதுண்டு.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் உள்ள பல நாடுகளையும் விடுவிப்பதைத் தொடங்கப் போகிறோம் என்று வெளிப்படையாக உறுதி கூறித்தான் கிளமண்ட் அட்லியின் தொழிலாளர் கட்சி ஆட்சியைப் பிடித்தது. கைபர் கணவாய் முதல் கன்னியாகுமரி வரை விரிந்து பரந்த, மக்கள் தொகை மிகுந்த இந்தியாவுக்கு விடுதலை என்பதிலிருந்துதான் அட்லியும் இங்கிலாந்தும் தவிர்க்க முடியாத இந்த வரலாற்று சிறப்பு மிக்க நடவடிக்கையைத் தொடங்க வேண்டியிருந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்ற மிக உயர்ந்த, அதே சமயம் வெட்ககரமான அமைப்புக்குத் திருப்புமுனையாகவும் சாம்ராஜ்யம் என்பதை நியாயப்படுத்துவதற்காகவும் இந்தியாவைத் தன்னகத்தே கொண்டிருப்பதும் அது நீடித்திருக்க கவனம் செலுத்துவதும் தேவையாய் இருந்தது. இந்தியாவைச் சேர்ந்த வங்கச் சிப்பாய்களும், பட்டுத் தலைப்பாகையணிந்த மகாராஜாக்களும், புலி வேட்டைகளும், போலோ மைதானங்களும், ஏழைகளின் குடிசைகளும்,

*சிறிய கோப்பையில் பருகும் மதுபானமும், தங்க முகபடாம் தரித்த யானைகளும், பட்டினி கிடக்கும் சாதுக்களும், மிளகு ரசமும், கர்வம் மிக்க சீமாட்டிகளும் சாம்ராஜ்யக் கனவுகளாகச் சித்திரிக்கப்பட்டிருந்தன. இந்தக் கனவுகளுக்கு முடிவுகட்டவே டவுனிங் தெரு 10ஆம் எண் இல்லத்துக்கு அழைக்கப்பட்டிருந்த அழகான ரியர் அட்மிரல் (கடற்படை அதிகாரி) தனது காரிலிருந்து இறங்கினார்.*

*இங்கிலாந்தின் மிக முக்கியப் புள்ளிகளில் ஒருவரான, 46 வயதுள்ள, பர்மாவின் இளங்கோமகன் மவுண்ட்பேட்டன் என்றழைக்கப்பட்ட அவர்தான் லூயி ஃபிரான்சிஸ் ஆல்பெர்ட் விக்டர் நிகோலஸ் மவுண்ட்பேட்டன். ஆறடி உயரமுள்ள கம்பீரமான மனிதர். ஆனால் உடற்பயிற்சியால் உருக்கு போலிருந்த அந்த உடலில் தொங்கும் ஊளைச்சதையின் அறிகுறியைக் காண முடியாது. கடந்த ஆறு ஆண்டுகளாக மிகப்பெரும் பொறுப்பை ஏற்றுச் சுமந்திருந்தாலும், பிரிட்டன் நாட்டுப் பத்திரிகைகள் மூலம் பல லட்சம் வாசகர்களுக்கு மிகவும் பரிச்சயமான அவரது முகத்தில் சோர்வின் சாயலோ பதற்றமோ இல்லாதது சிறப்பம்சம். சித்திரத்தில் இருந்த செந்தாமரை போல மாற்றமின்றி இருந்த முகமும், குறைவில்லாத கருமையான தலைமுடியும், ஒளிபடைத்த கண்களும் அந்த ஜனவரி முதல் நாள் காலையில் அவருக்கு இருந்த வயதைவிட ஐந்து வயதைக் குறைவாகவே காட்டின.*

*லண்டனுக்குத் தாம் அழைக்கப்பட்டது ஏன் என்பதை மவுண்ட் பேட்டன் நன்றாகவே அறிந்திருந்தார். தென்கிழக்கு ஆசியப் பகுதி படைப்பிரிவின் தளபதி பதவியிலிருந்து திரும்பிய பின் இவர் அடிக்கடி டவுனிங் வீதிக்கு வந்திருக்கிறார். தென்கிழக்கு ஆசியப் பகுதிக்கு உட்பட்ட நாடுகளின் விஷயங்கள் பற்றி இவர் ஆலோசனை அளித்து வந்தார். இதற்கு முன் வந்த போது, இவரது செயல்வரம்புக்குள் வராத ஒரு நாட்டைப் பற்றி பிரதமமந்திரி வேகவேகமாக சில கேள்விகளை எழுப்பினார். அந்த நாடு இந்தியா. இந்தக் கேள்விகள் அந்த இளைய அதிகாரிக்கு 'மிகவும் அருவருப்பான, சங்கடமான உணர்வையே' ஏற்படுத்தின. அவரது முன்னுணர்வு நியாயமானதாகவே இருந்தது. மவுண்ட் பேட்டனை இந்திய வைஸ்ராயாக நியமிக்க அட்லி எண்ணியிருந்தார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் வைஸ்ராய் பதவி மிகவும் முக்கியமானது. இந்தப் பதவியிலிருந்து தான் பல ஆங்கிலேயர்கள் மனித குலத்தின் ஐந்தில் ஒரு பங்கு மக்களின் விதியைத் தீர்மானித்தார்கள். இருப்பினும் மவுண்ட்பேட்டனின் பணி அந்த அலுவலகத்திலிருந்து இந்தியாவை ஆளுவதல்ல. அவருக்கு அளிக்கப் படும் பொறுப்பு எந்த ஒரு ஆங்கிலேயனுக்கும் வருத்தத்தை அளிப்பதாகவே இருக்கும். ஏனெனில் இந்தியாவைக் கைவிடுவதற்கான பணி அது.*

*இந்தப் பணியில் தனக்குப் பங்கிருப்பதை மவுண்ட்பேட்டன் விரும்ப வில்லை. இந்தியாவிலிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டிய தருணம் வந்து விட்டது என்பதை மட்டும் அவர் முழுமையாக ஏற்றுக் கொண்டார். ஆனால் பிரிட்டனுக்கும் அதன் சாம்ராஜ்யத்தின் தூணாக இருக்கும் இந்தியா வுக்கும் இடையே உள்ள தொன்மையான தொடர்புகளைத் துண்டிப்பதற் காகவே தாம் அழைக்கப்பட்டிருப்போம் என்ற எண்ணம் அவருக்கு மனப் போராட்டத்தை ஏற்படுத்தியது. அட்லியின் முயற்சியை முறியடிக்க சிறியதும் பெரியதுமான பல கோரிக்கைகளை அவர் முன்வைத்தார். தன்னுடன் பல செயலாளர்களை அழைத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும், தென்கிழக்கு ஆசியப் பணியின் போது பயன்படுத்திய யார்க் எம் டபிள்யு 102 (York MW102) விமானத்தை அளிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளும் இதில் அடங்கும்.*

அவரே வியந்து போகும் விதத்தில் எல்லா கோரிக்கைகளையும் அட்லி ஏற்றுக் கொண்டார். இந்தியா சம்பந்தப்பட்ட பணிகளை ஏற்கவைக்கும் அட்லியின் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தி விடலாம் என்று இப்போதும் நம்பிக்கை வைத்தே அமைச்சரவைக் கூட்டம் நடக்கும் அறைக்குள் சென்றார் மவுண்ட் பேட்டன்.

மவுண்ட்பேட்டனுக்காகக் காத்திருந்தவர் வெளிறிய முகத்தோற்றத்துடன், ஒழுங்கின்றி வெட்டப்பட்ட மீசையுடன், இஸ்திரி பெட்டியின் வருடலை அறியாததால் கசங்கியிருந்த ஆடையுடன் இருந்தார். அவரது தோற்றம் சோர்வான, மகிழ்ச்சியற்ற நகரத்தைப் பிரதிபலிப்பதாகவும் இருந்தது. இந்த நகரின் வழியாகத்தான் அந்த அட்மிரலின் கார் சென்றது. இப்படிப்பட்ட, தொழிற்கட்சியைச் சேர்ந்த பிரதம மந்திரிதான், கவர்ச்சியான, போலோ விளையாடும் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை சாம்ராஜ்ய உடைப்புப் பணிக்குத் தெரிவு செய்திருந்தார். எடுத்த எடுப்பிலேயே இது முன்னுக்குப் பின் முரணானதாகத் தோன்றியது.

பொதுவாகக் கூறப்படுவதை விட மவுண்ட் பேட்டனிடம் அதிகத் தகுதிகள் இருந்தன. அவரது கடற்படை சீருடையை அலங்கரிக்கும் பதக்கங்களே இதற்கு சான்றாகும். பிரிட்டிஷ் நிர்வாகத்தின் ஒரு தூணாக அவரை மக்கள் கருதி னார்கள். ஆனால் நிர்வாகமோ மவுண்ட்பேட்டனையும் அவரது மனைவியை யும் ஆபத்தான சீர்திருத்தவாதிகளாகக் கருதியது. தென்கிழக்கு ஆசியப் பகுதியில் தளபதியாக இருந்ததால் ஆசியாவின் தேசிய இயக்கங்கள் பற்றி இங்கிலாந்தில் ஒரு சிலர் தெரிந்து வைத்திருந்ததை விட அதிகமாகவே அவர் தெரிந்து வைத் திருந்தார். இந்தோசீனாவின் ஹோசிமின், இந்தோனேஷியாவின் சுகர்னோ, பர்மாவின் ஆங்சான், மலாயாவின் சீனக் கம்யூனிஸ்டுகள், சிங்கப்பூரின் கட்டுப்பாடற்ற தொழிற்சங்க வாதிகள் ஆகியோரின் ஆதரவாளர்களுடன் அவருக்குப் பழக்கம் இருந்தது. ஆசியாவின் எதிர்காலப் பிரதிநிதிகள் இவர்கள் தான் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அதனால் தான் அவருடன் இருந்த அதிகாரிகள் இவர்கள் மீது அடக்கு முறையை ஏவிவிட வலியுறுத்தியபோதும் அதனைச் செய்யாமல் அரவணைத்துச் சென்றார். அவர் இந்தியாவுக்குச் சென்றால் எதிர்கொள்ள வேண்டிய தேசிய இயக்கம் மிகவும் பழமையானதாக இருக்கும்; மற்றெல்லாவற்றையும் விட வித்தியாசமானதாகவும் இருக்கும். கால் நூற்றாண்டு காலம் இங்கே நடந்த உணர்ச்சிகரமான போராட்டங்கள், வரலாற்றின் மிகப் பெரிய சாம்ராஜ்யம் அட்லி கட்சியின் மூலம் ஒரு முடிவுக்கு வர வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆயுதம் தாங்கிய போராளிகள் மற்றும் மக்கள் எழுச்சியால் விரட்டப்படும் முன் இந்தியாவிலிருந்து உரிய நேரத்தில் பிரிட்டன் வெளியேறிவிட வேண்டும் என்பதுதான் அந்த முடிவு.

இந்திய நிலவரம் பற்றிய விளக்கத்துடன் பிரதம மந்திரி தனது பேச்சைத் துவக்கினார் இந்தியாவின் நிலைமை ஒவ்வொரு நாளும் மோசமாகிக் கொண்டே செல்கிறது; இதனால் அவசரமான முடிவு எடுக்க வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று அவர் கூறினார். அந்த நெருக்கடியான கால கட்டத்தில், இந்தியாவுக்கு விடுதலை அளிக்க பிரிட்டன் தயாராக இருந்த போது, அதனை நிறைவேற்ற வழி கண்டுபிடிப்பதுதான் வரலாற்றின் சிக்கல்களில் ஒன்றாக இருந்தது. பிரிட்டன் வெளியேறுவது இந்தியாவின் நல்ல தருணமாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் அது நினைத்துப் பார்க்கவும் முடியாத ஒரு பயங்கரத்தை உருவாக்கும் என்றே தோன்றியது. காலனி ஆதிக்க

*ஒப்பீட்டு அளவில் பார்த்தால் ஓரளவு ரத்தம் சிந்தலுடன் தான் இந்தியாவை பிரிட்டன் வென்றது; ஆண்டது. இப்போது இந்தியாவை விட்டு அது வெளி யேறும் போது 350 ஆண்டுகளாக இந்தியா கண்டிராத அளவுக்கு வன்முறை வெடித்துக் கிளம்பும் என்ற அச்சுறுத்தல் உள்ளது.*

*இந்தியாவின் 300 மிலியன் (30 கோடி) இந்துக்களுக்கும் 100 மிலியன் (10 கோடி) முஸ்லீம்களுக்கும் இடையே காலம் காலமாக இருந்து வரும் முரண்பாடுதான் இந்தப் பிரச்சனைக்கு மூலகாரணமாகும். விட்டுக் கொடுக்காத பாரம்பரியப் பழக்கங்கள், எதிரும்புதிருமான மத உணர்வுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இவற்றோடு பிரிட்டனின் பல ஆண்டு கால பிரித்தாளும் கொள்கையும் சேர்ந்து இவர்களுக்கிடையேயான முரண்பாடு கொதிநிலையை அடைந்தது. சிரமப்பட்டு உருவாக்கப்பட்ட இந்திய ஒற்றுமையை சிதைத்து இஸ்லாமியர்களுக்கென்று தனி நாட்டை உருவாக்க வேண்டும் என்று முஸ்லீம் தலைவர்கள் கோரினார்கள். தங்களுக்குத் தனிநாடு தர மறுத்தால் ஆசிய வரலாற்றிலேயே மோசமான ரத்தம் சிந்தும் உள்நாட்டுப் போர் மூளும் என்று அவர்கள் எச்சரித்தனர்.*

*இந்தியாவின் 300 மிலியன் இந்துக்களில் பெரும்பாலோரைப் பிரதிநிதித் துவப்படுத்தும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் இந்தக் கோரிக்கையை உறுதியுடன் எதிர்த்தார்கள். துணைக்கண்டத்தில் பிரிவினை என்பது மிகவும் புனிதமான வரலாற்றுச் சிறப்பு மிக்க தங்களின் தாயகத்தை சீர்குலைத்துவிடும் என்பது அவர்களின் கருத்து.*

*சமரசம் செய்ய இயலாத இந்த இரண்டு தீவிர நிலைகளுக்கிடையே சிக்கிய பிரிட்டன், புதைமணலில் மெல்ல மெல்ல மூழ்குவதாகவும் இதிலிருந்து வெளிவர வழியே இல்லை என்றும் நினைத்தது. இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண பிரிட்டன் மேற்கொண்ட முயற்சிகள் பல தடவை தோல்வியுற்றன. நிலைமை மிகவும் மோசமானபோது, அப்போதைய வைஸ்ராயும், பெருந்தன்மையும் உறுதியும் மிக்க ஃபீல்ட் மார்ஷல் சர் ஆர்ச்சிபால்ட் வேவல் (Sir Archibald Wavell) அட்லி அரசுக்கு கடைசி கட்டப் பரிந்துரைகளை அளித்தார். 'எல்லா முயற்சிகளும் தோற்றுவிட்டால், நாங்கள் எங்களுக்கு வசதியான நேரத்தில், எங்கள் இஷ்டம் போல், எங்கள் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்தியாவை விட்டு வெளியேறுவோம். எங்கள் முயற்சியில் எவராவது தலையிட்டால் அது போராகக் கருதப்பட்டு படை வலிமை முழுவதையும் பயன்படுத்தி அதனை சந்திப்போம்' என்று பிரிட்டன் அறிவிக்க வேண்டும் என்பதுதான் அந்த யோசனை.*

*பிரிட்டனும் இந்தியாவும் ஒரு பேரழிவை எதிர்நோக்கியிருக்கின்றன என்று மவுண்ட் பேட்டனிடம் அட்லி கூறினார். இந்த நிலைமை நீடிக்க அனுமதிக்க முடியாது. வேவல் அதிகம் பேசக் கூடியவரல்ல; இதனால் வளவளவென்று பேசுகிற இந்தியப் பிரதிநிதிகளுடன் சரியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை என்றும் அட்லி கூறினார்.*

*சிக்கல் தவிர்க்கப்பட வேண்டுமானால் ஒரு புதிய முகம், ஒரு புதிய அணுகுமுறை நிச்சயம் தேவைப்படுகிறது. ஒவ்வொரு நாள் காலையிலும், இந்தியாவின் புதிது புதிதான இடங்களிலிருந்து கடுமையாகப் போராட்டம் வெடித்த செய்தியை அறிவிக்கும் தந்திகள் இந்தியா அலுவலகத்துக்கு வந்து கொண்டே இருக்கின்றன. எனவே அளிக்கவிருக்கும் பதவிப் பொறுப்பை*

ஏற்றுக் கொள்வது மவுண்ட்பேட்டனின் வீரார்ந்த கடமையாகும் என்று அட்லி தெரிவித்தார்.*

பிரதமரின் பேச்சை கவனித்துக் கொண்டிருந்தபோது மவுண்ட் பேட்டனின் மனதில் தீமையின் அறிகுறிகள் நிறைந்தன. 'நம்பிக்கையற்ற நிலையில் இந்தியா இருப்பதாகத்தான்' இப்போதும் அவர் நினைத்தார். வேவலை அவர் மிகவும் நேசித்தார். அவரது சாதனைகளை வியந்தார். தென்கிழக்கு ஆசிய கூட்டுப் படையின் தளபதி என்ற முறையில் தொடர்ச்சியாக டில்லி சென்ற போதெல்லாம் இந்தியாவின் பிரச்சனைகள் பற்றி வேவலுடன் மவுண்ட்பேட்டன் விவாதித்திருக்கிறார்.

வேவல் சிறந்த யோசனைகளைக் கொண்டிருந்ததாகவே மவுண்ட்பேட்டன் எண்ணினார். அவராலேயே அதை நிறைவேற்ற முடியவில்லையென்றால் நான் அதே பணிக்காக முயற்சி செய்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது? இருப்பினும் இதிலிருந்து தப்பிக்கும் அறிகுறி இல்லையென்றே தோன்றியது. இந்தப் பணியை மேற்கொள்ளும்படி அவர் நிர்ப்பந்திக்கப்படவிருக்கிறார். இதில் தோல்வி பெரிதாக இருக்கும். போரில் தாம் பெற்ற பேரும் புகழும் எளிதாக மறைந்து போகும் வாய்ப்புதான் இதில் அதிகம்.

இந்தப் பொறுப்பை அட்லி தம்மீது திணித்தால் குறைந்தபட்சம் வெற்றிக்கான நம்பிக்கைத் துளிகளையாவது அளிக்கக் கூடிய அரசியல் நிபந்தனைகள் சிலவற்றைப் பிரதமரிடம் திணிப்பது என்று மவுண்ட் பேட்டன் தீர்மானித்தார். வேவலுடன் அவர் நடத்திய உரையாடல்கள் மூலம் அந்த நிபந்தனைகள் என்னவாக இருக்கலாம் என்பது பற்றிய ஒரு கருத்தோட்டம் அவரிடம் இருந்தது.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி எந்தத் தேதியில் முடிவுக்கு வரும் என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி வெளிப்படையாக அறிவிக்க அரசு ஒப்புக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் இந்தப் பொறுப்பை தம்மால் ஏற்க இயலாது என்று பிரதம மந்திரியிடம் மவுண்ட்பேட்டன் கூறினார். இது மட்டுமே சந்தேகக் கண்கொண்ட இந்தியத் அறிவு ஜீவிகளிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும். உண்மையில் பிரிட்டன் வெளியேறத்தான் போகிறது என்ற எண்ணம், பேச்சுவார்த்தைகளில் முழுமனதுடன் பங்கேற்க வேண்டியது அவசியம் என்ற உணர்வை இந்தியத் தலைவர்களிடம் உருவாக்கும்.**

---

* மவுண்ட்பேட்டனை இந்தியாவுக்கு அனுப்பும் யோசனையைப் பிரதமர் அட்லிக்குத் தெரிவித்தவர் அவருக்கு அருகே உள்ள நிதி அமைச்சர் சர் ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ் (Sir Stafford Cripps) தான் என்பது மவுண்ட்பேட்டனுக்குத் தெரியாது. காங்கிரஸ் தலைவர் ஜவஹர்லால் நேருவின் நெருங்கிய நண்பரும் எதையும் வெளிப்படையாகப் பேசும் இந்திய இடதுசாரியுமான கிருஷ்ண மேனனுக்கும், கிரிப்ஸ்க்கும் இடையே டிசம்பரில் லண்டனில் நடந்த ரகசியப் பேச்சு வார்த்தையில் இது தெரிவிக்கப்பட்டது. வேவல் வைஸ்ராயாக இருக்கும் வரை இந்திய நிலைமையில் சிறிதும் முன்னேற்றம் இருக்காது என்று மேனன் கிரிப்ஸிடமும் நேருவிடமும் கூறினார். பிரிட்டிஷ் தலைவரிடமிருந்து வேறு யார் என்ற கேள்வி வந்த போது நேருவால் மிகவும் மதிக்கப்பட்ட லூயி மவுண்ட் பேட்டன் பெயரை மேனன் முன்மொழிந்தார். மவுண்ட்பேட்டன் வைஸ்ராயாக நியமிக்கப்படுவது இந்தியாவின் முஸ்லீம் தலைவர்களுக்கு முன் கூட்டியே தெரிந்தால் அவரைப் பயன்படுத்தும் நோக்கம் சிதைந்து விடும் என்பதால் தங்களின் பேச்சு விவரங்களை யாருக்கும் தெரிவிப்பதில்லை என்று முடிவு செய்தார்கள். கிரிப்ஸ் தாம் மேற்கொண்ட தொடர் பேச்சுவார்த்தை பற்றிய விவரங்களை மேனன் இறப்பதற்கு ஓராண்டுக்கு முன்னால் 1973ஆம் ஆண்டு பிப்ரவரியில் புது டில்லியில் இந்த நூலின் ஆசிரியர்களில் ஒருவரிடம் தெரிவித்தார்.

** 1946 டிசம்பரில் லண்டன் சென்றிருந்த வேவல் கூட ஒரு கால வரம்பை நிர்ணயிக்க வேண்டும் என்று அட்லியிடம் பரிந்துரை செய்திருந்தார்.

இரண்டாவதாக அவர் வைத்த கோரிக்கை இதுவரை எந்த வைஸ்ராயும் கேட்க வேண்டும் என்று கனவு கூட கண்டிராததாகும். லண்டனுக்கு அடிக்கடி தகவல் தெரிவிக்காமல் தனது பொறுப்பை நிறைவேற்ற முழு அதிகாரம் அளிக்க வேண்டும்; அதற்கும் மேலாக லண்டனின் தலையீடும் இருக்கக் கூடாது என்பதே அந்த நிபந்தனை. இலக்கு எது என்பதைத்தான் அந்த இளம் அட்மிரலுக்கு அட்லி அரசு நிர்ணயிக்க முடியும். ஆனால் கப்பல் செலுத்தப் படும் வழியை - பணியை முடிப்பதற்கான நடவடிக்கைகளை அவர்தான் - அவர் மட்டுமே தீர்மானிப்பார் என்பது அந்தக் கோரிக்கை.

'மாட்சிமை தங்கிய மன்னரின் அரசுக்கு இருப்பதை விட மேலான அதிகாரத்தையா நீங்கள் கேட்கிறீர்கள்?' அட்லி வினவினார்.

'நான் அச்சப்படுகிறேன்; ஆனாலும் அதையே தான் நான் கேட்கிறேன். அமைச்சரவையைத் தோளில் சுமந்து கொண்டே எப்படி என்னால் பேச்சு நடத்த முடியும்?' என்று பதிலளித்தார் மவுண்ட்பேட்டன்.

அவரது இந்த வார்த்தைகள் அதிர்ச்சியான அமைதியை உருவாக்கியது. தமது கோரிக்கை மூச்சுத் திணறலை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை பிரதம மந்திரியின் முகபாவனைகளிலிருந்து தெரிந்து கொண்ட மவுண்ட்பேட்டன் திருப்தியுடன் அனைத்தையும் கவனித்தார். இந்தக் கோரிக்கை காரணமாக தனக்குப் பொறுப்பு அளிப்பது என்ற யோசனையை அட்லி கைவிட்டு விடுவார் என்று அவர் நம்பினார்.

நேர்மாறாக, ஒரு பெருமூச்சுடன் இந்தக் கோரிக்கைக்கும் தனது ஒப்புதலை அளித்தார் பிரதமர். ஒரு மணி நேரத்துக்குப் பின் தளர்வுற்ற தோள்களுடன் டவுனிங் தெரு இல்லத்திலிருந்து மவுண்ட்பேட்டன் வெளியே வந்தார். இந்தியாவின் கடைசி வைஸ்ராயாகத் தாம் இருக்கப் போகிறோம்; தமது நாட்டு மக்களின் இனிமையான சாம்ராஜ்யக் கனவுகளை அழிக்கப் போகிறோம் என்பதை அவர் உணர்ந்தார்.

திரும்பி வந்து அவரது காருக்குள் ஏறிய போது, மின்னல் வெட்டுப் போல் ஒரு வித்தியாசமான நினைவு அவருக்கு ஏற்பட்டது. சரியாக 70 ஆண்டுகளுக்கு முன், நேரம் கூட கிட்டத்தட்ட இதேதான், டில்லிக்கு வெளியே ஒரு பரந்த வெளி மைதானத்தில் அவரது சொந்த கொள்ளுப்பாட்டி இந்தியாவின் மகாராணி என்று அறிவிக்கப்பட்டார். இந்த விழாவில் கலந்து கொண்ட இந்திய இளவரசர்கள், விக்டோரியா மகாராணியின் 'அதிகாரமும் ஆதிபத்தியமும்' என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்று இறைவனிடம் இறைஞ்சினார்கள்.

இப்போது, இந்தப் புத்தாண்டின் காலையில், அந்த மகாராணியின் கொள்ளுப் பேரன்களில் ஒருவர், 'என்றென்றும்' என்பதற்கு முடிவுகட்டும் தேதியை நிர்ணயிக்கும் நடவடிக்கையில் ஈடுபடப் போகிறார்.

★

வரலாற்றின் மாபெரும் சாதனைகள் பலவற்றுக்கு மிகச் சிறிய விஷயங்கள் கூட மூலகாரணங்களாக இருந்திருக்கும். வெறும் ஐந்து ஷில்லிங் நாணயத்திற்காகத் துவங்கிய பயணம்தான் கிரேட் பிரிட்டனுக்கு ஒரு பெரிய காலனி ஆதிக்கத்துக்கு வழிவகுத்தது. அப்போது வாசனைத் திரவிய வணிகத்தில் ஆதிக்கம் செலுத்திய டச்சு (Dutch) வியாபாரிகள் ஒரு பவுண்டு மிளகின் விலையை 5 ஷில்லிங் அளவுக்கு உயர்த்தியது தான் இதற்குக் காரணம்.

*இந்த விலை உயர்வு முற்றிலும் தேவையற்றது என்று கருதிய, லண்டன் நகரைச் சேர்ந்த 24 வியாபாரிகள் 1599 செப்டம்பர் 24 மாலையில் லீடன் ஹால் வீதியில் இருந்த பழமையான கட்டிடம் ஒன்றில் கூடினார்கள். 125 பங்குதாரர்களைக் கொண்டு 72,000 பவுண்ட் ஆரம்பக் கட்ட மூலதனத்துடன் எளிய வர்த்தக நிறுவனம் ஒன்றை அமைப்பதுதான் அவர்களின் நோக்கம். லாபம் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு துவங்கப்பட்ட இந்த நிறுவனம் பின்னர் விரிவடைந்தும் வேறு இடங்களுக்குப் பரவியும் இறுதியில் 'பிரிட்டிஷ் ராஜ்' என்று கூறும் பெருமைமிகு ஏகாதிபத்தியம் உருவாகக் காரணம் ஆனது.*

*இந்த நிறுவனம் 1599 டிசம்பர் 31இல் அரசின் அனுமதியைப் பெற்றது. இதற்கான சாசனத்தில் முதலாம் எலிசபெத் ராணி கையெழுத்திட்டார். இதன்படி துவக்கத்தில் 15 ஆண்டுகளுக்கு நன்னம்பிக்கை முனைக்கு அப்பால் உள்ள அனைத்து நாடுகளிலும் வியாபாரம் செய்யும் சிறப்புரிமை இதற்கு அளிக்கப்பட்டது. எட்டு மாதங்களுக்குப் பின் 500 டன் எடை கொண்ட 'ஹெக்டார்' என்ற வணிகக் கப்பல் பம்பாய்க்கு வடக்கே சிறிய சூரத் துறை முகத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்றது. அந்த நாள் 1600 ஆகஸ்ட் 24 ஆகும். அப் போது தான் பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்தனர். அந்தத் துவக்க வருகை எளிமையாக இருந்தது. ஹெக்டார் கப்பலின் தலைவராக வந்த வில்லியம் ஹாக்கின்ஸ் வயது முதிர்ந்த துணிச்சலான மாலுமி. இவர் வணிகர் என்பதைவிட கொள்ளைக்காரர் போலவே இருந்தார். சூரத் நகருக்குள் ஹாக்கின்ஸ் நுழைந் தார். புறா முட்டைகள் போன்ற மாணிக்கக் கற்களை - எல்லையற்று நீண்டிருந்த மிளகு, இஞ்சி, அவுரி, லவங்கம் போன்றவற்றின் குவியல்களை - ஒரு குடும்பம் முழுவதையுமே தனது நிழலில் வைத்துக் கொள்ளக்கூடிய நிழல் பரப்பும் மிகப்பெரிய இலைகளைக் கொண்ட மரங்களை என்றும் அவருக்கு இளமையைத் தருவதற்கு யானையின் விதைகளிலிருந்து வடிக்கப்பட்ட மருந்தினை - தேடியே அவர் நகருக்குள் பயணமானார்.*

*கப்பலின் கேப்டன் ஆக்ரா வரை சென்றபோதும் இதுபோன்ற காட்சிகள் எதையும் பார்க்கவில்லை. கடுமையான அவரது பயணத்தில் முகலாய சாம்ராஜ்யத்தைக் கண்டது ஆறுதலாக இருந்தது. அதனை நேரடியாகக் கண்டபோது ராணி எலிசபெத் ஒரு சிறிய கிராமத்தின் ஆட்சியாளராகவே அவருக்குப் பட்டார். இந்திய முகலாய சாம்ராஜ்யத்தின் நான்காவது ஆட்சியாளரான சக்ரவர்த்தி ஜஹாங்கீர் 70 மிலியன் (7 கோடி) மக்களை ஆட்சி செய்து கொண்டு உலகத்திலேயே மிகுந்த செல்வச் செழிப்புள்ளவராகவும் பலம் வாய்ந்தவராகவும் விளங்கினார்.*

*ஜஹாங்கீரின் அரண்மனைக்கு வந்த முதலாவது ஆங்கிலேயருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. வசதிமிக்க 125 பங்குதாரர்களைக் கொண்ட கிழக் கிந்திய வர்த்தகக் கம்பெனிக்கு அது கலக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். முகலாய அரசர், ஹாக்கின்ஸை அரச குடும்பத்தின் ஒரு உறுப்பினராக நடத்தி னார். அவரை வரவேற்கும் முகமாக அந்தப்புரத்தில் இருந்த மிகவும் அழகான ஆர்மீனியாவின் கிருத்தவப் பெண் ஒருவரை அவருக்கு அன்பளிப் பாகக் கொடுத்தார்.*

*அதிர்ஷ்டவசமாக ஹாக்கின்ஸின் ஆக்ரா பயணம் தாம்பத்ய வாழ்க்கையை சுகமாக அனுபவிப்பதற்கு மட்டுமின்றி, தனது எஜமானர்களுக்கு நல்ல தகவல் அளிப்பதற்கு எதிர்பாராத சில பயன்களும் கிடைத்திருந்தன. வடக்கு பம்பாயில் கிழக்கிந்திய கம்பெனி வர்த்தகக் கூடங்களைத் திறந்து கொள்ள அதிகாரம்*

அளித்து அரசாணைப் பத்திரத்திலும் ஜஹாங்கீர் கையெழுத்திட்டார். இதன் விளைவு வியாபாரத்துக்கு வேகத்தையும் ஊக்கத்தையும் அளித்தது. விரைவிலேயே மாதத்துக்கு இரண்டு கப்பல்கள் என்ற அளவில் தேம்ஸ் நதியின் கரையில் உள்ள துறைமுகத்துக்குச் சென்று வாசனை திரவியங்கள், சர்க்கரை, கச்சாப்பட்டு, மஸ்லின் பருத்தி போன்றவற்றை மலைமலையாக இறக்கிக் குவித்தன. இவற்றுக்குப் பதிலாக ஆங்கிலேய நாட்டில் தயாரித்த பொருள்களை நிரப்பிக் கொண்டு அந்தக் கப்பல்கள் திரும்பின. இதனால் கிழக்கிந்திய கம்பெனியின் பங்குதாரர்களுக்கு வெள்ளம் போல் ஈவுத்தொகை பெருக் கெடுத்துக் கொட்டியது. சில சமயங்களில் இது 200 சதவீத அளவுக்கு இருந்தது.

பொதுவாக இந்திய மன்னர்களும் மக்களும் பிரிட்டிஷாரை அன்புடனேயே வரவேற்றனர். கடவுளின் சாம்ராஜ்யத்தை மீண்டும் நிறுவுவதாகக் கூறி தென் அமெரிக்காவுக்குச் சென்ற ஸ்பெயின் நாட்டவர் அந்த நாட்டையே வென்றடக்கி விட்டது போல் அல்லாமல், தாங்கள் இந்தியாவுக்கு வந்தது வேறொரு கடவுளுக்காக அது தான் பணத்துக்காக என்று பிரிட்டிஷார் வலியுறுத்திக் கூறினார்கள். 'வர்த்தகமே; நாடு பிடிப்பது அல்ல' என்பதுதான் தங்கள் கொள்கை என்று கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரிகள் திரும்பத் திரும்ப சொன்னார்கள்.

ஆனால் வர்த்தக நடவடிக்கைகளின் வளர்ச்சியால் கம்பெனியின் அதிகாரிகள் தவிர்க்க முடியாமல் உள்ளூர் அரசியலில் சிக்கினார்கள். விரிவடையும் வர்த்தகத்தைப் பாதுகாத்துக் கொள்ள, எந்தப் பகுதியில் வியாபாரம் செய்தார்களோ அந்தப் பகுதியின் குறுநில மன்னர்களின் பிரச்சனையிலாவது தலையிடும் நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. இப்படித் தொடங்கிய தவிர்க்க முடியாத நடவடிக்கைகள் பெரும் கவனம் செலுத்தாமலேயே இந்தியாவை இங்கிலாந்து வென்று விடுவதற்கு வழிவகுத்தன. 1757 ஜூன் 23இல் ராபர்ட் கிளைவ் என்ற சாகச குணம் கொண்ட ஜெனரல் 39ஆவது காலாட் படையைச் சேர்ந்த 900 ஆங்கிலேயச் சிப்பாய்களையும், 2000 இந்தியச் சிப்பாய்களையும் கொண்ட படைக்குத் தலைமை தாங்கி வங்காளத்தில் உள்ள பிளாசி என்ற கிராமத்துக்குச் சென்றார். அந்த கிராமத்துக்கு வெளியே கொட்டும் மழையில், நெல் விளையும் வயல் வெளியில் நடந்த சண்டையில் தொல்லை மிக்க நவாபின் ராணுவத்தை அவர் தோற்கடித்துத் துரத்தினார்.

கிளைவின் இந்த வெற்றி, வடக்கு இந்தியாவின் வாயிலை பிரிட்டிஷாருக்குத் திறந்து விட்டது. இந்தியாவை பிரிட்டிஷார் வெற்றி கொள்வது உண்மையில் இந்தச் சண்டையுடன்தான் தொடங்கியது. பிரிட்டிஷ் வணிகர்கள் சாம்ராஜ்ய வாதிகளுக்கு வழி விட்டார்கள். இதன் பிறகு இந்தியாவில் பிரிட்டிஷாருக்கு 'வர்த்தகம் அல்ல; நாடு பிடிப்பதுதான்' முன்னுரிமைப் பணி என்றானது.

இந்த நூற்றாண்டின் முக்கிய வெற்றிகளில் ஒன்றாக அது அமைந்தது. 'நாடு பிடிக்கத் திட்டமிடுவதையும் எல்லையை விரிவுபடுத்துவதையும்' தவிருங்கள் என்று கவர்னர் ஜெனரல்களுக்குக் கண்டிப்பான உத்தரவை லண்டன் பிறப்பித்தது. இருந்தாலும் அடுத்தடுத்து வந்த கவர்னர் ஜெனரல்கள் தணியாத ஆசையுடன் அதற்கு எதிரான கொள்கைகளையே கடைப்பிடித்தனர். ஒரு நூற்றாண்டுக்குள்ளேயே கம்பெனியின் வர்த்தகர்கள் ஆட்சி அதிகாரம் செலுத்துபவர்களாக உருமாறினார்கள்; அதன் கணக்குப் பிள்ளைகளும் வியாபாரிகளும் ஜெனரல்களாகவும் , கவர்னர்களாகவும் ஆனார்கள்;

ஈவுத்தொகைக்காகப் போட்டியிட்ட கம்பெனி இப்போது நாடு பிடிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டது. அப்படி திட்டமிட்டு செய்யப்படவில்லை யென்றாலும் முகலாய சக்கரவர்த்திகளின் வாரிசுகள் ஆனார்கள் பிரிட்டிஷார்.

சிரமப்பட்டு அடையாத இந்தச் சொத்துகளை என்றாவது ஒருநாள் அவர்களிடமே அளித்துவிட வேண்டும் என்பது துவக்கத்திலிருந்தே பிரிட்டிஷின் விருப்பமாக இருந்தது. 1818ஆம் ஆண்டிலேயே ஹேஸ்டிங்ஸ் பிரபு இவ்வாறு கூறினார்: 'இந்தியா மீது படிப்படியாகவும் விருப்ப மில்லாமலும் பிரிட்டன் ஆட்சி செலுத்துகிறது. கொள்கை அடிப்படையில் இந்தியாவின் மீதான ஆதிக்கத்தை இங்கிலாந்து கைவிடும் காலம் வரும். அது வெகு தொலைவில் இல்லை' ஆனால் விட்டு விலகுவதை விட சாம்ராஜ்யம் விரிவடைவதுதான் நடந்தது. ஹேஸ்டிங்ஸ் பிரபு கற்பனை செய்த, தொலைதூரத்தில் இல்லை என்பது மிகவும் தொலை தூரத்தில் தான் இருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சி என்பது கணிசமான நன்மைகளை இந்தியாவுக்கு அளித்துள்ளது. தனக்கே உரிய வகையிலான அமைதியை ஏற்படுத்தியது. சட்டம், நிர்வாகம், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் போதிய அளவு பிரிட்டனின் பதிவுகள் இருந்தன. இவற்றுக்கும் மேலாக பலவகைப்பட்ட மக்களை ஒருங்கிணைத்து அவர்களின் புரட்சிகர உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு மிக உயர்ந்த பரிசு ஒன்றை இந்தியாவுக்கு அளித்தது அதுதான் ஆங்கில மொழி.

இத்தகைய உணர்வுகளின் முதலாவது வெளிப்பாடாக அமைந்தது 1857இன் சிப்பாய்க் கலகமாகும். இதன் மிக முக்கியமான முடிவு இந்தியாவை ஆட்சி செய்யும் பிரிட்டனின் அணுகுமுறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. பயனுள்ள நடவடிக்கைகளில் 258 ஆண்டுகள் ஈடுபட்டபின் மதிப்பு மிகு கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகம் ரத்து செய்யப்பட்டது. 300 மிலியன் (30 கோடி) இந்தியர்களின் விதியை நிர்ணயிக்கும் பொறுப்பு, உலகத்தை ஆட்சி செய்யும் பிரிட்டிஷ் இனத்தின் ஒட்டுமொத்த உருவமாக விளங்கிய, தொட்டி போன்று பருத்த உடலுடைய விக்டோரியா மகாராணியின் கைகளுக்கு மாற்றப்பட்டது. அப்போதிலிருந்து மனித குலத்தின் ஐந்தில் ஒரு பகுதி மக்களைக் கொண்ட இந்தியாவை பிரிட்டனின் மகாராணியால் நியமிக்கப் பட்ட மன்னர் போன்ற வைஸ்ராய் ஆட்சி செய்தார்.

இந்த மாற்றத்துடன்தான் பிரிட்டிஷ் இந்திய அனுபவத்துடன் அடிக்கடி தொடர்பு கொண்ட விக்டோரியா சகாப்தம் தொடங்கியது. 'விதிமுறைகள் அறியாத பாமர மக்களை' ஆள்வதற்கு ஆங்கிலேயர்கள் மிகவும் பொருத்த மானவர்கள் என்று தன்னைத்தானே அரசவைக் கவிஞர் என அறிவித்துக் கொண்ட கவிஞர் ரட்யார்ட் கிப்ளிங் (Rudyard Kipling) அடிக்கடி கூறுவார். இந்தக் கருத்துதான் பிரிட்டனின் தலைசிறந்த தத்துவமாக இருந்தது. இந்தியாவை ஆளும் பொறுப்பு, ஆராய்ந்தறிய முடியாத கடவுளின் கட்டளையால் பிரிட்டிஷ் இனத்தின் தோள்களில் விழுந்துள்ளது என்றும் கிப்ளிங் அறிவித்தார்.

ஐசிஎஸ் எனப்படும் இந்திய சிவில் சர்வீசைச் சேர்ந்த 2000 பேரும், இந்திய ராணுவத்தில் இருந்த 10,000 பிரிட்டிஷ் அதிகாரிகளும் என ஒரு சிறிய தொகுப்பான சகோதரர்கள்தான் எந்த நேரத்திலும் இந்தப் பொறுப்பை செயற்படுத்தினார்கள். 300 மிலியன் (30 கோடி) மக்கள் மீதான இவர்களின் அதிகாரம் 60,000 பிரிட்டிஷ் வீரர்கள் இந்திய ராணுவத்தின் 2,00,000 வீரர்கள்

ஆகியோர் மூலம் நிலைநாட்டப்பட்டது. 1857க்குப் பின் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஏற்றுக் கொள்ள இந்திய மக்கள் எந்த அளவுக்குத் தயாராக இருந்தார்கள் என்பதை அளவிட இதைவிடச் சிறந்த புள்ளி விவரம் இருக்க முடியாது.

கிப்ளிங்கின் கதைகளில் வருவது போல காதலும் வீரமும், வர்ணிக்கத்தக்க வாழ்க்கையும் கொண்டதுதான் இவர்களின் இந்தியா. தலைப்பாகை அணிந்த சிப்பாய்கள் முன்செல்ல இறகுகள் செருகிய தொப்பியுடன் சவாரி செய்யும் அதிகாரிகள்; தக்காணத்தின் தகிக்கும் வெட்ட வெளியில் வாழ்நாளைச் செலவிட நேர்ந்த மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகள்; இமயமலை அடிவாரத்தில் உள்ள கோடைகாலத் தலைநகரான சிம்லாவில் பெரும் செலவில் நடத்தப்பட்ட இரவு நடனங்கள்; கல்கத்தா பெங்கால் கிளப்பின் புல்வெளியில் ஆடப்பட்ட கிரிக்கெட் விளையாட்டுகள்; ராஜஸ்தானில் சுட்டெரிக்கும் சமவெளியில் போலோ விளையாட்டுகள்; அசாமில் புலி வேட்டைகள்; கும்மிருட்டு வேளையில் கூடாரத்தைச் சுற்றி நரிகளின் ஊளைச் சத்தத்துக்கிடையே, நடுக்காட்டில் இரவு உணவுக்காக மன்னரின் பெயரை பயபக்தியுடன் உச்சரித்துக் கொண்டும் மது அருந்திக் கொண்டும் இருக்கும் கருப்பு உடையணிந்த இளைஞர்கள்; எல்லைப் புறங்களில் கொட்டும் மழையானாலும் கொளுத்தும் வெயிலானாலும் சிவப்பு நிற உடையணிந்து கலவரக்காரர்களான பத்தான் பழங்குடி மக்களைத் துரத்திச் செல்லும் அதிகாரிகள் இப்படிப் பட்டதுதான் இவர்களின் இந்தியா. ஐரோப்பியர்களுக்கு மட்டும் என்ற விடுதிகளின் வராந்தாவில் அசைக்க முடியாத உயர்குடியினர் என்பதாக விஸ்கியையும் சோடாவையும் குடிப்பவர்களைக் கொண்டிருந்தது இந்தியா. பொதுவாக இவர்களெல்லாம் மாசற்ற ஆனால் வசதியில்லாத குடும்பங்களில் பிறந்தவர்கள். பிரிட்டன் தேவாலயங்களில் உள்ள பேராயர்களின் பிள்ளைகள்; மேல்தட்டு மக்களின் புத்திசாலிப் புதல்வர்கள்; பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்களின் பையன்கள்; எல்லாவற்றுக்கும் மேலாக இவர்கள் இந்தியாவில் இருந்த பிரிட்டிஷாரின் முந்தைய தலைமுறையினர். இவர்கள் ஈடன் (Eton), ஹாரோ (Harrow), சார்டர்ஹவுஸ் (Charter house), ஹேலிபரி (Haileburry) ஆகியவற்றின் வகுப்பறைகளிலும் விளையாட்டு மைதானங்களிலும் பயின்று தேர்ச்சி பெற்றவர்கள். சாம்ராஜ்யத்தை ஆளுவதற்கான அனைத்துத் துறைகளிலும் தகுதி பெற்றிருந்தார்கள். 'விளையாட்டுகளில்' திறமை, 'சாகசச் செயல்களில்' மகிழ்ச்சி, தலைமையாசிரியரின் பிரம்படியைத் தாங்கிக் கொள்வதிலும், ஹோரசின் (Horace) நெடும்பாக்களையும், ஹோமரின் (Homer) குறும்பாக்களையும் உணர்ச்சியுடன் சொல்வதிலும் திறமை என்பவை இவர்களின் குணாம்சங்கள். 'பிரிட்டனின் உயர்குடி மக்களுக்கு இந்தியா ஒரு பரந்து விரிந்த பொழுது போக்கிடமாக இருந்தது' என்று ஜேம்ஸ் எஸ். மில் குறிப்பிட்டார்.

இந்தியா சவாலையும் சாகசத்தையும் பிரதிபலித்தது. இங்கிலாந்தின் இளைஞர்கள், தங்கள் நாட்டின் மிகவும் குறுகலான கடற்கரைகள் அளிக்க மறுத்த இன்பத்தை இந்தியாவின் எல்லையற்று விரிந்த பகுதியில் முழு திருப்தியுடன் பெற்றார்கள். முகத்தில் மீசை அரும்புவதற்கு முன் 19 அல்லது 20 வயதில், இவர்கள் பம்பாய் துறைமுகத்துக்கு வந்தார்கள். முப்பத்தைந்து அல்லது நாற்பது ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் தாய்நாடு திரும்பினார்கள். துப்பாக்கி தோட்டாக்களால், நோயால், புலியின் கூரிய நகத்தால், அல்லது போலோ

விளையாட்டு மைதானத்தில் வீழ்ந்ததால் ஏற்பட்ட தழும்புகளைக் கொண்ட உடலுடன் திரும்பினார்கள். சூரியனின் மிதமிஞ்சிய வெப்பத்தால் அல்லது அளவுக்கு அதிகமாக விஸ்கி குடித்ததால் அவர்களின் முகமே களை இழந்திருந்தது. இருந்தாலும் கூட வீரதீர வரலாற்றில் தமக்கும் ஒரு பங்குண்டு என்பதில் அவர்கள் பெருமிதம் கொண்டார்கள்.

ஓர் இளைஞனின் சாகசம் பம்பாயில் உள்ள நாடக அரங்கு போன்ற குழப்பமான விக்டோரியா ரயில் நிலையத்திலேயே துவங்கி விடுவது வழக்கம். தனது வாழ்நாளைக் கழிக்கத் தேர்ந்தெடுத்துள்ள நாட்டின் முகவிலாசத்தை முதலில் அந்தச் செந்நிறக் கற்களாலான புதிய கோதிக் (Neo - Gothic) முறை வளைவுகளைக் கொண்ட ரயில் நிலையத்தில் தான் கண்டான். ஓட்டமும் நடையுமாக ஒருவரை விலக்கித் தள்ளியபடி செல்லும், இரைச்சல் மிகுந்த மக்கள் கூட்டம் ரயில் நிலைய கூடங்களில் ஒழுங்குமுறையின்றி இறைந்து கிடக்கும் பெட்டிகள், கட்டுகள், கோணிகள், மூட்டைகள் ஆகியவை பெரும்பாலும் இவர்களுக்கு அதிர்ச்சியையே அளிக்கும். அங்கே நிலவும் வெப்பம், வாசனைத் திரவியங்களின் மணம், வெயிலில் ஆவியாகி மூக்கைத் துளைக்கும் மூத்திர நெடி தான் வரவேற்பளிக்கும். தொங்கிக் கிடக்கும் வேட்டியும் தொள தொளத்த சட்டையும் அணிந்த ஆண்கள். புடைவையை இடுப்பிலும் கலகலக்கும் தங்க வளையல்களைக் கைகளிலும் கொலுசுகளைக் கால்களிலும் அணிந்து நடமாடும் பெண்கள், சிவப்பு நிறத் தொப்பியணிந்த சீக்கியப் படைவீரர்கள், மஞ்சள் மற்றும் காவி நிறத்துணி உடுத்திய சாதுக்கள், உடல் ஊனத்தைக்காட்டி யாசிக்கும் குழந்தைகள், பிச்சைக்காரர்கள் என இவர்கள் தான் அந்த இளைஞன் முன் தோன்றுவார்கள். ஃபிரண்டைர் மெயில் (Frontier Mail) அல்லது ஹைதராபாத் எக்ஸ்பிரசில் கரும்பச்சை நிறத்திலான பெட்டியில் பயணம் செய்யும் இளைய படைத்தளபதி அல்லது புதியதாய் நியமிக்கப்பட்ட ஐசிஎஸ் அதிகாரியின் அனுபவமோ வித்தியாசமானது. அந்த முதல் வகுப்புப் பெட்டியில் தொங்கும் திரைச்சீலைகளுக்குப் பின்னால் ஒரு புது உலகமே அவர்களுக்காகக் காத்திருக்கும். பழுப்பு நிற திண்டு மெத்தை பொருத்தப்பட்ட இருக்கைகள், புதிய வெள்ளை லினன் விரிக்கப்பட்ட உணவு பரிமாறும் மேசை, வெள்ளி வாளிகளில் நிரப்பப்பட்டிருக்கும் சில்லென்ற ஷாம்ப்பெயின் பானம் ஆகியவற்றைக் கொண்டது அந்த உலகம். அனைத்துக்கும் மேலாக அந்த உலகத்தில் அவர் சந்திக்கும் ஒரே இந்தியராக பயணச்சீட்டுப் பரிசோதகர் மட்டுமே இருப்பார். இதுதான் இந்தியாவுக்கு வரும் இளம் அதிகாரி கற்றுக் கொண்ட முதல் பாடமாகும். இங்கிலாந்து இந்தியாவை ஆண்டது; ஆனால் ஆங்கிலேயர்கள் தனித்தே வாழ்ந்தார்கள்.

இந்தியாவுக்கான முதல் பயணத்தின் முடிவில் சாம்ராஜ்யத்தின் இளம் ஊழியர்களுக்குக் கடுமையான சோதனைகள் காத்திருந்தன. தொலை தூர கிராமங்களிலும் அவர்கள் பணியமர்த்தப்பட்டார்கள். காட்டுப்பாதைகளைக் கொண்டதும் சரியான சாலை வசதிகளற்றதும் ஒரு சில ஐரோப்பியர்களை மட்டுமே கொண்டதுமான தொலை தூரப் பகுதிகளாக இவை இருந்தன. இந்தப் பொறுப்பை ஏற்கும்போது அவர்களுக்கு இருபத்து நான்கு அல்லது இருபத்தைந்து வயதிருக்கலாம். ஒரு மிலியன் (10 லட்சம்) அல்லது அதற்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதிகளில் நிர்வாகம் செய்யும், நீதி வழங்கும் பொறுப்பு அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இந்தப் பகுதிகள் சில நேரங்களில் ஸ்காட்லாந்தை விடவும் பெரிதாக இருந்தன.

இந்தியாவை ஆட்சி செய்யும் பிரிட்டிஷ் உயர்குடியினர் அனுபவித்த, பசுமையான மகிழ்ச்சி அளிக்கும் தீவுகள் போன்ற இடங்களை உருவாக்குவதை தொலைதூர மாவட்டங்களில் பயிற்சி பெறச் சென்ற இளம் அதிகாரி தனது உரிமையாகக் கருதினார். யூதர்களுக்கான தனி குடியிருப்புப் பகுதி போல, இந்தியாவின் பெரு நகரங்களையொட்டி, வெளிநாடு போன்ற பகுதிகள், உருவாக்கப்பட்டன. அவைதான் கன்டோன்மென்ட்கள்.

ஒவ்வொரு கன்டோன்மென்ட் பகுதியிலும் பசுமை நிறைந்த தோட்டம் இருந்தது; இறைச்சிக் கூடம், வங்கி, கடைகள், டார்செட் அல்லது சர்ரேயில் (Dorset of Surrey) (டார்செட் தென்மேற்கு இங்கிலாந்தில் ஒரு மாவட்டம்; சர்ரே தென்கிழக்கு இங்கிலாந்தில் ஒரு மாவட்டம் மொ-ர்) உள்ளது போன்று கருங்கற்களால் கட்டப்பட்ட பெருமைமிகு தேவாலயம் ஆகியவை இருந்தன. இரண்டுக்கும் அதிகமான ஆங்கிலேயர்கள் சேர்ந்தால் ஒரு கிளப்பை (Club) உருவாக்கி விடுவார்கள். இந்த அமைப்பு தான் வழக்கம் போல் நகரின் மையப்பகுதியாக இருந்தது. குளிர்ந்த மாலை வேளையில் கூடும் ஆங்கிலேயர்கள் டென்னிஸ் ஆடவும், அல்லது பருத்தியாலான உடையணிந்து கிரிக்கெட் விளையாடவும் புல்வெளி இருந்தது. அந்தி சாயும் அருமையான வேளையில் குளிர்ச்சியான புல்தரைகளில் அமர்ந்து அல்லது வராந்தாக்களில் நடமாடிக் கொண்டே, வெள்ளை உடையணிந்த பணியாட்கள் கொண்டு வரும் மதுவகையினை அருந்தினார்கள்.

சாம்ராஜ்ய இந்தியாவின் முதன்மை நகரங்களான பம்பாய், கல்கத்தா, லாகூர், டில்லி, சிம்லா ஆகியவற்றில் நடந்த விருந்துகளும் வரவேற்பு நிகழ்ச்சிகளும் மிகவும் படாடோபமாக இருந்தன. 'எந்த நிலையில் இருந்தாலும் ஒவ்வொருவர் வீட்டிலும் ஒரு நடன அறை இருந்தது; குறைந்தபட்சம் எண்பது அடி நீளமுள்ள வரவேற்பறை இருந்தது' என்று விக்டோரியாவின் இந்தியாவில் வாழ்ந்த ஒரு மூத்த சீமாட்டி எழுதினார். கையில் தட்டொன்றை எடுத்து மேசை அருகே சென்று அதனைச் சூழ்ந்து நின்று விரும்பியதை எடுத்துப் போட்டு உண்ணும் மோசமான பஃபே முறை அந்த நாட்களில் இல்லை. தனிப்பட்ட முறையில் அளிக்கும் சுமாரான விருந்திலும் முப்பத்தைந்து அல்லது நாற்பது விருந்தினர்கள் கலந்து கொள்வார்கள். ஒவ்வொருவரையும் கவனிக்க ஒரு பணியாள் இருப்பார். கடைக்காரர்களையோ வணிக மக்களையோ இந்த நிகழ்ச்சிகளுக்கு ஒரு போதும் அழைப்பதில்லை; அவ்வளவு ஏன், இந்திய சமூகத்தைச் சேர்ந்த ஒருவரைக் கூட எங்கேயும் பார்க்க இயலாது.

'பாரம்பரிய வழக்கங்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் வேறெதற்கும் அளிக்கப்படவில்லை. அதனைப் புறக்கணிப்பது கொடும் பாதகமாகக் கருதப்பட்டது. ஒரு விருந்து நிகழ்ச்சியில், இணைச் செயலாளராக உள்ள ஐசிஎஸ் அதிகாரியின் மனைவி, தனக்கு அளிக்கப்பட்ட இருக்கை, தனது கணவரின் அந்தஸ்துக்குக் குறைவான ராணுவ அதிகாரியின் மனைவிக்கு அளிக்கப்பட்டதை விடக் கீழானது என்று அறிந்தால் போதும், அந்த விருந்து நிகழ்ச்சி அப்படியே முடிந்து போகும் நிலை ஏற்படும்.'

'மேம்சாபுகள்' (Memsahibs) என்று அழைக்கப்பட்ட பிரிட்டிஷாரின் மனைவியர்தான் விக்டோரியாவின் இந்தியா என்ற வார்த்தைக்கு அர்த்தம் தந்தவர்கள். ஆங்கிலேயர்களையும் இந்தியர்களையும் பிரித்து வைத்ததில் மிகப் பெரும்பங்கு இவர்களுக்கு உண்டு. ஒருவேளை தங்களின் இந்தியச் சோதரிகளுடன் தங்களின் கணவர்கள் உடலுறவு கொள்ளாமல் தடுப்பது

இவர்களின் நோக்கமாக இருக்கலாம். காரணம், முதல் தலைமுறை ஆங்கிலேயர்கள் இப்படி உணர்ச்சி வசப்பட்டுதான் இரண்டு உலகங்களுக்கும் இடையிலான திரிசங்கு சொர்க்கத்தில் புதிதாக ஆங்கிலோ இந்திய சமூகம் என்பதை விட்டுச் சென்றார்கள்.

கடந்த காலத்தில் இந்தியா வந்த பிரிட்டிஷார் விளையாட்டில் ஆர்வமாக இருந்தனர். ஆங்கில மொழியுடன் மிகவும் பலம் வாய்ந்த பரம்பரைச் சொத்தாக அவர்கள் விட்டுச் சென்றவை பலராலும் நேசிக்கப்படுகிற கிரிக்கெட், டென்னிஸ், ஸ்குவாஷ், ஹாக்கி ஆகியவையும் தான். நியூயார்க்கை அடைவதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்பே 1829இல் கோல்ஃப் கல்கத்தாவில் அறிமுகமானது. இமயமலையில் 11,000 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட கோல்ஃப் மைதானம் தான் உலகிலேயே மிகவும் உயரமான இடத்தில் அமைந்ததாகும். அந்த நாட்களில் யானையின் ஆண் குறித் தோலால் செய்யப்பட்ட கோல்ஃப் பைதான் மிகவும் நேர்த்தியானதாகக் கருதப்பட்டது. அந்த யானையையும் அவரே சுட்டு வீழ்த்தியிருப்பார் என்பதில் ஐயமில்லை.

பிரிட்டிஷார் இந்தியாவில் விளையாடினார்கள், அதேபோல் எண்ணற்றோர் இறந்தும் போனார்கள் - அவர்களிலும் இளைஞர்கள் அதிகம். இந்தியாவின் கடுமையான வெப்பநிலை, அதன் தனித்தன்மையான நோய்கள், மலேரியா, காலரா, மலைக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் ஆகியவற்றுக்குப் பிரிட்டிஷார் அதிக அளவில் பலியானார்கள். இதனால் ஒவ்வொரு கன்டோன் மென்ட் தேவாலயத்துக்கு அருகேயும் கல்லறைகள் பகுதி ஒன்று இருந்தது. கல்லறைகளில் பதிக்கப்பட்ட நினைவுக் கற்களில் பொறிக்கப்பட்டதற்கு மேல் இந்தியாவில் மரணமடைந்த பிரிட்டிஷார் பற்றிய கவலைதரும் சரியான கணக்கு எதுவும் இல்லை.

மரணத்தில் கூட இந்தியா தன்னை ஆண்டவர்களுக்கு விசுவாசமாகவே இருந்தது. பிரிட்டிஷ் குதிரைப் படையைச் சேர்ந்த லெஃப்டினென்ட் செயின்ட் ஜான் ஷாவே (Lt.St. John Shawe) 'சிந்த்வாராவில், 1866 மே 12இல் சிறுத்தைப் புலி அடித்த காயங்களால் இறந்தார்.' மேஜர் ஆர்க்கிபால்ட் ஹிப்பர்ட் (Archibald Hibbert) 1902 ஜூன் 15 அன்று ரெய்ப்பூர் அருகே, 'காட்டெருது ஒன்று கொம்பால் குத்தியதால் கொல்லப்பட்டார்.' 1902 ஜூன் 6இல் சாஹ் என்ற இடத்தில் ஹாரிஸ் மெக்குயிதை (Harris Mc Quaid) 'யானை ஒன்று மிதித்துத் துவைத்தது'. ஜபல்பூரில் பொதுப் பணித்துறையின் கணக்கராக இருந்த தாமஸ் ஹென்றி பட்லரை (Thomas Henry Butler) 1897ஆம் ஆண்டு 'டில்மான் காட்டில் புலி அடித்து சாப்பிட்டு விட்டது.'

இந்தியப் பணியின் போது வியக்கத்தக்க இடையூறுகளும் விளைந்தன. சர்ச் ஆஃப் இங்கிலாந்தின் வெளிநாட்டு சமூக சேவைப் பிரிவைச் சேர்ந்த சகோதரி மேரி 33ஆவது வயதில் இறந்தார். 'சின்கா (Sinka)' என்ற இடத்தில் தொண்டுப் பள்ளி ஒன்றில் பாடம் நடத்திக் கொண்டிருந்த போது கறையானால் அரிக்கப் பட்ட உத்திரம் ஒன்று தலை மீது இற்று வீழ்ந்ததில் அவர் கொல்லப்பட்டார். 1871 புத்தாண்டு தினத்தன்று ராணுவப் பொறியாளர்கள் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ஹென்றி மேரியன் டூரண்டுக்கு மரணம் நேர்ந்தது. 'டோங்க் நகரில் உள்ள டூரண்ட் நுழைவாயில் (Durand Gate) வழியாக யானை மீது சவாரி செய்த போது அம்பாரியிலிருந்து வீழ்ந்து பலத்த காயமடைந்ததால் அவர் இறந்தார்.' அவர் ஒரு பொறியாளராக இருந்தும் தாம் செல்லும் யானைக்கும்

நுழைவாயிலின் வளைவுக்கும் இடையேயான உயர வித்தியாசம் எவ்வளவு என்பதைக் கணக்கிடத் தவறியதால் இந்த கதி ஏற்பட்டது. அந்த நுழைவாயிலின் கீழ் யானை செல்லத்தான் இடமிருந்தது, அதன் மீது அவர் அமர்ந்து செல்வதற்கு இடமில்லை.

இந்தியாவில் சாகசத்துக்குப் பிரிட்டிஷார் அளித்த மனித விலையின் கணக்கைக் காட்ட கல்லறைகளைத் தவிர வேறு சாட்சியம் தேவையில்லை. வரிசை வரிசையாக அமைந்த கல்லறைகளிலும் மிகவும் வருத்தமளிப்பதாக இருந்தவை சிறிய அளவிலான கல்லறைகள் தான். ஒவ்வொரு கல்லறையிலும் இந்த வகையிலானவை மலைக்கச் செய்யும் எண்ணிக்கையில் இருந்தன. இவை குழந்தைகளின் கல்லறைகள். தங்கள் தாய்நாடான இங்கிலாந்தில் இருந்திருந் தால் ஒரு போதும் சந்தித்திருக்க வேண்டாத தாங்க முடியாத வெப்பத்தாலும் நோய்களாலும்தான் அந்தக் குழந்தைகளும் சின்னஞ்சிறார்களும் இறந்தனர்.

இவற்றில் சில தனிக் கல்லறையாக இருந்தன. மற்ற சிலவோ காலரா அல்லது மலைக்காய்ச்சலால் ஒரு குடும்பமே இறந்து வரிசையாய்ப் புதைக்கப்பட்ட கல்லறைகளாகவும் இருந்தன. 'பிரிட்டிஷ் குதிரைப் படை பிரிகேடியர் பாம்பர் வில்லியம் டால்போட் (Bomber William Talbot) மார்கரெட் அடிலெய்ட் டால்போட் (Margaret Adelaide Talbot) தம்பதியினரின் அன்புக்குரிய ஒரே குழந்தை வில்லியின் நினைவாக.. பிறப்பு 1862 டிசம்பர் 14 டில்லியில்; இறப்பு 1863 ஜூலை 17 டில்லியில்' என்று கல்லறை மீது பொறிக்கப்பட்ட வாசகங்கள் பெற்றோர்களின் இதய சோகத்தை வெளிப்படுத்துவதாக இருந்தன.

அசிகாரில் அருகருகே உள்ள இரண்டு கல்வெட்டுக்கள், ஒரு சாதாரண ஆங்கிலேயன் இங்கிலாந்தின் புகழ்மிக்க சாம்ராஜ்ய சாகசத்துக்காக என்ன விலை கொடுக்கவும் தயாராய் இருந்ததைக் காட்டுகின்றன. 'கண்டக்டர் ஜான்சன், மார்த்தா ஸ்காட் தம்பதியினரின் 7 மாதக் குழந்தை 1845 ஏப்ரல் 19இல் காலராவால் இறந்தது' என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. அதன் அருகிலேயே இருந்த மற்றொரு கல்வெட்டின் வாசகம் இது: 'கண்டக்டர் ஜான்சன் மார்த்தா ஸ்காட் தம்பதியினரின் 4 வயது மகன் வில்லியம் ஜான் 1845 ஏப்ரல் 30இல் காலராவால் இறந்தான். இவற்றுக்குக் கீழே பெரிய கல் ஒன்றில் அவர்களின் பெற்றோர்கள் இறுதி அஞ்சலி செலுத்திய கல்வெட்டு வாசகங்கள்:

*ஒரே அருளால் ஒரே தந்தைக்கு ஒரே உதரத்தில்*
*உருவாயினர் இவர்கள்*
*ஒரு கொடிய நோய்க்கு பலியாயினர்*
*இருவரும் பகிர்ந்தனர் ஒரே கல்லறையை*
*என்றும் அறியாத இங்கிலாந்தின் தொலைதூரத்தில்*

வெளியுலகறியாத குமாஸ்தாக்களும் ஆர்வமிக்கக் காவலர்களும் என அந்த பிரிட்டிஷ் தலைமுறையினர் முன்பு எவரும் செய்யாத அளவுக்கு இந்தியாவைக் காத்தனர்; நிர்வகித்தனர்.

அடங்காப் பிடாரிகளாக உள்ள மாணவர்கள் நல்லவர்களாக வேண்டும் என்பதற்காக அவர்கள் மீது கல்வியைத் திணித்து ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரும் பழமையான பள்ளிக்கூட ஆசிரியரைப் போன்றதாக இருந்தது பிரிட்டிஷ் ஆட்சி முறை. விதிவிலக்காக ஒரு சிலரைத் தவிர, அவர்கள்

திறமைசாலிகள்; ஊழலற்றவர்கள். இந்தியாவின் நன்மைகருதியே ஆட்சி செய்யத் தீர்மானித்தவர்கள். ஆனால் நன்மை என்ன என்பது ஆட்சி செய்த அவர்களால் முடிவு செய்யப்பட்டதே தவிர ஆளப்பட்ட இந்தியர்களால் அல்ல.

வெகுதூரத்திலிருந்து ஆட்சி செய்தார்கள் என்பது அவர்களின் பலவீனமாக இருந்தது. தாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்ற இறுமாப்பு ஆளப்படுகின்றவர் களிடமிருந்து அவர்களை அந்நியப்படுத்தியது. இனப்பெருமையால் இறுமாந்திருந்த அவர்களின் குணம் பற்றி அந்த நூற்றாண்டின் இறுதியில் நாடாளுமன்ற விவாதம் ஒன்றில் முன்னாள் ஐசிஎஸ் அதிகாரி ஒருவர் ரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிட்டது போல் வேறெவரும் சொல்லியிருக்க முடியாது. 'ஆங்கிலேய அதிகாரியின் தனித்த பங்களாவின் தோட்டக்காரனுக்கு உதவியாளாக இருப்பவர் முதல் மாகாணத் தலைநகரில் வசிக்கும் பத்திரிகை ஆசிரியர் இடையிட்டு, மன்னராட்சியில் வைஸ்ராய்க்கு அடுத்தபடியாக முக்கிய பொறுப்பு வகிக்கும் தலைமை ஆணையர் முடிய மேலிருந்து கீழ்வரை இந்தியாவில் இருந்த ஒவ்வொரு ஆங்கிலேயனுக்கும் ஒரு எண்ணம் இருந்தது. ஆளவும் அடிமைப்படுத்தவும் கடவுளால் விதிக்கப்பட்ட ஓர் இனம் நம்முடையது என்ற எண்ணம்தான் இருந்தது' என்று அவர் கூறினார்.

★

முதல் உலகப் போரில் இந்த இனத்தைச் சேர்ந்த 6,80,000 பேர் படுகொலை செய்யப்பட்டதால் இந்தியா பற்றி அவர்கள் கொண்டிருந்த கனவுகள் முடிவுக்கு வந்தன. எல்லைப்புறப் பாதுகாவலராகவும், மாவட்டங்களின் நிர்வாகியாகவும், பரந்த மைதானங்களில் போலோ விளையாடுவதற்காகக் குள்ளக் குதிரைகள் மீது சவாரி செய்பவர்களாகவும் இருக்க வேண்டிய ஒரு தலைமுறை இளைஞர்கள் அனைவரும் ஃப்ளான்டர்ஸ் (Flanders) போர்க்களத்தில் மடிந்தார்கள் 1918லிருந்து ஐசிஎஸ் அதிகாரிகளை நியமிப்பதும் சிரமமாயிற்று. இதனால் நிர்வாகம் மற்றும் ராணுவத்தில் இந்தியர்கள் அதிகாரிகளாக வருவது ஏற்கப்பட்டது; எண்ணிக்கை அதிகரித்தது.

1947 புத்தாண்டு தினத்தின்போது 400 மிலியன் (40 கோடி) மக்கள் மீது ஆட்சி செலுத்தினாலும் இந்தியாவில் வெறும் ஆயிரம் ஐசிஎஸ் அதிகாரிகள் தான் பிரிட்டனைச் சேர்ந்தவர்களாக இருந்தனர் லண்டனில் நடந்த ரகசிய உரையாடலாலும், வலுமிக்க வரலாற்றின் நீரோட்டத்தாலும் வெளியேறப் போகிற, காலத்துக்கு ஒவ்வாத, மேன்மை தங்கிய பிரிவின் கடைசிக் குழுவாக இவர்கள் இருந்தார்கள்.

## இரண்டு

# 'தனித்து நட, தனித்து நட'

### *ஸ்ரீராம்பூர், நவகாளி, புத்தாண்டு தினம் 1947*

*டவுனிங் தெருவிலிருந்து ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால், வங்காள விரிகுடாவுக்கு மேல் பகுதியில் உள்ள கங்கை நதி தீரத்தின் ஒரு கிராமத்தில் விவசாயி ஒருவரின் குடிசையின் அழுக்குத் தரையில் வயதான மனிதர் ஒருவர் நீட்டிப் படுத்திருந்தார். அப்போது சரியாக நண்பகல் 12 மணி. இந்த நேரத்தில் ஒவ்வொரு நாளும் செய்வதைப் போல, உதவியாளர் அளித்த ஈரமான துணிப்பையை அவர் பெற்றுக் கொண்டார். பையின் சிறு துவாரங்களிலிருந்து அதற்குள் இருந்த மண் கசிந்து வெளியே ஒழுகியது. அந்தப் பையை சிரத்தையுடன் அந்த மனிதர் தனது அடிவயிற்றில் வைத்துக் கொண்டார். பின்னர் இன்னொரு சிறிய பையை எடுத்து தனது வழுக்கைத் தலைமேல் வைத்துக் கொண்டார்.*

*தரையில் அவர் கிடந்த தோற்றம் பலவீனமான சிறிய ஜீவனைப் போல் தோன்றியது. அது போலித் தோற்றம் தான். களிமண் பையைச் சுமந்து படுத்திருக்கும் புன்னகை பூத்த அந்த 77 வயது முதியவர் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை வீழ்த்த, வாழ்ந்து கொண்டிருக்கும் எவரை விடவும் அதிகம் செயல்பட்டிருக்கிறார். இந்தியாவுக்கு விடுதலை அளிப்பதற்கான வழி காணுமாறு விக்டோரியா மகாராணியின் கொள்ளுப் பேரனை புதுடில்லிக்கு அனுப்ப ஒரு வழியாக பிரிட்டிஷ் பிரதமர் ஒப்புக் கொண்டாரென்றால் அதற்குக் காரணம் அவர்தான்.*

*மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி, அசாதாரணமான புரட்சியாளர்; உலகின் மிக உன்னதமான விடுதலை இயக்கத்தின் நாகரிக தூதர். கவனமாக சுத்தம் செய்யப்பட்ட, சாப்பிடும் போது மட்டுமே பயன்படுத்தப்படுகிற பல்செட்டும், உலகத்தைக் கூர்ந்து நோக்க வழக்கமாய்ப் பயன்படுத்தும் எஃகு விளிம்பைக் கொண்ட மூக்குக் கண்ணாடியும் அவர் அருகே இருந்தன. 5 அடி உயரமே உள்ள குள்ளமான மனிதர் அவர்; எடை 114 பவுண்ட். (1 பவுண்ட் - சுமார் 0.45 கி.கிராம் - மொ-ர்) அவரது கைகளும் கால்களும் இன்னும் வளர வேண்டியவை போல மெலிந்திருந்தன. காந்தியின் முகத்தை அழகின்றியே இயற்கை படைத்திருந்தது. சர்க்கரை பாத்திரத்தின் கைப்பிடிகள் போல பருத்தத் தலைக்கு வெளியே காதுகள் துருத்திக் கொண்டு இருந்தன. ரோமம் குறைந்த வெளுத்த மீசைக்கு மேற்புறம் சற்றுக் கனமான, அலகு போன்ற, தடித்து பளபளப்பான துவாரங் களுடன் மூக்கு; பல்செட் வைக்காத நேரத்தில் அவரது உதடுகள் பல்லில்லாத*

ஈறுகளுக்கு மேல் ஒட்டிக் கிடந்தன. இருந்தாலும் காந்தியின் முகம் தனிக் களையுடன் இருந்ததற்குக் காரணம் அது உணர்ச்சியின் உறைவிடமாக இருந்தது தான். மாயவிளக்கு ஒன்று ஜாலம் செய்வது போல அவரது உணர்ச்சிகளையும் குறும்புச் சிரிப்பையும் வேக வேகமாக அது பிரதிபலித்தபடி இருந்தது.

வன்முறையால் நிறைந்த ஒரு நூற்றாண்டுக்கு காந்தி மாற்று வழி காட்டினார். அந்தக் கொள்கைதான் வன்முறையற்ற அஹிம்சை. இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து ஆங்கிலேயர்களை விரட்டுவதற்கு மக்களைத் திரட்ட இதைத் தான் அவர் பயன்படுத்தினார். ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிக்குப் பதிலாக சாத்வீகம்; எந்திரத் துப்பாக்கிச் சூட்டுக்கு மாற்றாக வழிபாடு; பயங்கரவாதிகளின் குண்டுகள் ஏற்படுத்தும் கலவரத்துக்குப் பதிலாக ஆணவமில்லா எளிய புன்னகை என்பதே அவரது வழியாக இருந்தது.

மேற்கு ஐரோப்பாவில் கிளர்ச்சித் தலைவர்களின் பகட்டான வாய்ஜாலப் பேச்சுக்களும், சர்வாதிகாரிகளின் ஆணவச் சிரிப்புகளும் எதிரொலித்தபோது, உலகத்திலேயே மிகவும் மக்கள் நெருக்கமுள்ள பகுதியில் தனது குரலை ஓங்கி ஒலிக்காமலேயே மக்களைக் கிளர்ந்தெழச் செய்தார் காந்தி. தனது அணிக்கு வந்தால் வாய்ப்புகளும் அதிகாரமும் கிடைக்கும் என்று வாக்குறுதி அளித்து ஆதரவாளர்களை அவர் திரட்டவில்லை; மாறாக எச்சரிக்கை செய்தார். 'எனது அணிக்கு வருபவர்கள் கட்டாந்தரையில் படுக்கத் தயாராய் இருக்க வேண்டும், முரட்டுத் துணிகளை உடுத்த வேண்டும்; வேளை கெட்ட வேளையில் விழித்தெழ வேண்டியிருக்கும்; விருப்பமில்லாத எளிய உணவைக் கொண்டே உயிர் பிழைக்க வேண்டும்; கழிப்பறைகளைக் கூட தாங்களே சுத்தம் செய்ய வேண்டியிருக்கும்' என்பவை அந்த எச்சரிக்கைகள். விழாக்கால சீருடைகளுக்கும் பளபளக்கும் பதக்கங்களுக்கும் பதிலாக வீட்டில் நூற்கப்பட்ட பருத்தி நூலால் ஆன முரட்டுத் துணி ஆடைகளையே தனது ஆதரவாளர்களை அணியச் செய்தார். இருப்பினும் ஐரோப்பாவின் சர்வாதிகாரிகளை பழுப்பு அல்லது கருப்பு நிற சீருடைகள் இணைத்தது போல, இந்தக் கதர் ஆடைகள் அவர்களை எளிதில் அடையாளம் காணவும், இந்த ஆடையை உடுத்தியவர்கள் தங்களுக்குள் மனரீதியாக ஒரு பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் பயன்பட்டன.

தனது ஆதரவாளர்களுடன் அவர் தகவல் பரிமாற்றம் செய்துகொண்ட முறை மிகவும் பழமையானது. கடிதப் போக்குவரத்தில் பதில்களை தம் கைப்படவே எழுதினார். சீடர்களிடத்தில், பிரார்த்தனை கூட்டத்தில், காங்கிரஸ் கட்சியின் ஊழியர்களிடத்தில் அவர் உரையாற்றினார். கற்பனை வளமிக்க அடுக்கு மொழி அல்லது வார்த்தை ஜாலம் போன்ற தந்திரங்கள் எதையும் மக்களைத் திரட்டுவதற்கு அவர் பயன்படுத்தவில்லை. நவீனத் தகவல் தொடர்பு வசதிகள் இல்லாத போதும் அவரது செய்திகள் தேசம் முழுவதும் பரவின; எளிய வார்த்தைகளால் இந்திய மக்களின் ஆத்மாவைத் தொடும் திறமை காந்திக்கு இருந்ததே இதற்குக் காரணம். அவரது அணுகுமுறைகள் அனைத்தும் புதுமையாக இருந்தன. மாறி மாறி பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நாட்டில், பட்டினி என்பது பல நூற்றாண்டுகளாக சாபம் போல் நீடிக்கும் ஒரு நாட்டில், காந்தி மேற்கொண்ட தந்திரம் மிகவும் எளிமையானது. தாமே முன் வந்து உணவை ஒதுக்கி விடுவது எனும் உண்ணாவிரதம் தான் அது. தண்ணீரையும் சோடாவையும் பருகியே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் செருக்கினை சிதைத்தார் காந்தி.

கடவுள் சிந்தனையில் மூழ்கியிருந்த இந்தியா அவரது மெலிந்த தோற்றத்தையும் அவரது செயல்களில் காணப்பட்ட ஞானப் பெருக்கத்தையும் கண்டது. அவர் மகாத்மாதான் என்பதை அங்கீகரித்து அவர் காட்டும் வழியில் சென்றது. அவர் வாழ்ந்த நூற்றாண்டில் விவாதத்துக்கு இடமின்றி ஆற்றல் மிக்கவர்களில் ஒருவராக காந்தி விளங்கினார். அவரது சீடர்களுக்கு அவர் ஒரு துறவி. பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேறும் நேரத்தை வேகப்படுத்திய காந்தி அவர்களைப் பொறுத்தவரை சூழ்ச்சித் திறம் மிக்க அரசியல்வாதி; போலியான தேவதூதர். அவரது சாத்வீகப் போராட்டம் எப்போதும் வன்முறையில்தான் முடிந்தது. சாகும்வரை உண்ணாவிரதம் என்ற போராட்டங்கள் எப்போதும் மரணத்தின் வாயிலை நெருங்கும் போது நிறுத்தப்பட்டன. இளகிய மனம் கொண்டவரான வேவல் கூட காந்தியை வெறுத்தொதுக்கினார். 'தொல்லை தரும் கிழட்டு அரசியல்வாதி - சிடுசிடுப்புடையவர், பிடிவாதக்காரர், கருத்தைத் திணிப்பவர், இரட்டை நாக்குக்காரர், ஓரளவு உண்மையான துறவு குணமும் அவரிடம் இருந்தது' என்பது வேவலின் கருத்து.

காந்தியோடு பேச்சு நடத்திய ஆங்கிலேயர்களில் சிலர் அவரை விரும்பினார்கள்; வேறு சிலரோ இன்னமும் அவரைப் புரிந்து கொள்ள வேண்டியிருந்தது. அவர்களின் வியப்பும் விளங்கிக் கொள்ளக் கூடியதுதான். ஏனென்றால் மிகப்பெரிய நீதிக்கொள்கைகளையும், குதர்க்கமான கருத்துக்களையும் கொண்ட வித்தியாசமான கலவையாக அவர் இருந்தார். அதிமுக்கியமான அரசியல் விவாதங்களை இடையில் நிறுத்தி விட்டு பாலுணர்வைக் கட்டுப்படுத்தும் பிரம்மச்சரியத்தால் ஏற்படும் பயன்கள் பற்றியும் தண்ணீரில் உப்பு கலந்து தினமும் (மலம் கழிக்க) இனிமா கொடுப்பது பற்றியும் விளக்கி திசை திருப்புவதில் அவர் வல்லவர்.

காந்தி எங்கு இருக்கிறாரோ அதுதான் இந்தியாவின் தலைநகரம் என்று சொல்லப்பட்டது. இந்தப் புத்தாண்டில் மகாத்மா இருந்த வங்க மாநில குக்கிராமமான ஸ்ரீராம்பூர்தான் இந்தியாவின் தலைநகராக இருந்தது. வானொலியோ, மின்சாரமோ, குடிநீர்வசதியோ இல்லாத, தொலைபேசியோ தந்தி வசதியோ கிடைக்க குறைந்தது 30 மைல் (ஒரு மைல் - 1.6 கி.மீ. மொ-ர்) நடந்து செல்ல வேண்டிய நிலையிலிருந்த இந்த கிராமத்தில் களிமண் பையை வயிற்றில் வைத்துப் படுத்தபடிதான் துணைக் கண்டம் முழுவதன் மீதும் தனது ஆதிக்கத்தை அவர் செலுத்தினார்.

கங்கை - பிரம்மபுத்திரா நதிகளால் உருவாக்கப்பட்ட நீர் சூழ்ந்த கழிமுகப் பகுதியில் இப்படியும் அப்படியுமாய் நெளிந்து கிடந்த தீவுக் கூட்டங்களைக் கொண்ட நவகாளி இந்தியாவிலேயே சென்றடைவதற்கு மிகவும் சிரமப்படும் இடமாகும். இங்கே இருந்ததுதான் ஸ்ரீராம்பூர். சுமார் நாற்பது சதுர மைல் பரப்பளவுள்ள இந்தப் பகுதியில் இரண்டரை மிலியன் (25 லட்சம்) மக்கள் இருந்தனர். இவர்களில் 80சதவீதம் பேர் முஸ்லீம்கள். கால்வாய்கள், ஓடைகள், நதிகள் ஆகியவற்றால் பிரிந்து கிடந்த கிராமங்களில் நெருக்கியடித்துக் கொண்டுதான் வாழ்ந்தனர். இந்தக் கிராமங்களுக்குச் செல்வதானால் படகுகள், கைத்துடுப்பால் செலுத்தும் ஓடங்கள், கயிற்றுப் பாலங்கள், வெள்ளம் பெருக்கெடுத்தோடும் நீர் நிலைகள் மீது மூங்கில் அல்லது வேறு மரத்தால் கட்டப்பட்ட அச்சம் தரும் பாலங்கள் ஆகியவற்றையே பயன்படுத்தினார்கள்.

1947 புத்தாண்டு தினத்தில் ஸ்ரீராம்பூரில் இருந்த காந்திக்கு அந்த நாள் மிகவும் திருப்தி அளிப்பதாகத்தான் இருந்திருக்கும். எந்த வெற்றியை அடைய வேண்டும்

என்று வாழ்நாள் முழுவதும் போராடினாரோ அதற்கான விளிம்பில் அன்று அவர் நின்றார். அது தான் இந்தியாவின் சுதந்திரம்.

அவரது போராட்டத்தின் புகழ்மிக்க உச்சக்கட்டத்தை நெருங்கிய வேளையிலும் காந்தி மகிழ்ச்சியற்ற மனிதராகவே இருந்தார். அவர் எங்கு முகாமிட்டிருந்தாரோ அந்தச் சிறிய கிராமத்தின் எல்லாப் பகுதிகளிலும் அவர் மகிழ்ச்சியின்றி இருந்ததற்கான காரணங்கள் தெரிந்திருந்தன. இந்தியாவிலிருந்து ஏறத்தாழ அன்றாடம் கிளமெண்ட் அட்லியின் பார்வைக்கு வந்த அறிக்கைகளில் உச்சரிக்க இயலாதப் பெயர்களில் ஒன்றாக ஸ்ரீராம்பூர் இடம் பெற்றிருந்தது. கல்கத்தாவில் இந்துக்கள் முஸ்லீம்களைக் கொல்கிறார்கள் என்ற தகவல்களை அறிந்த முஸ்லீம்களை வெறி கொண்ட தலைவர்கள் தூண்டி விட்டனர். இதனால் நவகாளியில் இந்துக்களை முஸ்லீம்கள் கொன்றதைப் போல அந்தக் கிராமத்தில் இருந்த சிறுபான்மை இந்துக்கள் மீதும் திடீரென்று முஸ்லீம்கள் தாக்கத் தொடங்கினார்கள். இந்துக்களை அவர்கள் கசாப்பு செய்தார்கள், கற்பழித்தார்கள், கொளுத்தினார்கள், கொள்ளையடித்தார்கள், புனிதப் பசுக்களின் ஊனினை கட்டாயப்படுத்தி உண்ணச் செய்தார்கள், பாதுகாப்புக்காக நெல்வயல்களுக்கு ஓடச் செய்தார்கள். ஸ்ரீராம்பூரில் இருந்த பாதியளவு குடிசைகள் தீயில் கருகி சாம்பலாயின. காந்தி தங்கியிருந்த குடிசை கூட தீயால் பாதி அளவு அழிக்கப்பட்டிருந்தது.

நவகாளி சம்பவங்கள் சிறு பொறிகளாக இருக்கலாம்; ஆனால் அங்கு கிளப்பிவிடப்பட்ட உணர்ச்சிப் பிழம்புகள் இந்தியத் துணைக் கண்டத்தையே எளிதில் பற்றி எரியச் செய்வதாக இருந்தது. கல்கத்தாவில் துவங்கிய இந்த பயங்கரங்கள், பீகாரின் வடமேற்குப் பகுதியிலும் தொடர்ந்தன. கல்கத்தாவுக்கு ஈடாக இங்கே இந்து பெரும்பான்மையினர் சிறுபான்மை முஸ்லீம்களைத் தாக்கி அழித்தனர். வைஸ்ராயாக மவுண்ட்பேட்டனை புதுடில்லிக்கு அனுப்புவதற்கான பேச்சுக்களின் போது அட்லி காட்டிய அவசரம் இந்தச் சம்பவங்களால் விளங்கியது.

ஸ்ரீராம்பூருக்கு காந்தி சென்றதும் இதே காரணங்களுக்காகத்தான். இவர்களுக்கு வெற்றி கிட்டும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்த போது, அவரது நாட்டுமக்கள் ஒருவரோடு ஒருவர் மோதி மதக்கலவரம் ஏற்பட்டிருப்பது உண்மையில் காந்தியின் நெஞ்சைப் பிளப்பதாய் இருந்தது. சுதந்திரத்திற்கான பாதையில் அவரை அவர்கள் பின்பற்றிச் சென்றார்கள். ஆனால் அந்த லட்சியத்தை அடைவதற்கு அவர் உருவாக்கிய மாபெரும் தத்துவமான அஹிம்சையை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. தனது அஹிம்சை கொள்கை மீது காந்தி ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். அணு ஆயுதங்களால் பேரழிவு என்று உலகத்துக்கு அச்சுறுத்தல் இருக்கும் இந்த நாளில், அஹிம்சை மட்டுமே அந்த அழிவிலிருந்து மனித குலத்தைக் காப்பாற்ற முடியும் என்று காந்தி உறுதியாக நம்பினார். மனிதனை ஊசலாட்டத்திலிருந்து விடுவிக்க சிறந்தவழி இதுதான் என்பதை ஆசியாவுக்கும் உலகுக்கும் இந்தியா எடுத்துக் காட்ட வேண்டும் என்பதுதான் அவரது பேராசை. எந்தக் கொள்கைக்காக வாழ்ந்தாரோ இவர்களின் சுதந்திரத்திற்கு எதைப் பயன்படுத்தினாரோ அந்தக் கொள்கையை அவரது நாட்டின் சொந்த மக்களே ஏற்க மறுத்தால் காந்தியின் நம்பிக்கை எப்படி ஈடேறும்? இந்த நிலை ஏற்பட்டால் சுதந்திரம் என்பது பயனற்ற வெற்றி என்ற சோகத்தில் தான் முடியும்.

இன்னொரு சோகமும் காந்தியை அச்சுறுத்தியது. மத அடிப்படையில் இந்தியா துண்டாடப்பட்டால் அது காந்தியின் லட்சியங்கள் அனைத்தையும் அவமதிப்பதாகும். இந்தியாவின் முஸ்லீம் அரசியல்வாதிகளால் கோரப்பட்டு, ஆங்கிலேய ஆட்சியாளர்கள் பலரால் ஏற்கத் தயாராய் இருக்கும் அவரது அன்பிற்குரிய நாட்டின் பிரிவினையை, அவரது நாடி நரம்புகள் ஒவ்வொன்றும் எதிர்த்தன. காந்தியைப் பொறுத்தவரை இந்திய மக்களும் அவர்களின் மத நம்பிக்கைகளும் உலகமென்னும் தரைவிரிப்பில் உள்ள வண்ணக்கோடுகள் போல பின்னிப் பிணைக்கப்பட்டவை.

'இந்தியாவைக் கூறுபோடுமுன் எனது உடலை நீங்கள் கூறுபோட வேண்டியிருக்கும்' என்று மீண்டும் மீண்டும் அவர் அறிவித்திருக்கிறார்.

தனது சொந்தக் கொள்கையின் பலத்தை சோதிப்பதற்கும், இந்தியா முழுவதையும் பிரிவினை நோய் பீடிக்கும் முன் அதனைத் தடுத்து நிறுத்த ஒரு வழி கண்டுபிடிக்கவும் தான் கலவரத்தால் சீரழிந்த ஸ்ரீராம்பூர் கிராமத்திற்கு அவர் வந்திருந்தார். இந்தியாவில் இந்து - முஸ்லீம் சமூகங்களுக்கு இடையே முதன் முறையாக மதவாதக் கொலைகள் நிகழ்ந்த கோரச் செயல் தொடங்கியபோதே ஆதங்கத்தோடு அவர் புலம்பினார். 'இந்தக் கும்மிருட்டில் ஊடுருவிப் பார்த்தாலும் ஒளிக் கீற்றை என்னால் காண முடியவில்லை' 'நான் சபதமாக ஏற்றுக் கொண்டுள்ளதும் ஐம்பது ஆண்டுகளாக என்னை வாழ வைத்துக் கொண்டிருப்பதுமான சத்தியமும் அஹிம்சையும் நான் அவற்றின் மீது வைத்திருந்த நம்பிக்கையை வீணாக்கி தோல்வியடைந்து விட்டதாகவே கருதுகிறேன்' என்றும் அவர் கூறினார்.

'என் வாழ்க்கையைப் பொருளுடையதாக்கி வாழ வைத்துக் கொண்டிருக்கும் கொள்கையின் பலத்தை சோதிக்கவும் ஒரு புது உத்தியைக் கண்டறியவுமே நான் இங்கு வந்திருக்கிறேன்' என்று அவர் தனது சீடர்களிடம் கூறினார்.

பல நாட்கள் காந்தி அந்தக் கிராமத்தில் சுற்றி வந்தார். அங்குக் குடியிருந்தவர்களுடன் அளவளாவினார். நெருக்கடியான நேரங்களில் அவ்வப் போது அவருக்கு வழிகாட்டிய 'ஆத்மாவின் குரல்,' அளிக்கும் ஆலோசனைக் காகக் காத்திருந்தார். சமீப காலமாக ஒரு ஆர்வமான பணியில் அவர் நீண்ட நேரம் செலவிடுவதை அவரது சீடர்கள் கவனித்தனர். வழுக்கும் தன்மையுடன் இற்றுவிழும் நிலையில் அந்தக் கிராமத்தைச் சுற்றியிருந்த மரப்பாலங்களைக் கடந்து செல்வதில் அவர் பயிற்சி பெற்றிருந்தார்.

அன்றொரு நாள், தனது மண்குளியல் முடித்த பிறகு தனது சீடர்களை குடிலுக்குள் அழைத்தார். ஒருவழியாக அவரது 'ஆத்மாவின் குரல்' பேசி விட்டது. ஒரு காலத்தில் புராதன இந்து மதத் துறவிகள் புனிதத் தலங்களுக்கு வெறும் காலுடன் நாடு முழுவதும் புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளனர். அதேபோல் நவகாளியில், வீணான வெறுப்பு சூழ்ந்திருக்கும் கிராமங்களில் பிராயச்சித்த யாத்திரையை அவர் மேற்கொள்ளவிருந்தார். நடந்து விட்ட தவறுக்குக் கழுவாய் தேடுவதன் குறியீடாக அடுத்த ஏழு வாரங்களுக்கு வெறும் கால்களுடன் நடைபயணம் மேற்கொண்டார் 116 மைல்கள் நடந்து நவகாளியின் 47 கிராமங்களில் பயணம் செய்தார்.

ஓர் இந்துவான அவர் சினமுற்றிருந்த முஸ்லீம்களிடையே பயணம் செய்தார். சீர்கெட்டுப் போன நவகாளியில் தனது வருகை என்ற மருந்தின் மூலம் அமைதியை மீண்டும் கொண்டுவர கிராமம் கிராமமாக, வீடுவீடாக அவர் பயணம் செய்தார்.

*இது ஒரு பிராயச்சித்த யாத்திரை என்பதால் கடவுளைத் தவிர வேறெவரையும் துணைக்கு அழைக்க அவர் விரும்பவில்லை. அவரது சீடர்களில் நான்கு பேர் மட்டுமே அவருடன் சென்றார்கள். அவர்கள் பயணம் செய்த கிராமங்களில் உள்ள மக்கள் எதை அன்போடு கொடுத்தார்களோ அதைக் கொண்டு தான் அவர்கள் வாழ்ந்தார்கள். இந்தியாவின் எதிர்காலம் பற்றி காங்கிரஸ் கட்சி மற்றும் முஸ்லீம் லீகின் அரசியல்வாதிகள் டில்லியிலே எல்லையில்லாத விவாதங்களில் ஈடுபடட்டும். எப்போதும் போலவே இந்தியாவின் பிரச்சனைகளுக்கு இப்போதும் அதன் கிராமங்களே தீர்வு காணும் என்று அவர் சொன்னார். 'இதுதான் எனது "கடைசியான மகத்தான, சோதனையாக" இருக்கும்' என்றும் அவர் கூறினார். ரத்தத்தாலும் கசப்புணர்வாலும் இந்த கிராமங்களில் அணைக்கப்பட்ட "சகோதர உணர்வு எனும் தீபங்களை மீண்டும் என்னால் ஏற்ற முடியுமானால்" அது ஒட்டுமொத்த தேசத்தையும் ஆகர்ஷிக்கும் என்பது அவரது எண்ணம். இந்தியாவைத் துயரத்தில் ஆழ்த்தும் வகுப்புவாதச் சண்டையிலிருந்து மீட்கவும்; அஹிம்சை தீபத்தை மீண்டும் ஒளிவிடச் செய்யவும் தம்மால் இயல வேண்டும் என்று நவகாளில் அவர் பிரார்த்தனை செய்தார்.*

*விடியற்காலையிலேயே அவரது குழு வெளியே புறப்பட்டது. காந்தியின் அழகான 19 வயது பேத்தி மனு அவருக்குத் தேவையான பொருள்களையெல்லாம் ஒரு பைக்குள் எடுத்து வைத்தார். ஒரு பேனாவும் காகிதங்களும், ஒரு ஊசியும் நூலும், ஒரு மண்சட்டியும் ஒரு மரக்கரண்டியும் நூல் நூற்கும் அவரது ராட்டையும், அவரது மூன்று குருக்களான 'தீயவை கேட்காதே, தீயவை பார்க்காதே, தீயவை பேசாதே' என்பதைச் சித்திரிக்கும் தந்தத்தாலான மூன்று சிறு குரங்கு பொம்மைகளும் அந்தப் பைக்குள் வைக்கப்பட்டன. காடுகளில் பயணம் செய்த அந்த மனிதரின் கொள்கையைப் பிரதிபலிக்கும் புத்தகங்களையும் அந்தப் பெண் ஒரு பையில் வைத்தார். அவை பகவத்கீதை, குரான், ஏகவின் நடைமுறைகளும் போதனைகளும், மற்றும் யூதர்களின் சிந்தனைகள் அடங்கிய நூல் ஆகியவை.*

*காந்தியின் தலைமையில் அந்த சிறிய குழு புழுதி மிகுந்த பாதைகளிலும், ஏரி குளங்களைக் கடந்தும், வெற்றிலை கொடிக் கால்கள், தென்னந்தோப்புகள், நெல்வயல்கள் ஆகியவற்றின் ஊடேயும் நடந்தது. இழந்த கனவைத் தேடி மூங்கில் கைத்தடியுடன் நடந்து செல்லும் கூன்விழுந்த அந்த 77 வயது மனிதரைக் கடைசியாக தரிசிக்க ஸ்ரீராம்பூர் கிராமவாசிகளின் கூட்டம் அலைமோதியது.*

*அறுவடை முடிந்த வயல்களைக் கடந்து பார்வையிலிருந்து காந்தியின் குழு மறையத் தொடங்கினாலும், ரவீந்திரநாத்தாகூரின் சிறந்த கவிதைகளில் ஒன்றினை இசையோடு பாடிக் கொண்டு செல்வதை கிராமவாசிகள் கேட்டனர். அந்த வயதான தலைவருக்குப் பிடித்தமான பாடல்களில் அதுவும் ஒன்று. பயணப்பாதையில் அவர் மறைந்தாலும் ஒரே சீராய் இல்லாமல் ஏற்ற இறக்கத்துடன் வயல்வெளிகளில் தவழ்ந்து வரும் உரத்தக் குரலிலான பாட்டொலியை மக்கள் பின் தொடர்ந்தனர்.*

*'உனது அழைப்புக்கு அவர்களிடமிருந்து*
*பதில் இல்லை என்றாலும்*
*தனித்து நட, தனித்து நட'*

*அவர் பாடிச் சென்றார்.*

இந்தியாவின் கடுமையான சாபமாகப் பல நூற்றாண்டுகளாகப் பசியும் பட்டினியும் இருந்தது போலவே சகோதரர்கள் மோதி ரத்தம் சிந்துவதும் இருந்தது. இதனைத் தடுத்து விட முடியும் என்று காந்தி நம்பினார். கிருத்துவுக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் டில்லியின் வடமேற்கே உள்ள குருஷேத்திரத்தில் மக்கள் வெட்டி சாய்க்கப்பட்ட கோரப் போரைத்தான் இந்து மதத்தின் இதிகாசமான மகாபாரதம் பாராட்டுகிறது. இந்தியத் துணைக் கண்டத்தை அதன் தொல் குடியினரான திராவிட மக்களிடமிருந்து கைப்பற்ற வடக்கே யிருந்து வந்த நாடோடிக் கூட்டமான இந்தோ ஐரோப்பியர்கள் தான் இந்துமதம் என்பதையே இந்தியாவுக்குக் கொண்டு வந்தனர். கிருத்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் சிந்து நதிக்கரையில் இருந்து தான் இந்துமத முனிவர்கள் புனித வேதங்களை எழுதினார்கள்.

கங்கைச் சமவெளியில் நிலவிய இந்து ஆதிக்கத்தை பலவீனப்படுத்த ரோமானியர்களான ஜெங்கிஸ்கானும் தாமர்லேன் என்கிற தைமூரும் கைபர் கணவாய் வழியாக வந்து தாக்குதல் நடத்திய பிறகு தான் மிகவும் தாமதமாக முகமது நபியின் மார்க்கம் இந்தியாவுக்கு வந்தது. முகலாய மன்னர்கள் சுமார் 200 ஆண்டுகளுக்கு இந்தியாவின் பல பாகங்களில் தங்களது ஆடம்பரமான எவருடனும் இணங்கிச் செல்ல மறுக்கிற ஆட்சியை நடத்தினார்கள். தங்களின் ஆட்சிக் காலத்தில் ஒரே ஒருவரும், கருணை மிக்கவருமான அல்லாவின் போதனைகளைப் பரப்பினர்.

இவ்வாறு துணைக்கண்டத்தில் காலூன்றிய இரண்டு பெரிய மதங்களும் கடவுள் நம்பிக்கையில் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தன. இறைத் தூதர் என்ற முகமது நபி மீதும் அவரது கருத்துத் தொகுப்பான குரான் மீதும் இஸ்லாம் நம்பிக்கை வைத்தது. ஆனால் இந்து மதமோ ஒரு ஸ்தாபகரையோ, அவர் உரைத்த போதனைகளையோ, தனிப்பட்ட சித்தாந்தத்தையோ தேவாலயம் அல்லது பிற நாடுகளின் கோயில் அலுவலகங்கள் போன்ற அமைப்பையோ கொண்டிருக்கவில்லை. இஸ்லாம் நெறிப்படி, படைத்தவர் (கடவுள்) படைப்பிலிருந்து (மனிதனிலிருந்து) வேறுபட்டு நிற்கிறார். அவனது பணிகள் குறித்து கட்டளையிடுகிறார்; வழி நடத்திச் செல்கிறார். இந்து மதத்தில் படைப்பவரும் படைப்புகளும் ஒன்றே; பிரிக்க முடியாதவை. மேலும் கடவுள் பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருக்கிறார். அவரது சக்தி அளவிடற்கரியது.

இதன் காரணமாக, இந்து என்பவர் தாம் தெரிவு செய்யும் எந்த வடிவிலும் கடவுளை வணங்கினார். விலங்குகளில், மூதாதையர் உருவங்களில், முனிவர்களில், தேவ கணங்களில், இயற்கைச் சக்திகளில், அவதாரங்களில், எல்லையற்ற முழுமையான தெய்வத்தை வணங்கினார். பாம்புகள், லிங்க உரு, நீர், நெருப்பு, கோள்கள், நட்சத்திரங்கள் ஆகியவற்றிலும் அவரால் கடவுளைக் காண முடிந்தது.

இதற்கு நேர்மாறாக முஸ்லீமுக்கு ஒரே ஒரு கடவுள்தான்; அவர்தான் அல்லா. நம்பிக்கைக்குரிய அவரை எந்த உருவத்திலும் வடிவத்திலும் சித்திரிப்பதை குரான் ஏற்கவில்லை. தெய்வ வடிவங்களோ, உருவப்படங்களோ முஸ்லீமுக்கு அருவருக்கத் தக்கவை; ஓவியங்களும் உருவச் சிலைகளும் இறை நிந்தனைக் குரியவை. ஒரு மசூதி என்பது தனித்த புனித மிக்க இடம். இதில் உருவங்களற்ற அலங்காரங்கள் செய்யவும், கடவுளின் 99 திருநாமங்கள் எழுதவும் தான் அனுமதிக்கப்பட்டன.

*மசூதிக்கு நேர்மாறாக இந்துக்கோயில் இருந்தது. தெய்வச் சிலைகள் தான் இந்து மதத்தின் இயற்கையான கருத்து வெளிப்பாடாக இருந்தன. இந்துக் கோயில் ஆன்மிகப் பொருள்கள் குவிந்த மையம் போல் தோற்றமளித்தது. தலைகளில் பாம்புகளைச் சுற்றிய பெண் தெய்வங்கள், அச்சம் தரும் நாக்குகளுடன் ஆறு கைகளைக் கொண்ட கடவுள்கள், மேகங்களுடன் உரையாடும் இறக்கை முளைத்த யானைகள், குறும்பு செய்யும் சிறு குரங்குகள், நடனமாடும் இளம் மங்கையர்கள், குறுகிய லிங்க வடிவங்கள் ஆகியவை இந்துக் கோயிலில் இருந்தன.*

*குரானின் வேத வாக்கியங்களை ஒரே குரலில் ஒலித்தபடியும், மெக்கா இருக்கும் திசை நோக்கி மசூதியின் தரையில் மண்டியிட்டும் முஸ்லீம்கள் கூட்டாக வழிபடுகின்றனர். ஒரு இந்துவோ தனியாகவே வழிபடுகிறான்; அவனது எண்ணங்கள் மட்டுமே அவனையும் கடவுளையும் இணைக்கின்றன. மேலும் மூன்று முதல் மூன்றரை மிலியன் (30-35 லட்சம்) என்ற வியப்பேற்படுத்தும் (முப்பத்து முக்கோடி மொ-ர்) தேவர்களின் கூட்டத்திலிருந்து ஒரு கடவுளை அவன் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். காடு போல் மிகவும் சிக்கலான இந்த விஷயம் பற்றி விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சிலர் தான் வாழ்நாள் முழுவதும் ஈடுபட்டு ஆய்வு செய்து ஒரு வழிகாண முடியும். இந்தக் கடவுள் கூட்டத்தின் மையமாக மும்மூர்த்திகள் இருந்தனர். இவர்கள் ஆக்கும் கடவுளான பிரம்மா; அழிக்கும் கடவுளான சிவன்; காக்கும் கடவுளான விஷ்ணு. சாதக பாதக நடுநிலை சக்திகளான இவை பக்தர்கள் செய்வது போலவே முழுமுதற் கடவுளை - முற்றும் கடந்த சாசுவத நிலையைத் தேடிக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்குப் பின்னால் பருவ காலங்களுக்கு, வானிலைகளுக்கு, பயிர்களுக்கு என்று ஆண் கடவுள்களும் பெண் தெய்வங்களும் இருந்தன. மேலும் மனிதனுக்கு நோய் உருவாக்கும் மாரியம்மா போன்ற பெரியம்மைக்கான பெண் தெய்வங்களும் இருந்தன. யூதர்களின் திருவிழா போல இந்த தெய்வத்துக்கும் சடங்குகள் செய்து ஆண்டுதோறும் விழா நடத்தப்படுகிறது.*

*இருப்பினும் இந்து - முஸ்லீம்களுக்கிடையே புரிந்துணர்வில் இருந்த மிகப் பெரிய தடை ஆன்மீகம் தொடர்பானது அல்ல; சமூகம் சார்ந்ததாகும். அது இந்து சமூகத்தை இயக்கும் சாதி அமைப்பு முறையாகும். வேத பிரமாணங்களின்படி ஆக்கும் கடவுளான பிரம்மாவிடமிருந்துதான் சாதி தோன்றியது. மிக உயர்ந்த சாதியினரான பிராமணர்கள் பிரம்மாவின் வாயிலிருந்து பிறந்தார்கள்; போராளிகளும் ஆட்சியாளர்களுமான ஷத்ரியர்கள் அவனது தோள்களிலிருந்தும், வர்த்தகர்களும் வியாபாரிகளுமான வைஸ்யர்கள் அவனது தொடையிலிருந்தும், கைவினைஞர்களும் தொழிலாளர்களுமான சூத்திரர்கள் அவனது பாதங்களிலிருந்தும் பிறந்தார்கள். இவர்களுக்கும் கீழே இருந்த தீண்டத்தகாதவர்கள் ஆண்டவனிடமிருந்து பிறக்கவில்லை.*

*இருப்பினும், வேதங்களில் கூறப்பட்டுள்ளது போல, சாதி அமைப்பு முறையின் தோற்றங்கள் அவ்வளவு புனிதமானவைஅல்ல. இந்தியாவின் கருப்பு நிற திராவிட மக்களை அடிமைப்படுத்த இந்து மதத்தை நிறுவியவர்களான ஆரியர்கள் உருவாக்கிப் பரப்பியதே இந்த சாதிய முறை. சாதி என்பதற்கு வர்ணம் அதாவது நிறம் என்ற பொருள்படும் பெயரும் உண்டு. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும் இந்தியாவின் தீண்டத் தகாதோரின் கருப்புத் தோல்கள் சாதிய முறை உண்மையில் எப்படித் தோன்றியது என்பதற்கு திட்டவட்ட நிரூபணங்களாகத் திகழ்கின்றன.*

துவக்கத்தில் ஐந்து பிரிவுகளாக இருந்த சாதிகள் புற்று நோய் பரவுவது போல 5000 உப சாதிகளாக விரிந்துள்ளன. பிராமணர்களில் மட்டும் 1886 பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு சாதி இருக்கிறது. இதனால் ஒரு மனிதன் அவனது பணி காரணமாக பத்தாயிரக்கணக்கில் பிளவுபடுத்தப் படுகிறான். அந்த அடிப்படையிலேயே அவன் வாழ்ந்து திருமணம் செய்து மடிய வேண்டியிருக்கிறது. இரும்பை உருக்குபவரும், அதைக் கொண்டு பொருள்கள் செய்பவரும் வேறு வேறு சாதியினர் என்ற அளவுக்கு அதன் விளக்கங்கள் விரிவாக இருந்தன.

இந்து மதத்தில் சாதிய முறையோடு தொடர்பு கொண்ட மற்றொரு அடிப்படைக் கோட்பாடு என்பது மறுபிறவி. தனது உடல், உயிர் தங்கியிருப்பதற்கான தற்காலிகக் கூடுதான் என்பது இந்துவின் நம்பிக்கை. எல்லாம் வல்லவனால் இயக்கப்படும் உயிரின் பல பிறவிகள் என்ற பயணத்தின் ஒரே ஒரு பகுதிதான் இந்த மனித வாழ்க்கை என்று இந்து கருதினான். இந்த சங்கிலித் தொடரின் துவக்கமும் முடிவும் எளிதில் அறிய முடியாத முழுமுதற் கடவுளோடு தொடர்புடையவை என்பதும் அவனது எண்ணம். இந்த மாய வாழ்க்கை காலத்தில் சேருகின்ற நன்மை தீமைகளான கர்மாதான் உயிருக்குத் தொடர்ச்சியாக இருக்கும் சுமையாகும். இந்தக் கர்மாதான், கடவுளால் படைக்கப்பட்ட சாதி அமைப்பில், மறுபிறவியின் போது ஒரு உயிரை மேலே அனுப்புவதா கீழே இறக்குவதா என்பதைத் தீர்மானிக்கிறது. இந்தியாவில் சமூக ஏற்றத்தாழ்வுகள் என்றும் நிலை பெற்றிருக்க, தெய்வீக முத்திரைக் குத்தப்பட்ட சாதி, ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. வாழ்க்கையின் துன்ப துயரங்களை மறந்து பரலோகம் பற்றிய சிந்தனையில் ஈடுபடுங்கள் என்று மத்திய நூற்றாண்டுகளில் கிருத்தவ தேவாலயங்கள் விவசாயிகளுக்குப் போதனை செய்தன. அதேபோல் இந்து மதமும் வாழ்க்கையில் எத்தனைத் துன்பங்கள் வரினும் சகித்து ஏற்றுக் கொள்வதுதான் அடுத்தப் பிறவியில் நல்வாழ்க்கை கிடைப்பதற்கான வழி என்று துயருற்ற இந்திய மக்களுக்குப் பல நூற்றாண்டு களாக அறிவுரை கூறி வந்தது.

இறை நம்பிக்கை கொண்ட எல்லோரும் சகோதரர்கள் என்பதுதான் இஸ்லாம் மார்க்கம் என்று கருதிய முஸ்லீம்களுக்கு இந்த சாதிய முறை ஒரு சாபமாகவே தோன்றியது. இதனால் தான் இந்தியாவில் முகலாயர் ஆட்சிக் காலத்தில் லட்சக்கணக்கான மக்கள் கருணையும், வரவேற்பும், சகோதரத் துவமும் நிறைந்த இஸ்லாம் மதத்துக்கு மாறி மசூதிகளுக்குச் சென்றனர். தவிர்க்க முடியாதபடி, இவர்களில் பெரும்பாலோர் தீண்டத்தகாதவர்களாக இருந்தனர். தங்களின் சொந்த மதம் தங்களை ஒதுக்கப்பட்ட பிறவியாகவே நடத்தியதால் இஸ்லாமின் சகோதரத்துவம் அவர்களுக்கு ஏற்புடையதாக இருந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் முகலாய சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்த போது, போர்க்குணமிக்க இந்து மறுமலர்ச்சி இந்தியா முழுவதும் பரவியது. இது இந்து முஸ்லீம்களிடையே ரத்தக்களரியை ஏற்படுத்தியது. மதச்சண்டைகள் நிறைந்த இந்தியத் துணைக் கண்டத்தில் அமைதியைக் கொண்டு வரும் நிர்ப்பந்தம் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஏற்பட்டது. இருப்பினும் நம்பிக்கையின்மையும் ஐயப்பாடும் இந்த இரு சமூக மக்களிடையே தொடர்ந்தது. துன்பங்களிலிருந்து விடுபடுவதற்காக இந்து மதத்திலிருந்து ஓடிய தீண்டத்தகாதவர்கள், முஸ்லீம்களில் பெரும்பாலோர் என்பதை இந்துக்கள் மறக்கவில்லை. ஒரு முஸ்லீமின் முன்னிலையில் சாதி இந்து உணவைத் தொடுவதும் இல்லை. இந்து வீட்டின் சமையலறைக்குள் ஒரு முஸ்லீம் வந்து

விட்டால் அது கறைபட்டு விடும். ஒரு முஸ்லீமின் கை தன் மீது பட்டு விட்டால், ஒரு பிராமணன் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ள பல மணி நேரம் புனித நீராடினான்.

இந்தியாவின் வடக்குப் பகுதியில் உள்ள பீகார், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாப் போன்றவற்றில் ஆயிரக்கணக்கான கிராமங்களில் இந்துக்களும் முஸ்லீம்களும் கலந்து வாழ்ந்தது போலவே காந்தி பயணம் செய்த நவகாளியிலும் இந்துக்களும் முஸ்லீம்களும் கலந்து வாழ்ந்தனர். புவியியல் ரீதியில் பார்த்தால் இவர்களின் குடியிருப்புகள் தனித்தனியாகத் தான் இருந்தன. பொதுவழி என்று அழைக்கப்படும் சாலையோ பாதையோ இந்தக் குடியிருப்பு களுக்குள் இருந்தன. இதன் ஒரு பகுதியில் முஸ்லீம் மறுபகுதியில் இந்து என்ற வாழ்க்கை முறை கூட அங்கு இல்லை.

இரண்டு மதத்தினரும் கலந்து வாழ்ந்தனர். ஒருவர் மற்றவரின் விழாக்களில் பங்கேற்றனர். தங்கள் பணிகளுக்கு உதவும் எளிய கருவிகளையும் அவர்கள் பகிர்ந்து கொண்டனர். அவர்களின் கலப்பு வாழ்க்கை அத்துடன் முடிந்து விடும். இரு மதத்தினரிடையே திருமணம் என்பதைக் காணவே முடியாது. இரு மதத்தினரும் தனித்தனி கிணறுகளிலிருந்துதான் தண்ணீர் எடுத்தனர். தனது கிணற்றிலிருந்து பல கஜ தூரத்தில் இருந்தாலும் ஒரு முஸ்லீம் வீட்டுக் கிணற்று நீரை சாதி இந்து குடிக்க நேர்ந்தால் அவன் மூச்சுத் திணறிப் போவான். பஞ்சாபில் ஒரு இந்துவின் குழந்தை ஓரளவு ஞானத்தை மட்டுமே பெற்றது. பஞ்சாப் கிராமப் பண்டிதர்கள் அவர்களுக்கு கோதுமை குச்சி கொண்டு மணலில் சில பஞ்சாபி வார்த்தைகளை எழுத மட்டுமே கற்றுக் கொடுத்தார்கள். அதே கிராமத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் குழந்தையோ வித்தியாசமான உருது மொழியில் குரான் ஓதுவதற்காக, மசூதியில் இருந்த ஷேக்கிடம் (குருமாரிடம்) நல்ல கல்வியைப் பெற்றது. பசுவின் கோமயம் (சிறுநீர்) மூலிகைகள் போன்ற ஆதிகால இயற்கை மருந்துகளை, ஒரே நோய்க்காக இந்துக்களும் முஸ்லீம் களும் பயன்படுத்தினாலும், வேறு வேறு முறையைக் கையாண்டார்கள்.

இத்தகைய சமூக, மத வேறுபாடுகளோடு மேலும் ஒரு மோசமான மிகவும் கடுமையான வேறுபாடு இவர்களிடையே இருந்தது. அதுதான் பொருளாதார ஏற்றத்தாழ்வு. இந்தியாவுக்குள் வந்த மேற்கத்திய சிந்தனையையும், பிரிட்டிஷ் கல்வி வாய்ப்புக்களையும் முஸ்லீம்களை விட இந்துக்கள் அதிவேகமாகப் பெற்றனர். இதன் விளைவு, முஸ்லீம்களுடன் பிரிட்டிஷார் சமூக ரீதியாக இணக்கம் கொண்டிருந்தாலும், பிரிட்டிஷாருக்காக இந்தியாவை இந்துக்கள் தான் நிர்வாகம் செய்தனர். இந்தியாவின் வணிகர்களாக, நிதியாளர்களாக, நிர்வாகிகளாக, அலுவலர்களாக இவர்கள் தான் இருந்தனர். தீயை வணங்கும், தொன்மைப் பாரசீகத்தின் சோரோஸ்ட்ரிய இனத்தைச் சேர்ந்த பார்சிகளுடன் சேர்ந்து அவர்கள் காப்பீடு, வங்கி, பெருவணிகங்கள் ஆகியவற்றிலும், இந்தியாவின் சில தொழில்களிலும் ஏகபோகமாக இருந்தார்கள்.*

பெரு நகரங்களிலும் சிறு நகரங்களிலும் இந்துக்களே ஆதிக்கம் செலுத்தும் வர்த்தக சமூகமாக இருந்தார்கள். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வட்டிக்குப் பணம் கொடுக்கும் லேவாதேவி வேலை பெரும்பாலும் இந்துக்களாலேயே

---

* 1857ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகத்தில் முஸ்லீம்களின் பங்கேற்பு அதிகம் இருந்ததால் இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு அவர்கள் கடும் தண்டனைக்கு உள்ளானார்கள்.

செய்யப்பட்டன. இந்த வேலையில் அவர்களுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது ஒரு காரணம். முஸ்லீம்கள் வட்டிக் கடை நடத்துவதற்கு அவர்களின் வேத நூலான குரான் தடை செய்திருந்தது மற்றொரு காரணம்.

முஸ்லீம்களில் உயர் சாதியினர், நிலப்பண்ணையாளர்களாகவும், படை வீரர்களாகவும் இருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் இந்தியாவை ஆக்ரமித்த முகலாயர்களின் வம்சாவழியினர் ஆவர். இந்தியச் சமூகத்தில் ஆழப்பதிந்திருந்த சாதிய முறை காரணமாக, மதம் மாறிய முஸ்லீம்களாக இருந்தாலும் சைவ சமயத்தில் இருந்த போது அவர்களது சாதிக்கு விதிக்கப் பட்டிருந்த வேலையைத் தான் செய்தார்கள்; ஒரு சிலரால் தான் இதிலிருந்து தப்பிக்க முடிந்தது நாட்டுப்புறத்தில் இவர்கள் நிலமற்ற விவசாயிகளாக இருந்து, இந்துக்கள் அல்லது முஸ்லீம்களுக்குப் பணிவிடை செய்தார்கள். நகரத்திலோ இவர்கள் இந்து முதலாளிகளிடம் தொழிலாளர்களாகவோ, சிறு கைவினைஞர்களாகவோ பணி செய்தனர்.

இந்தப் பொருளாதாரப் போட்டி இரு வகுப்பினரிடையே சமூக மற்றும் மதப்பிளவுகளை மேலும் அதிகரிக்கச் செய்தது. ஸ்ரீராம்பூரின் அமைதியைக் கெடுத்து அடிக்கடி நிகழ்ந்தது போல பிற பகுதிகளிலும் வகுப்புவாதக் கொலைகள் விழுந்தன. இத்தகைய மோதல்கள் ஏற்படுவதற்கு இரண்டு வகுப்பினரும் தாங்கள் விரும்பியவாறு ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்துக்களுக்கு இசையும் கலவரக் கருவியானது. மசூதிகளில் தொழுகை நடத்தும் போது இசையை ஒரு போதும் முஸ்லீம்கள் சேர்ப்பதில்லை. மதவிசுவாசிகளின் பிரார்த்தனையுடன் இசை கலப்பதை அவர்கள் தெய்வ நிந்தனையாகக் கருதினார்கள். எனவே தங்களது அண்டை அயலில் வாழும் முஸ்லீம் மக்கள் வெள்ளிக்கிழமைகளில் மசூதிகளில் தொழுகை நடத்தும் போது, அவற்றுக்கு வெளியே இருந்து பாண்டு வாத்தியக்குழுவை இசைக்கச் செய்து முஸ்லீம்களைக் கோபப்படுத்துவதைத் தவிர வேறெது இந்துக்களுக்கு சிறந்த வழியாக இருக்க முடியும் !

முஸ்லீம்களைப் பொறுத்த வரை ஆத்திரமூட்டலுக்கு ஒரு விலங்கினைப் பயன்படுத்தினார்கள். இந்து மத வழிபாட்டில் மிக முக்கியமானதாகக் கருதப் பட்ட, இந்தியாவின் கிராமங்கள், சிறு நகரங்கள், நகரங்கள் ஆகியவற்றின் வீதிகளில் தன் போக்கிற்குத் திரியும், சாம்பல் நிறமுள்ள எலும்பும் தோலுமான புனிதப் பசுதான் அது.

பசு மீதான இந்த மரியாதை பைபிள் காலத்துக்கும் முந்தையது. இந்தோ - ஐரோப்பிய ஆயர்குல மக்கள் வாழ்வு தேடி இந்திய துணைக்கண்டத்துக்குக் குடிபெயர்ந்த போது தங்களின் ஆநிரைகள் மீது பெருமதிப்பு வைத்திருந் தார்கள். புராதனமான ஜூடியாவில் இருந்த யூத மதத்தலைவர்கள் தங்கள் மக்களை இழைப்புழு (Trichinosis) நோயிலிருந்து காப்பாற்றுவதற்காகப் பன்றி மாமிசத்தைத் தடை செய்தார்கள். இதே போல் பழங்கால இந்தியாவின் சாதுக்கள் தங்கள் மக்கள் நம்பியிருக்கும் ஆநிரைகளை பஞ்சகாலத்தில் கசாப்பு செய்யப்படுவதிலிருந்து காப்பாற்றுவதற்காகப் பசு புனிதமானது என்று அறிவித்தார்கள்.

இதன் விளைவாக, 1947ஆம் ஆண்டு உலகிலேயே அதிக எண்ணிக்கையில் சுமார் 200 மிலியன் (20 கோடி) கால்நடைகள் இந்தியாவில் இருந்தன. இரண்டு

இந்தியர்களுக்கு ஒரு கால்நடை என்ற அளவிலான இந்த எண்ணிக்கை அமெரிக்காவின் மக்கள் தொகையை விட அதிகமாகும். மொத்தமிருந்த 40 மிலியன் (4 கோடி) பசுக்கள் ஒவ்வொன்றும் ஒரு நாளைக்கு சராசரியாக ஒரு பின்ட் (Pint) (ஒரு பிண்ட் என்பது முகத்தல் அளவையில் 20 அவுன்சாகும் மொ-ர்) பால் தான் அளித்தது. 40 அல்லது 50 மிலியன் (4 அல்லது 5 கோடி) கால்நடைகள் வண்டிகள் இழுக்கவும் ஏர் உழவும் பயன்பட்டன. எஞ்சிய 100 மிலியனுக்கும் (10 கோடிக்கும்) அதிகமான கால்நடைகள் வறண்ட நிலையில் பயன் ஏதும் இல்லாமல் இந்தியாவின் வயல்வெளிகளிலும், கிராமங்களிலும் நகரங்களிலும் சுற்றித் திரிந்தன. ஒவ்வொரு நாளும் இவை ஓய்வின்றி அசை போட்ட உணவுப் பொருள்களைக் கொண்டு பட்டினியின் உச்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் 10 மிலியன் (ஒரு கோடி) இந்தியர்களுக்கு உணவளித் திருக்கலாம்.

உயிர் வாழ்வது மட்டுமே விருப்பமாக இருந்திருந்தால் பயனற்ற இந்தக் கால்நடைகள் அழிக்கப்பட்டிருக்கும். மூடநம்பிக்கையில் மிகவும் பிடிப்போடு இருந்ததால் உயிர் போகும் அளவுக்குப் பட்டினி கிடக்கும் இந்தியர்களால் கூட பசுவதை என்பது வெறுக்கப்பட்டது. இதனால்தான் இந்த கால்நடைகள் வாழ்ந்து கொண்டிருந்தன. பசுவை மனிதன் காப்பதால் கடவுள் மனிதனைக் காப்பாற்றுகிறான் என்று காந்தி கூட கூறினார்.

வாய் பேசாத விலங்கை வணங்குவதன் மூலம் மனிதன் தன்னைத் தானே தரம் தாழ்த்திக் கொள்வதாகக் கூறி முஸ்லீம்கள் இந்தச் செயலை வெறுத்தார்கள். கசாப்புக் கடைக்குச் செல்லும் வழியில் இந்துக்கோயில் முன் பசுமாடுகள் தலையைத் தொங்கப் போட்டுச் செல்வதும் திமிறுவதும் கண்டு அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள். இது போன்ற செய்கைகளால் ஏற்பட்ட கலவரங்களில் பல நூற்றாண்டுகளாக ஆயிரக்கணக்கான மனிதர்கள் மரண மடைந்து கசாப்பு செய்யப்பட்ட கால்நடைகளுடன் சேர்ந்து கொண்டார்கள்.

இந்தியாவை பிரிட்டிஷார் ஆளும் போது இந்த இரண்டு சமூகத்தினரும் சமநிலையில் இருக்கும்படி பார்த்துக் கொண்டார்கள். அதே சமயம் தங்களது ஆளுகையை எளிதாக்கிட இவர்களிடையே இருந்த முரண்பாடுகளையும் ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். இந்திய சுதந்திரத்திற்கு துவக்கத்தில் முயற்சி செய்தவர்கள் அறிவு ஜீவிகள்தான். இந்தப் பிரிவில் இருந்த இந்துக்களும் முஸ்லிம்களும் சமய வேறுபாடுகளை ஒதுக்கித் தள்ளி பொது லட்சியத்துக்காக ஒன்றுசேர்ந்து பணியாற்றினார்கள். விபரீதமாக இருந்தாலும் இந்த ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படுத்தியவர் காந்திதான்.

உலகிலேயே ஆன்மீகம் அதிகமுள்ள நாட்டில் சுதந்திரப் போராட்டம் என்பது மதரீதியிலான தியாகத்தையும் இணைத்துக் கொண்டதாக இருப்பது தவிர்க்க இயலாதது. காந்தியும் இதைச் செய்தார். மதச்சார்பான கறை எதுவும் இல்லாமல் சகிப்புத் தன்மையோடும் நேர்மையோடும் காந்தியைப் போல் வேறெவராலும் இருக்க முடியாது. தமது இயக்கத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் துணிச்சலுடன் முஸ்லீம்களை இணைத்துக் கொள்ளவே விரும்பினார். ஆனால் அவர் ஒரு இந்து. தமது வாழ்க்கையின் சாரமாகக் கடவுள் மீது ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்தார். தெரிந்தோ, தெரியாமலோ காந்தியின் காங்கிரஸ் கட்சி நடத்திய இயக்கத்தில் இந்து மதக்குரலும் சாயமும் படிந்தது. இது முஸ்லீம்களிடம் சந்தேகத்தை உருவாக்கியது.

*பிரிட்டிஷ் ஆட்சி அனுமதித்த மிகவும் குறைவான சலுகைகளைக் கூட தங்களது முஸ்லீம் எதிராளிகளுடன் பகிர்ந்து கொள்ள குறுகிய மனம் கொண்ட உள்ளூர் காங்கிரஸ் தலைவர்கள் மறுத்து விட்டார்கள். இது முஸ்லீம்களின் சந்தேகத்தை வலுப்படுத்தியது. இதனால் முஸ்லீம்கள் மனதில் ஒருவகை அச்சம் வளர்ந்தது. 'சுதந்திர இந்தியாவில், பெரும்பான்மையினரான இந்துக்கள் ராஜ்யத்தில், தாங்கள் அமுக்கப்படுவோம், ஒரு காலத்தில் முகலாய சக்ரவர்த்திகள் ஆட்சி செய்த பூமியில் எந்த அதிகாரமும் அற்ற சிறுபான்மை யினராக வாழ்வது சிரமம்' என்று அவர்கள் நினைத்தனர்.*

*இந்த அழிவிலிருந்து தப்பிக்கும் வழியாக இவர்கள் மனதில் தோன்றிய ஒரு வழிதான் துணைக்கண்டத்தில் தனியாக ஒரு முஸ்லீம் நாட்டை உருவாக்குவது என்பது. இந்திய முஸ்லீம்கள் அவர்களுக்கென்று சொந்தமான ஒரு நாட்டை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் முறைப்படி முதன் முதலில் உருவானது கேம்பிரிட்ஜ் நகரின் ஹம்பர்ஸ்டோன் சாலையில் 3ஆம் எண் கொண்ட முக்கியத்துவம் பெறாத ஒரு ஆங்கிலேயரின் குடிசை வீட்டில் தான். தட்டச்சுக்குப் பயன்படும் காகிதத்தில் நாலரை பக்கத்தில் இந்தத் திட்டம் உருவானது. இதனை உருவாக்கியவர் நாற்பது வயதான இந்திய முஸ்லீம் சமூகத்தின் ஒரு பட்டதாரி மாணவர். அவரது பெயர் ரஹமத் அலி. அவரது உத்தேச திட்டத்தின் தலைப்பில் இடப்பட்டிருந்த தேதி 28 ஜனவரி 1933. இந்தியா ஒரே நாடு என்ற எண்ணம் 'அறிவுக்குப் பொருந்தாத ஒரு பொய்' என்று அலி எழுதினார். முஸ்லீம்கள் அதிகம் வாழ்கின்ற பஞ்சாப், காஷ்மீர், சிந்து, ஃபிரண்டைர், பலுச்சிஸ்தான் என்ற இந்தியாவின் வடமேற்கு மாகாணங் களிலிருந்து முஸ்லீம் நாடு உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் கோரினார். அவரது புதிய நாட்டுக்கான பெயரைக்கூட அவர் முன் மொழிந்திருந்தார். புதிய நாட்டில் இடம் பெற வேண்டிய மாகாணங்களின் பெயர்களை உள்ளடக் கியதாக அந்தப் பெயர் இருந்தது. அதுதான் 'பாகிஸ்தான் - புனிதர்களின் பூமி.'*

*நகைப்புக்குரிய உருவகமாக இருந்தாலும், ஆவேசத்துடன் அவரது திட்டத்தை இப்படி முடித்திருந்தார். 'இந்து தேசியம் என்ற சிலுவையில் நம்மை நாமே அறைந்து கொள்ளக் கூடாது.'*

*(பஞ்சாபிலிருந்து PA காஷ்மீரிலிருந்து KI சிந்துவிலிருந்து S பலுச்சிஸ் தானிலிருந்து TAN என்று சேர்த்து பாகிஸ்தான் (Pa-ki-s-tan) என்று பெயர் உருவாக்கப்பட்டது - மொ-ர்)*

*அவரது யோசனை கூடியிருந்தவர்களால் ஏற்கப்பட்டது. முஸ்லீம்கள் நாடு என்ற எண்ணத்தை ஈடேற்ற குவிமையமானது முஸ்லீம் லீக். ரஹமத் அலியின் யோசனை இந்தியாவில் உள்ள முஸ்லீம் மக்களிடையே படிப்படியாக ஒரு பிடிப்பை ஏற்படுத்தியது. முஸ்லீம் எதிராளிகளுக்கு எந்தச் சலுகைகளையும் அளிப்பதில்லை என்று தீர்மானித்த காங்கிரசின் முக்கியமான இந்துத் தலைவர்களின் மூர்க்கமான செயல்பாடுகளும் பிரிவினை எண்ணத்தை வளர்ப்பதாக இருந்தது.*

*காந்தி பிராயச்சித்த யாத்திரையைத் துவங்குவதற்கு 5 மாதங்களுக்கு முன்னால், 1946 ஆகஸ்ட் 16இல் இந்தியாவின் இந்து முஸ்லீம் சமூகங்களுக் கிடையேயான போட்டி வன்முறையாக வெடிப்பதற்குரிய அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. சம்பவம் நடந்த இடம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இரண்டாவது பெரிய நகரமான கல்கத்தா. வன்முறைகளுக்கும் பயங்கரவாதத்துக்கும் பெயர்*

போன பெரு நகரமாக அது இருந்தது. கல்கத்தாவின் இருட்டறை பற்றிய கதையால் ஆங்கிலேயர்களின் பல தலைமுறையினர் இந்தியாவின் கொடூரத்தை விளக்குவதற்கு கல்கத்தா என்ற சொல்லையே இருபொருளில் பயன்படுத்தினர்.

நரகம் என்றால் கல்கத்தாவின் குடிசைப் பகுதியில் தீண்டத் தகாத ஒருவராகப் பிறப்பதுதான் என்று கல்கத்தாவாசி ஒருவர் தெரிவித்தார். உலகத்திலேயே பெரும் எண்ணிக்கையில் மக்கள் நெருக்கமாக வாழுகின்ற குடிசைப்பகுதிகளாக இவை இருந்தன. ஈடற்ற துயரங்களின் முடைநாற்றக் குட்டைகளாக இருந்தப் பகுதிகளில் ஒழுங்கு முறையோ காரணமோ இல்லாமல் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களின் குடியிருப்புகள் பின்னிப் பிணைந்திருந்தன.

ஆகஸ்ட் 16 விடியற்காலையில் இந்தக் குடிசைகளிலிருந்த முஸ்லீம் கும்பல் மதவெறி கோஷங்களை எழுப்பிக் கொண்டு வெளிக்கிளம்பியது. மனித மண்டை ஓட்டைப் பிளக்கத் தகுதியான குண்டாந்தடிகள், இரும்புக் குழாய்கள், மண்வெட்டிகள் போன்ற ஆயுதங்கள் அவர்களிடம் இருந்தன. ஆகஸ்ட் 16 'நேரடி நடவடிக்கை நாள்' என்ற முஸ்லீம் லீக் விடுத்த அறைகூவலை ஏற்றே அவர்கள் வந்தார்கள். 'தங்களுக்கென்று' பாகிஸ்தானைப் பெற தேவைப் பட்டால் 'நேரடி நடவடிக்கையில்' இறங்கவும் இந்தியாவின் முஸ்லீம்கள் தயாராகவே இருக்கிறார்கள் என்பதை பிரிட்டனுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் உணர்த்துவதற்காகவே இந்த அறைகூவல்.

தங்கள் வழியில் தென்பட்ட இந்துக்கள் யாராயிருந்தாலும் அவர்களைக் கொடுமையாகத் தாக்கிக் கூழாக்கினர். அந்த உடல்களை நகரின் திறந்த நிலை சாக்கடைகளில் அமுக்கினர் இதைக் கண்டு அச்சம் கொண்ட காவல் துறையினர் ஏதும் செய்யாமல் அங்கிருந்து மறைந்து விட்டனர். நகரின் பல பகுதிகளிலிருந்து விண்ணில் எழுந்த புகைமூட்டம் உயர்ந்து நிற்கும் கருப்புத் தூண்கள் போல் தோன்றின. இந்துக்களின் கடை வீதிகள் முழுதும் எரிக்கப் பட்டதன் விளைவு இது.

இதையடுத்து பாதுகாப்பற்ற முஸ்லீம்களை கசாப்பு செய்ய தங்கள் குடியிருப்புகளிலிருந்து இந்து மதக் கும்பல் புயல்போல் கிளம்பியது. கல்கத்தா நகரின் வன்முறை வரலாற்றிலேயே இப்படி ஒரு சம்பவம் இதற்கு முன் நிகழ்ந்ததில்லை; 24 மணி நேரமும் மனிதர்களின் கோரத்தாண்டவம் நடந்தது. நீர் உறிஞ்சிய மரக்கட்டைகள் போல உப்பிய சடலங்கள் ஹூக்ளி ஆற்றில் மிதந்து கடலை நோக்கிச் சென்றன. மற்ற உடல்கள் கொடூரமாக சிதைக்கப்பட்டு நகரின் வீதிகளில் குப்பைகள் போல் சிதறிக் கிடந்தன. எங்கு பார்த்தாலும் பலவீனர்களும் ஆதரவற்றவர்களுமே அதிகம் பாதிக்கப்பட் டார்கள். நாற்சந்தி ஒன்றில் அடித்துக் கொல்லப்பட்ட முஸ்லீம் கூலிகளின் உடல்கள் வரிசையாகக் கிடந்தன. ரிக்ஷா கம்பங்களுக்கிடையே இருந்த முஸ்லீம்களைக் கண்ட இந்துக்கும்பல் இந்தச் செயலை செய்தது. கொலைகள் நடந்து முடிந்திருந்த வேளையில் கல்கத்தா நகரம் வல்லூறுகளால் நிறைந்திருந்தது. அவ லட்சணமான அந்த சாம்பல் நிறக் கழுகுகள் வானத்தில் வட்டமிட்டன. நகரில் இறந்து கிடந்த 6000 உடல்களைக் கொத்திக் கிழிக்க அவை கீழிறங்கி வந்தன.

கல்கத்தாவின் கோரப்படுகொலைகள் என்று பின்னாளில் அறியப்பட்ட இந்த சம்பவம் நவகாளியில் ரத்த ஆறு ஓடக் காரணமானது. இங்கே தான் காந்தி

இருந்தார். மேலும் பீகாரிலும், இதற்கு நேர் எதிரில் துணைக் கண்டத்தின் மற்றொரு பகுதியாக இருந்த பம்பாயிலும் ரத்தக் களரிகள் நிகழ்ந்தன.

இந்தச் சம்பவங்கள் இந்திய வரலாற்றின் போக்கையே மாற்றிவிட்டன. தங்களுக்குத் தனிநாடு என்பது மறுக்கப்பட்டால், இந்தியாவைப் புரட்டி யெடுக்கும் கொந்தளிப்பு ஏற்படும் என்று பல ஆண்டுகளாக முஸ்லீம்கள் விடுத்து வந்த எச்சரிக்கைகளும் மிரட்டல்களும் இப்போது அச்சம் விளைக்கும் உண்மையாயின. திடீரென்று ஏற்பட்ட கோரக் காட்சியால் இந்தியா பாதிக்கப்பட்டது. அந்த உள்நாட்டு யுத்தம்தான் காந்தியை சோர்வடையச் செய்து நவகாளியின் காடுகளில் பயணம் மேற்கொள்ள அனுப்பியது.

கால்நூற்றாண்டுக் காலமாக காந்தியின் பிரதான முஸ்லீம் எதிரியும், அழுத்தமும் அறிவுத்திறனுமுள்ள வழக்கறிஞருமான மற்றொரு மனிதருக்கு, இந்தியாவைக் கூறுபோட இந்தச் சந்தர்ப்பம் ஒரு கருவியாக இருந்தது. அவரது சொந்த மக்களால் எழுதப்படுவது தவிர வேறெந்த வரலாறும் முகமது அலி ஜின்னாவின் சாதனைகளுக்கு உயர்ந்த முக்கியத்துவத்தை ஒரு போதும் அளிக்கப் போவதில்லை. இருப்பினும் காந்தியை விடவும் வேறெவரை விடவும் இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சாவி அவரிடம் தான் இருந்தது. விக்டோரியா மகாராணியின் கொள்ளுப்பேரன் இந்தியாவுக்கு வரும் போது உறுதியான, சமரசமற்ற முஸ்லீம் மக்களின் பாதுகாவலரான இவருடன்தான் பேச்சு நடத்த வேண்டியிருக்கும்.

1946 ஆகஸ்ட் மாதத்தில் பம்பாய்க்கு வெளிப்புறத்தில் ஒரு கூடாரத்தில் இருந்துதான் நேரடி நடவடிக்கை நாள் என்பதன் பொருள் என்ன என்பதை முஸ்லீம் லீகில் இருந்த அவரது ஆதரவாளர்களுக்கு ஜின்னா விளக்கினார். காங்கிரஸ் கட்சியினர் யுத்தத்தை விரும்பினால் இந்தியாவில் உள்ள முஸ்லீம்கள் 'அவர்களின் விருப்பத்தைத் தயக்கமின்றி ஏற்பார்கள்' என்று ஜின்னா அறிவித்தார்.

வெளிறிய உதடுகளில் வறட்டுப் புன்னகையுடனும், அழுத்தப்பட்ட உணர்வு களைப் பிரதிபலிக்கும் வகையில் ஒளி சிந்தும் கூர்மையான கண்களுடனும் அந்த நாளில் ஜின்னா காங்கிரசுக்கும் பிரிட்டிஷாருக்கும் அறைகூவல் விடுத்தார்.

'நாங்கள் இந்தியாவைப் பிரிப்போம் அல்லது இந்தியாவை அழிப்போம்' என்று அவர் சபதமெடுத்தார்.

மூன்று

# 'இந்தியாவைக் கடவுளிடம் விடுங்கள்'

## *லண்டன், ஜனவரி 1947*

*'கவனியுங்கள்! ஒரு பயங்கரமான சம்பவம் நடந்திருக்கிறது' லூயி மவுண்ட்பேட்டன் கூறினார்.*

*பக்கிங்காம் அரண்மனையின் கூட்ட அறையில் நெருக்கமான இரண்டு மனிதர்கள் தனிமையில் அமர்ந்திருந்தனர். இதுபோன்ற நேரங்களில் அவர்களிடையே சம்பிரதாய முறைகள் ஏதும் இருக்காது. பழைய பள்ளி நண்பர்கள் போல அவர்கள் ஒருவர் பக்கத்தில் ஒருவராக அமர்ந்து கொண்டு தேநீர் அருந்தினார்கள். இருப்பினும் மவுண்ட்பேட்டனின் இன்றைய உரையாடல் தொனியில் நுட்பமான வேறுபாடு காணப்பட்டது. அவர் கடைசியாக முறையீடு செய்ய, எஞ்சிய நீதிமன்றமாக அவரது மைத்துனர் ஆறாம் ஜார்ஜ் மன்னர் இருந்தார். இந்தியாவுடனான பிரிட்டனின் உறவுகளை வெட்டிய மனிதர் என்ற அவப்பெயர் வருவதை மன்னரால் தவிர்த்துவிட முடியும் என்ற லேசான நம்பிக்கை அவருக்கு இருந்தது. மன்னர்தான் இந்தியாவின் சக்ரவர்த்தி என்பதால் மவுண்ட்பேட்டனை வைஸ்ராயாக நியமிப்பது பற்றி இறுதி முடிவு எடுக்க அவருக்கு அதிகாரம் இருந்தது. ஆனால் அந்த இளம் அட்மிரல் கேட்க விரும்பிய வார்த்தையாக அவரது பதில் அமையவில்லை.*

*கூச்சமுள்ள புன்னகையுடன் மன்னர் பதிலளித்தார் 'நான் அறிவேன். ஏற்கெனவே பிரதமர் என்னைச் சந்தித்து விட்டார். நானும் ஒப்புக் கொண்டு விட்டேன்'*

*'ஒப்புக் கொண்டு விட்டீர்களா? இது பற்றி, நீங்கள் உண்மையிலேயே நன்றாக யோசித்தீர்களா?' மவுண்ட்பேட்டன் வினவினார்.*

*'ஆம்! இது பற்றி மிகவும் கவனமாக சிந்தித்தேன்' மன்னர் மிகுந்த உற்சாகத்துடன் பதிலளித்தார்.*

*'இதோ பாருங்கள்! இது மிகவும் ஆபத்தானது. அங்கே ஒரு ஒப்பந்தம் எந்த வழியில் ஏற்படும் என்பதை எவராலும் முன் கூட்டியே சொல்ல முடியாது. ஏறத்தாழ இது தீர்வு காண இயலாதப் பிரச்சனை. நான் உங்கள் மைத்துனர். அங்கே நான் தோற்றுப் போனால், கேலிக்குரியவகையில் ஏதாவது செய்ய நேர்ந்தால் அது மிகவும் மோசமாக உங்களைப் பாதிக்கும்' மவுண்ட்பேட்டன் கூறினார்.*

'ஆஹாங்.... இப்படிச் சிந்தியுங்கள். நீங்கள் வெற்றி பெற்று விட்டால் மன்னருக்கு அது எவ்வளவு நல்ல பெயரை ஏற்படுத்தும்!' மன்னர் கூறினார்.

பெருமூச்சு விட்டபடி தனது நாற்காலியில் சாய்ந்து சரிந்த மவுண்ட் பேட்டன், 'சரி... நீங்கள் மிகவும் நம்பிக்கையுடையவர்தான்' என்றார்.

அந்தச் சிறிய அறையில் அவரது நாற்காலிக்கு எதிரே அமரும் இன்னொருவரை நினைக்காமல் அவரால் உட்கார முடிவதே இல்லை. அவர் இன்னொரு மைத்துனர்; நெருங்கிய நண்பர்; வெஸ்ட்மினிஸ்டரில் புனித மார்கரெட் தேவாலயத்தில் நடந்த அவரது திருமணத்தின் போது அவருக்கு அருகில் நின்றிருந்தார். மன்னராகியிருக்க வேண்டிய டேவிட் இப்போது வேல்ஸ் இளவரசராக இருந்தார். இளம் வயதிலிருந்தே இவர்கள் நெருக்க மானவர்கள். 1936இல் எட்டாம் எட்வர்டாக இருந்த டேவிட், எதற்காகப் பயிற்சி பெற்றாரோ அந்த அரச பதவியை துறந்தார். தாம் காதலித்த 'டிக்கி' என்ற பெண் இல்லாமல் ஆட்சிப் பொறுப்பேற்கத் தயாரில்லை என்று கூறி விட்டார். மன்னரின் நண்பரும் துயரத்தில் எப்போதும் ஆறுதல் கூறுபவருமான மவுண்ட் பேட்டன் அரண்மனையின் முற்றத்தில் வளைய வந்து கொண்டிருந்தார்.

எவ்வளவு முரண்பாடு! மவுண்ட்பேட்டன் சிந்தித்தார். எந்த மண்ணில் டேவிடின் மெய்க்காப்பாளராக முதலில் அடியெடுத்து வைத்தாரோ அதைத்தான் இப்போது விடுவிக்கச் செல்கிறார். அன்று 1921 நவம்பர் 17 இளம் வயது மவுண்ட்பேட்டன் அன்றிரவு தனது நாட்குறிப்பில் குறித்துக் கொண்டார். 'கேள்விப்பட்டிருந்த, கனவு கண்டிருந்த, படித்தறிந்திருந்தது போலவே இந்திய நாடு இருந்தது.' சிறப்பு வாய்ந்த அரச பயணத்தின் போது அவரது இளமைக்கால எதிர்பார்ப்புகளுக்கு ஏமாற்றம் அளிப்பதாக எதுவும் அமைந்து விடவில்லை. அப்போது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உச்சகட்டத்தில் இருந்தது. சாம்ராஜ்ய அரியணைக்கு வாரிசான ஷாசதா சாகிபுக்கும் அவரது குழுவினருக்கும் செய்யப்படும் விழாவைப் போல் வேறு எந்த விழாவும் இந்த அளவுக்கு ஆடம்பரமாகவோ விமரிசையாகவோ இருக்காது. வைஸ்ராய்க்கான வெள்ளை மற்றும் தங்க நிற ரயிலில் அவர்கள் பயணம் செய்தனர் அணிவகுப்புகள், போலோ விளையாட்டுகள், புலிவேட்டைகள், நிலவொளி யில் யானை சவாரிகள், இரவு விருந்துகள், பிரிட்டிஷ் மன்னருக்கு நெருங்கிய கூட்டாளிகளான இந்திய இளவரசர்கள் ஏற்பாடு செய்திருந்த பிரமாண்டமான வரவேற்புகள் என விரிந்திருந்தது அந்தப் பயணம். இந்தியாவிலிருந்து புறப்படும் போது மவுண்ட்பேட்டனின் எண்ணம் இப்படித்தான் இருந்தது 'உலகிலேயே இந்தியா ஒரு அற்புதமான நாடு. அதன் வைஸ்ராயாக இருப்பதும் உலகிலேயே மிகச்சிறப்பானதாகும்.'

இன்னொரு மைத்துனர் உறுதி செய்து விட்டதால் இப்போது அந்த 'மிகச் சிறந்த வைஸ்ராய் பதவி' மவுண்ட்பேட்டனுக்கே கிடைத்துள்ளது.

பக்கிங்காம் அரண்மனையின் கூட்ட அறையில் சிறிது நேரம் அமைதி குடி கொண்டது. அவரது மைத்துனரின் மனநிலையிலும் ஒரு மாற்றம் இருப்பதை லூயி மவுண்ட்பேட்டன் உணர்ந்தார்.

'இது மிகவும் மோசம்' மன்னர் சன்னமான, கவலை தோய்ந்த குரலில் கூறினார். 'தென்கிழக்கு ஆசியாவில் நீங்கள் போர் நடத்திக் கொண்டிருக்கும் போது உங்களைப் பார்க்க வேண்டும், பின்னர் அங்கிருந்து இந்தியா செல்ல

வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் வின்ஸ்டன் சர்ச்சில் அது நடக்காமல் தடுத்து விட்டார். போருக்குப் பிறகாவது இந்தியாவுக்குச் செல்லலாம் என்று நம்பியிருந்தேன். இப்போது அதுவும் நடக்காது என்று அஞ்சுகிறேன்.'

மன்னர் மேலும் தொடர்ந்தார், 'இந்தியாவுக்குச் செல்லாமலேயே அந்நாட்டின் சக்ரவர்த்தியாக நான் முடிசூட்டிக் கொண்டேன், இப்போது லண்டனில் இருந்தபடியே அந்தப் பட்டத்தை இழக்கவும் போகிறேன். இது எவ்வளவு துயரமானது!'

உண்மையில், பழம்பெரும் நாடான இந்தியாவில் கால் பதிக்காமலேயே ஆறாம் ஜார்ஜ் மன்னர் இறக்க நேரிடலாம். புலிவேட்டை, வெள்ளியும் தங்கமும் தரித்து பிளிறுகின்ற யானைகளின் அணிவகுப்பு, ஆபரணங்கள் அணிந்த மகாராஜாக்கள், வரிசையில் நின்று தலைவணங்குதல் போன்ற அனுபவங்கள் அவருக்கு ஒரு போதும் கிடைக்கப் போவதில்லை.

போரின் நிழல்களில் எதிர்பாராமல் தொடங்கி, கருவுற்று, முதிர்ச்சியடைந்த சாம்ராஜ்யம், இப்போது போருக்குப் பிந்தைய சோஷலிஸ்டுகளின் இங்கிலாந்தில் சிக்கனம் கடைப் பிடிக்கப் படுகிறது. வெற்றிப் பெருமிதம் கொண்ட மேசையில் ரொட்டியின் துண்டுகள் தான் மன்னருக்குக் கிடைத்தன. கடவுளின் கருணையால் 1937 மே மாதம் ஒரு நாள் காலையில் யார்க் நகரின் பிரபுவான ஆல்பர்ட் இளவரசர் ஆறாம் ஜார்ஜ் மன்னராக காண்டர்பரி பேராயரால் அறிவிக்கப்பட்டார். அப்போது கிரேட்பிரிட்டன், அயர்லாந்து, கடல்களுக்கு அப்பாலிருந்த பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் ஆகியவற்றுக்கு மன்னரானார். சமயத்தின் பாதுகாவலராகவும் இந்தியாவுக்கு சக்கரவர்த்தியாகவும் அவர் இருந்தார். உலகில் மொத்தமுள்ள 52 மிலியன் (5 கோடியே 20 லட்சம்) சதுர மைல் நிலப்பரப்பில் 16 மிலியன் (ஒரு கோடியே 60 லட்சம்) சதுரமைல் பரப்பு ஏதாவது ஒரு வகையில் அவரது அரசாட்சியுடன் தொடர்புள்ளதாய் இருந்தது.

ஆறாம் ஜார்ஜ் மன்னரின் வரலாற்றுச் சாதனையாக பின்னாளில் எது பேசப்படப்போகிறது என்பது அந்தக் கூட்ட அறையில் இப்போது சோகமாகப் பிரதிபலித்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைத் துண்டாடிய அரசர் என்று அவர் வரலாற்றில் நினைவு கூரப்படலாம். ரோமப் பேரரசர்கள், மகா அலெக்சாண்டர், ஜெங்கிஸ்கான், காலிஃபாக்கள், நெப்போலியன் ஆகிய எவரும் ஆண்டிராத எல்லையற்ற சாம்ராஜ்யத்தின் முடி மன்னராக இருந்தவர், ஐரோப்பாவில் உள்ள ஒரு தீவுக்கு மன்னர் என்ற பெயருடன் தான் இறக்கப் போகிறார்.

'ஜிஆர்ஐ (GRI) என்பதிலிருந்து "ஐ"(I) என்பதை நான் நீக்கப் போகிறேன் என்பதை நான் அறிவேன். (GRI என்பது Georgius Rex Imperator என்பதன் சுருக்கமாகும். ஜார்ஜ் மன்னர் மற்றும் பேரரசர் என்பது இதன் பொருள். இதிலிருந்து ஐ Imperator பேரரசர் என்பது விலகுவதையே "I" எழுத்தை நீக்கப் போவதாக ஆறாம் ஜார்ஜ் மன்னர் கூறினார் - மொ-ர்) சாம்ராஜ்யத்தின் மன்னர் என்றப் பட்டத்தையும் நான் துறக்கப்போகிறேன். ஆனால் இந்தியாவுடனான எல்லா உறவுகளும் துண்டிக்கப்பட்டுவிட்டால் நான் மிகவும் கவலை கொள்வேன்' மன்னர் கூறினார்.

சாம்ராஜ்யக் கனவு மங்கி மறைந்து வருகிறது என்பதை ஆறாம் ஜார்ஜ் மன்னர் நன்றாகவே அறிந்திருந்தார். ஆனால் நவீன காலத்துக்குப் பொருத்தமான புதிய வடிவத்தில் இந்தியாவுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போனால், அங்கு

செய்த சாதனைகள், அதன் மூலம் ஈட்டப்பட்டப் புகழ், எல்லாம் மறைந்து போகும். அது மிகவும் வேதனை அல்லவா!

'காமன்வெல்த் அமைப்புக்கு எதிராக சுதந்திர இந்தியா திரும்பினால் அது மிகவும் மோசமானதாகி விடும்' என்று மன்னர் கருதினார்.

ஆறாம் ஜார்ஜின் நம்பிக்கைகள் நிறைவேற வேண்டுமானால் காமன்வெல்த் அமைப்பால்தான் அதற்குரிய கட்டமைப்பை உருவாக்க முடியும். சுதந்திர நாடுகளின் பல இனக் கூட்டு சபையாக அது பிரிட்டனின் தலைமையில் இருக்கும். பிரிட்டனுடன் பொதுவான பாரம்பரியங்கள், பொதுவான கடந்த காலங்கள், பொதுவான அடையாளபூர்வமான உறவுகள் ஆகியவற்றைக் கொண்ட காமன் வெல்த், உலக நடப்புகளில் பெரும் செல்வாக்கு செலுத்த முடியும். இந்த அமைப்பின் அச்சாக பிரிட்டன் இருப்பதால், ஒரு காலத்தில் பிரிட்டன் பெற்றிருந்த ஏகாதிபத்தியக் குரலின் எதிரொலியாக உலக சபையில் தொடர்ந்து பேச முடியும். லண்டன் லண்டனாகவே நீடிக்கும்; உலகின் கலாசார, ஆன்மீக, நிதியாதார, வணிக மையமாக அது நீடிக்கும். ஏகாதிபத்திய சாரம் குறைந்து போகலாம்; ஆனால் இங்கிலிஷ் கால்வாயின் மறுபக்கத்தில் உள்ள மற்ற நாடுகளிலிருந்து ஆறாம் ஜார்ஜ் மன்னரின் தீவு நாடு வேறுபட்டது என்ற தன்மை தொடரும்.

இந்த எண்ணம் ஈடேற வேண்டுமானால் காமன்வெல்த் அமைப்புக்குள் இந்தியா இருக்க வேண்டியது அவசியம். இந்தியா இதில் சேர மறுத்தால் வரும் ஆண்டுகளில் சுதந்திரம் அடைய விருக்கின்ற ஆஃப்ரோ - ஆசிய நாடுகளும் ஏறக்குறைய இதையே பின்பற்றுவது நிச்சயம். அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் காமன்வெல்த் என்பது வெறுமனே வெள்ளையர்கள் வாழும் நாடுகளின் கூட்டமைப்பாகச் சுருங்கிவிடும்.

நீண்ட காலமாக ஏகாதிபத்திய எதிர்ப்பு பாரம்பர்யம் கொண்ட பிரதமரும் அவரது தொழிலாளர் கட்சியும் ஆறாம் ஜார்ஜ் மன்னரின் விருப்பங்களில் பங்கேற்கவில்லை. காமன் வெல்த் அமைப்பில் இந்தியா தொடர்ந்திருக்க முயற்சி எதையும் செய்யப் போவதாகக் கூட மவுண்ட்பேட்டனிடம் அட்லி கூற வில்லை.

அரசியல் சட்டப்படியான ஒரு மன்னர் என்பதால் ஆறாம் ஜார்ஜ் தனது விருப்பங்களை நிறைவேற்றத் தாமாக முன்வந்து எதையும் செய்ய முடியாது. இருப்பினும் அவரது மைத்துனர், ஏதாவது செய்ய முடியும். லூயி மவுண்ட் பேட்டன் மன்னரின் விருப்பங்களை ஆர்வமுடன் பகிர்ந்து கொண்டார். பழைய சாம்ராஜ்யத்தில் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த வேறொருவரும் அவரைப் போல் விரிவாகப் பயணம் செய்ததில்லை. சாம்ராஜ்யம் விரைவில் அழியப் போவதை அவரது அறிவு புரிந்து கொண்டது; ஏற்றுக் கொண்டது. ஆனால் அந்த நினைவால் அவரது இதயம் வருந்தியது.

பக்கிங்காம் அரண்மனையின் கூட்ட அறையில் அமர்ந்திருந்த விக்டோரியா வின் இரண்டு கொள்ளுப் பேரன்களும் தனிப்பட்ட முறையில் ஒரு முடிவுக்கு வந்தார்கள். காமன்வெல்த்தின் எதிர்காலம் பற்றிய அவர்களின் பொதுவான விருப்பத்தை நிறைவேற்றும் பொறுப்பாளரானார் லூயி மவுண்ட்பேட்டன்.

வாய்ப்பிருந்தால் ஒன்று பட்ட அல்லது பிளவுபட்ட சுதந்திர இந்தியாவைக் காமன் வெல்த்துக்குள் வைத்துக் கொள்வதை தமது நிபந்தனைகளில் ஒன்றாக சேர்த்துக் கொள்ளுமாறு ஓரிரு நாட்களில் அட்லியிடம் மவுண்ட்பேட்டன் வலியுறுத்தக்கூடும். இந்தியாவுக்கும் தனது மைத்துனரின் அரசுக்கும்

இடையேயான தொடர்பைப் பராமரிப்பதை விடப் பெரிதான சிந்தனையோ, செயல் திட்டமோ தந்திரமோ இந்தியாவின் புதிய வைஸ்ராய்க்கு அடுத்த சில வாரங்களில் இருக்க இயலாது.

*

உண்மையில் இந்தியாவின் வைஸ்ராய் என்ற பெருமை மிகு பதவியை வகிக்க இயற்கையிலேயே பொருத்தமானவராக லூயி மவுண்ட்பேட்டனைத் தவிர வேறெவரையும் காண முடியாது. அவருக்குப் பெயர் சூட்டும் விழா நடந்த போதே அவரது முதலாவது உணர்வு வெளிப்பட்டது. அவரது கொள்ளுப் பாட்டியின் ராஜகம்பீரமான மூக்கிலிருந்து தனது பிஞ்சுக் கரங்களை ஆட்டி கண்ணாடியைத் தள்ளி விட்டு விட்டார் மவுண்ட்பேட்டன்.

அவரது குடும்ப உறவைப் பார்த்தால் பேரரசர் சார்லிமேனிலிருந்து (Charlemagne) தாய்வழி உறவு தொடங்குகிறது. இரண்டாம் கெய்சர் வில்ஹெம் (Kaiser Wilhelm II), இரண்டாம் ஜார் நிக்கோலஸ் (Tsar Nicholas II), ஸ்பெயின் நாட்டின் பதின்மூன்றாம் அல்ஃபோன்சா (Alfonso XIII), ருமேனியாவின் முதலாம் ஃபெர்டினான்ட் (Ferdinand I), ஸ்வீடனின் ஆறாம் குஸ்டாவ் (Gustav VI), கிரீஸ் நாட்டின் முதலாம் கான்ஸ்டான்டின் (Constantine I), நார்வேயின் ஏழாம் ஹாகோன் (Haakon VII), யுகோஸ்லாவியாவின் முதலாம் அலெக்சாண்டர் (Alexander I) ஆகியோரோடு அவருக்கு ரத்த சம்பந்தமாகவோ திருமண உறவாலோ தொடர்பு இருந்தது. மவுண்ட்பேட்டனுக்கு ஐரோப்பா வின் பிரச்சனை என்பது குடும்பப் பிரச்சனையாகவே இருந்தது.

முதல் உலகப்போர் முடிவடைந்தபோது மவுண்ட்பேட்டனுக்கு பதினெட்டு வயதானது. அப்போதெல்லாம் அரச குடும்பங்களில் இருந்த எல்லோருக்கும் அரசாட்சி கிடைக்க முடியாத நிலை இருந்தது. விக்டோரியாவின் அன்புக்குரிய பேத்தியான ஹெஸ்ஸி இளவரசி விக்டோரியாவுக்கும் பேட்டன்பர்கின் இளவரசரும் அவரது மாமனுமான இளவரசர் லூயியிக்கும் நான்காவது குழந்தையாகப் பிறந்த அவர், அரச குடும்ப அனுபவங்களை பழங்கதையாக மட்டுமே சுவைத்தார். இளமைப்பருவத்தில் அவரின் அன்புக்குரிய மைத்துனர்களுடன் கோடைகாலத்தில் அரண்மனைகளில் விளையாடும் போது இதைக் கேட்டறிந்தார். இந்த இனிமையான கோடைகால நினைவுகள் அவர் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தன; விருந்துக்கு வந்த ஒவ்வொருவரும் முடிசூடிக் கொண்டிருக்க, வின்ட்சர் கோட்டையின் புல்வெளிப்பரப்பில் நடந்த தேநீர் விருந்துகள்; ஜாரின் உல்லாசப் படகில் சென்ற கடல் பயணங்கள்; ஹிமோஃபிலியா நோயால் பாதிக்கப்பட்ட மைத்துனர் ஜாரோவிச் (Tsarevitch) அவரது தங்கை கிரேண்ட் டச்சஸ்மேரி ஆகியோருடன் செயின்ட் பீட்டர்ஸ் பர்கைச் சுற்றியுள்ள வனப்பகுதிகளில் செய்த சவாரிகள் ஆகியவை பசுமையாக நினைவில் இருந்தன. கிரேண்ட் டச்சஸ் மேரியை மவுண்ட்பேட்டன் காதலித்தார்.

இந்தப் பின்னணியில், அழிந்து வரும் அரச குடும்பத்தின் விழாக்களில் அழகுமிக்க ஆடம்பர உடைகளுடன் கலந்து கொண்டும் மன்னரின் கீழ் ஒப்புக்கு ஒரு வேலையைப் பெற்றுக்கொண்டும் கணிசமான வருவாயுடன் சுகமாக வாழ்க்கையை மவுண்ட்பேட்டன் அனுபவித்திருக்கலாம். ஆனால்

அவர் மிகவும் வித்தியாசமான ஒரு பணியைத் தெரிவு செய்தார். அதனால் தான் இந்தக் குளிர்காலக் காலையில் அவர் மெச்சத் தக்க பணியின் உச்சத்தில் நின்றார்.

1943 இலையுதிர் காலத்தில் மவுண்ட்பேட்டனுக்கு 43 வயதே ஆகியிருந்த நேரத்தில், 'இளமையும் துடிப்பும் மிக்க ஒருவரை'த் தேடிக் கொண்டிருந்த வின்ஸ்டன் சர்ச்சில், தென்கிழக்கு ஆசிய கூட்டுப் படையின் உயர் தளபதியாக அவரை நியமித்தார். இந்தப் படைப்பிரிவின் ஒட்டுமொத்த அதிகாரமும் பொறுப்பும் இந்த இளைஞரின் தோள்களில்தான் சுமத்தப்பட்டன. இவருக்கு இணையாக இருந்த மற்றொரு அதிகாரி ட்வைட் ஐசனோவர் (Dwight Eisenhower) மட்டுமே. பரந்து விரிந்த ஆசியாவில் இருந்த நூற்று இருபத்தெட்டு மில்லியன் (12 கோடியே 80 லட்சம்) மக்கள் இவரது பொறுப்பில் தான் இருந்தனர். இந்தப் படைப் பிரிவு அமைக்கப்பட்ட காலத்தில் இதற்கு 'வெற்றிகளோ முன்னுரிமைப் பணிகளோ இல்லை; கடுமையான கட்டுப்பாடு, வருத்தும் பருவகாலம், பயங்கர எதிரி, மோசமான தோல்விகள் ஆகியவையே இருந்தன.'

அவருக்குக் கீழ் பணியாற்றியவர்களில் பலர் அவரை விட 20 வயது மூத்தவர்கள், பதவியிலும் மூன்று அல்லது நான்கு படி உயர்ந்தவர்கள். தனக்கிருந்த அரச குடும்ப உறவைப் பயன்படுத்தி விருந்து நிகழ்ச்சி உடையை விட்டு கடற்படை அதிகாரியின் சீருடையை அணிந்தும், கஃபே டி பாரிசின் நடன அரங்கைத் தற்காலிகமாகக் கைவிட்டுப் போர்க்களம் புகுந்தும் இருக்கும் விளையாட்டுப் பிள்ளை என்று சிலர் கருதினர்.

போர்முனைக்குத் தாமே தனிப்பட்ட முறையில் பயணம் செய்து படைவீரர்களின் மனோதிடத்தை மீட்டெடுத்தார்; பர்மாவின் கொடுமையான மழைநாட்களிலும் போரிடுமாறு நிர்ப்பந்தம் செய்ததன் மூலம் ஜெனரல்கள் மீதான தனது அதிகாரத்தை உறுதி செய்தார்; பாராட்டியும் பயமுறுத்தியும் மனம் மயக்கியும் லண்டனிலிருந்தும் வாஷிங்டனிலிருந்தும் தனது மேலதிகாரிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய சிறு அளவு பொருளையும் கூட பெற்றுக் கொண்டார்.

ஒரு காலத்தில் ஒழுங்கின்றியும் மனோதிடம் இன்றியும் இருந்த அவரது படை 1945இல் ஜப்பான் ராணுவத்தை முறியடித்து எப்போதும் பாராட்டும் படியான மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. 2000 மைல்களுக்கு அப்பாலிருந்த துறைமுகங்களிலிருந்து 2,50,000 படைவீரர்களை மலாய் தீபகற்பத்தில் இறக்கி விடும் ஆபரேஷன் ஸிப்பர் (Operation Zipper) என்ற திட்டத்தை செயல் படுத்தாமல் அவரைத் தடுத்தது ஜப்பான் மீதான அணுகுண்டு வீச்சு மட்டும் தான். இது போன்ற மற்றொரு பிரமாண்டமான ராணுவ நடவடிக்கையைக் குறிப்பிட வேண்டுமானால் அது நார்மண்டியில் நடந்தது மட்டும் தான்.

மவுண்ட்பேட்டனின் தந்தை அவரது சொந்த நாடான ஜெர்மனியை விட்டு பதினான்காவது வயதில் வெளியேறி பிரிட்டிஷ் கடற்படையில் சேர்ந்து முதலாவது சீ லார்ட் (Sea Lord) என்ற உயர்பதவியைப் பெற்றார். தந்தையுடன் போட்டியிட்டு முன்னேறும் நோக்கத்துடனேயே மவுண்ட்பேட்டன் சிறு வயதிலேயே கடற்படை அதிகாரி பணியைத் தெரிவு செய்தார். ஆனால் ஒரு படை வீரனாக மவுண்ட்பேட்டன் பயிற்சியைத் தொடங்கிய போது அவரது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய அப்பாவின் பணியை துயரம் சூழ்ந்தது. முதல் உலகப் போர் வெடித்தபின் பிரிட்டனில் பரவிய ஜெர்மனி எதிர்ப்பு என்ற மனநோயால் அவர் பதவி விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் வேண்டுகோளை ஏற்று மவுண்ட் பேட்டனின் நெஞ்சில்

நிறைந்த தந்தை அவரது குடும்பப் பெயரை பேட்டன் பர்க் என்பதிலிருந்து மவுண்ட்பேட்டன் என்று மாற்றிக் கொண்டார். அவரை மில்ஃபோர்ட் ஹவனின் பிரபுவாக மன்னர் நியமித்தார். நியாயமற்ற கூச்சலால் தனது தந்தை விரட்டப்பட்ட அதே பதவியைத் தாம் அடைய வேண்டும் என்று முதலாவது சீ லார்டின் அன்பு மகன் சபதமேற்றார்.

இருப்பினும் போர்களுக்கிடையே பல ஆண்டுகள் இடைவெளி ஏற்பட்டதால் அவரது கடற்படை பணி மந்தமாகவும் கவனத்தைக் கவராத வழியிலும் சென்றது. இதனால் சமாதான கால அதிகாரியானார் மவுண்ட்பேட்டன். மறுபக்கத்தில் போர்க்களங்கள் குறைந்ததால், இளஞரான அவர் பொது மக்களிடம் நல்லெண்ணத்தை உருவாக்கினார். அவரது கவர்ச்சியாலும், நல்ல தோற்றத்தாலும் எளிதில் எவருடனும் நெருங்கிப் பழகும் சுபாவத்தாலும் பிரிட்டன் பத்திரிகை உலகின் செல்லப் பிள்ளைகளில் அவரும் ஒருவரானார். போரின் பயங்கரங்களுக்குப் பிறகு அவருக்கு அப்படியொரு உற்சாகமான உலகம் கிடைத்தது. அழகுக்கும் செல்வச்செழிப்புக்கும் வாரிசாக விளங்கிய எட்வினா ஆஷ்லியை (Edvina Ashley) திருமணம் செய்து கொண்டதும் அப்போது வேல்ஸ் இளவரசரை மாப்பிள்ளைத் தோழனாகப் பெற்றதும் 1922ஆம் ஆண்டில் நடந்தவை.

லூயி மற்றும் எட்வினா மவுண்ட்பேட்டனின் புகைப்படமோ அல்லது இவர்களைப் பற்றிய சிறு செய்தியோ இல்லாமல் அடுத்த சில ஆண்டுகளில் பத்திரிகைகளின் ஞாயிறு இதழ்களைக் காண்பதே அரிதாகி விட்டது. நோயல் கவர்டுடன் (Noel Coward) நாடக அரங்கில் மவுண்ட் பேட்டன் தம்பதிகள்; ஆஸ்கட்டின் (Ascot) அரண்மனை மாடத்தில் இவர்கள்; மத்தியதரைக் கடல்பகுதியில் லூயி பிரபுவின் நீர்ச்சறுக்கு விளையாட்டு அல்லது போலோ விளையாட்டில் வென்று கோப்பை பெறும் காட்சி என ஏதாவது ஒரு படம் அல்லது செய்தி இடம் பெற்றது.

இப்படி ஒரு சித்திரம் பத்திரிகையாளர்களால் உருவாக்கப்படுவதை மவுண்ட்பேட்டனும் மறுதலிக்கவில்லை; எல்லா நடன அரங்கிலும், விருந்து நிகழ்ச்சியிலும், போலோ போட்டியிலும் அவர் களிப்புடன் கலந்து கொண்டார். பொது மக்கள் காணும் இந்த மவுண்ட்பேட்டனுக்குப் பின்னால் இன்னொரு உருவம் இருப்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. நடன நிகழ்ச்சி முடிந்த பின்தான் அது தெளிவானது.

கவர்ச்சி மிக்க அந்த இளைஞர் தாம் சிறுவயதில் செய்து கொண்ட சபதத்தை மறக்கவில்லை. அந்த அளவுக்கு மவுண்ட்பேட்டன் ஆழமான அக்கறையும், ஈடுபாடும் அர்ப்பணிப்பும் கொண்ட கடற்படை அதிகாரியாக இருந்தார். எந்தக் கடினமான பணியையும் செய்து முடிக்கும் திறனை அவர் பெற்றிருந்தார். அவர் வாழ்நாள் முழுவதும் அவருக்குக் கீழ் பணி செய்த அனைவரும் இதைக் கண்டு ஏக்கப் பெருமூச்சு விட்டனர். எதிர்கால யுத்தம் என்பது அறிவியல் ஆணைப் படியே நடக்கும் என்பதையும், மேம்பட்ட தகவல் தொடர்புகளே வெற்றிக்கு வழி என்பதையும் உணர்ந்த மவுண்ட்பேட்டன், டெக் ஆஃபீசர் (Deck Officer) என்ற பணியிலிருந்து மாறி சமிக்ஞைகள் பற்றிய ஆய்வில் ஈடுபட்டார்.

1927இல் கடற்படை சார்ந்த உயர் தொழில் நுட்ப கம்பியில்லா சமிக்ஞை படிப்பில் (Navy Higher Wireless Course) முதலிடம் பெற்று தேறினார். பின்னர் கடற்படை பயன்படுத்தும் அனைத்து வயர்லஸ் கருவிகளுக்கும் பொருந்தக்

கூடிய விரிவான ஆய்வு நூல் ஒன்றை முதல் முறையாக அவர் எழுதினார். வேக வேகமாக விரிவடையும் தொழில் நுட்பங்களில் ஈடுபாடு கொண்ட அவர் சுய முயற்சியில் இயற்பியல், மின்சாரம், எல்லா முறையிலுமான தகவல் பரிமாற்றம் ஆகிய படிப்புகளில் ஆழ்ந்தார். புதிய தொழில் நுட்பங்களும் சிந்தனைகளும் அவரது உணர்வாகவும் பொழுது போக்காகவும் மாறின.

பிரான்ஸ் நாட்டின் அறிஞரும் ராக்கெட் தொழில் நுட்ப வல்லுநருமான ராபர்ட் எஸ்னால்ட் பெல்டெரி (Robert Esnault Pelterie)யின் நூல்களை பிரிட்டிஷ் கடற்படைக்கு அவர் வாங்கினார். இவற்றின் பக்கங்கள் பிரிட்டனுக்குப் பல வியக்கத் தக்க துல்லியமான விவரங்களை முன்கூட்டியே அளித்தன. 'வி' குண்டுகள், இலக்கைத் தாக்கும் ஏவுகணைகள் மட்டுமின்றி சந்திரனுக்கு மனிதனின் முதலாவது பயண விமானம் பற்றிய தகவல்கள் கூட அவற்றில் இருந்தன. ஸ்டுகா (Stuka) என்ற குண்டு வீச்சு விமானத்தைத் தடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட, வேகமாகத் தாக்கும் விமான எதிர்ப்பு பீரங்கிகளை அவர் ஸ்விட்சர்லாந்தில் தேடிக் கண்டுபிடித்தார். ஆர்வம் குறைந்து காணப்படும் பிரிட்டிஷ் கடற்படையில் இதனைச் சேர்ப்பதற்குப் பல மாதங்கள் அவர் செலவிட்டார்.

ஹிட்லரின் வளர்ச்சியையும், ஜெர்மனியின் ஆயுதக் குவிப்பையும் அவர் கவலையுடன் கவனித்து வந்தார். ஜார் அரச பரம்பரையிலிருந்து தனது அன்புக்குரிய மாமாவான இரண்டாம் நிகோலஸை விரட்டிய (ரஷ்ய) சமூகத்தின் வளர்ச்சியையும் அவர் கவலையோடும் தொலை நோக்கோடும் கவனித்து வந்தார். 1930களில் மவுண்ட்பேட்டனும் அவரது மனைவியும் நடன அரங்கில் செலவிடும் நேரத்தை மேலும் மேலும் குறைத்துக் கொண்டார்கள். இருவரும் தொலைநோக்கில் வருமென்று கண்டறிந்துள்ள மோதல் குறித்து நண்பர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக்கிய பணிக்குக் கூடுதலான நேரத்தை செலவிட்டார்கள்.

1939 ஆகஸ்ட் 25இல் புதிதாக இயக்கப்பட்ட நாசகாரிக் கப்பல் எச்எம்எஸ் கெல்லி (HMS Kelly)யின் தலைமைப் பொறுப்பை பெருமையுடன் மவுண்ட் பேட்டன் ஏற்றார். இதற்கு சில மணி நேரம் கழித்து ஹிட்லரும் ஸ்டாலினும் அனாக்ரமிப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பதை வானொலி அறிவித்தது. கெல்லியின் தளபதி இந்த அறிவிப்பின் முக்கியத்துவத்தை உடனடியாக விளங்கிக் கொண்டார். கப்பலைக் கடலில் செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய மூன்றுவாரம் தேவைப்படும் என்பதைக் குறைக்க இரவும் பகலும் பணி செய்யுமாறு கப்பலின் சிப்பந்திகளுக்கு மவுண்ட் பேட்டன் உத்தரவிட்டார்.

ஒன்பது நாட்களுக்குப் பின் போர் மூண்ட போது, கெல்லி கப்பலின் தளபதி அழுக்கான உடைகளை அணிந்து கப்பலின் புறப்பகுதியில் தொங்கியபடி, தனது சிப்பந்திகளுடன் சேர்ந்து வர்ணம் அடித்துக் கொண்டிருந்தார். இருப்பினும் அடுத்த நாள், கெல்லி ஒரு ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பலுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டது.

'கப்பலைக் கைவிட்டுச் செல்லுங்கள்' என்று ஒருபோதும் நான் உத்தரவிடமாட்டேன், மவுண்ட்பேட்டன் தனது கப்பல் சிப்பந்திகளுக்கு உறுதி அளித்தார். 'நமது காலுக்கடியில் கப்பல் மூழ்கிப் போனால் மட்டுமே நாம் கப்பலை விட்டுச் செல்ல வேண்டும்' என்றும் அவர் கூறினார்.

பிரிட்டிஷ் கால்வாய் வழியாகச் சென்ற கப்பல்களுக்குப் பாதுகாப்பாக இருந்த, வட கடலில் யு - படகுகளை வேட்டையாடிய கெல்லி கப்பல், தற்போது நார்வேயில் நாம்சோஸ் ஃபியோர்ட் பகுதியில், நார்விக் பயணத்தின் போது சிக்கிய, ஆறாயிரம் பேரை மீட்கும் பணிகளில் உதவிட, பனிமூட்டத்துக்கும் ஜெர்மனியின் குண்டு மழைகளுக்கும் இடையே பயணம் செய்தது. டைன் (Tyne) அருகே செல்லும்போது கப்பலின் சுக்கான் பழுதுபட்டது. வடகடலில் டார்பிடோ குண்டு வீச்சால் அதன் நீராவி அறை அழிந்தது. தப்பித்துக் கொள்ளும்படியான உத்தரவை ஏற்க மறுத்த மவுண்ட்பேட்டன், ஓர் இரவு முழுவதும் தன்னந்தனியாக முயற்சி செய்து பழுதுகளை நீக்கி பதினெட்டு பேரின் உதவியுடன் கப்பலை தாய்நாட்டுக்கு இழுத்து வந்து நிறுத்தினார்.

ஓராண்டுக்குப் பின் 1941 மே மாதத்தில் கிரீட்டின் (Crete) கரைக்கு அப்பால் கெல்லியின் வாழ்வு முடிந்தது. கப்பலின் வெடி பொருள்கள் சேமிப்புப் பகுதியில் ஒரு குண்டு விழுந்ததால் சில நிமிடங்களில் கடலுக்குள் மூழ்கி அழிந்தது. ஏற்கெனவே தாம் செய்த சபதத்தில் உறுதியோடு இருந்த மவுண்ட்பேட்டன் கப்பல் நீருக்குள் மூழ்கும் வரை அதிலேயே இருந்தார். பின்னர் கரைசேர்வதற்குப் போராடி நீச்சலடித்தார். எண்ணெய்க் கறையுடன் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை ஒற்றை லைஃப் போட்டை (கடலில் தவிப்போர் கரை சேரப் பயன்படுத்தும் மிதவைப் படகு. மொ-ர்) சுற்றி பற்றச்செய்து பல மணி நேரம் அவர்களுக்குத் தலைமை தாங்கி நீந்தினார். அவர்கள் மீது ஜெர்மன் விமானங்கள் குண்டுகளை வீசிய போதும், 'ரோல் அவுட் த பேரல் (Roll Out the Barrel)' என்ற பாடலைப் பாடி உற்சாகமூட்டினார். கெல்லி கப்பலில் அவர் நிகழ்த்திய சாகசத்துக்காக மவுண்ட்பேட்டன் டிஎஸ்ஓ (DSO) விருதினைப் பெற்றார். அவரது நண்பரான நோயல் கவர்ட் (Noel Coward) தயாரித்த இன் விச் வி செர்வ் (இதில் நாங்கள் பணி செய்தோம் In Which We serve) என்ற திரைப்படத்தில் கெல்லி கப்பலின் அழியாத சில பாகங்கள் இடம் பெற்றன.

ஐரோப்பிய கண்டத்துக்கு நேசநாடுகளை மீண்டும் கொண்டு வரும் என்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட, ராணுவ உத்திகளையும் தொழில் நுட்பங் களையும் உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட 'கூட்டு நடவடிக்கைகள்' என்ற படைப்பிரிவுக்குத் தலைமை தாங்க துணிச்சல் மிக்க இளம் அதிகாரியைத் தேடிக் கொண்டிருந்த சர்ச்சில், ஐந்து மாதங்களுக்குப் பிறகு மவுண்ட் பேட்டனுக்கு அழைப்பு விடுத்தார். அவரது தீரத்துக்கும் அறிவியல் ஆர்வத்துக்கும் பொருத்தமான பணியாக இருந்தது அது. எந்த ஒரு சிந்தனையையும் செயல்படுத்தாமல் விட்டுவைக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்த அந்த மனிதர், புதிய கண்டுபிடிப்பாளர்கள், விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுநர்கள், அறிஞர்கள், கற்றுக்குட்டிகள் என எல்லாத் தரப்பினரையும் தனது பிரிவில் அணிவகுக்கச் செய்தார். உறைந்து போன கடல் நீரில் ஐந்து சதவீத மரக்கூழைச் சேர்த்து உருவாக்கப்பட்ட பனிக்கட்டி, நீருக்குள் மூழ்காமல் மிதக்கிற விமான தளம் போல இருக்கும் என்பது போன்ற அவர்களின் யோசனைகளில் சில அறிவுக்குப் பொருந்தாதவையாக இருந்தன. ஆனால் அவர்கள்தான் நீருக்கடியில் கால்வாய்களுக்கிடையே செல்லும் புளுடோ என்ற குழாய் வழிப் பாதையையும், மெல்பரி மரத்தாலான செயற்கைத் துறைமுகங்களையும், ராக்கெட்டைக் கொண்டு செல்லும் வாகனங்களையும் உருவாக்கினார்கள். இதன் மூலம் தான் நார்மண்டி ஆக்ரமிப்புக்கு வாய்ப்பு

ஏற்பட்டது. இவர்களின் தலைவர் என்ற முறையில், மவுண்ட்பேட்டனை, 43ஆவது வயதில், தென்கிழக்கு ஆசியாவின் உயர்நிலைத்தளபதி என்ற புகழ்வாய்ந்த பதவி உயர்வுக்கும் இவர்கள் காரணமானார்கள்.

அவரது வாழ்க்கையில் ஏற்றுக் கொண்ட பணிகளிலேயே சவால்மிக்கதான பணியை ஏற்க அவர் தயாரானார். இப்போது மவுண்ட்பேட்டன் உடல் ரீதியாகவும் அறிவுத்திறன் ரீதியாகவும் உச்சத்தில் இருந்தார். கடலில் போர் செய்ததும், உயர் பதவியும் விரைந்து முடிவெடுக்கும் திறமையை அவருக்கு அளித்தன. மேலும் தலைமைப் பதவிக்குரிய இயற்கையான திறமையையும் அவை வெளிக்கொண்டு வந்தன. அவர் ஒரு தத்துவஞானியோ சிந்தனை யாளரோ அல்ல. ஆனால் வாழ்நாள் முழுவதுமான கடின உழைப்பால் அறிவார்ந்த, பகுத்தாய்கிற மனதை அவர் பெற்றார். நல்ல பல தோல்விகளை சந்தித்ததில் பெரும் பங்கு வகித்த ஆங்கிலோ சாக்ஸன் மனநிலை அவரிடம் ஒருபோதும் இருந்ததில்லை. வெற்றியின் மீதே அவர் நம்பிக்கை வைத்திருந்தார். இளம் அதிகாரியாக இருந்தபோது இவர் கற்றுத்தந்த நவீன துடுப்புத் தொழில் நுட்பத்தால் கடற்படையினரின் படகுப்போட்டியில் அவரது குழுவினர் பரிசுகளைத் தட்டிச் சென்றனர். பின்னர் இவர் அறிமுகம் செய்த தொழில் நுட்பம் பற்றி விமர்சனம் எழுந்தது. 'பந்தயக் கோட்டை முதலில் கடப்பதுதான்' முக்கியம் என்பது எனது எண்ணம் என்று பட்டென்று அவர் பதில் சொன்னாராம்.

அவரது இளமைக் களிப்பு அவருக்கு அளவு கடந்த கவர்ச்சியை அளித்திருந்தது. மேலும் மக்களை ஒருங்கிணைக்கும் சிறப்புத் தகுதியையும் அளித்திருந்தது. 'மவுண்ட்பேட்டன் மனது வைத்தால், பிணத்தை நெருங்காமல் கழுகையும் கவர்ந்து விடுவார்' என்று அவரது நண்பர்களில் ஒருவராக இல்லாத ஒரு மனிதர் கருத்துத் தெரிவித்தார்.

எல்லாவற்றுக்கும் மேலாக எல்லையற்ற நீர்த்தேக்கம் போல நிறைந்திருந்த தன்னம்பிக்கை மவுண்ட்பேட்டனுக்கு இயற்கையளித்த சொத்தாக விளங்கியது. இந்தக் குணத்தை அவரது விமர்சகர்கள் ஆணவம் என்று முத்திரைக் குத்தினார்கள். ஆசியப் படைத்தளபதியாவது பற்றி சர்ச்சில் அவரிடம் விருப்பம் கேட்ட போது இது பற்றி முடிவு செய்ய 24 மணி நேர அவகாசம் கேட்டவர் மவுண்ட்பேட்டன்.

சற்று சினம் கொண்ட சர்ச்சில், 'ஏன்? இதனைச் செய்ய முடியும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?' என்று வினவினார்.

'சார், எதையும் என்னால் சாதித்து விட முடியும் என்ற பிறவிக் குணமான தன்னம்பிக்கையால் நான் பாதிக்கப்பட்டிருக்கிறேன்' என்று மவுண்ட்பேட்டன் இதற்குப் பதிலளித்தார்.

வரும் வாரங்களில் விக்டோரியாவின் கொள்ளுப்பேரனுக்கு இந்தத் தன்னம்பிக்கையின் ஒவ்வொரு துளியும் தேவைப்படும்.

## நோற்பவரின் பயணம் - I

ஒவ்வொரு கிராமத்திலும் அவரது செயல்கள் ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. ஆசியாவிலேயே மிகவும் மதிக்கப்படும் அந்த மனிதர் ஒரு கிராமத்துக்குச் சென்றவுடன் குடிசை ஒன்றுக்குச் செல்வார். பெரும்பாலும் அது முஸ்லீமின்

குடிசையாக இருக்கும். அங்கு தாம் தங்குவதற்கு அனுமதியை இறைஞ்சுவார். ஒருவேளை அந்தக் குடிசைவாசி மறுத்து விட்டால், சில நேரங்களில் இப்படி நடந்ததுண்டு, காந்தி இன்னொரு வீட்டுக்குச் செல்வார். 'யாருமே என்னை ஏற்காவிட்டால், ஒரு மரத்தின் நிழலில் நான் மகிழ்ச்சியாக ஓய்வெடுப்பேன்' என்று காந்தி சொன்னார்.

ஒரு வீட்டில் தங்கி விட்டால், மாம்பழம், காய்கறிகள், ஆட்டுப்பாலின் தயிர், இளநீர் என அந்த வீட்டில் எது கிடைக்கிறதோ அதனை அவர் விருப்பத்துடன் ஏற்பார். ஒரு நாளின் ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு கிராமத்திலும் அவரது திட்டம் துல்லியமாக வரையறுக்கப்பட்டிருந்தது. காலம் கருதுதல் காந்தியின் பிடிவாத குணங்களில் ஒன்றாக இருந்தது. மனிதகுல சேவைக்குப் பயன்படுத்த இறைவன் அளித்த கொடைதான் ஒவ்வொரு நிமிடமும் என்று அவர் கருதினார். எட்டு ஷில்லிங் மதிப்புள்ள இங்கர்சால் கடிகாரம் ஒன்று சிறுகயிறில் கட்டப்பட்டு அவரது இடுப்பில் எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும். பதினாறு ஆண்டுகளாக அவரால் பயன்படுத்தப்படும் சொத்துக்களில் ஒன்றான இதுதான் அவரின் ஒவ்வொரு நாள் செயல்களையும் தீர்மானித்தது. கீதை படிப்பதற்காக காந்தி காலை இரண்டு மணிக்கே எழுந்து விடுவார். பின்னர் காலை வழிபாடுகளை செய்வார். இதன்பின் விடியும் வரை குடிசையில் காலை மடக்கி அமர்ந்து தமக்கு வந்த கடிதங்களுக்குத் தமது கைப்பட பென்சிலால் பொறுமையாகப் பதில் எழுதுவார் காந்தி. அந்தப் பென்சில் விரல்களுக் கிடையே பிடிக்கமுடியாத அளவுக்குப் புழுக்கையாகும் வரை பயன்படுத்துவார். ஏனெனில் அந்தப் பென்சில் தம்மைப்போன்ற ஒரு மனிதரது உழைப்பின் அடையாளம் என்றும் அதனை வீணாக்குவது அவரது உழைப்பை உதாசீனப் படுத்துவதாகும் என்றும் அவர் கருதினார். முறையாகக் கடைப்பிடிக்கும் ஒரு நேரத்தில் ஒவ்வொரு நாள் காலையிலும் உப்பும் தண்ணீரும் கலந்து தமக்குத்தாமே இனிமா கொடுத்துக் கொள்வார். இயற்கை வைத்தியத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்ட காந்தி, தமது வயிற்றில் உள்ள மலத்தை வெளியேற்ற இதுவே சிறந்த வழி என்று நம்பினார். தனது குழுவில் ஒருவரை அவர் ஏற்றுக் கொண்டு விட்டார் என்பதற்கான இறுதி அறிகுறி அந்த நபருக்கு உப்பும் தண்ணீரும் கலந்து இனிமாவை மகாத்மாவே அளிப்பது தான். பல ஆண்டு காலமாக இதுதான் அனுபவம்.

சூரியன் மேலெழும் வேளையில், காந்தி அந்தக் கிராமத்துக்குள் சுற்றி வரத் தொடங்குவார் அங்கு வசிக்கும் மக்களுடன் இடைவிடாமல் பேசிக் கொண்டும், பிரார்த்தனை செய்துகொண்டும் இருப்பார் நவகாளியில் அமைதியும் பாதுகாப்புணர்வும் மீண்டும் வருவதற்கான தனது இயக்க நோக்கத்தை நிறைவேற்ற விரைவில் புதிய தந்திரம் ஒன்றை உருவாக்கினார். இது காந்திக்கு மட்டுமே உரித்தானதாய் இருந்தது. ஒவ்வொரு கிராமத்திலும் தனது வேண்டுகோளை ஏற்றுக் கொள்கிற இந்து மற்றும் முஸ்லீம் தலைவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பார். பின்னர் இவர்கள் இருவரையும் ஒருங்கிணைந்து செயல்படுமாறு கேட்டுக் கொள்வார் இவர்களே அந்தக் கிராமத்தின் அமைதிக்குக் கூட்டுப் பொறுப்பாளர்கள் ஆவர் அந்த ஊரில் இந்துக்கள் முஸ்லீம் சகோதரர்களால் துன்புறுத்தப்பட்டால் சாகும் வரை உண்ணா விரதமிருக்க முஸ்லீம் தலைவர் உறுதியேற்பார் இதேபோன்ற உறுதிமொழியை இந்துத் தலைவரும் ஏற்பார்.

நவகாளியின் ரத்தம் தோய்ந்த பாதையில் சென்ற காந்தி தாம் கடந்து செல்லும் பாதையில் உள்ள கிராமங்களில் பரவியிருக்கும் வகுப்புவாத வெறுப்பு விஷத்தை நீக்குவது என்ற அளவோடு தமது பணியை சுருக்கிக்கொள்ளவில்லை. சகோதர நேயம் என்ற தமது கருத்தை ஒரு கிராமம் புரிந்து கொள்ளத் தொடங்கிவிட்டது என்று உணர்ந்தால், தமது வேண்டுகோளின் பரிமாணத்தை அவர் விரிவுபடுத்தி விடுவார். நவகாளி பயணப்பாதையில் உள்ள சிற்றூர்கள் போன்ற தொலைதூரத்தில் இருக்கின்ற கிராமங்களில்தான் காந்தி இந்தியாவைக் கண்டார். அவரது சமகால மனிதர் எவரையும் விட காந்தி கிராமங்களைப் பற்றி அதிகமாகவே தெரிந்து வைத்திருந்தார். புத்துயிர்ப்பு பெற்ற கிராமங்களின் அடித்தளத்தில் தான் சுதந்திர இந்தியா உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். இவற்றின் வாழ்க்கை முறைகளை எப்படி மறு ஒழுங்கு செய்வது என்பது பற்றியும் அவருக்கு சொந்தமான சிந்தனைகள் இருந்தன.

'கிராமத்தின் தண்ணீரையும் உங்களையும் எப்படித் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி எனது பயணத்தின் போது சில யோசனைகளை நான் சொல்லித் தருவேன்' கிராமவாசிகளிடம் இப்படி அவர் கூறினார்: 'உங்கள் உடல் உருவாக்கப்பட்டுள்ள மண்ணை எப்படி நீங்கள் பயன்படுத்த வேண்டும் உங்கள் தலைக்கு மேலுள்ள ஆகாயத்திலிருந்து கிடைக்கும், எண்ணற்ற, வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை எப்படி நீங்கள் பெற முடியும் உங்களைச் சுற்றியுள்ள காற்றிலிருந்து முக்கியமான சக்தியை எப்படிப் பெற முடியும் சூரிய வெளிச்சத்தை எப்படி முறையாகப் பயன்படுத்த முடியும்' போன்றவை அவரது பாடங்களாக இருந்தன.

வயது முதிர்ந்த அந்தத் தலைவர் வெறும் போதனைகளில் மட்டும் திருப்தி அடைவதில்லை. சொல்லுக்கேற்ற செயல்பாடுகளுக்குத்தான் மதிப்பு என்பதில் காந்தி அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார். காலம் கருதும் அவரது செயலில் வித்தியாசமான முன்னுரிமைகள் இருப்பதாக எண்ணிய தொண்டர்கள் பலரையும் அவர் ஏமாற்றமடையவே செய்திருக்கிறார். ஒரு தொழுநோயாளிக்கு மண் நிறைந்த பையால் சிகிச்சை அளிப்பதற்கும் வைஸ்ராயுடன் பேட்டிக்குச் செல்வதற்கும் காந்தி ஒரே மாதிரியான கவனத்தையே செலுத்தினார். எனவே ஒவ்வொரு கிராமத்திலும் குடியிருப் போருடன் சேர்ந்து அவர்களின் கிணறுகளுக்குச் செல்வார். கிணறு வெட்ட இடத்தைத் தெரிவு செய்வதிலும் அவர் உதவுவார் பொதுக் கழிப்பறைகளைச் சென்று பார்ப்பார். இப்படிப்பட்ட கழிப்பறைகள் இல்லாத கிராமங்களில், பெரும்பாலும் இந்த நிலைதான் இருக்கும். கழிப்பறையை எப்படிக் கட்டுவது என்பதை எடுத்துரைப்பார். இதற்காக மண் தோண்டும் பணிகளிலும் தாமே ஈடுபடுவார். இந்தியாவின் படுமோசமான மரண விகிதத்துக்குக் காரணம் தூய்மையின்மை தான் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். எனவே கிராமப்புற ஏழைகளில் பெரும்பாலோர் வெறும் காலுடன் நடக்கும் பாதைகளில் எச்சில் துப்புவது, மூக்கைச் சிந்திப் போடுவது, திறந்த வெளியில் மலம் கழிப்பது போன்ற பழக்கங்களுக்குப் பல ஆண்டுகளாக அவர் தன்து கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்தார்.

'இந்தியர்களாகிய நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து எச்சில் துப்பினால் ஒரு பெரிய நீர் நிலையை உருவாக்கி அதில் முந்நூறு ஆயிரம் (3 லட்சம்) வெள்ளை யர்களை மூழ்கடித்துவிடலாம்' என்று காந்தி ஒரு முறை பெருமூச்செறிந்து

கூறினார். ஏதாவது ஒரு கிராமவாசி நடந்து செல்லும் பாதையில் எச்சில் துப்புவதை அல்லது மூக்கை சிந்துவதைப் பார்க்க நேர்ந்தால் அந்த மனிதரை அவர் நாகரிகமாகக் கடிந்து கொள்வார். வீடுகளுக்குச் சென்று கரியையும் மணலையும் பயன்படுத்தி எளிமையான தண்ணீர் வடிப்பானை எப்படி உருவாக்குவது என்பது பற்றி விளக்குவார். 'நாம் என்ன செய்கிறோம், நம்மால் என்ன செய்ய முடியும் என்பதற்கு இடையேயுள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொண்டாலே உலகின் பல பிரச்சனைகளுக்கு நாம் தீர்வு கண்டு விடலாம்' என்று அவர் மீண்டும் மீண்டும் கூறினார்.

ஒவ்வொருநாள் மாலையிலும் திறந்த வெளியில் பிரார்த்தனைக் கூட்டத்தை அவர் நடத்தினார். இதில் கலந்து கொள்ளுமாறு முஸ்லீம்களை அவர் அழைத்தார். ஒவ்வொரு நாளும் மிகவும் கவனத்துடன் குரானிலிருந்து சில வாசகங்களை எடுத்துப் பிரார்த்தனையின் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொண்டார். இத்தகைய கூட்டங்களில் எவர் ஒருவரும் எதைப் பற்றியும் அவரிடம் கேள்விகள் கேட்கலாம். ஜின்னாவுடனும் முஸ்லீம் லீகுடனும் பேச்சு நடத்த புதுடில்லியில் இருக்க வேண்டிய அவர் நவகாளியில் நேரத்தை வீணாக்குவதாக ஒரு நாள் ஒரு கிராமவாசி கோபத்துடன் கூறினார்.

'ஒரு தலைவர் என்பவர் எந்த மக்களுக்குத் தலைமை தாங்குகிறாரோ அவர்களைப் பிரதிபலிப்பவராக மட்டுமே இருக்க முடியும்' என்று இதற்கு காந்தி பதிலளித்தார். அந்த மக்கள் முதலில் தங்களுக்குள் அமைதியை உருவாக்கிக் கொள்பவர்களாக இருக்க வேண்டும். 'பின்னர் தங்களின் அண்டை அயலாருடன் சமாதானமாகக் கூடி வாழ வேண்டும் என்ற விருப்பம் அவர்களிடம் ஏற்பட வேண்டும். இதனை அவர்களின் தலைவர்கள் பிரதிபலிக்க வேண்டும்' என்று விளக்கினார் காந்தி.

தமது கருத்தை ஒரு கிராமம் புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டது என்று உணர்ந்தால், அஞ்சி ஓடிய இந்துக்கள் திரும்பி வந்து அவர்களின் வீடுகளில் மீண்டும் குடியிருக்க முஸ்லீம் சமுதாயத்தினர் ஒப்புக் கொண்டு விட்டால், ஐந்து, பத்து அல்லது பதினைந்து மைல் தூரத்தில் உள்ள வேறொரு கிராமத்துக்கு அவர் பயணப்பட்டு விடுவார். அவரது பயணம் காலை சரியாக 7.30 மணிக்குத் தொடங்கிவிடும். ஸ்ரீராம்பூரைப் போல காந்தியின் தலைமையில் ஒரு சிறு குழு பயணம் செய்யும். மாந்தோப்புகள், பாசிபடர்ந்த குட்டைகள் வழியாக பயணம் செய்யும்போது நாட்டுப்புற வாத்துகளும் அச்சம் தரும் காட்டு வாத்துகளும் சிறகுவிரித்து மேலெழுந்து பறக்கும். அவர்களின் பாதை குறுகலாக இருக்கும். புதர்களும் தென்னந்தோப்புகளும் நிறைந்த சுற்றுப் பாதையாக அது இருக்கும். சாதா கற்களும், கூழாங்கற்களும், வெட்டி விடப்பட்ட வேர்களும் பரவிக் கிடக்கும். சில நேரங்களில் இந்த சிறிய ஊர்வலம் கணுக்கால் வரையிலான சகதியில் சிக்கித் தவிக்கும். அடுத்த கிராமத்துக்கு இவர்கள் செல்லும் வேளையில் 77 வயதான மகாத்மாவின் பாதங்களில் கொப்புளங்கள் ஏற்பட்டு வலிக்கும். ரத்தம் சிந்தும் வெடிப்புகளும் கொப்புளங்களும் அவரது பாதங்களை விகாரமாக்கி விடும். மீண்டும் பயணத்தைத் துவங்கும் முன் வெந்நீருக்குள் கால்களை மூழ்க வைப்பார். பின்னர் தனது பிராயச்சித்த நடைபயணத்தின் சுகானுபவத்தில் காந்தி மூழ்கிவிடுவார் அவரது சகோதரியின் பேத்தியும் நிலைத்தத் துணையுமான மனு, தியாகத்திருப்பாதங்களை ஒரு கல்லைக் கொண்டு அழுக்கி விடுவார்.

உணவும் தண்ணீரும் இன்றி வறுமையில் வாடும் மக்கள் தொகுதியைக் கொண்ட ஒரு துணைக் கண்டத்தில் அந்த மக்களின் விடுதலைக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டு முப்பது ஆண்டுகளாக அந்த நலிந்த பாதங்கள் நடைப்பயணம் செய்கின்றன. இந்தப் பாதங்கள் இந்தியாவின் பெரும்பாலான மூலை முடுக்குகளுக்கு - தற்போது பயணம் செய்வது போன்ற ஆயிரக் கணக்கான கிராமங்களுக்கு - தொழு நோயாளிகள் குடியிருந்த சகதி நிறைந்த இடங்களுக்கு - நாட்டில் மோசமாக உள்ள குடிசைப் பகுதிகளுக்கு - மேலும் பல இடங்களுக்கு - சிறைகளுக்கெல்லாம் அழைத்துச் சென்றன. இந்தியாவின் விடுதலை என்ற உயர்ந்த லட்சியத்தை நோக்கியதாக இந்தப் பயணம் இருந்தது.

பக்கிங்காம் அரண்மனையில் தேநீர் அருந்திக் கொண்டிருக்கும் இரண்டு மைத்துனர்களின் கொள்ளுப் பாட்டியை டில்லி அருகே ஒரு மைதானத்தில் நடந்த நிகழ்ச்சியில் இந்தியாவின் மகாராணியாக அறிவித்தபோது மோகன்தாஸ் காந்தி எட்டு வயது பள்ளிச் சிறுவனாக இருந்தார். காந்தியைப் பொறுத்தவரை இந்தக் கொண்டாட்டம் ஒரு இசைப்பாடலுடன் தொடர்பு கொண்டது. இந்த விழா நடந்த சமயத்தில் டில்லியிலிருந்து 700 மைல் தூரத்தில் அரபிக் கடலோரம் இருந்த அவரது சொந்த ஊரான போர்பந்தரில் விளையாட்டுத் தோழர்களுடன் அவர் ஒரு பாடலைப் பாடிக் கொண்டிருந்தார்.

*ஆங்கிலேயனின் வல்லமையைப் பாரீர்!*
*ஆளுகிறான் அவன் குள்ளமான இந்தியர்களை*
*ஏனெனில் இறைச்சி தின்பவன் அவன்*
*அத்தோடு ஆறடிக்குமேல் உயரம் இருப்பவன்.*

இந்த ஆறடி உயர ஆங்கிலேயர்களையும் அவர்களின் பலம் வாய்ந்த அரசாட்சியையும் பின்னொரு நாளில் ஆன்மீக சக்தியால் அடிபணியச் செய்யப் போகிறவன் அந்தச் சிறுவன். ஆனால் சிறுவயதில் பாடிய பாடலின் பொருள் அளித்த சவாலிலிருந்து அவனால் விடுபட முடியவில்லை. இதனால் ஒரு நண்பனுடன் சேர்ந்து பழக்கமில்லாத ஆட்டிறைச்சித் துண்டுகளை சமைத்துச் சாப்பிட்டார். இந்த சோதனை மிகவும் பிரச்சனையாகி விட்டது. எட்டு வயது காந்தி ஆட்டிறைச்சியை வாந்தியெடுத்துவிட்டார். ஆடு அவரது வயிற்றுக் குள்ளிருந்து கத்துவதாக கனவு கண்டபடியே அந்த இரவைக் கழித்தார்.

காந்தியின் தந்தை பரம்பரை திவான். பம்பாய் அருகே கத்தியவார் என்ற சிறிய தீபகற்பப் பகுதியின் முதன்மை அமைச்சராக இருந்தார். சமயம் சார்ந்த பல நோன்புகளை நோற்று ஆழ்ந்த பக்திமானாக இருந்தார் அவரது அன்னை.

பொதுவாக இந்து மதத்தின் பாரம்பரிய தத்துவங்களையும் சமயச் சடங்குகளையும் பராமரிப்பவர்கள் பிராமணர்கள் என்று சொல்வார்கள். நவீன யுகத்தில் இந்தியாவின் தலைசிறந்த ஆன்மீகத் தலைவராய் வரப்போகிற காந்தி பிராமண சாதியில் பிறக்கவில்லை என்பதுதான் ஆச்சரியமான விஷயம். அவரது தந்தை வைஸ்யகுலத்தவர். வியாபாரிகள் மற்றும் சிறுவணிகர்களைக் குறிக்கும் வர்ணம் இது. இந்து சமூக அளவு கோலில் இவர்கள் பாதி அளவுக்கும் சற்று உயர்ந்தவர்கள். தீண்டத்தகாதவர்களுக்கும் கைவினைஞர்களான சூத்திரர் களுக்கும் மேலானவர்கள்; ஆனால் பிராமணர்களுக்கும் போர் வீரர்களான க்ஷத்ரியர்களுக்கும் கீழானவர்கள்.

அந்நாளைய இந்தியப் பாரம்பரியத்தைப் பின்பற்றி காந்தி தனது பதின்மூன்றாவது வயதில் கல்வியறிவில்லாத கஸ்தூரிபாய் என்ற முன்பின் அறிமுகமில்லாத பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். பின்னாளில் பிரம்மச்சர்யத்துக்கு உலகில் ஒரு சின்னமாக விளங்கிய அந்த இளைஞர் திருமணமான புதிதில் உடலுறவில் ஊறித் திளைத்தவர்.

திருமணமான நான்கு ஆண்டுகளுக்குப்பின் காந்தியும் அவரது மனைவியும் கூடிக் குலாவி மகிழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் யாரோ கதவைத் தட்டியதால் அவர்களின் உறவில் இடையூறு ஏற்பட்டது. கதவைத் தட்டிய பணியாள், காந்தியின் தந்தை சற்றுமுன் இறந்து விட்டார் என்ற தகவலை தெரிவித்தார்.

காந்தி அதிர்ச்சியுற்றார். அவர் தந்தையை மிகவும் நேசித்தவர். படுக்கை யறைக்கு வருவதற்கு சிறிது நேரத்திற்கு முன் கூட மரணப்படுக்கையில் கிடக்கும் தனது தந்தையின் கால்களைப் பொறுமையாக அமுக்கி விட்டார். உடலுறவு கொள்ளும் வேட்கை அதிகரித்ததால் தந்தையின் அறையிலிருந்து நழுவி காந்தி தனது படுக்கையறைக்கு வந்து கருவுற்றிருந்த மனைவியை எழுப்பினார். அப்போதிலிருந்து உடலுறவு விருப்பம் காந்தியிடம் மங்கத் தொடங்கியது. அவரது மனதில் இந்த சம்பவம் அழியாத முத்திரையாய்ப் பதிந்து விட்டது.

காந்தியின் தந்தை இறந்ததால், ஏதாவது ஒரு மாகாணத்துக்கு முதன்மை அமைச்சராக வருவதற்கு ஏதுவாக சட்டம் படிப்பதற்கு அவர் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். இதற்கு முன் காந்தியின் குடும்ப உறுப்பினர் எவரும் வெளிநாட்டுக்குச் சென்றதில்லை. கடல் கடந்து செல்வதால் காந்தி சீரழிந்து போவார் என்று கருதிய இந்து மதப் பெரியவர்கள் அவரை வியாபாரிகளின் குலத்திலிருந்து நீக்கி வைப்பதாக அறிவித்தார்கள்.

லண்டனில் காந்தி மன உளைச்சலுடன் மகிழ்ச்சியற்றிருந்தார். அவர் மிகவும் கூச்ச சுபாவம் உள்ளவர். ஆதலால் புதிதாக உள்ள எவரிடமும் ஒரு வார்த்தை பேசுவது கூட அவருக்கு வேதனையாக இருந்தது. முழுவாக்கியம் பேசுவ தென்றால் அது மரண வேதனைதான். 'இன்ஸ் ஆஃப் கோர்ட்' எனும் சட்டம் பயிலும் நவநாகரிக உலகில் அவரது பத்தொன்பதாவது வயதில் உடல் ரீதியாக இரங்கத்தக்க ஒரு ஜந்து போலவே அவர் காணப்பட்டார். விலை மலிவான, பம்பாயில் தைக்கப்பட்ட கோணல் மாணலான சட்டைத்துணி, வழக்கத்துக்கு மாறான மெலிந்த உடலில் தொங்கிக் கொண்டிருந்தது. இது கப்பலில் பாய்மரத் துணி கிழிந்து தொங்குவது போலிருந்தது. மிகவும் சிறிய தோற்றத்துடன், குறை சொல்ல முடியாத அவரைக் குற்றேவல் செய்பவர் போல் சக மாணவர்கள் புரிந்து கொண்டார்கள்.

தனிமையில், பெரும் துன்பத்தில் மூழ்கியிருந்த காந்தி இந்த வேதனை யிலிருந்து விடுபட ஒரே வழி தாமும் ஆங்கிலேய நாகரிக மனிதனாக மாற வேண்டியதுதான் என்று முடிவு செய்தார். பம்பாய் நகரின் பழைய துணிகளை வீசியெறிந்த அவர், புதிதாக நாகரிகத் துணிமணிகளையும் பொருள்களையும் வாங்கினார். ஒரு பட்டுத் தொப்பி, மாலை நேர சூட், உயர்தர தோல் பூட்ஸ், வெள்ளை நிறக் கையுறைகள், வெள்ளிக் கைப்பிடி கொண்ட ஒரு கைத்தடி ஆகியவை இதில் அடங்கும். விருப்பமில்லாத விறைத்து நிற்கும் கருப்பு முடியை, மண்டையுடன் படிய செய்வதற்குத் தலைமுடித் தைலம் வாங்கினார். அவரது தோற்றத்தை அழகு செய்து கொள்ள பல மணி நேரம் கண்ணாடி முன்

நின்றார். டை கட்டிக் கொள்ளப் பழகினார். பல காலமாக அவர் அடைய விரும்பும் சமூக அந்தஸ்தை வென்றிட ஒரு வயலின் வாங்கினார்; நடன வகுப்பில் சேர்ந்தார்; ஃப்ரெஞ்ச் மொழி பயிலவும், பேச்சுத் திறமையை வளர்க்கவும் ஆசிரியர் ஒருவரை பணத்துக்கு நியமித்துக் கொண்டார்.

கவலை தருகிற சிறுபிள்ளைத் தனமான இந்த செயல்களின் பலன் முன்பு ஆட்டிறைச்சியைத் தின்றபோது அது எதிர் விளைவுகளை ஏற்படுத்தியது போலவே ஆபத்தில் முடிந்தது. மிகவும் விரும்பி வாங்கிய அவரது வயலினிலிருந்து அபஸ்வரம் வருவதை மட்டுமே அவரால் பயில முடிந்தது. நடன அரங்கில் அவரது கால்கள் முக்கால் பங்கு நேரம் இசைக்கேற்ப ஆட மறுத்தன. ஃப்ரெஞ்ச் மொழி கற்க நாக்கு ஒத்துழைக்கவில்லை. தனது ஆற்றலைக் கெடுக்கும் கூச்ச சுபாவத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காக அவர் ஆர்வத்துடன் போராடி கற்க முயன்ற பேச்சுத்திறன் பயிற்சியும் எந்த பலனையும் தரவில்லை . விலை மாதுவின் வீட்டுக்குச் சென்று அதிலும் தோல்வி கண்டார். கடந்த கால மனநிலையிலிருந்து காந்தியால் விடுபட முடியவில்லை.

ஆங்கிலேயர் போல ஆகவேண்டும் என்பதற்கான முயற்சிகளை கைவிட்டார். பழையபடி தாம் தாமாகவே வாழும் நிலைக்குத் திரும்பினார். இறுதியாக சட்டக்கல்வியில் பட்டம் பெற்று பொய்த்தோற்றம் பூணாத நிம்மதியுடன் காந்தி இந்தியாவுக்குத் திரும்பினார்.

தாயகம் திரும்பியதும் கூட அவருக்கு வெற்றியைத் தரவில்லை. பல மாதங்கள் வழக்கு தேடி, பம்பாய் நீதிமன்றங்களைச் சுற்றி வந்தார். எதிர்காலத்தில் 300 மில்லியன் (30 கோடி) இந்தியர்களை வசீகரிக்கப் போகும் குரலுக்குரிய அந்த இளைஞரால் அன்று இந்தியாவின் ஒரே ஒரு மாஜிஸ்ட்ரேட்டிடம் கூட தமது பேச்சுத்திறனை நிரூபிக்க இயலாமல் போய் விட்டது.

இந்தத் தோல்விதான் காந்தியின் வாழ்க்கையில் முதன்முறையாக ஒரு மகத்தான திருப்பத்தை ஏற்படுத்தியது. இவரது செயலால் ஏமாற்றமடைந்த குடும்பத்தார் தூரத்து உறவினர் ஒருவரின் சட்டப் பிரச்சனைகளை கவனிப்பதற்காக அவரை தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பினார்கள். சில மாதங்களே தங்குவதென்று அங்குச் சென்ற காந்தி இருபது ஆண்டுகள் தங்கியிருந்தார். சுவாரசியம் இல்லாத, எதிர்ப்புணர்வு மிக்க அந்த நாட்டில் தான் காந்தி தத்துவார்த்தக் கோட்பாடுகளை உருவாக்கினார். இவை தான் அவரது வாழ்க்கைக்கும் இந்திய வரலாற்றுக்கும் திருப்புமுனையாயின.

1893 மே மாதத்தில் டர்பன் (Durban) துறைமுகத்தின் கப்பல் பாலத்தில், இளவயது காந்தி நடந்து வரும்போது, கடும் தவம் மேற்கொண்டு துறவறம் ஏற்கப் போகிறார் என்பதற்கான அறிகுறியே இல்லை. எதிர்காலத்தில் வறுமை எதிர்ப்பின் வழிகாட்டியாக விளங்கப் போகும் அவர், தென்ஆப்பிரிக்காவுக்குள் நுழையும் போது, லண்டன் இன்னர் டெம்பிள் (Inner Temple) வழக்கறிஞர் பட்டம் பெற்றதற்கு அடையாளமான மேலங்கியையும், அதன் மேல் வெள்ளை நிற கழுத்துப்பட்டையையும் அணிந்திருந்தார். யார் நலன்களைப் பாது காப்பதற்காக வந்திருக்கிறாரோ அந்தப் பணக்கார இந்திய வியாபாரியின் ஆவணங்கள் அவரது பெட்டிக்குள் திணிந்து கிடந்தன.

காந்தி வந்த ஒரு வாரத்துக்குப் பின் டர்பனிலிருந்து பிரிட்டோரியா (Pretoria)வுக்கு இரவு வேளையில் ரயில் பயணம் செய்த போது நடந்த சம்பவம் தான் தென்ஆப்பிரிக்காவுக்கு காந்தியைப் பற்றிய உண்மை அறிமுகமாக

அமைந்தது. நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த அனுபவமே தனது வாழ்க்கையை வடிவமைக்கப் பெரிதும் பயன்பட்டதாக காந்தி நினைவு கூர்ந்தார். பிரிட்டோரியா பயணத்தின் பாதி வழியில் அவர் பயணம் செய்த முதல் வகுப்பு பெட்டிக்குள் ஏறிய வெள்ளை மனிதர் ஒருவர் காந்தியை சரக்குகள் ஏற்றி வரும் பெட்டிக்குச் சென்று பயணம் செய்யுமாறு உத்தரவிட்டார். முதல்வகுப்புப் பயணத்துக்கான டிக்கெட் வைத்திருந்த காந்தி இதை நிராகரித்து விட்டார். அடுத்த நிலையத்தில் ரயில் நின்றபோது அந்த வெள்ளையர் ஒரு காவலரை அழைத்தார். நள்ளிரவுப் பொழுதில் கேவலமான முறையில் பெட்டிப் படுக்கைகளுடன் காந்தி ரயிலிலிருந்து வெளியே வீசியெறியப்பட்டார்.

பூட்டிய லக்கேஜ் பெட்டிக்குள் இருக்கும் ஓவர் கோட்டினை எடுத்துத் தருமாறு ரயில்வே நிலைய அதிகாரியைக் கேட்பதற்கும் அவரது கூச்ச சுபாவம் இடம் தராததால், காந்தி தன்னந்தனியாக, விளக்கொளியே இல்லாத ரயில் நிலையத்தில், அந்த இரவு முழுவதையும் குளிரில் நடுங்கியபடியே கழித்தார். முதன் முறையாக இனக் கொடுமையுடனான மோதலை அவர் எதிர்கொண்டார். மத்தியகால இளைஞன் வீரம் வேண்டி பிரார்த்தனை செய்தது போல், காந்தியும் தனக்கு தைரியமும் வழிகாட்டுதலும் அளிக்குமாறு கீதை அருளிய கடவுளிடம் வேண்டினார். மாரிட்ஸ்பர்க் (Maritzburg) என்ற அந்த சிறிய ரயில் நிலையத்தில் காலைப் பொழுது விடிந்த நேரத்தில் இதுவரை பயந்தாங்கொள்ளியாக இருந்த இளைஞர் தமது வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு முடிவை அப்போது மேற்கொண்டார். இனவெறிக்கு முற்றுப்புள்ளி வைக்க மோகன்தாஸ் காந்தி உறுதியெடுத்தார்.

ஒரு வாரம் கழித்து பிரிட்டோரியாவில் இருந்த இந்தியர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் முதன்முறையாக காந்தி உரையாற்றினார். பம்பாய் நீதிமன்றங்களில் கூச்ச சுபாவத்தால் அடங்கி வருந்தியிருந்த அந்த இளம் வழக்கறிஞர் இப்போது தனது நாவன்மையைக் கண்டறியத் தொடங்கினார். தங்களின் நலன்களைப் பாதுகாக்க இந்தியர்கள் ஒன்றுபட வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். இந்தப் பணியை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை அறிவதற்கு முதல்படியாக தங்களை ஒடுக்குவோரின் மொழியான ஆங்கிலத்தை அனைவரும் கற்கவேண்டும் என்றார். அன்றுமாலையே அந்தப் பணியை காந்தி துவக்கி விட்டார். சவரத்தொழிலாளி, குமாஸ்தா, வியாபாரி ஆகியோருக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்கத் துவங்கிய அந்தப் பணி பின்னாளில் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத்தரப் போகிறது என்பதை அப்போது அவர் உணரவில்லை. இந்தப் பணியில் விரைவிலேயே அவர் முதலாவது வெற்றியை ஈட்டினார் இதுதான் அடுத்த அரை நூற்றாண்டு வெற்றியின் துவக்கமாக இருந்தது. நல்ல உடையணிந்த இந்தியர்கள் தென் ஆப்பிரிக்க ரயில்வேயின் முதல் அல்லது இரண்டாம் வகுப்பில் பயணம் செய்யும் உரிமையை ரயில்வே நிர்வாகத்திடமிருந்து காந்தி பெற்றுத் தந்தார்.

தென் ஆப்பிரிக்காவுக்கு எந்தப் பணிநிமித்தம் சென்றாரோ அந்தப் பணி முடிந்த பிறகும் அங்கேயே தங்கியிருக்க காந்தி முடிவு செய்தார். தென் ஆப்பிரிக்காவில் உள்ள இந்திய சமூகத்தினர் நலன் காப்பதிலும் வெற்றிகரமான வழக்கறிஞர் தொழிலிலும் அவர் சிறந்து விளங்கினார். இனப்பாகுபாடு காட்டும் அநீதி இருந்த போதும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு விசுவாசமாகவே இருந்தார். போயர் யுத்தத்தின் போது ஆம்புலன்ஸ் படைப்பிரிவுக்கு அவரே தலைமை தாங்கினார்.

தென் ஆப்பிரிக்காவுக்கு வந்து பத்து ஆண்டுகளுக்குப் பின், மற்றொரு நீண்ட தூர ரயில் பயணம் காந்தியின் வாழ்க்கையில் இரண்டாவது பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தியது. 1904ஆம் ஆண்டு ஒரு நாள் மாலை ஜோகன்ஸ்பர்க் (Johannesburg) டர்பன் ரயிலில் அவர் பயணம் செய்தார். அந்த நெடுந்தூரப் பயணத்தின் போது, ஆங்கிலேய நண்பர் ஒருவர், ஜான் ரஸ்கின் எழுதிய 'அன் டு திஸ் லாஸ்ட்' (Unto This Last - கடையருக்கும் கடைத்தேற்றம்) என்ற நூலை படிக்கக் கொடுத்தார்.

இடை இடையே மரங்களுடன் புல்வெளிப்பரப்பு நிறைந்த தென் ஆப்பிரிக்காவின் நிலப்பரப்பினூடே ரயில் சென்று கொண்டிருந்த போது இரவு முழுவதும் கண் விழித்து அமர்ந்து அந்த நூலினை காந்தி படித்து முடித்தார். புதிய பாதையைக் காட்டுவதாக அது இருந்தது. அடுத்த நாள் காலையில் ரயில் டர்பன் நிலையத்தை அடைந்த போது காந்தி வீரஞ்செறிந்த ஒரு சபதம் மேற்கொண்டார். தனது சொத்துக்கள் அனைத்தையும் துறந்து விட்டு ரஸ்கின் கொள்கைப்படி வாழ்க்கையை நடத்துவது என்பதுதான் அது.

மனிதர்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்கான ஒரு கருவிதான் சொத்து என்று ரஸ்கின் எழுதியிருந்தார். நீதிமன்றத்தில் வாதாடும் வழக்கறிஞரைப் போலவே மண்வெட்டியெடுத்து வேலை செய்யும் தொழிலாளியும் இந்த சமூகத்துக்கு உண்மையில் சேவை செய்பவன்தான். தொழிலாளியின் வாழ்க்கையும் நிலத்தை உழும் விவசாயியின் வாழ்க்கையும் மதிப்பு மிக்கவை.

காந்தி எடுத்த முடிவு மிகவும் முக்கியமானது. ஏனெனில் அந்த நேரத்தில் அவர் வழக்கறிஞர் தொழிலின் மூலம் ஆண்டுக்கு 5000 பவுண்ட் சம்பாதித்துக் கொண்டிருந்த செல்வந்தர். தென் ஆப்பிரிக்காவில் அந்த நேரத்தில் இது மிகப்பெரும் செல்வமாகும்.

இருப்பினும் இரண்டு ஆண்டுகளுக்கு காந்தியின் மனதில் சந்தேகங்கள் அலைபாய்ந்து கொண்டிருந்தன. ஆசையை ஒழிப்பதும், பொருள்கள் மீதான பற்றினைத் துறப்பதும் ஆன்மீக விழிப்புணர்வுக்குத் தேவையான படிக்கற்கள் என்ற பகவத் கீதையின் தத்துவம் அவரது மனதில் வட்டமிட்டபடியே இருந்தது. ஏற்கெனவே சில சுய பரிசோதனைகளிலும் அவர் ஈடுபட்டார். தலைமுடியைத் தானே வெட்டிக் கொண்டார்; துணிகளைத் துவைத்துக் கொண்டார், கழிப்பறையை சுத்தம் செய்து கொண்டார். கடைசிக் குழந்தைப் பிறப்பின் போது தனது மனைவிக்கு அவரே பிரசவம் பார்த்தார். ரஸ்கினின் புத்தகப் பக்கங்களில் தனது சந்தேகங்களுக்கு காந்தி விடைகண்டார்.

ஒரு வாரத்துக்குப்பின் டர்பனிலிருந்து பதினான்கு மைல் தூரத்தில் உள்ள போனிக்ஸ் (Phoenix) அருகே நூறு ஏக்கர் பரப்பில் அமைந்த ஒரு விவசாய நிலப்பகுதியில் காந்தி தனது குடும்பத்தையும் சில நண்பர்களையும் குடியமர்த்தினார். அந்தப் பகுதியில் புதர்கள் நிறைந்த சிதிலமடைந்த ஒரு குடிலில் அவர்கள் தங்கியது துயரமானது. அங்கே ஒரு கிணறும், சில ஆரஞ்சு மல்பெரி மற்றும் மாமரங்களும் இருந்தன. பாம்புகளும் நிறைய இருந்தன. மரணம் வரை தொடர்ந்த காந்தியின் எளிய வாழ்க்கைமுறை இங்கே தான் ஆரம்பித்தது. சொத்துக்களைத் துறத்தல், எளிய முறையில் மனிதத் தேவை களுக்கானவற்றை முயன்று தேடுதல் என்பதோடு அனைத்துத் தொழிலாளர் களும் மதிப்பு மிக்கவர்கள், அனைத்துப் பொருள்களும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்பதும் அவரது சமூக வாழ்க்கையில் இடம் பெற்றன.

இருப்பினும் கடைசியாக ஒன்றைத் துறப்பது மட்டும் மிகவும் சிரமமாக இருந்தது. அது தான் பாலுணர்வைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளும் பிரம்மச்சர்ய விரதம். பல ஆண்டுகளாக காந்தியின் சிந்தனையை இது ஆக்ரமித்திருந்தது.

அவரது தந்தையின் மரணம் ஏற்படுத்திய வடு, இனிமேல் குழந்தைகள் பெற்றுக் கொள்ளக் கூடாது என்ற எண்ணம், மேலெழுந்து வந்த சமய உணர்வுகள் ஆகிய இவையெல்லாம் இந்த முடிவை நோக்கி அவரை அழைத்துச் சென்றன. 1906ஆம் ஆண்டு கோடைகாலத்தின் ஒரு மாலை வேளையில் தனது மனைவி கஸ்தூர்பாயிடம் தாம் பிரம்மச்சர்ய விரதம் மேற்கொள்ளப் போவதை உறுதியுடன் அறிவித்து விட்டார். பதின்மூன்றாவது வயதில் களிப்புடன் தொடங்கிய மோகன் தாஸ் காந்தியின் தாம்பத்ய வாழ்க்கை 37வது வயதில் ஒரு முடிவுக்கு வந்தது.

உடலுறவு இச்சைகளை அடக்கிக் கொள்வதற்கும் மேலான பொருள் பிரம்மச்சர்யத்துக்கு இருப்பதாக காந்தி கருதினார். அனைத்துப் புலன்களையும் கட்டுப்படுத்துவதுதான் அது. உணர்ச்சியை, உணவை, பேச்சைக் கட்டுப்படுத்துவது; கோபத்தை, வன்முறையை, வெறுப்புணர்வை நசுக்குவது; கீதையின் தத்துவமான பற்றற்ற நிலைக்கு நெருக்கமாக ஆசைகளற்ற நிலையை அடைவது என்பதெல்லாமும் பிரம்மச்சர்யமே. ஆன்மீகப் பாதையில் அவரின் தீர்மானகரமான செயலாக இது அமைந்தது. சுயமாகவே இந்த மாற்றத்துக்கு அவர் உட்பட்டார். பிரம்மச்சர்யம் என்ற கற்பு நிலைக்காக சபதமெடுத்ததால் ஏற்பட்ட மனப்போராட்டம் போல் வேறெந்த சபதத்தாலும் காந்திக்கு ஏற்படவில்லை. அவரது வாழ்க்கையின் எஞ்சிய நாள் முழுவதும் ஏதாவது ஒரு வடிவத்தில் இந்தப் போராட்டம் அவருள் நடந்து கொண்டேதான் இருந்தது.

தென் ஆப்பிரிக்காவில் முதல் வாரத்தில் இனவெறிக்கு எதிராக நடத்திய போராட்டத்தின் போது காந்தி தெளிவுபடக் கூறிய இரண்டு கொள்கைகள் தான் அவருக்கு உலகப் புகழைப் பெற்றுத்தந்தன. அவை அஹிம்சையும், ஒத்துழையாமையும்.

பைபிளில் இடம் பெற்ற ஒரு பகுதிதான் முதன் முதலில் காந்தியை அஹிம்சை பற்றி சிந்திக்க வைத்தது. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக்காட்டு என்று கிறிஸ்து தனது சீடர்களுக்கு வழங்கிய அறிவுரையால் அவர் மிகவும் கவரப்பட்டார். நிறைய வெள்ளையர்கள் அடித்த போது அதையெல்லாம் தன்னடக்கத்துடன் தாங்கிக் கொண்ட அந்தக் குள்ள மனிதர் தமது கொள்கையை தாமே பின்பற்றியிருக்கிறார். கண்ணுக்குக் கண் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தால் பார்வையற்றவர்களின் உலகத்தைத் தான் உருவாக்க முடியும் என்று அவர் கூறினார். ஒரு மனிதனின் தலையைச் சீவுவதன் மூலம் அவனது பழக்கங்களை மாற்றிவிட முடியாது. வன்முறை என்பது வன்முறையாளனைக் காட்டுமிராண்டியாக்குகிறது; வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களிடம் கசப்புணர்வை வளர்க்கிறது. நல்ல உதாரணங்களைக் காட்டி மனமாற்றத்தைத் தூண்டுவதும், மனித பலத்தைக் கொண்டு மனிதர்களைப் பிரிப்பதற்குப் பதிலாக கடவுள் பலத்தைக் கொண்டு மனிதர் களை இணைப்பதுமான தத்துவத்தையே காந்தி தேடினார்.

இன்னமும் பாதி அளவிலேயே உருவாகியிருந்த அவரது கோட்பாடுகளைச் சோதனை செய்து பார்க்க 1906 இலையுதிர் காலத்தில் தென்னாப்பிரிக்க அரசு அவருக்கு ஒரு வாய்ப்பை அளித்தது. எட்டு வயதுக்கு மேற்பட்ட அனைத்து

இந்தியர்களும் அரசிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும்; விரல் ரேகையைப் பதிந்து விசேஷமான அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற சட்டம்தான் அந்த சந்தர்ப்பத்தை அளித்தது. செப்டம்பர் 11ஆம் நாள் ஜோஹன்ஸ்பர்கில் உள்ள எம்பயர் தியேட்டரில் கோபா வேசத்துடன் கூடியிருந்த இந்தியர்கள் முன் தோன்றிய காந்தி இந்த சட்டத்தை எதிர்ப்பது என்ற நிலையெடுத்தார்.

இந்த சட்டத்துக்குக் கீழ்ப் படிந்தால் தங்கள் சமூகத்தின் அழிவுக்கே அது வழிவகுக்கும் என்று அவர் கூறினார். 'ஒரே ஒரு வழிதான் எனக்குத் தெரிகிறது, இறந்து போகலாம் ஆனால் இந்த சட்டத்துக்கு கீழ்ப்படிதல் கூடாது' என்று அவர் அறிவித்தார். விளைவுகள் எதுவாக இருந்தாலும் பரவாயில்லை என்று அநீதியான ஒரு சட்டத்தை எதிர்ப்பதற்குக் கடவுள் முன் உறுதியாக சபதம் எடுத்து பொதுமக்கள் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியது அவரது வாழ்க்கையில் இதுதான் முதல் தடவையாகும். சட்டத்தை எப்படி எதிர்க்க வேண்டும் என்பது பற்றி அங்கே குழுமியிருந்தவர்களுக்கு காந்தி விளக்கவில்லை. உண்மையில் அவருக்கே அது பற்றி ஏதும் தெரியாது. ஒன்றுமட்டும் தெளிவு - வன்முறையற்ற எதிர்ப்பு என்பதுதான் அது.

எம்பயர் தியேட்டரில் பிறந்த அரசியல் சமூகப் போராட்டத்துக்கான புதிய கொள்கை சத்யாக்ரகம் வாய்மையின் சக்தி - என்று பெயர் பெற்றது. பதிவு முறைகளைப் புறக்கணிக்கவும் பதிவு மையங்களில் அமைதியாக மறியல் செய்யவும் காந்தி மக்களைத் திரட்டினார். வாழ்க்கையில் பலமுறை சிறைத்தண்டனைகளைப் பெற்றிருக்கும் காந்திக்கு இந்தச் செயல்கள் தான் முதன்முறையாக சிறைத் தண்டனையைப் பெற்றுத் தந்தது.

சிறையில் இருக்கும் போது காந்தியின் சிந்தனையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தப் போகும் உலகின் மிகச்சிறந்த நூல்களில் இரண்டாவதான ஹென்றி தோரோவின் 'சிவில் ஒத்துழையாமை' என்ற நூலை அவர் படித்தார்.* அடிமை முறையைப் பாதுகாக்கும் அமெரிக்க அரசை எதிர்த்துக் கொண்டும் அது மெக்சிகோவில் நடத்தும் அநீதிப்போருக்கு எதிராகப் போராடிக் கொண்டும் இருந்த தோரோ, (Thoreau) நியாயமற்ற சட்டங்களைப் புறக்கணிக்கவும் தாங்க முடியாத கொடுமைகள் செய்யும் அரசுடன் ஒத்துழைப்பதை மறுக்கவும் ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு என்றார். சட்டத்தை மதிப்பதை விட நேர்மையாக இருப்பது மிகவும் பெருமைக்குரியது என்றும் அவர் கூறினார்.

முன்னமேயே கிளர்ச்சியுற்றிருந்த காந்தியின் சிந்தனைகளுக்கு தோரோவின் கட்டுரை கிரியா ஊக்கியாக அமைந்தது. சிறையிலிருந்து விடுதலையான அவர், டிரான்ஸ்வால் (Transvall) நிர்வாகம் இந்தியர்களை அனுமதிக்காமல் எல்லைகளை மூடிவிடுவதென்று எடுத்துள்ள முடிவை எதிர்த்து இந்த வகைப் போராட்டங்களை நடத்திப் பார்ப்பது என்று முடிவு செய்தார். 1913 நவம்பர் 6இல் 2037 ஆண்கள் 127 பெண்கள், 57 சிறார்கள் ஆகியோருக்கு தலைமை தாங்கி டிரான்ஸ்வால் எல்லைப்பகுதிக்கு காந்தி அமைதிப்பயணம் மேற்கொண்டார்.

---

* மூன்றாவது நூல் டால்ஸ்டாயின் 'கடவுளின் ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது' என்பதாகும். ஒருவரது நீதிக்கோட்பாடுகளை அன்றாட வாழ்க்கையிலும் பயன்படுத்த வேண்டும் என்ற டால்ஸ்டாயின் வற்புறுத்தலை காந்தி பெரிதும் மதித்தார். அஹிம்சை, கல்வி, உணவுப்பழக்கம், தொழில் மயம் ஆகியவற்றில் இருவரும் வியக்கத்தக்க வகையில் ஒரே கருத்தைக் கொண்டிருந்தனர். டால்ஸ்டாயின் மரணத்துக்கு முன் இருவரும் கடிதத் தொடர்பு கொண்டிருந்தனர்.

*அவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படுவது நிச்சயம்; அவர்களுக்குக் கிடைக்கப் போகிற பரிசும் கொடூரமான அடிதான்.*

*துயரம் தோய்ந்த, அழுக்கு உடைகள் அணிந்த அந்த மக்கள் நம்பிக்கையோடு அவருக்குப் பின்னால் அணிவகுப்பதைக் கவனித்தார். இது காந்திக்கு ஒளிமயமான எழுச்சியூட்டும் இன்னொரு அனுபவமாக இருந்தது. இரங்கத்தக்க இந்த மக்கள் அடையப் போவது ஏதுமில்லை; துன்பத்தைத் தவிர. எல்லைப்பகுதியில் கண்காணிப்புக்கு நின்றிருந்த ஆயுதம் தாங்கிய வெள்ளைப் படையினர் ஒருவேளை இவர்களைக் கொன்றும்விடலாம். இந்தப் பயணத்துக்கான காரணமும், அவர்மீது கொண்டிருந்த நம்பிக்கையும், சுட்டாலும் பரவாயில்லை என்று அவரது காலடிகளைப் பின்பற்றி அவர்களை நடக்கச் செய்தன. காந்தியின் வார்த்தைகளில் சொல்வதென்றால் 'தம்மை வருத்திக் கொண்டு எதிரிகளின் மனங்களை இளகச் செய்ய அவர்கள் தயாராய் இருந்தார்கள்.'*

*தீர்மானகரமான அவர்களின் அமைதியைக் கண்டபோது மக்கள் திரளின் அஹிம்சைப் போராட்டம் எவ்வளவு சக்தி மிக்கதாக இருக்கும் என்பதை காந்தி சட்டென்று புரிந்துகொண்டார். டிரான்ஸ்வால் எல்லைப்பகுதியில் அவர் துவக்கியுள்ள இந்த இயக்கம் ஏராளமான வாய்ப்புகளை உருவாக்கப் போவது உண்மை என்பதையும் உணர்ந்தார். இப்போதைய நவம்பர் நாளில் சில நூறு பேர்களாக உள்ளவர்கள், அஹிம்சைக் கொள்கையில் வைக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையால் அடக்கமுடியாத பேரலையாய் பல நூறு ஆயிரம் பேர்களாக மாறுவார்கள் என்பதையும் இது காட்டியது.*

*அடக்குமுறை, அராஜகம், சவுக்கடி, சிறைத்தண்டனை, பொருளாதாரத் தடைகள் என்பவை அவர்களின் நடவடிக்கைகளாகத் தொடர்ந்தன. ஆனால் இவையெல்லாம் இயக்கத்தை உடைக்க முடியவில்லை. ஆப்பிரிக்காவில் 1914ஆம் ஆண்டு அவர் நடத்திய சிலுவைப் போருக்கு ஏறத்தாழ முழு வெற்றி கிடைத்தது. இனி அவர் தாயகம் திரும்பலாம்.*

★

*1914 ஜூலையில் தென் ஆப்பிரிக்காவிலிருந்து புறப்பட்ட காந்தி கூச்ச சுபாவத்துடன் இளம் வழக்கறிஞராக டர்பனில் வந்திறங்கிய நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டவராக இருந்தார். அன்பான வரவேற்பு அளிக்காத அந்த மண்ணில் அவருக்குரிய மூன்று ஆசான்களாக ரஸ்கின், டால்ஸ்டாய், தோரோ ஆகியோரைக் கண்டறிந்தார். அவரது அனுபவத்தின் மூலம், அஹிம்சை - சிவில் ஒத்துழையாமை என்ற இரண்டு கொள்கைகளைக் கொண்டு அடுத்த முப்பது ஆண்டுகளில் உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த சாம்ராஜ்யத்தைப் பணியவைக்கப் போகிறார்.*

*1915 ஜனவரி 9ஆம் தேதி பாம்பாயில் உள்ள இந்திய நுழைவாயிலின் வில் வட்ட வளைவுகளின் வழியே காந்தி வந்த போது மெலிந்த உடலுடைய அவருக்கு ஏராளமான மக்கள் திரண்டு ஒரு காவியத் தலைவனுக்குரிய வரவேற்பை அளித்தனர். பேரரசின் கலைத்திறமிக்க நுழைவாயிலைக் கடந்த அந்தத் தலைவர் வைத்திருந்த பெட்டியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள் இருந்தது. காந்தி கைப்பட எழுதிய கட்டுரையைக் கொண்ட ஒரு*

பெரிய காகிதக் கட்டுதான் அது. அதன் தலைப்பு ஹிந்த் ஸ்வராஜ் இந்தியர்களின் சுயாட்சி என்ற பொருளுடைய இந்தக் கட்டுரை ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தியது. காந்தியைப் பொறுத்தவரை அவரது வாழ்க்கையின் மெய்யான போராட்டத்துக்கு ஒரு பயிற்சிக் களமாக மட்டுமே ஆப்பிரிக்கா அமைந்தது.

தொழில் நகரமான அகமதாபாத் அருகே சபர்மதி ஆற்றின் கரைகளில் காந்தி ஒரு ஆசிரமத்தை அமைத்து அதில் குடியேறினார். தென் ஆப்பிரிக்காவில் அமைத்ததைப் போல இங்கேயும் ஒரு கூட்டுப் பண்ணையை அமைத்தார். எப்போதும் போலவே காந்தியின் கவலையெல்லாம் ஏழைகளைப் பற்றியதாகவே இருந்தது. பிரிட்டிஷ் நிலப்பிரபுக்களின் கசக்கிப் பிழியும் கொடுமையை எதிர்த்து பீகார் அவுரி விவசாயிகளையும், வரிச்சுமையை எதிர்த்து பம்பாயின் வறட்சி பாதித்தப் பகுதி விவசாயிகளையும், முதலாளிகளின் கொடுமைகளை எதிர்த்து அகமதாபாத் ஜவுளி ஆலைத் தொழிலாளர்களையும் காந்தி அணி திரட்டினார். இவர்களின் பங்களிப்பால்தான் ஆசிரமம் நிலை பெற்றது. முதன்முறையாக இப்போது தான், இந்தியத் தலைவர் ஒருவர் தாமே முன்வந்து இந்திய மக்களின் துன்ப துயரங்களை அறிவதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். காந்தி வாழ்நாள் முழுவதும் பெற்றிருக்கப் போகிற 'மகாத்மா' என்ற பட்டத்தை நோபல் பரிசு பெற்ற இந்தியரான ரவீந்திரநாத் தாகூர் அவருக்கு அளித்தார். 'பக்கிரி வேடத்தில் இருந்த மாபெரும் ஆத்மா' என்று தாகூர் அவரை அழைத்தார்.

முதலாம் உலகப் போரில் இந்தியர்களில் பலரைப் போலவே காந்தியும் பிரிட்டனிடம் விசுவாசமாக இருந்தார். இதற்குப் பதிலாக இந்தியாவின் தேசியவாத உணர்வுகளுக்கு பிரிட்டன் அனுதாபத்துடன் செவிசாய்க்கும் என்று அவர் நம்பினார். காந்தியின் நம்பிக்கை தவறாகிப் போனது. அவர் நம்பியதற்கு மாறாக இந்திய விடுதலைக்கான போராட்டத்தை அடக்கி ஒடுக்க பிரிட்டன் 1919இல் ரௌலட் சட்டத்தை நிறைவேற்றியது. இந்தியாவின் நம்பிக்கைகளை பிரிட்டன் நிராகரித்ததற்கு எதிராக என்ன நடைமுறையைக் கையாள்வது என்பதற்கான விடைதேடி காந்தி பல வாரங்கள் சிந்தனையில் ஆழ்ந்தார். இதற்கான பதில் ஒரு கனவில் அவருக்குக் கிடைத்தது. அது அறிவு பூர்வமானது. மலைப்பை ஏற்படுத்தும் அளவுக்கு எளிதானது. இந்தியா இதனை எதிர்க்கும்; அமைதியாக - தனித்தன்மை வாய்ந்த மயான அமைதியாக எதிர்க்கும் என்று அவர் பிரகடனம் செய்தார். எவர் ஒருவரும் இப்படிச் செய்யலாம் என்று கனவிலும் கண்டிராத செயலை அவர் செய்யப்போகிறார். துக்கத்தில் உறைந்து போன ஒரு நாளாக, இந்தியா முழுவதும் ஸ்தம்பித்துப் போகும் ஹர்த்தால் நடத்தப் போகிறார்.

காந்தியின் மற்ற பல அரசியல் நடவடிக்கைகள் போலவே இந்தத் திட்டமும் அவரது மேதைமையைப் பிரதிபலிப்பதாக இருந்தது. இதனை ஒரு சில வார்த்தைகளால் விளக்கி சாதாரண மக்களையும் புரிந்து கொள்ளச் செய்து விட முடியும். மிகச் சாதாரண செயல்கள் மூலம் இதைச் செயல்படுத்தியும் விடலாம். இதற்காக அவரது ஆதரவாளர்கள் சட்டத்தை மீற வேண்டியதில்லை; போலீஸ்காரர்களோடு மோத வேண்டியதில்லை. அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் எதையும் செய்யாமல் இருப்பது மட்டுமே. கடைகளை மூடிவிட்டு, வகுப்பறைகளிலிருந்து வெளியேறி கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனை செய்யலாம் அல்லது வீட்டிலேயே இருந்து கொள்ளலாம்.

எதிர்ப்புக்கான அவரது அழைப்பை ஏற்று இந்தியர்கள் தங்கள் ஒற்றுமையை இந்த வழிகளில் வெளிப்படுத்த முடியும். 1919 ஏப்ரல் 7ஆம் தேதியை ஹர்த்தால் நடத்தும் நாளாக அவர் தெரிவு செய்தார். இதுதான் இந்திய அரசுக்கு எதிராக அவர் மேற்கொண்ட முதல் நடவடிக்கை. இந்தியா ஸ்தம்பித்து நிற்கட்டும்; மவுனம் சாதிக்கும் இந்திய மக்களின் பேச்சற்ற செய்தியை அதன் ஒடுக்கு முறையாளர்கள் கவனிக்கட்டும் என்று காந்தி அறிவித்தார்.

துரதிருஷ்டவசமாக எல்லா இடங்களிலும் மக்கள் அமைதியாக இருந்து விடவில்லை. கலவரங்கள் வெடித்தன. மிகவும் மோசமான சம்பவம் பஞ்சாப் மாகாணம் அமிர்தசரசில் நடந்தது. அந்த நகரில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பைக் காட்டுவதற்காக, ஏப்ரல் 13ஆம் தேதியன்று, கற்களும் இடிபாடுகளும் நிறைந்த ஜாலியன் வாலாபாக் என்று அழைக்கப் பட்ட வளாகத்துக்குள் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் கூடி, அமைதியாக ஆனால் சட்டவிரோதமான கூட்டத்தை நடத்தினார்கள்.

இரண்டு கட்டிடங்களுக்கு இடையே ஒரு குறுகியப் பாதையின் முனையில் இருந்த அந்த வளாகத்துக்கு ஒரே ஒரு வழிமட்டும் தான் இருந்தது. கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் அமிர்தசரசின் போர்க்காலச் சட்ட அமலாக்க அதிகாரி பிரிகேடியர் ஆர்.இ. டையர் (R.E. Dyer) ஐம்பது வீரர்களுக்குத் தலைமை தாங்கி அந்த வழியாக நடந்தார். வாயிலின் இரண்டு பக்கங்களிலும் படை வீரர்களை நிறுத்தினார். பாதுகாப்பற்ற இந்தியர்கள் மீது எந்தவித முன்னெச்சரிக்கையும் செய்யாமல் எந்திரத்துப்பாக்கிகளால் சுட்டார். அந்த வளாகத்தில் சிக்கியிருந்த இந்தியர்கள் கருணை காட்டுமாறு அலறிய போதும் பத்து நிமிட நேரம் இராணுவத்தினர் அவர்கள் மீது துப்பாக்கியால் சுட்டுக் கொண்டேயிருந்தார்கள். 1650 சுற்று அவர்கள் சுட்டனர். அவர்களின் தோட்டக்கள் 1516 பேரைக் கொன்றன அல்லது காயப்படுத்தின. 'இன்பகரமான நல்ல செயலை செய்து முடித்து விட்டதாக' திருப்தி அடைந்த டையர், ஜாலியன் வாலாபாகிலிருந்து தனது படையினருடன் வெளியேறினார்.

அவரது 'இன்பகரமான நல்ல செயல்' ஆங்கிலேயர்கள் இந்தியர்கள் இடையேயான உறவுகளின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையானது; 63 ஆண்டுகளுக்கு முன் நடந்த சிப்பாய்க்கலகத்தின் போது ஏற்பட்டதைவிடவும் முக்கியமானதாக இது இருந்தது.*

காந்தியைப் பொறுத்த வரை, தனது போராட்டக் கொள்கைகளை யாருக்காக விட்டுக் கொடுத்தாரோ அந்தப் பேரரசின் கடைசி நம்பிக்கைத் துரோகம் இதுதான். இந்திய தேசிய உணர்வுகளின் வெளிப்பாடாகப் பின்னர் உருவெடுத்த அந்த இயக்கத்தின் முழு கட்டுப்பாட்டையும் தம் வசம் கொண்டு வர காந்தி அனைத்து முயற்சிகளையும் செய்தார்.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரானப் போராட்டத்தின் குவிமையமாக காங்கிரஸ் கட்சி ஒரு நாள் மாறும் என்ற எண்ணமும் கூட

* அவரது செயல்களுக்காக டையர் கண்டனம் செய்யப்பட்டார். ராணுவத்திலிருந்து பதவி விலகுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். இருப்பினும் முழுமையான ஓய்வுகாலப் பயன்களையும் மற்ற உரிமைகளையும் பெற அவர் அனுமதிக்கப்பட்டார். அவரது செயல் இந்தியாவில் இருந்த பிரிட்டிஷார் பலரால் பாராட்டப்பட்டது. அவர் முன் கூட்டியே பதவியிலிருந்து நீக்கப்பட்டதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய, அவரது செயலை மெச்சியவர்கள், நாடு முழுவதும் இருந்த 'கிளப்'கள் மூலம் 26,000 பவுண்ட் நிதி திரட்டினார்கள். அந்த நாளில் இது மிகப்பெரும் தொகையாகும்.

1885இல் இந்தக் கட்சியை நிறுவிய கவுரமிக்க ஆங்கிலேய சிவில் அதிகாரிக்கு நிச்சயம் அச்சத்தைக் கொடுக்கும். இந்தியாவில் மெல்ல வளர்ந்து வந்த படித்த வர்க்கத்தின் எதிர்ப்புணர்வை மட்டுப்படுத்தும் வடிகாலாகவும், இந்தியாவில் இருந்த ஆங்கிலேய ஆட்சியாளர்களுடன் கண்ணியத்துடன் பேச்சு நடத்தவும் பொறுப்பான ஒரு அமைப்பாகத்தான் காங்கிரஸ் கட்சி உருவாக்கப்பட்டது. வைஸ்ராயின் ஆசியுடன் செயல்பட்ட ஆக்டாவியன் ஹ்யூம் (Octavian Hume) இந்த அமைப்பை உருவாக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்.

காந்தி அரசியல் அரங்குக்கு வந்தபோது உண்மையாக காங்கிரஸ் கட்சி அப்படித்தான் இருந்தது. அவரது அஹிம்சைக் கொள்கைக்கு இசைந்து செயல்படும் மக்கள் இயக்கமாக அதனை மாற்றத் தீர்மானித்தார். அதற்கேற்ற செயல்திட்டம் ஒன்றை 1920ஆம் ஆண்டு கல்கத்தாவில் காங்கிரஸ் கட்சி முன் காந்தி சமர்ப்பித்தார். இந்தத் திட்டம் அபரிமிதமான பெரும்பான்மையுடன் ஏற்கப்பட்டது. அந்தக் கணத்திலிருந்து அவரது மரணம் வரை கட்சியில் பதவி வகித்தாலும் இல்லையென்றாலும், காந்திதான் காங்கிரசின் மனசாட்சியாக வழிகாட்டியாக விளங்கினார். சுதந்திரப் போராட்டத்தின் ஒப்பற்றத் தலைவராகவும் திகழ்ந்தார்.

முன்பு நாடு தழுவிய ஹர்த்தாலுக்கு விடுத்த அழைப்பைப் போலவே காந்தியின் புதிய செயல் திட்டமும் சக்தி மிக்க எளிய செயல்தான். அரசியல் புரட்சிக்கான ஒரு வார்த்தைத் திட்டம். அதுதான் ஒத்துழையாமை. பிரிட்டிஷாருடையது எதுவாயினும் அதனை இந்தியர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று காந்தி அறிவித்தார். மாணவர்கள் பிரிட்டிஷ் பள்ளிகளையும் வழக்கறிஞர்கள் பிரிட்டிஷ் நீதிமன்றங்களையும் - தொழிலாளர்கள் பிரிட்டிஷ் பணிகளையும் - வீரர்கள் பிரிட்டிஷார் வழங்கும் விருதுகளையும் புறக்கணிக்க வேண்டும் என்றார். காந்தியே இதற்குத் தலைமை தாங்கி வழிகாட்டினார். போயர் யுத்தத்தில் ஆம்புலன்ஸ் செயல்வீரராக இருந்ததற்கு அவருக்கு அளிக்கப்பட்ட இரண்டு பதக்கங்களை வைஸ்ராயிடம் திருப்பி அளித்து விட்டார்.

அனைத்துக்கும் மேலாக இந்தியாவில் பிரிட்டிஷார் கோலோச்ச அடித்தளமாக இருக்கும் பொருளாதாரத் தூணைத் தகர்த்து அதிகாரத்தை பலவீனப் படுத்துவது தான் அவரின் முக்கிய நோக்கம். இந்திய கச்சாப் பருத்தியை மிகக் குறைவான விலைக்குக் கொள்முதல் செய்த பிரிட்டன் அதனை லங்காஷயரில் உள்ள ஜவுளி ஆலைகளுக்குக் கப்பல்களில் அனுப்பியது. அங்கு ஜவுளித் துணிகளாக நெய்யப்பட்டு அவை கப்பல்கள் மூலம் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டு சந்தையில் கொழுத்த லாபத்துக்கு விற்கப்பட்டன. இதனால் பிரிட்டிஷ் அல்லாதவரின் ஜவுளி ஆலைகள் அழிந்தன. கடைந்தெடுத்த ஏகாதிபத்திய சுரண்டல் முறையாக இது இருந்தது. சுரண்டலுக்குக் காரணமான தொழில் புரட்சியால் விளைந்த பெரிய ஜவுளி ஆலைகளை எதிர்த்துப் போராட காந்தி கையாளவிருந்த ஆயுதம் இதற்கு நேர்மாறானது. மரத்தால் செய்யப்பட்ட பழங்கால ராட்டைதான் அது.

வெளிநாட்டுத் துணிகளைப் புறக்கணித்து லட்சக்கணக்கான ராட்டைகள் நூற்ற நூலால் நெய்யப்பட்ட முரட்டு காதித் துணியை இந்தியாவில் உள்ள அனைவரையும் உடுத்தச் செய்வதற்கு அடுத்த கால் நூற்றாண்டு காலம் காந்தி அரும்பாடுபட்டார். கிராமக் கைவினைத் தொழில்கள் அழியத் தொடங்கியது

தான் இந்திய நாட்டுப்புறங்களின் துயரத்துக்குக் காரணம் என்பதை அவர் அறிந்திருந்தார். நூல் நூற்கும் ராட்டை மூலம் இப்போது இந்தியாவின் நாட்டுப்புறப் பகுதிகளில் குடிசைத் தொழில் விரிவடைந்து ஒரு மறுமலர்ச்சி ஏற்படுவதை அவர் கண்டார். நகர மக்களைப் பொறுத்தவரை ராட்டையில் நூல் நூற்பது உடலுழைப்பிலிருந்து ஒரு வகை ஆன்மீக மீட்பாக இருந்தது. அரைமிலியன் (5 லட்சம்) கிராமங்களைக் கொண்ட அந்த உண்மையான இந்தியாவுடன் தினமும் அவர்களின் தொடர்பையும் நினைவு படுத்த உதவியது.

அவரது மனதுக்குப் பிடித்த கொள்கைகள் முழுவதையும் பரப்புவதற்கு ராட்டையின் சக்கரம் ஒரு வழியானது. இதன் ஒரு பகுதியாக சுகாதாரத்தையும் தூய்மையையும் மேம்படுத்த, கிராமவாசிகள் திறந்தவெளிக்குப் பதிலாக கழிப்பறைகளைப் பயன்படுத்துவதற்கான போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். மலேரியாவை எதிர்த்துப் போராட தூய்மையைக் கற்றுக் கொடுத்தார். எளிமையான கிராமப்பள்ளிகளை அமைத்தார். இந்து முஸ்லீம் ஒற்றுமையையும் அவர்களுக்குப் போதித்தார். சுருங்கச் சொன்னால் அவரின் ஒட்டுமொத்தத் திட்டம் இந்தியாவின் பழைய கிராம வாழ்க்கையை மீண்டும் உருவாக்குவதுதான்.

நூல் நூற்பதில் காந்தி தன்னைத் தானே ஒரு உதாரணமாக்கினார். ஒவ்வொரு நாளும் அரைமணி நேரம் நூல் நூற்பதற்கு ஒதுக்கினார். இதேபோல் தனது சீடர்களையும் செய்யுமாறு வற்புறுத்தினார். நூற்பு வேள்வி பாதியளவு மதச்சடங்காகவும் ஆனது. இதற்கு ஒதுக்கிய நேரம் பிரார்த்தனைக்கு சிந்தனை செய்ய ஒரு இடைவேளை போலவும் இருந்தது. ராட்டையின் சக்கரம் கிளிக் - கிளிக் கிளிக் என்று சுற்றும் ஒலிக்கேற்ப மகாத்மாவும் ராமா ராமா ராமா (கடவுள்) என்று முணு முணுப்பார்.

1921 செப்டம்பரில் காந்தி தமது இயக்கத்துக்கு ஒரு இறுதி உந்துவிசையை அளித்தார். வாழ்க்கையின் எஞ்சிய காலத்தில் ராட்டையில் நூற்ற நூலால் தயாரிக்கப்பட்ட அரை ஆடையையும் மேலே ஒரு துண்டையும் அணிவதைத் தவிர வேறெதையும் அணியப் போவதில்லை என்று உறுதியாக அறிவித்தார். ராட்டையில் உற்பத்தியான பருத்தி நூலான காதி இந்திய விடுதலை இயக்கத்தின் சீருடையாகிவிட்டது. ஏழையும் பணக்காரரும், பெரியவரும் சிறியவரும் என அனைவரும் இந்த முரட்டுத் துணியைத் தான் உடுத்தினார்கள். மெல்ல மெல்ல காந்தியின் சிறிய மரச்சக்கரம் அமைதிப் புரட்சிக்கும் மேற்கத்திய ஏகாதிபத்தியத்துக்கு சவால்விடும் துணைக்கண்டத்தின் விழிப்புணர்வுக்கும் சின்னமானது.

கணுக்கால் அளவான சேறும் சகதியும் நீரும் தெறித்து விழ நடந்தும், பாறாங்கல் நிறைந்த பாதைகளைக் கடந்தும், ரயிலின் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் உள்ள மரப்பலகையின் மீது படுத்து தூக்கமின்றி இரவுகளைக் கழித்தும் இந்தியாவின் தொலைதூர மூலை முடுக்குகளுக்கெல்லாம் காந்தி பயணம் செய்தார். சென்ற இடமெல்லாம் தனது கொள்கைகளைப் போதித்தார். ஒரு நாளில் ஐந்து அல்லது ஆறுமுறை பேசியபடி அவர் ஆயிரக்கணக்கான கிராமங்களில் பயணம் செய்தார்.

அது ஒரு அபூர்வமான காட்சியாக இருந்தது. வெறும் காலுடனும், அரை ஆடையுடனும், மூக்கின் முனையில் நழுவி நிற்கும் கண்ணாடியுடனும்,

உதவிக்கு ஊன்றும் மூங்கில் கம்புடனும் காந்தி பயணத்துக்குத் தலைமை தாங்கினார். அவருக்குப் பின் வந்த சீடர்களும் அவரைப் போலவே வெள்ளை அரை ஆடையுடன் இருந்தார்கள். இந்தப் பயணக்குழுவுடன் வந்த ஒருவர், போட்டி ஒன்றில் வெற்றி பெற்றவர் கோப்பையை சுமப்பது போல தலையில் ஒரு பொருளை சுமந்து வருவார். அது தான் காந்தியின் நடமாடும் கழிப்பறை. சுகாதாரப் பாதுகாப்புக்காக காந்தி செய்த வலுவான பிரச்சாரத்தின் அடையாளமாக அது இருந்தது.

அவரது சிலுவைப் போருக்கு அபரிமிதமான வெற்றி கிடைத்தது. 'மாபெரும் ஆத்மா' (மகாத்மா) என்று ஏற்கெனவே அறியப்பட்ட அந்த மனிதரைக் காண கூட்டம் அலைமோதியது. தாமாகவே ஏற்றுக் கொண்ட வறுமையும், எளிமையும், கனிவும், துறவும் அவரைப் புனித மனிதராக்கியது. புதிய இந்தியாவை விடுவிக்க கடந்த கால இந்தியாவிலிருந்து வெகுகாலத்துக்கு முந்தையவர்களிலிருந்து வந்த ஒரு மகானாகவே மக்கள் அவரைக் கருதினர்.

இந்தியா சுயாட்சி போராட்டத்தில் வெற்றி பெற வேண்டுமானால் இந்தியா அந்நியத் துணிகளைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று நகரங்களில் கூடிய மக்களிடம் கூறினார். மக்கள் தங்களின் (அந்நிய) ஆடைகளை தனது காலடியில் குவிக்குமாறு கேட்டுக் கொண்டார் ஷூக்கள், காலுறைகள், நிஜார்கள், சட்டைகள், தொப்பிகள், கோட்டுகள் என்று எல்லாவற்றையும் குவித்தார்கள்; சிலர் இப்படிக் கழற்றி காந்தி முன் நிர்வாணமாக நிற்கும் அளவுக்குச் சென்றது. 'இங்கிலாந்தில் தயாரித்தவை' என்ற முத்திரையிட்ட துணிகளுக்கு மந்தகாசப் புன்னகையுடன் காந்தி மூட்டிய தீ ஓங்கி வளர்ந்த சொக்கப்பனை போல இருந்தது.

பிரிட்டிஷ் அரசு வேக வேகமாக எதிர்நடவடிக்கை எடுத்தது. காந்தி தியாகி ஆவதில் அச்சம் கொண்ட அரசு அவரைக் கைது செய்யத் தயக்கம் காட்டியது. ஆனால் அவரது ஆதரவாளர்கள் நையப் புடைக்கப்பட்டார்கள். முப்பதாயிரம் பேர் கைது செய்யப்பட்டார்கள். பலப் பிரயோகத்தின் மூலம் கூட்டங்களும் அணிவகுப்புகளும் கலைக்கப்பட்டன. காங்கிரஸ் அலுவலகங்கள் சூறையாடப் பட்டன. 1922 பிப்ரவரி 1இல் காந்தி வைஸ்ராய்க்கு அடக்கத்துடன் எழுதிய கடிதத்தில் தமது நடவடிக்கையைத் தீவிரப்படுத்தப் போகும் தகவலைக் குறிப்பிட்டிருந்தார். ஒத்துழையாமை இயக்கம் என்பது சட்டமறுப்பு இயக்கம் என்ற நிலைக்கு உயர்ந்தது. விவசாயிகள் வரி செலுத்த மறுக்க வேண்டும் - நகர மக்கள் பிரிட்டிஷ் சட்டங்களைப் புறக்கணிக்க வேண்டும் - இராணுவ வீரர்கள் மன்னருக்கு சேவை செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று காந்தி யோசனை கூறினார். இந்தியாவின் காலனி அரசுக்கு எதிராக காந்தி அறிவித்த அஹிம்சை யுத்தம் இதுதான்.

'இந்தப் போராட்டத்தில் எந்திரத்துப்பாக்கிகளை ஏந்தச் செய்ய வேண்டும் என்பது பிரிட்டிஷ் அரசின் விருப்பம்; அவர்கள் ஆயுதங்களைப் பெற்றிருக் கிறார்கள்; நம்மிடம் அவை இல்லை. ஆனால் இந்தப் போராட்டத்தில் அவர்களைத் தோல்வியுறச் செய்ய முடியும் என்பதற்கான ஒரே உத்தரவாதம், நம்மிடம் இருக்கும் ஆயுதங்கள் (அஹிம்சை போன்றவை) அவர்களிடம் இல்லை என்பதுதான்' என்று காந்தி கூறினார்.

ஆயிரக்கணக்கான இந்தியர்கள் காந்தியின் அறைகூவலை ஏற்றனர்; ஆயிரக்கணக்கானவர்கள் சிறை சென்றனர். காந்தியின் போராட்டத்தால்

*திகைப்புற்ற பம்பாய் ஆளுநர், 'உலக வரலாற்றிலேயே மிகப்பிரமாண்டமான பரிசோதனை' என்று இதனை வர்ணித்தார். 'இந்தப் போராட்டம் வெற்றிக் கோட்டைத் தொட ஒரு அங்குலம் தான் உள்ளது' என்றும் கூறினார்.*

*இருப்பினும் டில்லியின் வடகிழக்குப் பகுதியில் ஒரு சிறிய கிராமத்தில் வெடித்த ரத்தக்களரியான வன்முறை காரணமாக அது தோல்வியுற்றது. ஏறத்தாழ காங்கிரஸ் தலைவர்கள் அனைவரின் விருப்பத்துக்கும் எதிராக காந்தி போராட்டத்தை விலக்கிக் கொண்டார். ஏனெனில் தனது ஆதரவாளர்கள் அஹிம்சை என்பதை இன்னமும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்று அவர் கருதினார்.*

*அவரது அணுகுமுறை மாற்றம் அவரை ஆபத்துக் குறைந்தவர்தான் என்று அரசை எண்ணத்தூண்டியது. அவரை பிரிட்டிஷ் அரசு கைது செய்தது. தம் மீதான ராஜத்துரோகக் குற்றச்சாட்டை காந்தி ஒப்புக் கொண்டார். இதற்கான அதிகபட்ச தண்டனையை வழங்க வேண்டும் என்று நீதிபதியிடம் முறையிட்டார். ஆறாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு பூனா அருகே உள்ள எரவாடா சிறையில் வைக்கப்பட்டார். இதற்காக அவர் வருந்தவில்லை; 'சுதந்திரத்தை சிறைச் சாலையின் நான்கு சுவர்களுக்குள்ளேயும், இன்னும் சொல்லப் போனால் தூக்குமேடைகளிலேயும் தான் காண முடியும்; கவுன்சில் அறைகளிலோ நீதிமன்றங்களிலோ, வகுப்பறைகளிலோ ஒருபோதும் அதனைக் காண முடியாது' என்று காந்தி எழுதினார்.*

*உடல் நலக்குறைவு காரணமாக தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பே காந்தி விடுதலை செய்யப்பட்டார். பின்னர் மூன்று ஆண்டுகள் அவர் பயணம் செய்தார், எழுதினார்; ஆதரவாளர்களுக்குப் பொறுமையுடன் பயிற்சி அளித்தார். தாம் கைது செய்யப்படுவதற்கு முன் தம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது போன்ற உணர்ச்சி வயப்பட்ட செயல்கள் மீண்டும் நிகழ்வதைத் தவிர்க்க ஆதரவாளர்கள் மனதில் அஹிம்சைக் கொள்கைகளை ஆழப் பதியவைத்தார்.*

*1929 இறுதி வாக்கில் இன்னொரு இயக்கத்தை நடத்த அவர் தயாரானார். அந்தப் பத்தாண்டுகள் முடியப் போகும் தருவாயில் லாகூரில் ஒரு நாள் நள்ளிரவு மணி ஒலிக்கும் வேளையில் காங்கிரஸ் கட்சியை ஒரு சபதமேற்கச் செய்தார். 'ஸ்வராஜ் - முழு சுதந்திரம்' என்பதற்குக் குறைவாக எதையும் ஏற்க முடியாது என்று சபதமேற்கச் செய்தார். இருபத்தாறு நாட்களுக்குப் பின் இந்திய நாடு முழுவதும் மக்கள் கூடிய இடங்களில், லட்சக்கணக்கான காங்கிரஸ்காரர்கள் இந்த உறுதிமொழியை எதிரொலித்தார்கள்.*

*காந்திக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் இடையே புதிய மோதல் தவிர்க்க முடியாததானது. இந்த மோதலின் சரியான வடிவம் என்ன என்பது பற்றி 'உள்ளுணர்வின்' (அந்தராத்மாவின்) ஆலோசனைக்காக காந்தி சில நாட்கள் காத்திருந்தார். அவரது ஆக்கபூர்வமான மேதைமைச் சிந்தனையின் சிறந்த பயனாக 'அந்தராத்மா' ஒரு யோசனையை அளித்தது. இந்த சிந்தனை மிகச் சாதாரணமானது; இதன் செயல்பாடோ திருப்புமுனைக்கானது. ஒரே இரவுக்குள் இது காந்தியை உலகப்புகழ் பெற்றவராக்கிவிடும். இதில் வேடிக்கை என்னவென்றால் பிரம்மச்சர்ய விரதத்தின் ஒரு பகுதியாக பாலுணர்வைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் சில ஆண்டுகளுக்குமுன் மகாத்மாவால் கைவிடப்பட்ட ஒன்றுதான் இப்போது போராட்டத்துக்கு மையப் பொருளானது அதுதான் உப்பு.*

காந்தி தவிர்த்து விட்டாலும், இந்தியாவின் வெப்பச்சூழ்நிலையில் ஒவ்வொரு மனிதரின் உணவிலும் உப்பு என்பது அத்தியாவசியப் பொருளாகி விட்டது. இயற்கை அன்னையாம் கடல் வழங்கிய வெகுமதியாக கடற்கரை ஓரங்களில் மிகப்பெரிய வெள்ளைப்பாளங்கள் போல் அது பரவிக் கிடந்தது. கிடப்பினும் இதன் உற்பத்தியும் விற்பனையும் பிரிட்டிஷ் அரசின் தனித்த ஏகபோகமாக இருந்தது. இதன் விற்பனை விலை மீது அரசு வரி விதித்தது. இது சொற்பமானதுதான். ஆனால் ஓர் ஏழை விவசாயியின் ஓராண்டு வருமானத்தில் இரண்டு வார ஊதியமாக அது இருந்தது.

1931 மார்ச் 12 காலை 6.30 மணிக்கு லேசாக வளைந்த முதுகுடன் கையில் மூங்கில் தடியுடன் இடுப்பில் பிரசித்திப் பெற்ற அரை ஆடையுடன் காந்தி ஆசிரமத்திலிருந்து புறப்பட்டார். 79 சீடர்களின் பரிவாரத்துக்குத் தலைமை தாங்கி 241 மைலுக்கு அப்பால் உள்ள கடற்கரையை நோக்கி அவர் பயணமானார். அகமதாபாதிலிருந்து வந்த ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் வழி நெடுக நின்றனர். அவர் நடந்து சென்ற பாதையில் பசுந்தழைகள் பரப்பப்பட்டன.

வித்தியாசமான இந்தப் பயணத்தைப் பின் தொடர்ந்து செல்ல உலகம் முழுவதுமிருந்து செய்தியாளர்கள் அங்கு விரைந்தனர். கிராமம் கிராமமாக காந்தி நடந்து சென்ற போது சாலையோரங்களில் நின்றிருந்த மக்கள் கூட்டம் மண்டியிட்டு வணங்கியது. அவரது பயண நோக்கத்தின் உச்சக்கட்டத்தை அடைவதற்காக திட்டமிட்டே பயணம் மெல்ல நகர்ந்தது. இந்த மெதுவான பயணம் பிரிட்டிஷாருக்கு சீற்றத்தையே ஏற்படுத்தியது. மூங்கில் தடியூன்றிய அரை நிர்வாணக் கோலம் கொண்ட, வயது முதிர்ந்த, குள்ளமான, ஏறத்தாழ சாப்ளின் போன்ற நகைப்புக்குரியதான அந்த உருவம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு சவால் விடுத்து கடற்கரையை நோக்கி மேற்கொண்ட வித்தியாசமான பயணம் பத்திரிகைகளிலும் செய்திப்படங்களிலும் அடுத்தடுத்த நாட்களில் முக்கிய இடத்தைப் பிடித்தது.

ஏப்ரல் 5 மாலை 6 மணிக்கு காந்தியும் அவரது குழுவினரும் தண்டி நகருக்கு அருகே உள்ள இந்தியக் கடலின் கரையை அடைந்தனர் அன்றிரவு பிரார்த்தனை முடித்து அடுத்த நாள் அதிகாலையில் இந்தக் குழு புனித நீராடுவதற்காகக் கடலுக்குச் சென்றது. பின்னர் கரையேறிய காந்தி, ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் முன் உப்புக் கட்டியை எடுக்க குனிந்தார். எழுச்சியும் உறுதியும் கொண்ட முகபாவனையுடன், காந்தி தனது மூடிய கையை மக்கள் முன் உயர்த்தினார். பின்னர் தடை செய்யப்பட்ட கடல் அன்னையின் வெகுமதியும், இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கான புதிய சின்னமுமான உப்பு வெள்ளைப் படிகங்களாகத் தம் உள்ளங்கையில் இருப்பதைக் காட்டினார்.

ஒரு வாரத்துக்குள் இந்தியா முழுவதும் கிளர்ச்சியுற்றது. துணைக்கண்டம் முழுவதுமிருந்த காந்தியின் ஆதரவாளர்கள் உப்பைச் சேகரித்து விநியோகிக்கத் தொடங்கினார்கள். கடல் நீரிலிருந்து எப்படி உப்பு தயாரிப்பது என்பதை விளக்கும் பிரசுரங்கள் நாடு பூராவும் வெள்ளமென நிறைந்தன. இந்தியாவின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைவரை வீதிகள்தோறும் பிரிட்டனின் துணிகளும் மற்ற பொருள்களும் சொக்கப்பனை போல தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

பிரிட்டிஷ் அரசு இதற்குப் பதிலடி கொடுத்தது. இந்திய வரலாற்றிலேயே மோசமானதாக மக்கள் சுற்றி வளைத்துத் தாக்கப்பட்டனர். ஆயிரக்கணக்

*கானவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களில் காந்தியும் ஒருவர். எரவாடா சிறைக் கூடத்துக்கு வருவதற்கு முன் தனது ஆதரவாளர்களுக்குக் கடைசியாக ஒரு செய்தியை அவர் தெரிவித்தார்.*

*'அஹிம்சாவாதியான ஒரு மனிதனின் கையிலிருக்கும் ஒரு பிடி உப்பு இந்தியப் பெருமிதத்தின் அடையாளமாகும். உப்பை வைத்திருக்கும் கை ஒடிக்கப்படலாம் ஆனால் அது உப்பு கீழே விழ உடன்படாது' என்று காந்தி கூறினார்.*

## *லண்டன், 18 பிப்ரவரி 1947*

*கடந்த முந்நூறு ஆண்டுகளாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு வழிகாட்டுவதற்குக் கூடிய சில மனிதர்களின் அறிவிப்புகளைத் தான் நாடாளுமன்ற மக்களவையின் நான்கு சுவர்களும் எதிரொலித்தன. உலகம் முழுவதும் பரவியுள்ள அரை மில்லியன் (5 லட்சம்) மக்களின் விதியை நிர்ணயிப்பதாகவும், இந்தப் புவிப்பரப்பின் மூன்றில் ஒரு பகுதியில் வசிப்போர் மீது மேல்தட்டு ஐரோப்பிய வெள்ளையர்களின் ஆதிக்கத்தைச் செலுத்துவதில் உதவி செய்வதாகவுமே இவர்களின் விவாதங்களும் முடிவுகளும் அமைந்தன.*

*இப்போதோ பதற்றத்துடன் காணப்பட்ட மக்களவை உறுப்பினர்கள் சூடேற்றப்படாத துயரத்தின் நிழல் நீண்டு படிந்த மண்டபத்தில் குளிரால் நடுங்கியபடி இருந்தனர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இறுதி நிகழ்ச்சி பற்றி அவர்களின் தலைவர் ஆற்றும் உரையைக் கேட்கவே கூடினார்கள். தனது பருத்த உடலைக் கருநிற ஓவர் கோட்டுக்குள் மறைத்திருந்த வின்ஸ்டன் சர்ச்சில், வருத்தம் தோய்ந்த முகத்துடன் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தார். மக்களவையில் அவர் இடம் பெற்றது முதல், கடந்த நாற்பது ஆண்டுகளாக அந்த மண்டபத்தில் பிரிட்டனின் ஏகாதிபத்திய கனவுக்கு வடிவம் கொடுத்தே பேசியிருக்கிறார். கடந்த பத்து ஆண்டுகளாக பிரிட்டனது மன சாட்சியின் தூண்டுகோலாக, அதன் வீரத்துக்கு ஒரு கிரியா ஊக்கியாக அவரது பேச்சு இருந்தது.*

*அவர் எதனையும் உற்று நோக்கி உள்ளுறை பொருளையும் அறியும் அபூர்வத்திறன் பெற்றவர்; ஆனால் தனது கருத்துக்களில் விட்டுக் கொடுக்காத பிடிவாதக்காரர் பேரரசின் மூலை முடுக்கு பற்றியெல்லாம் புகழ்ந்து பேசியிருக்கிறார் ஆனால் இவை எதுவும் இந்தியாவைப் பற்றி அவர் கொண்டிருந்த உணர்வுகளுக்கு ஒப்பானதாக இருக்கவில்லை. வெறித்தனமாகவும் நம்ப முடியாத அளவுக்கும் சர்ச்சில் இந்தியாவை நேசித்தார். ராணியின் 4ஆவது குதிரைப்படைப்பிரிவில் துணைத் தளபதியாக இளம் வயதில் அவர் இந்தியா வந்தார். புழுதி நிரம்பிய மைதானங்களில் போலோ விளையாடினார். பன்றி வேட்டையிலும் புலி வேட்டையிலும் ஈடுபட்டார். கைபர் கணவாயைத் தாண்டி வடமேற்கு எல்லைப்பகுதியில் பத்தானியர்களுடன் போரிட்டார். இந்தியாவிலிருந்து இங்கிலாந்து திரும்பி நாற்பத்தொரு ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகும் கூட 4ஆவது படைப்பிரிவின் துணைத் தளபதியாக இருந்தபோது, இரண்டு ஆண்டுகள் தமக்குப் பணிவிடை செய்த ஒரு இந்தியருக்கு, மாதம் தோறும் இரண்டு பவுண்ட் அனுப்பிக் கொண்டிருந்தார். இந்தியா மீதான அவரின் உணர்வுகளை இந்தச் செயல் வெளிப்படுத்துவதாக இருந்தது. முதற்கண்*

இந்தியாவில் அவர் பெற்ற சொந்த அனுபவங்களின் பிரதிபலிப்புக்காக அவர் அதனை நேசித்தார். அடுத்தபடியாக வீரம் செறிந்த நேர்மையான ஆங்கிலேய னாக அந்த நாட்டை ஒரு தந்தையின் கண்டிப்புடன் ஆட்சி செய்வதென்ற போக்கையும் நேசித்தார்.

ஏகாதிபத்தியக் கனவில் அவர் கொண்டிருந்த நம்பிக்கை அசைக்க முடியாதது. உலகில் பிரிட்டனின் இடத்தைத் தீர்மானிப்பது பேரரசுதான் என்பதில் அவர் எப்போதும் உறுதியாக இருந்தார். 'சட்ட விதிகள் இல்லாமல், புன்மைப் பிறவிகளாக' உள்ளூர்க் கொடுங்கோலர்களின் கீழ் வாழ்வதைவிட ஐரோப்பியர்களது ஆட்சியின்கீழ் வாழ்வது சிறந்தது என்ற விக்டோரியன் கொள்கையை அவர் மனமார நம்பினார் உலகின் பல பிரச்சனைகளில் அவருக்குத் தொலைநோக்குப் பார்வைகள் இருந்த போதும் இந்தியாவைப் பொறுத்தவரை சர்ச்சில் குருட்டுத் தனமாகவே இருந்தார். இந்தியாவில் நடக்கும் பிரிட்டிஷ் ஆட்சி நேர்மையானதாகவும் அதன் உயரிய நலன்களை பாதுகாப்பதாகவும் இருக்கிறது. இந்திய மக்கள் தங்களின் ஆட்சியாளர்களை நன்றியுடனும் அன்புடனும் நோக்குகிறார்கள்; குறுகிய மனம் படைத்த மேல்தட்டு வர்க்கத்தின் ஓரளவு படித்த, மக்களின் விருப்பங்களையும் நலன்களையும் பிரதிபலிக்காத அரசியல்வாதிகள்தான் இந்தியாவுக்கு சுதந்திரம் கேட்டுப் போராடுகிறார்கள் என்ற அவரின் கருத்துக்களை எதனாலும் அசைத்து விடமுடியாது. 'அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் பற்றி மூன்றாம் ஜார்ஜ் எப்படிப் புரிந்து வைத்திருந்தாரோ' அப்படித்தான் இந்தியாவைப் பற்றி சர்ச்சில் புரிந்து வைத்திருந்தார் என்று அவரது ஆட்சியில் இந்தியாவுக்கான வெளியுறவு அமைச்சராய் இருந்தவர் காரமாகக் கூறியிருந்தார்.

இந்தியாவுக்கு சுதந்திரம் அளிப்பதென்ற எந்த ஒரு முயற்சியையும் 1910ஆம் ஆண்டிலிருந்தே உறுதியுடன் அவர் எதிர்த்து வந்தார். காந்தியையும் அவரது காங்கிரஸ் ஆதரவாளர்களையும் 'சோளக்கொல்லை பொம்மைகள்' என்று ஏளனமாக வர்ணித்து நிராகரித்திருக்கிறார். அவர் செயல்படுத்த மறுத்த திட்டத்தை பேரரசிலிருந்து இந்தியாவை விடுவிப்பதென்ற திட்டத்தை அவருக்குப் பின் பதவிக்கு வந்தவர், டவுனிங் தெரு 10ஆம் எண் இல்லத்திலிருந்து நிறைவேற்றப் போகிறார் என்ற தகவல் அந்த அறையிலிருந்த மற்றெந்த மனிதரையும் விட சர்ச்சிலை மிகவும் புண்படுத்தியது. 1945இல் அவரும் அவரது கன்சர்வேடிவ் (பழமைவாத) கட்சியும் தோல்வியுற்றாலும் பிரபுக்கள் சபையில் இன்னமும் அவர்களுக்கு அறுதிப் பெரும்பான்மை பலம் இருந்தது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்த அவர் விரும்பினால் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைப்பதை இரண்டு ஆண்டுகளுக்குத் தாமதப்படுத்த அவரால் முடியும். கோபம் கொப்பளிக்கும் அவரது முகத்தில் தேமல் போல் அதிருப்தி பரவியது. இருப்பினும் அவருக்குப் பின் பிரதமராக வந்த சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் பேச எழுந்திருப்பதை சர்ச்சில் கவனித்தார்.

இந்தியாவிலிருந்து பிரிட்டன் வெளியேறுவதற்குப் பேச்சுவார்த்தை நடத்த புதுடில்லிக்கு பிரதமர் யாரை அனுப்பப் போகிறாரோ, அந்தப் பணிக்கு யார் பெயரை இப்போது அவையில் அறிவிக்கப் போகிறாரோ, அந்த இளம் தளபதியால் சுருக்கமாக எழுதப்பட்ட உரைதான் கிளமண்ட் அட்லியின் கையில் இருந்தது. அட்லி தயாரித்திருந்த மிக நீளமான அறிக்கைக்கு மாற்றாக, இயல்பாகவே தைரியம் நிறைந்த லூயி மவுண்ட்பேட்டன் இந்த சுருக்கமான அறிக்கையைத் தயாரித்து அளித்திருந்தார். புதிய வைஸ்ராயின் பணி என்ன

என்பது எளிமையாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தியப் பிரச்சனைக்குத் தீர்வு காண ஒரு நம்பிக்கை உருவாக வேண்டுமானால், மிகவும் அவசியம் என்று மவுண்ட்பேட்டன் வலியுறுத்திய புதிய, உயிர்நாடியான விஷயம் அதில் இருந்தது. துல்லியமாக அவர் விரும்பிய அந்த விஷயத்தை அறிக்கையில் சேர்க்க அட்லியுடன் ஆறுவார காலம் போராட வேண்டியிருந்தது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த அறிவிப்பை அட்லி படிக்கத் தொடங்கியதும் குளிர் நிறைந்திருந்த அந்த அறையில் ஒரு வித கிளர்ச்சி உருவானது. 'மேன்மை தங்கிய மன்னரின் அரசு ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறது' அட்லி உரையைத் தொடங்கினார். '1948 ஜூன் மாதத்துக்கு முன்னால் ஒரு தேதியில் பொறுப்பு மிக்க இந்தியர்களின் கைகளுக்கு அதிகாரத்தை மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அவர்களின் உறுதியான விருப்பம்' என்று அவர் கூறினார்.

அவரது வார்த்தைகள் மக்களவையில் இருந்த உறுப்பினர்களின் மனதில் பதிந்த போது அங்கு அசைவற்ற அமைதி நிலவியது. வரலாற்றின் தவிர்க்க முடியாத விளைவு இது; பிரிட்டன் தாமாகவே முன்வந்து ஒப்புக் கொண்டதுதான் இது என்பதெல்லாம் அங்கு சூழ்ந்த சோகத்தைக் குறைக்கப் பயன்படவில்லை. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி வெறும் பதினான்கு மாதங்கள்தான் இருக்கப் போகிறது என்பதை அவர்கள் உணர்ந்து விட்டதுதான் இதற்குக் காரணம். பிரிட்டிஷார் வாழ்க்கையில் ஒரு சகாப்தம் முடியப் போகிறது. 'வரலாற்றில் மாபெரும் உறவு துண்டித்தல்?' தொடங்கப் போகிறது என்று அடுத்த நாள் காலையில் மான்செஸ்டர் கார்டியன் இதழ் குறிப்பிடக் கூடும் '

தனது இருக்கையில் சாய்ந்து கிடந்த அந்தப் பருமனான உருவம், எதிர்ப்புத் தெரிவிக்க தனது முறை வந்தபோது, பேரரசருக்குக் கடைசியாக ஒரு வேண்டுகோளைத் தெரிவித்து நீண்ட உரையாற்ற எழுந்தது. குளிரிலிருந்தும் உணர்ச்சி வயப்பட்ட நிலையிலிருந்தும் சற்றே விடுபட்ட சர்ச்சில், 'துயரமும் ஆபத்தும் மிக்க அதிகாரமாற்றத்தை மூடிமறைப்பதற்காக, விவேகம் மிக்க போர்ப்படைத் தளபதியைப் பயன்படுத்தும் அரசின் முயற்சிதான்' ஒட்டுமொத்த நடவடிக்கைகளும் என்று சாடினார்.

இந்திய சுதந்திரத்திற்கு தேதி நிர்ணயித்ததன் மூலம், 'இந்தியாவைக் கடவுளிடம் விடுங்கள்' என்ற காந்தியின் மிக மோசமான மூளையில் உதித்த கருத்தை அட்லி ஏற்றுக் கொண்டு விட்டார்.

'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அனைத்துப் பெருமைகளையும், அது மனித குலத்துக்குச் செய்த அனைத்துச் சேவைகளையும் சடசடவென்று சாய்த்துத் தள்ளும் செயலாகவே இதனை நான் ஆழ்ந்த வருத்தத்தோடு பார்க்கிறேன்' என்று சர்ச்சில் அரற்றினார். 'பிரிட்டனை அதன் எதிரிகளிடமிருந்து பலர் காப்பாற்றினார்கள். தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்வதில் அதற்கு உதவிட யாரும் இப்போது இல்லை.. முதிர்ச்சியில்லாத அவசரமான விலகலின் மூலம், வெட்ககரமான செயல்மூலம் தவறுகளை அதிகரிக்காமல் இருப்போம் குறைந்தபட்சம் நம்மில் பலரை ஆட்கொண்டுள்ள கவலையையாவது அதிகப்படுத்தாமல் இருப்போம்' என்றும் சர்ச்சில் வருத்தத்துடன் கூறினார்.

மிகச் சிறந்த பேச்சாளரின் வார்த்தைகளாக இவை இருக்கலாம். ஆனால் அவை சூரிய அஸ்தமனத்துக்கு எதிராக எழும்பும் பயனற்ற வார்த்தைகளாக

இருந்தன. வாக்கெடுப்புக்கான மணி ஒலித்த போது, வரலாற்றின் கட்டளையை மக்களவை ஏற்றது. 1948 ஜூன் மாதத்துக்கு முன் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்கு வரவேண்டும் என்பது மிகப்பெரும்பான்மை ஆதரவுடன் மக்களவையால் தீர்மானிக்கப்பட்டது.

## நோற்பவரின் பயணம் - II

நவகாளியில் சேறு நிறைந்த கிளை நதிகளின் வழியே காந்தியின் சிறிய குழுவினர் கடந்து செல்லும் போது பயணம் மிகவும் சிக்கலாக இருந்தது. முதலில் பயணம் செய்த கிராமங்களில் முஸ்லீம்களிடம் அவர் மகிழ்ச்சியுடன் பெற்ற வெற்றி இனி செல்லப் போகும் கிராமங்களில் உள்ள தலைவர்களை உஷார்ப் படுத்தியது. அவரது வெற்றி தங்களுக்கே உரிய அதிகாரத்துக்குச் சவாலாய் இருப்பதாக கிராமத்தலைவர்கள் நினைத்தனர். இதனால் மகாத்மாவுக்கும் அவரது பயணத்துக்குமான எதிர்ப்புணர்வை மக்களிடம் தூண்டி விட்டனர்.

இன்று காலை அவரது புனிதப்பயணம் முஸ்லீம் பள்ளி ஒன்றின் வழியாகச் சென்றது. இந்தப் பள்ளியில் வானமே கூரையான வகுப்பறையில் ஏழு அல்லது எட்டு வயது குழந்தைகள் அவர்களின் ஷேக்கை (ஆசிரியரை) சுற்றி அமர்ந் திருந்தனர். அன்பு மேலிட்ட தாத்தா தனது பேரக்குழந்தைகளை ஆரத்தழுவிக் கொள்ள முந்துவது போல காந்தி அந்தப் பிஞ்சுக் குழந்தைகளுடன் பேச விரைந்தார். காந்தியின் செயலை ஷேக் பாய்ந்து தடுத்தார். வேகமும் வெறுப்பும் கலந்த பார்வையுடன் மாணவர்களைத் தனது குடிலுக்குள் அவர் விரட்டி அனுப்பினார். இந்தக் கிழவர் குழந்தைகளை நெருங்குவதை, பூச்சாண்டி ஒருவன் அவர்கள் மீது சாபம் பொழிய நெருங்குவதாக ஷேக் கருதினார். குழந்தைகள் அங்கிருந்து பறந்தோடி விட்டதைக் கண்டு மிகவும் வருந்திய காந்தி, ஷேக்கின் குடிசைக் கதவுக்கு முன்னால் நின்றார். நிழல் நிறைந்த பகுதியில் அவரால் லேசாகப் பார்க்க முடிந்த குழந்தைகளை நோக்கி சோகத்துடன் அவர் கையசைத்தார். ஆர்வத்தையும் அறியாமையையும் வெளிப்படுத்தும் அகன்ற கரிய விழிகளைக் கொண்ட குழந்தைகள் பதிலுக்கு காந்தியை ஏக்கத்துடன் பார்த்தன. இறுதியாக காந்தி தனது கையைக் கொண்டு நெஞ்சைத் தொட்டு முஸ்லீம் முறைப்படி அவர்களுக்கு வாழ்த்துக் கூறினார் 'சலாம்' இரங்கத்தக்க அவரது செய்கைக்கு ஒரு குழந்தையின் கைகூட பதில் அளிக்கவில்லை. காந்தி திரும்பி தனது பயணத்தை மீண்டும் தொடர்ந்தார்.

மேலும் சில சம்பவங்களும் நிகழ்ந்தன. நான்கு நாட்களுக்கு முன், காந்தி கடந்து செல்லவிருந்த ஒரு பழமையான இற்றுப் போயிருந்த மூங்கில் பாலத்தின் ஆதாரக் கொம்புகளை யாரோ சிலர் உடைத்துப் போட்டிருந்தனர். நல்ல வேளையாக பாலம் உடைந்து விழுவதற்கு முன் இது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் காந்தியும் அவரது குழுவினரும் பாலத்துக்குப் பத்தடி கீழே இருந்த சேறு நிறைந்த தண்ணீரில் தட்டுத்தடுமாறிப் பயணம் செய்தனர். மற்றொரு நாள் காலையில் அவரது பயணப்பாதை மூங்கில் புதர்களும் தென்னை மரங்களும் நிறைந்த இடத்துக்குக் கொண்டு சென்று விட்டது. ஒவ்வொரு மரத்திலும் தோரணக் கொடி போல வாசகங்கள் எழுதப்பட்ட பேனர்கள் தொங்கிக் கொண்டிருந்தன. 'வெளியேறுங்கள், நீங்கள் எச்சரிக்கப்படுகிறீர்கள், பாகிஸ்தானை ஏற்றுக் கொள்ளுங்கள்' அல்லது 'உங்கள் சொந்த நன்மைக்காகத் திரும்பிச் செல்லுங்கள்' என்று அவற்றில் எழுதப்பட்டிருந்தன.

*இவையெல்லாம் காந்திக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. உடல் பலம், தாக்குதலையும் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளும் மனோதிடம், ஆபத்துக்களை எதிர்கொள்ளும் திடசித்தம் ஆகியவை அஹிம்சாவாதிக்கு தேவைப்படும் பிரதான குணங்கள் என்று காந்தி கருதினார். தென் ஆப்பிரிக்காவில் முதல் தாக்குதலை அவர் ஏற்றுக் கொண்டது முதல், மெலிந்த தேகம் கொண்ட காந்தி உடல் பலம் பெற்றார்; அதனை அதிகரித்தும் கொண்டார்.*

*தனக்கு எதிரான கண்டன வாக்கியங்களும் பள்ளிக் குழந்தைகளின் பாராமுகமும் ஏற்படுத்திய துக்கத்தை விழுங்கி அடக்கிக் கொண்டு சலனமற்ற அமைதியுடன் அடுத்துச் செல்ல வேண்டிய இடத்தை நோக்கி காந்தி நடந்தார். அவரும் அவரது குழுவினரும் நடந்து சென்ற குறுகலான பாதை அதிகமான பனிப்பொழிவால் மண் சேறாகி வழுவழுவென்றிருந்தது. சட்டென்று அந்தச் சிறிய ஊர்வலம் நின்றது. அதன் தலைவரான காந்தி அவரது மூங்கில் கைத்தடியை ஓரமாக வைத்து விட்டுக் குனிந்து பார்த்தார். வெறும் காலோடு அவர் நடக்கும் பாதையில் அடையாளம் தெரியாத முஸ்லீமின் கைகள் உடைந்த கண்ணாடித் துண்டுகளையும் மனித மலத்தையும் இறைத்து வைத்திருந்தன. ஆனாலும் கோபமின்றி, ஒரு மரத்திலிருந்து கிளையை ஒடித்தார். ஒரு இந்துவான அவர் ஆசாரமில்லாத செயலை அடக்கத்துடன் செய்யத் துணிந்து குனிந்தார். அந்த 77 வயதான நோன்பாளர் மரக்கிளையைத் துடைப்பமாகப் பயன்படுத்தி அவரது பாதையில் கொட்டப்பட்டிருந்த மனித மலத்தை அகற்றத் தொடங்கினார்.*

*பொறுமையுடன் தனது பாதையிலிருந்த மலத்தை அகற்றிய அந்த வயது முதிர்ந்த மனிதருக்குக் கடந்த பல ஆண்டுகளாக ஆங்கிலேயர்களின் கடுமையான எதிரியாக இருந்தவர் மக்களவையின் மிகச்சிறந்த பேச்சாளரான சர்ச்சில்தான். பல தொகுப்புகளாக வெளிவரும் அளவுக்கு, நீண்ட அரசியல் வாழ்க்கையில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளில் மறக்க முடியாத அரிய சொற்றொடர்கள் ஏராளமாக உள்ளன. ஆனால் 'அரை நிர்வாணப்பக்கிரி' என்று பதினாறு ஆண்டுகளுக்கு முன் 1931 பிப்ரவரியில் காந்தியைப் பற்றி அவர் குறிப்பிட்டுக் கூறிய சொற்றொடர் போன்று மக்கள் மனங்களில் ஆழப்பதிந்து விட்டவை ஒரு சில தான்.*

*சர்ச்சில் இப்படிக் கோபமுடன் சொல்லக் காரணமான சம்பவம் 1931 பிப்ரவரி 17இல் நடந்தது. ஒரு கையில் மூங்கில் கைத்தடியைப் பிடித்துக் கொண்டு இன்னொரு கையால் அவரது வெள்ளை மேலாடையைப் பிடித்துக் கொண்டு அன்று காலை வேளையில், புதுடில்லியில் உள்ள வைஸ்ராய் மாளிகையின், செந்நிறப் பளிங்குக் கற்களாலான படிகள் வழியே காந்தி தயக்கத்துடன் மேலேறி வந்தார். பிரிட்டிஷ் சிறையில் பல ஆண்டுகள் கழித்தத் தளர்வு இன்னமும் அவரிடம் இருந்தது. ஆனால் உப்பு சத்தியாக்கிரகத்தை நடத்திய அந்த மனிதர் வைஸ்ராயிடம் சலுகைகளை இரந்து அந்த மாளிகைக்கு வரவில்லை. ஒட்டுமொத்த இந்தியாவாகவே அவர் வந்தார்.*

*கைப்பிடி உப்புடனும், மூங்கில் கைத்தடியுடனும் ஆட்சி அதிகாரத்தின் முகத்திரையை காந்தி கிழித்திருந்தார். இதனால் அவரது இயக்கத்துக்குப் பரவலான ஆதரவு கிடைத்தது. சிறையிலிருந்து அவரை விடுதலை செய்வதுதான் நல்லது என்று வைஸ்ராய் இர்வின் பிரபு கருதினார். இந்திய மக்களின் ஒப்புக்*

*கொள்ளப்பட்ட தலைவராக ஏற்று டில்லிக்கு வருமாறும் அழைத்தார். பிரிட்டிஷ் சிறையிலிருந்து பிரிட்டனின் பேச்சுவார்த்தை அறைக்கு வந்த முதலாவது மாமனிதர் காந்திதான். அவரது பாதையைப் பின்பற்றித்தான் அடுத்து வந்த பத்தாண்டுகளில் அராபிய, ஆப்பிரிக்க, ஆசியத் தலைவர்கள் பிரிட்டிஷ் சிறையிலிருந்து பேச்சுவார்த்தை அறைக்கு வந்தார்கள்.*

*காந்தியுடனான சந்திப்பின் விளைவுகள் பற்றி வின்ஸ்டன் சர்ச்சில் மிகச் சரியாகவே கணித்திருந்தார். 'முன்னாளில் 'இன்னர் டெம்பிள்' வழக்கறிஞராக இருந்தவரும் இந்நாளில் தேசத்துரோகியான அரை நிர்வாணப் பக்கிரியாக இருப்பவருமான காந்தி பேரரசரின் பிரதிநிதியுடன் சமமாக அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வைஸ்ராய் மாளிகையின் படிகளில் ஏறிவருவது அருவருப்பாகவும் தரம் தாழ்ந்ததாகவும் காட்சியளிக்கிறது' என்று கூறி சர்ச்சில் எதிர்ப்புத் தெரிவித்தார்.*

*'இந்தியாவை இழப்பது என்பது நமக்கு இறுதி முடிவாகி விடும். இப்படியொரு நடவடிக்கையில் ஈடுபட்டால் நம்மை ஒரு சிறிய சக்தியாக குறைத்து விடும் இது நிச்சயம்' என்று சர்ச்சில் கூறினார். பதினாறு ஆண்டுகளுக்குப் பின் இப்போது அவர் நிகழ்த்திய உரையும் அன்றைய தொலை நோக்கிலான அவரது பேச்சின் சாயலிலேயே இருந்தது.*

*இருந்தாலும் அவரது வார்த்தைகள் அன்று புதுடில்லியில் நடந்த பேச்சுவார்த்தையில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. மூன்று வாரங்களில் எட்டு கூட்டங்கள் நடந்தன. இதன் விளைவாக காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் வாசகங்கள் இரண்டு பெரிய சுயாதிபத்திய அரசுகளுக்கிடையேயான ஒப்பந்தத்தில் இருப்பது போல் அமைந்தன. காந்தியின் வெற்றிக்கு இது அளவுகோலானது. இதன்படி தலைவரைப் பின்பற்றி சிறை சென்ற காந்தியின் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களை சிறையிலிருந்து விடுவிக்க இர்வின் ஒப்புக் கொண்டார்.* காந்தி தனது பங்கிற்கு*

* இந்த ஒப்பந்தத்தின் மூலம் உடனடிப் பயன்பெற்றவர் இளம் சீக்கிய மாணவர் குர்சரண் சிங்கைப் போல் வேறொருவர் இருக்க முடியாது. அந்த காலைப் பொழுதில் குர்சரண் சிங் பின்புறமாகக் கைகள் கட்டப்பட்ட நிலையில் லாகூர் சிறையின் வராந்தாவில் நடந்து சென்று கொண்டிருந்தார். அவரது வாழ்க்கையை முடிப்பதற்காகத் தூக்கிலிடும் பணியாள் காத்திருந்த கொலைக் களத்துக்குத்தான் அவர் நடந்தார்.

தூக்குதண்டனை நிறைவேற்றப்படும் மரத்தின் மிக அருகே குர்சரண் சிங் வந்து கொண்டிருந்த போது அவருக்குப் பின்னால் வராண்டாவிலிருந்து கீழிறங்கி ஓடிவரும் காலடிகளின் சப்தத்தை அவர் கேட்டார். சற்றுத் திரும்பி ஆங்கிலேய சிறை அதிகாரியை அவர் பார்த்தார். நீலநிறத் துண்டுக் காகிதம் ஒன்றை அசைத்தபடி மார்ட்டின் என்ற அந்த மேஜர் அவரது காவலாளிகளுக்குப் பின்னால் ஓடி வந்தார்.

'வாழ்த்துக்கள்!' மார்ட்டின் உரக்கக் கத்தினார்.

குர்சரண் பெரும்பாலும் மயங்கிய நிலையில் இருந்தார். 'பிரிட்டிஷாராகிய நீங்கள் விசித்திரமானவர்கள். தூக்கிலிடப் போகும் எனக்கு நீங்கள் வாழ்த்துச் சொல்கிறீர்கள்' அவர் விசும்பலுடன் கூறினார்.

'இல்லை! சற்று முன் டில்லியில் கையெழுத்தான உடன்பாடு காரணமாக அனைத்து தூக்கு தண்டனைகளும் ரத்து செய்யப்பட்டு விட்டன' என்று படபடப்புடன் மார்ட்டின் விளக்கினார். பல வாரங்கள் கழித்து குர்சரண் சிங் விடுதலை செய்யப்பட்டார். அவரின் முதலாவது முக்கிய நடவடிக்கையாக இருந்தது காந்தியின் ஆசிரமத்துக்கான புனிதப் பயணமாகும். மகாத்மாவின் வசீகரத்தால் அந்தத் தீவிரமான மாணவப் புரட்சியாளன் கவரப்பட்டான். காந்தியின் பாதையைப் பின்பற்றுவதாக அவன் சபதமேற்றான். வியப்புக்குரிய விஷயம் என்னவென்றால் இவனது உயிரைக் காப்பாற்றிய காந்தி ஒருநாள் இறந்து விழும் போது அவரது உடலைத் தன்கைகளில் தாங்கிப் பிடிக்கப் போகிறவன் இந்த குர்சரண் சிங் தான்.

அவரது இயக்கத்தை வாபஸ் பெறவும், இந்தியாவின் எதிர்காலம் பற்றி விவாதிக்க லண்டன் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளவும் ஒப்புக் கொண்டார்.

ஆறுமாதங்களுக்குப் பிறகு, பிரிட்டிஷ் தேசம் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த மகாத்மா காந்தி, பேரரசருடன் தேநீர் அருந்த அரை ஆடையுடனும் சாதாரண மிதியடிகளுடனும் பக்கிங்காம் அரண்மனைக்கு வந்தார். 'முன்னால் அதிகம் இல்லை; பின்னால் இருப்பதோ அதை விடவும் குறைவு' என்று கங்காதினில் கிப்ளிங் சொன்னதன் உயிரோவியமாக அவர் இருந்தார். பின்னர் அவரது ஆடையின் பொருத்தப்பாடு பற்றி கேட்ட போது 'இருவருக்கும் சேர்த்தே போதிய அளவு ஆடையை மன்னர் அணிந்திருந்தார்' என்று காந்தி புன்னகையுடன் கூறினார்.

இவர்களின் சந்திப்பைச் சுற்றி செய்யப்பட்ட விளம்பரம்தான் காந்தியின் லண்டன் பயணத்தில் உண்மையான தாக்கத்தை ஏற்படுத்திய அளவு கோலாக இருந்தது. அவர் கலந்து கொள்ள வந்த வட்டமேசை மாநாடு தோல்வியடைந்தது. இந்திய விடுதலை பற்றி சிந்திக்க லண்டன் இன்னமும் தயாராகவில்லை.

'உண்மையான பணி மாநாட்டுக்கு வெளியே தான் இருக்கிறது.. இப்போது தூவப்படும் விதை எதிர்காலத்தில் பிரிட்டிஷாரின் உணர்வுகளை மென்மையாக்க உதவலாம்' என்று காந்தி நம்பினார். இதனை மென்மையாக்க காந்தியை விட வேறெவரும் அதிகம் செய்துவிடவில்லை. மறுகன்னத்தைக் காட்டியே பிரிட்டிஷ் ராஜ்யத்தை வீழ்த்த விரும்பிய காந்தி அந்நாட்டு மக்களாலும் பத்திரிகைகளாலும் மிகவும் கவரப்பட்டார்.

கப்பலிலிருந்து இறங்கும் போதும் காந்தி அரை ஆடையுடனும் மூங்கில் கைத்தடியுடனும்தான் இருந்தார். அவருக்குப் பின்னால் மெய்க்காப்பாளர்களோ, பணியாளர்களோ இல்லை. ஒரு வெள்ளாட்டுடன் சில சீடர்கள் மட்டுமே வந்தனர். மகாத்மாவுக்கு தினமும் ஒரு கோப்பை பால் வழங்குவதற்காக இந்திய வெள்ளாடு கொண்டு வரப்பட்டது. சீமான்கள் தங்கும் ஹோட்டல்களை அவர் நிராகரித்தார். லண்டனின் கிழக்குப் பகுதியில் இருந்த குடிசைப் பகுதியில் ஒரு குடிலில் தங்கினார்.

முதலில் லண்டனுக்கு வந்தபோது நாவடக்கிய கூச்ச சுபாவமுள்ள மாணவனாக இருந்த காந்தி இப்போது ஓயாமல் பேசினார். சார்லி சாப்ளின், ஜான் ஸ்மட்ஸ், ஜார்ஜ் பெர்னார்ட்ஷா, கேன்டர்பரி பேராயர், ஹரோல்ட் லஸ்கி, மரியா மாண்டிசோரி, சுரங்கத்தொழிலாளர்கள், குழந்தைகள், இந்தியாவில் இவர் மேற்கொண்ட பிரச்சார இயக்கத்தால் வேலை இழந்த லங்காஷைர் ஜவுளி ஆலைத் தொழிலாளர்கள் என பல தரப்பட்டவர்களையும் காந்தி சந்தித்தார். அவரைப் பார்க்க உறுதியுடன் மறுத்து விட்ட வின்ஸ்டன் சர்ச்சிலைத் தவிர ஏறத்தாழ எல்லாப் பிரமுகர்களையும் அவர் சந்தித்து விட்டார்.

காந்தி பதித்த முத்திரை அளப்பரியது. அவரது உப்பு சத்தியாக்கிரகம் பற்றிய செய்திப்படம் ஏற்கெனவே அவருக்குப் புகழை ஏற்படுத்தியிருந்தது. தொழில் துறையில் அமைதியின்மை, வேலையின்மை, கொடுமையான சமூக அநீதி ஆகியவற்றால் பிரிட்டிஷ் மக்கள் பீடிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு கீழை நாட்டிலிருந்து, பருத்தியாடை அணிந்து கிருத்துவைப்போல், இன்னும் சொல்லப் போனால் கிருத்துவைப் போல் அன்பை போதித்துக் கொண்டு வந்த அந்தத் தேவதூதர் கவர்ச்சியானவராகவும் மனதில் கிளர்ச்சியை ஏற்படுத்துப

வராகவும் இருந்தார். ஒருவேளை அமெரிக்காவுக்கு அவர் அளித்த வானொலிப் பேட்டி மூலம் காந்தி தாமாகவே கவர்ச்சியின் ஆணிவேரைத் தொட்டுக் காட்டியிருக்கலாம்.

'இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பக்கம் உலகத்தின் கவனம் திரும்பியுள்ளது. ஏனெனில் அந்த சுதந்திரத்தை அடைவதற்கு நாங்கள் கடைப்பிடிக்கும் வழிமுறைகள் ஒப்பற்றவை.. இதுவரை மரணம் சம்பவிக்கும் ரத்தக்களரிகளால் உலகம் சோகப் பட்டிருக்கிறது. இதிலிருந்து விடுபட உலகம் வழி தேடுகிறது. அத்தகைய வேட்கையுள்ள உலகத்துக்கு வழிகாட்டுவது ஒருவேளை பழம் பெரும் நாடான இந்தியாவின் கடப்பாடாக இருக்கக் கூடும் என்று நம்புகிறேன். இதை எண்ணி எனக்கு நானே கர்வம் கொள்கிறேன்' என்று காந்தி கூறினார்.

எந்திரத் துப்பாக்கிக்குப் பதிலாக வெள்ளாட்டுடன் காந்தி பயணம் செய்த மேற்கத்திய உலகம் இந்தப் புரட்சியாளரது திட்டத்தை ஏற்று விடுபட இன்னும் தயாராகவில்லை. ஐரோப்பாவின் தெருக்களில் ஏற்கெனவே ராணுவ வீரர்களின் பூட்ஸ் சத்தங்களும், கற்பனாவாதிகளின் உணர்ச்சிகரக் கூப்பாடுகளும் எதிரொலித்துக் கொண்டிருந்தன. ஆயினும் இத்தாலியத் துறைமுகமான பிரின்டிசி(Brindisi)க்குச் செல்வதற்காக ரயிலில் புறப்பட்ட போது மூன்றாம் வகுப்புப் பெட்டியின் சன்னலோரம் சாய்ந்து உட்கார்ந்திருந்த அந்த மெலிந்த பல்லில்லாத மனிதரைக்காண வழிநெடுகிலும் உள்ள ரயில் நிலையங்களில் ஃபிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, இத்தாலி நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் முண்டியடித்து முன்னேறினர்.

பாரிசில் ஏராளமான மக்கள் ரயில் நிலையத்தை மொய்த்துக் கொண்டதால் அவர்களிடையே உரையாற்ற காந்தி ஒரு சரக்குப் பெட்டியின் மேல் ஏறி நிற்க வேண்டியதாயிற்று. ஸ்விட்சர்லாந்தில் அவரது நண்பரான எழுத்தாளர் ரொமென் ரோலன்டைப் (Romain Rolland) பார்க்கச் சென்றபோது, லேமன் பால்பண்ணைக்காரர்கள் 'இந்தியாவின் மன்னருக்கு'ப் பால் வழங்க போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தனர். ரோம் நகருக்குச் சென்ற போது, ஃபாசிஸம் என்பது 'சீட்டுக்கட்டு வீடுபோல மளமளவென சரிந்து விழும்' என்று முசோலினியை எச்சரித்தார். கால் பந்தாட்டம் பார்த்தார். சிஸ்டைன் தேவாலயத் துக்குச் சென்று சிலுவையில் அறையப்பட்ட நிலையில் கிருத்துவின் சிலையைக் கண்டு கண்ணீர் வடித்தார்.

ஐரோப்பாவைச் சுற்றி வெற்றிகரமாகப் பயணம் மேற்கொண்டாலும் தாயகம் திரும்புகையில் காந்தி மிகவும் வருத்தப்பட்டார். பம்பாயில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி அவரை வரவேற்றனர். 'நான் வெறும் கையோடு திரும்பியிருக்கிறேன்' என்று அவர்களிடம் காந்தி கூறினார். மீண்டும் ஒத்துழையாமை இயக்கத்துக்குத்தான் இந்தியா திரும்ப வேண்டியிருக்கும். லண்டனில் பேரரசரின் தேநீர் வேளை விருந்தினராகச் சென்ற அவர் ஒரு வாரத்துக்கும் குறைவான காலத்தில் மீண்டும் மேன்மை தங்கிய மன்னரின் விருந்தாளியாகச் சென்றார் - இப்போது சென்றதோ எரவாடா சிறைச்சாலைக்கு.

அடுத்த மூன்று ஆண்டுகள் காந்தி சிறைக்குச் செல்வதும் வெளியே வருவதுமாக இருந்தார். அதே சமயத்தில் 'காந்தியையும் அவரது நோக்கங்கள் அனைத்தையும் நசுக்கி விட வேண்டும்' என்று சர்ச்சில் லண்டனில் முழங்கிக் கொண்டிருந்தார். இருந்தாலும் சர்ச்சிலின் எதிர்ப்பையும் மீறி 1935ஆம் ஆண்டு

இந்திய அரசுக்கான சட்டத்தின் மூலம் இந்தியாவின் மாகாணங்களுக்கு சில சுயாட்சி அதிகாரம் வழங்குவதென்ற அடிப்படை சீர்திருத்தத்தை பிரிட்டிஷ் அரசு துவக்கியது. காந்தி சிறையிலிருந்து விடுதலையானபின், அரசியல் போராட்டத்திலிருந்து விலகி மூன்று ஆண்டுகள் அவருக்கு மிகவும் பிடித்தமான இரண்டு பணிகளில் அர்ப்பணிப்புடன் அக்கறை செலுத்தினார். ஒன்று இந்தியாவின் லட்சக்கணக்கான மக்களிடையே நிலவும் தீண்டாமைக் கொடுமை. மற்றொன்று இந்திய கிராமங்களின் மோசமான நிலைமை.

இரண்டாம் உலகயுத்தம் மூளுவதற்கான நிலைமைகள் உருவாயின. முன்னெப்போதையும் விட அஹிம்சை இப்போது முக்கியத்துவம் பெறுவதாக காந்தி கருதினார். மனிதகுலம் தன்னைத்தானே அழித்துக் கொள்வதிலிருந்து அதனைக் காப்பதற்கான ஒரே தத்துவம், இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு வழிகாட்டு நெறியாக இருந்தது.

முஸோலினி எத்தியோப்பியாவைக் கைப்பற்றிய போது 'உங்களைக் கொன்று குவிக்க அனுமதித்து விடுங்கள்' என்று எத்தியோப்பியர்களிடம் காந்தி வலியுறுத்தினார். எதிர்த்துப் போரிடுவதை விட இதன் விளைவு மிகவும் வலுவானதாக இருக்கும். ஏனெனில் 'முஸோலினி ஒரு பாலைவனத்தை விரும்பமாட்டார்' என்றும் அவர் கூறினார். யூதர்களை நாஜிகள் கொன்று குவிப்பது பற்றி மனம் வருந்தினார். ' மனித குலத்தின்பேரால் மனித குலத்துக்காக யுத்தம் நியாயப்படுத்தப்பட்டால், ஒரு இனம் ஒட்டுமொத்தமாக வேண்டு மென்றே படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க ஜெர்மனிக்கு எதிரான யுத்தமும் முழுமையாக நியாயப்படுத்தப்படும்' என்று அவர் அறிவித்தார்.

'இன்னமும் போரில் நான் நம்பிக்கை வைக்கவில்லை' அவர் மேலும் கூறினார். 'யோவாவினால் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள, வருத்தப்பட்டு பாரம் சுமக்கும் வலுவைக் காட்டுவதில், நிராயுத பாணிகளான ஆண்களும் பெண்களும் அமைதியாகவும் தீர்மானகரமாகவும் இருக்க வேண்டும்' என்றும் அவர் யோசனை கூறினார். 'இந்த செயல் ஜெர்மானியர்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தி, மனித குல மாண்பை உணர வைக்கலாம்' என்றும் அவர் கூறினார்.

ஐரோப்பிய சித்ரவதைக் கூடங்களில் செய்யப்பட்ட கொடுமைகள் கூட அவரது கருத்தில் உள்ள அடிப்படை நிலை மீது சந்தேகத்தை எழுப்பவில்லை. அஹிம்சைப் பாதை சரியானதே என்று அவர் நம்பினார்.

முடிவில் இரண்டாம் உலகயுத்தம் வெடித்து விட்டது. புயலுக்குப் பின் தோன்றும் சூரிய ஒளிபோல, இந்த யுத்தத்தின் பேரழிவுக்குப்பின் தீரத்தின் வெளிப்பாடான தியாகம் நிறைந்த அஹிம்சை ஒளி பிறக்க வேண்டும் என்று காந்தி பிரார்த்தித்தார். சுயஅழிவு என்ற இறுக்கமான சுழற்சியிலிருந்து விடுபட மனிதகுலத்துக்கு இது வழிகாட்டட்டும் என்றும் அவர் கூறினார்.

'ரத்தம், கடின உழைப்பு, கண்ணீர், வியர்வை' ஆகியவற்றைக் கோரி தமது நாட்டு மக்களிடம் சர்ச்சில் வேண்டுகோள் விடுத்த வேளையில், தமது கொள்கையை சோதித்துப் பார்ப்பதற்குப் போதிய அளவு நேரம் ஆங்கிலேயர் களிடம் இருக்கிறது என்று நம்பிக்கை கொண்ட காந்தி வேறொரு யோசனையை முன்வைத்தார். 'ஹிட்லரையும் முஸோலினியையும் அழை யுங்கள். உங்கள் நாடுகளிலிருந்து விரும்பும் அளவுக்கு உங்கள் சொத்துக்களை எடுத்துச் செல்ல அவர்களை அனுமதியுங்கள்' என்று விமானப்படை தாக்குதல் உச்சத்தில் இருந்த போது ஆங்கிலேயர்களுக்கு அவர் இப்படி எழுதினார்.

*'உங்கள் அழகிய தீவிலிருந்து கண்ணைக் கவரும் கட்டிடங்களுடன் உங்களின் எந்தச் சொத்துக்களையும் அவர்கள் எடுத்துச் செல்லட்டும், அனைத்தையும் நீங்கள் கொடுத்து விட்டாலும், உங்களின் மனங்களையும் உயிர்களையும் ஒரு போதும் கொடுத்து விடமாட்டீர்கள்' என்றும் காந்தி கூறினார்.*

*காந்தியின் கொள்கையை தர்க்கரீதியில் சோதித்துப் பார்ப்பதாக இது இருந்தது எனலாம். பிரிட்டிஷாருக்கும், வெல்ல முடியாத அவர்களின் தலைவருக்கும் இந்த வார்த்தைகள் வயதான ஒரு கோமாளியின் பொருத்தமற்ற பிதற்றல்களாகவே தெரிந்தன.*

*போரை ஆதரிக்காமல் இருப்பதுதான் சரியான நடைமுறை என்பதை அவரது சொந்த காங்கிரஸ் இயக்கத்தினரையே கூட காந்தியால் இணங்கச் செய்ய முடியவில்லை. அவரின் ஆதரவாளர்களில் பெரும்பாலோர் பாசிஸ எதிர்ப்புக் குணம் உள்ளவர்கள். சுதந்திர மனிதர்களாகச் செயல்பட முடியு மென்றால் இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தவும் அவர்கள் ஆர்வமாக இருந்தனர். முதன்முறையாக காந்தியும் அவரது சீடர்களும் கருத்து வேறுபாடு கொண்டார்கள். ஆனால் இது கடைசி வரை நீடிக்கவில்லை.*

*இவர்களை மீண்டும் ஒன்றிணைக்கும் வேலையை சர்ச்சில் செய்தார். இந்தியா மீதான அவரது நிலை முன்பிருந்தது போலவே முரட்டுத்தனமாக இருந்தது. இந்திய தேசியவாதிகளைப் போர் நடவடிக்கையில் இணைத்துக் கொள்ள அனுமதிக்கும் சமரச முயற்சி எதையும் பரிசீலிக்க இயலாதென்று அவர் நிராகரித்தார். அட்லாண்டிக் ஒப்பந்தத்தை உருவாக்க ஃபிராங்க்ளின் ரூஸ்வெல்ட்டுடன் நடத்திய முதல் கூட்டத்திலேயே சர்ச்சில் ஒன்றைத் தெளிவுபடுத்தினார். தம்மைப் பொறுத்தவரை இந்த ஒப்பந்தத்தில் தாராள மனதுடன் இடம் பெறும் சலுகைகள் இந்தியாவுக்குப் பொருந்தாது என்றார் அவர். இந்த விஷயத்தில் அவரின் உணர்ச்சி நிலை அவரது அமெரிக்க நண்பரையே திகைப்படையச் செய்தது. இதையடுத்து சர்ச்சிலின் இன்னொரு சொற்றொடரும் நேசநாடுகளின் கூட்டங்களில் மீண்டும் மீண்டும் ஒலித்தது. 'நான் மேன்மை தங்கிய மன்னரின் முதன்மை அமைச்சரானது (பிரதமரானது) பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை சிதைக்கும் பணிக்குத் தலைமை தாங்குவதற்காக அல்ல' என்பது தான் அது.*

*1942 மார்ச் மாதம் ஜப்பான் ஏகாதிபத்தியத்தின் இராணுவம் இந்திய எல்லைகளை நெருங்கும் வரை சர்ச்சில் தனது பிடிவாதத்தை விடவில்லை. வாஷிங்டனிலிருந்தும் மற்ற சக நண்பர்களிடமிருந்தும் வந்த நெருக்குதலால் புதுடில்லிக்கு முக்கியமான தகவல் ஒன்றை அவர் அனுப்பினார். இந்தத் தகவலைக் கொண்டு சேர்க்கும் தூதராக இந்தியா மீது அனுதாபம் கொண்ட சர் ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸை அவர் தெரிவு செய்தார். கிரிப்ஸ் காய்கறி உணவுப் பழக்கமுள்ளவர். இவர் காங்கிரஸ் தலைமையுடன் நீண்ட காலமாய் நெருக்கமான நட்பு கொண்ட எளிய குணமிக்க சோஷலிசவாதியும் ஆவார். இந்தத் தகவலை அனுப்பியவரைக் கருதிப் பார்க்கும் போது, கிரிப்ஸ் கொண்டு வந்த திட்டம் குறிப்பிடத்தக்க அளவு தாராளமானது என்றே சொல்லலாம்.*

*ஜப்பான் தோல்வியடைந்த பிறகு சுதந்திரத்துக்கு முன்னோடியாக, இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து அளிக்கப்படும் என்ற உறுதிமொழி அதில் இருந்தது. போருக்கு நடுவே இத்தகைய ஒப்புதல் அளிப்பது பெரும்பாலும் பிரிட்டனிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டதே. இஸ்லாமிய நாடு*

வேண்டும் என்ற முஸ்லீம் லீகின் கோரிக்கை வலுவடைந்து வருவதை அங்கீகரிக்கும் வகையில் அவர்களின் கோரிக்கையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கிரிப்ஸ் வந்து சேர்ந்த நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குப் பின்னால், காந்தி அவரிடம் சொன்னார்: 'இந்த யோசனை ஏற்கத் தக்கதல்ல; ஏனென்றால் இந்தியாவை நிரந்தரமாகத் துண்டாடும் திட்டமாக இது இருக்கிறது' இந்திய மண்ணைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் இருப்பதால் இந்தியர்களின் ஒத்துழைப்பை உடனடியாகப் பெற வேண்டியே எதிர்காலத்தில் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதாகப் பிரிட்டிஷார் தெரிவிக்கின்றனர். அஹிம்சை கொள்கையில் உறுதியோடிருந்த அந்த தேவதூதருக்கு இந்த ஒப்பந்தத்தில் உடன்பாடில்லை. ஜப்பான் எதிர்க்கப்பட வேண்டுமானால், காந்தியைப் பொறுத்தவரை அது அஹிம்சை வழியில் மட்டுமே.

மகாத்மா ரகசியக் கனவு ஒன்றை மனதில் வளர்த்திருந்தார். நியாயமான செயலுக்காக கடலளவு ரத்தம் சிந்தினாலும் அவர் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார். கட்டுப்பாடான அஹிம்சைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் இந்தியர்கள் வரிசையாக அணிவகுத்துச் சென்று ஜப்பானியர்களின் துப்பாக்கிகளுக்கு முன்னால் உயிர்த்தியாகம் செய்ய வேண்டும். அந்த மேன்மையால் எதிரியின் இதயத்தைக் கவர்ந்து அஹிம்சையின் வெற்றியை உறுதி செய்ய வேண்டும். இதன் மூலம் மனித குலத்தின் வரலாற்றுப் போக்கையே மாற்ற வேண்டும் என்பதே காந்தியின் கனவு.

சர்ச்சிலின் திட்டம் 'திவாலாகும் வங்கிக்கு அளிக்கப்பட்ட பின்தேதியிட்ட ஒரு காசோலை' என்று காந்தி வர்ணித்தார். அவரிடம் வேறு ஏதும் திட்டம் இல்லையென்றால் அவர் 'அடுத்த விமானத்திலேயே தாயகம் திரும்பிவிடலாம்' என்று கிரிப்சிடம் காந்தி கூறினார்.*

கிரிப்ஸ் புறப்பட்டுச் சென்றதற்கு அடுத்த நாள் ஒரு திங்கட்கிழமை. காந்தி வழக்கமாக மவுனவிரதம் இருக்கும் நாள். அவரது குரல் நாண்களைப் பாதுகாப்பதற்காகவும், சிந்தனையை ஒருமுகப்படுத்துவதற்காகவும் பல ஆண்டுகளாக வாரத்தில் ஒரு நாள் இந்த விரதத்தை அவர் கடைப்பிடிக்கிறார். ஆனால் அவரது 'அந்தராத்மா' மனசாட்சியின் குரல், இதேபோல் ஓய்வெடுக்காதது காந்திக்கும் இந்தியாவுக்கும் மகிழ்ச்சி அளிப்பதாக இல்லை. அது காந்தியோடு பேசியது. அதன் அறிவுரை மோசமான விளைவுகளை உருவாக்கியது.

இந்த அறிவுரை இரண்டு வார்த்தைகளாலானது. அந்த இரண்டு வார்த்தைகள் தான் காந்தியின் அடுத்தப் போர் முழக்கம் ஆனது: 'இந்தியாவை விட்டு வெளியேறு' (Quit India) (வெள்ளையனே வெளியேறு -மொ-ர்). பிரிட்டிஷார் இந்தியா மீதான அதிகாரத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று காந்தி கூறினார். அவர்கள் இந்தியாவை 'கடவுளிடமோ அராஜகத்திடமோ விட்டுச் செல்லட்டும்.' பிரிட்டிஷார் இந்தியாவை அதன் விதிவழி

* கிரிப்ஸ் உடனடியாகப் புறப்பட்டுச் சென்று விடவில்லை. மகாத்மா காந்தியுடன் காங்கிரசின் மற்ற தலைவர்களுக்குக் கருத்து வேறுபாடு ஏற்படுத்துவதில் கிட்டத்தட்ட அவர் வெற்றி பெற்று விட்டார். இந்தியாவின் போர் முயற்சிகளைக் கண்காணிப்பதில் எவ்வளவு தூரம் அவர்களை அனுமதிப்பது என்பதுதான் பிரச்சனையானது. மீண்டும் ஒரு முறை உடன்பாடு ஏற்படுவதையும் சர்ச்சில் தடுத்து நிறுத்தினார்.

விட்டு விட்டால், அதன் மீது ஜப்பானியர்கள் தாக்குதல் நடத்தக் காரணம் ஏதும் இருக்காது.

1942 ஆகஸ்ட் 8 நள்ளிரவுக்குப் பின், பம்பாயில் வெக்கையால் திணறும் கூட்ட அறையில், இடுப்புக்கு மேல் நிர்வாணமாக இருந்த காந்தி, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவாளர்களுக்குப் போராட்டத்தைத் துவக்குமாறு அறைகூவல் விடுத்தார். அவரது குரல் ஆரவாரமின்றி அமைதியாக இருந்தது. ஆனால் வார்த்தைகள் காந்தியின் இயல்பை மிஞ்சிய வேகத்தையும் ஆவேசத்தையும் கொண்டிருந்தன.

'உடனடியாக சுதந்திரம் கிடைப்பதை நான் விரும்புகிறேன். முடியுமானால் இந்த நள்ளிரவிலேயே... பொழுது புலர்வதற்கு முன்...' காந்தி கூறினார்.

'என்னிடம் ஒரு மந்திரம் உள்ளது. அந்த சிறிய மந்திரத்தை நான் உங்களுக்கு உபதேசிக்கிறேன்' ஆதரவாளர்களைப் பார்த்து காந்தி கூறினார். "செய் அல்லது செத்து மடி" 'நாம் இந்தியாவை விடுவிப்போம்; அல்லது அந்த முயற்சியில் செத்து மடிவோம்; நமது அடிமைத்தனம் நிரந்தரமாவதைக் காண நாம் உயிர்வாழக் கூடாது'

பொழுது புலருமுன் காந்தி சுதந்திரம் பெறவில்லை; மாறாக பிரிட்டிஷ் சிறைக்குச் செல்ல மீண்டும் அழைப்பு வந்தது. மிகவும் கவனமுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் படி போர்க்காலம் முழுவதும் காந்தியையும் ஒட்டுமொத்த காங்கிரஸ் தலைவர்களையும் அள்ளிச் சென்று சிறையில் அடைத்தது பிரிட்டிஷ் அரசு. இவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆங்காங்கே வன்முறைகள் தலைதூக்கின. ஆனால் மூன்று வாரங்களில் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

மிகவும் முக்கியமான நேரத்தில் காங்கிரஸ் தலைவர்களை அரசியல் களத்திலிருந்து அகற்றியதன் மூலம், காந்தியின் செயல் தந்திரத்தை முஸ்லீம் லீக் சாதுர்யமாகப் பயன்படுத்திக் கொண்டது. காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் வாடியபோது, அவர்களின் எதிராளிகளான முஸ்லீம் தலைவர்கள் பிரிட்டனின் போர் முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தனர். தங்களின் செயல்மூலம் பிரிட்டிஷாரிடம் கணிசமான நன்மதிப்பைப் பெற்றனர். காந்தியின் திட்டம் ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றத் தவறியது மட்டுமல்ல, நாட்டை விட்டுச் செல்லுமுன் இந்தியாவைப் பிளவுபடுத்த வேண்டும் என்ற அவர்களின் எண்ணத்தை உறுதிப்படுத்தவும் செய்து விட்டது.

பிரிட்டிஷ் சிறையில் காந்தியின் கடைசி சிறைவாசம் இதுவாகத்தான் இருக்கும். இந்தச் சிறைவாசம் முடிவடைந்த நேரத்தில் அந்த வயதான மனிதர் மொத்தம் 2338 நாட்களைச் சிறையில் கழித்திருந்தார். இதில் 249 நாட்கள் தென்ஆப்பிரிக்காவில்; 2089 நாட்கள் இந்தியாவில். அவர் ஏற்கெனவே பலகாலம் இருந்து பழக்கப்பட்ட எரவாடா சிறைக்கு இப்போது சிறைக்காவலர்கள் காந்தியைக் கொண்டு செல்லவில்லை; மாறாக ஆகாகான் மாளிகையில் சிறை வைத்தனர். சிறை வாசம் தொடங்கி ஐந்து மாதங்களுக்குப் பின் 21 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக காந்தி அறிவித்தார். இதற்கான பின்னணிக் காரணம் தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் சமரசம் செய்து கொள்ளும் மனநிலையில் பிரிட்டிஷார் இல்லை. உண்ணாவிரதமிருந்து காந்தி உயிர்விட விரும்பினால் அவர் அப்படியே செய்யட்டும் அனுமதித்து விடுங்கள் என்று சர்ச்சில் புதுடில்லிக்குத் தகவல் அனுப்பிவிட்டார்.

உண்ணாவிரதத்தின் பாதி கட்டத்தில் அவரது உடல்நிலை மோசமானது. காந்தியைக் காப்பாற்ற விரும்பாத பிரிட்டிஷ் அரசு அவரது மரணத்துக்குப் பின் செய்ய வேண்டிய சடங்குகளுக்கு ரகசியமாகத் தயாரானது. இரண்டு பிராமணப் புரோகிதர்கள் சிறைக்கு வரவழைக்கப்பட்டனர். காந்தியின் உடலை தகனம் செய்வதற்கான வேலைகளும் நடந்தன. அதற்குத் தேவையான சந்தனக் கட்டைகள் இருட்டிய நேரத்தில் ரகசியமாக அரண்மனைக்குள் கொண்டு செல்லப்பட்டன. அவரது மரணத்துக்கு எல்லோரும் தயாரானார்கள் - 74 வயது காந்தியைத் தவிர. உண்ணாவிரதத்தைத் தொடங்கும் போது அவரின் எடை 110 பவுண்டுக்கும் (சுமார் 50 கிலோ கிராமுக்கும் - மொ-ர்) குறைவாகவே இருந்தது. உப்புக் கலந்த நீரையும், சில நேரங்களில் இத்துடன் எலுமிச்சை அல்லது மூசாம்பி பழத்தின் சாறையும் சில துளிகள் கலந்து குடித்து 21 நாள் உண்ணா விரதத்தை முடித்த போதும் அவரது உயர்ந்த உணர்வுகள் செத்து விடவில்லை; தாமாகவே விதித்துக் கொண்ட சோதனையில் அவர் வெற்றி பெற்று விட்டார்.

இருப்பினும் இன்னொரு துயரம் அவருக்குக் காத்திருந்தது. அவரது தகனத்துக்கென்று தீர்மானிக்கப்பட்டிருந்த சந்தனக் கட்டைகள் இன்னொருவரின் சிதை நெருப்புக்கு உணவாக இருந்தன. அதுதான் அவரது மனைவி. பதின்மூன்று வயது குழந்தையாக இருந்த போது அவரை மணந்து கொண்ட எழுத்தறிவற்ற பெண் 1944 பிப்ரவரி 22இல் காந்தியின் மடியில் தலை சாய்த்தபடியே மரணமடைந்தார். இவரது உயிரைக் காப்பாற்றக் கூட காந்தி தனது கொள்கையைக் கைவிடத் தயாராக இல்லை. அவர் இயற்கை வைத்தியத்தில் மட்டுமே நம்பிக்கை வைத்தார். தோலுக்கடியில் உள்ள சதையில் ஊசியைப் பொருத்தி மருந்தைச் செலுத்துவது கூட மனித உடல் மீதான வன்முறை என்றே காந்தி கருதினார். அவரது மனைவி கடுமையான மார்புச்சளி நோயினால் செத்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்த பிரிட்டிஷார், அரிதாகக் கிடைக்கும் விலை உயர்ந்த பென்சிலின் மருந்தை சிறைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் கடைசி நேரத்தில், மரணப்படுக்கையில் இருக்கும் மனைவிக்கு இந்த மருந்தை ஊசி மூலம் செலுத்தினால் உயிர் பிழைத்து விடக் கூடும் என்று தெரிந்தாலும், அதனைச் செலுத்த மருத்துவர்களுக்கு காந்தி அனுமதி தரவில்லை.

மனைவியின் மரணத்துக்குப் பின் காந்தியின் உடல் நிலையும் விரைந்து மோசமானது. மலேரியா காய்ச்சல், கொக்கிப்புழு, ரத்தசீதபேதி, ஆகியவற்றால் அவர் பாதிக்கப்பட்டார். சோர்ந்து தளர்ந்து போன நிலையில் அவர் அதிக காலம் உயிர்வாழ மாட்டார் என்பது தெளிவானது. அவரை விடுதலை செய்ய சர்ச்சிலுக்கு மனமில்லையென்றாலும் பிரிட்டிஷ் சிறையில் அவர் இறந்து விடக்கூடாது என்பதற்காக விடுதலை செய்ய ஒப்புக் கொண்டார்.

இருப்பினும் பிரிட்டிஷ் ஆட்சி நடக்கும் இந்தியாவில் அவர் இறக்கப் போவதில்லை. பம்பாய் அருகே அவரது பணக்கார ஆதரவாளர் ஒருவரின் கடற்கரையோர எஸ்டேட்டில் இருந்த ஒரு குடிசையில், பாதுகாப்பாக காந்தி தங்க வைக்கப்பட்டார். அவரது உடல்நலம் மெல்ல மெல்லத் தேறியது. இந்த நிலையில், இந்தியாவில் அதிகரித்து வரும் பஞ்சநிலை பற்றி வைஸ்ராய் அனுப்பிய அவசரத் தந்திகளுக்கு பதில் அனுப்புவது பற்றி கவலைப்படாத சர்ச்சில், எரிச்சலுடன் புதுடில்லிக்கு வேறொரு தந்தியை அனுப்பினார். 'காந்தி இன்னும் ஏன் சாகவில்லை ?' என்பது தான் அந்த தந்தி.

ஒரு சில நாட்களுக்குப் பின் காந்தி தங்கியிருந்த குடிலுக்குள் பணக்கார ஆதரவாளர் வந்தார். காந்தியின் சீடர் ஒருவர் தலை கீழாக நின்று சிரசாசனம் செய்வதையும், மற்றொருவர் எல்லையற்றப் பரம்பொருளைத் தேடும் தியானத்தில் ஆழ்ந்திருப்பதையும் மூன்றாவது நபர் தரையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பதையும் மகாத்மாவே கூட அவரது கழிப்பறையில் அமர்ந்து அண்டவெளியை வெறித்து நோக்கிக் கொண்டிருப்பதையும் அவர் கண்டார்.

அவர் வாய்விட்டுச் சிரித்தார். கழிப்பறையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த காந்தி, 'அவர் ஏன் சிரிக்கிறார்' என்று கேட்டார்.

வீட்டுரிமையாளர் சிரித்துக் கொண்டே சொன்னார்: 'ஓ பாபு! இந்த அறையை பாருங்கள். ஒருவர் தலைகீழாக நிற்கிறார், இன்னொருவர் தியானம் செய்கிறார், மூன்றாவது நபர் தூங்கிக் கொண்டிருக்கிறார், நீங்களோ கழிப்பறையில் இருக்கிறீர்கள் - இவர்கள் தான் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தரப்போகிறவர்களா!'

## நார்த்தோல்ட் விமான நிலையம், 20 மார்ச், 1947

இரண்டரை மாதங்களுக்கு முன் புத்தாண்டு தினத்தன்று லூயி மவுண்ட் பேட்டன் வந்திறங்கிய நார்த்தோல்ட் விமான நிலையத்தின் ஓடு பாதையில் இப்போது அதிகாலை நேர ஒளியில் ஒரு விமானம் காத்திருந்தது. புதிய வைஸ்ராயான மவுண்ட்பேட்டனின் குடும்பத்திற்கென்றே தனித்தன்மை வாய்ந்த , வெள்ளியாலான ஆஷ்ட்ரேக்கள் உட்பட, அவர் தனிப்பட்ட முறையில் பயன்படுத்தும் அனைத்துப் பொருள்களையும் கொண்ட 66 பெட்டிகளை அவரது பணியாள் சார்லஸ் ஸ்மித் விமானத்தில் ஏற்றியிருந்தார். அவரது மனைவி தலைக்கு மேலுள்ள பலகையில் காலணிகளை வைப்பதற்கான பழைய பெட்டி ஒன்றை அலட்சியமாக வைத்திருந்தார். இந்தப் பெட்டிக்குள் அவரது குடும்பத்தின் பரம்பரை சொத்தும், வைஸ்ராயினியாக அறிவிக்கப்பட்ட போது சீமாட்டி மவுண்ட்பேட்டன் அணியக்கூடியதுமான வைர அணி ஒன்றும் இருந்தது. இந்த விஷயம் தெரியவந்தால் விமானம் புறப்படும் நேரத்தில் அது சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தக் கூடும்.

வரவிருக்கும் மாதங்களில் புதிய வைஸ்ராயும் அவரது ஊழியர்களும் செய்ய வேண்டியதற்குத் தேவையான வழிகாட்டுதல்களைக் கொண்ட அனைத்து ஆவணங்களும் அந்தப் பெட்டிக்குள் இருந்தன. இவற்றிலும் மிக முக்கியமானவை கிளமெண்ட் அட்லி கையெழுத்திட்ட இரண்டு பக்கங் களாகும். மவுண்ட்பேட்டனின் பணிகள் பற்றிய விவரங்கள் அவற்றில் இடம் பெற்றிருந்தன. இதற்கு முன்பிருந்த வைஸ்ராய் எவரும் இதுபோன்ற கட்டளை எதையும் பெற்றிருக்கவில்லை. நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் இந்த ஆவணம் முழுவதும் மவுண்ட்பேட்டனாலேயே எழுதப்பட்டது. இதன் ஷரத்துக்கள் எளிமையானவை; தெளிவானவை. காமன்வெல்த் அமைப்புக்கு உட்பட்டு, பிரிட்டிஷ் ஆதிபத்தியத்தை மாற்றி, ஒற்றை சுதந்திர நாடாக இந்தியாவை உருவாக்க, அவர் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இதுவும் 1948 ஜூன் மாதத்துக்குள் நடக்க வேண்டும். சர் ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ் தலைமையில் புதுடில்லிக்கு அனுப்பப்பட்ட அமைச்சரவைக்குழு எட்டு மாதங்களுக்கு முன் உருவாக்கியத் திட்டத்தை

*இயன்ற அளவு அவர் ஒரு வழிகாட்டியாகப் பின்பற்ற வேண்டும். தனியாக பாகிஸ்தான் என்ற முஸ்லீம்களின் கோரிக்கைக்கு மாற்றாக, பலவீனமான மைய அரசுடன் கூட்டமைப்பான இந்தியா தான் அந்தத் திட்டத்தில் இருந்தது. ஆனால் சண்டை போட்டுக் கொள்ளும் அரசியல் தலைவர்களை நிர்ப்பந்தித்து இதற்காக ஒப்பந்தம் செய்வது பற்றிய கேள்வியே எழவில்லை. ஏனெனில் மவுண்ட்பேட்டன் பதவியேற்ற ஆறுமாதத்திற்குள் அதாவது அக்டோபர் முதல் தேதிக்குள் ஒன்றுபட்ட இந்தியா என்ற திட்டத்தை ஏற்கச் செய்ய வேண்டும். அதற்கு வழியில்லாமல் போனால் இந்தியப் பிரச்சனைக்குத் தீர்வு காண மாற்று வழி பற்றி அவர்தான் பரிந்துரை செய்ய வேண்டும்.*

*மவுண்ட்பேட்டன் புறப்படவிருந்த அவரது யார்க் எம்.டபிள்யூ 102 விமானத்தில்* கடைசிக் கட்ட சோதனை நடந்து கொண்டிருந்தபோது, அவருடன் இந்தியா செல்லவிருக்கின்ற முந்தைய போர்க்கால நண்பர்கள் இருவருடன் விமான நிலையத்தின் நடைபாதையில் அவர் உலாவிக் கொண்டிருந்தார். இவர்களில் ஒருவர் கேப்டன் ரொனால்ட் பிராக்மேன், (*Capt. Ronald Brockman*) அந்தரங்க ஊழியர்களின் தலைவர்; மற்றொருவர் லெப்டினன்ட் கமாண்டர் பீட்டர் ஹோவஸ் (*Peter Howes*) அவரது முதுநிலை உதவியாளர் (*ADC - aide - De-camp*) மாற்றியமைக்கப்பட்ட லங்காஸ்டர் குண்டு வீச்சு விமானம் எத்தனை தடவை மவுண்ட் பேட்டனைச் சுமந்து கொண்டு பர்மாவின் காடுகளில் உள்ள போர் முனைகளுக்கும் போருடன் தொடர்புள்ள மாநாடுகளுக்கும் சென்றிருக்கிறது என்பதை பிராக்மேன் எண்ணிப் பார்த்தார். அவருக்குப் பக்கத்திலிருந்த அட்மிரல் வழக்கமாக உற்சாகத்துடன் காணப்படுவார். இப்போதோ அமைதியாகவும் சிந்தனை வயப்பட்டவராகவும் இருந்தார். விமான சிப்பந்தி விமானம் புறப்படத் தயார் என்பதை அறிவித்தார்.*

---

* மாற்றியமைக்கப்பட்ட லங்காஸ்டர் குண்டு வீச்சு விமானத்தின் மீது மவுண்ட்பேட்டனுக்கு தனிப்பட்ட ஈடுபாடு இருந்தது. தென்கிழக்கு ஆசியாவின் சுப்ரீம் கமாண்டராக இருந்த போது பல முறை அதில் அவர் பயணம் செய்திருக்கிறார். லண்டனிலிருந்து டில்லி பயணத்தின் போது விமான சிப்பந்திகள் தரையிறங்கி ஓய்வெடு[illegible]தைத் தவிர்ப்பதற்காக விமானத்திலேயே இவர்கள் ஓய்வெடுப்பதற்கான அறைகளை அமைத்த[illegible]ந்தார்.

ஏறத்தாழ இந்தியாவுக்கான அவரது பயணமே இந்த விமானத்தால் தடைபடவிருந்தது. ஒரு நாள் மவுண்ட்பேட்டன் அவரது லண்டன் அலுவலகத்தில் இருந்த போது, பிரிட்டிஷ் விமானப்படையின் குரூப் கேப்டன் அவரது மெய்க்காப்பாளர் லெப்டினன்ட் கலோனல் பீட்டர் ஹோவஸுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். புதிய வைஸ்ராய் பயன்படுத்த யார்க் எம். டபிள்யூ 102 விமானம் கிடைக்க வாய்ப்பில்லை என்று கூறினார். உடனே மவுண்ட்பேட்டன் மெய்க்காப்பாளரின் கையிலிருந்து தொலைபேசியை வாங்கினார்.

'குரூப் கேப்டன்! உங்களுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்' என்றார் அவர்.

'எனக்கு நன்றியா?' வியப்புடன் அந்த கேப்டன் வினவினார்.

'ஆம்' மவுண்ட்பேட்டன் தொடர்ந்தார். 'இந்த நியமனத்திற்கு நான் ஒப்புக் கொள்ளும்போது யார்க் விமானத்தை என்னுடன் டில்லிக்குக் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று ஒரு நிபந்தனை விதித்திருந்தேன். இந்த விமானத்தை நான் எடுத்துச் செல்ல முடியாது என்று நீங்கள் சொல்வதால் உங்களுக்கு மிக்வும் நன்றியுடையவனாவேன். இந்தியாவின் வைஸ்ராயாக இருக்க நான் விரும்பியதில்லை; இப்போது அந்தப் பதவியிலிருந்து என்னை நீங்கள் காப்பாற்றியிருக்கிறீர்கள்'

தொலைபேசியை அவர் வைத்த போது அந்த அறை முழுவதும் திகைப்பு நிறைந்த அமைதி நிலவியது. சில நிமிடங்களுக்குள் அந்த விமானத்தை அவர் பெற்றார்.

'சரி..... மவுண்ட்பேட்டன் பெருமூச்செறிந்தபடி கூறினார்: 'நாம் இந்தியாவுக்குப் புறப்படப் போகிறோம். நான் அங்கே செல்ல விரும்பவில்லை. அவர்களும் என்னை விரும்பவில்லை. ஒரு வேளை நம் முதுகுகளில் துப்பாக்கி குண்டுகளைத் தாங்கி திரும்பக்கூடும்.'

மூன்று பேரும் விமானத்தில் ஏறினார்கள். எந்திரங்கள் இயங்கத் தொடங்கின. ஓடுபாதையைக் கடந்து சூரியனை மறைத்துக் கொண்டு கிழக்கு திசை நோக்கி அந்த விமானம் பயணித்தது. மூன்றரை நூற்றாண்டுகளுக்கு முன் ஹெக்டர் (Hector) என்ற சிறிய கப்பல் மூலம் கேப்டன் ஹாக்கின்ஸ் கிழக்கு நோக்கிப் பயணம் செய்து துவக்கி வைத்த மகா சகாப்தத்தை முடித்து வைப்பதாக இப்போதைய பயணம் இருந்தது.

நான்கு

# அழிந்துகொண்டிருக்கும் அரசுக்கு இறுதி முரசு

## *நோற்பவரின் பயணம் III*

*எதனாலும் அவரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அணைக்க முடியாத சுடர்விடும் உணர்வுகளுடன் அந்த வயதான மனிதர், வலியெடுக்கும் தனது வெறுங்கால்களுடன், இந்தியாவின் காயங்களுக்கு அன்பு என்ற மருந்தைத் தடவிக் கொண்டே கிராமம் கிராமமாகச் சென்றார். மெல்ல மெல்ல காயங்கள் குணமடையத் தொடங்கின. காந்தியின் மெலிந்து வளைந்த உருவம் தோன்றிய இடத்தில் எல்லாம் கோபங்கள் தணிந்தன. நவகாளியின் ரத்தம் தோய்ந்த நிலங்களில் மருட்சியுடனும் ஐயப்பாட்டுடனும் அமைதி மெல்ல பரவியது.*

*இருந்தாலும் அப்படித் திரும்பிய அமைதி காந்தியின் கவலையைத் தீர்த்து விடவில்லை. பகை நிரம்பிய பாதைகளில் அவரது பயணம் நடந்து கொண்டிருந்தபோதே, அவரது தனிப்பட்ட நாடகம் ஒன்றும் பின் தொடர்ந்தது. அந்த நாடகத்தின் பரிமாணங்கள் அவரது பழைய நண்பர்களில் சிலரால் மதிப்புக் குறைவாகக் கருதப்படலாம். லட்சக்கணக்கான இந்தியர்களைத் திகைப்படையச் செய்யலாம். பின்னொரு நாளில் மோகன்தாஸ் காந்தியின் பன்முக குணங்களை அறிந்து கொள்வதற்கான முயற்சியில் ஈடுபடும் வரலாற்றாய்வாளர்களை வியப்பிலாழ்த்தலாம். இந்தியாவின் மனச்சாட்சியாக இருந்த 77 வயதான அந்த மனிதரின் வாழ்க்கையில் தனிப்பட்ட முறையில் பெரிய சிக்கலையும் அது ஏற்படுத்தலாம்.*

*கால்நூற்றாண்டு காலமாகத் தலைமைப் பாத்திரம் வகித்து அவர் நடத்தும் மாபெரும் அரசியல் போராட்டத்துக்குள் அதன் வேர்கள் இன்னும் எந்தவகையிலும் பதியவில்லை. கடந்த நாற்பது ஆண்டுகளாக எதனைக் கட்டுப்படுத்தவும் அடக்கி உறைய வைக்கவும் போராடுகிறாரோ அந்த முயற்சியின் மீது அந்த வேர்கள் பரவிக்கிடந்தன. அதுதான் பாலுணர்வு. காந்தியின் சகோதரி பேத்தியான பத்தொன்பது வயது மனுதான் அதன் குவி மையமாக இருந்தாள். காந்தியும் அவரது மனைவியும் மனுவைத் தனது சொந்த பேத்தி போல வளர்த்தார்கள். கஸ்தூர்பாய் மரணப் படுக்கையில் கிடந்த போது அவருக்குப் பணிவிடை செய்தது மனுதான். மரணத்துக்கு முன் தனது கணவரை கவனித்துக் கொள்ளும் பொறுப்பை கஸ்தூர்பாய் இந்தப் பெண்ணிடம் ஒப்படைத்தார்.*

'பல பேருக்கும் நான் ஒரு தந்தையாக இருக்கலாம்' என்று கூறிய காந்தி 'உன்னைப் பொறுத்தவரை நான் ஒரு தாய்' என்று அந்தப் பெண்ணிடம் வாக்குறுதி அளித்தார். அவளிடம் ஒரு தாயைப் போலவே காந்தி கண்டிப்புடன் நடந்து கொண்டார். அவளது உடையை, உணவை, கல்வியை, சமயப்பயிற்சியை அவர் கண்காணித்தார். நவகாளியில் காந்தி புனிதப் பயணத்தைத் தொடங்கு வதற்கு சற்றுமுன் அவர்களுக்கிடையே நடந்த உரையாடல் தான் பிரச்சனையின் தொடக்கமாக இருந்தது. இளம் பெண்ணுக்குரிய நாணத்துடன், அவளது அன்னையிடம் உண்மையை ஒத்துக் கொள்வதைப் போல, காந்தியிடம் மனு ஒன்றை ஒப்புக் கொண்டாள். தன்னொத்த வயதுப் பெண்ணிடம் இயல்பாக இருக்க வேண்டிய பாலுணர்வு வேட்கையை ஒரு போதும் தாம் உணர்ந்த தில்லை என்றாள்.

பாலுணர்வை அடக்கி வைக்க வேண்டும் என்ற தத்துவம் கொண்ட காந்திக்கு அவளது வார்த்தைகள் சிறப்பு முக்கியத்துவம் உடையதாக இருந்தன. தாமாகவே பிரம்மச்சரிய விரதம் பூண்டிருந்த காந்தி, அஹிம்சையை உண்மையாகப் பின்பற்றும் தமது சீடர்கள், ஆணானாலும் பெண்ணானாலும், பாலுணர்வில் கட்டுப்பாட்டை கடைப்பிடிப்பதும் அதில் அவர்கள் முதிர்ச்சியோடு இருப்பதும் மிகவும் முக்கியம் என்று கருதினார். அவரின் லட்சியத்தை ஈடேற்றவிருக்கும் அஹிம்சை ராணுவம் பாலுணர்வற்ற வீரர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். இல்லையென்றால் ஏதாவதொரு இக்கட்டான தருணத்தில் அவர்களின் தார்மீக பலம் அவர்களிடமிருந்து போய்விடலாம் என்று காந்தி அஞ்சினார்.

மனுவின் வார்த்தைகளைக் கேட்ட காந்தி அவளை மறுவற்ற பெண் வீராங்கனையாக்கும் வாய்ப்பிருப்பதை அறிந்தார். 'உனக்கு ஒரு லட்சியத் தாயாக இருந்து, இந்தியாவில் உள்ள லட்சக்கணக்கான மகள்களில் ஒருத்தியான உன்னை ஒரு லட்சியப் பெண்ணாகப் பயிற்றுவிக்க முடிந்தால் அது பெண் குலத்துக்கு நான் செய்த பெரும் சேவையாக இருக்கும்' என்று காந்தி அவளிடம் கூறினார். ஆனால் முதலில் அவள் உண்மையைத் தான் சொல் கிறாளா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். நவகாளி யாத்திரையில் தமக்கு நெருக்கமானவர்கள் மட்டுமே வருகிறார்கள் என்ற தகவலை அவளிடம் அவர் கூறினார் அவரது ஒழுக்க விதிகளுக்கு உட்பட்டால், அவள் கூறிய விஷயத்தில் வைக்கப்போகும் சோதனைக்கு உடன்பட்டால் அவளும் பயணத்தில் உடன் வருவதை வரவேற்பதாகவும் சொன்னார்.

ஒவ்வொரு நாள் இரவிலும், வைக்கோல் மெத்தையில் இருவரும் சேர்ந்து படுத்திருக்க வேண்டும் என்று அவர் தீர்மானித்தார். அவர் தன்னைத் தாயாகக் கருதியிருக்கிறார். அவளும் அவரிடம் ஒரு தாயின் அன்பைத் தவிர வேறெதையும் காணவில்லை என்று கூறியிருக்கிறாள். அவர்கள் இருவரும் உண்மையானவர்களாக இருந்தால், முந்தைய பிரம்மச்சரிய விரதத்தில் அவர் இன்னமும் உறுதியுடையவராக இருந்தால், அவளும் உடலுறவு வேட்கையை ஒருபோதும் அறியாதவளாக இருந்தால், அப்பாவியான தாயும் மகளும் போல அவர்கள் இருவரும் ஒரே படுக்கையில் படுத்திருக்க முடியும். இந்த இருவரில் ஒருவர் உண்மையானவராக இல்லையென்றால், விரைவிலேயே அவர்கள் அதனைக் கண்டுபிடித்து விடலாம்.

*மனு உண்மையானவளாக இருந்தால் அவள் தனது நேரடியான தொடர்ந்த கண்காணிப்பில் மேலும் பரிமளிக்கலாம் என்று காந்தி நம்பினார். அவளிடம் ஏதாவது பாலுணர்வு இச்சை தோன்றுமானால் அவரது பாலுணர்வற்ற நிலை அதை அகற்றி விடும். பிக்மேலியன் போன்ற ஒரு மாற்றம் அவளிடம் ஏற்பட்டு விடும். சிந்தனையில் தெளிவையும், பேச்சில் உறுதியையும் அவள் வளர்த்துக் கொள்ளலாம். ஒரு புத்துணர்வு அந்தப் பெண்ணைப் பற்றிக் கொள்ளலாம். அவளை எதிர்நோக்கியுள்ள மாபெரும் பணிக்குத் தூய்மையான தெளிவான அர்ப்பணிப்பை அது அவளுக்குத் தரலாம்.*

*மனு நிபந்தனையை ஏற்றுக் கொண்டாள். அவளது அழகிய உருவம் நவகாளியின் சதுப்பு நிலங்களைக் கடந்து செல்லும் காந்தியின் நிழலைத் தொடர்ந்து சென்றது. இப்படித்தான் நடக்கும் என்று காந்தி எண்ணியது போலவே, அவரது முடிவு அந்தச் சிறிய குழுவிடம் உடனடியாக வியப்பை ஏற்படுத்தி விட்டது.*

*'எனக்கு மோகம் ஏற்பட்டிருப்பதன் அடையாளம் தான் இதெல்லாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்களின் அறியாமையைக் கண்டு எனக்கு சிரிப்புதான் வருகிறது. உண்மையை அவர்கள் அறிய மாட்டார்கள்' சில இரவுகள் ஒன்றாகக் கழித்தபின் காந்தி மனுவிடம் இவ்வாறு கூறினார்.*

*மிகச் சில பேர் இதனைப் புரிந்து கொள்ளலாம். மாபெரும் ஆன்மீகப் போராட்டத்தில் சமீபத்திய நடவடிக்கையின் பின்னால் உள்ள நியாயமான காரணத்தை காந்தியின் ஆதரவாளர்களிலும் பரிசுத்தமானவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். காந்தியைப் பொறுத்தவரை தென் ஆப்பிரிக்காவில் 1906ஆம் ஆண்டு ஒரு நாள் மாலையில் தாம் பிரம்மச்சரிய விரதம் மேற்கொள்ளப் போகும் முடிவைத் தனது மனைவியிடம் அறிவித்ததிலிருந்து இந்த ஆன்மீகப் போராட்டம் தொடங்கியது. இந்த உறுதிமொழியை ஏற்கும் போது* இந்து சமயம் போல் மிகவும் தொன்மையான ஒரு பாதையிலேயே காந்தி அடியெடுத்து வைத்தார். உயிர் உருவாவதற்குக் காரணமான முக்கிய சக்தியை அடக்கி ஆள்வதே தன்னை அறிந்து கொள்வதற்கான ஒரு இந்துவின் பாதையாக எண்ணற்ற பல நூற்றாண்டுகளாக இருந்து வந்துள்ளது. ஒரு மனிதன் தனது ஆன்மீக சக்தி குண்டத்துக்கு எரிபொருளாக பாலுணர்வை அளித்தால் மட்டுமே தன்னை உணர்தல் என்பதற்குத் தேவையான ஆத்ம ஞானத்தைப் பெற முடியும் என்பது இந்து சமய முன்னோர்களின் நம்பிக்கையாகும்.*

*பிரம்மச்சரிய வாழ்க்கை நடத்த உறுதியேற்கும் மனிதர்களுக்கு வழிகாட்டியாக, ஒன்பது காப்புச் சுவர்களைக் கொண்ட நெறிமுறைகளை இந்து சமய முனிவர்கள் உருவாக்கியுள்ளனர். ஒரு உண்மையான பிரம்மச்சாரி பெண்களோடும், அலிகளோடும், விலங்குகளோடும் வாழக் கூடாது. ஒரு பெண் அமர்ந்த பாயில் உட்காரவோ, பெண்ணுடலின் எந்த ஒரு பாகத்தையும் காணவோ அவன் அனுமதிக்கப்படுவதில்லை. வெந்நீர்க் குளியல், எண்ணெய் மசாஜ் போன்ற இன்ப நுகர்ச்சியைத் தவிர்க்குமாறும் பாலுணர்ச்சியைத்*

---

* அவர் இந்த விரதத்தை மேற்கொள்வதற்கு இந்து சமயம் மட்டும் காரணமல்ல. அஹிம்சை என்ற கொள்கையை உருவாக்க கிருஸ்துவின், 'மறு கன்னத்தைக் காட்டு' என்ற போதனை பேருதவி புரிந்தது போல, புராதன இந்து போல பிரம்மச்சரிய விரதம் ஏற்க ' எனக்காகவும்,... கடவுளின் பரலோக சாம்ராஜ்யத்திற்கான அன்பாலும் அவர்கள் அலிகளானார்கள்' என்ற யேசுவின் வார்த்தைகள் காந்திக்கு உந்து சக்தியாக இருந்திருக்கலாம். .

தூண்டுபவையாகக் கருதப்படும் பால், தயிர், நெய் அல்லது கொழுப்புச் சத்துள்ள உணவுகளைத் தவிர்க்குமாறும் அவன் அறிவுறுத்தப்பட்டிருக்கிறான்.

ஆயினும், இமயமலையின் குகையில் வாழ்வதற்காக காந்தி பிரம்மச் சரியத்தைக் கடைப்பிடிக்கவில்லை. அந்த வகை பிரம்மச்சரியம் ஓரளவு சுயகட்டுப்பாடு அல்லது தார்மீக மதிப்போடு தொடர்புடையது என்று அவர் கருதினார். அவர் பிரம்மச்சரியம் மேற்கொண்டதற்குக் காரணம், பாலுணர்வைக் கட்டுப்படுத்தினால் அதன் மூலம் கிடைக்கும் சக்தி தமது லட்சியப் பயணத்துக்குத் தார்மீக, ஆன்மீக பலத்தை அளிக்கும் என்பதற்காகத்தான். ஒருவன் தன்னளவில் பாலுணர்வு இச்சை கொள்ளாமலும் மற்றவர்களிடமும் அதை எழுப்பாமலும் பெண்கள் கூட்டத்தோடு இயல்பாக நடமாட உடலுறவு வேட்கையை அடக்க வேண்டும் என்பதே அவர் கருதிய பிரம்மச்சரியமாக இருந்தது. ஒரு பிரம்மச்சாரி 'பெண்கள் கூட்டத்திலிருந்து விலகி ஓடத் தேவையில்லை' ஏனென்றால் 'அவனைப் பொறுத்தவரை ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான வேறுபாடு பெரும்பாலும் மறைந்திருக்க வேண்டும்' என்று காந்தி எழுதினார்.

உண்மையான பிரம்மச்சாரியின் 'பாலுணர்வு உறுப்புகளே வித்தியாசமாக இருக்கும்' என்று காந்தி தெரிவித்தார். 'அந்த உறுப்புகள் பால்காட்டும் குறிகளாகவே இருக்கும். அடக்கப்பட்ட அவனது பாலுணர்வு சக்தி உடல் முழுவதும் பரவிக் கலந்து விடும். எவன் ஒருவன் தன் பக்கத்தில் அழகு தேவதையான வீனஸே நிர்வாணமாக வந்துப் படுத்தாலும் மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் சலனப்படாமல் இருக்கிறானோ அவனே மிகச்சரியான பிரம்மச்சாரி' என்று காந்தி எண்ணினார்.

இது ஒரு அசாதாரணமான லட்சியம் ஆகும். இதனை அடைவதற்கான காந்தியின் போராட்டம் இருமடங்கு சிக்கலானது. ஏனெனில் அவர் அடக்க வேண்டும் என்று நினைக்கும் பாலுணர்வு அவருள் வலுவாகவும் ஆழமாகவும் வேர் விட்டிருந்தது. பிரம்மச்சரிய விரதம் மேற்கொண்டபின் பல ஆண்டுகாலம், அவரது பாலியல் உறுப்புகளில் உணர்வுகளை ஏற்படுத்தாத உணவைக் கண்டறிய பலவகை உணவுப்பழக்கங்களை காந்தி சோதித்துப் பார்த்தார். பாலுணர்வுகளை அதிகரிப்பதற்காக ஆயிரக்கணக்கான இந்தியர்கள் வெளிநாட்டிலிருந்து கூட உணவுகளை வரவழைத்துக் கொண்டிருந்த நிலையில், காந்தியோ தனது உணர்வுகளை அழித்துக் கொள்ள மசாலாப் பொருள்களையும், பச்சைக் காய்கறிகளையும், சில வகைப் பழங்களையும் தவிர்த்துக் கொண்டிருந்தார்.

தனது மனதிலிருந்தும் உடலிலிருந்தும் பாலுணர்வுகளை முழுவதுமாகக் களைந்து விட்டதாக காந்தி ஒரு முடிவுக்கு வர முப்பதாண்டு கால கட்டுப்பாடும், பிரார்த்தனையும் ஆன்மிகப் பயிற்சியும் தேவைப்பட்டது. அவரது சாதனை மீதிருந்த நம்பிக்கை 1936இல் பம்பாயில் ஒரு நாள் இரவில் தகர்ந்து போனது. இதனை அவர் 'எனது இருண்டகாலம்' என்று வர்ணித்திருக்கிறார். அந்த இரவில், அவரது 67வது வயதில், பிரம்மச்சரிய விரதம் பூண்டு முப்பது ஆண்டுகள் கடந்த நிலையில், காந்தி ஒரு கனவு கண்டு விழித்தார். அந்த வயதில் மற்றவர்களுக்கு இப்படி ஒரு கனவு வந்திருந்தால் அதற்காக அவர்கள் திருப்தி அடைந்திருக்கலாம். ஆனால் ஆண் குறியில் ஏற்பட்ட விறைப்பு காந்திக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. முப்பதாண்டு காலமாக எந்த லட்சியத்தை அடையப் பாடுபடுகிறாரோ அதனை இன்னமும் அடையவில்லை என்பதற்கு

நிருபணமாகத்தான் இரண்டு தொடைகளுக்கும் இடையே ஆண்குறி துடித்த செயல் இருந்தது. 'அஞ்சத்தக்க இந்த அனுபவம்' காந்திக்கு அளவிறந்த அமைதியின்மையை ஏற்படுத்தியது. ஆறு வாரங்களுக்கு முழுமையாக மவுன விரதம் இருப்பது என்று அவர் சபதமேற்றார்.

அவரது பலவீனத்துக்குக் காரணம் என்னவென்று மாதக்கணக்கில் அவர் யோசித்தார். இமயமலைக் குகைக்கு செல்லும் வகையிலான பிரம்மச் சரியத்தைத்தான் கடைப்பிடிக்க வேண்டுமோ என்றும் அவர் மனதுக்குள் விவாதித்தார். தனது ஆன்மீகச் சக்திக்கு தீய சக்திகளால் விடப்பட்ட சவால் தான் இந்த அச்சம் தரும் கனவு என்று அவர் முடிவு செய்தார். இந்த சவாலை ஏற்றுக் கொள்ளவும், தனது வாழ்க்கையிலிருந்து பாலுணர்வின் கடைசி அடையாளங்களையும் துடைத்தெறிவது என்ற லட்சியத்தை அடையவும் அவர் தீர்மானித்தார்.

பாலியல் இச்சைகளின் மீது ஆதிக்கம் செலுத்த முடியும் என்று நம்பிக்கை மீண்டும் ஏற்பட்ட பின், பெண்களுடன் படிப்படியாக உடல் ரீதியான நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முன்வந்தார். சுகவீனத்தில் அவர்களைத் தொட்டுப் பணிவிடை செய்தார். அதே போல் தனக்குப் பணிவிடை செய்யவும் அனுமதித்தார். ஆசிரமத்தில் இருக்கும் மற்றவர்கள், ஆணானாலும், பெண்ணானாலும் தம்மை முழுவதுமாகப் பார்க்கும் வகையில் குளிக்கலானார். தினமும் நிர்வாணமாகவே மசாஜ் செய்து கொண்டார். பெரும்பாலும் இளம் பெண்கள்தான் அவருக்கு மசாஜ் செய்தார்கள். இவர்கள் மசாஜ் செய்து கொண்டிருக்கும் போதே பலமுறை அவர் பேட்டியளித்திருக்கிறார்; காங்கிரஸ் கட்சியின் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறார். அவர் உடலில் ஓரளவுக்கே ஆடை அணிந்தார் ஆண்களோ, பெண்களோ அவரின் சீடர்களையும் இப்படியே செய்யுமாறு வற்புறுத்தினார். காரணம் உடைகள் தவறான முறையில் வெட்க உணர்வை அதிகரிக்கச் செய்கின்றன என்பது அவர் வாதம். 'அரை நிர்வாணப் பக்கிரி' என்ற புகழ்மிக்க சொற்றொடருக்குப் பதில் சொல்வதற்காகத்தான் வின்ஸ்டன் சர்ச்சிலுடன் அவர் நேரடியாகப் பேசியிருக்கிறார். இரண்டுமாய் இருக்கவே முயற்சி செய்கிறேன். காரணம் நிர்வாண நிலை என்பது உண்மையான தூய்மையைப் பிரதிபலிக்கிறது. அதற்காகவே நான் பாடுபடுகிறேன் என்று காந்தி கூறினார். பிரம்மச்சரிய விரதத்திற்கு உண்மையானவர்கள் ஆணாயினும், பெண்ணாயினும் தங்களின் கடமையில் ஈடுபட்ட பின் இரவு நேரத்தில் ஒரே அறையில் தங்க நேர்ந்தால் அவர்கள் ஒன்றாகவே உறங்குவதில் தவறேதும் இல்லை என்று காந்தி உறுதியாகத் தெரிவித்தார்.

மனுவுடன் அவரது படுக்கையைப் பகிர்ந்து கொள்வதென்ற முடிவால், அவளது ஆன்மீக வளர்ச்சிக்கு முழுமையாக அவரால் வழிகாட்ட முடியும். மேலும் காந்திக்கு இந்த செயல் அந்தத் தத்துவத்துக்கு இயற்கையான வளர்ச்சிக் கட்டமாகவும் இருக்கும். அவரது நோன்புப் பயணத்தின்போது அவளது இளமை உருவம் அவரது பார்வையிலிருந்து விலகியிருந்தது மிக அரிதாகத்தான். கிராமம் கிராமமாக சென்ற போது நவகாளி விவசாயிகளால் அவருக்கு அளிக்கப்பட்ட மேடுபள்ளமான குடிசைகளில் காந்தியுடன் அவள் தங்கினாள். அவருக்கு மசாஜ் செய்தாள்; களிமண் குளியலுக்கு ஏற்பாடு செய்தாள்; சீதபேதி நோயால் அவர் அவதிப்பட்டபோது கவனித்துக் கொண்டாள். அவரோடேயே உறங்கினாள்; எழுந்தாள். அவர் அருகில் அமர்ந்து பிரார்த்தனை செய்தாள்.

அவரது பிச்சைப் பாத்திரத்தில் இருந்த உணவைப் பகிர்ந்து கொண்டாள். ஒரு கசப்பான பிப்ரவரி இரவில் அவள் விழித்துக் கொண்டபோது அருகில் படுத்திருந்த அந்த முதியவர் கடுமையாக நடுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவரது உடலை அமுக்கி விட்டாள். அந்தக் குடிசையில் கிடந்த துண்டுத்துணிகளையெல்லாம் வாரிக் கொண்டு வந்து நடுங்கும் அவர் உடல் மீது குவித்தாள். ஒரு வழியாக காந்தி உறங்கிப் போனார். இது பற்றி மனுவே பின்னர் இப்படி குறிப்பிட்டாள். 'காலை பிரார்த்தனை நேரம் வரை நாங்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் சூடேறும் படி படுத்து நன்றாக உறங்கினோம்.'

மனசாட்சியில் உறுதியாக இருந்த காந்திக்கு மனுவுடனான உறவில் கடுகளவும் பாலுணர்வு இருப்பதாகவோ தவறு இருப்பதாகவோ தெரியவில்லை. உண்மையில் அவர்களுக்கிடையே பாலியல் சம்பந்தப்பட்ட சிறு சலனம் இருந்ததாகக் கூட கருத முடியாது. காந்தியைப் பொறுத்தவரை அவரது செயல் மனுவுக்குச் செய்ய வேண்டிய கடமையாகும் என்ற அளவில் நியாயமானதாக இருந்தது. ஒரு வேளை அவரது அடி மன ஆழத்தில் உள்ள, அவர் புறக்கணிக்க நினைக்கும் சக்திகள் தவறான பாதைக்கு அவரைத் தள்ளியும் விட்டிருக்கலாம்.

காந்தியின் அந்திமக் காலத்தில் அவர் தனிமனிதராக இருந்தார். போர்க் காலத்தில் அவர் சிறையில் இருந்த போது அவரது நெருங்கிய நண்பரையும் மனைவியையும் இழந்து விட்டார். பழைய நண்பர்களில் சிலரின் ஆதரவையும் அவர் இழந்து கொண்டிருந்தார் பல பத்தாண்டுகளாகக் கண்டு கொண்டிருக்கும் கனவும் பலிக்காதோ என்ற சந்தேகமும் அவருள் எழுந்தது. அவருக்கென்று ஒரு மகள் இல்லை. தந்தை என்ற பங்களிப்பைச் செய்யாதது அவரது வாழ்க்கையில் ஒரு தோல்வியாக இருக்கலாம். அவரது மூத்தமகன் அவரை வெறுத்தார். மற்றவர்கள் மீது தனது தந்தை செலுத்தும் அன்பால் தனக்குக் கிடைக்க வேண்டிய தந்தை பாசம் கிடைக்காமல் போவதாக அவர் கருதினார். இதனால் அவர் குடிகாரரானார். தாய் மரணப்படுக்கையில் கிடந்த போது கூட அவர் குடித்து விட்டுத்தான் அருகே அமர்ந்திருந்தார். காந்தியின் மற்ற மகன்களில் இரண்டு பேர் தென்னாப்பிரிக்காவில் இருந்தார்கள். இவர்களுடன் காந்திக்குக் குறைநத தொடர்பே இருந்தது. கடைக்குட்டி மகனுடன்தான் அவர் தந்தை - மகன் உறவை அனுபவித்தார். எத்தகைய விளக்கம் அளிக்கப்பட்டாலும், காந்தியின் கடைசி காலத்தில், அவருடன் ஆழமான ஆன்மீக உறவு கொண்டிருந்த, நாணமும் அர்ப்பணிப்பு தன்மையும் கொண்ட அந்தப் பெண்தான், அவரின் துயரங்களைப் பகிர்ந்து கொள்ள ஆர்வம் காட்டினாள்.

அவரது பயணகாலத்தில் நடந்த சம்பவம் வெளியே தெரிந்ததும் முஸ்லீம் லீக் தலைவர்களால் காந்தி பற்றிய அவதூறு பிரச்சாரம் நாடு முழுவதும் பரவத் தொடங்கியது. இந்தத் தகவல் டில்லியையும் எட்டியது. இந்தியாவின் புதிய வைஸ்ராயுடன் முக்கியமானப் பேச்சு நடத்துவதற்காக அங்கே காத்திருந்த காங்கிரஸ் தலைவர்களுக்கு இந்தத் தகவல் அதிர்ச்சி அலையைப் பரப்பியது.

இந்த வதந்திகளை காந்தி ஒரு நாள் மாலை நேரப் பிரார்த்தனைக் கூட்டத்தில் மறுத்துப் பேசினார். 'அவரைப் பற்றிய கிசுகிசுக்கள், முணு முணுப்புகள், வக்கிர வார்த்தைகள்' ஆகியவற்றைப் புறக்கணித்த அவர், தனது சகோதரியின் பேத்தியான மனு ஒவ்வொரு நாள் இரவும் தன்னுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்டாள் என்பதைக் கூட்டத்தினரிடம் கூறினார்;

அவள் ஏன் அங்கே இருந்தாள் என்பது பற்றியும் விளக்கினார். அங்கே இருந்த கூட்டத்தை அவரது வார்த்தைகள் அமைதிப்படுத்தின. ஆனால் இந்த வார்த்தைகளை அவரது ஹரிஜன் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பியபோது மீண்டும் புயல் கிளம்பியது. அந்த இதழின் ஆசிரியர்களில் இருவர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வெளியேறி விட்டனர். ஒழுக்கக் கேடான செய்தி என்று அஞ்சிய அதன் அறங்காவலர்கள், இதற்கு முன் தங்களின் கனவிலும் நினைக்காத ஒரு காரியத்தைச் செய்தார்கள். மகாத்மாவால் எழுதப்பட்ட செய்தியை ஹரிஜனில் வெளியிட அவர்கள் மறுத்து விட்டார்கள்.

காந்தியின் பயணத்தில் கடைசி இடமான ஹேம்சாரில் (Haimchar) இந்த சிக்கல் உச்சக்கட்டத்தை அடைந்தது. இப்போது பீகாரில் தனது பயணத்தை மேற்கொள்வது பற்றிய விருப்பத்தை காந்தி வெளியிட்டார். அங்கே அவர் தங்களுடன் வாழ்ந்து வந்த சிறுபான்மை முஸ்லீம் மக்களைக் கொன்ற இந்துக்கள் மத்தியில் பணியாற்ற வேண்டியிருக்கும்.

காந்தியின் இந்த வார்த்தைகள் டில்லியில் இருந்த காங்கிரஸ் தலைவர்களுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தின. மனுவுடன் காந்தி கொண்டுள்ள உறவு பீகாரின் ஆசாரமான இந்துச் சமூகத்தில் அவப்பெயரை ஏற்படுத்தி விடும் என்று அவர்கள் அஞ்சினர். பீகாருக்குச் செல்வதைக் கைவிடுமாறு பல தூதர்கள் மூலம் அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆனால் காந்தி அனைத்தையும் நிராகரித்து விட்டார்.

தூதர்களில் ஒருவரின் வற்புறுத்தலாலோ என்னவோ, மனு தாமாகவே காந்தியை அணுகி, தங்களின் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் என்று வயது முதிர்ந்த மகாத்மாவிடம் நாசூக்காக யோசனை தெரிவித்தாள். அவருடன் முற்றிலும் ஒன்றியிருப்பதாக அவள் உறுதியளித்தாள். அவர்கள் அடைய முயற்சி செய்யும் இலக்கிலிருந்து எதையும் கைவிடவில்லை என்றாள். அவர் அடைய விரும்பும் இலக்குகளைப் புரிந்து கொள்ள முடியாமல் அவரைச் சூழ்ந்திருக்கும் குறுமதியாளர்களுக்காக இந்த ஏற்பாடு தற்காலிக மானதுதான் என்றும் அவள் கூறினாள். பீகாருக்கு அவர் செல்லும் போது தாம் இங்கேயே தங்கிவிடுவதாக அவள் சொன்னாள். வருத்தத்துடன் காந்தி இதற்கு ஒப்புக் கொண்டார்.

## புதுடில்லி, மார்ச் - ஏப்ரல் 1947

பளிச்சென்ற வெள்ளை கப்பற்படை சீருடையில் 'அவர் ஒரு திரைப்பட நடிகர் போலக் காட்சியளித்தார்' என்று அவரது உதவியாளர்களில் ஒருவராக சமீபத்தில் நியமிக்கப்பட்ட காலாட்படையின் முதற்பிரிவைச் சேர்ந்த 23 வயது கேப்டனுக்குத் தோன்றியது. அவரது தாய்மாமனான ஐந்தாம் ஜார்ஜ் அரை நூற்றாண்டுக்கு முன் டில்லியில் அரசப்பயணம் செய்வதற்காக உருவாக்கப் பட்ட தங்க முலாம் பூசிய மடிப்பு முகப்பு வண்டியில் மனைவி அருகே அமர்ந்திருக்க லூயி மவுண்ட்பேட்டன் கம்பீரத்தோடும் புன்னகையோடும் வைஸ்ராய் மாளிகை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவரது குழு அரண்மனையின் படிக்கட்டுகளை அடைந்த மறுகணமே, ராயல் ஸ்காட் வீரர்கள் குழல்களை ஊதி இந்தியாவின் கடைசி வைஸ்ராய்க்கு சோகம் கலந்த வரவேற்பு அளித்தார்கள்.

*வைஸ்ராய் பதவியிலிருந்து விலகப் போகும் வேவல்பிரபு, படிக்கட்டுகளின் முகப்பில், மங்கிய கவலை தோய்ந்த புன்னகை முகத்தில் தவழக் காத்திருந்தார். இந்த இரண்டு மனிதர்களும் ஒரே சமயத்தில் டில்லியில் இருப்பது பாரம்பரியத்தை உடைப்பதற்கு ஒரு அடையாளமாக விளங்கியது. வழக்கமாக பதவி விலகிச் செல்லும் வைஸ்ராயின் கப்பல் இந்திய நுழைவாயில் பகுதியிலிருந்து புறப்பட்டுச் செல்லும் போது புதிய வைஸ்ராயின் கப்பல் அந்தப் பகுதி நோக்கி வரும். இப்படித்தான் இந்திய மண்ணில் ஒரே சமயத்தில் இரண்டு கடவுள்களைக் காண்பது என்ற தர்மசங்கடமான நிலை தவிர்க்கப்பட்டிருக்கிறது. படிகளில் ஏறி மேலே சென்றவுடன், தலை வணங்கி வரவேற்கும் பழைய வைஸ்ராயுடன் தாம் பேச முடியும் என்பதற்காகத்தான் பாரம்பர்யப் பழக்கத்தை உடைக்குமாறு மவுண்ட்பேட்டன் வற்புறுத்தினார்.*

*இடைஇடையே ஃப்ளாஷ் விளக்குகள் பளிச்சிட, இரண்டு மனிதர்களும் சிறிது நேரம் நின்று உரையாடினார்கள். இவர்கள் இருவரும் முரண்பாடுகளின் மொத்த உருவங்கள். மவுண்ட்பேட்டன் கவர்ச்சிகரமான போர்ப்படைத் தளபதி, அளவு கடந்த தன்னம்பிக்கையும் ஆற்றலும் கொண்டவர். வேவலோ, ஒற்றைக் கண்ணுடைய வயதானப் படைவீரர்; அவரது பணியாளர்களால் நேசிக்கப்பட்டவர்; அரசியல் வாதிகளாலோ புறக்கணிக்கப்பட்டவர். கடந்த 5 ஆண்டுகளாக 'பின்வாங்கல்களும், தோல்விகளை ஓரளவு குறைப்பதுமே' தனக்கு மகிழ்ச்சியற்ற விதியாகிவிட்டது என்று சமீபத்தில் வருத்தத்துடன் அவரது நாட்குறிப்பில் எழுதியிருந்தார்.**

*கனமான தேக்குமரக் கதவுகள் வழியே வேவல் மவுண்ட்பேட்டனை வைஸ்ராயின் அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றார். அவருக்காகத் காத்திருக்கும் பயங்கரப் பிரச்சனைகளை முதன் முறையாக நேரடியாகவே அறிந்தார்.*

*'எனது இடத்துக்கு உங்களை அனுப்பியிருப்பதற்கு உண்மையிலேயே நான் வருத்தப்படுகிறேன்' வேவல் பேச்சைத் தொடங்கினார்.*

*மவுண்ட்பேட்டனுக்கு இது சற்று வியப்பைத் தந்தது. 'நன்று! ஒளிவு மறைவின்றி பேசுகிறீர்கள். ஏன்? இந்தப் பதவிக்கு நான் தகுதியானவன் என்று நீங்கள் நினைக்கவில்லையா?'*

*'இல்லை. அப்படி இல்லை.' வேவல் பதிலளித்தார். 'நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன். ஆனால் சாத்தியமற்ற ஒரு பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண நான் அறிந்த வழிகளில் எல்லாம் முயற்சி செய்தேன். வழியேதும் தென்படவில்லை. இதனைக் கையாள வழியில்லை என்றே படுகிறது. ஒயிட் ஹாலிலிருந்து (லண்டன் அரண்மனையிலிருந்து) எந்த உதவியும் நமக்குக் கிடைப்பதில்லை என்பது மட்டுமல்ல, எந்த வகையிலும் தப்பிக்க முடியாத முட்டுச் சந்தில் நாம் நிற்கிறோம்.'*

---

* அட்லியின் அரசு வேவலிடம் முழுக்கவும் நாகரிகமில்லாமல் தான் நடந்து கொண்டது. புதிய வைஸ்ராய் ஆகுமாறு மவுண்ட்பேட்டன் கேட்டுக் கொள்ளப்பட்ட போது, வேவல் லண்டனில் தான் இருந்தார். ஆனால் அவர் பதவி நீக்கப்படப் போகிறார் என்ற தகவல் சூசகமாகக் கூட அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை. அட்லி வெளிப்படையாக அறிவிப்பதற்கு சிலமணி நேரங்களுக்கு முன்னால் தான் இந்தச் செய்தி அவருக்குத் தெரியவந்தது. பதவி விலகும் வைஸ்ராய்க்கு வழக்கமாக வழங்கப்படும் பிரபு பட்டத்தை அளிப்பதற்கும் மவுண்ட்பேட்டன் வற்புறுத்தலினாலேயே அட்லி ஒப்புதல் தந்தார்.

பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்குத் தாம் மேற்கொண்ட முயற்சிகளை வேவல் பொறுமையாக விளக்கினார். பிறகு எழுந்து தனது பெட்டகத்தைத் திறந்தார். அவருக்குப் பின் பதவிக்கு வருபவரிடம் அளிப்பதற்கென்று இரண்டு பொருள்கள் மட்டுமே அதற்குள் வைத்துப் பூட்டப்பட்டிருந்தன. முதலாவது ஒரு மரப்பெட்டிக்குள் கருப்பு நிற வெல்வெட் துணி மேல் வைக்கப்பட்டிருந்த பளபளக்கும் பொருள். 'கிராண்ட் மாஸ்டர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் தி ஸ்டார் ஆஃப் இந்தியா' என்று வைரத்தில் செதுக்கிய பட்டை அது. மவுண்ட் பேட்டனின் புதிய பதவிக்கான இலச்சினை. நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குப் பின் அதிகார பூர்வமாக அவரை வைஸ்ராய் என்று அறிவிக்கும் விழாவில் அவரது கழுத்தைச் சுற்றி அது தொங்கிக் கொண்டிருக்கும்.

இரண்டாவது ஒரு கோப்பு. 'ஆபரேஷன் மேட் ஹவுஸ்' (Operation Madhouse) என்ற எழுத்துக்கள் அதன் மீது எழுதப்பட்டிருந்தன. இந்தியப் பிரச்சனைக்கு அந்தத் திறமையான ராணுவ வீரர் முன்மொழிந்த ஒரே ஒரு தீர்வு அதில் இடம் பெற்றிருந்தது. வருத்தத்துடன் அதனைப் பெட்டியிலிருந்து எடுத்து மேசை மீது வைத்தார்.

'ஒரு பைத்தியக்கார விடுதியின் பிரச்சனை என்பதால், இந்தக் கோப்பும் "மேட் ஹவுஸ்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது' என்று வேவல் விளக்கம் அளித்தார்.

மாகாணம் மாகாணமாக, முதலில் பெண்களையும் குழந்தைகளையும், பிறகு மற்ற மக்களை, அதன் பிறகு ராணுவ வீரர்களை என்று கட்டம் கட்டமாக இந்தியாவிலிருந்து பிரிட்டிஷாரை வெளியேற்றுவது தான் இந்தத் திட்டம். இந்த நடவடிக்கை காந்தியின் வார்த்தைகளில் சொல்வதானால், 'இந்தியாவை அராஜகத்திடம் விடுவது தான்.'

'இது ஒரு பயங்கரமான தீர்வுதான். ஆனால் இது ஒன்று தான் நான் அறிந்தது' பெருமூச்சுடன் வேவல் கூறினார். மேசையிலிருந்த கோப்பினை எடுத்து, திகைத்து அமர்ந்திருந்த புதிய வைஸ்ராயிடம் கொடுத்தார்.

' நான் மிக, மிக, மிக வருந்துகிறேன். இது ஒன்றைத்தான் உங்களுக்குத் தர முடிந்தது' என்று வேவல் பேச்சை முடித்தார்.

புதிய வைஸ்ராய் தனது புதிய பணிகளுக்கு வருத்தம் மிக்க அறிமுகத்தை முடித்துக் கொண்டிருக்கும் போது, அவரது மனைவி, வேவலின் அலுவலக அறைக்கு மேலுள்ள தளத்தில் அவரது சுவை மிகுந்த புதிய வாழ்க்கைக்குத் தயாராகிக் கொண்டிருந்தார். அவர்கள் வசிப்பதற்கு ஒதுக்கப்பட்ட அறைகளை அடைந்த போது, மவுண்ட்பேட்டன் தம்பதியர் லண்டனிலிருந்து கொண்டு வந்த மிசென், (Mizen) ஜிப் (Jib) என்ற இரண்டு நாய்க்குட்டிகளுக்கு ஏதாவது உணவு கொண்டு வருமாறு எட்வினா மவுண்ட் பேட்டன் ஒரு பணியாளரிடம் கேட்டுக் கொண்டார் அவர் வியந்து போகும் வகையில் முப்பது நிமிடங்களுக்குப் பின் தலைப்பாகை அணிந்த இரண்டு பணியாளர்கள் பயபக்தியுடன் அவரது படுக்கையறைக்குள் வந்தனர். அவர்களின் கையில் சீனத்தட்டுடன் வெள்ளி ட்ரே (Tray) இருந்தது. அதில் சூடாகப் பொறிக்கப்பட்ட கோழியின் நெஞ்சுக் கறி துண்டுகள் இருந்தன.

வியப்பால் விழிகள் விரிந்த எட்வினா கோழிக்கறியை உற்றுப் பார்த்தார். இங்கிலாந்தில் இருந்த சிக்கன நடவடிக்கை காரணமாக இது போன்ற உணவைப் பல வாரங்களாக அவர் பார்த்ததில்லை. தனது காலடியில் குரைத்துக்

கொண்டிருக்கும் நாய்க்குட்டிகளையும், தட்டில் உள்ள கோழி இறைச்சியையும் மாறிமாறிப் பார்த்தார். இவ்வளவு சத்துள்ள உணவை செல்லப் பிராணிகளுக்குக் கொடுக்க அவரது பண்பட்ட மனம் இடம் தரவில்லை.

'அதை என்னிடம் கொடுங்கள்' அவர் கட்டளையிட்டார்.

வெடுக்கென்று இரண்டு தட்டுகளில் இருந்த கோழிக்கறியையும் பறித்துக் கொண்ட அவர் வேகமாகக் குளியலறைக்குள் சென்றார்; கதவைத் தாழிட்டுக் கொண்டார். அடுத்து வரும் மாதங்களில் வைஸ்ராய் மாளிகையில் 25,000 பேருக்கு விருந்தளிக்கப் போகும் அந்தப் பெண், அவரது வளர்ப்பு நாய்க் குட்டிகளுக்காக அளிக்கப்பட்ட கோழிக் கறியை ஆவலுடன் விழுங்கத் தொடங்கினார்.

*

ஒரு மகத்தான கதையின் கடைசி அத்தியாயம் தொடங்கப் போகிறது. இந்தியாவை ஆளப்போகும் கடைசி ஆங்கிலேயர், 1947 மார்ச் 24ஆம் தேதி காலையில், இன்னும் சில நிமிடங்களில், வைஸ்ராய்க்கான தங்க நிறமும் சிவப்பு நிறமும் கலந்த சிம்மாசனத்தில் அமரவிருக்கிறார். லூயி மவுண்ட்பேட்டன் சிம்மாசனத்தில் அமரும் போது கவுரவம் மிக்க அரசப் பரம்பரையின் இருபதாவது மற்றும் கடைசிப் பிரதிநிதியாக இருப்பார். ஹேஸ்டிங்ஸ் (Hastings) முதல் வெல்லெஸ்லி (Wellesley) வரை, கார்ன்வாலிசிலிருந்து (Cornwallis) கர்ஸன் (Curzon) வரை கைமாறிய அந்த செங்கோலைத் தாங்கும் கடைசிக் கைகளாக அவருடையவை இருக்கும்.

வைஸ்ராய் மாளிகையின் தர்பார் மண்டபத்தில் தான் அவரது அதிகார பூர்வமான பதவியேற்பு நிகழ்ச்சி நடந்தது. இந்த மாளிகையின் வியப்புக்குரிய விசாலப்பரப்புடன் போட்டியிட வெர்செய்ல்ஸாலும், (பதினான்காம் லூயியின் அரண்மனை - மொ-ர்) ஜார் சக்கரவர்த்திகளின் அரண்மனையாலும் மட்டுமே சாத்தியமாகும். கம்பீரமானதும், மதிப்பு மிக்கதும், அரசத் தோரணையுடையது மான புதுடில்லி வைஸ்ராய் மாளிகைதான் ஒரு ஆட்சியாளருக்கு மனிதர்கள் உருவாக்கியக் கடைசி மாளிகையாக இருக்கும். இருபதாம் நூற்றாண்டில் வைஸ்ராய் மாளிகை போன்ற ஒன்றைக் கட்டி, பராமரிப்பதென்றால், வேலையின்றி பட்டினியுடன் பலர் அலையும் இந்தியாவில் மட்டுமே சாத்தியமாகும்.

மாளிகையின் முகப்புகள் சிவப்பும் வெள்ளையும் கலந்த பராவ்லி கற்களால் வடிவமைக்கப்பட்டிருந்தன. இந்த மாளிகைக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் மொகலாயர்களின் நினைவுச் சின்னங்களில் பயன்படுத்தியதை ஒத்திருந்தன. தாஜ்மகாலில் பதிக்கப்படுவதற்கு எங்கிருந்து பளிங்குக்கற்கள் கொண்டு வரப்பட்டனவோ அங்கிருந்தே வெள்ளை, மஞ்சள், பச்சை, கருப்பு என பளிங்குக் கற்கள் கொண்டுவரப்பட்டு வைஸ்ராய் மாளிகையின் தரைகளிலும் சுவர்களிலும் பதிக்கப்பட்டன. அதன் வராண்டாக்கள் மிக நீளமானதாக இருந்ததால் கீழ் தளத்திலிருந்த பணியாட்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குச் செல்ல மிதிவண்டியைப் பயன்படுத்தினார்கள்.

இந்தக் காலை வேளையில் அந்த மாளிகையின் பணியாளர்கள் 37 வரவேற்புக் கூடங்களிலும், 340 அறைகளிலும் உள்ள பளிங்குக் கற்களையும், மரம் மற்றும் பித்தளையாலான கைவினைப் பொருட்களையும் மெருகூட்டித்

*தூய்மைப்படுத்தினார்கள். வெளியே அமைந்துள்ள மொகலாயப் பூந்தோட்டத்தில் 418 தோட்ட வேலைக்காரர்கள் சதுரமான பசும் புல் பரப்பை வெட்டிச் சீர் செய்து கொண்டும், செவ்வக வடிவத்தில் உள்ள பூந்தொட்டி களைச் சரி செய்து கொண்டும், வளைந்து நிற்கும் நீரூற்றுக் குழாய்களைப் பழுது பார்த்துக் கொண்டும் இருந்தார்கள். இங்கே பணி செய்தவர்களின் எண்ணிக்கை பதினான்காம் லூயியின் வெர்செய்ல்ஸ் அரண்மனையில் இருந்தவர்களை விட அதிகமாகும். இவர்களில் 50 பேர் குருவிகளை ஓட்டுவதற்கு மட்டும் பணியமர்த்தப்பட்டிருந்த சிறார்கள். குதிரை லாயத்தில் வைஸ்ராயின் மெய்க்காப்பாளர்களான 500 பஞ்சாபி குதிரை வீரர்கள் தங்களின் வெள்ளை மற்றும் தங்க நிற சீருடைகளைச் சரி செய்து கொண்டு, மிகச்சிறந்த கருங்குதிரைகளில் ஏறுவதற்குத் தயாரானார்கள். மாளிகை ஊழியர்கள் அனைவரும் தங்கம் மற்றும் சிவப்பு நிறமுள்ள தலைப்பாகைகளை அணிந்திருந்தனர். புதிய வைஸ்ராயின் மரபுச் சின்னங்கள் அவர்களின் வெள்ளை நிற அங்கிகளில் ஏற்கெனவே பின்னப்பட்டிருந்தன. மற்ற வேலைக்காரர்கள் கடைசிக் கட்ட வேலைகளைச் செய்து முடிப்பதற்காக நடைபாதைகளில் சென்று வந்து கொண்டிருந்தனர். இருபதாம் நூற்றாண்டில் அழிவின் விளம்பில் இருக்கும் நிலப்பிரபுத்துவக் கோட்டையின் மிச்ச சொச்சங்களான தோட்ட வேலைக்காரர்கள், நிர்வாக அதிகாரிகள், சமையல்காரர்கள், கண்காணிகள், பரிமாறுவோர், குதிரைக்காரர்கள் அனைவரும் அந்த மாளிகை யாருக்காகக் கட்டப்பட்டதோ அந்த வைஸ்ராயின் பதவியேற்பு நிகழ்ச்சிக்கான கடைசி கட்டப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.*

*அந்தப் பெரிய மாளிகையின் தனியறைகளில் ஒன்றில், ஒரு மனிதர், வைஸ்ராயாகப் பதவியேற்கும் போது அவரது எஜமானரான அட்மிரல் அணியப் போகும் வெள்ளை நிற முழு நீள சீருடையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது தலையில் பளபளக்கும் தலைப்பாகை இல்லை. சார்லஸ் ஸ்மித் என்ற அவர் பஞ்சாபிலோ ராஜஸ்தானிலோ பிறந்தவர் அல்ல; இங்கிலாந்தின் தெற்குப் பகுதியில் நாகரிகமற்ற கிராமத்தில் பிறந்தவர்.*

*கால் நூற்றாண்டு காலம் மவுண்ட்பேட்டனின் கீழ் சேவை புரிந்ததை கவனத்தில் கொண்ட விருப்பத்துடன் உலகிலேயே உயர்ந்த சின்னம் பொறித்த ஆர்டர் ஆஃப் தி கார்டரின் (*Order of the Garter*) நீலப்பட்டு நாடாவை வலது தோள் பட்டையில் அணிந்த ஸ்மித் அந்தச் சீருடையின் முன்புறமாக நீட்டிப் பார்த்தார். அந்தச் சீருடையின் உரிமையாளரை ஆறாம் ஜார்ஜ் மன்னரின் மெய்க்காப்பாளராக அங்கீகரிக்கும் தங்கத்தாலான சின்னத்தை வலது புறத் தோள்பட்டையின் குறுக்காக அணிந்து கொண்டார்.*

*இறுதியாக, ஸ்மித் தனது எஜமானர் இன்று காலையில் அணிய வேண்டிய பதக்கங்களையும், நான்கு முக்கியப் பட்டைகளையும் வெல்வெட் உறைகளிலிருந்து எடுத்தார். மிகவும் மரியாதையுடனும் கவனத்துடனும் அந்தத் தங்கமும் வெள்ளியும் கலந்த பட்டைகளை மெருகூட்டினார். தி ஆர்டர் ஆஃப் தி கார்டர் (*the Order of the Garter*), தி ஆர்டர் ஆஃப் தி ஸ்டார் ஆஃப் இந்தியா (*the Order of the Star of India*), தி ஆர்டர் ஆஃப் தி இந்தியன் எம்பைர் (*the Order of the Indian Empire*), தி கிரேண்ட் கிராஸ் ஆஃப் தி விக்டோரியன் ஆர்டர் (*the Grand Cross of the Victorian Order*) என்பவை அவை.*

*லூயி மவுண்ட்பேட்டனின் பணி சார்ந்த வாழ்க்கையின் மைல் கற்களைக் குறிக்கும் வரிசை வரிசையான இந்த நாடாக்களும், சின்னங்களும் அவற்றின்*

சிறப்புத் தன்மையில் சார்லஸ் ஸ்மித்தின் வாழ்க்கையிலும் மைல் கற்களாகப் பிரதிபலித்தன. ஸ்மித் தனது பதினெட்டாவது வயதில் மவுண்ட்பேட்டன் கீழ் மூன்றாம் நிலை ஊழியராகச் சேர்ந்தார். அப்போதிலிருந்து அவரின் நிழலாகவே தொடர்ந்தார். இங்கிலாந்தின் கம்பீரமான ஓய்வு இல்லங்களில், பேரரசின் கப்பற்படைத் தளங்களில், ஐரோப்பாவின் தலைநகரங்களில் எஜமானர் உடனேயே இருந்த ஸ்மித் அவரின் இன்பங்களை, வெற்றிவாகைகளை, துன்பங்களை, துயரங்களைத் தமதாகவும் கருதினார். போர் நடந்த போது அவர் ராணுவத்தில் சேர்ந்து மவுண்ட்பேட்டனைப் பின் தொடர்ந்து தென்கிழக்கு ஆசியாவுக்குச் சென்றார். சிங்கப்பூரின் சிட்டி ஹாலில் பார்வையாளர் இருக்கையில் அமர்ந்து ஆனந்தக் கண்ணீருடன் சார்லஸ் ஸ்மித் ஒரு காட்சியைக் கண்டார். தாம் கைப்பட தைத்த மற்றொரு சீருடையில் மவுண்ட்பேட்டன், ஜப்பானிய ராணுவத்தைச் சேர்ந்த காலாட்படை, விமானப்படை, கப்பற்படை ஆகியவற்றின் ஏழரை லட்சம் வீரர்களின் சரணடைதலை ஏற்றுக் கொண்டு, பிரிட்டனுக்கு நேரவிருந்த பெரிய அவமானத்தைத் துடைத்தெறிந்த காட்சிதான் அது.

தாம் செய்த பணியைக் கவனிப்பதற்காக ஸ்மித் கொஞ்சம் பின்பக்கம் நகர்ந்தார். சீருடை அணிவதில் மவுண்ட்பேட்டனைப் போல் கவனம் செலுத்துபவர்கள் உலகத்தில் வேறொருவரும் இருக்க முடியாது. இந்தக் காலை வேளையில் தவறு ஏதும் நடந்து விடக்கூடாது. மேலங்கி மற்றும் குறுக்குப் பட்டையின் பொத்தான்களை ஸ்மித் அவிழ்த்தார். அங்கி மாட்டும் ஸ்டாண்டிலிருந்து கழற்றினார். தனது தோள் பட்டைகளில் வைத்துக் கொண்டு கடைசி நேர சோதனைக்காக கண்ணாடிமுன் நின்று பார்த்தார். சிறிது நேரம் தன்னையே மறந்த ஸ்மித் நிழல்களிலிருந்து விடுபட்டார். ஒரு கண நேரம், சார்லஸ் ஸ்மித் தாமே இந்தியாவின் வைஸ்ராய் என்பது போல் கனவு கண்டிருக்கலாம்.

விருதுகளாலும் அலங்காரச் சின்னங்களாலும் கனத்துத் தொங்கிய அந்த உடையை அணியும்போது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தாய்வழி மாமனான வேல்ஸ் இளவரசருடன் இந்தியாவைக் கண்ட உல்லாசமான அந்த நாட்களை மவுண்ட்பேட்டனால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடிய வில்லை. பேரரசின் தலைவராக இருந்த இந்திய வைஸ்ராயைச் சுற்றியிருந்த ஆடம்பரங்கள் அந்த இருவரின் கண்களையும் கூசச் செய்தன. ஏகப்பட்ட அலங்காரம், ஏகப்பட்ட ஆடம்பரம், ஏகப்பட்ட புகழாரங்கள் என இதையெல்லாம் பார்த்த வேல்ஸ் இளவரசர் இப்படிக் கூறினார்: 'இந்திய வைஸ்ராயைக் காணும் வரை ஒரு மன்னர் எப்படி வாழ வேண்டும் என்பதை நான் புரிந்து கொள்ளவேயில்லை' '

உலகிலேயே மக்கள் தொகை மிகுந்த ஒரு நாட்டின் மீதான பேரரச அதிகாரம் முழுவதும் ஒரு ஆங்கிலேயரிடம் குவிந்திருப்பது கண்டு இளமைக்காலத்தில் வியந்ததை மவுண்ட்பேட்டன் நினைவுகூர்ந்தார். வைஸ்ராய் பதவி என்பது ஐரோப்பிய அரச சபைகளின் பகட்டார வாரத்தையும், கிழக்கத்திய விருந்துபசாரங்களின் தன்மைகளையும் சேர்த்து இணைத்திருந்த முறை குறித்து தனக்கிருந்த வியப்பையும் நினைத்துக் கொண்டார். இப்போது, அவரது விருப்பத்துக்கு மாறாகக் கிடைத்த வைஸ்ராய் பதவி அனைத்துப் படாடோபங்களுடனும் ஆடம்பரங்களுடனும் அவருடையதாயிருந்தது.

அவரின் இளமைக் கனவுகளைக் கிளர்ந்தெழச் செய்த உற்சாகமான விழாக்கள் வேட்டையாடுதல் போன்றவை அவரது வைஸ்ராய் பதவிக் காலத்தில் ஓரளவுக்குத்தான் இருக்கும். அவரது இளமைக்கால விருப்பம் ஈடேறி யிருக்கலாம். ஆனால் அது யதார்த்த உலகத்தன்மையுடையதாய் இருக்குமே தவிர 1921ஆம் ஆண்டைப் போல கற்பனை உலகமாய் இருக்காது.

அறைக்கதவு தட்டப்பட்டதால் அவரது சிந்தனை கலைந்தது. அவர் திரும்பிப் பார்த்தார். கடுமையானவரும் உணர்ச்சிவயப்படாதவருமான மவுண்ட்பேட்டன் தனது படுக்கையறைக் கதவு நிலையருகே நின்றவரைக் கண்டு வியந்தார். அங்கே நின்றது அவரது மனைவிதான். பழுப்பு நிறத் தலைமுடிமேல் 'ஜொலி ஜொலிக்கும் வைர முடியுடன், வெள்ளை நிறப் பட்டாடையில் அவர் அழகாக வந்ததைப் பார்க்கும்போது, வெஸ்ட் மினிஸ்டரில் புனித மார்கரெட் தேவாலயத்தில் அவர் தன்னுடன் கைகோர்த்து நடந்த அந்த நாள் தான் மவுண்ட்பேட்டனின் நினைவுக்கு வந்தது.

அவரது கணவரைப் போலவே, எட்வினா மவுண்ட்பேட்டனும் மனம் விரும்பியது போல் வாழ கடவுளிடம் அருளாசிப் பெற்றிருந்தார். அவருக்கு அழகிருந்தது. சிறந்த ஞானம் இருந்தது. அவரது கணவருக்கு இருந்ததை விட அதிக நுண்மாண் நுழைபுலம் அவருடையது என்று கூட சிலர் நினைத்தார்கள். தாய்வழிப் பாட்டனாரான சர் எர்னஸ்ட் கேசலிடமிருந்து (Sir Earnest Cassel) பெருமளவு சொத்துக்களைப் பெற்றிருந்தார். இங்கிலாந்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரதம மந்திரியாக இருந்த பாமர்ஸ்டன் பிரபு, (Lord Palmerston) புகழ் பெற்ற கொடையாளியும் அரசியல்வாதியுமான ஷாஃப்ட்ஸ்பரி (Shafetsbury)யின் ஏழாவது பிரபு உட்பட அவரது தந்தை வழிக் குடும்பத்திலிருந்து சமூக அந்தஸ்தைப் பெற்றிருந்தார். அவரது சொர்க்கத்திலும் சில துயரங்கள் இருந்தன. சிறு வயதிலேயே தாய் இறந்து விட்டதால் அவரின் குழந்தைப் பருவம் மிகவும் மகிழ்ச்சியற்றதாய் இருந்தது. இதனால் எதையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும் குணம் அவருக்கு ஏற்பட்டது. சிறு விஷயமும் அவரைப் புண்படுத்தி விடும். அந்த வருத்தத்தை அவர் தனக்குள்ளேயே மறைத்து வைத்துக் கொள்வார். அது அவரது மனதை அரித்துக் கொண்டேயிருக்கும். தனக்கு விருப்பமில்லாத எதையும் விமர்சிக்கத் தயங்காத வரும் அதே சமயம் அவர் மீதான விமர்சனங்களைத் துணிவுடன் ஏற்றுக் கொள்பவருமான எழுச்சி மிக்க மவுண்ட்பேட்டன் போல எட்வினா மவுண்ட் பேட்டன் இருக்கவில்லை. சட்டென்று சண்டையிடும் இயல்பு அவருடையது. 'நீங்கள் விரும்புவதை விரும்பிய முறையில் மவுண்ட் பேட்டன் பிரபுவிடம் சொல்லிவிடலாம். ஆனால் சீமாட்டி லூயியிடம் எதைச் சொல்வதாக இருந்தாலும் மிகுந்த கவனம் தேவை' என்று அவர்களின் உதவியாளர்களில் ஒருவர் நினைவு கூர்ந்தார்.

விட்டுக்கொடுக்காத மனஉறுதி என்ற உடைக்குள் அவரது கூச்ச சுபாவத்தை யும் அடக்க குணத்தையும் மறைத்துக் கொண்டிருந்தார். இந்த உறுதியால், அவர் எப்படி இருக்க வேண்டுமென்று இயற்கை விரும்பவில்லையோ அப்படி தன்னை வளர்த்துக் கொண்டார். பலரோடும் பழக வேண்டிய பெண்ணான அவர் உணர்ச்சி வசப்படக்கூடியவர் என்பதுபோலத் தோன்றினார். கடந்த பத்தாண்டுகளாக அவர் பொது இடங்களில் பேசி வந்தார்; சில நேரங்களில் வாரத்தில் இரண்டு மூன்று தடவை கூட பேச நேர்ந்தது. நீண்ட பேச்சைத்

துவக்குவதற்கு முன் அவரது கைகள் கட்டுக்கடங்காமல் நடுங்கின. தொட்டாலே உடைந்து போகும் சீனக் களிமண் பொம்மை போன்றது அவரது உடல் நிலை. மண்டையைப் பிளப்பது போன்ற கொடிய தலைவலியால் அவர் ஒவ்வொரு நாளும் அவதிப்பட்டார். அவரது குடும்பத்தாரைத் தவிர வேறு யாருக்கும் இது தெரியாது. ஏனென்றால் உடல் பலவீனங்களை வெளிப்படுத்திக் கொள்ள அவர் தயாராக இல்லை. 'எப்போதும் எதற்கும் கவலையில்லை' என்று வீராப்பு பேசிக் கொள்ளும் தன்னம்பிக்கை மிக்கக் கணவரைப் போலன்றி, எட்வினா எப்போதும் கவலைப்பட்டவராகவே இருந்தார். படுத்தவுடன் குறட்டை விட்டுத் தூங்கி விடுவார் மவுண்ட்பேட்டன். எட்வினாவுக்கோ தூக்கமாத்திரை அளித்த மயக்கத்தில் மட்டுமே தூக்கத்தின் ஆறுதல் கிடைத்தது.

மவுண்ட் பேட்டன் தம்பதியர் சேர்ந்து வாழ்ந்த கால் நூற்றாண்டுகாலம் இரண்டு வித்தியாசமான கால கட்டங்களைக் கொண்டிருந்தது. முதல் கட்டம், அவர்களுக்குத் திருமணமான பின் முதல் பதினான்கு ஆண்டுகளைக் கொண்டது. அப்போது லூயி மவுண்ட்பேட்டன் கப்பற்படையில் மெல்ல முன்னேறிக் கொண்டிருந்தார். அவர்களின் வாழ்க்கையில் அதிக நேரம் செலவான கப்பற்படைச் சூழலில், சொத்து சுகங்களிலிருந்தும், சமூக அந்தஸ்திலிருந்தும் விலகியிருக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். ஆனாலும் கப்பற்படைத்தளங்களிலிருந்து விலகி, லண்டனில், பாரிசில், ரிவியேராவில் எட்வினா இருந்த போது 'அவர் முழுக்க முழுக்க ஒரு சமூக வண்ணத்துப் பூச்சியாகவே' சுற்றித்திரிந்தார் என்று அவரது மகள் கூறினார். ஃபிட்ஸ் ஜெரால்டின் (Fitz Jerald) கதாநாயகி போல அழகு மிளிரும் இருபது களின் பருவத்தில் இருந்த எட்வினா ஆடம்பர விருந்து அளிப்பவராகவும் விருந்தில் பங்கேற்பவராகவும் இருந்தார். நடன நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாத போது, சாகசச் செயல்களில் ஈடுபட்டார். பாய்மரப் படகை எடுத்துக் கொண்டு தெற்கு பசிபிக் கடலில் பயணம் செய்தார்; சிட்னியிலிருந்து லண்டனுக்குச் சென்ற முதலாவது விமானத்தில் பறந்தார்; பர்மா சாலையில் பயணம் செய்த முதலாவது ஐரோப்பிய பெண்மணியாக அவர் இருந்தார்.

எது பற்றியும் கவலைப்படாத சந்தோஷமான அவரது வாழ்க்கையின் இந்தக் காலகட்டம், எத்தியோப்பியா மீது முசோலினி ஆக்ரமிப்பு செய்த போது முடிவுக்கு வந்தது. மூனிச்சை அடைவதற்குள் மனமாற்றம் முழுமை அடைந்து விட்டது. சமூக அல்லது அரசியல் நன்மையுள்ள சில பணிகளிலாவது முழுமையாக ஈடுபடாமல் இருப்பது நியாயமல்ல என்ற உணர்வு அப்போதிலிருந்து அவரது வாழ்க்கையில் மேலோங்கியிருந்தது. பெரும் சொத்தின் வாரிசுதாரர் சமூகச் சீர்திருத்தவாதியானார். சமூக வண்ணத்துப் பூச்சியாகத் திரிந்தவர் இப்படி கனிவான நடவடிக்கையுடன் சமூக சேவகி யானது அவருடன் சம அந்தஸ்துள்ளவர்களால் ஓரளவுக்கே பாராட்டப் பட்டது.

போர்க்காலத்தின்போது, 60,000 உறுப்பினர்களைக் கொண்டிருந்த செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் பிரிவுக்கு அவர் தலைமை தாங்கினார். ஜப்பான் சரணடைந்த போது, சண்டையில் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களைப் பிரித்தெடுத்து கவனம் செலுத்துவதற்காக ஜப்பானியப் போர்க்கைதிகள் முகாம்களுக்குச் செல்லுமாறு அவரது கணவர் அவசர வேண்டுகோள் விடுத்தார். அப்போதும் ஜப்பானின் கட்டுப்பாட்டில் இருந்த மலாயன் தீபகற்பப் பகுதியில் அவரது படையின் முதல் அணி வீரர்கள் காலடி வைப்பதற்கு முன்பாகவே எட்வினா மவுண்ட்பேட்டன் அங்கு சென்று விட்டார். அவரது

கணவரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தையே ஆயுதமாயும், ஒரு செயலாளர், மவுண்ட்பேட்டனின் படைப்பிரிவைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள், இந்தியாவைச் சேர்ந்த ஒரு உதவியாளர் ஆகியோரையே பாதுகாவலாயும் அவர் கொண்டிருந்தார். நேசப்படைகளின் உதவி வரும் வரை, கைதிகளுக்கு உணவும் மருந்தும் கிடைக்க வகை செய்து கொண்டே, ஜப்பானியர்களின் மிரட்டலுக்கும் அஞ்சாமல் பாலிக்பான் (Balikpan), மணிலா, ஹாங்காங் நோக்கி அவர் பயணத்தைத் தொடர்ந்தார். அவரின் இந்த செயல்களால் பசியாலும் கடும் நோயாலும் வாடிய ஆயிரக்கணக்கான பேர் பாதுகாக்கப்பட்டனர்.

அவரது கணவரைப் போலவே போர் முடிவில் அவருக்கும் மார்பில் ஏராளமான பதக்கங்கள் அணி செய்தன. இப்போது அவர் புதுடில்லியில் முக்கிய பணி ஒன்றில் ஈடுபடப்போகிறார். அவர்தான் வைஸ்ராயின் மிகுந்த நம்பிக்கைக்குரிய முதல் நபர்; சிக்கலான நேரங்களில் ரகசியமாகவும், தனித் தூதராகவும் செயல்படப் போகிறவர்; வைஸ்ராய் யாருடன் பேச்சு நடத்த வேண்டுமோ அந்த இந்தியத் தலைவர்களிடம் அனுப்பப்படவுள்ள சிறந்த செயலூக்கமுள்ள தூதர்.

அவரது கணவரைப் போலவே அவரும்கூட இந்தியாவில் தனது நடைமுறையாலும் குணாம்சத்தாலும் முத்திரைப் பதிப்பார். அசாதாரணமாகப் பல துறை சார்ந்தத் திறனுள்ள எட்வினா மவுண்ட்பேட்டன், மாலை வேளையில் 100 பேர் கலந்து கொள்ளும் விருந்து நிகழ்ச்சிக்கு, பட்டாலான மாலை நேர உடையுடனும், தலைமுடிமீது மின்னும் வைர கிரீடத்துடனும் வந்து தலைமைதாங்குவார். அடுத்த நாள் காலையிலோ, எளிய சீருடை அணிந்து, கணுக்கால் வரையிலான சேற்றில் நடந்து, சுகாதார வசதியற்ற இந்தியக் கிராமம் ஒன்றுக்குச் சென்று காலரா நோயால் அவதியுறும் குழந்தையைத் தன் மடியில் கிடத்தித் தாலாட்டச் செய்வார். அவரது கணவரிடம் இல்லை என்று சிலரால் குறை கூறப்படும் இரக்க குணத்தை இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அவர் வெளிப்படுத்துவார். உயர்நிலையில் இருக்கும் சீமாட்டி என்பதற்காக ஏழை மக்களின் துயரம் கண்டு ஒப்புக்கு வருத்தப்படும் வெற்று ஆரவார செய்கையாக அவருடையது இல்லை; மாறாக இந்தியாவின் துயரங்களுக்காக மனமார அவர் வருந்தினார். இந்திய ஏழை மக்கள் இதற்கு முன் ஒரு ஆங்கிலேயப் பெண்ணிடம் இது போன்ற செயலை ஒரு போதும் கண்டதில்லை ஆதலால், எட்வினா மவுண்ட்பேட்டனின் ஆத்மார்த்த மான உணர்வுகளை அறிந்து அவரிடம் பெருமதிப்பு வைத்தார்கள்.

அவர் அந்த அறையில் முன்னேறி கணவரை நோக்கிச் சென்றபோது, அவர்களின் விதிவழியில் எத்தகைய மாற்றத்தை அந்த நாள் ஏற்படுத்தியிருந்தது என்பதை மவுண்ட்பேட்டனால் நினைக்காமல் இருக்கமுடியவில்லை. இப்போது ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றிருக்கும் இந்த அறைக்கும், கால் நூற்றாண்டுக்கு முன் தம்மைத் திருமணம் செய்து கொள்கிறாயா என்று எட்வினா அஷ்லியிடம் மவுண்ட்பேட்டன் கேட்ட அந்த இடத்துக்கும் இடைவெளி தூரம் ஒரு மைலுக்கும் குறைவாகவே இருந்தது. அன்று 1922 பிப்ரவரி 14ஆம் நாள் வேல்ஸ் இளவரசரை கவுரவிப்பதற்காக வைஸ்ராய் ஏற்பாடு செய்திருந்த 'பால்' நடனத்தின் ஐந்தாவது சுற்றில் கலந்து கொள்ளாமல் அவர்கள் அமர்ந்திருந்தனர். இதனை அன்று மாலை விருந்தளித்த வைஸ்ராயினி ரீடிங் சீமாட்டி அவ்வளவாக விரும்பவில்லை. இளைஞரான மவுண்ட்பேட்டனுக்குப் பிரகாசமான பதவி ஏதும் கிடைக்க வாய்ப்பில்லை

என்று ரீடிங் சீமாட்டி, திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண்ணின் தாயாருக்கு எழுதினார்.

அவரின் வார்த்தைகளை இப்போது மவுண்ட்பேட்டன் நினைத்துக் கொண்டார். புன்னகையை அடக்க முடியாதவராய், அவரது மனைவியின் கரம் பற்றி, ரீடிங் சீமாட்டி அன்று அமர்ந்திருந்த தங்கநிறமும், செந்நிறமும் கலந்த சிம்மாசனத்தில் அமரவைத்தார்.

இந்தியா எப்போதும் விழாக்களின் நாடாகவே இருந்துள்ளது. அந்த மார்ச் மாத காலைவேளையில், லூயி மவுண்ட்பேட்டன் வைஸ்ராயாகப் பதவியேற்கப் போகும் நேரத்தில், விக்டோரியன் ஆடம்பரமும் மொகலாய வள்ளன்மையும் கலந்ததாக அந்த பிரிட்டிஷ் அரச நிகழ்ச்சி குறையின்றி அமைந்தது. வைஸ்ராய் மாளிகையின் இதயம் போன்ற தர்பார் மண்டபத்துக்குச் செல்வதற்கான பரந்து விரிந்த படிக்கட்டுகளின் முன்னால் இந்தியாவின் ராணுவம், கப்பற்படை, விமானப்படை ஆகியவற்றின் வீரர்கள் அணிவகுத்து நின்றனர். மவுண்ட்பேட்டன் அந்த மண்டபத்துக்குச் செல்லும் போது, சிவப்பு மற்றும் தங்க நிறச் சீருடையும், வெள்ளைக் காலுறைகளும், பளபளக்கும் கருப்பு நிற பூட்ஸ்களும் கொண்ட மெய்க்காவல் படையினர் காலைச் சூரிய ஒளியில் பளபளக்கும் கத்திகளை ஏந்தி உடன் சென்றனர்.

உள்ளே, வெள்ளைப் பளிங்கு பதித்த விதானத்தின் கீழ், இந்தியாவின் பிரமுகர்கள் காத்திருந்தனர். பிரிட்டிஷ் சட்டத்தைக் கையாள்வது போலவே பிரிட்டிஷ் முறைப்படியான கருப்பு அங்கி, கருட்டை முடி கொண்ட விக் ஆகியவற்றுடன் உயர்நீதிமன்ற நீதிபதிகள்; அரைகுறை அறிவுள்ள மிகவும் இருண்ட முகங்களைக் கொண்ட இந்தியர்களால் மாறிப்போன, வெளிறிய முகத்தோற்றமுள்ள ஆங்கிலோ சாக்ஸன் ஐசிஎஸ் அதிகாரிகளும், பட்டுத் துணிகளும் நகைகளும் அணிந்து தங்க முலாம் பூசப்பட்ட மயில்கள் போல வந்திருக்கும் மகாராஜாக்களும், எல்லாவற்றுக்கும் மேலாக எதிர்காலத்தை நோக்கி முன்னேறும் காந்தி காங்கிரசின் முன்னோடிகளான, உள்நாட்டு முரட்டுக் காதி உடையணிந்த, நேருவும் அவரது சகாக்களும் இருந்தனர்.

மவுண்ட்பேட்டனின் பரிவார உறுப்பினர்கள் மண்டபத்தில் அடியெடுத்து வைத்தபோது விதானத்தின் அடிப்பகுதியில் அமைக்கப்பட்ட குழிவான இடங்களில் நின்றவர்கள் எக்காளங்கள் போன்ற நான்கு ஊதுகுழல்களை இசைத்தனர். ஊர்வலம் முன்னேறிச் செல்வதற்கேற்ப இசையொலியும் அதிகரித்துக் கொண்டே சென்றது. மகாமண்டபத்துக்குள் முதலில் மங்கலாக எரிந்த விளக்குகள் ஊதுகுழல்களின் இசைக்கேற்ப பிரகாசமடைந்து ஒளிர்ந்தன. இந்தியாவின் புதிய வைஸ்ராயும் வைஸ்ராயினியும் மண்டபத்தின் பிரமாண்ட நிலைக்கதவு வழியாக உள்ளே நுழைந்தபோது ஊதுகுழல்கள் விதானத்தில் எதிரொலித்து வெற்றிக் கொண்டாட்டமாக முழங்கின. புன்னகைக்காமல் மிடுக்குடன் மவுண்ட்பேட்டனும் அவரது துணைவியாரும் தரைவிரிப்பின் மேல் மெல்ல நடந்து அவர்களுக்காகக் காத்திருக்கும் சிம்மாசனங்களை நெருங்கினார்கள்.

ஒரு வகையான அச்சம், ஒரு வகையான பதற்றம் மவுண்ட்பேட்டனிடம் குடிகொண்டன. ஆனால் இவை, ஒரு காலத்தில் போருக்கு முன்னால் நிச்சயமற்ற நிமிடங்களில் கெல்லி கப்பலின் தளத்தில் இருந்தது போல் இல்லை.

தங்க சிம்மாசனங்களைச் சுற்றி விரிக்கப்பட்ட ரத்தினக் கம்பளங்களின் மேல் அந்த விழாவுக்கேற்ற அசைவுடன் நடந்து வந்த அவரும் அவரது துணைவியாரும் சபையை நோக்கித் திரும்பினார்கள். தலைமை நீதிபதி எழுந்து வந்தார். அவரது வலது கையை உயர்த்தினார். மவுண்ட்பேட்டன் உறுதிமொழியைக் கம்பீரத்துடன் உச்சரித்து இந்தியாவின் கடைசி வைஸ்ராயாகப் பதவியேற்றார்.

பதவிப்பிரமாணத்தின் கடைசி வார்த்தைகளை அவர் உச்சரித்தபோது பிரிட்டிஷ் குதிரைப் படையினர் வெளியே எழுப்பிய பீரங்கி முழக்க ஒலி மண்டபத்துக்குள் பரவியது. அதே சமயத்தில் துணைக்கண்டம் முழுவதிலும் உள்ள ஆட்சித் தலைமை இடங்களிலும் 31 குண்டுகள் முழங்கி வணக்கம் செலுத்தப்பட்டது. கைபர் கணவாயின் முகப்பில் உள்ள லேண்டி கொட்டாலில்; இந்தியப் பேரரசு உருவாகப் பிரிட்டனுக்கு வழி அமைத்துக் கொடுத்த கிளைவ் தங்கியிருந்த கல்கத்தாவின் வில்லியம் கோட்டையில்; 1857 சிப்பாய்க் கலகத்தின் போது யூனியன் ஜாக் கொடியைப் பாதுகாத்த ஆண்களையும் பெண்களையும் கவுரவிக்கும் வகையில் எப்போதும் கொடி இறக்கப்படாத லக்னோ மாளிகையில்; கடந்த காலத்தில் முதலாம் எலிசபெத் ராணியின் கப்பல்கள் கடந்து வந்த மோனோசைட் தாது நிறைந்த மணல் வெளியில் உள்ள கன்னியாகுமரியில்; கிழக்கிந்திய கம்பெனிகளுக்கு முதலில் கிடைத்த நிலமானியத்தைத் தங்கத் தகட்டில் பொறித்து வைக்கப்பட்டிருக்கும் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில்; பூனாவில்; பெஷாவரில்; சிம்லாவில் என எல்லா இடங்களிலும், இந்தியாவில் எங்கெல்லாம் ராணுவப் படை இருந்ததோ அங்கெல்லாம் துருப்புகள் அணிவகுத்து, டில்லியில் முதல் குண்டு முழங்கிய போது இங்கேயும் குண்டு முழங்கினார்கள். எல்லைப்புற துப்பாக்கிப் படையினர், வழிகாட்டிப் படையினர், குதிரைப்படையினர், சீக்கியர்கள், டோக்ராக்கள்(Dogra), ஜாட்டுகள், பத்தானியர்கள், கூர்க்காக்கள், மதராசிகள் எனப் பலவகைப் படைப்பிரிவினரும், பிரிட்டிஷ் ராஜ்யத்தின் இறுதி முரசு இடியென முழங்கும்போது அசைவற்று அமைதியாய் நின்றார்கள்.

கடைசி குண்டு முழக்கத்தின் ஒலி தர்பார் மண்டபத்தில் மங்கி மறைந்த போது, புதிய வைஸ்ராய் மைக்கை நோக்கி நடந்தார். இப்போது அவர் சந்தித்த நிலைமை மிகவும் பொறுப்பு வாய்ந்ததாக இருந்தது. அவரது ஊழியர்களின் ஆலோசனைக்கு எதிராக, அங்கே கூடியிருந்தவர்களிடையே உரையாற்றி பாரம்பர்யத்தை உடைத்தெறிய மவுண்ட் பேட்டன் முடிவு செய்தார்.

'எனது பொறுப்பு சிக்கல்கள் நிறைந்தது என்பதில் எனக்கு எந்த மயக்கமும் இல்லை. இயன்ற அளவு அதிக எண்ணிக்கையிலானவர்களின் பேராதரவு எனக்குத் தேவைப்படும். அந்தப் பேராதரவைத்தான் நான் இன்று இந்தியாவிடம் வேண்டுகிறேன்' என்று அவர் சொன்னார்.

அவர் பேச்சை முடித்த போது அசாம் தேக்கு மரத்தாலான கனத்த மண்டபக் கதவுகளை காவலர்கள் திறந்தனர். புதுடில்லியின் மையப்பகுதியில் உள்ள மரங்கள் அடர்ந்த ராஜபாட்டையும், பீறிட்டெழும்பும் நீரூற்றுகளும் மவுண்ட்பேட்டனுக்கு வியப்புக்குரிய காட்சிகளாக விளங்கின. அவரது தலைக்குமேல் இருந்த விதானத்தில் நின்றவர்கள் மீண்டும் ஊதுகுழல்களை இசைத்தனர். மண்டபத் தாழ்வாரத்திலிருந்து மீண்டும் கீழிறங்கி வரும்போது தனக்கிருந்த அச்சமெல்லாம் திடீரென்று அகன்றுவிட்டதாக மவுண்ட் பேட்டன் உணர்ந்தார். அன்றைய கருக்கமான நிகழ்ச்சி, உலகின் மிக சக்தி வாய்ந்த மனிதனாகத் தன்னை மாற்றிவிட்டதாக அவர் உணர்ந்தார்.

நாற்பத்தைந்து நிமிடங்களுக்குப் பின் மீண்டும் சாதாரண உடைகளை அணிந்த மவுண்ட் பேட்டன் அவரது மேசை முன் அமர்ந்தார். அப்போது, தங்க நிறத் தலைப்பாகை அணிந்த அவரது அலுவலகக் கடைநிலை ஊழியர் அறைக்குள் வந்து வைஸ்ராய் முன் பச்சை நிறத் தோல் பெட்டி ஒன்றை பவ்யமாக வைத்தார். மவுண்ட் பேட்டன் அதனைத் திறந்து அதற்குள் இருக்கும் ஆவணத்தை எடுத்தார். சற்று முன் அவர் பதவி ஏற்றுக் கொண்டதையடுத்து அதிகாரம் அவருக்கு வந்துவிட்டது என்பதை முழுமையாய் உறுதி செய்வதாக அந்தப் பணி அமைந்தது. பெட்டிக்குள் இருந்தது மரண தண்டனை பெற்ற ஒரு மனிதரின் இறுதிக் கருணை மனுவாகும். கூர்மையாகவும் ஒருவகை அதிர்ச்சியுடனும் கடிதத்தின் விவரம் முழுவதையும் அவருக்கே உரிய பாணியில் படித்தார். மக்கள் கண்ணெதிரே ஒருவன் அவனது மனைவியைக் கொடூரமாக அடித்துக் கொன்றது தொடர்பான வழக்கு அது. எல்லா வகையிலும் ஆய்வு செய்யப்பட்டு பல மேல் முறையீடுகளைக் கடந்து எந்தச் சூழ்நிலையிலும் விடுபட வழியே இல்லை என்ற நிலையில் அது இருந்தது. மவுண்ட்பேட்டன் வெகுநேரம் யோசித்தார். பின் வருத்தத்துடன் பேனாவை எடுத்தார். வைஸ்ராய் என்ற தோரணையில் அதிகாரபூர்வமான முதல் நடவடிக்கையை மேற்கொண்டார்.

'அரச முறையிலான அதிகாரங்களைப் பயன்படுத்திக் கருணை காட்ட எந்த நியாயமும் இல்லை' என்று அந்த மனுவின் உறை மீது எழுதினார்.

இந்திய அரசியல் தலைவர்கள் மீது தனது கருத்துக்களைத் திணிப்பதற்கு முன், இந்தியா மீதான தனது ஆளுமையை முதலில் செலுத்த வேண்டும் என்று லூயி மவுண்ட்பேட்டன் உணர்ந்தார். நார்த்தோல்ட் விமான நிலையத்தில் வருத்தத்துடன் கணித்தது போல இந்தியாவின் கடைசி வைஸ்ராய் ஒரு வேளை முதுகில் துப்பாக்கிக் குண்டினைத் தாங்கி நாடு திரும்பலாம் ஆனால் இந்தியா இதுவரை சந்தித்த மற்றெந்த வைஸ்ராயையும் போல அவர் இருக்க மாட்டார். 'மகத்தானதும் புத்திசாலித்தனமானதுமான காரியம் செய்யாமல் தாம் ஒரு வைஸ்ராயாகவே இருப்பது சாத்தியம் இல்லை' என்று மவுண்ட்பேட்டன் உறுதியாக நம்பினார். இந்தியாவிலிருந்து பிரிட்டிஷாரை வெளியேற்றத்தான் அவர் புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். எனினும் தங்க நிறமும் சிவப்பும் கலந்த முடியுடைய பிரிட்டிஷ் அரசின் அனைத்துப் பண்டைய புகழையும் கடைசி நேரத்திலும் மிளிரச் செய்யவேண்டும் என்று அவர் தீர்மானித்தார்.

போர்க்காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட அனைத்து விழாக்களும் மீண்டும் நடக்க அவர் உத்தரவிட்டார். உதவியாளர்கள் முழு அங்கியுடன் மினுமினுத்தார்கள். அரசு விழாக்கள் பலத்தப் பாதுகாப்புடன் நடந்தன. பேண்டு வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. வீரர்கள் பளபளக்கும் வாள்களுடன் நின்றனர். 'இப்படி எண்ணற்ற விழாக்கள்' விழாக்களின் ஒவ்வொரு கணத்தையும் அவர் விரும்பினார். ஆனால் ஆடம்பர நிகழ்ச்சிகளில் சொந்த மகிழ்ச்சியை விட, அவரின் நுட்பம் மிகுந்த புத்திசாலித்தனமான தந்திரம் மறைந்திருந்தது.

இந்தப் பகட்டும் படாடோபமும் வைஸ்ராய் பதவிக்கு ஒரு கவர்ச்சியையும், அதிகாரத்தையும் வெளிப்படுத்துவதற்கான அணிகலன்களாகவே இருந்தன. இவையெல்லாம் அவரின் செயல்களுக்குக் கூடுதல் பரிமாணங்களாக அமைந்தன. தனக்கு முன்பு இப்பதவியில் இருந்தவரின் 'ஆபரேஷன் மேட்

ஹவுஸ்' என்ற திட்டத்தை மாற்றி 'ஆபரேஷன் செடக்ஷன்' (Operation seduction) என்ற தனது திட்டத்தை செயல்படுத்த அவர் விரும்பினார். தன்னோடு பேச்சு வார்த்தை நடத்தப் போகிற தலைவர்களையும், இந்தியாவின் பெருமளவிலான மக்கள் தொகையையும் கணக்கில் கொண்ட அவரது திட்டம் நடைமுறையில் ஒரு சிறு புரட்சியாக இருந்தது. உயர் குடியினரின் ஆடம் பரமும், சாதாரண மக்களின் மனம் கவரும் செயலும், அழிந்து கொண்டிருக்கும் அரசின் பழமைகளும், நாளைய இந்தியாவின் நவீன முன்முயற்சிகளும் என முரண்பட்ட மதிப்பீடுகளின் கலவையாக அது இருந்தது.

வித்தியாசமான முறையில், மவுண்ட்பேட்டன் தனது புரட்சிகரத் திட்டத்தை பெயிண்ட் பிரஷ் மூலம் தொடங்கினார். பலமுறை பேச்சு நடந்து தோல்வியடைந்திருக்கும், வைஸ்ராயின் கூட்ட அறையில் உள்ள அலுப்புத் தட்டும் வண்ணத்தைக் கொண்ட மரப்பொருள்கள் அனைத்துக்கும், தாம் பேச்சு நடத்தவிருக்கும் இந்தியத் தலைவர்களையும் கவரும் வகையில், அடர்த்தியற்ற நயமான வண்ணம் பூசுமாறு பணியாளர்களுக்கு அவர் உத்தரவிட்டார். வழக்கமான வைஸ்ராய் மாளிகைப் பொழுது போக்குவதற்கான இடமாகத்தான் இருக்கும். இதனை ஆட்டம் காணச்செய்து வைஸ்ராய் மாளிகையை துடிப்புள்ளதாகவும், அரை ராணுவத் தலைமையிடமாகவும் மவுண்ட்பேட்டன் மாற்றினார். 'காலை நேர பிரார்த்தனை' என்ற பெயரில், ஒவ்வொரு நாளும் அதிகாரபூர்வமான முதல் பணியாக ஊழியர்கள் கூட்டத்தை நடத்தினார்.

அவரது எழுச்சிமிகு மனநிலை, பிரச்சனையின் மூலத்தையே அறிந்துவிடும் திறன், இவற்றுக்கும் மேலாக செய்யும் பணியில் காட்டும் வேகம் ஆகியவற்றால் தனக்குக் கீழுள்ள புதிய ஐசிஎஸ் அதிகாரிகளை மவுண்ட்பேட்டன் வியப்படையச் செய்தார். தனிப்பட்ட முறையில் வைஸ்ராய் கவனிக்க வேண்டிய கடிதங்களை, மனுக்களை பச்சை நிற தோல் பெட்டிகளில் வைத்துக் கடைநிலை ஊழியர்கள் கொண்டு வந்து தருவது வழக்கம். இந்த முறைக்கு அவர் முடிவு கட்டினார். பெட்டிகளைத் திறந்தும் மூடியும் நேரத்தை வீணடிக்க அவர் விரும்பவில்லை; தனது அறையில் தனியாக அமர்ந்து கொண்டு பேனாவைக் கொண்டு காகிதங்களில் குறிப்பெழுதுவது அவருக்குப் பிடிக்கவில்லை. நேரடியாக வாய்மொழி மூலம் சொல்லி விடுவதையே அவர் விரும்பினார்.

'நீங்கள் ஒரு காகிதத்தில் "நான் பேசலாமா?" என்று எழுதி அதனை அவர் படிக்க நேர்ந்தால் நீங்கள் நிச்சயமாகப் பேச முடியும். உங்கள் மனதில் என்ன இருந்தாலும் எந்த நேரத்திலும் அதைத் தெரிவிக்கத் தயாராய் இருப்பது நல்லது. ஏனெனில் அதிகாலை இரண்டு மணிக்குக் கூட அவரிடமிருந்து அழைப்பு வரலாம்' என்று மவுண்ட் பேட்டனின் ஊழியர்களில் ஒருவர் நினைவு கூர்ந்தார்.

அவரின் இந்த நடவடிக்கைகள் எல்லாம் தாமும் தமது அலுவலகமும் முற்போக்கான மாற்றம் கொண்டுள்ளது என்ற தோற்றத்தைப் பொது மக்கள் இடம் உருவாக்கும் முயற்சியே.

பல தெய்வங்களைக் கொண்ட ஆசியாவில் தனிமையாய் மிகவும் விலகி இருந்த தலாய் லாமாவுடன் போட்டி போடுவது போல கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இந்தியாவின் வைஸ்ராய் சடங்குகள் நிறைந்த அலுவலகத்துக்குள் அடைபட்டுக் கிடந்தார். முந்தைய வைஸ்ராயைக் கொல்ல மேற்கொள்ளப்பட்ட வெற்றி பெறாத இரண்டு முயற்சிகளுக்குப் பின் அவர்கள்

*பாதுகாப்புக் கூட்டுக்குள் இருக்கும் புழுவானார்கள். அவர்களால் ஆளப்பட்ட மக்களுடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் தனிமைப்பட்டார்கள். இந்தியாவின் பரந்துவிரிந்த பகுதிகளுக்கு வைஸ்ராயின் வெள்ளையும் தங்க நிறமும் பூசப்பட்ட ரயில் வண்டி செல்லும் போது அது வந்து சேர 24 மணி நேரம் இருக்கும் போதே அதன் பாதை நெடுகிலும், 100 கஜத்துக்கு (300 அடிகளுக்கு அதாவது 100 மீட்டருக்கு மொ-ர்) ஒருவர் வீதம் காவலர்கள் நிறுத்தப்பட்டனர். நூற்றுக்கணக்கான மெய்க்காப்பாளர்களும் காவல்துறையினரும், பாதுகாப்புப் படையினரும் அவரின் ஒவ்வொரு அசைவையும் கவனித்துக் கொண்டார்கள். வைஸ்ராய் கோல்ஃப் விளையாடினால், பந்து செல்லும் பாதையில் எந்தத் தடையும் இல்லாமல் அகற்றப்பட்டன. ஏறத்தாழ மைதானத்தின் எல்லா மரங்களின் பின்னும் ஒரு காவலர் வீதம் நிறுத்தப் பட்டனர். அவர் குதிரைச் சவாரி செய்தால், வைஸ்ராயின் மெய்க்காப்பாளரும் பாதுகாப்புக் காவலரும் அவருக்குப் பின்னால் ஓடினார்கள்.*

*இந்தத் திரைகளையெல்லாம் கிழித்தெறிய மவுண்ட்பேட்டன் தீர்மானித்தார். தாம் தமது மனைவி அல்லது மகளோடு காலையில் பாதுகாவலர் எவரும் இன்றியே தாம் குதிரை சவாரி செய்யப்போவதாக முதல் அறிவிப்பை அவர் வெளியிட்டார். இந்த வார்த்தைகள் மாளிகை முழுவதும் அதிர்ச்சி அலையைப் பரப்பியது. அவர் பாதையில் செல்வதற்கு கொஞ்சம் கால அவகாசமும் தேவைப்பட்டது. இருந்தாலும் அதை அவர் செயல்படுத்தினார் இந்திய வைஸ்ராயும் வைஸ்ராயினியும் தவ்விச் செல்லும் குதிரை மீதமர்ந்து கருணையோடு கையசைத்து தன்னந் தனியாக பாதுகாவலர்கள் யாருமின்றி காலை வேளைகளில் சவாரி செய்வதை கிராம மக்களால் நம்ப முடியவில்லை; மாயமோ என்று மருண்டனர்.*

*மேலும் சில புரட்சிகர செயல்களையும் அவரும் அவரது துணைவியாரும் செய்தனர். கடந்த இருநூறு ஆண்டுகளாக எந்த வைஸ்ராயும் செய்யாத அருஞ்செயலாக, மதிப்புக்குரிய அழகிய இளவரசர்களில் ஒருவராக இல்லாத இந்தியர் ஒருவரின் வீட்டுக்கு அவர்கள் சென்றனர். இந்தியா முழுவதும் இது ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது. புதுடில்லியில் ஜவஹர்லால் நேருவின் இல்லத்தில் நடந்த திறந்தவெளி விருந்து நிகழ்ச்சிக்கு வைஸ்ராய் தம்பதிகள் சென்றிருந்தனர். இதனை நம்ப முடியாமல் நேருவின் பணியாளர்கள் வாயடைத்து நின்றனர். மவுண்ட்பேட்டனோ நேருவின் தோளில் கைபோட்டும் விருந்தினர்களுடன் கலகலப்பாகப் பேசியும் கை குலுக்கியும் வளைய வந்தார்.*

*இந்தச் செயல் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. 'கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். கடைசியாக நாம் ஒரு மனிதரை வைஸ்ராயாகப் பெற்றிருக்கிறோம்; சட்டைக்குள் திணிக்கப்பட்ட ஜடத்தை அல்ல' என்று அன்று மாலை நேரு அவரது சகோதரியிடம் கூறினார்.*

*வைஸ்ராய் மாளிகையில் இப்போது இந்திய மக்களுக்குப் புதிய மரியாதை கிடைத்து வருகிறது என்பதை வெளிப்படுத்தும் ஆர்வத்துடன், இந்திய ராணுவத்தினருக்குப் பல ஆண்டுகாலமாக அளிக்கப்படாத கவுரவத்தை அளித்தார். இவர்களில் 2 மில்லியன் (20 லட்சம்) வீரர்கள், தென் கிழக்கு ஆசியாவில் ஏற்கெனவே மவுண்ட்பேட்டனின் கீழ் பணியாற்றியவர்கள். தமது உதவியாளர்களாக மூன்று இந்திய அதிகாரிகளை அவர் இணைத்துக் கொண்டார். அடுத்து, வைஸ்ராய் மாளிகையின் கதவுகளை இந்தியர் எவருக்கும் திறந்துவிடுமாறு அவர் உத்தரவிட்டார் அவர் வருவதற்கு முன் இந்த*

மாளிகையின் எல்லைப் பகுதிக்கு ஒரு சிலர் மட்டுமே அழைக்கப்பட்டனர். இந்திய விருந்தினர்கள் இல்லாமல் வைஸ்ராய் மாளிகையில் எந்த விருந்து நிகழ்ச்சிகளும் நடக்கக் கூடாது என்றும் ஊழியர்களுக்கு அவர் அறிவுறுத்தினார். அதுவும் ஒப்புக்கு சில விருந்தினர்களை அழைக்கக் கூடாது. இனிமேல் அவரது மேசையைச் சுற்றி அமர்வோரில் குறைந்தபட்சம் பாதி அளவுக்கு இந்தியர்கள் இருக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

அவரது துணைவியார் வைஸ்ராயின் விருந்து முறையில் மேலும் குறிப்பிடத்தக்க, புரட்சிகர மாற்றத்தைக் கொண்டு வந்தார். இந்திய விருந்தாளி களை கவுரவிக்கும் வகையில் இந்தியக் காய்கறி உணவு வகைகளையே வைஸ்ராய் மாளிகையின் சமையல் அறைகளில் தயாரிக்க வேண்டும் என்று அவர் பணித்தார். நூற்றாண்டுக்கும் மேலாக அரச விருந்தின்போது வைஸ்ராய் மாளிகையில் இத்தகைய உணவு வகைகள் பரிமாறப்பட்டதில்லை. அது மட்டுமல்ல, இந்த உணவு வகைகள் இந்திய வழக்கப்படி தட்டுகளில் பரிமாறப் பட வேண்டும்; விருந்தினர்களின் பின்னால் பாரம்பரிய முறைப்படி கை கழுவும் தட்டுடனும், தண்ணீர் பாத்திரத்துடனும், துண்டுடனும் பணியாளர்கள் நிற்க வேண்டும்; கையால் எடுத்து உணவைச் சாப்பிட அவர்கள் விரும்பினாலும், சாப்பிட்ட பின் தொண்டையைச் சுத்தம் செய்யும் வகையில் வாயைக் கொப்பளித்துப் துப்ப விரும்பினாலும் அவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

சிறியதும் பெரியதுமான இத்தகைய திட்டமிட்ட செயல்கள் - அவர்களின் சொந்தக் காதல் வாழ்க்கைக்கு ஆரம்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த இந்தியாவின் மீது மவுண்ட்பேட்டனுக்கும் அவரது துணைவியாருக்கும் இருந்த உண்மை யான அன்பு - புதிய வைஸ்ராய் அளிக்க வந்தவரே; எதையும் பறிக்க வந்தவரல்ல என்ற எண்ணம் - ஆசியாவில் அவருக்குக் கீழ் பணியாற்றிய வீரர்கள் அளித்த மதிப்பு இவையெல்லாம் இணைந்து இந்தத் தம்பதியர் பற்றி நன்மதிப்பை உருவாக்கியிருந்தன.

இவர்கள் இந்தியாவுக்கு வந்த கொஞ்ச காலத்திலேயே 'வரலாற்றில் இவரைப் போல் வேறெந்த வைஸ்ராயும் இந்திய மக்களின் ஒட்டுமொத்த நம்பிக்கையையும், மதிப்பையும், அன்பையும் வென்றுவிடவில்லை' என்று நியூயார்க் டைம்ஸ் எழுதியது. உண்மையில் ஒரு சில வாரங்களிலேயே அவரின் 'ஆபரேஷன் செடக்ஷன்' திட்டம் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது. 'இந்தியாவில் உள்ள எவரையும் விட பெரிய கூட்டத்தைக் கவரும் ஆற்றல்' அவரிடம் இருப்பதால் நாட்டு சுதந்திரம் பற்றி அவருடன் பேசுவது கூட சிரமமாகி விடும் போல் தெரிகிறது என்று நேருவே ஒரு முறை தமாஷாகப் புதிய வைஸ்ராயிடம் கூறினார்.

அந்த வார்த்தைகள் முதலில் லூயி மவுண்ட்பேட்டனுக்கு திகைப்பை ஏற்படுத்தின; அவற்றை நம்ப முடியவில்லை. புத்தாண்டு தினத்தன்று கிளமெண்ட் அட்லி அவருக்குத் தீட்டிக்காட்டிய சாந்தமான நாட்டுப் புற வர்ணனை போலன்றி அவை இந்தியாவைப் பற்றி வித்தியாசமான தோற்றத்தை ஏற்படுத்தின. மேலும், இந்த வார்த்தைகளைக் கூறியவர், வைஸ்ராய் நிர்வாகத்தில் வேறெவரையும் விட இந்தியாவைப் பற்றி நன்கு அறிந்தவர்; தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்தவரும் அறிவுத் திறன் மிக்கவரும் ஆவார். ஆக்ஸ்ஃபோர்டில் முதல் நிலையில் தேறியவரும் மூன்று நீலப்பட்டை

பெற்றவருமான ஜார்ஜ் அபெல் (George Abell) தான் அந்த வார்த்தைகளைக் கூறியவர். இவர் மவுண்ட்பேட்டனுக்கு முன் வைஸ்ராயாக இருந்தவருக்கு மிகவும் நெருக்கமானவர்.

இந்தியா உள்நாட்டுப் போரை நோக்கிச் செல்கிறது என்று அவர் மவுண்ட்பேட்டனிடம் அழுத்தமாகக் கூறினார். இந்தியாவின் பிரச்சனைகளுக்கு வேகவேகமானத் தீர்வுகளைக் காண்பது மட்டுமே அதனைக் காப்பாற்ற முடியும். இந்தியாவை நிர்வகிக்கும் மாபெரும் நிர்வாகம் தகர்ந்து கொண்டிருக்கிறது. போர்க்காலத்தின் போது பணி நியமனத்தை நிறுத்தியதால் இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரிகள் குறைந்தனர். இந்தப் பணிக்கு வந்த இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே விரோதப் போக்கு அதிகரித்துள்ளது. இதனால் பெருமைமிகு ஐசிஎஸ் நிர்வாகம் என்பது ஓராண்டுகாலம் நீடிப்பதே கடினம். விவாதிப்பதற்கும் ஆலோசிப்பதற்கும் காலம் கடந்துவிட்டது. பேரழிவைத் தடுக்க உடனடித் தேவை விரைவான நடவடிக்கையே தவிர விவாதங்களல்ல என்று அபெல் கூறினார்.

அபெல் போன்றவர்களிடமிருந்து வந்த இந்த வார்த்தைகள் புதிய வைஸ்ராய்க்கு துயரம் தோய்ந்த அதிர்ச்சியை ஏற்படுத்தின. இந்தியாவிற்கு வந்த முதல் பதினைந்து நாட்களில் அவர் முன் வெள்ளம் போல் குவிந்து சூழ்ந்த அறிக்கையில் முதலாவதுதான் இது. 1940லிருந்து 1945 வரை வின்ஸ்டன் சர்ச்சிலின் தலைமை ஊழியராக இருந்தவரும், மவுண்ட்பேட்டன் இந்தியா வரும்போது தமக்குத் தலைமை ஊழியராகத் தெரிவு செய்யப்பட்டவருமான ஜெனரல் இஸ்மே பிரபு (Lord Ismay) விடமிருந்தும் இதேபோன்ற அறிக்கையை அவர் பெற்றார். இந்தியத் துணைக் கண்டத்தின் மூத்த இராணுவ அதிகாரியும், முன்பிருந்த வைஸ்ராயின் ராணுவ செயலாளருமான இஸ்மே பிரபு மவுண்ட்பேட்டனுடனான உரையாடலை இப்படி முடித்தார்: 'வெடி பொருட்களுடன் செல்லும் கப்பல் நடுக்கடலில் தீப்பிடித்துக் கொண்டது போல் உள்ளது இந்தியா. வெடி பொருள் கிடங்கில் தீப்பற்றும் முன் அவர்களால் தீயை அணைக்க முடியுமா என்பதுதான் கேள்வி.'

பஞ்சாபில் இருந்த பிரிட்டிஷ் கவர்னரிடமிருந்து முதலாவது அறிக்கையை மவுண்ட் பேட்டன் பெற்றார். 'இந்த மாகாணம் முழுவதும் உள்நாட்டுப் போருக்கான சூழ்நிலை இருப்பதாக' அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். கவர்னரின் வார்த்தைகள் எந்த அளவுக்குத் துல்லியமானவை என்பதற்கு அதிர்ச்சியூட்டும் படப்பிடிப்பாக அறிக்கையின் முக்கியமான ஒரு பத்தி அமைந்திருந்தது. ராவல்பிண்டி அருகே ஊரக மாவட்டம் ஒன்றில் அண்மையில் ஏற்பட்ட துயரச் சம்பவம் அதில் விவரிக்கப்பட்டிருந்தது. ஒரு முஸ்லீமின் எருமை மாடு ஒன்று அண்டை வீட்டுக்காரரான சீக்கியரின் நிலத்தில் புகுந்து சொத்துக்களை சேதப்படுத்தியது. அந்த மாட்டைப் பிடித்துச் செல்ல உரிமையாளர் வந்தபோது சண்டை ஏற்பட்டு பின் கலவரமாக வெடித்தது. இரண்டு மணி நேரத்துக்குப் பின் ஊர் சுற்றித் திரியும் அற்ப எருமை மாடு காரணமாக, அரிவாள்களாலும் கத்திகளாலும், வெட்டி கொல்லப்பட்ட ஒரு நூறு மனித உடல்கள் வயல்களில் சிதறிக் கிடந்தன.

புதிய வைஸ்ராய் வந்த ஐந்து நாட்களுக்குப் பின் கல்கத்தாவில் இந்து முஸ்லீம் மோதல்கள் 99 உயிர்களைப் பறித்தன. இரண்டு நாட்களுக்குப் பின் பம்பாயில் வெடித்த இதே போன்ற மோதல்களால் சிதைக்கப்பட்ட 41 உடல்கள் நடைபாதைகளில் சிதறிக் கிடந்தன.

*வெடித்துக் கிளம்பும் வன்முறைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்த மவுண்ட்பேட்டன், இந்தியக் காவல் துறையின் மூத்த அதிகாரிகளைத் தமது கூட்ட அறைக்கு அழைத்தார். இந்தியாவில் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தும் திறனுடன் காவல்துறை இருக்கிறதா என்று அவர் வினவினார்.*

*'இல்லை வைஸ்ராய் அவர்களே! எங்களால் இயலாது' என்பதுதான் பதிலாக இருந்தது. இதனால் அதிர்ச்சியுற்ற மவுண்ட்பேட்டன், இதே கேள்வியை இந்திய ராணுவத்தின் தலைமைத் தளபதி ஃபீல்டு மார்ஷல் சர் கிளாட் ஆச்சின் லெக் (Sir Claude Auchinleck) கிடம் கேட்டார். பதிலும் முன் போலவே இருந்தது.*

*அவருக்கு முன்பிருந்த வைஸ்ராய் பெரு முயற்சி செய்து உருவாக்கிய காங்கிரஸ் கட்சி - முஸ்லீம் லீக் கூட்டணி அரசின் மூலமே இந்தியாவை அவர் நிர்வகிக்க வேண்டியிருந்தது. ஆனால் அதுவோ பகைவர்களின் கூடாரமாகவும், மிகுந்த கசப்புணர்வுடன் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளாததாயும் இருந்ததை விரைவிலேயே மவுண்ட்பேட்டன் கண்டறிந்தார். இந்த அரசு வீழப்போவது உறுதி; அப்படி வீழ்ந்தால், தாமே நேரடியாக ஆட்சி நடத்தும் பொறுப்பு மவுண்ட்பேட்டனுக்கு ஏற்படும். அதற்குத் தேவையான அரசு எந்திரம் அவரது கண் முன்னேயே நொறுங்கிக் கொண்டிருக்கிறது.*

*அச்சுறுத்தும் இந்த நிலைமையை நேரே கண்டதாலும், எல்லாப் பக்கங்களி லிருந்தும் வந்த திகைக்கச் செய்யும் வன்முறை பற்றிய அறிக்கைகளாலும், மிகுந்த அனுபவமுள்ள ஆலோசகர்களின் எச்சரிக்கைகளாலும் மவுண்ட்பேட்டன் ஒரு முடிவுக்கு வந்தார். ஒருவேளை இந்தியாவில் அவர் இருந்த முதல் பத்து நாட்களில் எடுத்த முக்கிய முடிவு இதுவாகத்தான் இருக்கும். வைஸ்ராய் என்ற முறையில் அவர் எடுக்கும் மற்ற எல்லா முடிவுகளுக்கும் இதுவே அடிப் படையாக இருக்கும். அதிகாரத்தை கைமாற்றுவதற்கு அட்லியிடம் அவரே வற்புறுத்தி லண்டனில் நிர்ணயித்த, 1948 ஜூன் என்ற காலம் உண்மையறியாமல் மனம் போன போக்கில் வைத்த நம்பிக்கையாகவே இருந்தது. இந்தியாவின் எதிர்காலத்துக்கு எந்த வகையான தீர்வை மேற்கொண்டாலும், அது சில மாதங்களில் அல்ல வாரங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும்.*

*'விடுபட இயலாத, தெளிவற்ற ஒரு நிலைமை தான் இங்கே உள்ளது. இந்தியாவின் எதிர் காலத்துக்கு ஏற்கத்தக்கத் தீர்வு எதையும் உருவாக்க சிறிதளவு வாய்ப்பே இருப்பதாக நான் அறிகிறேன்' 1947 ஏப்ரல் 2 அன்று அட்லி அரசுக்கு மவுண்ட்பேட்டன் அனுப்பிய முதல் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட் டிருந்தார்.*

*நாட்டின் நிச்சயமற்ற நிலைமைகளை விவரித்தபின், தம்மை இந்தியாவுக்கு அனுப்பி வைத்த அந்த மனிதருக்கு இளம் அட்மிரல் ஆதங்கத்துடனான எச்சரிக்கையும் செய்தார். 'நான் விரைந்து செயல்படாவிட்டால் ஒரு உள்நாட்டுப் போரின் தொடக்கம் விரைவில் இருக்கும் என்ற முடிவுக்கு மட்டுமே என்னால் வர முடிந்துள்ளது' என்று அவர் எழுதினார்.*

ஐந்து

# ஒரு முதியவரும் அவரின் தகர்ந்த கனவும்

### *புது டில்லி, ஏப்ரல் 1947*

*அந்த அறையில் வேறு எவரும் இல்லை. ஆர்வமின்றி குறிப்பெடுத்துக் கொண்டிருக்கும் ஒரு செயலாளர் கூட அந்த இரண்டு மனிதர்களுக்கும் இடையூறாக அங்கு இல்லை. அவர் எழுதிக் கொண்டிருக்கும் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்தார். எனவே இந்தியத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த புரட்சிகரமான தந்திரம் ஒன்றை செயல்படுத்த மவுண்ட்பேட்டன் முடிவு செய்தார். இந்திய வரலாற்றில் முதன் முறையாக அதன் தலைவிதி வட்டமேசை மாநாட்டில் முடிவு செய்யப்படப் போவதில்லை; தனிப்பட்ட முறையில் நேருக்கு நேரான உரையாடல் மூலமே முடிவு செய்யப்படவுள்ளது. இத்தகைய தொடர் சந்திப்புகளின் முதலாவது கூட்டம் புதிதாக வண்ணம் தீட்டப்பட்ட வைஸ்ராயின் கூட்ட அறையில் சற்று முன் தொடங்கியிருந்தது. லூயி மவுண்ட்பேட்டன் லண்டனுக்கு அனுப்பிய முதல் அறிக்கையில் முன்னறிந்து குறிப்பிட்டிருந்த உள்நாட்டுப் போரின் பயங்கரம் நிகழாமல் இந்தியாவைக் காப்பாற்ற முடியுமா என்பதைத் தீர்மானிப்பதாகத்தான் இந்த உரையாடல்கள் அமைந்தன. லூயி மவுண்ட்பேட்டனும், இந்தியத் தலைவர்கள் நான்கு பேரும் என ஐந்து பேர் இதில் கலந்து கொண்டார்கள்.*

*இந்தியத் தலைவர்கள் நான்கு பேரும் தங்கள் வாழ்நாளின் பெரும் பகுதியை, பிரிட்டிஷாரை எதிர்த்தப் போராட்டத்திலும், இதுபற்றிய பரஸ்பர விவாதத்திலும் செலவிட்டவர்கள். இவர்கள் அனைவரும் நடுத்தர வயதைக் கடந்தவர்கள். இவர்கள் அனைவரும் தொடக்கத்தில் லண்டன் இன்ஸ்கோர்ட் நீதிமன்றத்தில் தங்களின் சட்ட அறிவைப் பட்டைதீட்டிக் கொண்டவர்கள். இந்தியாவின் புதிய வைஸ்ராயுடன் நடத்தப் போகும் உரையாடல்களே இவர்களின் வாழ்க்கையில் மாபெரும் விவாதமாக அமையக்கூடும். ஒரு வகையில் கடந்த கால் நூற்றாண்டு காலமாக இந்த விவாதத்துக்குத்தான் தங்களைத் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.*

*இந்த விவாதத்தின் விளைவு என்னவாக இருக்க வேண்டும் என்ற கேள்வியே மவுண்ட்பேட்டனின் மனதில் எழவில்லை. மற்ற பல ஆங்கிலேயர்களைப் போலவே அவரும் இந்தியாவின் ஒற்றுமைதான் பிரிட்டன் விட்டுச் செல்லக்கூடிய மிகப்பெரும் சொத்தாக இருக்க முடியும் என்று கருதினார். இந்தக் கருத்தின் மீது ஆழமான ஏறத்தாழ தெய்வீகத்தன்மையான*

விருப்பத்தையே அவர் கொண்டிருந்தார். இந்தியாவைப் பிளவுபடுத்த வேண்டும் என்ற முஸ்லீம்களின் வேண்டுகோளினை ஏற்றால் அது துயர விதைகளை விதைப்பதாகிவிடும் என்று அவர் நம்பினார்.

இந்தியாவின் பிரச்சனைகளுக்கான ஒரு தீர்வை ஏற்கச் செய்வதற்கு, இந்தியத் தலைவர்களுடன் ஏற்கெனவே நடத்திய, ஓரளவு வெளிப்படைத் தன்மையுடைய பேச்சு வார்த்தை முயற்சிகள் எல்லாம், நம்பிக்கையற்ற தேக்க நிலையிலேயே முடிந்தன. ஆனால் இப்போது, அவரது கூட்ட அறையில், இவர்களுடன் தனிப்பட்ட முறையில், ஒருவர் பின் ஒருவர் என்று நடத்தும் பேச்சு வார்த்தையின் முடிவில், விரைவிலேயே உடன்பாடு எட்டப்படும் என்று மவுண்ட்பேட்டன் நம்பிக்கை கொண்டார். அவரின் தனித் திறமையான நயம்படவுரைத்தல், தன்னம்பிக்கை, எல்லாவற்றுக்கும் மேலாகத் தமது கருத்தில் உள்ள நியாயத்தை வலியுறுத்தும் குணம் ஆகியவற்றால், அவருக்கு முன்பிருந்தவர்கள் ஆண்டுக்கணக்கில் முயன்று சாதிக்க முடியாததை, மவுண்ட்பேட்டன் சில வாரங்களில் சாதிக்க முயற்சியில் இறங்கவிருக்கிறார். ஏதோ ஒரு வடிவிலான ஒற்றுமையை இந்தியத் தலைவர்கள் ஏற்குமாறு செய்யப் போகிறார்.

வழுக்கைத் தலையில் காங்கிரஸ் வெள்ளை (கதர்) குல்லாயுடனும், மேலங்கியின் மூன்றாவது பொத்தானில் அன்றலர்ந்த ரோஜாவுடனும், அவர் முன் அமர்ந்திருந்த மனிதர் இந்திய அரசியல் அரங்கில் புகழ்பெற்ற தலைவர்களில் ஒருவராவார். ஓரளவு பூனை போன்ற குணமுடைய ஜவஹர்லால் நேருவும் இந்தியாவின் புதிய வைஸ்ராய் போலவே கவர்ச்சிகரமானவர். தெய்வீகத் தன்மை கொண்ட மென்மையான சுபாவத்திலிருந்து அளவு கடந்த கோபத்துக்கு விரைவிலேயே மாறிவிடும் உணர்வுகளை உடனுக்குடன் வெளிப்படுத்தும் அவரது முகத்தில், அடிக்கடி ஒரு சோக இழை தென்பட்டது. எப்போதுமே சாந்தமாக இருப்பது மவுண்ட்பேட்டனின் இயல்பு என்றால் இப்படி எப்போதாவது அபூர்வமாக இருப்பது நேருவின் இயல்பு. ஏரி நீரில் அசைந்தாடும் அலைகள் போல, அவரது முகத்தில் சினமும் சிரிப்பும் என உணர்ச்சிகள் அலை பாய்ந்தன.

இந்தியத் தலைவர்களில் ஏற்கெனவே மவுண்ட்பேட்டனால் அறியப்பட்ட ஒரே ஒரு தலைவர் நேருதான். மவுண்ட்பேட்டன் தென்கிழக்கு ஆசியப் படையின் தலைமையகத்தைப் பெற்றிருந்த சிங்கப்பூருக்கு நேரு பயணம் செய்தபோது, போர் முடிந்த நிலையில் இருவரும் சந்தித்துக் கொண்டார்கள். பிரிட்டிஷ் சிறைக்கூடத்தின் தூசு படிந்த காலணிகளைக் கொண்டிருக்கும் புரட்சியாளர் ஒருவரை சந்திக்கவோ அவருடன் பேசவோ கூடாது என ஆலோசகர்கள் கூறியதையும் புறக்கணித்துவிட்டு அந்த இந்தியத் தலைவரை மவுண்ட் பேட்டன் சந்தித்தார்.* விரைவிலேயே அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டனர். நேரு மாணவராக இருந்த போது கண்ட, வெளிப்படைத் தன்மை கொண்ட, அனைவரையும் இன்முகத்தோடு வரவேற்கும் பண்பு கொண்ட அந்த இங்கிலாந்து, பல ஆண்டுகளை பிரிட்டிஷ் சிறையில் கழித்த காலத்தில் அவரது நினைவிலிருந்து பெரும்பாலும் அகன்றுவிட்டது. ஆனால்

---

* 1944 ஜனவரி 22இல் அகமது நகரில் உள்ள 33ஆவது இராணுவப் பிரிவைப் பார்வையிட வந்த போது, அந்த நகரில் நேரு சிறை வைக்கப்பட்டிருப்பதை மவுண்ட் பேட்டன் அறிந்தார். அவரது தலைமையின் கீழ் ஒரு மில்லியனுக்கும் (பத்து லட்சத்துக்கும்) அதிகமான வீரர்கள் ராணுவத்தில் இருப்பதைக் குறிப்பிட்டு, சிறையில் இருக்கும் இந்தியத் தலைவரைக் காண அவர் அனுமதி கோரினார். அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

கடந்த நாற்பதாண்டு காலமாக அறியப்படாத அந்த இங்கிலாந்தை மவுண்ட்பேட்டன் தம்பதியர் மூலம் அவர் மீண்டும் கண்டறிந்தார். நேருவிடமிருந்த கவர்ச்சி, பண்பாடு, நகைச்சுவை உணர்வு ஆகியவற்றால் மவுண்ட்பேட்டன் தம்பதியினர் பெரு மகிழ்வுற்றனர். மவுண்ட்பேட்டன் தனது ஊழியர்களுக்குக் கிலி ஏற்படுத்தும் வகையில், நேருவைப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு அவரது திறந்த காரில் சிங்கப்பூரின் தெருக்களில் உலா வர தன்னிச்சையாக முடிவு செய்தார். இத்தகைய செயல்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிக்காரரின் மதிப்புயர மட்டுமே பயன்படும் என்று அவரது ஆலோசகர்கள் எச்சரித்தனர்.

'அவருக்கு மதிப்புயருமா?' மவுண்ட்பேட்டன் எதிர்க்கேள்வி கேட்டார். 'அவரால்தான் எனக்கு மதிப்பு உயரும். ஒரு நாளைக்கு இந்த மனிதர் இந்தியாவின் பிரதம மந்திரியாவார்' என்றும் கூறினார்.

இப்போது அவரது கணிப்பு உண்மையாகி விட்டது. இந்தியாவின் இடைக்கால அரசில் பிரதம மந்திரியாகி இருப்பவர் என்ற நிலையில், இந்தியாவின் நான்கு தலைவர்களில் முதலாமவராக மவுண்ட்பேட்டனின் கூட்ட அறைக்குச் செல்லும் கவுரவத்தை நேரு பெற்றார்.

ஜவஹர்லால் நேருவைப் பொறுத்தவரை வைஸ்ராயின் கூட்ட அறையின் உரையாடலைத் தொடங்கியது, அவரது வாழ்க்கையின் பெரும் பகுதியை ஆக்ரமித்துக் கொண்ட காலனியாதிக்கவாதிகளுடன் தொடர்ந்து நடத்தும் பேச்சுக்களின் சமீபத்திய பகுதியாகத்தான் இருந்தது. இங்கிலாந்தின் உயர்நிலைக் குடும்பங்களில் நேரு செல்லப்பிள்ளையான விருந்தாளியாக இருந்திருக்கிறார். பக்கிங்காம் அரண்மனையின் தங்கத் தட்டிலும் சாப்பிட்டிருக்கிறார்; பிரிட்டிஷ் சிறையின் தகரத் தட்டிலும் சாப்பிட்டிருக்கிறார். அவருடன் கருத்துப் பரிமாற்றம் செய்தவர்களில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், பிரதம மந்திரிகள், வைஸ்ராய்கள், சாம்ராஜ்ய மன்னர் ஆகியோரும் உண்டு; சிறைக் காவலர்களும் உண்டு.

இந்தியாவின் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு இணையாகத் தொன்மையும் பெருமையும் கொண்ட கிழக்கிந்திய மேல்குடியான காஷ்மீர் பிராமண குடும்பத்தில் பிறந்தவர் அவர். கல்வி கற்பதற்காக நேரு பதினாறாவது வயதில் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். மதிப்பும் மகிழ்ச்சியும் மிக்க ஏழு ஆண்டுகளை அவர் அங்கு கழித்தார். அப்போது லத்தீன் மொழி கற்றார்; ஹாரோவில் கிரிக்கெட் விளையாடினார்; அறிவியல் படித்தார்; கேம்பிரிட்ஜில் நீட்சே, சாசர் ஆகியோரின் தத்துவ நூல்களைப் படித்தார்; இன்ஸ்கோர்ட் நீதிமன்றத்தில் பிளாக் ஸ்டோனின் வாதத் திறன் கண்டு வியந்தார்.

வசீகரத் தோற்றத்தாலும், நயத்தகு நாகரிக நடத்தையாலும், சிறந்த பண்பாலும் எங்கு சென்றாலும் அவருக்கு அளவு கடந்த வரவேற்பு கிடைத்தது. ஆங்கிலேயர்களின் குடும்பங்களில் உள்ள சமையலறை வரை அவர் எளிதாகச் சென்றார். நீக்குப் போக்கான நெகிழ்வுக் குணமுடைய அவர் அங்கே கண்ட மாண்புகளையும் நன்னடத்தைகளையும் தனக்குள் சுவீகரித்துக் கொண்டார். இங்கிலாந்தில் இருந்த ஏழு ஆண்டுகளில் அவர் முழுவதுமாக மாறி விட்டிருந்தார். அலகாபாத்துக்கு அவர் திரும்பிய போது இந்தியத் தன்மைகள் எல்லாமும் அவரிடமிருந்து அகன்றுவிட்டதை உறவினர்களும் நண்பர்களும் கண்டனர்.

இருப்பினும் இந்தியத் தன்மைகளிலிருந்து எவ்வளவு தூரம் விலகிச் சென்றாலும், அதற்கும் எல்லை உண்டு என்பதை இளம் நேரு விரைவிலேயே புரிந்து கொண்டார். உள்ளூரிலிருந்த பிரிட்டிஷ் கிளப்பில் உறுப்பினர் ஆக அவர் அளித்த விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது. அவர் ஹாரோ, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் படித்தவராக இருக்கலாம். ஆனால் இன்னமும் அவர் கருப்பு நிற இந்தியர்தான் என்பதால், வெள்ளை நிறத்தவர்க் கான, பிரிட்டிஷாருக்கான, அதிலும் குறிப்பாக மத்திய தர வர்க்கத்தினருக்கான கிளப்பில் உறுப்பினராக அவரால் சேர இயலாமல் போனது.

இந்த நிராகரிப்பால் ஏற்பட்ட கசப்புணர்வு பல ஆண்டுகள் நேருவை அலைக்கழித்தது. இதுவே இந்திய சுதந்திரப் போராட்டத்தை வாழ்நாள் பணியாக ஏற்றுக் கொள்வதற்கும் இட்டுச் சென்றது. அவர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். இதன் சார்பில் அவர் நடத்திய போராட்டங்கள், பிரிட்டிஷ் பேரரசு, அவரது வாழ்க்கையில் ஒன்பது ஆண்டுகளைக் கழித்த பிரிட்டிஷ் சிறைகள் ஆகிய அரசியல் பயிற்சிப் பள்ளிகளில் சேரும் நல்ல தகுதியை விரைவில் பெற்றுத் தந்தன. தனிமைச் சிறையில் இருந்தபோதும், காங்கிரஸ் தலைவர்களோடு சிறையின் முற்றங்களில் இருந்தபோதும், நாளைய இந்தியா பற்றிய அவரின் பார்வையை செழுமைப்படுத்திக் கொண்டார். சமூகப் புரட்சித் தத்துவங்களில் மூழ்கிய ஒரு லட்சியவாதியாகிய நேரு, இந்திய மண்ணில் அவர் மிகவும் விரும்பிய இரண்டு அரசியல் கொள்கைகளை ஒருங்கிணைக்கக் கனவு கண்டார். ஒன்று, இங்கிலாந்தின் நாடாளுமன்ற ஜனநாயகம்; மற்றொன்று கார்ல் மார்க்சின் பொருளாதார சோஷலிசம். வறுமை மற்றும் மூடநம்பிக்கைத் தளைகளிலிருந்து விடுபட்ட, முதலாளித்துவம் என்ற சுமையிறக்கிய ஒரு இந்தியாவை, நகரங்களில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து கரும்புகை வெளியேறும் ஒரு இந்தியாவை, காலனியாதிக்கவாதிகள் மறுத்து வந்த தொழில் புரட்சியின் ஏராளமான பயன்களை அனுபவிக்கும் ஒரு இந்தியாவை நேரு கனவு கண்டார்.

இந்தப் பாதையை நோக்கி இந்தியாவைக் கொண்டு செல்லத் தலைமை தாங்குவதற்கு ஜவஹர்லால் நேருவை விட சிறந்த ஒருவர் இருக்க முடியும் என்று யாரும் கருதவில்லை. காங்கிரசின் கட்டளைக்குப் பணிந்து பருத்தியாலான காதி உடையை வெளியே உடுத்தினாலும் உள்ளே அவர் ஆங்கிலேய நாகரீக வாதியாகவே இருந்தார். இறை நம்பிக்கை நிறைந்த நாட்டில் அவர் பகுத்தறிவுவாதியாக இருந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அறிவியல் பயின்ற அவரது மனம், தன்னொத்த இந்தியர்கள் அவர்களின் நெருக்கமான சோதிடர்கள் கெட்ட நாட்கள் என்று அறிவித்துவிட்டால் அந்த நாட்களில் வீட்டை விட்டு வெளியே கூடப் போகாத பழக்கத்தை ஒருபோதும் ஏற்க மறுத்துவிட்டது. உலகிலேயே மிகவும் ஆழமாக ஆன்மீகம் பதிந்துள்ள நாட்டில் தாம் ஒரு பொருள்முதல்வாதி என்பதை வெளிப்படையாகவே அறிவித்தார். 'மதம்' என்ற வார்த்தை அச்சத்தை ஏற்படுத்துவதாகக் கூற அவர் ஒருபோதும் தயங்கியதில்லை. இந்தியாவின் புரோகிதர்களையும், சாதுக் களையும், வேதம் ஓதும் சந்நியாசிகளையும், மதக்கடமையாற்றும் ஷேக்கு களையும் அவர் துச்சமென நினைத்தார். இவர்களெல்லாம், இந்தியாவின் முன்னேற்றத்தைத் தடுக்கவும் பாகுபாடுகளை ஆழப்படுத்தவும், அந்நிய ஆட்சியாளர்களின் பணியை எளிமையாக்கவும் மட்டுமே சேவை செய்வதாக அவர் கருதினார்.

என்னதான் இருந்தாலும் சாதுக்களையும், மூடப்பழக்கங்களால் அலைக்கழிக்கப்பட்ட மக்கள் திரளையும் கொண்ட இந்தியா அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டது. முப்பதாண்டு காலம் இந்தியா முழுவதும் பயணம் செய்த அவர் பெருங் கூட்டங்களில் வீராவேச உரையாற்றினார். இந்திய நகரங்களில் இருந்த குடிசைப்பகுதி மக்கள் ட்ராம் (tram) வண்டிகளின் கூரைகளில் ஏறியும், பக்கவாட்டில் தொற்றிக் கொண்டும், கிராமப் புறங்களிலிருந்து கால்நடையாகவும், மாட்டு வண்டிகளில் பயணம் செய்தும், ஆயிரக்கணக்கான மக்கள் அவரைக் காணவும் அவர் பேச்சைக் கேட்கவும் கூடினர். கூட்டத்தில் இருந்த பலருக்கு அவரது பேச்சைக் கேட்க முடியாது; புரிந்து கொள்ளவும் இயலாது. அவர்களைப் பொறுத்தவரை கடலலைகள் என நிறைந்த தலைகளுக்கிடையே மெலிந்த தோற்றத்தையும், பேச்சுக்கேற்ப அமையும் உடல் அசைவுகளையும் பார்த்தாலே போதும். ஒரு மாமனிதரைக் கண்டு அவருடன் ஆத்மார்த்தமான தொடர்பு ஏற்பட்ட அந்த தரிசனமே அவர்களுக்குப் போதுமானது.

நேரு சிறந்த பேச்சாளர். எழுத்தாளர். அரண்மனைப் பெண் ஏராளமான ஆபரணங்களைக் கொண்டிருப்பதுபோல அவர் வார்த்தைகளின் பொக்கிஷத்தைக் கொண்டிருந்தார். முன்பு காந்தியால் ஞானஸ்நானம் பெற்ற அவர், காங்கிரஸ் கட்சியில் படிப்படியாக உயர்ந்து மூன்று முறை அதன் தலைவராகவும் இருந்தார். தமக்குப் பிறகு தமது பொறுப்புகள் நேருவின் தோள்களில் விழுவதையே தாம் விரும்புவதாக மகாத்மா தெளிவுபடுத்தி யிருந்தார்.

நேருவைப் பொறுத்தவரை காந்தி ஒரு மேதை. ஆனால் நேருவின் அமைதியான, நடைமுறைக்கேற்ப வரலாற்றை உருவாக்க வேண்டும் என்ற மனோபாவம், காந்தியின் ஒத்துழையாமை, உப்புச் சத்தியாக்கிரகம், வெள்ளையனே வெளியேறு போன்ற மகத்தான இயக்கங்களை பெருமளவுக்கு ஏற்க மறுத்தது. எனினும் மகாத்மாவைப் பின்பற்றுமாறு அவரது இதயம் சொன்னது. இதயம் சொன்னது சரிதான் என்பதை பின்னர் அவரே ஒப்புக் கொண்டார்.

ஒரு விதத்தில் காந்தி நேருவின் குருவாக இருந்தார். அவர்தான் நேருவை மீண்டும் இந்தியமயமாக்கினார். அவரது தாய் நாட்டின் உண்மையான முகங்களைக் கண்டறியவும் இந்தியாவின் துன்ப துயரங்களை இதயத்தால் தொட்டுணர்ந்து கொள்ளவும் அவரை கிராமங்களுக்கு அனுப்பினார். இந்த இரண்டு மனிதர்களும் ஒரே இடத்தில் இருக்க நேர்ந்தபோதெல்லாம், நேரு அரைமணி நேரமாவது 'பாபுஜியின்' காலடியில் அமர்ந்திருப்பார். சில நேரங்களில் அவருடன் பேசிக் கொண்டிருப்பார்; சில நேரங்களில் அவரது பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பார். இந்த நிமிடங்கள் நேருவுக்கு ஆழமான ஆன்மீக திருப்தியை அளித்தவை. ஒருவேளை நாத்திகவாதியான அவரது இதயம் மதத்துடன் நெருக்கமாகும் சந்தர்ப்பமாகவும் அது இருந்திருக்கலாம்.

இருப்பினும் அவர்களைப் பல விஷயங்கள் வேறுபடுத்தின. நேரு மதத்தை வெறுக்கும் நாத்திகவாதி. காந்தியோ, கடவுளிடம் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்; உயிர் வாழ்க்கையின் சாரமே அதுவெனக் கருதியவர். உணர்ச்சிப்பிழம்பான நேரு அஹிம்சைப் போராட்டத்திற்குப் பொருத்தமற்ற வீரராக இருந்தார். அவர் இலக்கியங்கள், ஓவியங்கள், அறிவியல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஆர்வம் காட்டினார். ஆனால் காந்தியோ

இவைதான் மனிதகுலத் துன்பங்களுக்குக் காரணம் என்று கூறி நிராகரித்தார்; வெறுத்தொதுக்கினார்.

இவர்களுக்கிடையே ஈர்ப்புமிக்க தந்தை - மகன் உறவு வளர்ந்தது. பதற்றங்கள், விருப்பங்கள், சட்ட மறுப்பாலான அழுத்தங்கள் போன்றவையெல்லாம் இருந்தாலும் இவர்களின் உறவு வளர்ந்தது. உணர்ச்சி வசப்படும் தமது குணத்தால் ஏற்படும் பிரச்சனைகளிலிருந்து சாந்தப்படுத்தி நிதானத்தை ஏற்படுத்த தம் மீது செல்வாக்கு செலுத்துகிற ஆளுமை மிக்க ஒருவர் வாழ்நாள் முழுவதும் தமக்கு அருகில் இருக்க வேண்டிய அவசியம் இருப்பதை அவர் உணர்ந்தார். திறந்த மனமுடையவரும், களியாட்டக்காரரும், ஸ்காட்ச் பார்டெக்ஸ் போன்ற மதுவகைகளில் நாட்டமுடையவரும், வழக்கறிஞருமான அவரது தந்தை முதலில் இந்தப் பணியைச் செய்தார். அவரது மறைவுக்குப் பின் அந்த இடத்தை நிரப்பியவர் காந்தி.

காந்தியிடம் நேரு வைத்திருந்த மதிப்பு முழுமையானது. ஆனால் அவர்களின் உறவில் சிறிய மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. நேருவின் வாழ்க்கையில் ஒரு கட்டம் முடிவுக்கு வந்து கொண்டிருந்தது. கதவுகளுக்கு வெளியே ஒரு புதிய உலகத்தைக் கண்ட மகன் தந்தையின் வீட்டிலிருந்து வெளியேறத் தயாரானான். அந்தப் புதிய உலகத்துக்கு ஒரு புதிய குரு அவருக்குத் தேவைப்பட்டார். அந்த உலகத்தில் ஏற்படும் சிக்கலான பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் மிகுந்த ஞானமுள்ளவராக அந்த குரு இருக்கவேண்டும். மார்ச் மாதத்தின் மாலை வேளையில் வைஸ்ராயின் கூட்ட அறையில் அவர் அமர்ந்திருந்தபோது அப்படி ஒரு நிலை ஏற்பட்டிருப்பதை அறியாமல், ஜவஹர்லால் நேரு மனதில் ஒரு வெற்றிடம் உருவானது.

நேருவும் மவுண்ட்பேட்டனும் முதன்முறையாக சந்தித்ததிலிருந்து உலகிலும் அவர்களின் சொந்த வாழ்க்கையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனாலும், இவர்களின் முந்தைய சந்திப்பின்போது ஏற்பட்ட பரஸ்பர புரிந்துணர்வின் தொடர்ச்சி வைஸ்ராயின் கூட்ட அறையிலும் நீடித்தது. இதில் வியப்பேதும் இருக்கவில்லை. உண்மையில் மவுண்ட்பேட்டன் அந்த விஷயத்தை அறிந்திருக்கவில்லையென்றாலும், அவர் இங்கே இருப்பதற்கு பகுதி அளவு நேருவும் பொறுப்பாவார்.

3000 ஆண்டு பழமை வாய்ந்த காஷ்மீர் பிராமணருக்கும், புரட்டஸ்டண்ட் பிரிவைச் சேர்ந்த பழமையான அரச குடும்பத்தின் வழித்தோன்றல் என உரிமை கொண்டாடுபவர்க்கும் ஒரு பிணைப்பு இருந்தது. அவர்கள் இருவரும் பேச்சு நடத்துவதையும், நட்புறவை விரிவுபடுத்திக் கொள்வதையும் விரும்பினார்கள். எதார்த்த சிந்தனையாளரான நேருவுக்கு மவுண்ட்பேட்டனின் நடைமுறை செயல்பாடு மிகவும் பிடித்திருந்தது. போர்க்காலத்தில் ராணுவத்திற்குத் தலைமை ஏற்றதால் விரைந்து முடிவெடுத்து செயல்படும் குணம் அவருக்கிருந்தது. நேருவின் பண்பாடும், அவரின் நுட்பமான சிந்தனையும் மவுண்ட்பேட்டனை உற்சாகமடையச் செய்தன. பிரிட்டனுக்கும் புதிய இந்தியாவுக்கும் இடையேயான தொடர்பைப் பராமரிக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தைப் புரிந்து கொள்ளவும் அந்த வகையில் கருத்துப் பரிமாறிக் கொள்ளவும் தகுதியான இந்தியாவின் ஒரே அரசியல்வாதி ஜவஹர்லால் மட்டுமே என்பதை அவர் விரைவிலேயே புரிந்து கொண்டார்.

மலைப்பை ஏற்படுத்தும் பொறுப்பு தமக்கு அளிக்கப்பட்டிருப்பதையும், இந்தியப் பிரச்சனையை மறைபொருளற்ற எதார்த்த மனநிலையிலேயே அணுக

விரும்புவதையும் அட்மிரல் மவுண்ட்பேட்டன் வழக்கம் போல் ஒளிவு மறைவின்றி நேருவிடம் கூறிவிட்டார். அவர்களின் பேச்சு வார்த்தையில் இரண்டு முக்கியமான அம்சங்களை இருவரும் விரைந்து ஒப்புக் கொண்டார்கள். ஒன்று ரத்தக் களறியைத் தவிர்க்க விரைவான முடிவு மிக அவசியம். இன்னொன்று இந்தியப் பிரிவினை என்பது ஒரு பெரும் சோகமாகவே இருக்கும்.

நவகாளியிலும், பீகாரிலும் தன்னந்தனியாகப் பிராயச்சித்த யாத்திரை மேற்கொண்டு மவுண்ட்பேட்டனின் கூட்ட அறைக்கு வரவிருக்கும் இந்தியாவின் அடுத்த தலைவரின் செயல்பாடுகளில் பின்னர் நேருவின் கவனம் திரும்பியது. நீண்ட காலமாக மதிப்பு வைத்திருக்கும் அந்த மனிதர்பற்றி நேரு கூறினார்: 'இந்தியா எனும் உடலில் காயங்கள் ஏற்பட்டதற்கான காரணங்களைக் கண்டறிவதற்குப் பதிலாக, ஒட்டுமொத்த உடலுக்குமான வைத்தியத்தைச் செய்வதற்குப் பதிலாக, அங்கேயும் இங்கேயும் காயத்திற்கு மருந்து போட்டு குணப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டு அவர் பயணம் செய்து வருகிறார்.'

இந்தியாவை விடுவிப்பவருக்கும் அவரது நெருங்கிய சகாக்களுக்கும் கருத்து வேறுபாடுகள் வளர்ந்து வருவதன் அடையாளங்கள் நேருவின் வார்த்தைகளில் தெரிந்தன. டில்லியில் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற முக்கியமான உள்பார்வையையும் இந்த வார்த்தைகள் மவுண்ட்பேட்டனுக்கு அளித்தன. இந்தியாவை ஒற்றுமையாக வைத்திருக்க அதன் தலைவர்களை இணங்கச் செய்ய முடியாவிட்டால், அதனைப் பிரிக்குமாறு அவர்களை மவுண்ட்பேட்டன் வற்புறுத்தப் போகிறார். பிரிவினை பற்றிய காந்தியின் சமரசமற்ற எதிர்ப்பு அவரது பாதையில் பெரும் தடையாக இருக்கக்கூடும். அப்படி நேர்ந்தால், காங்கிரஸ் தலைவர்களை அவர்களின் தலைவரிடமிருந்து பிரிந்து வர வற்புறுத்தி, பிரிவினைதான் இந்தியாவின் பிரச்சனைக்கு ஒரே தீர்வு என்று கூறி, அதை ஒப்புக் கொள்ளச் செய்துவிடலாம் என்று அவர் திடமாக நம்பினார். இது நடந்தால் அதற்கு மூல காரணமாகவே நேரு இருப்பார். அதற்கு மவுண்ட்பேட்டன் பெற்றிருந்த கூட்டாளியாகவும் அவர் இருப்பார். மகாத்மாவுக்கு எதிராக வெளியே வந்து நிற்பதற்கான தைரியம் அவருக்கு மட்டுமே இருப்பதாக மவுண்ட்பேட்டன் நினைத்தார்.

இப்போது நேருவின் வார்த்தைகள் காந்திக்கும் அவரது கட்சியின் தலைவர்களுக்கும் இடையே பிளவு இருப்பதை வெளிப்படுத்தின. இந்த விரிசலைப் பெரிதாக்கி காரிய சாதனைக்குப் பயன்படுத்திக் கொள்ள மவுண்ட்பேட்டன் பெரு முயற்சி செய்தார். நேருவின் ஆதரவைப் பெற எந்த முயற்சியையும் விட்டு வைக்கவில்லை. எதார்த்தவாதியான அந்த காஷ்மீரி பிராமணரைத் தவிர வேறெந்த இந்தியத் தலைவர்களிடமும் 'ஆபரேஷன் செடக்ஷன்' திட்டம் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. வரவிருக்கும் மாதங்களில் தீர்மானகரமானது என்பதை நிரூபிக்கவிருக்கும் ஒரு நட்பு அந்த மாலை வேளையில் தொடங்கியது.

வாசல் வரை நேருவுடன் வந்த மவுண்ட்பேட்டன், 'மிஸ்டர் நேரு! இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர வந்திருக்கும் கடைசி வைஸ்ராயாக என்னைக் கருதாமல், புதிய இந்தியாவுக்கு வழிகாட்டும் முதலாவது நபராக என்னைக் கருத வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்'

என்று கூறினார். வைஸ்ராயின் சிம்மாசனத்தில் காண விரும்பிய அந்த மனிதரை நேரு திரும்பி நோக்கினார். முகத்தில் லேசான புன்னகை தவழ அவர் கூறினார்: 'ஆஹா! உங்களின் கவர்ச்சி மிகவும் ஆபத்தானது என்று மற்றவர்கள் பேசும் போது சொன்னது எவ்வளவு அர்த்தமுள்ளது என்பதை இப்போது நான் புரிந்து கொள்கிறேன்.'

★

சர்ச்சில் வர்ணித்த அரை நிர்வாணப் பக்கிரி பிரிட்டிஷ் பேரரசின் பிரதிநிதியுடன் சமமாக அமர்ந்து பேச்சு நடத்த மீண்டும் வைஸ்ராயின் கூட்ட அறைக்கு வந்து அமர்ந்திருந்தார்.

அவருக்கு அருகே அமர்ந்திருந்த அந்தக் கீர்த்தி வாய்ந்த மனிதர், 'எனது நாற்காலியில் கூடு கட்டிய இனிய ஆனால் துயரம் தோய்ந்த ஒரு சிட்டுக் குருவி போல் காட்சி அளிக்கிறார்' என்று லூயி மவுண்ட்பேட்டன் எண்ணினார்.*

அவர்கள் இருவரும் வேறு விதமாக இருந்தனர். பகட்டான சீருடையில் இருப்பதை விரும்பும் பிரிட்டிஷ் கடற்படையின் தளபதி ஒருபுறம்; முரட்டுப்பருத்தித் துணியைத் தவிர வேறெதனாலும் தனது அரை நிர்வாணத்தை மறைக்க மறுக்கும் இந்தியாவின் மூத்தத் தலைவர் மறுபுறம். உடற்பயிற்சியால் உடலைக் கட்டுமஸ்தாக வைத்திருப்பவர் அழகிய மவுண்ட்பேட்டன். அமர்ந்திருந்த நாற்காலிக்குள் ஒடுங்கிக் கிடக்கும் சிறிய உருவம் கொண்டிருந்தார் காந்தி. இவரோ அஹிம்சையின் தூதர். அவரோ போரையே தொழிலாகக் கொண்டவர். ஒருவர் வசதி வாய்ப்புகள் மிகுந்த மேட்டுக் குடியைச் சேர்ந்தவர். மற்றவரோ உலகிலேயே மிகவும் வறுமையில் உழலும் மக்களுடன் சேர்ந்து வாழ்நாள் முழுவதும் வறுமையில் வாழ வேண்டும் என்பதைத் தாமாகவே தேர்ந்தெடுத்துக் கொண்டவர். போர்க்காலத்தில் தகவல் பரிமாற்றத்தில் நிபுணராக இருந்த மவுண்ட்பேட்டன், அவரது கட்டுப்பாட்டில் இருந்த லட்சக்கணக்கான வீரர்களுடன் தொடர்பு கொள்ள சிக்கலான சமிக்ஞைகளை உருவாக்குவதற்காக எப்போதும் புதிய மின்னணு சாதனங்களைத் தேடிக் கொண்டேயிருந்தார்; இது போன்ற கருவிகளிலெல்லாம் நம்பிக்கை வைக்காத மெலிந்த உடல் கொண்ட, தேவதூதனான காந்தி, இந்த நூற்றாண்டில் ஒரு சிலரால் மட்டுமே சாத்தியமாகிய வகையிலான பாரம்பரிய முறையிலேயே இன்னமும் பொது மக்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

அவர்களின் பின்னணியில் உள்ள இந்த அம்சங்களையெல்லாம் வைத்துப் பார்த்தால், அந்த இரண்டு மனிதர்களும் ஒத்துப்போக முடியாதவர்கள் என்பதையே இவை உறுதியாகக் காட்டின. 'தனது ஆன்மாவில் கலந்த நெறிமுறைகளின் சில அம்சங்கள்' போரையே தொழிலாகக் கொண்ட

* **1921 ஆம் ஆண்டு வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு அரசமுறைப் பயணமாக வந்தபோது இளைஞரான மவுண்ட்பேட்டனும் அவருடன் வந்தார். ஏகாதிபத்திய முடியரசின் வாரிசுக்கும் காந்திக்கும் இடையே சந்திப்பை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் முயற்சி செய்தார். ஆனால் தோல்விதான் ஏற்பட்டது. வீரதீரமிக்க அவரது மைத்துனரை இதற்கு இணங்க வைப்பதில் பெரும் பிரச்சனை இல்லை. ஆனால் இந்த அரச முறைப் பயணத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்று காந்தி அழைப்பு விடுத்திருந்தார். இந்த இருவருக்கும் இடையே சந்திப்பு நிகழ்வதில் வைஸ்ராய் ரீடிங் பிரபவுக்கும் ஆர்வம் இருக்கவில்லை. மேலும் மவுண்ட்பேட்டன் காந்தியைத் தனியாக சந்திக்கவும் வைஸ்ராய் ஒப்புக் கொள்ளவில்லை.**

மவுண்ட்பேட்டனிடமும் இருந்ததை போரையே விரும்பாத காந்தி கண்டறிந்தார். காந்திக்கு நெருக்கமானவர்களில் ஒருவர் இதைத் தெரிவித்தார். பின்னாளில் காந்தியிடம் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்த மவுண்ட்பேட்டன் காந்தி இறந்த போது 'வரலாற்றில் கிருத்துவுக்கும் புத்தருக்கும் இணையாக மகாத்மா காந்தி போற்றப்படுவார்' என்று சரியாகவே கணித்துக் கூறினார்.

காந்தியுடனான முதல்சந்திப்பு மிகவும் முக்கியமானது என்று மவுண்ட் பேட்டன் கருதியதால், வைஸ்ராயாகப் பதவியேற்கும் நிகழ்ச்சி நடப்பதற்கு முன்னாலேயே மகாத்மாவை டில்லிக்கு வருமாறு அழைப்பு விடுத்து கடிதம் எழுதிவிட்டார். காந்தியும் உடனடியாகப் பதில் எழுதிவிட்டார். ஆனால், 'இந்தக் கடிதத்தை ஓரிரு நாட்கள் கழித்து தபாலில் சேர்த்தால் போதும். அந்த இளைஞரின் அழைப்புக்காக நான் காத்துக் கிடந்தேன் என்று அவர் எண்ணி விடக்கூடாது' என்று தனது உதவியாளரிடம் காந்தி நமட்டுப் புன்னகையுடன் கூறினார்.

நல்லெண்ண வெளிப்பாடாக அந்த 'இளைஞர்' செய்த சில செயல்கள் கவனத்தை ஈர்க்கக் கூடியதாகவும் சில சமயங்களில் அவரொத்த ஆங்கிலேயர் களுக்கு சினமூட்டக் கூடியதாகவும் அமைந்தன. காந்தி பீகாரிலிருந்து டில்லி வர அவரது சொந்த விமானத்தை அனுப்பி வைக்க மவுண்ட்பேட்டன் முன்வந்தார். ஆனால் காந்தி அதனை ஏற்க மறுத்துவிட்டார். எப்போதும் போலவே ரயில் வண்டியின் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்யப் போவதை அவர் வற்புறுத்தினார்.

தங்களது முதல் சந்திப்பின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டும் வகையிலும் நட்பின் ஆழத்தை வெளிப்படுத்தும் வகையிலும் இந்தப் பேச்சு வார்த்தையின் போது தனது துணைவியாரையும் அங்கே இருக்குமாறு கேட்டுக் கொண்டார் மவுண்ட் பேட்டன். அவர்களுக்கு எதிரே இருந்த புகழ் வாய்ந்த அந்த உருவம் வருத்தத்துடன் கண்கலங்கியிருந்தது. அவர்கள் ஏதாவது தவறு செய்து விட்டார்களா? வரவேற்பு விதிமுறைகளில் ஏதாவது குறைபாடு ஏற்பட்டு விட்டதா?

மவுண்ட்பேட்டன் அவரது துணைவியாரை ஆதங்கத்துடன் பார்த்தார். 'கடவுளே! எவ்வளவு சங்கடங்களுடன் செயல்கள் துவங்குகின்றன!' மவுண்ட் பேட்டன் யோசித்தார். அவரால் இயன்ற வரை பணிவாக காந்தியிடம் கேட்டார், 'ஏதாவது உங்களுக்கு சங்கடத்தை அளிக்கிறதா?'

இந்தியத் தலைவரிடமிருந்து மெதுவாக துயரம் தோய்ந்த பெருமூச்சு வெளிப்பட்டது. 'நான் தென் ஆப்பிரிக்காவில் இருந்த காலத்திலிருந்து வாழ்நாள் முழுவதும் அனைத்து உடைமைகளையும் வெறுத்தொதுக்கியவன் என்பதை நீங்கள் அறிவீர்கள்' காந்தி பதிலளித்தார்.

கீதை, ஏரவாடா சிறையில் இருந்ததற்குரிய நினைவுப் பரிசான தகரத் தட்டுகள், மூன்று குருக்கள் ஆகியவை தவிர வேறெதையும் நான் சொத்தாகக் கொண்டிருக்கவில்லை என்பதை அவர் விவரித்தார். மேலும் அவரிடம் இருந்த சொத்து, அவரது இடுப்பில் கட்டப்பட்ட கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த எட்டு ஷில்லிங் விலையுள்ள பழைய இங்கர்சால் கடிகாரம். நாள் முழுவதும் ஒவ்வொரு நிமிடத்தையும் கடவுள் இட்ட பணியை செய்யவே அர்ப்பணித்துக் கொண்டிருப்பதால் அந்தப் பணிக்குரிய நேரத்தை அறியவே கடிகாரத்தை இடுப்பில் தொங்க விட்டிருந்தார்.

'அதற்கு என்ன ஆச்சு தெரியுமா?' காந்தி வருத்தத்துடன் வினவினார். 'திருடு போய் விட்டது. டில்லிக்கு வந்து கொண்டிருந்தபோது ரயில் பெட்டியில் யாரோ அந்தக் கடிகாரத்தைத் திருடிவிட்டார்கள்.' இந்த வார்த்தைகளை காந்தி சொல்லும்போது அவரின் கண்களில் நீர் பனித்தது. ஒரு கணத்தில் நிலைமையை வைஸ்ராய் புரிந்து கொண்டார். கடிகாரம் காணாமல் போய்விட்டது என்பதற்காக காந்தி வருந்தவில்லை. வேறெதற்காக காந்தி வருந்தினார் என்பதை அவர்களால் உணர முடியவில்லை. மக்கள் நெருக்கம் மிக்க ரயில் பெட்டியில் அடையாளம் தெரியாத ஒரு கை களவாடிச் சென்றது எட்டு ஷில்லிங் விலையுள்ள கடிகாரத்தை அல்ல; அவரது நம்பிக்கையின் ஒரு பகுதியை.*

நீண்டதொரு மவுனத்துக்குப் பின் ஒருவழியாக இந்தியாவின் தற்போதைய பிரச்சனை பற்றி காந்தி பேச்சைத் தொடங்கினார். நட்பு நாட்டத்துடன் கையசைத்து இடைமறித்த மவுண்ட்பேட்டன், 'மிஸ்டர் காந்தி, முதலில் தாங்கள் யார் என்பதை நான் அறிய விரும்புகிறேன்' என்றார்.

வேண்டுமென்றே செய்யும் தந்திரம் இது என்பதை அவரது வார்த்தைகள் பிரதிபலித்தன. இந்தியத் தலைவர்கள் தம்மிடம் நிபந்தனைகள் விதிப்பதற்கு முன் அவர்களின் குறைந்தபட்ச கோரிக்கைகளையும் இறுதியான நிபந்தனை களையும் முதலில் அறிந்து கொள்வது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அவர்களிடம் சாந்தத்தை ஏற்படுத்துவதும் அவர் மீது நம்பிக்கையை உருவாக்குவதும் பரஸ்பர நம்பிக்கையும் பரிவுணர்வும் கொண்ட சூழலை உருவாக்கும் என்று அவர் நம்பினார். அந்தச் சமயத்தில் தனது சொந்த செயலூக்கம் உள்ள ஆளுமை பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதும் அவரது நம்பிக்கை.

இந்தத் திட்டத்தால் மகாத்மா, மகிழ்ச்சி அடையவே செய்தார். அவர் தம்மைப் பற்றி பேசுவதை விரும்பினார் தாம் சொல்ல வருவதை உண்மையிலேயே கேட்கும் ஆர்வத்துடன் ஒரு ஜோடி மவுண்ட்பேட்டன் தம்பதியர் - இருப்பதையும் அவர் விரும்பினார். தென் ஆப்பிரிக்க அனுபவங்கள், போயர் யுத்தத்தில் ஸ்ட்ரெச்சர் தூக்குபவராக இருந்தது, ஒத்துழையாமை இயக்கம், உப்பு சத்தியாக்கிரகம் எனப் பல நிகழ்வுகள் பற்றியும் காந்தி நினைவு கூர்ந்தார். ஒரு காலத்தில் கிழக்கத்திய நாடுகளைச் சேர்ந்த சோரோஸ்டர், புத்தர், மோசஸ், யேசு, முகமது, ராமன் எனப் பலரின் போதனைகளால் மேலை நாடுகள்

---

* ஏறத்தாழ ஆறு மாதங்களுக்குப்பின், 1947 செப்டம்பரில் புதுடில்லி பிர்லா மாளிகையில் காந்தி தங்கியிருந்தபோது, ஒரு நாள் மாலையில் அறிமுகமில்லாத ஒரு நபர் மகாத்மாவைக் காண வேண்டும் என்று கோரினார். முதலில் பெயரைச் சொல்ல மறுத்துவிட்டார். எதற்காக காந்தியைப் பார்க்க விரும்புகிறார் என்ற விவரத்தையும் அவரது செயலாளரிடம் சொல்லவில்லை. கடைசியில் காந்தியின் கடிகாரத்தைத் திருடியது தாம் தான் என்பதை அந்த நபர் ஒப்புக் கொண்டார். அதனைத் திருப்பிக் கொடுத்துவிட்டு மன்னிப்புக் கேட்கவே வந்திருப்பதாகவும் அவர் கூறினார். 'உன்னை மன்னிப்பதா?' செயலாளர் வியப்புடன் கேட்டார். 'காந்தி உன்னை கட்டித் தழுவிக் கொள்வார்.' அந்த நபரை காந்தியிடம் அழைத்துச் சென்றார். அவர் மகாத்மா முன் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கி சில வார்த்தைகளையும் முணுமுணுத்தார். அவற்றை செயலாளர் கேட்க இயலவில்லை. பின்னர் காந்தி அவரைத் தூக்கி கட்டித் தழுவிக் கொண்டார். காணாமல் போன விளையாட்டுப் பொருளை மீண்டும் கண்டுவிட்ட குழந்தை போல் காந்தி துள்ளிக் குதித்தார். கடிகாரத்தையும் அதனைத் திருப்பிக் கொண்டு வந்து சேர்த்த, தீமையிலிருந்து மீண்ட புதல்வனையும் காண தனது ஆதரவாளர்களை காந்தி அழைத்தார்.

கவரப்பட்டன. ஆயினும் சில நூற்றாண்டுகளாக கிழக்கிந்திய நாடுகள் மேற்கத்திய நாடுகளின் கலாச்சாரத்தால் வெற்றிகொள்ளப்பட்டுள்ளன. இப்போது அணுகுண்டு போன்ற அழிவு சக்திகளால் அலைக்கழிக்கப்பட்ட மேற்கு மீண்டும் கிழக்குப் பக்கம் பார்க்கவேண்டிய அவசியம் உள்ளது. அங்கேதான் அவர் போதிக்க விரும்புகிற, அன்பு, சகோதரத்துவ உணர்வு ஆகியவை இருப்பதாக அவர் நம்பினார்.

இவர்களின் உரையாடல் இரண்டு மணி நேரம் நீடித்தது. அசாதாரண மானது என்றாலும் எளிமையானதாக இருந்தது. நேசபாவத்துடன் கூடிய பேச்சு வார்த்தையைத் துவங்குவதிலும் பயன் விளையும் வகையில் காந்தியிடம் தூண்டுதலை ஏற்படுத்துவதிலும் மவுண்ட் பேட்டன் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறார் என்பதன் அடையாளமாக இது இருந்தது.

பேச்சு வார்த்தைக்கிடையே இவர்கள் மூவரும் புகைப்படம் எடுத்துக் கொள்வதற்காக மொகலாய தோட்டத்துக்குச் சென்றனர். அதை முடித்ததும் மீண்டும் வைஸ்ராய் மாளிகைக்குத் திரும்பினர். தனது 'ஊன்றுகோல்கள்' என்று அன்புடன் வர்ணிக்கப்பட்ட, அந்த இரண்டு இளம் பெண்களின் தோள்களில் கைகளை ஊன்றி நடப்பதையே 77 வயதான தலைவர் விரும்பினார். பிரிட்டிஷாரை எதிர்த்த போராட்டத்தில் வாழ்நாள் முழுவதையும் செலவிட்ட அந்தப் புரட்சியாளரான காந்தி இப்போது பிரிட்டிஷ் அரசின் கடைசி வைஸ்ராயினியின் தோள் மீது கை போட்டு, அமைதியாக, மாலை நேரப் பிரார்த்தனைக்குச் செல்பவர் போல, வைஸ்ராயின் கூட்ட அறைக்குள் மீண்டும் நுழைந்தார்.

இரண்டாவது கட்ட பேச்சுக்காக வைஸ்ராயின் கூட்ட அறைக்குள் காந்தி வந்த நேரத்தில் இந்திய கோடைப் பருவத்தின் முதலாவது தாக்குதல் தொடங்கி, டில்லி அதனால் பெருமூச்சு விட ஆரம்பித்திருந்தது. மொகல் தோட்டத்தில் உள்ள 'தாக்' (dhak) மரங்கள் சூரியனின் ஒளிக்கதிர்கள் பட்டு தீப்பொறி பறப்பது போல் காட்சியளித்தன. ஆரஞ்சுப்பழத்தின் உரித்த தோல் ஒரு சில நிமிடங்களிலேயே வாடி வதங்கிப்போனது. டில்லி நகரில் இதமாக இருந்த ஒரே இடம் மவுண்ட்பேட்டனின் கூட்ட அறை மட்டும்தான். கூட்ட அறைக்குத் தேர்வு செய்து வண்ணம் பூசுவதில் எவ்வளவு கவனம் செலுத்தினாரோ அவ்வளவு கவனத்தை டில்லியிலேயே மிகச் சிறந்த குளிர்சாதனப் பெட்டியைத் தேர்வு செய்து அந்த அறையில் பொருத்துவதிலும் செலுத்தினார். 75 டிகிரி வெப்பத்திலும் அவர் உற்சாகத்துடன் பணிபுரிய அந்தக் கருவிதான் அனுமதித்தது.

ஒரு வகையில் இந்தக் கருவியே ஒரு குழப்பத்துக்கும் காரணமாகிவிட்டது. டில்லியின் சூளை வெப்பத்திலிருந்து திடீரென்று குளிர்ச்சியான அந்த அறைக்குள் நுழைந்ததால், நவீன தொழில் நுட்பத்தின் பரம எதிரியான காந்தி அந்தக் குளிர்சாதனப் பெட்டியை வாழ்த்துவதற்குப் பதிலாக மகிழ்ச்சியற்ற வரானார். வைஸ்ராயின் அரை நிர்வாண விருந்தாளி குளிரில் நடுங்கினார். உதவியாளரை அழைக்க மவுண்ட்பேட்டன் மணி அடித்தார். அதைத் தொடர்ந்து உதவியாளர் எட்வினாவுடன் அங்கே வந்தார்.

'அடக்கடவுளே! இந்த எளிய மனிதருக்கு நீங்கள் நிமோனியாவை அளித்து விட்டீர்களே' எட்வினா மவுண்ட்பேட்டன் அதிர்ச்சியுடன் கூறினார்.

அவர் குளிர்சாதனக் கருவியை நோக்கி ஓடி அதன் இயக்கத்தை நிறுத்தினார். காந்தியின் நடுங்கும் உடல் மீது போர்த்திவிட அவரது கணவரின் கடற்படை ஸ்வெட்டர் ஒன்றை எடுத்து வருவதற்காக ஓடினார்.

காந்தியின் உடல் மீண்டும் பழைய வெப்பநிலைக்கு வந்தபோது, மவுண்ட்பேட்டன் அவரது விருந்தாளியை தேநீருக்காக பால்கனிக்கு அழைத்துச் சென்றார். வைஸ்ராயின் முத்திரைப் பதித்த எலும்பு போன்ற வெண்மையான சீனப்பளிங்குக் கோப்பைகளுடன் மவுண்ட்பேட்டனுக்கான தேநீருடன் பணியாளர் குழு ஒன்று அங்கு வந்தது. காந்தியுடன் வந்திருந்த மனு அவருக்காகக் கொண்டு வந்த உணவுப் பொருள்களை எடுத்து வைத்தார். எலுமிச்சை சாறு, வெள்ளாட்டுத் தயிர், பேரீச்சம் பழங்கள் அவை. ஒரு கரண்டியால் எடுத்து அவற்றை காந்தி சாப்பிட்டார். கரண்டியின் கைப்பிடிப்பகுதி உடைந்திருந்ததால் அதன்மீது மூங்கில்குச்சியை வைத்து கயிற்றால் கட்டியிருந்தார். நசுங்கிப்போன தகரத் தட்டுகளில்தான் இவை பரிமாறப்பட்டன. இருப்பினும் வைஸ்ராய்க்காக ஷெஃபீல்ட் நகரில் தயாரிக்கப்படும் பிரிட்டிஷ் தட்டு போன்றது தான் இவையும். ஏனெனில் இவை எரவாடா சிறையிலிருந்து கொண்டு வரப்பட்டவை.

புன்னகைத்தவாறே மவுண்ட்பேட்டனிடம் வெள்ளாட்டுத் தயிரை எடுத்து காந்தி கொடுத்தார். 'இது உடம்புக்கு நல்லது, சாப்பிட்டுப் பாருங்கள்' என்றும் அவர் கூறினார்.

மஞ்சள் நிறமுள்ள கஞ்சி போன்ற கெட்டியான அந்தப் பொருளை மவுண்ட்பேட்டன் ஆர்வமின்றி கவனித்தார். 'நான் இதுவரை இதனைச் சாப்பிட்டிருப்பதாகத் தெரியவில்லை' என்றுஅவர் மெல்லிய குரலில் கூறினார். தமது விருந்தாளியின் விருந்துபச்சார முயற்சியை இந்த வார்த்தைகள் வலுவிழக்கச் செய்துவிடும் என்று நம்பினார். ஆனாலும் காந்தி அவ்வளவு எளிதில் விட்டுவிடுவதாகத் தெரியவில்லை.

'கவலைப்படாதீங்க.... எல்லாவற்றுக்கும் தொடக்கம் என்று ஒன்று இருக்கிறதே. சாப்பிட்டுப் பாருங்கள்' காந்தி சிரித்துக் கொண்டே சொன்னார்.

எப்படியோ சிக்கிக் கொண்ட மவுண்ட்பேட்டன் கடமைக்கு ஒரு கரண்டி தயிரை சாப்பிட ஒப்புக் கொண்டார். 'கஷ்டகாலம்' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டார்.

இவர்களது உரையாடலின் ஆரம்பக் கட்டம் வைஸ்ராய் மாளிகை முகப்பில் உள்ள புல்வெளியில் நிறைவடைந்தது. தமக்கு முன்பிருந்த வைஸ்ராய்களின் பொறுமையையும், நல்ல பக்குவ நிலையையும் எண்ணிப்பார்த்த மவுண்ட் பேட்டன் காந்தியுடன் நடத்திய பேச்சு வார்த்தை விவரங்களைப் பகுப்பாய்வு செய்தார்.

உண்மையில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கையாள்வதில் மிகவும் சிக்கலான மனிதர்தான் மகாத்மா. வாய்மை என்பது காந்திக்கு முதலும் முடிவுமான எதார்த்தமாக இருந்தது. ஆனால் காந்தி பேசிய வாய்மை இரண்டு தன்மைகளைக் கொண்டிருந்தது. ஒன்று சார்பற்ற முழுமையானது; மற்றொன்று சார்புள்ளது. சதைப்பிண்டமாக உள்ள மனிதன் முழுமையான வாய்மையைப் பற்றிய அரைகுறை ஞானத்தையே பெற்றிருக்கிறான். அன்றாட வாழ்க்கையில் அவன் சார்பு நிலை வாய்மையையே கையாள்கிறான். இந்த இரண்டு வகையான வாய்மைகளுக்கும் இடையேயான வேறுபாட்டை விளக்க காந்தி ஒரு நீதிக்கதை

சொல்வார். ஒரு பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள சில்லென்ற குளிர்ந்த நீருக்குள் உங்கள் இடது கையை வையுங்கள். அதே கையை அருகே மற்றொரு பாத்திரத்தில் உள்ள வெதுவெதுப்பான நீருக்குள் வையுங்கள். இப்போது அந்த நீர் மிகவும் சூடாக இருப்பது போல் தோன்றும். பிறகு ஒரு பாத்திரத்தில் வைக்கப்பட்டிருக்கும் சூடான நீருக்குள் வலது கையை வையுங்கள். அதே கையை ஏற்கெனவே உள்ள வெதுவெதுப்பான நீரில் வையுங்கள். வெதுவெதுப் பான நீரின் வெப்பநிலை மாறாதது என்றாலும் அதற்குள் வைக்கப்பட்ட வலது கை குளிர்ச்சியை உணரும். வெதுவெதுப்பான நீரின் மாறா வெப்ப நிலையைப் போன்றது முழுமையான வாய்மை; மாற்றி மாற்றி உணர்ந்த மனிதக் கைகளைப் போன்றது சார்பு நிலை வாய்மை என்று காந்தி உதாரணத்துடன் விளக்குவார். அவரின் உதாரணப்படியே காந்தியின் சார்புநிலை வாய்மை என்பது வளைந்து கொடுக்காத ஒன்றல்ல. பிரச்சனைகளில் மாற்றம் வரும் போது சார்பு நிலை வாய்மையிலும் மாற்றம் வரக்கூடும். இது அவரை வளைந்து கொடுப்பவராகக் காட்டியது. ஆனால் இதுவே பிரிட்டிஷ் அரசின் பிரதிநிதிகளுக்கு அவரை ஒரு இரட்டை முகமுள்ள தந்திர குணமுள்ள ஆசியக்காரராகக் காட்டியது. ஒருமுறை காந்தியின் சீடர் ஒருவரே கூட ஆச்சரியத்துடனும் கோபத்துடனும் கேட்டார்: 'காந்திஜி! உங்களை நான் புரிந்து கொள்ள முடியவில்லை. சென்றவாரம் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு இந்த வாரம் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டக் கருத்தை எப்படி உங்களால் சொல்ல முடிகிறது?'

'எப்படியென்றால், சென்ற வாரத்துக்குப் பின் நான் சில புதிய விஷயங்களை அறிந்து கொண்டதால்தான்' காந்தி அவருக்குப் பதிலளித்தார்.

இந்தியாவின் புதிய வைஸ்ராய் கலக்கத்துடன் காந்தியிடம் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தினார். சிட்டுக் குருவிபோல் மெல்லிய குரலில் பேசிக் கொண்டு தன்னருகே அமர்ந்திருக்கும் அந்தச் சிறிய உருவம் இந்தியாவின் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் உதவி செய்யும் என்ற நம்பிக்கை அவருக்கு இல்லை; மாறாக, தீர்வுகாணும் முயற்சிகளை காந்தியால் வீணாக்கிவிட முடியும் என்பதை அவர் அறிந்திருந்தார். முன்கூட்டியே கணித்து அறிய முடியாத காந்தியின் குணாம்சத்தால்தான் இந்தியப் பிரச்சனையில் பேச்சு நடத்த வந்த பல ஆங்கிலேயர்களின் நம்பிக்கைகள் தகர்ந்தன. 1942இல் கிர்ப்ஸை வெறுங்கையோடு லண்டனுக்கு அனுப்பியவர்தான் காந்தி. கொள்கையிலிருந்து கொஞ்சமும் விட்டுக் கொடுக்காததால்தான் இந்தியப் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் வேவலின் முயற்சிகள் வீணாயின. மவுண்ட்பேட்டனின் மூலமாக செயல்படுத்தவிருந்த திட்டத்தின் முன்னோடியாக பிரிட்டன் ஒரு அமைச்சரவைக் குழுவை இந்தியாவுக்கு அனுப்பியது. ஆனால் சமீபத்திய இந்த முயற்சிகளும் காந்தியின் தந்திரத்தால் வீணாயின. முந்தைய நாள் மாலை நேர பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தி தனது கருத்தை வலியுறுத்தினார். 'எனது பிணத்தின் மீது வேண்டுமானால் இந்தியா துண்டாடப்படலாம். நான் உயிரோடு இருக்கும்வரை இந்தியாவைப் பிரிக்க ஒரு போதும் ஒப்புக் கொள்ள மாட்டேன்' என்று உறுதியாகத் தெரிவித்தார்.

விருப்பமில்லாமலே கூட இந்தியாவைப் பிரிக்க வேண்டுமென்ற முடிவுக்கு மவுண்ட்பேட்டன் தள்ளப்பட்டால், அவரது விருப்பத்தை காந்தியின் மீது விருப்பமில்லாமல் திணிக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் அவர் சிதைக்க வேண்டியிருப்பது முதியவரான மகாத்மாவின் உடலை அல்ல; அவரது இதயத்தை.

சரியான திசையில் பேச்சைத் தொடங்கும் வகையில், நிர்ப்பந்தத்துக்குப் பணிந்து விடக் கூடாது என்பதுதான் பிரிட்டனின் கொள்கையாக இருந்துள்ளது. ஆனால் உங்களின் அஹிம்சைப் போராட்டம் வெற்றியடைந்துள்ளது. எப்படியானாலும் இந்தியாவிலிருந்து பிரிட்டன் வெளியேறப் போகிறது என்று மவுண்ட்பேட்டன் கூறினார். நடக்கப்போகும் அந்தப் பயணத்தில் ஒரே ஒரு விஷயம்தான் முக்கியமானது என்று காந்தி கூறினார். 'இந்தியாவைத் துண்டாடி விடாதீர்கள்' காந்தி இறைஞ்சினார். அப்படிச் செய்ய மறுத்தால் 'இரத்த ஆறு ஓடும்' என்பதே அதன் பொருளாகிவிடும் என்று அஹிம்சையின் தூதுவர் தெரிவித்தார்.

இந்தியப் பிரிவினை என்பதைக் கடைசித் தீர்வாகவே தாம் ஏற்க விரும்புவதாக மவுண்ட்பேட்டன் காந்தியிடம் உறுதி அளித்தார். ஆனால் 'உங்களுக்கிருக்கும் மாற்று யோசனைகள் என்ன' என்றும் அவர் வினவினார்.

காந்தியிடம் ஒரு யோசனை இருந்தது. பிரிவினை கூடாது என்பதில் உறுதியாக இருந்த அவர் 'சாலமன் தீர்ப்பு' போன்ற திட்டத்துக்குத் தயாராக இருந்தார். துண்டாடுவதற்கு பதிலாக இந்தியக் குழந்தையை முஸ்லீம்களிடமே கொடுத்து விடுங்கள். காந்தியின் எதிராளியான ஜின்னாவையும் அவரது முஸ்லீம் லீகையும் அரசமைக்க அழைப்பதன் மூலம் 300 மிலியன் (30 கோடி) இந்துக்களை முஸ்லீம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்து விடுங்கள். அதிகாரத்தை அந்த அரசிடம் கொடுத்து விடுங்கள். ஒரு பகுதியை மட்டும் விரும்பும் ஜின்னாவிடம் முழு இந்தியாவையும் ஒப்படைத்து விடுங்கள்.

பிரிவினையைத் தவிர்ப்பதற்குக் கிடைக்கும் சிறு துரும்பையும் பிடித்துக் கொள்ள மவுண்ட் பேட்டன் தயாராக இருந்தார். காந்தியின் யோசனை 'அதிசய உலகில் ஆலீஸ்' (Alice in Wonderland) என்ற கதையைத் தான் நினைவூட்டியது. ஆனால் காந்தி இதற்கு முன் இப்படிப்பட்ட பல யோசனைகளை கூறியிருக்கிறார். அவற்றை செயல்படுத்தியும் இருக்கிறார்.

'உங்களின் யோசனையை உங்களின் காங்கிரஸ் கட்சியே கூட ஏற்றுக் கொள்ளுமா?' காந்தியிடம் மவுண்ட்பேட்டன் கேட்டார்.

'பிரிவினையைத் தவிர்க்க காங்கிரஸ் இதற்கு மேலானதையும் கூட செய்ய விரும்பும். பிரிவினையைத் தடுக்க அவர்கள் எதையும் செய்வார்கள்' காந்தி பதிலளித்தார்.

'ஜின்னாவின் பதில் என்னவாக இருக்கும்?' மவுண்ட்பேட்டன் மீண்டும் வினவினார்.

'இந்த யோசனைக்கான ஆசான் நான்தான் என்று ஜின்னாவிடம் சொன்னீர்களானால், 'விஷமக்காரர் காந்தி' என்பதுதான் அவரின் பதிலாக இருக்கும்' மகாத்மா சிரித்துக் கொண்டே கூறினார்.

மவுண்ட்பேட்டன் கணநேரம் மவுனமாக இருந்தார். காந்தியின் திட்டத்தில் செயல்படுத்த இயலாத அம்சங்கள் நிறையவே இருந்தன. இவ்வளவு முன்கூட்டியே அந்தத் திட்ட செயலாக்கத்துக்கு உறுதியளிக்க மவுண்ட் பேட்டன் தயாராக இல்லை. அதே சமயம் இந்தியாவை ஒற்றுமையாக வைத்திருக்க உதவும் என்ற எந்த யோசனையையும் லேசாக எடுத்துக் கொண்டு நிராகரிக்கவும் அவர் தயாராக இல்லை.

'இதோ பாருங்கள்! காங்கிரஸ் உங்கள் திட்டத்தை ஏற்கும் என்று முறைப்படி நீங்கள் உறுதியளித்தால், இதனை செயல்படுத்த அவர்களும் உண்மையாக



வைஸ்ராய் மாளிகையில் பணியாற்றிய ஊழியர்கள், சமையல்காரர்கள், கண்காணிப்பாளர்கள், பணிவிடை செய்வோர், தகவல் கொண்டு வருவோர், குற்றேவல் செய்வோர், குதிரைக்காரர்கள், பாதுகாவலர்கள் என 5000 பேருடன் கடைசி வைஸ்ராயும் வைஸ்ராயினியும் வைஸ்ராய் மாளிகையின் படிக்கட்டுகளுக்கு முன் அமர்ந்து படம் பிடித்துக் கொண்டனர்.



இரண்டு முட்களுக்கிடையே ஒரு ரோஜா': முகமது அலி ஜின்னாவின் நகைச்சுவை எண்ணம் வீணாகிப் போனது. காரணம் மவுண்ட்பேட்டனின் மனைவி இருக்க வேண்டிய இடத்தில், மவுண்ட்பேட்டன் தம்பதியருக் கிடையே ஜின்னா நிற்கும் போது படம் பிடிக்கப்பட்டது தான்.



புதுடில்லியில் மவுண்ட்பேட்டன் பிரபுவுடனான காந்தியின் முதல் சந்திப்புக்கு முன், மவுண்ட்பேட்டனின் துணைவியாரின் தோளில் கை வைத்தபடி வைஸ்ராய் அறைக்குள் காந்தி செல்லும் காட்சி.



*தனது நிரந்தர அடையாளச் சின்னமான புத்தம் புது ரோஜாவை மேலங்கியின் பொத்தானுக்கிடையே செருகிய ஜவஹர்லால் நேரு வைஸ்ராய் மாளிகையின் தோட்டத்தில் புகைப்படத்துக்கு போஸ் கொடுக்கிறார்.*





மனித குலத்தின் காட்சிப் பொருள்களாக மகாராஜாக்களை இறைவன் படைத்திருப்பதாக கிப்ளிங் எழுதினார். இந்தியாவின் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பையும் அமெரிக்கா அளவுள்ள மக்கள் தொகையையும் 1947லும் கூட இந்தியாவைச் சேர்ந்த 565 மகாராஜாக்கள், நவாபுகள், இளவரசர்கள், ராஜாக்கள் ஆண்டார்கள். மேல்படம் வைர மணியாரத்துடன் தங்கக்குடை நிழலில் பாட்டியாலா மகாராஜாவின் முடிசூட்டு விழா அணிவகுப்பு. அவரது கழுத்தில் கிடக்கும் மணியாரம் அரைமிலியன் (5 லட்சம்) பவுண்ட் விலையிருக்கும் என்று லாயிட்ஸ் மதிப்பிட்டுள்ளார்.

கீழ்ப்படம் வயது முதிர்ந்த பிகானீர் மகாராஜா தனது பிறந்த நாள் பரிசாக எடைக்கு எடை தங்கம் பெறுகிறார்.

முயற்சி செய்தால், நானும் அதற்குத் தயாராக இருக்கிறேன்' - மவுண்ட்பேட்டன் கூறினார்.

இதைக் கேட்ட காந்தி நாற்காலியிலிருந்து துள்ளி எழுந்தார். 'நான் இதற்கு முழுவதும் உண்மையுடையவனாக இருப்பேன்' அவர் மவுண்ட்பேட்டனிடம் உறுதியளித்தார். 'இதுதான் உங்கள் முடிவு என்றால் இதற்கு மக்களின் ஒப்புதலைப் பெற இந்தியா முழுவதும் பயணம் செய்வேன்' என்றும் காந்தி கூறினார்.

சில மணி நேரங்களுக்குப் பின், மாலை நேர பிரார்த்தனைக் கூட்டத்துக்கு காந்தி நடந்து கொண்டிருந்த போது இந்தியப் பத்திரிகையாளர் ஒருவர் காந்தியிடம் பேசினார். மகாத்மா 'மகிழ்ச்சியில் திளைத்திருப்பதாக' அவர் எண்ணினார் பிரார்த்தனைக் கூடத்திற்கு அருகே சென்றபோது, காந்தி திடீரென்று பத்திரிகையாளரைத் திரும்பிப் பார்த்தார். மகிழ்ச்சி நிறைந்த சிரிப்புடன் அவர் முணுமுணுத்தார். 'நிலைமையை மாற்றி விட்டதாகவே நான் நினைக்கிறேன்.'

★

'ஏன் இந்த மனிதர் எனக்குத் தொல்லைதர முயற்சிக்கிறார்' நம்ப முடியாதவராக லூயி மவுண்ட்பேட்டன் நினைத்தார். பாறை போன்ற உருவம் அவருக்கு எதிரே இருந்ததால் அவரது ஆபரேஷன் செடக்ஷன் திட்டம் திடீரென்று தடைப்பட்டது. அவரது தோள்களைச் சுற்றியிருந்த காதிவேட்டி பண்டைக்கால ரோமானியரின் அங்கி (டோகா toga) போலக் காட்சியளித்தது. ஒளிவிடும் வழுக்கைத் தலையும், கனல் தெறிக்கும் பார்வையும் கொண்ட அந்த மனிதர் நாற்காலியை அடைத்துக் கொண்டு வைஸ்ராய் முன் அமர்ந்திருந்தார். இந்திய அரசியல்வாதி என்பதை விட ரோமானிய செனட்டர் போலவே அவர் காணப்பட்டார்.

வல்லபபாய் படேல் (Vallabbhai Patel) இந்தியாவின் தலை சிறந்த அரசியல்வாதி. ஓரியண்டல் தம்மானி ஹால் (Oriental Tammany Hall) தலைமை நிர்வாகி போல (தம்மானி ஹால் நியூயார்க் நகரிலுள்ள குடியரசுக் கட்சியின் மத்திய அலுவலகம். தம்மானி 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு இந்தியத் தலைவர் என்றும் கூறப்படுகிறது - மொ-ர்) காங்கிரஸ் கட்சியை உறுதியுடனும், கடுமையான கட்டுப்பாட்டுடனும் அவர் வைத்திருந்தார். மவுண்ட்பேட்டன் பேச்சு நடத்திய இந்தியத் தலைவர்கள் நால்வரில் இவர்தான் எளிதில் அணுக முடிந்தவராக இருந்தார். வைஸ்ராயைப் போலவே இவரும் எதார்த்தவாதி. கடுமையானவராக இருந்தாலும் உண்மை நிலையை உணர்ந்து விவாதிக்கக் கூடியவர். இவர்களுக்கிடையே பதற்றம் இருந்தது மிகவும் உண்மை; மிகவும் புரிந்து கொள்ளக் கூடியது. இதற்குத் தீர்வு கண்டு விடலாம் என்றே மவுண்ட்பேட்டனுக்குத் தோன்றியது.

இந்தப் பதற்றத்துக்கான காரணம் இந்தியாவை எதிர்நோக்கும் பெரும் பிரச்சனைகளோடு எந்த வகையிலும் தொடர்புடையதாக இல்லை. ஒரு நியமனம் பற்றிய துண்டுக் காகிதம் அது. படேலின் உள்துறை அமைச்சகம் வெளியிட்ட வழக்கமான அரசு அறிவிப்புதான். இருப்பினும் படேல் அதனை வெளியிட்ட விதம், இதனை தனது அதிகாரத்துக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட சவாலாகவே மவுண்ட்பேட்டன் கருதினார்.

கடுமைக்குப் பெயர் போனவர் படேல். புதிதாகப் பேசப்போகும் அவரை எவ்வளவு தூரம் நெருக்கித் தம் வழிக்குக் கொண்டு வர முடியும் என்பதை அளப்பதற்குத் தேவையான செயலாகவே படேல் இதனை உணர்ந்தார். அதேபோல் படேலுடன் முக்கிய விஷயங்களில் பேச்சு நடத்துவதற்கு முன் மேசை மீதிருந்த இந்தத் துண்டுக் காகித விஷயத்தை ஒரு சோதனையாக, சிறு தேர்வாகவே மவுண்ட்பேட்டனும் உணர்ந்தார்.

பம்பாய் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு சம்பந்தமாக நீதிபதி முன் வாதாடிக் கொண்டிருக்கும் போது அவரது மனைவி மரணமடைந்து விட்டதாக வந்த ஒரு தந்திச்செய்தி வல்லபபாய் படேலிடம் தரப்பட்டது. அதனைப் பார்த்ததும் பைக்குள் வைத்துக் கொண்டார். ஆனால் ஒரு வாக்கியத் தடுமாற்றமும் இல்லாமல் வாதத்தைத் தொடர்ந்தார்.

வல்லபபாய் படேலின் வாழ்க்கைக் கதையில் ஒரு பகுதியான இந்த சம்பவம் அவரை அறிந்து கொள்ளும் அளவுகோலாகவும் இருந்தது. அவர் உணர்ச்சி வசப்படுபவர் என்ற கருத்து முழுமையான உண்மையல்ல; உணர்ச்சிவசப்படுவது அவரது குணாம்சத்தின் பகுதியாக இருக்கவில்லை என்று ஒருமுறை அவரது நெருங்கிய சகாக்களில் ஒருவர் கூறினார். படேல் உணர்ச்சி பூர்வமானவர். ஆனால் மக்களிடம் அதனை வெளிப்படுத்தி எதையும் பாழாக்கிவிட அவர் ஒருபோதும் இடம் கொடுப்பதில்லை. உணர்ச்சிவசப்படக் கூடியவர் என்ற ஒரு எண்ணத்தை ஏற்படுத்தியிருந்தாலும் உணர்ச்சிகளை முழுமையாகத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்.

கடல் பயணத்தில் மூன்று மாதங்கள் இருந்த மாலுமிகள் கரைக்கு வந்ததும் பணத்தை தண்ணீராய்ச் செலவிடுவது போல, வளவளவென்று பேசும் மனிதர்கள் வாழும் நாட்டில் படேல் ஒரு கருமியைப் போல வார்த்தைகளைப் பயன்படுத்தினார். மனைவி இறந்த பின் அவருக்கு நிரந்தரத் துணையாக இருந்த அவரது மகள், படேலுடன் ஒரு நாளைக்கு, அதிகபட்சமாக பத்து வாக்கியங்களைத்தான் பரிமாறிக் கொண்டார். ஆனால் படேல் பேசத் தொடங்கினால் மக்கள் ஆர்வமுடன் கேட்டனர்.

வழுக்கை விழுந்த உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை படேல் இந்தியராகவே இருந்தார். அவரது டில்லி வீடு புத்தகங்களால் நிறைந்திருந்தது. ஆனால் எல்லாப் புத்தகங்களும் இந்தியாவைப் பற்றி இந்தியர்களால் எழுதப்பட்டவை. இந்திய மண்ணில் தோன்றி வளர்ந்த ஒரே இந்தியத் தலைவராக அவர் விளங்கினார். பம்பாய் அருகே உள்ள குஜராத் பகுதியைச் சேர்ந்த ஒரு விவசாயி அவரின் தந்தை. இன்னமும் படேல் ஒரு விவசாயியின் பாணியிலேயே வாழ்ந்து கொண்டிருந்தார். அதிகாலை சரியாக 4 மணிக்கு எழுந்துவிடுவார். ஒவ்வொரு நாள் இரவிலும் 9.30 மணிக்குப் படுக்கைக்குச் சென்று விடுவார். காலை எழுந்தவுடன் கழிப்பறைக்குச் செல்வார். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வெளியாகும் 30 செய்தித் தாள்களை தினந்தோறும் படிப்பார். படேலின் ஒரே குழந்தையும் மகளுமான மணிபென், அவரது வாழ்க்கை முறையை விழிப்புடன் கண்காணித்து வந்தார். கடந்த இருபது ஆண்டுகளாக மணிபென்தான் அவரின் செயலாளர், மெய்க்காப்பாளர், நம்பிக்கைக்குரிய உதவியாளர், வீட்டின் நிர்வாகி என எல்லாமும். இவ்வளவு நெருங்கிய உறவு கொண்ட அவர்கள் ஒரே அறையிலேயே படுத்துறங்கினார்கள்.

1857இல் நடந்த சிப்பாய்க் கலகத்தில் உள்ளூர் படைத் தலைவருடன் சேர்ந்து பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடச் சென்ற தந்தை மூலம்தான் இந்திய தேசிய வாதம் என்பது படேலின் வாழ்க்கைப் பணியானது. சிறு வயதில் விவசாயிகளின் குடிசைப் பகுதியில் வறட்டியால் எரிக்கப்பட்ட தீயைச் சுற்றி அமர்ந்தும் பழைய வீரர்களின் கதைகளைக் கேட்டும் குளிர்கால இரவுகளைக் கழித்தார். பின்னர் கிராமத்திலிருந்து புறப்பட்டு, காந்தி முதன் முதலில் இந்தியாவில் ஆசிரமம் அமைத்த அகமதாபாத்துக்குச் சென்று, பெரிய ஜவுளித் தொழிற்சாலைகளில் அவர் வேலை செய்தார். சம்பாதிக்கும் காலம் வரை ஒவ்வொரு நாளும் ஒரு ரூபாயாவது சேமித்தார். இதனால் 33வது வயதில் சட்டம் படிக்க அவரால் தாமாகவே லண்டன் செல்ல முடிந்தது.

லண்டனில் நேரு சிறப்புக்குரிய விருந்தாளியாக இருந்த உயர் குடியினரின் விருந்துக் கூடங்களை படேல் ஒருபோதும் பார்த்ததில்லை. லண்டனில் அவர் நன்றாக அறிந்திருந்தது இன்ஸ்கோர்ட்டின் நூலகம்தான். பேருந்துக் கட்டணத்தை மிச்சப்படுத்துவதற்காக அவர் தங்கியிருந்த இடத்துக்கும் சட்டம் பயின்ற நீதிமன்றத்துக்கும் இடையேயான பத்து மைல் தூரத்தை ஒவ்வொரு நாளும் இரண்டு முறை நடந்தே கடந்தார். சட்டத்துறையில் பட்டம் பெற்ற அந்த நாளில் கூடுதலாகக் கொஞ்ச தூரம் நடந்தார். அது தாயகம் திரும்புவதற்காகத் துறைமுகத்தை நோக்கி. தாயகம் திரும்பிய பின் அவர் ஒருபோதும் வெளிநாடு செல்லவில்லை.

அகமதாபாதில் குடியேறி, ஒரு காலத்தில் தன்னை அடிமை போல் வைத்துக் கொண்டு கூலி கொடுத்த ஜவுளி ஆலை முதலாளிகளுக்கு அறிவுத்திறம் வாய்ந்த வழக்கறிஞராக வாதாடினார். அகமதாபாத் கிளப்பில் முதன் முறையாக காந்தியின் பேச்சைக் கேட்க வாய்ப்புக் கிடைத்தபோதும் பிரிட்ஜ் விளையாட்டில் ஈடுபட்டிருந்த படேல் காந்தியை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. இருப்பினும் அவருக்கு காந்தியின் அச்சிடப்பட்ட உரை அளிக்கப்பட்டது. அந்த உரையின் பக்கங்களில் இடம் பெற்ற வரிகளைப் படித்த போது ஒரு தொலைநோக்குப் பார்வை விரிந்தது. அவர் சிறுவனாய் இருந்தபோது, குளிர்கால இரவுகளில் வறட்டி வைத்து மூட்டப்பட்ட நெருப்பைச் சுற்றி அமர்ந்திருந்த காலத்தில் அவரது தந்தையால் பெற்ற தொலைநோக்குப் பார்வைதான் அது.

காந்தியைத் தேடிவந்து சந்தித்த அவர், தனது சேவை விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டார். இதனை ஆர்வமுடன் கவனித்த காந்தி 1922இல் ஒத்துழையாமை இயக்கத்தை வெற்றி பெறச் செய்வதற்காக, பம்பாய்க்கு வெளியே உள்ள பர்தோலி நாட்டுப்புற பகுதியில் 137 கிராமங்களில் உள்ள 87,000 மக்களிடம் பிரச்சாரம் செய்து அணிதிரட்டும் பரீட்சார்த்த பணியை படேலிடம் ஒப்படைத்தார். அவரின் அணிதிரட்டும் பணி விரிவாகவும் முழுமையானதாகவும் இருந்தது. காந்தி எதிர்பார்த்ததைவிட அந்த இயக்கம் வெற்றி பெற்றது. அந்தக் கணத்திலிருந்து சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் காந்தியின் கீழ் மேற்கொள்ளும் பணியை நேருவுடன் படேலும் பகிர்ந்து கொண்டார். சிறப்புக்குரிய ஞானம் பெற்றிருந்த படேல் இந்தியாவின் தொலைதூர மூலை முடுக்குகளிலும் பணி செய்வார் என்ற நம்பிக்கையுடன் காங்கிரஸ் கட்சி என்ற எந்திரத்தில் ஒரு பாகமாகப் பொருத்தப்பட்டார்.

காங்கிரசின் காதி உடையில் இருந்த பங்காளியான நேருவுடன் படேல் எப்போதும் மாறுபட்ட கருத்தையே கொண்டிருந்தார். இவர்கள் இருவரும்

இயல்பாகவே எதிரும் புதிருமாக இருந்தனர். சுதந்திரம் பெற்றபின் இந்தியா எப்படியிருக்க வேண்டும் என்பதிலும் அவர்களிடையே வித்தியாசமான கருத்துக்கள் இருந்தன. ஒரு புதிய சமூகத்தைப் படைக்க வேண்டும் என்ற நேருவின் கற்பனாவாத சோஷலிசம் பயனற்றது என்று படேல் கூறினார். திரம்மிக்க புதிய சோஷலிச உலகம் என்ற நேருவின் கனவை 'கிளிப்பிள்ளை சோஷலிசக் கூச்சல்' என்று கூறி படேல் நிராகரித்தார். முதலாளித்துவ சமூகம் பயனுள்ளது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். பிரச்சனை என்னவென்றால் அதனை இந்தியமயமாக்கி மேலும் நன்றாகச் செயல்படுத்த வேண்டும்; அதை விடுத்து செயல்படுத்த இயலாத தத்துவத்துக்காக இதனைப் பளுவாகக் கருதி வீசியெறிந்துவிட முடியாது என்றும் அவர் எண்ணினார்.

'எந்திரங்களும், தொழிலகங்களும், ஆலைகளும் நிறைந்த தொழில் நகரம் ஒன்றிலிருந்து வந்தவர் படேல்; நேருவோ பூக்களும் பழங்களும் விளையும் பூமியிலிருந்து வந்தவர்' என்று படேலின் நண்பர் ஒருவர் குறிப்பிட்டார்.

நேருவைக் கவர்ந்து பற்றியிருக்கும் உலகு பற்றிய மாபெரும் விவாதங்களைக் கொண்ட வெளியுறவுத் துறையை படேல் வெறுத்தொதுக்கினார். அதிகாரம் எங்கே இருக்கிறது என்பதை அவர் அறிந்தே இருந்தார். அங்கேயே அவரும் இருந்தார். காங்கிரஸ் எந்திரத்தில் தனது விசுவாசத்தை வளர்த்துக் கொண்டது போலவே, சுதந்திர இந்தியாவின் காவல், பாதுகாப்பு, தகவல் ஒலிபரப்பு என முக்கிய விஷயங்களைக் கொண்டிருக்கும் என்பதால் அரசு எந்திரத்தில் உள்துறை அமைச்சகத்திடம் விசுவாசத்தை படேல் வளர்த்துக் கொண்டார். காந்தியின் வாரிசு என்ற போர்வையை நேரு அணிந்து கொள்ளலாம். ஆனால் அதனுடன் அவர் உற்சாகமின்றியே நடமாடினார். காரணம் அவருக்குப் பின்னாலிருந்த வீரர்கள் இன்னொரு சீசரை விரும்பினார்கள். அவருடன் இணக்கமான உறவு கொண்டிருந்த ஜின்னாவைப் போலவே படேலும் குறைத்து மதிப்பிடப்பட்டார். காந்தி மீதும் நேரு மீதும் பற்றுக் கொண்டிருந்த ஒரு உலகம் படேலின் முக்கியத்துவத்தை உணரவில்லை. இது தவறு. படேலின் நண்பர் ஒருவர் சொன்னதுபோல, 'அவர்தான் இந்தியாவின் கடைசி சக்ரவர்த்தி.'

தம்மைக் கோபப்படுத்திய துண்டுக் காகிதத்தைப் பார்த்த வைஸ்ராய் அதனை மேசையின் எதிரே அமர்ந்திருந்த படேலிடம் கொடுத்தார். இதனைத் திரும்பப் பெறுமாறு படேலிடம் அவர் கேட்டுக்கொண்டார். ஆனால் படேல் சற்றும் தயக்கமின்றி மறுத்துவிட்டார்.

அந்த இந்தியத் தலைவரை மவுண்ட்பேட்டன் உற்று நோக்கினார். இந்த மனிதரின் ஆதரவும் இவர் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பின் ஆதரவும் அவசியம் என்பதை அவர் அறிந்தார். ஆனாலும் இப்போது அவரைத் தன் போக்கிற்கு இணங்கச் செய்யாவிட்டால் அப்படிப்பட்ட ஆதரவைப் பெறுவது இயலாது என்பதிலும் அவர் உறுதியாக இருந்தார்.

'ரொம்ப நல்லது! நான் என்ன செய்யப் போகிறேன் என்பதை உங்களுக்குச் சொல்லி விடுகிறேன். எனது விமானத்தைத் தயார் செய்யுமாறு உத்தரவிடப் போகிறேன்' மவுண்ட் பேட்டன் சொன்னார்.

'எதற்காக?' படேல் ஆச்சர்யத்துடன் வினவினார்.

'ஏனென்றால், நான் புறப்படப் போகிறேன்' மவுண்ட்பேட்டன் பதிலளித்தார். 'முதலாவதாக இந்த வேலை எனக்குப் பிடிக்கவில்லை. காரிய

சாத்தியமில்லாத இந்தச் சூழ்நிலையிலிருந்து வெளியேறுவதற்கு உங்களைப் போல் யாராவது ஒருவர் காரணமாக இருப்பாரா என்பதைத் தான் தேடிக் கொண்டிருக்கிறேன்' என்றும் அவர் கூறினார்.

'நீங்கள் சொன்னதைச் செய்து விடுவீர்களா!' படேல் வியப்புடன் கேட்டார்.

'செய்யாமல் என்ன?' பதிலளித்த மவுண்ட் பேட்டன் தொடர்ந்தார், 'உங்களைப் போன்ற இளையவர்களின் தாக்குதலையெல்லாம் தாங்கிக் கொண்டு இங்கேயே இருப்பேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? என்னிடம் கடுமையாக நடந்து பின்னுக்குத் தள்ளிவிடலாம் என்று நீங்கள் நினைத்தால் அது தவறாகி விடும். உங்கள் குறிப்பை நீங்கள் வாபஸ் பெற வேண்டும்; அல்லது நம்மில் ஒருவர் ராஜினாமா செய்ய வேண்டும். நான் பதவி விலகிச் சென்றால் ஏன் செல்கிறேன் என்பதை முதலில் உங்கள் பிரதம மந்திரியிடமும் திருவாளர் ஜின்னாவிடமும் விளக்குவேன். இந்தியாவில் பேச்சு வார்த்தை முறிந்தால் ரத்தக் களறி தொடரும். அதற்குப் பொறுப்பு நீங்களாகத்தான் இருப்பீர்கள் - வேறு யாருமல்ல.'

நம்பிக்கையற்றவராக படேல் மவுண்ட் பேட்டனை வெறித்துப் பார்த்தார்.

ஆகட்டும், ஆகட்டும், ஒரு மாதம் மட்டுமே வைஸ்ராய் பதவியிலிருந்துள்ள மவுண்ட்பேட்டன் அதை ஒன்றும் தூக்கி எறிந்துவிடமாட்டார் படேல் மனதுக்குள் நினைத்தார்.

'மிஸ்டர் படேல்! என்னைப்பற்றி நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. உங்கள் குறிப்பை நீங்கள் இப்போதே திரும்பப் பெறப் போகிறீர்களா அல்லது பிரதம மந்திரியை அழைத்து எனது ராஜினாமாவை அறிவித்து விடட்டுமா?' மவுண்ட் பேட்டன் வினவினார்.

ஒரு நெடிய மவுனம் நிலவியது. கடைசியாக பெரு மூச்செறிந்தபடி படேல் சொன்னார், 'நீங்கள் சொன்னபடி செய்து விடுவீர்களோ என்ற அச்சம் எனக்குள்ளது'

'உங்கள் அச்சம் சரியானது. அப்படியே நான் செய்வேன்' மவுண்ட்பேட்டன் பதிலளித்தார்.

கோபத்தை ஏற்படுத்திய அந்தக் குறிப்பை மவுண்ட்பேட்டனின் மேசையிலிருந்து எடுத்துக் கொண்டு வெளியே வந்த படேல், மெதுவாக அதனைக் கிழித்துப் போட்டார்.

*

அந்தக் குடிசையின் விட்டத்திலிருந்து ஒற்றை விளக்கு தொங்கிக் கொண்டிருந்தது. அந்த பல்பின் மேற்பரப்பு கருகிப்போன பூச்சிகளால் கறை படிந்திருந்தது. இடுப்புக்கு மேலே நிர்வாணமான நிலையில் சிமெண்ட் தரை மீது விரிக்கப்பட்ட வைக்கோல் மெத்தையில் காந்தி அமர்ந்திருந்தார். மற்றவர்கள் அவரைச் சுற்றி அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். டில்லியின் தெருக்களைப் பெருக்கி கழிப்பறைகளையும் சுத்தம் செய்யும், தீண்டத் தகாதோரின் தூய்மையற்ற பங்கி (Bhangi) துப்புரவுத் தொழிலாளர் காலனியில் உள்ள சிறுவர்கள், சன்னல்கள் வழியாக, மின்னும் கருநிறக் கண்களால், ஆர்வத்தோடும் அச்சத்தோடும் தங்களின் தேவதூதனைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காந்தியைச் சுற்றி நெருக்கமாக அமர்ந்திருந்த மனிதர்கள் சுதந்திர இந்தியாவின் தலைவர்கள் ஆகலாம். திறந்த வெளியில் ஓடும் சாக்கடை நீரில் மனிதக் கழிவுகள் கலந்ததால் துர்நாற்றம் வீசுகிற, நூற்றுவகை நோய்களின் அடையாளங்கள் தெரிகிற முகங்களைக் கொண்ட மனிதர்கள் வாழ்கிற அந்தக் கேடுதரும் குடிசைப் பகுதிக்கு இவர்கள் வந்ததற்குக் காரணம் இருந்தது. டில்லிப் பயணத்தின் போது இங்கே தங்க காந்தி முடிவு செய்ததுதான் அந்தக் காரணம்.

இந்துச் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களான தீண்டத் தகாதோருக்காக - கடவுளின் குழந்தை என்று பொருள்படும் வகையில் ஹரிஜன் என்று அவரால் அழைக்கப்பட்டோருக்காக - அவர் போராடினார். காந்தியின் இதயத்தில், தேச விடுதலைப் போராட்டத்துக்கு இணையாக, தீண்டாமையை எதிர்த்தப் போராட்டத்திற்கும் இடம் இருந்தது.

இந்திய மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கினராகத் தீண்டத் தகாதோர் இருந்தனர். முற்பிறவியில் செய்த பாவங்களால் சபிக்கப்பட்டு எந்த சாதியிலும் சேர்க்கப்படாமல் ஒதுக்கப்பட்டவர்கள் என்று இவர்கள் கருதப்பட்டனர். கருப்புத் தோல், கெஞ்சிப் பணியும் குணம், கிழிந்து போன ஆடை ஆகியவற்றால் இவர்கள் அடையாளம் காணப்பட்டனர். அவர்களின் பெயரைச் சொல்வது கூட இழிவாகக் கருதப்பட்டது. அவர்களின் லேசான தீண்டல் கூட சாதி இந்துவை தீட்டாக்கிவிடும். சடங்கு முறைகளுடன் குளித்தே இந்தத் தீட்டு நீக்கப்பட்டது. பிராமணர்கள் வசிக்கும் பகுதியில் அவர்களின் காலடி படுவது கூட தீட்டாகக் கருதப்பட்டது. சாதி இந்து ஒருவர் வரும் போது எதிரே வரும் தீண்டத்தகாதோரின் நிழல் கூட அந்தப் பாதையில் விழக்கூடாது. அந்த அளவுக்கு அவர்கள் ஒதுங்கிச்செல்ல வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டனர். இந்தியாவின் சில பகுதிகளில், தீண்டத்தகாதோர் இரவு நேரங்களில் மட்டுமே குடிசைகளிலிருந்து வெளியே வர அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் காணத்தகாதோராகக் கருதப்பட்டனர்.

தீண்டத்தகாதோரின் முன்னிலையில் எந்த இந்துவும் உணவருந்த மாட்டார்; அவர்களால் கொண்டு வரப்பட்ட தண்ணீரை அருந்த மாட்டார்;அவர்கள் தொட்ட பாத்திரத்தைத் தொடமாட்டார். பல இந்துக் கோயில்கள் அவர்களுக்குப் பூட்டப்பட்டிருந்தன. அவர்களின் குழந்தைகள் பள்ளிகளில் அனுமதிக்கப்படவில்லை. மரணத்தில் கூட அவர்கள் பறையர்கள் என்று ஒதுக்கியே வைக்கப்பட்டனர். பொதுவான சுடுகாட்டைப் பயன்படுத்தத் தீண்டத்தகாதோர் அனுமதிக்கப்படவில்லை. உடல் தகனத்துக்குத் தேவையான கட்டைகளை வாங்க முடியாத அளவுக்குப் பரம ஏழைகள் என்பதால் அவர்களின் உடல்களைத் தீயுண்பதை விட கழுகுகள் உண்பதுதான் அதிகம்.

இந்தியாவின் சில பகுதிகளில் இன்னமும் அடிமைகள் போல இவர்கள் வேலை செய்த பண்ணைகளுடன் சேர்த்து விற்கவும் வாங்கவும் பட்டார்கள். பொதுவாக தீண்டத்தகாதோரில் ஒரு இளைஞன் ஒரு எருதின் விலைக்கு சமமாக விற்கப்பட்டான். சமூக வளர்ச்சி காணும் ஒரு நாட்டில் இவர்கள் ஒரே ஒரு உரிமையை மட்டும் அனுபவித்தார்கள். அதாவது புனிதமான பசு தொற்று நோய்க்குப் பலியாகிவிட்டால், அதனை வண்டியில் ஏற்றிச் செல்லும் தீண்டத்தகாதோர் அந்த அழுகிப் போன மாட்டிறைச்சியை அவர்களைப் போன்ற மற்றவர்களுக்கு விற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய காந்தி அவர்களின் பிரச்சனைகளைத் தனது பிரச்சனைகளாக ஏற்றுக் கொண்டார். அவர்

*இந்தியாவில் அமைத்த முதல் ஆசிரமம் பெரும்பாலும் தோல்வியில் முடிந்தது. காரணம் தீண்டத்தகாதோரை அதற்குள் வரவேற்றதுதான். அவர்களுக்கு எண்ணெய் தேய்த்து விட்டார்; பணிவிடைகள் செய்தார். தீண்டாமை மீது அவருக்கு இருக்கும் வெறுப்பை வெளிப்படுத்துவதற்காக, ஒரு சாதி இந்து இழிவாகக் கருதும் செயல்களையும் வெளிப்படையாகச் செய்தார். தீண்டத்தகாத ஒருவர் வீட்டின் கழிப்பறையைத் தூய்மை செய்தார். இந்திய சமூகத்திலிருந்து அவர்களைப் பிரிப்பதை நிரந்தரமாக்கிவிடும் என்று அஞ்சிய அரசியல் சீர்திருத்தம் ஒன்றை முறியடிப்பதற்காக 1932இல் அவர் மேற்கொண்ட உண்ணாவிரதத்தின் போது மரணத்தின் விளிம்புக்கே சென்று திரும்பினார். இந்தியா முழுவதும் பயணம் செய்த போது தீண்டத் தகாதோரால் எதிலே பயணம் செய்ய முடியுமோ அந்த மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டிகளிலேயே பயணம் செய்வதன் மூலமும், அவர்கள் வாழ்ந்த குடிசைப் பகுதிகளிலேயே வாழ்ந்தும் அவர்களின் துயரங்களை அவர்களே உணருமாறு செய்வதற்கு காந்தி முயற்சி செய்தார்.**

*ஒரு சில மாதங்களில், ஏன் சில வாரங்களில் கூட அது நடக்கலாம், காந்தியைச் சுற்றியுள்ளவர்களில் பெரும்பாலோர் அரசின் அமைச்சர்கள் ஆகிவிடுவார்கள். பிரிட்டிஷார் எங்கிருந்து இந்தியாவை ஆண்டார்களோ அந்தப் பரந்துபட்ட அலுவலகங்களை இவர்கள் ஆக்ரமித்துக் கொள்வார்கள். ஓட்டுநரைக் கொண்ட அமெரிக்கக் கார்களில் ஏறி டில்லியில் பவனி வருவார்கள். இந்தியாவின் மிக மோசமான ஒரு குடிசைப் பகுதி வழியாக இந்தப் பிராயச்சித்தப் பயணத்தை காந்தி திட்டமிட்டே நடத்தி அவர்களை அதில் பங்கேற்கவும் செய்தார். விரைவில் அவர்கள் ஆளப்போகும் தேசத்தின் உண்மை நிலவரங்களை காந்திய வழியில்அவர்களுக்கு நினைவுபடுத்துவதற்காகவே அப்படிச் செய்தார்.*

*ஆனால் அந்த மாலைவேளையில் காந்தியைச் சுற்றியிருந்த மனிதர்களை வேறு விதமான அரசியல் எதார்த்த நிலைமைகள் ஆக்ரமித்திருந்தன. வெப்பத்தால் ஏற்பட்ட புழுக்கத்தைத் தணித்துக் கொள்ள அவரது சொந்தக் குளிர்சாதனத்தைப் பயன்படுத்தினார். தண்ணீரில் நனைத்தத் துண்டினை வழக்கைத் தலையில் தலைப்பாகை போல கட்டிக் கொண்டார். அவரது*

* அவரது முயற்சிகள் காங்கிரஸ் சகாக்களுக்கு சங்கடங்களை ஏற்படுத்தாமல் இல்லை. காந்தி தாமாகவே வறுமை வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்து அதில் உறுதியாகவும் இருக்கும் நிலையில் அவரை காங்கிரஸ் கட்சியால் உண்மையில் பாதுகாத்திட முடியுமா என்று டில்லிக்கு வந்து சேர்ந்தவுடனேயே காந்தியின் நெருங்கிய சகாக்களில் ஒருவரான கவிக்குயில் சரோஜினி நாயுடுவிடம் லூயி மவுண்ட் பேட்டன் வினவினார். 'ஓ...' அவர் சிரித்தார். 'அவருக்குப் பொருத்தமான மக்கள் கூட்டம் நிறைந்த மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டியைத் தேடி கல்கத்தா ரயில் நிலைய பிளாட்பாரத்தில் அவர் தனியாக நடந்து செல்வதாக நீங்களும் காந்தியும் வேண்டுமானால் கற்பனை செய்து கொள்ளலாம். அல்லது தீண்டத்தகாதோரின் காலனியின் குடிசையில் காந்தி தங்கியிருக்கும்போது பாதுகாப்பின்றி அவர் இருப்பதாகவும் நினைக்கலாம். தீண்டத்தகாதவர்கள் போல உடையணிந்து காங்கிரஸ்காரர்கள் பலர் அவர் பின்னால் நடந்து செல்வதையும் மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டியில் அவருடன் பயணம் செய்வதையும் அவர் அறியமாட்டார். டில்லியின் பங்கி காலனிக்குள் அவர் செல்லும் போது ஹரிஜன்கள் போலவே உடை உடுத்தி அவரைச் சுற்றியுள்ள குடில்களில் காங்கிரஸ்காரர்கள் பலர் குடியிருந்தனர்' என்று விளக்கினார். 'லூயி பிரபு அவர்களே, அந்த வயதான மனிதரை வறுமையில் வாழ வைப்பதற்கு காங்கிரஸ் கட்சி எவ்வளவு பெரும் தொகையை செலவிடுகிறது என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்' என்று கூறி சரோஜினி நாயுடு விளக்கத்தை முடித்தார்.

ஆதரவாளர்களின் மனவுணர்வுகள் அந்த இரவின் வெப்பம் போல காந்தியை துன்புறுத்தின.

பிரிவினையைத் தவிர்க்க காங்கிரஸ் கட்சி எதைச் செய்யவும் தயாராக இருக்கிறது என்று சில நாட்களுக்கு முன் மவுண்ட்பேட்டனிடம் காந்தி ஆர்வமேலீட்டால் உறுதி அளித்திருந்தார். அவரது வார்த்தை தவறாகிவிட்டது. வயதான மகாத்மாவுக்கும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களாக அவரால் உருவாக்கப்பட்ட மனிதர்களுக்கும் இடையே மெல்ல விரியும் வேறு பாட்டினை அளப்பதாக அந்தத் தவறு இருந்தது.

கால் நூற்றாண்டு காலமாக இவர்களெல்லாம் காந்தியைப் பின்பற்று கிறார்கள். காந்தியின் காதிக்காக இவர்கள் தங்களின் மேற்கத்திய உடைகளை வீசி எறிந்தார்கள். முன்பின் அறியாத ராட்டையின் தாளத்துக்கேற்ப தங்கள் விரல்களை அசைத்து நூல் நூற்றார்கள். அவரது பெயரால் போலீசாரின் சுழலும் லத்திகளுக்கு அஞ்சாமல் முன்னேறினார்கள். பிரிட்டிஷாரின் சிறைகளுக்குச் சென்றார்கள். அவ்வப்போது சந்தேகங்கள் எழுந்தாலும் அவரைப் பின்பற்றினார்கள். நம்ப முடியாத போராட்டங்கள் நம்பமுடியாத வெற்றிக்கு இப்போது சைகை செய்கின்றன. காந்தியின் அஹிம்சைப் போராட்டத்தால் பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பறிக்கப்படுகிறது.

பல காரணங்களுக்காக அவர்கள் காந்தியைப் பின்பற்றினார்கள். அனைத்துக்கும் மேலாக இந்திய மக்களின் உணர்வுடன் ஒன்றிக் கலந்த ஒப்பற்ற திறமையால் தங்களின் இயக்கத்துக்கு ஆதரவாக மாபெரும் மக்கள் சக்தியை அவரால் திரட்ட முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். அவர்களுக்கிடையே இருந்த அடிப்படை வேறுபாடுகள் பிரிட்டிஷாருக்கு எதிரான பொதுப் போராட்டங்களில் அமிழ்ந்து போயின. ஜின்னாவைப் பிரதமராக்கும் காந்தியின் திட்டம், விவாதத்தை ஏற்படுத்தி, டில்லியின் வெப்பம் மிகுந்த இரவில், கருத்து வேறுபாடுகளை மீண்டும் உசுப்பிவிட்டிருந்தது. அவரது திட்டத்தை ஏற்க மறுத்தால், புதிய வைஸ்ராய் ஒரு மூலைக்குத் தள்ளப்பட்டு பிரிவினை மட்டுமே அங்கிருந்து தப்பிக்க வழி என்று ஆக்கிவிடும் என்று காந்தி வாதிட்டார். டில்லியில் இருந்த அரசியல் தலைவர்களை விட நவகாளியிலும் பின்னர் பீகாரிலும் கிராமம் கிராமமாக நடந்து சென்று மதக்கலவரத்தால் புண்பட்ட பகுதிகளில் 'மருந்திட்ட' காந்திதான், பிரிவினை உருவாக்கும் துயரங்கள் எப்படி இருக்கும் என்பதை மிகமிக அதிகமாகப் புரிந்து கொண்டிருந்தார். மதக் கலவரத்தை ஒரு முறை தூண்டிவிட்டால் எப்படிப்பட்ட அழிவுகள் ஏற்படும் என்பதை நவகாளியின் குடிசைகளிலும், சதுப்பு நிலப்பகுதிகளிலும் நேரில் கண்டவர் காந்தி. பிரிவினை என்பது வெறித்தனத்தைக் கட்டவிழ்த்து விடுமே தவிர கட்டுப்படுத்தாது என்றும் அவர் வாதிட்டார். அத்தகைய சோகத்தைத் தவிர்க்கவும் இந்தியாவை ஒற்றுமையாக வைத்திருக்கும் கடைசி முயற்சியாகவும் தனது திட்டத்தை ஏற்குமாறு காந்தி அவரின் ஆதரவாளர்களிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

நேருவையும் படேலையும் கூட அவரால் இணங்க வைக்க முடியவில்லை. இந்தியாவை ஒற்றுமையாக வைத்திருப்பதற்குத் தரத் தயாராகவுள்ள விலைக்கும் ஒரு எல்லை இருக்கிறது. தங்களின் எதிரியான ஜின்னாவிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது அந்த எல்லையைக் கடந்தது என்றனர் அவர்கள். பிரிவினையால் பயங்கர வன்முறை ஏற்படுவது தவிர்க்க இயலாதது என்ற காந்தியின் கருத்தை அவர்கள் ஏற்க மறுத்தார்கள். மனமுடைந்த காந்தி, வைஸ்ராயைச் சந்திக்கும்

போது தனது சகாக்களைத் தன் வழிக்குக் கொண்டுவர முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கும். உண்மையான பிளவு ஏற்பட இன்னும் கொஞ்ச காலம் இருந்தாலும், காந்திக்கும் அவரால் பொறுமையுடன் வளர்த்துருவாக்கப்பட்ட தலைவர்களுக்கும் இடையே பிரிவினை விஷயத்தில் கருத்து வேறுபாடு ஆரம்பமாகிவிட்டது. காந்தியின் சிலுவைப் போராட்டத்தின் முடிவு கிட்டத்தட்ட நெருங்கிக் கொண்டிருந்தது. தொடக்கத்தைப் போலவே அதன் முடிவும் அவரின் ஆத்மாவை உறைய வைப்பதாகவே இருக்கும் போல் தெரிந்தது.

*

அந்த ஏப்ரல் மாத மாலை வேளையில் வைஸ்ராயின் கூட்ட அறையில் 'விர்ரென' ஒலியெழுப்பும் குளிர் சாதனப் பெட்டி தேவை இல்லாமல் போனது. பிடிவாதக்காரரான முஸ்லீம் லீக் தலைவர் முகமது அலி ஜின்னாவோ அந்த அறையைக் குளிர்விக்கப் போதுமானவராக இருந்தார். அந்த அறைக்கு வந்ததிலிருந்தே அவர் ஆர்வமில்லாத, செருக்கும் ஆணவமும் நிறைந்த மனநிலையில் இருந்ததை மவுண்ட்பேட்டன் கண்டு கொண்டார்.

இந்தியாவின் நான்கு தலைவர்களில் முக்கியமானவரான அவர் வைஸ்ராயின் கூட்ட அறைக்கு வந்த கடைசித் தலைவராவார். துணைக் கண்டத்தின் பிரச்சனைக்குத் தீர்வு அவர் கைகளில்தான் இருந்தது. கால் நூற்றாண்டுக்குப் பின்னரும் ஜின்னாவுடைய குரலின் எதிரொலி மவுண்ட்பேட்டனின் நினைவில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. 'முதன் முறையாக முகமது அலி ஜின்னாவை சந்திக்கும் வரை, இந்தியாவில் மேற்கொள்ளப்போகும் எனது பணி எவ்வளவு அசாத்தியமானது என்பதை நான் உணரவே இல்லை' மவுண்ட்பேட்டன் நினைவு கூர்ந்தார்.

அவர்களின் சந்திப்பு மகிழ்ச்சியற்ற வார்த்தைகளுடன் தொடங்கியது. எந்த ஒரு செயலையும் தன்னெழுச்சியுடன் செய்யாமல், மிகவும் கவனத்துடன் கணக்குப் போட்டு செய்பவர் ஜின்னா என்பதை அந்த வார்த்தைகள் சரியாகவே வெளிப்படுத்தின. மவுண்ட்பேட்டன் தம்பதியினருடன் புகைப்படம் எடுக்கப்படுவோம் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்த அவர், வைஸ்ராய்க்கும் தமக்கும் இடையே எட்வினா மவுண்ட்பேட்டன் தான் நிற்பார் என்று உறுதியாக எண்ணி, எட்வினாவைப் புகழ்ந்துரைப்பது போன்ற சிறு அளவிலான கவிதை வரிகளை கவனமாக மனப்பாடம் செய்திருந்தார்.

பாவம் ஜின்னா! நடுவில் நின்றவர் எட்வினா அல்ல. அவரே தான் நிற்க வேண்டியதாயிற்று. இருந்தாலும் இதனைத் தவிர்க்க அவரால் முடியவில்லை. கணினி போல செயல்பட்ட அவர் ஏற்கெனவே கவனத்துடன் ஒத்திகை செய்திருந்த வரியை சொல்லத் தொடங்கிவிட்டார். 'ஆஹா! இரண்டு முட்களுக்கிடையே ஒரு ரோஜா' - புன்முறுவலுடன் ஜின்னா கூறினார்.

கூட்ட அறைக்குள் சென்ற அவர், 'எந்தத் தீர்வை ஏற்க நான் தயாராய் இருக்கிறேனோ அதனைச் சரியாகச் சொல்லிவிடவே இங்கு வந்திருப்பதாக' மவுண்ட்பேட்டனிடம் கூறினார். காந்தியிடம் நடந்து கொண்டது போலவே இப்போதும் மவுண்ட்பேட்டன் கையசைத்து குறுக்கிட்டார். 'மிஸ்டர் ஜின்னா! இந்த நிலையில் நிபந்தனைகள் பற்றி விவாதிக்க நான் தயாராக இல்லை. முதலில் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொள்வோம்' என்றார் அவர்.

பின்னர் தனக்கே உரித்தான கவர்ச்சியுடனும் சுவையாகவும் ஆபரேஷன் செடக்ஷன் என்ற செயல்திட்டம் பற்றி மவுண்ட்பேட்டன் முஸ்லீம் தலைவரிடம் விளக்கினார். ஜின்னா உணர்ச்சியை வெளிக்காட்டாமல் இறுக்கமாக இருந்தார். யாருடனும் ஒட்டாத, உரையாடாத நெருங்கிய நண்பர்களிடமும் வளைந்து கொடுக்காத அந்த மனிதருக்கு, முற்றிலும் புதியவரான ஒருவரிடம், தனது வாழ்க்கை விவரங்களையும் குணநலன்களையும் எடுத்துரைக்கத் தயக்கமாகவே இருந்தது.

மவுண்ட்பேட்டன் தனது திறமை முழுவதையும் திரட்டி முயற்சி செய்தார். பல மணி நேரங்கள் கடந்தது போல அவர் உணர்ந்தார். இருந்தாலும், ஜின்னாவிடமிருந்து ஒருசில வார்த்தைகள் தான் வெளிப்பட்டன. ஒரு வழியாய் இரண்டு மணி நேரம் கழித்துத்தான் ஜின்னா இளகினார். அந்த முஸ்லீம் தலைவர் கூட்ட அறையைவிட்டு சென்றபின் மவுண்ட்பேட்டன் தனது பத்திரிகைத் தொடர்பு உதவியாளரான ஆலன் கேம்ப்பெல் ஜான்சனிடம், ‘அடக்கடவுளே! இப்படியா ஒரு மனிதர் அழுத்தக்காரராய் இருப்பார்! அவரை இறுக்கத்திலிருந்து விடுவிக்கவே பேட்டியின் பெரும்பாலான நேரம் போய்விட்டது’ என்று கூறி பெருமூச்சு விட்டார்.

பாகிஸ்தானின் தந்தை என்று ஒரு நாள் புகழப்படவிருக்கும் அந்த மனிதருக்கு பாகிஸ்தான் பற்றிய யோசனை முதன் முதலில் 1933ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில் லண்டனில் உள்ள வால்டோர்ஃப் ஹோட்டலில் நடந்த ஒரு விருந்து நிகழ்ச்சியில்தான் தெரிவிக்கப்பட்டது. அவருக்கு விருந்தளித்த ரஹ்மத் அலி என்ற பட்டதாரி மாணவர்தான் இந்த யோசனையை ஒரு காகிதத்தில் குறித்து வைத்திருந்தார். தனது எண்ணத்தை ஈடேற்ற இந்தியாவின் முஸ்லீம் அரசியல்வாதிகளில் முன்னணியில் இருக்கும் ஜின்னாவை இணங்கச் செய்துவிட முடியும் என்று அவர் நம்பினார். அதனால்தான் சிப்பிக் கறியையும், இஸ்லாமிய நெறிகளுக்கு மாறான மதுபானங்களையும் கொண்ட அந்த விருந்துக்கு ரஹ்மத் அலி தனது சொந்தச் செலவில் ஏற்பாடு செய்திருந்தார். அவர் எண்ணத்துக்கு எதிரான பதில்தான் கிடைத்தது. ‘பாகிஸ்தான் என்பது ஈடேறாத கனவு’ என்று ரஹ்மத் அலியிடம் ஜின்னா கூறினார்.

முஸ்லீம் பிரிவினைவாத இயக்கத்துக்குத் தலைமை தாங்க வேண்டுமென்று துரதிருஷ்டவசமான பட்டதாரி மாணவரால் கேட்டுக் கொள்ளப்பட்ட ஜின்னா, உண்மையில் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கியது இந்து - முஸ்லீம் ஒற்றுமை என்ற போதனையுடன்தான். காந்தியின் கத்தியவார் தீபகற்பத்தைச் சேர்ந்ததுதான் அவரது குடும்பமும். ஜின்னாவின் பாட்டனார் சில பல காரணங்களால் இஸ்லாமிய நெறிக்கு மாறாமல் இருந்திருந்தால், அரசியல் எதிரிகளான இருவரும் ஒரே சாதியில்தான் பிறந்திருப்பார்கள். காந்தியைப் போலவே ஜின்னாவும் லண்டன் சென்று இன்ஸ்கோர்ட்டில் சட்டம் பயின்று வழக்கறிஞரானார். ஆனால் காந்தியைப் போல் இல்லாமல், ஜின்னா லண்டனிலிருந்து இந்தியா திரும்பும்போது ஒரு ஆங்கிலேயர் போலவே வந்தார்.

முகத்தில் ஒற்றைக் கண்ணாடியும், விலை உயர்ந்த லினன் துணியாலான ஆடைகளையும் அவர் அணிந்திருந்தார். வியர்த்துக் கொட்டும் பம்பாயின் வெப்பத்திலிருந்து விடுபடவும், மடிப்புக் கலையாமல் இருக்கவும் தனது ஆடைகளை தினமும் மூன்று அல்லது நான்கு முறை மாற்றிக் கொள்வார்.

சிப்பிக் கறியும், மீன் சினையும், சேம்பன் (Champagne), பிராந்தி, கிளாரெட் (Claret) போன்ற மதுபானங்களும் அவருக்கு மிகவும் பிடித்தவை. அசைக்க முடியாத நேர்மையும், நாணயமும் மிக்க அவருக்கு வலுவான சட்ட நியாயமும், நெறிமுறைகளும்தான் பக்க பலங்களாக இருந்தன. ஜின்னாவுக்கு நெருக்கமான ஒருவர் கூறியது போல, அவர் 'விக்டோரியன்களின் கடைசியானவராகவும், கிளாட் ஸ்டோன் அல்லது டிஸ்ரேலி போன்ற நாடாளுமன்றவாதியாகவும் இருந்தார்.'

புத்திசாலித்தனம் மிகுந்த சிறந்த வழக்கறிஞரான ஜின்னா இயல்பாகவே அரசியல் பக்கம் திரும்பினார். பிரிட்டிஷாருக்கு எதிரான போராட்ட அணியில் காங்கிரஸில் இருந்த இந்துக்களையும், முஸ்லீம்களையும் ஒற்றுமைப்படுத்தும் பணியைப் பத்தாண்டு காலம் செய்தார். காங்கிரஸில் காந்தியின் அதிகாரம் ஏற்பட்டபோது அதிலிருந்து விடுவித்துக் கொண்டார். அழுக்குப் படாமல் உடையணிந்த ஜின்னா, வேட்டியும் சின்ன வெள்ளைக் குல்லாயும் அணிந்து அரை நிர்வாணக் கோலத்தில் அழுக்கேறிய பிரிட்டிஷாரின் சிறைக்குள் சென்றதில்லை. 'எழுத்தறிவற்ற அறியாமை நிறைந்தவர்களுக்குத் தான் ஒத்துழையாமை இயக்கம் சரியாக இருக்கும்' என்று காந்தியிடம் ஜின்னா கூறினார்.

ஜின்னாவின் அரசியல் வாழ்க்கையில் திருப்பு முனை ஏற்பட்டது, 1937 தேர்தலுக்குப் பிறகுதான். அந்தத் தேர்தலின் போது, சிறுபான்மையினரான முஸ்லீம் மக்கள் அதிகம் வாழும் இந்திய மாகாணங்களில் கூட அவருடனும் முஸ்லீம் லீகுடனும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள காங்கிரஸ் தவறிவிட்டது. ஆணவம் நிறைந்த ஜின்னா காங்கிரசின் இந்த செயலை சொந்தச் சவாலாகவே எடுத்துக் கொண்டார். காங்கிரஸ் ஆளும் இந்தியாவில் தாமோ முஸ்லீம் லீகோ நியாயமான பங்கினை ஒருபோதும் பெற முடியாது என்று இந்தச் சம்பவம் அவரை எண்ண வைத்தது. இந்து முஸ்லீம் ஒற்றுமையின் பிரச்சாரகராக இருந்த அவர், தனி பாகிஸ்தான் என்ற திட்டம் 'ஈடேறாத கனவு' என்று சரியாக நான்கு ஆண்டுகளுக்கு முன் முத்திரையிட்ட அவர், இப்போது பாகிஸ் தானுக்காக வாதாடுவதில் பிடிவாதம் காட்டினார்.

இந்தியாவில் உள்ள முஸ்லீம் மக்களுக்கு அவரைப் போல் பொருத்தமற்ற தலைவரைக் கற்பனை செய்து பார்ப்பதும் சிரமம். முகமது அலி ஜின்னாவைப் பொறுத்தவரை இஸ்லாம் என்பது அவரது பெற்றோர்களின் மதம் மட்டும் தான். அவர் மது அருந்தினார்; பன்றிக்கறி சாப்பிட்டார்; மதநெறிக்கு மாறாக ஒவ்வொரு நாள் காலையிலும் முகச்சவரம் செய்து கொண்டார். ஒவ்வொரு வெள்ளியன்றும் மசூதிக்குச் செல்வதையும் அவர் தவிர்த்தார். ஜின்னா கற்பனை செய்த உலகத்தில் கடவுளுக்கும் குரானுக்கும் இடமில்லை. முஸ்லீம்களின் புனித நூலான குரானிலிருந்து ஜின்னாவுக்குத் தெரிந்ததை விட அதிக வாசகங்கள் அவரது அரசியல் எதிரியான காந்திக்குத் தெரியும். பாரம்பரிய மொழியான உருதுவில் ஒரு சில வாக்கியங்களுக்கு மேல் பேச இயலாது என்றாலும் இந்தியாவில் உள்ள முஸ்லீம்களில் பெரும்பாலோரின் நம்பிக்கையைப் பெற்று அவர்களின் மாபெரும் தலைவராக அவரால் முடிந்தது.

இந்திய மக்களை ஜின்னா இழிவாகக் கருதினார். இந்தியாவின் புழுதியையும், வெப்பத்தையும், மக்கள் நெருக்கத்தையும் அவர் வெறுத்தார். மக்களுடன் கலந்து பழகுவதற்காக அசுத்தமான மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டியில் காந்தி இந்தியா

முழுதும் பயணம் செய்தார். மக்கள் நெருக்கத்தைத் தவிர்ப்பதற்காக ஜின்னா முதல் வகுப்பில் பயணம் செய்தார்.

அவரது எதிராளி எளிமை என்ற மூடநம்பிக்கையை உருவாக்கினார். ஜின்னாவோ ஆடம்பரத்தில் திளைத்தார். முஸ்லீம்கள் நிறைந்த நகரங்களில் அரச தோரணையுடன் ஊர்வலமாகச் செல்வதில் அவர் மகிழ்ச்சி அடைந்தார். வெற்றி வளைவுகளுக்குக் கீழே, ரோஜா போல் அலங்கரிக்கப்பட்ட தேரில் அமர்ந்து, வெள்ளி முகபடாம் அணிந்த யானை முன் செல்ல, மக்கள் கூட்டம் அறிந்த ஒரே ராகம் என்று நினைத்த, 'மன்னரைக் கடவுள் காப்பாற்றுவார்' என்ற ராகத்தை இசைக்கப் பேண்டு வாத்தியங்களுடன் அவரது ஊர்வலம் அமைந்தது.

அவரது வாழ்க்கை ஒழுக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் ஓர் உதாரணம். அவரது வீட்டுக்கு முன்னால் இருந்த தோட்டத்தின் பூஞ்செடிகள் கூட நேரான வரிசையில் ஒழுங்காக வளர்க்கப்பட்டிருந்தன. வீட்டுத் தோட்டத்தில் அவர் நடந்து செல்வது கூட பூஞ்செடிகளின் அழகைக் கண்டு ரசிப்பதற்காக அல்ல; அவை ஒழுங்கான வரிசையில் இருக்கின்றனவா என்பதைப் பார்ப்பதற் காகத்தான். சட்டப் புத்தகங்களையும் செய்தித் தாள்களையும் மட்டுமே அவர் படித்தார். இந்த வித்தியாசமான மனிதருக்கு செய்திப் பத்திரிகைகள் என்றால் மிகவும் ஆர்வம். உலகின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் அவருக்குத் தபால் மூலம் அவை வந்து சேர்ந்தன. அவற்றின் செய்திகளை வெட்டி, ஓரப்பகுதியில் குறிப்புகளை எழுதி, தகவல் சேகரிப்புப் புத்தகங்களில் கவனமாக ஒட்டி வைத்தார். இப்படி ஒட்டப்பட்ட புத்தகங்கள் அவரது அலுவலக அலமாரி களில் தூசு படிந்து அதிகரித்துக் கொண்டே சென்றன.

இந்து எதிராளிகள் பற்றி ஜின்னாவுக்கு இழிவான கருத்துதான் இருந்தது. நேரு ஒரு 'பீட்டர்பான்', 'ஓர் இலக்கியவாதி', 'ஓர்ஆங்கிலப் பேராசிரியராக இருக்க வேண்டியவர், அரசியல்வாதி அல்ல,' 'இந்து மத தந்திரங்களை மேற்கத்தியக் கல்வி என்ற போர்வைக்குள் மறைத்து வைத்திருக்கும் ஆணவக்கார பிராமணர்' என்பதுதான் நேரு பற்றிய ஜின்னாவின் கருத்து. 'நரி போன்ற தந்திரசாலி', 'இந்து மதத்தை புதுப்பிக்கின்றவர்' என்பதுதான் காந்தி பற்றிய ஜின்னாவின் கருத்து.

ஜின்னாவின் வீட்டில் நடந்த ஒரு உரையாடலுக்கிடையே, மகாத்மா வயிற்றில் மண்ணைப் பூசிக்கொண்டு, விலை மதிப்பில்லாத பாரசீகத் தரைவிரிப்புகள் ஒன்றில் படுத்துக்கொண்டு பார்த்த பார்வையை, அவரால் எப்போதும் மறக்கவும் முடியாது; மன்னிக்கவும் முடியாது.

முஸ்லீம்களுக்கிடையே ஜின்னாவுக்கு நண்பர்கள் கிடையாது; ஆதர வாளர்களே உண்டு. உதவியாளர்களைக் கொண்டிருந்தார்; சீடர்களை அல்ல. குடும்பத்தில் சகோதரியைத் தவிர மற்றவர்களைப் புறக்கணித்தார். பாகிஸ்தான் கனவு நிறைவேற மட்டுமே அவர் வாழ்ந்து கொண்டிருந்தார். ஏறத்தாழ ஆறடி உயரமுள்ள அவரின் எடை என்னவோ நூற்று இருபது பவுண்ட் தான். அவரது முகத்தில் பரவியிருந்த தோல் மிகவும் மென்மையாக இருந்ததால், புடைத்து நிற்கும் கன்னங்களின் பக்கவாட்டு எலும்புகள் அதற்கடியில் மின்னுவதுபோல் தோன்றின. தலையில் அடர்த்தியாக வெள்ளிக்கம்பிபோல் முடி இருந்தது. கடந்த பதினேழு ஆண்டுகளாக அவருடன் பல் மருத்துவரான சகோதரி தங்கியிருந்தார். இதில் ஆச்சர்யம் என்னவென்றால் அவரின் பற்கள் முழுவதும்

மஞ்சள் படிந்து நோயுற்றிருந்தன. ஜின்னாவின் முகத்தோற்றம் கடுமையான தாகவும் கிளர்ச்சியற்றும் இருந்ததால் உருக்கு போன்ற உடல் வலிமையுடன் இருப்பதாகக் காட்சியளித்தார். ஆனால் இது ஒரு பொய்த் தோற்றம்தான். மெலிந்து நோய் வாய்ப்பட்ட அந்த மனிதர், டாக்டர்களின் வார்த்தைகளில் சொல்வதானால், கடந்த மூன்று ஆண்டுகளாக அவர் வாழ்ந்து கொண்டிருப்பதே 'மன உறுதி, விஸ்கி, சிகரெட்' ஆகியவற்றால் தான்.

இவற்றில் முதலாவதாகக் கூறப்பட்டதுதான் ஜின்னாவின் சாதனைகளுக்கு முக்கிய காரணமாக இருந்தது. அவரது எதிராளிகள் அவர் மீது பல பழிகளைச் சுமத்தினார்கள். அவரது நண்பர்கள் அலட்சியக்காரர் என்று குறை கூறினார்கள். ஆனால் நண்பரோ, எதிரியோ முகமது அலி ஜின்னாவின் மனஉறுதியில் குறை இருந்ததாக எவரும் சொன்னதில்லை.

1947 ஏப்ரல் மாதத்தின் முதல் பாதியில் மவுண்ட்பேட்டனுக்கும் ஜின்னாவுக்கும் இடையே ஆறு முறை முக்கிய சந்திப்புகள் நிகழ்ந்துள்ளன. பத்து மணி நேரத்துக்குக் குறையாத இந்த முக்கியமான உரையாடல்கள் மூலம் இந்தியப் பிரச்சனைக்குத் தீர்வை உருவாக்கியிருந்தனர். 'சரியான செயல்களைச் செய்வதில் மக்களை இணங்கச் செய்யும் திறமை மீதான பெரும் நம்பிக்கையையும், அவர்கள் வழியிலேயே சென்று உண்மைகளை எடுத்துரைக்கும் தந்திரத்தையும், ஆயுதங்களாகக் கொண்டுதான்' இந்தப் பேச்சு வார்த்தைகளில் மவுண்ட் பேட்டன் ஈடுபட்டார். பிரிவினை என்ற ஜின்னாவின் பிடிவாதத்தை உடைக்க, 'என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தந்திரம் செய்தேன்; என் கற்பனைக்கெட்டியவரை வேண்டுகோள் விடுத்தேன்; எதுவும் நடக்கவில்லை' என்று பின்னாளில் மவுண்ட்பேட்டன் நினைவு கூர்ந்தார். பாகிஸ்தான் ஈடேறாத கனவு என்பதை மாற்றி அதனை அடைந்தே தீர்வதென்ற தீர்மானத்திலிருந்து ஜின்னாவை மீட்க எந்த வாதத்தாலும் முடியவில்லை.

இரண்டு விஷயங்களால் ஜின்னா தலைமைத் தகுதியைப் பெற்றிருந்தார். ஒன்று, அவர் தாமாகவே முஸ்லீம் லீகின் சர்வாதிகாரி ஆகிவிட்டார். அவருக்கு அடுத்த நிலையில் இருந்தவர்கள் சமரசம் செய்து கொள்ளத் தயாராக இருந்தார்கள். ஆனால் முகமது அலி ஜின்னா உயிரோடு இருக்கும் வரை அவர்கள் மவுனம் சாதிக்கவே செய்வார்கள். இன்னொரு முக்கியமான விஷயம், ஓராண்டுக்கு முன் கல்கத்தா வீதிகளில் சிந்திய இரத்தம், அவர்களின் நினைவிலிருந்து நீங்காதது.

மவுண்ட்பேட்டனும் ஜின்னாவும் நடத்திய பேச்சுக்களில் ஒன்றை ஒப்புக் கொண்டார்கள் - விரைவில் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதுதான் அது. சமரசத் தீர்வுக்கு சாத்தியமான கட்டத்தையெல்லாம் இந்தியா தாண்டிவிட்டது என்று ஜின்னா அறிவித்தார். ஒரே ஒரு தீர்வு மட்டும்தான் இருக்கிறது. விரைவான 'அறுவை சிகிச்சை' இல்லையென்றால் இந்தியா அழிந்துவிடும் ஜின்னா எச்சரித்தார்.

பிரிவினை ஏற்பட்டால் அதனால் வன்முறை வெடித்து ரத்தக்களறி உருவாகிவிடும் என்று மவுண்ட்பேட்டன் கவலையை வெளிப்படுத்தியபோது அப்படி நடக்காது என்று ஜின்னா உறுதியளித்தார். அவரது 'அறுவை சிகிச்சை' திட்டம் தொடங்கிவிட்டால் எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்து விடும். இந்தியாவின் இரண்டு பகுதிகளும் இணக்கத்துடன் சந்தோஷமாகவும் வாழும்

என்றார் அவர். தாம் நடத்திய வழக்கு ஒன்றை இதற்கு உதாரணமாக ஜின்னா மவுண்ட் பேட்டனிடம் கூறினார். தந்தையின் இறுதி விருப்பப் பத்திரப்படி (உயில் Will) தங்களுக்குச் சேர வேண்டிய சொத்துக்கள் விஷயத்தில் சகோதரர்களிடையே கசப்புணர்வு தோன்றியது. அவர்களின் பிரச்சனையில் நீதிமன்றம் தலையிட்டுத் தீர்ப்பு சொன்னபின் இரண்டு ஆண்டுகளில் அவர்கள் மிகவும் அந்நோன்யமாகிவிட்டார்கள். இந்தியாவின் விஷயத்திலும் இப்படித் தான் நடக்கும் என்று வைஸ்ராய்க்கு அவர் உறுதியளித்தார்.

'தனித்தன்மையான கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும், மொழியையும், இலக்கியத்தையும், கலையையும் கட்டிடக் கலையையும், சட்டங்களையும் நெறிமுறைகளையும், பழக்க வழக்கங்களையும், நாட்காட்டியையும், வரலாற்றையும் பாரம்பரியங்களையும் கொண்ட இந்திய முஸ்லீம்கள் ஒரு தேசமாகவே இருக்கிறார்கள் என்று ஜின்னா உறுதியாகத் தெரிவித்தார்.

'இந்தியா எப்போதும் ஒரு முழு தேசமாக இருந்ததில்லை' ஜின்னா திடமாகக் கூறினார். 'வரைபடத்தில் தான் அப்படி ஒரு தோற்றம் இருக்கிறது. நான் பசுக்களை உண்ண விரும்புகிறேன். ஆனால் அதைக் கொல்லக் கூடாது என்று இந்து தடுக்கிறான். என்னோடு கை குலுக்கும் ஒரு இந்து உடனடியாகக் கைகளைக் கழுவிக் கொள்கிறான். இந்துவுக்கும் முஸ்லீமுக்கும் பொதுவாக உள்ள ஒற்றுமை இருவருமே பிரிட்டிஷாருக்கு அடிமைகளாய் இருக்கிறோம் என்பதுதான்.'

தங்களுக்கிடையே நடந்த விவாதங்கள் 'சுவாரஸ்யமாகவும் அதே அளவுக்குக் கவலை அளிப்பதாகவும் மல்பரி புதரைச் சுற்றிச் சுற்றி வரும் விளையாட்டாக அமைந்தன' என்று மவுண்ட்பேட்டன் பின்னாளில் நினைவு கூர்ந்தார். 'அதிசய உலகில் ஆலீஸ்' கதையில் வரும் முயல்போல ஜின்னா ஒரு விஷயத்தில் பிடி கொடுக்கவேயில்லை. இந்திய ஒற்றுமையில் உறுதியாக இருந்த மவுண்ட்பேட்டன் பிரிவினை பற்றி அச்சம் ஏற்படும் வகையில் எல்லா கோணத்திலும் ஜின்னாவை மடக்க முனைந்தார். அந்த நேரத்தில் அவரே இப்படிக் குறிப்பிட்டிருந்தார்:'வயதான அந்த மனிதர் பைத்தியமாகி விடுவாரோ என்ற அளவுக்கு நான் அச்சுறுத்தினேன்.'

ஜின்னாவைப் பொறுத்தவரை அவர் முன்மொழிந்த பிரிவினை இயற்கையான தீர்வு. அதேசமயம் அந்தப் பிரிவினை ஒரு வளமான நாட்டை உருவாக்குவதாக இருக்க வேண்டும். அதாவது இந்தியாவின் மிகப்பெரிய மாகாணங்களான பஞ்சாபிலும் வங்காளத்திலும் ஏராளமாக இந்துக்கள் இருக்கிறார்கள் என்பது உண்மைதான் என்றாலும் அவற்றை பாகிஸ்தானுடன் சேர்க்க வேண்டும் என்று ஜின்னா வாதிட்டார்.

மவுண்ட்பேட்டனால் இதனை ஏற்க முடியவில்லை. இந்தியாவின் முஸ்லீம் சிறுபான்மையினர் அதன் இந்துப் பெரும்பான்மையினரால் ஆளப்படக் கூடாது என்பதுதான் ஜின்னாவின் அடிப்படைவாதம், அப்படியிருக்கும்போது வங்காளத்திலும் பஞ்சாபிலும் சிறுபான்மையினராக இருக்கும் இந்துக்கள் ஒரு முஸ்லீம் நாட்டிற்குச் செல்வதை எப்படி நியாயப்படுத்த முடியும்? இந்தியாவைப் பிரித்து இஸ்லாமிய நாட்டினை அடைய வேண்டும் என்று ஜின்னா வற்புறுத்தியதால், அவர் கையாண்ட அதே வாதத்தைப் பயன்படுத்தி வங்காளத்தையும் பஞ்சாபையும் பிரிக்க வேண்டும் என்று பேரம் பேசும் கட்டாயம் மவுண்ட்பேட்டனுக்கும் ஏற்பட்டது.

ஜின்னா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இப்படிச் செய்தால் பொருளாதார ரீதியில் வலுவில்லாத 'செல்லரித்த பாகிஸ்தான்' தான் தனக்குக் கிடைக்கும் என்று அவர் கூறினார். அவருக்குக் கிடைக்கப் போவது 'செல்லரித்த' நாடுதான் என்று நினைத்தால் அவர் அதனை ஏற்காமல் இருக்கலாம் என்று, பாகிஸ்தான் என்று எதையும் தர விரும்பாத, மவுண்ட்பேட்டன் அந்த முஸ்லீம் தலைவரிடம் சொன்னார்.

இதற்குப் பதிலளித்த ஜின்னா, 'வைஸ்ராய் அவர்களே, ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. ஒரு மனிதன் இந்துவாகவோ முஸ்லீமாகவோ ஆவதற்கு முன் அவன் ஒரு பஞ்சாபி அல்லது வங்காளி. அவர்களுக் கென்றிருக் கும் பொதுவான வரலாறு, மொழி, கலாச்சாரம், பொருளாதாரம் ஆகியவற்றைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நீங்கள் பிரிக்கக் கூடாது. எல்லை யற்ற ரத்தக் களறிக்கும் பிரச்சனைகளுக்குமே அது காரணமாகிவிடும்' என்றார்.

'மிஸ்டர் ஜின்னா! இதை நான் முழுமையாக ஒப்புக் கொள்கிறேன்'

'ஒப்புக் கொள்கிறீர்களா?'

'நிச்சயமாக' மவுண்ட் பேட்டன் தொடர்ந்தார். 'ஒரு மனிதன் இந்துவாகவோ முஸ்லீமாகவோ ஆவதற்கு முன் அவன் பஞ்சாபியாகவும், வங்காளியாகவும் மட்டும் இருக்கவில்லை; அதற்கும் மேலாக அவன் இந்தியனாக இருக்கிறான். இந்திய ஒற்றுமைக்குப் பதில் சொல்ல முடியாத ஒரு வாதத்தை நீங்கள் முன் வைத்திருக்கிறீர்கள்.'

'ஆனால் உங்களுக்குப் புரியவில்லை' மீண்டும் ஜின்னா ஆரம்பிப்பார். மல்பரி புதரைச் சுற்றியபடி மீண்டும் விவாதம் தொடங்கியது.

ஜின்னாவின் பிடிவாத நிலையால் மவுண்ட்பேட்டன் அசந்து போனார். 'ஜின்னா போன்ற ஒரு அறிவுஜீவி, மெத்தப் படித்தவர், இன்ஸ்கோர்ட்டில் பயிற்சி பெற்றவர், சிந்தனையை இப்படி எளிதாக அடைத்துக் கொள்ள முடியும் என்று நான் நம்பவே இல்லை. அவர் விஷயத்தை அறிந்து கொள்ளவில்லை என்று இதற்குப் பொருளல்ல. புரிந்து கொண்டார். ஆனால் ஏதோ ஒரு திரை அதை மூடியது. மொத்தத்தில் அவர் ஒரு தீய ஞானம் பெற்றவராக இருந்தார். மற்றவர்களை இணங்கச்செய்துவிடலாம். ஆனால் ஜின்னாவிடம் அது நடக்காது. அவர் உயிரோடு இருக்கும் வரை எதுவும் நடக்காது' என்று பின்னாளில் மவுண்ட்பேட்டன் நினைவு கூர்ந்தார்.

மவுண்ட்பேட்டன் இந்தியாவுக்கு வந்த மூன்று வாரங்களுக்குள் ஏப்ரல் 10ஆம் தேதி அவர்களின் பேச்சு வார்த்தை உச்சக்கட்டத்துக்கு வந்தது. இந்தியாவை ஒற்றுமையாக வைத்திருக்க சுமார் இரண்டு மணி நேரம் ஜின்னாவிடம் மவுண்ட்பேட்டன் கெஞ்சினார், புகழ்ந்து பேசினார், விவாதம் செய்தார், வேண்டிக் கேட்டார். ஒற்றுமையாக இருந்தால் இந்தியா எதையெல்லாம் சாதிக்க முடியும் என்ற சித்திரத்தையே வார்த்தைகளால் தீட்டினார். பல இனங்களையும் மதங்களையும் கொண்ட 400 மில்லியன் (40 கோடி) மக்கள் தொகை உள்ள இந்தியா ஒரு மைய அரசுடன் இருந்தால், அதன் பொருளாதார பலத்தால் தொழில் வளம் பெருகும்; தூரகிழக்கு நாடுகளில் ஓரே ஒரு பலம் வாய்ந்த நாடு என்ற முறையில் உலக விவகாரங்களில் பெரும் பங்காற்ற முடியும். ஜின்னா இதையெல்லாம் அழிக்க விரும்பமாட்டார். இந்தத் துணைக் கண்டத்தை மூன்றாந்தர சக்தியாக நிச்சயம் அவர் குறைத்துவிடமாட்டார் என்றெல்லாம் பேசிப் பார்த்தார்.

ஆனால் ஜின்னா அசைவற்றிருந்தார். 'தனி பாகிஸ்தான் என்ற கெடு சிந்தனைக்கு ஆட்பட்டு சித்தப் பிரமை பிடித்தவராகிவிட்டார் அவர்' என்று கவலையுடன் ஒரு முடிவுக்கு வந்தார் மவுண்ட்பேட்டன்.

ஜின்னா புறப்பட்டுச் சென்ற பின் கூட்ட அறையில் தனியாக இருந்த மவுண்ட்பேட்டன், ஜின்னா எதை விரும்புகிறாரோ அதைக் கொடுக்க வேண்டிய நிலைதான் ஏற்படும் என்பதை உணர்ந்தார். அவரது முதல் கடமை இந்தியாவுக்குத் தன்னை அனுப்பி வைத்த பிரிட்டனுக்கு விசுவாசமாக இருப்பதுதான். இந்தியாவின் ஒற்றுமையை அவர் பெரிதும் விரும்பினார். ஆனால் குழப்பத்திலும் வன்முறையிலும் சிதறுண்டு போகும் இந்தியாவுக்குள், எந்தவித நம்பிக்கையுமின்றி, தமது நாட்டைச் சிக்கவைத்து அதனைச் செய்ய முடியாது என்று அவர் கருதினார்.

இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டாக வேண்டும்; அதுவும் விரைவாக, ஆனால், கட்டாயப்படுத்தி யார் மீது அதனைத் திணிக்கவும் முடியாது. ராணுவத் தளபதியாக இருந்த அனுபவம் விரைந்தும் தீர்மானகரமாகவும் முடிவெடுக்கும் மனத்துணிவை மவுண்ட்பேட்டனுக்கு அளித்தது. ஒரு ராஜதந்திரி போல் அல்லாமல் மூர்க்கமான மாலுமிபோல செயல்பட்டு மிகவும் அவசரமாக முடிவெடுத்து விட்டார் என்று எதிர்கால விமர்சகர்கள் அவரைக் குறை கூறலாம். இருப்பினும் பயனற்ற விவாதங்களை நடத்தி மேலும் காலத்தை வீணாக்க மவுண்ட்பேட்டன் விரும்பவில்லை. வேண்டுமானால் கடைசி வரை ஜின்னாவுடன் விவாதிக்கலாம்; பயன் என்னவோ இந்தியாவில் நரகம் ஏற்படுவதுதான் என்ற முடிவுக்கு அவர் வந்தார்.

அவர் செயல்படுத்த நினைத்த ஆபரேஷன் செடக்ஷன் திட்டம் முஸ்லீம் தலைவரிடம் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டது என்பதை மனம் திறந்து ஒப்புக் கொள்ள தயாராக இருந்தார். இந்தியப் பிரிவினைதான் தப்பிச்செல்ல ஒரே வழி என்ற எண்ணம் அதிகரித்து வந்தது. இந்தத் திட்டத்தை நேருவையும் படேலையும் ஏற்கச் செய்வதும், அவர்களின் ஆதரவை வென்றெடுப்பதற்கான திட்டத்தை வகுப்பதும்தான் மவுண்ட்பேட்டன் முன் இப்போதுள்ள பணியாகும்.

அடுத்த நாள் காலையில் ஜின்னாவுடன் நடத்திய பேச்சுக்கள் பற்றி தனது அலுவலர்களுடன் மவுண்ட்பேட்டன் ஆய்வு செய்தார். பின்னர் வருத்தத் துடன், அவரது தலைமை அலுவலரான இஸ்மே பிரபு பக்கம் திரும்பினார். இந்தியப் பிரிவினைக்கான திட்டம் வரைவதைத் தொடங்கும் காலம் நெருங்கிவிட்டது என்று அவர் சொன்னார்.

★

மவுண்ட்பேட்டனின் முடிவு நவீன வரலாற்றில் தவிர்க்க முடியாதபடி கவனத்தைக் கவரக்கூடிய மாபெரும் நிகழ்வாக இருக்கும். எந்த வகையில் இதை செயல்படுத்தினாலும், பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தில் மூன்றரை நூற்றாண்டு களாக ஒற்றுமையுடன் இருந்த மாபெரும் நாட்டைத் துண்டாடுவதில்தான் அது முடியும் என்பது உறுதி. முகமது அலி ஜின்னாவின் கோரிக்கையை நிறைவேற்ற இந்தியாவின் மிகவும் தனித்தன்மை வாய்ந்த பஞ்சாபையும் வங்காளத்தையும் பிரிக்க வேண்டியிருக்கும். இதன் விளைவு, பூகோள அமைப்பின்படி

பாகிஸ்தான் இரண்டு தலையுள்ள ஒரு நாடாக இருக்கும். இவற்றுக்கு இடையே இமயமலை சிகரங்களும் இந்தியப் பகுதிகளும் என 970 மைல் இடைவெளி இருக்கும். பாகிஸ்தானின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு இந்தியத் துணைக் கண்டத்தைச் சுற்றி கப்பலில் செல்ல இருபது நாட்கள் தேவைப்படும். இது கராச்சியிலிருந்து மார்ஸிலெஸூக்கு (Marseilles) செல்வதை விட அதிகக் காலம் ஆகும். பாகிஸ்தானின் இரண்டு பகுதிகளுக்கிடையே நிற்காமல் பயணம் செய்ய வேண்டுமானால் நான்கு என்ஜின் கொண்ட விமானம் தேவை. ஒரு புதிய நாட்டுக்கு இது மிகவும் செலவு பிடிக்கும். ஆடம்பரம் என்பதை அது நிரூபிக்கும்.

பாகிஸ்தானின் இரண்டு பகுதிகளைப் பிரிக்கும் புவியியல் தூரம் மிக அதிகமானது என்றால் இந்த இரு பகுதி மக்களுக்கு இடையே மன ரீதியிலான தூரமோ அதைவிட அதிகமானது. கருணைமிக்க ஒரே கடவுள் அல்லா என்ற பொதுவான நம்பிக்கையைத் தவிர பஞ்சாபிகளும் வங்காளிகளும் வேறு எதையும் பகிர்ந்து கொள்ளவில்லை. அவர்கள் ஃபின்லாந்துக்காரர்களையும் கிரேக்கர்களையும் போல கருத்து வேறுபட்டவர்கள். வங்காளிகள் குள்ளமாக, கருப்பாக, சுறுசுறுப்பாக இருப்பவர்கள். இனரீதியில் ஆசிய மக்களின் ஒரு பகுதியினர். பஞ்சாபிகளோ, மத்திய ஆசியாவின் பாலைவனப் பகுதியைச் சேர்ந்தவர்களின் வழித் தோன்றல்கள். அவர்களின் நாடி நரம்புகளில் முப்பது நூற்றாண்டுகள் பலரை வென்றடக்கிய ரத்தம் பாய்ந்து கொண்டிருந்தது. ஆரியர்களின் உடற்கட்டினைக் கொண்ட அவர்களிடம் துர்க்கிஸ்தான் (Turkistan), ரஷ்யா, பாரசீகம், பாலைவனங்களைக் கொண்ட அரேபியா ஆகிய நாடுகளின் மக்களது அடையாளங்கள் இருந்தன. இந்த இரண்டுவகை மக்களுக்கிடையே வரலாறோ, மொழியோ, கலாச்சாரமோ பாலமாக இருந்து தொடர்பை ஏற்படுத்தவில்லை. இவர்கள் பாகிஸ்தான் என்ற பொதுவான நாட்டில் ஒன்றுபடுதல் என்பது அனைத்து தர்க்க நியாயங்களுக்கும் எதிராய் உருவாக்கப்பட்டதாகவே இருக்கும்.

இந்திய மகுடத்தின் மாணிக்கமாக இருந்தது பஞ்சாப். அதன் பரப்பு ஃபிரான்சில் பாதி அளவு, வடமேற்குப் பகுதியில் உள்ள சிந்து நதியில் தொடங்கி டில்லியின் புறநகர் வரை நீண்டிருந்தது. பளபளக்கும் ஆறுகளையும், நீலவானத்தின் எல்லைவரைப் பரந்து கிடக்கும் வளமான பொன்னிற கோதுமை விளையும் வயல்களையும் கொண்டது. இந்தியாவின் வறண்ட முகத்தின் மத்தியில் கடவுள்களின் ஆசியால் சோலைவனமாக அது காட்சியளித்தது. அதன் பெயருக்கு 'ஐந்து நதிகளின் நாடு' என்றுபொருள். இந்த ஐந்து ஜீவ நதிகளின் தண்ணீர்தான் பஞ்சாபுக்கு இயற்கை வளத்தை அளித்தது. உலகின் புகழ்மிக்க பெரிய நதிகளில் ஒன்றான சிந்து இந்த ஐந்து நதிகளில் ஒன்றாகும். இந்தியத் துணைக் கண்டத்துக்கு இந்த நதிதான் பெயர் தந்தது.

ஐந்தாயிரம் ஆண்டுகால கொந்தளிப்பான வரலாறுதான் பஞ்சாபின் கலாச்சாரத்தை நவீனப்படுத்தி ஒரு தனித் தன்மையை அதற்கு அளித்திருந்தது. ஆசியாவை வென்றடக்கிய குதிரைகளின் குளம்பொலிகள் அதன் சமவெளிகளில் எதிரொலித்தபடி இருந்தன. கிருஷ்ணபகவானுக்கும் அரச வீரனான அர்ஜுனனுக்கும் இடையே நடந்த ஆன்மீக உரையாடல்களின் தொகுப்பான தெய்வத்தன்மை வாய்ந்த பாடல்களைக் கொண்ட இந்துக்களின் புனித நூலான பகவத் கீதை உருவானது பஞ்சாபில்தான். பாரசீக வீரர்களான

டேரியஸ், சைரஸ் ஆகியோரும் மகா அலெக்சாண்டரின் மெசிடோனிய வீரர்களும் இதன் சமவெளிகளில் தான் முகாமிட்டனர். பல தெய்வ நம்பிக்கை கொண்ட லட்சக்கணக்கான இந்தியாவின் இந்துக்களுக்கிடையே ஒரு தெய்வ நம்பிக்கையுள்ள இஸ்லாம் நெறியைக் கொண்டு வந்த காலிஃபாக்களும், ஹூணர்களும் வந்து அவர்களுக்கு முன் இந்தியாவை ஆக்ரமித்திருந்த மவுரியர்களையும் சித்தியன்களையும், பார்த்தியன்களையும் விரட்டினர். மூன்று நூற்றாண்டு மொகலாயர் ஆட்சிக்காலம் இந்தியாவை வல்லமையின் உச்சிக்குக் கொண்டு சென்றது. விலை மதிக்க முடியாத நினைவுச் சின்னங்கள் நாடு முழுவதும் பரவியிருந்தன. இறுதியில் பஞ்சாபை பிரிட்டிஷார் வென்று ஆக்ரமிப்பதற்கு முன், சுருண்ட தாடியையும், பலவண்ண டர்பன்களுக்குள் சுருட்டி வைக்கப்பட்ட, வெட்டாத தலை முடியையும் கொண்ட பஞ்சாப் மண்ணின் மைந்தர்களான சீக்கியர்கள் அவர்கள் பங்குக்கு இந்த மாகாணத்தை வென்றார்கள்.

கடந்தகால புகழ் வாய்ந்த மொகலாயர்களின் நினைவுச் சின்னங்களை அலங்கரித்த பளிங்குக் கற்களில் இருந்த நுட்பமும் சிக்கலும் கலந்தது போல பஞ்சாப் இருந்தது. இதனைப் பிரிப்பது அங்குள்ள மக்களிடம் ஆற்ற முடியாத ரணங்களை ஏற்படுத்துவதாகிவிடும். பஞ்சாபின் 17,932 நகரங்களிலும் கிராமங்களிலும் 15 மிலியன் (1 . 5 கோடி) இந்துக்களும், 16 மிலியன் (1 . 6 கோடி) முஸ்லீம்களும், 5 மிலியன் (50 லட்சம்) சீக்கியர்களும் வாழ்ந்தார்கள். மதத்தால் வேறுபட்டிருந்தாலும் அவர்கள் பொதுவாக ஒரு மொழியிலேயே பேசினார்கள். பொதுவான பாரம்பரியங்களைப் பற்றி நின்றனர். தனித்தன்மை வாய்ந்த பஞ்சாபி வாழ்க்கை முறையிலும் அவர்கள் சமஅளவு பெருமிதம் கொண்டார்கள். அவர்களின் பொருளாதாரப் பரிமாற்றங்கள் மேலும் நெருக்கமாகப் பிணைந்து கிடந்தன. அந்தப் பகுதியின் வளம், மனிதன் உருவாக்கிய அதிசயத்தை அடிப்படையாகக் கொண்டது. இயற்கையாகவே அது பிரிக்க முடியாதது. பிரிட்டிஷாரால் உருவாக்கப்பட்ட பாசனக் கால்வாய்கள் என்ற கட்டமைப்பு இந்தியாவின் தானியக் களஞ்சியமாகப் பஞ்சாபை மாற்றியிருந்தது. கிழக்கிலிருந்து மேற்காக அந்த மாகாணம் முழுவதும் பரந்து விரிந்து ஓடிக் கொண்டிருந்த கால்வாய்களின் கிளைகள் வறண்ட பாலைவனப் பகுதியைக்கூட விளைநிலமாக மாற்றின. இதன்மூலம் லட்சக்கணக்கான பஞ்சாபிகளின் வாழ்க்கை வளமானது. பாசனக் கால்வாய் கட்டமைப்பு போலவே பஞ்சாபின் ரயில்வேக்கள் மற்றும் சாலைகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. இவை பஞ்சாபின் உற்பத்திப் பொருள்களை இந்தியாவின் பிற இடங்களுக்குக் கொண்டு செல்ல வசதியாக இருந்தன. பிரிக்கப்பட்ட பஞ்சாபின் எல்லைப் பகுதி வடக்கிலிருந்து தெற்காகச் செல்லும் அந்த மாகாணத்தின் ரத்த நாளங்களைத் துண்டாடுவது போல இரண்டாகப் பிரிக்கப்படும். பெருமிதமும் போர்க்குணமும் நிறைந்த சீக்கிய சமூகத்தை இரண்டாகப் பிரிக்காமல் யாராலும் எல்லைக் கோட்டை வரைய முடியாது. அப்போது குறைந்தது இரண்டு மிலியன் (20 லட்சம்) சீக்கியர்களும், வறண்டு கிடந்ததை மாற்றியமைத்த அவர்களின் வளம் கொழிக்கும் நிலங்களும், சில புனிதத்தலங்களும் ஒரு முஸ்லீம் நாட்டுக்குள் இருக்க வேண்டியிருக்கும்.

எல்லைக்கோடு எப்படிச் சென்றாலும், இதன் விளைவு லட்சக்கணக்கான மக்களுக்குப் பெரும் துன்பமாக இருக்கப் போவது நிச்சயம். வரலாற்றில் முன் எப்போதும் கண்டிராத அளவுக்குப் பெருமளவிலான மக்கள் பரிமாற்றம்

செய்துகொள்ளப்படுவதே அழிவிலிருந்து காப்பாற்றும் ஒரேவழி. இஸ்மே பிரபுவுக்குக் கட்டளையிடப்பட்டுள்ள பிரிவினைத் திட்டம் செயற்படுத்தப்படு மானால், சிந்து நதியிலிருந்து டில்லி வரை சுமார் 500 மைல் தூரத்துக்குட்பட்ட பகுதியில் இருக்கும் எந்தவொரு நகரமோ, கிராமமோ, பருத்தி நிலமோ கோதுமை வயலோ பாதிப்பிலிருந்து தப்ப முடியாது.

துணைக்கண்டத்தின் மற்றொரு பகுதியில் உள்ள வங்காளப் பிரிவினை என்பதிலும் மற்றொரு துயரத்தை ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகள் உள்ளன. வங்காளத்தில் 35 மிலியன் (3 5 கோடி) முஸ்லீம்களும், 30 மிலியன் (3 கோடி) இந்துக்களும் வாழ்கிறார்கள். கிரேட் பிரிட்டனிலும் அயர்லாந்திலும் வாழும் மக்கள் தொகையைச் சேர்த்து வரும் எண்ணிக்கையை விட இது அதிகம். இமயமலை அடிவாரத்தில் புலிகள் நிறைந்த வனப்பகுதியில் தொடங்கி, கங்கை மற்றும் பிரம்மபுத்திராவின் ஆயிரத்துக்கும் அதிகமான கிளை நதிகள் ஓடி வங்கக் கடலில் கலக்கும் இடம் வரை வங்காளம் பரந்த நிலப்பரப்பைக் கொண்டது. இரண்டு மதங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கிற வேறுபாடு இருந்தாலும், பஞ்சாபைக் காட்டிலும் வங்காளத்துக்குச் சிறப்பான தனித்தன்மை உண்டு. இங்கே வாழ்பவர்கள் இந்துவோ, முஸ்லீமோ ஒரே இனத்திலிருந்து தோன்றியவர்கள். ஒரே மொழி பேசுவோர். ஒரே கலாசாரம் உடையோர். தரையில் அமர்வதில் வங்காளிகள் தனியொரு முறையைப் பின்பற்றினர். இவர்களின் பேச்சுக்கென்று தனிப்பட்ட ஒலிக்குறிப்பு இருந்தது. மெல்லத் தொடங்கி படிப்படியாக உச்சத்துக்குச் செல்லும் தன்மையில் இவர்களின் மொழியமைப்பு இருந்தது. தங்களுக்கே உரிய வங்காளப் புத்தாண்டை ஆண்டுதோறும் ஏப்ரல் 15இல் கொண்டாடுகிறார்கள். தாகூரைப் போன்ற கவிஞர்கள் வங்காளிகள் அனைவராலும் பெருமையுடன் போற்றப் படுகிறார்கள்.

கிருத்து பிறப்பதற்கு முன் வங்காளத்தில் புத்த சமய கலாசாரம் மலர்ந்த காலத்திலிருந்தே இவர்களின் கலாச்சாரம் தொடங்குகிறது. கிருத்துவுக்குப் பிந்தைய முதல் நூற்றாண்டில் இருந்த ஒரு இந்து மன்னர் காலத்தில் இவர்கள் புத்த மதத்தைக் கைவிட்டார்கள். வங்காளத்தின் கிழக்குப் பகுதியில் இருந்தவர்கள், இந்துக்களின் ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபடுவதற்காக, முஸ்லீம் போர் வீரர்களின் வருகைக்கு வாழ்த்து தெரிவித்தார்கள். ஆர்வத்துடன் இஸ்லாம் மதத்தைத் தழுவினார்கள். அதன் பிறகே வங்காளம் மதரீதியில் இரண்டு பகுதிகளாகப் பிரிந்தது - கிழக்கே முஸ்லீம்கள்; மேற்கே இந்துக்கள்.

இந்தியாவை ஆட்சி செய்த வைஸ்ராய்களிலேயே மிகவும் திறமையானவ ரான கர்சன் பிரபு வங்காளத்தில் உள்ள மத வேறுபாடுகளை சாதகமாக்கிக் கொண்டு நிர்வாக வசதிக்காக 1905இல் வங்காளத்தை இரண்டாகப் பிரிக்க முயற்சி செய்தார். ஆறாண்டு காலப் போராட்டத்துக்குப் பின் அவரின் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. வங்காளிகள் மத உணர்வுகளை விட தேசிய உணர்வுகளுக்கே அதிகம் மதிப்பளிப்பவர்கள் என்பது அந்த ரத்தம் சிந்திய போராட்டத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டது.

பஞ்சாப், கடவுளின் ஆசீர்வாதத்துக்கு உரியதென்றால் வங்காளம், அதன் சாபத்துக்கு உட்பட்டது. வறட்சியும், புயல் வெள்ளமும் மாறி மாறி ஏற்படும் பூமியாக அது இருந்தது. இங்குள்ள நிலத்தின் ஈரப்பதம் நெல், சணல் என்ற இரண்டு பயிர்களுக்கு சாதகமாக அமைந்து வளத்தை அளித்தது. இந்த இரண்டு

பயிர்களும்கூட வங்காளத்தை மத ரீதியாகப் பிரித்தன. மேற்கே உள்ள இந்துக்களுக்கு நெல்; கிழக்கேயுள்ள முஸ்லீம்களுக்கு சணல்.

இருப்பினும் வங்காளத்தின் முக்கிய வளர்ச்சி இந்த இரண்டு பயிர்களில் மட்டும் இல்லை. இந்தியாவை வெல்வதற்கு பிரிட்டனுக்கு முதற்படியாக அமைந்த, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் லண்டனுக்கு அடுத்தபடியாகப் பெரிய நகரமாயுள்ள, ஆசியாவின் முதலாவது துறைமுகத்தைக் கொண்ட கல்கத்தா நகரம் மிக முக்கியமானதாகும். இந்த நகரம்தான் 1946 மதக்கலவரத்தின் போது பயங்கர கொலைக்களமானது.

வங்காளத்தில் உள்ள சாலைகள், ரயில்வேக்கள், கச்சாப் பொருள்கள், தொழிலகங்கள் என எல்லாம் கல்கத்தாவையே மையமாகக் கொண்டிருந்தன. வங்காளம் கிழக்கு மேற்கு என பிரிக்கப்பட்டால், புவியியல் ரீதியாக கல்கத்தா இந்துக்களுக்கான மேற்குப்பகுதியில் இருக்கும் என்பது உறுதி. அந்த நிலை கிழக்கே உள்ள முஸ்லீம்களின் வளர்ச்சியை மெல்லப் பாதிக்கும்; ஆனால் பெருமளவுக்கு மூச்சுத் திணறலை ஏற்படுத்தும். உலகில் சணல் விளையும் பெரும்பகுதி கிழக்கு வங்காளத்தில் இருக்கிறதென்றால் அதனைக் கயிறாக, சோணிகளாக, துணியாக மாற்றும் அனைத்துத் தொழிற்சாலைகளும் மேற்குவங்காளத்தில் உள்ள கல்கத்தாவைச் சுற்றியுள்ளன. முஸ்லீம்களுக்குரிய கிழக்குப் பகுதியில் சணல் நிறைய விளைந்தாலும் உணவுப் பொருள் உற்பத்தி இல்லை. அந்தப் பகுதியின் லட்சக்கணக்கான மக்கள், நெல் விளையும், இந்துக் களுக்குரிய மேற்குப் பகுதியைத்தான் எதிர்பார்த்து வாழ வேண்டியிருக்கும்.

பிரிட்டிஷ் ஆட்சியில் வங்காளத்தின் கடைசி கவர்னராக இருந்தவரும், கையெறி குண்டுகள் படைப்பிரிவின் முன்னாள் சார்ஜன்டும், ரயில்வே தொழிற்சங்கத்தின் முன்னாள் தலைவருமான சர் ஃப்ரடெரிக் பர்ரோஸ் (Sir Frederic Burrows) 1947 ஏப்ரலில் ஒரு கணிப்பைக் கூறினார். இந்தியாவில் பிரிவினை ஏற்பட்டால், பின்னாளில் பங்களாதேஷ் என்று அழைக்கப் படப்போகிற, கிழக்கு வங்காளம் வரலாற்றிலேயே மிகப்பெரிய கிராமப்புற குடிசைப்பகுதியாக இருக்கும் என்பதுதான் அவரது கணிப்பு.

பிரிவினை கோரிக்கைக்கான காரணங்கள் தர்க்க வாதத்துக்குப் பொருத்த மானதாக இல்லை. ஜின்னா கோரும் பாகிஸ்தான் முழுமையாக உருவாகி விட்டாலும் கூட, பல பகுதிகளில் வாழும் பாதியளவு முஸ்லீம்கள் இந்தியாவிலேயே இருப்பார்கள். இதனால் பெரும்பான்மையான இந்துக்களின் ஆட்சியில் சிறுபான்மையான முஸ்லீம்கள் சமமாக நடத்தப்படமாட்டார்கள் என்ற ஜின்னாவின் வாதம் முழுமை அடையாது. இந்தியாவின் பல பகுதிகளிலும் இவர்கள் பரவிக் கிடப்பதால் இவர்களை மதங்கள் அடிப் படையில் பிரிப்பது சாத்தியமில்லை. இந்துக்கள் என்ற கடலில் தீவுகளாக இருக்கும் இவர்களே நாடுகளுக்கிடையே மோதல் ஏற்பட்டால் முதல் பலியாக இருப்பார்கள். பாகிஸ்தானின் நன்னடத்தைக்கு இந்திய முஸ்லீம்கள் பிணைக் கைதிகளாகி விடுவார்கள். பிரிவினைக்குப் பிறகும் இந்தியாவில் 50 மிலியன் (5 கோடி) முஸ்லீம்கள் இருப்பார்கள். இந்த எண்ணிக்கையால், இந்தோனேஷி யாவுக்கும், இந்தியாவின் கருப்பையிலிருந்தே பிறக்கப்போகும் நாட்டுக்கும் அடுத்தபடியாக, உலகிலேயே அதிக எண்ணிக்கையில் முஸ்லீம்கள் வாழும் மூன்றாவது நாடாக இந்தியா இருக்கும்.

★

1947 ஏப்ரல் மாதத்தில் லூயி மவுண்ட்பேட்டனோ, ஜவஹர்லால் நேருவோ, மகாத்மா காந்தியோ ஒரு ரகசியத்தை அறிந்திருந்தால் இந்தியாவை அச்சுறுத்திய பிரிவினையைத் தவிர்த்திருக்கலாம். அந்த ரகசியம் ஒரு துண்டு ஃபிலிம் மீது சாம்பல் நிறப்பகுதியில் காணப்பட்டது. அந்த ஃபிலிம் முன்பே கிடைத்திருந்தால் அது இந்தியஅரசியல் நிலையையே தலைகீழ் ஆக்கியிருக்கும்; கிட்டத்தட்ட ஆசியாவின் வரலாற்றையே கூட மாற்றியிருக்கும். உலகின் துப்பறியும் அமைப்புகளில் மிகவும் திறமையானது என்று கருதப்படும் பிரிட்டிஷ் சிஐடி பிரிவுக்கும் அந்த ரகசியம் தெரிந்திருக்கவில்லை என்பதுதான் இன்னமும் வியப்புக்குரியது.

அந்த ஃபிலிமில் இரண்டு கரிய வட்டங்கள் இருந்தது முக்கிய அம்சமாகும். நிலவால் மறைக்கப்பட்டு சூரிய கிரகணம் ஏற்படும்போது வெள்ளி வளையம் தெரிவது போல அந்தக் கருநிற வட்டங்களின் விளிம்பில் வெள்ளை நிறக் கோடுகள் தெரிந்தன. இவற்றுக்கு மேல், மார்புக் கூட்டின் மேல்பகுதி வரை அந்த ஃபிலிமின் சாம்பல் நிறப் பகுதி முழுவதும் வரிசையாக வெள்ளை நிறப்புள்ளிகள் காணப்பட்டன. அது ஒரு எக்ஸ்-ரே ஃபிலிம். அந்த எக்ஸ்-ரே ஒரு மனிதரின் இரண்டு நுரையீரல்களைப் படம் பிடித்தது. நுரையீரல்களில் விழுந்த ஓட்டைகள்தான் அந்தக் கரிய வட்டங்கள். அந்த ஓட்டைகள் காரணமாக நுரையீரலின் முக்கியமான திசுக்கள் வெகுகாலம் வாழமுடியாது. தொடர்ச்சியாக இருந்த வெள்ளை நிறப் புள்ளிகள், நுரையீரல் திசுக்கள் ஏற்கெனவே சிதைந்து போயிருப்பதன் அறிகுறியாகும். காசநோய் நுரையீரல்களை பாதித்திருக்கிறது என்பது இதன் மூலம் உறுதியானது. சேதம் ஏற்கெனவே அதிகமாகிவிட்டது. இந்த ஃபிலிமில் உள்ள நுரையீரல்களைக் கொண்ட மனிதர் அதிகபட்சம் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள்தான் உயிர்வாழ முடியும்.

எந்தக் குறிப்பும் எழுதப்படாமல் ஒரு உறைக்குள் வைத்து சீலிடப்பட்ட அந்த எக்ஸ்-ரே ஃபிலிம் பம்பாயைச் சேர்ந்த டாக்டர் ஜே.ஏ.எல்.படேலின் அலுவலகத்தில் பத்திரமாகப் பூட்டி வைக்கப்பட்டிருந்தது. இந்தியாவின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்கு முயற்சிகளை மேற்கொண்ட லூயி மவுண்ட்பேட்டனை விரக்தியடையச் செய்த, நெளிவு சுளிவற்ற பிடிவாதக்கார மனிதரின் நுரையீரல்கள்தான் அந்த ஃபிலிமில் பதிந்திருந்தன. இந்திய ஒற்றுமைக்கும் வைஸ்ராய்க்கும் இடையே, ஒரு அசையாத் தடையாக இருந்த முகமது அலி ஜின்னா இயற்கை விதித்த மரண தண்டனையை எதிர்நோக்கி வாழ்ந்து கொண்டிருந்தார்.

மவுண்ட்பேட்டன் வருவதற்கு 9 மாதங்களுக்கு முன்னால் 1946 ஜூனில் டாக்டர் படேல் அந்த எக்ஸ்-ரேயை டெவலப்பிங் தொட்டியிலிருந்து எடுத்தார். ஜின்னாவின் வாழ்க்கை விரைவில் முடியப்போகிறது என்பதை எச்சரிக்கும் அந்தக் கொடிய நோயை அவர் கண்டறிந்தார். சத்துணவில்லாமல் வாழும் லட்சக்கணக்கான இந்தியர்களின் உயிரை ஆண்டுதோறும் பறிக்கும் கொடிய காசநோய், எழுபது வயதான பாகிஸ்தான் பிதாமகரின் நுரையீரல்களை ஆக்ரமித்திருந்தது.

பலவீனமான நுரையீரல் அமைப்பு காரணமாக வாழ்நாள் முழுவதுமே ஜின்னா கஷ்டப்படத்தான் செய்தார். போர்க் காலத்துக்கு முன் நுரையீரல் சவ்வு அழற்சி நோயால் பாதிக்கப்பட்ட அவர் பெர்லினில் சிகிச்சை பெற்றார். இதன்

பிறகு தொடர்ந்து மார்புச்சளி (பிராங்கைட்டிஸ்) நோயால் பீடிக்கப்பட்டதால் பலம் குறைந்தது. மூச்சுக் குழல் பலவீனமானது. இதனால் நெடிய பேச்சுக்கு அவர் முயற்சி செய்தால் மணிக்கணக்கில் மூச்சிறைக்கும் நிலை அவருக்கு ஏற்படும்.

1946 மே மாதப் பிற்பகுதியில் சிம்லாவில் இருந்தபோது முஸ்லீம் லீக் தலைவரை மீண்டும் பிராங்கைட்டிஸ் நோய் தாக்கியது. ஜின்னாவின் அன்புக்குரிய சகோதரி ஃபாத்திமா அவரை ரயில் மூலம் பம்பாய்க்கு அழைத்து வந்தார். ஆனால் வழியிலேயே அவரின் உடல்நிலை மோசமானது. இதனால் டாக்டர் படேலுக்கு அவசர அழைப்பு அனுப்பினார். விரைந்து வந்த படேல் பம்பாய்க்கு வெளியே ஜின்னா பயணம் செய்த ரயிலில் ஏறினார். தனது புகழ்மிக்க நோயாளியின் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது என்பதை உடனடியாக அவர் புரிந்து கொண்டார். பம்பாயின் கிரேண்ட் ரயில்ரோடு நிலையத்தில் அளிக்கப்படவிருக்கும் வரவேற்பை ஏற்றுக் கொள்ள முயற்சி செய்தால் இறந்துபோவீர்கள் என்று ஜின்னாவை எச்சரித்த படேல் அவரை மூட்டைக் கட்டி ஒரு புறநகர் ரயில் நிலையத்தில் இறக்கி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுவிட்டார். அங்கே இருந்தபோது ஜின்னா இழந்த பலத்தை மெதுவாக மீண்டும் பெற்றார். அப்போது படேல் கண்டறிந்ததுதான் இந்தியாவின் மிகவும் பாதுகாக்கப்பட்ட ரகசியமானது.

ஜின்னா சாதாரண காச நோயாளியாக இருந்திருந்தால் அவரது வாழ்க்கையின் எஞ்சிய பகுதியை ஒரு சானடோரியத்தில் கழித்திருக்கக் கூடும். ஆனால் ஜின்னா சாதாரண நோயாளி அல்ல. மருத்துவமனையிலிருந்து வந்த பின் அவரை படேல் தனது அலுவலகத்துக்குக் கொண்டு சென்றார். நண்பரும் நோயாளியுமான ஜின்னாவிடம் அவரைப் பாதித்திருக்கும் மரணம் தரும் நோய் பற்றி கவலையுடன் படேல் விவரித்தார். அவரின் உடல் வளம் ஏறத்தாழ முடிவை நெருங்கிவிட்டது. பணிச்சுமையை வெகுவாகக் குறைத்துக் கொள்ளாவிட்டால், தொடர்ந்து நிறைய ஓய்வெடுக்காவிட்டால், சிகரெட்டையும், குடிப் பழக்கத்தையும் கைவிடாவிட்டால், உணர்ச்சிவசப்படாமல் இருக்காவிட்டால், அவரால் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேல் உயிர்வாழ முடியாது என்று படேல் ஜின்னாவிடம் கூறினார்.

கடுமையான இந்தத் தகவலை ஜின்னா அலட்டிக் கொள்ளாமல் கேட்டார். வெளிறிய அவரது முகத்தில் சிறிய உணர்ச்சி வெளிப்பாடும் இதனால் ஏற்படவில்லை. வாழ்க்கையின் லட்சியத்தைக் கைவிட்டு சானட்டோரியம் படுக்கையில் கிடப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அவர் படேலிடம் கூறினார். இந்திய முஸ்லீம்களின் வரலாற்றில் மிகவும் சிக்கலான இந்தத் தருணத்தில், அவர்களுக்குத் தலைமையேற்பது என்று தாமாகவே ஏற்றுக் கொண்ட பணியிலிருந்து, கல்லறையைத் தவிர வேறெதுவும் தம்மை திசை திருப்பிவிட முடியாது என்றார் அவர். அந்த மகத்தான கடமைக்குப் பொருத்தமாக இருந்தால் மட்டுமே அவர் டாக்டர்களின் ஆலோசனையைக் கேட்பார். பணிச்சுமையைக் குறைத்துக் கொள்வார். அவர் செத்துக் கொண்டிருக்கிறார் என்பதை இந்து எதிரிகள் அறிந்து கொண்டால் அவர்களின் ஒட்டுமொத்த அரசியல் பார்வையும் மாறிவிடும் என்பது ஜின்னாவுக்குத் தெரியும். அவர் கல்லறைக்குச் செல்லும் வரை அவர்கள் காத்திருந்து, அவருக்குப் பின்னுள்ள, சஞ்சலம் நிறைந்த, முஸ்லீம் லீக் தலைவர்களின்

உதவியுடன் அவரது கனவைத் தகர்த்து விடுவார்கள் என்றும் ஜின்னா எண்ணினார்.*

இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை டாக்டர் படேல் ரகசியமாகத் தந்த ஊசி மருந்து மூலம் உடலைத் தேற்றிக் கொண்ட ஜின்னா பணிகளில் ஈடுபட்டார். இருப்பினும் டாக்டர்களின் ஆலோசனைகளைப் பின்பற்ற எந்த முயற்சியும் செய்யவில்லை. வரலாற்றுக் கடமையை சந்திக்க வேண்டிய அவர் கண்ணாமூச்சி ஆடும் மரணத்தின் சந்திப்பை அனுமதிக்கப் போவதில்லை. அணையப் போகும் மெழுகுவர்த்தி பிரகாசமாய் எரிவது போல, வாழ்க்கை மெழுகுவர்த்தி அணைவதற்கு முன் பிரகாசிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அசாதாரண தைரியத்துடன் தனது நோக்கத்தை அடைய ஜின்னா கடுமையாகப் பாடுபட்டார். இந்தியாவின் எதிர்காலம் பற்றி அவர்கள் நடத்திய முதல் பேச்சு வார்த்தையின்போது 'விரைவுபடுத்துங்கள், அதுதான் ஒப்பந்தத்தின் சாரம்' என்று ஜின்னா மவுண்ட்பேட்டனிடம் கூறினார். அதுவே முகமது அலி ஜின்னாவின் சொந்த விதியுடனான ஒப்பந்தத்துக்கும் சாரமானது.

கூட்டம் நடைபெறும் அறையில் உள்ள நீள்வட்ட மேசையைச் சுற்றிலும் அமர்ந்திருந்த அந்தப் பதினொரு மனிதர்கள் தங்களின் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு மவுண்ட்பேட்டன் பிரபுவின் அனுமதிக்காகக் காத்திருந்தனர். ஒரு வகையில் பார்த்தால், மூன்றரை நூற்றாண்டுகளுக்கு முன் வாணிப விருப்பத்துடன் கடல் வழியாக இந்தியாவுக்கு பிரிட்டன் அனுப்பிவைத்த, கிழக்கிந்திய கம்பெனியை உருவாக்கிய, 24 பேரின் வாரிசுகளாகவே இவர்கள் இருந்தனர். பேராசையில் பிறந்த சாம்ராஜ்யத்தின் தூண்களான இவர்கள் பிரிட்டிஷ் இந்தியாவின் பதினொரு மாகாணங்களின் ஆளுநர்கள். இளமைக்காலத்தில் தொலைதூரத்தில் தன்னந்தனியாக சில பணிகளில் அமர்த்தப்பட்டபோது கனவுகண்ட, இந்தியப் பேரரசின் உயர்ந்த பதவியில் இப்போது இருப்பவர்கள். இவர்களில் இரண்டு பேர் மட்டுமே இந்தியர்கள்.

திறமையுடன் அர்ப்பணிப்பு உணர்வும் கொண்ட இவர்கள் தங்களின் பணிகளைப் பயன்படுத்தி வாழ்நாள் முழுவதும் இந்தியாவுக்கு சேவை

---

மவுண்ட்பேட்டனுக்கு முன்பிருந்த வைஸ்ராயான வேவல் பிரபு, 1947 ஜனவரி 10, பிப்ரவரி 28 ஆகிய தேதிகளில் அவரது நாட்குறிப்பில் ஒரு குறிப்பை எழுதியிருந்தார். ஜின்னா 'ஒரு நோயாளி மனிதர்'. இருப்பினும் அந்த முஸ்லீம் தலைவரின் நோய் உண்மையில் எந்த அளவுக்குக் கடுமையானது என்பதை வைஸ்ராய் அறிந்திருந்தாரா என்பதற்கான அறிகுறி அந்த வார்த்தைகளில் இல்லை. ஜின்னா இறந்து கொண்டிருக்கும் மனிதர் என்ற குறிப்பு எனதயும் எந்தச் சமயத்திலும் மவுண்ட்பேட்டனே கூட அவரது அறிக்கையில் குறிப்பிட்டிருக்க வில்லை. இந்தத் தகவல் எனக்குக் கிடைத்திருந்தால் இந்தியாவில் எனது செயல்பாடுகள் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கும் என்று ஜின்னா இறந்து கால் நூற்றாண்டுக்குப் பின் மவுண்ட் பேட்டன் கூறினார். ஜின்னாவின் கடைசி ஆறுமாத காலத்தில்தான், அவரது நோய் பற்றி, முஸ்லீம்களின் இரண்டாம் நிலை தளபதியாக இருந்த லியாகத் அலிகான் அறிந்தார் என்று தெரிகிறது. தந்தைக்குக் காசநோய் இருந்தது என்பதை அவரின் மரணத்துக்குப் பிறகே தெரிந்து கொண்டதாக ஜின்னாவின் மகள் வாடியா, 1973 டிசம்பரில் பம்பாயில் இந்த நூலின் ஆசிரியர்களுக்கு அளித்த பேட்டியின் போது கூறினார். இந்த நோய் பற்றிய ரகசியத்தை ஜின்னா தனது சகோதரியிடம் சொல்லியிருந்தார் என்பதை தாம் தெரிந்து கொண்டதாகக் கூறிய அவர், இதனை வேறு யாருக்கும் தெரிவிக்கவோ; இதற்காக வேறு யாரிடமும் உதவி கேட்கவோ கூடாது என்று சகோதரியிடம் சொல்லியிருக்கலாம் என்றார்.

செய்தார்கள். இந்தியாவோ தன் பங்கிற்கு இவர்களுக்கு அரச தோரணையுடனான வாழ்க்கை வாய்ப்பை அளித்தது. அவர்களின் அரசு குடியிருப்புகள் ஏராளமான பணியாளர்களுடன் அரண்மனைகள் போல் இருந்தன. ஐரோப்பிய நாடுகள் போல் பரந்த மக்கள் தொகை மிகுந்த பகுதிகளிலேயே அவர்கள் அதிகாரம் செலுத்தி வந்தனர். ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்லும்போது வசதிமிக்க தனிப்பட்ட ரயில்வே பெட்டிகளில் பயணம் செய்தார்கள். நகரங்களுக்குள் டர்பன் அணிந்த பாதுகாவலர்களுடன் ரோல்ஸ்ராய்ஸ் காரில் பயணம் செய்தனர். வனப்பகுதிகளில் என்றால் யானை முதுகில் சவாரி செய்தனர்.

பம்பாய், சென்னை, வங்காளம் ஆகிய மூன்று பெரிய மாகாணங்களின் தலைவர்கள் முதலில் என்று பதவி வரிசைப்படி அவர்கள் மேசையைச் சுற்றி அமர்ந்திருந்தனர். மற்ற மாகாணங்கள் இவற்றைத் தொடர்ந்தன. முதலில் பஞ்சாப்; அடுத்தது கராச்சி துறைமுகம் உள்ள சிந்து; ஐக்கிய மாகாணங்கள், பீகார், ஒரிசா, பர்மா எல்லைப் பகுதியில் புகழ்மிக்க தேயிலைத் தோட்டங்களைக் கொண்ட அசாம், மத்திய மாகாணம், இறுதியாக கைபர் கணவாய், ஆப்கன் எல்லைப்பகுதியைக் காக்கும் வடமேற்கு எல்லைப்புற மாகாணம்.

அவர்களுடனான சந்திப்பு மவுண்ட் பேட்டனுக்கு சங்கடம் நிறைந்ததாக இருந்தது. மேசையருகே அமர்ந்திருந்தவர்களிலேயே இளையவர் 46 வயதான மவுண்ட்பேட்டன் தான். வைஸ்ராய் பதவி வகிக்க ஒருவர் புத்திசாலித்தனமான நாடாளுமன்றவாதியாக இருக்க வேண்டும் அல்லது நிர்வாக ரீதியில் சாதனை புரிந்த பின்னணி இருக்க வேண்டும். இது போன்ற வழக்கமான தகுதிகள் எதுவும் இல்லாமலேயே இவர் டில்லிக்கு வந்து சேர்ந்திருந்தார். ஒப்பீட்டு முறையில் அவர் இந்தியாவுக்குப் புதியவர். அங்கு வந்திருந்த பதினொரு ஆளுநர்களில் பெரும்பாலோர் பதவிக்காலம் முழுவதையும் இந்தியாவிலேயே செலவிட்டவர்கள். இதன் சிக்கலான வரலாற்றை அறிந்து தேர்ந்தவர்கள், மொழிகளைக் கற்றவர்கள், இவர்களில் சிலர் இந்தியாவின் தற்போதைய நிலைமை பற்றி நன்கு தெரிந்த உலகறிந்த வல்லுநர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தற்பெருமை கொண்டவர்கள். அவர்கள் மத்தியில் உள்ள புதியவர் வைக்கும் எந்தத் திட்டத்தையும் சந்தேகத்துடனேயே பார்ப்பார்கள்.

இந்திய விவகாரத்தில் அவருக்கு நிபுணத்துவம் குறைவாக இருப்பது ஒன்றும் பாதகமான செயல் என்று மவுண்ட் பேட்டன் கருதவில்லை. அந்த நிபுணர்கள் இந்தியப் பிரச்சனைக்குத் தீர்வு காணவில்லை. பழமையான பிரிட்டிஷ் ராஜ்ய சிந்தனையில் மிகவும் ஆழ்ந்துவிட்டதும், தற்போதுள்ள முறைமைக்குக் கூடுமானவரை சேதம் ஏற்படாத வகையில் தீர்வுகாண முயற்சி செய்ததுமே இதற்குக் காரணம் என்று அவர் ஐயுற்றார். அவரவர் மாகாணத்தில் உள்ள நிலைமை பற்றி விவரிக்குமாறு ஒவ்வொரு கவர்னரிடமும் கேட்பதன்மூலம் மவுண்ட்பேட்டன் பணியைத் தொடங்கினார். எட்டு மாகாணங்களின் ஆளுநர்கள் அபாயகரமான, தொல்லைகள் நிறைந்த சித்திரத்தையே தந்தார்கள். ஆனாலும் நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும் அவர்கள் கூறினர். பஞ்சாப், வங்காளம், வட - மேற்கு எல்லைப்புற மாகாணம் (N.W.F.P) ஆகிய மூன்று முக்கிய மாகாணங்களின் ஆளுநர்கள் அளித்த சித்திரம் கூடியிருந்தவர்களைக் கவலைக்குள்ளாக்கியது.

முப்பது நூற்றாண்டுகளாக இந்தியாவுக்குள் ஆக்ரமிப்பாளர்களை அனுப்பிக் கொண்டிருந்த கணவாய்கள் உள்ள பகுதியை, கீழுலகைக் காப்பதாகப் புராணங்களில் கூறப்படும் மூன்று தலை நாய் (செரிபரஸ் - Cerberus) போலப் பாதுகாக்கும் சர் ஓலஃப் கரோ, (Sir Olaf Caroe) கவலை தோய்ந்த முகத்துடனும், சோர்ந்த கண்களுடனும் முதலில் பேசினார் அவரது மாகாணத்தில், அவ்வப்போது புதிதாக வெடித்துக் கிளம்பும் பிரச்சனைகள் பற்றிய விவரங்களுடன் தந்திச் செய்திகள் குவிந்து கொண்டேயிருப்பதால் இரவு முழுவதும் விழித்துக் கொண்டேயிருப்பாராம். ஏறத்தாழ அவரது பதவிக்காலம் முழுவதும் சாம்ராஜ்யத்தின் எல்லைப்பகுதியான அங்கேயே கழிந்தது. கட்டுக்குள் அடங்காத 'பத்தான்' பழங்குடி இனத்தினர், அவர்களின் கலாசாரம், மொழி ஆகியவற்றை அவர் அளவுக்கு அறிந்த மேலைநாட்டினர் வேறொருவரும் இல்லை. அவரது மாகாணத் தலைநகரான பெஷாவர் இன்னமும் உலகின் மிகச்சிறந்த வியாபாரத் தலங்களில் ஒன்றாகவே உள்ளது. வாரத்துக்கு ஒருமுறை காபூலிலிருந்து கைபர் கணவாய் வழியாக ஒட்டகக் குழு ஒன்று வரும். தோல்கள், பழங்கள், கம்பளிகள், மண்பாண்டங்கள், கடிகாரங்கள், சர்க்கரை போன்ற பொருள்களை இது சந்தைக்குக் கொண்டு வந்து சிறப்புச் செய்யும். இந்தப் பொருள்களில் சில யுஎஸ்எஸ்ஆரிலிருந்து (சோவியத் சோஷலிசக் குடியரசிலிருந்து. மொ-ர்) கடத்தப்பட்டவையாகும். மலைகள் நிறைந்த இந்த மாகாணத்தில் வளைந்து நெளிந்து செல்லும் பாதைகளில் உருவாக்கப்பட்டுள்ள குகைகளில் ரகசிய ஆயுதத் தொழிற்சாலைகள் இருந்தன. இவற்றிலிருந்து தயாரிக்கப்படும் கொடிய ஆயுதங்கள், பண்டைய போர்ப்பெருமை வாய்ந்த பழங்குடியினரான பத்தான் இனத்தைச் சேர்ந்த மசூடிகள்(Masudi), அஃப்ரிடிகள்(Afridi), வஜீர்கள் (Wazir) ஆகியோருக்குத் தங்கு தடையின்றி வழங்கப் பட்டன.

இந்த மாகாணம் சிதைந்து போகும் நிலையில் இருப்பதாக அவர் எச்சரித்தார். அப்படி ஏதும் நடந்துவிட்டால், வடமேற்குப் பகுதியிலிருந்து சாம்ராஜ்யத்தின் எல்லைக்குள் பலவந்தமாக ஆக்ரமிப்புக் குழுக்கள் நுழையும் என்ற பிரிட்டிஷாரின் பழைய அச்சம் உண்மையாகிவிடும் என்றும் அவர் கூறினார். ஆஃப்கானிஸ்தானின் பத்தான் பழங்குடியினர் கைபர் கணவாய் வழியாக பெஷாவரிலும் சிந்துநதிக் கரைகளிலும் வந்து குவிந்து விடுவார்கள். ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக சிந்து நதிக்கரையை தங்கள் நிலமாக அவர்கள் உரிமை கோரி வருகிறார்கள். 'இதிலே நாம் கவனம் செலுத்தவில்லையென்றால், சர்வதேச சிக்கல் ஒன்றை நாம் சந்திக்க வேண்டியிருக்கும்' என்றும் கரோ குறிப்பிட்டார்.

எதையும் அளந்து பேசும் பஞ்சாப் கவர்னர் சர் இவான் ஜென்கின்ஸ் (Sir Evan Jenkins) தீட்டிய சித்திரம் இதைவிடக் கவலை தருவதாய் இருந்தது. எல்லைப்புற மாகாணத்தின் மீது கரோ வைத்திருந்த பற்றுக்கு இணையாக, வேல்ஸ் நாட்டவரான ஜென்கின்ஸ் பஞ்சாப் மீது பற்று வைத்திருந்தார். வயது முதிர்ந்த அந்த பிரம்மச்சாரி பஞ்சாப் மாகாணத்துக்கே தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். 'இந்தியாவில் மற்ற பகுதிகளும் இருக்கின்றன என்பதை மறந்துவிட்டு' பஞ்சாபை அவர் திருமணமே செய்து கொண்டார் என்று சில விமர்சகர்கள் அவரைக் குறை கூறினார்கள். இந்தியப் பிரச்சனைகளுக்கு எந்தவகையான தீர்வை ஏற்படுத்தினாலும் பஞ்சாபில் அது சில வன்முறைகளை உருவாக்கும் என்பது நிச்சயம் என்று அவர் குறிப்பிட்டார்.

பிரிவினை செய்வது என்று முடிவு செய்துவிட்டால் பஞ்சாபில் நிலைமையைக் கட்டுப்படுத்த குறைந்தது நான்கு பிரிவு ராணுவமாவது தேவைப்படும் என்றார் அவர். பிரிவினை இல்லை என்ற முடிவுக்கு வந்தாலும் தங்களுக்கென்று தனிப்பகுதி வேண்டும் என்ற சீக்கியர்களின் கோரிக்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். 'பிரிவினை ஏற்பட்டால் பஞ்சாப் பற்றி எரியும் என்று கணிப்பது அபத்தமானது. ஏனென்றால் இப்போதே அது எரிந்து கொண்டு தான் இருக்கிறது' என்றார் ஜென்கின்ஸ்.

மூன்றாவதான வங்காள கவர்னர் சர் ஃப்ரடெரிக் பர்ரோஸ் சுகவீனத்துடன் கல்கத்தாவில் இருப்பதால் அந்த மாகாணத்தின் நிலைமை பற்றிய அறிக்கையை துணை கவர்னர் அளித்தார். இந்த அறிக்கையின் ஒவ்வொரு பகுதியும் கூட பஞ்சாப் மற்றும் வடமேற்கு எல்லை மாகாண அறிக்கைகளைப் போலவே மனக்கவலையை ஏற்படுத்தியது.

கவர்னர்கள் அறிக்கைகள் அளிக்கும் நிகழ்ச்சி முடிந்தபின், மவுண்ட்பேட்டனின் ஊழியர்கள் ஒவ்வொரு கவர்னருக்கும் ஒரு அறிக்கையை வழங்கினார்கள். 'சாத்தியமான திட்டங்களில் ஒன்றாகப் பரிசீலனையில் இருப்பதன் விவரங்கள் இதில் உள்ளன' என்று மவுண்ட்பேட்டன் அறிவித்தார். 'எளிதாய்ப் புரிந்து கொள்வதற்காக' இது பால்கன் திட்டம் என்று அழைக்கப்பட்டது. ஒரு வாரத்துக்கு முன் மவுண்ட்பேட்டன் தனது தலைமை அலுவலரான இஸ்மே பிரபுவுக்குக் கட்டளையிட்டு தயாரித்த பிரிவினைத் திட்டத்தின் முதலாவது நகலாகும் இது.

இந்த அறிக்கையின் பக்கங்களைப் புரட்டத் தொடங்கிய கவர்னர்களுக்கு அதிர்ச்சி அலை பாய்ந்தது. காரணம், இந்திய ஒற்றுமையின் தூதர்களாகவும் சிற்பிகளாகவும் அவர்கள் இருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் இந்திய ஒற்றுமைக்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார்கள். இப்போது இங்கிருந்து வெளியேறப் போகும் பிரிட்டன் இதனை சிதைத்துவிட முடிவு செய்திருப்பதாகவே அவர்கள் அறிந்தனர்.

முதலாம் உலக யுத்தத்துக்குப் பின் மத்திய ஐரோப்பிய நாடுகளில் நடந்த பிரிவினை அடிப்படையில்தான் இந்தத் திட்டத்துக்கும் பால்கன் திட்டம் என்று பொருத்தமாகப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தியாவின் பதினொரு மாகாணங்களும், பாகிஸ்தானுடன் இணைய விரும்புகிறதா இந்தியாவுடனேயே இருக்க விரும்புகிறதா என்பதைத் தனித்தனியே தேர்வு செய்ய இந்தத் திட்டம் அனுமதி அளிக்கும்; அல்லது அங்கே உள்ள பெரும்பான்மையான இந்துக்களும் முஸ்லீம்களும் ஒப்புக் கொண்டால் சுதந்திரமும் பெறலாம். 'ஒன்றுபட்ட இந்தியா என்ற நம்பிக்கையை அவ்வளவு எளிதாகக் கைவிடப் போவதில்லை' என்பதையும் அங்கே கூடியிருந்த கவர்னர்களிடம் மவுண்ட்பேட்டன் தெரிவித்தார். இந்தியாவை ஒற்றுமையாக வைத்திருக்க பிரிட்டிஷார் எல்லா முயற்சிகளையும் செய்தார்கள் என்பதை உலகம் அறிய வேண்டும் என்று மவுண்ட்பேட்டன் விரும்பினார். இந்த முயற்சியில் பிரிட்டன் தோற்றுப் போனால், 'பிரிவினைத் தேர்வு என்பது இந்தியாவின் விருப்பமே தவிர பிரிட்டிஷாரின் முடிவு அல்ல' என்பதை உலகம் உணர வேண்டும். இந்த முயற்சியின் முக்கிய நோக்கமே இதுதான். எதிர்கால பாகிஸ்தான் என்பது இயல்பாகவே தாக்குப் பிடிக்க முடியாதது. 'அதன் சொந்தக் குறைகளாலேயே தோல்வியை சந்திப்பதற்கான ஒரு வாய்ப்பை' அதற்கு வழங்க வேண்டும்; பின்னர்

'பெருந்தன்மையோடு ஒன்றுபட்ட இந்தியாவுக்கு முஸ்லீம் லீக் திரும்பி விடும்' என்று மவுண்ட்பேட்டன் நினைத்தார்.

அந்தப் பதினொரு பேரும் பிரிவினையில் ஆர்வம் காட்டவில்லை. மாறாக அவர்கள் அதனை எதிர்த்தனர். முன்மொழிவதற்கு வேறெந்த தீர்வையும் அவர்கள் வைத்திருக்கவில்லை என்பதும் உண்மை.

அந்த மாலை வேளையில், வைஸ்ராய் மாளிகையின் அரச விருந்து அறையில், கவர்னர்களுக்கும் அவர்களின் மனைவியருக்கும் மவுண்ட்பேட்டன் தம்பதியர் தலைமையில் முறைப்படியாக விருந்து அளிக்கப்பட்டது. இதுவே அவர்களின் கடைசி சந்திப்பாக இருக்கும். அந்த அறையில் இருந்த, இந்தியாவின் பத்தொன்பது முன்னாள் வைஸ்ராய்களின் ஆயில் பெயிண்டிங் படங்கள், கடந்த காலத்திலிருந்து வந்த ஆவியுருவான நீதிபதிகள் போல கீழ்நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தன. விருந்தின் முடிவில் பணியாளர்கள் அலங்கார வண்டிகளில் மதுபாட்டில்களைக் கொண்டு வந்தனர். கண்ணாடிக் கிண்ணங்களில் மது நிறைந்தவுடன் லூயி மவுண்ட்பேட்டன் எழுந்து மதுக்கிண்ணத்தை உயர்த்தி அவர்களின் நட்பைக் கோரினார். அவரின் இந்த செயல்மூலம் ஒரு பாரம்பரியம் முடிவுக்கு வருவதை அவர்களில் ஒருவரும் உணரவில்லை. மீண்டும் ஒரு இந்திய வைஸ்ராய் கவர்னர்களை அழைத்து பாரம்பரிய முறையில் விருந்தளிக்கப் போவதில்லை. 'சீமான்களே! சீமாட்டிகளே! மேன்மை தங்கிய பேரரசே!' என்று கூறி 4000 மைல்களுக்கு அப்பாலிருந்த அவரது மைத்துனரின் பேரால் இப்போது மவுண்ட்பேட்டன் விருந்தளித்தார்.

## எல்லைப் பகுதியும், பஞ்சாபும், ஏப்ரல் பிற்பகுதி, 1947

நங்க பர்வதத்தின் அச்சுறுத்தும் கூர்மையான வெள்ளை நிற சிகரங்கள் வைஸ்ராயின் யார்க் விமானத்தின் வட்ட வடிவ சன்னல்களை நிறைத்தன. விமானத்திற்கு வடக்கே நூறு மைல் தொலைவில் அந்த 25,000 அடி உயர சிகரம் விண்ணை முட்டிக் கொண்டிருந்தது. உலகின் கூரை என்று அறியப்படும், மக்கள் நடமாட்டமில்லாத, உறைந்து கிடக்கும் அடர்த்தியான பனியால் மூடப்பட்ட, மிக உயர்ந்த ஹிந்துகுஷ் மலைத் தொடரை, விமானப் பயணிகள் அடிவானத்தின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைவரைப் பார்க்க முடியும். யார்க் விமானம் தெற்கு நோக்கித் திரும்பியது. பாம்புபோல் வளைந்து நெளிந்து சென்ற சிந்து நதிக்கு மேல் பறந்து, கோட்டைகள் போன்ற மண்ணாலான சுவர்களைக் கொண்ட பல அடுக்குக் குடியிருப்புகள் நிறைந்த வடமேற்கு எல்லை மாகாணத் தலைநகர் பெஷாவரை நெருங்கியது.

விமான நிலையத்தை நோக்கி விமானம் பறந்த போது, கொந்தளிப்புடன் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தை வரிசையாக நின்ற காவல் துறையினர் முற்றுகையிட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்ததை, விமானத்தில் இருந்த பயணிகள் பார்க்க முடிந்தது. தனது குளிர்சாதன அறையில் நடத்திக் கொண்டிருந்த உரையாடலைத் தற்காலிகமாக நிறுத்த லூயி மவுண்ட்பேட்டன் முடிவு செய்தார். பஞ்சாப், வடமேற்கு எல்லை மாகாணம் என்ற இரண்டு பெரும் தொல்லை தரும் மாகாணங்களின் அரசியல் தன்மையை நேரடியாகவே அவர் காண முற்பட்டார்.

*அவர் வருகிறார் என்ற செய்தி மாகாணம் முழுவதும் பரவியிருந்தது. ஜின்னாவின் முஸ்லீம் லீக் தலைவர்கள் விடுத்த அழைப்பை ஏற்று, 24 மணி நேரத்தில், அந்த மாகாணத்தின் அனைத்து முனைகளிலிருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் பெஷாவரில் குவிந்துவிட்டனர். பெஷாவரின் வரலாற்றிலேயே சிறப்புமிக்க மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்காக, கோஷங்களை எழுப்பிக் கொண்டும், கைகளை அசைத்துக் கொண்டும், வழிந்து நிறையும் கூட்டமாக ட்ரக்குகளிலும், பேருந்துகளிலும், கார்களிலும், சிறப்பு ரயில்களிலும் என தலைநகருக்குள் வந்தனர்.*

*எதிர்பாராதவிதமாக அந்த உயரமான, மாநிற பத்தானியர்கள் வைஸ்ராய்க்கு வரவேற்பு அளிக்க முன்வந்தனர். களைத்துப் போயிருந்த, வெப்பத்தால் சூடேறியிருந்த, அழுக்கு நிறைந்த அவர்கள் தலைவர்களின் கட்டளைகளை ஒதுக்கிவைத்துவிட்டு, அபாயகரமான மூர்க்கத்தனத்தோடு தன்னிச்சையாக செயல்படத் துவங்கினர். ரயில் தண்டவாளத்தின் ஒருபுறத்துக்கும், சரிவான சுவர்களைக் கொண்ட பழமையான பெஷாவர் மொகலாய கோட்டைக்கும் இடையே உள்ள குட்டைச்சுவர் உள்ள ஒரு திடலில் இந்த மக்கள் திரளை காவல் துறையினர் கட்டுப்படுத்தி வைத்திருந்தனர். ஆபரேஷன் செடக்ஷன் என்ற திட்டத்தின் சமரசக்குரல் சரமாரியான துப்பாக்கிச் சத்தங்களின் மூலம் சீர்குலைந்து விடுமோ என்ற அச்சத்தை கட்டுக்கடங்காத சீற்றம் கொண்ட கூட்டம் ஏற்படுத்தியது.*

*93 சதவீத முஸ்லீம் மக்கள் தொகை கொண்ட ஒரு மாகாணத்தை காங்கிரஸ் கட்சியின் கூட்டணி ஆள்வது என்ற நியாயமற்ற அரசியல் சூழ்நிலைமை காரணமாகத்தான் அந்த மக்கள் இங்கே கூடியிருந்தனர். காங்கிரஸ் தலைவராக இருந்தவர் பழங்குடி மக்களின் தலைவரான அப்துல் கஃபார்கான். தாடி வைத்த கம்பீரமான தோற்றமுடைய அவர் பழைய ஏற்பாட்டில் வரும் தேவதூதன் போல காட்சியளித்தார். காந்தியின் அன்புநெறியைப் பரப்ப வாழ்நாளை அர்ப்பணித்தார். பத்தான் பழங்குடியினர் ரத்த வெறியையும் சண்டை சச்சரவு களையும் பழிவாங்குதலையும் வாழ்க்கையின் பகுதியாகக் கொண்டிருப்பதைக் கடுமையாக எதிர்த்தார்.*

*உருவத்துக்கும் உள்ளத்துக்கும் பொருத்தமில்லாத இவர் காந்தியின் விசுவாசியாக, ஜின்னாவின் தனி இஸ்லாமிய நாடு கோரிக்கையை எதிர்க்கத் தொடங்குவதற்கு முன் வரை மக்கள் இவருக்கு ஆதரவாக இருந்தனர். பின்னர் எதிர்க்கத் தொடங்கியதும், ஜின்னாவின் ஆட்களால் தூண்டப்பட்டு, மொத்த மக்களும் கஃபார்கானுக்கும் பெஷாவரில் அவர் அமைத்திருந்த அரசுக்கும் எதிராகத் திரும்பிவிட்டனர். மவுண்ட்பேட்டனுக்கும் அவரது துணைவி யாருக்கும் 17 வயது மகள் பமீலா (*Pamela*) வுக்கும் மாபெரும் மக்கள் கூட்டம் அளித்த உற்சாக வரவேற்பு, மாகாணத்தின் ஆதரவு இப்போது 'எல்லை காந்திக்கு' அல்ல; முஸ்லீம் லீகுக்குத்தான் என்பதை நிரூபிப்பதாக இருந்தது. கவலையுற்ற கவர்னர் சர் ஒலஃப் காரோ மவுண்ட்பேட்டன் குழுவினரை பலத்தப் பாதுகாப்புடன் கார் மூலம் தனது இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். நேரம் ஆக ஆக கட்டுப்பாடற்ற நிலை அதிகரித்தது. காவல்துறையினர் தங்களை அடைத்து வைத்துள்ள இடத்திலிருந்து வெளியேறி, கவர்னர் மாளிகை நோக்கிப் பயணப்படப் போவதாக அந்தக் கூட்டம் அச்சுறுத்தியது. அப்படி அவர்கள் செய்தால் கவர்னர் இல்லத்தில் பாதுகாப்புக்கு நிற்கும் ஏராளமான ராணுவ வீரர்கள் இந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதைத் தவிர வேறு*

வழியிருக்காது. இதனால் ஏற்படும் உயிரிழப்புகள் பயங்கரமாக இருக்கும். வெறுப்பை உண்டாக்கும் அந்த ரத்தக்களறி மவுண்ட்பேட்டனை, தீர்வு கண்டுவிடலாம் என்ற அவரது நம்பிக்கையை, வைஸ்ராய் பதவிப் பெருமையை அழித்துவிடும்.

மனம் கலங்கிய கவர்னர், இந்தப் பிரச்சனையிலிருந்து விடுபட ஒரே ஒரு வழிதான் இருக்கிறது என்றார். ஆனால் அந்த யோசனை பைத்தியக் காரத்தனமானது என்று அவரது காவல் பிரிவினரும் ராணுவத் தளபதியும் நிராகரித்துவிட்டனர். மக்கள் கூட்டத்தை சாந்தப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் முன் மவுண்ட்பேட்டன் காட்சி தர வேண்டும் என்று அவர் யோசனை கூறினார்.

சிறிதுநேரம் மவுண்ட்பேட்டன் யோசித்தார். 'சரி! இதை ஒரு வாய்ப்பாக்கி அவர்களை நான் சந்திக்கிறேன்' என்று அவர் கூறினார். கரோவும் அவரது பாதுகாப்பு அதிகாரிகளும் எதிர்பாராத வகையில், எட்வினாவும் கணவருடன் செல்ல வேண்டும் என்று அடம்பிடித்தார்.

ஒரு சில நிமிடங்களுக்குப்பின் ஜீப் ஒன்று வைஸ்ராய் தம்பதியினரையும் கவர்னரையும் ரயில் தண்டவாளத்தின் ஓரத்தில் உள்ள மேட்டுப் பகுதியில் இறக்கிவிட்டது. எதிர்ப்பக்கத்தில் செயற்கையான தடை ஏற்படுத்திய பகுதியில் வியர்வையோடு அழுக்கும் ஆத்திரமும் நிறைந்த 1,00,000 மக்கள் கோரிக்கை களை முழங்கினர். துணைவியாரைக் கையணைத்தபடி மவுண்ட்பேட்டன் அங்கே இருந்த கற்குவியல் மேட்டுப் பகுதிமேல் ஏறினார் உச்சிக்குச் சென்றபோது அவர்களுக்கும், தலைப்பாகைகள் அணிந்து அலைமோதிய மக்கள் சமுத்திரத்திற்கும் இடையே பதினைந்து அடி இடைவெளி மட்டுமே இருப்பதைக் கண்டனர். பிரமாண்டமான மக்கள் கூட்டம் அவர்களை நோக்கி முண்டியடித்து முன்னேறி ஓடி வந்ததால் அவர்கள் கால் பதிந்திருந்த நிலம் அதிர்வதாக உணர்ந்தனர்.

மனிதக் கடலெனத் திரண்டிருக்கும் இந்திய மக்களின் கோபாவேசமும், கூக்குரல்களும், கையசைவுகளும் ஏற்படுத்திய அச்சத்தால் மவுண்ட்பேட்டன் தம்பதியினருக்கு மயக்கமே வரும்போல் இருந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் ஓடி வந்ததால் சுற்றிச் சூழ்ந்த தூசு ஆகாயத்தில் புழுதிப்படலத்தை ஏற்படுத்தியது. அந்தக்கூட்டம் எழுப்பிய சத்தம் காற்றுடன் கலந்து அவர்கள் மேல் படிவது போல் இருந்தது. ஆபரேஷன் செடக்ஷன் திட்டத்தின் முடிவுக்குரிய தருணமாகவும் எதுவும் நடக்க வாய்ப்புள்ள தருணமாகவும் அது இருந்தது.

நிச்சயமற்ற தன்மையுடன் கூட்டத்திலிருந்து வெளிப்பட்டு அவர்களின் நிழல் உருவங்கள் முன்னேறி வருவதை அச்சத்துடனும் திகலுடனும் சர் ஓலஃப் கரோ பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் இருபது, முப்பது, நாற்பதாயிரம் கைத்துப்பாக்கிகள் இருந்தன. ஏதாவது ஒரு பைத்தியக்காரன், ரத்தவெறி கொண்ட முட்டாள், 'குளத்தில் வாத்துகளைச் சுடுவது போல்' மவுண்ட்பேட்டன் தம்பதியைச் சுட்டுவிடக்கூடும். அவர்கள் அங்கே நிற்கும் ஒவ்வொரு நொடியின் போதும் அந்தக் கூட்டம் மோசமான மனநிலையில் இருப்பதை கரோ உணர்ந்தார். ஒருகணம் இப்படியும் அவர் எண்ணினார்: 'ஏதோ தப்பு நடக்கப் போகிறது.'

என்ன செய்வதென்று மவுண்ட்பேட்டனுக்குத் தெரியவில்லை. அந்தக் கூட்டத்தின் தாய்மொழியான புஷ்டு (Pushtu)வில் ஒரு வார்த்தை கூட அவரால்

பேச முடியாது. அவர் கலங்கியிருந்த நேரத்தில், வசியம் செய்தது போல் எதிர்பாராதவிதமாக அந்தக் கூட்டம் ஸ்தம்பித்து நின்றது. ஒரு கொலை வெறியனின் வித்தியாசமான கையசைவுகள் ஒருவேளை அந்தக்கூட்டத்தை நிறுத்தியிருக்கலாம். இந்தியப் பேரரசில் இருந்த மிகவும் பிரபலமான போர்க்குணமிக்கவர்களைச் சந்திக்கப் போவது ஏற்கெனவே திட்டமிடப் பட்டதில்லையென்றாலும், பர்மாவில் கூட்டு ராணுவப் படையின் தளபதியாக இருந்தபோது அணிந்திருந்த குட்டையான தொளதொளப்பான மேல் சட்டையை மவுண்ட்பேட்டன் அணிந்திருந்தார். ஒரு விஷயம் அந்தக் கூட்டத்தை நிறுத்தியிருக்கும். அதுதான் அந்த சட்டையின் பச்சை நிறம். பச்சை என்பது முஸ்லீம்களின் நிறம். மெக்காவுக்குப் புனிதப்பயணம் செய்த ஹாஜிக்களால் ஆசீர்வதிக்கப்பட்ட நிறம். அந்தப் பச்சை நிற சீருடை அவர்களுடனான ஒருங்கிணைப்பாக பல்லாயிரக்கணக்கான மக்கள் உணர்ந்திருக்கலாம்; தங்களின் மாபெரும் மதத்துக்கு அளிக்கும் மதிப்பாகவும் நினைத்திருக்கலாம்.

அவரது கை இன்னமும் எட்வினாவின் கையை இறுகப் பற்றியிருந்தது. ஆனால் அவர் கண்கள் நிமிர்ந்திருந்தன. 'அவர்களை நோக்கிக் கையசை' மவுண்ட்பேட்டன் துணைவியாரிடம் முணுமுணுத்தார். மெலிந்த உடல் கொண்ட எட்வினா மவுண்ட்பேட்டனுடன் சேர்ந்து மெதுவாகவும் லாவகமாகவும் கையை உயர்த்தி அசைத்தார். கூட்டத்தின் தலைக்கு மேல் அந்தக் கைகள் உயர்ந்தபோது இந்தியாவின் விதி அவற்றில் தொங்கிக் கொண்டிருந்ததுபோல் தோன்றியது. கட்டுக்கடங்காத கும்பலிடையே சிறிதுநேரம் ஐயத்தை எழுப்பும் அமைதி நிலவியது. எட்வினாவின் சிவந்த கை வானை நோக்கி உயர்ந்த போது திடீரென்று அந்தக் கும்பலிலிருந்து ஒரு சத்தம் எழுந்தது. அதைத் தொடர்ந்து அந்தக் கூட்டம் முழுவதும் கடலலை போல ஓசை எழுப்பியது. 'ஆபரேஷன் செடக்ஷன்' செயல்திட்டத்தின் அபாய கரமான நிமிடங்கள் வெற்றிகரமாகக் கடந்துவிட்டன என்பதைக் காட்டுவது போல், பல்லாயிரக்கணக்கான மக்களின் தொண்டையிலிருந்து அந்தக் குரல்கள் மீண்டும் மீண்டும் எழுந்தன.

'மவுண்ட்பேட்டன் சிந்தாபாத்!' ஏற்கெனவே சுசப்புற்றிருந்த பத்தாணிய வீரர்கள் உரத்துக் கூவினர். 'மவுண்ட்பேட்டன் சிந்தாபாத் - மவுண்ட்பேட்டன் வாழ்க!'

பத்தாணியர்களைச் சந்தித்த நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குப் பின் மவுண்ட்பேட்டனும் அவரது துணைவியாரும் பஞ்சாபிற்குச் சென்றார்கள். இவர்களை உடனடியாக ராவல்பிண்டியிலிருந்து 25 மைல் தூரத்தில் உள்ள ஒரு சிறு கிராமத்துக்கு சர் இவான் ஜென்கின்ஸ் அழைத்துச் சென்றார். தனது மாகாணம் பற்றி எரிந்து கொண்டிருப்பதாக பதினான்கு நாட்களுக்கு முன் கவர்னர் கூறியது எவ்வளவு துல்லியமானது என்பதை அறிந்து மவுண்ட் பேட்டன் அதிர்ச்சியுற்றார். இந்தியாவில் வீசியடிக்கிற பயங்கரங்களை அவர் நேரடியாகக் கண்டார்.

கிரீட் (Crete) கடலில் தனது கடற்படைக் கப்பல் உடைந்து உடனிருந்தவர் களில் பெரும்பாலோர் இறந்துபோனதைப் பார்த்த, பர்மாவில் நடந்த சண்டையின்போது பயங்கரமான காட்டுப்பகுதியின் ஊடே லட்சக்கணக் கானவர்களுக்குத் தலைமை தாங்கிச் சென்ற இளம் கடற்படைத் தளபதி,

இந்தியாவின் அரை மிலியன் (5 லட்சம்) கிராமங்களில் ஒன்றாக இருக்கும் 3500 பேர் வசிக்கும் அந்த குக்கிராமத்தில் கண்ட காட்சியால் திடுக்கிட்டுப் போனார்.

பல நூற்றாண்டுகளாக கஹுட்டா (Kahuta) வின் புழுதி நிறைந்த பகுதியில் 2000 இந்துக்களும் சீக்கியர்களும், 1500 முஸ்லீம்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். அன்றைய தினமோ கஹுட்டாவின் அடையாளங்களாக மிஞ்சியிருந்தவை அருகருகே இருந்த மசூதியின் கல்தூண்களும் சீக்கிய குருத்வாராக்களின் சிதைந்த முகடுகளுமே.

மவுண்ட்பேட்டன் வருவதற்கு முன்னால், பிரிட்டிஷ் நார்ஃபோக் (Norfolk) படைப்பிரிவினர் அந்தக் கிராமத்தில் வழக்கமாக ரோந்து சுற்றி வேவு பார்த்தனர். கஹுட்டாவின் மக்கள், தலைமுறை தலைமுறையாக பரஸ்பரம் வைத்திருந்த நம்பிக்கையுடன் அமைதியாக ஒருவர் பக்கத்தில் ஒருவராகப் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர். விடியும் வேளையில் கஹுட்டா என்ற ஒன்று இருந்த தற்கான அடையாளமே இல்லை. அந்தக் கிராமத்தின் சீக்கியர்கள் இந்துக்கள் அனைவரும் இறந்து போனார்கள் அல்லது அன்றிரவின் பயங்கரத்துக்கு அஞ்சி ஓடிவிட்டார்கள்.

நரிக்கூட்டம் போல் அந்தக் கிராமத்துக்குள் நுழைந்த ஒரு முஸ்லீம் கும்பல், ஒரு வாளியில் கொணர்ந்த கேசலின் எனும் கல்லெண்ணெயை ஊற்றி சீக்கியர்கள் மற்றும் இந்துக்களின் வீடுகளுக்குத் தீ வைத்தது. சில நிமிடங்களில் அந்தப் பகுதியே நெருப்பால் சூழ்ந்தது. மொத்த குடும்பத்தினரும் உதவி கோரி அலறினார்கள். பின்னர் தீக்கிரையாகித் தீய்ந்து போனார்கள். தப்பித்த சிலர் பிடிக்கப்பட்டனர். சேர்த்துக் கட்டப்பட்டனர். எண்ணெயை ஊற்றி சொக்கப்பனை போல் உயிரோடு கொளுத்தப்பட்டனர். நிலைமை முழுவதும் கட்டுமீறிப் போனது. தீ முஸ்லீம் குடியிருப்புகளுக்கும் பரவியது. கஹுட்டா முழுவதும் அழிந்தது. ஒரு சில இந்துப் பெண்கள், அவர்களின் படுக்கை களிலிருந்து இழுத்து வரப்பட்டு கற்பழிக்கப்பட்டனர். பின்னர் இஸ்லாமுக்கு மாற்றப்பட்டு பிழைத்துக் கொண்டனர்; மற்றவர்கள் தங்களைத் துரத்திய வர்களிடமிருந்து தப்பித்து தாங்களாகவே நெருப்பில் பாய்ந்து குடும்பத்தோடு அழிந்து போயினர்.

'கஹுட்டாவுக்குச் செல்லும் வரை, இந்தியாவில் நடக்கும் பயங்கரங்களின் உச்சக்கட்ட அளவை நான் அறிந்திருக்கவில்லை' என்று லண்டனுக்கு அனுப்பிய அறிக்கையில் மவுண்ட்பேட்டன் குறிப்பிட்டிருந்தார்.

பெஷாவரில் அவர் சந்தித்த கூட்டமும், பஞ்சாப் கிராமத்தில் அவர் பார்த்த கோரக்காட்சியும் மவுண்ட்பேட்டனுக்கு தேவைப்பட்ட கடைசி ஆதாரங் களாயின. புதுடில்லியில் குளிர்சாதனம் கொண்ட கூட்ட அறையில் பத்து நாட்கள் நடத்திய கூட்டத்துக்குப் பின் அவர் எடுத்த முடிவு சரியாகவே இருந்தது. இந்தியா காப்பாற்றப்பட வேண்டுமானால் முடிவெடுப்பதை விரைவுபடுத்துவது அவசியம். விரைவுபடுத்தவில்லையென்றால் இந்தியா சிதறுண்டு போகும்; அதோடு சேர்ந்து பிரிட்டிஷ் ராஜ்யமும், வைஸ்ராய் பதவியும் சிதைந்து அழியும். வேகம் தேவையென்றால், அதற்கு ஒரேவழிதான் இருந்தது. தனிப்பட்ட முறையில் அந்தத் தீர்வு அவருக்குப் பிடிக்கவில்லை யென்றாலும், இந்தியாவின் அரசியல் சூழ்நிலை இடும் கட்டளைத் தீர்வு அதுதான் - பிரிவினை.

*

இந்தியாவை ஒற்றுமையாக வைத்திருக்க வேண்டும் என்ற திட்டத்தை ஏற்கச் செய்வதற்கு இரு வாரங்களுக்கு முன், தனது சகாக்களிடம் வலியுறுத்திப் பயன் கிடைக்காமல் போன புதுடில்லி துப்புரவுத் தொழிலாளர் காலனியின் அதே குடிசையிலிருந்து, மகாத்மா காந்தி தனது பிராயச்சித்த பயணத்தின், துயரம்மிக்க கடைசிக் கட்டத்தை, 1947 மே முதல் தேதி மாலையில் துவக்கினார். கால்களை மடக்கித் தரையில் அமர்ந்து தண்ணீர் நனைத்தத் துண்டினை மீண்டும் தனது வழுக்கைத் தலையில் போட்டுக் கொண்டிருந்த காந்தியைச் சுற்றி காங்கிரஸ் கட்சியின் உயர்நிலைத் தலைவர்கள் அமர்ந்து விவாதம் நடத்தினர். காந்தி அதனை கவனித்துக் கொண்டிருந்தார். முந்தைய சந்திப்பின்போது காந்திக்கும் மற்றவர்களுக்கும் இடையே நிழல்போல் இருந்த கருத்து வேறுபாடு இப்போது இறுதி நிலையை எட்டியிருந்தது. பல ஆண்டுகால காந்தியின் சிறைவாசம், கவலையளிக்கும் உண்ணாநோன்புகள், ஹர்த்தால்கள், புறக்கணிப்புகள் ஆகியவையே இந்த சந்திப்புக்குப் பாதை அமைத்துக் கொடுத்தன. இந்தியாவின் முகத்தோற்றத்தையே அவர் மாற்றினார். தனது நாட்டு மக்களுக்குச் சுதந்திரம் கிடைக்கத் தாம் வாழ்ந்த நூற்றாண்டின் தனிப்புதுமை தத்துவங்களில் ஒன்றான அஹிம்சை தத்துவத்தை அவர் உருவாக்கினார். இப்போது அவரின் வெற்றி மோசமான துயரத்தில் முடியும் என்பது போன்ற அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சோர்ந்து போய் பொறுமையிழந்திருக்கும் அவரது சகாக்கள், சுதந்திரம் பெறுவதற்கு வேறு வழியேயில்லாத கடைசி நடவடிக்கையாகப் பிரிவினையை ஏற்பதற்குத் தயாராகி விட்டார்கள்.

இந்தியாவின் ஒற்றுமையை ஏதோ ஒரு புனிதமாகக் கருதி பிரிவினைக்கு காந்தி எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இந்தியாவின் கிராமங்களோடு பல ஆண்டுகள் தொடர்பு கொண்டிருந்த அவருக்கு நாட்டின் ஆத்மா பற்றிய ஒரு உள்ளுணர்வு இருந்தது. பிரிவினை என்பது, மவுண்ட்பேட்டனிடம் ஜின்னா உறுதி கூறியது போல் 'அறுவை சிகிச்சையாக' இருக்கப் போவதில்லை என்று அவரது உள்ளுணர்வு கூறியது. அவர் நன்கறிந்த ஆயிரக்கணக்கான கிராமங்களில் நண்பரும் நண்பரும், அண்டை வீட்டாரும் அண்டை வீட்டாரும், முன்பின் தெரியாத புதியவர்களும் புதியவர்களும், வெட்டி மாய்த்துக் கொள்ளும் சம்பவமாகவே அது இருக்கும். இவர்கள் ரத்தம் சிந்துவது வெறுக்கத்தக்க, பயனற்ற ஒரு முடிவுக்காகவே இருக்கும். துணைக்கண்டத்தை இரண்டாகப் பிரித்து ஒருவரோடு ஒருவர் முரண்படும் இரண்டு பகுதிகளாகப் பிரிப்பது ஒருவரோடு ஒருவர் குடலை உருவிக் கொள்வதில்தான் முடியும். இவர்கள் ஏற்கத் தயாராயிருக்கும் தவறு, வரவிருக்கும் பல பத்தாண்டுகளுக்கு, இந்தியர்களின் பல தலைமுறைகளுக்கு கேடு விளைவிப்பதாகவே இருக்கும் என்று காந்தி நம்பினார்.

அவரது உள்ளுணர்வு கூறியதைப் பல நேரங்களில் அவர்கள் பின்பற்றியிருக்கிறார்கள். ஆனால் இப்போது அந்த மாலை வேளையில் உள்ளுணர்வுக்கு மேல், மாற்று யோசனை எதையும் கூற முடியாமல் போனதுதான் காந்திக்கு ஏற்பட்ட துயரம். அன்றைய இரவில் அவர் ஒரு தேவதூதனாகக் கருதப்படவில்லை. 'அவர்கள் என்னை மகாத்மா என்று அழைக்கிறார்கள். ஆனால் ஒரு துப்புரவுத் தொழிலாளியாகக் கூட என்னை அவர்கள் நடத்தவில்லை' என்று பின்னாளில் நண்பர் ஒருவரிடம் காந்தி கசப்புடன் கூறினார்.

இந்தியாவுக்குப் பேரழிவு காத்திருக்கிறது. எனவே, வேதனை மிக்கதாக இருந்தாலும் தேசத்தைக் காப்பாற்ற ஒரே வழி பிரிவினைதான் என்று மவுண்ட்

பேட்டனைப் போலவே நேருவும் படேலும் மற்றவர்களும் கருதினார்கள். இவர்கள் தவறு செய்கிறார்கள் என்று காந்தி உயிராலும் உள்ளத்தாலும் நம்பினார். அவர்களின் வாதம் சரியாகவே இருந்தாலும்கூட, பிரிவினையை விட குழப்பம் விளைவிக்கும் அராஜகமே அவருக்கு ஏற்புடையதாக இருந்தது.

பிரிட்டிஷார் முன்வந்து கொடுத்தால் தவிர ஜின்னாவால் தனி பாகிஸ்தானை ஒரு போதும் அடைய முடியாது என்று காந்தி தனது சகாக்களிடம் சொன்னார். காங்கிரஸ் கட்சியின் பெரும்பான்மையினர் ஏற்காமல் எதிர்க்கும் ஒன்றை பிரிட்டிஷார் செய்துவிட முடியாது. மவுண்ட்பேட்டனின் எந்தத் திட்ட செயல்பாட்டையும் தடுத்து நிறுத்தும் 'வீட்டோ' அதிகாரம் அவர்களுக்கு இருந்தது.

பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறியபின் என்ன நிகழ்ந்தாலும் பரவாயில்லை; முதலில் அவர்களைப் போகச் சொல்லுங்கள். காந்தி மன்றாடினார். 'நீங்கள் விரும்பினால் இந்தியாவைக் கடவுளிடம் அல்லது குழப்பத்திடம் அல்லது அராஜகத்திடம் விட்டுவிடுங்கள்; ஆனால் நீங்கள் வெளியேற வேண்டும்' என்று பிரிட்டிஷாரிடம் சொல்லுங்கள்.

'நாங்கள் அக்னிப் பிரவேசம் செய்வோம். ஆனால் அது எங்களைப் புனிதப்படுத்தும்' என்று காந்தி உறுதியாகத் தெரிவித்தார்.

அவர் சொன்னதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகிப்போனது. பல முறை தங்களது ஒன்றிணைந்த லட்சியங்களுக்கு வடிவம் கொடுத்தது அந்தக் குரல். இப்போது அவரின் கடைசியான குரலை அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு தலைவர்களே கூட கேட்கத் தயாராய் இல்லை.

மவுண்ட்பேட்டன் வருவதற்கு முன்பே, தேசப் பிரிவினையை ஏற்க படேல் தயாராக இருந்தார். வயது முதிர்ந்த அவர் இரண்டு முறை மாரடைப்பால் பாதிக்கப்பட்டிருந்தார். முடிவற்ற விவாதங்களை முடித்து எப்படியாவது சுதந்திர இந்தியாவைக் கட்டி அமைத்து விட வேண்டும் என்று விரும்பினார். ஜின்னாவிடம் அவரது நாட்டை அளித்துவிடலாம்; ரொம்ப நாட்களுக்கு அது நீடிக்காது என்று அவர் வாதிட்டார். ஐந்து ஆண்டுகளுக்குள், இந்தியாவின் கதவுகளைத் தட்டி, மீண்டும் இந்தியாவுடன் இணைந்திட முஸ்லீம் லீக் கெஞ்சும் என்பது அவரது கணிப்பு.

காந்தியிடம் வைத்த ஆழ்ந்த அன்புக்கும், மவுண்ட்பேட்டன் தம்பதியரிடம் வைத்த புதிய நட்புக்கும் மதிப்புக்கும் இடையே சிக்கிக்கொண்டு நேரு தவித்தார்; தத்தளித்தார். காந்தி அவரின் இதயத்துடன் பேசினார்; மவுண்ட் பேட்டன் அவரின் சிந்தனையோடு பேசினார். நேரு பிரிவினையை வெறுத்தார் என்றாலும் அது ஒன்றுதான் தீர்வு என்று அவரது பகுத்தறிவு கூறியது. இப்படியொரு சொந்த முடிவுக்கு நேரு வருவதற்கு முன்பே, இந்த முடிவுக்கு அவர் வருவதற்கு வசீகரப் பேச்சாலும், ஆபரேஷன் செடக்ஷன் என்ற செயல் திட்டத்தை ஏற்கச் செய்வதிலும் மவுண்ட்பேட்டன் செல்வாக்கு செலுத்தினார். ஒரு வாதம் மிக முக்கியமானது. ஜின்னா போய்விட்டால், நேரு கனவு கண்டபடி சோஷலிச சமுதாயத்தை கட்டியமைக்க அவருக்குத் தேவைப்படும் வலுவான மத்திய அரசு இந்து இந்தியாவில் அமையும். இதனால் பல காலம் பின்பற்றி வந்த மனிதருக்கு எதிராக இப்போது அவர் நின்றார்.

இந்த இரண்டு குரல்கள் பிரிவினைக்கு ஆதரவாக இருந்ததால், தலைமையில் இருந்த மற்றவர்களும் விரைவில் இந்த வழிக்கு வந்துவிட்டார்கள். 'ஒன்றுபட்ட

இந்தியா என்ற கொள்கையைத்தான்' காங்கிரஸ் கொண்டிருந்தது. இருப்பினும், பஞ்சாப், வங்காளம் ஆகிய இரண்டு பெரிய மாகாணங்களும் பிரிக்கப் பட்டாலும் பிரிவினையை ஏற்கும் என்பதை வைஸ்ராய்க்குத் தெரிவிக்கும் அதிகாரம் நேருவுக்கு அளிக்கப்பட்டது. இவர்களின் வெற்றிக்கு வழிகாட்டிய அந்த மனிதர், களங்கப்பட்ட வெற்றியுடனும் கலைந்த கனவுகளுடனும் தனித்து விடப்பட்டார்.

புதுடில்லியில் தரையிறங்கி சரியாக 40 நாட்களுக்குப் பின், 1947 மே 2ஆம் தேதி மாலை 6 மணிக்கு வைஸ்ராயின் யார்க் எம் டபிள்யூ 102 ரக விமானம் பாலம் விமான நிலையத்திலிருந்து லண்டனுக்குப் புறப்பட்டது. இப்போது அந்த விமானத்தில் இருந்த மிக முக்கியமான பயணி மவுண்ட்பேட்டனின் அலுவலர்கள் தலைவரான இஸ்மே பிரபு. மேன்மை தங்கிய மன்னரின் அரசிடம் சமர்ப்பிக்க, இந்தியாவைப் பிரிப்பதென்ற திட்டத்தை அவர் கொண்டு சென்றார்.

மவுண்ட்பேட்டனின் அனைத்து நம்பிக்கைகளும் ஜின்னாவின் பிடிவாதம் என்ற பாறையில் மோதி சிதைந்தன. இந்தக் கணக்கின்போது ஜின்னாவின் சுகவீனம் பற்றிய உண்மை தெரியாமல் போனது. தெரிந்திருந்தால் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும். பின்னோக்கி சிந்திக்கும் போது, ஜின்னாவை அவர் வழிக்குக் கொண்டு வர முடியாமல் போனதுதான் அவரின் வாழ்க்கையிலேயே பெருத்த ஏமாற்றமாக இருக்கும். இஸ்மே பிரபுவுடன் லண்டனுக்குப் பறந்து சென்ற அந்த ஆவணம், அட்லி அரசுக்கு மவுண்ட் பேட்டன் தனிப்பட்ட முறையில் அளித்த அந்த ஐந்தாவது ஆவணம், இந்தியாவைப் பிரித்த மனிதர் என்று வரலாற்றில் எழுதப்பட உள்ள அந்த மனிதருக்கு தனிப்பட்ட முறையில் இருந்த கவலையை அளவிடுவதாக அமையும்.

'பிரிவினை என்பது சுத்த பைத்தியக்காரத்தனம்' என்று மவுண்ட்பேட்டன் எழுதினார். 'எல்லோரையும் ஆட்டிப்படைத்த வகுப்புவெறிதான் பிரிவினை யைத் தவிர வேறு வழியில்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. இல்லை யென்றால் இதனை ஏற்குமாறு என்னை ஒப்புக் கொள்ளச் செய்வதற்கு யாராலும் முடிந்திருக்காது'

'உலகத்தின் பார்வையில், இந்தப் பைத்தியக்கார முடிவுக்கான பொறுப்பு இந்தியாவின் மீதே சுமத்தப்படும். அவர்கள் மேற்கொண்ட முடிவுக்காக ஒரு நாள் கடுமையாக வருத்தப்படுவார்கள்' என்றும் மவுண்ட்பேட்டன் எழுதி யிருந்தார்.

ஆறு

# மதிப்புக்குரிய ஒரு சிற்றிடம்

*சிம்லா, மே 1947*

*லூயி மவுண்ட்பேட்டனுக்கு இப்போது குளிர்சாதன வசதி தேவையாய் இருக்கவில்லை. அவரது கூட்ட அறையின் ஜன்னல் வழியாகத் தெரிந்த தோற்றமே அவரைக் குளிர்விக்கப் போதுமானதாக இருந்தது. உலகின் மிக உயர்ந்த மலைத்தொடரான இமயமலையின் பனிபடர்ந்த சிகரங்கள் திபெத்திலிருந்தும் சீனாவிலிருந்தும் இந்தியாவைப் பிரிக்கும் பளபளக்கும் சுவர்போல் தோன்றின. இந்தியாவின் வெப்பமான பகுதிகளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இங்கு இல்லை. இப்போது அவரது கண்முன் தோன்றுவது இடைவெளியற்ற பசுமை; மரகதப் புல் வெளிகள்; உயர்ந்து நிற்கும் ஃபிர் (பனிமலையில் வளரும் ஒருவகை ஊசியிலை மொ-ர்.) மரங்கள்; பெரணிச் செடிகளால் மண்டிய புதர்கள். ஒரு வார காலம் ஓய்வின்றி உழைத்துக் களைத்த மவுண்ட்பேட்டன் அவருக்கு முன்பிருந்த வைஸ்ராய்கள் வழக்கமாக செய்வதைப் பின்பற்றினார். இஸ்மே பிரபு லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றதும் டில்லியை விட்டுப் புறப்பட்டு இமயமலை அடிவாரத்தில் பிரிட்டிஷ் அரசால் வித்தியாசமாகவும் வியப்பூட்டும் வகையிலும் ஆங்கிலேயர்களால் வடிவமைக்கப்பட்ட சிறு நகரமான சிம்லாவுக்கு வந்தார் மவுண்ட்பேட்டன்.*

*உலகத்தின் கூரை எனும் இமயமலைக்கு சற்றுக் கீழே 7300 அடி உயரத்தில் சஸ்ஸெக்ஸ் கிராமத்தின் வடிவில் அமைக்கப்பட்டுள்ள அந்த கிராமத்திலிருந்துதான் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக ஆண்டுக்கு ஐந்து மாதங்கள் பிரிட்டிஷார் இந்தியப் பேரரசையும் அதன் அருகே செங்கடலிலிருந்து பர்மா வரையிலும் உள்ள நாடுகளையும் ஆண்டு வந்தனர். எண்கோண வடிவத்திலான பேண்டுவாத்திய மண்டபம், நீலம், வெள்ளை ஆகிய வண்ணம் தீட்டிய தூண்கள், பரந்து விரிந்த கோட்டை மைதானம், அழகான தோட்டங்கள், கதீட்ரல் தேவாலயத்தில் ட்யூடர் (Tudor) கால மணிக்கூண்டு, வீறார்ந்த விக்டோரியன் கிருத்தவர், சீக்கியர்களுடன் நடத்திய போரில் கைப்பற்றிய பீரங்கிகளில் இருந்த பித்தளையால் செய்யப்பட்ட மணி ஆகியவற்றுடன் இருந்தது அந்த மதிப்புக்குரிய சிறிய இடம். கடலிலிருந்து ஆயிரம் மைல் தூரத்தில் இருந்த அந்த இடத்தில் ஒரு சிறிய ரயில் வழித்தடமும் ஆபத்தான கார் பாதையும் இருந்தன. இந்தியாவின் வெப்பம் நிறைந்த, மக்கள்*

தொகை நெருக்கமுள்ள சமவெளிகளைப் புறக்கணித்து குளர்ச்சியாகவும், பசுமையாகவும், சரியான ஆங்கிலேய நகரம் போல இருந்தது சிம்லா.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாத மத்தியில் கோடைகாலம் துவங்கியவுடன் வைஸ்ராய் தனது வெள்ளை மற்றும் தங்க நிறம் கொண்ட ரயில் வண்டியில் சிம்லாவுக்குப் புறப்பட்டு விடுவார். இது மலைப்பகுதி தலைநகரில் சீசன் துவங்கிவிட்டதன் அறிகுறியாக அமையும். மெய்க்காப்பாளர்கள், செயலாளர்கள், தனிநிலை உதவியாளர்கள், ஜெனரல்கள், தூதர்கள், அவர்களின் ஊழியர்கள், இந்தியாவின் மைய நிர்வாகத்தில் உள்ள முக்கியமான ஐசிஎஸ் அதிகாரிகள் ஆகியோரும் வைஸ்ராயைப் பின் தொடர்ந்தார்கள். இவர்கள் தவிர தையற்கலைஞர்கள், முடிதிருத்துவோர், பாதணிகள், சேணங்கள் தயாரிப்போர், வைஸ்ராயால் நியமிக்கப்பட்ட வெள்ளி வேலை செய்வோர், ஓயின், சாராய விற்பனையாளர்கள், ஐரோப்பிய மங்கைகள், ஆகியோரும் தங்களின் குன்று போல் குவியும் மூட்டை முடிச்சுகளுடனும் வீட்டு உபயோகப் பொருள்களுடனும், உதவியாளர்களுடனும் கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். 1903ஆம் ஆண்டுவரை ரயில்பாதை சிம்லாவிலிருந்து 42 மைல் தூரத்தில் உள்ள கல்கா என்ற இடத்தில் நின்று விடும். அங்கிருந்து இந்தக் கூட்டம் இரட்டை குதிரை பூட்டிய வண்டிகளில் எட்டு மணி நேரம் பயணம் செய்து சிம்லா செல்வார்கள். இவர்கள் கொண்டு வந்த மூட்டை முடிச்சுகள் மாட்டுவண்டிகளிலும், மனிதர்களின் முதுகுகளிலும் மேலே செல்லும். பதப்படுத்தப்பட்ட இறால்கள், சாசேஜ் எனும் இறைச்சிக் குழலப்பங்கள், போர்டக்ஸ், ஷேம்ப்பேன் எனும் ஃபிரான்ஸ் நாட்டு மதுவகைகள் ஆகியவை எண்ணற்றப் பெட்டிகளில் அடைக்கப்பட்டு முதுகுத்தண்டு வளைந்த கூலிகள் அவற்றை நீண்ட வரிசையில் தூக்கிச் செல்வார்கள் சிம்லாவின் சீசனில் நடைபெறும் விருந்துகளில் இவை வழங்கப்படும். இந்தியாவின் விருந்து நிகழ்ச்சியில் இணையில்லாச் சிறப்பை இவை உருவாக்கும்.

சிம்லாவில் குதிரைகளின் குளம்படி சத்தத்திற்குப் பதிலாக பாதங்கள் மெதுவாகப் பதிந்து ஒலியெழுப்பும் கூலிகள் அவசியம் தேவைப்பட்டார்கள். சிம்லாவுக்குள் முதலில் மூன்று ரயில் பெட்டிகள், பின்னர் மூன்று கார்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவது வழக்கம். இவற்றில் ஒன்று வைஸ்ராயுடையது; மற்றொன்று இந்திய ராணுவத்தின் தளபதியுடையது; மூன்றாவது பஞ்சாபின் கவர்னருடையது. சிம்லாவில் கார் வைத்திருக்க அனுமதி கோரி கடவுள் விண்ணப்பித்தார்; அது நிராகரிக்கப்பட்டு விட்டது என்று ஊருக்குள் நகைச் சுவையாகப் பேசிக் கொள்வார்கள். பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறும் வரை சிம்லாவின் நிலையான போக்குவரத்து வாகனம் ரிக்ஷாதான். அவை பார்க்க பெரிதாக இருக்கும். 'உங்களின் விலா எலும்பு போல இந்த வண்டியில் உள்ளவை இற்று ஒடிந்து விடும் சிறிய மரச்சட்டங்கள் அல்ல' என்று ரிக்ஷா உரிமையாளர் ஒருவர் கூறினார். சிம்லாவின் செங்குத்தான மலைப்பாதையில் ஒவ்வொருவரையும் ரிக்ஷாவில் வைத்து இழுத்தபடி மேலே செல்லவும் கீழே வரவும் நான்கு பேர் தேவைப்பட்டார்கள். ஐந்தாவது நபர் ஒருவர் இவர்களுக்கு மாற்று நபராகக் கூடவே ஓடிக் கொண்டிருப்பார்.

பரம்பரை வழக்கப்படி இவர்கள் செருப்பணிவதில்லை. இதனை ஈடுகட்டுவது போல் இவர்களுக்கு முதல்தரமான சீருடைகளை அளித்தனர்

ரிக்ஷா முதலாளிகள். கூலிவேலை செய்வோருக்கு மதிப்பு மிகு துணிகள் வழங்குவதில் குடும்பங்களுக்கிடையே போட்டியே இருந்தது. வைஸ்ராயின் கூலியாட்கள் சிவப்பு நிற (scarlet) சீருடை அணிவது சிறப்புரிமையாக இருந்தது. ஸ்காட்லாந்துக்காரர் ஒருவர் குட்டைப் பாவாடை போன்ற சீருடையை அளித்தார். இன்னொருவர் இரண்டு சீருடைகளைக் கொடுத்தார். ஒன்று பகலுக்கு; மற்றொன்று இரவுக்கு. எந்தக் குடும்பத்துக்காகத் தனது நுரையீரலை வருத்திக் கொண்டு உழைக்கிறார்களோ அந்தக் குடும்பத்தின் பெயர்ப் பட்டை அல்லது குறியீட்டை வழக்கமாக அனைவரும் சீருடையின் மீது நெஞ்சுப் பகுதியில் குத்திக் கொண்டிருந்தனர். கிட்டத்தட்ட சிம்லாக் கூலிகள் விதிவிலக்கின்றி காசநோயால் அவதிப்பட்டனர்.

இவர்கள் தங்களின் எஜமானர்களைச் சுமந்து சென்றது சிறப்பான விருந்துகளை நோக்கி. வைஸ்ராயின் வீட்டில் நடக்கும் விருந்து மிகச் சிறப்பாக இருக்கும். நகரில் இருந்த மேல் தட்டு மக்கள் செல்லும் ரிக்ஷாக்கள் சிவப்பு ரோஜா வடிவமைப்புகளைக் கொண்டிருக்கும். வைஸ்ராயின் வீட்டில் நடக்கும் நடன நிகழ்ச்சிக்கும், தோட்டங்களில் நடக்கும் விருந்துகளுக்கும் இவை சிறப்பு வழியில் செல்லும். மற்றவர்களின் ரிக்ஷாக்கள் வெள்ளை ரோஜா வடிவமைப்பைக் கொண்டிருக்கும்; இவை பொது வழியின் மூலமே செல்லும். ரோஜா வடிவமைப்பின் நிறம் எதுவாக இருந்தாலும் ரிக்ஷாக்களில் செல்வோர் ஒரு விஷயத்தை உறுதியாக உணரலாம். அந்த விருந்து மண்டபத்துக்குள் நுழைந்து விட்டால், ஒன்றிரண்டு மகாராஜா தவிர, அவர்களால் ஆளப்படும் நாட்டின் குடிமக்கள் எவரது தோளோடும் உரச வேண்டிய நிலை ஏற்படாது.

'அந்த நாளில் வைஸ்ராயின் வீட்டில் நடக்கும் நடன நிகழ்ச்சி பற்றி நீங்கள் கற்பனை கூட செய்ய இயலாது' ஒரு பெண் உற்சாகத்துடன் நினைவு கூர்ந்தார். 'இரவு வேளையில் நீண்ட வரிசையில் ரிக்ஷாக்கள் மெதுவாகக் குன்றின் மேல் ஏறிச் செல்லும். ஒவ்வொரு ரிக்ஷாவிலும் இருக்கும் சிறிய எண்ணெய் விளக்கு இருட்டில் மினுமினுக்கும். அந்தப் பாதையில் வெறும் காலுடன் மெல்ல நடக்கும் நூற்றுக்கணக்கானவர்களின் பாத ஒலி மட்டுமே கேட்கும்.'

சிம்லா சமூக வாழ்க்கையின் மற்றொரு மையம் செசில் (Cecil) ஓட்டல். உலகில் வேறெங்கும் காணாத அளவுக்கு ஆடம்பரமான விருந்தோம்பல் கொண்டது இது. ஒவ்வொரு நாளும் இரவு மணி 8.15க்கு பி அண்ட் ஓ நீராவிப்படகில் நடப்பது போல, தலைப்பாகை அணிந்த பட்லர் ஒருவர் தரைவிரிப்புகள் பாவிய வராந்தாவில் நடந்து இரவு உணவுக்கான மணி அடித்துச் செல்வார். மாலை நேர உடையும் கறுப்பு 'டை'யும் அணிந்து விருந்தினர்கள் உணவுண்ணும் மேசைகளுக்கு வருவார்கள். அந்த மேசைகளில் அயர்லாந்து லினன் துணி விரிக்கப்பட்டிருக்கும். மேப்பின், வெப் ஆகிய இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட வெள்ளிப்பாத்திரங்களும், வெல்டனின் பீங்கான் தட்டுகளும், ஜெர்மனியின் கண்ணாடிப் பாத்திரங்களும் இருக்கும். ஷேம்பன், விஸ்கி, ஒயின், போர்ட் ஆகிய மதுவகைகளையும் தண்ணீரையும் ஊற்ற எல்லா இடங்களிலும் கண்ணாடிக் குவளைகள் வைக்கப்பட்டிருக்கும்.

சிம்லாவின் இதயமாக இருந்தது மால் எனும் அகன்று நீண்ட சாலைதான். நகரின் ஒரு முனையிலிருந்து மறு முனை வரை அது நீண்டிருந்தது.

*ஆங்கிலேயர்களுக்காக மட்டுமே என விசேஷமாக இருந்த தேநீர்க் கடைகள், வங்கிகள், பல் பொருள் அங்காடிகள் ஆகியவற்றைக் கொண்ட அந்த சாலையின் பரப்பு வைஸ்ராயின் பீங்கான் தட்டு போல தூய்மையாக இருந்தது. அந்தச் சாலையின் முடிவில் கதீட்ரல் தேவாலயம் இருந்தது. ஒவ்வொரு ஞாயிறன்றும் ஆங்கிலேயர்களின் இனிமையான சேர்ந்திசையைக் கேட்க காலனியில் உள்ள அனைவரையும் அழைத்துக் கொண்டு படைத்தளபதி சீருடையுடன் அங்கு வருவார். முதலாம் உலக யுத்த காலம் வரை மால் வீதியில் நடக்க இந்தியர்கள் அனுமதிக்கப்படவில்லை.*

*இந்தத் தடை சிம்லாவின் தன்மையை வெளிப்படுத்தியது. ஆங்கிலேயர்கள் இந்த மலை உச்சிக்கு ஆண்டுதோறும் வருவது கோடைகால வெப்பத்திலிருந்து தப்பிக்க மட்டுமல்ல; அதற்கு மேலும் ஒன்று இருந்தது. பிரிட்டனின் இன மேன்மையை உறுதி செய்வதாகவும், தங்கள் ஆட்சியின் கீழ் உள்ள இந்தியாவின் வறண்ட பகுதிகளில் பழுப்பு நிறமுடைய லட்சக்கணக்கான மக்களிலிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டிக் கொள்வதற்கான பிரிட்ஷாரின் நுட்பமான நடவடிக்கையாகவும் இது இருந்தது.*

*1947 மே மாதத்துவக்கத்தில் லூயி மவுண்ட் பேட்டன் வந்த நேரத்தில் பழைய சிம்லாவின் சிறப்புகள் பலவும் மறைந்து போயிருந்தன. இப்போது தனது நாட்டின் தேசிய உடையை அணியக்கூடாது என்ற நிபந்தனையுடன் இந்தியர் எவரும் மால் வீதியில் நடந்து செல்ல முடியும். **

*ஆழமான பேச்சுவார்த்தைகளால் மவுண்ட்பேட்டன் சோர்ந்து போயிருக்க லாம். ஆனால் அவர் உற்சாகமும் தன்னம்பிக்கையும் பொங்கும் மனநிலையில் இருந்தார். அவருக்கு முன்பிருந்தவர்கள் பல ஆண்டுகள் முயற்சி செய்து தோல்வியடைந்த விஷயத்தில் வெறும் ஆறுவாரங்களில் வெற்றி பெற்றிருந்தார். இந்தியாவிலிருந்து கவுரவத்துடன் பிரிட்டன் வெளியேறுவதற்கும், கவலை யளிப்பதுதான் என்றாலும் இந்தியர்கள் பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வு கண்டு,*

---

சுதந்திரம் கிடைத்த பிறகு சிம்லா வெகுவேகமாக மாறியது. இந்தியர்கள் அந்த நகரைத் தங்கள் கோடை காலத் தலைநகராக ஏற்பதில்லை. பழைய அனுபவங்களே இதற்குக் காரணம். 'பழைய சிம்லாவிலிருந்து மாற்றமடையாமல் இருப்பது தட்ப வெப்ப நிலைதான்' என்று செசில் ஓட்டலின் உரிமையாளரும் ஓபராய் (Oberoi) ஓட்டல்கள் நிறுவனத்தின் தலைவருமான எம்.எஸ்.ஓபராய் 1973இல் வருத்தத்துடன் தெரிவித்தார். சிம்லாவின் அந்த நாள் நினைவுகளுடன் 87 வயதான ஆங்கிலேய விதவைப் பெண்மணி ஹென்றி பென் மாண்டேகு (Henry Penn Montague) இன்னும் வாழ்ந்து வருகிறார். தனது தாய்மாமனின், இருள்மண்டி சிதிலமடைந்த, பழைய வீடு ஒன்றில் அவர் தன்னந்தனியே வசித்து வருகிறார். வைஸ்ராய் கர்சன் பிரபுவின் நிதிக்குழு உறுப்பினராக இருந்தவர் அவரது மாமன். அந்தப் பெண்மணியின் வீட்டில் ஆறு நாய்கள், ஐந்து பூனைகள், நான்கு பணியாட்கள் உள்ளனர். வீடு நிறைய நினைவுப் பரிசுகள். ஆறு மொழிகளில் பேசும் திருமதி பென்மாண்டேகு ஒவ்வொரு நாளும் மாலை நான்கு மணிக்கு எழுந்து சிற்றுண்டி சாப்பிட்டு சூரியன் மறையும் போது தேநீர் அருந்துகிறார். பின்னர் ஓர் அறையில் ஓய்வெடுத்துக் கொள்ளும் அவர் ஜெனித் டிரான்ஸ் ஓஷியானிக் ரேடியோ வைத்திருந்தார். சிம்லா நகரமே உறங்கிக் கொண்டிருக்கும் போது, உலகை வேவு பார்ப்பது போல அவர் அங்கேயிருந்து விடியும் வரை விழித்திருந்து ரேடியோ கேட்கிறார். அதிகாலை நான்கு மணிக்கும் அவரது அறையில் விளக்கு எரிந்து கொண்டிருக்கும். ஒரு வேளை சிம்லாவுக்கும் திபெத்துக்கும் இடையே விளக்கு எரிவது அந்த ஒரு வீட்டில் மட்டுமாகத்தான் இருக்கும்.

விடுபடுவதற்குமான திட்டத்தை அவர் 10 டவுனிங் தெருவுக்கு அனுப்பி வைத்தார்.

லண்டனிலிருந்து புறப்படுவதற்கு முன்பே அட்லியிடமிருந்து முழுமையான அதிகாரம் பெற்று வந்திருந்ததால், தனது திட்டத்தை இங்கிலாந்துக்கு அனுப்புவதற்கு முன் அது பற்றி இந்தியத் தலைவர்களின் ஒப்புதலை முறைப்படி பெற வேண்டிய தேவை இருக்கவில்லை. அவர்கள்முன் திட்டத்தை வைக்கும் போது அதனை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற உறுதிமொழியை மட்டும் அட்லி அரசுக்கு அளித்தால் போதும்.

மவுண்ட்பேட்டன் தனது கூட்ட அறையில் தனிமையில் அமர்ந்து வடித்தெடுத்தது தான் அந்தத் திட்டம். காயை நகர்த்தும் போது அவர்கள் எதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதை ஒவ்வொரு தலைவரின் தனிப்பட்ட உணர்வுகளையும் நடைமுறைகளையும் ஆய்வு செய்து, அதனடிப்படையில் கவனமாக உருவாக்கப்பட்டிருந்தது அந்தத் திட்டம். மே மாதம் 17ஆம் தேதி சிம்லாவிலிருந்து திரும்பும்போது இந்தத் திட்டத்தை அவர்கள் முன் சமர்ப்பிக்க விரும்புவதாக சிம்லாவுக்குப் புறப்படுவதற்கு சற்று முன் முறைப்படி அவர் அறிவித்தார். தனது கணிப்பின் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையே இதற்குக் காரணம்.

சிம்லாவின் கிளர்ச்சியூட்டும் பருவ நிலையும், ஒலிம்பஸ் மலையில் இருப்பது போன்ற அமைதியும் அவரைக் கவர்ந்தன. ஆனாலும் இனம் தெரியாத சந்தேகங்களும் அவரை ஆட்கொண்டன. வைஸ்ராயின் திட்டம் லண்டனை அடைந்ததிலிருந்து அட்லி அரசிடமிருந்து வெள்ளம் போல் தந்திச் செய்திகள் வந்து சூழ்ந்தன. அவரது திட்டத்தின் சாரத்தை மாற்றவில்லையென்றாலும் அதன் தொனியில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய யோசனைகள் அவற்றில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

அதிகரிக்கும் அவரது அச்சத்தில் மிக முக்கியமான கவலையும் படிந்திருந்தது. லண்டனுக்கு அனுப்பப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாடுகள் முழுவதுமாக அறிந்து கொள்ளப்பட்டால், மிகப்பெரிய இந்தியத் துணைக் கண்டம் இரண்டு சுதந்திர நாடுகளாக அல்ல மூன்றாகப் பிரிக்கப்படக்கூடும்.

ஒரு மாகாணத்தின் இரண்டு சமூக மக்களில் பெரும்பாலோர் விரும்பினால் அதற்கு சுதந்திரம் அளிக்க வேண்டும் என்ற ஒரு பிரிவை மவுண்ட்பேட்டன் தனது திட்டத்தில் சேர்த்திருந்தார். அறுபத்தைந்து மிலியன் (ஆறரை கோடி) இந்துக்களையும் முஸ்லீம்களையும் கொண்ட வங்காள மாகாணம் கல்கத்தாவைத் தலைநகராகக் கொண்டு தனிநாடாக இருக்கலாம் என்பதற்கான பிரிவுதான் அது.

கல்கத்தாவின் முஸ்லீம் தலைவர் ஷாஹீத் சுஹ்ரவர்த்தி (Shaheed Suhrawardy) தான் இந்த யோசனையை மவுண்ட்பேட்டனிடம் தெரிவித்தார். இரவு விடுதியையும் ஷேம்பன் மதுவையும் விரும்பும் இந்த அரசியல்வாதிதான் பத்து மாதங்களுக்கு முன் கல்கத்தா நகரில் நேரடி நடவடிக்கை தினத்தின் போது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டவர். அவரின் யோசனையை வைஸ்ராயும் விரும்பினார். ஜின்னாவின் இரண்டுதலைநாடு என்ற ஈடேறாத திட்டத்தை விட இந்தத் திட்டம் நிலை பெற்றிருக்கும் என்று அவர் கருதினார்.

வியப்புக்குரிய வகையில், இந்தத் திட்டத்திற்கு வங்காளக் காங்கிரஸ் தலைவர்களே தூண்டுதலாக இருக்கிறார்கள் என்பதை அவர் கண்டறிந்தார். இந்த யோசனையை ஜின்னாவும் கூட எதிர்க்க மாட்டார் என்பதையும் அவர் அறிந்தார். ஆனாலும் இந்த யோசனை பற்றி நேருவிடமும் படேலிடமும் தெரிவிக்கத் தவறியதுதான் அவரை வாட்டியது. காங்கிரஸ் கட்சிக்கு முதன்மையாக நிதி அளிக்கும் தொழிலதிபர்களுக்குச் சொந்தமான ஜவுளி ஆலைகளால் சூழப்பட்ட மிகப்பெரிய கல்கத்தா துறைமுகத்தை இழக்க வேண்டியிருக்கும் திட்டத்தை உண்மையில் அவர்கள் ஏற்பார்களா? ஒரு வேளை அவர்கள் ஏற்க மறுத்தால், லண்டனுக்கு மவுண்ட்பேட்டன் அளித்திருக்கும் உறுதிமொழி இந்தியாவின், பிரிட்டனின், உலகத்தின் பார்வையில் மோசமான முட்டாள்தனமாகிவிடுமே!

சட்டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. இந்தியத் தலைவர்களுடன் தனிப்பட்ட முறையில் விவாதித்து தனது திட்டத்தை உறுதி செய்து கொள்ளலாம் என்று எண்ணி ஒரு விடுமுறை நாளைத் தன்னுடன் சிம்லாவில் தங்கி கழிக்குமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். அவரின் செயல் ஊழியர்களுக்கு வருத்தத்தை அளித்தது. இந்தியாவில் தனது சொந்தக் கொள்கைகளுக்கு ஆதரவாக இருப்பவர் வரும் காலத்தில் பிரிட்டனுக்கும் அதன் பழைய ஆட்சியிலிருந்த இந்தியாவுக்கும் இடையே சுமுகமான உறவு நீடிப்பதற்கு நம்பிக்கை நட்சத்திரமாக இருப்பவர் அன்பும் மதிப்பும் மிக்க நேரு. அவருடனான நட்பு முன்னெப்போதையும் விட இப்போது முக்கியமானது என்று மவுண்ட்பேட்டன் நினைத்தார்.

இந்தியப் பிரதமருடன் அவரது மனைவியின் நட்பும் நன்றாக வளர்ந்திருந்தது. எட்வினா மவுண்ட்பேட்டன் போன்ற பெண்கள் உலகில் கிடைப்பது அபூர்வம். அதிலும் 1947 இந்தியாவில் கிடைத்தது மிகவும் அபூர்வம். நேருவுக்கு சந்தேகங்கள் வந்தால், மனஉளைச்சலால் பாதிக்கப்பட்டால், கவர்ச்சிகரமான மேட்டுக்குடியைச் சேர்ந்த எட்வினாவைப் போல் அன்பும் ஆதரவும் காட்டி அறிவுரை கூறித் தேற்றியவர்கள் வேறு யாராகவும் இருக்க முடியாது. மொகல் தோட்டத்தில் நடந்தும், தேநீர் அருந்தியும், வைஸ்ராயின் நீச்சல் குளத்தில் நீந்தியும், நேருவைக் கவலைகளிலிருந்து விடுவித்துக் கவர்ந்திருக்கிறார். இதன் மூலம் தனது கணவரின் முயற்சிகளுக்கும் பின்னணியில் இருந்து உதவியிருக்கிறார்.

சிந்தனையை செயல்படுத்தத் தீர்மானித்த மவுண்ட்பேட்டன் ஊழியர்களைத் தனது கூட்ட அறைக்கு வருமாறு அழைத்தார். தனது யோசனையை அவர்களிடம் விவரித்தார். அவர்கள் திகைத்துப் போனார்கள். ஜின்னாவிடம் தெரிவிக்காமல் இந்தத் திட்டத்தை நேருவிடம் காட்டுவது முஸ்லீம் தலைவர்களுக்குச் செய்யும் நம்பிக்கைத் துரோகம் என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். உண்மையை ஜின்னா அறிந்தால் மவுண்ட்பேட்டனின் ஒட்டுமொத்த நிலைமையும் மோசமாகிவிடும்.

மவுண்ட்பேட்டன் மேசையின் மேற்பரப்பில் விரல்களால் தாளமிட்டுக் கொண்டு வெகுநேரம் அமைதியாய் அமர்ந்திருந்தார்.

'நான் வருந்துகிறேன்; உங்களின் வாதங்கள் முற்றிலும் சரியானவை. ஆனால், இதை நேருவிடம் காட்ட வேண்டும் என்று என் உள்மனம் கூறுகிறது. அது

*சொல்வதையே நான் பின்பற்றப் போகிறேன்' என்று இறுதி முடிவை மவுண்ட்பேட்டன் அறிவித்தார்.**

*அன்றிரவு மவுண்ட்பேட்டன் தனது கூட்ட அறைக்கு நேருவை விருந்துக்கு அழைத்திருந்தார். லண்டனில் திருத்தப்பட்ட வடிவத்தில் அந்தத் திட்டத்தை காங்கிரசின் தலைவரிடம் கொடுத்தார். படுக்கையறைக்கு எடுத்துச் சென்று படிக்குமாறு கேட்டுக் கொண்டார். இதன் மீது காங்கிரசின் கருத்து என்னவாக இருக்கும் என்பதை சாதாரண முறையில் தெரிந்து கொள்ள விரும்புவதாகவும் நேருவிடம் அவர் தெரிவித்தார். பெருமிதத்துடனும் மகிழ்ச்சியுடனும் நேரு இதற்கு ஒப்புக் கொண்டார்.*

*சில மணி நேரத்துக்குப் பின், மவுண்ட்பேட்டன் வழக்கமாக மாலை நேர ஓய்வு நேரத்தில் தனது குடும்பத்தினரின் பரம்பரை வளர்ச்சியைப் பட்டிய லிட்டுக் கொண்டிருக்கும் போது, ஜவஹர்லால் நேரு அவரது நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் திட்டத்தை ஆய்வு செய்யத் தொடங்கினார் அவர் படித்தது அவரைத் திகைப்பில் ஆழ்த்தியது. இந்தத் திட்டத்தின் பக்கங்களிலிருந்து உருவாகும் இந்தியாவை நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருந்தது. இந்தியா பிரிக்கப்பட்டால், இரண்டாக அல்ல டஜன் கணக்கில் துண்டு துண்டாகிவிடும். வங்காளத்தைப் பிரிப்பது என்ற மவுண்ட்பேட்டனின் யோசனை ஒரு படுகாயமாகும். இதன் வழியே இந்தியாவின் நல்ல ரத்தம் வழிந்தோடிவிடும் என்று நேரு உணர்ந்தார். ஐவுளி ஆலைகள், தொழிற் சாலைகள், எஃகுத் தொழிற் கூடங்கள் ஆகியவற்றுடன் கல்கத்தா துறைமுகமும் பிரிவது இந்தியா நுரையீரலை இழப்பது போலாகும்; காஷ்மீர், அவர் நேசிக்கும் காஷ்மீர், வெறுப்புக்குரிய ஒருவரின் விருப்பப்படி ஆளும் சுதந்திர*

---

* மவுண்ட்பேட்டன் தனது ஊழியர்களின் கூட்டு ஆலோசனைக்கு எதிராகச் செயல்பட்டது இது முதல் தடவையல்ல; ஏற்கெனவே 1941 பிப்ரவரியிலும் இப்படி நடந்துள்ளது. ஜிப்ரால்டருக்குச் (Gibraltar) செல்லும் வழியில் பிஸ்கே (Biskay) வளைகுடாவில் கே– கிளாஸ் அழிவுக் கப்பல்களுக்குத் தலைமைதாங்கி சென்று கொண்டிருந்தார். அப்போது கடற்படையின் முதல்நிலை அதிகாரியிடமிருந்து ஒரு அவசரத் தகவல் வந்தது. ஜெர்மனியின் போர்க்கப்பல்களான சார்ன்ஹோஸ்ட் (Scharnhorst), நெசினாவ் (Gneisenav) ஆகியவை செயின்ட் நசாரே(Saint - Nazarie)க்கு சென்று கொண்டிருப்பது சற்று முன் தெரியவந்தது. அவற்றைத் தொடர்ந்து சென்று இடைமறிக்குமாறு அந்த அதிகாரி உத்தரவிட்டார். அது அந்தி சாயும் நேரம். மவுண்ட்பேட்டன் தனது கப்பல் சிப்பந்திகளை பிரெஸ்ட் (Brest) நோக்கிச் செல்லுமாறு உத்தரவிட்டார். இதையடுத்து மேல் தளத்துக்குச் சென்ற கப்பல் சிப்பந்தி, நாம் செயின்ட் – நசாரேக்கு செல்லவே கட்டளையிடப்பட்டிருக்கிறோம்; ப்ரெஸ்ட்டுக்கு அல்ல என்று எதிர்ப்புத் தெரிவித்தார். இல்லை, இரண்டு ஜெர்மன் கப்பல்களை இடைமறிக்க வேண்டும் என்று தான் உத்தரவிடப்பட்டுள்ளது. எனக்கு ஒரு உள்ளுணர்வு உள்ளது என்று மவுண்ட்பேட்டன் கூறினார். அந்த இரண்டு கப்பல்களின் தலைவராக நான் இருந்தால் அந்தி சாயும் வேளையில் வெளிப்படையாக அறிவிக்கப்பட்ட பாதையில் செல்லமாட்டேன். வேவு பார்க்கும் விமானங்கள் எல்லாம் தங்கள் பணியை முடித்து தளத்திற்குத் திரும்பியிருக்கும். ஜெர்மன் கப்பல்கள் உண்மையாகச் சேருமிடம் பிரெஸ்ட் துறைமுகம்தான். எனவே நமது கப்பல்கள் அதை நோக்கித்தான் செல்ல வேண்டும் என்றும் அவர் கூறினார். அவரது மனம் சொன்னது சரிதான். அந்த இரண்டு கப்பல்களும் பிரெஸ்டை நோக்கித்தான் சென்றன. மவுண்ட்பேட்டனின் கப்பல்கள் 32 நாட்டிகல் மைல் வேகத்தில் சென்றபோதும் ஜெர்மனியின் கப்பல்கள் அதிக தூரத்தில் சென்று கொண்டிருந்ததால் பத்திரமாக ஃபிரான்ஸ் துறைமுகத்தை அடைந்து விட்டன.

நாடாகிவிடும்; இந்தியாவின் வயிற்றுப் பகுதியான ஹைதராபாதில் மிகப்பெரிய ஜீரணிக்காத முஸ்லீம் அமைப்பு நிறுவப்படும்; அரை டஜனுக்கும் அதிகமான மன்னராட்சிப் பகுதிகளும் தனி நாடுகளாகிவிடும் என்று அவர் நினைத்தார். துணைக் கண்டத்தை பலவீனப்படுத்தும் கலகத்தைத் தூண்டும் நாடுகள் என்று பல உருவாகி அகில இந்தியாவிலும் மொழி, பண்பாடு, இன அடிப்படையில் வேறுபாடுகளையும் கசப்புணர்வையும் தூண்டி விடும். 'பிரி; ஆட்சி செய்' என்ற வார்த்தைகள் மூலம் இந்தியாவை மூன்று நூற்றாண்டுகள் ஆட்சி செய்த பிரிட்டிஷ் இப்போது 'துண்டாடு, வெளியேறு' என்ற புதிய திட்டத்தை வைத்துள்ளது என்றும் அவர் நம்பினார். சிம்லாவுக்கு அழைத்து வந்திருந்த அவரது நம்பிக்கைக்குரிய நண்பரான கிருஷ்ணமேனனின் படுக்கை அறைக்கு நேரு வெளிறிய முகத்துடன் கோபத்தால் நடுங்கியபடி சென்றார். அதே வேகத்துடன் அந்தத் திட்ட அறிக்கையைப் படுக்கையில் வீசியெறிந்தார்.

'எல்லாமே போச்சு' என்று அலறினார்.

அடுத்த நாள் காலை நண்பரின் காட்டமான பதில் கடிதத்தை மவுண்ட்பேட்டன் முதல் தகவலாகப் பெற்றார். நம்பிக்கையுடனிருந்த வைஸ்ராய்க்கு இந்தக் கடிதம் ஒரு வெடிகுண்டு போல அமைந்தது. அதைப் படித்த போது, கடந்த ஆறு வாரங்களாக மிகவும் கவனத்துடன் முழுமையாய்க் கட்டி அமைத்ததெல்லாம் சீட்டுக்கட்டு வீடுபோல் சரிந்து விழுவதாக அவர் உணர்ந்தார். இந்தத் திட்டம் 'சின்னாபின்னம், மோதல், ஒழுங்கின்மை' ஆகியவற்றையே விட்டுச் செல்லும் என்பதே தனது எண்ணம் என்று நேரு எழுதியிருந்தார். இது என்னை அச்சுறுத்துகிறது. இதனை நிச்சயமாக 'காங்கிரஸ் கட்சி விரும்பாது; நிராகரித்து விடும்.'

இந்தியாவின் பிரச்சனைகளுக்குப் பத்து நாட்களில் தீர்வை அளிக்கப் போவதாக மிதப்போடும் தன்னம்பிக்கையோடும் உலகத்துக்குப் பெரு மிதத்துடன் அறிவித்த மவுண்ட்பேட்டன் நேருவின் வார்த்தைகளைப் படித்தவுடன் தம்மிடம் தீர்வு எதுவும் இல்லை என்பதைக் கண்டு கொண்டார். அதே நாளில் பிரிட்டிஷ் அமைச்சரவையில் விவாதிக்கப்பட்ட அந்தத் திட்டம், இந்தியாவை ஏற்கச் செய்வதில் வெற்றி பெறுவேன் என்று அட்லிக்கு அவரால் வாக்குறுதி அளிக்கப்பட்ட அந்தத் திட்டம், இந்தியாவில் அதனை எந்த ஒரு சக்தி ஏற்க வேண்டுமோ அந்தக் காங்கிரஸ் கட்சியையே தாண்டாது போயிருக்கிறது.

மவுண்ட்பேட்டன் அளவுக்கு மீறி நம்பிக்கை வைத்து விட்டார் என்று விமர்சகர்கள் குறை கூறலாம். ஆனால் பின்னடைவுகளைக் கண்டு மனம் சோர்ந்து விடும் மனிதரல்ல அவர். நேருவின் கருத்தறிந்து ஏமாற்றம் அடைவ தற்குப் பதிலாக, இந்தத் திட்டத்தை நேருவிடம் காட்டியதற்காகத் தன்னைத் தானே பாராட்டிக் கொண்டார். இதிலுள்ள குறைகளை சரி செய்ய முயற்சி மேற் கொண்டார். அதிர்ஷ்டவசமாக நேருவுடன் அவருக்கிருந்த நட்பு வைஸ்ராயை அதிர்ச்சியிலிருந்து பாதுகாத்தது. காங்கிரசும் ஏற்கத் தக்க மாற்றியமைக்கப்பட்ட திட்ட நகலைத் தயாரிக்க அவகாசம் அளிக்கும் வகையில் மவுண்ட்பேட்டன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மேலும் ஒரு இரவு சிம்லாவில் தங்க நேரு ஒப்புக் கொண்டார். நேருவைக் கோபத்துக்கு ஆளாக்கிய குறைகளை புதுத்

*திட்டம் நீக்கி விடும். புதிய திட்டம் இந்தியாவின் மாகாணங்களுக்கும் மன்னர் களுக்கும் ஒரே ஒரு வாய்ப்பை மட்டும் தரும் - இந்தியா அல்லது பாகிஸ்தான்.*

*சுதந்திர வங்காளம் என்ற கனவு கலைந்தது. ஜின்னாவின் இரண்டுதலை நாடு என்பது நிலைக்க முடியாதது என்ற கருத்து இன்னமும் மவுண்ட் பேட்டனிடம் இருந்தது. சிறிது காலத்துக்குப் பின் அவரையடுத்து வைஸ்ராய் மாளிகைக்கு வரவிருந்த சி.ஆர்.ராஜகோபாலாச்சாரியிடம் மவுண்ட்பேட்டன் ஒன்றைக் கணித்துரைத்தார். கால் நூற்றாண்டு காலத்தில் பாகிஸ்தானிலிருந்து கிழக்கு வங்காளம் பிரிந்து விடும் என்றார். அவர் குறிப்பிட்ட காலம் முடிவடைய ஓராண்டு மட்டுமே இருக்கும் நிலையில் அவரது கணிப்பை உறுதி செய்வது போல் 1971இல் பங்களாதேஷ் யுத்தம் நடந்தது.*

*தமது திட்டத்தைத் திருத்தியமைக்க, வைஸ்ராயின் நிர்வாக அமைப்பில் உயர் நிலையில் இருந்த இந்தியர் ஒருவரை மவுண்ட்பேட்டன் தனது கூட்ட அறைக்கு அழைத்தார். சிக்கலான தருணத்தில் அவர் அழைத்திருந்த இந்தியர் நிர்வாகத்தில் மேம்பட்டவர்களாக இறுமாப்புடன் இருக்கும் ஐ.சி.எஸ் அதிகாரி கூட அல்ல என்பதுதான் விதியின் விளையாட்டு. அவரது அலுவலகச் சுவர்களை ஆக்ஸ்ஃபோர்ட் அல்லது கேம்பிரிட்ஜில் பெற்ற பட்டங்கள் அலங்கரிக்கவில்லை. அவரது உயர்வுக்குக் குடும்ப உறவுகள் காரணமாக இருக்கவில்லை. சுயமுயற்சியால் முன்னேறிய வி.பி.மேனன் (V.P.Menon)என்ற அந்த மனிதர் வைஸ்ராய் மாளிகையின் சூழ்நிலைக்குப் பொருந்தாத விந்தை மனிதராக இருந்தார்.*

*பன்னிரண்டு பேர் கொண்ட ஒரு குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்த மேனன் 13ஆவது வயதில் பள்ளிக் கூடத்தை விட்டு வெளியேறினார். பின்னர் கட்டுமானத் தொழிலாளியாக, சுரங்கப் பணியாளராக, தொழிற்சாலை உதவியாளராக, தென்னிந்திய ரயில்வேயில் கரி அள்ளிப் போடுபவராக, வெற்றி பெற முடியாத பருத்தித் தரகராக, பள்ளி ஆசிரியராக அவர் வாழ்ந்துள்ளார். கடைசியில், இரண்டு விரல்களால் தட்டச்சு செய்யத் தாமாகவே பழகிக் கொண்டு, 1929இல் சிம்லாவில் பலரையும் சந்தித்துப் பேசி இந்திய நிர்வாகத்தில் ஒரு குமாஸ்தாவாகப் பணியில் சேர்ந்தார். **

*இதன் பிறகு நிர்வாகத்துறை வரலாற்றில் அவரது வளர்ச்சி மின்னல் வேகத்தில் அமைந்தது. 1947க்குள் வைஸ்ராயின் ஊழியர்களிலேயே மிகவும் உயர்ந்த பதவிக்குச் சென்றார் மேனன். விரைவிலேயே மவுண்ட்பேட்டனின் நம்பிக்கையையும் பெற்று பின்னர் அன்பையும் பெற்றார்.*

---

* ஒரு முறை சிம்லாவுக்குச் செல்லும் வழியில் டில்லிக்கு வந்த போது, மேனன் வைத்திருந்த பணமெல்லாம் களவு போய் விட்டதை அறிந்தார். மனம் கலங்கிய அவர், ஒருவழியாக வயது முதிர்ந்த பெருந்தன்மையான சீக்கியர் ஒருவரை அணுகி தனக்கு நேர்ந்த கதியைச் சொல்லி, சிம்லாவுக்குச் செல்வதற்குத் தேவையான கட்டணத்துக்கு 15 ரூபாய் கடனாகத் தருமாறு கேட்டார். அந்த சீக்கியரும் பணம் கொடுத்தார். இதனைத் திருப்பிக் கொடுக்க அவரின் முகவரியைக் கேட்டார் மேனன். 'வேண்டாம். நீ சாகும் வரை உன்னிடம் உதவி கோரும் நேர்மையான மனிதருக்கு இந்தத் தொகையைக் கொடு' என்று அந்த சீக்கியர் கூறினார். மேனன் இறப்பதற்கு ஆறுமாதங்களுக்கு முன் பெங்களூரில் இருந்த வீட்டுக்கு ஒரு பிச்சைக்காரர் வந்தார். தனது பணப்பையைத் திறந்து பதினைந்து ரூபாய் எடுத்து வந்து அந்த மனிதரிடம் கொடுக்குமாறு மகளிடம் கூறினார். அவர் சாகும் தருவாயிலும் கடனை திருப்பி அடைத்துக் கொண்டிருந்தார் என்பதை அவரது மகள் நினைவு கூர்ந்தார்.

இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்கும் வகையில் இந்தத் திட்டத்தை இன்று மாலைக்குள் திருத்தியமைக்க வேண்டும் என்று மவுண்ட்பேட்டன் மேனனிடம் கூறினார். முக்கியப் பகுதியான பிரிவினை இதில் இடம் பெற்றிருக்க வேண்டும். இதற்கும் மேலாக மாகாண சட்டமன்றங்களில் வாக்கெடுப்பு மூலம் எங்கே இருப்பது என்பதை அவர்களாகவே தெரிவு செய்து கொள்ளும் பொறுப்பை அவர்கள் மீதே சுமத்த வேண்டும்.

மவுண்ட்பேட்டனின் உத்தரவுப்படி மேனன் தனது பணியைச் செய்து முடித்தார். மதிய உணவுக்கும் இரவு உணவுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆற்றல் வாய்ந்த காரியத்தைச் செய்திருந்தார். இரண்டு விரல் தட்டச்சராக தொடங்கிய அவரது பணி இப்போது இந்தியத் துணைக்கண்டத்தையும், பின்னாளில் உலக வரைபடத்தையும் மாற்றியமைக்கப் போகிற திட்டத்தைத் திருத்துவதில் பூர்த்தியடைகிறது. இமயமலையை நோக்கி அமைந்திருந்த அலுவலகத்திலிருந்து இந்தப் பணியை சுமார் ஆறுமணி நேரத்தில் முடித்தார்.

*

அபெண்டிசிடிஸ் எனும் குடல் முனை அழற்சி நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மனுவின் மெலிந்த உடல், அவளது பெரிய மாமா போர்த்திய போர்வைக்குள் நடுங்கிக் கொண்டிருந்தது. கடுமையான காய்ச்சலால் அவளது கண்கள் மங்கியிருந்தன. அடிவயிற்றில் ஏற்பட்டிருக்கும் கடுமையான வலியைக் குறைக்கும் முயற்சியாக கருப்பையில் இருக்கும் குழந்தை போல் உடலை குறுக்கிக் கொண்டு அவள் படுத்திருந்தாள். அமைதியோடும் கவலையோடும் அவள் அருகில் காந்தி உலாத்திக் கொண்டிருந்தார்.

மீண்டும் ஒரு முறை காந்தியின் நம்பிக்கைக்கு சோதனை ஏற்பட்டது. இயற்கை வைத்தியத்தில் அவர் ஆழமான நம்பிக்கை வைத்திருந்தார். ஆத்மாவை கவனிக்காமல் உடலின் வெளிப்பகுதிக்கு முக்கியத்துவம் அளிப்பதாகவும், கட்டுப்பாடும் சுய ஒழுக்கமும் தேவைப்படுகிற இடத்தில் மாத்திரைகளுக்கும் மருந்துகளுக்கும் யோசனை கூறப்படுவதாகவும், பணமே பெரும் குறிக்கோளாய் இருப்பதாகவும் நவீன மருத்துவத்தை அவர் குற்றம் சாட்டினார். தேசத்தின் நோய்களைக் குணப்படுத்த கடவுளால் படைக்கப்பட்ட இயற்கை மருத்துவ மூலிகைகள் இந்திய நிலங்களில் நிறைந்து கிடக்கின்றன என்று காந்தி உறுதியாகத் தெரிவித்தார். தனது அஹிம்சை கொள்கையின் விரிவாக்கமே இயற்கை வைத்தியம் என்று காந்தி கருதினார். இந்தக் காரணத்தால்தான் ஆகாகான் மாளிகையில் அவரது மனைவி மரணப்படுக்கையில் கிடந்த போதும், தோலுக்கடியில் ஊசி குத்தி மருந்தை உட்செலுத்தும் வன்முறைக்கு மனைவியின் உடலை இலக்காக்கக் கூடாது என்று அவர் அனுமதி மறுத்தார்.

தனது அடிவயிற்றில் வலி ஏற்படுவதாக மனு கூறிய போதும் காந்தி இயற்கை வைத்தியத்தையே சிபாரிசு செய்தார். வயிற்றில் மண்சட்டியை வைத்துக் கொள்வது; கடுமையான உணவுக் கட்டுப்பாடு; இனிமா கொடுத்தல் ஆகியவற்றையே அவர் பரிந்துரைத்தார்.

அவளது நிலைமை மோசமானது. 36 மணி நேரத்துக்குப் பிறகு இப்போது அபாயகட்டத்தை அடைந்தது. இயற்கை வைத்தியத்தில் ஆழமான நம்பிக்கை

வைத்திருந்தாலும் மருத்துவ நூல்களை அவர் அதிகமாகவே படித்திருந்தார். தனது சகோதரியின் பேத்தியைப் பீடித்திருப்பது என்ன நோய் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

நவகாளியில் இருந்தது போலவே அவர் மீது அவளின் நம்பிக்கை முழுமையாக இருந்தது. அவர் எப்படி விரும்புகிறாரோ அப்படி செய்து கொள்ளத் தயாராகத் தன்னை முழுமையாக காந்தியின் கைகளில் அவள் ஒப்படைத்திருந்தாள். அவரது இயற்கை வைத்தியம் தோற்றுப் போனது. இந்தத் தோல்வியையும் மனுவின் நோயையும் அவர்களின் ஆன்மீகக் குறைபாடாகவே காந்தி கருதினார். ஆனால், பின்னாளில் அவர் குறித்திருந்தது போல, 'தம்மிடம் பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டிருந்த ஒரு பெண் இப்படி இறந்து போவதை அனுமதிக்கும் தைரியத்தை அவர் பெற்றிருக்கவில்லை', அவர் நிலை குலைந்தார்; தோல்வியை ஒப்புக் கொண்டார். மரணப்படுக்கையிலும் தனது மனைவிக்கு ஊசி செலுத்த அனுமதிக்காத அந்த மனிதர் இப்போது தனது சகோதரியின் பேத்தி அறுவை சிகிச்சை என்ற வன்முறைக்கு உட்பட 'மிகுந்த தயக்கத்துடன்' அனுமதி அளித்தார். குடல் முனை அழற்சிக்கான அறுவை சிகிச்சை செய்து கொள்ள அவசர அவசரமாக மனு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டார்.

மயக்கமருந்து கொடுத்து மனு படுத்திருந்த போது காந்தி தனது உள்ளங்கையை அவளின் நெற்றியில் மெதுவாக வைத்தார். 'ராம நாமத்தை ஜெபித்துக் கொண்டே இரு. எல்லாம் நல்லபடியாக நடக்கும்' என்று அவர் கூறினார்.

சில மணி நேரங்களுக்குப் பின், காந்தி சோர்வடைந்திருப்பதைப் பார்த்த டாக்டர்களில் ஒருவர் அவரைப் பக்கத்தில் ஒரு இடத்துக்கு அழைத்துச் சென்றார். உணர்ச்சி வசப்படாமல் அமைதியாக இருங்கள் என்று டாக்டர் கெஞ்சி கேட்டுக் கொண்டார். 'எப்போதையும் விட இப்போது உங்களின் சேவை மக்களுக்குத் தேவை' என்றும் அவர் கூறினார்.

துயரம் நிறைந்த கண்களுடன் காந்தி அந்த டாக்டரை பார்த்தார் 'மக்களுக்கோ ஆட்சியில் இருப்பவர்களுக்கோ என்னால் ஒரு பயனும் இல்லை. செயல்பட்டுக் கொண்டிருக்கும் போதே கடைசி மூச்சின் போதும் கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டு இறக்க வேண்டும் என்பதே என் விருப்பம்' காந்தி கவலையுடன் பதிலளித்தார்.

ஏழு

# அரண்மனைகளும் புலிகளும், யானைகளும் அணிகலன்களும்

*புது டில்லி, மே 1947*

*ஆஜானுபாகுவான தனது எஜமானரை நோக்கி தலைப்பாகை அணிந்த பணியாள் பயபக்தியுடன் மவுனமாக நடந்தார். புலி, சிறுத்தை, மான் போன்றவற்றின் தோல்கள் விரித்திருக்கும் அந்த அறையின் குறுக்கே நடந்து சென்ற அவர் தனது வெறும் பாதங்களால் அவற்றை வருடுவது போல் மெல்ல நடந்து சென்றார். எஜமானருக்காக அவர் கையில் ஏந்திச் சென்ற வெள்ளித்தட்டு 1921இல் மாட்சிமை தங்கிய வேல்ஸ் இளவரசர் இந்தியப் பயணத்தின் அடையாளமாக லண்டனில் ஆர்டர் கொடுத்து தருவிக்கப்பட்டது. அதன் மீது வைக்கப்பட்டிருந்த வெள்ளி மெருகூட்டப்பட்ட தேநீர் ஜாடியிலிருந்து சூடான தேநீரின் மணம் வந்து கொண்டிருந்தது. ஃபோர்ட்நம் அன்ட் மசோன் என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட தேயிலைத்தூள் இரண்டு மாதத்துக்கு ஒரு முறை பிஸ்கட்டுகளுடன் விமானத்தில் கொண்டு வரப்படும். அந்தப் படுக்கை அறையின் சுவர்களில் நிழல்படிந்த மூலைகளில் பஞ்சடைத்து உருவாக்கப்பட்ட விலங்குகளின் தலைகள் இருந்தன. நீளக்குழல் துப்பாக்கி, போலோ மட்டை, கிரிக்கெட் மட்டை ஆகியவற்றைத் திறமையுடன் கையாண்டு பெற்ற வெள்ளிக் கேடயங்களும் அறையில் நிறைந்திருந்தன.*

*பணியாள் வெள்ளித் தட்டை படுக்கைக்குப் பக்கத்தில் உள்ள மேசை மேல் வைத்து விட்டு எஜமானரை நோக்கிக் குனிந்தார். எஜமானர் ஒரு சீக்கியர். கருநிறத் தாடியைச் சுற்றிக் கட்டப்பட்ட பட்டினாலான வலை, உறங்கும் அவரது முகத்தில் கருங்காலி மரத்தின் வளையம் போல் இருந்தது.*

*'காலைத் தேநீர்' வேலையாள் அடிமையின் பணிவுடன் மெல்லிய குரலில் முணு முணுத்தார்.*

*ஆறடி நான்கு அங்குல உயரமுள்ள அந்த மனிதர் கைகால்களை நீட்டி பூனைபோல் சோம்பல் முறித்துக் கொண்டார். பின்னர் எழுந்து அவரது கால் தரையில் பதிவதற்குள் அவரது திரட்சியான தோள்களில் பொருந்தும் மேலங்கியை அணிவிக்க மேலும் ஒரு பணியாள் நிழல் கவிந்த அறையிலிருந்து வெளிப்பட்டார். பட்டியாலா மாநிலத்தின் எட்டாவது மகாராஜாவான மேன்மை தங்கிய யாதவீந்திர சிங் கண்களிலிருந்து தூக்கத்தை உதறிவிட்டு அடுத்த நாள் பணிகளை கவனிக்கத் துவங்கினார்.*

உலகின் மிக முக்கிய அமைப்பு ஒன்றுக்கு யாதவீந்திர சிங் தலைமை தாங்கினார். இதற்கு முன் வேறெந்த மனிதரும் இப்படிப்பட்ட அமைப்பைப் பெற்றிருக்கவில்லை; எதிர்காலத்தில் பெறுவதற்கும் வாய்ப்பில்லை. இந்திய இளவரசர்கள் சபையின் தலைவராக அவர் இருந்தார்.

இந்தியாவில் இருந்த மகாராஜாக்கள், நவாபுகள், ராஜாக்கள், சமஸ்தானங்கள் என 565 உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது இந்த சபை. ஹிரோஷிமா பேரழிவுக்கும், உலகின் அடித்தளங்களையே ஆட்டம் காணச் செய்த உலக யுத்த முடிவுக்கும் பிறகு, ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் கழித்து மே மாதத்தின் இன்றைய காலை வேளையிலும் இந்திய நிலப்பரப்பின் மூன்றில் ஒரு பகுதியையும், மக்கள் தொகையில் கால் பகுதியையும் பரம்பரை அதிகாரங்களுடன் இதுதான் ஆட்சி செய்து வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சியில் இரண்டு இந்தியாக்கள் இருக்கின்றன என்ற உண்மையை இவர்கள் பிரதிபலித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு இந்தியா டில்லியில் இருந்து மத்திய அரசால் நிர்வகிக்கப்பட்ட மாகாணங்களைக் கொண்டது. மற்றொரு இந்தியா மன்னர்களால் ஆளப்பட்டது.

பிரிட்டன் இந்தியாவைத் தற்செயலாக வெற்றி கொண்ட போது இங்கே ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னர்கள் அவர்களை இருகரம் நீட்டி வரவேற்றார்கள். அல்லது போர்க்களத்தில் எதிரிகளாக சந்தித்தார்கள். எப்படியிருப்பினும் பிரிட்டனின் மேலாதிக்கத்தை இவர்கள் ஏற்றுக் கொண்டதால் அவரவரின் சிம்மாசனத்தை அவரவரே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அப்போதிலிருந்து ஏற்பட்டதுதான் மன்னர்களின் முரண்பாடான நிலைமை. இந்த ஆட்சி முறை தனிப்பட்ட ஆட்சியாளர்களுக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டது. புதுடில்லியில் பிரதிநிதியாய் உள்ள வைஸ்ராய் மூலம் பிரிட்டிஷ் பேரரசின் மன்னரது மேலாதிக்கத்தை இந்திய மன்னர்கள் அங்கீகரித்தனர். வெளியுறவு விவகாரங்கள், பாதுகாப்பு ஆகியவற்றின் கட்டுப்பாட்டை வைஸ்ராயிடம் அளிக்கவும் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். இதற்கு ஈடாக இந்தியாவில் உள்ள தங்களின் மாகாணங்களுக்கு சுயாட்சி உரிமை தொடர்வதை உறுதி செய்து கொண்டார்கள்.

ஹைதராபாத் நிஜாம், காஷ்மீர் மகாராஜா போன்றவர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் பரப்புக்கும் மக்கள் தொகைக்கும் இணையான பகுதிகளை ஆட்சி செய்து வந்தார்கள். மற்ற சிலர் பம்பாய்க்கு அருகே உள்ள கத்தியவார் தீபகற்பம் போன்ற, லண்டனின் ரிச்மண்ட் பூங்காவை விடப் பெரிதாயில்லாத பகுதிகளை குதிரை லாயத்தில் இருந்து கொண்டு ஆட்சி செய்தார்கள். இவர்களின் வம்சாவளியினர் உலகின் மிகப்பெரிய பணக்காரர்களாகவும் இருந்தனர் ஒரு பசுவுக்குரிய மேய்ச்சல் நிலம் அளவுக்கான ஆட்சிப்பகுதியைக் கொண்ட ஏழைகளாகவும் இருந்தனர். சுமார் நானூறு மன்னர்கள் இருபது சதுரமைல்களுக்கும் குறைவான நிலப்பரப்புள்ள சிறிய பகுதிகளையே ஆட்சி செய்தார்கள். இவர்களில் பெரும்பாலோர் தங்களின் குடிமக்களுக்கு பிரிட்டிஷாரை விடச் சிறந்த நிர்வாகத்தையே வழங்கினர். ஒரு சிலர் மக்களின் நிலையை மேம்படுத்துவதைவிட, தங்களின் சொகுசான வாழ்க்கை விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள அரசு கஜானாவை காலி செய்யும் சர்வாதிகாரிகளாக நடந்து கொண்டனர்.

சராசரியாக 11 பட்டப் பெயர்களும் 5 . 8 மனைவிகளும், 12 . 6 குழந்தைகளும், 9.2 யானைகளும், 2.8 தனிப்பட்ட ரயில்வே கார்களும், 3.4 ரோல்ஸ் ராய் கார்களும், கொல்லப்பட்ட 22 . 9 புலிகளும் கொண்டிருந்த இந்திய மன்னர்களின் அரசியல் சார்புநிலை எப்படி இருந்தாலும், 1947 இளவேனில் காலத்தில் அவர்களின் எதிர்காலம் பெரும் பிரச்சனைக்குரியதாக இருந்தது. இவர்களின் பிரத்யேகமான நிலைமையை சமாளிக்கத் தவறி விட்டால் இந்தியாவின் பிரச்சனைக்குத் தீர்வு ஏற்படாது.

காந்தி, நேரு மற்றும் காங்கிரசைப் பொறுத்த வரை பதில் தெளிவாக இருந்தது. மன்னர்கள் ஆட்சி நீக்கப்பட வேண்டும்; அவர்கள் ஆளும் பகுதிகள் சுதந்திர இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டும். யாதவீந்திர சிங்குக்கும் அவரைப் போன்ற மற்றவர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கும் வகையில் அந்தத் தீர்வு எளிதாக இல்லை. இவரது மாநிலமான பாட்டியாலா பஞ்சாபின் இதயமாக இருந்தது. இந்தியாவின் செழிப்பு மிக்கப் பகுதிகளில் ஒன்று. காலாட் படைப்பிரிவின் அளவுக்கு அவரிடம் ராணுவம் இருந்தது. தேவைப்பட்டால் ஆட்சிப் பகுதியைப் பாதுகாக்க செஞ்சூரியன் டாங்குகளும் அரணாக நிற்கும்.

இந்திய மன்னர்கள் சபையின் தலைவர் தேநீரை உறிஞ்சிக் குடித்த போது, அவருக்கு மேல், கவலையும் பதற்றமும் நிறைந்த சூழ்நிலை இருந்தது. இந்த மே மாதக் காலை வேளையில் இந்தியாவின் வைஸ்ராய்க்குத் தெரியாத சில விஷயங்களும் அவருக்குத் தெரியும். நேருவும் காங்கிரசின் சோஷலிஸ்டுகளும் விரும்புவது போல் அவர்களுக்கும் பாதகமான தீர்வு வரக்கூடாது என்பதற்காக தனது எதிர்காலத்துக்காகவும் தன்னொத்த மன்னர்களின் எதிர் காலத்துக் காகவும் பஞ்சாப் மாகாணத்திலிருந்து 6000 மைல்களுக்கு அப்பால் உள்ள லண்டனில் ஒருவர் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை யாதவீந்திர சிங் அறிவார்.

இந்தக் கோரிக்கையை வைத்தவர் ஒரு மகாராஜா அல்ல; ஒரு ஆங்கிலேயர். வைஸ்ராய்க்குத் தெரியாமலும் அவரிடம் ஒப்புதல் பெறாமலும் அவர் லண்டனில் இருந்தார். கிருத்தவத் தொண்டூழியர் ஒருவரின் மகனான சர் கொன்ராட் கோர்ஃபீல்ட் (Sir Conrad Corfield), இந்தியாவை ஆட்சி செய்யும் பிரிட்டிஷாரின் பலம், பலவீனங்களை நன்கு அறிந்தவர். கோர்ஃபீல்ட் தமது பணிக்காலத்தின் பெரும் பகுதியை மன்னர்கள் ஆட்சி செய்த பகுதிகளிலேயே கழித்தவர். இதன் விளைவாக இந்த மாநிலங்கள் தான் அவரின் இந்தியாவாக இருந்தது. கோர்ஃபீல்டைப் பொறுத்தவரை இந்தியாவுக்கு நல்லது என்றால் இந்திய மன்னர்களுக்கு நல்லது என்பது தான் கருத்து. குறைந்தபட்சம் மன்னர்களுக்கிருந்த உணர்வுகளுக்கு இணையாக அவர்களைப் போலவே நேருவையும் காங்கிரசையும் எதிரிகளாக நினைத்து அவர் வெறுத்தார்.

1947 மே மாதத்தில் கோர்ஃபீல்ட் வைஸ்ராயின் அரசியல் செயலாளராக இருந்த போது இந்திய மன்னர்கள் பிரிட்டிஷ் பேரரசின் மன்னருக்கு விட்டுக் கொடுத்திருக்கும் அதிகாரங்களை செயல்படுத்தும் பொறுப்பை வகித்தார். காங்கிரசுக்கும் முஸ்லீம் லீகுக்கும் இடையேயான மோதலுக்குத் தீர்வு காண டில்லிக்கு வந்ததிலிருந்து கோர்ஃபீல்ட் அல்லது இந்திய மன்னர்களின்

பிரச்சனைகளுடன் மல்லுக்கட்ட மவுண்ட்பேட்டனுக்கு சிறிதுநேரம் கூட கிடைக்கவில்லை. இது பற்றி கோர்ஃபீல்டும் கவலைப்படவில்லை. தனது மேலதிகாரிக்கு நேருவுடன் கனிந்து வரும் நட்பில் ஆழ்ந்த ஐயம் கொண்ட கோர்ஃபீல்ட், அவருக்கு நெருக்கமான மன்னர்களுக்கு மவுண்ட்பேட்டன் அளிக்கவிருப்பதை விட நல்லவிதமான பாதுகாப்பைப் பெற்றுத் தர வேண்டும் என்பதற்காக லண்டனுக்குப் பறந்தார். இந்திய மன்னர்களுக்கு உரிய மதிப்பை அளிக்கும் வகையில் விசேஷமாக அமைக்கப்பட்ட அறையிலிருந்து கோர்ஃபீல்ட் அந்தக் கோரிக்கையை வைத்தார். ஜான் மோர்லே (John Morley) காலத்திலிருந்து 'தங்கக் கூண்டு' என்று அறியப்பட்ட, எண்கோண வடிவில் அமைந்த, இந்தியாவுக்கான பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரின் லண்டன் அலுவலக அறைக்குள், ஒரே நேரத்தில் இரண்டு பேர் வருவதற்கு வசதியாக அமைச்சரின் மேசைக்கு எதிரே இரண்டு கதவுகள் இருந்தன. இதன் மூலம் சம அந்தஸ்துள்ள இரண்டு மகாராஜாக்கள் கூச்சமின்றியும், ஒருவருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதான மனவருத்தம் இல்லாமலும் ஒரே நேரத்தில் உள்ளே வந்து அமைச்சரை சந்திக்க முடியும்.

இப்போது அந்த அலுவலகத்திலிருந்து லிஸ்டோவல் கோமகனிடம் (Earl of Listowel) கோர்ஃபீல்ட் தமது வாதங்களை வலுவாகவும் ஆவேசத்துடனும் முன்வைத்தார். இந்திய மன்னர்கள் தங்கள் அதிகாரங்களை அர்ப்பணித்தது பிரிட்டிஷ் முடியரசுக்கு பிரிட்டிஷ் முடியரசுக்கு மட்டுமே என்று அவர் வாதிட்டார். இந்தியா சுதந்திரம் அடையும் நேரத்தில் அந்த அதிகாரங்கள் அவர்களிடமே திருப்பி அளிக்கப்பட வேண்டும். அதன்பிறகு புதிய ஏற்பாட்டின்படி இந்தியாவுடன் இருப்பதா பாகிஸ்தானுடன் இருப்பதா என்பதை சுதந்திரமாக முடிவு செய்யட்டும்; நடைமுறை சாத்தியமானது என்று அவர்கள் தேர்ந்தெடுத்தால் சுதந்திரமாகவும் இருக்கலாம். இதற்குக் குறைவானத் தீர்வு என்பது இவர்களின் மாநிலங்களை பிரிட்டனோடு இணைத்த போது ஏற்பட்ட ஒப்பந்தங்களை மீறுவதாகும்.

கோர்ஃபீல்டின் விளக்கம் சட்டஞானப்படி மிகவும் சரியானதே. ஆனால் நடைமுறையில் இதன் விளைவுகளை நினைத்துப் பார்த்தால் அச்சம் ஏற்படும். கோர்ஃபீல்டின் உணர்ச்சி பூர்வமான கோரிக்கை ஏற்கப்பட்டால் சுதந்திர இந்தியா, சிம்லாவில் இருக்கும் நேருவும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குத் துண்டு துண்டாகி விடும்.

★

பளிங்கினாலான அரண்மனைகள், புலிகள், யானைகள், அணிகலன்கள் போன்றவற்றின் கண்ணைக்கவரும் காட்சியை மனித குலத்துக்குக் காட்டு வதற்காகவே கடவுள் மகாராஜாக்களைப் படைத்தார் என்று ரட்யார்ட் கிப்ளிங் (Rudyard Kipling) ஒரு முறை கூறினார். பலசாலியோ பலவீனரோ, பணக் காரரோ ஏழையோ அவர்களின் பிறவி அசாதாரணமானது. இப்போது அழிவின் விளிம்பிலிருக்கும் இந்தியாவின் புராணக்கதைகள் இந்தப் பரம்பரையின் உறுப்பினர்களால் ஊட்டி வளர்க்கப்பட்டவைதான். இவர்களின் நல்ல, தீய குணங்களும், ஊதாரித்தனங்களும் ஆடம்பரங்களும் முட்டாள் தனங்களும் நாட்டுப்புற கதைகளுக்கான கற்பனையை வளப்படுத்தின. விசித்திரமான கனவுலகத்தாகம் கொண்டிருந்தன. அவர்களின் காலம் முடிந்து கொண்டி

ருக்கிறது. இந்திய மகாராஜாக்களின் காலம் முடிவுக்கு வந்தால் அந்த உலகம் மந்தமானதாகவே இருக்கும்.

★

இந்திய மன்னர்களைச்சுற்றி கற்பனை வளமிக்கப் புனைகதைகள் இருந்தன. ஒப்பிட்டுப் பார்த்தால் இவர்களிலும் ஒரு சிறு குழுவினரைப் பற்றியவைதான் அவை. ஆட்சியாளர்களிலும் செல்வமும், நேரமும் ஈடுபாடும் இருந்தவர்கள் தான் இவற்றில் கவனம் செலுத்தினார்கள். பலவற்றை அனுபவித்த பேராசை அந்த ஊதாரி மன்னர்களை ஒன்றுசேர்த்தன. மிதமிஞ்சிய பற்றுதலுடன் அவற்றை அவர்கள் பாதுகாத்தும் வந்தனர். வேட்டையாடுதல், கார் பவனி, விளையாட்டுகள், அரண்மனைகள், அந்தப்புரங்கள், எல்லாம் அவர்களின் பேராசையின் பகுதிகள்; ஆனால் மகாராஜாக்கள் மிகவும் நேசித்தவை அணிகலன்கள்தான்.

பரோடா மகாராஜா உண்மையாகவே தங்கத்துக்கும் மதிப்பு மிக்க மணிக் கற்களுக்கும் வழிபாடு செய்தார். அவரது அரண்மனை தர்பாரின் திரைச்சீலைகள் தங்க இழைகளால் நெய்யப்பட்டவை. இதனை நெய்வதற்கு ஒரே ஒரு குடும்பம் மட்டுமே அனுமதிக்கப்பட்டது. அந்தக் குடும்பத்து ஒவ்வொரு உறுப்பினரின் கைவிரல் நகங்களும் மிக நீளமாக வளர்க்கப்பட்டன. பின்னர் அவை சீப்பின் பற்கள் போல் இடைவெளி விட்டு வெட்டப்பட்டன. செங்குத்தாக இருக்கும் தங்க இழைகளை கவனமுடன் பராமரிக்கவே இந்த ஏற்பாடு.

உலகத்தின் ஏழாவது பெரிய வைரமான ஸ்டார் ஆஃப் தி சவுத், யூஜெனிக்கு மூன்றாம் நெப்போலியனால் வழங்கப்பட்ட வைரம் உட்பட அவரது சேமிப்பில் வரலாற்றுச் சிறப்பு மிக்க வைரங்கள் இருந்தன. மரகதங்களாலும் மாணிக்கங்களாலும் அலங்கரிக்கப்பட்ட, முழுவதும் முத்துக்களாலான, ஓவிய திரைச்சீலைகளும், விலைமதிப்பில்லா பொருள்களைக் கொண்ட அவரது கருவூலச் சேமிப்பில் இருந்தன.

இதைவிட சிறப்பு மிக்க சேமிப்பை பரத்பூர் மகாராஜா பெற்றிருந்தார். அவரிடமிருந்த பொருள்களின் சிறப்பம்சம் அவை தந்தங்களால் செய்யப் பட்டவை. ஒவ்வொன்றும் ஒரு குடும்பம் முழுவதும் ஆண்டுக்கணக்கில் உழைத்து உருவாக்கப்பட்டது. யானைகளின் துதிக்கைகளிலிருந்து வெட்டப்பட்ட தந்தங்களைக் கொண்டு இவற்றைச் செய்ய மிகவும் நுட்பமான தொழில் திறமை தேவைப்பட்டது. உலகிலேயே மிகப்பெரிய புட்பராகக்கல், கிரேக்கப் புராணக்கதை அரக்கனின் ஒற்றைக் கண் போல கபுர்தலா சீக்கிய மகாராஜாவின் தலைப்பாகையிலிருந்து ஒளி வீசியது. சீமை பாதாம் கொட்டை போன்ற அதனைச் சுற்றி 3000 வைரக்கற்களும் முத்துக்களும் பதிக்கப் பட்டிருந்தன. ஜெய்ப்பூர் மகாராஜாவின் பாரம்பரியச் சொத்துக்கள் ராஜஸ்தான் மலைப்பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. இந்தப் பகுதி போர் விருப்பமுள்ள ராஜபுத்ர பழங்குடி மக்களால், தலைமுறை தலைமுறையாய்ப் பாதுகாக்கப்பட்டது. ஒவ்வொரு மகாராஜாவும் தனது மணிமுடியில் பதித்துக் கொள்வதற்குரிய மணிக்கல்லைத் தேர்ந்தெடுத்துக்

கொள்ள வாழ்நாளில் ஒரு தடவை மட்டும் இந்தப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இங்கிருந்த சேமிப்புகளில் மிகவும் அழகிய ஆபரணம் ஒரு கழுத்தணி (நெக்லேஸ்) ஆகும். ஒவ்வொன்றும் புறாமுட்டை அளவுள்ள மாணிக்கக்கற்கள் மூன்று அடுக்காக இதில் பதிக்கப்பட்டிருந்தன. மேலும் மூன்று பெரிய மரகதக்கற்களும் இருந்தன. இவற்றில் பெரிதான ஒன்றின் எடை 90 காரட் ஆகும் (ஒரு காரட் என்பது சுமார் 3½ குன்றி மணி எடையாகும் - மொ-ர்)

பாட்டியாலா சீக்கிய மகாராஜாவின் சேமிப்பில் நடுநாயகமாக இருந்தது முத்துக்களாலான கழுத்து மாலை (நெக்லேஸ்) ஆகும். இதனை லாயிட்ஸ் நிறுவனம் ஒரு மில்லியன் (10 லட்சம்) டாலருக்கு இன்ஷூர் செய்திருந்தது. இருப்பினும் மிகவும் விசித்திரமான பொருள் என்பது மார்பில் அணியும் வைரப்பதக்கம் தான். ஒளிவீசும் அதன் பரப்பில் அடுத்தடுத்து பொருத்தமாக, நீல - வெள்ளை நிறம் கொண்ட 1001 வைரக்கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. இந்த நூற்றாண்டின் தொடக்க காலம் வரை பாட்டியாலா மகாராஜாக்களிடம் ஒரு வழக்கம் இருந்தது. வைரத்தாலான மார்புப் பதக்கத்தைத் தவிர வேறெதையும் அணியாமல் ஆண்டுக்கு ஒரு முறை மக்கள் முன் நிர்வாணமாகத் தோன்றுவதுதான் அந்த வழக்கம். அப்போது அவரது ஆண்குறி முழு அளவில் நீண்டு விறைத்து நிற்கும். சிவபெருமானின் உறுப்பைப் பிரதிபலிக்கும் இனப்பெருக்கக் குறியீடான சிவலிங்கக் காட்சியாக மன்னரின் செயல் நியாயப்படுத்தப்பட்டது. இப்படியே மகாராஜா நடக்கும்போது அவரது ஆண்குறியின் அளவைக் கண்டும் அதிலிருந்து ஏற்படும் ஒருவகை மந்திர சக்தியால் அங்குள்ள துர்தேவதைகள் விரட்டப்படுகின்றன என்ற நம்பிக்கையிலும் மக்கள் மகிழ்ச்சி அடைந்து கைகளைத் தட்டி கொண்டாடுவார்கள்.

சிற்றின்ப நுகர்ச்சிக்கு உலகிலேயே மிகுந்த பயன்தருவது பொடியாக்கப்பட்ட வைரங்களிலிருந்து செய்யப்பட்ட சூரணம் தான் என்று சீனத்துறவி ஒருவர், முன்பிருந்த மைசூர் மகாராஜாவிடம் கூறியிருந்தார். துரதிருஷ்ட வசமான இந்தக் கண்டுபிடிப்பால், மன்னரின் கருவூலத்திலிருந்து நூற்றுக் கணக்கான வைரக்கற்கள் எடுக்கப்பட்டு அரசுத் துறை ஆலைகளில் இவை வேகவேகமாகப் பொடியாக்கப்பட்டன. ஒரு வகையில் இந்த மருந்தால் பயனடையப்போகும் நடன மாதர்கள் யானைகள் மீதமர்ந்து அணிவகுத்து வந்தனர். இந்த யானைகளின் துதிக்கைகள் மாணிக்க கற்களாலும், காதுகள் எஞ்சியுள்ள வைரங்களால் செய்யப்பட்ட காதணிகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன.

பரோடா மகாராஜா இதைவிடப் பகட்டாக அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்றின் மீது அமர்ந்து சவாரி செய்தார். 100 வயதான பேருரு கொண்ட யானை பல போர்களில் அதன் நீண்ட தந்தங்களில் இருபது பேர்களை ஒரே நேரத்தில் குத்திச் சொருகியது. அதன் மீதுள்ள அனைத்தும் தங்கத்தால் ஆனவை. மன்னர் அமரும் அம்பாரியும், யானையின் சேணம், சேணத்தின் மேலுள்ள துணி என அனைத்தும் தங்கத்தாலானவை. தடித்த தோலுடைய ஒவ்வொரு காதிலும் குஞ்சரங்கள் போல பத்து தங்கச்சங்கிலிகள் தொங்கின. ஒவ்வொரு சங்கிலியும் 25,000 பவுண்ட் மதிப்புடையது. ஒவ்வொன்றும் ஒரு வெற்றியின் அடையாள மாகும்.

நாட்டுப்புறக்கதைகளிலும் நடைமுறையிலும் பல தலைமுறைகளாக மன்னர்களின் விருப்பத்துக்கு உகந்த வாகனமாக இருந்தது யானைதான். பிரபஞ்ச உற்பத்தியின் அடையாளமான யானைகள், இந்து புராணங்களின்படி ஆகாயத்தையும் மேகங்களையும் தாங்கி நிற்கும் தூண்களாகும். இவை ராமனின் கையிலிருந்து பிறந்தவை. ஆண்டுக்கு ஒரு முறை ஒரு பெரிய ஆண் யானையின் காலடியில் வீழ்ந்து மைசூர் மகாராஜா பணிவுடன் வணங்குவாராம். இதன் மூலம் இயற்கை சக்திகளுடன் அவரது இணக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டார்.

யானைக் கொட்டடிகளில் நிறைந்திருந்த யானைகளின் எண்ணிக்கை, வயது உருவம் ஆகியவற்றை வைத்துத்தான் ஒரு மன்னரின் தகுதி நிர்ணயிக்கப்பட்டது. ஆல்ப்ஸ் மலைத் தொடரைக் கடந்து ஹன்னிபால் ஓட்டிச் சென்ற யானைகளின் கூட்டம்தான் உலகிலேயே மிக அதிக எண்ணிக்கையிலானது. இதற்கு நிகரான யானைகள் ஆண்டுக்கு ஒருமுறை மைசூரில் நடைபெறும் இந்துப் பண்டிகையான தசராவில் அணிவகுத்தன. பூக்களால் அலங்கரிக்கப்பட்ட போர்வைகளுடனும் மணிக்கற்களும் தங்க நகைகளும் கொண்ட முகபடாம்களுடனும் ஆயிரம் யானைகள் மைசூர் நகர வீதிகளில் ஊர்வலமாகச் செல்லும். மிகவும் பலம் வாய்ந்த யானைக்கு முதுகில் மகாராஜாவின் சிம்மாசனத்தைத் தாங்கிச் செல்லும் கவுரவம் கிடைக்கும். அதில் தங்கத்தாலான பெரிய படிகளும் தங்கத்தாலான பூ வேலைப்பாடுகள் கொண்ட வெல்வெட் துணி போர்த்தப்பட்டிருக்கும். அரச அதிகாரத்தின் அடையாளமாக அதன் மீது வெண்கொற்றக் குடை இருக்கும். இதற்குப் பின்னால் மேலும் இரண்டு யானைகள் இதே போல் அலங்கரிக்கப்பட்ட, ஆளில்லாத அம்பாரிகளுடன் வரும். இவற்றைப் பார்த்ததும் அந்தப் பாதையில் உள்ள மக்கள் அனைவரும் மரியாதையுடன் மவுனம் காப்பார்கள். மகாராஜாவின் மூதாதையர்களின் ஆத்மாக்கள் இந்த ஆளற்ற அம்பாரிகளில் வலம் வருவதாக ஒரு ஐதீகம்.

பரோடாவில் மன்னர்களின் வேடிக்கை விநோத போட்டிகளில் யானைச் சண்டை மிக முக்கிய இடம் பெற்றது. அவற்றின் சண்டை காண்பதற்குக் கோரமாக இருக்கும். சண்டையிடும் காளைகளை அதற்குரிய வீரன் குத்திச் சினமூட்டுவது போல், போரிடும் இரண்டு பெரிய ஆண் யானைகளை அவற்றின் விலாப்பகுதியில் அங்குசத்தால் குத்தி ஆவேசமூட்டி விரட்டுவார்கள். இரண்டு யானைகளும் மோதிக் கொள்ளும். அவற்றின் மிகவும் கனத்த உடல்களால் பூமி அதிர்ந்தது; அவற்றின் பிளிறல் சத்தம் ஆகாயத்தில் கலந்து அச்சமூட்டியது. அவற்றில் ஒன்று இறக்கும் வரை சண்டை நடந்தது.

கிழக்கிந்தியப் பகுதியான தெங்கனாலின் ராஜா வேறொரு வகையான ரத்தம் சிந்தாத யானைகள் கண்காட்சியை நடத்தினார். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு இதனைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அவரது கொட்டடியிலிருந்து தேர்வு செய்யப்பட்ட இரண்டு பெரிய யானைகளின் வெளிப்படையான உடலுறவுக் காட்சிதான் அது.

பக்கிங்காம் அரண்மனையில் இருக்கும் சாண்ட்லியர் எனும் சரவிளக்கின் வடிவத்தை மிஞ்சும் மிகப்பெரிய சரவிளக்கைக் கொண்டு நூற்றாண்டின் இறுதிக்குள் தனது அரண்மனையை அலங்கரிக்க வேண்டும் என்று குவாலியர் மகாராஜா முடிவு செய்தார். வெனிசில் இதற்கு அவர் ஆர்டர் கொடுத்தார்.

ஆனால் அத்தகைய விளக்கின் எடையைத் தாங்கும் சக்தி அரண்மனையின் மேல் தளத்துக்கு இல்லை என்பதை சிலர் மகாராஜாவுக்கு எடுத்துரைத்தார்கள். விசேடமாக அமைக்கப்பட்ட பளுதூக்கியின் (கிரேன்) மூலம் மிக அதிக எடை கொண்ட யானையை ஏற்றி அரண்மனையின் மேல் தளத்தில் நிற்க வைத்து இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டார். இவ்வளவு கனத்த விலங்குநின்றும் தளம் இடிந்து விழாததால் புதிய சரவிளக்கை அரண்மனையின் தளம் தாங்கும் என்றும் மகாராஜா அறிவித்தார்.

மோட்டார் காரின் வருகை, மதிப்பு மிகு அரச யானைகளை விழாக் காலங்களுக்கு மட்டுமான அலங்காரப் பொருள்களாகச் சுருக்கி விட்டது. முதலாவது கார் 1892இல் இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டது. ஃபிரான்சில் தயாரிக்கப்பட்ட டிடியான் பவ்டன் (DeDion Bouton) என்ற அந்தக் கார் பாட்டியாலா மகாராஜாவுக்காகத் தருவிக்கப்பட்டது. அதன் உரிமத் தகட்டில் பூஜ்யம் (0) எண் குறிக்கப்பட்டதன் மூலம் எதிர்காலத் தலைமுறையினருக்கான பெருமை மிகு துவக்கம் பதிவு செய்யப்பட்டது. சிக்கனத்துக்குப் பெயர் பெற்றவர் என்ற செவிவழிச் செய்திகளுக்கு ஏற்ப ஹைதராபாத் நிஜாம் கார்களை வாங்க நவீன உத்தியைக் கையாண்டார். அவரது தலைநகருக்குள் கருத்தைக் கவரும் ஏதாவதொரு காரின் மீது ராஜபார்வை விழுந்து விட்டால் அந்தக் காரை மேன்மை தங்கிய மன்னருக்குப் பரிசாக அளித்தால் நன்றாக இருக்கும் என்ற தகவலை காரின் உரிமையாளருக்கு அனுப்பி வைப்பார். இப்படியே செய்து 1947க்குள் நிஜாமின் கார் நிறுத்தும் மண்டபத்தில் நூற்றுக்கணக்கான கார்கள் குவிந்தன. ஆனால் இவற்றை அவர் பயன்படுத்தியதேயில்லை.

இந்திய மன்னர்களின் பிடித்தமான காராக ரோல்ஸ் ராய்ஸ் (Rolls-Royce) இருந்தது. மேலே மூடிபோட்டவை, ஜோடியாக இருவர் அமர்ந்து செல்லும் பின்னிருக்கை கொண்டவை, சரக்கு ஏற்றுபவை என அனைத்து வகையான வடிவிலான கார்களையும் அவர்கள் இறக்குமதி செய்தனர். பாட்டியாலா மகாராஜாவின் கார் நிறுத்தும் மண்டபங்களுக்கு எந்திர யானைகள் போல் இருபத்தேழு பெரிய ரோல்ஸ் கார்கள் வந்ததால் ஏற்கெனவே வாங்கப்பட்ட சிறிய டியான் (Dion) கார் குறுகிப்போனது. இந்தியாவிலேயே மிகவும் ஆடம்பரமானது பரத்பூர் மகாராஜா வைத்திருந்த வெள்ளித் தகடு பொருத்திய ரோல்ஸ் கார் தான். இதன் வெள்ளித் தகட்டிலிருந்து பாலுணர்வைத் தூண்டும் அலைகள் வெளிப்பட்டதாக ஒரு வதந்தி உலாவியது. மற்றொரு மன்னரின் திருமண விழாவுக்கு இந்தக் காரினைக் கடனாகக் கொடுத்தது பாட்டியாலா மகாராஜாவின் இரக்கக் குணத்தின் அடையாளமாகக் கருதப்பட்டது. வேட்டைக்குச் செல்வதற்கென்றே வடிவமைக்கப்பட்ட ரோல்ஸ் கார் ஒன்றுக்கு பரத்பூர் மகாராஜா ஆர்டர் கொடுத்து வாங்கியிருந்தார். 1921ஆம் ஆண்டில் ஒருநாள் வேல்ஸ் இளவரசரையும் அவரது இளம் உதவியாளர் லூயி மவுண்ட் பேட்டன் பிரபுவையும் காட்டு வாத்து வேட்டைக்காக அந்தக் காரில் அவர் அழைத்துச் சென்றார். இந்தியாவின் எதிர்கால வைஸ்ராய் அன்றிரவு தனது நாட்குறிப்பில் இப்படி எழுதி வைத்தார்: 'அந்தக் கார் வனப்பகுதியிலும், திறந்த வெளியிலும், ஓட்டல்கள் வழியாகவும், கற்பாறைகள் மீதும் கடலில் படகுபோல் அசைந்தாடிச் சென்றது.'

அனைத்துக்கும் மேலாக ஆல்வார் மகாராஜாவின் லங்காஸ்டர் (Lancaster) கார் தான் இந்தியாவிலேயே மிகவும் புதுமையாக வடிவமைக்கப்பட்ட அரச வாகனமாக இருந்தது. அதன் உள்ளேயும் வெளியேயும் தங்கத்தகடு பதிக்கப்பட்டிருந்தது. காரோட்டியின் மெத்தென்ற இருக்கை தங்கப் பூவேலைப்பாடுகளைக் கொண்டிருந்தது. அதன் ஸ்டீரிங் சக்கரம் தந்தத்தால் செதுக்கப்பட்டிருந்தது. இங்கிலாந்து மன்னரின் முடிசூட்டுவிழாக்காலத்தில் செய்யப்படும் அலங்காரத்துடன் காரின் பின்பகுதி அமைந்திருந்தது. தொழில்நுட்ப அதிசயத்தால் இவ்வளவு எடையுள்ள வாகனத்தையும் மணிக்கு 70 மைல் வேகத்தில் சாலையில் செலுத்தும் திறனை அதன் என்ஜின் பெற்றிருந்தது.

அனைத்து வருவாயும் வரிகளும் தீர்வைகளும் மன்னர்களின் கஜானாக்களில் நிறைந்து அவர்களே அவற்றை செலவிடும் அதிகாரத்தையும் பெற்றிருந்ததால் இந்திய மன்னர்கள் தாங்கள் விரும்பிய வேடிக்கை வினோதங்களில் எதிர்ப்பின்றி ஈடுபட்டனர்.

இந்தியாவின் மிகச் சிறந்த மாநிலங்களில் ஒன்றினை ஆட்சி செய்த குவாலியர் மகாராஜாவுக்கு விருப்பமாக இருந்தவை மின்சார ரயில்கள். அவரது மின்சார ரயிலுக்கு இணையான ஒன்றை உருவாக்க கிருஸ்துமஸ் காலத்துக்கு முந்தைய சிறுவனால் கூட கற்பனை செய்ய முடியாது. அரண்மனையின் விருந்து மண்டப மையத்தில் இருந்த மிகப்பெரிய இரும்பு மேசை மீது 250 அடி நீளத்துக்கு உறுதியான வெள்ளித் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டன. அரண்மனைச் சுவர்களில் விசேஷமாகக் குடையப்பட்ட துவாரங்கள் மூலம் அந்த ரயில் பாதை சமையல் அறை வரை சென்றது. மகாராஜாவின் விருந்தினர்கள் மேசையைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள். ரயில் வண்டியை இயக்குவதற்கான லீவர்கள், ஆக்சிலரேட்டர்கள், ஸ்விட்சுகள், அலாரம் சிக்னல்கள் ஆகியவை பொருத்தப்பட்டிருந்த பெரிய கட்டுப்பாட்டுத்தளம் அமைந்திருந்த மேசையின் முகப்பில் மகாராஜா அமர்ந்திருந்தார். கட்டுப்பாட்டுக் கருவிகளை இயக்குவதன் மூலம் விருந்தினர்களுக்கு காய்கறிகளையும், உருளைக் கிழங்குகளையும், விருந்து மாளிகை முழுவதும் மன்னரால் வழங்க முடியும். பசியுடன் இருக்கும் விருந்தினர்களுக்கு இரண்டாவது முறை உதவி செய்ய எக்ஸ்பிரஸ் ரயில் வண்டியை மீண்டும் சமையலறைக்குச் செல்லுமாறும் உத்தரவிடமுடியும். ஒரு சுவிட்சை அழுத்துவதன் மூலம் மேசையில் தட்டுடன் காத்திருக்கும் ஒரு விருந்தினருக்கு உணவுக்குப் பிந்தைய இனிப்பு வகையை அளிக்காமலேயே கூட அந்த ரயில் வண்டியை வேகமாக இயக்கிவிட முடியும்.

ஒரு நாள் மாலை, வைஸ்ராயை கவுரவித்து முறைப்படி மன்னர் வழங்கிய விருந்தின் இடையே மன்னரிடமிருந்த கட்டுப்பாட்டு கருவிகளில் மின்சாரக் கோளாறு ஏற்பட்டது. மதிப்புக்குரிய விருந்தாளிகள் திகைத்துப் போகும் வகையில் அவரது மின்சார ரயில்கள் விருந்து மண்டபத்தின் ஒரு முனையிலிருந்து மறு முனைக்குப் பாய்ந்து சென்றன. மாமிச ரசம், வறுத்த இறைச்சி, பூரி மற்றும் பலகாரங்கள் விருந்தினர்கள் மீது சிதறிப் படிந்தன. ரயில்வே வரலாற்றிலேயே இது போன்ற விபத்து நடந்ததில்லை.

பம்பாய்க்கு வடக்கே உள்ள ஜுனாகடின் மகாராஜாவுக்கு நாய்கள் மீது ரொம்பவும் பிரியம். அவருக்குப் பிடித்தமான நாய்கள் தங்கவைக்கப்பட்ட

வீடுகள் தொலைபேசி, மின்சாரம், பணியாளர்கள் போன்ற வசதிகளைக் கொண்டிருந்தன. அவரது குடிமக்களில் பெரும்பாலோருக்குக் கிடைக்காத ஆனால் ஒரு சிலருக்குக் கிடைத்த நவீன குடியிருப்பு வசதி இவற்றுக்குக் கிடைத்தன. இந்த நாய்கள் இறந்து விட்டால் இறுதி ஊர்வலம் நடத்தி இவற்றுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ள மயானத்தில் பளிங்கினாலான கல்லறைகளில் அடக்கம் செய்யப்பட்டன.

அவரது செல்லப் பிராணியான ரோஷனா (Roshana) என்ற பெண் நாய்க்கும் பாபி (Bobby) என்று பெயரிடப்பட்ட லேப்ரடார் (Labrador) ஆண் நாய்க்கும் வெகு விமரிசையாகத் திருமண நிகழ்ச்சி நடந்தது. இதற்கு இந்தியாவில் உள்ள அனைத்து மன்னர்களும் வைஸ்ராய் உள்ளிட்ட மிக முக்கியப் பிரமுகர்களும் அழைக்கப்பட்டனர். வைஸ்ராய் தனது பதவி காரணமாக திருமணத்துக்கு வர மறுத்து விட்டார். இருப்பினும் மன்னரின் மெய்க்காப்பாளர் தலைமையில், முடிசூட்டு விழாக்கால முழு அலங்காரத்துடன் அரண்மனை யானைகள் பின் தொடர அந்தத் திருமண ஊர்வலப்பாதையில் 1,50,000 மக்கள் திரண்டிருந்தனர். அழகாக அலங்கரிக்கப்பட்ட முதலிரவு அறைக்கு அனுப்பப்படுவதற்கு முன் நாய் தம்பதியரை கவுரவிக்கும் விதத்தில் ஊர்வல முடிவில் மகாராஜா ஆடம்பரமான விருந்தளித்தார். இதற்கெல்லாமாக அவர் 60,000 பவுண்ட் செலவு செய்தார். இந்தத் தொகையைக் கொண்டு அவரது மாநிலத்தில் வறுமையில் உழலும் 6,20,000 குடிமக்களில் 12,000 பேருக்கு ஓராண்டுக்குரிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்க முடியும்.

இந்தியாவின் மாபெரும் மகாராஜாக்களின் அரண்மனைகள் அளவிலும் செழுமையிலும் தாஜ்மகாலுக்கு இணையான நினைவுச் சின்னங்களாக இருந்தன. ஆனால் ரசனையில் அப்படியிருக்கவில்லை. 600 அறைகளைக் கொண்ட மைசூர் அரண்மனை அளவில் வைஸ்ராய் மாளிகையையும் மிஞ்சுவதாக இருந்தது. மைசூர் மாநிலத்தில் மூன்று தலைமுறை மன்னர்களால் வேட்டையாடப்பட்ட புலிகள், சிறுத்தைகள், யானைகள், காட்டெருதுகள் ஆகியவற்றை சேமித்து வைப்பதற்கே தனியாக இருபது அறைகள் ஒதுக்கப்பட்டன. இரவு நேரத்தில் அரண்மனையின் மேல் தளங்களிலும் ஜன்னல்களிலும் ஆயிரக்கணக்கான விளக்குகள் எரிந்தன. இதைக் காணும் போது கடலில் மிதந்து செல்ல வேண்டிய ஒரு கப்பல் தவறுதலாக இந்தியாவின் மையப்பகுதிக்கு வந்து விட்டதாகத் தோன்றியது. காற்றோட்ட அரண்மனை என்று பெயர் பெற்ற பளிங்காலான ஜெய்ப்பூர் அரண்மனையின் முகப்பில் கையினால் செதுக்கப்பட்ட அழகிய வேலைப் பாடமைந்த பளிங்குச் சட்டங்களைக் கொண்ட 953 ஜன்னல்கள் இருந்தன. உதய்ப்பூரின் வெள்ளைப் பளிங்கு அரண்மனை ஒளி மின்னும் ஏரியிலிருந்து எழும் வெள்ளை நிற ஆவித் தோற்றம் போலிருந்தது.

வெர்செய்ல்ஸ் அரண்மனைக்கு, பதினான்காம் லூயியின் முடிசூட்டு விழாவுக்கு வந்திருந்த கபுர்த்தலா மகாராஜா தன்னை அவரின் மறுபிறவியாகக் கருதிக்கொண்டார். தனது சிறிய ஆட்சிப் பகுதியில் சூரிய மன்னனின் புகழினை மீண்டும் உண்டாக்கத் தீர்மானித்தார். ஃபிரான்ஸ் நாட்டின் கைவினைக் கலைஞர்கள் குழுவை இறக்குமதி செய்து இமயமலையின் அடிவாரத்தில்

வெர்செய்ல்ஸ் போன்ற அரண்மனையைக் கட்டினார். அந்த அரண்மனையில் செவ்ரசின் (Sevres) பூந்தோட்டங்களையும் கோபாலினின் (Gobelin) தரை விரிப்புகளையும், ஃபிரான்ஸ் நாட்டின் சிற்பங்களையும் நிறைத்தார். ஃபிரெஞ்ச் மொழியை அரசவை மொழியாக அறிவித்தார். சூரிய அரசனின் காவலர்களுக்கு இணையாய் மாற்றுவதற்காகத் தலைப்பாகை அணிந்த சீக்கிய காவலாளிகளை விக்குகளோடும், பட்டாலான கோட்டுகளோடும், அரை நிஜார்களோடும், வெள்ளி பக்கிள் வைத்த காலணிகளோடும் உருமாற்றினார்.

சில அரண்மனைகளில் இருந்த சிம்மாசனங்கள் வரவிருக்கும் மனித குலத்தலைமுறைகளும் வியக்கும் வகையில் பெரிதாகவும் ஆடம்பரமாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தன. மைசூர் சிம்மாசனம் ஒரு டன் தங்கத்தால் செய்யப்பட்டது. அதேபோல் இந்த சிம்மாசனத்தை அடைவதற்கான ஒன்பது படிகளும் தங்கத்தால் செய்யப்பட்டவையே. சத்தியத்தை நிலைநாட்ட அவதரிக்கும் போது பகவான் விஷ்ணு நடந்து வந்த ஒன்பது படிகளை நினைவுறுத்துவதாக இவை அமைந்தன; ஒரிசாவின் சிம்மாசனம் ஒரு பெரிய கட்டில் போல இருந்தது. லண்டனைச் சேர்ந்த ஒரு தொல்பொருள் வியாபாரியிடம் இதனை மன்னர் வாங்கினார். பின்னர் இதில் போதிய எண்ணிக்கையில் மணிக்கற்களைப் பதித்து அழகு செய்தார். விக்டோரியா ராணியின் திருமணக் கட்டிலின் சரியான நகலாக இருந்தது தான் இதன் கவர்ச்சிகர அம்சமாகும்.

கதீட்ரல் தேவாலய அளவுள்ள மண்டபத்தில் தான் ராம்பூர் நவாபின் சிம்மாசனம் வைக்கப்பட்டிருந்தது. சிம்மாசனம் பொருத்தப்பட்ட மேடையைச் சுற்றிலும் உள்ள தூண்களில் நிர்வாணப் பெண்களின் உருவங்கள் பளிங்கில் செதுக்கப்பட்டிருந்தன. இந்த சிம்மாசனத்தை வடிவமைப்பதற்கான யோசனையும் மற்றொரு சூரிய அரசனின் அரண்மனையிலிருந்து பெறப் பட்டது தான். தங்க வேலைப்பாடமைந்த இருக்கையில் ஒரு ஓட்டை போடப் பட்டிருந்தது. இது நேரடியாகக் கழிவறைத் தொட்டி வரை சென்றது. அரச காரியங்களைச் செய்து கொண்டிருக்கும் போது இடையூறில்லாமல் இதன் வழியே இயற்கை உபாதையைக் கழித்து பணிகளைத் தொடர வசதியாக இந்த ஏற்பாடு.

இந்த அரண்மனைகளில் வாழ்ந்த சோம்பல் மிக்கப் பெரிய மனிதர்களுக்கு நிறைய நேரம் கிடைத்தது. இதனைக் கழிப்பதற்கு இரண்டு விஷயங்களில் கவனம் செலுத்தினர். ஒன்று பாலுணர்வு மற்றொன்று விளையாட்டு. மன்னர் இந்துவாக இருந்தாலும் முஸ்லீமாக இருந்தாலும் ஆட்சியாளரது அரண் மனையின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது அந்தப்புரம். மன்னர்களின் சொந்தப்புரமாக இருந்த இதில் நடன மாதர்களும் காமக்கிழத்தியரும் நிறைந்திருந்தனர்.

வழக்கமாக வனங்களும் ஆட்சியாளரின் தனிப்பட்ட பராமரிப்பிலேயே இருந்தன. அவற்றின் இயற்கைத் தாவரங்களும் ஏன் புலிகள் போன்ற விலங்குகளும் கூட அவர்களின் சொத்தே. இவர்களின் துப்பாக்கிகளுக்குத் தப்பி 1947இல் இந்தியாவில் 20,000 புலிகள் வாழ்ந்தன. பரத்பூர் மன்னரின் முதல் புலிவேட்டை அவரது எட்டாவது வயதில் நடந்தது. அவருக்கு 35 வயது ஆகும்

போது, அவரால் கொல்லப்பட்ட புலிகளின் தோல்கள் ஒன்றாக இணைத்துத் தைக்கப்பட்டு, அரண்மனையின் வரவேற்பு அறைகளில் ஒரு சுவற்றிலிருந்து மற்றொரு சுவர் வரை தரைவிரிப்புகளாகப் பயன்படுத்தும் அளவுக்குக் குவிந்திருந்தன. அவரது பகுதி வாத்து வேட்டையில், சாதனை படைத்திருந்தது. ஹார்டிங்பிரபு (Lord Hardinge) வைஸ்ராயாக இருந்த போது அவரை கவுரவிப்பதற்காக நடத்தப்பட்ட வேட்டையின் போது மூன்றே மணி நேரத்தில் 4482 பறவைகள் சுட்டு வீழ்த்தப்பட்டன. குவாலியர் மகாராஜா தனது வாழ் நாளில் 1400க்கும் அதிகமான புலிகளைக் கொன்றார். தெரிந்தெடுக்கப்பட்ட அளவான வாசகர்கள் படிப்பதற்கான 'புலி வேட்டைக்கு ஒரு வழி காட்டி' என்ற புத்தகத்தையும் அவர் எழுதினார்.

அவரது தலைமுறையில் இரண்டு துறைகளிலும் (பாலுணர்வு மற்றும் விளையாட்டு - மொ-ர்) சிறந்து விளங்கியவர் சீக்கிய மன்னரான சர் பூபிந்தர்சிங். ஆஜானுபாகுவான அவர் பாட்டியாலாவின் ஏழாவது மகாராஜா. மன்னர்கள் சபையின் தலைவரது தந்தை. இரண்டு யுத்தங்களுக்கு இடையேயான உலகத்தில் உண்மையிலேயே இந்தியாவின் மகாராஜாவாக இருப்பதற்கென்றே பிறந்தவர் சர் பூபிந்தர் சிங். ஆறு அடி நாலு அங்குல உயரம்; 300 பவுண்டு எடை, காம இச்சை மிகுந்த உதடுகள்; அரக்குத்தனமான கண்கள்; மெழுகிடப்பட்டு ஊசிபோல் குத்திட்டு நின்ற கருமையான மீசை; மிகவும் கவனமுடன் சுருட்டி வைக்கப்பட்ட கருநிற தாடி. இவற்றுடன் இவரைப் பார்க்கும் போது தந்தத்தால் செய்யப்பட்ட மொகலாயர் சிற்பங்களில் ஒன்று இருபதாம் நூற்றாண்டுக்கு உயிர்ப் பெற்று வந்து விட்டதாகவே தோன்றியது.

சோர்வேதும் இல்லாத நாளில் அவர் இருபது பவுண்டு உணவை உண்பார். தேநீர் நேரச் சிற்றுண்டியாக அவர் இரண்டு கோழிகளைத் தின்பார். போலோ விளையாட்டில் பேரார்வம் கொண்டிருந்தார். பாட்டியாலாவின் புலிகள் எனப்படும் குதிரைகளுடன் சென்று உலகம் முழுவதும் உள்ள போலோ மைதானங்களில் பாய்ச்சலுடன் விளையாடிப் பெற்ற வெள்ளிக் கேடயங்கள் அவரது அறை முழுவதும் நிறைந்திருந்தன. இந்த முயற்சிகள் நீடித்திருக்க உலகத்தின் சிறப்பு மிக்க 500 போலோ குதிரைகளைத் தனது கொட்டடியில் அவர் பராமரித்து வந்தார்.

கடந்த கால மன்னர்களுக்கு இணையாக பூபிந்தர் சிங்கும் தனது இளமைக் காலத்திலிருந்தே பாலுணர்வில் பெருமளவு இச்சை கொண்டிருந்தார். வயது வந்த பின், அந்தப்புரத்தில் கவனம் செலுத்தத் துவங்கியபின் போலோ விளையாட்டிலும் வேட்டையாடுவதிலும் இருந்த அவரது ஆர்வம் குறைந்து போனது. அந்தப்புரத்துக்கு வந்து சேர்வோரை அவரே தனிப்பட்ட முறையில் பராமரித்தார். அனுபவ அடிப்படையில் விதவிதமான தோற்றங்களையும் செயல் திறமைகளையும் கொண்ட புதிய பெண்களைத் தேர்ந்தெடுத்துப் பணியில் அமர்த்தினார். அப்போது அந்தப்புரம் முழு அளவையும் எட்டி நிரம்பி விட்டது. அங்கே 350 பெண்கள் இருந்தார்கள்.

பஞ்சாபின் அனல்பறக்கும் கோடை காலத்தில் அந்தப்புரப் பெண்கள் அங்கிருந்து வெளியேறி மாலை நேரங்களில் பூபிந்தரின் நீச்சல் குளத்துக்கு வந்து விடுவார்கள். குளக்கரையைச் சுற்றி இருபதுக்கும் மேற்பட்ட பெண்கள் மேலாடையின்றி கொல்லிப்பாவைகள் போல் கொஞ்சம் கொஞ்சம்

இடைவெளி விட்டு நிறுத்தி வைக்கப்பட்டார்கள். மகாராஜா நீச்சலடிக்கும் போது சூடு தெரியக்கூடாது என்பதற்காக நீரில் ஐஸ்கட்டிகள் மிதக்கவிடப் பட்டிருந்தன. அடிக்கடி கரையேறிவரும் மகாராஜா பெண்களின் மார்பகத்தைத் தடவுவார் அல்லது விஸ்கியைச் சுவைப்பார். இந்தியக் கோயில்களில் பிரசித்தி பெற்ற, வகைவகையான உடலுறவுகளைச் சித்திரிக்கும் சிற்பங்களைப் போன்ற ஓவியங்கள் பூபிந்தரது தனியறையின் சுவர்களிலும் மேற்கூரையிலும் தீட்டப்பட்டிருந்தன. அவரது கட்டுமஸ்தான உடலுக்கும் புதிது புதிதானப் புணர்ச்சியை விரும்பும் மன நிலைக்கும் இவை வடிகாலாக இருந்தன. அவரது படுக்கை அறையின் ஒரு மூலையில் பட்டினால் ஆன பெரிய வலைபோன்ற படுக்கை தொங்கிக் கொண்டிருந்தது. அதிலே படுத்து கூரையில் வரைந்திருந்த ஓவியங்களில் உள்ளது போன்ற சிக்கலான உடலுறவு முயற்சிகளில் ஈடுபடும் போது சில வேளைகளில் பூபிந்தர் புவியீர்ப்பு விசையையும் ஸ்தம்பிக்க வைத்து விடுவாராம்.

'போதும்' என்று திருப்தி அடையாத குணமுள்ள கற்பனை மிக்க மகாராஜா, தனது ரசனை மாற்றத்துக்கு ஏற்ப காமக் கிழத்தியரின் உருவை மாற்றிக் கவர்ச்சியாக்கும் திட்டத்தைக் கொண்டிருந்தார். அந்தப்புரத்தின் கதவுகளைத் திறந்து விட்டு அணிகலன் செய்வோர், வாசனை திரவிய வல்லுநர்கள், முடிதிருத்துவோர், அழகு செய்வோர், ஆடை அலங்காரம் செய் வோரை ஏராளமாக அனுமதித்தார். அவ்வப்போது மாறுகிற ரசனைக்கேற்ப அல்லது லண்டனிலிருந்து வரும் அழகுக் குறிப்பு இதழ்களில் கூறப் படுவதற்கேற்ப தனது ஆசை நாயகிகளின் உடற்கூறுகளை மாற்றி அமைக்க ஃபிரான்ஸ், பிரிட்டன் அல்லது இந்தியாவைச் சேர்ந்த பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைக் குழுவினரை அவர் வைத்திருந்தார். அரச பாரம்பரிய ஆர்வத்தை மேலும் தூண்டும் வகையில் அந்தப்புரத்தின் ஒரு பகுதியை அவர் சோதனைச் சாலையாகவே மாற்றிவிட்டார். இங்கே இருந்த சோதனைக்குழாய்களும் குப்பிகளும் சிற்றின்பத்தை அதிகரிக்கும் சென்ட்டுகளை, வாசனைப் பொருள்களை, திரவங்களை, வசிய மருந்துகளைத் தயாரித்தன.

இவ்வளவு சாதுர்யமான ஏற்பாடுகளும் கடைசியில் மகாராஜாவின் உல்லாசக் கோபுரத்தில் பலவீனத்தை ஏற்படுத்தவே உதவின. ஒரு சீக்கியரை அழகுடன் சர் பூபிந்தர் சிங் என இயற்கை வலுவுடன் படைத்திருந்தாலும், அந்தப்புரத்தின் சுவர்களுக்குப் பின்னால் உள்ள மிகவும் தேர்ச்சி பெற்ற உடலுறவு வேட்கை நிறைந்த 350 பெண்களை ஒரு மனிதரால் திருப்திப்படுத்த முடியுமா? முடியாத போது சிற்றின்பத்தைத் தூண்டும் மருந்துகளைத் தேடித் தானேயாக வேண்டும். இதற்கேற்ப அவரது இந்திய மருத்துவர்கள் தங்கம், முத்துக்கள், வாசனை திரவியங்கள், வெள்ளி, மூலிகைகள், இரும்பு போன்றவற்றிலிருந்து பல மருந்துகளைத் தயாரித்தனர். துண்டுகளாக்கப்பட்ட கேரட்டுகளையும், சிட்டுக்குருவியின் மூளைப் பகுதியையும் கலந்து தயாரிக்கப்பட்ட மருந்துதான் சிறிது காலம் அவருக்குப் பயன் தந்தது.

இதன் பயன்கள் குறையத் தொடங்கிய போது சர் பூபிந்தர் இந்த விஷயத்தில் சிறப்பு நிபுணத்துவம் பெற்றிருந்ததாகக் கருதி ஃபிரான்ஸ் நிபுணர் குழுவினரை வரவழைத்தார். அந்தோ! கதிரியக்கம் அடிப்படையிலான அவர்களின் சிகிச்சையும் சில காலத்துக்குத்தான் பயன்படும் என்பது தெரியவந்தது. இவர்களின் மூதாதையர்கள் போலவே இவர்களிடமும் மகாராஜாவின்

உண்மையான நோய்க்கு மருந்து இல்லை. சுகபோகத்தில் திளைத்த இந்த மன்னரை வாட்டும் நோய் வீரியக்குறைவல்ல. இவரைப் போன்று வேறு சில மன்னர்களையும் பாதித்த நோய் தான் அது - சலிப்பு. இதனாலேயே அவர் இறந்தும் போனார்.

கடவுள் நம்பிக்கையில் மூழ்கிக்கிடக்கும் இந்தியாவில் சில மன்னர்களைக் கடவுளின் அவதாரங்கள் என்று புராணங்களும் நாட்டுப்புறக் கதைகளும் வர்ணித்தன. மைசூர் மகாராஜாக்கள் சந்திரவம்சம் என்று கூறப்பட்டனர். ஆண்டுக்கு ஒரு முறை இலையுதிர் காலத்தில், ஞாயிறு பூமத்திய ரேகையைக் கடந்து செல்லும் ஒரு நாளில் இந்த மகாராஜா மக்களுக்குக் கண்கண்ட தெய்வமாகக் காட்சி தருவார். இமாலயக் குகைகளில் சாதுக்கள் இருப்பது போல, ஒன்பது நாட்களுக்கு அவர் அரண்மனையில் உள்ள இருட்டறையில் தனிமையில் இருப்பார். இந்த சமயத்தில் முகச்சவரம் செய்வதோ குளிப்பதோ இல்லை. அந்த நாட்களில் அவரது உடலுக்குள் கடவுள் குடியேறுகிறார் என்று நம்பப்பட்டதால் மனிதர்களின் கண்கள் அவரைக் காண்பதில்லை; கை அவரைத் தொடுவதில்லை. ஒன்பதாவது நாளில் அவர் அங்கிருந்து வெளியே வருவார். அவரைச் சுமந்து கொண்டு தெய்வீகத் தன்மையற்ற ஒரு இடத்துக்கு செல்வதற்காக, ரத்தினங்கள் பதித்த முகபடாமையும் தங்கக் கம்பளத்தையும் கொண்ட யானை அரண்மனை வாசலில் நின்றிருக்கும். ஒட்டகம் மற்றும் குதிரை வீரர்கள் புடை சூழ அது அங்கிருந்து மைசூர் குதிரைப் பந்தய மைதானத்துக்குப் புறப்படும். அங்கே ஏராளமாகக் குழுமியிருக்கும் அவரது குடிமக்களின் முன்னிலையில் பிராமணப் புரோகிதர்கள் மந்திரங்களை ஓதுவார்கள். பின்னர் அவருக்கு முகச்சவரம் செய்து குளியல் நடத்தி உணவு அளிக்கப்படும். சூரியன் மறைந்து அந்தப் பாதையை இருள் கவ்வும் போது மன்னர் அருகே ஒரு கருங்குதிரை கொண்டு வரப்படும். அந்தக் குதிரை மீது அவர் ஏறும் போது பாதையைச் சுற்றியுள்ள இடங்களில் ஆயிரக்கணக்கான தீபங்கள் ஏற்றப்படும். பளபளக்கும் அவற்றின் செந்நிற வெளிச்சத்தில் கருங்குதிரை மீது அமர்ந்து மன்னர் பாதையைச் சுற்றி வரும்போது கூடியிருக்கும் மக்கள் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்வார்கள். சந்திரனின் மகனான மன்னர் மீண்டும் தங்களிடையே வந்ததற்காகப் பெரும்பாலான மக்கள் நன்றி தெரிவித்தனர். இந்த அற்புதக்காட்சியைக் காண வாய்ப்பு அளித்ததற்காகவும் பலர் நன்றி தெரிவித்தனர்.

உதய்ப்பூர் மகாராஜாக்கள் மேலும் ஒளிபடைத்த சூரியனிலிருந்து தாங்கள் அவதரித்ததாக அறிந்தனர். இவர்களின் அரசாட்சிதான் இந்தியாவில் மிகப்பழமையானது. இடையீடின்றி தொடர்ந்து 2000 ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளனர். உதய்ப்பூரிலும் ஆண்டுக்கு ஒருமுறை வாழும் கடவுளாக எண்ணி மகாராஜா வழிபடப்படுகிறார். மறு பதவியேற்பு விழா சடங்கிற்காக, கிளியோபாட்ராவின் உல்லாசக் கப்பலுக்கு நிகராக ஒரு படகில் அமரவைத்து அரண்மனையைச் சுற்றியுள்ள முதலைகள் நிறைந்த ஏரிகள் வழியாக மன்னர் அரண்மனைக்கு அழைத்து வரப்படுவார். நீண்ட வெண்ணிறப் பட்டாடைகள் அணிந்து அமைச்சரவை உயர் குடியினரும் பக்தி மேலிட படகில் வருவர்.

கங்கை நதிக்கரையில் உள்ள புனித நகரமான பனாரஸ் மன்னர்களுக்கு ஆடம்பர செயல்களில் ஆர்வம் குறைவு என்றாலும் பக்தியில் குறைவில்லாத

வர்கள். கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்ட இந்தப் பகுதியின் மகாராஜா, ஒவ்வொரு நாளும், முடிவில்லா பிரபஞ்சத்தின் இந்து மத அடையாளமான புனித பசுவைக் கண்டு கண்விழிப்பது தான் பாரம்பர்யப் பழக்கம். இதற்காக நாள்தோறும் விடியற்காலையில் ஒரு பசுமாட்டைக் கொண்டு போய் மன்னரின் படுக்கையறை ஜன்னல் அருகே நிறுத்துவார்கள். பின்னர் அதன் விலாக்களில் குத்தும் போது அது எழுப்பும் சத்தம் கேட்டு மன்னர் கண் விழிப்பார். ஒரு முறை இவர் ராம்பூர் நவாப் அரண்மனைக்கு விருந்தாளியாகச் சென்றார். அப்போது இவரது காலை நேரச் சடங்கினை நிறைவேற்றுவது பிரச்சனையாகி விட்டது. காரணம் இவர் தங்கியிருந்த படுக்கை அறை நவாப் அரண்மனையின் இரண்டாவது மாடியில் இருந்தது. இருந்தாலும் தனது விருந்தாளியின் காலைப் பொழுது நன்றாக விடிவதற்கு நவாப் ஒரு புத்திசாலித்தனமான உத்தியைக் கையாண்டார். ஒரு பளுதூக்கியைக் கொண்டு வந்து அதன் மீது பசுமாட்டை நிறுத்தி ஒவ்வொரு நாளும் பனாரஸ் மகாராஜாவின் படுக்கையறை ஜன்னல் வரை ஏற்றுமாறு செய்தார். முன்பின் அறியாத இந்தப் பயணத்தால் நடுங்கிப் போன பசு போட்ட சத்தத்தில் பக்தி மிக்க மகாராஜா மட்டுமல்ல அரண் மனையில் மற்றவர்களும் கண்விழித்துக் கொண்டார்கள்.

ஆத்திகரோ நாத்திகரோ, இந்துவோ முஸ்லீமோ, செல்வந்தரோ ஏழையோ, இழிந்தவரோ உயர்ந்தவரோ, இந்தியாவில் ஏறத்தாழ இரு நூற்றாண்டுகள் பிரிட்டிஷ் ஆட்சி நடக்க வலுவானத் தூண்களாக இருந்தவர்கள் மகாராஜாக் கள் தான். இந்தியாவை ஆட்சி செய்ய பிரிட்டிஷார் 'பிரித்தாளும்' தந்திரத்தைக் கையாண்டார்கள் என்று குற்றம் சாட்டப்படும். அந்தத் தந்திரத்தை இந்த மகாராஜாக்களின் மாநிலங்களுடனான உறவுகளைப் பராமரிக்கும் போது சாமர்த்தியமாகக் கையாண்டார்கள். முறைகேடான ஆட்சிக்காக எந்த ஒரு ஆட்சியாளரையும் அரியணையிலிருந்து அகற்ற பிரிட்டிஷாரால் முடியும் என்பது ஏட்டளவில் தான். எதார்த்தத்தில், மறைமுகமான சில கொலைகள் உட்பட எந்த மோசமான செயல்களை செய்துவிட்டும் ஒரு ஆட்சியாளர் பிரிட்டிஷாரின் தொந்தரவின்றி பதவியில் இருக்கலாம். இதற்கு ஒரே ஒரு நிபந்தனை பிரிட்டிஷாருடனான அவர்களின் விசுவாசம் உறுதியாக இருக்க வேண்டும். இதன் காரணமாக, பிரிட்டிஷாரால் நேரடியாக ஆட்சி செய்யப்பட்ட இந்தியப் பகுதிகள் முழுவதும் புரட்சிப் புயல் வீசியபோது இதிலிருந்து அந்த ஆட்சியை நங்கூரம் போலிருந்து காப்பாற்றியதோடு எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளிலும் மன்னராட்சிப் பகுதிகள் ஈடுபட்டன.

மன்னர்களின் விசுவாசம் வேறு பல வடிவங்களிலும் வெளிப்பட்டது. 1917 செப்டம்பர் 13இல் ஆலென்பியின் (Allenby) பாலஸ்தீனப் போரின் போது துருக்கியிடமிருந்து ஹைஃபாவைக் (Haifa) கைப்பற்றச் சென்ற படைக்குத் தலைமை தாங்கியவர்கள் ஜோத்பூர் மகாராஜாவின் படைவீரர்கள்தான்.*

* இந்த மகாராஜா தான், அவரது மாநிலத்தில் பிரபலமாயிருந்த குதிரை சவாரிக்கான, இடுப்புப் பகுதியில் விரிந்து இறுதியில் குறுகியிருந்த கால் சட்டையை மேல் நாட்டுக்கு அறிமுகம் செய்தார். சமாதான காலத்தில் லண்டனில் விக்டோரியா ராணியின் வைரவிழா நடந்தபோது தான் இந்த சம்பவமும் நடந்தது. இந்த விழாவுக்கு வந்தபோது தனது துணிமணிகளை ஏற்றி வந்த கப்பல் கடலில் மூழ்கி விட்டதை மன்னர் அறிந்தார். நிலைமையைச் சமாளிக்க

பிகானிர் (Bikaner) மன்னரின் ஒட்டகப் படைவீரர்கள் பிரிட்டனுக்கு ஆதரவாக சீனா, பாலஸ்தீனம், எகிப்து, ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இரண்டு போர்களில் ஈடுபட்டனர். லூயி மவுண்ட்பேட்டன் கட்டளையின் கீழ் பர்மாவிலும் செயல்பட்டனர். 1917இல் பிரிட்டிஷ் அரசு நெருக்கடியில் இருந்தபோது குவாலியர் அரசு காலாட்படையின் மூன்று தொகுதிகளையும் மருத்துவக்கப்பல் ஒன்றையும் அனுப்பி வைத்தது. இந்தப் படைகளை உருவாக்கவும், அவற்றுக்கு ஆயுதங்களை வழங்கவும், ஊதியத்திற்கும் ஆன செலவுகள் அனைத்தையும் ஏற்றவை சம்பந்தப்பட்ட மன்னர்களின் அரசுகளே தவிர இந்திய அரசு அல்ல. போர்ப்படையின் மேஜராகவும் இருந்த ஜெய்ப்பூர் மகாராஜா 1943இல் இத்தாலியின் மாண்டிகாசினோவின் சரிவான மலைப் பகுதிகளில் முதலாவது ஜெய்ப்பூர் காலாட்படைக்குத் தலைமை தாங்கி மேல் நோக்கிச் சென்றார். பர்மாவில் தனது படைவீரர்களுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக பண்டி மகாராஜா 'மிலிட்டரி கிராஸ்' விருதுபெற்றார்.

விசுவாசமாகவும், தாராளமாகவும் உதவிடும் மன்னர்களை அங்கீகரிக்கும் வகையிலும் பிரிட்டிஷ் அரசு நன்றி பாராட்டியது. மன்னர்களுக்குப் பட்டங்களை மழையாகப் பொழிந்தது. அவர்கள் பெரிதும் விரும்பிய மணிக்கற்கள் பதித்த அணிகலன்களை வழங்கியது. ஏழாம் எட்வர்டின் முடிசூட்டு விழாவின் போது அவரது அரச வண்டியின் பின்னால் கவுரவ மெய்க்காப்பாளர்களாகச் சவாரி செய்யும் பெருமையை குவாலியர், கூச்பிகார், பாட்டியாலா மகாராஜாக்கள் பெற்றனர். ஆட்சியாளர்களும் அவர்களின் வாரிசுகளும் கவுரவமாகவோ, கல்வி கற்றோ ஆக்ஸ்ஃபோர்டிலிருந்தும் கேம்பிரிட்ஜிலிருந்தும் பட்டங்களைப் பெற்றார்கள். மன்னர்களின் மார்புகளில் ஏற்கெனவே ஆபரணங்கள் ஜொலித்தாலும் விசுவாசமான மன்னர்களின் மார்புகளில் ஆர்டர் ஆஃப் தி ஸ்டார் ஆஃப் இந்தியா, அல்லது ஆர்டர் ஆஃப் தி இந்தியன் எம்பயர் என்ற பட்டயங்களும் ஜொலித்தன.

இதெல்லாவற்றையும் விட தங்களைச் சார்ந்து வாழும் மன்னர்களின் விசுவாசத்தை அளவிட பேரதிகாரம் கொண்ட பிரிட்டிஷ் அரசு புத்தி சாலித்தனமாக வேறொரு வடிவிலான கவுரவத்தையும் அளித்தது. பல மன்னர்களுக்கு மத்தியில் ஒரு மன்னர் அரசுக்கு எவ்வளவு விசுவாசமாக இருந்தார் என்பது அவருக்கு அளிக்கப்படும் மரியாதையின்போது எத்தனை துப்பாக்கி குண்டுகள் முழங்கின என்ற எண்ணிக்கையைக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கையை நிர்ணயிக்கும் அதிகாரம் வைஸ்ராயிடம் இருந்தது. ஒரு மன்னரின் அளப்பரிய சேவைகளைப் பாராட்டும் வகையில் குண்டுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதோ தண்டனையாக எண்ணிக்கையைக் குறைப்பதோ அவரின் விருப்பம். ஆட்சிப் பகுதியின் அளவோ மக்கள் தொகையோ மன்னருக்கான குண்டு முழக்க மரியாதையைத் தீர்மானிக்கவில்லை. பேரரசுக்கு அவர்கள் காட்டிய மரியாதையும், சிந்திய ரத்தமும், பாதுகாப்புக்கு செலவிட்ட தொகையும் சம அளவு முக்கியத்துவம் பெற்றன. ஹைதராபாத், குவாலியர், காஷ்மீர், மைசூர்,

லண்டனைச் சேர்ந்த ஒரு தையற்காரரை அணுகிய மன்னர், அவருக்குப் பிரியமான கால் சட்டைகள் எப்படி தயாரிக்கப்பட்டன என்ற ரகசியத்தை வெளியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

*பரோடா ஆகிய ஐந்து ஆட்சியாளர்கள் 21 குண்டுகள் முழங்கும் அதிகபட்ச மரியாதையைப் பெற்றார்கள். இவர்களுக்குப் பின்னால் பத்தொன்பது, பதினேழு, பதினைந்து, பதின்மூன்று, பதினொன்று, ஒன்பது குண்டு முழக்க மரியாதை பெற்ற மன்னர்கள் இருந்தனர். முக்கியத்துவம் பெறாத சிறிய பகுதிகளை ஆட்சி செய்த அதிர்ஷ்டமில்லாத 425 ராஜாக்களுக்கும் நவாபுகளுக்கும் குண்டு முழக்க மரியாதை அளிக்கப்படவே இல்லை. இந்தியாவின் மறக்கப் பட்ட ஆட்சியாளர்களான இவர்களுக்காகத் துப்பாக்கிக் குண்டுகள் முழங்கியதேயில்லை.*

*மகாராஜாக்களின் இந்தியாவில் போதிய அளவு முன்னேற்றங்களும் காணப்பட்டன. பிரிட்டிஷாரின் நேரடி ஆட்சியில் இருந்த மக்கள் கூட அறியாத பயன்களையும் உரிமைகளையும், ஞானம் மிக்க, மேல்நாட்டுக் கல்வி கற்ற மன்னர்கள் தங்களின் குடிமக்களுக்கு வழங்கினார்கள். இந்த நூற்றாண்டு தொடங்குவதற்கு முன்பே பரோடாவில் பலதார மணம் தடை செய்யப்பட்டது. கல்வி எல்லோருக்கும் இலவசமாக அளிக்கப்பட்டது. காந்தியைவிட விளம்பரம் குறைவாக இருந்தாலும் குறைவில்லாத உண்மை ஈடுபாட்டுடன் தீண்டாமைக்கு எதிராகப் பரோடா மன்னர் பிரச்சாரம் செய்தார். தீண்டத்தகாதோருக்கு வீடுகள் கட்டவும் கல்வி அளிக்கவும் நிறுவனங்களை உருவாக்கினார். பின்னாளில் அவர்களின் தலைவராகப் பரிணமித்த டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர் நியூயார்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக் கழகத்தில் படிக்க தனிப்பட்ட முறையில் நிதி உதவி செய்தார். பாலைவனப் பிரதேசமான ராஜஸ்தானில் தனது ஆட்சிக்கு உட்பட்ட சில பகுதிகளில் மக்கள் பயன்பாட்டுக்காக செயற்கையான ஏரிகளையும் சோலைகளையும் பிகானிர் மன்னர் உருவாக்கினார். இந்தியாவில் சமத்துவமற்றிருந்த பெண்களுக்கு சம அந்தஸ்தும் பதவிகளும் போபால் மன்னராட்சியில் அளிக்கப்பட்டன. மைசூரில், ஆசியாவின் தலைசிறந்த அறிவியல் கூடமும், புனல் மின் உற்பத்திக் கான அணைகளும், தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டன. வரலாற்றில் இடம்பிடித்த மாபெரும் வானியல் வல்லுநர்களின் வழித்தோன்றலும், ஈக்லிடின் (Euclid) ஜியோமிதி கோட்பாடுகளை சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்த வருமான ஜெய்ப்பூர் மகாராஜா உலகின் சிறப்பு வாய்ந்த வானியல் ஆய்வுக்கூடத்தை தனது தலைநகரில் அமைத்துப் பராமரித்தார். இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின் அரியணை ஏறிய மன்னர்களின் புதிய தலைமுறையினர் தங்களின் தந்தையரை விட ஆடம்பரங்களைக் குறைத்தனர். மனம் போன போக்கில் நடப்பதையும் குறைத்தனர். மாற்றம் தேவை என்பதை நன்கு உணர்ந்தனர்; தங்களின் மாநிலங்களில் மாறுதல்களையும் செய்தனர். இத்தகைய செயல்களில் முதலாவதாக பாட்டியாலாவின் எட்டாவது மகாராஜா அந்தப்புரத்தை மூடியதைக் குறிப்பிடலாம். ஆஜானுபாகுவான அவரது தந்தை சர் பூபிந்தர்சிங் அனுபவித்த அந்தப்புரம் அது. குவாலியர் மகாராஜா பொதுமக்களிலிருந்து ஒரு பெண்ணை மணந்தார். இவர் அரண்மனை ஊழியர் ஒருவரின் புத்திசாலி மகளாவார். தந்தையின் அரண்மனையை விட்டும் வெளியேறினார். இவர்களைப் போன்ற பலர் தங்களின் மாநிலங்களை பொறுப்போடும் திறமையோடும் ஆட்சி செய்தார்கள். ஆனால் துரதிருஷ்ட*

வசமாக ஒரு சிலர் செய்த மிதமிஞ்சிய ஆடம்பரச் செயல்கள் மூலம் தான் இந்திய மகாராஜாக்களை பொது மக்கள் எப்போதும் எடை போட்டனர்.

இந்தியாவின் இரண்டு மாநிலங்களுக்கு, 21 குண்டுகள் முழக்கத்துடன் உச்ச பட்ச மரியாதை பெற்ற இரண்டு மன்னர்களுக்கு, லண்டனில் சர் கொன்ராட் கோர்ஃபீல்ட் நடத்திய பேச்சுவார்த்தைகள் அதிமுக்கியத்துவம் உடையதாய் இருந்தன. இந்த இரண்டு மாநிலங்களும் மிக விசாலமானவை; நான்கு பக்கமும் நில எல்லையால் சூழப்பட்டவை. இவற்றின் ஆட்சியாளர்கள் சார்ந்த மதம் அவர்களது பெரும்பான்மை குடிமக்களின் மதத்திலிருந்து வேறுபட்டது. இருவரும் ஒரே மாதிரி கனவில்தான் இருந்தனர். தங்களின் மாநிலங்களை முழு சுதந்திரம் உடைய சுயாதிபத்தியம் பெற்ற நாடுகளாக மாற்ற வேண்டும் என்பது தான் அது.

இந்தியாவின் விசித்திரமான, அந்நியப் பண்புடைய ஆட்சியாளர்களிலேயே மிகவும் விசித்திரமானவர் ஹைதராபாதின் ஏழாவது நிஜாமும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் நம்பிக்கைக்குரிய கூட்டாளியும், மதிப்புக்குரியவருமான ரஸ்தும் - இ - தவ்ரான், அருஸ்து - இ - ஸெமான், வால் மமாலிக், ஆசிஃப்ஜா, நவாப் மீர் உஸ்மான், அலிகார் பகதூர், முஸாஃபருல் முல்க் நிஜாம் அல் - முத், சிஃபா சோலார், ஃபதே ஜங் (Rustum-i-Dauran, Arustu-l-Zeman, Wal Mamalik, Asifjah, Nawab Mir Osman, Alikhar Bahadur, Musafrul Mulk Nizam al Mud, Sipah Solar, Fateh Jang). பக்தியும் கல்வி அறிவும் மிக்க ஒரு முஸ்லீமான அவர் இஸ்லாமின் ஆளும் வர்க்கம் சார்பில் இந்தியாவின் மிகப் பெரிய, மக்கள் தொகை அடர்ந்த பகுதிக்குத் தலைவராக இருந்தார். இந்தியத் துணைக்கண்டத்தின் மையப் பகுதியான இதில், 20 மிலியன் (2 கோடி) இந்துக்கள் இருந்தனர். முஸ்லீம்கள் 3 மிலியன் (30 லட்சம்) மட்டும்தான். மெலிந்த உருவமுடைய அவர் சற்று வயதானவர். அவரது உயரம் ஐந்து அடி மூன்று அங்குலம்; எடை 90 பவுண்டு. பல ஆண்டுகளாக வெற்றிலை பாக்கு மென்றதால் அவரது பற்களில் கருஞ்சிவப்பு நிற காரைபடிந்ததோடு அளவும் குறைந்து விட்டது. பொறாமை மிக்க யாராவது உணவில் விஷம் கலந்து விடுவார்கள் என்ற அச்சம் அவரிடம் எப்போதும் இருந்தது. இதனால் உணவை ருசிபார்க்கும் ஒருவரை எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்றார். கிரீம், இனிப்புகள், பழங்கள், வெற்றிலை, பாக்கு, இரவு நேரத்தில் வழங்கப்படும் மது என எதுவானாலும் ருசிபார்ப்பவருடன் பகிர்ந்து கொண்டு சோதித்த பின்தான் இவர் உண்பார். இந்திய மன்னர்களிலேயே 'எக்ஸால்டெட் ஹைனெஸ்' (Exalted Highness) என்ற பட்டத்தைப் பெற்றவர் இந்த நிஜாம் மட்டும்தான். முதலாவது உலக யுத்தத்தின் போது யுத்த நிதிக்கு அவர் 25 மிலியன் (2 5 கோடி) பவுண்ட் வழங்கியதற்கு அங்கீகாரமாகத்தான் நன்றியுள்ள பிரிட்டன் இந்த சிறப்புப் பட்டத்தை அவருக்கு அளித்தது.

1947இல் உலகிலேயே மிகப்பெரிய பணக்காரராக இருந்தவர் இந்த நிஜாம்தான். அவருடைய செல்வச் செழிப்புப் பற்றி உலவிய கட்டுக்கதைகளை மிஞ்சுவதற்கு, அந்த செல்வம் செலவாகிவிடாமல் பாதுகாக்க அவர் எப்படிக் கருமித்தனத்துடன் நடந்தார் என்பது பற்றி உலவிய கதைகளால் மட்டுமே தான் முடியும். கசங்கிய பைஜாமாக்களையும், ஒரு சில ரூபாய் கொடுத்து உள்ளூர்ச்

*சந்தையில் வாங்கிய சாம்பல் நிற சாதா செருப்புகளையும் அவர் அணிந்தார். 35 ஆண்டுகளாக அதே அழுக்கேறி பூசணம் பிடித்த துருக்கி தொப்பியையே அணிந்தார். நூறு பேருக்கு விருந்தளிக்கும் வகையில் அவரிடம் தங்கத்தட்டுகள் இருந்தாலும் தகரத் தட்டில், படுக்கையறையில் விரிக்கப்பட்ட பாயில் அமர்ந்து தான் உணவருந்தினார். மிகவும் கருமியான அவர் விருந்தாளிகளால் விட்டுச் செல்லப்பட்ட துண்டு சிகரெட்டுகளை எடுத்தே புகைத்தார். அரச நிகழ்ச்சி ஒன்றில் ஷாம்பென் மது பரிமாற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மன்னரின் மேசை மீது வைக்கப்பட்ட ஒரே ஒரு பாட்டில் மது அவரிடமிருந்து மூன்று அல்லது நான்கு பேரைத் தாண்டிச் செல்லாமல் பார்த்துக் கொண்டார். 1944இல் வைஸ்ராயாக இருந்த வேவல் பயணம் செய்தபோது, போர்க்காலச் செலவு அதிகமாக இருப்பதால் வைஸ்ராய் ஷாம்பென் மது பரிமாற வற்புறுத்துவாரா என்று டில்லிக்குத் தந்தி அனுப்பி விசாரித்தார். வாரம் ஒரு முறை, ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டுக்குப் பின் அங்கு வசிக்கும் ஆங்கிலேயர் ஒருவர் நிஜாமைச் சந்திக்க வருவார். நிஜாமுக்கும் அவரது விருந்தினருக்குமாகச் சேர்த்து ஒரு கோப்பை தேநீர், ஒரு பிஸ்கட், ஒரு சிகரெட் ஆகியவற்றை தட்டில் வைத்து பவ்யமாகக் கொண்டு வருவார் பணியாள். ஒரு ஞாயிற்றுக்கிழமை அந்த ஆங்கிலேயர் முன்னறிவிப்பின்றி இன்னொரு விருந்தினரையும் அழைத்து வந்து விட்டார். அருகே இருந்த பணியாளரிடம் நிஜாம் முணு முணுத்தார். உள்ளே சென்ற பணியாள், இன்னொரு முறை ஒரு தட்டில் ஒரு தேநீர்க் கோப்பை, ஒரு பிஸ்கட், ஒரு சிகரட் கொண்டு வந்து விருந்தினருக்கு அளித்தார்.*

*பல மாநிலங்களிலும் ஒரு வழக்கம் இருந்தது. அங்குள்ள உயர் குடியினர் ஆண்டுக்கு ஒரு முறை மன்னரை சந்தித்து மரியாதை நிமித்தமாக தங்கத்தாலான ஒரு பொருளை அளிப்பார்கள். ஆட்சியாளர் அதனைத் தொட்டு பின் உரியவரிடமே கொடுத்து விடுவார். ஹைதராபாதில் மரியாதை நிமித்தம் என்பதெல்லாம் இல்லை. நிஜாமிடம் அளிக்கப்பட்ட தங்கப் பொருள் ஒவ்வொன்றையும் அவர் தனது சிம்மாசனத்துக்குப்பின் வைக்கப்பட்டிருந்த காகிதப் பைக்குள் போட்டுக் கொண்டார். ஒரு தடவை ஒரு நாணயம் தவறி கீழே விழுந்து விட்டது. இதனை எடுப்பதற்கு அதன் உரிமையாளரையும் தள்ளி விட்டு கைகளாலும் முட்டிகளாலும் தவழ்ந்து அந்த நாணயத்தின் பின்னாலேயே நிஜாம் உருண்டோடினார்.*

*நிஜாமின் கஞ்சத்தனத்துக்கு இன்னொரு உதாரணம் கூறலாம். அவரது இதயத்துடிப்பை சோதிக்க எலக்ட்ரோ கார்டியோ கிராமுடன் பம்பாயிலிருந்து டாக்டர் வந்திருந்தார். ஆனால் அவரது கருவியை இயக்க முடியவில்லை. இது ஏன் என்பதற்கான காரணம் டாக்டருக்குக் கடைசியில் தான் தெரிந்தது. மின்சாரக் கட்டணத்தை மிச்சப்படுத்துவதற்காக அரண்மனையின் மின்சார இணைப்பை நிஜாம் துண்டித்து விட்டார். இதனால் எந்தக் கருவியும் முறையாக இயங்கவில்லை.*

*நிஜாமின் படுக்கையறை ஒரு குடிசை போல இருந்தது. உட்புறம் தொய்ந்து பழுதடைந்த ஒரு கட்டிலும், ஒரு மேசையும், சமையலறை நாற்காலிகள் மூன்றும் தான் அங்கே இருந்த பொருள்கள். நிறைந்து வழியும் சாம்பல் கிண்ணங்கள், குப்பைக் கூடைகள். ஆண்டுக்கு ஒரு முறை நிஜாம் பிறந்த நாளின்*

போதுதான் இவை காலி செய்யப்படும். அவரது அலுவலகத்தில் தூசுபடிந்த அரசாங்கக் குறிப்புகள் குவிந்து கிடந்தன. அதன் மேற்கூரையில் சிலந்தி வலைகள் காடுபோல் மண்டியிருந்தன.

இருப்பினும் அந்த அரண்மனையின் மூலைகளில் எண்ணிலடங்கா செல்வம் குவிந்திருந்தது. நிஜாமின் மேஜை அறை ஒன்றில் பழைய செய்தித்தாள் ஒன்றினால் சுற்றி வைக்கப்பட்டு எலுமிச்சைப்பழம் அளவுள்ள ஜேக்கப் வைரம் இருந்தது. மதிப்புமிக்க இதன் எடை 280 கேரட்டுகள். இதனை நிஜாம் காகிதங்கள் பறக்காமலிருக்க பேப்பர் வெயிட்டாகப் பயன்படுத்தினார் மட்டுமீறி செடி கொடிகள் வளர்ந்திருந்த தோட்டத்தில் டஜன் கணக்கிலான ட்ரக்குகள் ஏற்றி வந்த தங்கக் கட்டிகளின் பளுதாங்க முடியாமல் அவற்றின் அச்சுப்பகுதி வரை மண்ணுக்குள் புதைந்து நின்றன. நிஜாமின் அணிகலன்களின் சேமிப்பு அளவிடற்கரியது. (லண்டனில் உள்ள) பிக்கடிலி சர்க்கஸ் (Piccadilly Circus) பகுதியின் நடைபாதைகளை இவரிடமுள்ள முத்துக்களைக் கொண்டே மூடிவிட முடியும் என்று சொல்லப்பட்டது. வைரங்கள், வைடூரியங்கள், கோமேதகங்கள், புஷ்பராகங்கள் போன்றவை தரையிலிருந்தே மூடித்திறக்கக் கூடிய நிலவறைகளில் நிலக்கரிகள் போல் பெருமளவு கொட்டிக்குவிக்கப் பட்டன. ரொக்கமாக அவரிடம் 2 மிலியன் (20 லட்சம்) பவுண்ட்கள் இருந்தன. ஸ்டெர்லிங், ரூபாய் நோட்டுகள் பழைய செய்தித்தாள்களில் சுற்றப்பட்டு அரண்மனையின் அடித்தளத்திலும் மேல் மாடியிலும் உள்ள அறைகளின் அழுக்குப்படிந்த மூலைகளில் கிடந்தன. நிஜாமின் ஆயிரக்கணக்கான பவுண்ட் நோட்டுகளுக்கிடையே புகுந்து கடித்துக் குதறிய எலிகளின் பற்களிலிருந்து ஆண்டுதோறும் எதிர்மறை வட்டிதான் அவற்றுக்குக் கிடைத்தது.

பீரங்கிகளுடனும், விமானங்களுடனும் நிஜாம் பெரிய ராணுவத்தையும் கொண்டிருந்தார். உண்மையில் இரண்டு அம்சங்கள் தவிர சுதந்திரம் பெறத் தேவையான எல்லா சாத்தியக்கூறுகளும் அவருக்கிருந்தன. அந்த இரண்டு அம்சங்களில் ஒன்று துறைமுகம்; மற்றொன்று மக்கள் ஆதரவு

அவரது ஆட்சியின் கீழ் பெரும்பான்மையினராக இருந்த இந்துக்கள் சிறுபான்மை முஸ்லீம்களின் ஆட்சியை வெறுத்தனர். ஃப்ரான்ஸ் நாட்டின் பாதியளவில் உள்ள மாநிலத்தைக் கொண்டிருந்த கஞ்சத்தனமும் கொஞ்சம் பைத்தியக்காரத்தனமும் உள்ள நிஜாம் எதிர்காலம் பற்றி எந்தச் சிந்தனையும் கொண்டிருக்கவில்லை.

1948 ஜூனுக்குள் இந்தியாவை விட்டு வெளியேற பிரிட்டன் முடிவு செய்து விட்டது என்ற தகவலை சர் கொன்ராட் கோர்ஃபீல்ட் தெரிவித்தவுடன் நிஜாம் நாற்காலியிலிருந்து துள்ளிக் குதித்து, 'ஆகா! நான் சுதந்திரம் பெறப்போகிறேன்' என்று உரக்கக் கூவினார்.

இதே போன்ற ஆசை இந்தியாவின் இன்னொரு பகுதியில் இருந்த வலிமை வாய்ந்த மன்னர் மனதிலும் கொழுந்து விட்டெரிந்தது. உலகின் பேரெழில் பகுதிகளின் தொட்டிலான காஷ்மீர் பள்ளத்தாக்கினை ஆட்சி செய்த காஷ்மீர் மகாராஜா ஹரிசிங்தான் அவர். இந்துவான அவர் உயர்சாதி பிராமணர். இவரது ஆட்சியின் கீழ் முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக 4 மிலியன் (40 லட்சம்) பேர் இருந்தனர். அவரது மாநிலம் அச்சத்தை ஏற்படுத்தும் இமயமலைக்கு எதிரே, உலகத்தின் கூரைக்குக் கீழே தொலை தூரத்தில் இருந்தது. அருகே

வலுவான காற்று வீசும் லடாக், திபெத், சிங்கியாங் ஆகியவை இருந்தன. இந்தியா, எதிர்கால பாகிஸ்தான், சீனா, ஆஃப்கானிஸ்தான் ஆகியவை சந்திக்கும் முக்கிய இடமாகவும் அது இருந்தது.

ஹரிசிங் பலவீனமான - முடிவெடுக்க இயலாத சஞ்சல புத்திக்காரர். அவரது காலத்தை இரண்டாகப் பிரித்து, குளிர்காலத் தலைநகரான ஜம்முவிலும், கீழை நாடுகளின் வெனிஸ் என்று கூறப்படும் அழகான பூக்கள் நிறைந்த நீர் நிலைகளைக் கொண்ட கோடைகாலத் தலைநகரான ஸ்ரீநகரிலும் நடக்கும் வளமான விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கழித்தார். ஒரு சில சீர்திருத்த நோக்கங்களை செயல்படுத்தும் ஆவலுடன் ஆட்சியைத் தொடங்கினார். விரைவிலேயே அவற்றைக் கைவிட்டு எதேச்சாதிகார ஆட்சி செய்தார். அரசியல் எதிரிகளைக் கொண்டு சிறைகளை நிரப்பினார். இவர்களுடன் அண்மையில் சிறையில் அடைக்கப்பட்டவர் வேறு யாருமல்ல ஜவஹர்லால் நேருதான். தாம் பிறந்த மாநிலத்தில் பயணம் செய்ய முயன்ற போதுதான் நேருவைக் கைது செய்யுமாறு மன்னர் உத்தரவிட்டார். மாநிலத்தின் எல்லைப் பகுதிகளைப் பாதுகாக்கவும், சுதந்திரம் வேண்டும் என்ற கோரிக்கைக்கு மிரட்டலுடன் அழுத்தம் கொடுக்கவும் ஹரிசிங்கும் ஒரு ராணுவத்தை வைத்திருந்தார்.

எட்டு

# கிரகங்களால் சபிக்கப்பட்ட ஒரு நாள்

*லண்டன், மே 1947*

டவுனிங் தெரு 10 ஆம் எண் இல்லத்துக்குச் செல்பவர் தவறுக்கு வருந்துகிறவராக இருக்க வேண்டும்; குறைந்தபட்சம் ஐயம் கொண்டு அஞ்சுபவராக இருக்க வேண்டும். ஆனால் லூயி மவுண்ட்பேட்டன் இரண்டு வகையைச் சேர்ந்தவரும் அல்ல. சிம்லாவில் நடந்த தவறு என்ன என்று தனிப்பட்ட முறையில் விளக்கமளிக்க அட்லி கேட்டுக் கொண்டதை ஏற்று அவர் லண்டனுக்குப் பறந்தார். விமான நிலையத்தில் அவரைச் சந்தித்த, அலுவலர்களின் தலைவரான இஸ்மே பிரபு எச்சரிக்கை செய்தார். ' அரசு குழம்பிப் போய் இருக்கிறது. நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதே அவர்களுக்கு விளங்கவில்லை. நீங்கள் ஏதாவது செய்கிறீர்களா என்பதே அவர்களுக்குச் சந்தேகம்.'

இருப்பினும் நேரு தனது முந்தையத் திட்டத்தைக் கடுமையாக நிராகரித்த பின் வி . பி மேனன் தயாரித்த புதிய நகல் திட்டத்தை மவுண்ட்பேட்டன் தனது பெட்டிக்குள் வைத்திருந்தார். இந்தியப் பிரச்சனைக்கு இது திறவுகோலாக இருக்கும் என்று அவர் நம்பினார். காங்கிரஸ் இந்தத் திட்டத்தை ஏற்கும் என்று சிம்லாவிலிருந்து புறப்படும்முன் நேரு அவருக்கு உறுதியளித்திருந்தார் இதையெல்லாம் விளக்கும் உத்தேசம் மவுண்ட்பேட்டனுக்கு இல்லை. பழைய திட்டத்துக்கு மாற்றானது புதிய திட்டம் என்று சொல்வதற்குப் பதிலாக, 'நான் மனதில் உறுதியைப் பெற்றிருப்பதற்கு நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும்' என்பதை மட்டும் அட்லியிடமும் அமைச்சரவையிடமும் சொல்லவே அவர் விரும்பினார்.

அமைதியாகவும் புன்னகையோடும் மவுண்ட்பேட்டன் காரிலிருந்து இறங்கி வேகவேகமாக இயங்கும் ஃப்ளாஷ் பல்புகளைக் கடந்து மாளிகைக்குள் சென்றார். இங்கேதான் ஆறு மாதங்களுக்கு முன்பு அவரிடம் கடினமான அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டது.

அட்லி, சர் ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ் மற்றும் தொழிற்கட்சி அரசில் இந்தியாவுடன் தொடர்புடைய முக்கிய உறுப்பினர்கள் அவருக்காகக் காத்திருந்தனர். அவர்களின் வரவேற்பு இதய பூர்வமாகவும் அதே சமயம் இறுக்கமானதாகவும் இருந்தது. இதனைப் பொருட்படுத்தாத மவுண்ட் பேட்டன் இருக்கையில் அமர்ந்து பணியைத் தொடர்ந்தார். 'நான் அவர்களிடம் மன்னிப்புக் கோரவோ விளக்கம் அளிக்கவோ இல்லை. எல்லாம் என்னைச் சார்ந்தே இருந்தது எனவே

நான் சொல்வதை அவர்கள் செய்தேயாக வேண்டும் என்ற, அச்சுறுத்தக் கூடியதானாலும் ஆணவமற்ற நம்பிக்கை எனக்கு இருந்தது' பிற்காலத்தில் அவர் நினைவு கூர்ந்தார்.

பழைய திட்டத்தில் சில மாற்றங்கள் செய்து டில்லிக்கு கேபிள் மூலம் அனுப்பியதன் விளைவாக இதனை மனஉறுதியுடன் நேருவிடம் காட்டியதாக அவர் கூறினார். இதனால் காங்கிரஸ் அடிப்படையான சில ஆட்சேபங்களைக் கொண்டிருப்பது தெரியவந்தது. இப்படிச் செய்யாமல் நேரடியாகவே காங்கிரசிடம் திட்டத்தை சமர்ப்பித்திருந்தால் பெரும் குழப்பமே ஏற் பட்டிருக்கும். புதிய திட்டத்தை அவர்கள் தெரிந்து கொண்டதால் இதனைக் காங்கிரஸ் முன் வைக்கும் போது சம்பந்தப்பட்ட அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று அவர் நம்பினார். இதற்கு மேலும் ஒரு முக்கியமான செய்தியை இப்போது சொல்லப் போவதாக அட்லியிடம் அவர் தெரிவித்தார்.

லண்டனை விட்டுப் புறப்படுவதற்கு முன் தாம் மன்னருக்கு அளித்த வாக்குறுதியைத் தம்மால் நிறைவேற்ற முடியும் என்றார் அவர். சுதந்திரம் பெற்ற பின் இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிட்டிஷ் காமன்வெல்தில் இடம் பெற்று பிரிட்டனுடனான தொடர்பை நீடிக்கும் என்ற உறுதியை இப்போது அவர் அட்லி அரசுக்கு அளிக்க முடியும். சுதந்திர பாகிஸ்தானை காமன் வெல்தில் இடம் பெறச் செய்ய எப்போதுமே ஜின்னா விரும்பினார். ஆனால் காங்கிரசுக்கோ, பிரிட்டிஷ் முடியரசுடன் உறவைத் தொடர்வது, இதற்கு அடையாளமாக காமன்வெல்தில் உறுப்பினராவது என்ற கருத்தை ஏற்பது சிரமமாக இருந்தது. அவர்களின் போராட்டம் பிரிட்டிஷ் மணி முடியை எதிர்த்ததாகத் தானே இருந்தது!

பொறுமையாக, தொடர்ந்து, பெரும்பாலும் ரகசியமாக காமன்வெல்த் உறவால் ஏற்படும் நன்மைகள் பற்றி மவுண்ட்பேட்டன் வலியுறுத்தினார். இந்தியாவின் ராணுவ மேம்பாட்டுக்குத் தேவையான அதிகாரிகளைப் பெறுவதற்கு இந்தியாவுக்கு இது ஒன்றுதான் வழி என்று அவர் சுட்டிக்காட்டி னார். அவர் சிம்லாவில் இருக்கும் போது வல்லபபாய் படேலிடமிருந்து ஒரு தகவல் கிடைத்தது. இந்தியாவின் கைகளில் அதிகாரத்தை ஒப்படைப்பதற்கு மவுண்ட்பேட்டன் அவசரப்படுகிறார் என்பதை மதி நுட்பம் வாய்ந்த அந்தக் காங்கிரஸ்காரர் அறிந்திருந்தார். அவரும் அப்படித்தான் இருந்தார். அதிகாரக் கைமாற்றம் செய்வதற்கான நேரத்தை மிச்சப்படுத்த மவுண்ட்பேட்டனுக்கு படேல் ஒரு யோசனை தெரிவித்தார். பிரிட்டிஷ் காமன் வெல்துக்குள் கனடா இருப்பது போல் இந்தியாவும் பாகிஸ்தானும் டொமினியன்கள் (தன்னாட்சிப் பகுதிகள்) என்று எளிதாக அறிவித்து விடுமாறு அவர் கூறினார். அப்படிச் செய்தால், அரசமைப்புச் சட்டம் வரைதல், பிரிட்டன் முறைப்படி அதிகாரத்தை ஒப்படைப்பதற்குரிய அமைப்பைத் தேர்ந்தெடுத்தல் என்பது போன்ற நெடிய நடைமுறைகளையும் தவிர்க்கலாம் என்று படேல் சுட்டிக் காட்டினார். மவுண்ட்பேட்டன் விரைந்து செயல்பட்டால், 1948 ஜூன் 30 என்ற பழைய காலவரம்புக்கு முன்பே காரியம் செய்தால், நன்றி நிறைந்த காங்கிரஸ் காமன் வெல்த் உறவுகளிலிருந்து விலகாமல் டொமினியன் அந்தஸ்துடன் தாமாகவே அதில் சேர்ந்து விடும்.

மவுண்ட்பேட்டன் மகிழ்ச்சியடைந்தார். உண்மையில் படேலின் யோசனை களைத்தான் பல, பல வாரங்களாக மவுண்ட்பேட்டனும் ரகசியமாக யோசித்துக்

கொண்டிருந்தார். மாற்றியமைக்கப்பட்டு அட்லியிடம் சமர்ப்பிக்கவுள்ள திட்டத்தில் இந்த யோசனையையும் சேர்த்துக் கொள்ளுமாறு வி.பி.மேனனுக்கு அவர் ஆர்வமுடன் உத்தரவிட்டார்.

இப்போதைய சூழ்நிலைக்குத் தேவை வேகம் தான் என்று அவர் சொன்னார். அதிகார மாற்றத்துக்கான திட்டத்தை அவர்கள்முன்வைத்தார். இது இந்தியர் களுக்கு ஏற்புடையது என்று அவரால் உறுதி கூறமுடியும். இந்தத் திட்டம் இரண்டு நாடுகளையும் காமன்வெல்தில் வைத்திருக்கும். இப்போது தாமதம் செய்தால் அது பிரிட்டனை நெருக்கடியில் ஆழ்த்திவிடும். துணைக்கண்டம் உள்நாட்டுப் போரில் மூழ்கிக் கொண்டிருக்கிறது என்று இந்தியாவுக்குச் சென்றதிலிருந்து எச்சரித்து வரும் நிலைமை உருவாகிவிடும். பொறுப்பு அவர்களிடம் விடப்பட்டுள்ளது. இவரது திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான சட்டத்தை நாடாளுமன்றத்தில் எவ்வளவு விரைவில் அவர்களால் நிறைவேற்ற முடியுமோ?

செயலூக்கமும் நம்பவைக்கும் திறமையும் கொண்ட மவுண்ட்பேட்டனின் வியத்தகு நிகழ்ச்சியாக அது இருந்தது. திட்டத்தை விளக்கி முடித்த போது, குழம்பிப் போயிருந்த அட்லி அரசாங்கம், அவர் சொல்வதையெல்லாம் கேட்கத் தயாரானது. ஒரு காற்புள்ளியைக் கூட மாற்றாமல் அவரது புதிய திட்ட நகலை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

டவுனிங் தெருவில் புயல் வீசும் பல காட்சிகளைக் கண்ட இஸ்மே பிரபு கூட்ட அறையை விட்டு வெளியேறும் போது ஆச்சர்யத்துடன் கூறினார் : 'மை காட்! நான் என் வாழ்நாளில் சில சம்பவங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் சற்று நேரத்துக்கு முன் உள்ளே அவர்களிடம் மேற்கொண்ட செயல் அவற்றை யெல்லாம் அடித்து வீழ்த்தி விட்டது!'

பிரபலமான அந்த உருவம் படுக்கையில் கிடந்தது. தோளிலிருந்து விழுந்தபடி இருக்கும் மெத்தென்ற மேலங்கி. மூக்கின் நடுப்பகுதியில் அமர்ந்திருக்கும் அரை ஃப்ரேம் உள்ள கண்ணாடிகள். வாயில் அவரது நிலையான அடையாளச் சின்னமான சிகரெட் லூரயி மவுண்ட்பேட்டனின் நினைவென்ற அடி வானத்தில் நிலைத்து விட்ட நட்சத்திரம் அந்த உருவம்.

கப்பற்படைக்குழுவின் முதல்நிலைப் பிரபுவாக இருந்த தமது தந்தையிடம் கடற்படை வீரனின் உடையணிந்து பேசிக் கொண்டிருக்கும் இளமைக்கால சர்ச்சிலின் உருவம் மவுண்ட்பேட்டனின் நினைவில் நிறைந்தவற்றில் ஒன்றாகும். ஹிட்லரை எதிர்கொண்ட ஐரோப்பியர்களின் அடையாளச் சின்னமாக பிற்காலத்தில் விளங்கப் போகும் அந்த மனிதர் 'நம்பத்தகாதவர்' என்று மவுண்ட்பேட்டனின் தாயார் விளையாட்டாக அவரிடம் ஒரு தடவை எச்சரிக்கை செய்திருந்தார். தாயின் பார்வையில் மன்னிக்க முடியாத தவறு ஒன்றை சர்ச்சில் செய்திருந்தார் கடன் வாங்கிச் சென்ற புத்தகம் ஒன்றைத் திருப்பித் தர அவர் தவறிவிட்டார்.

இளம் கடற்படை அதிகாரியும், பிரிட்டனை மீண்டும் ஆயுதபாணியாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்த எதையும் பொருட்படுத்தாத அரசியல்வாதியும் அடுத்த சில மாதங்களில் நண்பர்கள் ஆனார்கள். கூட்டுச் செயல் படையின் மிகப்பெரும் பொறுப்பான தலைமைப் பதவியை முதல்

*முறையாக சர்ச்சில் அவருக்கு அளித்த பின் இருவருக்கும் இடையே நெருக்கமான உறவு வளர்ந்தது. இதன் பிறகு இந்தப் பதவி காரணமாக சர்ச்சிலின் 10 டவுனிங் தெரு இல்லத்துக்கு மவுண்ட்பேட்டன் அடிக்கடி சென்றார்.**

*தம்மீது சர்ச்சில் பேரன்பு கொண்டிருந்ததை மவுண்ட்பேட்டன் அறிவார். ஆனால் 'இது தவறான காரணங்களுக்காக' என்றும் அவர் எண்ணினார். 'நான் ஒரு தைரியசாலி, போர் வீரன் என்று அவர் நினைக்கிறார். எனது அரசியல் பார்வை என்ன என்பது பற்றி அவருக்கு சரியான கருத்து இல்லை' 1945இல் சர்ச்சில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், தென்கிழக்கு ஆசியாவின்*

---

* 1941 ஜூன் 21 சனிக்கிழமையன்று சர்ச்சில் அளித்த மதிய விருந்தில் செய்திப் பத்திரிகை வெளியீட்டாளர் மேக்ஸ் பீவர் ப்ரூக் (Max Beaver Brook) உடன் மவுண்ட்பேட்டனும் கலந்து கொண்டார். விருந்தினர்களுடன் இணைந்தபோது பிரதமர் ஒன்றை அறிவித்தார். 'எனக்கு சில பரபரப்பான செய்திகள் கிடைத்திருக்கின்றன. ஹிட்லர் நாளை ரஷ்யாவைத் தாக்கப் போகிறார். இதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பது பற்றி இன்று காலையிலிருந்து விவாதித்துக் கொண்டிருந்தோம்.'

'என்ன நடக்கும் என்பதை நான் உங்களுக்கு சொல்வேன்' பீவர் ப்ரூக் கூறினார். 'ஹிட்லரின் படைகள் ரஷ்யர்களை எளிதில் வென்று விடுவார்கள். ஒரு மாதம் அல்லது ஆறு வாரங்களில் மொத்தத்தையும் அழித்தொழித்து விடுவார்கள்' என்றும் அவர் தெரிவித்தார். 'நன்று!' சர்ச்சில் பேசினார். 'இந்தச் சண்டை இரண்டு மாதங்கள் நீடிக்கும் என்று அமெரிக்கர்கள் கருது கிறார்கள். நமது படைத்தளபதிகளும் குறைந்தது அவ்வளவு காலம் பிடிக்கும் என்றே கூறுகிறார்கள். மூன்று மாதங்களுக்குப் போர் நீடிக்கும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் ரஷ்யர்கள் பின்னர் போரை நிறுத்தி விடுவார்கள். அதன் பிறகு நாம் பழைய நிலைமையிலே இருப்போம்.'

அவர் பக்கம் திரும்பும் வரை மவுண்ட்பேட்டன் இருப்பதையே மறந்து விட்ட சர்ச்சில், மன்னிப்புக் கேட்கும் தோரணையில், 'ஓ, டிக்கி, கிரீட்டில் உங்களின் போர் அனுபவம் பற்றி எங்களுக்குச் சொல்கிறீர்களா!' என்றார்.

'அது கடந்த கால வரலாறு' மவுண்ட்பேட்டன் பதிலளித்து விட்டு, 'ரஷ்யாவில் என்ன நடக்கப் போகிறது என்பது பற்றி எனது கருத்தைச் சொல்லலாமா?' என்று வினவினார்.

சற்றுத் தயக்கத்துடன் சர்ச்சில் அனுமதித்தார்.

'நான் மேக்சின் கருத்தை ஏற்கவில்லை' மவுண்ட்பேட்டன் சொன்னார். 'அமெரிக்கர்கள் சொல்வதையும், நமது படைத்தளபதிகள் சொல்வதையும் உண்மையில் சொல்வதானால் பிரதம மந்திரியாகிய உங்களின் கருத்தையும் நான் ஏற்கவில்லை. ரஷ்யர்கள் தோற்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. இது ஹிட்லரின் முடிவு காலம். அது தான் போரின் திருப்பு முனையாக இருக்கும்.'

'என்ன டிக்கி! உங்களின் கருத்து மட்டும் இவ்வளவு வித்தியாசமாக இருக்கிறது?' சர்ச்சில் கேட்டார்.

மவுண்ட் பேட்டன் பதிலளித்தார்: ஒன்று, நாஜிகள் பயன்படுத்த நினைக்கும் உள்நாட்டு எதிரிகளையெல்லாம் ஸ்டாலின் அழித்தொழித்து விட்டார். இரண்டு, பல காலம் எனது குடும்பம் அந்த நாட்டை ஆண்டது என்பதால் சொல்வதற்கு வேதனையானது தான் என்றாலும் அந்த மக்கள் தங்களுக்கு நாட்டின் மீது ஒரு பிணைப்பு இருப்பதாகக் கருதுகிறார்கள். இந்தமுறை அவர்கள் போரிடுவார்கள். இழப்பதற்குக் கொஞ்சம் இருப்பதாகவும் அவர்கள் நினைக்கிறார்கள்.

இந்தப் பதில்கள் சர்ச்சிலைக் கவரவில்லை. 'நல்லது டிக்கி, உங்களைப் போன்ற இளைய, ஆர்வமிக்க ஒருவரின் குரலைக் கேட்பதே சந்தோஷமாக இருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம்' என்றார் அவர்.

*எதிர்காலம் பற்றி தாம் கொண்டிருக்கும் கருத்துகளுக்காகத் 'தம்மை ஒரு குண்டுபோல் தூக்கி எறிந்திருப்பார்' என்பதும் அந்த இளம் அட்மிரலுக்கு நிச்சயம் தெரியும்.*

*பழைமை வாய்ந்த டோரி (Tory) கட்சியின் அரசியல் வரலாற்றில் வேதனை தரும் செயல்களில் ஒன்றாக இருக்கும் செயலைச் செய்வதற்கு, சர்ச்சிலின் அனுமதியைப் பெறுவதற்காக, அட்லியின் வேண்டுகோளை ஏற்று அவர் வந்திருக்கிறார். சர்ச்சிலின் நேசத்துக்குரிய பேரரசின் வீழ்ச்சிக்குத் தொடக்கமாக அமையவிருக்கும் திட்டத்துக்கு அவரின் தனிப்பட்ட வாழ்த்தினைப் பெற மவுண்ட்பேட்டன் விரும்பினார்.*

*சர்ச்சிலைக் காணுமாறு மவுண்ட்பேட்டனைக் கேட்டுக் கொள்ளும்போது அட்லி இவ்வாறு கூறினார்: 'இங்கிலாந்தில் வின்ஸ்டன் முக்கிய இடம் பெற்றிருக்கிறார். என்னாலோ எனது அரசில் உள்ள வேறு எவராலோ அவரை இணங்க வைக்கும் வாய்ப்பே இல்லை. உங்களிடம் அவர் பிரியமுடன் இருக்கிறார். நம்பிக்கை வைத்திருக்கிறார். உங்களுக்கு ஒரு வாய்ப்பிருக்கிறது.'*

*அவர்களின் சந்திப்பு சிக்கலான நிலையில் தான் ஆரம்பித்தது. தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள இந்தியர்களை எப்போதாவது அனுமதிப்பது பைத்தியக்காரத்தனம் என்று சர்ச்சில் எண்ணினார். இதனை மவுண்ட்பேட்டன் அறிவார். ஒருமைப்பாட்டை நிரூபித்திருக்கும் திறமை மிக்க பிரிட்டிஷ் நிர்வாகம் அகற்றப்பட்டு அந்த இடத்தில் 'அனுபவமற்ற, வெறும் கோட்பாட்டு வாதிகளும், ஊழல் புரிவோருமான இந்தியர்களை' வைத்தால் இந்தியாவுக்குப் பெரும் கேடு விளையும் என்று அவர் உறுதியாக நம்பியதை மவுண்ட்பேட்டன் நினைவுகூர்ந்தார்.*

*இந்தியாவில் தமது முயற்சிகள் பற்றி விவரித்த மவுண்ட்பேட்டனின் கண்கள் படுக்கையிலிருந்து தம்மீது ஒளி வீசும் வழுக்கைத் தலையை உற்றுக் கவனித்தன. சுதந்திரப்பாதைக்கு இந்தியாவைக் கொண்டு வரும் ஒவ்வொரு செயலுக்கும் அரை நூற்றாண்டு காலமாக 'முடியாது' என்ற பதிலையே சர்ச்சில் சொல்லி வந்திருக்கிறார். இப்போதும் அதே பாணியில் 'முடியாது' என்று அவர் சொல்லிவிட்டால் மவுண்ட்பேட்டனின் நம்பிக்கைகள் சிதைந்து சின்னாபின்ன மாகி விடும். நாடாளுமன்ற பிரபுக்கள் சபையில் டோரி கட்சிக்குப் பெரும் பான்மை இருப்பதால் இந்திய சுதந்திரத்துக்கான மசோதா நிறைவேறாமல் முழுசாக இரண்டு ஆண்டு காலத்துக்கு தாமதப்படுத்தும் அதிகாரம் சர்ச்சிலுக்கு இருந்தது.*

*'அப்படி நடப்பது ஆபத்தாகும்' ஆர்வம் நிறைந்த வைஸ்ராய் எண்ணினார். டொமினியன் அந்தஸ்து உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் காங்கிரஸ் அவரது திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. இரண்டு ஆண்டுகள் தாமதமானால் அவரது அரசும், நிர்வாகமும், மதவெறியால் குமுறிக் கொண்டிருக்கும் துணைக்கண்டமும் தாக்குப்பிடிக்க முடியாது.*

*அறிவின் எல்லை கடந்த, ஆய்வுக்கு உட்படாத புத்தரின் மோன நிலை போல பாதிவிழிகள் மூடி மவுண்ட்பேட்டனின் வாதங்களை சர்ச்சில் கவனித்துக் கொண்டிருந்தார். இந்தியாவின் எதிர்கால சிதைவு, குழப்பம், கலகங்கள் என எந்த விஷயமும் அவரை மோன நிலையிலிருந்து விழிப்படையச் செய்ய வில்லை.*

அந்த வயதான தலைவரின் உணர்வுகளைத் தட்டி எழுப்பும் ஒரு விஷயத்தை மவுண்ட்பேட்டன் சிம்லாவிலிருந்து கொண்டு வந்திருந்தார். உடனடியாக அளிக்கப்பட்டால் டொமினியன் அந்தஸ்தை ஏற்றுக் கொள்வதாகக் காங்கிரஸ் கொடுத்திருந்த உறுதிமொழிதான் அது. பேரரசின் மிகப் பெரிய எதிரிகள் பிரிட்டிஷ் காமன்வெல்திலேயே நீடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்ற வழியை சரியான தருணத்தில் சாமர்த்தியமாக அவர் திறந்து காட்டிய போது சர்ச்சிலின் அணுகுமுறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. அவரது அன்புக்குரிய பேரரசு சிதைந்துபோகலாம். ஆனால் ஏதாவது ஒரு வகையில் அது நீடித்திருக்கும் என்று அவர் நம்பினார். தனது இனிய இளமைக்காலத்தைக் கழித்த பழைய இந்தியாவின் சில அம்சங்களாவது மிஞ்சும் என்று அவர் நினைத்தார். இதை விட முக்கியமாக, இந்தியாவின் எதிர்கால நன்மைக்குத் தேவையென்று கருதிய பிரிட்டிஷ் தொடர்புகள் சிலவற்றைத் தொடர்ந்து பராமரிக்க முடியும் என்றும் சர்ச்சில் உறுதியாக நம்பினார்.

மவுண்ட்பேட்டனை அவர் சந்தேகக் கண்ணுடன் பார்த்தார். எழுத்து மூலம் ஏதாவது வைத்திருக்கிறாரா என்பது பற்றி அவர் வினவினார். தாமதமின்றி அளித்தால் டொமினியன் அந்தஸ்துக்கான திட்டத்தை காங்கிரஸ் ஏற்கும் என்ற அறிகுறியுடன் நேருவிடமிருந்து கடிதம் வாங்கியிருக்கிறேன். இப்போது அது அட்லியிடம் உள்ளது என்று மவுண்ட்பேட்டன் சொன்னார்.

அவரது பழைய எதிரியான காந்தியின் நிலை என்ன?

காந்தி கணிக்கப்பட முடியாதவர் என்பதை மவுண்ட்பேட்டன் ஒப்புக் கொண்டார். அவர் மிகவும் ஆபத்தானவர்தான். ஆனால் நேரு, படேல் உதவியுடன் அவரை ஒரு கட்டுக்குள் கொண்டு வந்து விடலாம்.

சர்ச்சில் பற்களுக்கிடையே சிகரெட்டைக் கடித்துக் கொண்டு, படுக்கையை உற்றுப் பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்தார்.

கடைசியாக அவர் பிரகடனம் செய்தார்: மவுண்ட்பேட்டன் அவரது திட்டத்துக்கு இந்தியாவின் அனைத்து அரசியல் கட்சிகளிடமிருந்தும் முறைப்படியாகவும் வெளிப்படையாகவும் ஒப்புதலைப் பெற்று விட்டால் பிரிட்டிஷ் நாடு முழுவதும் அவருக்கு ஆதரவாக இருக்கும். மவுண்ட்பேட்டனுக்குத் தேவைப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற தொழிற்கட்சியுடன் தமது கன்சர்வேடிவ் கட்சியும் இணைந்து கொள்ளும் கோடைகால இடை ஓய்வுக்கு முன்பே இது நடக்கும். ஆண்டுக் கணக்கில் மாதக்கணக்கில் அல்ல சில வாரங்களில் ஏன் சில நாட்களிலே கூட இந்தியா சுதந்திரம் அடைந்து விடக்கூடும்.

## புதுடில்லி, மே - ஜூன் 1947

கருநிற வெல்வெட் தூண்களைப் போல சிதையிலிருந்து எழும்புகை இந்தியத் துணைக் கண்டத்தின் பல பகுதிகளிலும் பரவி ஆகாயத்தை அடைந்தது. அவசரமாக அமைக்கப்பட்ட சிதை நெருப்பில் நெய்யோ சந்தனக் கட்டைகளோ இல்லை. எரிக்கப்பட்ட பன்றித் தோல் போல் கரும்புகையுடன்

கொழுந்து விட்டெரியும் நெருப்பைச் சுற்றி மந்திரம் ஓதும் புரோகிதர்கள் இல்லை; சோகம் நிறைந்த பிரிட்டிஷ் அதிகாரிகளே இருந்தனர். தீக்கிரையாகிக் கொண்டிருந்தவை நான்கு டன் எடையுள்ள ஆவணங்களும் அறிக்கைகளும் கோப்புகளுமே. ஐந்து தலைமுறை மகாராஜாக்களின் காலவரிசைப்படியான தீய ஒழுக்கங்களையும், ஊழல்களையும் இந்திய வரலாற்றின் பயங்கரமான அச்சம் தரும் சம்பவங்களையும் தொகுத்து வைக்கப்பட்டிருந்த அவை சர் கொன்ராட் கோர்ஃபீல்ட் உத்தரவின்படி எரியூட்டப்பட்டன. பிரிட்டிஷ் அரசில் தொடர்ந்து வந்த பிரதிநிதிகளால் மிகுந்த கவனத்துடன் கால வரிசைப்படி தொகுக்கப்பட்ட இந்தக் கோப்புகள் சுதந்திர இந்தியர்கள் அல்லது பாகிஸ்தானியர்கள் கையில் கிடைத்தால் மன்னர்களை அச்சுறுத்திப் பணிய வைக்கும் ஆதாரங்களாகி விடும். இந்தத் தகவல்களைத் தொகுக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசு தீர்மானித்த போது இப்படியும் நடக்கலாம் என்பதை எண்ணிப் பார்க்கவில்லை.

மகாராஜாக்களின் எதிர்காலம் பற்றி அதிகக் காலத்துக்கு உறுதியளிக்க முடியாது என்று கருதிய கோர்ஃபீல்ட் குறைந்தபட்சம் அவர்களின் கடந்த காலத்தையாவது பாதுகாக்கத் தீர்மானித்தார். இந்த ஆவணங்களை அழிப்பதற்கு அட்லி அரசின் அனுமதியை அவர் பெற்றிருந்தார். டில்லிக்குத் திரும்பிய வுடனே, மன்னர்களின் தனிப்பட்ட வாழ்க்கை சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் எரித்து விடுமாறு அதிகாரிகளுக்கும் அரசியல் ஏஜெண்டு களுக்கும் அவர் ஆணையிட்டார்.

சர் கொன்ராட் முதலாவது எரியூட்டலைத் தானே தொடங்கி வைத்தார். அவரும் அவரது அலுவலகத்தைச் சேர்ந்த இன்னொருவரும் மட்டுமே சாவி வைத்துப் பாதுகாத்த இரண்டு அடி உயரப் பெட்டகத்திலிருந்த ஆவணங்களை அலுவலக ஜன்னல்களுக்குக் கீழே போட்டு நெருப்பு வைத்தார்.

நூற்றைம்பது ஆண்டுகள் வாசித்துத் தெரிவு செய்து, வடிகட்டி, சாறுபோல் வைத்திருந்த மன்னர்களின் முறைகேடுகள் சர் கொன்ராடின் சொக்கப்பனை தீயில் கருகி புகையாகி டில்லியின் வீதிகளிலும் வீடுகளின் கூரைகளிலும் பரவியது. என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொண்ட நேரு கோப்புகள் அழிக்கப்பட்டதற்கு உடனடியாக எதிர்ப்புத் தெரிவித்தார். அவரது பார்வையில் இவையெல்லாம் இந்திய வரலாற்றின் மதிப்பு மிக்கப் பகுதிகளாகும்.

காலம் மிகவும் கடந்து விட்டது! பாட்டியாலா, ஹைதராபாத், இந்தூர், மைசூர், பரோடா, அரபிக் கடலின் வளைகுடாக் கரையில் உள்ள காந்தியின் பிறப்பிடமான போர்பந்தர், இமயமலைப் பகுதியில் உள்ள சித்ரால், மழைக்காடுகள் அடர்ந்த கொச்சி ஆகிய இடங்களில் இருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள், ஒரு யுகத்திற்குத் தீனிபோடும் 'கிசு கிசு'க்களை ஏற்கெனவே தீயிட்டு சாம்பலாக்கி விட்டனர்.

இந்திய மன்னர்கள் சிலரின் உடலுறவு இச்சைகள் நீண்டிருந்தது போலவே அவை பற்றிய குறிப்புகளை எரிக்கவும் நெருப்புக்கு நீண்ட நேரம் பிடித்தது. ராம்பூரின் முந்தைய நவாப் அண்டை அயலில் உள்ள மன்னர்கள் பலரிடம் பந்தயம் கட்டினார். ஓராண்டில் யாரால் அதிகக் கன்னியர்களைக் கற்பழிக்க முடியும் என்பது தான் அந்தப் பந்தயம். கன்னிகழியாதப் பெண்களுக்கு மூக்கில் மெலிதான தங்க வளையம் போடுவது வழக்கம். கற்பழிக்கப்பட்டதன்

அடையாளமாக அந்தத் தங்க வளையங்கள் சுழற்றி வரப்பட்டன. நெடுவால் வண்ணக்கோழி பிடிக்கும் வேட்டைக்காரர்கள் போல, நவாப் ஆட்சிப் பகுதியில் உள்ள கிராமங்களுக்குக் காவலர்களை அனுப்பி கன்னிப் பெண்களைத் தேடச் செய்தார். கடைசியில் நவாப்தான் பந்தயத்தில் வெற்றியும் பெற்றார். ஆண்டு முடிவில் அவர் சேகரித்த வளையங்கள் உருக்கப்பட்டன. அதிலிருந்து பல பவுண்ட் மதிப்புள்ள சுத்தமான தங்கம் கிடைத்தது.

இரண்டு யுத்தங்களுக்கு இடையேயான உலகில், காஷ்மீர் மகாராஜா பற்றிய மிகவும் சுவை குறைவான முறைகேடு பற்றிய ஆவணங்களும் நெருப்புக்கு இரையாகிக் கொண்டிருந்தன. சிந்திக்காமல் செயல்படும் அந்த மன்னரை லண்டனின் சாவோய் ஓட்டலில் ஒரு மனிதர் மோசமான பழியில் சிக்க வைத்து விட்டார். மன்னருடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்ட, அழகிய பெண்ணின் கணவர் என்று கூறிக் கொண்டவர்தான் அந்த நபர். உண்மையில் ஒரு பிளாக்மெயில் கும்பல் விரித்த வலையில் மன்னர் விழுந்து விட்டார். காஷ்மீரின் கணிசமான வருவாயின் பகுதியாக இருக்கும் மன்னர் பெயரில் உள்ள வங்கிக் கணக்கைக் கைப்பற்றி மாநிலத்தைத் திண்டாடச் செய்வது தான் அவர்களின் திட்டம். ஆனால் அந்த அழகிய பெண்ணின் உண்மையான கணவர் வந்து, தனது மனைவியைக் கடனாகப் பெற்றதற்கு உரிய தொகை தரப்படவில்லை என்று காவல்துறையை அணுகிய போது உண்மை வெளிப்பட்டு விட்டது. இதைத் தொடர்ந்து அதிர்ஷ்டக் கட்டையான மகாராஜாவுக்கு 'மிஸ்டர் ஏ' என்ற புனைப்பெயர் கிடைத்தது. இந்தத் தவறுகளால் பெண்மோகத்திலிருந்து விடுபட்ட ஹரிசிங் காஷ்மீருக்குத் திரும்பினார். பின்னர் தனது மாநிலத்து இளைஞர்களுடன் சேர்ந்து மீண்டும் பாலுணர்வின் எல்லையைக் கண்டார். முடியரசின் பிரதிநிதிகளால் அவரது நடவடிக்கைகள் முழுவதும் விசுவாசத் துடன் தெரிவிக்கப்பட்டன. இப்போதோ, அவை புகையாகி ஸ்ரீநகரில் வீசிய புதிய மலைக்காற்றின் மூலம், இமயமலையின் ஆகாயப் பரப்பில் மறைந்தன.

ஹைதராபாத் நிஜாம் புகைப்படங்களையும் நிர்வாணப்படங்களையும் சேகரிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். இந்தியாவிலேயே அதிக அளவில் நிர்வாணப்படங்களைச் சேமித்து வைத்தவர் அவர்தான் என்று நம்பப்படுகிறது. இவற்றைச் சேகரிப்பதற்காக, வயதான நிஜாம், தனது விருந்தினர்கள் தங்கும் விடுதிகளின் சுவர்களிலும் மேற்கூரைகளிலும் தானியங்கி கேமராக்களை ஒளித்துவைத்திருந்தார். அங்கே நடப்பவற்றையெல்லாம் அவை ஒன்று விடாமல் படம் பிடித்தன. அரண்மனையில் விருந்தினர்களுக்கான குளியலறை யில் கூட கண்ணாடிக்குப் பின்னால் தானியங்கி கேமராவைப் பொருத்தி வைத்தார். நிஜாம் மாளிகைக் கழிவறையில் விருந்தினர்கள் இருந்த காட்சிகளும் படம்பிடிக்கப்பட்டன. இந்தியாவின் பெரிய மனிதர்கள், அவர்களுக்கு அடுத்த நிலையில் இருந்தவர்களின் புகைப்படங்களை கேமராக்கள் எடுத்துத் தள்ளின. இவையெல்லாம் நிஜாமின் பெருமைக்குரிய புகைப்படச் சேமிப்பில் இடம் பெற்றிருந்தன.

நிஜாமின் மகனும் எதிர்கால வாரிசுமான இளைய நிஜாம் உடலுறவுக்குத் தகுதியானவர் தான் என்பதை உறுதி செய்வதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பாக பிரிட்டிஷ் அதிகாரிகள் சேகரித்த தகவல்கள் சமீபத்திய அறிக்கை களில் இடம் பெற்றிருந்தன. இளைய நிஜாமின் ரசனைகள் இளவரசிகளை

வசீகரிக்கவில்லை என்ற தகவல்கள் அவரது காதுகளுக்கு நாசூக்காக எட்டின. உடனே வருமாறு மகனைப் பணித்தார். அவரது அந்தப்புரத்தில் உள்ள மிகவும் அழகானப் பெண்ணையும் அங்கே அழைத்து வருமாறு கட்டளையிட்டார். தர்மசங்கடமடைந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் தடுத்து நிறுத்துவதற்கு முன், தாம்பத்ய உறவுக்குத் தகுதியானவர் இல்லை என்று மறைமுகமாகப் பரவிய தகவல் தவறென்பதை உடனே வெளிப்படையாக நிரூபிக்குமாறு மகனுக்கு உத்தரவிட்டார்.

ராஜஸ்தானின் எல்லைப்பகுதியில் 8,00,000 மக்களுடனிருந்த சிறிய மாநிலத்தை 40 ஆண்டுகள் ஆட்சி புரிந்தவரின் அருவருப்பான கதையைக் கூட விட்டுவைக்காமல் கொன்ராட் கோர்ஃபீல்ட் மூட்டிய தீ அழித்தொழித்தது. ஆல்வார் மகாராஜா தனது நடவடிக்கைகளை எல்லாம் சகித்துக் கொள்ளுமாறு வைஸ்ராய்களிடம் கேட்டுக் கொள்ளும் அளவுக்குக் கவர்ச்சிகரமானவர். கடவுள் ராமனின் அவதாரமே தாம் என்று அவர் நம்பினார். இதனால் தனது புனித கைவிரல்கள் மாமிச மனிதர்களின் கைப்பட்டு களங்கம் அடைந்து விடக்கூடாது என்பதற்காக பட்டினாலான கருநிறக் கையுறைகளை அவர் நிரந்தரமாக அணிந்திருந்தார். இங்கிலாந்து அரசருடன் கைகுலுக்கும் போதும் அதனைக் கழற்ற அவர் மறுத்துவிட்டார். ராமனது மணிமுடியின் அச்சாக ஒன்றைத் தனக்கு செய்து கொள்வதற்காக அந்த மணிமுடியின் சரியான அளவு என்ன என்பதைக் கணக்கிடுவதற்கு இந்து மதப்பண்டிதர்களை அவர் பணியில் அமர்த்தினார்.

தெய்வீகத் தன்மை தமக்கு இருப்பதாக நம்பினார்; மன்னர் என்ற முறையில் இல்லற வாழ்க்கையைக் கடைப்பிடித்தார்; அதே சமயம் அதிகாரம் செலுத்துவதிலும் குறைவில்லாமல் இருந்தார் ஆல்வார் மகாராஜா. இந்தியாவின் சிறந்த துப்பாக்கிச் சுடும் வீரர்களில் அவரும் ஒருவர் வேட்டையாடும் போது புலிகளுக்கு இரையாகக் குழந்தைகளைக் கொண்டு செல்வதில் ஆர்வம் காட்டினார். அவரது ஆட்சிப்பகுதியில் உள்ள எந்த ஒரு குடிசையிலிருந்தும் ஒரு குழந்தையைக் கவர்ந்து வருமுன், அச்சமடையும் பெற்றோர்களிடம், குழந்தையைப் புலி நெருங்குவதற்குள் அதனைச் சுட்டுக் கொன்று விடுவதாக வாக்குறுதி அளிப்பார். ஓரினப்புணர்ச்சியில் ஆர்வம் கொண்டு அதிலேயே மூழ்கிக் கிடந்த அவர், தனது அரண்மனைப் படுக்கையை ராணுவ அகாடமியாக மாற்றினார். அவரது ராணுவத்தில் சேர்வதற்கான இளம் அதிகாரிகளின் தகுதி இங்கே வைத்துதான் சோதிக்கப்படும். ஓரினச் சேர்க்கையில் அவர் எதிர் பார்க்கும் அளவில் அவர்கள் பங்கேற்க வேண்டும். சில சமயங்களில் இந்தச் செயல் வருந்தத்தக்க கொலைகளாகவும் முடிந்திருக்கிறது.

வெலிங்டன் பிரபு வைஸ்ராயாக இருந்தபோது நடந்த இரண்டு சம்பவங்கள் அவமதிப்புக் குற்றங்களாகி இறுதியில் ஆல்வார் மன்னருக்குத் தண்டனையும் கிடைத்தது. வைஸ்ராய் ஒருமுறை ஆல்வார் மன்னரைத் தனது மாளிகைக்குப் பகல் விருந்துக்கு அழைத்திருந்தார். தனது பக்கத்தில் அமர்ந்திருந்த ஆல்வார் மன்னரின் விரலில் மிகப்பெரிய வைரமோதிரம் இருப்பதை திருமதி வெலிங்டன் வியப்புடன் பார்த்தார். உடனே மோதிரத்தைக் கழற்றி வைஸ்ராயினியிடம் மன்னர் கொடுத்தார்.

திருமதி வெலிங்டனின் வியப்பிலும் பாராட்டிலும் உள்நோக்கம் இல்லாமல் இல்லை. விருப்பத்துடன் ஒரு பொருளை வைஸ்ராயோ, வைஸ்ராயினியோ பாராட்டிப் பேசினால் அந்தப் பொருளை அவர்களிடம் மன்னர் கொடுத்து விட வேண்டும் என்பது தான் வழக்கம். மதிப்பு மிகுந்த மணிக்கற்களைப் பார்த்து விட்டால் திருமதி வெலிங்டன் பாராட்டி விடுவார். இப்படியே அவர் இந்தியாவில் இருந்த போது ஏராளமான அணிகலன்களைக் குவித்து விட்டார். கைவிரலில் போட்டுப் பார்த்த பின் மோதிரத்தைக் கழற்றி ஆல்வார் மன்னரிடமே அவர் கொடுத்து விட்டார்.

முன்னெச்சரிக்கையுடன் பணியாளர் ஒருவரை அழைத்து கை அலம்பும் பாத்திரத்தைக் கொண்டு வருமாறு கூறினார். அது வந்ததும், ராமனின் அவதாரமான ஆல்வார் மன்னர், மற்ற விருந்தினர்களின் பார்வையிலேயே, மோதிரத்தைக் கழுவினார். திருமதி வெலிங்டனின் கைவிரலில் போட்ட மோதிரத்தைத் தன் விரலில் போடு முன் சுத்தம் செய்வது போல் கழுவியது அங்கிருந்தவர்களுக்கு உறுத்தலாகவே இருந்தது.

பிரிட்டிஷார் பார்வையில் நடத்தை கெட்ட மன்னரின் மன்னிக்க முடியாத குற்றம் நிகழ்ந்தது போலோ விளையாட்டு மைதானத்தில். போலோ பந்தயம் ஒன்றில் அவரது குதிரைகளில் ஒன்று கட்டளையை ஏற்று நடக்காததால் ஆட்டத்தின் இடையிலேயே அதன் மீது மண்ணெண்ணெயை ஊற்றி தானே தீக்குச்சியைக் கிழித்து அதன்மேல் போட்டார். தனிப்பட்ட வாழ்க்கையில் அவர் செய்ததை விட மோசமானதாக ஓரினச் சேர்க்கையின் போது பலரைச் செய்த கொடுமைகளுக்கு இணையானதாக இந்தச் செயல் கருதப்பட்டது. பலர் முன்னிலையில் கொடூரமாக ஒரு விலங்குக்கு இழைக்கப்பட்ட பயங்கரத்தை பிரிட்டிஷ் நீதி மிகவும் கடுமையானதாகக் கருதியது. இதனால் ஆல்வார் மன்னர் பதவி நீக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.

ஆல்வார் மன்னர் மீதான இந்த நடவடிக்கை விதிவிலக்கு போல் இருந்தாலும், இந்தியாவை ஆட்சி செய்த தூய்மைவாத பிரிட்டிஷாருக்கும் மட்டுமீறிய மன்னர்களுக்கும் இடையேயான உறவுகளைச் சீர்குலைத்தது இந்த ஒரு சம்பவம் மட்டுமல்ல. இதை விட மோசமான ஒன்றை பரோடா மகாராஜா செய்திருக்கிறார். அவரது மாநிலத்திலிருந்த பிரிட்டிஷ் அதிகாரிக்கும் அவருக்கும் ஒரே எண்ணிக்கையிலான குண்டு முழக்க மரியாதை அளிக்கப் பட்டது. சாதாரண ஒரு கர்னலுக்கும் (ராணுவத்தில் துணைத்தலைவர். மொ-ர்) தனக்கும் ஒரே மாதிரியான மரியாதை அளிக்கப்படுவதை விரும்பாத மகாராஜா, தனக்குக் கூடுதல் மரியாதையுடன் குண்டுகள் முழங்க தங்கத்தாலான இரண்டு பீரங்கிகளைச் செய்யுமாறு உத்தரவிட்டார். மன்னரின் நடவடிக்கையால் ஆத்திரமடைந்த பிரிட்டிஷ் அதிகாரி பரோடா மன்னர் பற்றி சாதகமற்ற அறிக்கையை லண்டனுக்கு அனுப்பினார். அந்தப்புரத்தில் அவர் பெண்களை அடிமைகளாக நடத்துகிறார் என்ற குற்றச்சாட்டு அந்த அறிக்கையில் இருந்தது.

என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்த பரோடா மன்னர், விரும்பத்தகாத இந்தக் கர்னலை அகற்றுவதற்குப் பொருத்தமான செயலை சிபாரிசு செய்யவும் அதைச் செய்வதற்கு சரியான கிரகச்சாரத்தைக் கணிக்கவும் பிரபல சோதிடர்களையும் வேதவிற்பன்னர்களையும் அழைத்தார். வைரத்தைப்

பொடி செய்து விஷமாக்கிக் கொடுத்து விடலாம் என்பதுதான் அவர்கள் செய்த பரிந்துரை. கர்னவாக இருக்கும் மனிதருக்குப் பொருத்தமான அளவாக ஒரு கருவேலங்கொட்டை அளவு வைரத்தை மன்னர் தேர்ந்தெடுத்துக் கொடுத்தார். சோதிடர்கள் அதனைப் பொடி செய்தார்கள்.

கொஞ்சமும் ஜீரணிக்காத வைரப்பொடி ஒரு நாள் கர்னலின் இரவு உணவில் கலக்கப்பட்டது. விரும்பிய பயனை அது அளிப்பதற்கு முன் வலியை ஏற்படுத்திவிட்டது. கர்னல் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவரது வயிறு சுத்தம் செய்யப்பட்டது.

முடியரசின் பிரதிநிதி ஒருவரைக் கொலை செய்ய முயற்சி செய்தது ஒரு அரச விவகாரம் ஆனது. கர்னலின் மறுபிறவியை உறுதி செய்யத் தேவையான அனைத்துச் சடங்குகளையும் செய்ததாகப் பிராமணப் புரோகிதர்கள் கூறியதையும், ஆங்கிலேய கர்னல் தெரியாத்தனமாக வைரத்தை விழுங்கி விட்டார் என்று வைர வியாபாரி தெரிவித்ததையும் நீதிபதிகள் ஏற்கவில்லை. பிரிட்டிஷ் அரசுக்கு உட்பட்ட ஒரு மாநிலத்தில் நல்லாட்சி நடத்தத் தவறியதற்காக மகாராஜா பதவி நீக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.

இவரை நாடுகடத்தியதற்காக இவரது நண்பரான பாட்டியாலா மகாராஜா பழிவாங்கினார். நாடு கடத்துவதற்கான ஆணையில் கையெழுத்திட்ட வைஸ்ராய் பாட்டியாலாவுக்கு வருகை தந்த போது வழக்கமாக 31 குண்டுகள் முழங்கி வரவேற்க வேண்டும். இதற்கான பீரங்கிகளில் நிரப்புவதற்கான மருந்தை மிகக்குறைவாக அளித்து குண்டுகள் அதிர்வேட்டாக முழங்காமல் குழந்தைகளின் பட்டாசுகள் போல் வெடிக்கச் செய்தார் மன்னர்.

கோர்ஃபீல்டின் லண்டன் பயணத்தைத் தொடர்ந்து இந்த ஆவணங்கள் அழிப்பு மட்டும் நடவடிக்கையாக இருக்கவில்லை. இந்தியா முழுவதிலும் உள்ள மன்னர்களிடமிருந்து புதுடில்லிக்குக் கடிதங்கள் வந்து குவியத் துவங்கின. இந்திய ரயில்வே, தபால், தந்தி மற்றும் பிற வசதிகள் தங்கள் பகுதிகளிலிருந்து செயல்பட அனுமதித்து செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை ரத்து செய்ய விருப்பம் தெரிவித்து மத்திய நிர்வாகத்துக்கு அவர்கள் தகவல் அனுப்பினர். எதிர்காலத்தில் தங்களின் பேரம் பேசும் சக்தியைக் கோடிட்டுக் காட்டுவதற்காக மன்னர்கள் செய்த தந்திர நடவடிக்கை தான் இது. ஆனால் அவர்கள் திறந்துள்ள வழி மிகவும் பயங்கரமானது. அந்த இந்தியாவில் ரயில்கள் ஓடாது. தபால்கள் பட்டுவாடா ஆகாது. தொலைத்தகவல் தொடர்புகள் முறைப்படி செயல்படாது.

★

வைஸ்ராயின் கூட்ட அறைக்குள் வந்து கொண்டிருக்கும் இந்தியத் தலைவர்கள் ஏழுபேரையும், மிகப் பெரிய ஆயில் பெயிண்டிங் படத்திலிருந்து ராபர்ட் கிளைவின் ஒளியிழந்த கண்கள் பார்த்துக் கொண்டிருந்தன. 'மனித குலத்தின் இரங்கத்தக்க மாதிரிகளாக ஒளியிழந்த கண்களுடன் இருப்போர்' என்று காந்தியால் சித்தரிக்கப்பட்ட 400 மிலியன் (40 கோடி) இந்திய மக்களின் பிரதிநிதிகள் இவர்கள். தங்களின் துணைக்கண்டம் தங்களுக்கே கிடைப்ப தற்கான ஒப்பந்தங்களை ஆய்வு செய்வதற்காக, 1947 ஜூன் 2 காலையில் இவர்கள் மவுண்ட்பேட்டனின் கூட்ட அறைக்குள் நுழைந்தார்கள். கடந்த 48 மணி நேரத்துக்கு முன்னர் பிரிட்டிஷ் அமைச்சரவை அதிகாரப்பூர்வமாக ஒப்புதல் அளித்த அந்த உத்தரவை வைஸ்ராய் தம்முடன் கொண்டு வந்திருந்தார்.

ஒருவர் பின் ஒருவராக வந்து அறையின் மையப்பகுதியில் போடப்பட்டிருந்த வட்ட மேசையில் தங்களுக்குரிய இடத்தில் அமர்ந்தார்கள். காங்கிரஸ் சார்பில் நேரு, படேல், அதன் தலைவர் ஆச்சார்ய கிருபளானி; முஸ்லீம் லீக் சார்பில் ஜின்னா, லியாகத் அலிகான், ராப் நிஷ்தார் (Rab Nishtar). இந்தியாவில் வேறெவரையும் விட அதிகமாகப் பாதிக்கப்படப் போவது பற்றி எடுத்துரைக்க 6 மிலியன் (60 லட்சம்) சீக்கியர்களின் பிரதிநிதியாக பல்தேவ் சிங் வந்திருந்தார்.

சுவருக்கு அருகே மவுண்ட்பேட்டனின் இரண்டு முக்கிய ஆலோசகர்களான இஸ்மே பிரபுவும் சர் எரிக் மீவிலேயும் (Sir Eric Mieville) அமர்ந்திருந்தனர். மேசையின் நடுநாயகமாக வைஸ்ராய் அமர்ந்திருந்தார். அதிகாரபூர்வமான அரசு புகைப்படக்காரர் வரலாற்றுக்காக இந்தக் கூட்டத்தை அவசர அவசரமாகப் பதிவு செய்து கொண்டிருந்தார். அங்கே நிலவிய அமைதிக்கு தொண்டையைக் கனைக்கும் ஒலி மட்டும்தான் இடையூறாக இருந்தது. செயலாளர் ஒருவர் ஒவ்வொருவர் முன்பும் திட்டத்தின் நகலைக் கொண்ட உறையை வைத்துச் சென்றார்.

டில்லிக்கு வந்ததிலிருந்து மேற்கொண்டிருந்த, தனித்தனியாக சந்தித்துப் பேசுவது என்ற, ராஜதந்திர நடவடிக்கையைக் கைவிட வேண்டிய நிர்ப்பந்தம் மவுண்ட்பேட்டனுக்கு இப்போது ஏற்பட்டது. முதன்முறையாக அவர் வட்டமேசை மாநாட்டை நடத்தினார். இருப்பினும் தாம் தான் பேச வேண்டும் என்று அவர் முடிவு செய்திருந்தார். இந்தக் கூட்டத்தைப் பொது விவாதமாக மாற்றும் ஆபத்தை அவர் செய்யத் தயாராக இல்லை. அப்படிச் செய்தால் ஆக்ரோஷமான சண்டைக்களமாக அது மாறிவிடும்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக பல முக்கியமான கூட்டங்களில் தான் கலந்து கொண்டதையும். அவையெல்லாம் போரின் போக்கைத் தீர்மானிக்கும் முக்கிய முடிவுகளுக்கானவையாகவே இருந்தன என்றும், ஆனால் தாங்கள் மேற் கொள்ள விருக்கும் முடிவு வரலாற்றில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. இத்தகையதொரு கூட்டத்தில் இதற்கு முன் தான் கலந்து கொண்டதாக நினைவில்லை என்ற குறிப்புடன் மவுண்ட்பேட்டன் பேச்சைத் தொடங்கினார்.

டில்லிக்கு வந்ததிலிருந்து தாம் நடத்திய உரையாடல் விவரங்களைத் தெரிவித்த மவுண்ட்பேட்டன் அவசரமாக செயல்பட வேண்டியது பற்றி அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் தன்னுள் பதிந்திருக்கின்றன என்று கூறினார்.

பின்னர் எழுத்து பூர்வமாகப் பதிவு செய்வதற்காகவும் வரலாற்றுக்காகவும் கடைசியாக முறைப்படி ஜின்னாவிடம் அவர் கேட்டார்: இந்தியாவின் ஒற்றுமையை நிலைநிறுத்தும் கேபினட் மிஷன் திட்டத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரா? அதே போன்ற உபசார வார்த்தைகளுடன் தாம் அதனை ஏற்கவில்லை என்று ஜின்னா பதிலளித்தார். மவுண்ட்பேட்டன் கையிலிருந்த விவரத்துக்குள் சென்றார் சுருக்கமாக அவரது திட்டத்தை விவரித்தார். வின்ஸ்டன் சர்ச்சிலின் ஆதரவைப் பெற்றுள்ள டொமினியன் அந்தஸ்து என்ற பிரிவு, வாயிற்படியில் ஒரு காலை வைத்தபடியே இருக்க வேண்டும் என்ற பிரிட்டிஷாரின் விருப்பத்தை வெளிப்படுத்துவதல்ல; இப்போது தேவைப்படும் பிரிட்டனின் உதவி முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவே என்று வலியுறுத்திக் கூறினார். பின்னர் கல்கத்தா

பற்றியும், சீக்கியர்களுக்கு ஏற்படப் போகும் துயரங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

மனசாட்சிக்கு விரோதமாக சொல்லுங்கள் என்றோ, கொள்கைகளுக்கு எதிராக சில பகுதிகள் இருக்கலாம் என்பதால் திட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றோ வற்புறுத்தப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். சமாதான உணர்வுடன் இதனை ஏற்றிடுங்கள்; ரத்தம் சிந்தாமல் செயல்படுத்த உறுதி கொள்ளுங்கள் என்று மட்டுமே கேட்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த நாள் காலையில் அவர்களையெல்லாம் சந்திக்க விரும்புவதாகவும் கூறினார். அதற்குமுன், அதாவது நள்ளிரவுக்கு முன், காங்கிரஸ், முஸ்லீம் லீக், சீக்கியர்கள் என முத்தரப்பினரும், இந்தியப்பிரச்சனையின் இறுதித் தீர்வுக்கு இந்தத் திட்டத்தை ஒரு அடிப்படையாகக் கொள்ளும் தங்களின் விருப்பத்தை தெரிவித்து விடுவீர்கள் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். அப்படிச் செய்தால் தாமும் நேரு, ஜின்னா, பல்தேவ் சிங் ஆகியோரும் கூட்டாகத் தங்களின் ஒப்புதலை அடுத்த நாள் மாலையே அகில இந்திய வானொலி மூலம் அறிவித்து விடலாம் என்றும் அவர் யோசனை கூறினார். இதையடுத்து உறுதி செய்யும் அறிவிப்பை கிளமெண்ட் அட்லி லண்டனிலிருந்து வெளியிடுவார்.

'மதிப்புக்குரியவர்களே! இந்தத் திட்டம் பற்றி உங்கள் கருத்துக்களை நள்ளிரவுக்குள் அறிந்து கொள்ள நான் விரும்புகிறேன்' என்று கூறி அவர் முடித்தார்.

எதிர்காலம் பற்றி அவர் 'மிகுந்த நம்பிக்கை' வைத்திருந்தாலும், லண்டனில் சிலவற்றை சாதித்ததாக திருப்தி இருந்தாலும் இதையெல்லாம் மிஞ்சி வெளியே சொல்ல முடியாத ஒரு அச்சம் லூயி மவுண்ட் பேட்டனுடன் ஒட்டிக் கொண்டு டில்லிக்குப் பறந்து வந்தது. 'என்ன செய்வார் என்று கணித்துக் கூற முடியாத மகாத்மா காந்தி' தமக்கு எதிராக இருக்கப் போகிறார் என்ற அச்சம் தான் அது.

'விரக்தியடைந்த அந்த சிட்டுக்குருவி' மீது அவருக்கு ஏற்கெனவே உண்மையான அன்பு உருவாகியிருந்தது. உலகத்துக்கு எந்த நாட்டின் அடையாளமாக காந்தி இருந்தாரோ அந்த நாட்டின் எதிர்காலத்துக்கான மோதலில் அஹிம்சையின் பிதாமகரை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தொழில் ரீதியாக வைஸ்ராய் ஒரு போர் வீரராக இருந்தாலும் இந்த எண்ணம் அவருக்கு அச்சத்தையே ஏற்படுத்தியது.

இந்தப் பணி மிகவும் ஆபத்தானதுதான். இந்தியாவை ஒற்றுமையாக வைத்திருக்கலாம் என்ற தனது நம்பிக்கையை அழித்தவர் ஜின்னா என்றால் அதைப் பிரிக்கலாம் என்ற நம்பிக்கையை அழிப்பவராக காந்திதான் இருப்பார். இந்தியாவுக்கு வந்ததிலிருந்து காங்கிரஸ் தலைவர்களைத் தன்பக்கம் இழுக்க மவுண்ட்பேட்டன் பெருமுயற்சி செய்து வந்தார். இதன் மூலம் ஏதாவது பிரச்சனை எழுந்தால் மகாத்மாவை சிறிது காலம் அல்லது முக்கியமான தருணத்தில் வாயடைக்கச் செய்து விட முடியும் என்று அவர் நம்பினார்.

அவர் எதிர்பார்த்ததை விட அந்தப் பணி எளிதாக இருந்தது. அந்தக் காலகட்டத்தை நினைவுபடுத்தியபடி மவுண்ட்பேட்டன் கூறினார்: 'நான்

மிகவும் உற்சாக நிலையில் இருந்தேன். அவர்கள் எல்லாம் என் பின்னால் இருந்தார்கள். ஒரு வகையில் காந்திக்கு எதிராக இருந்தார்கள். அவர்கள் சார்பில் காந்திக்குச் சவால் விடவும் எனக்கு அவர்கள் ஊக்கமளித்தனர்.'

இருந்தாலும், கணித்தறிய முடியாத சிட்டுக் குருவி கட்சியின் தலைவர்களுக்கு மேலாக தனது கட்டுப்பாட்டில் பெரிய ஆதாரங்களை வைத்திருந்தது என்பதை மவுண்ட்பேட்டன் நன்றாக உணர்ந்திருந்தார். கட்சி முழுவதும் அவர் கட்டுப்பாட்டில் இருந்தது. நாலணா (இப்போது 25 பைசா. மொ-ர்) செலுத்திய லட்சக்கணக்கான உறுப்பினர்கள் அவரைக் கடவுளாக வழிபட்டனர். இதற்கும் மேலாக அந்த மக்களை உணர்ச்சியூட்டி செயலில் இறக்கும் அசாதாரண திறமை அவரிடம் இருந்தது. அரசியல்வாதிகளை மிஞ்சி செயல்படுவதென்று அவர் தீர்மானித்து விட்டால், ஒரு பக்கம் இந்திய மக்களுக்கு நேரடியாக அழைப்பு விடுவதன் மூலம், வைஸ்ராய் மற்றும் நேரு, படேல் இடையேயான பலப்பரீட்சையை எதிர் கொள்ள முடியும். மற்றொரு பக்கம் அவரது உயர்ந்து நிற்கும் ஆன்மீக பலத்தாலும் அதைச் செயல்படுத்த முடியும்.

இதனைச் செய்வதற்கு அவர் தயாராகி வருகிறார் என்பதற்கான அறிகுறிகள் வெளிப்படையாகவே தெரிந்தன. வைஸ்ராயையும் அவரது திட்டத்தையும் சுமந்தபடி மவுண்ட்பேட்டனின் யார்க் விமானம் லண்டனிலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்ட நாளில் காந்தி தனது மாலை நேர பிரார்த்தனைக் கூட்டத்தில் இவ்வாறு கூறினார்: 'ஒட்டுமொத்த நாடே எரியட்டும்; ஒரு அங்குல பாகிஸ்தானையும் நாம் ஏற்கக் கூடாது'

செயற்குழுவின் முடிவுக்குப் பிந்தைய ஒரு மாதகாலம் காந்திக்குத் தனிப்பட்ட முறையில் மன உளைச்சலும், குழப்பமும், சந்தேகமும் நிறைந்த காலமாக இருந்தது. அவரின் ஒவ்வொரு உணர்வும் நரம்பும் பிரிவினை தவறு என்றே அவருக்குச் சொல்லியது. காங்கிரஸ் தலைமை தன்னை விட்டு விலகிக் கொண்டிருப்பதாக மட்டும் அவர் நினைக்கவில்லை; முதன் முறையாக தனது அழைப்புக்கு இந்திய மக்கள் செவிசாய்க்கத் தயாராய் இருப்பார்கள் என்ற நம்பிக்கையும் அவருக்கு இல்லாமல் போனது.

ஒரு நாள் அதிகாலையில் டில்லி வீதிகளில் காந்தி நடந்து கொண்டிருந்த போது அவர்களின் ஊழியர்களில் ஒருவர் சொன்னார்: 'முடிவெடுக்கும் தருணத்தில் நீங்கள் சித்திரத்திலேயே இல்லை. உங்களுக்கும் உங்களின் சித்தாந்தங்களுக்கும் விடை கொடுக்கப்படுகின்றன.'

'ஆமாம்!' காந்தி கசப்புணர்வுடன் பெருமூச்செறிந்தபடி பதிலளித்தார்: 'எனது புகைப்படங்களுக்கும் சிலைகளுக்கும் மாலை அணிவிக்க எல்லோரும் ஆர்வமாக இருக்கிறார்கள். ஆனால் எனது அறிவுரையைக் கேட்க யாருமே இல்லை'

ஒரு சில நாட்களுக்குப் பின் தவறுதலாக, அவரது காலை நேரப் பிரார்த்தனை நேரத்துக்கு அரைமணி நேரத்துக்கு முன் மூன்றரை மணிக்கே காந்தி விழித்துக் கொண்டார். சகோதரி பேத்தியான மனுவின் பக்கத்தில் படுத்து உறங்குவது என்ற பழக்கத்தை மீண்டும் அவர் துவக்கியிருந்தார். இறக்கும் வரை அவர் தொடரப் போகும் பழக்கம் அது. புதுடில்லியில் துப்புரவுத் தொழிலாளர்களின் குடிசையின் தரைமேல் விரித்த காந்தியின் வைக்கோல் படுக்கை அருகே

படுத்திருந்த மனு, இருளில் காந்தி மனவேதனையுடன் தனக்குத் தானே பேசிக் கொள்வதைக் கேட்டாள்.

'இன்று நான் தன்னந்தனியாய் இருப்பதாகவே நினைக்கிறேன்' அவரது குரல் மிகவும் மெல்லிதாக இருந்தது. இரவுடன் அவர் முணு முணுத்தார். 'நான் தவறு செய்வதாக படேலும் நேரும் கூட நினைக்கிறார்கள். பிரிவினையை ஒப்புக் கொண்டால் அமைதி திரும்புவது உறுதியாம்'

'வயதாகி விட்டதால் எனக்குப் புத்தி பேதலித்து விட்டதோ என்று அவர்கள் நினைக்கிறார்கள்' அவர் சொன்னார். ஒரு நீண்ட இடைவெளிக்குப்பின் காந்தி பெருமூச்சு விட்டார். மீண்டும் முணு முணுத்தார். 'அவர்கள் சொல்வதெல்லாம் சரியாகவும் இருக்கலாம்; நான் மட்டுமே தனியாக இருளில் உழன்று கொண்டிருக்கிறேன்.'

மீண்டும் நீண்ட அமைதி. பிறகு அவரின் உதடுகள் முணுமுணுத்த கடைசி வார்த்தைகளை மனு கேட்டாள். 'அதைக்காண ஒருவேளை நான் உயிரோடு இல்லாமல் போகலாம். ஆனால் நான் அஞ்சுவது அந்த ஆபத்து நடந்து இந்தியாவின் சுதந்திரம் துன்பத்துக்கு உட்பட்டால், இந்த வயதான ஆத்மா அது பற்றி சிந்தித்து அனுபவித்த வேதனையை எதிர்காலத் தலைமுறை தெரிந்து கொள்ளட்டும்' என்றார் காந்தி.

இந்தியர்களில் வேறெவரின் கருத்தையும் விட முக்கியமானதும் மிகவும் எதிர்பார்க்கப்படுவதுமான கருத்தைத் தெரிவிக்க ஜூன் 2ஆம் தேதி தலைவர்கள் சென்ற 90 நிமிடங்களுக்குப் பின் அவரே கூறியபடி அந்த 'வயதான ஆத்மா' வைஸ்ராயின் கூட்ட அறைக்கு வரவிருந்தது. முந்தைய கூட்டங்களில் கூட ஒவ்வொரு நிமிடமும் அவரது வருகை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் காங்கிரஸ் கட்சியின் ஒரு நிர்வாகியாக இல்லாததால் அதில் கலந்து கொள்ள அவர் மறுத்துவிட்டார். கேட்கப் போகும் வார்த்தைகள் எப்படியிருக்குமோ என்று அஞ்சியபடியும், கணித்தறிய முடியாத காந்தியின் உள்ளுணர்வின் குரல் மோதலுக்கு வழி வகுத்து விடுமோ என்று எண்ணியபடியும் காந்தியின் வருகையை எதிர்நோக்கி மவுண்ட்பேட்டன் காத்திருந்தார்.

நேரம் தவறாமையை வழிபாட்டுக்குரியதாகக் கருதும் காந்தி, ஒரு நிமிடம் கூட தாமதமின்றி, மவுண்ட்பேட்டனின் தங்கக் கடிகாரம் மணி 12 . 30 என்பதைக் காட்ட மென்மையாக மணியடித்த போது அந்த அறைக்குள் நுழைந்தார்.

மவுண்ட்பேட்டன் மேசையிலிருந்து எழுந்து அவரை எதிர்கொண்டு வரவேற்றார். உதடுகளில் புன்னகையும் இதயபூர்வ வரவேற்பு வார்த்தைகளும் தவழ்ந்தன. பாதி வழியில் அவர் நின்றார். ஒரு குழந்தை அமைதியாய் இருக்க தாய் செய்யும் சைகை போல தனது வலது கை சுட்டு விரலை உதட்டின் மேல் வைத்து செய்த சைகை காந்தியின் பதிலாக இருந்தது. இந்த சைகையால் லேசான நகைச்சுவை கலந்த நிம்மதி வைஸ்ராயைத் தழுவியது. 'கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். இன்று மவுனவிரத நாள்' அவர் எண்ணினார்.

அன்று திங்கட்கிழமை. மவுண்ட்பேட்டனுக்கு எதிராக இந்திய மக்களுக்கு அழைப்பு விடக்கூடிய அந்தக் குரல் எழாது. காந்தி தனது குரல் நாண்களுக்கு ஓய்வளிப்பதற்காக வாரத்தில் ஒரு நாள் முழுவதும் மவுன விரதம் இருக்க சபதமேற்றார். பல ஆண்டுகளாக ஒவ்வொரு திங்கட்கிழமையும் மேற்

கொள்ளப்படும் இந்த விரதம் காந்தியின் சபதங்களில் ஒன்றாகும். பொறுமை யற்றுக் காத்திருந்த மவுண்ட்பேட்டன் பதில் எதையும் பெற இயலாது.

காந்தி, கைவைத்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தார். தனது வேட்டி மடிப்பில் வைத்திருந்த அழுக்கடைந்த காகிதங்களிலிருந்து ஒன்றையும், சரியாக இரண்டு அங்குல நீளமுள்ள குட்டிப் பென்சிலையும் எடுத்தார். ஒரு சிறு துண்டுக் காகிதத்தையும் வீணாக்க அவர் மறுத்தார். அவருக்கு வரும் கடிதங்களின் உறைகளைக் கத்தரிக்கோலால் வெட்டி சிறிய நோட்டுப் புத்தகங்களாக்குவார். அதன் மேலிருந்து கீழ்வரை நுணுக்கி நுணுக்கி எழுதுவார்.

மவுண்ட்பேட்டன் தனது திட்டம் பற்றிய விளக்கத்தை முடித்தபோது, காந்தி அவரது புழுக்கைப் பென்சில் மையை நாவால் நக்கி, பழைய உறை ஒன்றின் பின்பகுதியில் இதுவரை புதிராய் இருந்த கருத்தை முதன்முறையாக எழுதத் தொடங்கினார். அவர் வாழ்நாளில் கேட்க வேண்டியிருந்த மிகவும் முக்கியமான, இதயத்தைத் துளைக்கக் கூடிய வார்த்தைகளாக அவை இருந்தன. அவரது எழுத்துக்கள் பழைய உறைகளின் பின்பக்கத்தில் ஐந்து பக்கங்களை நிறைத்திருந்தன. காந்தி அங்கிருந்து சென்றபின் எதிர்காலத் தலைமுறைக்காக அதனை மவுண்ட்பேட்டன் கவனமாகப் பாதுகாத்தார்.

'நான் வருந்துகிறேன், என்னால் பேச முடியாது' காந்தி எழுதினார். 'திங்கள் கிழமைகளில் மவுனவிரதம் இருக்க வேண்டும் என்று முடிவு செய்த போது இரண்டு விதிவிலக்குகளையும் வைத்திருந்தேன். முக்கிய விஷயங்கள் பற்றி உயர்நிலை அதிகாரிகளுடன் பேச்சு நடக்கும் போதும், நோயுற்ற மக்களுக்கு உதவி செய்யும் போதும் தான் அந்த விதிவிலக்கு. ஆனால் எனது மவுனத்தைக் கலைக்க நீங்கள் விரும்பவில்லை என்பதை நான் அறிவேன்.'

'நான் பேச வேண்டிய ஒன்றிரண்டு விஷயங்கள் உள்ளன. ஆனால் இன்றல்ல. நாம் மீண்டும் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்தால் நான் பேசுவேன்.'

இத்துடன் அவர் வைஸ்ராயின் கூட்ட அறையிலிருந்து வெளியேறினார்.

வைஸ்ராய் மாளிகையின் நீண்ட தாழ்வாரம் இருளாகவும் அமைதியாகவும் இருந்தது. வெள்ளைச் சீருடையணிந்த பணியாளர்கள் சில சமயங்களில் மட்டும் தூதுச் செய்தியுடன் வந்து சென்றது, தரைவிரிப்புகள் மீது வெண்ணிறப் பேய் வந்து சென்றது போல் இருந்தது. லூயி மவுண்ட் பேட்டனின் கூட்ட அறையில் இன்னமும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. கடைசியாக நடந்த கூட்டத்தின் வேதனை மிகுந்த நாளினை அவை பிரதிபலித்தன. அங்கு வந்திருந்த விருந்தினரைப் புரிந்து கொள்ள முடியாத அவநம்பிக்கையுடன் அவர் உற்றுக் கவனித்தார். அவரது திட்டத்தை ஏற்பதற்கான தங்களின் விருப்பத்தை உரிய நேரத்தில் காங்கிரஸ் குறிப்பாகத் தெரிவித்து விட்டது. சீக்கியரும் அப்படியே செய்தனர் எந்த மனிதரை திருப்தி செய்வதற்காகத் திட்டம் மாற்றி யமைக்கப்பட்டதோ, எந்த மனிதரின் பிடிவாதம் காரணமாக இந்தியாவின் பிரிவினை கட்டாயமானதோ, அந்த மனிதர் இப்போது காலம் தாழ்த்தும் முயற்சியில் ஈடுபட்டார். சொல்லப்போனால் இந்த நாள் முகமது அலி ஜின்னாவுக்குக் கூட மவுனவிரத நாள் போலும்! பல ஆண்டுகளாக ஜின்னா எதற்காகப் பாடுபட்டாரோ அவை அனைத்தும் தயார். அவரது ஒப்புதலுக்காக மட்டுமே அவை காத்திருக்கின்றன. சில மர்மமான காரணங்களால், இந்தத்

திட்டத்தை ஏற்பதற்கு 'சரி' என்று சொல்ல முடியாத நிலை ஜின்னாவுக்கு இருந்தது.

தொடர்ச்சியாகப் புகைப்பிடிக்கும் ஜின்னா களைத்துப் போயிருந்த நிலையிலும் கிரேவன் ஏ (Craven A) சிகரெட்டில் ஒன்றை உற்சாகமாக உறிஞ்சிக் கொண்டிருந்தார். முஸ்லீம் லீகின் கவுன்சில் முன் வைக்கும் வரை மவுண்ட் பேட்டனின் திட்டம் பற்றி லீகின் கருத்தைத் தெரிவிக்க இயலாது என்று அவர் உறுதியாகக் கூறினார். கவுன்சில் உறுப்பினர்களை டில்லிக்கு வரவழைக்க, குறைந்தது ஒருவார காலம் தேவை என்றும் தெரிவித்தார்.

ஜின்னாவுடனான நடவடிக்கைகளால் மவுண்ட்பேட்டனுக்கு ஏற்பட்டிருந்த ஏமாற்றங்கள் எல்லாம் இப்போது மொத்தமாகச் சேர்ந்திருக்கின்றன. இதனை நம்பவே முடியவில்லை. ஜின்னா கேட்டுக் கொண்டபடி பாழாய்ப் போன பாகிஸ்தானும் அவருக்குக் கிடைக்கப் போகிறது. சீக்கியர்கள் கூட இதனை ஜீரணித்துக் கொண்டார்கள். எதெல்லாம் வேண்டுமென்றாரோ அதெல்லாம் கிடைத்த போதும் கடைசி நேரத்தில் அனைத்தையும் அழிக்கத் தயாராகிறார். 'சரி'யென ஒரு வார்த்தை சொல்ல முடியாத அவரது மோசமான இயலாமையால் மொத்த திட்டத்தையும் சிதைக்கப் பார்க்கிறார்.

ஜின்னாவின் ஒப்புதல் மட்டும் தான் மவுண்ட்பேட்டனுக்குத் தேவையாய் இருந்தது. இன்னும் 24 மணி நேரத்துக்குள் பிரிட்டிஷ் நாடாளுமன்ற மக்களவை வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பை வெளியிட லண்டனில் அட்லி காத்திருந்தார் தனது திட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்று அட்லிக்கும் அவரது அரசுக்கும் மவுண்ட்பேட்டன் உறுதியளித்திருந்தார். சிம்லாவில் நேரு செய்தது போல வேறு எந்தப் பிரச்சனையும் இனி ஏற்படாது என்றும் அவர் கூறியிருந்தார். இந்த முறை அவர்கள் ஏற்றுக் கொண்ட திட்டத்தை இந்தியத் தலைவர்கள் அனைவரும் ஏற்பது நிச்சயம் என்று அவர் தெரிவித்தார். மிகப்பெரும் சிக்கலுடன் கடைசி வரைத் தயங்கிக் கொண்டிருந்த காங்கிரசிடம் நயந்து பேசி ஒரு வழியாக பிரிவினைக்கு அவர்களை இணங்கச் செய்திருந்தார். காந்தி கூட தற்காலிகமாகவேனும் தனது கட்டுப்பாட்டை மீறி காரியம் நடப்பதை அனுமதித்திருந்தார். ஏதாவது கூடுதல் சலுகை பெற ஜின்னா காலம் கடத்தும் தந்திரத்தைக் கையாள்கிறாரோ என்ற லேசான சந்தேகம் எழுகிறது. அப்படியிருந்தால் கவனத்துடன் தயாரிக்கப்பட்ட திட்டம் ஒட்டுமொத்தமாக சிதறி சின்னாபின்னமாகும்.

'மிஸ்டர் ஜின்னா! உங்களின் ஆதரவாளர்களை டில்லிக்கு அழைக்கும் ஒருவார காலம் வரை நிலைமையை இப்படியே என்னால் வைத்திருக்க முடியும் என்று நினைத்தால் நீங்கள் பைத்தியமாகத்தான் இருக்க முடியும். கொந்தளிக்கும் சூழ்நிலையில் தான் இந்தத் திட்டத்தை நாம் தயாரித்திருக் கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

'உங்களுக்குப் பாகிஸ்தான் கிடைத்திருக்கிறது. ஒரு காலத்தில் உங்களுக்கு இது கிடைக்கும் என்று உலகத்தில் ஒருவரும் நினைக்கவில்லை. இதனை செல்லரித்தது என்று நீங்கள் சொல்வீர்கள். நான் அறிவேன். ஆனாலும் அது பாகிஸ்தான் தான். நாளை எல்லோரோடும் சேர்ந்து நீங்களும் ஒப்புக் கொள்வதில்தான் எல்லாமே அடங்கியிருக்கிறது. உங்கள் ஒப்புதலை

யொட்டியே காங்கிரஸ் தனது ஒப்புதலைத் தெரிவித்திருக்கிறது. அவர்களை நிர்ப்பந்திக்க நீங்கள் நினைக்கிறீர்கள் என்று அவர்கள் சந்தேகப்பட்டால் தங்களின் ஒப்புதலை அவர்கள் திரும்பப் பெற்று விடுவார்கள். பின்னர் நாம் அனைவரும் பயங்கரமான சூழ்நிலைக்குத் தள்ளப்படுவோம்' மவுண்ட் பேட்டன் இவ்வாறு தெரிவித்தார்.

இல்லை, இல்லை என்று எதிர்ப்புத் தெரிவித்த ஜின்னா, எல்லாமும் சட்டப்படி அமைக்கப்பட்ட வழியில் தான் நடக்க வேண்டும் என்றார். 'நான் மட்டுமே முஸ்லீம் லீக் அல்ல' என்றும் அவர் சொன்னார்.

'இப்போது, இப்போது சொல்லுங்க மிஸ்டர் ஜின்னா' மவுண்ட்பேட்டன் அவசரப்பட்டார். அதிகரிக்கும் ஏமாற்றத்தையும் மிஞ்சி, உறைந்த பனி போன்ற அமைதியுடன் அவர் பேச்சைத் தொடர்ந்தார். 'அதையே மீண்டும் சொல்ல முயற்சி செய்யாதீர்கள். நீங்கள் உலகத்துக்கு அதைச் சொல்லலாம். ஆனால் தயவு செய்து குழந்தை போல் நடக்க முயற்சிக்காதீர்கள். முஸ்லீம் லீகில் யார் யார் என்ன என்னவாக இருக்கிறார்கள் என்பதை நான் அறியேன்!'

'இல்லை' கற்சுவர்போல் தடையாக இருந்த ஜின்னா கூறினார். 'எல்லாமும் முறையான வழியில் தான் செய்யப்பட வேண்டும்.'

மவுண்ட்பேட்டன் பேசினார் 'மிஸ்டர் ஜின்னா! நான் உங்களிடம் சில விஷயங்களைச் சொல்லப் போகிறேன். உங்கள் திட்டத்தை நீங்களே சிதைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்பவில்லை. கஷ்டப்பட்டு நீங்கள் உருவாக்கியிருக்கும் தீர்வினை வீணாக்கி விட உங்களை நான் அனுமதிக்க முடியாது'

மவுண்ட்பேட்டன் தொடர்ந்தார்: 'ஒரு சில ஆட்சேபங்களுடன் காங்கிரஸிடமிருந்து பதிலைப் பெற்றிருப்பதாக நான் நாளைய கூட்டத்தில் சொல்வேன். இதில் அவர்கள் திருப்தி அடைவார்கள் என்று நம்புகிறேன். இதையடுத்து காங்கிரசார் திட்டத்தை ஏற்றிடுவர்; சீக்கியர்களும் ஏற்றிடுவர்.

'கடந்த இரவு ஜின்னாவுடன் வெகு நேரம் மிகுந்த நட்பு ரீதியில் உரையாடினேன், இந்தத் திட்டம் பற்றி விரிவாகப் பேசினோம். இது தனக்கு ஏற்புடையதுதான் என்று தனிப்பட்ட முறையில் ஜின்னா உறுதியளித்திருக் கிறார் என்று பிறகு நான் சொல்வேன்.

'மிஸ்டர் ஜின்னா, இந்த சமயத்தில் நான் உங்கள் பக்கம் திரும்புவேன்' மவுண்ட்பேட்டன் பேச்சைத் தொடர்ந்தார், 'நீங்கள் பேசுவதை நான் விரும்பவில்லை. வெளிப்படையாக காங்கிரஸ் உங்களை விவாதத்துக்கு இழுப்பதையும் நான் விரும்பவில்லை. நீங்கள் ஒன்றே ஒன்றைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் சொல்வதை ஏற்றுக் கொள்கிறீர்கள் என்பதற்கு அடையாளமாக நீங்கள் தலையசைக்க வேண்டும் என்றே விரும்புகிறேன்.

'நீங்கள் தலையசைக்காவிட்டால், மிஸ்டர் ஜின்னா, நீங்கள் தூக்கியெறியப் படுவீர்கள். இதற்கு மேல் உங்களுக்காக நான் செய்வதற்கு ஒன்றுமில்லை. எல்லாம் பாழாகிப் போகும். இது பயமுறுத்தல் அல்ல. வருமுன் உரைப்பது தான். அந்தச் சமயத்தில் நீங்கள் தலையசைக்கவில்லையென்றால் இங்கே எனது பயன்பாடு முடிந்து விடும். உங்கள் பாகிஸ்தானை நீங்கள் இழந்து விடுவீர்கள்.

என்னைப் பொறுத்தவரை நீங்கள் நாசமாய்ப் போக வேண்டியதுதான்' மவுண்ட்பேட்டன் முடித்தார்.

இந்தியாவைப் பிரிப்பதற்குரிய மவுண்ட்பேட்டனின் திட்டத்தை இந்தியத் தலைவர்கள் ஏற்றுக் கொண்டதை முறைப்படி பதிவு செய்வதற்கான கூட்டம் மவுண்ட்பேட்டன் ஏற்கெனவே அறிவித்தபடி சரியான நேரத்தில் தொடங்கியது. மீண்டும் ஒருமுறை அந்தத் தலைவர்களை வைஸ்ராய் வழக்கமில்லாத அமைதிக்கு ஆட்படுத்தினார். அவர்களுக்காக இப்போது அவரே பேசினார். தாம் எதிர்பார்த்தது போலவே தனது திட்டத்தில் மூன்று தரப்பினரும் பெரும் தயக்கங்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று அவர் கூறினார். அவற்றை வெளிப்படையாய் சொன்னதற்காகத் தாம் நன்றி தெரிவிப்பதாகவும் சொன்னார். காங்கிரஸ் அதன் ஒப்புதலைத் தெரிவித்துள்ளது. சீக்கியர்களும் ஒப்புக் கொண்டார்கள். முதல் நாள் மாலை தாம் ஜின்னாவுடன் வெகுநேரம் நட்பு ரீதியில் உரையாடியதாகவும் இந்தத் திட்டம் ஏற்புடையது என்று அவர் தன்னிடம் உறுதியளித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வார்த்தைகளைச் சொன்னபோது, அவரது வலப்பக்கத்தில் அமர்ந்திருந்த ஜின்னாவின் பக்கம் மவுண்ட்பேட்டன் திரும்பினார். அந்தத் தருணத்தில் முஸ்லீம் தலைவர் என்ன செய்யப்போகிறார் என்பது பற்றி மவுண்ட்பேட்டனுக்கு நிச்சயமான கருத்து ஏதும் இல்லை. சுப்ரீம் கமாண்டராகவும் கெல்லியின் கேப்டனாகவும் இருந்த, இம்பால் (Imphal) சமவெளியில் ஜப்பான் ராணுவத் துருப்புகளால் சுற்றி வளைக்கப்பட்டு தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையை எதிர்கொண்ட, மவுண்ட்பேட்டன் திரும்பிப் பார்க்கும் போது 'தனது வாழ்நாளிலேயே மிகவும் மயிர்க்கூச்செறியும் தருணமாக' இதைக் கருதினார். பரபரப்பான அந்த நிமிடங்களில், உணர்ச்சியற்று ஜடம் போலிருந்த ஜின்னாவின் முகத்தை அவர் உற்று நோக்கினார். அப்போது, மெதுவாக, ஒவ்வொரு மயிர்க் காலிலிருந்தும் ஆர்வமின்மையை வெளிப்படுத்தி, சோர்வுடனும் அளவில்லா பொறுப்பின்மையுடனும் தலையசைத்து ஜின்னா தனது ஒப்புதலைத் தெரிவித்தார். அவரது தாடை அரை அங்குலம் தான் இறங்கி நிமிர்ந்தது. மவுண்ட்பேட்டனின் திட்டத்தை ஏற்று இணக்கத்துடன் பயணம் செய்ய முடிந்த குறைந்தபட்ச தூரம் அது தான் போலும்!

இந்த சுருக்கமான, பெரும்பாலும் எவர் கண்ணுக்கும் புலப்படாத, தலைஅசைவுடன், 45 மிலியன் மனிதர்களைக் கொண்ட ஒரு நாடு இறுதி அனுமதியைப் பெற்றது. தாறுமாறான வடிவம் கொண்டிருந்தாலும் பிரச்சனை மிக்க சூழ்நிலைகள் இருந்தாலும் பாகிஸ்தான் பிறந்து விட்டது. 'நிறைவேறாத கனவு' எனப்பட்ட பாகிஸ்தான் கடைசியில் நனவாகி விட்டது. பணியை மேலும் தொடர மவுண்ட்பேட்டனுக்குப் போதிய அங்கீகாரம் கிடைத்து விட்டது. அங்கிருந்த ஏழு மனிதர்களில் யாராவது ஒருவர் கடைசியாக பயத்தையோ தயக்கத்தையோ எழுப்புவதற்கு வாய்ப்பளிக்கும் முன், இந்தியப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு இனி அடிப்படையாக அமையும் இந்தத் திட்டமே என்று அவர் அறிவித்தார்.

சற்று முன் அவர்கள் மேற்கொண்ட முடிவின் பயங்கரத்தை உணரத் தொடங்கு முன்னரே, ஏற்கெனவே ஏற்பாடு செய்திருந்தபடி, மவுண்ட்பேட்டன்

வைத்திருந்த, 34 பக்க அறிக்கை ஒவ்வொருவர் முன்னாலும் வைக்கப்பட்டது. கடைசிப்பிரதியை இரண்டு கைகளாலும் இறுகப்பற்றி தனது தலைக்கு மேல் உயர்த்திப் பிடித்த வைஸ்ராய் பின்னர் அதை மேசை மேல் போட்டார். இதனால் ஏற்பட்ட சத்தத்தைத் தொடர்ந்து, காகிதங்கள் மரத்தின் மீது பட்டு உருவாக்கிய ஓசையும் எழுந்தது. செயல்படுத்தவிருக்கும் அறிக்கையின் தலைப்பை மவுண்ட்பேட்டன் வாசித்தார். ‘பிரிவினையின் நிர்வாக விளைவுகள்.’

இந்தியத் தலைவர்களுக்காக மவுண்ட்பேட்டனும் அவரது ஊழியரும் கவனமாகத் தயாரித்து, பெயரிட்டு, இதனை அளித்துள்ளனர். அச்சுறுத்தும் நடவடிக்கைக்கான ஒரு வழிகாட்டி இப்போது அவர்கள் முன் இருந்தது. ஒவ்வொரு பக்கத்திலும், அதிகார வர்க்கத்தினரின் புரியாத மொழி நடையில், அவர்கள் மேற்கொண்டுள்ள முடிவின் பயங்கர விளைவுகள் தெரிந்தன. தொலைதூரத்தில் இருந்தாலும் கூட அங்கிருந்த எழுவரில் ஒருவரும் வரப்போகும் அதிர்ச்சிகளை அறிந்திருக்கவில்லை. இவர்களைப் போலவே மவுண்ட்பேட்டனும் பக்கங்களைப் புரட்டினார். இதற்கு முன் வேறெந்த மக்களும் சந்திக்காத பிரச்சனையை இவர்கள் சந்திக்கப் போகிறார்கள். கற்பனைக்குள்ளும் அடங்காத மிகப்பெரிய பிரச்சனையாக அது இருக்கும். துணைக் கண்டத்தில் மூன்று நூற்றாண்டுகளாக பொதுவானக் குடியிருப்பு களில் சிலந்தி வலைபோல் பின்னிப் பிணைந்திருந்த மக்களைப் பிரிந்து செல்லுமாறு அவர்கள் அழைப்பு விடப் போகிறார்கள். மூன்று நூற்றாண்டு களாகத் தயாரித்ததைத் துண்டு துண்டாக்கும் தொழில் நுட்பம் அது. வங்கிகளின் ரொக்கம்; அஞ்சலகங்களின் அஞ்சல்தலைகள்; நூலகங்களின் புத்தகங்கள்; கடன்கள்; சொத்துக்கள்; உலகின் மூன்றாவது பெரிய ரயில்வே; சிறைகள்; சிறைக்கைதிகள்; மைக்குடுவைகள்; துடைப்பங்கள்; ஆய்வு மையங்கள்; மருத்துவமனைகள்; பல்கலைக் கழகங்கள்; கல்வி நிறுவனங்கள்; மேலும் இவர்களின் எண்ணற்ற வகைவகையான பொருள்கள் பிரிக்கப்பட வுள்ளன.

என்ன நடக்கப் போகிறது என்பதை அந்த ஏழு மனிதர்களும் முதன் முறையாக அறிந்ததால் கூட்ட அறை பேரமைதியால் நிறைந்தது. இந்தக் காட்சியை மவுண்ட்பேட்டன் உன்னிப்பாகக் கவனித்தார். இப்படித்தான் இருக்கும் என்று அவர் நினைத்தபடியே அவர்களின் முகபாவங்கள் அமைந்தன. அந்த நேரத்தில் அப்படி நடக்காமலிருந்தால் அது வியப்பைத்தான் ஏற்படுத்தியிருக்கும் என்று பின்னர் ஒரு ஊழியரிடம் அவர் கூறினார். மிகப்பெரிய பிரச்சனையின் முன்னால் அந்த ஏழு பேரையும் அவர் தள்ளி விட்டார். இதற்குத் தீர்வு காண்பதை விடுத்து, ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டிக் கொள்ள இவர்களுக்கு நேரமோ சக்தியோ இருக்காது என்று மவுண்ட்பேட்டன் உறுதியாக நம்பினார்.

மாலை நேர உலாவலுக்குப் பின் காலைக் கழுவிக் கொண்டிருக்கும் போது இந்த முடிவு பற்றிய செய்தி காந்திக்கு எட்டியது. ஒரு கல்லைக் கொண்டு அவரின் சிஷ்யைகளில் ஒருவர் காலை தடவை விட்டுக் கொண்டிருந்த போது, மற்றொரு சிஷ்யை தலைவர்களுடன் வைஸ்ராய் நடத்திய இரண்டாவது கூட்டத்தின் முடிவைத் தெரிவித்துக் கொண்டிருந்தார். அந்தப் பெண் பேசிய போது சுருக்கம்

விழுந்த முகத்தில் அழுக்கு போல் துயரம் பரவியது. அந்தப் பெண் பேச்சை முடித்த போது பெருமூச்சு விட்டபடி காந்தி கூறினார். 'கடவுள் அவர்களைக் காப்பாற்றட்டும்; அனைத்து வகை ஞானத்தையும் அளிக்கட்டும்.'

1947 ஜூன் 3 மாலை ஏழு மணிக்குப் பிறகு, புதுடில்லியில் உள்ள அகில இந்திய வானொலி நிலையத்தில் இருந்த நான்கு முக்கிய தலைவர்கள், சுயாதிபத்தியமுள்ள இரண்டு தனி நாடுகளாக துணைக்கண்டத்தைப் பிரிக்க, தாங்கள் ஒப்புக் கொண்டிருப்பதை முறைப்படி அறிவித்தார்கள்.

தாம் வகிக்கும் பதவி காரணமாக மவுண்ட்பேட்டன் முதலில் பேசினார். அவரது வார்த்தைகள் உறுதியாகவும், பேச்சு சுருக்கமாகவும், குரல் சன்னமாகவும் இருந்தன. இவரைத் தொடர்ந்து நேரு இந்தியில் பேசினார். இந்தியத் தலைவரின் முகத்தில் துயரம் படர்ந்திருந்தது. 'இந்தியாவின் மாபெரும் எதிர்காலம் துன்பத்தோடும் துயரத்தோடும் தான் உருவெடுக்கிறது' வானொலி நேயர்களுக்கு அவர் தெரிவித்தார். தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு இந்தத் திட்டத்தை ஏற்குமாறு அவர் வற்புறுத்தினார். இது தனிப்பட்ட முறையில் அவருக்கு ஆழமான வருத்தத்தை ஏற்படுத்தியது. அவர் உரையை இப்படி முடித்தார்: 'என் இதயத்தில் மகிழ்ச்சி இல்லாமல்தான் இந்தத் திட்டத்தை உங்கள் முன் வைக்கிறேன்.'

அடுத்தவர் ஜின்னா. அவரது சாதனை பொருத்தமற்ற ஒன்று என்பதைப் படம் பிடித்துக் காட்ட, விரிவான அவரது பேச்சைவிட வேறு உதாரணம் தேவையில்லை. தனது ஆதரவாளர்களிடம் ஒரு நாட்டை வென்று விட்டோம் என்ற செய்தியை, அவர்கள் புரிந்து கொள்ளும் மொழியில் அறிவிக்கும் திறனை, முகமது அலி ஜின்னா பெற்றிருக்கவில்லை. துணைக் கண்டத்தில் இஸ்லாமிய நாட்டை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட சிறப்பு மிகு முடிவு பற்றி, இந்தியாவில் உள்ள முஸ்லீம்களிடம், அவர் ஆங்கிலத்தில் தான் தெரிவித்தார். 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்ற வார்த்தைகளுடன் அவர் பேச்சை முடித்தார். * அவரது பேச்சை பின்னர் ஒரு அறிவிப்பாளர் உருது மொழியில் வாசித்தார்.

வைஸ்ராயின் திட்டத்தைத் தலைவர்கள் ஏற்றுக் கொண்ட அடுத்த நாள் அஹிம்சையின் தேவதூதர் மீண்டும் பேசத் தொடங்கினார் மவுன விரத நாளன்று மவுண்ட்பேட்டனுக்குக் கிடைத்த சிறிய ஓய்வு முடிந்து விட்டது. ஜூன் 4 நண்பகலுக்குப் பின் மவுண்ட்பேட்டனுக்கு ஒரு அவசரத் தகவல் கிடைத்தது. காங்கிரஸ் தலைவர்களுடனான உறவைத் துண்டித்துக் கொள்ளவும், மாலை நேர பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர்களின் திட்டத்தை நிராகரிக்கவும் காந்தி தயாராகி வருகிறார் என்பதுதான் அந்தத் தகவல். மவுண்ட்பேட்டன் உடனடியாக ஒரு தூதரை காந்தியிடம் அனுப்பி தன்னைக் காண வருமாறு அழைப்பு விடுத்தார்.

---

* பேச்சின் இறுதி வார்த்தைகளை ஆங்கிலத்திலிருந்து உருதுக்கு மாற்றியதால் அவரது பேச்சைக் கேட்ட பலரும் அவற்றைப் புரிந்து கொள்ள முடியவில்லை. 'பாகிஸ்தான் இஸ் இன் தி பேக்' (பாகிஸ்தான் பைக்குள் இருக்கிறது) என்று ஜின்னா முழங்கியதாகவே எண்ணினார்கள்.

மாலை 6 மணிக்கு மவுண்ட்பேட்டனின் கூட்ட அறைக்குள் காந்தி நுழைந்தார். அவரது பிரார்த்தனைக் கூட்டம் ஏழு மணிக்கு நடப்பதாக இருந்தது. அதாவது பேராபத்திலிருந்து பாதுகாக்க மவுண்ட் பேட்டனுக்கு ஒரு மணி நேர அவகாசம் தான் இருந்தது. மகாத்மா எவ்வளவு ஆழமான வருத்தத்தில் இருக்கிறார் என்பது மவுண்ட்பேட்டனுக்கு முதல் நோக்கிலேயே புரிந்து விட்டது. 'சிறகொடிந்த பறவைபோல' காலை மடக்கி நாற்காலியில் அமர்ந்திருந்த காந்தி தனது ஒரு கையை மேலே உயர்த்திக் கொண்டும் கீழே தாழ்த்திக் கொண்டும் இருந்தார். காதில் விழாத மெல்லிய குரலில் 'இது மிகவும் பயங்கரமானது, இது மிகவும் பயங்கரமானது' என்றும் சொன்னார்.

இந்த நிலைமையில் காந்தி எதையும் செய்து விட முடியும் என்பதை மவுண்ட்பேட்டன் அறிவார். அவரது திட்டம் வெளிப்படையாக நிராகரிக்கப் படுவது பேரழிவை ஏற்படுத்தும். இதனால் நேருவுக்கும் படேலுக்கும் மற்ற தலைவர்களுக்கும், வெளிப்படையாக காந்தியுடனான உறவைத் துண்டித்துக் கொள்ளும் நிர்ப்பந்தம் அல்லது ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்படலாம். தனது வளமான கற்பனை உருவாக்கிய அனைத்து வாதங்களையும் பயன்படுத்தி மவுண்ட்பேட்டன் பேச்சைத் தொடங்கினார். இந்தியா ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதற்காக அவர் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டதைத் தனது திட்டம் அழித்துவிட்டதைத் தம்மால் புரிந்து கொள்ள முடிகிறது என்றும் அந்த உணர்வுகளைத் தாம் பகிர்ந்து கொள்வதாகவும் காந்தியிடம் மவுண்ட்பேட்டன் கூறினார்.

பேசிக் கொண்டிருக்கும் போதே திடீரென ஒரு யோசனை அவருக்குத் தோன்றியது. செய்தி ஏடுகள் இந்தத் திட்டத்திற்கு 'மவுண்ட்பேட்டன் திட்டம்' என்று பெயர் சூட்டி விட்டன; ஆனால் அவர்கள் இதை 'காந்தி திட்டம்' என்று தான் அழைத்திருக்க வேண்டும் என்றார் அவர். 'காந்தி தானே இந்தத் திட்டத்தின் அனைத்து முக்கிய அம்சங்களுக்கும் யோசனை தெரிவித்தவர்' என்றும் மவுண்ட்பேட்டன் பிரகடனம் செய்தார். மகாத்மா அவரை வியப்புடன் பார்த்தார்.

ஆமாம், மவுண்ட்பேட்டன் தொடர்ந்து பேசினார். தேர்வு செய்யும் உரிமையை இந்திய மக்களிடமே விட்டுவிடுங்கள் என்று காந்தி தம்மிடம் கூறினார். அதைத்தான் இந்தத் திட்டமும் சொல்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபைகள்தான் இந்தியாவின் எதிர்காலத்தை முடிவு செய்யும். இந்தியாவுடன் சேர்வதா அல்லது பாகிஸ்தானுடன் சேர்வதா என்ற விருப்பத்தை வெளிப்படுத்த ஒவ்வொரு மாகாண சபையும் வாக்களிக்கும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு பிரிட்டிஷாரை காந்தி வற்புறுத்தினார். டொமினியன் அந்தஸ்து இதனை நிறைவேற்றப் போகிறது.

'ஏதாவது அதிசயம் நிகழ்ந்து ஒற்றுமைக்கு ஆதரவாக மாகாண சபைகள் வாக்களித்து விட்டால், நீங்கள் விரும்பியதை அடைந்து விடுவீர்கள். அவர்கள் ஏற்காவிட்டால், அந்த முடிவினை ஆயுதப்படைகள் கொண்டு நாங்கள் எதிர்ப்பதை நீங்கள் விரும்பமாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்' மவுண்ட்பேட்டன் காந்தியிடம் தெரிவித்தார்.

*காரணகாரியம் கூறியும், வேண்டுகோள் விடுத்தும், சிறப்பு மிக்க அவரது கவர்ச்சிகரமான காந்த சக்தி போன்ற அனைத்துத் திறமைகளைக் காட்டியும் தனக்கு எதிரே இருந்த வயதான மனிதரிடம் மவுண்ட்பேட்டன் தனது வாதங்களை எடுத்து வைத்தார். 'நண்பர்களிடம் வெற்றி பெறுவதும் மக்களிடம் செல்வாக்கு செலுத்துவதும் எப்படி' என்ற புத்தகத்தை எழுதியவரே பொறாமைப்படும்படி திறமையோடும், கவர்ச்சியோடும், வியாபாரிக்கேயுரிய இயல்போடும் அவர் வாதிட்டதாக பின்னாளில் காந்தியின் நண்பர்களில் ஒருவர் குறிப்பிட்டார். வைஸ்ராயின் அழுத்தமான வேண்டுகோளால் அவர் அசைக்கப்பட்டாலும், பிரிவினையை காந்தி கடுமையாக எதிர்த்தார். 78 வயதை நெருங்கும் காந்திக்கு கடந்த முப்பது ஆண்டுகளில் முதன் முறையாக, இந்திய மக்களின் மீதும் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் மீதும் அவரது பிடிப்பு நிச்சயமற்றதானது. ஏமாற்றத்திலும் நிச்சயமற்ற தன்மையிலும் இருந்த அவர் இன்னமும் ஆத்மாவுக்குள் ஒரு விடையைத் தேடிக் கொண்டிருந்தார். தனது வாழ்க்கையில் நெருக்கடி ஏற்பட்ட பல நேரங்களில் வழிகாட்டிய அந்தராத்மாவின் (உள்ளுணர்வின்) முணு முணுப்புக்காக அவர் இன்னமும் காத்திருந்தார். இருப்பினும் அந்த ஜூன் மாத மாலையில் அதன் குரல் மவுனமாய் இருந்தது. காந்தி சந்தேகத்தில் உழன்றார். உள்ளுணர்வின் மீது நம்பிக்கை வைத்து, குழப்பத்திலும் வன்முறையிலும் இந்தியா மூழ்கினாலும் பரவாயில்லையென பிரிவினையை நிராகரிப்பதா? அல்லது வைஸ்ராயின் மோசமான கோரிக்கையை ஏற்பதா?*

*காந்தி புறப்படுவதற்குரிய நேரம் வந்த போதும் மவுண்ட்பேட்டன் தனது வாதத்தை முடிக்கவில்லை. பிரார்த்தனைக் கூட்டத்துக்குத் தாமதமாகச் செல்வதைத் தாம் ஒரு போதும் அனுமதிப்பதில்லை என்று மவுண்ட் பேட்டனிடம் கூறிவிட்டு தாமாகவே மன்னிப்புக் கேட்டுக் கொண்டு காந்தி புறப்பட்டு விட்டார்.*

*சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பின் தீண்டத்தகாதோருக்கு மத்தியில் அழுக்கேறிய சதுக்கத்தில் போடப்பட்ட மேடையில் கால்களை மடக்கி அமர்ந்த காந்தி தனது தீர்ப்பை அறிவித்தார். அவருக்கு முன்பிருந்த கூட்டத்தில் பெரும்பாலோர் பிரார்த்தனைக்காக வந்தவர்கள் அல்ல. அஹிம்சையின் தேவ தூதரான அவரின் வாயிலிருந்து மவுண்ட்பேட்டன் திட்டத்தின் மீதான கடும் தாக்குதலையும், ஆயுதமேந்தச் சொல்வதற்கான அழைப்பையும் கேட்பதற்காகத் தான். தனது நாட்டின் பிரிவினையை ஏற்பதை விட தனது உடல் துண்டாடப் படுவதையே விரும்புவதாக அடிக்கடி உறுதியாகக் கூறிவந்த அவரது வாயிலிருந்து அந்த மாலை வேளையில் பிரிவினைக்கு எதிரான வார்த்தைகள் ஏதும் வரவில்லை.*

*பிரிவினைக்கு வைஸ்ராயைக் குற்றம் சொல்லிப் பயனில்லை என்று அவர் கூறினார். 'என்ன நடந்துள்ளது என்பதற்கான விளக்கத்தை உங்களுக்குள்ளும் உங்கள் இதயத்துக்குள்ளும் தேடுங்கள்.' லூயி மவுண்ட்பேட்டனின் சாதுர்யம் அவரை வென்று விட்டது. மிகவும் நெருக்கடியிலிருந்த வைஸ்ராய் பதவிக்கு வெற்றி கிட்டியிருக்கிறது.*

*காந்தியைப் பொறுத்தவரை அவர் கடைப்பிடித்த மவுனத்திற்காக இந்தியர்களில் பலரும் அவரை ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள்.*

இந்தியாவுக்கு நேரவிருக்கும் பிரிவினையை எண்ணி, அந்த மெலிந்த வயதான மனிதரின் இதயம் இன்னமும் வலித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் துவேஷத்துக்கான விலையை ஒரு நாள் கொடுக்க வேண்டியிருக்கும்.

இந்தியாவின் சட்டமியற்றும் உறுப்பினர்கள் விவாதிப்பதற்காகக் கட்டப்பட்ட அந்த அழகிய சபை இதற்கு முன் இப்படியொரு நிகழ்ச்சியைக் கண்டிராது. அங்கிருந்து லூயி மவுண்ட்பேட்டன், இந்திய மற்றும் உலகப் பத்திரிகை களுக்கு கையில் குறிப்பேதும் இன்றி உறுதியாகவும் தெளிவாகவும், அவர் பற்றி விஷம் கக்கும் விமர்சகர்களும் கூட அஞ்சும் வகையிலும் சில விவரங்களைத் தெரிவித்தார். வரலாற்றின் மிக முக்கிய பிறப்புச் சான்றுகளில் ஒன்றான சிக்கல் மிகுந்த திட்டம் பற்றியும், புவிக்கோளில் உள்ள மூன்றாம் உலக மக்களுக்கு முன்னோடியான நாடாளுமன்றம் அமையப் போவது பற்றியும் அவர் எடுத்துரைத்தார்.

பிரிட்டனின் இந்தியப் பேரரசு வரலாற்றில் இரண்டாவது முறையாக ஒரு வைஸ்ராய் செய்தியாளர்கள் கூட்டம் நடத்தினார். இதுவே கடைசியான தாகவும் இருக்கும். யுஎஸ்எஸ்ஆர் (சோவியத் சோஷலிசக் குடியரசு), யுஎஸ் (அமெரிக்க ஐக்கிய நாடுகள்), சீனா, ஐரோப்பா, ஆகியவற்றைச் சேர்ந்த முந்நூறு பத்திரிகையாளர்கள் நிருபர்கள் இந்தியப் பத்திரிகைகளின் பிரதிநிதிகளுடன் கலந்திருந்தார்கள். பிராந்திய, சமயம் சார்ந்த, மொழிசார்ந்த பத்திரிகைகளைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தார்கள். இங்கே குவிந்த அனைவரும் வைஸ்ராயின் வார்த்தைகளை ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

மவுண்ட்பேட்டனைப் பொறுத்தவரை இந்த செய்தியாளர்கள் கூட்டம் புனிதமானது. தனது குறிப்பிடத்தக்க ஆற்றலைக் காட்டுவதற்கான கடைசி வாய்ப்பு. சரியாக இரண்டு மாதங்களுக்கு முன் ஒற்றை மனிதராக வந்து சாத்தியமில்லாததைச் சாதித்தார். இந்தியத் தலைவர்களோடு பேச்சு நடத்தினார். ஒரு ஒப்பந்தத்துக்கு அடிப்படை அமைத்தார்; இந்தியத் தலைவர்கள் ஒப்பந்தத்தை ஏற்கும்படியும் செய்தார்; லண்டனில் உள்ள அரசிடமும் எதிர்க்கட்சியிடமும் தனது திட்டத்துக்கு முழுமனதுடனான ஆதரவைப் பெற்றார். அதற்கான பாதையில் ஏற்படுத்தப்பட்ட பள்ளங்களைச் சுற்றி தனது சாமர்த்தியத்தாலும் ஓரளவு இருந்த அதிர்ஷ்டத்தாலும் கரைகளை அமைத்தார். கடைசி நடவடிக்கையாக சர்ச்சில் என்ற வயதான சிங்கத்தை அதன் குகையிலேயே சந்தித்து நகங்களை மடக்கிக் கொள்ளச் செய்தார். அவரது ஒப்புதலையும் பெற்றார்.

விண்ணதிரும் கரவொலியுடன் மவுண்ட்பேட்டன் தனது பேச்சை முடித்தார். பிறகு கேள்விகள் கேட்க அனுமதித்தார். அதைச் செய்ய அவருக்கு எந்தத் தயக்கமும் இல்லை. பிற்காலத்தில் இப்படி அவர் நினைவுகூர்ந்தார்: 'நான் தான் அங்கே இருந்தேன். ஒவ்வொரு கணத்திலும் நான் ஒருவன் மட்டுமே முழுவதுமாக நிறைந்திருந்தேன். விரல் நுனியில் அனைத்து விவரங்களையும் கொண்டிருந்த ஒரு மனிதரை முதன் முறையாகப் பத்திரிகையாளர்கள் சந்தித்தனர்.'

அணை போல் எழுந்து நின்ற கேள்விகளுக்கிடையே திடீரென்று கசிவு போல் ஒரு கேள்வி வெளிப்பட்டது. பெயர் தெரியாத அந்த இந்தியப் பத்திரிகை

*யாளரின் குரல் சபை முழுவதும் நிறைந்திருந்தது. பதிலுக்காகக் காத்திருந்த கடைசிக் கேள்வி அவருடையது. ஆறு மாதங்களுக்கு முன் அவரிடம் அளிக்கப்பட்ட குறுக்கெழுத்துப் போட்டிக் கட்டங்களில் மவுண்ட்பேட்டன் நிரப்ப வேண்டிய கடைசிக் கட்டமாகும் அது.*

*'சார், அதிகார மாற்றத்துக்கு வேகம் மிகவும் தேவை என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள் என்றால் நிச்சயமாக அதற்கான ஒரு தேதி உங்கள் மனதில் இருக்குமல்லவா?' அந்தக் குரல் கேட்டது.*

*'ஆம், நிச்சயமாக' மவுண்ட்பேட்டன் பதிலளித்தார்.*

*'ஒரு தேதியை நீங்கள் தெரிவு செய்துவிட்டால் அது எந்த தேதி சார்?' அந்த நிருபர் வலியுறுத்திக் கேட்டார்.*

*இந்தக் கேள்விகளை கவனித்த வைஸ்ராயின் மனம் விரைவாகப் பல கணக்குகளைப் போட்டது. உண்மையில் தேதி ஒன்றையும்அவர் தெரிவு செய்திருக்கவில்லை. ஆனால் அந்தத் தேதி விரைவில் இருக்கும் என்று மட்டும் நினைத்தார்.*

*'வேகத்தை அதிகரிக்க நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன். பிரிட்டிஷ் நாடாளு மன்றத்தின் கோடை கால ஓய்வுக்கு முன் இதற்கான மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்ற நிர்ப்பந்தம் செய்ய வேண்டியிருந்ததை நான் அறிவேன். எரிமலையின் விளிம்பில், கொளுத்தப்பட்ட வெடிகுண்டின் மேல், நாங்கள் அமர்ந்திருந்தோம். எப்போது குண்டு வெடிக்கும் என்பதை நாங்கள் அறியோம்' என்று பின்னர் அவர் நினைவு கூர்ந்தார். பயங்கரக் காட்சிகள் கொண்ட திரைப்படத்தில் வரும் ஆவி உருவங்கள் போல, கஹூதாவின் (Kahuta) கருகிய வீரர்கள் போல லூயி மவுண்ட்பேட்டனின் மனதில் நிழல்கள் தோன்றி மறைந்தன. இது போன்ற துயரங்கள் வெடிக்க ஆரம்பித்து விட்டால் இந்தியாவைக் காப்பாற்ற கடவுளாலும் முடியாது. அவர் விரைந்து செயல்பட வேண்டும். 3000 ஆண்டு வரலாற்றுக்கும் 200 ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சிக்கும் பிறகு, இந்தியாவுக்கும் குழப்பத்துக்கும் இடையே இருக்கப் போவது இன்னும் சில வாரங்கள் மட்டுமே என்று வைஸ்ராய் நம்பினார்.*

*பத்திரிகையாளர் நிரம்பி வழிந்த மண்டபத்தை அவர் கூர்ந்து பார்த்தார். எல்லோர் முகங்களும் அவரை நோக்கித் திரும்பியிருந்தன. பலத்த எதிர்பார்ப் புடன் நிலவிய அமைதியை, அறையில் பொருத்தப்பட்டு, அவர்கள் தலைக்கு மேல் சுற்றிக் கொண்டிருந்த விசிறிகளின், மரத்தாலான இறக்கை களிலிருந்து, விர்ரென வரும் சத்தம்தான் கலைத்துக் கொண்டிருந்தது. 'ஒட்டுமொத்த நிகழ்வுகளுக்கும் நாளே சூத்திரதாரி என்பதைக் காட்ட வேண்டும் என்று தீர்மானித்தேன்' பின்னாளில் அவர் கூறினார்.*

*'ஆம், அதிகார மாற்றத்திற்கு நான் ஒரு தேதியைத் தெரிவு செய்திருக்கிறேன்' அவர் பதிலளித்தார்.*

*இந்த வார்த்தைகளைச் சொல்லும்போதே நூற்பாலையில் சக்கரத்தைச் சுற்றி எண்ணற்ற நூலிழைகள் ஓடுவது போல அவரது மனதில் வாய்ப்பான பல தேதிகள் ஓடிக் கொண்டிருந்தன. செப்டம்பர் துவக்கத்திலா? செப்டம்பர் மத்தியிலா? ஆகஸ்ட் மத்தியிலா? திடீரென்று ஒரு திருப்பத்துடன் சக்கரம்*

நின்றது. சிறு பந்து உருண்டு பள்ளத்தில் விழுந்தது. மவுண்ட்பேட்டனின் கணநேர முடிவுக்கு இது மிகவும் பொருத்தமாக இருந்தது. அவரது வாழ்க்கையில் மிகப்பெரும் வெற்றி பெற்ற அந்த நாள் அவரது நினைவில் பசுமையாக இருந்தது. பர்மாவின் காடுகள் வழியே அவர் மேற்கொண்ட நெடிய போரின் முடிவில் ஜப்பான் பேரரசு நிபந்தனையின்றி சரணடைந்தது தான் அந்த நாள். ஜப்பான் சரணாகதியின் இரண்டாவது ஆண்டு என்பதைவிட புதிய ஜனநாயக ஆசியாவின் பிறப்புக்கான தேதியாக இது இருப்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கும்?

திடீரென்று ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்கால் அவர் குரல் கம்மியது. பர்மா காடுகளில் வெற்றியாளராக இருந்து இந்தியாவின் விடுவிப்பாளராக வந்துள்ள அவர் அறிவித்தார்:

'இறுதியாக இந்தியர்களின் கைகளுக்கு அதிகார மாற்றம் 15 ஆகஸ்ட் 1947இல் நடக்கும்'

இந்திய சுதந்திரத்திற்கான தேதியை அறிவிக்க தன்னெழுச்சியாக லூயி மவுண்ட்பேட்டன் எடுத்த முடிவு ஒரு குண்டு வெடிப்பு போல் இருந்தது. பிரிட்டனின் இந்தியா விஷயத்தில் மவுண்ட்பேட்டன் திடீரென்று இவ்வளவு விரைவாக திரைச்சீலையை இழுத்துவிடத் தயாராவார் என்று மக்களவைத் தாழ்வாரங்களிலோ, டவுனிங் தெருவிலோ, பக்கிங்காம் அரண்மனையிலோ ஒருவரும் ஐயுறவில்லை. டில்லியில் வைஸ்ராயின் மிக நெருங்கிய ஊழியர் களுக்குக் கூட அவர் என்ன செய்யப் போகிறார் என்பது தெரிந்திருக்கவில்லை. யாருடன் அவர் பல மணி நேரம் செலவழித்தாரோ அந்த இந்தியத் தலைவர் களுக்குக் கூட அவர் இவ்வளவு வேகமாக செயல்படுவார் என்பதற்கான குறிப்பு கிடைக்கவில்லை.

இந்தியாவின் சுதந்திரத்திற்கு 15 ஆகஸ்ட் என்ற தேதியை அவர் தேர்ந்தெடுத்தது பற்றி வேறெவரையும் விட வியப்பும் கிலியும் கொண்டது சோதிடர்கள் குழுதான். இவர்கள் தான் லட்சக்கணக்கான இந்துக்களின் வாழ்க்கையை ஆட்சி செய்கிறார்கள். இவர்களின் ஒடுக்குமுறையும் கொடுங்கோன்மையும் ஆங்கிலேயர்களும், காங்கிரசும், மகாராஜாக்களும் இணைந்து செய்ததை விட அதிகமானது. இந்தியாவின் சக்திவாய்ந்த தெய்வீக அமைப்பான ஜோதிடர்களின் பிரதிநிதிகளுடன் முதலில் கலந்தாலோசிக்காமல் விரும்பிய தேதியை அறிவித்ததன் மூலம் மவுண்ட்பேட்டன் மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்திருந்தார்.

சோதிடர்களின் அதிகாரத்துக்கும் ஆணைக்கும் கட்டுப்பட்டு அடிமை களாக வாழும் இந்தியர்கள் போல் உலகில் வேறெந்த மக்களும் இல்லை. இவ்வளவு பரந்த பகுதிகளில் அவர்களின் அதிகாரம் விரிந்திருப்பதும் வேறெங்கும் இல்லை. ஒவ்வொரு மகாராஜாவிடமும், ஒவ்வொரு கோயிலிலும், ஒவ்வொரு கிராமத்திலும், ஒன்று அல்லது இரண்டு ஜோதிடர்கள் இருந்தார்கள். இவர்கள் குட்டி சர்வாதிகாரிகள் போல சமூகத்தின் மீதும் குடியிருப்போர் மீதும் ஆதிக்கம் செலுத்தினார்கள். ஒரு சோதிடருடன் முன் கூட்டியே கலந்தாலோசிக்காமல் பயணம் செய்வதையோ, விருந்து உபசரிப்பதையோ, ஒப்பந்தம் செய்வதையோ, வேட்டைக்குச் செல்வதையோ,

புதுத்துணி அணிவதையோ, புது நகை வாங்குவதையோ, முடிதிருத்துவதையோ, திருமணம் செய்வதையோ, ஈமச்சடங்குகளுக்கு ஏற்பாடு செய்வதையோ லட்சக்கணக்கான இந்தியர்களில் எவரும் கற்பனை செய்தும் பார்க்க முடியாது.

தெய்வீகக் கட்டங்களைப் படித்து நடக்க இருக்கும் விஷயங்களை அறிந்து கூறும் சக்தி தங்களுக்கு இருப்பதாய் சோதிடர்கள் கூறிக்கொண்டதால், லட்சக்கணக்கான மக்கள் வாழ்க்கைக்கு எஜமானர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டார்கள். ஒரு குழந்தை அதிர்ஷ்டம் இல்லாத நட்சத்திரத்தில் பிறந்ததாக அவர்கள் அறிவித்து விட்டால் பெற்றோர்கள் அந்தக் குழந்தையைக் கைவிட்டு விடுவார்கள். தற்கொலை செய்து கொள்வதற்கு கிரகங்களின் சேர்க்கை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அனுகூலமாக இருக்கிறது என்றால் அந்த நேரத்தில் அதனைச் செய்யவும் பலர் தயாராக இருந்தார்கள். ஒரு வாரத்தின் எந்த நாட்கள் நல்லவை எவை நல்லவை அல்ல என்பதையும் அவர்களே தீர்மானித்தார்கள். எப்போதுமே ஞாயிற்றுக்கிழமை நல்ல நாள் இல்லை. வெள்ளிக்கிழமையும் இப்படித்தான். 1947 ஆகஸ்ட் 15 வெள்ளிக்கிழமை என்பதை சோதிடர் எவரின் உதவியுமின்றி நாட்காட்டியைப் பார்ப்பதன் மூலமே இந்தியாவில் உள்ள எவரும் அறியலாம்.

மவுண்ட்பேட்டனின் தேதி வானொலியில் அறிவிக்கப்பட்டவுடனேயே இந்தியா முழுவதும் உள்ள சோதிடர்கள் தங்களின் சோதிடக்கட்டங்களை ஆராயத் தொடங்கி விட்டனர். புனித நகரான பனாரசில் இருந்தவர்களும் தென் பகுதியைச் சேர்ந்த வேறு பலரும் ஆகஸ்ட் 15ஆம் தேதி மிகமோசமான நாள் என்று உடனடியாக அறிவித்து விட்டார்கள். 'மீளா நரகத்தில் நிரந்தரமாக வீழ்வதை விட மேலும் ஒரு நாள் பிரிட்டிஷாரின் ஆட்சியைத் தாங்கிக் கொள்ள இந்தியா ஆலோசனை கூறலாம்' என்று அவர்கள் தெரிவித்தனர்.

தேதி அறிவிப்பைக் கேட்டவுடன் கல்கத்தாவைச் சேர்ந்த சுவாமி மதமானந்தும் சோதிட நூல்களை ஆய்வு செய்தார். நவக்கிரகங்களைக் கொண்ட 'நவமன்ஷ' என்ற சோதிடக் கட்டத்தை எடுத்தார். ஒரு புள்ளியிலிருந்து அடுத்தடுத்ததாகப் பல வட்டங்கள் வரையப்பட்ட பெரிய தட்டு அது. இதன் மீது ஒரு ஆண்டின் நாள்களும் மாதங்களும், சந்திரன் சூரியன் ஆகியவற்றின் பாதைகளும், மற்ற கோள்களும், ராசி மண்டலக் குறியீடுகளும் புவிக்கோளின் விதியைத் தீர்மானிக்கும் 27 நட்சத்திரங்களின் நிலைகளும் குறிக்கப்பட்டிருந்தன. அதன் மையப்பகுதியில் உலக வரைபடம் ஒன்று இருந்தது. ஆகஸ்ட் பதினைந்துக்கு நேரே வந்து பொருந்தும் வரை தட்டின் மீதிருந்த வட்டங்களைச் சுற்றிக் கொண்டேயிருந்தார். அந்தத் தட்டின் மீதுள்ள இந்திய வரைபடத்திலிருந்து சக்கரத்தின் விளிம்பை நோக்கி பல கோடுகளை வரையத் தொடங்கினார். இதைச் செய்யும் போது அவர் திகில் உண்டாக்குவது போல் அமர்ந்திருந்தார். அவரது கணிப்புகள் ஒரு பேரழிவை உணர்த்தின. ஆகஸ்ட் 15 இல் இந்தியா மகர ராசியில் இருக்கும். இதன் இயல்பு என்னவென்றால் அனைத்து மைய சக்திகளுடனும் அடக்க இயலாத சண்டை செய்வதுதான். இதன் விளைவு பிரிவினையாக இருக்கும். மிகவும் மோசமான இன்னொரு விஷயம். அந்த நாள் நாசம் செய்யும் சனி கிரகத்தின் ஆட்சியில் இருக்கும். 'கழுத்தில்லாத கிரகம்' என்று சோதிடர்களால் கூறப்படும் ராகுவின்

பார்வையும் படுவதால் பெரும் தீங்கு விளையும். ஆகஸ்ட் 14ஆம் தேதி நள்ளிரவிலிருந்து ஆகஸ்ட் 15ஆம் தேதி முழுவதும், சனி, வியாழன், வெள்ளி ஆகிய அனைத்தும் கர்மஸ்தானத்தின் ஒன்பதாம் இடத்தில் கூடுகின்றன. ஆயிரக்கணக்கான அவரது சகாக்களைப் போலவே அந்த இளம் சோதிடரும் தனது சோதிடக் கட்டங்களிலிருந்து அழிவின் எல்லையைக் கண்டு பதை பதைத்தார். 'அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?' என்று ஆகாயத்தைப் பார்த்துப் புலம்பினார். கோள்களின் பாதை பற்றியே அவர் மனிதர்களுக்கு விளக்கினார்.

அசாம் மலைப்பகுதியில் பல ஆண்டுகள் யோகா செய்து தியானத்தில் இருந்து ஒரு கோயிலிலிருந்து தந்திரங்களைக் கற்ற ஒழுக்க சீலர் தான் என்றாலும் அந்த சோதிடர் சுய கட்டுப்பாட்டை இழந்தார். ஒரு சிறு காகிதத்தை எடுத்துக் கொண்டு அமர்ந்த அவர், கவனக்குறைவால் இந்த தெய்வக் குற்றப் பேரழிவுக்குப் பொறுப்பாகும் மனிதருக்குத் தனது அவசர வேண்டுகோளினை எழுதினார்.

'கடவுள் மீது அன்பு வைத்து, ஆகஸ்ட் 15 அன்று இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்காதீர்கள்.' வெள்ளம், வறட்சி, பஞ்சம், படுகொலைகள் ஏற்பட்டால் கிரகங்களால் சபிக்கப்பட்ட ஒரு நாளில் இந்திய சுதந்திரம் பிறந்ததே காரணமாகிவிடும்' என்று லூயி மவுண்ட்பேட்டனுக்கு அவர் எழுதினார்.

ஒன்பது

# வரலாற்றில் பெரும் சிக்கலான பிரிவு

### *புது டில்லி, ஜுன் 1947*

*வெகு காலத்திற்கு முன்னர் கூட இது போன்ற முயற்சி எதுவும் எப்போதும் நடந்ததில்லை. இதுவரை இது போன்ற முன் நிகழ்வுகளோ, வழிகாட்டுதல் களோ, அறிவுக்கெட்டியவரை கடந்த காலத்தில் இத்தகைய முறையோ இருந்ததில்லை. வரலாற்றில் பெரும் சிக்கலான மிகப்பெரிய பிரிவுச்சம்பவம் நடக்கப் போகிறது. 400 மிலியன் (40 கோடி) மக்களின் குடும்பங்களிடையே பிளவு ஏற்படப்போகிறது. பூமிப்பரப்பின் ஒரு சிறு பகுதியில் பல நூற்றாண்டு களாக ஒன்றாக வாழ்ந்து அவர்கள் சேமித்த சொத்துக்களும் வீட்டு உபயோகப் பொருள்களும் கூட பிரிக்கப்பட போகின்றன.*

*இந்தப் பிரிவுக்குரிய பத்திரங்கள் எழுதப்படுவதற்கான ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குச் சரியாக இன்னும் 73 நாட்களே இருந்தன. இதற்கான பணியில் நிலையாகவும், பரபரப்போடும் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் தேதி வாரியாக செய்ய வேண்டிய வேலைகளைக் குறித்து அச்சிட்ட காலண்டரை மவுண்ட்பேட்டன் அளித்திருந்தார். டில்லியில் உள்ள அனைத்து அலுவலகங் களிலும் இவற்றைப் பார்வையில் படும்படி வைக்கவும் அவர் உத்தரவிட்டார். குண்டு வெடிப்புக்கு எண்களை இறங்குவரிசையில் எண்ணுவது (கவுண்ட் டவுன்) போல, காலண்டரின் ஒவ்வொரு பக்க மையப்பகுதியிலும், பெரிய செஞ்சதுரக் கட்டத்துக்குள், ஆகஸ்ட் 15க்கு இன்னும் எத்தனை நாட்கள் இருக்கின்றன என்பது தெரியுமாறு எண் குறிக்கப்பட்டிருந்தது.*

*பிரமாண்டமான, கற்பனைக் கெட்டாத, சிக்கலான சொத்துப் பிரிவினைக் கான பொறுப்பு இரண்டு மனிதர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒரு வகையில் பிரிந்து செல்லும் இரு தரப்பினருக்கான வழக்கறிஞர்களாக இவர்கள் இருந்தனர். பொருத்தமான இவர்கள் இருவருமே அதிகாரிகள். இந்தியாவில் நூறாண்டு காலம் பிரிட்டிஷ் ஆட்சி இருந்த போது பொறுப்பிலிருந்த அதிகாரிகளிலேயே மிகச் சிறந்தவர்கள் என்று சொல்ல முடியாதென்றாலும் குறைந்தபட்சம் அழகிய மலர்கள் போல இவர்கள் இருந்தனர்.*

*இவர்கள் இருவரும் ஒரே மாதிரியான அரசு இல்லங்களில் வாழ்ந்தவர்கள். அருகிலேயே இருந்த அலுவலகத்துக்கும் போருக்கு முந்தைய அமெரிக்க செவ்ரோலெட் கார்களிலே சென்றனர். ஒரே அளவில் ஊதியம் பெற்றனர். ஓய்வுக்கால நிதிக்கும் (Pension) இவர்கள் மாதந்தோறும் சம அளவு தொகை யையே செலுத்தினார்கள். இவர்களில் ஒருவர் இந்து. மற்றொருவர் முஸ்லீம்.*

ஜூன் முதல் ஆகஸ்ட் வரை ஒவ்வொரு நாளும், தபால் பெட்டிகளுடனும், அழகான கையெழுத்துக் கொண்ட சிவப்பு நாடாவால் இறுக்கி உறுதியாகக் கட்டப்பட்ட கோப்புகளுடனும், பிரிட்டிஷ் ஆசிரியர்களின் வழிகாட்டுதல் படி, செயல்களில் ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்த முஸ்லீமான சவுத்ரி முகமது அலியும், இந்துவான எச் எம் படேலும், தங்கள் நாட்டு மக்களின் பொருள்களையும், அசையும் சொத்துக்களையும் பாகப்பிரிவினை செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர். கடைசி சோகமாக அவர்கள் இந்தியாவின் துண்டு துக்காணிகளை பொட்டலங் கட்டியது தங்களின் காலனி யாதிக்க மொழியான ஆங்கிலத்தில் தான். குழுக்கள், துணிக்குழுக்கள் என்ற பெயரில் நூற்றுக்கும் அதிகமான அதிகாரிகள் பணி செய்து அறிக்கைகளை இவர்களிடம் அளித்தனர். இவர்களின் பரிந்துரைகள் இறுதி ஒப்புதலுக்காக வைஸ்ராய் தலைமையிலான பிரிவினைக் கவுன்சிலுக்கு அனுப்பப்பட்டன.

தொடக்கத்திலேயே எல்லாவற்றுக்கும் மேலாக மிகவும் மதிப்புள்ள சொத்தான 'இந்தியா' என்ற பெயருக்கு காங்கிரஸ் உரிமை கோரியது. அவர்களின் புதிய ஆட்சிப்பகுதிக்கு 'ஹிந்துஸ்தான்' என்று பெயரிடுவதற்கான யோசனையை காங்கிரஸ் நிராகரித்தது. பாகிஸ்தான் பிரிந்து செல்வதால் இந்தியா என்கிற பெயரும் ஐ. நா. போன்ற அமைப்புகளில் இந்தியாவுக்குரிய இடமும் தங்களுடனேயே இருக்க வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தி னார்கள்.

பெரும்பாலான (விவாகரத்து) பிரிவினை வழக்குகள் போலவே இரு தரப்பினருக்கிடையே கசப்பான வாதங்கள் எழுந்தது பணம் பற்றி தான். பிரிட்டனால் விட்டுச் செல்லப்படும் என்ற கடன் தொகை விஷயம்தான் மிக முக்கிய இடம் பெற்றது. இந்தியாவைச் சுரண்டுகிறார்கள் என பல பத்தாண்டு களாகக் குற்றம் சாட்டப்பட்ட பிரிட்டன், பழிவாங்கப்பட்டதாகக் கூறப்படுவோருக்கு ஐந்து பில்லியன் (500 கோடி) டாலர் கடனை வைத்து விட்டுத்தான் இந்திய சாகசப் பயணத்தை முடித்துக் கொள்ளப்போகிறது. போர்க்காலத்தில்தான் இவ்வளவு பெரும் தொகை செலவானது. போரில் கிடைத்த வெற்றிக்கு பிரிட்டன் கொடுத்த விலையின் ஒரு பகுதிதான் இது. இதனால் அந்நாடு திவாலானது. இப்போது தொடங்கியுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கைக்கும் அதுதான் காரணம்.

ஸ்டேட் வங்கிகளில் இருந்த ரொக்கம், பேங்க் ஆஃப் இந்தியாவின் பெட்டகங்களில் பாதுகாக்கப்பட்ட தங்கக்கட்டிகள், அழுக்கடைந்த சில ரூபாய் நோட்டுகள், மனிதர்களை வேட்டையாடும் நாகா பழங்குடியினர் களுக்கிடையே குடிசையில் வாழும் மாவட்ட ஆணையரின் பெட்டியில் உள்ள சிறு ரொக்கம், அஞ்சல் தலைகள் போன்ற சொத்துக்களையும் பிரிக்க வேண்டியிருந்தது.

எளிதில் வசப்படாத பெரும் பிரச்சனை இது என்பது நிரூபணமானது. இதற்கு ஒரு தீர்வு காணும் வரை இங்கேயேதான் இருக்க வேண்டும் என்று, எச்.எம்.படேலையும், முகமது அலியையும் சர்தார் படேலின் படுக்கை அறைக்குள் தள்ளி பூட்டி வைக்கும் வரை பிரச்சனைக்குத் தீர்வு ஏற்படவில்லை. லாகூர் கடைவீதியில் வியாபாரிகள் சச்சரவு செய்து ஒரு முடிவுக்கு வருவதுபோல், கடைசியாக இருவரும் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர் இதன்படி, வங்கியில் உள்ள ரொக்கம், ஸ்டெர்லிங் சேமிப்பு ஆகியவற்றில்

பாகிஸ்தான் 17½% பெறும். இதற்குப் பதிலாக இந்தியாவின் தேசியக் கடனில் 17½% பாகிஸ்தான் ஏற்கும்.

இந்தியாவின் பரந்துபட்ட நிர்வாக அமைப்பில் உள்ள அசையும் சொத்துக்களில் இந்தியாவுக்கு 80% பாகிஸ்தானுக்கு 20% என்று பிரிக்கப்பட வேண்டும் என்றும் கூட அவர்கள் இருவரும் பரிந்துரை செய்தனர். இந்தியா முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் நாற்காலிகள், மேசைகள், துடைப்பங்கள், தட்டச்சு எந்திரங்கள் போன்றவற்றை எண்ணிக் கணக்கிடுவதும் தொடங்கியது. இதன் விளைவாகக் கிடைத்த பட்டியல்களில் சில சுவாரஸ்யமானவை. உலகிலேயே மிகவும் பஞ்சத்தில் அடிபட்ட நாட்டில் உணவு மற்றும் வேளாண்மைத் துறையில் இருந்த அசையும் சொத்துக்களை இதற்கு உதாரணமாகக் காணலாம். குமாஸ்தாக்களின் மேசைகள் 425, பெரிய மேசைகள் 85, அதிகாரிகளின் நாற்காலிகள் 85, சாதா நாற்காலிகள் 850, தொப்பி மாட்டும் ஸ்டாண்டுகள் 50, இவற்றிலும் கண்ணாடி பொருத்தியவை 6, புத்தக அலமாரிகள் 130, இரும்பு அலமாரிகள் 4, மேசை விளக்குகள் 20, தட்டச்சு எந்திரங்கள் 170, விசிறிகள் 120, கடிகாரங்கள் 120, மிதிவண்டிகள் 110, மைக் கூடுகள் 600, ஊழியர் கார்கள் 3, சோஃபாசெட் 2, கழிவறைக்குடுவைகள் 40.

பொருள்களைப் பிரிக்கும் விஷயத்தில் வாக்குவாதங்கள், ஏன் சண்டைகள் கூட நடந்தன. தங்களின் எதிரி சமூகத்தினருக்கு ஒதுக்கப்பட்ட நல்ல தட்டச்சு எந்திரங்களை ஒளித்து வைக்கவும், உடைந்து போன மேசைகள் நாற்காலிகளுக்குப் பதிலாக புதியவற்றை மாற்றி வைக்கவும் துறைத் தலைவர்கள் முயற்சி செய்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் மீது அதிகாரம் செலுத்திய லினன் சூட் அணிந்த கவுரவம் மிக்க இணைச் செயலாளர்களும் சில அலுவலர்களும் தரகர்கள் போல் ஆகிவிட்டனர். மைக்கூடுக்கு மாற்றாக தண்ணீர் ஜாடி, தொப்பி ஸ்டாண்டுக்கு மாற்றாகக் குடை ஸ்டாண்ட், குண்டூசிகள் செருகும் 125 டப்பாவுக்குப் பதிலாக ஒரு கழிவறைக் குடுவை என அவர்கள் பேரம் பேசினார்கள். அரசு இல்லங்களில் இருந்த தட்டுகள், வெள்ளிப்பாத்திரங்கள், ஓவியங்கள் இவற்றைப் பங்கிடுவதற்கான வாக்கு வாதங்கள் உக்கிரமாக இருந்தன. இருப்பினும் ஒன்று மட்டும் விவாதங்களிலிருந்து தப்பித்தது. ஒயின் கிடங்குதான் அது. இவை அனைத்தும் இந்துவின் இந்தியாவுக்கே சென்றன. இதற்குப் பதில் முஸ்லீமின் பாகிஸ்தானுக்கு கணிசமான தொகை கிடைத்தது.

குறுகிய மனப்பான்மையும் அற்பத்தனமும் கொண்ட பிரிவினைகள் சில சமயங்களில் மலைப்பை ஏற்படுத்தின. லாகூரில் காவல்துறை கண்காணிப்பாளர் பேட்ரிக் ரிச் (Patrick Rich) அவரது கருவிகளை அவரின் துணை அதிகாரிகளாக இருந்த இந்து முஸ்லீம் அதிகாரிகளுக்குப் பிரித்தளித்தார். காலுறைகள், தொப்பிகள், துப்பாக்கிகள், லத்திகள் ஆகியவற்றைப் பங்கிட்டுக் கொடுத்தார். எஞ்சியிருந்தவை காவல்துறை பேண்டுவாத்தியக் குழுவின் இசைக்கருவிகள் தான். இவற்றை ரிச் பங்கிடத் தொடங்கினார். பாகிஸ்தானுக்கு ஊதுகுழல்; இந்தியாவுக்கு ட்ரம் (drum); பாகிஸ்தானுக்கு ட்ரம்பெட் (trumpet), இந்தியாவுக்கு சிம்பால்ஸ் (Cymbals) எனும் தாளக்கருவி. ட்ரம் போன் (trombone) எனும் கருவி மட்டும் எஞ்சியிருந்தது. அவருக்கு முன்னால் கண்களையே நம்ப முடியாத காட்சி நிகழ்ந்தது. பல ஆண்டு காலம் தோழர்களாக இருந்தவர்கள், கடைசி

ட்ராம்போன் எந்த ஆட்சிப் பகுதிக்கு என்பதைத் தீர்மானிக்க இப்போது சண்டையில் இறங்கி விட்டார்கள்.

கடற்படையில் உயிரிழந்த மாலுமிகளின் விதவை மனைவிகளுக்கு யார் ஓய்வூதியம் வழங்குவது என்பதற்கான வாதங்களில் நாட்கள் பல கழிந்தன. முஸ்லீம் விதவையர் எங்கிருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் பாகிஸ்தான் இதை வழங்கும் என எதிர்பார்க்க முடியுமா? பாகிஸ்தானில் இருக்கும் இந்து விதவையர்க்கு இந்தியா ஓய்வூதியம் அளிக்குமா? இந்தியாவிலிருந்த 18,077 மைல் நீளமுள்ள சாலை களில் பாகிஸ்தானுக்குள் அமைந்தது 4913 மைல் சாலைகள். இதே போல் 26,421 மைல் தூர ரயில்வே பாதைகளில் பாகிஸ்தானுக்குக் கிடைத்தது 7112 மைல் தூர பாதைகள். நெடுஞ்சாலைத் துறையின் புல்டோசர்கள், கைவண்டிகள், மண்வெட்டிகள், ரயில்வே துறையின் என்ஜின்கள், பயணப்பெட்டிகள், சரக்குப் பெட்டிகள் ஆகியவற்றை விதிப்படி 80/20 என்ற சதவீதத்தில் பிரித்துக் கொள்வதா? அல்லது ஒவ்வொரு தேசமும் பெற்றுள்ள சாலைகள், ரயில்வே பாதைகள் சதவீத அடிப்படையில் பிரித்துக் கொள்வதா?

இந்தியாவின் நூலகங்களில் இருந்த புத்தகங்களைப் பிரிப்பதிலும் கசப்பான வாக்குவாதங்கள் எழுந்தன. என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா என்ற கலைக் களஞ்சியங்களின் தொகுதிகளும் மத ரீதியில் பிரிக்கப்பட்டு, இரண்டு ஆட்சிப் பகுதிகளும் ஆளுக்கொரு தொகுதியாக மாற்று எண்முறையில் (ஒரு பகுதியினருக்கு ஒன்று, மூன்று, ஐந்து... எனும் தொகுதிகளும் மறு பகுதியினருக்கு இரண்டு நான்கு ஆறு... எனும் தொகுதிகளும் என்பதாக. மொ-ர்) பிரித்துக் கொள்ளப்பட்டன. சொல்லகராதிகள் இரண்டாக்கப்பட்டு முதல் பகுதியான 'ஏ'யிலிருந்து 'கே' வரை இந்தியாவுக்கு ; மற்றொரு பகுதி பாகிஸ்தானுக்கு என்று பிரிக்கப்பட்டது. ஏதாவது ஒரு புத்தகத்தில் ஒன்றே ஒன்று மட்டும் இருந்தால் இதன் மீது இயற்கையில் யாருக்கு ஆர்வம் அதிகம் என்பதைக் கணக்கிட்டு அவர்களுக்கு வழங்கும் பொறுப்பு நூலகர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆலிஸ் இன் ஒண்டர்லேன்ட் அல்லது உதரிங் ஹைட்ஸ் (Wuthering Heights) என்பது போன்ற நூல்களில் எந்த ஆட்சிப் பகுதிக்கு இயற்கையில் பேரார்வம் என்பது பற்றி அறிவுஜீவிகளுக்கிடையே கடுமையான வாக்குவாதங்கள் எழுந்தன.

சில பொருள்களைப் பிரிப்பது அவ்வளவு எளிதாய் இருக்கவில்லை. நாட்டுப் பிரிவினையின் மூலம் தற்போதுள்ள உளவுத்துறையின் பொறுப்புகள் எந்த வகையிலும் குறைக்கப்பட மாட்டாது என்று பொருள் பொதிந்த முன்யோசனையுடன் உள்துறை கருத்து தெரிவித்தது. இந்தத் துறையிலிருந்து ஒரு கோப்பினையோ ஒரு மைப்புட்டியையோ பாகிஸ்தானுக்கு வழங்க அதன் அதிகாரிகள் உறுதியாக மறுத்து விட்டார்கள்.

தேசத்தின் அடையாளமாக இருக்கும் இன்றியமையாத இரண்டு உரிமைச் சின்னங்களான அஞ்சல் தலைகளையும், பண நோட்டுகளையும் அச்சடிக்க துணைக்கண்டத்தில் ஒரே ஒரு அச்சகம் தான் இருந்தது. எதிர்கால அண்டை நாட்டுக்காரர்களுடன் இதனைப் பகிர்ந்து கொள்வதற்கு இந்தியர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் ஏராளமாகக் குவிக்கப்பட்டிருந்த இந்திய ரூபாய் நோட்டுகள் மீது 'பாகிஸ்தான்' என்று ரப்பர்ஸ்டாம்ப் மூலம் முத்திரை பதித்து

புதிய நாட்டுக்கான தற்காலிகப் பணநோட்டுகளைத் தயாரிக்கும் பணியில் ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள் ஈடுபட்டனர்.

இந்தியாவின் சொத்துக்களைப் பிரித்தபோது தவிர்க்க முடியாமல் அதன் முந்தைய குறைபாடுகளும் வெளிப்பட்டன. பாகிஸ்தானுக்கு ஒதுக்கப்பட்ட கிழக்கு வங்கத்தில், 1947இல் 70,000 டன் அரிசியும், 30,000 டன் கோதுமையும் பற்றாக்குறையானது. சிந்து மாகாணத்தின் மேற்குப் பகுதியில் உபரியாக இருந்த 11,000 டன் அரிசி ஏற்கெனவே டில்லிக்கு அனுப்பப்பட்டிருந்தது. இதனைத் திருப்பித் தருமாறு இந்திய அரசிடம் அந்தப் பகுதி முஸ்லீம்கள் மன்றாடினார்கள். ஆனால் அது கிடைக்கவில்லை; இதற்குக் காரணம் இந்துக்களின் குறுகிய மனப்பான்மை அல்ல. இந்தியாவின் வருந்தத்தக்க எதார்த்த நிலைமையே, ஏற்கெனவே அது தின்று தீர்க்கப்பட்டிருந்தது.

அதிகாரிகள் தவிர தீவிரவாதிகளும் தங்கள் வழியில் சில உரிமைகளைக் கோரினார்கள். மொகலாயர்களால் கட்டப்பட்டதால் தாஜ்மகாலைப் பெயர்த்து பாகிஸ்தானுக்குக் கப்பலேற்ற வேண்டும் என்று முஸ்லீம்கள் விரும்பினார்கள். 25 நூற்றாண்டுகளுக்கு முன் சிந்து நதியின் கரைகளிலிருந்தே தங்களின் புனித வேதங்கள் இயற்றப்பட்டன என்பதால், முஸ்லீம்களின் இந்தியாவில் மையப்பகுதியில் ஓடும் சிந்து நதி தங்களுக்குத்தான் சேர வேண்டும் என்று இந்துமத சாதுக்கள் வற்புறுத்தினர்.

பல்லாண்டு காலமாகத் தங்களை ஆட்சி செய்த ஏகாதிபத்திய சக்திகளுடைய ஆடம்பரத்தின் அடையாளங்களாக இருந்தவற்றைப் பகிர்ந்து கொள்வதிலும் இரண்டு ஆட்சிப்பகுதியினரும் மிகுந்த ஆர்வம் காட்டினர். வறட்சி மிகுந்த தக்காண பீடபூமியிலும் பேரரசின் பெருமைச் சின்னமாக கடந்து செல்லும் தங்கமும் வெள்ளியும் கலந்த வைஸ்ராயின் ரயில் பெட்டிகள் இந்தியாவிடம் அளிக்கப்பட்டன. இந்திய ராணுவத் தளபதி மற்றும் பஞ்சாப் கவர்னரின் கார்கள் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டன.

அனைத்துக்கும் மேலாக குறிப்பிடத்தக்க பாகப்பிரிவினை வைஸ்ராய் மாளிகையின் குதிரை லாயத்தில் நடந்தது தான். பிரச்சனை குதிரைகள் இழுக்கும் பனிரெண்டு வண்டிகள் பற்றியதுதான். பகட்டான ஆடம்பரத்தைக் காட்டும் வகையில் தங்கம் வெள்ளி ஆகியவற்றால் கைத்திறன் காட்டி வடிவமைக்கப் பட்ட சித்திர வேலைப்பாடுகள், பளபளக்கும் கடிவாளங்கள், சேணங்கள், செந்தூர வண்ண மெத்தை இருக்கைகள் அவற்றில் இருந்தன இவையெல்லாம் பிரிட்டிஷ் ராஜ்யத்தில் இருந்த இந்தியக் குடிமக்களுக்கு ஒரு பக்கம் வியப்பையும் மறுபக்கம் வெறுப்பையும் ஏற்படுத்தின. எல்லா வைஸ்ராய்களும், இந்தியப் பயணம் செய்த எல்லா நாட்டுத் தலைவர்களும், இந்தியாவைக் கடந்து சென்ற எல்லா விருந்தினர்களும் இவற்றில் ஒன்றில் அமர்ந்து தான் தலைநகரில் பவனி வந்தார்கள். தங்கத் தகடு கொண்ட ஆறு வண்டிகள் முறைப்படி வைஸ்ராய்க்கு உரியவை. வெள்ளித் தகட்டினால் ஆன மற்ற ஆறு வண்டிகளில் அரசுரிமை பாதியளவே இருந்தது. இந்த வாகன செட்டுகளைப் பிரிப்பது துயரமான தாகவே இருக்கும். எனவே ஒரு ஆட்சிப் பகுதிக்கு தங்கத் தகடு வண்டிகளையும் மற்றொன்றுக்கு வெள்ளித் தகடு வண்டிகளையும் அளிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

இந்த அரச வாகனங்களில் எந்தப் பகுதிக்கு எந்த செட்டினை அளிப்ப தென்பதை, மக்களிடையே ஆழப்பதிந்திருந்த பண்டைய முறையில் அதாவது நாணயத்தைச் சுண்டிப் போட்டு தீர்மானிக்கலாம் என்று மவுண்ட் பேட்டனின் உதவியாளரான லெப்டினன்ட் கமாண்டர் பீட்டர் ஹோவஸ் (Peter Howes) யோசனை கூறினார். பளபளக்கும் நாணயம் ஆகாயத்தில் சுண்டியெறியப் படுவதை இவருடன் சேர்ந்து, பாகிஸ்தான் மெய்க்காவல் படைக்குப் புதிய தளபதியாக நியமிக்கப்பட்ட மேஜர் யாகூப் கானும், (Yacoub khan) வைஸ்ராயின் மெய்க்காவல் படை தளபதி மேஜர் கோவிந்த் சிங்கும் கவனித்தனர்.

'தலை!' கோவிந்த் சிங் உரக்கக் கூவினார்.

அந்த நாணயம் லாயத்தின் முற்றப்பகுதியில் ஒலியெழுப்பியபடி விழுந்தது. மூன்று பேரும் அந்த நாணயத்தைப் பார்க்கக் குனிந்தார்கள். சீக்கிய மேஜரிடமிருந்து ஆர்வக்குரல் பிறந்தது. புதிய சோஷலிச இந்தியாவின் தலைவர்கள் தங்களின் தலைநகர வீதிகளில் உலா வருவதற்கு, இந்தியாவை ஆண்ட ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் தங்க வாகனங்களைத் தருவதென்று, அதிர்ஷ்டம் முடிவு செய்து விட்டது.

பின்னர் ஒவ்வொரு செட் வண்டிகளுக்கும் உரிய சேணங்கள், சவுக்குகள், வண்டியோட்டியின் பூட்ஸ்கள், விக் (Wig) குகள், சீருடைகள் என அனைத்தையும் ஹோவஸ் பிரித்தளித்தார். இந்தப் பிரிவினையின் இறுதியில் ஒரு பொருள் மிஞ்சியது. வைஸ்ராயின் போஸ்ட் ஹார்ன் எனும் இசைக்கருவிதான் அது. பளபளப்பான இந்தக் கருவி குதிரைகளை வழி நடத்த வண்டி யோட்டிகளால் பயன்படுத்தப்பட்டது அனைத்து வைஸ்ராய் அலுவலகங் களிலும் இத்தகைய ஹார்ன் ஒன்றே ஒன்றுதான் இருக்கும்.

அந்த இளம் கடற்படை அதிகாரி ஒரு கணம் யோசித்தார். இந்தக் கருவியை இரண்டாகப் பிரித்தால் எதிலிருந்தும் ஒலியெழாது. வேண்டுமானால் மீண்டும் ஒரு முறை நாணயத்தைச் சுண்டி முடிவு செய்யலாம். திடீரென்று ஹோவஸுக்கு நல்லதொரு யோசனை உதித்தது.

தனது சகாக்களிடம் அந்த யோசனையை அவர் விவரித்தார். 'இந்தக் கருவியைப் பிரிக்க முடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள். இதற்கு ஒரே ஒரு தீர்வுதான் இருப்பதாக நான் நினைக்கிறேன். ஹாரனை நானே வைத்துக் கொள்கிறேன்' என்றார் அவர்.

ஒரு புன்னகையுடன் ஹாரனைத் தனது கக்கத்தில் இடுக்கிக் கொண்ட ஹோவஸ் குதிரை லாய முற்றத்திலிருந்து புறப்பட்டார்.

அந்தக் கொதிக்கும் கோடை வாரங்களில் புத்தகங்கள், வங்கிக் கணக்குகள், அதிகார வர்க்கத்தினரின் நாற்காலிகள் போன்றவை மட்டும் வகைப்படுத்தப் பட்டு பிரிவினை செய்யப்படவில்லை. பல்லாயிரக்கணக்கான மக்களும் பிரிக்கப்பட்டார்கள். இந்தியாவின் பெரிய ராணுவம் போலிருந்த அரசு ஊழியர்கள், ரயில் பாதைத் தலைவர்கள், இளநிலை அமைச்சர்கள் தொடங்கி, இந்திய நிர்வாகத்தின் களைகள் போல் வளர்ந்திருந்த குறுமதி கொண்ட குமாஸ்தாக்கள், அவர்களிடம் வெறுப்புக் கொண்டிருந்த துப்புரவு பணி யாளர்கள், குற்றேவல் செய்வோர், கடைநிலை ஊழியர்கள் வரை பிரிக்கப்

பட்டனர். வேலை செய்ய விரும்புவது இந்தியாவிலா பாகிஸ்தானிலா என்று விருப்பம் தெரிவிக்க இவர்கள் அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப் பட்டது. பின்னர் இவர்கள் மனிதக் குவியல்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரு ஆட்சிப் பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மூட்டைக்கட்டி அனுப்பப்பட்டனர்.

இந்தியாவில் பிரிட்டன் நிர்வாகம் பெருமையுடன் உருவாக்கியிருந்த ராணுவத்தைச் சேர்ந்த 1.2 மிலியன் (12 லட்சம்) இந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லீம்கள், ஆங்கிலேயர்கள் சம்பந்தமான பிரிவினையும் மிகவும் வேதனை அளிப்பதாக இருந்தது.

பிரிவினையைத் தொடர்ந்து அடுத்த சில வாரங்கள் துணைக்கண்டத்தில் அமைதி சீர்குலைவது உறுதி. இதிலிருந்து பாதுகாக்க இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பொதுவாக இருக்கும் வகையில் ராணுவத்தை ஓராண்டு காலத்துக்குப் பிரிட்டிஷ் சுப்ரீம் கமாண்டர் பொறுப்பில் வைத்திருக்க அனுமதிக்குமாறு ஜின்னாவிடம் மவுண்ட்பேட்டன் கேட்டுக் கொண்டார். ஆனால் ஜின்னா மறுத்து விட்டார். ஒரு நாட்டின் சுயாதிபத்தியத்துக்கு ராணுவம் இன்றியமையாத ஒரு உடைமை என்று அவர் கூறிவிட்டார். ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குள் பாகிஸ்தானுக்கான ராணுவம் அதன் எல்லைக்கு உள்ளே இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். மூன்றில் இரண்டு பங்கு இந்தியாவுக்கு ஒரு பங்கு பாகிஸ்தானுக்கு என்று துணைக் கண்டத்தின் மற்றெல்லாப் பொருள்களும் பிரிக்கப்படுவது போல இந்திய ராணுவ வீரர்களும் பிரிக்கப்பட வேண்டும். பழங்கதைகளுக்கு விடை கொடுக்க வேண்டும் என்பதும் அவரது எண்ணம்.

கங்காதின், துள்ளி விளையாடும் ஜென்டில்மேன் ரேங்கர்ஸ், மண்டாலே, வங்காளத்தின் நைட் ரன்னர்ஸ், ஒயிட் ஃபீதர்ஸ், வங்கான வீரர்களை பாறை மேல் உள்ள குறுகிய வழிகளில் ஏறிச் செல்ல வற்புறுத்தும் கேரி கூப்பர் என்ற வார்த்தைகளே இந்திய ராணுவத்தின் உணர்ச்சி பூர்வமான சித்திரங்களை மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்திடப் போதுமானவை. வெப்பம் இல்லாத வகுப்பறைகளிலிருந்து தொலைதூரத்தில் மழையால் நனைந்த சதுப்பு நிலங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஆங்கிலேயப் பள்ளிக் குழந்தை களுக்கு, இந்திய ராணுவத்தின் படைப்பிரிவுகளான ஸ்கின்னர், ஹாட்சன், ப்ரோபின், எல்லைப்புற ரைஃபிள் படை, சீக்கியப் படை, ராஜபுத்ர துப்பாக்கிப் படை, காலாட் படை ஆகிய அனைத்தும் பல தலைமுறைகளாகப் பொருள் ஒற்றுமையுடன் அதன் புகழும் சாகசமும் தெரிந்திருந்தன. (ஸ்கின்னர், ஹாட்சன், ப்ரோபின் என்ற பிரிட்டன் நாட்டுப் படைப்பிரிவுகளின் பெயர்களே இந்தியாவிலும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் பயன்படுத்தப் பட்டதால் அந்த நாட்டுப் பள்ளிச் சிறார்களுக்கும் பெயர் ஒப்புமை விளங்கிக் கொள்ளக் கூடியதாகவே இருந்தது - மொ-ர்)

இந்தியா பற்றிய விக்டோரியா ராணியின் கொள்கைக்கு வேறெதையும் விட இந்திய ராணுவம் ஒரு மாதிரி வடிவமாக இருந்தது. கருநிறமும் துணிவும் மிக்க அதன் வீரர்கள் வெகுதொலைவில் இருந்த ராணிக்கு நம்பிக்கை மிக்க விசுவாசிகளாக விளங்கினர். இவர்களுக்கு வெல்லற்கரிய இளம் ஆங்கிலேயர் கள் தலைமை தாங்கினர். பத்தானியர்களின் துப்பாக்கிக் குண்டுகளை நிமிர்ந்து ஏற்றனர். விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கினர். ஒரு தந்தையைப் போல்

தங்கள் வீரர்களிடம் கண்டிப்பாகவும் அதே நேரம் அன்போடும் நடந்து கொண்டார்கள். உணவு விடுதியில் இளைஞர்கள் மது அருந்தினர். அதன் நடவடிக்கைகள், ராணுவ வீரர்களின் துணிச்சல் மிகு செயல்கள், ஆகியவை பிரிட்டிஷ் இந்தியாவின் சாகசக் கதைகளுக்கு வலுவூட்டின.

பசியின் கொடுமையை நன்கு அறிந்திருந்ததால், ஆற்காடு சண்டையின் போது தங்களுக்குரிய கடைசி உணவையும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குக் கொடுத்துதவிய காலாட்படை வீரர்களான சிப்பாய்கள்; 1857இல் கலகக் காரர்கள் மீது தாக்குதல் நடத்த டில்லி நோக்கி விரைந்த குதிரை வீரர்கள்; கல்லிபோலி (Gallipoli) கடற்கரையில் ஆதிக்கம் செலுத்திய துருக்கியர்களை எதிர்த்துப் போரிட கடல் திட்டுப்பகுதிக்கு நீந்திச் சென்ற 6வது கூர்க்காப் படையினர்; 11வது இளவரசர் ஆல்பெர்ட் விக்டரின் தனிப்பட்ட குதிரைப் படையினர், 2வது ராயல் குதிரைப்படையினர், மேற்குப் பாலைவனப் பகுதியில் உள்ள மெக்கிலி (Meikili) யில் சரணடையுமாறு பிறப்பித்த ஃபீல்ட் மார்ஷலின் உத்தரவைப் புறந்தள்ளி, ரோமலின் (Rommel) படைவீரர்களை முன்னேறாமல் தடுத்து நிறுத்தியதன் மூலம் எகிப்தியர்கள் அனைவரையும் பாதுகாத்த 18வது குதிரைப்படையினர் ஆகியோர் இந்திய ராணுவத்தில் இடம் பெற்றிருந்தனர்.

இந்த ராணுவம் கிழக்கிந்திய கம்பெனிக்கு சேவை செய்யும் தனியார் ராணுவ அமைப்புகளின் தொகுப்பாகத் தான் துவக்கத்தில் இருந்தது. தனிப்பட்ட ராணுவத்தை உருவாக்கிய, கடற்கொள்ளை நடத்தும் கூலிப்படையினர் தான் முற்காலத்தில் இதன் தலைவர்களாகவும் இருந்தனர். பின்னர் இந்தப்படைகளை கம்பெனிக்கு வாடகைக்கு விட்டனர். காலப்போக்கில் இவர்களில் பலர் பேராசைக்காரர்கள், மூளையற்ற காட்டுமிராண்டிகள் என்று பெயர் பெற்றனர். இவர்கள் பிரதானமாக செல்வம் சேர்ப்பதிலேயே ஆர்வமாக இருந்தனர். 'ஹாட்சன்ஸ் ஹார்ஸ்' என்ற படையின் நிறுவனரான வில்லியம் ஹாட்சன் மொடா குடியர்; அடுத்தவர் துன்பம் கண்டு மகிழ்பவர்; துணிச்சலான மனிதர். உணவு விடுதியில் பொய்க்கணக்கு எழுதியும், தனது படையில் நியமித்த பணக்கார இந்திய உதவியாளர்களிடம் பெரும் தொகையைக் கடன்வாங்கியும் தனது வருவாயைக் கூட்டிக் கொண்டார். வாங்கிய கடனைத் திருப்பித் தரும் எண்ணம் இவருக்கு இருந்ததில்லை. அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தனது இளைய மகனுடன் சேர்ந்து முட்டாள் தனமான காரியம் செய்தார். கடனைத் திருப்பிக் கேட்பதற்காக அவர்கள் இருவரும் ஹாட்சனின் கதவைத் தட்டினர். ஹாட்சன் துப்பாக்கி மூலம் கடனைத் தீர்த்தார். அதிகாரியையும் அவரின் பையனையும் சுட்டுக் கொன்றார். 1858 மார்ச் 11இல் லக்னோவில் ஒரு வீட்டில் சிக்கியிருந்தவர்களை மீட்க முயற்சி செய்த போது அவர் இறந்து போனார். அவரது அச்சம் தரும் படையினர் அவரைக் கல்லறைக்குள் வைத்து விட்டு இப்படிக் குறிப்பிட்டிருந்தனர்: 'ஹாட்சன்ஸ் ஹார்ஸ்' படையின் தளபதியான வில்லியம் ஸ்டீவன் ரெய்க்ஸ் ஹாட்சனின் படிமங்கள் எல்லாம் இதற்குள் உள்ளன.

சிப்பாய்க்கலகம் இந்தியாவில் பெரும்பாலான விஷயங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியது போல் ராணுவத்தின் தன்மையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த மாற்றங்களுடன் அதன் உண்மையான சகாப்தம் தொடங்கியது. அடுத்த 75 ஆண்டுகளுக்கு ராணுவ சேவையை வாழ்க்கையாக ஏற்றுக் கொள்ளும்

ஆர்வமும் துடிப்பும் மிக்க நடுத்தர மற்றும் உயர் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள், சாண்டர்ஸ் ராணுவப்பள்ளியில் தயாரான வர்கள் இந்திய ராணுவத்தை நிறைத்தனர். ஆனால் அவர்களால் பிரிட்டிஷ் ராணுவ படைப்பிரிவில் தாக்குப் பிடிக்க முடியவில்லை. காரணம், ஒரு அதிகாரி தனது ஊதியத்தை மட்டும் வைத்துக் கொண்டு உணவுச் செலவைக் கூட சமாளிக்க இயலவில்லை. ஆடம்பர சுகபோகங்களை மட்டும் விரும்பும் பணக்காரர்களின் பிள்ளைகள் பொழுது போக்காக ராணுவத்தில் நீடிக்க விரும்பிய போது, அவர்களிலேயே திறமைமிக்க இளைஞர்கள் ராணுவப் பணியை முழுநேரத் தொழிலாகக் கொண்டு இந்தியாவுக்கு வந்தார்கள். இங்கே வாழ்க்கைச் செலவுகள் குறைவு; ஊதியமோ 50% அதிகம்.

பிரிட்டனின் ஆட்சிப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டுவதற்கான பிரிட்டிஷ் ராணுவம் பல ஆண்டுகளாக அணிவகுப்பு நடத்துவதிலும் உடற்பயிற்சி (ட்ரில்) செய்வதிலுமே ஈடுபட்டது. இந்திய ராணுவம் தான் போரிட்டது. எல்லைப் பகுதிகளில் உள்ள கணவாய்களிலும் மலைச் சிகரங்களிலும், லேன்டி கோட்டாவிலும், (Landi Kotal) கைபர் கணவாயின் மேலேயும் கீழேயும் இடைவிடாத போரில் இது ஈடுபட்டது. மனித நடமாட்டமற்ற தொலைதூரப்பகுதியிலும், கூரிய மலைமுகடுகளிலும், சரிவான பாறைகளிலும், மறைந்து நிற்க ஒரு புதர் கூட இல்லாத திறந்த சமவெளியிலும், வறுத்தெடுக்கும் கோடையிலும் கொடுமையான, உறைய வைக்கும் மழைக்காலத்திலும் இந்திய ராணுவம் போரிட்டுள்ளது. இவர்களின் எதிரிகளோ கொடூரக்காரர்கள். வாசீர், மஷுத் போன்ற பத்தானியர்கள் காயமடைந்த வீரர்களைக் கத்திகளால் தீர்த்துக் கட்டி விடுவார்கள்.

ஆனால் பத்தானியர்கள் தந்திரமும் சாதுர்யமும் உள்ள வீரம் செறிந்த எதிரிகள். இவர்களின் நல்ல அம்சங்களுக்கு எதிரிகளான பிரிட்டிஷார் பாராட்டுகளைத் தெரிவித்தனர். எல்லைப்புறச் சண்டைகள் என்பவை கொடூரமான ஆட்சியாளர்களை எதிர்த்த மரண விளையாட்டுகளாகும். இருப்பினும் இவை ஈட்டன் மைதான விளையாட்டுகள் என்ற உணர்வையே உள்ளுக்குள் ஏற்படுத்தின. இவற்றின் செயல்பாடுகள் சிறிய அளவிலானவையே. ஒரு அதிகாரியும் சில ராணுவ வீரர்களும் முகாமிட்டு மலை உச்சியைப் பாதுகாத்தனர். தைரியம், தலைமைக்குணம், முன்முயற்சி, உடல் வலிமை ஆகியவற்றின் மீது மதிப்புக் கொண்டிருந்தனர். அதிகாரிகளுக்கும் படை வீரர்களுக்கும் இடையே நெருக்கமும் நம்பிக்கையும் மிக்க உறவு இருந்தது.

எல்லைப்புற முகாம்களில் இருக்கும்போது ஒரு இளம் அதிகாரியின் வாழ்க்கை துயரம் மிக்கதாக இருந்தாலும், வீடுகளுக்குத் திரும்பி விட்டால் அது பகட்டும் ஆடம்பரமும் மிக்கதாக இருந்தது. இந்தியாவில் இவர்களுக்கு ஏராளமான வேலைக்காரர்கள் அளிக்கப்பட்டனர்; குறைந்த அளவில் வாழ்க்கைச் செலவு; ராணுவத்திலும் சிறப்புச் சலுகைகள் கிடைத்தன; இதனால் இளம் அதிகாரிகள் மேன்மையான வாழ்க்கை நடத்தினர். மவுண்ட்பேட்டனின் தலைமை ஊழியரான ‘தந்திரசாலி’ இஸ்மே, இளநிலை அதிகாரியாக இருந்த போது வெப்பமும் புழுதியும் நிறைந்த இந்தியப் பயணத்தால் களைப்படைந்து ராணுவ உணவு விடுதிக்கு வந்த கதையை ஒரு நாள் நினைவு கூர்ந்தார். எதிர்கால

அதிகாரிகளான சகோதரர்கள், உணவு விடுதிக்குரிய செந்தூரம், கருநீலம் மற்றும் தங்க நிறத்திலான கம்பீர உடை அணிந்து மேசையைச் சுற்றி அமர்ந்திருந்தனர். இவர்கள் ஒவ்வொருவர் பின்னாலும், வெள்ளை மஸ்லின் சீருடையில், படைப்பிரிவுக்குரிய வண்ணங்களில் பெல்ட் அணிந்தும், தலைப்பாகைகளில் அதற்குரிய சின்னங்கள் அணிந்தும் பணியாளர்கள் நின்றார்கள்.

மேசை மீது விரிக்கப்பட்டிருக்கும் மாசு மருவற்ற லினன் துணியின் மீது, மிக நேர்த்தியாய்த் தூய்மை செய்யப்பட்ட வெள்ளிப்பாத்திரங்களும், இரண்டு அல்லது மூன்று பூக்கூடைகளில் சிவப்பு ரோஜாக்களும் வைக்கப்பட்டிருந்தன. கணப்புக்கு மேல் உள்ள பகுதியில் ராணுவத்தலைமை அதிகாரியின் ஆயில் பெயிண்ட் செய்யப்பட்ட படம் இருந்தது. சுவர்களில் புலிகள், சிறுத்தைகள், காட்டு ஆடுகள், மலை ஆடுகள் ஆகியவற்றின் தலைகள் மாட்டப்பட்டிருந்தன.

ராணுவ அதிகாரிகள் ஓரங்க நாடகத்தில் வரும் நடிகர்கள் போல் உடையணிந்த காலமாக அது இருந்தது. 'ஸ்கின்னர்ஸ் ஹார்ஸ்' என்ற படைப்பிரிவைச் சேர்ந்த 'மஞ்சள் சிறார்கள்' பாதாம் கொட்டை நிறத்தில் உடையணிந்தார்கள். மற்றவர்கள் செந்தூரமும் தங்க நிறமும் கலந்த, வான் நீலநிறமான, கீரைப்பச்சை மற்றும் வெள்ளி நிறத்திலான சீருடைகளை அணிந்தார்கள். மாதத்தில் ஒரு நாள் இரவில், ஒவ்வொரு படைப்பிரிவும், சம்பிரதாயமாக 'டைனிங் இன்' என்ற விருந்து நிகழ்ச்சியை நடத்தியது. முதன்முறையாக இது போன்ற விருந்துக்கு வரும் புதிய அதிகாரிகள் மதிமயங்கும் வரை குடித்து விட்டு, அடுத்த நாள் காலை ஆறு மணி அணி வகுப்பிலும் பங்கேற்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டனர். விருந்து நிகழ்ச்சியின் துவக்க அறிகுறியாய் வழக்கமாக எக்காளம் முழங்கும். இதைத் தொடர்ந்து பளபளக்கும் பூட்ககளுடனும், தங்க நிறப் பின்னல்களுடனும் கர்னலின் பின்னால் அணிவகுத்த அதிகாரிகள் உணவு விடுதிக்குள் சென்றனர்.

கண்ணாடித் தட்டுகள், பூக்கள், பளபளக்கும் வெள்ளிப் பாத்திரங்கள் இருந்த மேசை அருகே அமர்ந்து மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் இந்தியாவின் மிகச் சிறந்த உணவை அவர்கள் உண்டனர். உணவு உண்டு முடித்த பின் மதுபானம் கொண்டு வரப்படும். கர்னலிடம் தொடங்கி கடிகாரச் சுற்று முறையில் மேசையைச் சுற்றி அமர்ந்திருப்போருக்கு மது வழங்கப்படும். இந்த வழக்கத்தை மீறுவது கெட்ட சகுனமாகக் கருதப்படும். பேரரசருக்கும் வைஸ்ராய்க்கும் படைப்பிரிவுக்கும் கர்னல் வாழ்த்து தெரிவித்து விட்டு மது அருந்துவார். மற்றவர்களும் இதைப் பின்பற்றுவார்கள். 7வது குதிரை படைப்பிரிவின் தலைமை அதிகாரி ஒவ்வொரு முறை மது அருந்தும் போதும் காலியான கண்ணாடிக் குவளையை தோள்பக்கமாக நீட்டிச் கண்டுவார். அவருக்குப் பின்னால் விறைப்புடன் நின்று சலனமின்றி அறையை நோட்டமிட்டுக் காத்திருக்கும் உணவு விடுதியின் சார்ஜன்ட், தயாராக வைத்துள்ள மதுவைக் கொண்டு அந்த மதுக்கிண்ணத்தை மீண்டும் நிரப்புவார். ராணுவ உணவு விடுதிகளில் விஸ்கி, கிளாரெட், ஷேம்பன் போன்ற மதுவகைகள் எப்போதும் நிறைந்திருக்கும். ராணுவ அதிகாரி கையெழுத்திட்டு சீட்டு கொடுத்தாலே இவையெல்லாம் கிடைக்கும். செலவைத் தவிர்க்க மது அருந்தாத அதிகாரி பற்றி ராணுவ வரலாற்றாசிரியர் ஒருவர் 'உணவு விடுதியில் தண்ணீர் அருந்தும் சகோதர அதிகாரி' என்று கிண்டலாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு படைப்பிரிவுக்கும் விலை மதிக்க முடியாததாக இருந்தவை வரிசையாக அடுக்கி வைக்கப்பட்ட வெள்ளிக் கேடயங்கள் தான். எழுதப்படாத வரலாறாக இவை இருந்தன. புதிய அதிகாரி ஒருவர் படைப்பிரிவில் சேரும் போது அவரது பெயரையும் பணியில் சேரவந்த தேதியையும் செதுக்கிய பட்டயத்தை உணவு விடுதிக்குக் கொடுப்பார். மற்ற சிலர் தங்களின் படைப் பிரிவு போரலோ அல்லது கிரிக்கெட் மைதானங்களில் பெற்ற வெற்றிகளைக் குறிக்கும் வகையிலோ, போர்க்களத்தில் நிகழ்த்திய சாகசங்களைக் கொண்டாடும் வகையிலோ கேடயங்களை வழங்கினர். 1930களில் ஒருநாள் இரவு நடந்த கூத்தும் கும்மாளமும் நிறைந்த 'டைனிங் இன்' விருந்தில் 7வது குதிரைப்படையின் மிகப்பெரிய கோப்பை புனைப்பெயர் ஒன்றைப் பெற்றது. குடிபோதையில் மிதக்கும் விடலைகள் போல, அந்தப் படைப்பிரிவின் லெப்டினன்டுகள், உணவு விடுதியின் மேசை மீது கைகளை ஊன்றி தட்டுத் தடுமாறி ஏறி அமர்ந்தனர். பாட்டுப்பாடிக் கொண்டே அதன் இசைக்கேற்ப கோப்பையில் சிறுநீரும் கழித்தனர். ஷேம்பன் மது அருந்தி வீங்கிப்போன சிறு நீர்ப்பையிலிருந்து பெருமளவில் சிறுநீர் வெளியேறுவதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் அந்தக் கோப்பை 'நிறைந்து வழியும் கோப்பை' ('The Overflow Cup') என்று பெயர் பெற்றது.

ஒவ்வொரு அதிகாரியின் காலைப்பொழுதும் உடற்பயிற்சி மற்றும் ராணுவப் பயிற்சிக்கு ஒதுக்கப்பட்டது. எஞ்சிய பொழுதை அவர் விரும்பிய வகையில் செலவிடலாம். இதற்கு ஏற்புடைய ஒரு வழியாக இருந்தது - விளையாட்டுகள். போலோ, துப்பாக்கிச் சுடுதல், கிரிக்கெட், ஹாக்கி, வேட்டை நாய் பயிற்சி, பன்றி வேட்டை என எதிலும் ஈடுபடலாம். இளம் அதிகாரிகள் தங்களின் துடிப்புள்ள சக்தியை ஆரோக்கியமான உடற்பயிற்சியில் செலவிட வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஜெசூட் இளங்குரு மடத்தினரின் (இக்னேஷியஸ் லயோலா என்பவரால் 1533இல் நிறுவப்பட்ட இயேசு நாதர் சங்கம். மொ-ர்) குளிர் நீர்க் குளியல்களுக்கு இணையாக இந்த உடற்பயிற்சி கருதப்பட்டது. வளமான ராணுவ வாழ்க்கையில் கிடைக்காத சுகம் ஒன்று இருந்தது. அது தான் உடலுறவு. இந்திய ராணுவத்திலிருந்த அதிகாரிகள் சுமார் முப்பத்தைந்து வயது வரை திருமணம் செய்து கொள்ளாமல் இருக்க ஊக்குவிக்கப்பட்டார்கள். சிப்பாய்க் கலகத்துக்குப் பிறகு இந்திய வைப்பாட்டிகள் இணக்கம் காட்ட வில்லை. ராணுவ வீரர்களுக்கும், அதிகாரிகளுக்கும், மேல் தட்டினருக்கும் முறையான வடிகால் வேண்டும் என்பதால் விபச்சார விடுதிகள் அமைக்கலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதற்கு ஆதரவாய் இருக்க இவர்களுக்கு ஊக்கம் தரப்படவில்லை. மாறாக கடுமையான குதிரை யேற்றத்துக்கு யோசனை தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு அதிகாரிக்கும் ஆண்டுக்கு இரண்டு மாத விடுப்பு கிடைத்தது. எல்லைப் பகுதியில் அமைதி நிலவினால் இன்னும் கூடுதலாக விடுப்பு பெறுவது எளிது. இந்தக் காலங்களில் இளம் ராணுவ அதிகாரிகள் மத்திய இந்தியா பகுதியில் உள்ள காடுகளில் சிறுத்தைகளையும் புலிகளையும், வேட்டையாடச் சென்று விடுவார்கள். பனிச்சிறுத்தை, கருங்கரடி, மலையாடுகள் போன்ற வற்றின் வேட்டைக்காக இமயமலை அடிவாரத்துக்கும் செல்வார்கள். காஷ்மீரில் விரைந்து பாயும் ஓடைகளில் கொழுத்த மஷீர் மீன்களுக்குத்

*தூண்டில் போடுவார்கள். இஸ்மே தனது ஆரம்பகால விடுமுறையை ஸ்ரீநகரின் படகு வீடுகளில் தான் கழித்தார். அவரைச் சுற்றிய நீர்நிலைகளில் நெருப்பு போல் அலர்ந்த செந்தாமரைகள் இருந்தன. அவரது போலோ குதிரைகளை நீரோடையின் கரையில் கட்டி வைத்திருந்தார். வெயில் வந்து விட்டால் 8000 அடி உயரத்தில் உள்ள குல்மார்க் பகுதிக்குச் சென்று விடுவார். அங்குள்ள போலோ விளையாட்டுத் தளம் இங்கிலாந்தில் இருப்பது போலவே இருக்கும். அனைவரும் சந்தித்து உலக விவகாரங்களை அலசுவதற்கான கிளப் ஒன்றும் அங்கே இருந்தது.*

*இந்திய ராணுவத்தின் இளம் அதிகாரிகள் உலகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவில்லை. ஆனால் இந்தியாவின் பதற்றம் மிக்க எல்லைப்பகுதிகளில் கிளர்ச்சி செய்யும் பழங்குடியினர் மீதும் வங்கப் புலிகள் மீதும் சமமாகப் பயன்படுத்திய துப்பாக்கிகளுடனும், ராணுவக் குடியிருப்பு அறையில் பாலே நடனத்துடனும், விஸ்கி நிறைந்த கிண்ணங்களுடனும், சூரிய வெப்பத்தைத் தடுக்க பின்பக்கம் துணி தொங்கும் ஹெல்மெட்டுகளுடனும், போலோ மட்டைகளுடனும், வரலாற்றின் மாபெரும் பேரரசுக்குப் பெருமை மிகு பாதுகாவலர்களாக இவர்கள் இருந்தனர்.*

*முதல் உலகப் போரின் போது, இந்த ராணுவத்திற்கு இரண்டாவது பெரிய உருமாற்றம் ஆரம்பித்தது. 1918ஆம் ஆண்டிலிருந்து சாண்டர்ஸ் பயிற்சிப் பள்ளியில் இந்தியத் துருப்புகளுக்காக ஆண்டுக்குப் பத்து இடங்கள் ஒதுக்கப்பட்டன. சாண்டர்ஸ் மாதிரியில், 1932இல், டேராடூனில் இந்திய ராணுவ அகாடமி உருவாக்கப்பட்டது. பிரிட்டிஷ் அதிகாரிகளை மாதிரிகளாகக் கொண்டே இந்த நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்பட்டாலும் இளம் இந்தியர்கள் வித்தியாசமாக இருந்தார்கள். இதற்கும் மேலாக, துணைக் கண்டத்தைப் பாதித்த வகுப்புவாத வேறுபாடுகளை இவர்களிடமிருந்து களைவதிலும், ராணுவத்துக்கும் படைப்பிரிவுக்கும் பொதுவான விசுவாசம் கொண்டிருக்கச் செய்வதிலும் பிரிட்டிஷார் வெற்றி பெற்றனர்.*

*1945க்குள் 2.5 மில்லியன் (25 லட்சம்) வீரர்களுடன் விரிவடைந்த இந்திய ராணுவம் இரண்டாம் உலக யுத்தத்தின் போது இத்தாலி, மேற்கு பாலை வனப்பகுதி, பர்மா ஆகிய இடங்களில் மெச்சத்தகும் வகையில் போர் புரிந்தது, வகுப்புவாதத்திற்கு உட்படாதது என்று இந்த ராணுவத்துக்கு மாபெரும் மதிப்பு இருந்தது. ஆனால் இப்போது இந்தியப் பிரிவினை முடிவின் மேலும் ஒரு துணை விளைவாக, மத அடிப்படையில் அதனைப் பிரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.**

---

* **எப்படியிருப்பினும் வரவிருக்கும் ஆண்டுகளில் ஏற்படும் சிக்கல்களின் போது இந்திய ராணுவத்தில் பொதுவான முறையில் சேவை செய்த சகோதர உணர்வு நீடிக்கக் கூடும். கால் நூற்றாண்டுக்குப் பிறகு ஒரு நாள், இந்தியாவும் பாகிஸ்தானும் போர்க்களத்தில் மூன்றாவது முறையாக சந்தித்துக் கொண்ட பிறகு, பங்களாதேஷ் சண்டை முடிந்த நேரத்தில், பாகிஸ்தான் ஆயுதப் படைவீரர்களில் ஒரு குழுவினர் சரணடைவதற்கு இந்திய ராணுவத்தில் தங்களுக்கு இணையானவர்களைத் தேடினர். புதிதாகக் கைப்பற்றப்பட்ட மது அருந்தும் பார் ஒன்றில் இந்திய குதிரைப்படை அதிகாரியை அவர்கள் கடைசியாகக் கண்டறிந்தனர். சரணடைவதற்கு முன், ஒரு சுற்று மது அருந்துமாறு அந்த பாகிஸ்தான் வீரர்களை இந்தியர்கள் வற்புறுத்தினர்.**

*ராணுவத்தில் இருந்த இந்திய அதிகாரி ஒவ்வொருவருக்கும் ஜூலை துவக்கத்தில் படிப்பெருக்கிகள் (Mimeographed form) மூலம் எடுக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் அளிக்கப் பட்டது. அதுதான் அந்த ராணுவத்தின் அழிவுக்கான வாகனம் ஆனது. இந்திய ராணுவத்திலா அல்லது பாகிஸ்தான் ராணுவத்திலா எதிலே இருக்க விருப்பம் என்று தெரிவிக்குமாறு அதில் ஒவ்வொருவரிடமும் கேட்டுக் கொள்ளப் பட்டிருந்தது. ராணுவத்தில் இருந்த இந்து மற்றும் சீக்கிய அதிகாரிகளுக்குத் தேர்வு செய்வதில் பிரச்சனை இருக்கவில்லை; ஜின்னா அவரது ராணுவத்தில் இவர்கள் இருப்பதை விரும்பமாட்டார்; எனவே விதிவிலக்கில்லாமல், இந்தியாவுக்கு சேவை செய்வதென்று அவர்கள் தீர்மானித்து விட்டனர்.*

*ஆனால் பிரிவினைக்குப் பிறகும் யாருடைய குடும்பமும் வீடுகளும் இந்தியப் பகுதிக்குள்ளேயே இருக்குமோ அந்த முஸ்லீம்களுக்கு இந்த ஒரு காகிதம் அச்சம் தரும் ஊசலாட்டத்தை ஏற்படுத்தியது. முஸ்லீம் என்ற ஒரே ஒரு காரணத்துக்காகத் தங்களது ஆதரவை நாடும் ஒரு நாட்டின் ராணுவத்தில் சேவை செய்ய தங்களின் நிலங்களை விட்டும் பூர்வீகமான வீடுகளிலிருந்தும், குடும்பங்களிலிருந்தும் பிரிந்து செல்ல வேண்டுமா? அல்லது தங்களின் வாழ்க்கையை முஸ்லீம் விரோத உணர்வுகள் சிக்கலாக்கும் என்ற பிரச்சனை யைத் தாங்கிக் கொண்டு தங்களுடன் பலவகை உறவுகளைக் கொண்டிருக்கும் நிலத்திலேயே தங்கி விடலாமா?*

*முடிவெடுப்பதில் சிரமப்பட்டவர்களில் ஒருவராக இருந்தவர் எல்அலமின் (El Alamein) போரில் வெற்றிவாகை சூடிய லெப்டினன்ட் கர்னல் இனாயத் ஹபிபுல்லா. (Enaith Habibullah). கடைசியில் வார இறுதியில் விடுப்பு எடுத்துக் கொண்டு லக்னோவில் தனது குடும்பம் உள்ள வீட்டுக்குச் சென்றார். இவரது தந்தை லக்னோ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராவார்; தாயாரோ பாகிஸ்தானின் தீவிர ஆதரவாளர்.*

*மதிய உணவுக்குப்பின், அவரது தந்தையின் காரை இரவல் வாங்கிக் கொண்டு லக்னோவின் வீதிகளைச் சுற்றி வந்தார். ஒவுத் (Oudh) பேரரசுக்கு உட்பட்ட மத்திய காலக் குறுநில மன்னராக இருந்த அவரது மூதாதையரின் வீடுகளைப் பார்த்து அவர் சிந்தனையில் ஆழ்ந்தார். 1857இல் நடந்த சிப்பாய்க் கலகத்தின் போது அந்தப் புகழ் மிக்க இல்லத்தில் வீழ்ந்த குண்டுகளால் ஏற்பட்ட அடையாளங்கள் இன்னமும் இருந்தன. 'இதற்காகத் தான் எனது முன்னோர் கள் தங்களின் உயிர்களை இழந்தனர்' என்பதை அவர் எண்ணிப்பார்த்தார். 'இங்கிலாந்தின் பள்ளியிலும், மேற்குப் பாலைவனப் பகுதியில் ஜெர்மானியர் களின் குண்டு வீச்சின் போதும் இந்த இந்தியாவைத் தான் நான் கனவு கண்டேன்.*

---

பிறகு அவர்கள் ஆயுதங்களை ஒப்படைக்க தங்கள் குழுவைக் கொண்டு வந்தனர். கொஞ்ச நேரத்துக்கு முன் வங்காள வயல்வெளிகளில் ஒருவரை ஒருவர் கொன்று தீர்த்துக் கொண்ட அவர்கள் இப்போது ஒரு சுற்று ஹாக்கி மற்றும் கால்பந்தாட்டம் விளையாடினார்கள். இதனால் மனம் புண்பட்ட ஷேக் முஜிபுர் ரஹ்மானின் ஒழுங்காகப் பணித்துறையில் இல்லாத படைவீரர்கள் புதுடில்லிக்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். இதையடுத்து இந்திராகாந்தியின் அலுவலகத்திலிருந்து இந்தியத் தளபதிக்கு கடுமையான வாசகத்துடன் ஒரு தகவல் அனுப்பப்பட்டது. அதில் இவ்வாறு நினைவூட்டப்பட்டிருந்தது. 'நீங்கள் போருக்கு அனுப்பப்பட்டிருக்கிறீர்கள்; கிரிக்கெட் விளையாட்டுக்கு அல்ல.'

இதுதான் எனது வீடு. இங்கேதான் நான் இருந்தேன். இனியும் இங்கேயே இருப்பேன்' என்று அவர் எண்ணினார்.*

வைஸ்ராயின் மெய்க்காவல் படையில் இருந்த இளம் முஸ்லீம் அதிகாரியான மேஜர் யாகூப் கான் வாழ்க்கையில் இந்த முடிவு மிகவும் முக்கியமானதாக இருந்தது. இவரும் கூட தனது முடிவு பற்றி யோசிப்பதற்கு குடும்பத்தினர் வசித்த மன்னராட்சிப் பகுதியான ராம்பூருக்குச் சென்றார். இங்கே அவரது மாமாவான நவாபுக்கு அவரது தந்தை பிரதம அமைச்சராக இருந்தார்.

அவரது மாமாவின் ஆடம்பரமான அரண்மனைக்குப் பக்கத்தில் இருந்த அவரது குடும்பத்தினரின் வீட்டினை அவர் உணர்ச்சிப் பெருக்கோடும் பதற்றத்தோடும் பார்த்தார். அந்த வீடு பற்றி அவரிடம் ஏராளமான இனிய கனவுகள் இருந்தன. கிருஸ்துமஸ் பண்டிகையின் போது அவரது குடும்பத்தின் தங்கத்தட்டுகளில் உணவுண்ட நூறு விருந்தினர்கள்; அவர்களின் துப்பாக்கிச் சத்தங்கள்; இருபது அல்லது முப்பது யானைகளின் முதுகுகளில் ஏறி வேட்டைக்காக காட்டுக்குச் செல்லும் துப்பாக்கி ஆட்கள்; அவரது மாமாவின் அரண்மனையில் இசைக்கும் முழு அளவிலான இசைக்குழுவினர்; இதைத் தொடர்ந்து பழம் பெருமை கொண்ட பால் நடனங்கள்; வாசல் வரை நீண்ட வரிசையாய் நிற்கும் ரோல்ஸ் ராய்ஸ் கார்கள்; பெருக்கெடுக்கும் ஷேம்பன் மது; நடு காட்டுக்குள் அவர்களின் உல்லாசப் பயணத்துக்காக வரிசையாய் அமைக்கப்பட்ட பட்டுத் துணியாலான கூடாரங்கள்; அவற்றில் வழவழப்பான துணி போர்த்திய மெத்தைகள்; அழகான தரைவிரிப்புகள் ஆகியவற்றையும் அவர் நினைவு கூர்ந்தார். மாமாவின் அரண்மனையை அவர் சுற்றி வந்தார். அங்கேயுள்ள வெதுவெதுப்பான நீச்சல் குளத்தையும், விக்டோரியா மகாராணி, ஐந்தாம் ஜார்ஜ் ஆகியோரின் எண்ணெய்ப் பூச்சு ஓவியங்கள் கொண்ட மிகப்பெரிய விருந்தினர் அறையையும் அவர் கண்டார். பிரிவினையால் உருவாகவிருக்கும் சோஷலிச இந்தியாவில் இவையெல்லாம் மறைந்து வேறு வித வாழ்க்கையாக அமையும் என்று அவர் எண்ணினார். முஸ்லீம் அரச குடும்பத்தைச் சேர்ந்த இவரைப் போன்ற வாரிசுகளுக்கு அந்த இந்தியாவில் எப்படிப்பட்ட இடம் இருக்கும்?

எல்லாவற்றையும் விட்டு விட்டு பாகிஸ்தானுக்குப் போகப் போவது பற்றிய முடிவை அன்று மாலை அவரது தாயிடம் விளக்க முயன்றார்.

'நீங்கள் வாழ்ந்து முடித்து விட்டீர்கள். எனக்கு மேலும் வாழ்க்கை இருக்கிறது. பிரிவினைக்குப் பிறகு இந்தியாவில் முஸ்லீம்களுக்கு எதிர்காலம் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை' என்று அம்மாவிடம் அவர் கூறினார்.

ஓரளவு கோபத்தோடும் ஓரளவு அவநம்பிக்கையோடும் அந்த மூதாட்டி அவரைப் பார்த்தார். 'இதெல்லாம் எனக்கு விளங்கவில்லை. நாம் இங்கே இருநூறு ஆண்டுகளாக வாழ்கிறோம்' என்று தாய் சொன்னார். 'காற்றின் சிறகுகளில் வந்து இந்தியச் சமவெளியில் இறங்கியவர்கள் நாம்' என்ற

* ஹபிபுல்லாவின் இரண்டு சகோதரர்களும், அவரது சகோதரியும், மைத்துனரும் பாகிஸ்தானுக்குச் சென்றனர். இருப்பினும் ஜின்னாவின் தீவிர ஆதரவாளராக இருந்த அவரது தாய், இந்தியாவிலேயே தங்கி விட்டார். 'ஜின்னாவின் பாகிஸ்தான்' உட்பட எதற்காகவும் தனது சொத்தை இழக்க அவரது தாய் தயாராக இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருள்பட 'ஹம் ஹவா - கி லங்கோன் தரார்ரா ஆயே' ("Ham hawa-ki lankhon darara aye") என்று உருது மொழியில் கூறிவிட்டுத் தொடர்ந்தார். 'டில்லியின் அழிவை நாம் கண்டிருக்கிறோம். சிப்பாய்க் கலகத்தின் போது நாம் வாழ்ந்திருக் கிறோம். இந்த மண்ணுக்காக உனது மூதாதையர்கள் பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடியுள்ளனர். உனது கொள்ளுத்தாத்தா சிப்பாய்க் கலகத்தில் தூக்கிலிடப் பட்டார். நாம் போராடியிருக்கிறோம், போராடியிருக்கிறோம், போராடி யிருக்கிறோம். இப்போது நாம் ஒரு தாயகத்தைப் பெற்றிருக்கிறோம். நமது கல்லறைகளும் இங்கேதான்' அந்தத் தாய் வருத்தத்துடன் கூறினார்.

'எனக்கு வயதாகி விட்டது. எனது நாட்கள் எண்ணப்படுகின்றன. எனக்கு அரசியல் தெரியாது; ஆனால் ஒரு தாய் என்ற முறையில் எனது விருப்பங்கள் சுயநலம் மிக்கது. இது நம்மைப் பிரித்து விடுமோ என்று நான் அஞ்சுகிறேன்' அந்த மூதாட்டி பேச்சை முடித்தார்.

'இல்லை' அவரது மகன் மறுத்தார். 'டில்லியில் இருப்பதற்குப் பதில் கராச்சியில் இருப்பது போலத்தான் இது சாதாரணமாக இருக்கும்' என்றும் அவர் கூறினார்.

அடுத்த நாள் காலை அவர் அங்கிருந்து புறப்பட்டார். கோடைகாலத்தின் சுகமான நாள் அது. அவரது தாயார் வெள்ளைப் புடவை உடுத்தியிருந்தார். முஸ்லிம்கள் இதனை துயரத்துக்கான வண்ணமாகக் கருதுகின்றனர். அவரது பின்னால் உள்ள வீட்டின் கருநிற மணல் கற்களில் அவரைப்போலவே ஒரு நிழல் படிந்தது. அவரது மகன் போகும்போது குரான் நூலுக்குக் கீழே குனிந்து செல்லும் வகையில் அதனைத் தலைக்கு மேல் தூக்கிப்பிடித்தார். பின்னர் அந்தப் புனித நூலை எடுத்து முத்தமிட்டார். பிரிந்து செல்லும் போது கூறப்படும் ஒரு சில பிரார்த்தனை மந்திரங்களை அந்த நூலிலிருந்து இருவரும் சேர்ந்தே ஒலித்தார்கள். கடைசி வார்த்தைகளைச் சொல்லும் போது அவரது தாய் கன்னங்களை உப்பச் செய்து பின்னர் மெதுவாக மகனை நோக்கி மூச்சுக்காற்றை வாய்வழியே வெளியேவிட்டார். தனது பிரார்த்தனை அவரைத் தொடர்ந்து செல்லும் என்பது தாயின் நம்பிக்கை.

யாகூப்கான் தனது குடும்ப வீட்டின் கதவைத் திறந்தபோது ரயில் நிலையத்திற்கு ஏற்றிச் செல்வதற்காக வண்டி காத்து நின்றது. விடைபெறும் வகையில் கையசைக்க யாகூப் கான் திரும்பினார். நிமிர்ந்து நின்ற அவரது தாய், சோகத்திலும் பெருந்தன்மையுடன் பதிலுக்குத் தலையாட்டினார். அவருக்குப் பின்னால் வீட்டின் ஜன்னல்களிலிருந்து தலைப்பாகை அணிந்த பல பணியாட்கள் கடைசியாக 'சலாம்' செய்தார்கள். அவற்றில் ஒரு ஜன்னல் உள்ள அறை யாகூப் கான் இளம் வயதில் பயன்படுத்தியது. இப்போதும் அவரது இளமைக்கால நினைவுச் சின்னங்களாக கிரிக்கெட் மட்டைகள், புகைப்பட ஆல்பங்கள், போலோவில் வென்று பெற்ற கோப்பைகள் என அனைத்தும் அந்த அறையில் நிறைந்திருந்தன. இப்போது ஒன்றும் அவசரமில்லை, பாகிஸ்தானுக்குச் சென்று குடியேறிய பிறகும் கூட திரும்பி வந்து இவற்றை யெல்லாம் எடுத்துச் செல்லலாம் என்று அவர் நினைத்தார்.

உண்மையில் யாகூப் கானின் நினைப்பு தவறானது. அவரால் மீண்டும் பூர்வீகக் குடும்ப வீட்டுக்கு வரவோ தனது தாயைப் பார்க்கவோ ஒரு போதும்

*முடியவில்லை. ஒரு சில மாதங்களில் காஷ்மீரப் பனிமலையின் முகட்டில் சரிவான பனிப்பாறைகளில் பாகிஸ்தான் ராணுவத்தின் ஒரு பிரிவுக்குத் தலைமை தாங்கி வந்து தனது சகோதர அதிகாரிகளாக இருந்த எதிர்ப்படையினர் மீது அவர் தாக்குதல் தொடுக்க வேண்டியதாயிற்று. இவரது படைப்பிரிவை முன்னேற விடாமல் தடுத்து நிறுத்தியது கர்வால் (Garhwal) பிரிவுதான். இந்தப் படைப்பிரிவின் தலைவரும் யாகூப் கானைப் போலவே ஒரு முஸ்லீம்தான். யாகூப்கானைப் போலன்றி 1947 ஜூலையில் இவர் வேறு வகையான முடிவெடுத்தார். தாம் பிறந்த மண்ணிலேயே தொடர்ந்து வாழ்வதென அவர் தீர்மானித்தார். இவரும் ராம்பூரைச் சேர்ந்தவர்தான். இவரது பெயரும் கான் தான் - யூனிஸ்கான் (Youniskhan). இவர் யாகூப்கானின் இளைய சகோதரர்.*

★

*மிகவும் சிக்கல் நிறைந்த இந்தியாவின் பிரிவினைப் பணிச்சுமை ஒரு மனிதரின் தோளில் விழுந்தது. 1947 ஜூனில் அந்த நபர் லண்டனில் உள்ள லிங்கன்ஸ் இன் (நீதிமன்றத்தில்) நியூ ஸ்கொயர் 3ஆம் எண் அறையில் அமர்ந்து சட்டப் பணிகளை செய்து கொண்டிருந்தார். சர் சிரில் ராட் கிளிஃப் (Sir Cyril Radciff) என்ற அவர் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் பயின்றவர். சிறந்த மாணவராகவும், உயரிய ஆல்சோல் ஃபெலோஷிப் பெற்றவராகவும் விளங்கினார். கறைபடியாத, ஒழுக்கம் நிறைந்த அவரைச் சுற்றி பல மனிதர்கள் இருந்தனர். இவர் செல்வச் செழிப்புள்ள விளையாட்டு வீரர் ஒருவரின் மகனாவார். இவரது தந்தை வேட்டையாடுவதற்காகக் காட்டுவாத்துகளையும் பெசன்ட் என்ற ஒருவகைப் பறவை இனத்தையும் வாழ்நாள் முழுதும் தொடர்ந்து சென்றது போல் இவர் சட்டப் புத்தகங்களைத் தொடர்ந்து சென்றார். ஓரளவு பருத்த உடலும், இரக்க குணமும் கொண்ட ராட்கிளிஃப் பொதுவாக இங்கிலாந்தின் திறமை மிக்க வழக்கறிஞராகவே அறியப்பட்டார்.*

*பல விஷயங்களில் கலைக்களஞ்சியம் போன்ற ஞானமிருந்தாலும் இந்தியாவைப் பற்றி ராட் கிளிஃபுக்கு ஒன்றும் தெரியாது. இதைப்பற்றி அவர் எதையும் எழுதியதும் இல்லை; இதன் சிக்கலான சட்டப்பிரச்சனைகளில் அவர் ஈடுபாடு கொண்டதும் இல்லை. சொல்லப் போனால், துணைக்கண்டத்தில் அவர் காலடி வைத்தது கூட இல்லை. இந்தக் காரணங்களுக்காகவோ என்னவோ துரதிருஷ்டவசமாக இவர் 1947 ஜூன் 27 மாலையில் சான்சலர் பிரபு அறைக்கு அழைக்கப்பட்டார்.*

*மவுண்ட்பேட்டனால் வரையப்பட்ட பிரிவினைத் திட்டத்தில் தீர்க்கப் படாமல் விடுபட்ட மையமான பிரச்சனை என்பது வங்காளத்தையும் பஞ்சாபையும் பிரிக்கும் போது எல்லைக்கோடுகளை வரைவது பற்றியதுதான். இந்த விஷயத்தில் தங்களுக்குள் ஒருமித்த கருத்துக்கு வரமுடியாது என்பது நன்கு தெரியும் என்பதால் எல்லை நிர்ணய ஆணையம் அமைத்து அதன் கையில் பொறுப்பை ஒப்படைப்பது என நேருவும் ஜின்னாவும் முடிவு செய்தனர். இதன் தலைவராக புகழ் வாய்ந்த ஆங்கிலேய வழக்கறிஞர் ராட்கிளிஃப்பை நியமிக்கவும் ஒப்புக் கொண்டனர். சான்சலர் பிரபு இந்த விவரங்களை*

ராட்கிளிஃபிடம் தெரிவித்தார். இந்தியாவைப் பற்றிய அனுபவம் இல்லாத ஒருவர்தான் இந்தப் பணிக்குத் தேவைப்பட்டார். இந்த நாட்டைப் பற்றி ஏதாவது தெரிந்தவராக இருந்தால் இந்தப் பக்கமோ அல்லது அந்தப் பக்கமோ சாய்ந்து விடும் மனநிலை ஏற்பட்டுத் தகுதி குறைந்தவர் ஆகிவிடுவார். ராட் கிளிஃபின் சிறந்த சட்ட அறிவும், இந்தியாவைப் பற்றிய அறியாமையுமே இந்த வேலைக்கு அவரைப் பொருத்தமானவராக்கியிருக்கிறது என்பதை சான்சலர் பிரபு சுட்டிக்காட்டினார்.

திகைப்புற்ற ராட் கிளிஃப் இருக்கையில் முதுகைச் சாய்த்து அமர்ந்தார். பஞ்சாப் எங்கே இருக்கிறது வங்காளம் எங்கே இருக்கிறது என்பதையெல்லாம் அவர் அறியார். இவற்றைப் பிரிப்பதற்கான முயற்சி உலகின் கடைசி முயற்சியாகவே இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். இந்தியாவைப் பற்றி ஏதும் தெரியாதது ஒருபக்கம் இருந்தாலும், போதிய அளவு சட்ட ஞானம் இருந்ததால், இந்தப் பணி எவராலும் பாராட்டக்கூடியதாக இருக்காது என்பதை அவர் உணர்ந்தார். இருப்பினும் அவரது வயதையும் வாழ்க்கைப் பின்னணியையும் கொண்ட மற்றெல்லா ஆங்கிலேயர்களையும் போலவே ராட் கிளிஃபும் கடமை உணர்வு மிக்கவர். இந்தியாவுடனான இங்கிலாந்தின் உறவு நிகரற்றது. நெருக்கடியான சூழ்நிலையில் வேறெதிலும் ஒத்துப் போகாத இரண்டு இந்தியத் தலைவர்கள், அச்சமூட்டும் இந்தப் பணிக்கு ஆங்கிலேயரான தம்மை நியமிக்க ஒருமித்து ஒப்புக் கொண்டார்கள் என்றால் அதனை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அவர் நினைத்தார்.

ஒரு மணி நேரத்துக்குப் பின் ராட்கிளிஃபின் பயன்பாட்டுக்காக, இந்திய விவகாரத்துக்கான அலுவலகத்தில் நிரந்தர துணைச் செயலாளராக இருந்த ஒருவர் துணைக் கண்டத்தின் வரைபடம் ஒன்றை அவரது மேசை மீது விரித்தார். பிரிப்பதற்கு ஒப்புக் கொண்டுள்ள மாகாணங்களின் பரந்த பகுதியை முதன் முறையாக அவர் பார்த்தார். கங்கை சிந்து நதிகள் பாயும் பாதைகள், பஞ்சாப் சமவெளியின் செழுமையைக் குறிக்கும் பச்சை வண்ணம், இமயமலையைக் குறிக்கும் வெள்ளைநிறக் கோடுகள் ஆகியவற்றை அவர் விரல்களால் தொட்டுப்பார்த்தார். 88 மிலியன் (8.8 கோடி) மக்கள்; அவர்களின் வீடுகள்; குடிசைகள்; நெல்வயல்கள்; சணல் விளையும் நிலங்கள்; காய்கனித் தோட்டங்கள்; மேய்ச்சல் பகுதிகள்; ரயில்வேக்கள்; தொழிற்சாலைகள் போன்றவற்றைக் கொண்ட புவிக்கோளின் 1,75,000 சதுர மைல் பரப்பளவில் இருக்கும் அனைத்தையும் விளக்கும் வண்ணப்படம் லண்டனில் ஒரு அதிகாரியின் மேசை மீது விரிக்கப்பட்டு இருந்தது.

இதேபோன்ற மற்றொரு காகிதத்தில் அவர்களின் சொத்துகளைக் கூறுபோடும் கோட்டினை அவர் வரையப்போகிறார். உடலுறுப்பைத் துண்டாடும் ஒரு அறுவை சிகிச்சை மருத்துவர் எலும்பையும் சதையையும் கத்தியால் துண்டாடும் செயல் போலவே இது இருந்தது.

ராட் கிளிஃப் புதுடில்லிக்குப் புறப்படுவதற்கு முன் அவரது கடைசி சந்திப்பு டவுனிங் தெரு 10ஆம் எண் இல்லத் தோட்டத்தில் நிகழ்ந்தது. கிளமெண்ட் அட்லி அந்த மனிதரைப் பெருமிதத்துடன் பார்த்தார். வேறெந்த ஆங்கிலேயர் செய்ததைக் காட்டிலும் இவரது பணி, ஒரு சில வாரங்களில், முந்நூறு ஆண்டு

கால ஆங்கிலோ - இந்திய வரலாற்றில், பெருமளவு இந்தியர்களை பாதிக்கப் போகிறது.

இந்த இந்தியக் காட்சிகள் கோரமானதாகவே இருக்கும் என்பதை அட்லி ஒப்புக் கொண்டார். ஆனால் ஒரு விஷயம் அவருக்குப் பெரும் திருப்தியை அளித்தது. தன்னைப் போன்ற பழமைவாய்ந்த ஹெய்லி பரி (Heiley Bury) இளைஞர் தான் 8 .8 மிலியன் (8.8 கோடி) மக்கள் வாழும் நிலப்பகுதியின் மீதாகக் கோடு வரைய அனுப்பப் படுகிறார் என்பது எவ்வளவு பெருமைக்குரியது என்று அவர் எண்ணினார்.

★

ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொள்ளும் இந்திய அரசியல் வாதிகளிடம் ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கிய வெற்றியைச் சுவைப்பதற்கு முன் அதைவிடப் பெரிய பிரச்சனை ஒன்று லூயி மவுண்ட் பேட்டனை அழுத்தியது. இப்போது புதுடில்லியில் அவருடன் பேச்சு நடத்தப் போகிறவர்கள் இன்ஸ்கோர்ட்டில் பயிற்சி பெற்ற வழக்கறிஞர்கள் அல்ல. மன்னர் யாதவீந்திர சிங்கின் தலைமையில் 565 உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்தியாவின் தங்கமயில் அமைப்பான மகாராஜாக்களும் நவாபுகளும் தான்.

கணித்தறிய முடியாத, சபலபுத்திக் கொண்ட, சில சமயங்களில் பொறுப்பற்ற ஆட்சியாளர்களான இவர்கள் பாட்டியாலா மகாராஜாவின் ஆலோசனை மண்டபத்தில் கூடினார்கள். இந்தியாவைப் பல நூற்றாண்டுகளாக அச்சுறுத்தி வந்த பயங்கரத்தை இந்தக் கூட்டம் வைஸ்ராய்க்கு உணர்த்தியது. அரசியல் வாதிகள் இந்தியாவைப் பிரித்தார்கள் என்றால் இவர்கள் அதனை அழித்தே விடுவார்கள். துணைக் கண்டத்தை இரண்டாகப் பிரிப்பதோடு நிற்காமல் பல நாடுகளாய் துண்டாடி விடுவதாக இவர்கள் அச்சுறுத்தினர். இந்திய ஒற்றுமை என்ற பலவீனமான தளத்தின் கீழ் மறைந்திருக்கிற, பிரிவினையை உண்டாக்குகிற இனம், மதம், மொழி, பிராந்திய வாதம் ஆகிய உணர்வுகளைக் கட்டவிழ்த்து விடப்போவதாகவும் அவர்கள் மிரட்டினர். இந்த மன்னர்கள் தனியாக ராணுவத்தையும், விமானப்படைகளையும் வைத்திருந்தனர். இந்தியாவின் ரயில் பாதைகளையும், தபால் தொடர்புகள், தொலைபேசிகள், தந்திகள் ஆகியவற்றைச் சீர்குலைக்கும் சக்தி அவர்களிடம் இருந்தது. இந்தியாவின் வர்த்தக விமானங்களின் இயக்கத்தைக் கூட இவர்களால் மாற்றியமைக்க முடியும். சுதந்திரத்திற்கான இவர்களின் நெருக்குதலை ஏற்றுக் கொண்டால் துணைக்கண்டத்தின் ஒற்றுமையின்மைத் தொடங்கி விடும். இந்தியப் பேரரசின் எஞ்சியப் பகுதிகள் சண்டையிடும் இடங்கள் ஆகிவிடும். இந்தியாவின் மிகப்பெரிய அண்டைநாடான சீனாவின் பொறாமையை இது அதிகரித்து விடுவது உறுதி.

சர் கொன்ராட் கோர்ஃபீல்ட் (Sir Conrad Corfield) லண்டனுக்கு மேற் கொண்ட ரகசியப் பயணம் ஓரளவு வெற்றியையே அளித்தது. ஒரு காலத்தில் இந்திய மன்னர்கள் பிரிட்டிஷ் பேரரசிடம் ஒப்படைத்தப் பழைய பகுதிகளை மீண்டும் தங்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்று கோருவது வாதத்து அளவில் சரிதான் என்பதை பிரிட்டிஷ் அமைச்சரவை ஏற்றுக் கொண்டது. மன்னர்கள் தப்பிக்க ஒரு புழைக்கடை வழியை அவர் திறந்து விட்டார்.

இப்போது அதனைப் பயன்படுத்துவது மிக முக்கியம் என்பதை சில ராஜாக்களிடம் வற்புறுத்த அவர் தயங்கவில்லை.

லண்டனுக்கு மவுண்ட்பேட்டன் அனுப்பிய அறிக்கையில் கசப்புணர்வுடன் இப்படிக் குறிப்பிட்டிருந்தார்: 'மன்னர்களின் பிரச்சனை பிரிட்டிஷ் இந்தியாவின் பிரச்சனையை விட சிக்கலானது - ஏன் பெரும் சிக்கலானது என்பது பற்றி எவரும் எனக்கு லேசான அறிகுறியைக் கூட தெரிவிக்கவில்லையே.'

அதிர்ஷ்டவசமாக இந்திய மன்னர்களை சமாளிக்க மவுண்ட்பேட்டனை விட பொருத்தமான மனிதர் வேறு எவரும் இல்லை. அவர்களில் ஒருவராகவே அவர் இருந்தார். அந்த மன்னர்கள் பற்றி பல விவரங்களை அவர் அறிந்திருந்தார். ஐரோப்பாவின் மன்னர் பரம்பரையினரில் பாதிபேரோடு அவருக்கு ரத்த உறவு இருந்தது. இதற்கு மேலாக அந்த முடியரசுதான் இந்திய மன்னர்களை வெகுகாலம் பாதுகாத்தது. இப்போது இல்லாமலாக்க முயற்சி செய்யும் சிம்மாசனங்களில் இருந்த மன்னர்கள் பலரின் மூலமாகத்தான் மவுண்ட்பேட்டன் முதன் முதலில் இந்தியப் பேரரசைக் கண்டார். இவரது மைத்துனரான வேல்ஸ் இளவரசருடன் மேற்கொண்ட நெடிய சுற்றுப் பயணத்தின் போது அவர்களின் விருந்தினர்களாகவும் அவர் இருந்திருக்கிறார். அவர்களுடைய அரண்மனை யானைகளின் முதுகில் அமர்ந்து அவர்களின் வனப்பகுதிகளுக்குள் மவுண்ட்பேட்டன் புலிகளைத் தேடிச் சென்றிருக்கிறார். அவர்களின் வெள்ளிக் கோப்பைகளில் ஷேம்பன் மது அருந்தியுள்ளார். தங்கத் தட்டுகளில் கீழை நாடுகளின் சிறப்பு மிக்க உணவை உண்டிருக்கிறார். பின்னாளில் அவரின் மனைவியான பெண்ணுடன் மங்கலான ஒளி யுமிழும் கொத்து விளக்குகள் உள்ள நடன அறைகளில் நடனம் ஆடியிருக்கிறார். இந்தப் பயணத்தின் போது அரசப் பரம்பரையில் பல நண்பர்கள் அவருக்குக் கிடைத்தனர். இந்தியாவில் இருந்த நண்பர்களில் பலர் - அவர்கள் இந்தியரோ ஆங்கிலேயரோ தனிப்பட்ட முறையில் அவரின் பிரபலமான செல்லப் பெயரான 'டிக்கி' (Dickie) என்ற பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு நெருக்கமாக இருந்தார்கள்.

மவுண்ட்பேட்டனுக்கு அரச உறவுகள் இருந்தாலும், மன்னர்களுடன் நட்பு இருந்தாலும், திடசித்தமுள்ள எதார்த்தவாதியாகவும், கொள்கைகளில் உறுதி உள்ளவராகவும் அவர் இருந்தார். இதனால் தான் அவர் தொழிற்கட்சி அரசுக்கு ஏற்புடையவராக இருந்தார். இப்போதுள்ள இந்திய மன்னர்களின் தந்தையர், பிரிட்டிஷ் ராஜ்யத்தின் நண்பர்களாக நிச்சயம் இருந்திருப்பார்கள். இந்தியாவில் புதிய சகாப்தம் துவங்குவதை யடுத்து சோஷலிஸ்ட், காங்கிரஸ் உட்பட பல இடங்களிலிருந்து நண்பர்களைப் பிரிட்டன் கண்டறிய வேண்டியிருக்கும். இத்தகைய நட்புறவுகளை ஏற்படுத்திக் கொள்ள மவுண்ட்பேட்டன் தீர்மானித்தார். ஆனால் காலத்துக்கு ஒவ்வாத ஒரு சிறிய இனத்தின் அதிகார வர்க்கத்தினருக்காக, இந்தியாவின் தேச நலன்களை இரண்டாம் பட்சமாக்கி அத்தகைய உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளப் போவதில்லை என்பதையும் அவர் அறிந்தே இருந்தார்.

அவரது நண்பர்களுக்கு அவர் செய்யக்கூடிய நல்ல காரியம் அவர்களிடமிருந்தே அவர்களைப் பாதுகாக்க, கற்பனைகளிலிருந்தும் தற்பெருமை கொண்ட கனவுகளிலிருந்தும் பாதுகாக்க முயற்சி செய்வதுதான். அவர்களின் மக்களிலிருந்து தனிமைப்படுவதை இதனால் மட்டுமே எளிதாய் தடுக்க முடியும்.

அவர் இளைஞராக இருந்த காலத்திலிருந்து ஒரு பயங்கர காட்சி அவரது நினைவில் எப்போதும் சுழன்று வருகிறது. 1947இல் கூட அவரின் கண்களில் அது கண்ணீரை வரவழைத்தது. அவரது நினைவில் அடிக்கடி வந்து செல்வது அச்சம் தரும் ஏகாதரின்பர்க் (Ekaterinburg) நிலவறைதான். இங்கே தான் 1918இல், அவரது மாமாவான ஜார் சக்கரவர்த்தியும் அவருடன் விளையாடி மகிழ்ந்த மைத்துனர்களும், திருமணம் செய்து கொள்ளலாம் என ரகசியமாக நம்பிக்கை வைத்திருந்த இளவரசி மேரியும் கொல்லப்பட்டார்கள். இந்திய மன்னர்களில் அர்த்தமற்ற சாகசங்களைச் செய்யும் பொறுப்பில்லாத இறுமாப்புக் கொண்டோரும் இருப்பதை அவர் அறிவார். இப்படிப்பட்டவர்களின் செயலால் ஜாரின் நிலவறைபோல இவர்களின் அரண்மனைகளும் கல்லறைகளாகத்தான் மாறும். அவரது அரசியல் செயலாளர் கோர்ஃபீல்ட் மன்னர்களில் சிலரை அங்கே அனுப்பத்தான் வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்.

மவுண்ட்பேட்டன் தங்களைக் காப்பாற்றுவார் என்று மன்னர்களில் பலர் நினைத்துக் கொண்டிருந்தார்கள். அவர் செய்யப் போகும் அற்புதத்தால் தாங்களும் தங்களின் கவுரவமிக்க அரச வாழ்க்கையும் காப்பாற்றப்படும் என்றும் அவர்கள் நினைத்தனர். ஆனால் அவர் அதைச் செய்யப் போவதில்லை. அதற்கான அதிகாரமோ விருப்பமோ அவருக்கு இல்லை. மாறாக, அமைதியோடு எதிர்ப்பின்றி பழைய வாழ்க்கையை மறந்து விடுவதுதான் அவர்களுக்குள்ள ஒரே வழி என்ற கருத்தை அவரது நெடுங்கால நண்பர்கள் ஏற்றிட முயற்சி செய்யப் போகிறார்.

சுதந்திரம் என்ற கோரிக்கையைக் கைவிட்டு, இந்தியாவுடனா பாகிஸ்தானுடனா எதில் சேர விருப்பம் என்பதை ஆகஸ்ட் 15க்கு முன் அவர்கள் அறிவித்து விட வேண்டும் என்றே அவர் விரும்பினார். இதற்குக் கைமாறாக, அவர்களின் ஒத்துழைப்புக்கு விலையாய், தனிப்பட்ட முறையிலான எதிர்காலத்துக்குத் தேவையான சிறந்த ஏற்பாடுகளை உறுதி செய்வதற்கு, வைஸ்ராய் பதவியைப் பயன்படுத்தி, நேருவுடனும் ஜின்னாவுடனும் பேச மவுண்ட்பேட்டன் தயாராக இருந்தார்.

மன்னர்களின் மாநில விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் இந்திய அமைச்சரான வல்லபபாய் படேலுடன் முதலில் பேச அவர் உத்தேசித்திருந்தார். மன்னர்கள் தங்களின் பட்டங்களையும், அரண்மனைகளையும், மானியங்களையும், கைது செய்வதிலிருந்து பாதுகாப்பையும், பிரிட்டிஷாரின் பதக்கங்களைப் பயன்படுத்தும் உரிமையையும், பாதி அளவு அரச அந்தஸ்தையும் தக்க வைத்துக் கொள்ள காங்கிரஸ் ஒப்புக் கொண்டால், மன்னர்கள் உலகியல் சார்ந்த அதிகாரத்தையும், சுதந்திரக் கோரிக்கையையும் கைவிட்டு இந்திய யூனியனில் சேர்வதற்கும் அதற்கான சட்டத்தில் கையெழுத்திடுவதற்கும் அவர்களைச் சம்மதிக்க வைப்பதற்குத் தாம் முயற்சி செய்வதாக மவுண்ட்பேட்டன் கூறினார் *

* மன்னர்களுக்கு இறுதி வாக்குறுதியாய் அமைந்த இவர்களின் ஒப்பந்த ஷரத்துகள் இந்திய அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டன. நீண்ட பல தொடர் நடவடிக்கைகளுக்குப் பின், கடைசி வைஸ்ராய்க்குப் பெரும் வேதனை தரக்கூடிய செயலாக, 1973இல் இந்தச் சலுகைகளைப் பறிப்பதில் பிரதம மந்திரி இந்திராகாந்தி வெற்றி பெற்றார். மன்னர்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பு அந்தஸ்துகள் முடிவுக்கு வந்தன.

இந்தக் கோரிக்கை கவர்ச்சிகரமாகவே இருந்தது. மன்னர்களுடன் பேரம் பேசுவதற்கு மவுண்ட்பேட்டனுக்கு நிகராகக் காங்கிரஸ் கட்சியில் எவரும் இல்லை என்பது படேலுக்குத் தெரியும். ஆனால் அவர் வைஸ்ராயிடம் சொன்னார்: 'அதில் எல்லோரும் இருக்க வேண்டும். மரத்தின் எல்லா ஆப்பிள்களையும் கூடையில் நிரப்பிக் கொண்டு வர உங்களால் முடிந்தால் அதை நான் வாங்கிக் கொள்வேன். அதில் எல்லா ஆப்பிள்களும் இல்லையென்றால் நான் வாங்க மாட்டேன்.'

'ஒரு டஜனை எனக்கு நீங்கள் விட்டுக் கொடுக்கக்கூடாதா?' வைஸ்ராய் வினவினார்.

'அது மிகவும் அதிகம், வேண்டுமென்றால் உங்களுக்கு இரண்டு தருவேன்' படேல் பதிலளித்தார்.

'இது மிகவும் குறைவு' மவுண்ட்பேட்டன் சொன்னார்.

யுஎஸ்ஏவின் (அமெரிக்க ஐக்கிய நாடுகளின்) மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினைக் கொண்ட மாநிலங்கள் பற்றி இந்தியாவின் கடைசி வைஸ்ராயும் எதிர்கால அமைச்சரும் கம்பளி வியாபாரிகள் போல சில நிமிடங்கள் பேரம் பேசினார்கள். இறுதியில் ஆறு என்ற எண்ணிக்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். மவுண்ட்பேட்டனின் முன்னுள்ள பெரும் பிரச்சனையை இது எளிதாக்கவில்லை. ஐநூற்று அறுபத்தைந்து மன்னர்களில் இந்த ஆறினையும், பாகிஸ்தானில் உள்ள மேலும் சிலவற்றையும் கழித்து விட்டால் கூட, ஆகஸ்ட் 15க்கு சில வாரங்களே இருக்கும் நிலையில், எதிர்ப்பு தெரிவிக்கும் மரத்திலிருந்து 550க்கும் அதிகமான ஆப்பிள்களை மவுண்ட்பேட்டன் பறிக்க வேண்டியிருந்தது.

ஓர் இந்தியரிடமிருந்து ஓர் ஆங்கிலேயர் இதுவரைப் பெற்றிராத மிகச்சிறப்பு வாய்ந்த கோரிக்கையை ஜவஹர்லால் நேரு எழுப்பினார். காலனியாதிக்கம் முடிவுக்கு வரும் வரலாற்றுத் தொகுப்பில் இது ஒப்பற்றதாக இருக்கும். எந்த சக்தியை எதிர்த்துப் பல இந்தியர்கள் போராடுகிறார்களோ, அதன் அடையாளமாக உள்ள, முடியரசின் கடைசி வைஸ்ராயான மவுண்ட்பேட்டனிடம், பல மணி நேரம் அவர்கள் ஒன்றாக அமர்ந்து ஆர்வமுடன் விவாதித்த கூட்ட அறையிலிருந்து கொண்டு, அந்தக் கோரிக்கையை நேரு முன்வைத்தார். சுதந்திர இந்தியாவுக்கு அளிக்கப்படவிருக்கும் மிகவும் பெருமை மிகு கவர்னர் ஜெனரல் பதவியை முதலில் வகிப்பவராக மவுண்ட்பேட்டன் இருக்க வேண்டும் என்பதுதான் அந்தக் கோரிக்கை.

நேருவின் இந்த யோசனைக்கான கரு அவரது எதிராளியான ஜின்னாவிடமிருந்து வந்தது. துணைக் கண்டத்தின் சொத்துகளில் நியாயமான பங்கு பாகிஸ்தானுக்குக் கிடைக்கும் என்பதை உறுதி செய்து கொண்ட ஜின்னா, பிரிவினை முற்றுப் பெறும் வரை, ஆகஸ்ட் 15க்குப் பின்னும், மவுண்ட்பேட்டன் இங்கே தங்கியிருந்து, ஒரு வகையில் உயர் நிலை மத்தியஸ்தராக செயல்பட வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்திருந்தார்.

உயர்ந்த கவுரவம் அளிக்கப்பட்டாலும் அதனை ஏற்றுக் கொள்வதில் மவுண்ட்பேட்டனுக்கு பெரும் தயக்கம் இருந்தது. அவரது மனைவிக்கும் அப்படியே. இந்தியாவில் நான்கு மாதங்கள் இருந்த போது, சாதுர்யமாகப் பல

வெற்றிகளை அவர் பெற்றிருக்கிறார். அவர்கள் நம்பிக்கை கொண்டிருப்பது போல் 'புகழ் ஒளி வீசும்' இந்தத் தருணத்திலேயே அவரும் அவரது துணைவியாரும் சென்று விடலாம். விரைவில் துன்பங்கள் சூழவிருக்கின்றன என்பதை அவர் நன்கு அறிவார் இங்கு மேலும் தங்கினால், ஏற்கெனவே செய்திருந்த சாதனைகள் எல்லாம் சீர்குலையும். முறையாக செயல்பட்டால், இதே போன்ற கோரிக்கை ஜின்னாவிடமிருந்தும் வரக்கூடும் என்று அவர் எண்ணினார்.

இருப்பினும் இறந்து கொண்டிருக்கும் அந்த முஸ்லீம் தலைவருக்கு, தாம் அரும்பாடுபட்டுப் பெற்ற நாட்டின், பகட்டும் ஆடம்பரமும் மிக்க உயர்ந்த பதவியை ஏற்கத் தயக்கம் ஏதும் இல்லை. தாமே பாகிஸ்தானின் முதல் கவர்னர் ஜெனரலாக இருக்கப் போவதாக அவர் மவுண்ட்பேட்டனிடம் கூறினார்.

ஆனால் தவறான வேலையைத் தேர்ந்தெடுப்பதாக இதற்கு மவுண்ட்பேட்டன் எதிர்ப்புத் தெரிவித்தார். இரண்டு டொமினியன்களில் செயல்படுத்தப் போகிற பிரிட்டிஷ் அரசியலமைப்பு நடைமுறைகளின் படி பிரதம மந்திரிதான் அனைத்து அதிகாரமும் கொண்டவர். கவர்னர் ஜெனரல் பதவி என்பது உண்மையான அதிகாரம் ஏதும் இல்லாத பிரிட்டிஷ் மன்னரைப் போன்ற ஒரு அடையாளபூர்வ பதவிதான்.

அவரது வாதம் ஜின்னாவை அசைத்து விடவில்லை. 'பாகிஸ்தானில் நான் தான் கவர்னர் ஜெனரலாக இருப்பேன். நான் சொல்வதைத்தான் பிரதம மந்திரி செய்ய வேண்டும்' ஜின்னா அலட்டிக் கொள்ளாமல் பதிலளித்தார்.

நேருவின் கோரிக்கையால், இங்கிலாந்துக்கு மாபெரும் கவுரவம் கிடைத்திருப்பதை உணர்ந்த அட்லியும், சர்ச்சிலும் மவுண்ட்பேட்டனின் மைத்துனரான அரசரும், இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு மவுண்ட்பேட்டனை வற்புறுத்தினார்கள். ஜின்னாவும் அதையே தான் செய்தார்.

இருப்பினும் அவர் அதனை ஏற்பதற்கு முன் ஒரு மனிதரின் ஆசி அவருக்குத் தேவைப்பட்டது. அஹிம்சைக் கொள்கையைத் தெளிவாக வலியுறுத்தி வரும் அந்த மனிதர், சுதந்திர இந்தியாவின் முதலாவது தலைவராக, போர்க் கலைக்குத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த ஒருவரை நியமிக்க ஒப்புதல் அளிப்பார் என்பதை எண்ணிப் பார்க்கவும் முடியாது என்பது முதல் விஷயம். அது மட்டுமின்றி, 'மனதில் உறுதியுள்ள, ஊழல் அற்ற, படிகம் போல் தூய்மையான' தீண்டத்தகாத சமுதாயத்தின் துப்புரவுத் தொழிலாளியான பெண் ஒருவர் தான், இந்தப் பதவிக்கு உரியவர் என்ற, தனது கொள்கைக்கு ஒத்துப் போகும் ஒரு யோசனையை மகாத்மா ஏற்கெனவே உலகத்துக்கு அறிவித்து விட்டார்.

பல விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், காந்திக்கும் அவரை விட முப்பது வயது குறைவான அட்மிரலுக்கும் இடையே உண்மையான நட்பு வளர்ந்து கொண்டிருந்தது. மவுண்ட்பேட்டன் காந்தியால் கவரப்பட்டிருந்தார். குழந்தைத்தனமான காந்தியின் நகைச்சுவையை அவர் நேசித்தார். அவர் டில்லிக்கு வந்ததிலிருந்து, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் அச்சடித்தாற்போன்ற இறுகிப் போன நடைமுறைகளை நிராகரித்து விட்டு மகாத்மாவையும் அவரின் யோசனைகளையும் திறந்த மனதுடன் கவனித்தார். அவர்களின் ஒவ்வொரு

சந்திப்பிலும், காந்தியுடன் அவரின் தனிப்பட்ட நட்பு வளர்ந்து கொண்டே யிருந்தது.

இயல்பாகவே அன்பு நிறைந்த காந்தி, மவுண்ட்பேட்டனின் அன்பை உணர்ந்து அதனை அங்கீகரிக்கவும் செய்தார். பிரிட்டிஷாரின் சிறைகளில் பல ஆண்டுகள் கழித்த அந்த மனிதர், ஜூலை மாதத்தில் ஒரு நாள் மாலை வைஸ்ராயின் கூட்ட அறைக்குள் சென்றார். இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக வரவேண்டும் என்ற காங்கிரசின் அழைப்பை ஏற்றுக் கொள்ளுமாறு மவுண்ட்பேட்டனை காந்தி கேட்டுக்கொண்டார். இந்தப் பதவியை மவுண்ட்பேட்டனின் நாட்டினரிடமிருந்து கைப்பற்றுவதற்கு காந்திக்கு 35 ஆண்டுகள் பிடித்தன.

காந்தியின் இந்த வார்த்தைகள் மவுண்ட்பேட்டனுக்கும் அதே அளவு சமமாக பிரிட்டிஷாருக்கும் கிடைத்த தனிப்பெரும் புகழாகும். மிகப்பெரிய நாற்காலியில் குறுகி அமர்ந்திருக்கும் காந்தியைப் பார்த்த மவுண்ட்பேட்டன் உணர்ச்சிவசப்பட்டார். 'நாம் அவரை சிறையில் அடைத்திருக்கிறோம்; புண்படுத்தியிருக்கிறோம்; அவமதித்திருக்கிறோம்; புறக்கணித்திருக்கிறோம். ஆனால் இதனைச் செய்யும் பெருந்தன்மை உணர்வு இன்னமும் அவரிடம் இருக்கிறதே' என்று மவுண்ட்பேட்டன் எண்ணினார். கண்களில் நீர்முட்ட, காந்தி அளித்த ஊக்கத்திற்கு மவுண்ட் பேட்டன் நன்றி தெரிவித்தார்.

தலையசைத்து அவரது வார்த்தைகளை ஏற்றுக் கொண்ட காந்தி, பேச்சைத் தொடர்ந்தார். தனது மெலிந்த கையை நீட்டி, பரந்து விரிந்த வைஸ்ராயின் மாளிகையையும் அதன் மிகப் பெரும் மொகல் தோட்டத்தையும் காந்தி சுட்டிக்காட்டினார். அரசத் தன்மையுள்ள அந்த இடத்தின் ஒவ்வோர் அங்குலத்தையும் நேசித்த, அதன் ஆடம்பரத்தையும், பகட்டையும் கவர்ச்சி யையும் அனுபவித்த, சமையல் கூடங்களாலும், வேலையாட்களாலும் மகிழ்ச்சி யடைந்த, அதன் செல்வ வளங்கள் ஒவ்வொன்றையும் ருசித்து மகிழ்ந்த வைஸ்ராயிடம் காந்தி சொன்னார்: 'இவையெல்லாம், சுதந்திர இந்தியாவில் போய் விடும்.' செருக்கு மிகுந்த இதன் வளங்களும், கடந்த காலத் தொடர்பு களும், வறுமையில் உழலும் இந்திய மக்களுக்கு அவமதிப்பாகும். இந்தியாவின் புதிய தலைவர்கள் உதாரணங்களை உருவாக்க வேண்டும். அவர்களது நாட்டின் முதல் தலைவராக இருக்கப் போகிறார் என்று அவர் நம்பிக்கை வைத்துள்ள மவுண்ட்பேட்டன் இதற்குத் தலைமை தாங்க வேண்டும். வைஸ்ராய் மாளிகையிலிருந்து வெளியேறி வேலையாட்கள் இன்றி, எளிய வீட்டில் வாழ வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். லூட்டினின் அரண்மனை மருத்துவ மனையாக மாற்றப்படும்.

மவுண்ட்பேட்டனின் முகம் இறுக்கமானது. கோணலான புன்னகை யொன்று முகத்தில் வந்து மறைந்தது. சூழ்ச்சித்திறனுள்ள காந்தி, எனது கழிவறையை நானே சுத்தம் செய்ய வேண்டும் என்று சொல்கிறார் என்பதைத் தவிர வேறென்ன இது என்று அவர் எண்ணினார். மிகப்பெரிய தீய அறிகுறியாகக் கருதும் அந்தப் பொறுப்பை தம்மீது சுமத்த அட்லியும், மன்னரும், நேருவும் ஜின்னாவும் முயற்சித்தார்கள். இப்போது மகிழ்ச்சி நிரம்பியவரும் சூதுவாதுள்ளவருமான இந்த முதிய மனிதர், அவரை மனித குலத்தின் ஐந்தில் ஒரு பகுதி மக்களுக்கு அடையாளபூர்வ தலைவராக, இந்தியாவின் முதல்

சோஷலிஸ்டாக்க முயற்சி செய்கிறார். ஒரு பாழடைந்த பங்களாவிலிருந்து ஆட்சி செய்யவும் ஒவ்வொரு நாள் காலையிலும் அதனை அவரே பெருக்கு மாறும் செய்து விடுவார் அந்த வயதான மனிதர்.

லூயி மவுண்ட்பேட்டனின் கூட்ட அறையில் இருந்த ஒளியுமிழும் வெள்ளைநிறம், தனக்குரிய சட்டத்துறை அறையில் உள்ள தீய அறிகுறியான இருளிலிருந்து வேறுபட்ட உலகத்தைக் காட்டுவதாக சர் சிரில் ராட் கிளிஃப் கருதினார். இந்த வித்தியாசம் அவர் பணியாற்றிய லண்டனிலிருந்து பெற்ற தகவலுக்கும், புதுடில்லிக்கு வந்த பிறகு வைஸ்ராயிடமிருந்து பெற்றதற்கும் இடையேயான அதே அளவுக்குப் பெரிதாக இருந்தது.

ஒவ்வொரு மாகாணத்திலும் நான்கு நீதிபதிகள் குழு அவருக்கு உதவி செய்யும். எல்லைக் கோடுகள் எந்த வழியாகச் செல்ல வேண்டும் என்பது பற்றி இவர்கள் கூட்டாகத் தங்களின் பரிந்துரைகளை அளிப்பார்கள் என்று மவுண்ட்பேட்டன் விளக்கினார். உண்மையில் எல்லா முடிவுகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பை அவரே ஏற்றுக் கொண்டார். இதற்காக நியமிக்கப்பட்ட நீதிபதிகள், கருத்து வேறுபாடுள்ள கட்சிகளால் தேர்வு செய்யப்பட்ட நீதிபதிகள், தங்களுக்கிடையே உள்ள மாறுபட்ட கருத்துகளுக் காக வாதாடும் வழக்கறிஞர்களாகி விட்டார்கள். இவர்களால் எப்போதாவது எதையாவது ஏற்க இயலுமா?

'அருகேயுள்ள பகுதியில் பெரும்பான்மையினர் முஸ்லீம்களா முஸ்லீம் அல்லாதவர்களா என்பதை உறுதி செய்து கொண்டு' அவர் எல்லைக் கோடுகளை வரைய வேண்டும். இதைச் செய்யும் போது அவர் 'மற்ற சில விஷயங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும்.' மற்ற விஷயங்கள் என்றால் எவை என்பதையோ அவற்றில் எதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதையோ அவருக்குத் தெரிவிக்க எவருக்கும் எண்ணமில்லை. அப்படிச் செய்தால் நேருவும் ஜின்னாவும் இன்னொரு முடிவற்ற விவாதத்தில் ஈடுபட நேரிடும்.

அவருக்குத் தீர்மானமாக அளிக்கப்பட்ட ஒரே ஒரு அறிவுரையும், முற்றிலும் தவறான கணிப்பின் அடிப்படையிலானது என்பதுதான் விபரீதம். ஒரு நாட்டின் எல்லைகளை உருவாக்கும் போதும் பாதுகாப்பு பற்றி பரிசீலிக்கும் போதும் தொடக்கத்தில் வரும் பிரச்சனைகளை ஒதுக்கித் தள்ளிவிடலாம் என்ற அறிவுரையை, இந்திய ராணுவத்தில் தலைமைத்தளபதியான ஃபீல்ட் மார்ஷல் சர் கிளாட் ஆச்சின் லெக் வழங்கினார். எதிர்காலத்தில் இந்தியா - பாகிஸ்தான் இடையேயான உறவு நட்பு ரீதியாக இருக்கும் என்று எண்ணித்தான் அவர் இப்படிக் கூறினார்.

இருப்பினும் இந்த விஷயங்கள் ராட் கிளிஃபுக்கு வரவிருந்த பேரதிர்ச்சிக்கான துவக்க அதிர்வுகளாக மட்டுமே இருந்தன. அவருக்கு அளிக்கப்பட்ட பணி சிக்கலானது தான் என்றாலும், அதனை உளப்பூர்வமாகவும், கவனமாகவும் செய்து முடிக்க குறைந்தபட்ச கால அவகாசமும் வசதிகளும் அளிக்கப்படும் என்று எண்ணியே ராட் கிளிஃப் டில்லிக்கு வந்தார்.

இப்போது மவுண்ட்பேட்டனின் விளக்கத்தை அவர் கேட்டார். அவரது எல்லை வரையறை முடிவு ஆகஸ்ட் 15க்குள் தயாராய் இருப்பது அவசியம்.

இந்தத் தேதிக்கு சில வாரங்களே உள்ளன. அவரால் பிரிக்கப்பட வேண்டிய நிலப்பரப்பை பார்க்கக் கூட முடியாது என்பது தான் மவுண்ட்பேட்டனது வார்த்தைகளின் பொருள். தம் மீது திணிக்கப்படும் இந்தப் பயங்கர வேகம் தப்புகளும் தவறுகளும் ஏற்பட வழிவகுக்கும்; இவற்றிலும் சில மிக மோசமான தாக இருக்கும் என்று அவர் மவுண்ட்பேட்டனை எச்சரித்தார்.

அவர் சொல்வது சரிதான் என்பதை மவுண்ட்பேட்டனும் அங்கீகரித்தார். ஆனால் நேரம் இல்லை. அவரது முடிவால் ஏற்படும் குறைகளை ஏற்க வேண்டியது, இந்தியாவுக்குத் தவிர்க்கமுடியாததாகவும் அவசியமானதாகவும் இருக்கும். ராட் கிளிஃபுக்கு வழங்க மவுண்ட்பேட்டனிடம் ஒரு சில கட்டளை வார்த்தைகள் மட்டுமே இருந்தன; ஆனால் அவை உறுதியானவை. இப்பணியை ஆகஸ்ட் 15க்குள் முடியுங்கள்.

உறுதிமிக்க சுதந்திர மனிதரான ராட் கிளிஃப் வைஸ்ராயின் வார்த்தைகளை இறுதியானதாக எடுத்துக் கொள்ளவில்லை. தனிப்பட்ட முறையில் அவர் நேருவையும் ஜின்னாவையும் சந்தித்தார். இருவரிடமும் தனித்தனியே ஒரே கேள்வியைக் கேட்டார்: குறைபாடுகள் இருந்தாலும் ஆகஸ்ட் 15க்குள் எல்லைக் கோடுகளை இறுதி செய்வது மிகவும் அவசியமானதா? அவசியம்தான் என்று இருவரும் வற்புறுத்தினார்கள்.

இவர்களின் வற்புறுத்தலுக்குப் பின் அந்த முடிவை செயல்படுத்துவதைத் தவிர ராட் கிளிஃபுக்கு வேறு வழியில்லை. பஞ்சாபையும் வங்காளத்தையும் பிரிப்பதற்கு தமக்குத் தேவைப்படுவது அறுவை சிகிச்சை மருத்துவரின் கத்தியல்ல; கசாப்புக் கடைக்காரரின் கொடுவாள்தான் என்பதை அவர் உணர்ந்தார்.

## பஞ்சாப், ஜூன் 1947

சிரில் ராட்கிளிஃப் பிரிவினை செய்ய விதிக்கப்பட்ட இந்தியாவின் இரண்டு பெரிய மாகாணங்களில் ஒன்றான பஞ்சாபின் வயல் வெளி நிலம் வைஸ்ராயின் கூட்ட அறை ஜன்னல்களிலிருந்து சுமார் பனிரெண்டு மைல்களில் தொடங்கியது. இந்தத் தங்க வயல்களில் பார்லியும், வெயிலால் சிவந்த கோதுமையும், அலைஅலையாய்ப் பலவகை தானியங்களும், கரும்பும் அறுவடைக்குத் தயாராக இருந்தன. இந்தியாவின் நெற்களஞ்சியமான பஞ்சாப் இதற்கு முன் எப்போதும் இவ்வளவு பெரும் விளைச்சலைக் கண்டதில்லை. இந்தியாவின் செல்வச் செழிப்புமிக்க மண்ணின் முதல் விளைச்சலைக் குவித்தபடி, மரச்சக்கரங்கள் கொண்ட வண்டிகளை, புழுதி படிந்த சாலைகள் வழியே, காளைகள் ஏற்கெனவே மெதுவாக சிரமத்துடன் இழுத்துச் செல்லத் துவங்கி விட்டன.

தளர்ச்சியுடன் அவை செல்லும் கிராமங்கள் ஒரு சில வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் தோற்றத்தில் ஒரே மாதிரியாக இருந்தன. பச்சை நிற பாசியால் மூடப்பட்ட தண்ணீர் நிறைந்த குளம். இங்கே பெண்கள் துணிகளை அடித்துத் துவைத்தனர்; சிறார்கள் குளித்தனர்; சாட்டையடி பட்ட, கருமையான, சாணத்தில் புரண்ட எருமைகள் குளிப்பாட்டப்பட்டன;

மண்சுவர் கொண்ட வீடுகள். இவற்றில் எருமை மாடுகள், வெள்ளாடுகள், பசுக்கள், நாய்களும் இருந்தன. கணுக்கால் அளவு சேற்றில் வெறுங்காலுடன் குழந்தைகள் குதித்துக் கலக்கிக் கொண்டிருந்தன. குட்டையாகத் தேங்கி நின்ற பசுமாட்டின் மூத்திரம் சூரிய வெப்பத்தில் ஆவியாகி நெடி ஏற்படுத்தியது; உணவுக்குத் தேவையான தானியங்களை அரைக்கும் அரைவைக் கல் ஆலையில் கூன் விழுந்த முதுகு கொண்ட எருதுகள் வட்டவடிவில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தன. உணவு சமைக்க எரிபொருளாகப் பயன்படுத்தப்படும் பசுமாட்டுச் சாண வரட்டிகளைப் பெண்கள் தட்டிக் கொண்டிருந்தனர்.

மொகலாய சாம்ராஜ்யத்தில் உல்லாசமாக வாழ்ந்த இளவரசி பற்றிய ‘ஆயிரத்தொரு இரவுகள்’ கதை சொல்லும் பேரரசின் தலைநகராக இருந்த லாகூர் நகர் பஞ்சாபின் இதயமாக இருந்தது. இதன் மீது மொகலாய மன்னர்கள் தங்கள் கைவினைக் கலைஞர்களின் திறமைகளைப் பயன்படுத்தி அழகிய மலர்களை மலரச் செய்திருந்தனர். அவுரங்கசீபின் பெரிய மசூதியில் நூற்றாண்டு காலப் புழுதியையும் கடந்து இன்னமும் பளபளக்கும் சித்திர வேலைப்பாடுகள், அங்குள்ள நினைவிடத்தில் பளிங்குக் கற்களின் மீது பொறிக்கப்பட்ட கடவுளின் 99 திருநாமங்கள்; அரைவட்ட வளைவுகள் செதுக்கப்பட்ட வண்ணமயமான மேல்மாடங்கள், பளிங்காலான சாளரங்கள் ஆகியவற்றுடன் கம்பீரமாக நிற்கும் அக்பரின் கோட்டை; சிறைக்காவலனை மணந்து ராணியான பேரழகி நூர்ஜஹானின் கல்லறை; அக்பரின் அந்தப்புர அணிகலனாகவும், ‘மாதுளம் பூ நிற அழகி’யாகவும் இருந்து அவரின் மகனிடம் புன்னகை பூத்ததற்காக உயிருடன் புதைக்கப்பட்ட அனார்கலியின் கல்லறை; ஷாலிமார் தோட்டத்தில் சலசலவென ஒலியெழுப்பும் 300 நீரூற்றுக்கள் ஆகியவை அங்கே இருந்தன.

டில்லியைக் காட்டிலும் அதிகமாகப் பல தரப்பு மக்கள் வாழும், பம்பாயை விட அதிகமாக உயர் குடியினரைக் கொண்ட, கல்கத்தாவைவிடத் தொன்மையான இந்த நகர் பல காரணங்களால் இந்தியாவின் வெகு கவர்ச்சியானது. இந்த நகரின் இதயப் பகுதியாக இருந்தது அகன்ற வீதியான மால். இதில் சிற்றுண்டி விடுதிகளும், கடைகளும், உணவு விடுதிகளும், திரையரங்குகளும் நிறைந்திருந்தன.

லாகூரில் புத்தகக் கடைகளை விட அதிகமாக மதுபானக் கடைகள் இருந்தன. கோயில்களுக்கும் மசூதிகளுக்கும் சென்று வழிபடுவோரை விட அதிகமானவர்கள் கேபரே நடன அரங்குகளில் நிரம்பி வழியும் வாடிக்கையாளர்களாக இருந்தனர். அதன் சிவப்பு விளக்குப் பகுதி இந்தியாவிலேயே மிகவும் புகழ் பெற்றது. கீழை நாடுகளின் பாரிஸ் என்ற பெயர், நீண்ட காலத்துக்கு முன்பே இதற்குக் கிடைத்து விட்டது.

‘இந்த நகரின் மாணவர்கள் நடிகர்கள் போல் உடையணிந்தனர்; நடிகர்களோ குழுநடனக்காரர்கள் போல் உடையணிந்திருந்தனர். இதன் குடும்பப் பெண்களோ அந்தப்புர அணங்குகள் போல் இருந்தனர்; அந்தப்புர அணங்குகளோ லண்டனின் மாடல் அழகிகள் போல் இருந்தனர். கவர்ச்சி நிறைந்த தொள தொளப்பான சுசாஞ்சி எனும் பட்டு ஆடையின் தாயகம் இதுதான். பண்டைக்கால மன்னர்களின் அந்தப்புரங்களில் இருந்த பெண்கள் அணிந்திருந்தது போல கணுக்கால் அளவில் முடிபோடப்பட்ட பட்டு நிஜாரின்

மீது, முட்டி அளவுக்கு நீண்டிருக்கும் மடிப்புகளைக் கொண்ட அங்கிதான் அது. சில இந்தியப் பெண்கள் புடைவைக்குப் பதிலாக இதனை அணிந்திருந்தார் கள் என்று ஒரு பார்வையாளர் குறிப்பிட்டிருந்தார்.

புதிய தலைமுறையின் தலைவர்களை உருவாக்குவதற்காக கல்வி நிறுவனங் கள் எனும் சிறந்த பதனச்சாலைகளை அமைக்க ஆங்கிலேயர்கள் தேர்ந்தெடுத்த இடமும் லாகூர் தான். அந்தக் கல்வி நிலையங்களில் அமைக்கப்பட்ட தேவாலயங்களில் மத்திய கால (கோதிக்) கூம்புகள், கிரிக்கெட் ஆடுகளம்; லத்தீன் கிரேக்க சொற்கள் நிறைந்த பாடப் புத்தகங்கள்; பிரம்பைச் சுழற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள்; 'சொர்க்கத்தின் ஒளி நமக்கு வழிகாட்டட்டும்' 'அறியத் துணிவு கொள்' என்பன போன்ற கொள்கைகளைப் பொறித்த பள்ளித் தொப்பிகள் மற்றும் பட்டைகள் என இவை எல்லாம் ஆங்கிலேயப் பள்ளிகளின் அச்சாக இருந்தன. இவை தான் பஞ்சாபின் வெப்பச் சமவெளியில் பதியம் போடப்பட்டன.

விளையாட்டுகளின் போதும் குழுவாகவும் பிடிக்கப்பட்டு சுவர்களில் மாட்டப்பட்டிருந்த புகைப் படங்களிலிருந்து மஞ்சள் பட்டை தகுதியுடைய விளையாட்டு வீரர்கள் உற்று நோக்கினர். கருப்பு நிறப்பட்டை தகுதி கொண்ட இளைய முகத்தினரும், சொர சொரப்பான தொப்பிகளுடனோ, பெருமிதத் தோடு ஹாக்கி மட்டைகளில் அல்லது கிரிக்கெட் பேட்களில் சாய்ந்து கொண்டோ கூர்ந்து நோக்கினர் தேவாலயத்தில் இந்து, முஸ்லீம், சீக்கியர்களான இளைஞர்கள் பக்கம் பக்கமாய் நின்றனர்; ஊக்கமூட்டும் பழைய கிருத்துவப் பாடல்களைப் பாடினர்; சாசர், தாக்கரே ஆகியோரின் நூல்களைப் படித்தனர். ஆட்சியாளர்களின் குணங்களை அப்படியே பெற வேண்டும் என்பதற்காக விளையாட்டுத் திடல்களில் ஒருவரோடு ஒருவர் மோதும் போது காயம்பட்டு ரத்தம் சிந்தினர். அந்த ஆட்சியாளர்களிடமிருந்து தான் இப்போது தங்களின் துணைக் கண்டத்திற்கான சாவிகளை உரிமை கோரினர்.

அனைத்துக்கும் மேலாக லாகூர் சகிப்புத்தன்மை மிக்க நகராய் இருந்தது. பாரம்பரியமாகவே இங்கே வாழ்ந்த 5,00,000 இந்துக்கள், 1,00,000 சீக்கியர்கள் 6,00,000 முஸ்லீம்களிடையே மதரீதியான கருத்து வேறுபாடுகள் இந்தியாவில் வேறெங்கும் இருப்பதை விடக் குறைவாகவே இருந்தன. ஜிம்கானா மற்றும் காஸ்மோபாலிடன் கிளபுகளின் நடன அரங்குகளில், இந்தச் சமூகத்தினருக்கு இடையேயான இடைவெளி ஒரு சேலையின் கனத்தை விட குறைவாகவே இருந்தது. சீக்கியர்களும், முஸ்லீம்களும், இந்துக்களும் சேர்ந்து ரம்பா (Rumbaed) எனும் கியூபா நடனத்தையும் ஃபாக்ஸ் ட்ராட் (Fox-trot) எனும் அமெரிக்க நடனத்தையும் ஆடினர். வரவேற்புகள், விருந்துகள், பாலே நடன அரங்குகளில் இந்தச் சமூகத்தினர் வேறுபாடின்றி ஒன்றிக் கலந்தனர். புறநகர்ப் பகுதிகளில் செல்வச் செழிப்பு மிக்க முதல் தரமான தோட்ட வீடுகளை இந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லீம்கள், கிருத்தவர்கள், பார்சிகள் என்ற வேறுபாடின்றி அனைவரும் சொந்தமாகப் பெற்றிருந்தனர்.

இவையெல்லாம் வண்ணக் கனவாகப்போகின்றன. அந்தக் கனவு 1947 ஜூலையில் வேகவேகமாக முடிவை நோக்கிச் சென்றது. பஞ்சாபில் முஸ்லீம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் முஸ்லீம்லீகின் தீவிர உறுப்பினர்கள் ரகசிய ஊர்வலங்களை ஜனவரி மாதத்திலிருந்தே நடத்தி வந்தனர். இந்தியாவின்

வேறு ஏதோ ஒரு பகுதியில் இந்துக்களின் தாக்குதல்களில் பழிவாங்கப்பட்ட முஸ்லீம்களுடையவை என்று கூறப்படுவோரின் படங்கள், மண்டை ஓடுகள், எலும்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வகுப்புத் துவேஷம் என்ற தீயை வளர்த்தனர். சில சந்தர்ப்பங்களில் படுகாயமடைந்த நபரே தனது காயங்களைக் காட்டுவதற்கு ஒவ்வொரு ஊர்வலத்துக்கும் அனுப்பப்பட்டார். இந்த மாகாணத்தில் பத்தாண்டு காலமாய் நடத்தப்பட்ட, இந்து முஸ்லீம் சீக்கியரின் கூட்டணி அரசு, ராஜினாமா செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை, இத்தகைய திட்டமிட்ட வகுப்புவாத வன்முறைகளும், ஆர்ப்பாட்டங்களும் ஏற்படுத்தின. இதன் காரணமாக நிர்வாகப் பொறுப்பினை கவர்னர் சர் இவான் ஜென்கின்ஸ் (Sir Evan Jenkins) தன் கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

'பாகிஸ்தான் ஒழிக' என்ற கூச்சலுடன் சீக்கியத் தலைவர் ஒருவர் முஸ்லீம் லீக் கொடி பறந்த கம்பத்தை வெட்டிச் சாய்த்ததையடுத்து மார்ச் மாதத் துவக்கத்தில் வன்முறையின் முதல் அலை எழுந்தது. அவரது சவாலுக்கு விரைவான ரத்தமயமான பதிலை முஸ்லீம்கள் அளித்தனர். இதைத் தொடர்ந்த மோதல்களில் 3000க்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் சீக்கியர்கள். முஸ்லீம்கள் கூட்டமாய்ச் சென்று அழித்த பல சீக்கிய கிராமங்களை இந்திய ராணுவத்தின் வடக்குப்பகுதி தலைமைத் தளபதி லெஃப்டினன்ட் ஜெனரல் ஃப்ராங்க் மெஸ்ஸெர்வி (Frank Messervy) விமானத்தின் மூலம் பார்வையிட்டார். 'வேட்டையாடலுக்குப் பின் குவிந்து கிடந்த காட்டுக் கோழிகள் போல' கொலை செய்யப்பட்ட சீக்கியர்களின் உடல்கள் வரிசை வரிசையாய்க் கிடந்ததைக் கண்டு அவர் பயந்தே போனார்.

ஒரு வழியாய் ஒழுங்கை நிலைநாட்டுவதில் நிர்வாகத்தினர் வெற்றி பெற்றனர். ஆனாலும் வளர்ந்து வந்த உணர்ச்சி நிலையால் அதன் பின்னரும் மோதல்கள் வெடித்து சில சம்பவங்கள் நிகழவே செய்தன. அப்படிப்பட்ட ஒன்றில் அழிந்தது தான் கஹூதா கிராமம். அதைத்தான் லூயி மவுண்ட் பேட்டன் ஏப்ரல் மாதம் பார்வையிட்டார்.

அவர்கள் பரப்பிய விஷம் லாகூரின் வீதிகளில் கசிந்தது. வரைபடத்தின் மீது கோடுகள் வரைந்து அதன் விதியைத் தீர்மானிக்க விருந்த சர் சிரில் ராட் கிளிஃப் அந்த நகருக்கு வந்தார். மயங்க வைக்கும் லாகூர் பற்றி இங்கிலாந்தில் கேட்ட கதைகள் தான் அவர் தலையில் நிறைந்திருந்தன. இங்கே கொண்டாடப்படும் பகட்டான கிருஸ்துமஸ் விழா, நடன அரங்குகள், குதிரை நிகழ்ச்சிகள், ஆடம்பரமான சமூக வாழ்க்கை பற்றிய கதைகள்தான் அவை. இப்போது பார்த்த நகரில் பழைய லாகூரின் அடையாளங்கள் ஏதும் இல்லை. மாறாக வெப்பம், புழுதிப் புயல்கள், கலவரங்கள், தீவைப்புகள் ஆகியவற்றையே அவர் கண்டார்.

ஏற்கெனவே அச்சத்தால் 1,00,000 மக்கள் ஊரை விட்டே ஓடி விட்டனர். கோடைகாலத்தில் வீட்டுக்கு வெளியே நட்சத்திரங்கள் மின்னும் ஆகாயத் துக்குக் கீழ் படுத்து உறங்குவது என்பது பஞ்சாபிகளின் பண்டைய பழக்கமாக இருந்தது. ஆனால் இப்போது கடும் வெப்பம் நிலவியபோதும் அங்கே குடி யிருந்தவர்கள் அந்தப் பழக்கத்தைக் கைவிட்டு விட்டனர். தூங்கிக் கொண்டி ருக்கும் போது கள்ளத்தனமாக ஒரு கை வந்து தொண்டையை அறுத்துக் கொன்று விடும் அபாயம் அதிகரித்து வந்தது. இந்த நகரின் சில பகுதிகளில்

இருந்த முஸ்லீம் இளைஞர்கள், சாலையின் குறுக்கே நீளமான வயர் கம்பியைப் போட்டு வைப்பார்கள். வேகமாக ஒருவர் சைக்கிள் ஓட்டி வரும் போது அந்தக் கம்பியை அசைத்து அவரை விழச் செய்வார்கள். இவர்களால் பழிவாங்கப் பட்டவர்கள் பெரும்பாலும் சீக்கியர்கள்தான். காரணம் அவர்களின் தாடிகளும் தலைப்பாகைகளும் எளிதாக அவர்களை அடையாளம் காட்டின.

அக்பர் கால்த்துப் பழமையான கற்சுவரால் சூழப்பட்ட, உலகிலேயே மிகவும் மக்கள் தொகை நெருக்கமுள்ள பகுதிகளில் ஒன்றான, ஏழு மைல் பரப்பளவுள்ள ஒரு பகுதிதான் லாகூர் நகரில் தொல்லை மிகுந்ததாக இருந்தது. சதுர மைலுக்கு 1,04,000 மக்கள் என்ற எண்ணிக்கையில் இந்தப் பகுதியில் 3,00,000 முஸ்லீம்களும் 1,00,000 இந்துக்கள் மற்றும் சீக்கியர்களும் இருந்தனர். சிறிய சந்துகள், கடைகள், கோயில்கள், மசூதிகள், சிதிலமடைந்த வீடுகள் நிறைந்திருந்தன. ஆசியச் சந்தைகளின் அனைத்து வாடைகளும், கூச்சல்களும், சந்தடிகளும், கொந்தளிப்பான மனித சமூகத்தைச் சூழ்ந்திருந்தன. திறந்த வெளியாக இருந்த இடங்களில் எல்லாம் நடைபாதை வியாபாரிகள் புதர் போல் மண்டியிருந்தனர். வட்டமான தகரத் தட்டுகளிலும், தலையில் சுமந்த தட்டுகளிலும், தள்ளு வண்டிகளிலும் தங்களின் பொருள்களைப் பரப்பி வைத்திருந்தனர். எண்ணெயில் பொரித்த மணம் கமழும் உருண்டைகள், ஆரஞ்சுப்பழக் குவியல்கள், அல்வா, பர்ஜி (barji) ஆகியவற்றின் குவியல்கள், கீழை நாடுகளின் இனிப்பு வகைகள், பப்பாளி பழங்கள், கொய்யாப்பழங்கள், வாழைப்பழத்தார்கள், ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு கொத்தாக இருக்கும் பேரிச்சம் பழங்கள் ஒவ்வொன்றிலும் கருநிற ஈக்கள் மேகம் போல் சூழ்ந்திருந்தன. ட்ரகோமா நோயினால் கண்களில் வெள்ளை பரவியிருந்த சிறுவர்கள் துருப்பிடித்த கருவி மூலம் கரும்புஞ்சாறு பிழிந்து கொண்டிருந்தார்கள்.

பைசாண்டிய நகரத்தின் குழப்பம் மிக்க தெருக்களையொத்த சந்து பொந்துகளில் இருந்த கடைகளும் கூண்டுகள் போன்ற அறைகளும் மழைக்காலத்தில் ஏற்படும் திடீர் வெள்ளத்திலிருந்து பாதுகாக்கப்படுவதற்காக, தரையிலிருந்து இரண்டு அடி உயரத்தில் கட்டப்பட்டிருந்தன. விவரிக்க முடியாத எல்லை அவர்களை தனித்தனி குழுவாக்கியிருந்தது. தோல் தொழில் செய்வோர் ஒரு பக்கமும், தகர வேலை செய்வோர் ஒரு பக்கமும் இருந்தார்கள். நகை வியாபாரிகளின் பகுதிகளும் இருந்தன. அங்குள்ள கடைகளின் தட்டுகளில் தங்க வளையல்கள் பளிச்சிட்டன. பெரும்பாலான இந்துக்கள் இவற்றில் தான் தங்கள் சேமிப்பைப் போட்டு வைத்தனர். நறுமணப் பொருள்கள் விற்பனை பகுதியில் கிளர்ச்சியூட்டும் ஊதுவத்திகளின் குவியல்களும், நறுமணச் சாறுகள் நிறைந்த சீனாவின் பாட்டில்களும் இருந்தன. வாடிக்கையாளரின் விருப்பத்துக்கேற்ப இந்த பாட்டில்களிலிருந்து பொருள்கள் கலக்கப்பட்டு தேவையான செண்ட் தயாரித்தளிக்கப்பட்டது. பாத அணிகள் தயாரிப்போரின் கடைகளில் படகின் முகப்புப் போல் கூர்மையான முன்பகுதியுடன் தங்கக் கோடு போட்ட செருப்புகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. கண்ணாடி போன்ற எனாமல் மற்றும் வெள்ளியாலான கோப்பைகளையும் அலங்காரப் பொருள்களையும் கைவினைக் கலைஞர்கள் காட்சிக்கு வைத்திருந்தனர். இந்தப் பொருள்களில் காரீய வெள்ளீயக் கலவையுடன் பஞ்சு மிட்டாய் போல்

மிருதுவான பொன்சரிகையும் கற்றப்பட்டிருந்தது. பித்தளைத் தட்டுகளும், கருங்காலி மற்றும் சந்தன மரங்களில் செய்யப்பட்ட பெட்டிகளும் இங்கே இருந்தன. இவற்றில் தந்தங்களின் துண்டுகளும் முத்துக்களும் பதிக்கப் பட்டிருந்தன.

ஆயுதங்கள், குத்துவாள்கள், சீக்கியர்கள் பயன்படுத்தும் கிர்பான்கள் எனும் மத அடையாள வாள்கள் விற்கும் கடைகளும் அங்கு இருந்தன. தங்களின் குழந்தைகளால் தொடுக்கப்பட்ட மல்லிகைப் பூ மாலைகள் மற்றும் மலைபோல் குவிந்த ரோஜாப்பூக்களுக்குப் பின்னால் பூ வியாபாரிகள் இருந்தனர். ஜெட் பிளாக் முதல் ஆலிவ் கிரீன் வரை பலவகைத் தேயிலை வியாபாரிகளும் அங்கே இருந்தனர். துணி வியாபாரிகள் தங்கள் கடைகளில் வெறுங்காலுடன் சப்பணமிட்டு அமர்ந்திருந்தனர். அவர்களின் பின்னால் பல வண்ணங்களில் துணிச்சுருள்கள் இருந்தன. தங்கச் சரிகையால் தயாரிக்கப் பட்ட கல்யாணக் குல்லாய்கள் சில கடைகளில் விற்கப்பட்டன. மிருதுவான பட்டுச் சரிகை பின்னப்பட்ட, மேலங்கிகளும் இங்கே விற்கப்பட்டன. இவற்றில் ஏழைகளின் மாணிக்கங்கள் போல் பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய வண்ணங்களில் கண்ணாடிச் சில்லுகள் பதிக்கப்பட்டிருந்தன. இங்கே முடிதிருத்துவோர், கருமார்கள், சுத்தியல்களால் அடித்து கர்ண கொடூரமான ஒலியெழுப்பும் செம்பு, பித்தளை மற்றும் தகரத் தொழிலாளர்கள், தையற்காரர்கள், தச்சர்கள், துப்புரவு தொழிலாளர்கள், பழைய டயர்கள், பாட்டில்கள், கோணிப்பைகள், செய்தித்தாள்கள் விற்பதில் தேர்ச்சி பெற்றவர்கள் என உலகத்தில் உள்ள எல்லா வகையான தொழில் செய்வோரும் இங்கு இருந்தனர். இந்தப்பகுதி இரைச்சலும் குழப்பமும் மிக்கதாய் இருந்தது.

கருப்பு நிற பர்தாவுக்குள் மூடி மறைத்துக் கொண்டு முகத்தில் தொங்கும் மெல்லிய துணித் திரையின் வழியாக ஒளிரும் கண்களுடன், வழிபாட்டுக்குச் செல்லும் கன்னியாஸ்திரீகள் போல, முஸ்லீம் பெண்கள், ஒலியெழுப்பிச் செல்லும் ரேக்ளா வண்டிகள், ரிக்ஷாக்கள், மிதிவண்டிகள், ஓசையின்றி ஊர்ந்து செல்லும் மாட்டு வண்டிகள் ஆகியவற்றுக்கிடையே சென்று கொண்டிருந்த னர். இந்த சப்தங்களுக்கிடையே அருகேயிருந்த இந்துக்கள் குடியிருப்பின் வேலைப்பாடமைந்த சன்னல் திரைக்குப் பின்னாலிருந்து குனிந்து கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தவர் தான் பழைய லாகூரின் மிகப்பெரிய செல்வந்தர்,. வயது முதிர்ந்த புலாகி ஷா (Bulaggi shah). இந்த ஜன்னலிலிருந்து விரித்த தங்க வலையில் பஞ்சாபில் உள்ள விவசாயிகளில் கால் பங்கினர் விழுந்திருந்தனர். சிலர் வாழ்நாளையே அர்ப்பணித்திருந்தனர். இந்தியாவிலேயே மிகவும் வெற்றிகரமான லேவாதேவிக்காரர் அவர்.

புலாகி ஷாவின் ஜன்னல்களுக்குக் கீழே உள்ள குறுகிய தெருக்களில் இப்போது கொலைபாதகங்கள் நடக்கின்றன. இவை முட்டாள்தனமானவை; திட்டமிட்டே செய்யப்படுபவை; இவர்களின் கொலையாள் முறையின்றி தெரிவு செய்யப்பட்டனர். ஏனெனில் தலைப்பாகை இருந்தால் சீக்கியர் என்றும், வெள்ளாடு போல் தாடி இருந்தால் முஸ்லீம் என்றும் அடையாளம் வைத்துக் கொல்லப்பட்டனர். மூன்று சமூகங்களையும் சேர்ந்த குண்டர்கள் தான் கொலைகாரர்களாக இருந்தனர். மாற்று சமூகத்தினரைச் சேர்ந்தவர்களைத் தேடி இவர்கள் பழைய நகரில் அலைந்தனர். கண்டால் கொன்றனர்; பின்னர் குறுகிய வழிகளுக்குள் ஓடி மறைந்தனர்.

மரணம் மின்னல் போல வரும்; சில நொடிகளில் அது நடந்து விடும். கத்தி என்று சொல்வதற்கு முன்னால் ஒரு பிணம் வீதியில் விழுந்து விடும். எல்லாக் கதவுகளும் மூடப்படும்; பின்னர் ஒருவரையும் காண முடியாது என்று பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி ஒருவர் நினைவு கூர்ந்தார்.

நடுங்கவைக்கும் இந்தப் படுகொலைகளிலும் கூட முஸ்லீம்களும் முஸ்லீம் அல்லாதவர்களும் சம நிலையைப் பராமரித்தனர். 'இன்று முஸ்லீம்களில் ஒருவர் கூடுதலாகக் கொல்லப்பட்டுள்ளார். இதற்குச் சமமாக இன்றிரவு இந்துக்களில் ஒருவர் கொல்லப்படுவார்; யார் பந்தயம் கட்ட விரும்புகிறீர்கள்' என்று இந்நகரின் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஜான் பேனட் (John Bannet) ஒரு குறிப்பில் எழுதியுள்ளார்.

சனிக்கிழமையில் கூட காவல்துறையினர் வாரக் குறிப்பேடுகள் இரண்டினை தயாரிக்க வேண்டியிருந்தது. ஒன்று, வாராந்தர குற்றச் செயல்கள் குறிப்பேடு; மற்றொன்று, வாராந்தர ரகசிய அரசியல் நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு. மதவாதக் கொலைகள் எந்த வகையில் அடங்கும் என்பதை முடிவு செய்ய இயலாத பேனட், சிறந்த பிரிட்டிஷ் அதிகாரிக்கே உரிய முறையில் இரண்டு அறிக்கைகளிலும் அவற்றைக் குறிப்பிடும்படி உத்தரவிட்டார்.

லாகூர் எந்த டொமினியனில் இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்யப் போகிற மனிதர் பிரச்சனைக்குரியவர் என்பதால் பஞ்சாப் கவர்னர் அவரைத் தனது வீட்டில் தங்க வைத்து உபசரிக்க மறுத்து விட்டார். இதனால் சிரில் ராட் கிளிஃப், ஃபேலட்டி ஓட்டலில் தங்கினார். லாகூரில் விலை மாது ஒருவரின் காதல் வலையில் வீழ்ந்த நேபாளி ஒருவரால் 1860இல் இந்த ஓட்டல் கட்டப்பட்டது. ஆர்வம் குன்றி நம்பிக்கையிழந்திருந்த அந்த மனிதர், (ராட் கிளிஃப்) அவருக்கு உதவி செய்வதற்காக என்று கூறப்பட்டிருந்த நீதிபதிகளிடமிருந்து இந்த ஒப்பந்தத்துக்கான குறைந்த பட்ச உதவியைப் பெற போராடினார். மவுண்ட்பேட்டன் சொன்னதுதான் சரியாயிற்று. அந்த முயற்சி பயனற்றுப் போனது.

அவர் எப்போது வெளியே சென்றாலும் அவரைத் திகைக்க வைத்தது வெப்பமும், அவரது முடிவில் செல்வாக்குச் செலுத்த ஆர்வம் காட்டும் இந்தியர்களும் தான். இரங்கத் தக்க, அச்சம் நிறைந்த அந்த மக்கள், இவரது பேனாவின் ஒரு சொட்டு மை தாங்கள் வாழ்நாள் முழுவதும் சேர்த்து வைத்த செல்வங்களை அழித்துவிடும் என்று பயந்தார்கள். இதனால் தங்கள் சமூகத்துக்கு ஆதரவாக எல்லைக்கோடு வரைய அவருக்கு எதைத் தரவும் அவர்கள் தயாராக இருந்தார்கள்.

இரவு நேரங்களில் இவர்களிடமிருந்து தப்பிப்பதற்காக 'ஐரோப்பியர்களுக்கு மட்டும்' என்று உருவாக்கப்பட்டுள்ள, அதன் உறுப்பினர்களால் 'பிக்' (The PIG- பன்றி) என்று செல்லப் பெயர் சூட்டப்பட்டுள்ள, பஞ்சாப் கிளப்பில் அவர் தஞ்சம் புகுந்து விடுவார்.

அந்தக் கிளப்பின் புல்வெளிகளில் அவருக்கு அருகே உதவியாளர்களான ஐசிஎஸ் அதிகாரிகள் இருப்பார்கள் இருட்டில் பளபளக்கும் வெள்ளை சோடாவுடன் பணியாட்கள் இருப்பார்கள். இந்தியாவைப் பற்றி ஏதும் தெரியாத அந்த மனிதர் மாலை நேர விஸ்கியையும் சோடாவையும் கலந்து உறிஞ்சுவார்.

வெப்பமும் வெறுப்பும் நிறைந்த இந்த நகரில் கதைகளில் வரும், மயங்க வைக்கும் அழகான லாகூரை எங்கே காண்பது என்று ஆச்சரியப்படுவார்.

பஞ்சாப் கிளப்பின் புல்வெளியைச் சுற்றியுள்ள இருண்ட வானத்தின் வழியே அவர் காணும் காட்சியும் கேட்கும் ஒலிகளும்தான் அவரின் லாகூராக இருந்தது. தீப்பற்றி எரியும் கடை வீதிகளிலிருந்து அவ்வப்போது வந்து விழும் தீக்கங்குகள்; ஓலமிடும் சைரன்கள் (காவல் துறை வாகனம் எழுப்பும் ஒலி) 'சத் ஸ்ரீ அகால்' என்று சீக்கியர்களும், ' அல்லாஹு அக்பர்' என்று முஸ்லீம்களும், எதிர் எதிர் குழுக்களாக எழுப்பும் போர் வெறிக் கூச்சல்கள்; போர்க் காலத்தில் முரசுகள் அதிர்வது போல, இந்து மதவெறி அமைப்பான ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங் (ஆர்எஸ்எஸ்எஸ்) கெடுதலுக்கு அறிகுறியாக அடித்துச் செல்லும் தப்பட்டை சப்தங்கள் நிறைந்திருந்தன.

பஞ்சாபின் இரண்டாவது பெரிய நகரான அமிர்தசரஸ் லாகூருக்குக் கிழக்கே முப்பத்தைந்தாவது மைலில் அமைந்திருந்தது. இங்கே உள்ள பழமை வாய்ந்த பாதைகள் எல்லாம் சீக்கிய மதத்தினரின் மிகப்புனிதமான இடமான பொற் கோயிலைச் சென்றடைந்தன. இந்தப் பொற்கோயில் மினுமினுக்கும் தண்ணீரைக் கொண்ட குளத்தால் சூழப்பட்டிருந்தது. பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்ட பாதையின் முடிவில், வெள்ளை பளிங்குக் கற்களால் அந்தக் கோயில் எழுந்து உயர்ந்திருந்தது. தங்கத் தகடுகளால் மின்னும் விதானத்தின் கீழ் சீக்கியர்களின் புனித நூலான கிரந்த் சாஹிபின் மூலக் கையெழுத்துப் படிகள் பாதுகாக்கப்படுகின்றன. இதன் பக்கங்கள் பட்டுத் துணியால் சுற்றி வைக்கப் பட்டுள்ளன. தினமும் புதிய மலர்கள் இவற்றின் மீது வைக்கப்படுகின்றன. இந்த இடம் மிகவும் பரிசுத்தமானதால், மயிலிறகுகளால் செய்யப்பட்ட துடைப்பத்தால்தான் சுத்தம் செய்யப்படுகிறது.

கடவுள்கள் நிறைந்த இந்திய மண்ணில் உள்நாட்டிலேயே உருவாகி கடைப்பிடிக்கப் படும் ஒரே பெரிய சமயத்தைச் சேர்ந்த 6 மில்லியன் (60 லட்சம்) சீக்கியர்களுக்கு இந்தக் கோயில் ஆன்மீகத்தின் ஈர்ப்பிடமாக இருந்தது. நீண்டு வளரும் தாடியும், ஒரு போதும் வெட்டப் படாமல் முடிந்து தலைப்பாகைக்குள் வைக்கப்படும் தலைமுடியும், கவர்ச்சிகரமான தோற்றமும், ஆரோக்கியமான உடலும் கொண்ட சீக்கியர்கள் இந்தியாவின் மக்கள் தொகையில் இரண்டு சதவீதத்தினர் தான்; ஆனால் அவர்கள் மிகவும் வலிமை மிக்க, மிகவும் ஒற்றுமையான, மிகவும் வீரம் செறிந்த சமூகத்தினராக இருந்தனர்.

பஞ்சாபின் எல்லைப்புறத்தில், ஒரு தெய்வ நம்பிக்கையுள்ள இஸ்லாமும் பல தெய்வ நம்பிக்கையுள்ள இந்து மதமும் முதன் முறையாக மோதி சண்டை யிட்டுக் கொண்டதன் விளைவால் பிறந்தது தான் சீக்கிய மதம். இதனை உருவாக்கியவர் ஒரு இந்து குரு. இரண்டு நம்பிக்கைகளையும் அவர் ஒருங்கிணைக்க முயற்சி செய்தார். 'இந்தும் இல்லை; முஸ்லீமும் இல்லை ஒரே கடவுள் தான் உண்டு அது தான் மேன்மையான சத்தியம்' என்று அவர் அறிவித்தார். மத வளர்ச்சிக்குச் சிறந்த உரம் அடக்குமுறைதான் என்பதற்கேற்ப சீக்கியமதம் வளர மொகலாயர்கள் சாதகமாக இருந்தனர். அவர்களின் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட, சீக்கிய மதத்தை நிறுவிய குருவுக்குப் பிந்தைய பாரம்பரியத்தில் வந்த பத்தாவது மற்றும் இறுதி குரு, இந்துக்களுக்கும்

முஸ்லீம்களுக்கும் இணைப்பை ஏற்படுத்த உருவான மதத்தை, கொள்கைக் காகப் போராடும் மதமாக மாற்றி விட்டார். கோவிந்த் சிங் தனது ஐந்து நெருக்கமான சீடர்களை - பாஞ் பிஜாரக்கள் (Panj Pijara) எனப்படும் அன்புக்குரிய ஐந்து பேரை அழைத்து, புதிய முறையிலான சீக்கிய மதத்தைத் துவக்கி வைத்தார். தண்ணீரில் சர்க்கரையைப் போட்டு அதனை இருமுனைக் கத்தியால் கலக்கச் செய்து ஒரே கோப்பையிலிருந்து இந்த ஐந்து பேரையும் அருந்தச் செய்தார். சாதி உணர்வுகளை உடைத்தெறிவதற்கான நடைமுறை இது. தமது புதிய போரிடும் அமைப்பான, தூய்மை எனப் பொருள்படும் 'கல்சா' வின் நிறுவனர்களாக அவர்களை அறிவித்தார். அவர்களின் பெயர்களுக்குப் பின்னால் சிங்கம் எனப் பொருள்படும் 'சிங்' என்ற சொல்லைச் சேர்த்தார். மக்கள் கூட்டத்தினரிடையே அவர்கள் தனித்தன்மையுடன் இருக்க வேண்டும்; மிகவும் எளிதில் அடையாளம் காணக்கூடியவர்களாகவும், நம்பிக்கையை எப்போதும் கைவிடாதவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். தங்கள் உயிர்களுக்குப் பதிலாக மதத்தைக் காக்கும் துணிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் போதித்தார்.

இனிமேல் சீக்கியர்கள் ஐந்து 'கே' (K) எனும் விதியைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் பணித்தார். அவர்கள் தாடியையும் தலைமுடியையும் வளர விட்டு விட வேண்டும். (முதல் 'கே' கேஷ் Kesh அதாவது கேசம். மொ-ர்) வெட்டப்படாத தலைமுடியின் கீழ் இரும்பாலான சீப்பு ஒன்றை வைத்திருக்க வேண்டும்; (இது இரண்டாவது 'கே' - கங்கா - Khanga அதாவது சீப்பு - மொ-ர்) வீரர்கள் போன்று தடையின்றி நடமாடுவதற்குக் கால் சட்டைகளை அணிய வேண்டும் (இது மூன்றாவது 'கே' குச்சா Kucha அதாவது கால் சட்டை. மொ-ர்) வலது கை மணிக்கட்டுப் பகுதியில் இரும்பு வளையம் போட்டிருக்க வேண்டும் (இது நான்காவது 'கே' கர Kara அதாவது வளையம் மொ-ர்) எப்போதும் இடுப்பில் வாள் வைத்திருக்க வேண்டும் (இது ஐந்தாவது 'கே' கிர்பான் Kirpan அதாவது வாள் மொ-ர்). அவர்கள் புகைபிடிக்கவோ மது அருந்தவோ கூடாது; முஸ்லீம் பெண்ணுடன் உடலுறவு வைத்துக் கொள்ளக் கூடாது; விலங்குகளின் தொண்டையை அறுத்து கசாப்பு செய்வது முஸ்லீம் களின் வழக்கம். இந்த வழக்கப்படி கசாப்பு செய்யப்பட்ட விலங்குகளின் இறைச்சியையும் உண்ணக்கூடாது.

மொகலாய சாம்ராஜ்யத்தின் அழிவு, சீக்கியர்கள் தங்களின் நேசத்துக்குரிய பஞ்சாபில் அவர்களின் அரசை அமைத்துக் கொள்ளும் வாய்ப்பை அளித்தது. அவர்களின் ஆட்சி குறுகிய காலத்திலேயே பிரிட்டனின் செந்தூர வண்ணச் சீருடை வீரர்களால் முடிவுக்கு வந்தது. ஆனால் 1849இல் அவர்கள் வீழ்ச்சி யடைவதற்கு முன், இந்தியாவில் பிரிட்டிஷ் ராணுவத்துக்கு ஒரு படிப்பினையாக, சிலியன்வாலாவில் பெருமிதத்துக்குரிய சீக்கியர்கள் பிரிட்டிஷாருக்கு தோல்வியை அளித்தனர்.

1947 ஜூலையில், இந்தியாவின் 6 மிலியன் (60லட்சம்) சீக்கியர்களில் 5 மிலியன் (50 லட்சம்) சீக்கியர்கள் பஞ்சாபில்தான் வாழ்ந்தார்கள். மக்கள் தொகையில் அவர்களின் பங்கு 13% மட்டும் தான்; ஆனால் நிலப்பரப்பில் 40% அவர்களுடையதாய் இருந்தது. நாட்டின் மூன்றில் இரண்டு பங்கு தானியங்களை அவர்கள் உற்பத்தி செய்தனர் இந்திய ராணுவத்தில் ஏறத்தாழ மூவரில் ஒருவர்

சீக்கியராக இருந்தார் அவர்களின் தகுதிகள் காரணமாக இரண்டு உலகப் போர்களின் முடிவில் இந்திய ராணுவத்தினர் பெற்ற பதக்கங்களில் பாதியளவு அவர்களுக்கானதாய் இருந்தன.*

பஞ்சாபின் சோகம் என்னவென்றால், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஒன்றாக வாழ முடிந்த முஸ்லீம்களாலும் சீக்கியர்களாலும் இவர்களிலேயே ஒருவர் ஆட்சியில் மற்றவரால் வாழ முடியாமல் போனதுதான். பஞ்சாபில் சீக்கியர்களின் ஆட்சி என்றால் முஸ்லீம்களின் நினைவில் நிற்பவை இவை தான், 'இடிக்கப்பட்ட மசூதிகள், கற்பழிக்கப்பட்ட பெண்கள், அழிக்கப்பட்ட கல்லறைகள், வயது வேறுபாடோ, பால் வேறுபாடோ பாராமல், குத்தியோ, கழுத்தை அறுத்தோ, சுட்டு வீழ்த்தியோ, வெட்டிக் கூறுபோட்டோ, உயிருடன் எரித்தோ கொல்லப்பட்ட முஸ்லீம்கள்'

சீக்கியர்களுக்கோ பஞ்சாபின் மொகலாயர் ஆட்சியில் அவர்களின் கைகளில் சிக்கி பட்ட துயரங்கள் ரத்தக்கறை படிந்த கதைகள். இந்தக் கதைகள் புரிந்து கொள்ளும் வயது வந்தவுடன் சீக்கியக் குழந்தைகள் ஒவ்வொன்றுக்கும் போதிக்கப்பட்டன. முஸ்லீம்களின் கைகளில் தங்கள் மக்கள் பட்ட துயரங்கள், அவமதிப்புகள், அச்சுறுத்தல்கள், அராஜகங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சீக்கிய தலைமுறையும் மறக்காமல் நினைவில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக இவற்றை விவரமாக வடிவமைத்து ஒரு அருங்காட்சியகத்தையே பொற்கோவிலில் சீக்கியர்கள் அமைத்துள்ளனர். இஸ்லாமைத் தழுவ மறுத்த தீவிரப்பற்றுள்ள சீக்கியர்களின் உடல் வாளால் துண்டாக்கப்படுவது; பெரிய அரைவை கற்களுக்கிடையே விட்டுக் கூழாக்குவது; பற்சக்கரம் போன்ற கூர்மையான கத்திகளைக் கொண்ட சக்கரங்களுக்கிடையே வைத்து நசுக்கித் துண்டாடுவது; மொகலாய மன்னர்களின் மெய்க்காவலர்களால் தங்களின் குழந்தைகள் ஈட்டியால் குத்திக் கொல்லப்படுவதையும், தலை துண்டிக்கப் படுவதையும் லாகூர் அரண்மனை வாயில்களில் நின்று சீக்கியப் பெண்கள் பார்த்துக் கொண்டிருப்பது போன்ற கோரச்சம்வங்களை விளக்கும் எண்ணெய் வண்ண ஓவியங்களும் (Oil painting) பொற்கோயிலுக்குள் ஏராளமாக உள்ளன.

மார்ச் மாதத்தில் சீக்கிய சமூகத்தினர் மீதான தாக்குதலுக்கு அவர்கள் எதிர் நடவடிக்கையில் இறங்காதிருந்தது முஸ்லீம்களுக்கும், டில்லியில் இருந்த அரசியல்வாதிகளுக்கும் ஆச்சர்யமாக இருந்ததோடு ஆறுதலாகவும் இருந்தது. சீக்கியர்களுக்கு வளமான வாழ்வு கிடைத்து விட்டதால் பழைய போர்க் குணத்தை இழந்து மிதவாதிகளாகி விட்டதாக முணு முணுக்கப்பட்டது.

சீக்கியர்களின் மனநிலையைப் பொறுத்தவரை இது மிகவும் தவறான கணிப்பாகும். ஜூன் துவக்கத்தில், இந்தியப் பிரிவினை பற்றி வைஸ்ராயும், இந்தியத் தலைவர்களும் டில்லியில் ஒரு உடன்பாட்டுக்கு வந்த போது, சீக்கியத் தலைவர்கள் லாகூரில் உள்ள நீடோ (Nedou) ஹோட்டலில் ரகசியக் கூட்டம் நடத்தினார்கள். பிரிவினை ஏற்றுக் கொள்ளப்பட்டால் சீக்கியர்களின்

* எந்திரவியலில் அவர்களுக்கிருந்த வியத்தகு ஈடுபாட்டால் மோட்டார் வாகன தொழில் துறையால் அவர்கள் கவரப்பட்டனர். இந்தியாவின் நகரங்களில் ட்ரக் மற்றும் டாக்சி ஓட்டுநர்களாக பெரும்பாலும் சீக்கியர்களே இருந்தனர். ஒரே சாலையாக இருந்தாலும் இவர்களைப் போல வேறெவராலும் வாகனங்களை ஓட்ட இயலாது; சில சமயங்களில் மற்றவர்களை அஞ்சவும் செய்வார்கள்.



வின்ஸ்டன் சர்ச்சில் 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று அழைத்த காந்தி, வீட்டில் நெய்யப்பட்ட பருத்தி நூல் ஆடை எனும் அவரது எளிய சீருடையுடன் 1931 வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்ள லண்டன் சென்றார். சில நாட்களுக்குப் பின் இதே போன்ற உடையில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னருடன் தேநீர் அருந்த காந்தி பக்கிங்காம் அரண்மனைக்குச் சென்றார். மன்னரின் ஆடம்பரமான உடையைக் கண்ட காந்தி பின்னர் வேடிக்கையாக இப்படிக் குறிப்பிட்டார். 'எங்கள் இருவருக்குமாகச் சேர்த்து மன்னர் உடையணிந்திருந்தார்.'



*1931-இல் லண்டன் ஓட்டல் ஒன்றின் விருந்து நிகழ்ச்சியில் தான் 90 மிலியன் (9 கோடி) மக்களைக்* கொண்ட பாகிஸ்தான் நாடு பற்றிய முறைப்படியான சிந்தனை உருவானது. பதினாறு ஆண்டுகளுக்குப் பின் இதனை அடைந்தார் முகமது அலி ஜின்னா. (வலது பக்கத்தில் மூன்றாவதாக இருப்பவர்) ஆனால் லண்டனில் அன்று மாலை நடந்த முதல் கூட்டத்தில், இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து தனியே இஸ்லாமிய தேசம் உருவாவது 'சாத்தியமற்ற கனவு' என்று தான் அவருக்குத் தோன்றியது.



1947 ஆகஸ்ட் 14 அன்று கராச்சியை விட்டுச் செல்வதற்கு முன் பிரிட்டிஷ் துருப்புகளின் கடைசியான அணிவகுப்பு மரியாதையை ஜின்னா ஏற்றுக் கொள்கிறார்.



வைஸ்ராய் மாளிகையின் வைஸ்ராய் அலுவலக அறையில் 1947 ஜூன் 3ஆம் தேதி நடந்த வரலாற்று சிறப்பு மிக்க கூட்டத்தில் இந்தியாவைப் பிரித்து இரண்டு சுதந்திர நாடுகளை உருவாக்குவதற்கு இந்தியத் தலைவர்களின் ஒப்புதலைப் பெற்றார் மவுண்ட்பேட்டன். மவுண்ட்பேட்டனின் இடது பக்கத்தில் முஸ்லீம் லீக் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் ஜின்னா, லியாகத் அலிகான், ரப்நிஷ்தார். அவரின் வலது பக்கத்தில் காங்கிரஸ் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் நேரு, படேல், கிருபளானி. மற்றொருவர் சீக்கியர்களின் பிரதிநிதி பல்தேவ் சிங். மவுண்ட்பேட்டனுக்குப் பின்னால் சுவற்றை ஒட்டி அமர்ந்திருப்பவர்கள் அவரின் இரண்டு முக்கிய ஆலோசகர்கள்: சர் எரிக் மீவில் (இடது) இஸ்மே பிரபு.



இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பஞ்சாபிலும் வங்காளத்திலும் எல்லைக்கோடுகளை வரையும் வேதனை அளிக்கும் பணியை ஏற்றுக் கொண்ட பிரிட்டனின் பிரசித்திப் பெற்ற நீதிபதி சர் சிரில் ராட்கிளிஃப் (நடுவில் இருப்பவர்)



முதல் கவர்னர் ஜெனரலாக இருக்க வேண்டும் என்று இந்தியர்களால் தெரிவு செய்யப்பட்ட லூயி மவுண்ட்பேட்டன் இந்தியாவின் முதலாவது பிரதமரான ஜவஹர்லால் நேருவுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பதை கவனிக்கிறார் மவுண்ட்பேட்டனின் துணைவியார்.



பாகிஸ்தான் உதயமானதைக் குறிக்கும் விழாவில் கலந்து கொள்ள மவுண்ட்பேட்டன் தம்பதியினர் கராச்சி வந்தனர்.

அணுகுமுறையை முடிவு செய்வதுதான் இந்தக் கூட்டத்தின் நோக்கம். தனது வாளால் முஸ்லீம் லீக் கொடியை வெட்டி வீழ்த்தியதன் மூலம் மார்ச் மாதத்தில் பேரழிவைத் துவக்கி வைத்த மதவெறி கொண்ட அந்த மனிதரின் குரல்தான் கூட்டத்தில் ஓங்கி ஒலித்தது. மூன்றாம் நிலை பள்ளி ஆசிரியர் என்பதால் அவரது ஆதரவாளர்களால் 'மாஸ்டர்' என்று அழைக்கப்பட்ட தாராசிங், வன்முறைக்குத் தனது குடும்ப உறுப்பினர்களில் பலரை இழந்திருந்தார். அவர் சினம் கொண்டிருந்தார். இப்போது அவரை இயக்கி வைக்கும் ஒரே உணர்வு - பழிவாங்குதல்.

'ஓ சீக்கியர்களே' அவர் உரத்தக்குரலில் பேசினார். பஞ்சாப் விரைவில் சந்திக்கப் போகும் துயரம் பற்றி மிகவும்முன் கூட்டியே தெரிவிப்பதாக அவரது பேச்சு இருந்தது. 'ஜப்பானியர்கள் போலவும், நாஜிகள் போலவும் சுய அழிவுக்குத் தயாராக இருங்கள். நமது நிலங்கள் அபகரிக்கப்படவுள்ளன, நமது பெண்கள் அவமானப்படுத்தப்படவுள்ளனர். எழுங்கள். மீண்டும் ஒருமுறை மொகலாய ஆக்ரமிப்பாளர்களை அழியுங்கள். நமது தாய் நாடு ரத்தம் சிந்த அழைக்கிறது! நமது ரத்தத்தாலும், எதிரிகளின் ரத்தத்தாலும் அவளின் தாகத்தைத் தணிப்போம்!'

★

புதுடில்லியில் புதிதாக ஒவ்வொரு நாள் புலரும் போதும், சிறியதும் பெரியதுமான முடிவுகள் வைஸ்ராயையும் அவரது ஊழியர்களையும் அழுத்திக் கொண்டிருந்தன. சுதந்திரம் அளிப்பதால் முன்கூட்டியே பணி ஓய்வு பெறப்போகும் ஆயிரக்கணக்கான பிரிட்டிஷாருக்கு ஓய்வூதியம் அளிக்கும் பொறுப்பு பற்றியும், இந்தியா மற்றும் பாகிஸ்தானின் வேண்டுகோளை ஏற்று இங்கேயே தங்கவிருக்கும் நூற்றுக்கணக்கான பிரிட்டிஷ் மக்கள் மற்றும் அதிகாரிகளின் நிலைமை பற்றியும் இடைவிடாத விவாதங்கள் நடைபெற்றன.

அவரது இடைக்கால அரசு, பெரும்பாலும் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் அமைச்சர்களைக் கொண்டிருந்தது. வரவிருக்கும் பிரிவினையின் தாக்கத்தால் இந்த அமைச்சரவை ஏற்கெனவே பிரச்சனைகளால் உடையத் துவங்கிவிட்டது. ஆகஸ்ட் 15 வரை அதன் செயல்பாட்டைப் பாதுகாப்பதற்கு, மவுண்ட்பேட்டன் புத்திசாலித்தனமான ஒரு ஏற்பாட்டைச் செய்தார். அனைத்து அமைச்சகப் பொறுப்புகளும் காங்கிரசிடம் அளிக்கப்பட்டன. ஆனால் பாகிஸ்தானின் நலனுக்கு எந்தக் குந்தகமும் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள ஒவ்வொரு அமைச்சரின் செயலையும் கண்காணிக்க முஸ்லீம் லீகின் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டார். வட - மேற்கு எல்லை மாகாணம் இந்தியாவுடன் சேர விரும்புகிறதா பாகிஸ்தானுடன் சேர விரும்புகிறதா என்பதைத் தீர்மானிப்ப தற்கான கருத்துக்கணிப்பை மேற்பார்வையிட பிரிட்டிஷ் ஜெனரல் சர் ராபர்ட் லாக்ஹார்ட்டை (Sir Robert Lockhart) மவுண்ட்பேட்டன் நியமித்திருந்தார். காங்கிரசின் வற்புறுத்தலால், சுதந்திரத்துக்கான விருப்பம் தெரிவிக்கும் வாய்ப்பை வங்காளத்துக்கு அவர் மறுத்து விட்டதால், இப்போது எல்லை மாகாணத்துக்கு அதே போன்ற வாய்ப்பளிக்க வேண்டும் என்ற காங்கிரசின் கோரிக்கையையும், அவர் மறுத்துவிட்டார்.

*எல்லாவற்றையும் விட மோசமான பிரச்சனையாக மவுண்ட்பேட்டன் முன் நின்றது, இந்திய சுதந்திரத்திற்கான தேதியை ஆகஸ்ட் 15 என யோசிக்காமல் தேர்ந்தெடுத்ததுதான். தங்கள் நாட்டின் நவீன வரலாறு துவங்கவிருக்கும் ஆகஸ்ட் 15 முழுவதும் மோசமான நாளாக இருந்தாலும், ஆகஸ்ட் 14 அன்று கிரகங்களின் சேர்க்கை மிகவும் நன்றாகவுள்ளது என்று சோதிடர்களின் குழு ஒன்று கடைசியாக இந்தியாவின் அரசியல்வாதிகளுக்கு ஆலோசனை கூறியது. தெய்வத்தன்மையுள்ள சோதிடர்கள் அமைப்பை சாந்தப்படுத்துவதற்காக இந்திய அரசியல்வாதிகள் முன்வைத்த சமரச யோசனையை வைஸ்ராய் நிம்மதியுடன் ஏற்றுக் கொண்டார். இந்தியாவும் பாகிஸ்தானும் 1947 ஆகஸ்ட் 14 நள்ளிரவில் சுதந்திர டொமினியன்களாகும்.**

*இந்தியாவின் வான்பரப்பில் யூனியன் ஜாக் கொடிக்குப் பதிலாக விரைவில் பறக்கவிருக்கும், உள்ளூர் பருத்தி நூலால் உருவான காதி மூவண்ணக் கொடிதான் கடந்த முப்பது ஆண்டுகளாக சுதந்திர தாகம் கொண்ட மக்கள் நடத்திய கூட்டங்களிலும், அணிவகுப்புகளிலும், போராட்டங்களிலும் பறந்தது. காங்கிரசின் தீவிரப் பற்றாளரான காந்தியே இந்தக் கொடியை வடிவமைத்தார். அதன் கிடைநிலையில் உள்ள காவி, வெள்ளை, பச்சை வண்ணப்பட்டைகளின் மத்தியில், அவர் தனது தனிப்பட்ட முத்திரையைப் பொறித்தார். அஹிம்சையின் அடையாளமாக இந்திய மக்களுக்கு அவர் அறிமுகம் செய்து வைத்திருந்த எளிய கருவியான ராட்டை தான் அது.*

*இப்போது சுதந்திரம் கைக்கு வந்து கொண்டிருக்கும் நிலையில், தங்களின் எதிர்கால தேசியக் கொடியின் நடுப்பகுதியில், 'காந்தியின் பொம்மை' என்று அழைக்கப்பட்ட ராட்டை இடம் பெறுவதற்கான உரிமை பற்றி, காங்கிரஸ் தலைவர்களில் பலர் எதிர்ப்புக் குரலை எழுப்பினார்கள் கட்சியில் தீவிரத்தன்மையுள்ள உறுப்பினர்களிடமும் இந்தக் கருத்து வளர்ந்து வந்தது. அவரது ராட்டை என்பது கடந்த காலத்தின் அடையாளம்; பெண்ணின் பொருள்; இந்தியாவை மனரீதியில் புராதன காலத்துக்கு கொண்டு செல்லும் ஒரு சின்னம் என்று அவர்கள் கருதினர்.*

*அவர்களின் வற்புறுத்தலால், தேசியக் கொடியின் கவுரமிக்க இடம் இன்னொரு சக்கரத்துக்கு அளிக்கப்பட்டது. இந்து சாம்ராஜ்யத்தின் நிறுவனரான அசோகரின் போர்வீரர்கள் தங்களின் கேடயங்களில் பொறித்திருந்த சக்கரம் தான் அது. சக்திக்கும் தீரத்துக்கும் அடையாளமாக சிங்கங்களின் இணையைக் கொண்ட, அசோகரின் வல்லமைக்கும் ஆதிக்கத்துக்கும் பெருமை மிகு அடையாளமான, தர்மச்சக்கரம், உலக ஒழுங்குக்கான சக்கரம், புதிய இந்தியாவின் சின்னமானது.*

---

* வைஸ்ராய் நடத்திய செய்தியாளர்கள் கூட்டத்திற்குப் பின் சிறிது நேரத்தில் ஊழியர்கள் கூட்டம் நடத்திய போது புன்னகையுடன் ஒன்றைக் குறிப்பிட்டார்: 'அவரது ஊழியர்களில் சோதிடம் பற்றிக் கூற உயர்நிலை ஆலோசகர்கள் இல்லாதது பெரும் குறையாகும்.' இதற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்று வற்புறுத்திய அவர், தனது திறமைமிக்க இளம் பத்திரிகை தொடர்பாளரான ஆலன் கேம்ப்பெல் ஜான்சனிடம் (Alan Campbell - Johnson) வைஸ்ராய்க்கு சோதிட ஆலோசனைக் கூறுவதை, கூடுதல் பொறுப்பாக அளித்தார்.

காந்தி தனது ஆதரவாளர்களின் முடிவை ஆழ்ந்த கவலையோடு அறிந்து கொண்டார். 'வடிவமைப்பு என்னதான் கலைநயத்துடன் இருந்தாலும், இத்தகைய செய்தியைத் தாங்கியுள்ள ஒரு கொடியை வணங்குவதற்கு நான் உடன்படமாட்டேன்' என்று காந்தி எழுதினார்.

தேசத்தை உருவாக்க எவ்வளவோ பாடுபட்டிருக்கும் அந்த வயதான மனிதருக்கு, மேலும் காத்திருக்கும் பல துயரங்களின் தொகுதியில் இந்த ஏமாற்றம் முதலாவது மட்டும் தான். காந்தியின் நேசத்துக்குரிய இந்தியா பிரிக்கப்படுவது மட்டுமின்றி, விரைவில் பிறக்கவிருக்கும் பிளவுபட்ட இந்தியாவும், காந்தி கனவு கண்ட, நீண்ட சிலுவைப் போரின்போது அவர் எதிர்பார்த்த இந்தியாவின் சாயல் எதையும் கொண்டிருக்காது. தாம் உருவாக்க உள்ள நவீன இந்தியா ஆசியாவிலும் உலக அளவிலும் தனது சமூகச் சிந்தனைகளின் வாழும் உதாரணமாய் இருக்க வேண்டும் என்றே காந்தி எப்போதும் கனவு கண்டார். அவரின் சிந்தனைகள், வலுவற்ற வயோதிக மனிதரின் பிடிவாதக் கருத்துகள் என்று விமர்சகர்கள் கூறினார்கள். ஆனால், பைத்தியக்காரத்தனத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் மனித குலத்தைக் காப்பாற்றுவதற்கு தெளிந்த சிந்தனையுள்ள மனிதர் அளிக்கும் உயிர்காக்கும் படகாகவே அவரது சிந்தனைகளை ஆதரவாளர்கள் கருதினார்கள்.

இந்தியாவின் எதிர்காலம் தொழிற்சாலைகளும் தொழில் நுட்பங்களும் நிறைந்த மேற்கத்திய சமூகத்தைப் பின்பற்றுவதில் தான் உள்ளது என்ற வாதத்தை காந்தி முற்றிலுமாக நிராகரித்தார். இந்தியப் பிரச்சனைகளுக்குத் தீர்வு 'அது கடந்த 50 ஆண்டுகளாகக் கற்றிருப்பதை மறப்பதில்தான்' உள்ளது என்று அவர் வாதிட்டார். இந்தியாவில் வேரூன்றியுள்ள மேற்கத்திய சிந்தனைகள் அனைத்தையும் அவர் எதிர்த்தார். விஞ்ஞானம் மனித மாண்புகளுக்கு உத்தரவிடக்கூடாது; தொழில் நுட்பம் சமூகத்தை ஆட்டிப்படைக்கக்கூடாது; மனிதர்களின் விருப்பங்களை எல்லையின்றி பெருக்கிக் கொண்டே போவது நாகரிகமாகாது; மாறாக அவர்களின் ஆசைகள் எல்லைக்குள் இருக்க வேண்டும். அப்போதுதான் அத்தியாவசியப் பொருள்களை அனைவருக்கும் சமமாகப் பிரிக்க இயலும் என்பது அவரின் வாதம்.

அவரது ஆதரவாளர்களில் பலரால் ஏற்கப்பட்ட மேற்கத்திய தொழில் மயம் என்பது பலரது உழைப்பின் பலனில் ஒரு சிலர் கைகளில் அதிகாரம் குவிக்கப்படுவதேயாகும். மேலை நாடுகளில் உள்ள ஏழைகளுக்கு நல்வாழ்க்கை என்பது சந்தேகத்துக்குரியதே. வளர்ச்சியடையாத நாடுகளில் உள்ள வெள்ளையரல்லா இனத்தவர்கள் பெரும் துன்பம் அனுபவிக்கிறார்கள்.

காந்தியின் இந்தியா அதன் 6,00,000 கிராமங்களில் கட்டப்பட வேண்டும். அவர் நன்கு அறிந்த, நேசித்த பெரும் மக்கள் கூட்டத்தின் முகங்களைக் கொண்டது அந்த இந்தியா. தொழில் நுட்பங்களால் மாசுபடாத இந்தியா. சுழற்சி முறையில் நடக்கும் மத விழாக்களின் மூலம் ஆண்டுகள் அறியப்பட்ட, விளைச்சல் தவறிய பல பத்தாண்டுகளின் நினைவுகளைக் கொண்ட, பயங்கரமான பஞ்சத்தின் தோற்றங்கள் தெரியும் பல நூற்றாண்டுகளைக் கடந்த இந்தியாவை அவர் நேசித்தார்.

தங்களுக்குத் தேவையான உணவை, உடையை, பாலை, பழங்களை, காய்கறிகளை தாங்களாகவே உற்பத்திச் செய்து கொள்ளும் திறனுடைய, குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கக்கூடிய, நோய்களுக்கு மருந்திட்டுக் கொள்ளக்கூடிய தன்னிறைவு பெற்றதாக ஒவ்வொரு கிராமமும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். 'கூடுதலாக ஒரு கூடை அரிசி உற்பத்தி செய்திருந்தால் ஆசியாவின் பல பயங்கர போர்களைத் தவிர்த்திருக்க முடியும்' என்று அவர் உறுதிபட தெரிவித்தார். இந்தியாவின் பசித்த விவசாயிகளுக்கு சத்தான உணவு அளிக்கப்பட வேண்டும்; இதற்காக சோயா, பட்டாணி, மாங்கொட்டைப் பருப்பு போன்றவை ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கோரினார். எந்திரத்தில் அரைத்து தீட்டப்பட்ட அரிசியை அவர் எதிர்த்தார். ஏனெனில் அது அரிசியின் மேற்பரப்பில் உள்ள 'பி' வைட்டமினைக் கொண்ட தவிட்டையும் நீக்கி விடுகிறது.

இந்தியாவில் உள்ள ஐவுளி ஆலைகளை மூடிவிட வேண்டும் என்று அவர் விரும்பினார். இதற்குப் பதில், கிராமங்களில் வேலையில்லாமல் இருப்போருக்கு வேலை அளிக்கும் வகையில் அவர்களிடம் ராட்டையைக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் கிராம மக்கள் தொகையை அங்கேயே நிறுத்தி வைக்க முடியும் என்றார் அவர்.

அவரது பொருளாதாரக் கொள்கை என்பது பாரம்பரியமானதும் பழமையானதுமாகும். ஏரும், ராட்டையும் நமது பெருமைக்கும் நல்வாழ்வுக்கும் உரியவை என்றார். நாம் பழைய எளிமைக்கு மீண்டும் திரும்ப வேண்டும். பாலும், நெய்யும், சாணமும் தரும் டிராக்டரை யாராவது கண்டுபிடித்தால் பசுவுக்கு பதில் அதனைப் பயன்படுத்துமாறு இந்திய விவசாயிகளுக்கு நான் சிபாரிசு செய்வேன் என்றார் காந்தி.

எந்திரங்கள் ஆதிக்கம் செலுத்தும், தொழில்கள் நிறைந்த சமூகம் அவருக்கு அச்சத்தை அளித்தது. இந்திய கிராமங்களில் உள்ள மக்களை நோய்கள் நிறைந்த நகர்ப்புற குடிசைப்பகுதிகளுக்கு அது இழுத்து விடும்; இயற்கைச் சூழலுடன் கூடிய அவர்களின் சமூக உறவுகள் துண்டிக்கப்படும்; அவர்களின் குடும்ப உறவுகளையும் மத நம்பிக்கையையும் அழித்து விடும். முகமற்ற, இரங்கத்தக்க தொழில்துறை நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக, உண்மையில் மனிதர் களுக்குத் தேவை இல்லாத பொருள்களை அது உற்பத்திச் செய்து உமிழ்ந்து கொண்டிருக்கும்.

சில காலங்கள் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது போல, அவர் வறுமையான தத்துவத்தை போதிக்கவில்லை. அவர் வெறுத்த வன்முறையையும், நேர்மைச் சீரழிவையும் வறுமைதான் உருவாக்கியது. உலகியல் பொருள்களை நிறைய துய்க்க வேண்டும் என்பதையும் கூட வறுமைதான் ஏற்படுத்துகிறது என்று அவர் வாதிட்டார். ஒரு மனிதரின் வீட்டில் குளிர்பதனப் பெட்டிகள் நிறைந்திருந்தாலும், அலமாரிகள் முழுவதும் துணிகள் வைத்திருந்தாலும், ஒவ்வொரு கொட்டிலிலும் ஒரு காரை நிறுத்தியிருந்தாலும், ஒவ்வொரு அறையிலும் ஒரு ரேடியோவை வைத்திருந்தாலும் அவர் மன ரீதியில் பாதுகாப்பற்றவராகவும், தார்மீக ரீதியில் தவறு செய்பவராகவுமே இருக்க முடியும். ஏகப்பட்ட பொருள்களை அனுபவிக்கும் செல்வந்த நிலைக்கும்,


பஞ்சாப்
(பிரிவினைக்குப் பிறகு)
பெஷாவர்
காஷ் மீர்
வடமேற்கு எல்லைப்புற மாகாணம்
மியான்வாலி
ஜீலம் நதி
குஜ்ராத்
சீனாப் நதி
சியால்கோட்
குஜ்ரான்வாலா
பதான்கோட்
காங்க்ரா
குருதாஸ்பூர்
ஷேகுபுரா
மேற்கு பஞ்சாப்
(பாகிஸ்தான்)
ஜாங்
லாகூர்
வாகா
அமிர்தசரஸ்
கபூர்தலா
பியாஸ்நதி
சட்லஜ் நதி
பஞ்சாப்
ஜலந்தர்
சிம்லா
மலை மாநிலங்கள்
ரவி நதி
ஃபெரோஸ்பூர்
லுதியானா
அம்பாலா
பலுசிஸ்தான்
சிந்து நதி
மாண்ட்கோமரி
மூல்தான்
சட்லஜ்நதி
பாட்டியாலா
கிழக்கு பஞ்சாப்
(இந்தியா)
ஐக்கிய மாகாணங்கள்
டேரா காஸிதான்
இஸ்லாம்ஹெட்
பஹவல்பூர்
டில்லி
பிகானிர்
சிந்த்
ஜெய்சல்மார்
பிரிவினைக்கு முந்தைய பஞ்சாப் எல்லை
இந்தியா – பாகிஸ்தான் எல்லை
பஞ்சாபை பிரிக்கும் ராட்கிளிஃப் லைன்

ஏதுமில்லாத வறுமை நிலைக்கும் இடைப்பட்ட வாழ்க்கையை மனிதன் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதே காந்தியின் விருப்பம்.

மனிதன் வர்க்கமற்ற சமத்துவ சமுதாயத்தில் வாழ வேண்டும் என்றும் கூட அவர் விரும்பினார். ஏனெனில் சமூக மற்றும் பொருளாதார சமத்துவமின்மை வன்முறையை வளர்க்கிறது. காந்தியின் இந்தியாவில் எல்லா உழைப்பாளர்களும், உடலுழைப்போ அல்லது அறிவு உழைப்போ, சம ஊதியம் பெறுவார்கள். அவரது நாட்டில் வாக்களிக்க உரிமை பெற சொத்து தகுதியாக இருக்காது; உழைப்பே தகுதியாக இருக்கும். அந்த உரிமையைப் பெற எல்லோரும் உடலுழைப்பை நாட்டுக்கு அளிக்க வேண்டும். சாதுக்கள் அல்லது சன்னியாசிகள் உட்பட எவரும் இதற்கு விதி விலக்கல்ல. குழி தோண்டும் வேலை செய்பவர் இந்த உரிமையைப் பெரும்பாலும் தானாகவே பெற்று விடலாம். ஆனால் ஒரு வழக்கறிஞரோ அல்லது லட்சாதிபதியோ கடின உழைப்பால் ஏற்பட்ட காய்ப்புகளைக் கொண்டுதான் இதனைப் பெறமுடியும்.

காந்திக்கு மிகவும் முக்கியமானது என்னவென்றால் தொண்டர்களுக்குத் தலைவர்கள் உதாரணமாக இருக்க வேண்டும். மாளிகையைக் கைவிட்டு எளிய வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று யோசனை கூறி ஆடம்பரம் மிக்க வைஸ்ராயைத் திடுக்கிடவைத்த போது கூறியவை, மனம் போன போக்கில் சொல்லப்பட்ட மழலைச் சொற்கள் அல்ல. தனிச்சலுகைகளைக் கைவிட வேண்டுமானால் எவர் அனுபவிக்கிறாரோ அவரே அவற்றை மறுத்து விட வேண்டும். அவர் எப்போதும் அப்படித்தான் செய்து வந்தார்.

உண்மையில் அவர் வாழ்ந்த நூற்றாண்டில் வாழ்ந்த லெனின், ஸ்டாலின், மாவோ என எந்தத் தலைவர்களும் இவரைப் போல் தாங்கள் போதித்த கொள்கைகளுக்கேற்ப வாழ்ந்து காட்டவில்லை. வறுமையில் வாடும் தனது நாட்டில், இருக்கும் வளங்களையும் வீணாக்கக் கூடாது என்பதற்காக, தினமும் உயிர் வாழ்வதற்குத் தேவையான மிகவும் குறைந்த அளவு உணவையே காந்தி உண்டார்.*

காந்தியால் முன் மொழியப்பட்ட கொள்கைகளில் சுவாரஸ்யமான பல முரண்பாடுகளும் சேர்ந்திருந்தன. இந்தியாவின் பல பகுதிகளில் நடக்கும் பிரார்த்தனைக் கூட்டங்களில் எந்திர யுகத்தை நிராகரிக்க வேண்டும் என்று அவர் கூறுவது அண்மைக்கால சிறந்த கண்டுபிடிப்புகளில் ஒன்றான மைக்ரோஃபோன் உதவியால்தான்; அவரது முதலாவது ஆஸ்ரமம் நீடித்திருக்க ஆண்டுக்கு 50,000 ரூபாய் நன்கொடை தருபவர் ஒரு தொழிலதிபர் - ஜி.டி.பிர்லா. மகாத்மாவுக்கு அச்சம் தரும் கற்பனையாக தொழிற்சாலைகள் இருந்தாலும்

---

* காந்தியும் மார்க்சிஸ்டுகளும் ஒருவருக்கொருவர் ஒத்துப் போகவில்லை. பெரும்பாலான மார்க்சிஸ்ட்களுக்கு காந்தி விஞ்ஞானப் பூர்வமான அணுகுமுறை இல்லாதவர். இதற்கு நேர்மாறாய், நாத்திகவாதக் கொள்கைகளாலும் ஒன்றிக்கலந்த வன்முறைகளாலும் கம்யூனிஸம் ஒரு சாபக்கேடு என்று அவர் கருதினார். பெரும்பாலான சோஷலிஸ்டுகள் 'சாய்வு நாற்காலி (சொகுசு) சோஷலிஸ்ட்கள்' என்று அவர் கருதினார். சோஷலிச நிர்வாணம் (சமத்துவம்) வருவதற்காகக் காத்திருக்கும் இவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளவோ தங்களின் வசதிகள் எதையும் தியாகம் செய்யவோ விரும்பவில்லை என்பதும் அவர் எண்ணம்.

பிர்லாவின் ஜவுளி ஆலைகள் மிகச்சிறந்த தொழிற்சாலைகளின் பிரதிநிதிகளாக விளங்கின.

சுதந்திரம் நெருங்கி வரும் வேளையில் தனது கொள்கைகளை காந்தி தொடர்ந்து வலியுறுத்தி வந்தது, நேரு போன்ற ஃபேபியன் (Fabian 1884இல் இங்கிலாந்தில் ஃபேபியன் என்பவரால் நிறுவப்பட்ட ஒரு சோஷலிச ஆதரவு சங்கம். மொ-ர்) சோஷலிஸ்டுகளுக்கும் படேல் போன்ற உறுதியான முதலாளித்துவ வாதிகளுக்கும் தர்மசங்கடமாக இருந்தது. இவர்கள் எந்திரங்கள், தொழிற்சாலை, தொழில் நுட்பம் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்தார்கள். மேலை நாட்டின் அனைத்துக் கருவிகளையும் இந்தியாவுக்குக் கொண்டு வர நினைத்தார்கள். ஐந்தாண்டு திட்டங்கள் மூலம், இந்தியாவின் எதிர்காலத்தை வலுவானதாக்க, காந்தி வெறுத்த பிரமாண்ட தொழிற்சாலை களையும் தொழில் வளாகங்களையும் கட்ட இவர்கள் விரும்பினார்கள். காந்தியின் கொள்கைகளைப் பின்பற்றுவதற்குக் கடந்த காலத்துக்குப் பின்னோக்கித் தான் செல்ல வேண்டும். மிகவும் கட்டுப்பாடும் தன்னிறைவும் உள்ளதாகக் கற்பனை செய்யும் அவரின் கிராமங்களிடம் தான் இந்தியாவை ஒப்படைக்க வேண்டும் என்று காந்தி அன்புமகன் என்று கருதிய நேரு கூட எழுதினார். புதிய இந்தியாவில் இவர்களும் மற்ற தலைவர்களும் எப்படி வாழ வேண்டும் என்று மகாத்மா நம்பிக்கையோடு வெளிப்படையாக வலியுறுத்தி வரும் கட்டளைகள் அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தின.

ஒவ்வொரு அமைச்சரும் கதர் துணிகளை மட்டுமே உடுத்த வேண்டும், எளிய வீட்டில் வேலையாட்கள் இல்லாமல் வாழ வேண்டும் என்றார் அவர். அமைச்சருக்கு சொந்தமாகக் கார் இருக்கக் கூடாது; சாதிக்குறியீடுகளை விட்டு விட வேண்டும்; நூல் நூற்றல் அல்லது உணவுப் பற்றாக்குறையை சரி செய்ய உணவுப் பயிர்களையோ காய்கறிச் செடிகளையோ வளர்த்தல் என ஒவ்வொரு நாளும் குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது உடலுழைப்பில் ஈடுபட வேண்டும்; 'வெளிநாட்டுப் பொருள்கள், சோஃபாக்கள், மேசைகள் நாற்காலிகள்' ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்; மெய்க்காப்பாளர்கள் இல்லாமல் உலாவர வேண்டும். அனைத்துக்கும் மேலாக, 'தனது கழிவறைப் பெட்டியை தானே சுத்தம் செய்து உதாரண மனிதராக விளங்க, சுதந்திர இந்தியாவில் எந்தத் தலைவரும் தயக்கம் காட்டமாட்டார்' என்றும் காந்தி உறுதியாக நம்பினார்.

காந்தியின் எல்லாக் கொள்கைகளிலும் இருக்கிற குழப்பம் இப்போது கூறிய வார்த்தைகளிலும் கடுமையாக வெளிப்பட்டது. பக்குவமற்ற நடிகர்களுக்கான பக்குவப்பட்ட நடிப்புத் திட்டமாக அது இருந்தது. அவர் மரணமடைந்த அரை நூற்றாண்டுக்குப் பின், யாரெல்லாம் தனது பாதையைப் பின்பற்றுவார்கள் என்று நம்பியிருந்தாரோ, அந்தக் காங்கிரஸ் அமைச்சர்களின் ஊழலும் கைக்கூலித்தனமும்தான் இந்திய அரசியலின் படுமோசமான நோயாக இருந்தது.

*

இந்தியாவின் எதிர்காலம் பற்றிய அவரின் அனைத்து [illegible] ...முய மேலாக, 1947 ஜூலையில் இந்தத் துணை[illegible] ப்ளேக் (Plague) எனும் கொள்ளை நோய்போல் தொடர்ந்து அழித்துக் கொண்டிருந்த வகுப்புவாத

வன்முறை பற்றிய கவலை தான் காந்தியின் அன்றாட நடவடிக்கைகளில் முக்கிய இடம் பிடித்தது. மேற்கு பஞ்சாபிலிருந்து வெளியேறி வெள்ளம் போல் வரும் முதல் தொகுதியான இந்து சீக்கிய அகதிகளைக் காணுமாறு தன்னுடன் அழைத்துச் சென்ற நேருவிடம் காந்தி வற்புறுத்தினார்.

திடுக்கிடச் செய்யும் காட்சியாக அது இருந்தது. வைஸ்ராயைத் திடுக்கிடச் செய்த பயங்கர சம்பவங்கள் நிகழ்ந்த கஹூதா கிராமம் போல், நூறு கஹூதாக்களிலிருந்து உயிர் பிழைத்த முப்பத்திரண்டாயிரம் மக்கள், டில்லியிலிருந்து 120 மைல் தூரத்தில் அமைந்த வெப்பமும் புழுதியும் நிறைந்த இந்தியாவின் முதலாவது அகதிகள் முகாமுக்கு வந்து சேர்ந்தனர்.

ஆத்திரத்தோடு அலறியும், துயரத்தோடு புலம்பியும் கடல் போன்ற துயரத்துடன் அந்த மக்கள் காந்தியின் காரைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் கைகளையும் விரல்களையும் ஆட்டியும் அசைத்தும் குறை கேட்க மன்றாடினார்கள்; ஆத்திரத்தில் அல்லது வெறுப்பில் அவர்கள் முகம் சுளித்தனர். தங்களின் ஏமாற்றத்துக்கு ஏதாவது ஆறுதல் கூறுமாறு அவர்களின் கருநிறக் கண்கள் கெஞ்சின. அவர்களின் தலைக்கு மேல் பறந்த கருநிற ஈக்கள், இன்னமும் திறந்த நிலையிலேயே இருக்கும் புண்களின் மீது அடையாக இறங்கி அமர்ந்தன; அசைந்தன. ஓடிவரும் அவர்களின் கால்கள் எழுப்பிய தூசிப் படலம் மூக்குகளிலும் தொண்டைகளிலும் ஏறின. எல்லா இடங்களிலும் மேலெழுந்த தூசு திரைபோல் மூடியது. வியர்வையும், துர்நாற்றமும், முடை நாற்றம் வீசும் மூச்சுக் காற்றும் கொண்ட பரிதாபத்துக்குரிய மக்கள் கூட்டம் அனைத்துப் பக்கங்களிலிருந்தும் காந்தியையும் நேருவையும் நெருக்கின.

அந்த நாள் முழுவதும் காந்தி அவருடன் இருந்தார். அந்த முகாமில் ஓரளவு ஒழுங்கும் முன்னேற்றமும் ஏற்படப் பணியாற்றினார். கழிவறை அமைக்க எப்படிக் குழி தோண்ட வேண்டும் என்று செய்து காட்டினார். துப்புரவு, தூய்மை பற்றி விளக்கினார். மருந்தகம் ஒன்றை ஏற்படுத்தினார். அவரால் இயன்ற அளவு நோயாளிகள் பலருக்குப் பணிவிடை செய்தார்.

மாலை வேளையில் அவர்கள் மீண்டும் டில்லிக்குப் புறப்பட்டனர். 77 வயதான அவரின் உடல் களைத்திருந்தது. பெரும் துயரத்தால் அவரது மனம் சோகமுற்றது. காரின் பின்னிருக்கையில் காந்தி படுத்து விட்டார். இரண்டு மாதங்களுக்கு முன் தன்னோடு முரண்பட்டுச் சென்ற அந்த சீடரின் மடிமீது மெலிந்து முட்டுகள் தெரிந்த காலை நீட்டி அவர் உறங்கினார்.

அவரது கண்கள் நிமிர்ந்து நேராகக் குத்திட்டிருந்தன. வழக்கமாக உணர்வுகளைப் பிரதிபலிக்கும் அவரது முகம் எதையோ மறைக்க முயன்றது. வெகுநேரம் நீண்ட நெடிய சிந்தனையுடன் நேரு மவுனமாகப் பயணம் செய்தார். ஒரு வேளை, விரைவில் ஆட்சி செய்ய அழைக்கப்படவிருக்கும் அவர், இந்தியாவின் எதிர்காலத்துக்கு சாட்சியாக இருந்த அந்த ம்க்களைப் பற்றி சிந்தித்திருக்கலாம். பின்னர், தனது வாழ்நாளில் வெகுகாலம் அன்பு செலுத்திய அந்த மனிதருக்கு, தன்னால் ஏற்பட்ட வலிக்குப் பரிகாரம் செய்வது போல், உறங்கிக் கொண்டிருந்த மனிதரின் புண்பட்ட பாதங்களைத் தனது விரல்களால், மெதுவாகவும் மென்மையாகவும் தடவிவிடத் தொடங்கினார்.

சூரியன் மறையும் நேரத்தில் காந்தி விழித்துக் கொண்டார். விரைந்து செல்லும் அவர்கள் காரின் இரு பக்கங்களிலும் மனிதரின் உள்ளங்கை போல் விரிந்திருந்த கரும்பு, கோதுமை, நெல் வயல்கள் பூமியின் விளிம்பு என கருதப்படும் தொலைதூர அடிவானம் வரை பரந்திருந்தன. மூழ்கிக் கொண்டிருக்கும் சூரியனின் இறுதியான செந்நிற ஒளியை வடிகட்டி அனுப்பும் திரைபோல் அந்தச் சமவெளிக்கு மேல் அழகியதொரு படலம் இருந்தது. மேய்ச்சலுக்குச் சென்று திரும்பும் பசுக்கள் புழுதியை மேலெழுப்பி வரும் நேரம் அது. அந்த நேரம் மறக்கவியலாத இந்தியாவைப் போலவே மிகத் தொன்மை யானது. இந்தியாவின் சமையல் நேர அடுக்களையிலிருந்து வரும் புகை மூட்டம், மகத்தான பஞ்சாப் சமவெளியில் புள்ளிகள் போலிருந்த பல ஆயிரக்கணக்கான செங்கல் குடிசைகளிலிருந்து இப்போது வந்தது. புட்டங்கள் தரையில் படும்படி சப்பணமிட்டு அமர்ந்த பெண்கள், சாயம் வெளுத்த புடைவையால் தோள்களைப் போர்த்தியபடி, கைகளில் வளையல்கள் ஒலி எழுப்ப, அடுப்புகளை மூட்டினார்கள். அவற்றில் சப்பாத்திகளைச் சுட்டு சன்னா சமைத்தார்கள். இந்தியாவின் புனிதமான பசுக்களின் கொடைகளில் ஒன்றான சாணத்தைக் கொண்டு வட்ட வடிவில் தட்டப்பட்டு காய்ந்த வரட்டிகளை எரிபொருளாகப் பயன்படுத்தினார்கள். எண்ணற்ற அடுப்புகளில், பசுமாட்டு சாண வரட்டிகளின் நெருப்பிலிருந்து எழுந்து மாலை நேர வானத்தால் உறிஞ்சப்பட்டு இந்திய இரவின் மெல்லிய உடையாக விளங்கிய புகை நறுமணத்தைப் பரப்பியது. இது இந்திய அன்னையின் உடலின் நறுமணமாக இருந்தது.

இருள் பரவத் தொடங்கிய போது காந்தி காரை நிறுத்தினார். அவரது மாலை நேரப் பிரார்த்தனைக்காக சாலையின் ஓரத்தில் அமர்ந்தார். பரந்த துயரமான சமவெளியின் ஒரு பகுதிபோல் இருந்தது அவரது வளைந்த, சுருக்கங்கள் நிறைந்த உருவம். வேப்ப மரமும் ஆலமரமும் அவருக்கு மேல் படர்ந்திருந்தன. காரின் பின்புறத்தில் அமர்ந்திருந்த நேருவின் கண்கள் மூடியிருந்தன. விரல்களால் கண் இமைகளை அழுத்தியபடி இருந்த நேரு, மனமுடைந்த மனிதரான காந்தி, கீதையின் கடவுளிடம் உரக்க, நடுங்கிய படி மன்றாடுவதை கவனித்தார். தான் அஞ்சுவது போல் எதுவும் நடந்து விடாமல் அன்புக்குரிய இந்தியாவைக் காப்பாற்றும்படி அந்த மனிதர் மன்றாடினார்.

பத்து

# 'நாம் எப்போதும் சகோதரர்களாகவே இருப்போம்'

***லண்டன், ஜூலை 1947***

*பிரிட்டிஷ் பேரரசை விரிவுபடுத்துவதற்குரிய ஒவ்வொரு மகத்தான சட்ட நடவடிக்கையும் நிறைவேறியது என்பது, பழம் பெருமை வாய்ந்த நாடாளுமன்றத்தில், கருங்காலி மரத்தாலான தண்டத்தின் முறை மாறாத தட்டுதல்கள் மூலமே அறிவிக்கப்படும். பல நூற்றாண்டுகளாக கருந்தடி கொண்ட கட்டியக்காரர் எனப்படும் மன்னரின் செய்தியாளர் தான், மக்களவை உறுப்பினர்களை நாடாளுமன்றத்தின் பிரபுக்கள் சபைக்கு அழைத்து வருவார். உலகத்தின் கடைசி எல்லை வரை பிரிட்டனின் ஆதிபத்திய சக்தியைக் கொண்டு செல்வதற்கான அரசாணைகளுக்கு இறுதி அனுமதி பெறப்படும். இந்தப் பண்டைய வழக்கத்தில் இப்போதும் மாற்றம் இல்லை. ஆனால் இந்தக் கோடைகால நாளில் அந்தக் கரிய தண்டத்தின் முறை மாறாத ஒலி சாவு மணியாக ஒலித்தது. இந்தச் சாவுமணி என்பது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் குறித்தது. இந்தியாவுடனான பிரிட்டனின் உறவை முற்றிலுமாகத் துண்டித்து விடுவதற்கான மசோதாக்கள் 1947 ஜூலை 18 வெள்ளியன்று அரசின் இறுதி அனுமதிக்காகக் காத்திருந்தன.*

*பிரிட்டனின் ஆதிபத்திய சக்தி உச்சத்தில் இருந்தபோது, ஒரு துப்பாக்கிப் படகை அனுப்பி உலகின் அராஜகத்தை ஒழுங்குபடுத்தவும், சிவப்பு நிறத்தில் மெல்லிய கோடு போட்ட சீருடை கொண்ட பிரிட்டிஷ் ராணுவ வீரர்கள் மூலம் அச்சுறுத்தி வெளிநாட்டுக் கொடுங்கோலரை வீழ்த்தவும் பிரிட்டிஷ் நாடாளுமன்றமான வெஸ்ட் மினிஸ்டரின் (West Minister) இருக்கைகளில் அமர்ந்திருந்த மனிதர்களால் முடிந்தது. ஆதிபத்திய சாகசம் என்ற புதிய பணிக்குக் கடைசியாக வந்த ஐரோப்பிய நாடு பிரிட்டன். ஆனால் இந்த நாட்டினர் மற்றவர்களைவிட அதிகமாகப் பல கடல்களில் பயணம் செய்தனர். பல நாடுகளைக் கைப்பற்றினர். பல போர்களில் ஈடுபட்டனர். பல உயிர்களை அழித்தனர்; ஏராளமான செல்வங்களைக் கைப்பற்றினர்; மற்ற ஆதிபத்திய சக்திகளை விட நல்ல முறையில் ஏராளமான மக்களை ஆட்சி செய்தனர். உண்மையில் அந்நாட்டு மக்களின் குணாம்சம் வரலாற்றின் அந்தத் தருணத்துக்குப் பொருத்தமாய் இருந்ததாகவே தெரிகிறது. வெளிப்படையாகத் தெரிந்த நீதியான செயல்பாடுகளால் வெள்ளை ஐரோப்பிய கிருத்துவர்களின் ஆட்சி பனை ஓலையிலும் இருந்தது; பைன் (Pine) இலையிலும் இருந்தது.*

இவையெல்லாம் வெஸ்ட்மினிஸ்டரின் புதிய தலைமுறை மனிதரால் முடிவுக்கு வரப் போகிறது. இதற்கான சட்டமசோதா அரச முத்திரையுடன் தங்கச் சரடால் கட்டப்பட்ட வேலைப்பாடுகள் நிறைந்த சிறு பைக்குள் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. பிரபுக்கள் சபை உறுப்பினர்கள் அமர்வதற்காக அந்த அறையின் இடைத் தடுப்பாக இருந்த நீள மேசையில் இது போன்ற மற்ற ஆவணங்களின் குவியலுக்குள் இதுவும் இருந்தது.

இந்திய சுதந்திர மசோதா சுருக்கத்துக்கும் எளிமைக்கும் ஒரே மாதிரி வடிவமாக இருந்தது. இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தட்டச்சு செய்யப்பட்ட பதினாறு பக்கங்களும் இருபது சட்ட விதிகளும் மட்டுமே தேவைப்பட்டன. முக்கியமான சட்டம் ஒன்று முன் எப்போதும் இவ்வளவு விரைவாகத் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தில்லை. இதனைத் தயாரிக்க சரியாக ஆறுவாரங்களே தேவைப்பட்டன. நாடாளுமன்ற அவைகளின் பரிசீலனைக்காக இது அனுப்பப்பட்டது. இந்தப் பரிசீலனை மீதான விவாதம் கவுரவத்தோடும் கட்டுப்பாட்டோடும் இருந்தன. 'வரலாற்றில் சில சம்பவங்கள் நடந்துள்ளன. ஒரு நாடு வாள் முனையில் தனது அதிகாரத்தை மற்றொரு நாட்டினரிடம் ஒப்படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் மற்றொரு நாட்டின் மக்கள் மீது வெகுகாலம் அதிகாரம் செலுத்திய ஒரு நாட்டினர் அதனைத் தாமாக முன்வந்து ஒப்படைக்கும் சம்பவம் அரிதாகவே நடந்திருக்கும்' என்று வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்து பேசும் போது கிளமெண்ட் அட்லி கூறினார்.

'சீரான சிறிய மசோதா' என்று வர்ணித்து துயரத்துடன் தனது அனுமதியை வழங்கிய வின்ஸ்டன் சர்ச்சில், கடைசி வைஸ்ராயாக லூயி மவுண்ட் பேட்டனைத் தெரிவு செய்த புத்திசாலித் தனத்திற்காகத் தனது எதிரியான அட்லிக்கு சிறப்பான பாராட்டைத் தெரிவித்தார். இருப்பினும், அந்த விவாதங்களில், எந்த ஒருவரின் வார்த்தைகளும், வைக்கவுண்ட் சாமுவேல் (Viscount Samuel) கூறிய அளவுக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனநிலையைத் துல்லியமாகப் படம் பிடிக்கவில்லை.

'பிரிட்டிஷ் ராஜ்யம் பற்றி சொல்ல வேண்டுமானால், 'தானே ஆஃப் காவ்டர்' பற்றி ஷேக்ஸ்பியர் சொன்னதைத்தான் சொல்ல வேண்டும்: "வாழ்வைத் துறந்த போது கிடைத்த புகழ் போல் வாழ்ந்த போது அவருக்கு எதுவும் கிடைக்க வில்லை", என்று அவர் குறிப்பிட்டார்.

இப்போது, பிரதமர் கிளமெண்ட் அட்லி தலைமையில் மக்களவை யிலிருந்து பிரதிநிதிக் குழுவாக வந்த முப்பது உறுப்பினர்கள் அந்த சட்டம் இறுதியாக நிறைவேற்றப்படுவதற்கு சாட்சியாக பிரபுக்கள் சபையின் கம்பிக்குப் பின்னால் அமர்ந்தனர்.

அந்த மண்டபத்தின் ஒரு எல்லையில் அரச அதிகாரத்தின் இரண்டு அடையாளங்கள் முக்கிய இடம் பெற்றன. பூ வேலைப்பாடு கொண்ட விதானச் சீலையின் கீழ், ஒரு மேடை மீது அரசச் சின்னங்களைக் கொண்ட இரண்டு தங்க நிற சிம்மாசனங்கள் இருந்தன. இவற்றுக்கு முன்னால் பிரபுக்கள் சபை தலைவருடைய (Lord High Chancellor) கம்பீரமான, திண்டு மெத்தையுடன் கூடிய நாற்காலி இருந்தது. அதற்கு எதிரே இருந்த நீண்ட மேசையின் மீது ஆறாம் ஜார்ஜ் மன்னரின் ஒப்புதலுக்காக மசோதாக்கள் காத்திருந்தன.

மன்னரின் பிரதிநிதி (Clerk of the Crown) நீண்ட மேசையின் ஒரு பக்கத்தில் அமர்ந்தார். அவருக்கு எதிரே நாடாளுமன்றத்தின் குமாஸ்தா அமர்ந்தார். மசோதாக்களின் குவியலிலிருந்து முதல் மசோதாவை எடுத்து பவ்வியமான குரலில் அதன் தலைப்பை வாசித்தார். 'தி சவுத் மெட்ரோபாலிடன் கேஸ் பில்' (The South Metropoliton Gas Bill)

'லே ராய் லே வெல்ட்' (Le Roi Le Veult). மன்னரின் பிரதிநிதி இந்த வார்த்தைகளைப் பதிலாகக் கூறினார். நாடாளுமன்றத்தில் ஒரு சட்டமோ அரச கட்டளையே நிறைவேற்றப்படுவதற்கு அடையாளமாக, மன்னரின் விருப்பத்தைத் தெரிவிக்க, பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்படும் பழமையான ஃபிரான்ஸ் நாட்டின் நார்மன் சொற்றொடராகும் இது.

நாடாளுமன்ற குமாஸ்தா அடுத்த மசோதாவை எடுத்தார்.

'தி ஃபெலிக்ஸ்டோ பியர் பில்' (The Felixstowe Pier Bill) என்று கூறினார்.

'லே ராய் லே வெல்ட்' மன்னரின் பிரதிநிதி பதிலுக்குக் கூறி ஒப்புதலைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற குமாஸ்தா இன்னொரு மசோதாவை எடுத்தார்.

'தி இன்டியன் இன்டிபெண்டன்ஸ் பில்' (இந்திய சுதந்திர மசோதா) என்று வாசித்தார்.

'லே ராய் லே வெல்ட்' ஒப்புதலுக்கான பதில் வந்தது.

இந்த வார்த்தைகளைக் கேட்டபோது அட்லி லேசாக உணர்ச்சி வயப்பட்டு கண்களைத் தாழ்த்தினார். குமாஸ்தாவின் குரல் அடங்கிய போது அந்த மண்டபத்தில் அமைதி நிலவியது. அது நிறைவேறிவிட்டது. ஃப்ரெஞ்ச் மொழியின் புராதனமான நான்கு வார்த்தைகளின் மூலம், எரிவாயுப் பணிகளுக்கான நிறுவனத்துடனும், மீன்பிடி ரேவுத் துறையுடனும் சேர்ந்து பிரிட்டனின் மகத்தான இந்திய சாம்ராஜ்யமும் வரலாற்றிடம் ஒப்படைக்கப் பட்டு விட்டது.

*

உலகின் வெகு சிறப்பு வாய்ந்த சகோதரத்துவத்தின் கடைசிக் கூட்டமாக அது இருந்தது. பலவகைப் பூவேலைப்பாடுகளைக் கொண்ட தொள தொளப்பான அங்கிக்குள்ளே கொட்டும் வியர்வையுடனும், அலங்கரிக்கப்பட்ட சீருடை களுடனும், மணிக்கற்கள் பதித்த தலைப்பாகைகளுடனும் இந்தியாவின் மிக முக்கியமான 75 மகாராஜாக்களும் நவாபுகளும், மேலும் 74 மன்னர்களின் பிரதிநிதிகளான திவான்களும் அங்கே கூடியிருந்தனர். வரலாறு அவர்களுக்காக ஒதுக்கி வைத்துள்ள விதி என்ன என்பதை வைஸ்ராயின் வாய்மொழி மூலம் அறிவதற்காக, புதுடில்லியின் கோடை வெயிலால் ஏற்பட்ட கசகசப்பு நிறைந்த அந்த நாளில் காத்திருந்தனர்.

கடற்படை தளபதிக்கான வெள்ளைச் சீருடையில் பதக்கங்கள் பளபளக்க சிறிய அரைவட்ட வடிவிலான மன்னர்கள் சபை கூட்டத்துக்குள் மவுண்ட் பேட்டன் நுழைந்தார். சபையின் தலைவரான பாட்டியாலா மகாராஜா வைஸ்ராயை மேடைக்கு அழைத்துச் சென்றார். தன்னை அழைத்துள்ள

மகிழ்ச்சியற்ற மனிதர்களை மேடையிலிருந்தபடி அமைதியாக உற்று நோக்கினார்.

படேலின் கூடைக்குள் ஆப்பிள்களைச் சுண்டி வீசும் வேலையைத் துவங்க வைஸ்ராய் தயாரானார். அவரின் மிக மோசமான எதிரியான சர் கொன்ராட் கோர்ஃபீல்ட் உரிய காலத்துக்கு முன்பே ஓய்வு பெற்று அந்தச் சமயத்தில் விமானம் மூலம் பறந்து லண்டனுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். எந்த மன்னர்களுக்காகத் தனது வாழ்நாள் முழுதும் பாடுபட்டாரோ அந்த மன்னர்களின் சபையால் தனது கொள்கைக்கு ஒப்புதல் பெற முடியாத நிலையில் அவர் இந்தியாவை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

அவர் வெளியேறிச் செல்வது வைஸ்ராய்க்கு மகிழ்ச்சியாக இருந்தது. தனது நடவடிக்கையே சிறந்த ஏற்பாடு என்று திருப்தி அடைந்த மவுண்ட்பேட்டன் மன்னர்களை ஒன்று திரட்டி எண்ணியதை முடித்து விட முடியும் என்று நம்பினார். அவர்களுக்கு விருப்பம் இல்லையென்றாலும், அவர்களின் எதிர்ப்பு, சங்கடங்களைத் தந்தாலும் படேலின் ஆப்பிள் கூடையில் அவர்களைப் போட அவர் காத்திருந்தார்.

குறிப்புகள் இல்லாத அவரது பேச்சில் வெளிப்படைத் தன்மையும் உணர்ச்சியும் கலந்திருந்தன. இணைப்புச் சட்டத்தில் கையெழுத்திடுமாறு அவரின் பேச்சை கவனித்தவர்களிடம் வலியுறுத்தினார். அவர்களின் மாநிலங்களை இந்தியா அல்லது பாகிஸ்தானுடன் சேர்த்து விடுவதற்கான சட்டம் தான் அது. ஆயுதமேந்துவது ரத்த வெள்ளத்தையும் பேரழிவையும் தான் ஏற்படுத்தும் என்று அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறினார். 'பத்து ஆண்டுகள் முன்னோக்கிப் பாருங்கள்; இந்தியாவும் உலகமும் அப்போது எப்படியிருக்கும் என்று எண்ணி அதற்கேற்ற தொலைநோக்குடன் நடந்து கொள்ளுங்கள்' என்று அவர் கேட்டுக் கொண்டார்.

வைஸ்ராய் தெரிவித்த அடுத்த விஷயம் அளவுக்கு, வரலாற்றின் அலைகள் பற்றி அவர் தெரிவித்த கருத்துக்கள், அந்தப் பல வகைப்பட்ட கூட்டத்துக்கு ஆர்வத்தைத் தரவில்லை. அவர்கள் அழிவின் விளிம்பில் இருந்தனர். அவர்கள் அறிந்த உலகம் சிதைந்து கொண்டிருந்தது. இருப்பினும் அவர்களில் சிலரை வாதம் புரிய இயக்கியவை, அவர்களின் மார்பில் தொங்கும் வண்ணம் பூசிய பளபளக்கும் பட்டயங்கள்தான். அந்தச் சட்டத்தில் கையெழுத்திடுமாறு மவுண்ட்பேட்டன் மீண்டும் வலியுறுத்தினார். மவுண்ட்பேட்டனின் மைத்துன ரான பிரிட்டிஷ் மன்னரிடமிருந்து பெற்ற, அவர்களுக்கு மிகவும் பிரியமான பட்டங்களையும் விருதுகளையும் தொடர்ந்து வைத்திருக்க படேலும் காங்கிரசாரும் அனுமதிப்பார்கள் என்று நம்புவதற்கு நிரம்ப காரணங்கள் உள்ளன என்று வாதிட்டார்.

வைஸ்ராய் பேச்சை முடித்த போது மன்னர்களிடமிருந்து கேள்விகளை எதிர்பார்த்தார். நகைப்புக்குரிய அவர்களின் பேச்சால் மவுண்ட்பேட்டன் திகைத்துப் போனார். சிலரது பேச்சுக்களைக் கேட்ட போது இங்கே உள்ள மனிதர்களும் அவர்களின் பிரதம அமைச்சர்களும் தங்களுக்கு என்ன நிகழப்போகிறது என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறார்களா என்றெண்ணி வைஸ்ராய் வியந்து போனார்.

இந்தியாவுடன் தான் இணைந்து விட்டால் தனது மாநிலத்தின் புலிகளை வேட்டையாடும் சிறப்பு உரிமை நீடிக்குமா என்பது அங்கே கூடியிருந்த மதிப்பு மிக்க உறுப்பினர்களில் ஒருவரின் முக்கிய கவலையாக இருந்தது. தனது நாட்டின் மன்னர் வெளிநாட்டில் இருப்பதால் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது தனக்கு விளங்கவில்லை என்று ஒரு மன்னரின் பிரதிநிதியான திவான் கூறினார். நெருக்கடி மிகுந்த இந்த நேரத்தில் அந்த மன்னர் செய்வதற்கு முக்கிய செயல் ஒன்றும் இல்லை என்று கருதி ஐரோப்பாவின் சூதாட்ட விடுதிகளிலும் காபரே நடன அரங்குகளிலும் சுற்றிக் கொண்டிருந்தார்.

மவுண்ட்பேட்டன் சிறிது நேரம் மவுனமாக இருந்தார். பின்னர் மேடையில் அவருக்கு எதிரே இருந்த பேப்பர் வெயிட்டாக பயன்படுத்தப்பட்ட பெரிய வட்ட வடிவ கண்ணாடியை எடுத்தார். கீழை நாடுகளின் பண்டைக்கால முனிவர்கள் போல அதனைத் தனது கையில் வைத்துத் திருப்பிக் கொண்டிருந்தார். பின்னர் அவர் சொன்னார்: 'உங்களுக்கான பதிலை என் மாயக் கண்ணாடியில் தேடுகிறேன்'

புருவங்களை நெரித்தபடி அந்தக் கண்ணாடியில் கூர்மையாகவும் வியப்போடும் உறுத்துப் பார்த்தார். பத்து நொடிகளுக்கு அங்கே பேரமைதி நிலவியது. மிகவும் பருத்த மன்னர்களில் சிலர் விட்ட திணறலுடன் கூடிய மூச்சுக் காற்று மண்டபத்தை நிறைத்தது. இதனால் மட்டுமே அங்கு அமைதி குலைந்தது. மாயமந்திரம் என்பது மகாராஜாக்கள் உட்பட இந்தியாவில் எவராலும் அவ்வளவு எளிய விஷயமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை.

'ஆஹா!' தனது அங்க அசைவுகளில் அனைத்துவகையான நாடகத் தன்மைகளையும் வரவழைத்துக் கொண்டு மவுண்ட்பேட்டன் முணுமுணுத்தார். 'நான் மன்னரைப் பார்க்கிறேன். அவர் கேப்டனின் மேசையில் அமர்ந் திருக்கிறார். அவர் கேட்கிறார்... "ஆமா! என்ன அது?" அவர் சொல்கிறார்... "இணைப்புக்கான சட்டத்தில் கையெழுத்திடுங்கள்."'

அடுத்த நாள், கடைசிமுறையாக, இந்திய வைஸ்ராயும் அதனை ஆண்டு கொண்டிருந்த மன்னர்களும் சம்பிரதாயமான விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். என்ன நடக்கிறது என்பதில் விழிப்புடன் இருந்த மவுண்ட்பேட்டன் மிகுந்த கவலையுடன், பேரரசின் மன்னருக்கு மிகவும் பழைய நம்பிக்கையுள்ள கூட்டாளிகளாக இருந்த மன்னர்களிடமிருந்து இறுதி வாழ்த்துக்களை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

'நீங்கள் ஒரு புரட்சியை சந்திக்கவிருக்கிறீர்கள்' அவர்களிடம் மவுண்ட் பேட்டன் கூறினார். 'இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களின் சுயாதிபத்தியத்தை முழுவதுமாக நீங்கள் இழக்கப் போகிறீர்கள் அது தவிர்க்க முடியாதது' என்றதோடு 'ஆகஸ்ட் 15 அன்று உருவாகவிருக்கும் இந்தியாவைக் கண்டு முகம் கோணாதீர்கள்' என்றும் வேண்டினார். 'அந்த இந்தியாவுக்கு வெளிநாடுகளில் பிரதிநிதிகளாக இருப்பதற்குப் போதுமான திறமைசாலிகள் இருக்க மாட்டார்கள்'. இந்தியாவுக்கு நிறைய நிறைய டாக்டர்களும் வழக்கறிஞர்களும், திறமையான நிர்வாகிகளும் இந்திய ராணுவத்தில் உள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குப் பதிலாகப் பயிற்சி பெற்ற அதிகாரிகளும் தேவை.

வெளிநாடுகளில் படித்த, தங்கள் மாநிலங்களின் விவகாரங்களைக் கையாண்டு அனுபவமுள்ள, போர்த்திறமையும் உள்ள மன்னர்களில் பெரும்பாலோரிடம் இந்தியாவுக்குத் தேவையான திறமைகள் உள்ளன. இவர்கள் ரிவைரா (Reviera) கடற்கரையின் உல்லாசக்காரர்களாகவும் இருக்கலாம்; அல்லது தங்களின் சேவையை நாட்டுக்கும் அளிக்கலாம்; இந்திய சமூகத்தில் தங்களுக்கும் தங்களைச் சார்ந்த வர்க்கத்தினருக்கும் புதிய பங்கு பணியைக் கண்டறியலாம். இவற்றில் எதனை அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லையென்றும் அவர் கூறினார். 'புதிய இந்தியாவை மணந்து கொள்ளுங்கள்' என்றும் அவர் வேண்டினார்.

## காஷ்மீர், ஜூலை 1947

விரைந்தோடும் வெள்ளத்தைக் கடக்கும் படகுபோல, பாய்ந்தோடும் நீர் நிறைந்த ட்ரிக்கா (Trika) நதிக்கு இணையாகச் செல்லும் குண்டும் குழியும் நிறைந்த புழுதி படிந்த சாலையில் அந்த வண்டி ஆடி அசைந்து சென்றது. அந்த வண்டியை ஓட்டிச் செல்பவரின் தடித்த உதடுகளும், நம்பிக்கையிழந்து விழித்து நோக்கும் கண்களும், சதைகள் தொங்கி வடிவம் இழந்த கன்னங்களும், அவரது குணாம்சத்தின் பிரதிபலிப்புகளாக இருந்தன. பலவீனமும் சஞ்சலமும் கொண்டவராக இருந்த அவரின் காமக்களியாட்டங்களும், முறைகேடான செயல்பாடுகளும் அவருக்கு இமாலயன் போர்ஜியா (Himalayan Borgia) என்ற பட்டத்தைப் பெற்றுத் தந்துள்ளது. (போர்ஜியா என்பது ஸ்பெயின் வம்சாவளியைச் சேர்ந்த இத்தாலிய குடும்பம். இதன் வழிவந்தவர்கள் பல்வேறு தவறான நடவடிக்கைகளுக்குப் பெயர் போனவர்கள். மொ-ர்). போருக்கு முன்னர் பிரிட்டன் பத்திரிகைகளின் வாசகர்களுக்குக் கிளு கிளுப்பூட்டும் 'மிஸ்டர் ஏ' வாக இருந்த ஹரிசிங் துரதிருஷ்டவசமாக கொஞ்சம் வேறுவிதமாக வும் இருந்தார். இந்தியாவின் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய மாநிலத்தில் பாரம்பரிய இந்து மகாராஜாவாக அவர் இருந்தார். பரந்து விரிந்த அந்த மாநிலமான காஷ்மீரில், இந்தியா, சீனா, திபெத், பாகிஸ்தான் ஆகியவற்றின் எல்லைகள் சந்தித்தன.

இந்தக் காலை வேளையில் ஹரிசிங்கின் பின்பக்க இருக்கையில் அமர்ந்திருந்தவர் மிகவும் முக்கியமானவர் ஆவார். வேல்ஸ் இளவரசருடன் ஜம்முவில் பயணம் செய்து, அழகாக வெட்டி அமைக்கப்பட்ட போலோ விளையாட்டு மைதானத்தில் அருகருகே குதிரை சவாரி செய்த காலத்திலிருந்தே இந்த இந்து மன்னரை லூயி மவுண்ட்பேட்டன் அறிவார். காஷ்மீரின் தயக்கம் நிறைந்த ஆட்சியாளரிடமிருந்தே அதன் எதிர்காலம் பற்றிய முடிவை சொல்ல வைப்பதற்காக திட்டமிட்டே ஹரிசிங்கின் தலைநகரான ஸ்ரீநகருக்கு மவுண்ட்பேட்டன் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார்.

இருப்பினும் இந்தக் காஷ்மீர் ஆப்பிளை படேலின் கூடையில் போடுவது மவுண்ட்பேட்டனின் உத்தேசம் அல்ல. தர்க்க ரீதியாகப் பார்த்தால் காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைவதுதான் சரியாக இருக்கும். அதன் மக்கள் முஸ்லீம்கள். ரஹ்மத் அலியால் முதன் முதலில், ஈடேறாத கனவு உருவாக்கப்

பட்டபோது அந்த இஸ்லாமிய நாட்டிற்குத் தெரிவு செய்யப்பட்டப் பகுதிகளில் ஒன்று தான் காஷ்மீர். பாகிஸ்தானில் உள்ள 'கே' (K) என்பது காஷ்மீரைக் குறிக்கும்.

வைஸ்ராய் தர்க்க நியாயத்தை ஒப்புக் கொண்டார். எதிர்கால இந்திய அரசின் சார்பில் தாம் ஒரு வாக்குறுதியை அவருக்குக் கொண்டு வந்திருப்பதாக மகாராஜாவிடம் மவுண்ட்பேட்டன் கூறினார். இயற்கையாகவே இங்கு முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்வதாலும், பூகோள ரீதியாகவும், ஹரிசிங் பாகிஸ்தானுடன் சேருவதாக இருந்தால், இந்தியா அதனைப் புரிந்து கொள்ளும்; ஆட்சேபம் தெரிவிக்காது. மேலும், ஹரிசிங் ஒரு இந்து மன்னராக இருந்தாலும் அவரை வரவேற்பதாகவும், தனது புதிய டொமினியனில் அவருக்கு மிக்க கவுரவம் அளிக்கப்படும் என்று ஜின்னா உறுதியளித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

'எந்தக் காரணத்துக்காகவும் பாகிஸ்தானுடன் இணைய நான் விரும்ப வில்லை' என்று ஹரிசிங் பதிலளித்தார்.

' நல்லது, அது உங்கள் விருப்பம்; ஆனால் உங்கள் மக்கள் தொகையில் 90% பேர் முஸ்லீம்கள் என்பதால் இது பற்றி நீங்கள் கவனமுடன் பரிசீலிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அப்படியில்லையென்றால் நீங்கள் இந்தியாவுடன் சேர வேண்டும். அப்படிச் செய்தால், உங்களின் எல்லைப் பகுதிகளைப் பாதுகாக்க காலாட் படைப்பிரிவு ஒன்றை இங்கே அனுப்புவது பற்றி நான் கவனிக்கிறேன்' என்று மவுண்ட்பேட்டன் கூறினார்.

'இல்லை' மகாராஜா பதிலளித்தார். 'இந்தியாவுடன் சேரவும் நான் விரும்பவில்லை. நான் சுதந்திரமாக இருக்கவே விரும்புகிறேன்.'

இவை வெறும் வார்த்தைகள் தான்; இவற்றைக் கேட்க வைஸ்ராய் விரும்பவில்லை. 'நான் வருத்தப்படுகிறேன்' அவர் கோபப்பட்டார். 'நீங்கள் சுதந்திரமாக இருக்க முடியாது. உங்களுடையது இரண்டுக்கும் இடைப்பட்ட நாடு. நிலத்தால் பெரியது; மக்கள் தொகை குறைவானது. உங்களின் அணுகுமுறை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மோதலை ஏற்படுத்திவிடும் என்றே நான் நினைக்கிறேன். உங்களின் அண்டை அயலார்களாக இருக்கும் இரண்டு நாடுகளும் எதிரி நாடுகளாகக் கத்திகளை உருவிக் கொண்டு நிற்கும். அவர்களுக்கிடையேயான சண்டைக்கு நீங்களே காரணமாக இருப்பீர்கள். முடிவாக ஒரு போர்க்களத்தைத்தான் நீங்கள் உருவாக்கப் போகிறீர்கள். அதுதான் நடக்கும். எச்சரிக்கையுடன் இல்லை யென்றால் நீங்கள் ஆட்சியை இழப்பீர்கள்; உயிரையும் கூட இழக்க வேண்டியிருக்கும்.'

மகாராஜா பெருமூச்சு விட்டபடி தலையை அசைத்தார். மீன்பிடி துறைக்கு வரும் வரை அவர் வருத்தம் மிக்க மவுனத்தில் ஆழ்ந்தார். ராஜாவின் ஏவலாட்கள் சிறப்பு மிகு விருந்தினர் மீன் பிடிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தனர். அந்த நாளின் எஞ்சிய பொழுதில் மவுண்ட்பேட்டன் தன்னைத் தனியாக சந்திக்கும் வாய்ப்பை ஹரிசிங் உறுதியுடன் தவிர்த்தார். மாறாக அந்த நாள் முழுவதையும் ட்ரிக்கா நதியின் பளிங்கு போன்ற நீர்நிலையில் தூண்டில் போடுவதிலேயே வைஸ்ராய் கழித்தார். விரக்தியடைந்த வைஸ்ராய்க்கு உதவி செய்ய மீன்களும்

யாராக இல்லை. அவரது மெய்க்காப்பாளர்தான் அனைத்து மீன்களையும் பிடித்தார்.

அடுத்த இரண்டு நாட்களிலும் மவுண்ட்பேட்டன் இதே நடைமுறையைத் தொடர்ந்தார். கடைசியாக மூன்றாவது நாளன்று தனது பழைய நண்பர் தடுமாற்ற நிலையில் இருப்பதாக அவர் கருதினார். அடுத்த நாள் காலையில் தாம் புறப்படுவதற்கு முன்னால் மன்னரின் ஊழியர்களுடன் முறைப்படியான ஒரு கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும், மகாராஜாவின் பிரதம அமைச்சர் ஒப்புக் கொள்ளத்தக்க கொள்கை அறிக்கையைத் தயாரித்து அளிக்க வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார்.

'ஆகட்டும். நீங்கள் வற்புறுத்துவதால் செய்கிறேன்' மகாராஜா ஒப்புக் கொண்டார்.

இருப்பினும் இந்தக் குறிப்பிட்ட ஆப்பிள் அதன் மரத்தில் உறுதியாக ஒட்டிக் கொண்டுதான் இருக்கப் போகிறது. அடுத்த நாள் காலையில் மெய்க்காப்பாளர் ஒருவர் மவுண்ட்பேட்டன் தங்கியிருக்கும் இடத்துக்கு வந்தார். மகாராஜாவுக்கு வயிறு சரியில்லை; இதனால் அவர்களின் சிறிய கூட்டத்திலும் கலந்து கொள்ள டாக்டர் அனுமதிக்கவில்லை; இதற்காக வருத்தம் தெரிவித்தார் என்று அங்கு வந்தவர் கூறினார். இது 'முழுமையான கட்டுக்கதை' என்பதில் மவுண்ட்பேட்டன் உறுதியாக இருந்தார். டாக்டரின் ஆலோசனையைச் சாக்காக வைத்து, தனது பழைய நண்பர் புறப்படுவதற்கு முன், அவரைச் சந்திக்கக் கூட ஹரிசிங் மறுத்து விட்டார். ஒரு பிரச்சனை இந்தியா பாகிஸ்தான் உறவுகளைக் கால் நூற்றாண்டு காலத்துக்குக் கசப்பாக்கியது; உலகச் சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்தது. இதன் துவக்கம் அரசியல் ரீதியான வயிற்று வலியில் தான் இருந்தது.

பேடேவின் கூடையை ஆப்பிள்களால் நிரப்பும் முயற்சியில் மவுண்ட்பேட்டன் மற்ற பல இடங்களில் கணிசமான வெற்றியைப் பெற்றிருந்தார். சில மன்னர்களுக்கு, இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது கொடுமையான சோகத்தை ஏற்படுத்தியது. மத்திய இந்தியாவைச் சேர்ந்த ஒரு மன்னர் கையெழுத்திட்ட அடுத்த சில நொடிகளில் மாரடைப்பால் மரணமடைந்தார். தோல்பூர் மன்னரான ராணா கண்களில் நீர்வழிய மவுண்ட்பேட்டனிடம் கூறினார்: ' 1765ஆம் ஆண்டிலிருந்து உங்கள் மன்னரின் மூதாதையர்களுக்கும் எங்கள் மூதாதையர்களுக்கும் இடையே இருந்த உறவை இது உடைத்து விட்டது.' பரோடா மன்னர் கெய்க்வாட் கையெழுத்திடும் போது குழந்தையைப் போல் அழுது கொண்டே வி.பி.மேனனின் தோளில் மயங்கி விழுந்து விட்டார். இவரது மூதாதையரில் ஒருவர்தான் பிரிட்டிஷ் அரசப் பிரதிநிதி ஒருவருக்கு வைரத்தூளை உணவில் கலந்து கொடுத்தவர். மன்னர் பதவி கடவுள் அளித்த உரிமை என்று நம்பிக் கொண்டிருந்ததால், ஒரு சிறிய மாநிலத்தின் ஆட்சியாளர் கையெழுத்திடுவதற்கு முன் பல நாட்கள் தயக்கம் காட்டினார். பஞ்சாபைச் சேர்ந்த எட்டு மகாராஜாக்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை ஒரு சடங்காகவே நடத்தினார்கள். இந்தியாவுக்கு வந்த தனது விருந்தினர்களுக்கு ஆடம்பரமாகவும் விருந்தோம்பும் பண்புடனும் ஆஜானுபாகுவான சர் பூபிந்தர்

*சிங் ஒரு காலத்தில் விருந்து அளித்த பாட்டியாலா விருந்து மண்டபத்தில்தான் அந்த நிகழ்ச்சி நடைபெற்றது. ஆனால் இப்போது, 'சூழ்நிலை மிகவும் சோகமாக ஒரு இறுதிச்சடங்கு நிகழ்ச்சி போல் இருந்தது' என்று இதில் கலந்து கொண்ட ஒருவர் நினைவு கூர்ந்தார்.*

*மவுண்ட்பேட்டன், வி.பி.மேனன், படேல் ஆகியோரின் தந்திரமான பசப்பு வார்த்தைகளுக்கு மசியாமல் சில ஆட்சியாளர்கள் எதிர்ப்பைத் தொடர்ந்தனர். மவுண்ட்பேட்டனின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான, போபாலின் நவாப் மிகவும் கசப்புடன் இப்படிக் கூறினார்: 'கடற்குதிரைகள் மற்றும் கார்பெண்டர் மீன்களுடனான தேநீர் விருந்துக்கு சிப்பிகள் போல ஆட்சியாளர்கள் அழைக்கப்பட்டார்கள்.' உதய்ப்பூர் மன்னர் தனக்கு அருகே உள்ள மாநிலங் களின் மன்னர்களைச் சேர்ந்த ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்த முயற்சித்தார். மின்சார ரயில் மோகம் கொண்டிருந்த மன்னரின் மகனான குவாலியர் மன்னரும் இதே போல் செய்தார். தெற்குப் பகுதியில் துறைமுகத்தையும் மதிப்பு மிக்க யுரேனியம் வளங்களையும் கொண்ட திருவாங்கூர் மகாராஜா தனது பிரதம அமைச்சரின் தூண்டுதலால் சுதந்திரத்துக்குக் குரல் கொடுத்தார்.*

*ஆகஸ்ட் 15 நெருங்க நெருங்க உறுதியுடன் எதிர்ப்பு தெரிவிக்கும் சிலரையும் படேலின் கூடைக்குள் கொண்டு வருவதற்கான நிர்ப்பந்தங்கள் தீவிரமாக்கப் பட்டன. மன்னர்கள் கையெழுத்திட வற்புறுத்தி ஆர்ப்பாட்டங்களையும் வீதியில் இறங்கிப் போராட்டங்களையும் நடத்துமாறு உள்ளூர் காங்கிரஸ் காரர்களுக்கு படேல் கட்டளையிட்டார். ஒரிசா மகாராஜாவை ஒரு கும்பல் அரண்மனைக்குள் முற்றுகையிட்டது. அவர் கையெழுத்திடும் வரை அவரை விடுவிக்க அந்தக் கும்பல் மறுத்து விட்டது. திருவாங்கூரின் உறுதிமிக்க பிரதம அமைச்சர் காங்கிரஸ் ஆர்ப்பாட்டக்காரர்களால் முகத்தில் குத்தப்பட்டார். இதனால் அதிர்ச்சியடைந்த மகாராஜா இணைப்புக்கு சம்மதம் தெரிவித்து டில்லிக்குத் தந்தி அனுப்பினார்.*

*ஜோத்பூரின் இளம் மகாராஜாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் போல் பதற்றம் மிக்கது வேறெதுவும் இல்லை. தந்தையின் மரணத்துக்குப் பிறகு ஜோத்பூர் மகாராஜா இப்போது தான் முடிசூட்டிக் கொண்டிருந்தார். இவர் விமானம் ஓட்டுதல், பெண்கள், மாய மந்திரம் போன்ற பெரும் செலவு பிடிக்கும் பல பொழுது போக்குகளில் ஆர்வம் கொண்டவர். இவற்றில் எதுவும் காங்கிரஸ் சோஷலிஸ்டுகளின் அனுதாபத்தைப் பெற உதவாது என்பதை அவர் உணர்ந்திருந்தார். ஜெய்சால்மர் மகாராஜாவுடன் சேர்ந்து கொண்டு, டில்லியில் ஜின்னாவுடன் ஒரு ரகசிய கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். தங்களின் இந்து மாநிலங்களை அவரின் டொமினியனில் சேர்த்தால் தாங்கள் என்ன மாதிரியான வரவேற்பை எதிர்பார்க்க முடியும் என்று அந்த முஸ்லீம் தலைவரிடம் விவாதிப்பதற்காகவே இந்தக் கூட்டம்.*

*தனது காங்கிரஸ் எதிரிகளிடமிருந்து இரண்டு முக்கியமான மன்னர்களைப் பிரிக்கப்போகும் எண்ணத்தில் மகிழ்ச்சியடைந்த ஜின்னா, தனது மேசை அறையைத் திறந்து வெள்ளைத்தாள் ஒன்றை எடுத்து ஜோத்பூர் மகாராஜா விடம் அளித்தார்.*

*'உங்கள் நிபந்தனைகளை இந்தக் காகிதத்தில் எழுதுங்கள்; நான் கையெழுத்திடுகிறேன்' என்று அவர் கூறினார்.*

யோசிக்கத் தங்களுக்கு அவகாசம் வேண்டும் என்று கூறி அந்த இருவரும் ஹோட்டலுக்குத் திரும்பினார்கள். தங்களுக்காக வி.பி.மேனன் அங்கே காத்திருப்பதை அவர்கள் கண்டனர். இவர்களின் முயற்சிகள் பற்றி ரகசியமான வட்டாரங்களிலிருந்து தகவல் அறிந்த மேனன், இது மேலும் பல மாநிலங்களை பாகிஸ்தானுக்கு இழுத்துச் செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி விடும் என்று நினைத்தார். வைஸ்ராய் மாளிகையில் அவரை அவசரமாக சந்திக்க வைஸ்ராய் விரும்புகிறார் என்று ஜோத்பூர் மகாராஜாவிடம் மேனன் கூறினார்.

பார்வையாளர்கள் அறையில் மன்னரை அமரவைத்துவிட்டு மவுண்ட் பேட்டனை மேனன் பரபரப்புடன் தேடினார். என்ன செய்வதென்ற சிந்தனையே இல்லாத வைஸ்ராயை கடைசியில் குளியலறையில் கண்டு பிடித்தார். உடனே வெளியே வந்து பிடிவாதக்கார மகாராஜாவுடன் பேசுமாறு வைஸ்ராயிடம் மேனன் கேட்டுக் கொண்டார்.

அண்மையில் மரணமடைந்த அவரது தந்தை தனக்கு 26 ஆண்டுகால நண்பர் என்றும், தற்போதைய செயல் அவரது தந்தைக்குக் கோபத்தையே ஏற்படுத்தும் என்றும் வைஸ்ராய் அந்த இளம் மன்னரிடம் கூறினார். சுத்தமான சுயநல காரணங்களுக்காக இந்து மாநிலத்தின் மக்களை பாகிஸ்தானுக்குக் கொண்டு செல்ல முயற்சிப்பது மடத்தனம் என்றார் அவர். மாறாக, அவரது தனிப்பட்ட கோரிக்கைகள் குறித்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு பொறுமையுடன் கையாள்வதற்கு தாமும் மேனனும் படேலை வற்புறுத்துவதாக ஜோத்பூர் மன்னருக்கு அவர் வாக்குத் தந்தார்.

மூர்க்கமான அந்த இளம் ஆட்சியாளரிடம் தற்காலிக ஒப்பந்தத்தில் கையெழுத்தைப் பெறுமாறு மேனனிடம் சொல்லி விட்டு மவுண்ட்பேட்டன் புறப்பட்டார். அவர் சென்றபின், தனது தொழிற்சாலையில் தயாரித்த பேனா ஒன்றை பையிலிருந்து ஜோத்பூர் மன்னர் எடுத்தார். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின் அதன் மூடியைத் திறந்த மன்னர், அதில் மறைத்திருந்த சிறிய வடிவிலான .22 கைத்துப்பாக்கியை எடுத்து மேனனின் நெற்றிப் பொட்டில் குறி வைத்தார்.

' உங்கள் மிரட்டல்களுக்கெல்லாம் நான் பணிய மாட்டேன்' என்று அவர் கூச்சலிட்டார். இந்த சத்தத்தைக் கேட்ட மவுண்ட் பேட்டன் ஓடிவந்து அந்தத் துப்பாக்கியைப் பறித்தார்.*

மூன்று நாட்களுக்குப் பிறகு இணைப்புக்கான இறுதி ஒப்பந்தத்தை மன்னரின் அரண்மனைக்கு மேனன் அனுப்பி வைத்தார். இதில் மன்னர் வருத்தத்துடன் கையெழுத்திட்டார். பின்னர் தனது கடந்த கால நினைவுகளைப் புதைக்க தனது விரும்பத்தகாத விருந்தினரான மேனனுடன் விருந்து நிகழ்ச்சி நடத்த அவர் முடிவு செய்தார். மாலை நேரம் முழுவதும் அந்த வறிய சிவில் ஊழியர் தொண்டையை நனைக்க அவர் விஸ்கி ஊற்றிக் கொடுத்தார். அதன்பிறகு மேனன் ஷாம்பென் மதுவையும் குடிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்.

* சில ஆண்டுகளுக்குப் பின், தந்திர செயல்களில் ஈடுபாடுள்ள மவுண்ட்பேட்டனுக்கு, மேஜிக் சர்க்கிள் தேர்தலில் வெற்றி பெற ஒரு தந்திர செயல் தேவைப்பட்டது. இதற்கு அவர் ஜோத்பூர் மன்னரின் பேனா – துப்பாக்கியைப் பயன்படுத்தினார். பின்னர் மேஜிக் சர்க்கிள் அருங்காட்சியகத்துக்கு அளிக்கப்பட்ட அது, இன்னமும் காட்சிப் பொருளாக அங்கே உள்ளது.

வறுத்த இறைச்சி, சூதாட்டம், இசைக்குழு, நடனப் பெண்களைத் தெரிவு செய்து கொள்ளுதல் என முழு அளவிலான விருந்துக்கு மன்னர் உத்தரவிட்டார். கூச்ச சுபாவமுள்ள சைவ உணவுக்காரரான மேனனுக்கு அந்த மாலைப் பொழுது அச்சம் தருவதாக அமைந்தது. ஆனால் இதைவிட மோசமான நிலை இனிமேல் தான் வரவிருந்தது. இசைக் கருவிகள் மிகவும் உரத்து ஒலிப்பதாக நினைத்த ஜோத்பூர் மன்னர் கோபத்துடன் தனது தலைப்பாகையைக் கழற்றித் தரையில் எறிந்தார். குடிபோதையில் இருந்த அவர் பெண்களையும், இசைக்குழுவையும் விரட்டினார். தனது சொந்த விமானத்தில் மேனனை டில்லிக்கு அழைத்துச் செல்வதாக அவர் தெரிவித்தார். தரையிலிருந்து மேலெழும்பி விமானத்தில் அவர் புறப்பட்டார். டில்லி விமான நிலையத்தில் இறங்குவதற்கு முன் அவரால் செய்ய முடிந்த அளவு சேட்டைகளைச் செய்து தன்னுடன் வந்த பயணியை மிரளச் செய்தார். புதிய அனுபவத்தோடும், குமட்டலோடும், விமானத்திலிருந்து மேனன் தடுமாறியபடி வந்தார். ஆனால் அவரது கைவிரல்களுக்குள் அந்த ஆவணம் இருந்தது. இது படேலின் கூடையில் மேலும் ஒரு ஆப்பிளைச் சேர்த்தது.

விடாப்பிடியான போராட்டத்துடன் சிலர் முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொண்டாலும், படேலுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஆகஸ்ட் 15க்குள் வைஸ்ராயால் நிறைவேற்ற முடியும் என்றே தோன்றியது. அவருக்கு வைஸ்ராய் அளிக்கவிருக்கும் ஆப்பிள் கூடை நிரம்பி வழியக்கூடும். பாகிஸ்தானுக்குள் தங்களின் மாநிலங்கள் இருந்த ஐந்து மன்னர்கள் ஜின்னாவுக்குப் பின் சென்றார்கள். மூன்று மன்னர்கள் தவிர மற்றெல்லாரையும் மவுண்ட் பேட்டனும், மேனனும் பறித்து விட்டார்கள்.

விடுபட்ட மூன்றும் மிகவும் முக்கியமானவை. இந்து இந்தியாவில் தங்களின் உரிமைகளை இழக்க நேரிடும் என்று முஸ்லீம் தீவிரவாதிகள் கிளப்பிவிட்ட பீதியால் மிரண்டு போயிருந்த இந்தியாவின் மிகப்பெரிய மக்கள் நெருக்கமுள்ள மாநிலத்தின் ஆட்சியாளர் மவுண்ட் பேட்டனின் யோசனைகள் அனைத்தை யும் நிராகரித்தார். இந்தியாவுடன் இணைய வேண்டும் என்பதற்கு மேற் கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளையும் ஒதுக்கித் தள்ளிய ஹைதராபாத் நிஜாம், தனது மாநிலத்தை சுதந்திரமான ஆட்சிப் பகுதியாக அங்கீகரிக்க வேண்டும் என்று பிரிட்டனுக்கு நிர்ப்பந்தம் அளித்தார். அவரது பழைய கூட்டாளி அவரைக் கைவிடப் போவது பற்றியோ, பேரரசின் மன்னருடன் பல காலம் இருந்த தொடர்பு துண்டிக்கப்படப் போகிறது என்பது பற்றியோ கசப்பான புலம்பல் எதுவும் அந்தக் கருமி மன்னரின் அரண்மனையிலிருந்து வெளிப்படவில்லை. காஷ்மீர் மன்னரும் கூட இரண்டு டொமினியன்களில் எந்த ஒன்றிலும் சேர்வதில்லை என்ற பிடிவாத நிலையைத் தொடர்ந்தார்.

இந்தியாவுடன் இணைய மறுத்து வந்த மூன்றாவதும் கடைசியுமான மன்னர் கூறிய காரணங்கள் முற்றிலும் வித்தியாசமானவை. சுதந்திர இந்தியாவின் முதல் நடவடிக்கை அவரது செல்லமான நாய்களுக்கு விஷமிடுவதாகத்தான் இருக்கும் என்று முஸ்லீம் லீகைச் சேர்ந்த ஒருவர் சொன்னதை நம்பிவிட்ட ஜுனாகட் நவாப், சுதந்திரமாக இருக்க வேண்டும்; அல்லது பாகிஸ்தானுடன் சேர வேண்டும் என்று முடிவு செய்தார். இந்துக்கள் நிறைந்த அவரது சிறிய

மாநிலத்தின் எந்தப் பகுதியின் எல்லையும் முஸ்லீம் நாட்டுடன் இல்லை என்ற உண்மையைக் கூட அவர் உணரவில்லை.

*

'நண்பர்களே! இவர் மிஸ்டர் சேவேஜ் (Savage); பஞ்சாப் சிஐடி பிரிவைச் சேர்ந்தவர்' ஆகஸ்ட் 5ஆம் தேதி தனது கூட்ட அறையில் அதிர்ச்சியுடன் அமர்ந்திருந்த இரண்டு இந்திய அரசியல்வாதிகளிடம் லூயி மவுண்ட்பேட்டன் அறிமுகம் செய்தார். 'நீங்கள் கேட்பதற்கு அவரிடம் ஒரு செய்தி உள்ளது'

செய்தி எதுவாக இருந்தாலும், நிச்சயமாக அது ஜின்னா மற்றும் லியாகத் அலிகானின் கவனத்தை ஈர்க்கும். ஏனெனில் சேவேஜ் அங்கம் வகிக்கும் அமைப்பு இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் புலனாய்வு அமைப்புகளிலேயே சிறந்ததாகும். அது மட்டுமல்ல, அவர்களின் சொந்த அரசியல் இயக்கங்களின் உயர்நிலையிலும் கூட இந்த அமைப்பின் செயல்பாடுகள் பரவியிருந்தன.

உணர்ச்சி வயப்பட்டிருந்த சேவேஜ் தொண்டையை சரி செய்து கொண்டு செய்தியைச் சொல்லத் தொடங்கினார். லாகூரில் உள்ள பைத்தியக்கார விடுதியில் பயன்படுத்தாமல் இருந்த ஒரு பகுதியில் சி.ஐ.டி. அமைத்திருந்த விசாரணை மையத்தின் கைதிகளிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்களையே அவர் கூறவிருந்தார். இவை மிகவும் ரகசியமானவை என்பதால் டில்லிக்கு இவற்றைக் காகிதத்தில் குறித்துக் கொண்டு வருவது சரியல்ல என்ற எண்ணி, லாகூரிலிருந்து புறப்பட்ட மாலை வேளையில் அந்தத் தகவல்கள் முழுவதையும் சேவேஜ் மனப்பாடம் செய்திருந்தார்.

சீக்கியத் தீவிரவாதிகளின் ஒரு குழு, இந்தியாவின் வெறிபிடித்த அரசியல் குழுவான இந்து மத வெறி கொண்ட குருட்டுப் பிடிவாதக்கார அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.உடன் தொடர்பு வைத்துள்ளது. இவர்களுக்கு மூன்றாம் நிலை பள்ளி ஆசிரியர் தாராசிங் தலைமை தாங்குகிறார். லாகூரில் நடைபெற்ற சீக்கியர்களின் ரகசியக் கூட்டத்தில் இந்தியாவை ரத்த வெள்ளத்தில் மூழ்கடியுங்கள் என்று தனது ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்தவர்தான் இவர். இந்த இரண்டு குழுக்களும் தங்களின் ஆள்பலத்தையும் ஆற்றலையும் தீவிரவாத நடவடிக்கைகளில் இணைக்க ஒப்புக் கொண்டுள்ளன.

அமைப்பு ரீதியில் நன்கு திரட்டப்பட்ட, பயிற்சி பெற்ற, வெடிமருந்துகள் பற்றிய அறிவு கொண்ட சீக்கியர்கள் பலத்தப் பாதுகாப்பு கொண்ட 'பாகிஸ்தான் சிறப்பு ரயில்களை' அழிக்கவுள்ளனர். புதிய நாட்டை உருவாக்குவதற்கான முக்கிய மனிதர்களையும் பொருள்களையும் ஏற்றிக் கொண்டு டில்லியிலிருந்து கராச்சிக்கு இந்த ரயில்கள் செல்லவிருந்தன. இந்த ரயில்களைத் தாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்த ஆயுதம் தாங்கிய சீக்கியக் குழுவினருக்கு ரயில்களின் புறப்பாடு, அவற்றின் வழித்தடம் ஆகியவை பற்றி தகவல் தெரிவிக்க வயர்லெஸ் கருவி ஒன்றை ஏற்கெனவே அமைத்து விட்ட தாராசிங் அதனை இயக்கவும் ஒருவரை நியமித்திருந்தார்.

இரண்டாவது கட்ட நடவடிக்கையின் பொறுப்பு ஆர்.எஸ்.எஸ்.சிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக சேவேஜ் கூறினார். சீக்கியர்களைப் போலன்றி

இந்துக்கள் எளிதாக முஸ்லீம்களாக உருமாற்றிக் கொள்ள முடியும். அவர்களின் மதவெறி பிடித்த ஆதரவாளர்களிலிருந்து கணிசமானவர்களைக் கராச்சி நகருக்குள் ஊடுருவச் செய்யும் நடவடிக்கையில் அந்த அமைப்பு ஈடு பட்டிருந்தது. ஒவ்வொருவர் கையிலும் பிரிட்டிஷ் ராணுவத்தினரின் கையெறி குண்டு அளிக்கப்பட்டது. அவர்களுக்குள்ளேயே ஒருவர் மற்றவர் பற்றி அறிந்திருக்கமாட்டார் என்பதால் ஒரு மனிதர் கைது செய்யப்பட்டாலும் இந்த திட்டம் சீர்குலைந்து விடாது.

ஆகஸ்ட் 14ஆம் தேதி, பாகிஸ்தானின் அரசியல் சாசன சபையின் கூட்டத்திலிருந்து, புதிய கவர்னர் ஜெனரலின் அதிகாரபூர்வ இல்லத்திற்கு, கராச்சி நகர வீதிகளின் வழியே, வெற்றி ஊர்வலமாக, முகமது அலி ஜின்னாவின் வாகனம் செல்லும் வழி நெடுக, அந்த மனிதர்கள் நின்றிருப்பார்கள். ஒரு செர்பிய இளைஞன் ஐரோப்பாவை முதலாவது உலகப்போர் என்ற பயங்கரத்துக்குள் தள்ளியதைப் போல், இந்த மதவெறியர்களில் ஒருவன், புகழின் உச்சியில் இருக்கும் பாகிஸ்தானின் நிறுவனர் திறந்த வாகனத்தில் செல்லும் போது, அவர்மீது கையெறி குண்டினை வீசிக் கொல்லப் போகிறான். இந்தப் பயங்கரக் கொலை ஏற்படுத்தும் வெறித்தனத்தால், துணைக்கண்டம் முழுவதிலும் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டு விடும்; இதன் மூலம் எண்ணிக்கையில் அதிக மாயிருக்கும் இந்துக்கள் எதிர்ப்பில்லாத ஆட்சியாளர்களாக உருவாகி விடுவார்கள் என்று ஆர்.எஸ்.எஸ். நம்புகிறது.

சேவேஜின் வார்த்தையைக் கேட்டு, அவர்களின் கொலைக்குத் தேவைப் பட்ட, அந்த மனிதரின் முகம் வெளிறிப்போனது. அவருக்குப் பின்னாலிருந்து உணர்ச்சி வயப்பட்ட லியாகத் அலிகான், ஒட்டுமொத்த சீக்கியத் தலைவர் களையும் கைது செய்யுமாறு மவுண்ட்பேட்டனிடம் கோரினார். திகைத்துப் போன வைஸ்ராய் இதை எப்படிச் செய்ய முடியும் என்று வியப்பு தெரிவித்தார். சீக்கியத் தலைவர்களைச் சுற்றி வளைத்தால், ஆர்எஸ்எஸ்.எஸ் விரும்பும் உள்நாட்டுப் போரை முன்கூட்டியே தொடங்கிவிடும் என்று அவர் அஞ்சினார்.

இளம் சிஐடி அதிகாரி பக்கம் திரும்பிய அவர், ‘ஒருவேளை சீக்கியத் தலைவர்களைக் கைது செய்யுமாறு கவர்னரை நான் கேட்டுக் கொண்டால் என்னவாகும்?’ என்றார். இந்த யோசனையை கவனித்த சேவேஜ் ‘அப்படிச் செய்தால் ரத்தம் சிந்தும் பீதியை ஏற்படுத்தும்’ என்று எண்ணினார். அவர்கள் எல்லாம் அமிர்தசரஸின் பொற்கோயிலுக்குள் இருப்பார்கள் என்பது அவருக்குத் தெரியும். அதற்குள் செல்வதற்கான உத்தரவை எந்த ஒரு சீக்கிய அல்லது இந்துக் காவலரும் ஏற்கமாட்டார். இதன் பிறகு முஸ்லீம் காவலரை அனுப்புவது என்பதை நினைத்துப் பார்க்கவும் முடியாது.

‘ஐயா, நான் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும். அப்படியொரு செயலை நிறைவேற்ற பஞ்சாபில் போதிய அளவு நம்பகமான காவலர்கள் இல்லை. இதைக் கூற எனக்கு விருப்பமில்லைதான்; ஆயினும் அத்தகைய உத்தரவை நிறைவேற்ற வேறு வழி இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை’ சேவேஜ் பதிலளித்தார்.

மவுண்ட்பேட்டன் சற்று நேரம் அமைதியானார். இதற்கு என்ன செய்யலாம் என்று, பஞ்சாபின் கவர்னர் சர் இவான் ஜென்கின்ஸ், ஆகஸ்ட் 15க்குப் பிறகு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் என்று பிரிக்கப்படவுள்ள பஞ்சாபின்

பகுதிகளை நிர்வகிக்க நியமிக்கப்பட்டுள்ள இரண்டு மனிதர்கள் ஆகியோரிடமிருந்து கூட்டான பரிந்துரைகளைக் கேட்கப் போவதாக அவர் அறிவித்தார். மவுண்ட்பேட்டனின் வார்த்தைகளைக் கேட்டு நாற்காலியிலிருந்து துள்ளி எழுந்த லியாகத் அலிகான், 'காயித் இ ஆசமைக் கொல்ல நீங்கள் விரும்புகிறீர்கள்' என்று கூறி எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

'இதைப்பற்றி நீங்கள் உண்மையிலேயே அப்படித்தான் நினைக்கிறீர்கள் என்றால், அதே காரில் நானும் சென்று அவருடனேயே கொலையாகிறேன். ஆனால் சம்பந்தப்பட்ட கவர்னர்களின் ஒப்புதலைப் பெறாமல் ஐந்து மிலியன் (50 லட்சம்) சீக்கியர்களின் தலைவர்களை நான் சிறையிலடைக்கப் போவதில்லை' என்று மவுண்ட்பேட்டன் பதிலளித்தார்.

அன்று இரவே சேவேஜ் லாகூருக்குத் திரும்பினார். மவுண்ட்பேட்டனின் கடிதத்தை ஜென்கின்ஸுக்குக் கொண்டு செல்லும் ரகசிய தூதர் என்ற முறையில், பாதுகாப்புப் பற்றி நன்கு அறிந்திருந்த அவர், பெட்டி நிறைய கழிவறைக் காகிதத்தை வைத்துத் திணித்துவிட்டு, அந்தக் கடிதத்தைத் தனது உள்ளாடைக்குள் சுருட்டி வைத்துக் கொண்டு சென்றார். ஃபாலெட்டி (Falleti) ஓட்டலின் புல்வெளியில் ஒரு வரவேற்பு நிகழ்ச்சியில் ஜென்கின்ஸை அவர் கண்டுபிடித்தார். உயிரோடிருக்கும் மேலைநாட்டுக்காரர்கள் எவரையும் விட பஞ்சாபைப் பற்றி அதிகம் தெரிந்திருக்கும் அந்த மனிதர் மவுண்ட்பேட்டனின் கடிதத்தைப் படித்தார். அவரது தோள்கள் நம்பிக்கையிழந்து துவண்டன.

'நாம் என்ன செய்ய முடியும்?' பெருமூச்சுவிட்ட சர் இவான் ஜென்கின்ஸ், 'அவர்களை நாம் எப்படித் தடுக்க முடியும்?' என்றார்.

*

ஐந்து நாட்களுக்குப் பின், ஆகஸ்ட் 11க்கும் 12க்கும் இடைப்பட்ட இரவு நேரத்தில், ஆர்.எஸ்.எஸ்.எஸ்.சுடன் ஒப்புக் கொண்ட திட்டத்தின் முதல் கட்டத்தை தாராசிங் ஆதரவு சீக்கியர்கள் வெற்றிகரமாக செயல்படுத்தி விட்டனர். பஞ்சாப் மாநிலம், ஃபெரோஸ்பூர் மாவட்டத்தில் உள்ள கிதர்பஹா ரயில் நிலையத்திற்குக் கிழக்கே ஐந்து மைல் தூரத்தில் ரயில் பாதையின் வலது பக்கம் புதைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு குண்டுகள் (ஜெலிக்னைட்) வெடித்து முதலாவது பாகிஸ்தான் சிறப்பு ரயிலை அழித்தன.

*

டில்லி வைஸ்ராய் மாளிகை எஸ்டேட்டின் ஒரு ஓரத்தில் பச்சைக் கதவுகளும் வெள்ளைப் பூச்சும் கொண்ட ஒரு பங்களாவில் அமர்ந்து, கொளுத்தும் கோடை வெப்பத்தின் வியர்வையில் நனைந்தபடி, பிரிட்டிஷ் பொறியாளர்கள் தயாரித்த வரைபடத்தில் சர் சிரில் ராட் கிளிஃப் எல்லைக்கோடுகளை வரையத் தொடங்கினார். எல்லாத் தரப்பிலிருந்தும் விரைவுபடுத்துமாறு வந்த இரக்கமற்ற கோரிக்கையால், இந்த அறுவை சிகிச்சையை தனது பங்களாவில் தனிமையில் இருந்து செய்வதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது. மனிதர்களின் வாழ்க்கையோடு பொருந்திய பகுதிகளில் அவரது பணி எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைக் கற்பனை செய்து பார்க்க முடியாதபடி,

மனிதத் தொடர்புகளிலிருந்து துண்டிக்கப்பட்டு, வரைபடங்களும், மக்கள் தொகை பட்டியலும், புள்ளி விவரங்களுமே அவருக்கு வழிகாட்டின.

தான் வரையும் கோடு நிலப்பரப்பில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அறிய முடியாத நிலையில், மனிதனின் கையில் உள்ள ரத்த நாளங்கள் போல் பஞ்சாபின் நிலப்பரப்பைச் சூழ்ந்திருக்கும் பாசன முறையை தினமும் துண்டு துண்டாக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. பஞ்சாபுக்குத் தண்ணீர் உயிர் போன்றது என்பதையும், எவர் தண்ணீர் மீது கட்டுப்பாடு வைத்துள்ளாரோ அவரே வாழ்க்கையிலும் கட்டுப்பாடு கொண்டிருப்பார் என்பதையும் ராட்கிளிஃப் அறிவார். இருப்பினும் காங்கிரீட்டால் அமைக்கப் பட்டுள்ள முக்கியமான கலிங்குகள், கண்மாய்க் கதவுகள், ஏரிகள் என இவற்றில் ஒன்றையாவது பார்த்து இவற்றின் வளைவு நெளிவுகளை ஆய்வு செய்து எல்லைக்கோட்டினை அவரால் வரைய முடியவில்லை.

அவரது பென்சில் கூறு போடப்போகும் சணல் வயல்களை ஆய்வு செய்யவோ நெல்வயல்களில் நடந்து செல்லவோ ஒரு போதும் அவரால் இயலாது. அவரது எல்லைக்கோடு ஊர்ந்து செல்லும் நூற்றுக்கணக்கான கிராமங்களில் ஒரு கிராமத்திலாவது பயணம் செய்து தனது கோடு ஏற்படுத்திய விளைவை தங்களின் வயல்களிலிருந்தும் கிணறுகளிலிருந்தும், சாலை களிலிருந்தும் பிரிக்கப்பட்டு ஆதரவற்று நிற்கப்போகும் விவசாயிகளை அவரால் காண முடியாது. நிலப்பரப்பின் மீது அவர் வரையும் எல்லைக் கோட்டின் மூலம் மனிதர்களுக்குத் துயரங்கள் ஏற்படப் போவது நிச்சயம். ஒரு போதும் அவரால் இதனை மட்டுப்படுத்த முடியாது. தாங்கள் உழுது பயிரிட்ட நிலங்களிலிருந்து விவசாயிகள் பிரியப்போகிறார்கள்; தொழிற்சாலைகள் அவற்றின் சரக்குக் கிடங்குகளிலிருந்து தனியாகப் போகின்றன; மின் உற்பத்தி நிலையங்கள் அவற்றின் விநியோகத் தொகுப்புகளிலிருந்து விடுபடப் போகின்றன. இதற்கெல்லாம் காரணம் இந்தியத் தலைவர்களின் பயங்கர அவசரம். இவர்கள்தான் ஒவ்வொரு நாளும் சராசரியாக 30 மைல் தூர எல்லைப் பகுதியைப் பிரித்துக் கோடு வரைய வேண்டும் என்று ராட் கிளிஃபை கட்டாயப்படுத்தியிருந்தனர்.

அவருக்கு வழங்கப்பட்டிருந்த சொற்பமான உபகரணங்களும் அவரது பணிக்குப் போதுமானவையாக இல்லை. அவரது சாதாரண வரைபடத்தை விட உதவியாக இருக்கும் பெரிய அளவிலான ராணுவ வரைபடத்தைப் பெறுவது கூட இயலாத காரியமாக இருந்தது. வரைபடங்களின் மீதிருந்த விவரங்கள் பெரும்பாலும் சரியானதாக இல்லை. பஞ்சாபின் தற்பெருமை கொண்ட பொறியியல் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட வரைபடங்கள் பஞ்சாபின் ஐந்து ஜீவநதிகளும் வயல்வெளிகளிலிருந்து பல மைல்தூரத்துக்கு அப்பால் ஓடிக்கொண்டிருப்பதாகக் காட்டின. அவரின் மிக முக்கிய வழிகாட்டியான மக்கள் தொகைப் புள்ளி விவரம் போதுமானதாக இல்லை. தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக ஒவ்வொரு பிரிவினரும் முரண்பட்ட தகவல்களைக் கொடுத்திருந்தனர்.

வங்கப் பிரிவினை வேலை சற்று எளிதாக இருந்தது. கல்கத்தாவின் விதியைத் தீர்மானிக்கத்தான் ராட் கிளிஃப் நீண்ட நேரம் எடுத்துக் கொண்டார். சணலை, வயல்களிலிருந்து தொழிற்சாலைகளுக்கும் அங்கிருந்து துறைமுகத்துக்கும்




கொண்டு செல்ல வசதியாகக் கல்கத்தாவை ஜின்னா உரிமை கோரியதில் மிகவும் நியாயம் உள்ளது என்றே அவர் நினைத்தார். இருப்பினும் மக்கள் தொகையில் பெரும்பாலோர் இந்துக்கள் என்பதைப் பார்க்கும் போது பொருளாதாரத்தை விட இதுவே முக்கியம் என்றும் அவர் கருதினார். இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு விட்டதால் வங்காளத்தில் மற்ற வேலைகள் எளிதாய் முடிந்து விட்டன. அவர் வரைந்த எல்லைக் கோடு வரைபடத்தின் மீதான ஒரு பென்சில் கோடுதான். நெஞ்சைப் பிளக்கும் விளைவுகள் அதற்குத் தெரியாது. சதுப்பு நிலங்களோ, தாழ்வான வயல்வெளிப்பகுதிகளோ, ஆறுகளோ, வரிசையான குன்றுகளோ எல்லைக்கோடு வரைபவரின் விளக்கத்துக்குத் தேவையாய் இருக்கவில்லை.

பஞ்சாப் பிரிவினை மிகவும் சிக்கலாக இருந்தது. லாகூரில் சமஅளவில் இருந்த இரு பிரிவு மக்களும் அந்த நகரைப் போட்டிப் போட்டுக் கொண்டு உரிமை கொண்டாடினார்கள். அந்த நகருடன் உணர்ச்சிமயமான உறவு இருப்பதாக எல்லோரும் கூறினார்கள். சீக்கியர்களுக்கோ பொற்கோவில் உள்ள அமிர்தசரஸ் இந்தியாவில் தான் இருந்தாக வேண்டும்; ஆனால் அது முஸ்லீம்கள் பெருமளவில் இருந்த பகுதியில் தான் இருந்தது.

பல்வேறு இனத்தவர் வாழும் பகுதிகள் ஆங்காங்கே ஒழுங்கற்று அமைந்திருந்தன. ஒன்று மக்கள் தொகையை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். அல்லது புவியியலை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்; முந்தையது நிர்வகிக்க முடியாத அளவுக்கு சிறு சிறு திட்டுகளை ஆங்காங்கே

கொண்டிருக்கும்; இவற்றில் வசிப்பவர்களுக்கு நுழைவுரிமை அளிப்பதை உறுதி செய்வது இயலாத காரியம். பிந்தையது நிர்வகிக்க எளிதாக இருக்கும். ஆனால் பெரும்பான்மை இனத்தவர்களின் பகுதிக்குள் சிறுபான்மையினர் வாழ வேண்டியிருக்கும். இது பல துயரங்களை ஏற்படுத்தும் என்று ராட் கிளிஃப் கருதினார்.

இதற்கெல்லாம் மேலாக, அந்தக் கடுமையான கோடைகாலத்தில் பல வாரங்கள் கடந்ததால், கொடுமையான தளர்ச்சியேற்படுத்தும் வெப்பத்தால், ராட் கிளிஃப் பாதிக்கப்பட்டார். வரைபடங்கள், ஆவணங்கள், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மெல்லிய காகிதத்தில் அச்சிடப்பட்ட அறிக்கைகள் ஆகியவை அவர் தங்கியிருந்த மூன்று அறைகளிலும் குப்பைகள் போல் குவிந்து கிடந்தன. அவரது மேசை மீது கைகளை மடித்துச் சாய்ந்திருக்கும் போது, அங்கே சுருட்டி வைக்கப்பட்டக் காகிதங்கள் அவரது வியர்த்த முன் கைகளில் ஒட்டிக் கொண்டன. அவற்றை உரித்து எடுத்த பின், தோலில் எஞ்சியிருக்கும் பகுதிகள் மச்சங்கள் போல் தெரிந்தன. கசங்கி மங்கிப்போன காகிதத்தில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்துக்கள் ஒவ்வொன்றும், ஆயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கைகளாக, அவர்களின் இறுதி கோரிக்கைகளாக இருந்தன.

மேல் தளத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த விசிறியின் தடித்தத் தகடுகள் மெதுவாகச் சுற்றி அளித்த காற்று மட்டும்தான், அந்த பங்களாவுக்குள் இருந்த காற்று. சிலநேரங்களில் மின்சாரத்தில் உருவான அற்புத சக்தியால் விசிறி வேகமாக சுழன்றது. இதனால் பங்களா முழுவதும் சண்டமாருதம் போல் காற்று வீசியது. இளவேனிற் காலத்தின் காற்றில் இலைகள் பறப்பது போல ராட்கிளிஃபின் பல டஜன் காகிதங்கள் அறையைச் சுற்றிப் பறந்தன. புயலில் சிக்கிய பஞ்சாப் கிராமங்களைப் போல அந்த அறை இருந்தது.

அவர் என்ன செய்திருந்தாலும், அவரது அறிக்கை வெளியானவுடன் பயங்கரமாக ரத்தம் சிந்தப் போகிறது; கொலைகள் விழப்போகின்றன என்பது வெகுகாலத்துக்கு முன்பே ராட் கிளிஃபுக்குத் தெரியும். பல தலைமுறைகளாக அருகருகே வாழ்ந்த மக்களின் விதியை முடிவு செய்து கொண்டிருந்த போதே இவர்கள் தங்களுக்குள் திடீரென்று மோதிக் கொண்டதோடு தாறுமாறான கொலை பாதகங்களிலும் ஈடுபடுகிறார்கள் என்ற தகவல்கள் பஞ்சாப் கிராமங்களிலிருந்து கிட்டத்தட்ட தினமும் வந்து கொண்டிருந்தன.

அவர் யாரையும் சந்தித்ததில்லை. ஏதாவது விருந்துக்குச் செல்ல முயற்சி செய்த நேரங்களில் கூட அவரை மக்கள் சூழ்ந்து கொண்டு தங்களின் கோரிக்கைகளை வற்புறுத்துவார்கள். அவரது ஒரே பொழுது போக்கு நடப்பதுதான். 1857இல் டில்லியில் கலகக்காரர்களை ஒடுக்குவதற்கு பிரிட்டிஷ் படைகள் குவிக்கப்பட்டிருந்த குன்றுப் பகுதியில் மாலை வேளையில் அவர் காலார நடப்பார்.

நள்ளிரவில், சோர்வடைந்த நிலையில், அவரது தோட்டத்தில் உள்ள யூகலிப்டஸ் மரங்களுக்கிடையே நடந்து செல்வார். சில நேரங்களில் அவரது இளம் ஐசிஎஸ் உதவியாளரும் அவருடன் நடப்பார். உள்ளத்தின் ஆதங்கங்களைப் பகிர்ந்து கொள்ள முடியாத கைதிபோல் இருந்த ராட்கிளிஃப் வழக்கமாக பேரமைதியுடன்தான் தோட்டத்தில் நடப்பார். சில நேரங்களில்

அவர்கள் பேசுவார்கள். தனது கடுமையான சுமைகளை யாருடனும் பகிர்ந்து கொள்ள ராட் கிளிஃபின் கடமையுணர்வு அனுமதிப்பதில்லை. மேலும் அவரது புத்திசாதுர்யமுள்ள இளம் உதவியாளர் பிரச்சனைகள் பற்றி அவரிடம் கேள்விகள் கேட்பார். இதனால் ஆக்ஸ்ஃபோர்டின் பழைய மாணவர்களான அவர்கள் இந்தியாவின் வெப்பமிக்க இரவில் ஆக்ஸ்போர்டைப் பற்றிப் பேசுவார்கள்.

இந்தியாவின் வரைபடத்தில் எளிதாகவும், மிகவும் தெளிவாகவும் உள்ள இடங்களை எடுத்துக் கொண்டு துண்டு துண்டாக எல்லைக் கோடுகளை முதலில் வரைந்தார் ராட் கிளிஃப். அப்படிச் செய்யும் போது அவரிடம் நிறைந்திருந்தது ஒரே சிந்தனைதான். 'இந்தப் பயங்கரமான பணியில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகத்துடன் நான் ஈடுபடப் போகிறேன்' அவர் தனக்குத்தானே சொல்லிக் கொண்டார். 'இறுதியில் ஒன்றும் வேறுபாடு இருக்கப் போவதில்லை. எப்படியிருந்தாலும் நான் பணியை முடிக்கும் போது அவர்கள் ஒருவரை ஒருவர் கொல்வதைத் தொடங்கத்தான் போகிறார்கள்.'

பஞ்சாபில் அது ஏற்கெனவே தொடங்கி விட்டது. இந்தியாவிலேயே சிறந்த நிர்வாகம் கொண்ட மாகாணம் என்று பெயர் பெற்ற அங்குள்ள சாலைகளிலும் ரயில் பாதைகளிலும் இப்போது பாதுகாப்பற்ற நிலை இருந்தது. ஜாவ்விந்தியர்களின் குழுக்கள் போல சீக்கியர்களின் கூட்டம் முஸ்லீம் கிராமங்கள் மீதும் அண்டை அயலில் உள்ள முஸ்லீம்கள் மீதும் தாக்குதல் நடத்தியபடி திரிந்து கொண்டிருந்தது. அவர்கள் நடத்திய கொலைகளில் ஒரு குறிப்பான காட்டுமிராண்டித்தனம் இருந்தது. பழிவாங்கப்பட்ட முஸ்லீம்களின் சுன்னத் செய்யப்பட்ட ஆண்குறிகளை வெட்டி அவர்களின் வாய்களுக் குள்ளோ, அல்லது கொல்லப்பட்ட முஸ்லீம் பெண்களின் வாய்களுக்குள்ளோ திணித்தார்கள். பிரபல முஸ்லீம் கிரிமினல் ஒருவரின் வீடு இருந்த லாகூரில் ஒரு நாள் மாலை, ஒரு சந்து வழியாக வேகமாக சைக்கிள் ஓட்டி வந்த ஒருவர், மக்கள் கூட்டம் நிறைந்த, காஃபிக் கடை ஒன்றைக் கடந்து சென்றார். அப்போது அவர் பால் கொண்டு வரப் பயன்படுத்தப்படும் அடிப்பாகம் அகன்ற பெரிய பித்தளைப் பாத்திரத்தை கடையை நோக்கி வீசியெறிந்தார். மேலே மூடப்பட்டிருந்த அந்தக் குடம் காஃபிக் கடைக்குள் உருண்டோடியது. அது வெடிக்காததால் அங்கிருந்த ஒருவர் அதனைத் திறந்தார். முஸ்லீம் கிரிமினலுக்கு அவரது சீக்கிய எதிரிகள் அமிர்தசரஸில் நடத்தியக் குற்றச் செயல்களிலிருந்து அளித்த பரிசுப் பொருள்கள் அந்தக் குடத்துக்குள் இருந்தன. உடனடியாக அடையாளம் காணக்கூடிய பெரும் கோபத்தைத் தூண்டக் கூடிய பொருள்கள் தான் அதில் திணிக்கப்பட்டிருந்தன. சுன்னத் செய்யப்பட்ட ஏராளமான ஆண்குறிகள் தான் அவை.

லாகூரில் நடந்த கொலைகளும் தீவைப்புகளும் அறிவற்றதாகவும், குழப்பத்தை விளைப்பதாகவும் இருந்தன. 'ஒரு நகரமே தற்கொலை செய்து கொண்டது போல் இருந்தது' என்று பிரிட்டிஷ் போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் முகவரி எழுதப்பட்ட ஆயிரக்கணக்கான கடிதங்கள் மத்திய அஞ்சலகத்தில் வெள்ளம் போல் குவிந்தன. கற்பழிக்கப்பட்ட, கொலை செய்யப்பட்ட பெண்கள் மற்றும் ஆண்கள் பற்றி

அவற்றில் கதை கதையாகச் சொல்லப்பட்டிருந்தன. அந்தக் கடிதங்களின் பின்பக்கத்தில் இப்படிப்பட்ட செய்தி எழுதப்பட்டிருந்தது. 'முஸ்லீம்கள் பொறுப்பேற்ற போது அவர்களின் கைகளில் சிக்கிய நமது சீக்கிய மற்றும் இந்து சகோதர சகோதரிகளுக்கு நேர்ந்த கதிதான் இது. இதே போன்ற கொடுமை உங்களுக்கு நேர்வதற்கு முன் ஓடிவிடுங்கள்.' சீக்கியர்களிடமும் இந்துக்களிடமும் பீதியை ஏற்படுத்துவதற்கு முஸ்லீம் லீகால் நடத்தப்பட்ட மனோதத்துவப் போரின் ஒரு பகுதியாகத்தான் இதெல்லாம் இருந்தன.

ஒரு காலத்தில் இந்தியாவிலேயே சகிப்புத் தன்மை மிக்கவர்களாய் இருந்த லாகூர் முஸ்லீம்கள் அண்டை வீட்டார்களிடம் நல்லுறவு கொண்டிருந்தார்கள். இவர்கள் இப்போது முஸ்லீம் கும்பல்களிடமிருந்து தங்களின் வீடுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கதவுகளில் பச்சை நிற இஸ்லாமியப் பிறைகளை வரையத் தொடங்கினார்கள். லாரன்ஸ் சாலையில் ஒரு பார்சி வியாபாரி, வகுப்புவாத வெறியிலிருந்து பாதிக்கப்படாத ஒரு சிறிய மதக்குழுவின் உறுப்பினர், தனது வீட்டுக் கதவில் ஒரு செய்தியை எழுதி வைத்தார் அதிலிருந்த வார்த்தைகள், லாகூரின் மறைந்து போன சகோதரத்துவ கனவுக்கு எழுதப்பட்ட கல்லறை வாசகமாக இருந்தன. 'முஸ்லீம்கள், சீக்கியர்கள், இந்துக்கள் அனைவரும் சகோதரர்கள். ஆனால், ஓ சகோதரர்களே, இந்த வீடு ஒரு பார்சியினுடையது' என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

பஞ்சாபின் மற்ற பகுதிகளைப் போலவே லாகூரிலும் காவல்துறையில் பெருமளவு முஸ்லீம்கள் இருந்தனர். இவர்களது செயல்பாடுகள் தகரத் தொடங்கின. இதனால் அதிகரித்து வரும் வன்முறை அலைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு பிரிட்டிஷ் அதிகாரிகளின் கைகளுக்கு வந்தது. 'உங்கள் உணர்வுகளை நீங்கள் மறைத்துக் கொள்ள வேண்டும். உங்களின் சிறு எந்திர துப்பாக்கியைப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள். பிறகு கேள்விகளைக் கேளுங்கள்' என்று பாட்ரிக் ஃபார்மர் (Patrick Farmer) என்பவர் கூறினார். பஞ்சாபில் பதினைந்து ஆண்டுகாலம் சேவை செய்த போது, ஒரே ஒரு முறை மட்டும் ஆயுதத்தைப் பயன்படுத்தியவர் அந்தப் போலீஸ்காரர்.

தூரத்தில் கொழுந்து விட்டு எரிந்த நெருப்பால் அடிவானம் சிவந்த நிலையில் லாகூரின் இருள் கவிந்த கடைவீதிகள் வழியே ரோந்து சுற்றி வந்த இன்னொரு பிரிட்டிஷ் போலீஸ் அதிகாரி பில் ரிச் (Bill Rich) சிலவற்றை நினைவு கூர்ந்தார். வீடுகளின் கூரை மீது அமர்ந்திருந்த முஸ்லீம்கள் அந்த கும்மிருட்டில் ஒருவரோடு ஒருவர் மெல்ல பேசிக் கொண்டனர். நரிகள் விளையாடுவது போல இரவில் அவர்களின் எச்சரிக்கை செய்யும் சத்தம் எங்கும் நிறைந்தது 'ஜாக்கிரதை, ஜாக்கிரதை, ஜாக்கிரதை'

பழைய நகரின் சீரழிந்த குடிசைப்பகுதியான மகல்லாவில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதா என்பதை சோதனை செய்த போலீஸ் அதிகாரி ஒரு குடிசையின் மெலிதான கதவை உதைத்துத் திறந்தார். ஜின்னாவைக் கொல்ல சதி நடக்கிறது என்று எச்சரித்த ஜெரால்ட் சேவேஜ் தான் அந்த அதிகாரி. அழுக்கேறிய, விளக்கில்லாத அந்த அறைக்குள் அவருக்கு எதிரே ஒரு சிறிய கட்டிலில் பெரியம்மை நோயினால் செத்துக் கொண்டிருந்த ஒரு முதியவர்

படுத்திருந்தார். அவரது உடல் நடுங்கியது. அவரது முகத்தில் ரணம் நிறைந்து சீழ் வடிந்தது. அறை முழுதும் பயங்கரமான அழுகல் நாற்றம் பரவியிருந்தது. இந்தியாவில் எப்போதும் இருக்கின்ற துயரங்களில் மற்றொன்றை எதிர்பாராத விதமாய்ப் பார்க்க நேர்ந்த சேவேஜ் அஞ்சி நடுக்குற்று கதவைச் சாத்தினார்.

இந்தியாவுக்காக அர்ப்பணித்துக் கொண்டு, தங்களின் பணியில் பெருமித மடைந்து, பஞ்சாப் காவல்துறையில் பணியாற்றும் போது தங்களின் ஒப்பற்ற திறமையின் மீது நம்பிக்கை வைத்து ஊக்கமுடன் செயல்பட்ட இவர்கள், இப்போது இந்த மாகாணத்தை அழிக்கும் வன்முறை கண்டு மனம் நொந்து போனார்கள். தங்களின் மேலதிகாரிகளை, சீக்கியர்களை, முஸ்லீம் லீகை இதற்கு அவர்கள் குற்றம் சாட்டினார்கள். இதற்கும் மேலாக வைஸ்ராய் மாளிகையின் பெருமைக்குரிய அட்மிரல் மீது அவர்கள் குற்றம் சாட்டினார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் அரசை முடிவுக்குக் கொண்டு வர அவர் காட்டிய அவசரமே இதற்கெல்லாம் காரணமாக அவர்களுக்குத் தெரிந்தது.

பஞ்சாபில் பதற்றத்தைத் தணிப்பதில் இயற்கையும் கூட அவர்களுக்கு உதவுவதில்லை என்று தீர்மானித்து விட்டது போலும். இதனால்தான் அவர்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய உதவிப்படையை அனுப்ப அது தவறிவிட்டது. மழைக்கால கருமேகங்கள் வருமா என்று நம்பிக்கையிழந்த கண்களுடன் ஒவ்வொரு நாளும் அவர்கள் ஆகாயத்தை ஊடுருவி நோக்கினர். ஆனால் அவை வரமறுத்து விட்டன. பஞ்சாப் நகரைச் சீரழிக்கும் தீயிடல்களை மழையெனும் ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தி அணைக்க மழைக்காலத்தால் முடியும். வன்முறைகளில் ஈடுபடும் வெறிபிடித்த மனிதர்களின் வெப்பத்தைத் தணிக்க அது உதவும். இந்தியாவில் கலவரத்தைக் கட்டுப்படுத்த மிகச்சிறந்த சாதனம் என்று காவல்துறையினர் இதனைக் கூறுவார்கள். ஆனால் இந்த ஆயுதம் அவர்களின் கட்டுப்பாட்டில் இல்லை.

அமிர்தசரஸில் நிலைமை மோசமாக இருந்தது. பொது இடங்களில் மலம் கழிப்பது போல அந்த நகரின் கடைவீதிகளிலும் தெருக்களிலும் கொலைகள் சர்வ சாதாரணமாகி விட்டன. சந்தேகத்துக்கிடமின்றி முஸ்லீம்தான் என்று அறிந்து கொண்டு முஸ்லீம் அருகே சென்று குப்பியில் மறைத்துக் கொண்டு சென்ற நைட்ரிக் அமிலத்தையும் கந்தக அமிலத்தையும் அவரது முகத்தில் வீசும் கொடுமையான தந்திரத்தை இந்துக்கள் கையாண்டார்கள். தீக்கொளுத்திகள் எல்லா இடங்களிலும் தீவிரம் காட்டினர்.

கடைசியாக பிரிட்டிஷ் ராணுவம் அழைக்கப்பட்டது. 48 மணி நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட பலன் கூட தற்காலிகமானதாகவே இருந்தது. ஒரு நாள், நகரின் குறிப்பிட்ட ஒரு தீயிடல் சம்பவத்தால் ஏற்பட்ட அழிவுக்குப் பின்னால், சோர்வடைந்த காவல்துறை கண்காணிப்பாளர் ரூல்டீன் (Rule Dean) கடைசி முயற்சியாக ஒரு தந்திரம் செய்தார். கலவரக் கட்டுப்பாட்டு விதிமுறைகளில் அவர் இதுவரை காணாத ஒன்றாகும் அது. காவல் துறையின் பேண்டு வாத்தியக்குழுவை நகரின் மையப்பகுதிக்குச் செல்லுமாறு பணித்தார். கொழுந்து விட்டெரிந்த நெருப்புக்கிடையே, பல தீயிடல் சம்பவங்களால் ஏற்பட்ட வெடிப் பொலிகளையும் மிஞ்சும் விதத்தில் வாத்தியங்களை இசைத்துப் பேரொலியை எழுப்பச் செய்தார். இசை நாடகக் குழுவில் முரண்பாடான நகைச் சுவை

நிகழ்ச்சி போன்ற இந்த செயலால் நகரில் அதிகரிக்கும் பைத்தியக்காரத்தனம் குறைந்து இயல்பு நிலை திரும்பும் என்று அவர் நினைத்தார்.

பஞ்சாபில் ஆகஸ்ட் 15க்குப் பிறகு ஒழுங்கை நிலைநாட்ட 55,000 பேரைக் கொண்ட சிறப்புப் படையை அமைப்பதென்று மவுண்ட்பேட்டன் முடிவு செய்தார். இதன் உறுப்பினர்கள் இந்திய ராணுவத்தின் படைப்பிரிவுகளிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்டனர். மற்றவர்களோடு ஒப்பிடும் போது வகுப்புவாத எண்ணங்களிலிருந்து விடுபட்டு சிறந்த ஒழுக்கமும் இனச்சிறப்பும் கொண்ட கூர்க்காக்கள் போன்றவர்களே அவர்கள். பஞ்சாப் எல்லைப்படை என்று அழைக்கப்பட்ட இந்தப் பிரிவு பிரிட்டனில் பிறந்த மேஜர் ஜெனரல் டி. டபிள்யூ 'பீட்' ரீசிடம் (T.W. 'Pete' Rees) ஒப்படைக்கப்பட்டது. பர்மாவில் இவர் 19ஆவது இந்தியப் படைப்பிரிவை புத்திசாலித்தனமாகக் கையாண்டதால் வைஸ்ராயின் மதிப்பைப் பெற்றிருந்தார். பிரிவினையின் போது பஞ்சாபில் ஒழுங்கை நிலை நிறுத்த தேவைப்படும் என அந்த மாகாணத்தின் கவர்னர் மதிப்பிட்டதைப் போல் இரண்டு மடங்கு மனிதர்கள் அந்தப்படையில் இருந்தார்கள் இருப்பினும் புயல் புறப்பட்ட போது கடற்கரையின் குடிசைகள் கட்டுக் கடங்காத அலைகளால் அடித்துச் செல்லப்படுவது போல அந்தப் படையும் அடித்துச் செல்லப்படக் கூடும்.

உறுதியான உண்மையென்னவென்றால், நேரு, ஜின்னா, பஞ்சாபின் அறிவார்ந்த கவர்னர், ஏன் வைஸ்ராய் உட்பட எவருமே இந்தப் பேரழிவின் உச்சத்தை முன் கூட்டியே அறிந்திருக்கவில்லை. அவர்களின் தோல்வி வரலாற்று ஆய்வாளர்களைத் திகைக்க வைக்கும். இந்தியாவின் கடைசி வைஸ்ராய் பற்றி விமர்சன அலைகளை எழுப்பும்.

சகிப்புத் தன்மை கொண்ட மதவெறி இல்லாத நேருவும் ஜின்னாவும், தங்களுக்கு மதவாத எண்ணம் இல்லை என்றாலும் துணைக் கண்டத்தின் மக்களை அது பற்றி எரிக்கும் என்பதை உணராதப் பெரும் தவறைச் செய்தார்கள். பிரிவினை அமைதியாக இருக்கும் என்றும், வன்முறையைத் தூண்டாது என்றும் அவர்கள் இரண்டு பேருமே உண்மையாக நம்பினார்கள். தங்களின் மக்கள் நடக்கும் சம்பவங்களுக்குத் தங்களைப் போலவே பொறுப்புடன் நடந்து கொள்வார்கள் என்றும் அவர்கள் நினைத்துக் கொண்டனர். அந்த இருவரின் எண்ணங்களும் மாபெரும் தவறாகும். வரவிருக்கும் சுதந்திரம் நன்மைகளையே கொண்டு வரும் என்ற தங்களின் விருப்பங்களே உண்மையானவை என்று கருதினார்கள். அதையே அவர்களுக் கிடையே புதிதாக வந்த வைஸ்ராய்க்கும் தெரிவித்தார்கள்.

ஒரு நூற்றாண்டு காலம் இந்தியாவை ஆட்சி செய்த பிரிட்டிஷாரின் தற்பெருமை கொண்ட நிர்வாகமோ, புலனாய்வுப் பிரிவோ இந்திய மக்களின் நடவடிக்கைகளைக் கணித்தறிய முடிந்திருந்தால், ஜின்னாவும், நேருவும் காணத் தவறிய தவறினை சரி செய்திருக்க முடியும். யாரும் அதைச் செய்யவில்லை. இதனால் சந்தேகம் இருந்தாலும் சரியாக எச்சரிக்க முடியாத இந்தியா பேரழிவைச் சந்தித்தது.

இதில் விநோதமான விஷயம் என்னவென்றால், ஒரு இந்தியத் தலைவர் மட்டும் வரவிருக்கும் பயங்கரமான துயரங்களின் பரிமாணங்களை

முன்கூட்டியே அறிந்திருந்தார். அவர் பிரிவினை ஏற்படாமல் தடுக்க பெருமுயற்சி செய்தார். இந்திய மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிக் கலந்து விட்ட காந்தி அந்த மக்களின் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்டார். அதனால் தான் அவரது நாட்டு மக்களின் மன உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் நிகரில்லாத் திறன் அவருக்கு இருந்தது. இந்தியாவின் பண்டைய புராணங்களில் வரும் முனிவரைப் போன்றவர் என்று சில சமயம் ஆதரவாளர்களால் கூறப்படும் அவர், ஒரு குளிர்கால இரவில் வெப்பமூட்டும். நெருப்பருகே அமர்ந்திருந்தார். திடீரென்று அந்த முனிவருக்கு உடல் நடுங்கத் தொடங்கும்.

'வெளியே பாருங்கள்' 'இருளில், ஒரு ஏழை உறைந்து போயிருக்கிறான்' என்று ஒரு சீடரிடம் சொல்வார்.

அந்த சீடர் பார்ப்பார். உண்மையில் அங்கே ஒரு மனிதர் இருப்பார். இப்படித்தான் இந்தியாவின் உயிருக்காக காந்தியின் உள்ளுணர்வு வருந்தியது என்று சீடர்கள் கூறினார்கள்.

ஒரு நாள், பஞ்சாப் எல்லைப் படையை வைஸ்ராய் அமைத்து உருவாக்கிக் கொண்டிருந்த போது, பிரிவினையை எதிர்த்ததற்காக ஒரு முஸ்லீம் பெண் காந்தியைத் தாக்கிப் பேசினார். 'ஒரே வீட்டில் ஒன்றாக வாழ்ந்த இரண்டு சகோதரர்கள் பிரிந்து இரண்டு வேறு வீடுகளில் வாழ விரும்பினால் நீங்கள் ஆட்சேபிக்க முடியுமா?' அவர் வினவினார்.

'இரண்டு சகோதரர்களாக நாம் பிரிந்து விட முடியுமென்றால் பரவா யில்லை. ஆனால் நம்மால் அப்படி முடியாது. இது ஒரு ரத்தக்களறியாகும். நம்மை ஈன்றெடுக்கும் தாயின் கருப்பைக்குள்ளே, நம்மை நாமே வெட்டித் துண்டாக்கிக் கொள்வோம்' என்று காந்தி பதிலளித்தார்.

மவுண்ட்பேட்டனின் உண்மையான அச்சம் பஞ்சாப் பற்றி அல்ல. கல்கத்தா பற்றியது. கல்கத்தாவுக்குப் படைகளை அனுப்புவது பயனற்றது என்பதை அவர் அறிந்தார். அதிகரித்து வரும் முடைநாற்றமடிக்கும் குடிசைப் பகுதிகளிலும், நெருக்கடியான கடைவீதிகளிலும் தொல்லை துவங்கிவிட்டால், அதனைக் கட்டுப்படுத்த எவ்வளவு துருப்புகள் இருந்தாலும் போதாது. மதரீதியான மோதல் ஏற்பட்டால் அதனைச் சமாளிக்கவே, இந்திய ராணுவத்தின் ஏறத்தாழ அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் நம்பகமானவர்கள் தெரிவு செய்யப்பட்டு பஞ்சாப் படையை அவர் உருவாக்கியிருந்தார்.

'கல்கத்தாவில் எப்போதாவது மோதல் ஏற்பட்டால், ரோஜாக்களின் படுக்கை போல - அங்கே ஓடும் ரத்தம், பஞ்சாபில் நடந்ததெல்லாம் சாதாரணம் என்று ஆக்கியிருக்கும்' என மவுண்ட்பேட்டன் பின்னாளில் நினைவு கூர்ந்தார்.

கல்கத்தாவில் அமைதியை ஏற்படுத்த அவர் இன்னொரு உத்தியைக் கையாள வேண்டியது அவசியமாய் இருந்தது. இதற்குக் கடைசியாக அவர் தேர்வு செய்த உத்தி மோசமான ஒரு சூதாட்டம் போன்றதுதான். ஆனாலும் கல்கத்தாவின் அபாயங்கள் அவ்வளவு பெரியவை; இதனை எதிர்கொள்வதற்கான பலமோ மிகக்குறைவு. ஏதாவது ஒரு அதிசயம் நிகழ்ந்தால் தான் நிலைமையைச் சமாளிக்க முடியும். உலகிலேயே பெருந்துயர் நிறைந்த நகரத்தில் வகுப்புவாத

வெறியாட்டத்துக்கு ஒரு அணை போடுவதற்காக, விரக்தியுற்ற சிறு குருவி போன்ற மகாத்மா காந்தியை அங்கு அனுப்ப அவர் திட்டமிட்டார்.

ஜூலை மாதப் பிற்பகுதியில் அவர் தனது எண்ணத்தை காந்தியிடம் தெரிவித்தார். எல்லைப்புறப் படையின் உதவியுடன் பஞ்சாப் நிலைமையைத் தம்மால் சமாளித்து விட முடியும். ஆனால் கல்கத்தாவில் வன்முறை வெடித்து விட்டால் நாம் மூழ்கி விடுவோம் என்று அவர் விவரித்தார். ' அதன் பிறகு நான் ஏதும் செய்ய இயலாது. அங்கேயும் ஒரு படைப்பிரிவு இருக்கிறது. ஆனால் மேலும் துருப்புகளை அனுப்பி அதனை வலுப்படுத்தும் யோசனை என்னிடம் இல்லை. கல்கத்தாவில் தீப்பற்றினால் அந்தத் தீயில் அது அழிந்து போக வேண்டியதுதான்' என்றும் அவர் கூறினார்.

' ஆம் நண்பரே! இதுதான் உங்களது பிரிவினை திட்டத்தின் பயன்' என்று காந்தி தெரிவித்தார்.

இருக்கலாம் என்று மவுண்ட்பேட்டன் ஒப்புக் கொண்டார். ஆனால் காந்தியோ வேறு எவரோ மாற்றுத் தீர்வு எதையும் சொல்ல இயலவில்லையே! எனவே இப்போது அவரால் ஏதாவது செய்ய முடியும். துருப்புகளால் செய்ய முடியாததை ஒருவேளை காந்தியின் ஆளுமையும் அஹிம்சைக் கொள்கையும் கல்கத்தாவில் ஓரளவு சாதிக்க முடியலாம். அவர் கல்கத்தாவில் இருப்பதே கூட அமைதியை உத்தரவாதம் செய்ய முடியும். வைஸ்ராயின் முற்றுகைப் படை வீரர்களின் ஒட்டுமொத்த உருவமாக காந்தி இருப்பார். கல்கத்தாவுக்குச் செல்லுங்கள் என்று மவுண்ட்பேட்டன் வற்புறுத்தினார். 'நீங்கள் தான் எனது ஒற்றை மனித எல்லைப் படை.'

மவுண்ட்பேட்டன் கேட்டுக் கொண்ட போதும் கல்கத்தாவுக்குச் செல்ல காந்திக்கு விருப்பமில்லை. அச்சம் கொண்டிருந்த நவகாளியின் இந்து சிறுபான்மையினரின் பத்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் தனது உயிரையே தருவதாகத் தனது புத்தாண்டு தின நோன்பு யாத்திரையின் போது அவர் உறுதியளித்திருந்தார். அதன்படி இந்தியாவின் சுதந்திர தினத்தை இந்த மக்களிடையே பிரார்த்தனை செய்து கொண்டும், நூல் நூற்றுக் கொண்டும், உண்ணாவிரதம் இருந்து கொண்டும் கழிப்பதென்று அவர் ஏற்கெனவே முடிவு செய்து விட்டார். வன்முறை அச்சம் சூழ்ந்த கல்கத்தாவின் குடிசைப்பகுதி களுக்கு அவரைச் செல்லுமாறு வற்புறுத்தியது மவுண்ட் பேட்டனின் குரல் மட்டுமல்ல.

இரண்டாவது குரலுக்குச் சொந்தக்காரர் என்பவர் ஒட்டுமொத்த இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் நன்கறியப்பட்ட மோகன் தாஸ் காந்திக்கும் நேர் எதிரான அரசியல் கூட்டாளியாவார். உண்மையில் வயது முதிர்ந்த காந்தி எந்த லட்சியங்களுக்காக நிற்கிறாரோ அவற்றுக்கு நேர் எதிரான, காந்தியின் வாழ்க்கை முறைகளுக்குக் கொஞ்சமும் பொருந்தாத ஒருவரைக் காண வேண்டுமென்று ஒருவர் ஆழமாகத் தேடினால், ஷாஹீத் சுஹ்ரவர்த்தி (Shaheed Suhrawardy)யை விட வேறொருவரைக் காண முடியாது.

47 வயதான சுஹ்ரவர்த்தி ஊழலும், ஊதாரித்தனமும் நிறைந்த அரசியல் வாதிகளுக்கான மாதிரி வடிவம். புதிய இந்தியாவை ஆளும் அமைச்சர்களுக்கு

பதெல்லாம் இருக்கக்கூடாது என்று காந்தி விளக்கினாரோ அதெல்லாம் உடையவர் அவர். அவரது அரசியல் தத்துவம் மிக எளிமையானது. ஒரு முறை ஒரு மனிதர் ஒரு பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால் பிறகு எந்தக் காரணத்துக்காகவும் அவர் அதிலிருந்து விலக வேண்டியதில்லை. அரசியல் எதிரிகளின் வாயடைக்கக் குண்டாந்தடி கொண்ட கூலிப்படையை மக்கள் வரிப்பணத்தில் அமைத்துக் கொண்டு தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டிருப்பவர்தான் இந்த சுஹ்ரவர்தி.

1942இல் வங்காளத்தைச் சீரழித்த கடும் பஞ்சத்தின் போது, கல்கத்தாவில், பட்டினி கிடக்கும் மக்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பல டன் தானியங்களை கள்ளச் சந்தையில் விற்று பல லட்சம் ரூபாய் சம்பாதித்தவர் சுஹ்ரவர்தி. அவர் பட்டாடைகளை உடுத்தினார். முதலைத் தோலால் செய்யப்பட்ட இருவண்ண ஷூக்களை அணிந்தார். அவருக்கேயான பிரத்யேக சவரத் தொழிலாளியால் அவரது கருமையான முடி ஒவ்வொரு நாள் காலையிலும் ஒழுங்கு செய்யப் பட்டது. மெருகூட்டும் தைலத்தால் பளபளத்தது. பாலுணர்வின் கடைசி அடையாளங்களைக் கூட அழித்து விட கடந்த நாற்பது ஆண்டுகளாக காந்தி முயற்சி செய்து கொண்டிருந்தார். ஆனால் சுஹ்ரவர்தி இந்த விஷயத்தில் ரொம்பவும் தாராளம். ஒவ்வொரு காபரே நடனக்காரியோடும், கல்கத்தாவின் உயர் ரக விலை மகளிரோடும் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளும், இயற்கை இறந்த வேலையில் அவர் விருப்பத்துடன் ஈடுபட்டார். காந்தியின் கையில் உஸ்ஸென ஒலியெழுப்பும் உப்புக் கலந்த சோடா நிறைந்த கண்ணாடி தம்ளர் தான் இருக்கும். ஆனால் சுஹ்ரவர்தியின் கையில் ஷேம்பென் மதுக்கிண்ணம் இருக்கும். மகாத்மா தனது உணவாக சோயா மாவு கஞ்சியையும் தயிரையும் கொண்டிருந்தார். சுஹ்ரவர்தியின் உணவோ சன்னமாக நறுக்கிப் பொரித்த மாமிசமும் அடைகளுமாக இருந்தன. இவை அவருக்கு மார்பு முதல் அடிவயிறுவரை கொழுப்பு சதை வளையங்களை உருவாக்கியிருந்தன.

எல்லாவற்றையும் விட மோசமானது அவரது கைகள் ரத்தக் கறைபடிந்தவை. 1946 ஆகஸ்டில் ஜின்னாவின் நேரடி நடவடிக்கை தினம் அறிவிக்கப்பட்ட நாளில் சுஹ்ரவர்தி பொதுவிடுமுறை அறிவித்தார். அவரது படையினரின் கவனம் வேறுபல இடங்களில் இருக்கும் என்பதை முஸ்லீம் லீக் ஆதரவாளர்களுக்கு உணர வைத்து கல்கத்தாவைப் பாழ்படுத்திய படுகொலைகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தார். இந்தப் படுகொலைகளுக்குப் பழிவாங்க கல்கத்தாவில் உள்ள இந்துக்கள் தயாராய் இருப்பார்கள் என்ற அச்சம் தான் காந்தியின் உதவி நாடி சுஹ்ரவர்தியை விரட்டியது.

மகாத்மாவின் சோடேபூர் ஆஸ்ரமத்துக்கு விரைந்த அவர், காந்தி நவகாளி யாத்திரைக்குப் புறப்படும் சமயத்தில் அவரைப் பிடித்தார். கல்கத்தாவில் தங்கியிருக்கும்படி அவர் காந்தியிடம் வேண்டினார். உங்களால் மட்டுமே கல்கத்தாவின் முஸ்லீம்களைக் காப்பாற்ற முடியும்.; நகரை அச்சுறுத்தும் வெறுப்பு எனும் நெருப்புப் புயலைத் தடுக்க முடியும் என்றும் அவர் கூறினார். 'இந்துக்கள் உங்கள் மீது எவ்வளவு உரிமை கொண்டாடுகிறார்களோ அந்த அளவுக்கு முஸ்லீம்களுக்கும் உள்ளது. நீங்களும் எப்போதும் அப்படித்தான் சொல்லி வந்திருக்கிறீர்கள்' என்று காந்தியிடம் அவர் கூறினார்.

காந்தியின் நிகரற்ற குணங்களில் ஒன்று எதிரியிடமுள்ள சிறந்த அம்சத்தைப் புரிந்து கொள்வது; அதனை மேலும் செயல்பட வைப்பது; அதனடிப்படையில் கோரிக்கை வைப்பது. தனது முஸ்லீம் மக்களின் வாழ்க்கை விஷயத்தில் சுஹ்ரவர்தியின் உண்மையான மனநிலையை அவர் புரிந்து கொண்டார்.

கல்கத்தாவில் தங்கியிருக்க வேண்டுமானால் இரண்டு நிபந்தனைகளை ஏற்க வேண்டும் என்று காந்தி சொன்னார். முதலாவது, நவகாளியில் முஸ்லீம்களுக்கு மத்தியில் வாழும் இந்துக்களின் பாதுகாப்புக்கு சுஹ்ரவர்தி உண்மையான உறுதிமொழியை அளிக்க வேண்டும். அங்கு ஒரே ஒரு இந்து கொல்லப்பட்டால் கூட சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதைத் தவிர தனக்கு வேறு வழியில்லை என்பதைக் காந்தி தெளிவுபடுத்தினார். சரியான காந்திய வழியிலேயே, அவரது உயிருக்குத் தார்மீகப் பொறுப்பேற்கும் கடுமையான சுமையை சுஹ்ரவர்தி மேல் வைத்து விட்டார்.

அவர் விரும்பிய உறுதிமொழியை சுஹ்ரவர்தியிடமிருந்து பெற்றபின், பேரத்தின் இரண்டாவது கட்டத்துக்குள் காந்தி சென்றார். கற்பனைக்கெட்டாத, மிகவும் முரண்பாடுடையதாக அந்த யோசனை இருந்தது. கல்கத்தாவின் மையப்பகுதியில் உள்ள மிக மோசமான குடிசைப்பகுதி ஒன்றில் ஆயுதமோ பாதுகாப்போ இன்றி இரவும் பகலும் அருகருகே தம்முடன் இருக்க சுஹ்ரவர்தி ஒப்புக் கொண்டால் தாமும் கல்கத்தாவில் தங்கியிருக்கத் தயார் என்றார் காந்தி. துணைக்கண்டத்தின் முரண்பட்ட ஜோடியான இவர்கள் அந்த நகரில் அமைதிக்கு அளவுகோலாகத் தங்களின் வாழ்க்கையை இணைந்து வழங்க முன்வந்தனர்.

தனது யோசனையை சுஹ்ரவர்தி ஏற்றுக் கொண்டபின் டில்லிக்கு காந்தி இவ்வாறு எழுதினார். 'நான் இங்கே தங்கப் போகிறேன். நான் ஒரு பேரபாயப் பணியை இப்போது மேற்கொள்கிறேன். எதிர்காலம் தான் இது பற்றி சொல்ல வேண்டும். நெருக்கமான கவனம் வையுங்கள்'

★

தண்டுப்பகுதியைச் சுற்றியுள்ள இலைகள் உதிர்வது போல, மவுண்ட்பேட்டனின் புகழ்மிக்க காலண்டரின் பக்கங்கள் உதிர்ந்து கொண்டிருந்தன. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி முடிவடையும் அந்தக் கடைசி நாட்களில் வைஸ்ராயும் அவரது ஊழியர்களும் வெகுநேரம் வேலை செய்தார்கள். வேறெப்போதையும் விட இது பரபரப்பாக இருந்தது. நாட்காட்டியிலிருந்து மறையும் ஒவ்வொரு நாளும் பிரச்சனையைத் தாங்கிச் செல்வதாக இருந்தது. அசாமின் மாபெரும் தேயிலைத் தோட்டங்களுக்கருகே உள்ள ஷில்லெட் என்ற இடத்தில் இரண்டாவது முறை கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது போல பாகிஸ்தானுக்கென்று அளிக்கப்பட்ட வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் கருத்துக்கணிப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. இங்கே சுதந்திர தின விழாவுக்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. பிரிட்டிஷ் அரசின் பழைய பாரம்பரியத்தைப் போலவே சுதந்திர தினவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் வற்புறுத்தினர். அவர்களின் கண்டிப்பு மிக்க, ஒளியிழந்த சோஷலிசம் பிற்காலத்தில் வரக்கூடும்.

ஆகஸ்ட் 15 அன்று இந்தியா முழுவதும் உள்ள கசாப்புக் கடைகளை மூடிவிட வேண்டும் என்று காங்கிரஸ் ஆணையிட்டது. தேசத்தின் திரையரங்குகளில் எல்லாம் அன்று இலவசமாகத் திரைப்படங்கள் காட்டப்படவிருந்தன. டில்லியில் பள்ளிக்குழந்தைகள் அனைவருக்கும் இனிப்பும் சுதந்திரப் பதக்கமும் வழங்கப்படவிருந்தன. அங்கே சில பிரச்சனைகள் இருந்தன. லாகூரில் அரசு ஒரு அறிவிப்பை வெளியிட்டது. 'அமைதியற்ற சூழ்நிலையால் வண்ணமிகு நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட்டுள்ளன.' 'ஆகஸ்ட் 15 அன்று நடக்கும் கொண்டாட்டங்களில் பங்கேற்பதும் மகிழ்ச்சி அடைவதும் இயலாத காரியம்' என்று இந்தியப் பிரிவினையைத் தீவிரமாக எதிர்க்கும் வலது சாரி இந்து மகாசபாவின் தலைவர்கள் தங்களின் ஆதரவாளர்களிடம் தெரிவித்தனர். இதற்கு மாறாக தங்களின் 'துண்டாடப்பட்ட தாயகத்தை' மீண்டும் ஒன்று சேர்க்கும் தீவிரப்பணிக்கு அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்று உறுப்பினர்களை அவர்கள் வற்புறுத்தினார்கள்.

பதவி அந்தஸ்து பிரச்சனையால், பாகிஸ்தானின் சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்ச்சிகள் தற்காலிகமாகத் தடைப்பட்டன. நுட்பமாகப் பார்த்தால் நள்ளிரவு வரை அவரது டொமினியனுக்கு சுதந்திரம் வராது என்ற உண்மையைப் புறந்தள்ளி, வைஸ்ராயை விடத் தனக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கர்வம் பிடித்த ஜின்னா விரும்பினார். ஆனால் அவரால் அதனைப் பெற முடியவில்லை.

அந்த முஸ்லீம் தலைவருக்கு வேறு சில ஏமாற்றங்களும் காத்திருந்தன. பிரணயத்தைச் சுண்டிப்போட்டு அரசின் பாதி சொத்தாகப் பெற்ற வண்டியை இழுத்துச் செல்லப் பயிற்சியளிக்கப்பட்டிருந்த குதிரைகளில் ஒன்று ஊனமாகி விட்டது. இதனால் கராச்சி நகர வீதிகளில் அவரது முதலாவது அரசு முறை பயணத்தை மேற்கொள்ள வைஸ்ராய் தனது திறந்த ரோல்ஸ் காரினை வழங்கினார். பாகிஸ்தானின் உதயத்தில் முத்திரைப் பதிக்க அவர் விரும்பினார். எனவே இதற்கான விழா நிகழ்ச்சிகள் முழுவதையுமே ஜின்னா தாமாகவே தயாரித்தார். ஆகஸ்ட் 13ஆம் தேதி வியாழனன்று அவரது இல்லத்தில் முறைப்படி அரச விருந்தளித்து நிகழ்ச்சிகளைத் தொடங்கலாம் என்பது அதுவரையிலான திட்டம். தனியிடத்தில் நடைபெற்ற சங்கடமான விவாதத்துக்குப் பின் அவரது உதவியாளர்களில் ஒருவர், உலகின் மிக முக்கியமான இஸ்லாமிய நாட்டுக்குத் தலைமையேற்கவிருக்கும் அந்த மனிதருக்கு ஒரு விஷயத்தை நினைவு படுத்தினார். ஆகஸ்ட் 13 வியாழன் என்பது, உலகம் முழுவதும் உள்ள பக்தி மிக்க முஸ்லீம்கள் சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரை உண்ணாநோன்பிருப்பர் என்று எதிர்பார்க்கப்படும் புனித ரமதான் (ரம்ஜான்) மாதத்தின் கடைசி வார நாளாகும்.

★

வைஸ்ராயும் இரண்டு புதிய டொமினியன்களின் தலைவர்களும் எண்ணற்ற பல பணிகளை கவனித்துக் கொண்டிருந்தனர். இந்தியாவில் மூன்றரை நூற்றாண்டு காலமிருந்த பிரிட்டிஷ் காலனி ஆதிக்கம் தள்ளாடி ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருந்தது. ஆயிரம் கண்ணாடிக் குவளைகளில் ஐஸ்கட்டியுடன்

மதுவைச் சேர்த்து அருந்திய மயக்கத்தில் துயரப் பேச்சின் முணுமுணுப்பும் ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லும் சத்தங்களும், பிரிவுபசார நிகழ்ச்சி களில் வழங்கும் வெற்று வாக்குறுதிகளும் அப்போது நிரம்பி இருந்தன. ஒரு சகாப்தம் கடந்து செல்கிறது என்பதைக் குறிக்கும் வகையில் துணைக் கண்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வீடுகளிலும் தேநீர் விருந்துகள், இரவு விருந்துகள், பிரிவுபசார நிகழ்ச்சிகள் போன்றவை ஏராளமாக நடந்தன.

இந்தியாவிலிருக்கும் பெரும்பாலான பிரிட்டிஷ்காரர்கள், தங்களின் முன்னோர்களால் முதல் நிலையில் இங்கே கொண்டுவரப்பட்டு வணிகத்தோடு தொடர்புடையவர்கள், இங்கேயே தங்கிவிட விரும்பினர். இருப்பினும், ராணுவ வீரர்கள், ஐசிஎஸ் அதிகாரிகள், காவல்துறை ஆய்வாளர்கள், ரயில்வே பொறியாளர்கள், வனத்துறை அதிகாரிகள், தொலைத்தொடர்பு குமாஸ்தாக்கள், என மற்ற 60,000 பேர் தங்களின் தீவு தேசத்துக்குத் திரும்ப வேண்டிய நேரம் வந்து விட்டது. 'வீட்டுக்கு வெளியே' இருப்பவர்கள் என்றே இவர்களை எப்போதும் குறிப்பிட்டார்கள். சிலருக்கு இந்த அதிகார மாற்றம் வருத்தத்தை அளிக்கும். ஏனென்றால் ஏராளமான பணியாட்களைக் கொண்ட கவர்னர் மாளிகையில் வேலை செய்துவிட்டு, வயது வரம்பு வருமுன்பே ஓய்வு பெற்று திடீரென்று சாதாரண வீட்டுக்குச் செல்ல வேண்டியிருந்தது. அவர்கள் பெறவிருக்கும் ஓய்வூதியமும் பணவீக்கத்தால் ஒன்றுமில்லாமல் ஆகிவிடும். தாங்கள் திரும்பிச் செல்லவிருக்கும் எளிய சோஷலிஸ்டுகளின் பிரிட்டனில், கிளப்புகள், போலோ விளையாட்டு, பணியாட்கள், வேட்டையாடுதல் போன்ற நல்வாழ்க்கையை இழக்காத சூழலைப் பெற்றவர்களும் ஒரு சிலர் இருந்தனர். பம்பாயிலிருந்து தாயகத்துக்குத் திரும்பும் போது பி அண்ட் ஓ (P&O) கப்பலின் மேல்தளத்திலிருந்து பார்க்கும் போது தான் இந்தியாவின் அழகியதோற்றம் தெரியும் என்று துணைக்கண்டத்தைப் பற்றி காலம் காலமாக பிரிட்டிஷார் வேடிக்கையாகச் சொல்வதுண்டு. இப்போது இவர்களில் பலர் வரும் வாரங்களில், அதே கப்பலின் மேல் தளத்திலிருந்து சோகத்துடன் இந்தியாவைக் கண்டு பழையதை நினைவு கூர்வார்கள்.

பல மடிப்புகளுடன் தைக்கப்பட்ட லேஸ் வைத்த பொம்மைகள், திருமண நிகழ்ச்சியின்போது பெற்ற வெள்ளிப் பொருள்கள், புலித்தோல்கள், அவற்றுடன் இணைந்த கதைகள், 9ஆவது வங்கப் படைப்பிரிவில் இருக்கும் போது உயிர் நீத்த மீசைக்கார உறவினர்களின் எண்ணெய் வண்ண ஓவியங்கள், பின்னால் தொங்கும் துணியுடன் கூடிய தலைக்கவசங்கள், நாற்பது ஆண்டுகளுக்கு முன் லண்டனிலிருந்து கப்பலில் கொண்டு வரப்பட்ட கரிய, சிறப்பு மிக்க மரப்பொருள்கள் எனப் பலவும் பிரிட்டனுக்குத் திரும்பச் செல்லும் பயணத்துக்காகப் பலநூறு வீடுகளில் மூட்டைக் கட்டப்பட்டன.

இந்தியாவிலிருந்த பிரிட்டிஷார் அந்த மக்களிடமிருந்து ஒதுங்கியிருந்தது தான் பெரிய தவறு என்று வின்ஸ்டன் சர்ச்சில் குறை கூறுவார். ஆனால் வழக்கத்துக்கு மாறாக இப்போதைய விருந்து நிகழ்ச்சிகளில் இதெல்லாம் மாறிவிட்டது. இந்தியாவை விட்டு புறப்படத் தயாராகிவிட்டதைத் தொடர்ந்து புதிய நிலைமையின் தாக்கத்தை உணர்ந்த பிரிட்டிஷார் இந்தியா முழுவதும் உள்ள கிளப்புகளிலும் வீடுகளிலும் நடந்த விருந்து நிகழ்ச்சிகளில் தங்களின் வழக்கமான உடைகளை உடுத்தியோரும் புடைவைகள், ஷெர்வானிகள்,

*..த்துணிகள் உடுத்தியோரும் ஒன்றிக் கலந்திருந்தனர். முன்பெல்லாம் இப்படி ..வர்களைக் காண்பது அபூர்வமாகவே இருக்கும். இத்தகைய நிகழ்ச்சிகளில் ..துவரை காணாத அளவுக்கு நட்புக் காற்று பரவியிருந்தது. அடிமைப்பட்ட ..களிடமிருந்து அடிமைப்படுத்தியவர்கள் நட்போடும் நல்லெண்ணத்தோடும் ..பிரிந்து செல்வது ஒப்பற்ற ஒன்றாகவே இருந்தது.*

*திரும்பத் தயாரான பிரிட்டிஷ் சிவில் பணியாளர்கள் பழைய டில்லியில் உள்ள சாண்டி சௌக் (Chandi Chowk) கடைவீதியில் மொய்த்தனர். பிரிட்டிஷ் ..ட்டின் குளிர்சாதனப் பெட்டி, கார் ஆகியவற்றை, பாரசீகத் தரைவிரிப்புகள், யானைத் தந்தங்கள், தங்க வெள்ளிப் பொருள்கள், துணைக்கண்டத்தின் ..டுகளில் ஒரு போதும் அவர்களால் வேட்டையாட இயலாமல் போன, ..தோலுக்குள் பிற பொருள்களை திணித்து உருவாக்கப்பட்ட விலங்குகள் ஆகியவற்றுக்குப் பண்டமாற்று வியாபாரம் செய்து கொண்டிருந்தனர்.*

*துயரம் தோய்ந்த பண்டைய பொருள்கள் பலவற்றை அவர்கள் இங்கே விட்டுச் சென்றார்கள். நினைவுச் சின்னங்கள், சிலைகள், ஆஸ்கார் ஒயில்டின் ..வாண்டரிங் கிரேவ்ஸ்' (நாடு விட்டு நாடு சென்றோரின் கல்லறைகள்) என்பது போல, டில்லியின் சுவர்களுக்குள்ளும், ஆப்கானிஸ்தானின் திறந்த வெளிகளிலும், மணலைப் புரட்டிவரும் கங்கை நதி தீரத்திலும் ஏறத்தாழ இரண்டு மிலியன் (20 லட்சம்) ஆங்கிலேயர்கள் புதைக்கப்பட்ட கல்லறைகளும் விட்டு செல்லப்படவுள்ளன.*

*இவர்கள் புதைக்கப்பட்ட வெளிநாட்டு நிலங்கள் எப்போதும் இங்கிலாந்துடையதாக இருக்க முடியாது. ஆனால் குறைந்தபட்சம் அவை பிரிட்டிஷாரின் பொறுப்பிலேயே இருக்கும். ஏனெனில், 'இறந்து போன பிரிட்டிஷாரை வெளிநாட்டாரிடம் விட்டு விட்டுச் செல்வது நினைத்துப் பார்க்கவும் முடியாதது; எனவே இந்தியாவை விட்டுச் செல்லும் பிரிட்டிஷ் அரசு எதிர்காலத்தில் இவற்றைப் பராமரிக்க ஒரு ஏற்பாடு செய்தது. 'இந்தியாவில் பிரிட்டிஷ் ஹை கமிஷன்' ஒன்று அமைக்கப்பட்டது. இங்கிலாந்தில், காண்டர்பரி பேராயர், இவற்றைப் பாதுகாக்க நிதி ஒன்றைத் திரட்டத் துவங்கினார்.**

*சிப்பாய்க்கலகம் உச்சக்கட்டத்தில் இருந்த போது ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 950 பேரின் துண்டிக்கப்பட்ட சிதைவுகள் நானா சாஹிப் படையினரால் 'கான்பூர் கிணறு' என்று நன்கறியப்பட்ட இடத்தில் வீசியெறியப்பட்டன. பின்னர் இந்த சிதைந்த உடல்களை டில்லியில் உள்ள ஆல்சோல்ஸ் தேவாலயத்தின் கல்லறைக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது. இந்தக் கல்லறை மீதிருந்த கல்வெட்டில் 'பீதாரைச் (Bitar) சேர்ந்த நானா தூம்டோ பந்த்தின் (Nana Dhoomdo Panth) படையினரால் கொடூரமாகப்*

- இந்த முயற்சி பாதியிலேயே முடிந்து விட்டது; விளைந்த பயனும் மிகக் குறைவாகவே இருந்தது. அரை நூற்றாண்டுக்குப் பின் இந்தியாவின் சில பகுதிகளில் அமைந்த பிரிட்டிஷாரின் கல்லறைகள் நிதிவசதி இல்லாமல் புதர் மண்டின. சிப்பாய்க் கலகத்துக்குப் பின் டில்லியில் ஏற்பட்ட மோதலை அடக்கும் பணிக்குத் தலைமை தாங்கிய பிரிகேடியர் ஜான் நிக்கல்சனின் கல்லறை சிமெண்ட் கட்டையின் மீது கீச்சிடும் குரங்குகள் ஓணானைத் துரத்திப் பிடித்தன. சென்னையிலிருந்து பெஷாவர் வரை பிரிட்டிஷார் விட்டுச் சென்ற கல்லறைகள் மீதிருந்த மங்கிப்போன கல்வெட்டுக்கள் காட்டுப் புல்லாலும் புதராலும் மூடப்பட்டிருந்தன.

படுகொலை செய்யப்பட்டு இறந்தவர்கள், இறந்து கொண்டிருப்பவர்கள் அனைவரும் கிணற்றுக்குள் வீசப்பட்டனர். பெரும்பாலும் பெண்களும் குழந்தைகளுமான கிருத்தவ மக்களின் பெரும் குழுவின் புனித நினைவாக' என்று பொறிக்கப்பட்டிருந்தது. இந்தியர்களின் உணர்வுகள் புண்படாத வகையில் இந்தக் கல்வெட்டு வாசகத்தை ஆகஸ்ட் 15 அன்று மூடிவைக்க முடிவு செய்யப்பட்டது.

இயற்கையான பிரிட்டிஷாரின் குணத்துக்கேற்ப விடைபெற்றுச் செல்லும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் நெஞ்சைத் தொடுவதாகவே இருந்தன. அதே சமயம் ராணுவ அதிகாரிகளில் பலர் தங்களின் வலுமிக்க குட்டையான போலோ குதிரைகள் டோங்கா வண்டியின் நுகத்தடியில் சிக்கி வாழ்க்கையை முடிப்பதை விரும்பாமல் அவரவர் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். குவெட்டாவில் உள்ள ராணுவப் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த நூறு வேட்டை நாய்களை அக்கல்லூரியின் கடைசித் தளபதியான கர்னல் ஜார்ஜ் நோயல் ஸ்மித் (Col.George Noel Smith) கட்டுக்கொல்ல உத்தரவிட்டார். ஏனெனில் அவற்றுக்குப் பொருத்தமான வீடுகளை அவரால் காண முடியவில்லை. 'வேட்டைகளின் போது தன்னுடன் பல மணி நேரங்களைப் பகிர்ந்து கொண்ட அந்த மகிழ்ச்சி தரும் நண்பர்களைக் கொல்வது தான் தனது பணிக்காலத்திலேயே மிகவும் பதைபதைக்கச் செய்த சம்பவம்' என்று கர்னல் குறிப்பிட்டார்.

நேரம் போதாமல் பணி செய்து கொண்டிருந்த வைஸ்ராயின் ஊழியர்கள் கூட ஒரு கூட்டத்தின் போது, இந்தியப் பிரிவினைக்குப் பின் நாய்கள் பராமரிப்பு சங்கத்தின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பது பற்றி விவாதிக்க ஒரு பகுதி நேரத்தைச் செலவிட்டனர்.

கண்டிப்பு மிக்க கிளைவ், ஹேஸ்டிங்ஸ், வெல்லெஸ்லி ஆகியோரின் எண்ணெய் வண்ண ஓவியங்கள் அனைத்தையும், கட்டுறுதி கொண்ட தனது கொள்ளுப்பாட்டி விக்டோரியாவின் சிலைகள் அனைத்தையும், பிரிட்டிஷ் அரசு பயன்படுத்திய முத்திரைகள், வெள்ளிப்பட்டயங்கள், கொடிகள், சீருடைகள் மற்றும் இதர பொருள்கள் அனைத்தையும், பின்னாளில் அவர்கள் எப்படிப் பயன்படுத்திக் கொண்டாலும் அவற்றை இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் அப்படி அப்படியே விட்டு விட வேண்டும் என்று மவுண்ட் பேட்டன் கண்டிப்பான உத்தரவிட்டார்.

'பிரிட்டனின் இரு நூறாண்டு கால உறவைப் பெருமிதத்துடன் இந்தியா நினைத்துப் பார்க்க வேண்டும்' என்று வைஸ்ராயின் தலைமை ஊழியர் இஸ்மே பிரபு விரும்பினார். 'அந்த நினைவுகளை அவர்கள் விரும்பமாட்டார்கள் என்பதும் கூட உண்மைதான். ஆனால் அப்படிச் சொல்வது அவர்களைப் பொறுத்த விஷயமாகும்' என்றும் அவர் ஒப்புக் கொண்டார்.

வைஸ்ராய் உத்தரவிட்டிருந்தாலும், பிரிட்டிஷ் அரசின் அனைத்துப் பொருள்களும் விட்டுச் செல்லப்படவில்லை. இந்திய ராணுவத்தில் இருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் தங்கள் படைக்குரிய வெள்ளிப் பட்டயங்களை எடுத்துச் சென்றதும் சில இடங்களில் நடந்தது. பம்பாயில், சுங்கத்துறையில் இரண்டு உதவி ஆய்வாளர்களை அவர்களின் அலுவலக உயரதிகாரி விக்டர் மேத்யூஸ் (Victor Matthews) அழைத்தார்.

'நாங்கள் சாம்ராஜ்யத்தை கணக்குத் தீர்த்து விட்டுச் செல்லலாம்; ஆனால் இந்த செல்வங்களை இந்தியர்களின் கைகளில் ஒப்படைத்து விட்டுச் செல்லமாட்டோம்' என்று மேத்யூஸ் கோபத்துடன் உறுமினார். அப்போது அவரது மேசைக்குப் பின்னால் இருந்த பெரிய உலோகத்தாலான பெட்டியைச் சுட்டிக் காட்டினார். அதன் ஒற்றைச் சாவியும் அவரிடம் தான் இருந்தது.

அவரின் கீழ் பணியாற்றும் இருவரில் ஒருவரான ஜான் வார்ட் ஓர் (John Ward Orr) மருட்சியுடன் அந்தப் பெட்டியைத் திறந்தார். அந்தப் பெட்டிக்குள் விலைமதிப்பற்ற இந்து மதச் சிலைகளோ அணிகலன்களைக் கொண்ட புத்தர் சிலையோ இருந்திருந்தால் வியப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால் அதிர்ச்சியளிக்கும் வகையில் அந்தப் பெட்டி முழுவதும் ஒழுங்காக அடுக்கப்பட்ட புத்தகங்கள் இருந்தன. அவற்றிலிருந்து ஒன்றை எடுத்தவுடனே சொத்துக்களின் தன்மை புரிந்து விட்டது. அதிகார வர்க்க மனோபாவத்தைக் காட்டும் சிறந்த அடையாளமாக அந்தப் பெட்டி விளங்கியது. இந்தியாவின் கோயில் சுவர்கள், சிற்றின்பம் விளக்கும் சிற்பங்களால் நிறைந்திருந்தன. மனிதர்களின் கற்பனை வண்ணத்தில் உருவான அவற்றில் தெரிவு செய்யப்பட்ட உடலுறவுக் காட்சிகள் இருந்தன. ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டனின் சுங்கத் துறை அதிகாரிகள் சேகரித்து வைத்திருந்த இத்தகைய உடலுறவு படங்கள் உள்ள புத்தகங்களைத்தான் இந்தியாவில் விட்டுச் செல்ல அவர் விரும்பவில்லை. ஒரு புத்தகத்தை ஓர் எடுத்தார். அதன் பெயர் உடலுறவின் 39 கோணங்கள். அதிலிருந்த படங்கள் கஜுராஹோ கோயில்களின் இந்துக் கடவுள்களின் கற்பனைத் திறன் மிக்க நயமான உவகையூட்டும் உடலுறவுக் காட்சிகள் அளவுக்குக் கிளர்ச்சி யூட்டுவனவாக இல்லை. சொல்லப் போனால் ரஷ்யாவின் பாலே நடனக் குழுவில் கால் பெருவிரலை நிலத்தில் ஊன்றி சுழன்றாடும் பருவ மங்கைக்கு நடுவே உடல் பருத்த விதவைப் பெண் ஆடுவதைப் போல் இருந்தன.

தனது இரண்டு உதவியாளர்களில் மூத்தவரான வில்லியம் விட்சரிடம் (William Witcher) அந்தப் பெட்டியின் சாவியை மேத்யூஸ் சம்பிரதாயப்படி அளித்தார். சுங்கத் துறையின் மாபெரும் பொக்கிஷம் பிரிட்டிஷாரின் பொறுப்பில் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் இப்போது இந்தியாவை விட்டு செல்ல முடியும் என்று அவர் அறிவித்தார்.*

---

* இந்தப் புகழ்மிக்க பெட்டி ஏறத்தாழ மேலும் ஒரு பத்தாண்டுகாலம் பிரிட்டிஷாரின் பாதுகாப்பில் இருந்தது. இதனை விட்சர் தனது வீட்டில் வைத்திருந்தார். ஆங்க்விக்கன் பேராயரின் மகளான அவரது மனைவியும் இதனை அறிவார். ஒரு நாள் அவரது கணவர் ஞாபகமறதியாகப் பெட்டியைத் திறந்து போட்டு விட்டுச் சென்று விட்டார். உள்ளே என்ன இருக்கிறது என்று பார்த்த அந்த நல்ல பெண்மணி மூர்ச்சையாகிப் போனார். இதன் பிறகு விட்சர் புறப்பட்டுச் செல்லும் போது பெட்டியை ஓர் என்பவரிடம் கொடுத்தார். இத்தகைய இழிவான பொருள்களால் இந்தியர்களின் மனம் பாழாகிவிடாமல் பாதுகாப்பதற்கு அரும்பாடுபட்ட பிரிட்டிஷ் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு உயர்ந்த உள்ளம் இருந்தாலும் 1955ஆம் ஆண்டு ஓர் பதவி விலகிச் செல்லும் போது இவற்றைப் பாதுகாப்புடன் விட்டுச் செல்ல யாரும் இல்லை. ஃப்ரெஞ்ச் மொழி அறிவை வளர்த்துக் கொள்வதற்காக, 'லே கைட் டெஸ் கேரசெஸ், (Le Guide Des caresses) லெஸ் நியூட்ஸ் டு ஹரேம்' (Les Nuits du Harem) என்ற இரண்டு புத்தகங்களைத் தெரிவு செய்து கொண்ட பின், மற்றவற்றை இந்தியர்களிடம் ஒப்படைக்க ஓர் முடிவு செய்தார். ஒரு வேளை இதுதான் இந்தியர்களிடம் பிரிட்டிஷார் ஒப்படைத்த கடைசி சொத்தாக இருக்கும். இதற்குள் இருக்கும் செய்திகளால் தாக்குறாமல் பாதுகாத்துக் கொள்ளும் ஆரோக்கியமான

## *பம்பாய், ஆகஸ்ட் 1947*

*எப்போதும் போல அவர் தனிமையில் இருந்தார். அதிகாலை சூரிய ஒளியில், மவுனம் போர்த்தியபடி, பம்பாயில் முஸ்லீம்கள் கல்லறைப் பகுதியின் மூலையில் இருந்த, எளிய கல்லாலான ஒரு கல்லறையை நோக்கி முகமது அலி ஜின்னா நடந்து சென்றார். அங்கே இப்போது அவர் செய்த செயலை வரும் நாட்களில் லட்சக்கணக்கான மற்ற முஸ்லீம்கள் செய்யப் போகிறார்கள். அந்த நிலை உருவாக அவரே காரணமாவார். சபதப்படி அடைந்து விட்ட பாகிஸ்தா னுக்குப் புறப்படுவதற்கு முன் அந்தக் கல்லறையில் ஒரு பூச்செண்டை வைத்தார் இந்தியாவிலிருந்து அவர் நிரந்தரமாக விலகிச் செல்லப் போகிறார்.*

*ஜின்னா ஒரு சிறந்த மனிதர். ஆனால் அவர் வாழ்க்கையில் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு ஏதுமில்லை. பிடிவாதக்காரரான அந்த முஸ்லீம் தலைவர் அந்தக் கல்லறைக்குள் இருக்கும் பெண்ணிடம் கொண்டிருந்த ஆழமான, உணர்ச்சி பூர்வமான அன்பைத் தவிர வேறொரு குணாம்சமும் அவரிடம் இல்லை. இவர்களின் காதலும் திருமணமும் இவர்கள் வாழ்ந்த காலத்தில் இந்திய சமூகத்தில் ஏற்கப்பட்ட விதிகள் எதையும் ஏற்காமல் எதிர்த்து நின்றன உண்மையில் அந்தப் பெண்மணி ஒரு இஸ்லாமியக் கல்லறைக்குள் புதைக்கப்பட்டிருக்கவே கூடாது. இந்திய முஸ்லீம்களின் தேவதூதரான அவரின் மனைவி, முகமது நபியிடம் நம்பிக்கை கொண்ட குடும்பத்தில் பிறந்தவரல்ல. ரட்டன்பாய் ஜின்னா ஒரு பார்சி குடும்பத்தில் பிறந்தவர் பண்டைய பாரசீகத்தில் நெருப்பை வணங்கும் சோராஸ்ட்ரியன் (Zoroastrian) இனத்தைச் சேர்ந்தவர். இந்த இனத்தினர் இறந்தவர்களின் உடல்களைக் காவல்மாடத்தின் மீது வைத்து கழுகுகளுக்கு இரையாக்குவது தான் வழக்கம்.*

*ஜின்னாவுக்கு வயது 41. உறுதி கொண்ட பிரம்மச்சாரியாக அவர் இருந்தார்.* அப்போது கோடைகால விடுமுறையின் போது டார்ஜிலிங்கில் உள்ள மவுண்ட் எவரெஸ்ட் ஹோட்டலில், அவரது நெருங்கிய நண்பர் ஒருவரின் 17 வயது மகளான ரட்டி (Ruttie)யிடம் காதல் பைத்தியமானார். ஜின்னாவால் ரட்டி அப்படியே மயக்கப்பட்டிருந்தார். அந்தப் பெண்ணின் கோபம் கொண்ட தந்தை, தனது மகளை, முன்னாள் நண்பர் பார்ப்பதற்குத் தடைவிதிக்கும்*

---

நுகர்ச்சி வேட்கை கொண்ட பம்பாய் ரக்பி (Rugby ஒருவகை கால்பந்தாட்டம். மொ—ர்) கிளப் உறுப்பினர்களாக இருந்த இளைஞர்களைப் பொறுப்பாளர்களாக அவர் தெரிவு செய்தார். ஓர் இங்கிலாந்து திரும்பினார். வந்த சில நாட்களில் அவருக்கு அரசின் கடிதம் ஒன்று வந்தது. உடலுறவு சம்பந்தமான புத்தகங்களை சட்ட விரோதமாகக் கொண்டு வந்ததற்காக, சவுத் ஆம்டனில் அவரது லக்கேஜ் கைப்பற்றப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் சுங்கத்துறையின் சகாக்கள் அந்தக் கடிதத்தில் தகவல் தெரிவித்திருந்தனர்.

* உண்மையில் ஜின்னா ஏற்கெனவே ஒரு குழந்தையைத் திருமணம் செய்திருந்தார். படிப்பதற்காக லண்டன் புறப்படுவதற்கு முன் அவரது குடும்பத்தினர் அந்தக் குழந்தையைத் தூக்கி வந்து திருமணம் செய்தனர். ஆனால் அதனை ஒரு போதும் அவர் பார்த்ததுமில்லை. முஸ்லீம் வழக்கப்படி அவரின் பிரதிநிதியாக வேறொருவர் அந்தக் குழந்தையைத் திருமணம் செய்து கொண்டார். இங்கிலாந்திலிருந்து இவர் திரும்புவதற்கு முன் அது நோய் வாய்ப்பட்டு இறந்து விட்டது.

உத்தரவை நீதிமன்றத்திலிருந்து பெற்றிருந்தார். ஆனால் சம்பிரதாயங்களை எதிர்க்கிற ரட்டி தனது பதினெட்டாவது பிறந்த நாளின் போது கட்டிய புடைவையுடனும், கையில் ஒரு செல்ல நாயுடனும் லட்சாதிபதியான தனது தந்தையின் வீட்டிலிருந்து வெளியேறினார். ஜின்னாவைத் திருமணம் செய்து கொண்டார்.

இந்தத் திருமண உறவு பத்து ஆண்டுகள் நீடித்தது. அழகானப் பெண்களைக் கொண்டது என்று உலகம் முழுவதும் அறியப்பட்ட ஒரு நகரில் கதைகளில் வரும் கவர்ச்சிகரப் பெண் போலக் காண்பதற்கு அழகான ரட்டிஜின்னா வாழ்ந்து வந்தார். அவர் தனது ஒல்லியான உருவத்தை மெல்லிய சேலைகள் மற்றும் இறுக்கமான உடைகளைக் கொண்டு அலங்கரித்துக் கொள்ள விரும்பினார். இது பழமையில் ஊறிய பம்பாய் சமூகத்துக்கு அதிர்ச்சியை அளித்தது. அவர் உல்லாசமும் சுறுசுறுப்பும் நிறைந்த நாகரிகப் பெண் மணியாகவும், விரைந்து, அனல்பறக்கப் பேசும் இந்திய தேசியவாதியாகவும் இருந்தார்.*

தவிர்க்க முடியாதபடி அவர்களின் வயதிலும் உணர்ச்சிகளிலும் இருந்த வேறுபாடுகள் பிரச்சனைகளைத் தோற்றுவித்தன. ரட்டியின் ஆடம்பரமும் துணிச்சலான பேச்சும் அடிக்கடி ஜின்னாவை சங்கடப்படுத்தியிருக்கின்றன. அவரது அரசியல் வளர்ச்சிக்குத் தடையாக இருந்துள்ளன. சொல் வன்மையும் பகட்டுணர்வும் கொண்ட மனைவியிடம் வைத்திருந்த பேரன்பு காரணமாக எதற்கும் வளைந்து கொடுக்காத ஜின்னாவால் கூட பிரச்சனைகளை எடுத்துச் சொல்வது சிரமமாக இருந்தது. 1928இல் ஜின்னாவின் கனவு சிதைந்தது. அன்பு செலுத்திய ஆனால் புரிந்து கொள்ளத் தவறிய அவரின் அழகிய மனைவி அவரை விட்டு விலகினார். ஓராண்டுக்குப்பின், 1929 பிப்ரவரியில், அபினி கலந்த மார்ஃபின் எனும் மயக்க மருந்தை அதிகம் சாப்பிட்டதால் அவர் இறந்து போனார். அவருக்கிருந்த பெருங்குடல் வீக்க நோயின் கடுமையைத் தணித்துக் கொள்வதற்காக அந்த மயக்க மருந்தை சாப்பிட்டார். மனைவியின் பிரிவால் ஏற்கெனவே மனம் நொந்து போயிருந்த ஜின்னா இப்போது பெருந்துயரத்தில் மூழ்கினார். தற்போது பூச்செண்டு வைத்த கல்லறைக்குள், முன்பு கைப்பிடி மண்ணைப் போட்ட போது அவர் குழந்தையைப் போல் கதறி அழுதார். காயித் இ - ஆசம் (Quaid-e-Azzam) பொது இடத்தில் இப்படி உணர்ச்சியை வெளிப் படுத்தி இதற்கு முன் எவரும் பார்த்ததில்லை. இதுவே கடைசி முறையாகவும் இருந்தது. அந்தக் கணத்திலிருந்து, தனிமையும் சினமும் கொண்ட ஜின்னா, இந்திய முஸ்லீம்களைத் தட்டியெழுப்பும் பணிக்குத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டார்.

---

* 1921 இல் புதுடில்லியில் நடந்த மதிய விருந்தில் வைஸ்ராய் ரீடிங் பிரபுக்குப் (Lord Reading) பக்கத்தில் அவர் அமர்ந்திருந்தார். முதலாம் உலகப் போர் உருவாக்கியிருக்கும் சூழ்நிலையால் தாம் ஜெர்மனிக்குப் பயணம் செய்வது மிகவும் சிரமம் என்ற உண்மையை வைஸ்ராய் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால், ஏன் சிரமமானது என்று ரட்டி ஜின்னா வினவினார்.

'பிரிட்டிஷாரான எங்களை ஜெர்மானியர்கள் உண்மையில் விரும்புவதில்லை. நாங்கள் போக முடியாது' என்று விளக்கினார் ரீடிங்.

'பிறகு எப்படி பிரிட்டிஷாராகிய நீங்கள் இந்தியாவுக்கு வந்தீர்கள்?' என்று ரட்டி சட்டெனக் கேட்டார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

## புது டில்லி, ஆகஸ்ட் 1947

ஆங்கில நாகரிகத்தைத் துல்லியமாகக் கடைப்பிடித்த அவரிடம் இப்போது எஞ்சியிருப்பது அவரது வலது கண்ணின் மீது கம்பீரத்துடன் பொருந்தியிருந்த ஒற்றைக் கண்ணாடி மட்டும் தான். தூய்மையான லினன் உடைகள் மாறின. முகமது அலி ஜின்னா தனது ஊரான கராச்சிக்குப் பறந்து கொண்டிருந்தார். அரை நூற்றாண்டு காலத்துக்குமுன் சட்டம் படிக்க லண்டனுக்குச் சென்றதிலிருந்து அபூர்வமாகவே உடுத்திய ஆடைகளை இப்போது அவர் உடுத்தியிருந்தார். கணுக்காலைக் கவ்விப் பிடித்திருந்த சுரிதார் (Churidars) எனும் முழுக்கால் சட்டை, முழங்கால் வரை தொங்கும் ஷெர்வானி (Sherwani) எனும் நீளமான மேலங்கி, மற்றும் காலணிகளை அவர் அணிந்திருந்தார்.

ஜின்னாவுக்குப் புதிய உதவியாளராக கடற்படையின் இளம் அதிகாரி சையத் அசன் (Syed Ahsan) நியமிக்கப்பட்டிருந்தார். முந்தைய நாள் வரை இவர் வைஸ்ராயின் மெய்க்காப்பாளராக இருந்தார். கராச்சிக்கு வரலாற்றுச் சிறப்பு மிக்கப் பயணத்தை மேற்கொள்ள வைஸ்ராய் அளித்த டி.சி. 3 (DC3) என்ற வெள்ளி நிற விமானத்தின் படிக்கட்டுகளில் உதவியாளர் பின் தொடர ஜின்னா ஏறி மேலே சென்றார். உச்சிப்படிக்குச் சென்ற அவர் திரும்பி நின்று தனது இஸ்லாமிய தேசத்துக்கு விடாப்பிடியான போராட்டத்தை நடத்திய அந்த நகரின் பரந்து விரிந்த ஆகாயப்பரப்பைக் கடைசியாக ஒரு முறை பார்த்தார். 'டில்லியை நான் பார்ப்பது ஒருவேளை இதுவே கடைசி முறையாக இருக்கும்' அவர் முணுமுணுத்தார்.

(மிகப்பெரிய வெள்ளி நிற இந்திய வரைபடத்தில், ஈடேறாத கனவு என்று கூறப்பட்ட நாட்டின் எல்லைப்பகுதிகளை பச்சை நிறம் கொண்டு வரைந்து அதன் கீழிருந்து போராட்டங்களுக்குத் திட்டமிட்ட) அவுரங்கசீப் சாலையின் 10ஆம் எண் வீடு விற்கப்பட்டு விட்டது. விநோதமான விஷயம் என்னவென்றால், இந்த வீட்டின் புதிய உரிமையாளர் ஒரு இந்து தொழிலதிபர் - சேத் டால்மியா (Seth Dalmia). இன்னும் சில மணி நேரங்களில் அந்த வீட்டில் இருந்த கொடிக்கம்பத்தில் பல ஆண்டு காலமாக முஸ்லீம் லீகின் பச்சை வெள்ளை கொடி பறந்த கம்பத்தில் -அந்த வீட்டின் புதிய செயல்பாட்டுக்கு அடையாள மான கொடியை அவர் ஏற்றப் போகிறார் பசுவதை எதிர்ப்பு லீகின் தலைமையகமாகவிருக்கும் அதில் பறக்க விருப்பது 'பசுவின் புனிதக் கொடி.'

விமானத்தின் சில படிகளில் ஏறியதால் களைத்துப் போன ஜின்னா, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க தனது இருக்கையில் அமர்ந்தார். 'அவர் மூர்ச்சையாகி விட்டதாகவே தோன்றியது' என்று அவரது மெய்க்காப்பாளர் சையத் அசன் குறித்துள்ளார். விமானத்தின் பிரிட்டிஷ் விமானி எந்திரத்தை இயக்கி ஓடுபாதையில் செலுத்திய போது, அதற்குள் அவர் உணர்ச்சியேதுமின்றி முன்னோக்கிப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். டிசி 3 விமானம் தரையிலிருந்து மேலெழுந்து பறந்தபோது, குறிப்பாக ஏதுமின்றி ஜின்னா முணு முணுத்தார்: 'அதற்கு அதுதான் முடிவு.'

அவருக்கு மிகவும் பிடித்த பணியான செய்தித்தாள்களைப் படித்தபடி விமானப் பயணம் முழுவதையும் மவுனமாகக் கழித்தார். அவரது இருக்கையின்

இடது பக்கத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த செய்தித்தாள்களை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்து, படித்து, பின் ஒழுங்காக மடித்து இருக்கையின் வலதுபக்கத்தில் இருந்த இரண்டாவது அடுக்கில் வைத்தார். அவரது சாதனைகள் பற்றிய புகழுரைகளைப் படித்த போதும் அவரது முகத்தில் உணர்ச்சியின் சாயல் துளிளவு கூட வெளிப்படவில்லை. இந்தப் பயணம் முழுவதும் ஒருமுறை கூட அவர் பேசவில்லை. அவரது உணர்வுகளின் லேசான அறிகுறியைக் கூட வெளிக்காட்டவில்லை. அவருக்கான இந்தப் பயணத்தின் காரணத்தைக் கொஞ்சமும் அறிந்ததாக அவர் காட்டிக் கொள்ளவில்லை.

விமானம் கராச்சியை அடைந்தபோது ஜின்னாவின் உதவியாளர் திடீரென விமானத்தின் கீழே பார்த்தார். 'சிறு சிறு குன்றுகளைக் கொண்ட அந்தப் பாலைவனப் பகுதியில் வெள்ளை நிற ஏரியைப் போல் மக்கள் நிறைந்திருந்தனர்.' அவர்களின் வெள்ளை நிற உடைகள் சூரிய ஒளியின் ஜொலிப்பால் மேலும் பிரகாசித்தன.

ஜின்னாவின் சகோதரி உணர்ச்சி வயப்பட்டு அவரது கையைப் பற்றினார். 'ஜின்.. ஜின்.. பார்!' அவர் அழைத்துக் காண்பித்தார். ஜின்னாவின் கண்கள் ஜன்னல் வழியாக அமைதியோடு பார்த்தன. எந்த மக்களுக்காக பாகிஸ்தான் கோரினாரோ அந்த மக்களின் பெருந்திரளை முகத்தில் எந்தச் சலனமும் இன்றி சிறிது நேரம் உற்றுப் பார்த்தார். 'ஆமாம்! ஏராளமான மக்கள்' அவர் சொன்னார்.

பயணத்தால் மிகவும் களைத்திருந்த அந்த முஸ்லீம் தலைவரால், டிசி3 விமானம் தரையிறங்கி நின்றபோது இருக்கையிலிருந்து தாமாக எழுந்து நிற்க இயலவில்லை. விமானத்திலிருந்து வெளியே வர அவருக்கு உதவியாகக் கை கொடுக்க அவரின் உதவியாளர்களில் ஒருவர் முன்வந்தார். தனது சொந்த ஊரான கராச்சிக்கு இன்னொருவரின் கைத்தாங்குதலோடு வருவதை காயித்-இ-ஆஸம் விரும்பவில்லை. அசைக்க முடியாத மனஉறுதியின் இன்னொரு முயற்சியாக, ஜின்னா, விறைப்புடன் எழுந்தார்; யாருடைய உதவியுமின்றி படிக்கட்டுகளில் நடந்தார்; மனநோயாளிகள் போல் உரக்கக் கோஷமிட்ட மக்கள் கூட்டத்தின் ஊடே அவர் தனக்காகக் காத்திருந்த காரை நோக்கிச் சென்றார்.

கராச்சிக்குச் செல்லும் வழிநெடுக, விமானத்தின் ஜன்னல் வழியாகப் பார்த்த அதே மக்கள் கூட்டம் கடலெனத் திரண்டிருந்தது. கார் செல்லும் வழியெங்கும் மினு மினுக்கும் வெள்ளைக் கம்பளம் விரித்ததுபோல. எள்விழ இடமில்லாத மக்கள் திரளிலிருந்து, பாலைவனத்தில் சுழன்றடித்து ஒலியெழுப்பும் சூறாவளி போல, ஒரு கோஷம் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டேயிருந்தது. 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' ஒரே ஒரு இடத்தில் மட்டும் மக்கள் கூட்டம் மவுனமாக இருந்தது. இது ஒரு இந்துக்கள் பகுதி. 'இது பற்றி அவர்கள் மகிழ்ச்சி அடைய முடியாதுதான்' என்று ஜின்னா கருதினார். பின்னர், பயணநேரம் முழுவதும் அவர் காட்டிய அசாதாரண அமைதியைப் போல, மத்தியதர வர்க்கத்தினரில் கீழ்நிலையில் உள்ளவர்களின் குடியிருப்புப் பகுதியிலும், உணர்ச்சி வெளிப்பாடோ கருத்து வெளிப்பாடோ இல்லாமல் ஜின்னாவின் பயணம் அமைந்தது. இந்தப் பகுதியில் தான் 1876 கிருஸ்துமஸ் தினத்தன்று இரண்டு மாடி கல்வீட்டில் அவர் பிறந்தார்.

ஒளியிழந்த அந்த வீடு இப்போது பாகிஸ்தானின் முதலாவது கவர்னர் ஜெனரலான அவரின் அரசு இல்லமாக இருந்தது. அந்த அரசு இல்லத்தின் படிகளில் மெல்ல ஏறி மேலே சென்ற போது தான் அவரிடம் உணர்ச்சியின் அறிகுறிகள் தெரிந்தன. ஜின்னாவின் பின்னாலிருந்த கிளர்ச்சியற்ற வீட்டு முகப்பு அவருக்கு இந்த உணர்ச்சியைத் தந்திருக்க வேண்டும். மூச்சைப் பிடித்துக் கொண்டு படிக்கட்டுகளில் ஏறி உயரே சென்ற அவர் திரும்பி அவரது புதிய உதவியாளரைப் பார்த்தார். அவரது முகத்தில் தோன்றி மறையும் புன்னகை போல, தெளிவில்லாமல் அவரது கண்களில் ஒரு கணம் ஒளி தோன்றி மறைந்தது.

'உங்களுக்குத் தெரியுமா?' ஜின்னா தழுதழுத்த குரலில் சையத் அசனிடம் கூறினார்: 'என் வாழ்நாளில் பாகிஸ்தானைப் பார்ப்பேன் என்று நான் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை.'

★

அந்த மாபெரும் தருணம் - எந்தத் தருணத்துக்காக லுயி மவுண்ட்பேட்டன் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டாரோ, அது பெரும்பாலும் நெருங்கிவிட்டது. இன்னும் 36 மணி நேரங்களில் இந்தியாவில் இருந்த முந்நூறு ஆண்டு கால பிரிட்டிஷாரின் நடவடிக்கைகள் முடிந்து விடும். அந்த செயல்பாடுகள் இவ்வளவு விரைவில் முடியும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஐந்து மாதங்களுக்குமுன் நார்த்தோல்ட் விமான நிலையத்திலிருந்து பனி மூடிய காலைவேளையில் யார்க் விமானத்தில் பறந்து பயணம் துவங்கிய போது இந்தியாவின் கடைசி வைஸ்ராயே கூட இதனை எதிர்பார்க்கவில்லை.

இப்போது முடிவு நெருங்கிக் கொண்டிருப்பதால் மவுண்ட்பேட்டனின் நடவடிக்கைகள் ஒரு விஷயத்தில் மேலோங்கியிருந்தன. புகழின் கடைசி கட்டத்தின் போதே பிரிட்டிஷ் அரசு வெளியேறிவிட வேண்டும் என்று அவர் விரும்பினார். அப்போது தான் நல்லெண்ணமும், புரிந்துணர்வும், உள்மனத்தில் ஊடுருவும். இது பிரிட்டனுக்கும், இந்தியப் பேரரசிலிருந்து உருவாகவிருக்கும் நாடுகளுக்கும் இடையே புதிய உறவுக்கான சூழலை உருவாக்கும் என்றும் அவர் கருதினார்.

மிகுந்த எச்சரிக்கையுடன் உருவாக்கி வரும் இந்தச் சூழ்நிலையை ஒரு நொடியில் வீணாக்கி விடும் ஒரு விஷயம் இருப்பதை மவுண்ட்பேட்டன் அறிவார். பச்சைக் கதவு போட்ட பங்களாவிலிருந்து சர் சிரில் ராட் கிளிஃப் முடித்துக் கொண்டிருக்கும் எல்லை பற்றிய தீர்ப்புதான் அது. சுதந்திரக் கொண்டாட்டங்கள் நடப்பதற்கு முன் எந்தக் காரணம் கொண்டும் இந்த விவரங்களை வெளியிட மவுண்ட்பேட்டன் விரும்பவில்லை.

தனது முடிவு மோசமான பிரச்சனைகளுக்குக் காரணமாகும் என்பதை அவர் அறிவார். இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் அவற்றின் தலைவர்களில் எவரும் அவர்களின் தேசத்துக்குத் தேவையான இரண்டு முக்கிய விஷயங்களை அறியாமலேயே உருவாகப் போகின்றன. ஒன்று அவர்கள் ஆளப்போகும் குடிமக்களின் எண்ணிக்கை; மற்றொன்று மிக முக்கியமான அவர்களது நாட்டின் எல்லைகள். பஞ்சாபிலும், வங்காளத்திலும் உள்ள

நூற்றுக்கணக்கான கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஆகஸ்ட் 15 அன்று அச்சத்தோடும், நிச்சயமற்ற நிலையிலும், விழாவாகக் கொண்டாட முடியாமல் இருப்பார்கள். ஏனெனில் அவர்கள் எந்த டொமினியனில் வாழப்போகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது. முறைப்படியான நிர்வாகமோ காவல்துறை ஏற்பாடுகளோ இல்லாமல் சில பகுதிகள் இருக்கும். இவையெல்லாவற்றையும் அறிந்த பின்னரும், ஆகஸ்ட் 15 முடியும் வரை எல்லை பற்றிய முடிவை ரகசியமாகவே வைத்திருக்க மவுண்ட்பேட்டன் தீர்மானித்தார். ராட் கிளிஃபின் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் இரு தரப்பினருக்கும் அது கோபத்தையே ஏற்படுத்தும் என்பதை அவர் உணர்ந்தார். 'இந்தியர்கள் அவர்களின் சுதந்திர தினத்தை சந்தோஷமாகக் கொண்டாடட்டும்; அதன் பிறகு துயரச் சூழலை அவர்கள் எதிர்கொள்ளட்டும்' என்று அவர் கூறினார்.

'இந்தத் தீர்ப்பின் விவரங்களை ஆகஸ்ட் 15 முடியும் வரை அந்தத் தலைவர்கள் அறியாமல் தடுக்கப்பட வேண்டும் என்று நான் முடிவு செய்துள்ளேன்; இதை நாம் செய்யாவிட்டால், அதிகார மாற்றம் செய்யப்படும் நாளில் இந்திய - பிரிட்டிஷ் உறவுகளுக்காக நாம் ஆற்றிய பணிகள் வீணாகும்; நன்னம்பிக்கை அழிந்து விடும்' என்று லண்டனுக்கு அறிவுறுத்தினார்.

ராட் கிளிஃபின் உதவியாளரான ஐசிஎஸ் அதிகாரி அந்த அறிக்கையை இரண்டு பழுப்பு நிறக் கவர்களில் போட்டு சீல் வைத்து ஆகஸ்ட் 13 அன்று வைஸ்ராய் மாளிகையில் சமர்ப்பித்தார். மவுண்ட்பேட்டனின் உத்தரவுப்படி அந்த அறிக்கை தோல்பைக்குள் போட்டு வைஸ்ராயின் பெட்டிக்குள் வைத்துப் பூட்டப்பட்டது. பாகிஸ்தான் உதயமாவதைக் குறிக்கும் விழாவுக்காக கராச்சிக்குப் புறப்படுவதற்கு முந்தைய நண்பகல் வேளையில் அந்தப் பெட்டி அவரது மேசை மேல் வைக்கப்பட்டது. அடுத்த 72 மணி நேரத்துக்கு இந்தியா நடனமாடி மகிழும் வேளையில், பண்டோரா பெட்டிக்குள் துர்தேவதைகள் இருந்தது போல (கிரேக்க தேவதைகளால் பரிசுகள் பல அளிக்கப்பட்டு, வாழ்த்துத் தெரிவிக்கப்பட்ட ஒரு பெண்ணிடம், திறக்காதே என்று கட்டளையிட்டு ஒரு பெட்டி அளிக்கப்பட்டது. அதை மீறி திறந்ததால் நன்மைகள் மறைந்து மனித குலத்துக்கு தீமைகள் பெருகியதாக ஒரு கதை உண்டு. அப்போதிருந்து வேதனை தரும் விஷயங்களை அவிழ்த்து விடுவதற்காக பண்டோரா பெட்டி (Pandora's box) என்பது ஒரு குறியீடானது. மொ-ர்) வைஸ்ராயின் பெட்டிக்குள் அந்த உறைகள் இருந்தன. விழா கொண்டாடும் துணைக் கண்டத்திற்கு துயரச் செய்திகளைத் தருவதற்கான சாவிக்காக அவை காத்திருந்தன.

துணைக் கண்டத்துக்கு சேவை செய்த மாபெரும் ராணுவத்திலிருந்த இந்து, சீக்கிய, முஸ்லீம் வீரர்கள் அவர்களின் குடியிருப்புகளிலிருந்தும், படை வீடுகளிலிருந்தும் இரண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டனர். ஒருவருக்கொருவர் அவர்கள் இறுதி விடைபெற்றுக் கொண்டனர். புதுடில்லியில், ராணுவத்தின் மிகப்பழைய குதிரைப்படையான ப்ரோபின் ஹார்ஸ் (Probyn's Horse) என்ற பிரிவைச் சேர்ந்த சீக்கிய மற்றும் டோக்ரா (Dogra) வீரர்கள், பிரிந்து செல்லும் முஸ்லீம் வீரர்களுக்கு சிறப்பான விருந்து அளித்தனர். இந்த இறுதி விருந்துக்காக அவர்கள் அணிவகுப்பு மைதானத்தில் இனிய நினைவுகளோடு கூடினர். இந்த

விருந்திற்காக ஆவிபறக்கும் குன்று போல் குவிக்கப்பட்ட அரிசிசாதம், கோழிக்குஞ்சு கறி, ஆட்டிறைச்சி, லவங்கப்பட்டை, கருப்பு வெல்லம், பாதாங்கொட்டை ஆகியவற்றுடன் அவிக்கப்பட்ட ராணுவத்தின் பாரம்பர்ய உணவான புலவு ஆகியவை இருந்தன. விருந்து முடிந்தவுடன், சீக்கியர், முஸ்லீம், இந்து ஆகியோர் கைகளைக் கோர்த்து கடைசி முறையாக பங்கா (bhanga) நடனம் ஆடினார்கள். ராணுவத்தின் வரலாற்றில் அந்த மாலை நேர நிகழ்ச்சி தான் மிகுந்த மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்

பாகிஸ்தானுக்கு உரியதாகப் போகும் பகுதிகளில் உள்ள முஸ்லீம் வீரர்கள், இந்தியாவுக்குச் செல்லவிருக்கும் சீக்கிய, இந்துத் தோழர்களுக்கு இதே போன்ற விருந்தினை அளித்தார்கள். ராவல் பிண்டியில் இருந்த இரண்டாவது குதிரைப் படையினர் தங்களின் பழைய தோழர்களுக்கு பராகானா (Barakana) எனும் விடைதரும் விருந்தினைப் பெரிதாக நடத்தினார்கள். முஸ்லிம் கர்னல் முகமது இத்ரி (Mohammed Idriss) சுக்கு பிரிவுபச்சார விருந்து அளிக்கும் போது பேசிய ஒவ்வொரு சீக்கிய மற்றும் இந்து அதிகாரிகளும் கண்ணீர்விட்டனர். கசப்பான இரண்டாவது உலக யுத்தத்தின் போது பல பகுதிகளுக்கு இவர் தலைமையில் தான் அவர்கள் சென்றனர்.

பதிலளித்துப் பேசிய இத்ரிஸ், 'நீங்கள் எங்கே சென்றாலும், நாம் எப்போதும் சகோதரர்களாகவே இருப்போம். ஏனெனில் நாம் நமது ரத்தத்தை ஒன்றாகவே சிந்தியிருக்கிறோம்' என்றார்.

இந்திய ராணுவத்துக்குச் செல்லவிருக்கும் வீரர்கள் அவர்கள் புறப்படுவதற்கு முன் ஆயுதங்களை ஒப்படைத்து விட வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்காலப் பாகிஸ்தான் ராணுவத் தலைமையகத்திலிருந்து வந்த உத்தரவை இத்ரிஸ் ரத்து செய்தார். 'இவர்களெல்லாம் ராணுவ வீரர்கள். ஆயுதங்களுடன் தான் இவர்கள் இங்கே வந்தார்கள். அவற்றோடு தான் அவர்கள் செல்வார்கள்' என்று அவர் கூறினார்.

அவரது தலைமையின் கீழ் பணியாற்றிய வீரர்களின் சார்பில் அவர் கடைசியாகத் தலையிட்டதால் அடுத்த நாள் காலை அவர்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டன. 2ஆவது குதிரைப்படையைச் சேர்ந்த சீக்கியர்களையும் இந்துக்களையும் ஏற்றிச் சென்ற ரயில் ராவல்பிண்டியிலிருந்து புறப்பட்ட ஒரு மணி நேரத்தில் முஸ்லீம் லீக் தேசிய காவல் படையினரால் தாக்கப்பட்டது. அவர்களிடம் ஆயுதங்கள் இல்லாதிருந்தால், அவர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டிருப்பார்கள்.

இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் பெருமை மிகு புனித இடங்களில் ஒன்றான டில்லி இம்பீரியல் ஜிம்கானா கிளப்பின் பிரமாண்டமான நடன அரங்குகளிலும், புல்வெளி பரப்புகளிலும் மனதைத் தொடும் பிரிவுபச்சார நிகழ்ச்சி நடந்தது. 'இந்திய டொமினியனின் ஆயுதப்படை அதிகாரிகளால்' 'பாகிஸ்தான் டொமினியனின் ஆயுதப்படை' அதிகாரிகளை கவுரவித்து பழைய தோழர்களுக்கு அளிக்கப்படும் விருந்து நிகழ்ச்சிக்கு வருமாறு அழைப்பிதழ் மீது அச்சிட்டு விருந்தினர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன.

அந்த மாலை வேளையில் மாபெரும் துயரமும், எதார்த்தமற்ற தன்மையும் தான் நிறைந்திருந்தன என்று ஒரு இந்தியர் நினைவு கூர்ந்தார். நன்றாகக் கத்தரிக்கப்பட்ட மீசை, பழுப்பு நிற பெல்ட், பிரிட்டிஷாரின் சீருடை, இந்தியாவின் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் சேவை செய்த போது உயிரையும் பணயம் வைத்துப் பெற்ற விருதுகளின் வரிசை ஆகியவற்றுடன் அவர்கள் இருந்தனர். அடுத்தடுத்து தொடர்ச்சியாக அமைந்த விளக்கொளியில் அவர்கள் அனைவரும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்கள் போல் இருந்தனர். நடன அறையில் அந்த மங்கலான விளக்குகளின் ஒளியில் அவர்களின் மனைவியரின் புடைவைகள் வானவில்லின் வண்ணங்களாய் ஜொலித்தன.

அனைத்துக்கும் மேலாக அவர்கள் பார்களில் மது அருந்தினார்கள்; வளவளவென பேசினார்கள். பழைய கதைகளைச் சொன்னார்கள். உணவு விடுதியின் கதைகள்; பாலைவனக் கதைகள்; பர்மாவின் காடுகள் பற்றிய கதைகள்; எல்லைப்பகுதியில் தங்களின் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட சோதனைகள் பற்றிய கதைகள் போன்றவை அவை சுக துக்கங்களையும், பல அபாயங்களையும் இணைந்தே பகிர்ந்து கொண்டு சிறப்பான சகோதரத்துவத்துடன் சீருடையில் வாழ்நாள் முழுவதையும் கழித்தவர்கள்.

கடந்த கால நினைவுகளை அந்த மாலையில் அசைபோட்டவர்கள் எவரும், விரைவில் தாங்கள் எதிர்கொள்ளப்போகும் துன்ப துயரங்கள் பற்றி நினைக்க முடியவில்லை. மாறாக ஒருவர் தோள்மீது மற்றவர் கைகளைப் போட்டு வளைத்தபடி இரைந்த குரலில் பேசிக் கொண்டார்கள். 'செப்டம்பரில் நாம் பன்றி வேட்டைக்குச் செல்வோம்', 'லாகூர் போலோ விளையாட்டை மறந்து விடாதீர்கள்', 'கடந்த ஆண்டு காஷ்மீரில் காணாமல் போன காட்டு ஆட்டை இப்போது தொடர்ந்து செல்ல வேண்டும்'

மாலைநேர விருந்து நிகழ்ச்சி முடியும் நேரத்தில் ஏழாவது ராஜபுத்திரர் படையின் முதலாவது இந்து மத பிரிகேடியர் கரியப்பா (Cariappa) உயரமான நடனமேடையில் ஏறி அமைதி காக்கும்படி கூறினார். 'நாம் இங்கே கூடியிருப்பது மீண்டும் சந்திக்கும் வரை வளமாக வாழ்வோம் என்று சொல்லத்தான்; அப்படிச் சொல்ல மட்டும் தான். காரணம் நம்மை எப்போதும் பிணைத்திருக்கும் அதே உணர்வு கொண்ட நட்புடன் மீண்டும் இங்கே சந்திப்போம்' என்றார் அவர். 'வெகுகாலமாக நாம் பொதுவான வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்டிருக்கிறோம். நமது வரலாறு பிரிக்கப்பட இயலாதது' அவர்களின் அனுபவங்களை விரிவாக விளக்கியபின், நிறைவாக இப்படிக் கூறினார்: 'நாம் சகோதரர்களாக இருந்திருக்கிறோம். நாம் எப்போதும் சகோதரர்களாகவே இருப்போம். நாம் ஒன்றாக வாழ்ந்த மகத்தான ஆண்டுகளை ஒரு போதும் மறவோம்.'

பேச்சை முடித்த அந்த இந்து பிரிகேடியர் இசைக்குழுவுக்குப் பின்பக்கமாகச் சென்று துணியால் மூடப்பட்டிருந்த கனமான வெள்ளிக்கோப்பை ஒன்றை எடுத்தார். ராணுவத்தில் உள்ள முஸ்லீம் தோழர்களுக்கு இந்து அதிகாரிகளின் பிரிவுபச்சார நினைவாக அந்தக் கோப்பையை மூத்த முஸ்லீம் அதிகாரி பிரிகேடியர் அகரச (Aga Raza) விடம் அவர் அளித்தார். ரஸா கோப்பையை

மூடியிருந்த துணியை அகற்றி விட்டு கூடியிருந்தவர்களிடம் அதனைத் தலைக்கு மேல் உயர்த்திக் காட்டினார். பழைய டில்லியைச் சேர்ந்த வெள்ளி நகை செய்யும் ஆசாரி அதனை வடிவமைத்திருந்தார். ஒரு இந்து ஒரு முஸ்லீம் என இரண்டு சிப்பாய்கள் அருகருகே நின்று சில பொது எதிரிகளை நோக்கி அவர்கள் தோள்களில் துப்பாக்கிகளை ஏந்துவது அதில் சித்தரிக்கப் பட்டிருந்தது.

அன்பளிப்புக்காக அனைத்து முஸ்லீம்களின் சார்பில் கரியப்பாவுக்கு ரஸா நன்றி தெரிவித்தார். இதையடுத்து 'ஆட் லேங் சைனே' ('Auld Lang Syne') என்ற பாடலை இசைக்குழு இசைத்தது. உடனே தன்னெழுச்சியோடு அங்கே இருந்த அதிகாரிகள் ஒருவரோடு ஒருவர் கைகோர்த்துக் கொண்டனர். சில நொடிகளில் அவர்கள் பிணைத்தக் கைகளோடு வட்ட வடிவில் நின்றனர். இந்துக்களும் முஸ்லீம்களும் அந்த வட்டத்தில் வேறுபாடின்றிக் கலந்து சீராக அசைந்து நடனம் ஆடினர். பழைய ஸ்காட்லாந்து கையறுநிலைப் பாடலின் வார்த்தைகள் அவர்களின் ஓங்கிய குரலில் எழுந்து டில்லியின் புழுக்கமும் வியர்வையும் நிறைந்த இரவை நிறைத்தன.

அவர்களின் கோரஸ் இசைக்குப் பின் நீண்ட மவுனம் நிலவியது. பின்னர் இந்திய அதிகாரிகள் நடனமண்டப அறைக்கதவருகே சென்று கண்ணாடிக் குவளைகளைக் கையில் எடுத்து, உறங்கிக் கொண்டிருக்கும் இந்தியத் தலைநகரில் அமைந்துள்ள, அந்தக் கட்டிடத்தின் படிகள் வழியாக இறங்கி திறந்த புல்வெளிக்கு வந்தார்கள். அந்த இரவில் பாகிஸ்தான் தோழர்களும் தங்களின் பணித்தகுதிக்கேற்ப, வரிசையாக, ஒருவர் பின் ஒருவராக அங்கு வந்து சேர்ந்தனர். இரு பக்கமும் இப்படிச் செய்து முடித்தபின் பிரிந்து செல்லும் தோழர்களுக்கு இறுதியாக வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் அமைதியோடு இந்தியத் தரப்பினர் தங்களின் மதுநிறைந்த கண்ணாடிக் குவளைகளை உயர்த்தினர்.

ஒருவருக்கொருவர் உறுதி கூறிக்கொண்டது போலவே அவர்கள் மீண்டும் சந்திக்கவிருந்தார்கள். அந்த இரவில் கற்பனை செய்ததற்கு மாறாக விரைவில் மிகவும் துயரம் நிறைந்த சூழ்நிலையில் அவர்கள் சந்திக்கவிருக்கிறார்கள். ஆனால் அந்த முன்னாள் தோழர்கள் சந்திக்கவிருந்தது வழக்கமாக சந்திக்கும் லாகூர் போலோ விளையாட்டு மைதானம் அல்ல; காஷ்மீர் போர்க்களத்தில். ஜிம்கானா கிளபிலிருந்து ரஸா கொண்டு சென்ற கோப்பையில், வெள்ளியாலான இரட்டை சிப்பாய்கள் பொது எதிரியை நோக்கி துப்பாக்கிகளை ஏந்துவதாகச் சித்திரிக்கப்பட்டிருந்தது போல் இல்லாமல், ஒருவருக்கு எதிராக மற்றவர் துப்பாக்கி ஏந்தும் நிலை அங்கே இருந்தது.

பதினொன்று

# உலகம் உறங்கிய வேளையில்

*கல்கத்தா, 13 ஆகஸ்ட் 1947*

*இந்திய சுதந்திரத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முப்பத்தாறு மணி நேரத்துக்கு முன் மகாத்மா காந்தி ஒரு அற்புதத்தைத் தேடி தென்னை மரங்கள் நிறைந்த சோடேப்பூர் (Sodepur) ஆசிரமத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். அவரது ஆசிரமத்திலிருந்து அந்த இடம் பத்து மைல் தூரத்தில்தான் இருந்தது. ஆனால் பல ஒளியாண்டுகள் தூரம் போல் அது தோன்றியது. புவிப்பரப்பில் அது ஒரு நரகத்துக்கு நிகராகவே இருந்தது. ரட் யார்ட் கிப்ளிங் (Rudyard Kipling) கின் 'அச்சுறுத்தும் இரவு நகரம்' (City of Dreadful Night) போன்ற கல்கத்தாவின் சீரழிந்த குடிசைப்பகுதிகளில் ஒன்றுக்குத்தான் அவர் சென்றார். உலகின் மிக மோசமான வன்முறை பாதித்த, துயரம் நிறைந்த அந்த நகரில் வைஸ்ராய் ராணுவத்தின் சக்தியையும் மிஞ்சி, அந்த அற்புதத்தை நிகழ்த்தி விட முடியும் என்று, மென்மையான குரல் கொண்ட அஹிம்சையின் தேவதூதர் நம்பினார். இந்திய சுதந்திரத்தின் சிற்பி நாட்டு மக்களுக்காக மீண்டும் ஒருமுறை உயிர்த் தியாகம் செய்யத் தயாரானார். ஆனால் இந்த முறை அவர்களை பிரிட்டிஷாரிட மிருந்து விடுவிப்பதற்காக அல்ல; அவர்களின் நெஞ்சங்களில் நிறைந்த வெறுப்பு எனும் விஷத்திலிருந்து விடுவிப்பதற்காக.*

*காந்தியின் குறும்பயணம் நிறைவுறக் காத்திருக்கும் அந்த நகரம், வன்முறையைப் போற்றுவது. அதன் பழங்கதைகளும், வழிபாட்டுக்குத் தெரிவு செய்த கடவுள்களும் அப்படித்தான் இருந்தன. அதன் காவல் தெய்வம் காளி. மனிதர்களைத் தின்னும் அரக்கியுடையது போல் நீண்டு தொங்கி அச்சம் தரும் நாக்கினையும், மண்டையோட்டு மாலையையும், ஏராளமான பாம்பு வளையங்களையும் கொண்ட காளி இந்து மதத்தின் அழிவு தேவதை.* ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான கல்கத்தாவாசிகள் அவளின் கோயில் பலி பீடத்தில் விழுந்து வணங்குகிறார்கள். ஒரு காலத்தில் நகரத்தின் அருகே உள்ள*

---

* இந்துப் புராணங்களின்படி காளி தற்கொலை செய்து கொண்ட ஒரு பெண். அவளது மரணத்தால் பெரும் சோகமுற்ற அவளின் கணவரான சிவன் அந்த உடலைத் திரிசூலத்தில் குத்தி ஆட்டியபடி வெறி பிடித்தவராகப் பூமியைச் சுற்றி வந்தார். தனது சக்கராயுதத்தால் காளியின் உடலை ஆயிரம் துண்டுகளாகச் சிதைத்து விஷ்ணு இந்த உலகத்தைப் பாதுகாத்தார். பூமியில் இந்தத் துண்டுகள் விழுந்த ஒவ்வொரு இடமும் புனிதமடைந்தது. இதிலும் பெரும் புனிதமடைந்தது கல்கத்தாவில் உள்ள காளிகட் (Kaligat) தான். இங்கேதான் காளியின் வலது பாத முன் பகுதி விழுந்து பதிந்தது.

ரகசியக் கோயில்களில் காளியை மகிழ்விக்க குழந்தைகளைப் பலியிட்டார்கள். இப்போதும் அவளின் பக்தர்கள் விலங்குகளைப் பலியிட்டு அவற்றின் ரத்தத்தைப் பூசிக்கொள்கிறார்கள்.

1947 ஆகஸ்டில் செல்வச் செழிப்பு என்ற மாயத் திரை கல்கத்தாவின் உண்மை நிலையை மறைத்திருந்தது. அழகிய பசுமையான புல்வெளி மைதானங்கள், ஆங்கிலேயத் தன்மை கொண்ட விடுதிகள், சவ்ரிங்கி (Chowringhee) பகுதியில் இருந்த பெரிய வர்த்தக நிறுவனங்களின் அலுவலகங்கள் எல்லாமே சினிமா செட் போல வெளிப்பகட்டுடன் போலித் தோற்றங்களாக மட்டுமே இருந்தன. இவற்றுக்குப் பின்னால், மைல் கணக்கில் விரிந்து கிடந்தன துயரம் தரும் பகுதிகள். மனித மலங்கள் நிறைந்து கிடந்த இந்தப் பகுதியில் மனிதர்கள் மிகுந்து நெருக்கியடித்துக் கொண்டு வாழ்ந்தார்கள். இவர்களில் பிச்சைக்காரர்களும், வேலையற்றவர்களுமாக 4,00,000 பேரும் 40,000 தொழுநோயாளிகளும் இருந்தார்கள். இவர்கள் குடியிருந்த குடிசைகள் முடைநாற்றமடித்தன. குறுகிய சந்துகளைக் கொண்ட தெருக்களில் திறந்த நிலை சாக்கடை வழிந்தோடிக் கொண்டிருந்தது. அதில் குப்பைகள், சிறுநீர், மலங்கள் கலந்திருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் எலிகளும் கரப்பான் பூச்சிகளும் குடியிருந்தன. ஈக்களும் கொசுக்களும் மேகமூட்டம் போல் கவிந்து ரீங்காரம் செய்தன. இவர்களுக்கு அரிதாக அமைக்கப்பட்டுள்ள குழாய்களில் வரும் தண்ணீர் வழக்கமாக மாசுபட்டதாகவே இருந்தது. அழுகிய மனித உடல்கள் மிதக்கும் ஹூக்ளி நதியிலிருந்து தான் இந்தத் தண்ணீர் கொண்டு வரப்பட்டது. இந்த நரகத்தின் மூலை முடுக்கிலெல்லாம் வாடகையை வசூலிப்பதற்காக இரக்கமே யில்லாத ஜமீன்தார்கள் வாரம் ஒரு முறை இந்த சந்துகள் வழியே நடந்தனர்.

இந்தியா சுதந்திரமடையவிருந்த அந்தத் தருணத்தில், கல்கத்தாவில் 3 மிலியன் (30 லட்சம்) மக்கள் மிகவும் மோசமான நிலையில் உணவுப் பற்றாக்குறையுடன் இருந்தார்கள். உயிர் வாழ இவர்கள் தினமும் உண்ட உணவின் அளவு ஹிட்லரின் மரண முகாம்களில் இருந்தவர்களுக்கு அளிக்கப்பட்டதை விடக் குறைவாகவே இருந்தது.

இது போன்ற குடிசைப் பகுதிகள் அனைத்து வகையான வன்முறைகளுக்கும் பிறப்பிடங்களாக இருந்தன. கல்கத்தாவில் ஒரு பிடி சோற்றுக்காக மனிதர்கள் கொலை செய்யப்பட்டார்கள். 1946 ஆகஸ்டில் நேரடி நடவடிக்கை தினத்தில் நடந்த கோரக் கொலைகளையடுத்து இந்த வன்முறை ஒரு புதிய பரிமாணத்தை அடைந்தது. இரக்கமற்ற மதவெறி மற்றும் இனவெறியால் தூண்டப்பட்டு இந்து முஸ்லீம் சமூகத்தவர்கள் கொல்லப்பட்டனர். இதன் பிறகு மதவெறிக் கொலை நடக்காமல் ஒரு நாளும் கழிந்ததில்லை. குண்டாந்தடிகள், கத்திகள், துப்பாக்கிகள், மனிதனின் விழிகளைத் தோண்டியெடுக்கும் புலிநகங்கள் என்று அழைக்கப்பட்ட இரும்பினாலான கொக்கி முட்கள் ஆகியவற்றுடன் குண்டர்கள் அரசியல் ரீதியாகத் திரட்டப்பட்டார்கள். இதனால் இரு தரப்பினரும் அச்சமும் அவநம்பிக்கையும் கொண்டார்கள். நீண்டகாலமாகக் கோரி வந்த சுதந்திர விழாவைக் கொண்டாட இந்தியா காத்திருந்தபோது கல்கத்தாவின் குடிசைப் பகுதிகளில் மகிழ்ச்சியற்று இருந்தவர்கள், தங்களின் எல்லையற்றத் துன்ப துயரங்களோடு மதப் படுகொலைகளையும் அழிவு களையும் ஒன்றுகலக்கவிருந்தார்கள்.

ஆகஸ்ட் 13 மாலை மூன்று மணிக்குப் பிறகு, இந்த அழிவு வேலைகளிலிருந்து இவர்களை எப்படியாவது தடுத்து நிறுத்த விரும்பிய அந்த மனிதர், போர்க்காலத்துக்கு முந்தைய பழைய செவ்ரோலெட் (Chevrolet) கார் ஒன்றில் வந்து இவர்கள் மத்தியில் இறங்கினார். எச்சரிக்கையோடு மெதுவாக நகர்ந்த காந்தியின் கார், பெலியகட்டா (Beliaghata) சாலை வழியாக தகரக்கூரை வேய்ந்த பராளமான குடிசைகளைக் கடந்து, கற்களால் அமைந்த குட்டையான சுற்றுச்சுவர் உள்ள 151ஆம் எண் இல்லத்தை நோக்கிச் சென்றது. பருவமழை பெய்து சேறும் சகதியுமாகி அழுக்கு நிறைந்த பகுதியில், டென்னிசீ வில்லியம்சின் (Tennessee Williams) நாடகத்தில் வரும் பாழடைந்த வீட்டைப் போல அந்த வீடு சிதிலமடைந்திருந்தது.

ஒரு காலத்தில் இந்த ஹைதாரி (Hydari) இல்லம் பரந்து விரிந்த மேல் தளங்களுடனும், கிரேக்கக் கலைநுட்பத்துடனான தூண்களுடனும், இத்தாலியக் கனவுகளைப் பிரதிபலிக்கும் சித்திர வேலைப்பாடு கொண்ட கைப்பிடிச் சுவர்களுடனும், வெப்பமண்டலத்துக்கு ஏற்ப மாறுபட்ட சூழலுடன் ஆங்கிலேயப் பெரு வணிகர் கட்டிய மாளிகையாக இருந்தது. இப்போது இதன் உரிமையாளர் வசதி படைத்த ஒரு முஸ்லீம். வெகுகாலத்துக்கு முன்னரே, அவர் இதனை, இருள் சூழ்ந்த தாழ்வாரங்களில் ஓடும் எலிகளுக்கும் கரப்பான்களுக்கும் விட்டுக் கொடுத்துவிட்டார். அதன் தரையில் உலர்ந்து கருப்பு வளையங்களாய்க் கிடந்த மனிதக் கழிவுகளை அகற்றி, ப்ளீச்சிங் பவுடர் போட்டு சுத்தப்படுத்தி, கல்கத்தாவில் அபூர்வமாகவே காணப்படும் கழிவறையைப் பழுதுபார்த்து இந்தக் கட்டிடம் மகாத்மா தங்குவதற்காகப் பரிந்துரைக்கப்பட்டது. இப்போது அது காந்தியையும் அவரது ஆதரவாளர் களையும் வரவேற்கத் தயாராக இருந்தது. சேறு, சகதி, துர்நாற்றத்துக்கு நடுவே இருந்துதான் தனது அற்புதத்துக்கான விசாரணையை அவர் இப்போது துவக்கப் போகிறார்.

யாரிடம் அற்புதத்துக்கான விசாரணை நடத்தவிருந்தாரோ அந்த மக்கள் ஏற்கெனவே அங்கு கூடியிருந்தார்கள். உணர்ச்சிக் கொந்தளிப்புள்ள அந்தக் கூட்டத்தினர் வேட்டியும் அரைக்கை சட்டையும் அணிந்திருந்தனர். அவர்கள் அனைவரும் இந்துக்கள். அவர்களில் பலர் நேரடி நடவடிக்கை தினத்தன்று முஸ்லீம் கும்பல்களால் கொல்லப்பட்டவர்களின், கற்பழிக்கப்பட்ட மனைவியர் மற்றும் மகள்களின் உறவினர்கள். காந்தியின் காரை நெருங்கிய போது அவரின் பெயரை உரத்தக் குரலில் ஒலித்தார்கள். இருப்பினும் கடந்த முப்பது ஆண்டுகளில் முதன்முறையாக மோகன்தாஸ் காந்தியின் பெயரை இந்தியர்கள் இப்போது மகிழ்ச்சியோடு ஒலிக்கவில்லை; சபித்தார்கள்.

வெறுப்பும் கோபமும் கொண்ட விகார முகங்களுடன், 'நவகாளியில் உள்ள இந்துக்களைக் காப்பாற்றச் செல்லுங்கள்', 'இந்துக்களைக் காப்பாற்றுங்கள், முஸ்லீம்களை அல்ல', 'இந்துக்களின் துரோகி' என்று கோஷமிட்டார்கள். காந்தியின் கார் நின்றது. உலகத்தில் பாதிபேரால் பரிசுத்தமானவர் என்று ஏற்பப்பட்ட அந்த மனிதருக்கு அவர்கள் வரவேற்பு அளித்தனர். கார் மீது கற்களையும் பாட்டில்களையும் அவர்கள் பொழிந்தனர்.

காரின் கதவுகளில் ஒன்று மெல்ல திறக்கப்பட்டது. அனைவரும் அறிந்த அந்த உருவம் வெளிப்பட்டது. அவரது மூக்கில் கண்ணாடி நழுவி, கீழறங்கி

யிருந்தது. ஒரு கையால் தனது மேல் துண்டை சரி செய்து கொண்டு, மறு கையை அமைதிக்கு அறிகுறியாக மேலே உயர்த்திக் கொண்டு, 77 வயதான அந்த மெலிந்த மனிதர் தனியாகக் கல்மழைக்கிடையே நடந்தார்.

'நீங்கள் என்னைக் காயப்படுத்த விரும்புகிறீர்கள், அதனால்தான் உங்கள் அருகே நான் வந்து கொண்டிருக்கிறேன்' காந்தி கூறினார்.

அந்தப் பார்வையில், அவரின் வார்த்தைகளில் ஆர்ப்பாட்டக்காரர்கள் உறைந்து போனார்கள். அரசர்களோடும், வைஸ்ராய்களோடும் இந்தியாவுக்காக வாதாடிய அவர், தனது கீச்சுக் குரலால் அவர்கள் அருகே வந்து நியாயத்தை எடுத்துரைத்தார். 'இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஒரே மாதிரியான சேவை செய்யவே நான் இங்கே வந்திருக்கிறேன். உங்கள் பாதுகாப்பில்தான் நான் இருக்கப் போகிறேன். நீங்கள் விரும்பினால் எனக்கு எதிராக நீங்கள் நடப்பதை வரவேற்கிறேன்' என்று கூறிய அவர் மேலும் தொடர்ந்தார். 'ஏறக்குறைய வாழ்க்கைப் பயணத்தின் இறுதிக்கு நான் வந்துவிட்டேன். இதற்கு மேலும் நான் தொடரப் போவதில்லை. ஆனால் நீங்கள் மீண்டும் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொண்டால் அதனைக் காணும் உயிருள்ள சாட்சியாக நான் இருக்க மாட்டேன்.'

பெலியகட்டா சாலையில் இருந்து கொண்டு நவகாளி இந்துக்களையே தான் பாதுகாப்பதாக அவர் விளக்கினார். நவகாளியில் பல இந்துக்களைக் கொன்று குற்றத்தைச் செய்த முஸ்லீம் தலைவர்கள் இப்போது அவரிடம் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆகஸ்ட் 15 அன்று ஒரே ஒரு இந்துவுக்குக் கூட தீங்கு நேராது. அவர்கள் வாக்கினைக் காக்கத் தவறினால் அவர் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்வார் என்பது அவர்களுக்குத் தெரியும்.

அந்த வாக்குறுதியை ஏற்றுத்தான் அவர் கல்கத்தா வந்திருந்தார். நவகாளியில் முஸ்லீம் தலைவர்கள் மீது அவர் நம்பிக்கை வைத்தார். அவர்கள் மத்தியில் உள்ள இந்துக்களின் பாதுகாப்புக்கு தார்மீகப் பொறுப்பினை அவர்கள் ஏற்றுள்ளனர். அதே போல், அவருக்கு முன் நிற்கும் ஆத்திரம் கொண்ட கும்பல் போல, கல்கத்தாவில் பரவியிருக்கும் இந்துக்கள், முஸ்லீம்களின் பாதுகாவலர்களாக இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை ஏற்கச் செய்வதற்கு அவர் இப்போது முயற்சி செய்தார். அவரது முயற்சியின் உள்ளடக்கம் என்னவென்றால், கல்கத்தா நகர இந்துக்கள் அவரின் கோரிக்கையை ஏற்க மறுத்து கொலைகளைத் தொடர்ந்து செய்தால், அது அவரின் வாழ்க்கைக்கு இறுதியாகிவிடும் என்பதுதான். நவகாளியில் முஸ்லீம்கள் வாக்குத் தவறினால் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவது போல, கல்கத்தாவில் உள்ள இந்துக்கள் அவரின் வேண்டுகோளை நிராகரித்தாலும் சாகும் வரை உண்ணாவிரதமிருக்க அவர் தயாரானார்.

இதுதான் அவரது அஹிம்சை கொள்கையின் சாரம். போரிடும் குழுக்களுக்கிடையே ஒப்பந்தம் செய்வது; அதனை நிறைவேற்றத் தனது வாழ்க்கையைப் பணயமாக வைப்பது.

'பிறப்பால் ஓர் இந்துவான, செயலால் ஓர் இந்துவான, வாழ்க்கை முறையில் இந்துக்களில் ஓர் இந்துவான, நான் எப்படி இந்துக்களுக்கு எதிரியாக இருக்க முடியும்?' கோபமுற்றிருந்த தனது நாட்டு மக்களிடம் காந்தி வினவினார்.

காந்தியின் நியாயவாதமும் அவரின் எளிமையான அணுகுமுறையும் அங்கிருந்த கூட்டத்தை சங்கடப்படுத்தியதுடன் குழப்பமடையவும் செய்தது. அவர்களிடமிருந்து வரும் பிரதிநிதிகளின் குழுவுடன் மேலும் பேச வாக்குறுதியளித்த அவர் தனது ஆதரவாளர்களை அழைத்துக் கொண்டு அழுக்கேறிய பங்களா நோக்கி நடந்தார்.

அந்தக் கூட்டத்தில் அமைதி சிறிது நேரம்தான் இருந்தது. அந்த கும்பலின் வெறுப்புக்குக் குவி மையமாக இருந்த சுஹ்ரவர்தி வந்தவுடன் ஒரு புதிய பிரச்சனை உருவானது. ஊளையிட்டுக் கொண்டும் வசை பொழிந்து கொண்டும் அந்தக் கும்பல் பங்களாவை முற்றுகையிட்டது. அந்த வீட்டின் ஜன்னல்களில் ஒன்றின் வழியாக ஒரு கல் பறந்தது. உடைந்து சிதறிய கண்ணாடித் துண்டுகளில் ஒன்று காந்தி அமர்ந்திருந்த அறைக்குள் விழுந்தது. தொடர்ந்த கல்வீச்சால் மஞ்சியிருந்த ஜன்னல்கள் உடைந்து நொறுங்கின. சிதிலமடைந்த வீட்டுக்கு வெளியேயிருந்தவர்கள் மாபெரும் ஆலங்கட்டி மழைபோல் கற்களை வீசித் தாக்கினர்.

வெளியே நடப்பதைக் கண்டு அமைதி குலைந்துவிடாத காந்தி அந்த வீட்டின் மையப் பகுதியில் கால்களை மடக்கி சப்பணமிட்டு தரையில் அமர்ந்து, தோள்களைத் தாழ்த்தி, தலையைக் குனிந்து, பொறுமையாகக் கடிதங்களுக்கு பதில் எழுதிக் கொண்டிருந்தார். அவரது வாழ்க்கையில் மேலும் ஒரு பயங்கரமான திருப்புமுனை ஏற்பட்டது. இந்திய சுதந்திரத்திற்கான நெடும் பயணம் நிறைவடைய இன்னும் சில மணி நேரம் மட்டுமே இருக்கும் நிலையில் இந்த ஆகஸ்ட் மாதத்தின் வெக்கை மிகுந்த மாலை வேளையில் அவரது நாட்டு மக்களில் ஒரு கும்பல் அவருக்கு எதிராகத் திரும்பியுள்ளது. 1915 ஜனவரியில் இந்தியாவின் நுழைவாயில் வழியாக உள்ளே வந்ததிலிருந்து இப்படியொன்று நிகழ்ந்திருப்பது இதுவே முதல் தடவையாகும். வெறுப்பால் கொதிப்புற்ற ஒரு கும்பல் ஹைதாரி இல்லத்தின் முன் கல்லெறிந்து தாக்குவது, கிரேக்க துன்பியல் நாடகத்தில் முதலில் வரும் கோரஸ் முணுமுணுப்பு போல, காந்திக்கும் இந்தியாவுக்கும் உலகத்துக்கும் முதல் அனுபவமாகும்.

## கராச்சி, 13 ஆகஸ்ட் 1947

'சார், சதித் திட்டம் நடக்கிறது'

இந்த வார்த்தைகளைக் கேட்ட லூயி மவுண்ட்பேட்டன் வெளிப்படையாகவே கோபம் கொண்டார். சாதாரணமாக உணர்ச்சிகளை வெளிக்காட்டாத அவரது முகத்தில் அச்சத்தின் ரேகை மின்னி மறைந்தது. அவர்கள் பேசுவதை யாரும் ஒட்டுக் கேட்க முடியாத ஒரு பகுதிக்கு, விமானத்தின் இறக்கைக்குக் கீழ் உள்ள பகுதி நோக்கி அந்த மனிதரைப் பின் தொடர்ந்து மவுண்ட்பேட்டன் சென்றார்.

டில்லியில் மவுண்ட்பேட்டனிடம் தெரிவித்த தகவல்களை உறுதி செய்வதாகவே புலனாய்வு அறிக்கைகள் அனைத்தும் இருப்பதாக அந்த சிஐடி அதிகாரி கூறினார். அடுத்த நாளான ஆகஸ்ட் 14 வியாழனன்று காலை கராச்சியின் வீதிகள் வழியே அவரும் ஜின்னாவும் திறந்த காரில் பயணம்

செய்யும்போது குறைந்தபட்சம் ஒன்றுஅல்லது ஒரு வேளை பல குண்டுகள் அவர்கள் மீது வீசப்படலாம் என்று அவர்கள் நம்பினர். இந்தப் படுகொலை திட்டத்துடன் நகருக்குள் இந்து மதவெறி அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.எஸ்ஸைச் சேர்ந்தவர்கள் ஊடுருவினர். தீவிர முயற்சிகள் செய்தபோதும் இவர்களில் ஒருவரைக்கூட உளவுத் துறையினரால் பிடிக்க முடியவில்லை.

மவுண்ட்பேட்டனுக்குத் தொந்தரவாக அவரது மனைவி அவர்களுக்குப் பின்னால் வந்து நின்று சி.ஐ.டி அதிகாரியின் கடைசி வார்த்தைகளை ஒட்டுக் கேட்டுவிட்டார். 'நான் உங்களோடுதான் வரப் போகிறேன்' எட்வினா வற்புறுத்தினார்.

'உனது பிடிவாதம் நல்லதல்ல. நாம் இருவரும் குண்டுவெடிப்பில் சிதறி சின்னாபின்னமாக வேண்டிய அவசியமில்லை' கணவர் பதிலளித்தார்.

அவர்களின் பேச்சுக்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு சி.ஐ.டி அதிகாரி தொடர்ந்தார். 'திறந்த காரில் பயணம் செய்வதை ஜின்னா வற்புறுத்துகிறார் நீங்கள் மிகவும் மெதுவாகத் தான் செல்வீர்கள். உங்களைப் பாதுகாப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என்றே நான் அஞ்சுகிறேன்' என்று அவர் சொன்னார். சி.ஐ.டி.யின் முடிவுப்படி இந்தப் பேரபாயத்தைத் தவிர்க்க ஒரே ஒரு வழிதான் உள்ளது.

'சார், இந்த ஊர்வலத்தை ரத்து செய்வதற்கு ஜின்னாவை நீங்கள் இணங்கச் செய்ய வேண்டும்' என்று அவர் மன்றாடினார்.

இந்த நூற்றாண்டின் இந்திய மாமனிதரான காந்தி மீது கோபம் கொண்ட கும்பல் கல்லெறிந்த பதினெட்டு மணி நேரத்துக்குப் பின், ஆகஸ்ட் 14 வியாழன் காலை 9 மணிக்கு, பெலியகட்டா சாலையிலிருந்து 1800 மைல்களுக்கு அப்பால், காந்தியின் பிரதான அரசியல் எதிரி தனது நெடிய போராட்டத்தின் வெற்றியைக் கொண்டாடத் தயாராகிக் கொண்டிருந்தார்.

சீரழிந்த ஹைதாரி இல்லத்தில் துயரத்துடன் இருந்த தலைவர் எங்கே தோல்வியடைந்தாரோ அங்கே முகமது அலி ஜின்னா வெற்றி பெற்றுவிட்டார் காந்தி இருந்தும், தர்க்க நியாய விஷயங்கள் இருந்தும், அனைத்துக்கும் மேலாக அவரது நுரையீரலில் உயிர்க்கொல்லி நோய் இருந்தும் ஜின்னா இந்தியாவைப் பிரித்துவிட்டார். இன்னும் சிறிது நேரத்தில், கராச்சியில் விழாக் கோலம் பூண்டுள்ள நாடாளுமன்ற மண்டபம், உலகிலேயே முஸ்லீம் மக்கள் தொகை அதிகமுள்ள நாடு உதயமாவதைக் காணப்போகிறது. இந்த தேச அந்தஸ்தைப் பெறுவதற்காக ஜின்னா தலைமையில் ஹிஜ்ரா (நபிகள் நாயகம் மக்கா நகரிலிருந்து மதினா நகருக்குச் சென்ற பயணம்; இஸ்லாமிய சகாப்தத்தின் தொடக்கம் ஹிஜ்ரா (Hegira) ஆகும். மொ-ர்) பயணம் மேற்கொண்ட 45 மிலியன் (4 5 கோடி) மக்களின் பிரதிநிதிகள், சிப்பி ஓடு போன்ற மண்டபத்தின் வட்ட வடிவில் வரிசையாகப் போடப்பட்ட இருக்கைகளில் அமர்ந்தார்கள்.

வண்ணமயமான மக்கள் கூட்டமாக அவர்கள் இருந்தனர். கிருத்தவப் பாதிரியார்களின் வெள்ளை அங்கி போல பொத்தான்கள் நிறைந்த இறுக்கமான ஷெர்வானிகளையும் சாம்பல் நிற முரட்டுத் துணியாலான தொப்பிகளையும் அணிந்த அமைதியான பஞ்சாபிகள்; சீற்றப்பார்வை கொண்ட பத்தானியர்கள்;

தலைகளில் கம்பளி மற்றும் தங்கச் சரிகையாலான தலைப்பாகைகளையும், முகங்களில் முறுக்கி நிற்கும் மீசைகளையும் கொண்ட வாசீர்கள், மசூத்கள், அஃப்ரிடிகள்; ஜின்னா ஒரு போதும் பயணம் செய்யாத, மக்கள் மீது அவநம்பிக்கை கொண்ட மாகாணத்தின் பிரதிநிதிகளாக குள்ளமான கருநிற வங்காளிகள்; பலுசிஸ்தானிலிருந்து வந்த பழங்குடி மக்கள் தலைவர்கள்; பளபளக்கும் பட்டுத் துணியாலான பர்தாவால் தங்களின் முகங்களை மூடி வந்துள்ள சிந்து நதி பள்ளத்தாக்கு பெண்கள்; அடி அகன்ற (பெல் பாட்டம்) தொள தொளப்பான கால் அங்கிகளுக்கு மேல், தங்கச் சரிகை மின்னும் ஷால்வார்கள் அணிந்த பஞ்சாப் பெண்கள் அங்கு குழுமியிருந்தனர்.

விருப்பமில்லாவிட்டாலும் முஸ்லீம் தலைவரிடம் அவருக்குரிய நாட்டை அளித்த வைஸ்ராய் ஜின்னாவுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தார். வெள்ளை நிற கப்பற்படை சீருடையாலும் அவர் அணிவதற்கு மிகவும் விரும்பும் விருது களாலும் மவுண்ட்பேட்டன் ஒளியுடன் இருந்தார். துணைக் கண்டத்தில் பிரிட்டனின் மேலாதிக்கம் முடிவடைவதற்கு முறைப்படி அடுத்த 36 மணி நேரங்களில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளில் முதலாவதான இதில் கலந்து கொள்ள மிகவும் பொருத்தமானவர் இவர்.

அமைதியான முகத்தில் ஒரு வறட்டுப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, புதிதாய் உருவாகும் டொமினியனுக்கு மன்னரின் நல்வாழ்த்துக் களைத் தெரிவிப்பதற்காக மவுண்ட்பேட்டன் எழுந்தார். இப்படி நடக்கும் என்று ஒருபோதும் நம்பிக்கை கொள்ளாத விழா நிகழ்ச்சியில் மவுண்ட் பேட்டன் பேசினார். 'பாகிஸ்தான் உதயம் என்பது வரலாற்றில் ஒரு முக்கிய சம்பவம். வரலாறு என்பது சில சமயம் பனிநதி போல எல்லையற்ற மந்த கதியில் ஊர்ந்து செல்லும்; சில சமயம் காட்டாற்று வெள்ளம்போல் வெகு வேகத்துடன் பாய்ந்து செல்லும். உலகத்தின் ஒரு பகுதியான இங்கே இப்போதுதான் நமது ஒன்றிணைந்த முயற்சிகள் மூலம் பனி உருகியிருக்கிறது. நீரோட்டத்தின் தடைகள் அகற்றப்பட்டு முழுமையான வெள்ள வேகத்தில் நாம் செல்கிறோம். பின்னால் திரும்பிப் பார்க்க நமக்கு நேரமில்லை; முன்னோக்கிப் பார்க்க மட்டுமே நமக்கு நேரமிருக்கிறது.'

இந்த வார்த்தைகளோடு ஜின்னாவின் பக்கம் திரும்பிப் பார்த்தார் வைஸ்ராய். இந்த மகிழ்ச்சி பொங்கும் வேளையிலும் அவரின் உணர்ச்சியற்ற, வறண்டு மடிந்த தோல் கொண்ட முகத்தில் உணர்வின் சாயல் கூட இல்லை; சவக்களை தான் இருந்தது.

'ஜின்னாவுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். தனிப்பட்ட முறையில் எங்களின் நெருக்கமான நட்பும் பரஸ்பர நம்பிக்கையும், புரிந்துணர்வும் வளர்ந்துள்ளன. 'இவற்றை எதிர்கால நல்லுறவுகளுக்கு நன்னிமித்தங்களாகவே நான் கருதுகிறேன்' என்றும் மவுண்ட்பேட்டன் கூறினார்.

சம்பிரதாய முறையில் வார்த்தைகளைப் பயன்படுத்தி பேசிக் கொண்டி ருக்கும் போதே இந்த கல் நெஞ்சக்காரரின் மூலம் சிறிது நேரத்தில் தமது வாழ்க்கைக்கு ஆபத்து நேரவிருப்பதையும் மவுண்ட்பேட்டனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. பாகிஸ்தான் என்ற கனவை ஜின்னா கைவிடுவதற்கு செய்த

முயற்சியில் வெற்றி பெற முடியாதது போலவே, இப்போது அச்சுறுத்தும் ஊர்வலத்தை ரத்து செய்வதற்கு ஜின்னாவை இணங்க வைப்பதிலும், வைஸ்ராயால் வெற்றி பெற முடியவில்லை. ஊர்வலத்தை ரத்து செய்வதோ மூடிய காரில் கராச்சி நகர வீதிகளில் பயணம் செய்வதோ கோழைத்தனம் என்று ஜின்னா கருதினார்.

தனது கடின உழைப்பால் உருவான இந்த நாட்டிற்கு இது போன்ற செயல் மூலம் அவமதிப்பை ஏற்படுத்த அவர் ஒருபோதும் விரும்பவில்லை. எப்படியிருந்தாலும், இப்படியொரு நாடு உருவாவதைக் கடுமையாக எதிர்த்த மவுண்ட்பேட்டன் இப்போது அதன் உதய விழாவில், தாம் விரும்பாத ஒரு மனிதரின் பக்கத்தில் திறந்த காரில் அமர்ந்து சென்று கொலைகாரனின் குண்டுக்குத் தாமாகவே பலியாகப் போகிறார்.

'உங்களிடமிருந்து விடைபெறுவதற்கான நேரம் வந்துவிட்டது. பாகிஸ்தான் எப்போதும் எல்லா வளங்களையும் பெற்று சிறக்கட்டும்... அண்டை நாடுகளுடனும் உலகில் உள்ள அனைத்து நாடுகளுடனும் அது நட்புறவைத் தொடரட்டும்' என்று அவர் பேச்சை நிறைவு செய்தார்.

இப்போது ஜின்னாவின் முறை வந்தது. மெல்லிய குரலை வெளிப்படுத்தும் தொண்டை வரை பொத்தான்கள் போடப்பட்ட வெள்ளை நிற ஷெர்வானியில் இருந்த அவர், பக்தர்களுக்குக் காட்சி தரும் போப்பாண்டவர்போல் தோன்றினார். காலனியாதிக்கம் செய்த பிரிட்டனும் அதன் மக்களும் நண்பர்களாகவே பிரிகிறார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். 'தொடர்ந்து நாம் நண்பர்களாகவே இருப்போம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்' என்றும் அவர் கூறினார். மற்றவர்களின் நம்பிக்கைகளையும் மதிக்கும் சகிப்புத் தன்மையுள்ள ஆயிரத்து முந்நூறு ஆண்டு பழமையான பாரம்பரிய இஸ்லாமியக் கொள்கை 'எங்களால் பின்பற்றப்படும்; செயல்படுத்தப்படும்' என்று உறுதியளித்தார். 'அண்டை நாடுகளுடனும் உலகின் அனைத்து நாடுகளுடனும் பாகிஸ்தானின் நட்புணர்வில் குறை இருக்காது' என்றும் அவர் அறிவித்தார்.

பேச்சுக்கள் முடிந்த பின், பெரும்பகுதி அவர்களால் அறியப்பட்ட சோதனைக் கட்டத்துக்குச் சென்றார்கள். பல விஷயங்களில் எதிர்க்கருத்து கொண்டிருந்த அந்த இரண்டு மனிதர்களும், இணையாக, உயர்ந்தோங்கிய தேக்கு மரக் கதவுகளின் வழியாக நாடாளுமன்ற மண்டபத்திலிருந்து வெளியே வந்தனர். சோதனைக் களத்துக்கு நடுவே அவர்களை அழைத்துச் செல்ல மூடியில்லாத நிலையில் கருப்பு நிற ரோல்ஸ் ராய்ஸ் (Rolls-Royce) கார் காத்திருந்தது. 'பாழாய்ப் போன இது ஒரு பிண வண்டி போலத் தெரிகிறது' மவுண்ட்பேட்டன் எண்ணினார். சிறிது நேரம் தனது மனைவி மீது கண்களைப் பதித்து நின்றார். தனது காருக்குப் பின் அதிக இடைவெளியுடனேயே வர வேண்டும் என்று அவரது மனைவியின் கார் ஓட்டுநருக்குக் கண்டிப்புடன் உத்தரவிட்டிருந்தார். இவர்களின் பயணத்தை சீர்குலைக்க அந்தப் பெண்மணி ஏதாவது வழி கண்டுபிடித்திருப்பார் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

காத்திருக்கும் காரை நோக்கிச் செல்லும் போது மவுண்ட்பேட்டனின் மனத்திரையில் பயங்கரமான பல உருவங்கள் தொடர்ச்சியாகத் தோன்றின. பொது மக்களின் முன் கவனத்துடன் உணர்வுகளை வெளிக்காட்டாமல் பின்னால் மனத்திரையில் தெளிவான படங்கள் தெரிந்தன. இவை இப்போதைய

ஊர்வலத்தோடு சம்பந்தப்பட்டவையல்ல. கடந்தகால ஆவிகளின் ஊர்வலங்கள். மவுண்ட்பேட்டனின் உணர்வுகளில் வம்சாவழியாகப் பதிந்து விட்ட பக்கங்களில் பதியப்பட்ட படங்கள் அவை. அந்தப் பக்கங்களில் ஒன்றில் அவரின் பெரிய மாமனான ஜார் இரண்டாம் அலெக்சாண்டரின் பெயர் கவனத்துடன் பதியப்பட்டிருந்தது. இவர் '1881 பிப்ரவரி 13இல் மரணமடைந்தார்.' இரண்டாம் அலெக்சாண்டர் பீட்டர்ஸ்பர்கில் பயணம் செய்த திறந்த கார் மீது வீசப்பட்ட வெடி குண்டினால் அவரது உடல், வெந்து போன மாமிசத் துண்டுகளாய்ச் சிதறியது. அதே பக்கத்தில் அவரது குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு மாமாவான கிரேண்ட் ட்யூக் செர்ஜி (Grand Duke Serge) பெயர் இருந்தது. இவரும் இதே போன்ற சம்பவத்தில் 1904ஆம் ஆண்டு ஓர் அராஜகவாதியின் குண்டுவீச்சில் கொல்லப்பட்டார். இன்னொரு பக்கத்தில் இருந்த புகைப்படத்தில் அவரது ஒன்றுவிட்ட சகோதரியான ஈனா (Ena)வின் பெயர் இருந்தது. ஸ்பெயின் நாட்டின் பதின்மூன்றாவது அல்ஃபோன்ஸா (Alfonso XIII)வைத் திருமணம் செய்து கொள்ளச் சென்றபோது அவரது வாகனத்தின் மீது வீசப்பட்ட வெடிகுண்டினால், வாகன ஓட்டி கொல்லப் பட்டார். அந்த மனிதரின் சதையும் ரத்தமும் ஈனாவின் கல்யாணப் பட்டு உடையில் படிந்தன. இளம் வைஸ்ராயின் திறந்த ரோல்ஸ் ராய்ஸ் காரில் இப்போது அவரின் கடந்த கால குடும்பத்தினரெல்லாம் கும்பலாக நெருக்கியடித்து ஏறிக்கொண்டது போல் அவருக்குத் தோன்றியது.

கார் புறப்பட்டபோது அவரின் கண்கள் ஜின்னாவைப் பார்த்தன. அவர்கள் பேசிக் கொள்ளவில்லை. 'முகத்தை இறுக்கமாக வைத்திருக்கும் ஜின்னாவைத் தான் எப்போதும் பார்த்திருக்கிறோம்; ஆனால் இப்போது அவரின் படபடப்பை எளிதாக அறிய முடிகிறதே' என்று மவுண்ட்பேட்டன் நினைத்தார். நெஞ்சத் துடிப்பை நிறுத்திவிடும் வகையில் 31 குண்டுகள் முழங்கி வைஸ்ராய்க்கு மரியாதை செலுத்திய பின் கராச்சி நகர வீதிகளில் அவர்களின் கார் பயணப்பட்டது. காத்திருந்த மக்கள் கூட்டத்துக்குள், பெருந்திரளான, மகிழ்ச்சியான, ஆவேசமான கூட்டத்தினிடையே, அடையாளம் தெரியாத முகங்கள் நிறைந்த மக்கள் கடலில், வீதியின் ஏதோ ஒரு மூலையில் ஏதாவது ஒரு திருப்பத்தில், சன்னலின் ஓரத்தில் அல்லது வீட்டின் மேற்கூரையில் அவர்களைக் கொல்ல விரும்பும் மனிதனின் முகம் இருக்கிறது. அந்த மூன்று மைல் தூர ஊர்வலப் பாதையில் வரிசையாகத் துருப்புகள் நிறுத்தப் பட்டிருந்தன. ஆனால் அவர்கள் அனைவரும் மக்கள் கூட்டத்தின் பக்கம் முதுகைக் காட்டிக் கொண்டிருந்தனர். கொலைகாரன் குண்டு வீசும்போது அதனைத் தடுக்க இவர்கள் பயன்படப் போவதில்லை.

இந்த 30 நிமிடப் பயணம் 24 மணி நேரம் நீடித்தது போல் பிற்காலத்தில் மவுண்ட்பேட்டனுக்குத் தோன்றியது. வேகமாக நடந்து செல்வதை விட கூடுதல் வேகத்துடன் தான் அவர்களின் கார் ஒவ்வொரு இடத்தையும் கடந்து சென்றது. பாதை நெடுக அடிக்கொருவராய் மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது. நடைபாதைக்குப் பக்கத்தில் அந்தக் கூட்டம் ஆறு வரிசைகளைக் கொண்டிருந்தது. விளக்குக் கம்பங்கள், தொலைபேசிக் கம்பங்களில் பலர் ஏறி அமர்ந்திருந்தனர்; ஜன்னல் கம்பிகளின் வழியே பார்த்தனர்; கூரைகளின் மீதேறி இருந்தனர். ரோல்ஸ் ராய்ஸ் காரில் இருப்பவர்களின் வாழ்க்கை இன்னும் எவ்வளவு நேரம்

என்பதை உண்மையிலேயே அறிந்திராத அவர்கள் பாகிஸ்தானுக்கும் ஜின்னாவுக்கும் மவுண்ட்பேட்டனுக்கும் ஜிந்தாபாத் முழங்கினார்கள்.

மக்கள் கூட்டத்தில் சிக்கிக் கொண்ட அவர்கள் இருவரும் பல முகங்களைக் கொண்ட சுரங்கப் பாதையில் மெல்ல ஊர்ந்து சென்றார்கள். இருபுறமும் நிற்பவர்கள் சவுக்கு அல்லது கைத்தடியைச் சுழற்ற இடையே ஊர்ந்து செல்லும் தண்டனை கடற்படையில் கொடுப்பதுண்டு. அது போன்ற நிலையில், எந்த நேரமும் தங்களின் கார் மீது கையெறி குண்டு வீசப்படலாம் என்ற நிலையில் அவர்கள் சென்றனர். மகிழ்ச்சி நிறைந்த உணர்ச்சிப் பெருக்குள்ள மக்கள் கூட்டத்தினரைப் பார்த்து போலியாகவாவது கையசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லாமல் போனது. முகத்தில் வலுக்கட்டாயமாகப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, சீரான முறையில் கைகளை மேலுயர்த்தி அசைக்கவும் கீழே போடவும் மவுண்ட்பேட்டன் மறக்கவேயில்லை. அதேசமயம் அவரது கண்கள், கூட்டத்தில் இருந்த முகங்களிலிருந்து கோபாவேசம் கொண்ட ஒரு முகத்தையும், அச்சுறுத்தும் இரு கண்களையும் தேடிக் கொண்டிருந்தன. 'இங்கேதான் அது நடக்கப் போகிறது' என்று சொல்வதற்கான தடயங்களையும் அவர் பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்தியாவில் இப்படியொரு நிலைமை அவருக்கு ஏற்படுவது இது ஒன்றும் முதல் முறையல்ல. வேல்ஸ் இளவரசர் பயணத்தின் போது 1921 டிசம்பர் 8ஆம் தேதி பரத்பூர் வீதிகளில் அவர் காரில் பவனி வரும்போது, கார் மீது குண்டு வீச செய்யப்பட்ட சதித்திட்டத்தை சி.ஐ.டி போலீசார் கண்டுபிடித்தனர். இது போன்ற அரசமுறைப் பயணங்களில் வழக்கமாக முதலில் செல்வது மன்னரின் காராகத்தான் இருக்கும். ஆனால் அன்று தனது மைத்துனரான மன்னரின் இருக்கையில் இளம் மவுண்ட்பேட்டன் தான் அமர்ந்து சென்றார்.

பதைபதைப்பு நிறைந்த அந்த அனுபவ நினைவுகள்தான் இப்போது இந்த மக்கள் கடலுக்கிடையே ஒருவனைக் கண்காணிக்கும் அவரது மனதில் மின்னி மறைந்தன. 'இது யாராக இருக்கும்?' அவர் யோசித்தார். 'நான் ஒருவருக்குக் கையசைத்தேனே அவராக இருக்குமோ? அல்லது அவருக்குப் பின்னால் இருப்பவராக இருக்குமோ?' முட்டாள்தனமான யோசனைகளும் வந்தன. வங்காள ஆளுநரின் ராணுவச் செயலாளர் ஒருமுறை கொலைகாரன் ஒருவன் வீசிய குண்டினைப் பிடித்து வீசியெறிந்ததை அவர் நினைத்துக் கொண்டார்; தம்மால் ஒரு கிரிக்கெட் பந்தைக்கூட பிடிக்க இயலாது என்பதைப் பின்னர் மவுண்ட்பேட்டன் நினைவுபடுத்திக் கொண்டார். அவருக்குப் பின்னால் இருக்கும் தனது மனைவி பற்றி யோசித்தார். தனது உத்தரவை அவர் மீறிவிட்டாரோ என்றும் அச்சமுற்றார். ஆனால் அங்கும் இங்கும் பார்க்கத் திரும்பி தனது கண்காணிப்பிலிருந்து நொடி நேரத்தையும் வீணாக்கிவிட அவர் தயாராக இல்லை. காரை நோக்கிப் பாய்ந்து வரும் உலோகத் துண்டின் முதல் மினுக்கொளிக்காகக் காத்திருக்கும் அவரது கண்கள், ரேடாரின் விளக்குகள் போல, மக்கள் கூட்டத்தின் மேல்பரப்பை ஓய்வின்றி ஊடுருவிப் பார்த்த வண்ணம் இருந்தன.

விக்டோரியா சாலையில் உள்ள ஓட்டலின் பால்கனியிலிருந்து பார்க்கும் போது இவர்களின் கார் வருவது தெரிந்தது. அங்கே நின்றிருந்த இளைஞரின்

கோட் பாக்கெட்டில் கோல்ட் .45 ரக துப்பாக்கி துருத்திக் கொண்டிருந்தது. .அதன் மீது அவரது கை இறுகியது. எதிரே உள்ள கட்டிட ஜன்னல்களிலிருந்து முகங்களை அசைக்கும் மக்கள் கூட்டத்தை கவனித்துக் கொண்டே, அந்த இளைஞர் தனது துப்பாக்கியைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தினார். மவுண்ட்பேட்டனின் கார் அவர் நின்றிருந்த பால்கனியை நெருங்கியபோது, ஒருமுறை பிரார்த்தனை செய்து கொண்டார். பஞ்சாப் சி.ஐ.டி பிரிவின் இளம் அதிகாரியான ஜி. டி. சேவேஜ் என்ற இவர்தான் சதித்திட்டம் பற்றி டில்லிக்குத் தகவல் கொடுத்தவர். உண்மையில் அந்த ஆயுதத்தை வைத்திருக்க அவருக்கு உரிமையில்லை. பஞ்சாப் காவல் துறையில் அவர் வகித்த பணி 24 மணி நேரத்துக்கு முன்பே முடிந்துவிட்டது. இங்கிலாந்துக்குச் செல்லும் வழியில் அவர் அங்கே இருந்தார்.

காரில் இருந்த மவுண்ட்பேட்டனும் ஜின்னாவும், கையசைப்புகளிலும் புன்னகையிலும் தங்களின் அச்சத்தைத் தொடர்ந்து மறைத்துக் கொண்டனர். எதிர்பார்க்கும் ஆபத்து பற்றி இருவருக்கும் முன்கூட்டியே தெரியுமாதலால், அதிலேயே கவனம் செலுத்தியதால் காரில் ஏறியதிலிருந்து ஒருவருக்கொருவர் ஒரு வார்த்தையைக் கூட பரிமாறிக் கொள்ளவில்லை. வைஸ்ராயின் பெரிய குறையாக அவரது விமர்சகர்களால் கூறப்படுவது கர்வம். ஆனால் பிரச்சனை குவிந்த இந்த நேரத்தில் அதுதான் அவருக்கு வசதியாய் இருந்தது. 'இந்த மக்கள் என்னை விரும்புகிறார்கள்' என்று அவர் தனக்குத்தானே சொல்லிக் கொண்டார். 'இவர்களுக்கு நான்தானே சுதந்திரம் அளித்திருக்கிறேன்' அந்தக்கூட்டத்தில் தன்னைக் கொல்ல விரும்பும் மனிதர்கள் இருக்கக்கூடும் என்று அவரால் நம்ப முடியவில்லை. தாம் அங்கே இருப்பதால் ஜின்னா காப்பாற்றப்படுவார் என்று உண்மையிலேயே அவர் நம்பினார். 'ஒரே சமயத்தில் என்னையும்தான் கொல்ல வேண்டியிருக்கும் என்பதை அவர்கள் அறியும்போது, அவரை அவர்கள் கொல்ல மாட்டார்கள்' என்று தனக்குத்தானே உறுதியாக சொல்லிக் கொண்டார்.

பால்கனியில் நின்றிருந்த சேவேஜின் காலுக்குக் கீழே கார் சென்றபோது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தார். அவரால் பாதுகாப்புக் கொடுக்க முடியும் என்ற எல்லை வரம்பைக் கார் கடந்து செல்லும் வரை துப்பாக்கியைக் கையால் இறுக்கிப் பிடித்திருந்தார். பிறகு அவரது அறைக்குள் சென்று நான்கு விரற்கடை அளவு ஸ்காட்ச் மதுவை ஊற்றி அருந்தினார்.

இப்போது காரின் அருகே 'ஹஸ்ஸா' ('Huzzah') 'ஜிந்தாபாத்' ('Zindabad') ஆகிய கோஷங்கள் இல்லாமல் அமைதி நிலவியது. இந்துக்கள் வாழும் ஒரு பகுதி இது; இங்கே தான் அது நடக்கப் போகிறது என்று மவுண்ட்பேட்டன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டார். கராச்சியின் முதன்மையான வணிகப் பாதையான எல்பின்ஸ்டோன் (Elphinstone) வீதி வழியாகக் கார் நகர்ந்து சென்ற 5 நிமிட நேரமும் உயிர் வதை கொண்டவையாக இருந்தன. அங்கிருந்த பெரும்பாலான கடைகளும் சந்தைகளும் அண்டை அயலாரான முஸ்லீம்கள் கொண்டாடும் விழாவினால் வெறுப்பும் அச்சமும் கொண்ட இந்துக்களுக்குச் சொந்தமானவையே.

ஒன்றும் நடக்கவில்லை. கடும் புயலுக்குப்பின் கப்பல் கேப்டனைத் துறைமுக விளக்குகள் வரவேற்பது போல ரோல்ஸ் கார் முன் அரசு

மாளிகையின் கதவுகள் சட்டென்று தென்பட்டன. லூயி மவுண்ட்பேட்டனின் வாழ்க்கையில் மிகவும் அச்சமேற்படுத்திய பயணம் முடிந்தது.

அவர்களின் கார் நின்றபோது, அவர்களிடையேயான ஆழமிக்க, சிக்கலான நட்புறவின் முதலும் முடிவுமாக ஜின்னா மகிழ்ச்சியோடு காணப்பட்டார். அவரது முகத்தில் இறுக்கம் மறைந்து இனிய புன்னகை அரும்பியது. எலும்பு தெரியும் மெலிந்த கைகளால் வைஸ்ராயின் முழங்காலைப் பிடித்தபடி அவர் முணுமுணுத்தார். 'கடவுளுக்கு நன்றி! உங்களை உயிரோடு அழைத்து வந்து விட்டேன்'

மவுண்ட்பேட்டன் நிமிர்ந்து உட்கார்ந்தார். 'என்ன துடுக்குப் பேச்சு!' என்று நினைத்துக் கொண்ட அவர், கேலியாகக் கேட்டார். 'நீங்களா என்னை உயிரோடு அழைத்து வந்தீர்கள்? நான்தான் உங்களை உயிரோடு அழைத்து வந்திருக்கிறேன்'*.

## கல்கத்தா, 14 ஆகஸ்ட் 1947

வழக்கம் போல் அவர் குறித்த நேரத்தில் தயாராக இருந்தார். ஆகஸ்ட் 14ஆம் தேதி மாலை சரியாக ஐந்து மணிக்கு காந்தியின் மெலிந்த உருவம் ஹைதாரி மாளிகையின் கதவு அருகே தோன்றியது. சற்றே கூன் விழுந்த உடம்புடன், தனது ஊன்றுகோல்கள் என்று கூறிடும் இரண்டு இளம் பெண்களின் தோள்களில் கைகளைப் போட்டபடி, அந்த மாளிகையின் முற்றத்தில் தனது வருகைக்காக காத்திருக்கும் மக்கள் கூட்டத்தினூடே அவர் விரைந்து நடந்தார்.

முறையாய் வகுத்தமைக்கப்பட்ட மகாத்மாவின் அன்றாட நிகழ்ச்சிகளில் மிகவும் கறாரான ஒரு நிகழ்ச்சியை நோக்கித்தான் அவர் நடந்தார். கலந்தாலோசனைக் கூட்டங்களில் லெனின் புரட்சிக்குத் தயார் செய்தது போல, நூரம்பர்க் பேரணிகளில் ஃபாசிஸ்டுகள் தங்களின் பகட்டாரவாரமிக்க நடவடிக்கைகளுக்குத் தயார் செய்தது போல், காந்தி இந்திய சுதந்திரத்தின் நெடும் பயணத்துக்குப் பொருத்தமானவராக ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடத்தும் பிரார்த்தனைக் கூட்டத்தில் தயார் செய்தார்.

நகரங்களில், கிராமங்களில், லண்டன் குடிசைப் பகுதிகளில், பிரிட்டிஷாரின் சிறைச்சாலைகளில் என எல்லா இடங்களிலும், மனித உறவுகளைத் திறமையுடன் கையாளும் அவர் தனது ஆதரவாளர்களுக்குத் தகவல்களைத் தெரிவிக்க இந்தப் பிரார்த்தனைக் கூட்டங்களைப் பயன்படுத்தினார். அபூர்வமான

* கராச்சியில் தீட்டப்பட்ட சதித்திட்டம் ஏன் நிறைவேற்றப்படவில்லை என்பதை அறிய இந்த நூலின் ஆசிரியர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டனர். ஜலந்தரில் மிதிவண்டி பழுது பார்க்கும் பிரீதம் சிங் (Pritham sing) என்பவர் மட்டுமே ஒரு மறைமுகமான தகவலை அளித்தார். பாகிஸ்தான் ரயில்கள் தடம் புரண்டதையடுத்து, சீக்கியர்களின் சதித்திட்டம் தொடர்பாக இவர் சி.ஐ.டி பிரிவினரால் கைது செய்யப்பட்டார். உண்மையில் ஆர்.எஸ்.எஸ் அதன் ஆட்களை கராச்சிக்குள் ஊடுருவச் செய்தது. இந்தக் குழுவின் தலைவர் முதல் கையெறி குண்டை வெடிக்கச் செய்தபின் மற்றவர்கள் தொடர்ச்சியாக குண்டுகளை வீச வேண்டும் என்பது திட்டம். ஆனால் அந்த நபர் கார் கடந்து செல்லும் நேரத்தில் துணிச்சலை இழந்துவிட்டார் என்று சிங் கூறுகிறார்.

நேரங்களில் மட்டுமே இத்தகைய கூட்டங்கள் தவிர்க்கப் பட்டுள்ளன. இந்தக் கூட்டங்களில் அவர் கைக்குத்தல் அரிசியில் சத்து நிறைந்திருப்பது பற்றியும், அணுகுண்டுகளின் கோரம் பற்றியும், முறையாகக் குடல் சுத்தம் செய்வதன் முக்கியத்துவம் பற்றியும், கீதையின் மேன்மைச் சிறப்புப் பற்றியும் பாலுணர்வு களை அடக்குவதால் ஏற்படும் பயன்கள் பற்றியும், ஏகாதிபத்தியங்களின் அநீதிகள் பற்றியும், அஹிம்சைக் கொள்கைகள் பற்றியும் பேசினார். மகாத்மா காந்தியின் நற்செய்திகள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளுதல், பத்திரிகைகளில் வெளியாதல், வானொலியில் ஒலிபரப்புதல் என்ற வகைகளில் மீண்டும் மீண்டும் வெளியாகி அன்றாட செய்திகள் அவரின் இயக்கத்திற்கு வலு சேர்த்தன.

இப்போது அச்சமும் வெறுப்பும் நிறைந்த ஒரு நகரில் சிதிலமடைந்த அந்தக் கட்டிடத்தின் திறந்த முகப்புப் பகுதியில் அவர் பிரார்த்தனைக் கூட்டத்துக்குத் தயாரானர். பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பில் உள்ள இந்தியாவில் அவர் நடத்தும் கடைசிப் பிரார்த்தனைக் கூட்டமாக இது இருக்கும். அந்த நாள் முழுவதும் காந்தியிடம் இந்துக்களின் பிரதிநிதிகள் வந்தனர். கல்கத்தா நகருக்கு அவர் முன்மொழிந்துள்ள அஹிம்சை பற்றி அவர்களிடம் விளக்கினார். ஹைதாரி மாளிகையிலிருந்து ஒரு புதிய உணர்வு நகர் முழுதும் பரவும் என்ற நம்பிக்கை யோடு தனது கொள்கைகளை அவர் வலியுறுத்தினார். கல்கத்தாவில் முதன்முதலாக நடத்திய அந்தப் பிரார்த்தனைக் கூட்டத்தில் ஏறத்தாழ 10,000 பேர் கலந்து கொண்டார்கள். அவரது கொள்கைக்கு குறைந்தபட்ச வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அறிகுறியாக அது இருந்தது.

நாளையிலிருந்து நாம் பிரிட்டிஷ் ஆட்சி என்ற தளையிலிருந்து விடுபடப் போகிறோம் என்று அவர் பிரார்த்தனைக் கூட்டத்தில் இருந்தவர்களை எச்சரித்தார். ‘கல்கத்தாவில் சாந்தமும் சகோதரத்துவமும் திரும்பிவிட்டால் ஒருவேளை இந்தியா முழுவதும் காப்பாற்றப்படும்’. ‘மற்றபடி நாடு முழுவதும் வகுப்பு நெருப்புப் பற்றி எரிந்தால், புதிதாய் பிறந்த சுதந்திரத்தை நாம் எப்படிக் காப்பாற்ற முடியும்?’ என்றும் அவர் வினவினார்.

இந்தியாவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த அந்த மனிதர், அதன் வருகையை மற்றவர்கள் போல் தாம் கொண்டாடப் போவதில்லை என்று கூட்டத்தினரிடம் கூறினார். இந்தியாவின் சுதந்திர தினத்தைத் தம்மைப் போலவே, ‘உண்ணாவிரதமிருந்தும், அகில இந்தியாவையும் காப்பாற்றப் பிரார்த்தனை செய்தும், எவ்வளவு முடியுமோ அவ்வளவு நூல் நூற்றும்’ கழிக்குமாறு தனது ஆதரவாளர்களைக் கேட்டுக் கொண்டார். ஏனெனில் அந்த அன்புக்குரிய மரத்தாலான ராட்டைதான் காந்தியின் செய்திகளைக் கொண்டு சென்று நாட்டைப் பேரழிவிலிருந்து காப்பாற்றியது.

‘ஒரு குமாஸ்தா, ஒரு தட்டச்சுக் கருவியுடன்’ புதிய தேசத்தை வென்று விட்டதாக பின்னொரு நாளில் ஜின்னா தற்பெருமை கொண்டாலும், கராச்சி நகர வீதிகளில் நகர்ந்த அவரது காரைத் தொடர்ந்து எழுப்பப்பட்ட ஹஸ்ஸாக்களும், பாகிஸ்தான் ஜிந்தாபாத் கோஷங்களும் குழப்பம் விளை விக்கும் குணாம்சம் கொண்டதாகவே இருந்தன. இந்தக் கொண்டாட்டங்களில்

'மக்களிடையே உற்சாகம் குறைந்து காணப்பட்டது வியப்பை ஏற்படுத்தியது' 'பொதுவாக அக்கறையற்ற நிலை இருந்தது' என்று தி டைம்ஸ் (The Times) பத்திரிகை எழுதியது. வாக்கு கொடுத்த மண்ணுக்கு லட்சக்கணக்கான மக்களுக்குத் தலைமை தாங்கி ஜின்னா வந்தாலும் தேசத்தின் பிறப்போடு ஆபத்தும் இருக்கிறது என்ற உள்ளுணர்வு அவர்களுக்கு இருந்ததே உற்சாகம் குறைந்து காணப்பட்டதற்குக் காரணமாக இருக்கலாம்.

இதற்கு மாறாக கிழக்கு வங்கத்தில் விரைவில் கிழக்கு பாகிஸ்தான் உருவாகவிருந்த பகுதிகளில் - பிற்காலத்தில் பங்களாதேஷ் போருக்குக் களமாகப் போகும் பகுதிகளில் மக்களின் மனநிலை மாபெரும் விழாவுக் குரியதாக இருந்தது. கிழக்குப் பாகிஸ்தானின் முதன்மை அமைச்சராக நியமிக்கப்பட்ட காஜா மொஹைறதீன் முஸ்லீம் லீக் கொடிகளால் அலங்கரிக்கப் பட்ட சிறிய எந்திரப்படகு ஒன்றில் ஏறி நண்பகல் வாக்கிலேயே இந்தியாவை விட்டுப் புறப்பட்டார். மொஹைறதீனின் புதிய தலைநகர் டாக்காவுக்குச் செல்லும் வழியில் கங்கை நதி தீரத்தில் பருவமழையால் நிறைந்திருந்த தண்ணீரில் அந்த எந்திரப்படகு பல மணிநேரம் தள்ளாடிச் சென்றது.

சிறிய கப்பல் நிற்பதற்கு அறிகுறியாக ஒலியெழுப்பிய போதெல்லாம், குடிசைப் பகுதிகளிலிருந்தும், சேறும் சகதியும் நிறைந்த கழிமுகப் பகுதியில் இடிந்த நிலையில் இருக்கும் சிறு துறைமுகங்களிலிருந்தும், துடுப்பு போட்டு இயக்கும் படகுகள், தோணிகள், விசைப்படகுகள் ஆகியவற்றின் மூலம் வந்தவர்கள் கரைகளில் நின்று 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று உரக்க முழங்கினார்கள்.

'ஒவ்வொருவரும் பாட்டிசைக்கிறார்கள். மக்களின் கண்களில் அவர்களின் மகிழ்ச்சியைக் காணலாம்' மொஹைறதீனின் மகன் சொன்னார். ஆனால் பாகிஸ்தானின் பிறப்பை முறைப்படி கொண்டாடுவதற்கான இன்றியமையாத ஒரு பொருள் அங்கு எங்குமே காணப்படவில்லை. சிறு கப்பல் சென்ற வழியெங்கும் ஒரே ஒரு பாகிஸ்தான் கொடி கூட இல்லை. இது ஏன் என்பதை டாக்கா சென்ற பிறகு மொஹைறதீன் கண்டறிந்தார். கிழக்கு வங்காளம் முழுவதுமே இதுதான் நிலை.

வன்முறையுடனும், எல்லைக்கோடு இன்னமும் வெளியிடப்படாத நிச்சயமற்ற தன்மையால் ஏற்பட்ட பயங்கரத்துடனும் பஞ்சாபின் மையப் பகுதியான லாகூரில் அந்த நகரின் கடைசி காவல் துறை கண்காணிப்பாளர் என்ற முறையில் பில் ரிச் (Bill Rich) தனது இறுதிப் பணிகளை செய்து கொண்டி ருந்தார். அவரது ஒளி மங்கிய அலுவலகத்துக்கு வெளியே நிலவும் கடும் வெப்பத்தைக் குறைப்பதற்காக, ஜன்னல்களில் தொங்கவிடப்பட்டுள்ள, மூங்கில் குச்சிகளுக்கிடையே வெட்டிவேர் வைத்து கட்டப்பட்ட தட்டி மீது சிறுவன் சீராகத் தண்ணீர் பீய்ச்சும் ஓசையை அவரால் கேட்க முடிந்தது. லாகூரில் குழப்பம் ஏற்படாமல் தடுக்க தம்மால் இயன்றதைச் செய்திருப்பதாக கவலையுடன் அவர் நினைத்துக் கொண்டார். அவை போதுமானவையாக இல்லாதிருக்கலாம். மொகலாயர்களின் அழகான தலைநகரம் அச்சம் மற்றும் வெறுப்பு அலைகளுக்குள் மூழ்கிக் கிடந்தது. பிற்காலத்தில் வருவோருக்காக காவல்துறை உத்தரவு புத்தகத்தில் தாம் அறிந்த வன்முறை சம்பவங்கள் பற்றிய

தகவல்களை சுருக்கமாக அவர் குறித்து வைத்தார். பின்னர் தனக்குப் பின் தனது பதவிப் பொறுப்பை ஏற்கவிருக்கும் முஸ்லீம் அதிகாரியை அவர் அழைத்தார்.

பதவிப் பொறுப்பை ஒப்படைப்பதற்கான ஒரு படிவத்தை ரிச் (Rich) எடுத்தார். அதனைச் சரிபாதியாகக் கிழித்தார். அவருக்குரிய அரைப்பகுதியில், 'நான் ஒப்படைக்கிறேன்' என்று எழுதி கையெழுத்திட்டார். அவருக்குப் பின் பதவிக்கு வருபவர் மற்றொரு அரைப்பகுதியில் 'நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்று எழுதி கையெழுத்திட்டார். ரிச் சல்யூட் செய்தார். சக ஊழியர்கள் அவருடன் கை குலுக்கினார். மெல்லத் திரும்பி சோகத்துடன் வெளியே நடந்தார்.

முப்பத்தைந்து மைலுக்கு அப்பால் அமிர்தசரசில், அவரது சக ஊழியரான ரூல் டீன், (Rule Dean) ஆகஸ்ட் 14ஆம் தேதி மாலையில் இதேபோன்ற நிகழ்ச்சியில் ஈடுபட்டிருந்தார். டீன் தனது அலமாரியிலிருந்து ரகசியப் பதிவேடு ஒன்றினை எடுத்தார். அமிர்தசரஸ் காவல் துறையிடமிருந்து மாதத்துக்கு ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு காவல் துறைக்குத் தகவல் கொடுத்துக் கொண்டிருந்த அரசியல் ஒற்றர்களின் பெயர்ப் பட்டியல் அதில் இருந்தது. அந்தப் பட்டியலில் நகரக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரின் பெயரும், சீக்கியர்களின் பொற்கோயிலில் சர்க்கரை கலந்த அமிர்தம் எனும் பாகினைத் தயாரிக்கும் ஒருவரின் பெயரும் இடம் பெற்றிருந்தன. தனக்குப் பின் பதவிப் பொறுப்பை ஏற்பவர் சீக்கியர் என்றாலும் அவரிடம் இந்தப் பட்டியலை அளிக்க டீன் தயக்கம் காட்டவில்லை. காவல் துறையின் கெசட் பதிவு பெற்ற எந்த ஒரு காவல்துறை அதிகாரியும், அவரது மத நம்பிக்கையும் அரசியல் சார்பும் எதுவாக இருந்தாலும், ஒற்றன் ஒருவனுக்கு வேண்டுமென்றே கெடுதல் செய்ய மாட்டார்கள் என்பதில் டீன் உறுதியாக இருந்தார்.

கராச்சியில் களைப்புற்றிருந்த ஜின்னா அன்று நள்ளிரவில் தனது அரசு இல்லமாகவிருந்த பெரிய பங்களாவின் அறைகளில் மாலை நேரத்தை உலாத்திக் கழித்தார். கூர்ந்து நோக்கும் அவரது கண்களிலிருந்து எதுவும் தப்பவில்லை. வீட்டுக்குரிய பொருள்களைச் சரி பார்க்கும்போது, கிரிக்கெட் போன்ற மரப்பந்தாட்ட செட்டினைக் காணவில்லை என்பதறிந்து அவர் திகைத்துப் போனார். தனது இளம் உதவியாளருக்கு முறைப்படியான முதலாவது உத்தரவை அவர் பிறப்பித்தார். காணாமல் போயுள்ள பந்தடிக்கும் மட்டைகளைக் கண்டறிந்து உடனே வீட்டுக்குக் கொண்டு வருமாறு உத்தரவிட்டார்.

ஈடேறாக் கனவு என்ற பாகிஸ்தான் உருவாவதற்கு மூலகாரணமாக இருந்த அந்த மனிதர், கேம்பிரிட்ஜ் நகரின் ஹம்பர் ஸ்டோன் சாலை 3ஆம் எண் வீட்டில், ஆகஸ்ட் 14ஆம் தேதி பகல் பொழுதை தனிமையில் கழித்தார். கராச்சி நகர வீதிகளில் ரஹ்மத் அலிக்கென்று வெற்றி ஊர்வலம் எதுவும் நடக்கவில்லை. அவர் வரைந்த திட்டத்துக்காகப் பாராட்டுத் தெரிவிக்க மக்கள் கூட்டம் இல்லை. அவரது கனவு இப்போது வேறொருவருக்குச் சொந்தமாகிவிட்டது. முதன் முறையாக இந்தத் திட்டத்தைச் சொல்லி ஏற்குமாறு ரஹ்மத் அலி கெஞ்சியபோது எந்த மனிதர் ஏளனம் செய்தாரோ அவரே இப்போது அதன் நாயகராகிவிட்டார். ரஹ்மத் அலியின் மகத்தான திட்டம் ஈடேறும் அந்த நாளில் அவர் புதிய குறிப்பு ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருந்தார். பஞ்சாபைப் பிரிப்பதற்கு ஒப்புக்கொண்ட ஜின்னாவுக்குக் கண்டனம் தெரிவிப்பதாகும் அது.

அவரின் செயல் எடுபடப் போவதில்லை. முகமது அலி ஜின்னா மீது பெருமதிப்பு வைத்துள்ள மக்கள் லாகூரில் அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்க ஒரு மிலியன் (10 லட்சம்) டாலர்கள் தரத் தயாராய் இருந்தார்கள். ஆனால் அவருக்கு உத்வேகம் அளித்த யோசனையைத் தெரிவித்த அந்த மனிதர், ரஹ்மத் அலி, நியூ மார்க்கெட் பகுதியில் உள்ள எண்ணற்றக் கல்லறைகளில் ஒன்றில்தான் அடக்கம் செய்யப்படுவார்.

## புது டில்லி, 14 ஆகஸ்ட் 1947

சூரியன் மறைந்து கொண்டிருந்தபோது அவர்கள் புறப்பட்டனர். இரை காணா கொக்கு போன்ற ஒருவர், அவர்களின் காருக்கு முன்னால் தனியாக, இந்தியாவின் குழல் கருவியான நாககுரத்தை (நாதஸ்வரத்தை) இசைத்துச் சென்றார். புது டில்லியின் மக்கள் நிறைந்த வீதிகளில் அந்த ஊர்வலத்துக்கு அது வழிகாட்டியாக இருந்தது. ஒவ்வொரு நூறு கஜ (300 அடி) தூரம் சென்றதும் நாதஸ்வரக்காரர் நின்று விடுவார். தார்ச்சாலையில் சப்பணமிட்டு அமர்ந்து அந்தி இருளை நடுங்க வைக்கும் விதத்தில் இசைக்கருவியை இசைத்தார். அவருக்குப் பின்னால் வந்த காரில் இரண்டு புனித ஆத்மாக்கள் அமர்ந்திருந்தனர். தெய்வீகத் தன்மையுடன் அவர்கள் நேராகப் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த இருவரும் சன்னியாசிகள்; பிராமணர்களால் மட்டுமே அடையக்கூடிய மிக உயர்ந்த நிலை அது. ஒரு வாழ்க்கை காலத்திலேயே பிராமணன் எய்தும் இந்த நிலையை சாதாரண மனிதன் அடைய வேண்டுமானால் பத்து மிலியன் (ஒரு கோடி) ஜென்மம் எடுக்க வேண்டும் என்பது இந்து மத நம்பிக்கை.

திறந்த மார்புடனும், நெற்றியில் விபூதி பட்டையுடனும், தோள்கள் வரை நீண்டு தொங்கும் வெட்டப்படாத ஜடா முடியுடனும் உள்ள அவர்கள், காலவரம்பற்ற புராதன இந்தியாவின் துறவிகள். துறவு வாழ்க்கையில் அவர்கள் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட மூன்று பொருள்கள் ஒவ்வொருவர் பக்கத்திலும் இருந்தன. ஏழு கணுக்களைக் கொண்ட ஒரு மூங்கில் தடி, தண்ணீர் வைக்கும் ஒரு குடுவை, ஒரு மான்தோல்* ஆகியவை அவை. அவர்களின் 1937ஆம் ஆண்டு மாடல் ஃபோர்ட் காரின் ஜன்னல்களை சேலை கட்டிய மாதர் நோக்கும் போதெல்லாம் அவர்கள் வெறுப்புடன் பார்வையைத் திருப்பிக் கொள்வார்கள். சமூகத்தின் சட்ட திட்டங்களை அவர்கள் கடுமையாகக் கடைப்பிடித்தனர். பெண்ணுடன் உறவு கொள்ளக் கூடாது என்பது மட்டுமல்ல எந்த ஒரு பெண்ணையும் பார்ப்பதற்குக் கூட அவர்கள் அனுமதிக்கப்பட வில்லை. உடலின் நிலையாமையை உணர்த்தும் குறியீடாக அவர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் உடல் முழுக்க சாம்பலைப் (விபூதியை) பூசிக் கொண்டார்கள். யாசித்துப் பெற்ற உணவிலேயே வாழ்ந்தார்கள். ஒரு நாளைக்கு ஒரு வேளை உண்ணவே அனுமதிக்கப்பட்டனர்; அதையும் உட்கார்ந்து

---

* இந்து மத பக்தர்கள் மானையும் புலியையும் தூய்மையான விலங்குகளாகவே கருதினார்கள். இதனால் இவற்றின் தோல்களைப் பாய் போலப் பயன்படுத்துவதால் சாதி இந்துவின் ஆசாரம் கெட்டு விடுவதில்லை.

உண்ணக்கூடாது. புனிதப்பசுவின் ஐந்து கொடைப் பொருள்களான பால், தயிர், நெய், சிறுநீர், சாணம் ஆகியவற்றை சம அளவில் கலந்து தயாரிக்கப்பட்ட பஞ்சகவ்யத்தை தொடர்ச்சியாக அருந்தினார்கள்.

அந்த இருவரில் ஒருவர் ஒரு பெரிய வெள்ளித் தட்டினை வைத்திருந்தார். அதன் மீது தங்கச் சரிகை கொண்ட பட்டுப் பீதாம்பரம் இருந்தது. கடவுளுக்கான ஆடை இது. மற்றொருவர் ஐந்தடி உயரமுள்ள ஒரு தண்டம், தஞ்சாவூர் ஆற்றிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் கொண்ட ஒரு குடுவை, ஒரு விபூதி பை, சென்னை கோயிலில் நடனமாடும் கடவுளான நடராஜரின் காலடியில் அதிகாலை வேளையில் நைவேத்யம் செய்வதற்கான பிரசாதப் பை மூன்று ஆகியவற்றைக் கொண்டிருந்தார்.

யார்க் சாலையில் 17 ஆம் எண்ணுள்ள எளிய இல்லத்தின் முன் நிற்கும் வரை தலைநகரின் வீதிகள் வழியாக அவர்களின் ஊர்வலம் நடந்தது. மூட நம்பிக்கைகளைப் போற்றுகிற, மாய மந்திரங்களில் எப்போதும் நம்பிக்கைக் கொண்ட இந்தியாவின் அந்தப் பிரதிநிதிகள், அறிவியல்பூர்வமான புதிய சோஷலிச இந்தியாவைப் படைக்க நினைப்பவரை அந்த வீட்டின் வாயிலில் சந்தித்தார்கள். பண்டைய இந்தியாவின் மன்னர்களுக்கு அதிகாரம் அளிப்பதன் குறியீடாக துறவிகள் சில பொருள்களை அளிப்பார்கள். அதேபோலத்தான் நவீன இந்திய தேசத்துக்குத் தலைமையேற்க இருப்பவருக்கும் புராதனப் பொருள்களை அதிகாரபூர்வமாக அளிக்க இந்தத் துறவிகள் யார்க் சாலைக்கு வந்துள்ளனர்.

அவர்கள் ஜவஹர்லால் நேரு மீது புனித நீரைத் தெளித்தனர்; நெற்றியில் விபூதி பூசினர்; கைகளில் புனித தண்டத்தை அளித்தனர்; கடவுளின் ஆடையைப் (பீதாம்பரத்தை) போர்த்தினர். 'மதம்' என்ற சொல் தனக்குள் பயங்கரத்தைத் தோற்றுவித்துள்ளது என்பதை வெளிப்படையாகச் சொல்ல ஒரு போதும் தயங்காத அந்த மனிதருக்கும், தனது நாட்டிற்குக் கவலை தரும் விஷயங்கள் என்று கருதிய அந்தச் சடங்குகளை அவர்கள் செய்தது சலிப்பை ஏற்படுத்தியது. இருப்பினும் அதனை வெளிக்காட்டாமல் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். தாம் எதிர் கொண்டுள்ள அச்சம் தரும் பணிகளுக்கு சாதகமாக வரும் எந்த உதவியையும், அவரால் வெறுத்தொதுக்கப்பட்ட மூடப்பழக்கங்களிலிருந்து வந்தாலும், முற்றாக நிராகரித்துவிடக் கூடாது என்று அந்த முற்போக்காளர் உணர்ந்துவிட்டார் போலும்!

ராணுவ கண்டோன்மென்ட் (Contonment) களில், அரசு இல்லங்களில், கடற்படை தளங்களில், அரசு அலுவலகங்களில், கிளைவ் தனது பணியைத் துவக்கிய கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில், சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டையில், சிம்லாவில் உள்ள வைஸ்ராயின் விடுதியில், காஷ்மீரில், நாகாலாந்தில், சிக்கிமில், காடுகள் நிறைந்த அசாமில் என ஆயிரக்கணக்கான கொடிக் கம்பங்களிலிருந்து யூனியன் ஜாக் கொடிகள் கடைசியாக இறக்கப்பட்டன. துணைக் கண்டத்தில் பிரிட்டனின் ஆட்சிக்கு அடையாளமாக முந்நூறு ஆண்டுகாலம் இந்தியாவில் வானுயரப் பறந்த அந்தக் கொடிகள் முறைப்படி இறக்கப்படவில்லை. பிரிட்டனின் கொடி

இறக்கப்படுவது விழாவாக நடத்தப்படக்கூடாது என்ற தனது கொள்கையை மவுண்ட்பேட்டன் உறுதியுடன் தெளிவுபடுத்தியிருந்தார். 'யூனியன் ஜாக் கொடி இறக்கப்படுவது எந்த வகையிலாவது பிரிட்டிஷாரின் உணர்வுகளை ஊனப்படுத்தும் என்றால் அப்படிப்பட்ட செயல் நடக்காது' என்று நேரு ஒப்புக் கொண்டிருந்தார்.

இந்திய வரலாற்றில் எதிர்ப்புக் காட்டாமலும், அமைதியாகவும், ஆகஸ்ட் 14ஆம் தேதி மாலை வேளையில், ஆயிரக்கணக்கான கொடிக் கம்பங்களிலிருந்து ஒவ்வொரு நாள் மாலையிலும் வழக்கமாக இறக்குவது போல், யூனியன் ஜாக் கொடிகள் இறக்கப்பட்டன. ஆகஸ்ட் 15ஆம் தேதி சூரிய உதயத்தின் போது, அவற்றின் இடத்தில் சுதந்திர இந்தியாவின் கொடி இருக்கும்.

கைபர் கணவாய் உச்சியிலிருந்த ஒரே ஒரு ஆங்கிலேயரான கைபர் துப்பாக்கிப் படைப்பிரிவின் துணைத் தளபதி கேப்டன் கென்னத் டேன்ஸ் (Capton Kenneth Dance) அந்த நிசப்தமான மாலை வேளையில் ஏழுமுறை மணி அடிக்கும் ஓசையைக் கேட்டார். இந்திய ராணுவத்தின் எல்லா நிலையங்களிலும் மணிக்கு ஒரு தடவை இப்படி மணி அடிப்பது பல பத்தாண்டு களாகத் தொடரும் பழக்கம். காரணம் 1939க்கு முன் ஒரு சில சிப்பாய்கள் மட்டும் தான் கடிகாரம் வாங்க முடிந்தது; நேரம் சொல்ல முடிந்தது. மணியின் கடைசி ஒலி கேட்ட போது, லேண்டி கோட்டால் (Landi Kotal) கோட்டையின் கூரைப் பகுதிக்கு டேன்ஸ் ஏறிச் சென்றார். படை வீடு திரும்புவதற்கான ஒலியை எழுப்பும் வெள்ளிக்குழலுடன் குழல் ஊதுபவர் நின்றிருந்தார். அந்த இரண்டு மனிதர்களுக்குக் கீழே, கோட்டை மதில்களிலிருந்து பார்க்கும் போது, ஜாம்ருத் (Jamrud) வரையான பாதை பாம்புபோல் வளைந்து நெளிந்து சென்றது. இந்தப் பாதை வழியாகத்தான் ஐம்பது நூற்றாண்டுகளாக ஆக்ரமிப்பாளர்கள் இந்தியச் சமவெளிக்குள் நுழைந்தார்கள். அந்த சாலையின் ஒவ்வொரு திருப்பத்திலும், செம்மண் குன்றிலும் சிமெண்ட் பலகைப் பொருத்தப்பட்டிருக்கும். டேன்ஸ் பணியாற்றும் ராணுவம் சண்டையிட்டதைக் குறிக்க அல்லது வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கணவாயைப் பாதுகாக்கும் சண்டையில் உயிர்நீத்த அவரது நாட்டு வீரர்கள் சிலரை நினைவு கூர்வதற்காக அவை இருக்கும்.

குழல் ஊதுபவர் விறைப்பாக நின்று கருவியை உயர்த்தினார். மன உறுத்தலால் டேன்ஸ் சோகத்துடன் காணப்பட்டார். ஒரு சகாப்தம் முடிந்தது. முறைப்படியான சடங்குகளுடன் கைபர் கணவாய் ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்து நிரந்தரமாக விலகப் போகிறது. அதற்காக குழல் ஊதுபவரின் துயர ஓசையோடு இயைந்து கொடியை அவர் இறக்கினார். கயிற்றிலிருந்து கொடியை அவிழ்த்தார்; மடித்தார்; இங்கிலாந்திலிருந்து வந்த அதனை அங்கேயே கொண்டு போய் பத்திரமாகச் சேர்த்துவிடத் தீர்மானித்தார். பின்னர் காப்பாளர் அறையின் மணியை மாற்றுவதற்காக, பம்பாயில் ஒரு கப்பல் வணிகரிடமிருந்து வாங்கி வந்த பித்தளை மணியை அந்தப் படைப்பிரிவுக்கு அன்பளிப்பாக வழங்கினார். அதன் மீது ஒரு வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. 'கைபர் துப்பாக்கிப் படைப்பிரிவுக்கு கேப்டன் கென்னத் டேன்சின் அன்பளிப்பு, 14, ஆகஸ்ட் 1947'

துணைக் கண்டத்தின் மையப்பகுதியில் பிரிட்டிஷ் அரசின் ஆட்சியைக் குறிக்கும் புனிதமான நினைவுகளைக் கொண்டிருக்கும் அந்தக் கொடிமரக்

கோபுரத்தில் அதிகாரப்பூர்வமற்ற மற்றொரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. லக்னோவில் உள்ள மாகாண அரசின் கொடிமரத்தில் மட்டும்தான் பிரிட்டிஷ் பேரரசின் யூனியன் ஜாக் கொடி இறக்கப்பட்டதே இல்லை. 1857ஆம் ஆண்டு நேர்ந்த 87 நாள் முற்றுகை முடிந்து அதற்குள் அடைபட்டிருந்த அந்த மாகாணத்தின் 1000 வீரர்கள் பிரிட்டிஷ் படைப்பிரிவை வாழ்த்தி வரவேற்ற காலத்திலிருந்து குண்டுகளால் துளைக்கப்பட்ட அந்தக் கோபுரத்தின் சுவர்கள் எந்த மாற்றமும் செய்யப்படாமல் அப்படியே இருந்தன. அந்தக் கோபுரம் இந்தியப் பேரரசின் புனித இடமாக மாறியது. பேரபாயத்தை சமாளித்துத் தாக்குப் பிடித்து நின்ற பிரிட்டிஷ் ராணுவத்தினரின் திறமைக்கு எடுத்துக் காட்டானது. தங்களை அரக்கத்தனமாகப் பிடித்து வைத்த முதல் இடம் இது என்றும் சில வீரர்கள் கூறிக் கொண்டனர்.

ஆகஸ்ட் 14 இரவு 10 மணிக்கு அந்தக் கோபுரக் கொடிமரத்தின் பாதுகாவலரான வாரண்ட் அதிகாரி ஜே.ஆர்.அயர்லாந்த் (J.R. Ireland) கடைசி முறையாக யூனியன் ஜாக் கொடியை இறக்கினார். இங்கிலாந்தின் கொடி உச்சத்தில் பறக்கும் அந்தக் கோபுரத்தின் அடிப்பகுதியில் குழி தோண்டும் ஒரு குழுவினர் நின்றிருந்தனர். அவர்களில் ஒருவர் கோடாரியை எடுத்து இற்றுப் போயிருந்த உலோகக் கொடி மரத்தின் அடிப்பகுதியில் ஓங்கி வெட்டினார். மற்றொருவர் சிமெண்ட் அடித்தளத்திலிருந்து அதனை ஆட்டிச் சாய்த்தார். பிறகு அதனால் ஏற்பட்ட பள்ளம் சிமெண்ட் போட்டு மூடப்பட்டது. லக்னோவின் அந்தப் புனிதக் கொடி மரத்தில் இனி எந்த நாட்டின் கொடியும் பறக்கப் போவதில்லை.

யார்க் சாலை 17ஆம் எண் வீட்டில் துறவிகள் நெற்றியிலிட்ட விபூதியை ஜவஹர்லால் நேரு இப்போதுதான் கழுவி முடித்தார். பின் இரவு உணவுக்காக அமர்ந்தபோது தொலைபேசி மணி ஒலித்தது. தொலைபேசியில் ஒலி கேட்பது குறைவாக இருந்ததால் அவரது அலுவலக அறையிலிருந்து உரத்தக் குரலில் பேசியது வெளியேயிருந்த மகள் இந்திராவுக்கும் விருந்தினர் பத்மஜா நாயுடுவுக்கும் கேட்டது.

அவர் திரும்பி வந்தபோது இரண்டு பெண்களும் ஏக்கத்துடன் பார்த்தனர். தோல்வியால் வெளிறிப் போன அவர் நாற்காலியில் அமர்ந்தார். தலையைக் கைகளால் பிடித்துக் கொண்ட அவரால் பேச முடியவில்லை. ஒரு வழியாகத் தலையை அசைத்து அவர்களைப் பார்த்தார். கண்களில் கண்ணீர் பளிச்சிட்டது. அவருடன் பேசியவர் லாகூரிலிருந்து தொலைபேசியில் அழைத்திருந்தார். அந்தப் பண்டைய நகரின் இந்து மற்றும் சீக்கியர் வீடுகளுக்கான குடிநீர் நிறுத்தப்பட்டுவிட்டது. கடுமையான கோடை வெயிலில் தாகத்தால் தவித்த மக்கள் பைத்தியம் பிடித்தவர்கள் போல் அலைந்தனர். மேலும், ஒரு வாளி தண்ணீருக்கு யாசித்து வீடுகளை விட்டு வெளியே வந்த பெண்களும் குழந்தைகளும் முஸ்லீம் கும்பலால் வெட்டிக் கூறு போடப்பட்டனர். நகரில் ஆறுக்கும் அதிகமான பகுதிகளில் கட்டுப்படுத்த முடியாமல் ஏற்கெனவே தீ கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது.

இதையெல்லாம் கேட்டு அதிர்ச்சி அடைந்த அவர், மிகவும் மெலிந்த குரலில் முணுமுணுத்தார். 'இன்றிரவு நான் எப்படிப் பேசப் போகிறேன்? லாகூர், நமது

அழகு நகரம் லாகூர் பற்றி எரிகிறது என்பதைத் தெரிந்து கொண்ட பிறகும், இந்தியாவின் சுதந்திரத்திற்காக என் இதயம் களிப்புறுகிறது என்று நான் எப்படி பாசாங்கு செய்யப் போகிறேன்?' என்றார் அவர்.

ஜவஹர்லால் நேருவின் நினைவில் வட்டமிட்ட காட்சிகள், அதன் அனைத்துப் பயங்கரத்துடனும் கூர்க்கா படைப்பிரிவின் 20 வயது பிரிட்டிஷ் கேப்டனின் கண்களில் தெரிந்தது. லாகூருக்குச் செல்லும் வழியில் கூன் போல் வளைந்த ரயில்வே பாலத்தில் ஜீப் ஓட்டிச் சென்ற கேப்டன் ராபர்ட் அட்கின்ஸ், (Capt.Robert Atkins) அந்த நகரின் மேலே இருண்ட வான் பரப்பில் கொழுந்து விட்டெரிந்த ஆறு பகுதிகளின் நெருப்பை எண்ணிக் கொண்டே சென்றார். அவரது மனதில் பழைய நினைவு எழுந்தது. 1940இல் ஒரு நாள் இரவு லண்டனில் நடந்த பெரிய தீ விபத்தின் போது வான்பரப்பில் தெரிந்த தீப்பிழம்புதான் அது.

அட்கின்ஸுக்குப் பின்னால் 218 என்ற கூர்க்கா படைப்பிரிவைச் சேர்ந்த 200 பேர் வந்துகொண்டிருந்தனர். அதற்கும் பின்னால் அவரது முழு படைப் பிரிவின் வீரர்களும் 200 ட்ரக்குகளிலும், 50 ஜீப்புகளிலும் முன்னேறிக் கொண்டிருந்தனர். பஞ்சாப் எல்லைப் படையின் ஒரு பகுதியும், அட்கின்சும், அவரது படையினரும் விடியற்காலையிலிருந்து லாகூர் பயணத்தைத் தொடங்கி விட்டனர். இந்தப் படைப்பிரிவுக்கு 55,000 வீரர்கள் ஒதுக்கப்பட்டாலும், துரதிருஷ்டவசமாக சுதந்திர தின மாலைக்குள் இந்திய ராணுவத்தால் 10,000க்கும் குறைவானவர்களையே களத்துக்குக் கொண்டு வர முடிந்தது.

படைப்பிரிவுகள் இரவில் தங்குவதற்காக ஒதுக்கப்பட்ட ஜிம்கானா கிளப் மைதானத்தை அடைய அந்த நகரின் வழியாகச் செல்லும்போது, ஒரே ஒரு மனிதரின் நடமாட்டத்தைக் கூட அட்கின்ஸ் அங்கே காணவில்லை. கொடிய அச்சுறுத்தும் அமைதி அங்கே நிலவியது. அவரது படைப்பிரிவுகள் வந்தபோது தெரிந்த தூரத்துத் தீப்பிழம்புகள் ஏற்படுத்திய சீற்ற ஒலி மட்டுமே அந்த அமைதியைக் குலைத்தது.

பூனாவில் இருந்த இந்திய ராணுவத்தின் கண்டோன்மென்ட் பகுதியில் பிறந்த அந்த இளம் பிரிட்டிஷ்காரர், லாகூர் நகருக்குச் செல்லக் காரணம், அவரது வாழ்க்கை லட்சியமாக இருந்த ஒரு ஆசைதான். அட்கின்ஸ் இப்போதுள்ள படைப்பிரிவில் கர்னலாக இருந்து ஓய்வு பெற்றவர் அவரது தந்தை. ராணுவத்தில் இருந்து அப்பாவைவிட உயர் பதவிக்குச் செல்ல வேண்டும் என்பதே அவரது ஆசை.

அவரைச் சுற்றியுள்ள அச்சுறுத்தும் இருளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த அவர், சட்டென்று ஓராண்டுக்கு முன்னால், அவரது தந்தையுடன் கழித்த அந்தக் கடைசி மாலை நேரத்தை நினைத்துக் கொண்டார். அப்போது அவர்கள் மெட்ராஸ் கிளப்பில் பில்லியர்ட்ஸ் விளையாடிக் கொண்டே அரசியல் பற்றி விவாதித்தார்கள். கோல்கள் போட்டு முடித்த நிலையில், அவரது தந்தை கூறினார் : 'இந்தியா பயங்கரமான ரத்த வெள்ளத்தை சந்திக்கப் போகிறது'.

தந்தையின் தொலைநோக்கினை நினைத்துப் பார்த்த இளம் அட்கின்ஸ், 'எனது தந்தை இந்தியாவை நன்கு அறிந்திருந்தார்' என்றும் எண்ணினார்.

## புது டில்லி, நள்ளிரவு 14 ஆகஸ்ட் 1947

அரசியல் நிர்ணய சபையின் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாதின் புதுடில்லி தோட்டத்தில் எரிந்துகொண்டிருக்கும் சிறிய அளவிலான நெருப்பு வன்முறையாளரின் கையால் பற்ற வைக்கப்பட்டதல்ல. வேதச் சடங்குகளின் படி ஓசை நயத்தோடு மந்திரங்களை உச்சரிக்கும் பிராமண புரோகிதர்களால் மூட்டப்பட்ட அந்த நெருப்பு புனிதமானது; தெய்வீகமானது; தூய்மையானது. அனைவருக்கும் தாயான நிலம், உயிர் அளிக்கும் நீர், ஆக்கத்தையும் அழிவையும் தரும் நெருப்பு ஆகியவை இணைந்த திரிமூர்த்தி தத்துவம் தான் இந்துமதம். இறுதிச் சடங்கானாலும் இனிய விருந்தானாலும், எந்தச் சாம்பலிலிருந்து மனிதன் பிறந்தானோ அந்தச் சாம்பலுக்குக் கடைசியாகக் கொண்டு செல்லும் கடவுளின் தூதான நெருப்பு, ஒரு இந்துவின் வாழ்க்கையில் பிரிக்க முடியாத பொருளாக இருந்தது.

'தீக்கடவுளே! அனைத்துக் கடவுள்களுக்கும் அனைத்தும் அறிந்த ஞானியர்க்கும் நீயே முதல். மனித மனத்தின் ஆழத்தில் இருப்பதைத் தூண்டி உண்மையை (பரம் பொருளை)க் கண்டறியச் செய்யும் சக்தி உன்னுடையது' என்று பிராமணப் புரோகிதர் ஒருவர் அதனருகே அமர்ந்து ஓதிக் கொண்டிருந்தார்.

அவர் திரும்பத் திரும்ப மந்திரத்தை ஓதிக் கொண்டிருந்தபோது, சுதந்திர இந்தியாவின் முதலாவது அமைச்சர்களாக விரைவில் வரவிருக்கும் கற்றறிந்த ஆண்களும் பெண்களும் விரைந்து வந்து ஹோம நெருப்பைச் சுற்றி வந்தனர். மற்றொரு புரோகிதர், அவர்கள் ஒவ்வொருவர் மீதும் சில துளி தண்ணீரைத் தெளித்தார். பிறகு அவர்கள் ஒரு பெண்ணை நோக்கி நடந்தார்கள். வெளியே நன்கு துலக்கப்பட்ட, வாயில் குருத்தோலை வைக்கப்பட்ட செம்புப் பாத்திரத்துடன் அவர் காத்திருந்தார். அந்தப் பெண்ணின் முன் அமைச்சர்கள் வந்தவுடன், வலது கை கட்டு விரலைப் பாத்திரத்துக்குள் நனைத்து விரல் நுனியில் இருக்கும் தண்ணீரில் கலந்த சிந்தூரப் பொட்டினை அவர்களின் நெற்றியில் வைத்தார். பழங்கால இந்து முறைப்படி அது 'மூன்றாவது கண்ணுக்கு' அடையாளம். திருஷ்டிப் படுவதிலிருந்தும் அவர்களுக்குத் தீங்கிழைக்க நினைக்கும் தீயவர்களிடமிருந்தும் பாதுகாக்க இந்தத் திலகம் உதவும் என்பதே அதன் பின்னால் இருக்கும் உண்மை. அவர்களுக்காகக் காத்திருக்கும் சங்கடமான சுமைகளைத் தாங்கிக் கொள்ளும் தயார் நிலையில் அந்த ஆடவர்களும் மகளிரும் கொடி தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை மண்டபத்துக்குள் வந்தனர்.

கடைசி ஆவணங்கள் கையெழுத்தாயின. கடைசிக் கடிதங்களும் சேர்க்கப்பட்டு விட்டன. உலகத்தின் மகாசக்தி வாய்ந்த அரசியல் அலுவலகங்களில் இருந்த வைஸ்ராயின் முத்திரைகள், சின்னங்கள் இத்யாதி பரிவாரங்கள் அனைத்தும் நீங்கிச் செல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது. அலுவலக அறையில் தனியாக அமர்ந்து மவுண்ட்பேட்டன் சிந்தனையில் ஆழ்ந்தார். 'இன்னும் சற்று நேரத்துக்கு நான் உலகில் மாபெரும் சக்தி வாய்ந்த மனிதனாக இருப்பேன்' என்று அவர் நினைத்தார்.

அதிசயங்கள் நிகழ்த்தும் மனிதன் (THE MAN WHO COULD DO MIRACLES) என்ற எச்.ஜி. வெல்சின் கதையை அவர் நினைத்துக் கொண்டார். ஒரு நாளைக்குத் தான் விரும்பும் அனைத்து அதிசயங்களையும் நிகழ்த்துவதற்கு சக்தி படைத்த ஒரு மனிதனின் கதை அது. 'நம்ப முடியாத அளவுக்கு அதிகாரங்களைக் கொண்ட அலுவலகத்தில் கடைசி நிமிடங்களைக் கழித்துக் கொண்டு நான் அமர்ந்திருக்கிறேன். இங்கே இருந்த மனிதர்கள் உண்மையில் எந்த அதிசயத்தையும் நிகழ்த்தும் அதிகாரம் பெற்றிருந்தார்கள். நானும் ஓர் அற்புதம் செய்ய வேண்டும். ஆனால் என்ன அந்த அற்புதம்?' மவுண்ட்பேட்டன் தனக்குள் பேசிக் கொண்டார்.

சட்டென்று அவர் நிமிர்ந்து உட்கார்ந்தார். 'பலான்பூர் பேகத்தை நான் 'ஹைனெஸ்' (அரசர், இளவரசர் போன்று அளிக்கப்படும் மேன்மையான பட்டம். மொ-ர்) ஆக்குவேன்' என்று உரத்தக் குரலில் கூறினார். உதவியாளர்களை அறைக்கு அழைப்பதற்காக உற்சாகம் அளித்த சக்தியுடன் பலமாக அழைப்பு மணியை அழுத்தினார்.

வேல்ஸ் இளவரசர் சுற்றுப்பயணம் மேற்கொண்ட காலத்திலிருந்து பலான்பூர் நவாப் மவுண்ட்பேட்டனுக்குப் பழைய நண்பர். 1945ஆம் ஆண்டு சுப்ரீம் கமாண்டராக வந்தபோது அவர் நவாபையும், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த, திறமையும் கவர்ச்சியும் மிக்க அவரது மனைவியையும் (பேகத்தையும்) சந்தித்தார். அப்போது நவாபின் பிரிட்டிஷ் அதிகாரி சர் வில்லியம் கிராஃப்ட் (Sir William Croft) மவுண்ட்பேட்டனிடம் வந்தார். நவாபின் மனைவி முஸ்லீமாகிவிட்டார்; அவர் புடைவை உடுத்துகிறார். மற்ற உள்ளூர்ப் பழக்க வழக்கங்களையும் ஏற்றுக் கொண்டு விட்டார். சிறப்பாக சமூக சேவை செய்கிறார். ஆனாலும் நவாபுக்கு ஒரு மனக்குறை இருந்தது. அந்தப் பெண் இந்தியாக்காரர் அல்ல என்பதால் வைஸ்ராய் அவருக்கு 'ஹைனெஸ்' பட்டம் வழங்கமாட்டார்.

டில்லிக்குத் திரும்பியதும் இந்த விஷயம் பற்றி வைஸ்ராய் வேவல் பிரபுவிடம் தனிப்பட்ட முறையிலேயே அணுகினார். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. லண்டன் இது போன்ற நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படிச் செய்தால் இந்திய மன்னர்கள் ஐரோப்பியர்களை மணந்து கொள்வது அதிகரித்துவிடும். இது மன்னர் பரம்பரை என்ற கருத்தையே சீரழித்துவிடும் என்று அது கருதியது.

உதவியாளர்கள் வந்தவுடன், பலான்பூர் பேகத்திற்கு 'ஹைனெஸ்' பட்டம் வழங்கி கவுரவிக்கவிருக்கும் தனது விருப்பத்தை மவுண்ட்பேட்டன் தெரிவித்தார்.

'ஆனால், நீங்கள் அதைச்செய்ய முடியாது' ஒருவர் எதிர்ப்புத் தெரிவித்தார்.

'யார் சொன்னது நான் செய்ய முடியாது என்று' மவுண்ட்பேட்டன் சிரித்தார். 'நான் வைஸ்ராயா இல்லையா?' யாராவது ஒருவர் வெளியே சென்று காகிதத்தை எடுத்து வர உத்தரவிட்டார். நவாபின் ஆஸ்திரேலிய மனைவியை 'கடவுளின் கருணையால்' 'ஹைனெஸ்' பதவிக்கு உயர்த்துவதற்கான உத்தரவை அலங்கார வார்த்தைகளுடன் அந்தக் காகிதத்தில் எழுதுமாறு செயலாளரைப் பணித்தார். எழுதப்பட்ட ஆவணம் அவரது மேசை மீது 11.58க்கு வைக்கப்பட்டது.

*தூய்மையான மகிழ்ச்சியின் அடையாளமாய் தனது முகத்தில் புன்னகை தவழ மவுண்ட்பேட்டன் பேனாவை எடுத்தார். இந்தியாவின் வைஸ்ராய் என்ற முறையில் அவர் தனது கடைசி அதிகாரபூர்வ செயலைச் செய்து முடித்தார்.**

*வெளியே ஏறத்தாழ அதே நேரத்தில் இந்தியாவின் வைஸ்ராய் என்ற முறையில் அவருக்குரிய தனிப்பட்ட, இந்திய நட்சத்திரம் பொறித்த யூனியன் ஜாக் கொடி, வைஸ்ராய் மாளிகையின் கொடிக் கம்பத்திலிருந்து இறக்கப் பட்டது.***

*மிகப் பழங்காலத்திலிருந்து, மனித நினைவுகள் கர்ணபரம்பரைக் கதைகளிலிருந்து கற்களில் செதுக்கப்பட்ட காலத்துக்குத் திரும்பும் காலத்துக்கு முன்பிருந்து, இந்தியக் கடலோரங்களில் கிடக்கும் சங்கின் ஒலிதான் விடியற்காலத்தை அறிவித்தது. இப்போது புதுடில்லியில் நிரம்பியிருந்த அரசியல் நிர்ணய சபையின் மேல் மாடத்தின் முகப்பில் காதி உடையணிந்த ஒரு மனிதர் லட்சக்கணக்கான மக்களுக்கு விடிவுகாலம் வந்துவிட்டதை*

---

மவுண்ட்பேட்டனின் இறுதிச் செயலுக்குப் பின் விளைவு இல்லாமல் போகவில்லை. ஒரு சில நாட்களுக்குப் பின் நவாபின் பிரிட்டிஷ் அதிகாரியான கிராஃப்டிடமிருந்து கவித்துவமுள்ள ஒரு குறிப்பு அவருக்கு வந்தது. 'உங்களுக்கு நான் எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும். பலான்பூருக்கு நீங்கள் செய்திருக்கும் செயல் மிகவும் தொலைநோக்குடையது; கருணைமிக்கது. நவாப் போலவே நானும் உங்களுக்கு மிகவும் நன்றியுடையவனாவேன். எப்போதாவது ஏதாவது ஒரு வகையில் உங்களுக்குச் சேவை செய்ய வேண்டிய நிலையில் நான் இருந்தால் என்னை அழைக்கத் தயங்காதீர்கள்' என்று அவர் கூறியிருந்தார்.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 1950இல் பிரிட்டிஷ் கடற்படையின் நான்காவது உயர் அதிகாரியாக இருந்தார் மவுண்ட்பேட்டன். கப்பற் படையைச் சேர்ந்தவர்களின் கட்டுப்பாட்டுக்கு மிக முக்கியமானதாகக் கருதப்படும் சில சலுகைகள் அளிக்கும் – வரியில்லாத மது வகைகள், சிகரெட்டுகள் மற்றும் சில பொருள்களை வழங்கும் – பொறுப்பு மற்றவற்றுடன் சேர்ந்து மவுண்ட்பேட்டனிடம் இருந்தது. அட்லி அரசு வலியுறுத்தியதால், இந்தச் சலுகைகளையெல்லாம் ரத்து செய்துவிட வேண்டும் என்ற விருப்பத்தை சுங்கத் துறை கலெக்டர் தெரிவித்தார். அவரது மனதை மாற்ற கப்பற்படையிலிருந்த பல அதிகாரிகளும் முயற்சி செய்தனர். ஆனால் தோல்விதான் ஏற்பட்டது. இறுதியாக தாம் ஒரு முறை முயற்சி செய்வதாக கப்பற்படை செயலாளர் சர் ஜான் லேங் (Sir John Lang)கிடம் தனது விருப்பத்தை மவுண்ட்பேட்டன் தெரிவித்தார். 'பயன் ஏற்படாது' லேங் பதிலளித்தார். 'எல்லோரும் முயற்சி செய்துவிட்டார்கள். கலெக்டர் அசைந்து கொடுக்கவில்லை. இது மிகவும் தேனவயான நிதி சம்பந்தப்பட்டதாக இருப்பதால், அமைச்சரவை மூலம் தான் வழி பிறக்க வேண்டும்.'

இருப்பினும் மவுண்ட்பேட்டன் உறுதியாக இருந்தார். இறுதியாக சுங்கத்துறை கலெக்டர் அலுவலகத்துக்குத் தாமே சென்றுவிடுவது என்று தீர்மானித்தார். அங்கே அவரை வரவேற்றது ஆச்சர்யமான வகையில் சர் வில்லியம் கிராஃப்டாக இருந்தார். 'உங்களைப் பார்ப்பது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது' என்று வியப்புடன் தெரிவித்தார் கிராஃப்ட். 'பலான்பூர் பேகத்துக்கு நீங்கள் செய்த காரியத்துக்கு நான் போதிய அளவு நன்றி செலுத்தவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்'

'ஆஹா! உங்களால் முடியும்.' என்றார் மவுண்ட்பேட்டன். கப்பற் படையின் சலுகைகள் காப்பாற்றப்பட்டன.

** இந்தக் கொடி இப்போது கடைசி வைஸ்ராயின் குடியிருப்புப் பகுதியில் உள்ள 'நார்மன் அபே ஆஃப் ரோம்சி' (Norman Abbey of Romsey) என்ற தேவாலயத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

அறிவிக்கும் சங்கினை முழங்கத் தயாராக இருந்தார். அவரது கையில் இளஞ்சிவப்பும் ஊதா நிறமும் கலந்த, பளபளக்கும் கோடுகளைக் கொண்ட, வரிச்சங்கு இருந்தது. அவர் ஒரு ஊதுகுழல் வீரர். வெள்ளைத் தொப்பியும் வெள்ளைச் சட்டையும் அணிந்து, ஒரு பேரரசின் தூண்களை வெட்டி வீழ்த்தி சுதந்திரம் அடைவதற்காக அலைந்து திரியும் பூதகணங்களைப் போல, இந்தியாவின் சந்துகளிலும் வீதிகளிலும் திரிந்த காங்கிரஸ் ராணுவத்தின் ஒரு ஊது குழல் வீரர்.

அவருக்குக் கீழே உரையாளரின் மேடையில் ஜவஹர்லால் நேரு இருந்தார். அன்றலர்ந்த ரோஜாவைத் தனது நிரந்தர சின்னமாகக் கொண்டிருந்த அவர் இப்போதும் தனது கதர் மேலாடையின் பொத்தான்களுக்கிடையே ரோஜாவைச் செருகியிருந்தார். பிரிட்டிஷாரின் சிறைகளில் இருந்த ஒன்பது ஆண்டுகள்தான் அவர் தனது சட்டையில் ரோஜா வைத்ததில்லை. அவரைச் சுற்றியிருந்த சுவர்களில், அரச மரியாதையுடனிருந்த இந்திய வைஸ்ராய்களின் எண்ணெய் வண்ண ஓவியங்கள் மாற்றப்பட்டு, அவற்றின் தங்கநிற சட்டங்களுக்குள் பச்சை, வெள்ளை, ஆரஞ்சு வண்ணங்களைக் கொண்ட கொடிகளால் நிரப்பப்பட்டிருந்தன.

அந்தச் சபையில் போடப்பட்ட பெஞ்சுகளில், நேருவைப் பார்த்தபடி, புடவை உடுத்தியவர்கள்; கதர் உடுத்தியவர்கள்; அரசவை ஆடை உடுத்தியவர்கள்; இரவு விருந்து உடையில் வந்தவர்கள் அனைவரும் வரிசைப்படி அமர்ந்திருந்தனர். இவர்கள் இன்றிரவு பிறக்கப்போகும் புதிய தேசத்தின் பிரதிநிதிகள். அங்கே இருந்த மக்கள் பல இனங்களை; சமயங்களை; பல மொழிகளை; பல கலாச்சாரங்களை கலந்து குழைத்த பன்முகத்தன்மை கொண்டவர்கள். உலகில் வேறெந்த நாட்டோடும் ஒப்பிடமுடியாத அளவுக்கு வேறுபாடுகளைக் கொண்டிருந்தனர். அவர்களின் பூமி ஆன்மீகத்தில் உயர்ந்திருந்தது. உலகிலேயே மோசமான ஒழுக்கக் கேடு நிறைந்த அவலமும் இருந்தது. புரியாதப்புதிராக மிகுந்த செல்வ வளம் கொண்ட ஒரு நாடு; அதன் நிலம் தரும் விளைச்சலை விட நிறைய விளைச்சல் தரும் (குழந்தைகள் பெறும்) மக்கள்; கடவுள்களால் ஆட்டிப் படைக்கப்பட்டது; கோரத்திலும் அழிவிலும் குறைவற்ற இயற்கைச் சீற்றங்களால் சூழ்ந்தது; கடந்த காலச் சிறப்புகளையும் நிகழ்காலக் கவலைகளையும் கொண்டது. உலகில் வேறெந்த மனிதர்களின் கூட்டத்தைவிட முரண்பாடுகளைக் கொண்ட வரிவிதிப்புப் பிரச்சனைகளால் இதன் எதிர்காலம் பெரும் சமரசத்துக்கு உட்பட்டதாய் இருக்கும். இவ்வளவு பிரச்சனைகள் இருந்தாலும், அவர்களின் இந்தியா உயர்வான வரலாற்றில் ஒன்றாக இருக்கும். மனித குலத்தின் கலாச்சாரப் பரப்பில் முந்தி நிற்கும் அடையாளச் சின்னமாகப் பளிச்சிடும்.

இந்திய நாடு ஆண்களும் பெண்களுமாக 275 மில்லியன் (27 கோடியே 50 லட்சம்) இந்துக்களையும் இவர்களில் 70 மிலியன் (7 கோடி) பேர் தீண்டத் தகாதவர்கள் - 35 மிலியன் (3 கோடியே 50 லட்சம்) முஸ்லீம்களையும்; 7 மிலியன் (70 லட்சம்) கிருத்தவர்களையும், 6 மிலியன் (60 லட்சம்) சீக்கியர்களையும், 1,00,000 பார்சிகளையும், பாபிலோனியா தாக்கப்பட்ட காலத்தில் சாலமன் தேவாலயத்தை அழித்தபோது நாட்டை விட்டு ஓடியவர்களின் வாரிசுகளான 24,000 யூதர்களையும் கொண்டதாக இருந்தது.

மண்டபத்தில் இருந்தவர்களில் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ள உள்ளூர்ப் பொது மொழி இல்லை. அவர்களின் ஒரே பொது மொழி ஆங்கிலம் மட்டுமே. அவர்களின் நாட்டில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 15 மொழிகளும் 845 வட்டார மொழிகளும் இருந்தன. பஞ்சாபில் இருந்தவர்களின் மொழியான உருது வலமிருந்து இடமாகப் படிக்கப்பட்டது. அவர்களின் அயலார்கள் மொழியான இந்தி இடமிருந்து வலமாக வாசிக்கப்பட்டது. மதராசிகளின் (சென்னை மாகாணத்தவரின், மொ-ர்) மொழியான தமிழ் சில நேரங்களில் மேலும் கீழுமாகப் படிக்கப்பட்டது. பல வட்டார மொழிகள் எகிப்திய அரண்மனையின் ஒப்பனை வடிவங்கள் போல எழுதப்பட்டன. அவற்றின் அடையாளங்கள் ஒரே மாதிரியாக இல்லை. தென் பகுதியில் உள்ள மதராசைச் சேர்ந்த கருப்பு நிறத்தினர் தலையை ஆட்டினால் அதற்கு 'ஆம்' என்று பொருள். வடக்கே உள்ள வெளிர் நிறத்தினரின் அதே அசைவுக்கு 'இல்லை' என்று பொருள்.

இந்தியாவில் ஸ்விட்சர்லாந்து மக்கள் தொகை அளவுக்குத் தொழு நோயாளிகளும் பெல்ஜியம் நாட்டு மக்கள் தொகை அளவுக்குப் புரோகிதர் களும் ஹாலந்து மக்கள் அளவுக்குப் பிச்சைக்காரர்களும், 11 மிலியன் (ஒரு கோடியே பத்து லட்சம்) சாதுக்களும், 20 மிலியன் (2 கோடி) தொல்குடியினரும் இருந்தனர். நாகாலாந்தைச் சேர்ந்த நாகர்கள் இப்போதும் மனிதத் தலைகளை வேட்டையாடி துண்டித்தார்கள். 10 மிலியன் (1 கோடி) இந்தியர்கள் நாடோடி களாக இருந்தார்கள். பரம்பரைத் தொழில்களைச் செய்த பாம்பாட்டிகள், ஜோசியர்கள், ஊர் சுற்றிகள், செப்படிவித்தைக்காரர்கள், மாயமந்திர வித்தைக் காட்டுபவர்கள், தண்ணீர் கண்டுபிடிப்பவர்கள், கயிற்றின் மேல் நடக்கும் கழைக் கூத்தாடிகள், மூலிகை விற்போர் ஆகியோர் இவர்கள். இதனால் இவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று கொண்டிருந்தார்கள். நாள்தோறும் 38 ஆயிரம் இந்தியர்கள் பிறந்தார்கள். இவர்களில் கால்வாசிப்பேர் ஐந்து வயதுக்கு முன்பே இறந்துவிட்டனர். சத்துணவின்மை, ஊட்டச் சத்துக் குறைவு, உலகின் பகுதிகளில் ஒழிக்கப்பட்டுவிட்ட பெரியம்மை போன்ற நோய்கள் ஆகிய வற்றால் ஒவ்வொரு ஆண்டும் மேலும் 10 மிலியன் (ஒரு கோடி) இந்தியர்கள் இறந்தனர்.

அவர்களின் மகத்தான துணைக்கண்டம் உலகத்தின் மிகப்பெரிய ஆன்மீகப் பகுதியாகும்; புத்தமதம் என்ற மிகப்பெரும் மதத்தின் பிறப்பிடமாகும்; இந்து மதத்தின் தாயகம் இது; இஸ்லாமின் பாதிப்பும் ஆழமாக உள்ளது; இந்த நாட்டில் ஏராளமான கடவுள்களின் அணிவகுப்பு பல வடிவங்களிலும், உருவங்களிலும் இருந்தன; சமயச் சடங்குகள், யோகா, மன உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் ஆழ்நிலை தியானம், விலங்குகளைப் பலியிடுதல், வனங்களில் உள்ள கோயில்களில் நடக்கும் முன்றகேடான காமக் களியாட்டங்கள் எனப் பல வகைப்பட்டிருந்தன. இந்து மதத்தில் 3 மிலியன் (30 லட்சம்) கடவுள்கள் இருந்தனர். புராணக் கதைகளுக்கும் கற்பனை செய்யும் ஒவ்வொரு தேவைக்கும் ஏற்ப இவை இருந்தன. நடனம், கவிதை, பாட்டு, இறப்பு, அழிவு, நோய் ஆகியவற்றுக்குக் கடவுள்களோ பெண் தேவதைகளோ இருந்தனர். மார்க்காய் தேவி (Markai Devi) போன்ற பெண் தேவதைகளின் காலடியில் காலரா என்ற தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக வெட்டப்பட்ட ஆடுகள் கிடந்தன.

காம நுகர்வுக்கான திறனை அளிக்குமாறு தேவேந்திரன் போன்ற கடவுள்கள் இறைஞ்சப்பட்டன. காமச் சித்திரங்கள் இந்தியாவின் பல முக்கிய கோயில்களில் இடம் பெற்றிருந்தன. ஆலமரங்களிலும் கடவுள்கள் இருந்தன. இந்தியாவின் புராண காவியங்களின் நாயகர்களான 136 மிலியன் (13 கோடியே 60 லட்சம்) குரங்குகள் இருந்தன. 200 மிலியன் (20 கோடி) புனித பசுக்கள் இருந்தன. பாம்புகள் குறிப்பாக நாகப்பாம்புகள் கடவுளாக வழிபடப்பட்டன. இவற்றின் விஷத்துக்கு ஆண்டுக்கு 20,000 மனிதர்கள் பலியானார்கள். பண்டையப் பாரசீகத்தில் தீயை வணங்கியவர்களின் பரம்பரையில் வந்த சொராஸ்ட்ரியர்கள், இந்து மதத்திலிருந்து பிரிந்த சமணர்கள் உட்பட பல பிரிவினர் இந்தியாவில் இருந்தனர். உலகிலேயே மிகவும் குறைந்த வாழ் நாளுடைய இந்த நாட்டிலிருந்த சமணர்கள் அனைத்து உயிர்களும் புனிதமானவை என்பதால் மாமிசத்தையும் பெரும்பாலான காய்கறிகளையும் அவர்கள் சாப்பிடுவதில்லை. எந்த ஒரு சிறு பூச்சியையும் மூச்சுக்காற்றால் உறிஞ்சிக் கொன்றுவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் முகத்தில் மெல்லிய துணியாலான முகமூடி அணிந்தே நடக்கிறார்கள்.

உலகத்தின் மிகப்பெரிய பணக்கார மனிதர்களும், வாழ்க்கையின் எல்லையில் 300 மிலியன் (30 கோடி) விவசாயிகளும் இருந்தார்கள். பூமியின் வளமான நாடுகளில் ஒன்றான இது வறுமை மிகுந்த நாடுகளில் ஒன்றாகவும் இருக்கிறது. இந்தியாவின் மக்கள் தொகையில் 83 சதவீதம் பேர் எழுத்தறிவில்லாதவர்கள். இங்குள்ளவர்களின் தனிநபர் வருமானம் நாளொன்றுக்கு சராசரியாக 5 சென்ட் (Cent)கள். இந்தியாவின் இரண்டு பெரிய நகரங்களில் உள்ள மக்களில் கால்பங்கு மக்கள் உண்பதும், உறங்குவதும், மலம் கழிப்பதும், உடலுறவு கொள்வதும், இறந்து போவதும் திறந்த வெளியான வீதிகளில்தான். இந்தியாவில் ஆண்டுக்கு சராசரி 114 சென்டி மீட்டர் மழை பெய்கிறது. ஆனால் அது நேரத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப சமமானதாக இல்லை. பெரும்பாலும் மழை பொழிவது மழைக்காலத்தில்தான். இதில் மூன்றில் ஒரு பங்கு பயன்படுத்தப்படாமலேயே கடலில் கலக்கிறது. இந்தியாவின் 3,00,000 சதுர கிலோ மீட்டர் பரப்பில், ஜெர்மனி அளவுள்ள பரப்பில், மழையே பெய்வதில்லை. மற்ற பகுதிகளிலோ ஏராளமான தண்ணீர். நிலத்தின் பெரும்பகுதி உப்புச் சவராக இருப்பதால் விவசாயம் செய்வதில் பெரும் பிரச்சனை உள்ளது. உலகின் மிகப்பெரிய தொழிலதிபர்களின் குடும்பங்களில் மூன்று இந்தியாவில் உள்ளன. இவை டாடாக்கள், பிர்லாக்கள், டால்மியாக்களின் குடும்பங்கள். இந்தியாவின் பொருளாதாரம் ஒரு சில செல்வச் செழிப்பு மிக்க நிலப்பண்ணையார்களுக்கும் பெரு முதலாளிகளுக்கும் பயன்தரும் சொத்துடைமை சார்ந்ததாக இருந்தது.

இந்தியாவை ஆண்ட எதேச்சதிகார ஆட்சியாளர்கள் இந்தியாவைத் தொழில்மயமாக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இந்தியாவின் ஏற்றுமதி பெரும்பாலும் சணல், தேயிலை, பருத்தி, புகையிலை என விள்ளபொருள்களாகவே இருந்தன. எந்திரங்கள் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்டன. இந்தியாவில் நபர்வாரி மின்சாரப் பயன்பாட்டின் அளவு நகைப்புக்குரிய வகையில் மிகக்குறைவு. அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது இது இருநூறில் ஒரு பங்குதான். உலகின் இரும்புத்தாது வளங்களில் குறைந்தது பத்தில் ஒரு பங்கு இந்திய மண்ணில் இருந்தது. ஆனால் அதன் எஃகு உற்பத்தி ஆண்டுக்கு வெறும் ஒரு மிலியன் (10 லட்சம்) டன் தான். இந்தியக் கடற்கரையின்

நீளம் 3800 மைல். மீன்பிடி தொழில் மிக முக்கியமானது. ஆனாலும் ஆண்டுக்கு சராசரியாக ஒரு நபருக்குக் கிடைத்த மீனின் அளவு ஒரு பவுண்டுதான்.

டில்லியின் நாடாளுமன்ற மண்டபத்து பெஞ்சுகளில் எதிர்பார்ப்புகளுடன் அமர்ந்திருக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்தப் பிரச்சனைகள் எல்லாம் தங்களைவிட்டுப் பிரிந்து செல்லும் காலனியாட்சியாளர்கள் விட்டுச் செல்வதாகவே தோன்றியிருக்க வேண்டும். ஆனால் அவர்களுக்கு அப்படிப் பட்ட சிந்தனை இல்லை. மாறாக, இந்தியாவின் முந்தைய ஆட்சியாளர்கள் பற்றிய நல்லெண்ணமே அவர்களிடம் நிறைந்திருந்தது. எப்படியோ இவர்கள் வெளியேறுவதன் மூலம் இதுவரை இந்தியாவைத் துன்புறுத்திய பெரும் சுமை குறையப்போகிறது என்றே நம்பினார்கள்.

எந்த மனிதரின் தோள்களில் இந்த பாரம் முழுவதும் ஏறப் போகிறதோ அந்த மனிதர் இப்போது பேச எழுந்தார். லாகூரிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்ததற்குப் பின்னால் ஜவஹர்லால் நேருவுக்கு உரையைத் தயாரிக்க நேரமும் இல்லை; ஈடுபாடும் இல்லை. அவரது வார்த்தைகள் தன்னெழுச்சியாகவும் இதயத்தைத் தொடுவதாகவும் இருந்தன.

'பல ஆண்டுகளுக்கு முன்பே நாம் ஒரு தீர்மானத்துடன் நம்மை ஈடுபடுத்திக் கொண்டோம். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் நேரம் இப்போது நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஒட்டு மொத்தமாக அல்லது பெருமளவினதாக இல்லையென்றாலும் மிகவும் உண்மையானதாக அது இருக்கும். உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் நள்ளிரவு நேரத்தில் இந்தியா வாழ்வுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் விழித்துக் கொள்கிறது' என்று அவர் அறிவித்தார். அவரது உதடுகளிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக வார்த்தைகள் வந்து விழுந்தன. ஆனால் மிக முக்கியமான அந்தத் தருணத்தில் ஜவஹர்லால் நேருவின் உரை சாதனை நிகழ்த்தக் கூடியதாக அமையவில்லை. 'நான் என்ன சொல்லிக் கொண் டிருந்தேன் என்பது எனக்கே தெரியாது. வாயிலிருந்து வார்த்தைகள் வந்து கொண்டிருந்தனவே தவிர எனது மனம் முழுவதும் பற்றி எ்ரியும் லாகூரின் பயங்கரக் காட்சியிலேயே லயித்திருந்தது' என்று பின்னாளில் அவரது சகோதரியிடம் நேரு கூறினார்.

'ஒரு சந்தர்ப்பம் வருகிறது' நேரு பேச்சைத் தொடர்ந்தார். 'அந்த சந்தர்ப்பம் வரலாற்றில் மிகவும் அரிதானது. நாம் பழையதிலிருந்து புதியதில் அடியெடுத்து வைக்கிறோம்; ஒரு சகாப்தம் முடிவடைகிறது; நெடுங்காலம் அடக்கி வைக்கப்பட்ட ஒரு தேசத்தின் ஆன்மா இப்போது பேசப் போகிறது.

'வரலாற்றின் விடியலில் இந்தியா தனது முடிவில்லா ஆய்வைத் தொடங்கி யுள்ளது. அதன் பாதையறியாப் பல நூற்றாண்டுகள் முயற்சிகளாலும் வெற்றிகளாலும் தோல்விகளாலும் நிறைந்தவை. நன்மைகளுக்கும் தீமைகளுக்கும் இடையே தேடலை ஒருபோதும் விட்டுவிடவில்லை; அல்லது தனக்குப் பலமளித்த சிந்தனைகளை மறந்துவிடவில்லை. துரதிருஷ்டமான காலத்தை இன்று நாம் முடிக்கிறோம். இந்தியா சுயமாக தன்னைத் தானே கண்டறிந்து கொள்கிறது.

'அற்பமான அழிவு தரும் விமர்சனங்களுக்கு இது நேரமல்ல. மனக் கோணலுக்கும் மற்றவர்களைக் குற்றம் சொல்வதற்கும் இது நேரமல்ல. சுதந்திர இந்தியாவில் அதன் அனைத்து மக்களும் வாழ்வதற்குரிய பெருந்தன்மையான

இல்லத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது' என்று உரையை முடித்தார்.

நள்ளிரவின் மணி ஒலிக்கும் போது, அனைவரும் எழுந்து இந்தியாவுக்கும் இந்திய மக்களுக்கும் சேவை செய்யத் தாங்களாகவே உறுதி மொழியேற்குமாறு நேரு கோரினார். வெளியே அந்த நள்ளிரவின் வானத்தில் இடி முழக்கங்களின் ஒலியலைகள் பரவின. அந்த மண்டபத்தைச் சுற்றிலும் நெருக்கியடித்துக் கொண்டிருந்த ஆயிரக்கணக்கான சாமான்ய இந்தியர்கள் மேல் பருவ மழை பொழிந்தது. மிதிவண்டிகளைப் பற்றிக்கொண்டு, வெள்ளை நிற காங்கிரஸ் குல்லாக்களுடனும், உள்நாட்டுப் பருத்தியால் தயாரித்த தொளதொளப்பான கழுத்தில்லாத உடையுடனும் (ஜிப்பாக்களுடனும். மொ-ர்) வெள்ளைச் சட்டைகளுடனும், புடவைகளுடனும், வியாபார ஆடைகளுடனும், கொட்டும் மழையிலும் சிதறாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தனர். வரவிருக்கும் வளமிக்க சந்தர்ப்பத்துக்காக ஏங்கி அவர்கள் அசைவற்று நின்றிருந்தனர்.

அந்த மண்டபத்தில் அவைத் தலைவரின் இருக்கைக்கு மேலிருந்த கடிகாரத்தில் 12 என்பதைக் குறிக்கும் ரோமன் எழுத்துகளின் (XII) மேல் இரண்டு முள்களும் இருந்தன. அங்கிருந்த பிரதிநிதிகள் தியானம் செய்வது போல் தலைகளைக் குனிந்து மவுனம் சாதித்தனர். நள்ளிரவின் மணியொலிக்காக அவர்கள் காத்திருந்தனர். ஒரு நாளும், அத்துடன் ஒரு சகாப்தமும் முடிந்ததைக் குறிக்கும் வகையில் பலமாக பன்னிரெண்டு மணிகள் அடித்தபோது அனைவரும் அசைவற்றிருந்தனர்.

பன்னிரெண்டாவது மணி ஒலித்து ஓய்ந்தபோது, மேல் மாடத்தில் நின்றிருந்த ஒருவரிடமிருந்து ராகமற்ற ஒலி எழுந்து பரவியது. பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் பல பகுதிகளிலும் ஒலித்த புராதன ஒலியாகும் அது. சங்கின் அந்த முழக்கம், தங்களின் நாடு பிறப்பெடுத்துவிட்டதைக் குறிக்கும் பேரிகையாக, இந்திய அரசியல்வாதிகளுக்கு இருந்தது. உலகத்துக்கோ, ஒரு சகாப்தத்தின் முடிவை அறிவிப்பதாக இருந்தது.

1492இல் கோடை காலத்தின் ஒரு இனிய நாளில் ஸ்பெயின் நாட்டு சிறிய துறைமுகத்தில்தான் அந்தச் சகாப்தம் தொடங்கியது. அப்போதுதான் இந்தியாவைக் கண்டுபிடிப்பதற்காக எல்லையற்ற நீலக்கடல் பரப்பினூடே உலகத்தின் விளிம்பை நோக்கிய தனது கப்பற் பயணத்தை கிருஸ்டோபர் கொலம்பஸ் துவக்கினார். ஆனால் தவறுதலாக அவர் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். இந்தக் கண்டுபிடிப்பு மனிதகுல வரலாற்றில் நாலரை நூற்றாண்டு காலத்துக்கு ஆதிக்கம் செலுத்தியது. பொருளாதாரம், சமயம், உலகைச் சுற்றியுள்ள வெள்ளை இனத்தவரல்லாத மக்கள் மீதான வெள்ளை இன, மேற்கத்திய, கிருத்தவ மக்களின் சுரண்டல் ஆகியவற்றிலும் விளைவுகளை உருவாக்கியது. ஆஸ்டெக்கியர் (Aztec), இன்காவினர் (Inca), ஸ்வாஹிலிக் கள்(Swahili), எகிப்தியர்கள், இராக்கியர்கள், ஹாட்டென்டாட்டுகள் (Hottentot), அல்ஜீரியர்கள், பர்மாக்காரர்கள், பிலிப்பைன்ஸ் நாட்டினர், மொராக்கோ நாட்டினர், வியட்நாமியர்கள் என கணக்கற்ற மக்கள், நாடுகள், நாகரிகங்கள், 450 ஆண்டுகளுக்கும் மேலாக காலனியாதிக்க அனுபவங்களைப் பெற்றன.

. அவை பெரும் பகுதியை அழித்தன; மேம்படுத்தின; கல்வி பெறச் செய்தன; மத மாற்றம் செய்தன; பண்பாட்டு ரீதியில் வளமடையச் செய்தன அல்லது சீரழித்தன. பொருளாதார ரீதியில் சுரண்டப்பட்டன அல்லது மேன்மை யடைந்தன. இறுதியாக மாற்ற முடியாத மாற்றங்களுக்கு உட்படுத்தின.

பல நூற்றாண்டுகளாய்ப் பாடுபட்டு பேரரசை உருவாக்கியவர்களிடமிருந்து வறுமையில் வாடும் மக்களைக் கொண்ட ஒரு கண்டம் சுதந்திரம் கோரி நிற்கிறது. ரோம், பாபிலோன், கார்தேஜ் (Carthage), கிரேக்கம் ஆகிய பேரரசுகளையே மக்கள் தொகையிலும், முக்கியத்துவத்திலும் குறைபாடுடைய தாகச் செய்தது அது. பிரிட்டிஷ் பேரரசின் மணிமுடியில் இருந்த மாணிக்கம், அதற்குரிய ஆசியர்களின் பழுப்பு நிறக் கைகளால் பறிக்கப்பட்டபின் வேறெந்த காலனி ஆதிக்கமும் நீடித்திருக்க முடியாது. வரலாற்றின் பேரெழுச்சியைத் தடுக்க அவர்களின் ஆட்சியாளர்கள் வார்த்தை ஜாலங்கள் மற்றும் ஆயுதங்கள் மூலம் முயற்சி செய்யக்கூடும். ஆனால் அவை முறியடிக்கப்படும். இந்தத் தருணம், அத்தகைய முட்டாள்தனமான செயல்கள் தோல்வியையே தழுவும் என்பதைக் காட்டியது. இந்தியாவின் சுதந்திரம் மனிதகுல அனுபவத்தில் ஒரு அத்தியாயத்தை மாற்ற முடியாத வகையிலும், நிச்சயமாகவும் முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. புதுடில்லியில் அரசியல் நிர்ணய சபையில் அந்த ஆகஸ்ட் மாத நள்ளிரவில் எழுந்த சங்க நாதம், உலகின் யுத்தத்துக்குப் பிந்தைய வரலாற்றின் துவக்கத்தைக் குறித்தது.

நாடாளுமன்ற மண்டபத்துக்கு வெளியே மழை நின்று போனது. மக்கள் மனதில் மகிழ்ச்சி ததும்பியது. நேரு அங்கே காட்சியளித்தபோது, சந்தோஷ மடைந்த ஆயிரக்கணக்கான மக்கள் முண்டியடித்து முன்னேறினார்கள். அவரைச் சூழ்ந்து கொள்வார்களோ என்ற அச்சம் தோன்றியது. நேருவுக்குப் பின்னாலிருந்த அமைச்சர்கள் சங்கடப்பட்டனர். அந்த மக்களைப் பின்னுக்குத் தள்ள குறைந்த அளவிலான காவலர்கள் முயற்சி செய்வதைக் கவனித்த நேருவின் முகத்தில் விசாலமான புன்னகைப் படர்ந்தது.

அவருக்கு அருகே நின்றிருந்த உதவியாளர் ஒருவரிடம் அவர் கூறினார். 'சரியாகப் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் லண்டனில், வைஸ்ராய் லின்லித்கோ (Linlithgow)வுடன் நான் சண்டையிட்டது உனக்குத் தெரியுமா? நான் வெறிபிடித்தவன் போல் சத்தமிட்டேன். பத்து ஆண்டுகளுக்குள் நாங்கள் சுதந்திரம் பெறாவிட்டால் நான் அழிந்து போகிறேன்' என்றேன். 'இல்லை உங்களால் முடியாது' என்று அவர் பதிலளித்தார். புன்னகையுடன் பிரதர் நினைவு கூர்ந்தார்: 'மிஸ்டர் நேரு! என் காலத்தில் மட்டுமல்ல உங்கள் காலத்திலும் இந்தியா சுதந்திரம் அடையாது' என்றும் அவர் கூறினார்.

★

பிரிட்டிஷ் பேரரசு என்ற மகத்தான, குற்றவுணர்வுள்ள வடிவம் இப்போது இல்லை. புதுடில்லியின் அரசியல் நிர்ணய சபைக்கு அப்பால், பரந்து விரிந்த இரண்டு புதிய பகுதிகளிலும் மகிழ்ச்சிகரமான மாற்றங்களைக் குறிக்கும் சங்க நாதம் எதிரொலித்தது. மகிழ்ச்சியிலும் ஆயிரம் சிறு சிறு கேளிக்கைகளிலும் மக்கள் திளைத்தனர். பம்பாயில் இதுவரை [illegible]

செலுத்திய பம்பாய் படகு கிளப் வாசல் கதவுகளில் ஒரு காவலர் 'மூடப்பட்டது' என்ற பலகையை ஆணியடித்து மாட்டிக் கொண்டிருந்தார். மூன்று தலை முறைகளாக ஐரோப்பிய ஆண்களும் பெண்களும் உள்ளூர்க்காரர்களின் தொந்தரவில்லாமல் விஸ்கி அருந்தி உல்லாசமாக இருந்த அந்த இடம் இனிமேல் இந்தியக் கடற்படை வீரர்களின் உணவு விடுதியாகப் போகிறது.

கல்கத்தா நகரின் முக்கியமான இடங்களில் ஆர்வம் மிக்கக் கைகள் வெள்ளையர்களின் அடையாளங்களை அழித்துக் கொண்டிருந்தன. கிளைவ் சாலை சுபாஷ் சாலையானது. இரண்டாவது உலகப்போரின்போது பிரிட்டனுக்கு எதிராக ஜப்பானுடன் கூட்டுச் சேர்ந்த இந்திய தேசியவாதியின் பெயர் தான் சுபாஷ். சிம்லாவில் இதுவரை இந்தியர்களை அவர்களின் பாரம்பரிய உடையில் அனுமதிக்காத மால் என்ற வீதியில் அந்த நள்ளிரவில் நூற்றுக்கணக்கான இந்தியர்கள் வேட்டியும் சட்டையும் அணிந்து சிரித்துக் கொண்டே ஓடினார்கள். கல்கத்தாவில் ஃபிர்போ (Firpo), லாகூரில் ஃபாலெட்டி (Falletti), பம்பாயில் தாஜ் ஆகிய ஓட்டல்களில் இரவு விருந்துக்கான உடைகளிலும், மாலை நேர அங்கிகளிலும் வரும் விருந்தினர்களுக்கென்றே ஒதுக்கப்பட்ட கூடங்களிலும், நடன அரங்குகளிலும் நூற்றுக்கணக்கானவர்கள் புகுந்து ஆக்ரமித்துக் கொண்டனர்.*

விளக்குகள் அலங்கரிப்புடன் டில்லியில் விழா கொண்டாடப்பட்டது. சிக்கனமான கடின உழைப்பு நிறைந்தத் தலைநகரம் அன்று விளக்குகளால் ஒளி வீசியது. புதுடில்லியில் கன்னாட் சர்க்கஸ் (Connaught Circus), பழைய டில்லியின் குறுகலான சந்துகள் ஆகிய இடங்களில் பச்சை, காவி மற்றும் வெள்ளை வண்ண சர விளக்குகள் தொங்கிக் கொண்டிருந்தன. கோயில்கள், மசூதிகள், சீக்கியர்களின் குருத்வாராக்கள் ஆகியவற்றின் சுவர் விளிம்புகள் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இதே போல், மொகலாயச் சக்கரவர்த்திகளின் செங்கோட்டையும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. புதுடில்லியின் புத்தம் புது கோயிலான, பிர்லா மந்திரின் வளைவுகளுடன் கூடிய கூம்புகளில் வண்ண விளக்குகள் தொங்கின. இது பவேரியாவின் (Bavaria) லுத்விக் (Ludwig) போலவே அங்கு சென்றவர்களுக்குத் தோன்றியது. காந்தி அடிக்கடி சென்று தங்கிய தீண்டத்தகாதவர்கள் வாழ்ந்த பங்கி காலனி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு சுதந்திர தினப் பரிசு ஒன்று கிடைத்தது. அங்கிருந்த துயரம் மிகுந்த மக்களில் பலரும் அறியாத ஒன்று அது விளக்கு. புது சுதந்திரம் பெற்று விட்டதைக் கொண்டாடும் வகையில் அவர்களின் குடிசைகளில் ஏற்றி வைக்க மினுக் மினுக்கென்றெரியும் மெழுகுவர்த்திகளையும், சிறிய எண்ணெய் விளக்கு களையும் நகராட்சி வழங்கியிருந்தது. தங்களுக்குத் தாங்களே வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு உற்சாகமாக நடக்கவும், மகிழவும், பாடவும் மத்திய டில்லிப் பகுதியை நோக்கி ஏராளமான மக்கள் மிதிவண்டி களிலும், டோங்கா வண்டிகளிலும், கார்களிலும், விலை மதிப்புள்ள வெல்வெட் துணிபோர்த்திய யானை மீதும் சென்றார்கள். கன்னாட் ப்ளேசின் (Connaught Place) உணவு

* பொது இடங்களுக்கு வரும் விருந்தினர்கள் பிரிட்டிஷ் அரசுக்கு மிகவும் பிடித்தமான இரவு விருந்து உடையில்தான் வரவேண்டும் என்பதை நிராகரிக்கும் வகையில் அரசியல் சட்டத்தில் ஒரு பிரிவையே ஏற்படுத்தலாம் என்று கூட அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர் ஒருவர் விரும்பினார்.

விடுதிகளிலும் விருந்துக் கூடங்களிலும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. டில்லிக்கு மிகவும் அறிமுகமான வெள்ளுடை அணிந்த அதிகார வர்க்கப் பெரும்படையின் ஒவ்வொரு உறுப்பினரும் நடைபாதைகளின் பக்கம் ஈர்க்கப்பட்டனர்.

டில்லியில் முந்தைய ஆட்சியாளர்களின் சரணாலயமாக இருந்த இம்பீரியல் ஓட்டலின் மது அருந்தும் பகுதி இப்போது இந்தியர்களால் மொய்க்கப் பட்டிருந்தது. நள்ளிரவுக்குப் பிறகு அந்தக் கூட்டத்திலிருந்து ஒருவர் மேடை மீது ஏறி அவர்களின் புதிய தேசிய கீதத்தைத் தன்னோடு சேர்ந்து பாடுமாறு அழைத்தார். அவர்களும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள். இந்தியாவின் மகாகவி தாகூர் எழுதிய அந்த கீதத்தைக் கூட்டாகப் பாடத் தொடங்கினார்கள். அவர்களில் பலர் ஒழுங்கீனத்தை உணர்ந்தார்கள். ஏனெனில் அவர்களுக்கு தேசிய கீதத்தின் பல வார்த்தைகள் தெரியவில்லை.

பழைய டில்லியில் மிகவும் புகழ் பெற்ற மெய்டன் (Maiden) ஓட்டலில் அழகான ஒரு இந்தியப் பெண், புடவையணிந்து மேசை மேசையாகச்சென்று நடனமாடிக் கொண்டிருந்தார். அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் அதிர்ஷ்டத்தின் அறிகுறியாக உதட்டுச் சாய டியூபின் மூலம் நெந்றியில் சிவப்புத்திலகமிட்டார்.

கன்னாட் சர்க்கஸ் அருகே உள்ள சுகமான நிழல் தரும் தோட்டம் ஒன்றில் கர்த்தார் சிங் (Kartar Singh) என்ற பத்திரிகையாளர் தனது நாட்டின் சுதந்திரத்தை ஆழமான சொந்த வாழ்க்கை நிகழ்ச்சியுடன் கொண்டாடினார். சில நாட்களுக்கு முன் சந்தித்த அழகான மருத்துவ மாணவியான ஆயிஷா அலி (Aisha Ali)யை முதன் முறையாக முத்தமிட அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார். நீண்ட நேரத்துக்கும், இன்பமாகவும், முதல் முறையாகவும் அவர்கள் கட்டித் தழுவிக் கொண்டு காதல் கதையைத் துவக்கிய நேரம் அபசகுனமான காலமாகும். வடக்கு இந்தியப் பகுதியை மூழ்கடித்துக் கொண்டிருந்த ஒருதலைப்பட்சமான உணர்வுகளுக்கு நேர்மாறாக இருந்தது இவர்களின் உணர்வு. கர்த்தார் துகால் சிங் ஒரு சீக்கியர். ஆயிஷா அலி ஒரு முஸ்லீம் பெண்.

சுதந்திர தின இரவின் கொண்டாட்டங்கள் தவிர, வரவிருக்கும் சூறாவளியின் நிழல்களும் தலைநகரின் சில பகுதிகளில் ஏற்கெனவே படியத் துவங்கிவிட்டன. பழைய டில்லியில் உள்ள பெரும்பாலான முஸ்லீம்கள், முஸ்லீம் லீகின் தீவிர உறுப்பினர்கள் முன் வைத்த புதிய கோஷத்தை முணுமுணுக்க ஆரம்பித்து விட்டார்கள். 'உரிமையால் பாகிஸ்தானை நாம் பெற்றோம் - பலத்தின் மூலம் இந்துஸ்தானை நாம் அடைவோம்' முஸ்லீம்கள் பல நூற்றாண்டு காலம் டில்லியை ஆண்டவர்கள். 'இஷாலெல் (Ishallel) அல்லாவின் விருப்பம்' 'மீண்டும் அவர்கள் ஆள்வார்கள்' என்று பழைய டில்லியின் மசூதி ஒன்றின் பிரார்த்தனைக் கூட்டத்தில் முல்லா ஒருவர் பழையதை நினைவு கூர்ந்து நம்பிக்கையுடன் தெரிவித்தார். இதற்கிடையே பஞ்சாபிலிருந்து வந்த இந்து மற்றும் சீக்கிய அகதிகள் டில்லியைச் சுற்றி அமைக்கப்பட்ட தற்காலிக முகாம்களில் வந்து குவிந்தனர். இது தலைநகரில் இருந்த முஸ்லீம்கள் சுதந்திர தின விழாவைக் கொண்டாட முடியாமல் அச்சத்தை ஏற்படுத்தியது.

மவுண்ட்பேட்டனின் பிரிவினைத் திட்டத்தை மாற்றியமைத்த புத்திசாலித்தனமான அதிகாரியும், இந்தியாவுடன் பல மன்னர்களை

இணைத்தவருமான வி.பி.மேனன் (V.P.Menon) அந்த நள்ளிரவில் தனது இளம் மகளுடன் வரவேற்பு அறையில் அமர்ந்திருந்தார். சங்குகள் முழங்கும் சத்தமும் மக்கள் கூட்டத்தின் மகிழ்ச்சி ஆரவாரமும் அவர்களின் கவனத்தை ஈர்த்தன. அப்போது மேனனின் மகள் ஓடிச் சென்று தனது மகிழ்ச்சியையும் வெளிப் படுத்தினாள். அவரின் தந்தை அசையாமல் நாற்காலியில் அமர்ந்திருந்தார் அவரின் முகத்தில் மகிழ்ச்சி ஏதும் இல்லை.

'நமக்குப் பெருந்தொல்லைகள் உண்மையில் இப்போது துவங்கிவிட்டன' என்று கூறி அவர் பெருமூச்சு விட்டார்.

இருப்பினும், துணைக்கண்டத்தின் பல லட்சக்கணக்கான மக்களுக்கு ஆகஸ்ட் 14 நள்ளிரவு நீண்ட 24 மணி நேர விருந்து நிகழ்ச்சியின் தொடக்கமாகவே தோன்றியது. கைபர் பகுதியில் உள்ள லேண்டி கோடால் கோட்டையில் கொழுந்து விட்டெரிந்த ஒரு டஜன் அடுப்புகளில் முழு ஆட்டினைப் பொரித்து எடுத்தனர். பாரம்பரியப் பகைவர்களான பத்தான் பழங்குடி மக்களும் கைபர் ரைஃபிள் படையின் அதிகாரிகளும் வீரர்களும் அன்று பழங்குடியின முறையில் விருந்து வைத்துக் கொண்டாடினார்கள். துணைத்தளபதியும் சிறப்பு விருந்தினருமான கேப்டன் கென்னத் டேன்ஸுக்கு, உணவில் மிகவும் சிறப்பானதான, வெள்ளாட்டின் கொழுப்பு நிறைந்த மஞ்சள் நிறக் குடல் பகுதிகள் மூடிய ஈரலை கமாண்டிங் அதிகாரி பரிமாறினார். நள்ளிரவில், உணர்ச்சிவயப்பட்ட பழங்குடி மக்கள், படையினரின் துப்பாக்கிகளைத் திருடிக் கொண்டு 'கைபர் எங்களுடையது, கைபர் எங்களுடையது' என்று கூச்சலிட்டபடி வானத்தை நோக்கிச் சுட்டனர்.

சிப்பாய்க் கலகம் நடந்த காலத்தில் படுகொலைகளால் நினைவில் கொள்ளப்பட்டு ஆறாதத் தழும்பாயிருந்த கான்பூர் நகரில் ஆங்கிலேயர்களும் இந்தியர்களும் பொது இடங்களில் கட்டித்தழுவிக் கொண்டனர் அகமதாபாதில், காந்தி தனது முதலாவது இந்திய ஆசிரமத்தை எங்கே துவக்கினாரோ அந்த ஜவுளித் தொழில் நகரின் டவுன்ஹால் மைதானத்தில் தேசியக் கொடியேற்றும் கவுரவம் ஒரு இளம் பள்ளி ஆசிரியருக்குக் கிடைத்தது இவர் 1942ஆம் ஆண்டு இந்தியாவின் கொடியை ஏற்ற முயற்சி செய்ததற்கா சிறைத் தண்டனை பெற்றவர்.

லக்னோவில் அரசு இல்லத்தில் நள்ளிரவில் கொடியேற்றுவதற்காக ஏராளமானவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். 'தேசிய உடை வேட்டிகள் பொருத்தமாக இருக்கும்' என்று அழைப்பிதழ்களில் பொறிக்கப்பட்டிருந்தது இதைப்படித்த ராஜேஸ்வர் தயாள் அதிர்ச்சியடைந்தார். ஒரு இந்தியரான இவர் பதினான்கு ஆண்டுகள் ஐ.சி.எஸ் அதிகாரியாக இருந்தவர் அவரிடம் ஒரு வேட்டி கூட சொந்தமாக இல்லை. இத்தகைய விழாக்களுக்கு அவரின் பிரிட்டிஷ் மேலதிகாரிகள் நிச்சயமாக வெள்ளை சூட் மற்றும் டையுடன் தான் வருவார்கள். வரவேற்பு நிகழ்ச்சி கூட அரசின் கறாரான விதிமுறைகளுக்கு உட்பட்டு வித்தியாசமானதாகவே இருக்கும். கதவுகள் திறக்கப்பட்டவுடன் அங்கே ஒரு நீளமான மேசை மீது குவிக்கப்பட்டிருந்த மிட்டாய்கள் புடைவை களின் கீழ் மறைந்திருந்தன. மிட்டாய்களுக்குக் குழந்தைகள் போட்டி போட்டுக் கொண்டனர். அரசுக் கட்டிடத்தின் மேல் உரிய இடத்தை இந்தியாவின் கொடி அடைவதைப் பார்த்துக் கொண்டிருந்த தயாளுக்கு பல எண்ணங்கள் எழுந்தன

நமது நாட்டை பிரிட்டிஷ் ஆட்சி செய்த விதம் பற்றியது அவற்றில் ஒன்று. ஐசிஎஸ் அதிகாரியாக அவர் பதினான்கு ஆண்டுகள் பணியாற்றியபோது சக பிரிட்டிஷ் நண்பரைப் பெற்றதில்லை என்பதை அவர் நினைத்துப் பார்த்தார்.

சென்னை, பெங்களூர், பாட்னா என ஆயிரக்கணக்கான பெரு நகரங்களில், கிராமங்களில், அந்த நள்ளிரவு நேரத்தில் கோயில்களுக்குச் சென்ற மக்கள் கடவுளரின் காலடியில் செந்நிறப் பூக்களை வைத்து தங்களின் புதிய தேசத்திற்கு பூவுலகின் வாழ்த்துக்களை வேண்டினார்கள். பனாரஸில், ஆரஞ்சு, பிஸ்தா பருப்பு, பால் ஆகியவற்றைக் கொண்டு, இந்தியாவின் தேசியக்கொடி வண்ணங்களை உருவாக்கி 'சுதந்திர தின கேக்' செய்து ஒரு முன்னணி கேக் தயாரிப்பாளர் கணிசமாக சம்பாதித்தார்.

பம்பாயின் பெரும் துறைமுகத்தில் கொண்டாடப்பட்டது போல் சுதந்திர தின இரவு வேறெங்கும் அவ்வளவு உணர்ச்சிப் பெருக்குடனும் மகிழ்ச்சி யுடனும் கொண்டாடப்படவில்லை. அந்த நகரின் நடைபாதைகளில் காவல் துறையினரின் தடியடியால் சிந்திய ரத்தம் படிந்து அடிக்கடி வழுக்கிவிடும். இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றிலிருந்து பிரித்தெடுக்க முடியாமல் பின்னிப் பிணைந்திருந்த அந்த நகரின் வீதிகள் ஏராளமான ஆர்ப்பாட்டங் களை, ஹர்த்தால் (கடையடைப்பு)களை, வேலை நிறுத்தங்களைச் சந்தித்திருக்கின்றன. அந்த நகர மக்கள் இப்போது முழுமையாக மகிழ்ச்சியில் திளைக்கின்றனர். அரண்மனை போன்ற வீடுகளைக் கொண்ட மெரைன் டிரைவிலிருந்து பரேலில் உள்ள தொலைதூர கிராமங்கள் வரையிலும், மலபார் ஹில்லில் உள்ள விசாலமான வீடுகள் முதல் தீவ்ஸ் மார்க்கெட் பகுதியில் உள்ள குடிசைகள் வரை எங்கும் விளக்குகள் நிறைந்து, விளக்குகளின் ஏரியாக பம்பாய் காட்சியளித்தது.'நள்ளிரவு நண்பகலாக மாறியது' என்று ஒரு பத்திரிகையாளர் எழுதினார். 'அது ஒரு புதிய தீபாவளியாக, புதிய ஈத் பண்டிகையாக, ஒரு புத்தாண்டு விழாவாக இருந்தது. விழாக்களின் நாட்டில் அனைத்து விழாக்களும் ஒன்றாகி நடப்பது போல் இந்த சுதந்திரத் திருவிழா இருந்தது.'

இந்தியாவின் சில பகுதிகளில் துவக்கப்பட்ட விருந்துகளிலும், உபச் சாரங்களிலும் உற்சாகம் குறைந்து காணப்பட்டது. பழைய மன்னர்கள் ஆண்ட மாநிலங்களில் தான் அப்படி இருந்தது. மகாராஜாக்களின் காலம் முடிந்து விட்டது. இவர்களில் பலர் தாங்கள் உரிமைகளை இழந்துவிட்டதையும் தங்களின் உல்லாசமான, ஆடம்பர உலகம் அழிந்து போனதையும் உணர வில்லை. தெரிந்தால் ஆகஸ்ட் 15 அவர்களுக்குத் துக்க நாளாக இருந்திருக்கும். பளிச்சென ஒளி சிந்தும் விருந்துபச்சார மண்டபத்தில், அவரது பதவியைப் போலவே பறிபோகவிருக்கும் பதவிகளைக் கொண்ட பிரிட்டிஷ் நிர்வாக அதிகாரிகளுக்கு ஹைதராபாத் நிஜாம் பிரிவுபச்சார விருந்தளித்தார். நிஜாமின் ஏராளமான வாரிசுகளும், நாகரிகப் பாங்குள்ள பெண்களும் நிறைந்திருந்தும் கூட அந்த விருந்து பிணத்தைச் சுற்றிக் காத்திருக்கும் துயரச் சம்பவம் போல் இருந்தது. அந்த இரவு விருந்தின் நிறைவில், நள்ளிரவு வருவதற்கு சிறிது நேரத்துக்கு முன், கிழிந்து சாயம் போன நிஜார் அணிந்த அந்த வயதான கருமி, பேரரசர்களுக்குக் கடைசியாக வாழ்த்துத் தெரிவிக்க எழுந்தார். ஜான் பெய்டன் (John peyton) என்ற ஆங்கிலேய விருந்தாளி நிஜாமின் சோகம் நிறைந்த முகத்தை கவனித்தார். 'எத்தனை சோகம்! இரு நூற்றாண்டு வரலாறு ஒரு கருக்கமான சோகமான செயல் மூலம் முடிகிறது' என்று அவர் எண்ணினார்.

பல இந்தியர்களுக்கு, அவர்களும் மற்றவர்களும் பல ஆண்டுகள் கனவு கண்ட அந்த இரவு, அச்சுறுத்தும் பயங்கரம் நிறைந்ததாக இருந்தது எல்லைப்புற துப்பாக்கிப் படைப்பிரிவில் இருந்த பார்சியான லெப்டினன்ட் கர்னல் ஜே.டி.சத்ரவாலா (J.T. Sataravala)வுக்கு, அந்தக் காட்சி எப்போதும் வருத்தத்தை அளித்துக் கொண்டிருந்தது. போர்களால் மரத்துப் போன அவரின் கண்கள் இதற்கு முன் இப்படியொரு காட்சியைக் கண்டதில்லை. க்வெட்டா (Quetta)வின் பலுசிஸ்தான் நகரில் எரிந்து கொண்டிருக்கும் நெருப்புக் கிடையே ஒரு இந்துக்குடும்பம் முழுவதும் கோரமாகக் கொன்று துண்டாடப் பட்டிருந்தது. இவர்களையடுத்து, இதே அளவு கொடுமையுடன் ஈரமும், வீரமும் மிக்க முஸ்லீம் குடும்பம் ஒன்றின் உடல்கள் சிதைக்கப்பட்டிருந்தன அந்தக் குடும்பம்தான் அவருக்குப் புகலிடம் அளித்திருந்தது. மேற்கு பஞ்சாபில் உள்ள முகாமில் 20,000 அகதிகளுக்கு சிகிச்சை அளிக்க காந்தியால் நிய மிக்கப்பட்டவர் அழகிய இளம் வயதுடைய சுசீலா நய்யர். ஆகஸ்ட் 14 நள்ளிரவு சாதனையை எட்டுவதற்காக இளமைக்காலம் முழுவதையும் அர்ப்பணித்தவர். இரண்டு ஆண்டுகள் சிறையில் கழித்தவர். இப்போது அந்த இரவு அவருக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை; மன நிறைவைத் தரவில்லை. அவருக்கிருக்கும் கவலையெல்லாம் அவரது பொறுப்பில் இருந்த ஆயிரக்கணக்கான மக்கள் பற்றியதுதான். இவர்களில் பலர், நிச்சயம் தங்களைக் கொன்று குவித்து விடுவார்கள் என்ற நினைப்புடன் முஸ்லீம்களின் கூட்டம் வரும் சப்தத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

துணைக் கண்டத்தில் மகிழ்ச்சிப் பெருக்கோடு இருக்க வேண்டிய லாகூர் நகரில் பேரழிவு சம்பவங்களின் காட்சிகள் தெரிந்தன. சூரியன் மறையும் வேளையில் அந்த நகருக்குள் கூர்க்காப் படையினருக்குத் தலைமையேற்று வந்த கேப்டன் ராபர்ட் அட்கின்ஸ், தனது முகாமில் அச்சமும் துயரமும் நிறைந்த இந்துக்கள் முண்டியடித்து நுழைவதைக் கண்டார். குழந்தைகளை இடுக்கிக் கொண்டு, படுக்கைகளுடனும், ஒன்று அல்லது இரண்டு பெட்டிகளுடனும் வந்தவர்கள் தங்களையும் ராணுவ வீரர்களுக்கான பாதுகாப்பு வளையத்துக்குள் அனுமதிக்க வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டனர்.

கோட்டை மதில் சூழ்ந்த பழைய லாகூரில் ஏறத்தாழ நூறாயிரம் (ஒரு லட்சம்) இந்துக்களும் சீக்கியர்களும் சிக்கிக் கொண்டார்கள். அவர்களுக்குக் குடிநீர் நிறுத்தப்பட்டது. அவர்களைச் சுற்றி நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. குடியிருப்புகளிலிருந்து யாராவது வெளியே வந்தால் அவர்கள் மீது திடீர் தாக்குதல் நடத்த முஸ்லீம் கும்பல்கள் திரிந்து கொண்டிருந்தன. ஒரு கும்பல் ஷா அலிமி (Shah Alimi) நுழைவாயிலை அடுத்துள்ள, நகரின் புகழ்மிக்க குருத்வாராவுக்குத் தீ வைத்தது. அதற்குள் உயிருடன் எரிக்கப்பட்ட சீக்கியர்களின் கதறல் ஒலி கேட்டு அந்த கும்பல் பெரு மகிழ்ச்சியோடு சிரித்தது.

வன்முறை வெடித்துச் சிதறியிருக்க வேண்டிய கல்கத்தா நகரம், நம்ப முடியாத அளவுக்கு குணமாற்றம் அடைந்திருந்தது. தயக்கத்துடனும் தற்காலிகமாகவும் தான் அந்த மாற்றம் தொடங்கியது. சூரியன் மறைவுக்கு முன், முஸ்லீம்களும் இந்துக்களும் பங்கேற்ற ஊர்வலம், கல்கத்தா நகர் வழியாக, காந்தியின் தலைமையகமான ஹைதாரி இல்லம் நோக்கிச்சென்றது. இதையடுத்து நகரின் சூழ்நிலையில் மாற்றம் துவங்கிவிட்டது. வன்முறைக்

காடுகளாக விளங்கிய கேல்டங்கா (Keldanga) சாலையிலும், சியல்டா (Sealdah) ரயில் நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், இந்து, முஸ்லீம் குண்டர்கள் தங்களின் கத்திகளை உறையில் போட்டுவிட்டு வீடுகளின் பால்கனியிலும், விளக்குக் கம்பங்களிலும் இந்தியக் கொடிகளைக் கூட்டாகக் கட்டித் தொங்கவிட்டனர். ஷேக்குகள் தங்களின் மசூதிக் கதவுகளைக் காளி பக்தர்களுக்குத் திறந்துவிட்டனர். இதற்குப் பதிலாக, அவர்கள் அழிவுத் தேவதையான கற்பனை கலந்த காளி உருவத்தை வணங்க முஸ்லீம்களை அழைத்தார்கள்.

24 மணி நேரத்துக்கு முன்னால் ஒருவர் மற்றொருவரின் கழுத்தை அறுத்துக் கொள்ள தயாராயிருந்த அந்த மனிதர்கள், இப்போது வீதிகளில் கை குலுக்கிக் கொண்டார்கள். பெண்களும், குழந்தைகளும், இந்துக்களும் - முஸ்லீம்களும், எதிரெதிர் சமூகத்தினருக்கு இனிப்புகளை வழங்கினர். 'மேற்கத்திய எல்லைப் பகுதியில் எல்லாம் அமைதியாக உள்ளன' (All Quiet on the Western Front) என்ற நூலில் கிருஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்படும் காட்சியை, தாங்கள் எதிரிகள் என்பதை ஒரு கணம் மறந்து பதுங்கு குழிகளிலிருந்து ஃபிரான்ஸ் மற்றும் ஜெர்மனி வீரர்கள் வெளியே வரும் காட்சியை, கல்கத்தா நகரின் மாலை வேளைகளில் வங்கமொழி எழுத்தாளர் குமார் போஸ் நினைவு கூர்ந்தார்.

இந்தியாவில் விழா நடந்து கொண்டிருந்த போது, பிரிட்டனின் ஏக அதிகார மையமாக விளங்கிய அந்த மாபெரும் மாளிகையில் புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. இதன் ஒரு முனையிலிருந்து மறு முனை வரை தாழ்வாரங்களில் சுறுசுறுப்புடன் செயல்பட்ட பணியாட்கள், புதிதாக சுதந்திரம் பெற்றுள்ள இந்தியக் குடிமக்களின் உணர்வுகளைப் புண்படுத்தக் கூடிய முத்திரைகளையும் அடையாளங்களையும் அழித்துக் கொண்டும் ஒழித்துக் கொண்டும் இருந்தார்கள். சுதந்திர தினத்தன்று, தற்போது அரசு மாளிகையாய் இருக்கும் இடத்திற்கு வரும் இந்தியர்கள் எவருக்கும், கடந்த காலத்தை நினைவுபடுத்திக் கசப்படையச் செய்யும் வகையில் எதுவும் காணப்படக் கூடாது என்பதில் மவுண்ட்பேட்டன் கண்டிப்புடன் இருந்தார்.

பணியாளர்களின் ஒரு குழுவினர் ஒரே ஒரு வேலையை மட்டும் செய்தனர். ஒவ்வொரு அறையாகச் சென்று, 'வைஸ்ராய்'களை மாற்றி, 'அரசு மாளிகை' என்று பொறிக்கப்பட்ட புதிய பொருள்களை வைத்தனர். மற்றொரு குழுவினர் தர்பார் மண்டபத்தின் மேற்கூரையில் பெரிதாக இருந்த பிரிட்டிஷ் அரச சின்னத்தைத் திரையிட்டு மறைத்தனர். இருப்பினும் ஒரு சில பொருள்களில் மாற்றம் செய்யப்படவில்லை. பாரம்பரியமாக வைஸ்ராய் வைத்திருக்கும் தனிப்பட்ட பொருள்களின் மீதான சொற்குறியீடுகள், சிகரெட் பெட்டிகள், தீப்பெட்டிகள், சோப்புக் கட்டிகள், வெண்ணெய்த் தட்டுகள் போன்ற புதிய அரசு மாளிகையில் இருந்த பொருள்களில், மவுண்ட் பேட்டனின் சுருக்கக் குறியீடான 'எம்பி' என்ற எழுத்துகளுடன் தொடர்ந்து இருந்தன.

அவர்களின் பணிகள் நடந்து கொண்டே இருக்கும்போது, அரசியல் நிர்ணய சபையால் அனுப்பப்பட்ட இந்தியத் தலைவர்களின் குழு ஒன்று அங்கு வந்தது. அந்தச் சபையின் தலைவரான ராஜேந்திர பிரசாத், முன்னாள் வைஸ்ராயை இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக இருக்குமாறு முறைப்படி அழைப்பு விடுத்தார். அன்று மாலையில் அட்மிரலுக்குக் கிடைத்த

இரண்டாவது கவுரவமாகும் இது. இந்தியாவில் சிறப்பாகப் பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையில் இளம் கோமகன் (Viscount) என்ற நிலையிலிருந்து கோமகன் (Earl) என்ற நிலைக்கு அவரது மைத்துனரான ஆறாம் ஜார்ஜினால் உயர்த்தப்பட்டிருக்கும் தகவலைச் சற்று முன்னர்தான் அவர் அறிந்திருந்தார்.

பிரசாதின் அழைப்பை மவுண்ட்பேட்டன் ஏற்றுக்கொண்டார். தாம் ஒரு இந்தியராக இருந்தால் எப்படி சேவை செய்வாரோ அப்படி சேவை செய்ய அவர் உறுதி அளித்தார். பின்னர் நேரு ஒரு பட்டியல் அடங்கிய உறையை மவுண்ட்பேட்டனிடம் அளித்தார். சுதந்திர இந்தியாவில் முதலாவதாக அமையவிருக்கும் அரசில் அவரது ஒப்புதலுடன் பங்கேற்கும் மனிதர்களின் பெயர்ப் பட்டியலாகும் இது.

மவுண்ட்பேட்டன் போர்ட் (Port) மதுபானத்தை எடுத்து விருந்தினர்களின் கண்ணாடிக் குவளைகளில் தாமே ஊற்றி நிறைத்தார். அவர் அப்படிச் செய்தபோது, தனது கண்ணாடிக் குவளையை மேலே உயர்த்தி, 'இந்தியாவுக்காக' என்று வாழ்த்துக்களைத் தெரிவித்தார். சிறிதளவு மது அருந்தியபின் நேரு தன் பங்கிற்கு மவுண்ட்பேட்டனை நோக்கி தனது கண்ணாடிக் குவளையை உயர்த்தினார். 'ஆறாம் ஜார்ஜ் மன்னருக்காக' என்று அவர் வாழ்த்துக் கூறினார்.

பின்னர் அவர்கள் அங்கிருந்து சென்றனர். மவுண்ட்பேட்டன் படுக்கைக்கு செல்லுமுன் நேரு கொடுத்த உறையைப் பிரித்தார். அப்படிச் செய்த பின் அவர் வாய்விட்டுச் சிரித்தார். அந்த மகத்தான மாலைநேரப் பரபரப்புக்கிடையே சுதந்திர இந்தியாவின் முதலாவது அமைச்சரவையில் இடம் பெறுவோரின் பெயர்களைக் குறிக்க நேருவுக்கு நேரமில்லை போலும். உறையில் வெள்ளைக் காகிதம்தான் இருந்தது.

இருள் படர்ந்த குகை போன்ற லாகூர் ரயில் நிலையத்தில், காத்திருந்த பம்பாய் எக்ஸ்பிரசை நோக்கி சில ஆங்கிலேயர்கள் சென்று கொண்டிருந்தனர். பிரிட்டிஷ் நிர்வாகிகள், காவல்துறையினர், ராணுவ வீரர்கள் ஆகியோரின் கடைசி சிறு தொகுதியினர் அவர்கள். அவர்கள்தான் பிரிட்டிஷாரின் இந்தியாவில் பஞ்சாபைப் பெருமைக்குரியதாக மாற்றினார்கள். துணைக் கண்டத்தில் பிரிட்டனின் சாதனைகளுக்குக் காரணகர்த்தர்களாக விளங்கினார்கள். இப்போது இவர்கள் தாங்களும் தங்களின் மூதாதையர்களும், கட்டிய பாலங்களையும், ரயில்வே பாதைகளையும், நெடுஞ்சாலைகளையும், கால்வாய்களையும் கடந்து தாயகத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் ரயில் வண்டியை நோக்கி நடக்கும்போது ரயில்வே பணியாளர்கள் சிலர் பிளாட்பாரத்தை சுத்தம் செய்வதற்கு வேண்டா வெறுப்பாகக் குழாய் நீரைப் பீய்ச்சி அடித்துக் கொண்டிருந்தனர். சில மணி நேரங்களுக்கு முன்னால் வெளியேறிச் செல்லும் இந்துக்களை பயங்கரமாய்க் கொலை செய்யும் களமாக இந்த ரயில் நிலையம் இருந்தது. சில மணி நேரங்களுக்கு முன் லாகூரின் காவல்துறை பொறுப்பை ஒப்படைத்த பில் ரிச் என்ற ஆங்கிலேயர் ஒரு கோரக் காட்சியைக் கண்டார். பிளாட்பாரத்திலிருந்து ஒரு சரக்கு வண்டியை போர்ட்டர்கள் தள்ளிக்கொண்டு சென்றனர். சரக்கு வண்டிக்குக் கொண்டு செல்லும் சிப்பங்கள் போல் அதில் குவிந்து கிடந்தவை

மனித உடல்கள் தான். அவருக்கான ரயில் பெட்டிக்குள் காலடி எடுத்து வைக்குமுன் பிளாட்பாரத்தில் கிடந்த மனித உடல் ஒன்றைத் தாண்டித்தான் அவரே செல்ல வேண்டியிருந்தது. உறுப்புகள் துண்டிக்கப்பட்டு அவரது காலடியில் கிடந்த உடலைக் கண்டது அவருக்கு அச்சத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால் அது பற்றிய உதாசீனமும், பஞ்சாபின் கோரங்களால் தாம் எவ்வளவு கடினமாகிப் போயிருக்கிறோம் என்ற உணர்வும் தான் அவரை அப்போது ஆட்கொண்டன.

நகரின் சதுக்கத்தில் கில்பர்ட் (Gilbert), சல்லிவன் (Sullivan) இசைக்க தனது பேண்டு வாத்தியக் குழுவை அனுப்பி வைத்தவர் அமிர்தசரஸ் காவல்துறை தலைவராக இருந்த ரூல் டீன். ரயில்வண்டி நகரைவிட்டுப் புறப்படும்போது அவர் பொறுப்பில் இருந்த பகுதிகளில் நெருப்பு கொழுந்து விட்டெரிவதை அவரது பெட்டியின் ஜன்னல் மூலம் பார்த்தார். அவரால் பாதுகாக்கும் கடமை கொண்ட டஜன் கணக்கான கிராமங்களில் எரியும் தீ அடிவானத்தில் பரவியிருப்பதை அவர் கண்டார். இரவு வானத்தில் அந்த நெருப்பு ரோஜா நிறத்தில் சிவந்திருந்தது. இவற்றை அழித்துச் சூறையாடும் சீக்கியர்கள் கூட்டத்தையும், நெருப்பைச் சுற்றி ஆடும் கொடிய குழு நடன நிழல் உருவங்களையும் அவர் கண்டார். அவர் மிகப்பெரும் கவலை கொண்டார்.

'கவுரவமான முறையில் அதிகாரத்தைக் கைமாற்றி கொடுப்பதற்குப் பதிலாக, நமக்குப் பின்னால் ஒரு பெரும் குழப்பத்தையே விட்டுச் செல்கிறோம்' என்பதை அவர் நினைத்துப் பார்த்தார். அந்த எக்ஸ்பிரஸ் ரயில் வண்டி டில்லியை நெருங்கும்போது அதில் ஒரு இரவு உணவு வண்டி இணைக்கப்பட்டது. புதிய லினன் துணியும் மெருகேற்றப்பட்ட வெள்ளிப் பொருள்களும் நிறைந்த பஞ்சாபில் வாழ்ந்த உலகம் விலகிப் போய்க் கொண்டிருக்கிறது. மூன்று மாத காலத்தில் வெல்வின் கார்டன் சிட்டி (Welwyn Garden City)யில் வீடு வீடாகச் சென்று பிளாஸ்டிக் பொருள்கள் விற்க வேண்டியதிருக்கும் என்ற நினைப்பு அவருக்கு வந்தது.

பெலியகட்டா சாலையில் சிதிலமடைந்த 151ஆம் எண் வீடு அமைதியாக இருந்தது. அதன் வாயிலில், அஹிம்சாவாதிகளான சில இந்து-முஸ்லீம் தொண்டர்கள் காவலுக்கு நின்றனர். ஹைதாரி இல்லத்தின் உடைந்த ஜன்னல்களின் வழியே ஒரு மெழுகுவர்த்தியின் ஒளியோ அல்லது ஒரு சிறிய மின்விளக்கின் ஒளியோ தெரியவில்லை. மகிழ்ச்சி மிக்க அந்த இரவின் நிகழ்ச்சிகள் உட்பட எதுவும் அந்தக் கட்டிடத்துக்குள் ஊடுருவ அனுமதிக்கப் படவில்லை. உள்ளேயிருந்த ஆண்களும், பெண்களும் ஒழுங்கமைக்கப்பட்ட வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருந்தனர். விசாலமான அந்த அறைக்குள், அனைவரும் ஒன்றாக வைக்கோல் படுக்கையில் படுத்திருந்தார்கள். இவர்களில் ஒருவராக, வழுக்கைத் தலையுள்ள, அனைவருக்கும் நன்கு தெரிந்த மனிதர் படுத்திருந்தார். அவருக்கு அருகே மரத்தால் செய்யப்பட்ட அவரது மிதியடிகளும், கீதையும், பல்செட்டும், இரும்பு வளையம் கொண்ட மூக்குக் கண்ணாடியும் முறையாக வைக்கப்பட்டிருந்தன. கடிகாரங்கள் மணி ஒலித்து நள்ளிரவை அறிவித்தன. வாழ்க்கைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் இந்தியா விழித்துக் கொண்டது. மோகன் தாஸ் கரம் சந்த் காந்தி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.

பன்னிரண்டு

# சுதந்திரத்தின் அழகிய விடியல்

## *பனாரஸ், 15 ஆகஸ்ட் 1947*

*விடியற்காலை வேளையில் குளிர்ந்த மூச்சுக்காற்றுடன் விழித்த போது, தண்ணீரிலிருந்து பனி மூட்டம் மேலெழுந்திருந்தது. நினைவுக்கு எட்டாத காலத்திலிருந்து, அவர்களுக்கு உயிர் அளித்து வரும் புனிதமான அன்னை கங்கையின் கரைகளில் கூடி, தேவலோகத்துக்கு வழி தேடி அதன் நீரில் சடங்குகள் செய்து மூழ்கி எழுந்தார்கள். 1947 ஆகஸ்ட் 15 அதிகாலையில், உலகின் புத்தம் புதிய தேசம் பிறந்ததற்காக இணையற்ற காலைவேளைச் சடங்குகளை அவர்கள் செய்தார்கள். மனித குலத்தின் தொன்மை நகரான பனாரஸில் இவற்றை மேற்கொள்வதை விடப் பொருத்தமானது வேறெதுவும் இருக்க முடியாது.*

*இந்துக்களையும் அவர்களின் புனித நதியையும் இணைத்து வைக்கும் புராதன செயலை உறுதியுடன் புதுப்பிக்கும் வெளிப்பாடாகவே அந்தச் சடங்குகள் இருந்தன. மனிதர்களின் விதியை நிர்ணயிக்கும், அறிவுக்கு எட்டாத சக்திகளின் கோபத்தைத் தணிக்க வேண்டியது அவசியம் என்று மனிதனைத் தூண்டும் இந்து மதத்தின் கருத்துப்படி அவர்களின் ஆன்மீக ஒருங்கிணைப்பு இருந்தது. இமயமலையில் 10,300 அடி உயரத்தில் பனிப்படுகையில் உள்ள ஒரு குகையிலிருந்து உருவாகும் கங்கை உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்டதும் வறட்சி மிக்கதுமான பகுதிகளில் ஒன்றின் வழியே 1500 மைல் தூரம் ஓடி வங்காள குடாக்கடலில் கலக்கிறது. அடிக்கடி திசைமாறி ஓடும் அந்த நதியின் நீண்ட கால அச்சம் தரும் பெரு வெள்ளப் பெருக்கினால், அதனை வணங்கி வழிபடும் விவசாயிகளின் நிலங்கள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றன. பல நூற்றாண்டுகளாக வளைந்து நெளிந்து சென்று திசை மாறியதால், அதன் பாதையில் அழிந்து போன நகரங்களும் கிராமங்களும் மவுன சாட்சிகளாகப் பரவி இருந்தன.*

*அந்த நதி அழிவுத்தன்மையைக் கொண்டிருந்தாலும், அதன் தண்ணீர் செல்லும் ஒவ்வொரு அடி தூரமும் தெய்வத்தன்மையுடையதாகவே கருதப்பட்டது. பழங்கால பனாரஸ் இருந்த இடத்தில் உருவான தண்ணீர் வேகம் குறைந்தோடும் நான்கு மைல் தூர வளைவுப்பகுதியைவிடப் புனிதமான இடம் வேறெதுவும் இல்லை. வரலாறு தோன்றிய காலத்திலிருந்து, பாபிலோன், நினவே, டைர் தோன்றிய காலத்திலிருந்து, கங்கையில் நீராட,*

புடன் நீரைப்பருக, மனம் போன போக்கில் செயல்படும் சில கடவுளர்களின் பூசியைப் பெற இந்துக்கள் பனாரஸுக்கு வந்தனர்.

இப்போது அமைதியான அந்த மக்கள் கூட்டம் பனாரசின் செங்குத்தான நதிக்கரைகளிலிருந்து தண்ணீர் பரப்பு நோக்கி கட்டப்பட்டுள்ள படித்துறைகளில் இறங்கிச் சென்றது. ஒவ்வொரு யாத்திரிகரும் கையில் பூக்கூடையையும் கற்பூர எண்ணெயில் எரியும் சிறிய விளக்கையும் கொண்டு சென்றார்கள். இந்த விளக்கின் ஒளி அறியாமை எனும் இருளை அகற்றும் அடையாளமாகக் கருதப்படுகிறது. பக்தர்களில், ஓராயிரம் பேருக்கும் அதிகமானவர்கள், மெல்ல அசைந்து செல்லும் ஆற்றில் இடுப்பளவு நீரில் கிழக்கு நோக்கி நின்றனர். அசைவின்றி அமைதியாக நின்ற அவர்களின் கைகளில் இருந்த தீபங்களின் ஒளி அசைவு தூரத்தில் இருந்து பார்க்கும் போது நதிநீரின் மேற்பரப்பில் மிதக்கும் மின்மினிப் பூச்சிகளின் கூட்டம் போல் தோன்றின.

ஒவ்வொருவரின் பார்வையும் கிழக்குத் திசையின் அடிவானத்தில் பதிந்திருந்தன. ஒவ்வொரு நாளும் நிகழும் தெய்வீக அதிசயத்தை பூமித்தாயின் வயிற்றிலிருந்து தோன்றும் செந்நிற ஒளிவட்டத்தின் தோற்றத்தை சூரியனாக வரும் விஷ்ணுக் கடவுளின் அவதாரத்தைக் காண அவர்கள் காத்திருந்தனர். காலை வானத்தில் சூரிய வட்டத்தின் கீற்று தெரிந்தவுடன் ஆயிரக்கணக்கானவர்களின் குரல் வளைகளிலிருந்து வழிபாட்டுப் பாடல்கள் எழுந்தன. கடவுளின் மகத்தான அதிசயம் மறுபடியும் நிகழ்ந்ததைக் கொண்டாடும் வகையில் தங்களின் கைகளிலிருந்த பூக்களையும் தீபத்தையும் கங்கை நதியில் விட்டனர்.

ஒவ்வொரு நாள் காலையிலும் நடப்பது போலவே அன்று காலையிலும், பனாரஸ் நகரின் மிகப்பழமையான தங்கக் கோயிலுக்குள் முதலாவதாகச் செல்லும் கவுரவத்தை பண்டிட் ப்ரவாணி சங்கர் பெற்றிருந்தார் அந்த அதிகாலைப் பொழுதை ஆனந்தமாகக் கழிப்பதற்கு கடவுளாக மதிக்கப்படும் அந்த முதியவரைப் போல் பனாரசில் ஒரு சிலர் தான் இருக்க முடியும். பிரிட்டிஷ் சிஐடிகளிடமிருந்து தப்பித்து வரும் இந்திய தேசியவாதிகளுக்குப் பல ஆண்டுகளாக அந்தக் கோயிலைப் புகலிடமாக அளித்திருக்கிறார் பண்டிட் சங்கர்.

ஒரு பாத்திரத்தில் கங்கை நீரையும் மற்றொரு குப்பியில் சந்தனத்தையும் எடுத்துக் கொண்டு, பளிங்கினால் செய்யப்பட்ட குட்டையான தோற்றமுள்ள படிவம் இருக்கும் கோயிலின் இருள் நிறைந்த பகுதிக்குச் சென்றார் பண்டிட் சங்கர். இருளில் இருக்கும் அந்த உறுதியான படிவம், பனாரசிலேயே மிகப்புனிதமான இந்துமதச் சின்னமாக விளங்கியது. முகலாயச் சக்ரவர்த்தி அவுரங்கசீபின் படையிடமிருந்து இதனை மறைத்துப் பாதுகாத்த சங்கரின் முன்னோர்கள், இதன் பாதுகாவலர்கள் என்ற உரிமையை வழிவழியாகப் பெற்று வருகிறார்கள். அந்த ஆகஸ்ட் காலையில் அந்தச் சிலையின் முன்னால் அவர் தலைவணங்க வேண்டும். நவ இந்தியா பிறந்ததற்காகக் கடவுள்களுக்குத் தாழ்மையான நன்றியைத் தெரிவிக்க இதுவே பொருத்தமான செயலாக இருக்கும். கடவுளின் பிரதிநிதியாகக் கல்லை வணங்கும் மிக பழையமுறை, வெகுகாலமாகவே மனிதர்களின் கலாச்சாரமாக உள்ளது.

அது ஒரு லிங்க வடிவம். பரமசிவனது ஆண்குறியின் அடையாளமாகவும், இயற்கையின் மறு உற்பத்தித்திறனைக் குறிக்கும் சக்தி அடையாளமாகவும்

*உள்ள கல்லாலான பெரிய வடிவம். இந்த வழிபாட்டுக்கலாச்சாரத்தின் மையமாக பனாரஸ் விளங்கியது. இந்த நகரில் ஏறத்தாழ எல்லாக்கோயில்களிலும் படித்துறைகளிலும் லிங்கங்கள் இருந்தன. சூரியனின் முதல் ஒளிரேகைகள் வெளிப்பட்ட போது, ஆயிரக்கணக்கான இந்துக்கள் சங்கருடன் சேர்ந்து தங்களின் பழைய தேசம் மீண்டும் உதயமாகி இருப்பதை மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள். குமிழ் வடிவில் இருக்கும் கல்லாலான லிங்கத்தின் மீது அன்புடன் சந்தனத்தைக் தடவினார்கள்; கங்கை நீர் ஊற்றினார்கள்; கோமயம் தெளித்தார்கள்; அரளிப்பூ மாலை அணிவித்தார்கள்; ரோஜாப்பூக்களால் அர்ச்சித்தார்கள்; சிவபெருமானுக்கு மிகவும் பிடித்தமான கசப்பு நிறைந்த வில்வ இலைகளால் வழிப்பட்டனர்.***

*அந்தக் காலை நேர வண்ணங்கள் நகரை ஒளிரச் செய்தபோது, குனிந்த முதுகுகளில் விறகுகளையும் கட்டைகளையும் சுமந்து கொண்டு தீண்டத்தகாதவர்களின் கூட்டம் ஒன்று வந்தது. பனாரசிலேயே மிகவும் குண்டு குழிகள் நிறைந்த மணிகர்னிகா படித்துறையில் அது இறங்கியது. ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு மூங்கில் கம்புகளாலான பாடை ஒன்றைத் தோள்களில் சுமந்த நான்கு பேர் அந்தப் படித்துறைக்கு வந்தனர். அவர்களுக்கு முன்னால் வந்த ஐந்தாவது மனிதர் மெல்ல சிகண்டியில் ஒலியெழுப்பி, 'ராம நாமமே சத்தியம்' என்று பாடிக் கொண்டு வந்தார். அந்த ஊர்வலத்தைப் பார்ப்பவர்கள் அனைவருக்கும் ஒரு விஷயத்தை அவரது வார்த்தைகள் நினைவுபடுத்தின. அதாவது கோடித்துணியால் சுற்றப்பட்டு பாடையில் கிடக்கும் உருவத்துக்கு நேர்ந்த கதிதான் நம் அனைவருக்கும் ஒரு நாள் நேரும் என்ற உண்மைதான் அது.*

*பல நூற்றாண்டு காலமாக பனாரசில் இறப்பதே ஒரு இந்து பக்தனின் விருப்பத்தை நிறைவேற்றும் வரப்பிரசாதம் என்று கருதப்படுகிறது. பனாரஸ் நகரின் 36 மைல் சுற்று வட்டாரத்துக்குள் சம்பவிக்கும் மரணம் என்பது, உயிரை எண்ணற்ற மறுபிறவி சுழலிலிருந்து விடுவிக்கும். பிரம்மலோகத்தில் உள்ள முக்தர்களுடன் ஐக்கியப்படுத்திவிடும். இந்தக் காரணங்களால், பனாரசுக்கு யாத்ரிகர்கள் வருவது வாழ்வு தேடியல்ல; சாவு தேடியே.*

---

* லிங்கமும் லிங்க வழிபாடும் தோன்றியது பற்றி சுவாரஸ்யமான இந்துமதக் கதை ஒன்று விளக்குகிறது. சிவனும் அவரது மனைவி துர்க்கையும் மதுவருந்தி உடலுறவு கொண்டு உல்லாசமாக இருந்தனர். அப்போது விஷ்ணுவின் தலைமையில் கடவுள்களின் தூதுக்குழு ஒன்று அங்கே வந்தது. மதுவின் மயக்கத்திலும் காதல் விளையாட்டிலும் ஈடுபட்டிருந்த கடவுள் ஜோடி இவர்கள் வந்ததைக் கண்டுகொள்ளவில்லை. இவர்களின் செயலால் அதிர்ச்சியடைந்த மற்ற கடவுள்கள் இருவருக்கும் சாபம் விட்டு அங்கிருந்து அகன்றனர்.

என்ன நடந்தது என்பது பின்னர் சிவனுக்கும் துர்க்கைக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் மிகவும் வெட்கப்பட்டனர். எந்த நிலையில் மகிழ்ச்சியுற்றிருந்தார்களோ அதே நிலையில் அவர்கள் இறந்தனர். 'நாணத்தால் நான் இறக்கிறேன். ஆனால் எனக்கு அது புது வாழ்வை அளித்துள்ளது. புது வடிவத்தைக் கொடுத்துள்ளது. அதுதான் லிங்கம்' என்று சிவபெருமான் அறிவித்தார். இனிமேல், எனது லிங்க வழிபாட்டைத் தழுவுமாறு மனிதர்களுக்கு பூசாரிகள் போதிக்க வேண்டும் என்று அவர் கூறினார். அந்த லிங்கம் வெள்ளையாக இருக்கும்; அதற்கு மூன்று கண்களும் ஐந்து முகங்களும் இருக்கும்; புலித்தோலை அணிந்திருக்கும்; உலகம் தோன்றுவதற்கு முன்பே அது தோன்றியது; அதுவே மூலாதாரம்; அனைத்துயிர்களுக்கும் அதுவே தோற்றுவாய். நமது கவலைகளையும் அச்சங்களையும் அது அகற்றுகிறது. நமது ஆசைகள் அனைத்தையும் அது நிறைவேற்றுகிறது என்றும் அவர் அறிவித்தார்.

பனாரசில் கங்கை நதியில் கடைசியாக மூழ்கி புண்ணியம் தேடுவதற்கான மனிதனின் உடலைத்தான் அன்று காலையில் அவர்கள் தூக்கி வந்தனர் அவர்களில் ஒருவர், பாடையில் கிடந்த உடலின் வாயைத் திறந்து தொண்டையில் இறங்கும்படி சிறிது நீரை ஊற்றினார். பின்னர் அந்த உடலை அங்கே தயாராக இருந்த சிதைமீது வைத்தனர். அந்த மயானத்தின் வேலை யாட்களான தீண்டத்தகாதவர்கள் சடலத்தின் மீது சந்தனக் கட்டைகளை வைத்து மூடினார்கள். பிறகு நெய்யை அதன் மீது ஊற்றினார்கள்.

இறந்து போனவரின் மூத்த மகன் மொட்டையடித்து புனித நீராடி சிதையை ஐந்து முறை சுற்றிவந்தான். பின்னர் அருகேயுள்ள யானைக் கடவுளான ஒரு கணபதி கோயிலிலிருந்த தூண்டாமணி விளக்கிலிருந்து ஏற்றப்பட்ட தீப்பந்தத்தை பூசாரி ஒருவர் கொண்டு வந்து கொடுத்தார். அதனை அந்த நபர் சிதையில் வைத்தார். குவித்து வைக்கப்பட்டிருந்த கட்டைகளிலிருந்து தீ சுடர் விட்டு எழுந்தது.

இறுதிச்சடங்குக்கு வந்திருந்தவர்கள் சிதையைச் சுற்றி அமைதியாக நின்றிருந்தனர். சிதை பற்றி எரியும் போது எண்ணெய்ப் பசை கலந்த கருநிறப் புகை வானில் பரவியது. திடீரென்று நெருப்புக்கிடையே படீரென்று வெடிக்கும் சத்தம் வந்தது. அந்த சத்தம் கேட்டதும், துக்கத்துக்கு வந்திருந்த வர்களிடமிருந்து பிரார்த்தனை ஒலி எழுந்தது. இறந்தவரின் கபாலம் வெடித்தது. இதன் மூலம் அவரது உடலிலிருந்து உயிர் பிரிந்து சென்றது. 1947 ஆகஸ்ட் 15 காலையில் ஏகாதிபத்தியத் தளையிலிருந்து இந்தியா விடுபடும் போது, பனாரஸ் என்றும் போலவே அன்றும் இறந்து போனவர்களுக்கு மேன்மையான விடுதலை தருவதைத் தொடங்கியிருந்தது.

காந்தி வழக்கமாக எழுந்திருப்பதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னால் அதிகாலை 2 மணிக்குப் பிறகு, பெலியகட்டா சாலையில் உள்ள அந்த இல்லத்தின் ஜன்னல்களில் முதன் முதலாக ஒரு மெழுகுவர்த்தியின் ஒளி தோன்றியது. புகழ்மிக்க அந்த நாள், கடைசியாக சுதந்திரம் பெற்று விட்ட மகிழ்ச்சியை அவரது மக்கள் கொண்டாடும் அந்த நாள், உலகத்தில் ஒரு அதிசயத்தை நிகழ வைத்த, ஒரு வாழ்நாள் போராட்டத்தின் இறுதியில் கிடைத்த வெற்றிக் களிப்பூட்டும் நாளாக காந்திக்கு இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் இருக்கவில்லை. ஹைதாரி இல்லத்தில் இருந்த அந்த மனிதரின் மனதில் மகிழ்ச்சியேதும் இல்லை. எந்த வெற்றிக்காக காந்தி மாபெரும் தியாகங்களைச் செய்தாரோ அதற்கு சாம்பலின் ருசிதான் இருந்தது. வர விருக்கும் துயரச் சம்பவங்கள் அவரின் புகழுக்கு அழியாக் களங்கத்தை ஏற்படுத்தப் போகின்றன.

ஏழு மாதங்களுக்கு முன் புத்தாண்டு தினத்தன்று நவகாளியின் கொந்தளிப்பு நிறைந்த சதுப்பு நிலங்களைக் கடந்து செல்லும் போது அஹிம்சாவாதியான அந்த நாகரிக தீர்க்கதரிசிக்குள் எழுந்த கேள்விகளும் சந்தேகங்களும் இந்தக் காலை வேளையிலும் எழுந்தன. முதல் நாள் மாலை ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில், 'நான் இருட்டில் தேடிக் கொண்டிருக்கிறேன். நான் இந்த தேசத்தை திசை தவறச் செய்துவிட்டேனோ?' என்று குறிப்பிட்டிருந்தார்.

கவலையும் சந்தேகமும் வரும் போதெல்லாம், தெய்வீகத்தன்மையுள்ள ஸ்லோகங்களைக் கொண்ட சரியான வழிகாட்டியான பகவத் கீதையைத்தான் புரட்டுவார். இப்போதும் காந்தி அதைத் தான் செய்தார். எத்தனை முறை அதன் வரிகள் அவருக்கு இதமளித்திருக்கின்றன; கவலை கவிந்த காலங்களில் புன்னகையை ஏற்படுத்தியிருக்கின்றன; இருள் வெளியை அகற்ற அதனிலும் சிறந்த ஒளிரேகை வேறெதுவும் இல்லை.

இந்திய சுதந்திரத்தின் முதல் நாளினை தனிப்பட்ட முறையில் துக்க நாளாகக் கொண்ட காந்தி மார்பில் துணியின்றி சப்பணமிட்டு வைக்கோல் மெத்தையில் அமர்ந்து கீதையைப் படிக்கத் தொடங்கினார். அவரைச் சுற்றி சீடர்கள் அமர்ந்திருந்தனர். போர் வீரனான அர்ஜுனன் கடவுளிடம் சோகத்துடன் இறைஞ்சுவதாக வரும் கீதையின் முதல் பதினெட்டு வசனங்களை மகாத்மா தடுமாற்றத்துடன் கூடிய உயர்ந்த குரலில் வாசித்து விடியற்காலையை வரவேற்றார். இந்திய வரலாற்றில் இப்போதுள்ள சோகமான சூழ்நிலைக்கு அந்த வசனங்கள் மிகவும் பொருத்தமாக இருந்தன.

'தர்மபூமியில், புனிதபூமியான குருஷேத்திரத்தில், எனது மக்களும், பாண்டுவின் புத்திரர்களும் போரிடும் ஆசைத்தீயுடன் அணிவகுத்து நிற்கிறார்கள். ஓ சஞ்சயா, அவர்கள் என்ன செய்ய வேண்டும்?'

ஒரு சத்தம் வந்தது. மனிதன் அளவுக்கு வயதான இரண்டு கற்களின் உரசலால் ஏற்பட்ட சத்தம் அது. டில்லி அருகே இருந்த ஒரு கிராமம் சத்தர்பூர். இங்கே ஒரு வீட்டில் சார்ப்பாய் (Charpoi) என்ற மரச்சட்டங்களுக்கிடையே இழுத்துக் கட்டப்பட்ட கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த அந்த உருவம் கண்விழித்துப் பார்த்தது. அவருக்கு அருகே, கற்பூர எண்ணெய் ஊற்றிய விளக்கில் நூலில் முறுக்கிய திரி ஒளிவிட்டுக் கொண்டிருந்தது. அந்த ஒளியில், அவரின் வயது முதிர்ந்த பல விடியல்களின் குறியீடுகள் தெரிந்தன. அவரது மனைவி அரைவைக் கல்லின் முன் கூன் விழுந்து அமர்ந்திருந்தார். தலையில் போர்த்தப் பட்ட புடைவைத் தலைப்பு அவரது முகத்தைப் பாதியளவு மூடியிருந்தது. தானியங்களை அந்த அரைவைக் கற்களில் பொடித்துக் கொண்டிருந்தார். இந்திய விவசாயி அடுத்த நாள் வாழ்ந்திடுவதற்கான உணவு அதுதான்.

52 வயதான ரஞ்சித்லால் என்று பெயர் கொண்ட அந்த பிராமண விவசாயி, விஷ்ணுவிடம் ஒரு வேண்டுதலை முணுமுணுத்தார். பிறகு அவர் தனது மனைவி இருக்கும் இடத்தைக் கடந்து மண் குடிசையை விட்டு வெளியே வந்தார். சத்தர்பூரில் குடியிருக்கும் மூவாயிரம் மக்களுக்குப் பொதுக் கழிப்பிடமாக இருந்த அந்த வயல்வெளியில் மங்கிய ஒளியில் கூடியிருந்த கிராமத்தின் மற்ற மக்களுடன் அவரும் சேர்ந்து கொண்டார்.

துயரங்களின் நடுவே மறுபேச்சு பேசாமல் வாழ்க்கையை நகர்த்தும் அந்த விவசாயிகளுக்கு இந்த ஆகஸ்ட் மாத விடியலின் போது அந்நியர்களின் ஆட்சி முடிவுக்கு வருவது ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. ரஞ்சித்லால் தனது வாழ்நாளில் ஒரு முறை கூட அவரது நாட்டை ஆட்சி செய்த அந்நியரில் ஒருவரிடமும் பேசியதில்லை. அவரும் அவரது கிராமவாசிகளும் ஆண்டுக்கு ஒரே ஒரு முறை மட்டும் தான். ஆங்கிலேயரைப் பார்ப்பார்கள். இந்திய அரசின் வருவாய்க்கு சத்தர்பூர் கிராமம் குறைந்த அளவு எவ்வளவு பங்களிக்கிறது

பழக்கத்தைத் துல்லியமாகத் தெரிந்து கொள்வதற்காக மாவட்ட கலெக்டர் வரும்போது தான் அவர்கள் ஆங்கிலேயரைப் பார்ப்பார்கள். அவரும் அவரது கிராமவாசிகளும் இப்போது என்ன செய்யப் போகிறார்களோ அது பற்றிய ஒரு சொற்றொடரைத்தான் இந்தியாவின் பழைய ஆட்சியாளர்களிடமிருந்து ரஞ்சித்லால் தெரிந்துவைத்திருந்தார். அதுதான் 'இயற்கை உபாதை' (Call of nature)

அந்த செயலுக்கு அவர் வெளிநாட்டு வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும், லால் ஒரு பிராமணர் என்ற முறையில், இந்து சாஸ்திரப்படி அதனைச் செய்து முடிக்க கறாராக 23 சடங்குகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. தண்ணீரால் நிறைக்கப்பட்ட ஒரு பித்தளைப் பாத்திரத்தை லால் இடதுகையில் எடுத்துச் சென்றார். அவர் உடுத்தியிருந்த வேட்டி புதியதும் அல்ல நன்கு சலவை செய்ததும் அல்ல. இயற்கை உபாதையைக் கழிக்க அவரும் அவரது கிராம வாசிகளும் அந்த இடத்தை ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்றால் அதுதான் ஆற்றங்கரையிலிருந்தும், கிணற்றிலிருந்தும், சாலையிலிருந்தும், குளத்திலி ருந்தும், புனிதமான ஆலமரத்திலிருந்தும், கிராமக் கோயிலிலிருந்தும் தூர விலகியிருந்தது.

அந்தத் திடலை அடைந்ததும், பிராமணனின் புனித நூலான முப்புரி நூலை லால் தனது இடதுகாதில் மாட்டிக் கொண்டார். தலையை மேல் துணியால் மூடினார். உடல் ரீதியாக எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு நிலத்துடன் நெருங்கி அமர்ந்து கொண்டார். அப்படிச் செய்யாமல் போனால் அவரது செயல் ஒரு சுவர் அல்லது மரத்தின் மீதிருந்து மலம் கழித்தப் பெரும் குற்றமாகி விடும். இப்படி அவர் அமர்ந்து கொண்டதன் மூலம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், நெருப்பு, வேறொரு பிராமணன், கிராமக்கோயில், ஆலமரம் என இவற்றில் எதையும் பார்ப்பதைத் தவிர்க்க முடிந்தது. மலம் கழித்து முடித்ததும் அவர் கொண்டு வந்த பித்தளைப் பாத்திரத்திலிருந்த தண்ணீரைக் கொண்டு கைகளையும் கால்களையும் சுத்தம் செய்து கொண்டார். சடங்குமுறைப்படி கிராமக்குளத்தில் குளிக்கச் செல்வதற்கு முன் அவர் இதைச் செய்தார். குளத்துக்குச் சென்ற அவர் ஒரு பிடி மண்ணை எடுத்தார். அது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதற்கும் கூட சில சம்பிரதாயங்கள் இருந்தன. அந்த மண் கரையான் உருவாக்கிய புற்றின் மண்ணாக இருக்கக் கூடாது. உவர்மண்ணாகவோ, பாண்டம் செய்யும் மண்ணாகவோ, பசு மேய்ச்சல் நிலத்தின் மண்ணாகவோ, கோயிலை ஒட்டிய பகுதியின் மண்ணாகவோ, ஆலமரத்தின் நிழல்விழுந்த மண்ணாகவோ இருக்கக்கூடாது. இந்த மண்ணோடு தண்ணீரைக் கலந்து, அதனைக் கொண்டு தனது இடது கையால் மலம் கழித்த இடத்தை அவர் கழுவினார். *

இந்தச் சடங்கு முடிந்ததும், இட்து கையில் தொடங்கி அவரது கைகளை ஐந்து முறை கழுவினார்; வலது காலில் தொடங்கி அவரது கால்களை ஐந்து முறை கழுவினார். குற்றம் ஏதும் நிகழ்ந்து விடாமல் மிகவும் கவனமாக வாயை எட்டு முறை கொப்பளித்தார். ஒவ்வொரு முறையும் கொப்பளித்த நீரை தனது உடலின் இடது பக்கத்தில் துப்பினார். இவற்றையெல்லாம் செய்து முடித்த பின்

---

* ஆசாரமான இந்துவுக்கு தொப்புள் தான் உடலின் எல்லை. அதற்குக் கீழே செய்யும் காரியங்களுக்கு இடது கையைப் பயன்படுத்த வேண்டும்; அதற்கு மேலே செய்யும் காரியங்களுக்குப் பொதுவாக வலது கை பயன்படுத்தப்படும்.

காலைக்கடனை முடிக்கும் கடைசியானதும் இருபத்து மூன்றாவதுமான சடங்குக்கு அவர் தயாரானார். விஷ்ணுவை நினைத்தபடி மூன்று மிடறு தண்ணீர் பருகினார்.

இந்தச் சடங்குகள் முடிந்த பின் ரஞ்சித்லால் அவரது குடிசைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அந்த வழியில் தான் அவரும் அவரது மனைவியும் ஏழு குழந்தைகளும் வாழ்வதற்குரிய பலவகைப்பட்ட பொருள்களைத் தரும் அவரது நிலங்கள் இருந்தன. அவற்றுக்குப் பின்னால் தொலைதூரத்தில் இருந்த ஒரு குன்றின் உச்சியில் வளர்ந்த மூன்று பெரிய கருவேல மரங்களின் கிளை களினூடே விடியற்காலைப் பொழுதின் முதல்வெளிச்சத்தை லால் பார்க்க முடிந்தது. பூமியின் தட்டையான பகுதிக்குமேல் குடைகள் போல் இருந்தன அந்தக் கிளைகள். அது அந்தக் கிராமத்தின் சுடுகாடாகும். கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக சத்தர்பூரில் இறந்தவர்கள் அங்கே வைத்துதான் எரியூட்டப் பட்டார்கள். இந்திய விவசாயியின் வாழ்க்கையில் தப்ப முடியாத நிச்சயத்தன்மை ஒன்று உண்டென்றால், அது சுடுகாட்டில் விறகுகளின் மேல் வாழ்க்கையை முடித்துக் கொள்வதுதான்.

சுடுகாட்டுக்குப் பின்னால், நிலமும் சாம்பலும் கலந்த அடிவானப் பரப்பைத் தொட்டுக் கொண்டு ஒரு ஊதாநிறக் கோபுரம் மாபெரும் சிவலிங்க அடையாளம் போல நின்று கொண்டிருந்தது. அதன் இடதுபக்கத்தில் இரண்டு கும்பங்கள் தெரிந்தன. பழைய டில்லியின் ஏழு நகரங்களில் ஒன்றினை நிறுவிய சுல்தான் அலாவுதீனின் பதின்மூன்றாம் நூற்றாண்டு கட்டுமான இடிபாடுகளில் ஒன்றுதான் அது. சரியாக இருபது மைல் வடக்கே, புது டில்லியின் அகன்ற வீதிகளில் ரஞ்சித்லாலும் அவரது கிராமவாசிகளும் இந்தக் காலைவேளையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு இடத்தில் சந்தித்தனர். அவர்களில் பலருக்கு இப்படியொரு பயணத்தை மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும். ரஞ்சித்லால் அவரது வாழ்க்கையின் 52 ஆண்டுகளில் ஒரே ஒரு முறை தான் அங்கு வந்திருக்கிறார். அவரது மூத்தமகள் திருமணத்துக்கு தங்க வளையல் வாங்கக் கடைவீதிக்கு வந்த சமயம் தான் அது.

இருப்பினும் இந்தக் காலை வேளையில், டில்லியைச் சுற்றியுள்ள கிராமங்களில் குடியிருப்போரைப் போலவே சத்தர்பூர் கிராமவாசிகளுக்கும் இது ஒன்றும் தூரமாகத் தெரியவில்லை. மகிழ்ச்சியும் வெற்றிக் களிப்பும் நிறைந்த மக்கள் கூட்டத்தினர் பேராற்றில் கலக்கும் கிளை நதிகள் போல, தலைநகருக்குள் வந்த வண்ணமிருந்தனர். காலனி ஆதிக்கம் முடிவுக்கு வருவதைத் தலைநகரின் வீதிகளில் கொண்டாடுவதற்காகவே அவர்கள் அந்தக் காலைவேளையில் வந்து குவிந்தார்கள். இவர்களில் பலருக்கு காலனி ஆட்சி நடந்தது பற்றியே தெரியாது.

## புதுடில்லி, 15 ஆகஸ்ட் 1947

'புராதனத் தலைநகரின் மேல் ஊதாநிறமும் தங்க நிறமும் கலந்து புலரும் சுதந்திரத்தின் அழகிய விடியலே' என்று இந்தியாவின் மிகப்பெரும் கவிஞர் வாழ்த்துப் பாடிட புது டில்லிக்குள் மக்கள் கூட்டம் மொய்த்தன. எல்லா

திசைகளிலிருந்தும் அவர்கள் வந்தனர். மகிழ்ச்சியோடு மணிகள் ஒலிக்க (குதிரைப்பூட்டிய) டோங்கா வண்டிகள் வந்தன. மரத்தாலான சக்கரங்களின் இடையே மரப்பலகைகள் பொருத்தப்பட்ட மாட்டு வண்டிகளிலும் மக்கள் கூட்டம். அந்த மாடுகளின் கொம்புகளிலும் குளம்புகளிலும் ஆரஞ்சு, பச்சை, வெள்ளை வண்ணங்கள் தீட்டப்பட்டிருந்தன. டிரக் வண்டிகளிலும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. அவற்றின் கூரைகளிலும் பக்கவாட்டுப் பலகைகளிலும் பாம்புகள், கழுகுகள், பருந்துகள், புனிதப் பசுக்கள், அழகிய மலையடிவார நிலப்பகுதிகள் என ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. கழுதை, குதிரை ஆகியவற்றின் மீதும் மிதிவண்டிகள் மூலமும், நடந்தும் ஓடியும் மக்கள் வந்து கொண்டிருந்தார்கள். கிராமப்புறத்தினர் அவர்கள் விரும்பிய வண்ணத்திலும் வடிவத்திலும் முண்டாசுகளைக் கட்டியிருந்தனர். பெண்கள் பளிச்சென்று விழாக்கால சேலைகளைக் கட்டியிருந்தனர். அவர்களிடம் இருந்த பொருள்களை யெல்லாம் கைகளிலும், காதுகளிலும், விரல்களிலும் மூக்குகளிலும் மினுக்க அணிந்து வந்தார்கள்.

சிறிது நேரத்துக்கு அந்த சகோதரத்துவ கூட்டத்தில் சாதி, மதம், தராதரம் எல்லாம் மறைந்து விட்டன! பிராமணர்கள், தீண்டத்தகாதோர், இந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லீம்கள், பாரசீகர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் என அனைவரும் சிரித்து மகிழ்ந்தார்கள். சில நேரங்களில் உணர்ச்சிப் பெருக்கால் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள். ரஞ்சித்லால் தாமும் தனது மனைவியும் ஏழு குழந்தைகளும் செல்ல நான்கணாவுக்கு ஒரு டோங்காவை வாடகைக்குப் பிடித்தார். அவரைச் சுற்றியுள்ள விவசாயிகள் தாங்கள் எல்லோரும் ஏன் டில்லிக்குப் போகிறோம் என்பதைத் தங்களின் உற்றார் உறவினருடன் விளக்கிக் கொண்டிருந்ததை லால் கேட்டார். 'பிரிட்டிஷ்காரர்கள் போகிறார்கள். நேரு புதிய கொடியை ஏற்றுப் போகிறார். நாம் சுதந்திரம் பெற்று விட்டோம்' என்று அவர்கள் உரத்துக் கூவினார்கள்.

வெள்ளி ஊதுகுழல்களின் பேரொலி அந்தக் காலைக் காற்றைக் கிழித்து மேலெழுந்தது. விக்டோரியா காலத்தின் பகட்டாரவாரம் முடிவுக்கு வரும் வகையில், இந்த சிறப்புமிகு நாளின் முதல் அரசு முறை நிகழ்ச்சி துவங்கியது. புதிய இந்திய டொமினியனின் முதலாவது கவர்னர் ஜெனரல் பதவியேற்கும் நிகழ்ச்சிதான் அது.

காலனியாதிக்கம் முடிவுக்கு வருவதற்கான கவுரவத்தைப் பெறவும், ஒரு பொறுப்பை ஏற்கவும் கராச்சியில் நடந்து கொண்டது போலவே இங்கும் விக்டோரியா மகாராணியின் கொள்ளுப்பேரன் சிம்மாசனத்தை நோக்கி நடந்தார். லூயி மவுண்ட்பேட்டனைப் பொறுத்தவரை 'அவரது வாழ்க்கையில் மிக முக்கியமானதும் உணர்ச்சிகரமானதுமான நாள்' தொடங்கியது. தனது கொள்ளுப்பாட்டியின் சாம்ராஜ்யத்தின் இதயப் பகுதியினுடைய அதி காரத்தைக் கைமாற்றும் நாள் தான் அது.

அவரது மனைவி வெள்ளி இழையால் பின்னப்பட்ட ஆடையையும் பொன்னிறத் தலைமுடியில் கிரீடமும் அணிந்து அவர் பக்கத்தில் நடந்து சென்றார். இந்த நாளை மிகுந்த படாடோபத்துடன் கழிக்க வேண்டும் என்று மவுண்ட்பேட்டன் தீர்மானித்திருந்தார். பண்டைய (கி.மு 4ஆம் நூற்றாண்டைச்

சேர்ந்த. மொ-ர்) டியூட்டன் இனக்குழுவின் ஆடம்பரத்துடன் விழா அமைய வேண்டும் என்பதால் இந்திய சுதந்திர விழாவின் ஒவ்வொரு விவரத்தையும் அவர் கண்காணித்தார். ஐந்து மாதங்களுக்கு முன் வைஸ்ராயாகவும், வைஸ்ராயினியாகவும் அவர்கள் பதவியமர்த்தப்பட்ட செந்நிற சிம்மாசனங்களை நோக்கி அவர்கள் சென்றபோது அவர்களுக்கு முன் வண்ண உடைகள் அணிந்த மெய்க்காப்பாளர்கள் சென்றனர்.

பளிங்காலான மேடையில் வெல்வெட் விதானத்தின் கீழ் அவர்களின் இடது வலது புறங்களில் இந்தியாவின் புதிய ஆட்சியாளர்கள் அமர்ந்திருந்தனர். பருத்தியாலான ஜோத்பூர் உடைகளுக்கு மேல் லினன் துணியாலான இடுப்பளவு கோட் அணிந்திருந்தார் நேரு. வெள்ளை வேட்டியை மேலே போர்த்தி ரோமப் பேரரசர் போலக் காட்சியளித்தார் வல்லபபாய் படேல். மற்றவர்கள் சிறிய காங்கிரஸ் குல்லாய்களை அணிந்திருந்தனர்.

அவரது இருக்கையில் அமரும்போது மவுண்ட்பேட்டனுக்கு ஒரு சுவாரசியமான நினைவு வந்தது. அவருக்குப் பக்கத்தில் அமர்ந்துள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே ஒரு அனுபவம் பொதுவானது. அவர்களில் பெரும்பாலோர் பிரிட்டிஷாரின் சிறையில் பலகாலம் கழித்திருக்கிறார்கள். மேன்மை தங்கிய மன்னரது அரசின் சிறை நிர்வாகத்தின் முன்னாள் விருந்தினர்களாக இருந்தவர்களின் முன்னால் நின்ற மவுண்ட்பேட்டன் வலது கையை உயர்த்தி சுதந்திர இந்தியாவின் முதல் ஊழியனாக நான் பணிவுடனும் நேர்மையுடனும் செயல்படுவேன் என்று கடவுளறிய பதவியேற்றார். அவரின் பதவியேற்பு முடிந்ததும், முதல்நாள் மாலையில் அளித்த உறையில் நேரு பெயர்களைக் குறிப்பிட மறந்து விட்ட, அமைச்சர்கள் பதவியேற்றனர். இந்தியாவுக்கு சுதந்திரம் அளித்த அந்த மனிதர் இவர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

வெளியே, விழா துவங்கிவிட்டதைக் குறிக்கும் வகையில் முழங்கிய 21 குண்டுகளின்* எதிரொலி, மகிழ்ச்சி பொங்கும் இந்தியத் தலைநகர் முழுவதும் பரவியது. தர்பார் மண்டபத்திலிருந்து வெளியே வந்து சிவப்புக் கம்பள வரவேற்பை ஏற்றபின் மவுண்ட்பேட்டன் தம்பதியரை ஏற்றிச் செல்வதற்காக தங்கத்தாலான வாகனம் காத்திருந்தது. இது அரை நூற்றாண்டுக்கு முன் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் அவரது ராணி மேரியும் அரசுமுறைப் பயணம் மேற்கொள்வதற்காக லண்டனைச் சேர்ந்த பார்க்கர் அண்ட் கம்பெனி என்ற நிறுவனக் கைவினைஞர்களால் செய்யப்பட்டது. அந்த வாகனத்துக்குப் பொருத்தமான ஆறு குதிரைகளுக்கு முன்னால், பளபளக்கும் கறுப்பு நிற பூட்சுகளுடனும், சவாரிக்குரிய வெள்ளை நிறக் கால் சட்டைகளுடனும், தங்க நிற எம்பிராய்டரி செய்யப்பட்ட சிவப்பு வண்ண அரைப்பட்டிகையின் மேல் வெள்ளை நிற அங்கியணிந்த கவர்னர் ஜெனரலின் மெய்க்காப்பாளர்கள் கூடியிருந்தனர். ஒரு பழைய கதைப் புத்தகத்தில் சித்திரிக்கப்படுவதுபோல், அச்சுறுத்தும் வேல்களையும் ஈட்டிகளையும் ஏந்திய வீரர்கள், மல்யுத்த மற்றும் குதிரையேற்ற வீரர்கள், வண்ணச் சீருடையணிந்த பாதுகாவலர்கள், இணைப்புப் படையினர், குழலூதும் குழுவினர், தளபதிகள், தங்கம் மற்றும்

* பழைய வைஸ்ராய்க்கு அளித்த 31 குண்டு முழக்க மரியாதை, அரசியல் சட்டப்படியான கவர்னர் ஜெனரல் என்பதால் 21 குண்டு முழக்கமாகக் குறைக்கப்பட்டது.

மஞ்சள் நிறச் சரிகை மின்ன உலகின் சிறந்த நான்கு தொகுதி குதிரைப்படையினர் புடைசூழ, பிரிட்டிஷ் ராஜ்யத்தின் கடைசி அணிவகுப்பான, அந்த மாபெரும் ஊர்வலம், வைஸ்ராய் மாளிகையிலிருந்து புறப்பட்டது.

எளிய மக்களின் வாழ்த்துக்களையும் வணக்கங்களையும், அரசப்பாரம்பரிய முறையில் மனமிரங்கி ஏற்றுக் கொள்வதைப்போல், வணங்காமலும் அதே சமயம் கருணை பூத்த முகபாவனையோடும், தலையசைத்துக் கொண்டும் மவுண்ட் பேட்டன் தம்பதியினர் சென்றனர். ராணுவ வீரர்களின் மரியாதையை விறைப்பாக ஏற்றுக் கொண்டு அவர்களின் வாகனம் லுட்யன்சின் அரண்மனையின் மாபெரும் இரும்புக் கதவுகளைக் கொண்ட வாயிலை நோக்கிச் சென்றது. அதற்கு வெளியே இந்தியா காத்திருந்தது.

இத்தகைய இந்தியாவை எந்த ஒரு ஆங்கிலேயரும் கடந்த முந்நூறு ஆண்டுகளில் இதுவரை பார்த்ததில்லை. ஆட்சியாளர்கள் அரங்கேற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்து மகிழவோ, பிரிட்டிஷ் அரசின் ஆடம்பர விளையாட்டுகளைக் கண்டு வியக்கவோ ஆர்வமுற்று வந்த கூட்டம் அல்ல இது. இந்தியாவின் பரிமாணமே அதன் மக்கள் தொகை தான். இன்று அந்த மக்கள் அதே எண்ணிக்கையில் புது டில்லிக்குள் புகுந்திருக்கிறார்கள். இவ்வளவு மக்கள் திரளை இதற்குமுன் பார்த்ததேயில்லை. உற்சாகம் பொங்கிய, உணர்ச்சிப் பிழம்பான, கட்டுக்கடங்காத மக்கள் கூட்டம் ஊர்வலத்தைச் சூழ்ந்து கொண்டது. இதனால் மெய்க்காப்பாளரின் குதிரைகள் மெல்ல நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மவுண்ட்பேட்டன் வகுத்த ஒழுங்கு முறைகள், கவனத்துடன் செய்த ஏற்பாடுகள், முன்பிருந்த இந்தியாவுக்கென்று அவர் கணித்த பாரம்பரியங்கள் எல்லாம் சீர்குலைந்தன. இன்று பிறந்த புதிய இந்தியாவினால் அவை சூழப்பட்டு விட்டன. மீறப்பட்டு விட்டன. மெய்சிலிர்த்துப் பொங்கியெழும் மாநிற மக்கள் கூட்டத்தின் மகிழ்ச்சிக் கடலுக்குள் தங்கம் மற்றும் ஊதா நிற உடையணிந்தவர்கள் மூழ்கிப் போயினர்.

மவுண்ட்பேட்டனின் ஊர்வலப்பாதையில் சிக்கிக் கொண்ட அந்த சீக்கியப் பத்திரிகையாளர், ஓர் இரவுக்கு முன்னால் முஸ்லீம் மருத்துவ மாணவிக்கு முத்தமிட்டு சுதந்திரத்தைக் கொண்டாடியவர், 'என்னைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வளையங்கள் எல்லாம் இற்றுவிட்டன' என்று எண்ணினார். சிறுவனாக இருந்த போது ஆங்கிலேய பள்ளிச் சிறுவன் தன்னை நடைபாதையிலிருந்து விரட்டியதை அவர் நினைவு கூர்ந்தார். 'இப்போது எவரும் என்னிடம் அப்படி நடந்து கொள்ள முடியாது' என்றும் நினைத்தார். அந்த மாபெரும் மக்கள் திரளில், ஏழையோ பணக்காரனோ, தீண்டத் தகாதவர்களோ எஜமானர்களோ, வழக்கறிஞர்களோ, வங்கி குமாஸ்தாக்களோ, கூலிகளோ, களவு செய்வோரோ இல்லை என்பதை அவர் கணித்தார். மகிழ்ச்சியடைந்த மக்கள் தழுவிக் கொள்கிறார்கள். ஒருவருக்கு ஒருவர் இப்படி பேசிக் கொண்டார்கள்: 'ஆசாத் சாஹிப், நாமெல்லாம் சுதந்திரம் அடைந்து விட்டோம்!'

மகிழ்ச்சியால் பெருங்குழப்பம் ஏற்பட்ட இந்தக் காட்சியை நேரில் பார்த்த ஒருவர் இப்படிக் குறிப்பிட்டார்: 'ஒட்டுமொத்த பேரும் ஒரே நேரத்தில் தங்களின் வீட்டை மீண்டும் கண்டு விட்ட மனநிலையில் இருந்தார்கள்' டில்லியில் ராணுவ அதிகாரிகளின் உணவுக் கூடத்தின் உச்சியில் முதன் முறையாகத் தனது

நாட்டின் கொடி பறப்பதைக் கண்ட இந்திய ராணுவ அதிகாரி மேஜர் அஸ்வினி துபே இப்படி நினைத்தார்: உணவுக் கூடத்தில் இதுவரை இரண்டாந்தரத்தினராக இருந்தோம். இனி மேல் சகோதர இந்திய அதிகாரிகளைத் தவிர வேறெவரும் நமக்கு மேல் இருக்க முடியாது'

சாமான்ய இந்தியர்கள் பலரும் சுதந்திரம் என்ற மந்திரச் சொல் ஒரு புதிய உலகத்தைக் கொடுத்து விட்டதாக நினைத்துக் கொண்டார்கள். 'இந்தியா சுதந்திரம் அடைந்து விட்டதால் இனிமேல் சாப்பிட நிறையவே கிடைக்கும்' என்று சத்தர்பூர் விவசாயி ரஞ்சித்லால் தனது குழந்தைகளுக்கு வாக்குறுதி அளித்தார். பேருந்துகளில் பயணக்கட்டணம் தர மக்கள் மறுத்து விட்டார்கள் இனி எல்லாமே தங்களுக்கு இலவசம் என்று அவர்கள் கருதிக் கொண்டார்கள் வெளிநாட்டுத் தூதரகப் பிரதிநிதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்துக்கு எளிய பிச்சைக்காரர் ஒருவர் சென்றார். ஒரு காவலர் மறித்து அவரிடம் அழைப்பிதழ் இருக்கிறதா என்று கேட்டார்.

'அழைப்பிதழா? எனக்கு எதற்கு அழைப்பிதழ்? நான் சுதந்திரம் பெற்று விட்டேன். அதுவே போதும்' என்று அவர் பதிலளித்தார்.

நினைவில் கொள்ளத்தக்க இந்த மாலைநேரத்தில் தலைநகர் டில்லியைப் போலவே இந்தியா முழுவதும் மகிழ்ச்சிகரமான காட்சிகள் இருந்தன கல்கத்தாவில் காலை 8 மணிக்கு நகரின் குடிசைப்பகுதியிலிருந்து ஒரு கூட்டம் கவர்னரின் மாளிகைக்குள் நுழைந்து விட்டது. அப்போது அந்த மாளிகையின் ஒரு பகுதியில் பிரிட்டிஷ் அரசின் கடைசி கவர்னரான சர் ஃபிரடரிக் பர்ரோசும் (Sir Frederick Burrows) அவரது மனைவியும் காலைச் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தனர். உள்ளே நுழைந்த கூட்டம் விசாலமான கூடங்களில் ஓடியாடி மகிழ்ந்தது. இந்தக் கும்பலின் ஒரு பிரிவு பர்ரோஸின் படுக்கை யறைக்குள் நுழைந்தது. அழுக்குத் துணிகளை அடுக்கி அல்லது (சார்ப்பாய் Charpoi) மரக்கயிற்றுக் கட்டிலில் படுத்ததைத் தவிர மெத்தென எதிலும் படுத்துத் தூங்கியறியாத அவர்கள், சந்தோஷமடைந்த குழந்தைகள் குதித்து விளை யாடுவது போல், பஞ்சணை மீதேறி மேலும் கீழும் குதித்து கும்மாளமிட்டு சுதந்திரத்தைக் கொண்டாடினார்கள். ஒரு மணி நேரத்திற்கு முன் இந்தப் பஞ்சணையில் தான் கவர்னரின் மனைவி படுத்துறங்கினார். மாளிகையின் மற்ற சில பகுதிகளில், தங்களின் குடைகளின் கூர் நுனிகளால் இந்தியாவின் முந்தைய ஆட்சியாளர்களின் எண்ணெய் வண்ண ஓவியங்களைக் குத்தி உடைத்து மற்றவர்கள் இந்திய சுதந்திரத்தின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

ட்ராம் வண்டிகளும் ட்ராலி வண்டிகளும் அன்று முழுவதும் கட்டணம் வசூலிக்காமல் ஓடின. இந்த நாளில் துப்பாக்கிச் சத்தங்களின் எதிரொலிதான் கேட்கும் என்று அஞ்சிக் கொண்டிருந்த ஒரு நகரில் மகிழ்ச்சிகரமான சத்தங்கள் கேட்டன. பட்டாசுகளின் வெடிச்சத்தம் தான் அது.

பம்பாயில் ஆவேசமுற்ற ஒரு கூட்டம் பேரரசின் கட்டமைதி கொண்ட தாஜ்மகால் ஹோட்டலுக்குள் புகுந்தது. சென்னையில், கருநிறத் தென்னிந்திய மக்கள் கூட்டம், முன்னால் அகழியுள்ள புனித ஜார்ஜ் கோட்டைக்குள் நாள் முழுவதும் வந்தவண்ணமிருந்தனர். பிரிட்டிஷாரின் கிழக்கிந்திய கம்பெனி அமைத்த முதலாவது கோட்டையின் உச்சியில் தேசியக்கொடி பறப்பதை

அவர்கள் பெருமிதத்துடனும் ஆனந்தப் பரவசத்துடனும் பார்த்தார்கள். கேப்டன் ஹாக்கின்ஸ் (Captain Hawkins) பிரிட்டனின் இந்தியாவுக்கான சாகசச் செயலைத் துவக்கி வைத்த சூரத்தின் வளைகுடா பகுதியில் டஜன் கணக்கான படகுகளை அலங்கரித்து சுதந்திரத்தைக் கொண்டாடினார்கள்.

இந்தியாவின் சுதந்திரம் ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களுக்கு உண்மையில் அனுபவிக்கத்தக்க சுதந்திரத்தை அளித்தது. சுதந்திர தின சலுகையாக மன்னிப்பு அளிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான குற்றவாளிகள் சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். மரண தண்டனைகளும், குறைக்கப்பட்டன. மெய்ஞ்ஞானிகளின் இந்தியாவும், ஊர்தோறும் திரியும் ஃபக்கீர்கள் மற்றும் ஆவிக்கதைகள் நிறைந்த இந்தியாவும் விழாவில் பங்கேற்றன. தென்பகுதியில் உள்ள திருக்கழுகுன்றத்தில் விசித்திரமான ஒரு ஜோடி வெள்ளைக் கழுகுகள் ஒவ்வொரு நாள் நண்பகலிலும் வானத்திலிருந்து சிறகடித்து இறங்கி வந்து உள்ளூர் சாதுவின் கைகளிலிருந்து அவற்றுக்கான உணவைப் பெற்றுச்சென்றன. இப்போது அவை சிறகுகளை விரித்து அசைத்தது மகிழ்ச்சியான நேரத்தை மதிப்பதற்கான சைகை போல் தோன்றியது. சென்னை அருகே உள்ள மதுரையின் வனப்பகுதியில், சில புனித மனிதர்கள் தடை செய்யப்பட்ட கொக்கி மாட்டி ஆடும் ஆட்டத்தில் ஈடுபட்டனர். இரும்புக் கொழுமரம் ஒன்றின் உச்சியிலிருந்து, தனது முதுகுத்தசையில் கொக்கியைச் செருகி, தூக்கில் தொங்குவது போல் தொங்கினர். வாய்பிளந்து இதனைப் பார்த்தன மக்கள் கூட்டம். இந்தியச் சுதந்திரத்துக்காக மட்டுமின்றி அவர்களுக்கு நிறைய காசுபணம் கிடைக்கவும் இதனை அவர்கள் செய்தனர்.

அந்த நாளில் எல்லா இடங்களிலும் நடந்த நிகழ்ச்சிகளின்போது பிரிட்டிஷாரின் நல்லெண்ணமும் பெருந்தன்மையும் வெளிப்பட்டது. ஆனால் அவர்களில் பலருக்கு இவையெல்லாம் வருத்தமளிப்பதாகவும், பழமையை நினைவூட்டுவதாகவும் இருந்தன. ஷில்லாங்கில் அசாம் ரைஃபிள் படைப் பிரிவின் பிரிட்டிஷ் அதிகாரி, சுதந்திர தின அணிவகுப்பு மரியாதையை ஏற்கு மாறு தனது துணைத் தளபதியான இந்தியரிடம் ஒப்படைத்து விட்டு தாமாகவே கீழிறங்கி விட்டார். பர்மாவின் எல்லைப்பகுதி அருகே உள்ள மிகப்பெரிய சூபா (Chuba) தேயிலைத் தோட்ட நிர்வாகியான பீட்டர் புல்லாக் (Peter Bullock) தோட்டத்திருவிழா (Field Day)வுக்கு ஏற்பாடு செய்திருந்தார். இந்த விழாவில் முட்டையும் கரண்டியும், சாக்குப்பந்தயம் போன்ற பந்தயங்களில் 1500 தொழிலாளர்களும் பங்கேற்றனர். எதிர்பாராத ஒரு விடுமுறை நாளாகக் கிடைத்த இந்நாளில் இந்த விழா ஏன் கொண்டாடப்படுகிறது என்பது கூட அவர்களில் பெரும்பாலோர்க்குத் தெரியவில்லை.

சில விதிவிலக்குகளும் இருந்தன. சிம்லாவில் திருமதி மவ்டே பென் மாண்டேகு (Mrs Maude Penn Montague) தனது இல்லத்திலிருந்து வெளியே வர மறுத்து விட்டார். இந்த வீட்டில் அவர் ஏராளமான நடன நிகழ்ச்சிகளையும் இரவு நேர விருந்துகளையும் நடத்தியிருக்கிறார். தாம் துக்கத்தில் இருப்பதாக அவரே கருதிக் கொண்டார். அவரும் அவரது தந்தையும் துணைக்கண்டத்தில் பிறந்ததால், இந்தியா அவரின் தாயகமானது. இங்கிலாந்தில் ஐந்து ஆண்டுகள் பள்ளிக்கல்வி பெற்றது தவிர அவரது மொத்த வாழ்க்கையையும் இந்தியாவில் தான் கழித்தார். இங்கிருந்து புறப்பட வேண்டிய காலம் இப்போது வந்து

விட்டது என்று கூறிய நண்பர்களிடம் அவர் இவ்வாறு கூறினார்: 'நண்பர்களே! இங்கிலாந்தில் நான் என்ன செய்யக்கூடும்? ஒரு கோப்பை தேநீர் தயாரிக்க, தண்ணீர் சுட வைக்கக்கூட நான் அறியேன்' பிரிட்டிஷ் அரசின் கோடைகால முன்னாள் தலைநகரில் விழா நடந்த போது அவர் தனது வீட்டில் அழுது கொண்டிருந்தார். அவரது நேசத்துக்குரிய யூனியன் ஜாக் கொடி பறந்த கம்பத்தில், இன்னொரு தேசத்தின் கொடி பறக்க விருப்பதைக் காண, அவரால் முடியவில்லை.

துணைக்கண்டத்தில் பிறந்த மற்றொரு பெரிய டொமினியனுக்கும் ஆகஸ்ட் 15 மிக முக்கியமான நல்ல நாள் தான். புனித ரம்ஜான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையாகும் அது. நாட்டுக்காக நடத்திய விழா அளவுக்கு நாட்டின் நிறுவனருக்கும் மக்கள் விழா நடத்தினார்கள். ஜின்னாவின் படமும் பெயரும் வீட்டு ஜன்னல்களிலும், கடைவீதிகளிலும், கடைகளிலும், நகர வீதிகளை அடைத்துக் கொண்டு வைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான வெற்றி விழா வளைவுகளிலும் இடம் பெற்றன. லாகூர் விலங்குகள் காட்சி சாலையில் இருந்த ஒட்டகங்களும், குரங்குகளும், புலிகளும் தங்களைப் பாதுகாப்போரின் உற்சாகக் குரல்களோடு சேர்ந்து கொண்டு காயித் - இ -ஆசமுக்கு வாழ்த்துகள் கூறின. 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என முழக்கமிட்டன என்று பாகிஸ்தான் டைம்ஸ் இதழ் செய்தி வெளியிட்டிருந்தது. புதிய டொமினியனின் கிழக்குப் பகுதிக்குத் தலைநகரான டாகாவில் கொடிகள் எதுவும் காணப்படாமல் இருக்கலாம். ஆனால் எல்லா இடங்களிலும் தலைவரின் படங்கள் இருந்தன. இந்தப் பகுதிக்கு அவர் ஒருபோதும் பயணம் செய்ததில்லை.

சடங்குகளுக்கு உட்பட்ட அலுவலகத்தில் முழு அதிகாரத்தையும் தாமே எடுத்துக் கொண்டு ஜின்னாவும் அந்த நாளைக் கொண்டாடினார். அரசியல் அமைப்புச் சட்ட நடைமுறையில் நம்பிக்கையை வெளிப்படுத்தாத லண்டனில் பயிற்சி பெற்ற வழக்கறிஞரான அவர், தனது வாழ்நாளின் எஞ்சிய சிறிது காலத்தில் புதிய தேசத்தை சர்வாதிகாரியாக இருந்துதான் ஆட்சி நடத்தினார்.

அவருக்கு மிகவும் நெருங்கிய உறவினர்கள் கூட அவருடன் இல்லாத நிலையில் தான் அவர் இதனை நிறைவேற்றினார். கராச்சியிலிருந்து 500 மைல் தொலைவில் உள்ள பம்பாயின் புறநகரில் பெரும்பாலும் வசதிபடைத்தவர்கள் வாழும் கொலாசியா (Colesia) அடுக்குமாடி குடியிருப்பில் ஒரு இளநங்கை தனது வீட்டுப் பால்கனியை இரண்டு கொடிகளால் அலங்கரித்தார். ஒன்று இந்தியாவுடையது; இன்னொன்று பாகிஸ்தானுடையது. மற்ற பலரைப் போலவே அந்தப் பெண்ணுக்கும் சுதந்திர தினம் ஊசலாட்டமான உணர்வுகளையே ஏற்படுத்தியது என்பதற்கு எடுத்துக்காட்டாய் இது விளங்கியது. முகமது அலி ஜின்னாவின் ஒரே மகளான டினா (Dina) எந்த நாட்டில் இருப்பது என்பதை முடிவு செய்ய இயலாதவராக இருந்தார். ஒன்று அவர் பிறந்த நாடான இந்தியா; மற்றொன்று அவரது தந்தையால் உருவாக்கப்பட்ட இஸ்லாமிய நாடான பாகிஸ்தான்.

இந்த மனநிறைவு கொண்ட சுதந்திர தினத்துக்குப் பின்னால் மறைந்திருக்கும் பயங்கர நாடகத்தை உய்த்துணர்ந்த இந்தியர்களில் பலருக்கு, மற்றவர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. லக்னோவில் அனிஸ் கித்வாய் (Anis Kidwai) என்பவர் முன்னுக்குப் பின் முரணாய் அமைந்த காட்சியை

...ம்போதும் நினைத்துக் கொண்டிருந்தார். ஒரு கூட்டம் மகிழ்ச்சியாக ...த்தபடி கொடிகளை அசைத்துக் கொண்டிருந்ததையும், பஞ்சாபில் ...களின் நெருங்கிய உறவினர்கள் சற்று முன் தான் கொல்லப்பட்டார்கள் ...பதை அறிந்து மற்றொரு கூட்டம் கண்ணீர் விட்டு அழுது கொண்டி...ந்ததையும் பார்த்தவர் அவர்.

புது டில்லியைச் சுற்றிலும் இருந்த மக்கள் திரளின் மகிழ்ச்சி பற்றி முற்றிலும் ...றுபட்ட கருத்துக் கொண்டிருந்தார், லாகூரைச் சேர்ந்த சீக்கிய வழக் ...றிஞரான குஷ்வந்த் சிங். 'நான் மகிழ்ச்சியடைய எதுவுமே இல்லை' என்று அவர் கசப்புடன் நினைவு கூர்ந்தார். 'எனக்கும் என்னைப் போன்ற லட்சக்கணக் ...னவர்களுக்கும், சுதந்திர தினம் என்பது ஒரு சோகம் தான். அவர்கள் ...ஞ்சாபை சிதைத்து சீரழித்து விட்டார்கள். நான் அனைத்தையும் இழந்து ...ட்டேன்.'

## பஞ்சாப், 15 ஆகஸ்ட் 1947

இந்தியாவின் மகிழ்ச்சி நிறைந்த சுதந்திரதினம் பஞ்சாபுக்கு ஒரு கொடிய நாளாகவே அமைந்தது. அதன் பழமையான பசுமை நிறத்தைச் சிதைத்துக் கொண்டு தோன்றிய மகத்தான சுதந்திர விடியலின் நிறம் ஊதாவும் தங்க நிறமுமாக இருக்கவில்லை; செந்நிறமாக இருந்தது. அமிர்தசரஸில் உள்ள மொகலாயக் கோட்டையில் நகரின் புதிய அதிகாரிகள் கடமை உணர்வோடு சுதந்திர தினச் சடங்குகளை செய்து கொண்டிருக்கும் வேளையில், ஒரு மைல் தூரத்துக்கு உட்பட்ட பகுதியில் ஒரு வெறிபிடித்த சீக்கியர்கள் கூட்டம், தங்களின் அண்டை வீட்டார்களான முஸ்லீம்களைக் கொன்று குவித்தனர். ஆண்களை விதிவிலக்கின்றியும் ஈவிரக்கமின்றியும் அவர்கள் கசாப்பு செய்தனர். பெண்கள் துகிலுரியப்பட்டார்கள். பலமுறை கற்பழிக்கப்பட்டார்கள். பின்னர் அஞ்சி நடுங்கிய அவர்களை நகரத்தின் வழியே நடத்தி பொற்கோவிலுக்குக் கொண்டு சென்றார்கள். அங்கே பலரின் கழுத்துகள் வெட்டி வீழ்த்தப் பட்டிருந்தன.

சீக்கியர் மாநிலமான பாட்டியாலாவின் புறநகர்களில் சீக்கிய குழுக்கள் சுற்றித்திரிந்தன. எல்லைக் கடந்து பாகிஸ்தானுக்குத் தப்பித்து ஓடும் முஸ்லீம்கள் மீது அவர்கள் திடீர்த் தாக்குதல் நடத்தினர். மகாராஜாவின் சகோதரரான இளவரசர் பலீந்திரசிங் (Balindra Singh) இப்படிப்பட்ட ஒரு குழுவை நீண்ட கத்திகளுடன் பார்த்து திடுக்கிட்டுப் போனார். கிராமங்களுக்குத் திரும்பிச் செல்லுங்கள் என்று வேண்டிக் கொண்டார். 'இது அறுவடைக்காலம். வீட்டுக்குத் திரும்பி உங்களின் விளைபொருள்களை அறுங்கள்' என்றும் அவர் கூறினார்.

காற்றைக் கிழித்துக் கொண்டு கத்தியை வீசிய அந்தக் கும்பலின் தலைவன் பதிலளித்தான்: 'முதலில் அறுத்திட வேறொரு பயிர் இருக்கிறது.'

செங்கற்களால் கட்டப்பட்ட அமிர்தசரஸ் ரயில் நிலையம் ஒரு வகையில் அகதிகள் முகாமாகவே மாறிவிட்டது. பாகிஸ்தானின் பாதியாகிவிட்ட பஞ்சாபிலிருந்து ஓடிவந்த ஆயிரக்கணக்கான இந்துக்கள் அங்கே தங்கி

யிருந்தார்கள். பயணிகள் தங்கும் அறை, பயணச்சீட்டு வழங்கும் அறை பிளாட்பாரங்கள் ஆகியவற்றில் மொய்த்துக் கிடந்த அந்த மக்கள், அங்கே வந்து சேரும் ஒவ்வொரு ரயில் வண்டியிலும் காணாமல் போன தங்களின் உறவினர்களும் நண்பர்களும் இருக்கிறார்களா என்று தேடத் தயாரானார்கள்.

ஆகஸ்ட் 15 பிற்பகலில் அந்த ரயில் நிலையத்தின் ஸ்டேஷன் மாஸ்டர் சானிசிங் (Chani Singh) தனக்கேயுரிய நீலத்தொப்பி மற்றும் சிவப்புக் கொடியுடன், பைத்தியம் பிடித்தவர்கள் போல் அழுது கொண்டிருக்கும் கூட்டத்துக்கிடையே வழியேற்படுத்திக் கொண்டு வந்தார். பத்தாம் எண் ரயில் வண்டி வந்து சேரும் போது மீண்டும் பழைய காட்சியையே காண அவர் தயாராகிவிட்டார். அவரது நிலையத்துக்கு ஒவ்வொரு ரயில் வரும்போதும் நடந்த அதே காட்சிதான் இப்போதும் நடக்கப் போகிறது. அழுக்கேறிய மஞ்சள் நிற மூன்றாம் வகுப்புப் பெட்டிகளின் ஜன்னல்கள், கதவுகள் அருகே ஆண்களும் பெண்களும் ஓடிச்சென்று அவசரமாகத் தாங்கள் ஓடிவரும் போது விட்டு விட்டக் குழந்தைகளைத் தேடுவார்கள். பெயர்களைச் சொல்லி கூவுவார்கள். அழுகையும் ஆவேசமும் கொண்ட அவர்கள் ஒருவரைஒருவர் தள்ளிவிட்டுக் கொள்வார்கள், விழுந்து எழுவார்கள். ஒவ்வொரு பெட்டியாக ஓடி அழுகையுடன் தேடியலைந்த மக்கள் தங்கள் உறவினர்களின் பெயரைச் சொல்லி அழைப்பார்கள். ஏதாவது செய்தி கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்ப்புடன் தங்களின் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா என்றும் பார்ப்பார்கள். சரக்கு மூட்டைகளின் மீது விசும்பிக் கொண்டு கிடந்தன அனாதைக் குழந்தைகள். தப்பியோடி வரும் போது பிறந்த குழந்தைகளை அவற்றின் தாய்மார்கள் துயரம் தோய்ந்த மக்கள் கூட்டத்துக்கு நடுவேயிருந்து பராமரித்தார்கள்.

பிளாட்பாரத்தின் தலைப்பகுதியில் தனது இடத்தில் நின்று கொண்ட சிங், வந்து கொண்டிருந்த ரயில் என்ஜின் நிற்பதற்குக் கொடியை அசைத்தார். மிகப் பெரிய அந்த இரும்பு உருவம் உருண்டு வந்து அவரது தலைக்கு மேல் உயர்ந்து நின்ற போது சிங் ஒரு வித்தியாசமான காட்சியைக் கண்டார். ஆயுதம் தாங்கிய நான்கு வீரர்கள் துயரம் தோய்ந்த ஓட்டுநர்களுக்குப் பாதுகாப்பாக நின்றிருந்தனர். ஹிஸ்... என்ற ஓசையுடன் நீராவி வெளியேறுவதும், பிரேக்குகளின் கிறிச்சிடும் ஒலியும் நின்ற போது, ஏதோ ஒரு பயங்கரமான விபரீதம் நடந்திருப்பதாக சிங் திடீரென்று உணர்ந்தார்.

பிளாட்பாரத்தில் இரைச்சலிட்டுக் கொண்டு நெருக்கியடித்திருந்த கூட்டம் இப்போது செயலற்று அமைதியாய் உறைந்து போய்விட்டது. அவர்கள் கண்முன் தெரிந்த காட்சியே இதற்குக் காரணம். எட்டு பெட்டிகளின் கீழ்ப் பகுதியை சிங் கூர்ந்து கவனித்தார். அந்தப் பெட்டிகளின் ஜன்னல்கள் அனைத்தும் அகலத் திறந்திருந்தன. ஆனால் அவற்றில் எதிலும் ஒரு மனிதர் கூட நின்று கொண்டிருப்பது தெரியவில்லை. அந்தப் பெட்டிகளின் கதவு ஒன்றும் திறந்திருக்கவில்லை. ஒரு நபர் கூட அந்த ரயிலிலிருந்து இறங்கவில்லை. அந்த ரயில் முழுவதும் பூதங்கள் தான் வந்திருந்தன.

அந்த ஸ்டேஷன் மாஸ்டர் முதல் பெட்டி அருகே விரைந்து நடந்தார். கதவை இழுத்துத் திறந்தார். உள்ளே அடியெடுத்து வைத்தார். அமிர்தசரசில் அன்று இரவு எக்ஸ்பிரஸ் ரயிலிலிருந்து ஒருவர் கூட இறங்காதது ஏன் என்பதை

அவர் இப்போது புரிந்து கொண்டார். அந்தப் பெட்டிகள் நிறைய வந்திருந்தவை பூதங்கள் அல்ல. மனித உடல்கள். அந்தப் பெட்டியின் தளப்பகுதி முழுவதும், இறந்து போன மனித உடல்கள் குவிந்து கிடந்தன. கழுத்து வெட்டப்பட்டவை; மண்டை பிளக்கப்பட்டவை; குடல் சரிந்தவை. ரயில்பெட்டிகளின் ஓரப்பகுதி களில் கைகளும், கால்களும், தலையற்ற முண்டங்களும் சிதறிக்கிடந்தன. அவரது காலடியில் கிடந்த மனிதப் பிணக்குவியலுக்கு மத்தியில் எங்கிருந்தோ முனகி முணுக்கும் சத்தம் வருவதை சிங் கேட்டார். அவர்களில் சிலர் உயிருடனிருக்கக் கூடும் என்பதை உணர்ந்த சிங் உரக்கக் கூறினார். 'நீங்கள் அமிர்தசரஸில் இருக்கிறீர்கள். இங்கே இருக்கும் நாங்கள் இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள். காவல்துறையினரும் இருக்கிறார்கள் அஞ்சாதீர்கள்.'

அவரது வார்த்தைகளைக் கேட்டவுடன் அந்தப் பிணக்குவியலிலிருந்து சிலர் முனகினர். அந்தக் கோரக் காட்சிகளைத் தொடர்ந்து நடந்தவை ஸ்டேஷன் மாஸ்டரின் மனதில் அழிக்க முடியாமல் பதிந்து விட்டன. ஒரு பெண் அவளுக்குப் பக்கத்தில் உறைந்து கிடந்த ரத்தச் சகதியிலிருந்து துண்டிக்கப்பட்ட கணவனின் தலையை எடுத்தாள். அதனைத் தனது கைகளில் பிடித்துக் கொண்டு கதறி அழுதாள். கசாப்பு செய்யப்பட்ட தங்களின் தாய்மார்களின் உடல்களை அசைத்து அசைத்துக் குழந்தைகள் அழுததை அவர் கண்டார். மனித உடல்களின் குவியலுக்குள்ளிருந்து துண்டு துண்டாக்கப்பட்ட குழந்தை களைக் கண்டெடுத்த தந்தையர் அதிர்ச்சி அடைந்தனர். பிளாட்பாரத்தில் இருந்த மக்களுக்கு என்ன நடந்துள்ளது என்பது புரிந்து விட்டது. அவர்கள் அழுது அரற்றினார்கள். பலர் பைத்தியம் பிடித்தது போலானார்கள்.

மரத்துப் போன மனநிலையுடன் வரிசையாகக் கிடந்த சடலங்களுக் கிடையே நடந்து சென்றார் ஸ்டேஷன் மாஸ்டர். ஒவ்வொரு பெட்டியிலும் இது போன்ற காட்சிதான். கடைசிப்பெட்டியை அவர் அடையும் போது அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டது. பிளாட்பாரத்துக்குத் திரும்பி வந்தார். பிணவாடை அவரது மூக்கைத் துளைத்தது. 'இப்படியொரு செயலைக் கடவுள் எப்படி அனுமதித்தார்?' சிங் யோசித்தார்.

அவர் மீண்டும் திரும்பி ரயில் வண்டியைப் பார்த்தார். அப்போது கடைசிப் பெட்டியில் கொலைகாரர்கள் சுண்ணாம்பால் எழுதியிருந்த வாசகங்களை அவர் கண்டார். 'நேருவுக்கும் படேலுக்கும் இந்த ரயில் வண்டி எங்களின் சுதந்திரப் பரிசு' என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

கல்கத்தாவின் குடிசைப்பகுதிகளில் அந்த விசித்திரமான முதியவர் செய்த நம்ப முடியாத மந்திரச் செயலால் பிரார்த்தனைக் கூட்டங்களும் நூற்பு வேள்விகளும் நடைபெற்றன. பஞ்சாபில் நடந்ததை விட அளவிலும் கொடூரத்தன்மையிலும் அதிகமாக இங்கே தான் வன்முறைகள் நிகழும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். முதல் நாள் மாலை ஹைதாரி இல்லத்துக்கு நடத்தப்பட்ட ஊர்வலத்தின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதி உண்மையானது. ஓராண்டுக்கு முன் நேரடி நடவடிக்கை தினத்தன்று கல்கத்தாவில் மனித உடல்கள் சிதறிக் கிடந்த சாலைகளிலும் வீதிகளிலும் இப்போது முஸ்லீம்களும் இந்துக்களும் அணிவகுத்து ஒன்றிணைந்து கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். 'ஓராண்டு காலத்துக்கு மூடியிருந்த பைத்தியக்காரத்தன மேகங்கள் விலகி திடீரென்று

நல்லறிவு நல்லெண்ணம் என்ற சூரிய ஒளி பாய்ந்தது போல்' இது இருந்தது என்று காந்தியின் செயலாளர் பியாரேலால் நய்யார் (Pyarelal Nayar) எழுதினார்.

கல்கத்தாவின் சூழ்நிலை நம்ப முடியாத அளவுக்கு மாறியிருக்கிறது என்பதை அறிவிப்பதாக அன்று விடியற்காலை நேரத்தில் மற்றொரு ஊர்வலம் ஹைதாரி இல்லத்துக்கு வந்தது. இதில் வந்தவர்கள் எல்லாம் இளம் பெண்கள். இந்துக்களும் முஸ்லீம்களுமான அவர்கள் காந்தியைத் தரிசிப்பதற்காக நள்ளிரவிலிருந்து நடந்து வந்தார்கள். மகாத்மாவைக் கண்டதன் மூலம் விவரிக்க முடியாத ஆன்மீகக் கூட்டுறவு ஏற்பட்டதாக அவர்களுக்குத் தோன்றியது. ஹைதாரி இல்லத்துக்கு அந்த நாள் முழுவதும் வந்த யாத்திரிக வெள்ளத்தின் இடைவெளி இல்லாத முதல் பிரவாகமாக இருந்தது இந்த ஊர்வலம்.

அரைமணி நேரத்துக்கு ஒரு முறை, காந்தி தனது தியானத்துக்கும், நூற்பு வேள்விக்கும் இடையே வாசலுக்கு வந்து அங்கே கூடியிருந்த மக்களுக்குக் காட்சி அளித்தார். ஏனெனில் இந்த நாளினை அவர் துக்க நாளாகக் கருதினார். சுதந்திரத்துக்காக அவர் தலைமை தாங்கிய மக்களுக்குப் பொதுவான வாழ்த்துச் செய்தி எதையும் அவர் தயாரித்திருக்கவில்லை. அவரது உரை தன்னெழுச்சியாக வந்தது. மேலும் இந்திய மக்களுக்குரியதாக அவரது உரை இருக்கவில்லை; புதிய ஆட்சியாளர்களுக்குரியதாக அது இருந்தது.

'அதிகாரத்திடம் எச்சரிக்கையாக இருங்கள்' அவரது ஆசியைப் பெற வந்த அரசியல்வாதிகளைக் கொண்ட ஒரு குழுவை அவர் எச்சரித்தார். 'அதிகாரம் லஞ்ச ஊழலை உருவாக்குகிறது. அதன் ஆடம்பரத்திலும் பகட்டிலும் அகப்பட்டுக் கொள்ளாதீர்கள். இந்தியாவின் கிராமங்களில் உள்ள ஏழைகளுக்குச் சேவை செய்ய அதிகாரத்துக்கு வந்திருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்'

அன்று பிற்பகலில் சங்கொலி கேட்டதும் பெலியகட்டா சாலையில் நடக்கும் காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டத்துக்கு 30,000 மக்கள் வந்து விட்டார்கள். ஒரு நாளைக்கு முன் கூடிய மக்கள் எண்ணிக்கையை விட இது மூன்று மடங்கு அதிகமாகும். வீட்டுக்கு வெளியே அமைக்கப்பட்ட மரப்பலகை மேடையிலிருந்து காந்தி அவர்களுக்கு உரை நிகழ்த்தினார். கல்கத்தாவில் நிகழ்த்தியுள்ள செயலுக்காக அவர்களைப் பாராட்டினார். அவர்களின் பெருந்தன்மையான உதாரணச் செயல், பஞ்சாபில் இருப்பவர்களையும் கவர்ந்திழுக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

காந்தி உரையை முடித்ததும், 24 மணி நேர உண்ணாவிரதத்தால் சோர்வடைந்திருந்த ஷாஹீத் சுஹ்ரவர்தி மக்களிடையே பேசினார். கல்கத்தாவில் உள்ள முஸ்லீம்களின் ஒப்பற்ற தலைவரான அந்த மனிதர், கலந்து கூடியிருந்த மக்கள் கூட்டத்திடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். நாம் சமரசமாய் இருக்கிறோம் என்பதற்கு அடையாளமாகத் தன்னோடு சேர்ந்து 'ஜெய்-ஹிந்த் (Jai-Hind) இந்தியாவுக்கு வெற்றி' என்று உரக்கக் கூறுமாறு கேட்டுக் கொண்டார். அவர் அவ்வாறு கூறியவுடன், இடியுடன் கூடிய பருவமழை பொழிந்தது போல் கூட்டத்திலிருந்த 30,000 மக்களும் பதிலுக்கு அவ்வாறே குரலெழுப்பினார்கள்.

அந்தக் கூட்டத்திற்குப் பிறகு, காந்தியின் பழைய செவ்ரோலட் காரில் அமர்ந்து இருவரும் நகரில் பயணம் செய்தார்கள். இருப்பினும் முன்பு போல்

கூற்களும் வசைமொழிகளும் இல்லாமல் இப்போது கல்கத்தாவின் மக்கள் கூட்டம் மகாத்மாவின் காரை வாழ்த்தி வரவேற்றது. ஒவ்வொரு வீதியின் முனையிலும் அதன் மீது பன்னீர் தெளித்தனர். 'காந்திஜி' நீங்கள் எங்களைக் காப்பாற்றினீர்கள்' என்று நன்றியுடன் குரலெழுப்பினார்கள்.

## பூனா, 15 ஆகஸ்ட் 1947

பம்பாய்க்குத் தென்கிழக்கே 119 மைல் தூரத்தில் உள்ள பூனா நகருக்குள் காலியாகக் கிடந்த ஒரு இடத்தில் நடக்கவிருந்த விழா, புதிய இந்திய டொமினியன் முழுவதும் நடந்த ஆயிரக்கணக்கான விழாக்களைப் போலவே தான் இருந்தது. அதுவும் கொடியேற்றுவிழாதான். இருப்பினும் மற்ற நிகழ்ச்சிகளிலிருந்து இதில் ஒரு சிறிய மாற்றம் இருந்தது. 500 பேர் கூடியிருந்த திடலின் மையப்பகுதியில் நடப்பட்டிருந்த கொடிக் கம்பத்தில் கொடி மெல்ல மேல் நோக்கிச் சென்றது. ஆனால் இது இந்திய சுதந்திரக் கொடி அல்ல. அது ஆரஞ்சு நிற முக்கோணக் கொடியாக இருந்தது. அதன் மீது ஒரு சின்னம் இருந்தது. பத்தாண்டு காலத்துக்கு ஐரோப்பாவை அச்சுறுத்திய ஸ்வஸ்திக் சின்னத்தில் சிறிது மாற்றம் செய்து அதில் பொறிக்கப்பட்டிருந்தது.

ஹிட்லரின் நாஜிகள் ஆட்சி செய்த ஜெர்மன் குடியரசின் கொடியில் இருந்த அந்தப் பழமையான சின்னம் பூனாவின் ஆரஞ்சு நிறக் கொடியிலும் அதே காரணத்துக்காகத்தான் இடம் பெற்றிருந்தது. அது ஆரியர்களின் சின்னம். இந்தத் துணைக் கண்டத்தை முதலில் வெற்றி கொண்ட ஆரியர்களால் அது இந்தியாவுக்குள் கொண்டு வரப்பட்டது. எந்தக் காலத்தில் அது இந்தியாவுக்கு வந்தது என்பது வரலாற்றில் பனிமூட்டம் போல் தெளிவற்று உள்ளது. பூனாவில் கூடியிருந்த அனைவரும், அரை ஃபாசிச இயக்கமான ஆர்எஸ்எஸ்-ஸைச் சேர்ந்தவர்கள். இதன் உறுப்பினர்களில் சிலருக்குத்தான் 48 மணி நேரத்துக்கு முன்னால் கராச்சியில் ஜின்னாவோடு மவுண்ட்பேட்டனையும் கொலை செய்வதற்கான பணி அளிக்கப்பட்டிருந்தது. இந்து மதத் தீவிர வாதிகளான இவர்கள், தங்களைப் பண்டைய ஆரியர்களின் வாரிசுகளாகப் பார்த்தனர்.

துணைக்கண்டத்தின் எதிர் அணியில் உள்ள கண்ணாடியணிந்த தேவ தூதரின் ஒரு உணர்வை இவர்களும் பகிர்ந்து கொண்டனர். இவர்களும் கூட இந்தியா பிரிக்கப்படுவதற்காக பெரும் கவலை கொண்டனர். இருப்பினும் மகாத்மா காந்தியோடும் அவரது கோட்பாடுகளோடும் இவர்களுக்கிருந்த உறவு அத்தோடு முடிந்தது.

இந்தக் குழு சார்ந்த இயக்கம் ஒரு வரலாற்றுக் கனவை நேசித்தது. சிந்து நதி உருவாகும் இடத்திலிருந்து பர்மாவின் கிழக்குப் பகுதி வரையிலும், திபெத்திலிருந்து கன்னியா குமரி வரையிலும் மகத்தான இந்து சாம்ராஜ்யத்தை மீண்டும் உருவாக்க வேண்டும் என்பதுதான் அந்தக் கனவு. காந்தியையும் அவரது அனைத்துப் பணிகளையும் இவர்கள் வெறுத்தனர். இவர்களைப் பொறுத்த வரை இந்தியாவின் தேசியத் தலைவர் இந்து மதத்தின் பரம வைரி. இந்திய சுதந்திரத்திற்கு அவர் கடைப்பிடித்த அஹிம்சை கொள்கை அவர்களின் பார்வையில் கோழையின் தத்துவம். இது இந்துக்களின் ஆற்றலையும்

குணத்தையும் கெடுத்து விட்டதாக நினைத்தார்கள். இந்தியாவில் உள்ள முஸ்லீம் சிறுபான்மையினரிடம் சகோதரத்துவமும் சகிப்பும் கொள்ள வேண்டும் என்று காந்தி போதித்தார். அவர்களின் கனவில் இதற்கெல்லாம் இடமில்லை. இந்தியாவை வெற்றி கொண்ட ஆரியர்களின் ஒட்டு மொத்த வாரிசுகளாக, இந்துக்களாக, அவர்கள் தங்களைக் கருதிக் கொண்டனர். இதனால் துணைக் கண்டம் முழுவதும் தங்களுக்கே என்று அவர்கள் உரிமை கொண்டாடினார்கள். ஆக்ரமிப்பாளாகளான மொகலாயர்களின் சந்ததியினரே முஸ்லீம்கள் என்பது அவர்களின் கருத்து.

இதற்கெல்லாம் மேலாக இந்தியாவின் வயது முதிர்ந்த தலைவரின் ஒரு பழிவினையை அவர்களால் மன்னிக்க முடியவில்லை. அவர் மீது அவர்கள் சுமத்திய பழி, மோகன் தாஸ் காந்தியின் வாழ்க்கையில் மிகவும் கொடிதான இந்த ஆண்டில் அவர் செய்ததே இறுதியான கொடிய விபரீதம் என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள். இந்தியப் பிரிவினைக்கு காந்திதான் முழு பொறுப்பு என்பது அவர்களின் நிலை. ஆனால் பிரிவினை ஏற்படும் இறுதி நேரம் வரை அதனை எதிர்த்து வந்த ஒரே இந்திய அரசியல்வாதி காந்தி தான்.

பூனாவில் அந்த ஆகஸ்ட் நாள் பிற்பகலில் நடந்த கூட்டத்துக்கு முன்னால் நின்றிருந்த மனிதர் ஒரு பத்திரிகையாளர். 1947 கோடைகாலத்தில் நாதுராம் கோட்சேக்கு 37 வயதாகியிருந்தது. இருப்பினும் அவனது கன்னங்களில் குழந்தைக்கு இருப்பது போல் இருந்த தசைப்பிடிப்புகள், அவனுக்கு இளமைக் கவர்ச்சியையும் அப்பாவித்தனமான தோற்றத்தையும் அளித்தன. அவனது கண்கள் வித்தியாசமானவையாக இருந்தன. அகன்ற, சோகம் நிறைந்த, சாய்வான ஓரப்பார்வை கொண்ட கண்கள் அனைவரையும் கவர்ந்தன. விரும்பாத காற்றை நுகர்ந்தது போலவும், பக்கத்தில் இருப்பவரது உடலின் துர்நாற்றத்தை நுகர்ந்தது போலவும் அவனது வாய் மற்றும் மூக்குத் துவாரங்களின் செயல் இருந்தது. இருப்பினும் அவன் அடக்கமானவன், விருப்பமின்மையை வெளிக்காட்டிக் கொள்ளாத குணமுள்ளவன்.

இருப்பினும் இப்போது அந்தக் குணம் நடைமுறையில் இல்லை. அவன் ஆசிரியராக இருந்து நடத்திய இந்து ராஷ்ட்ரா - இந்து தேசம் என்ற நாளிதழின் முதல் பக்கத்தில் இந்திய சுதந்திர தினத்தன்று நாதுராம் கோட்சே தனது உணர்வுகளை தெளிவாக வெளிக்காட்டியிருந்தான். அன்றாடம் தலையங்கம் எழுதப்படும் பகுதி அன்று வெற்றிடமாக விடப்பட்டிருந்தது. துக்க தினத்தைக் குறிப்பது போல் அந்த வெள்ளைப் பகுதியைச் சுற்றி தடிப்பான கறுப்புக் கட்டம் போடப்பட்டிருந்தது.

இந்தியா முழுவதும் நடைபெறும் சுதந்திர தின விழாக்கள் பற்றி தனது ஆதரவாளர்களிடம் அவன் பேசினான். 'நூற்றுக்கணக்கான இந்து ஆண்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான இந்துப் பெண்கள் கடத்தப்பட்டு கற்பழிக்கப்பட்டுள்ளனர். இந்த உண்மை மக்களுக்குத் தெரியாமல் திட்டமிட்டு மறைக்கப்படுகின்றன.'

'இந்தியப் பிரிவினை என்பது லட்சக்கணக்கான இந்தியர்களை பயங்கரமான துயரத்தில் ஆழ்த்தும் பேரழிவுச் செயலாகும்' என்று அவன் முழங்கினான். 'இது காங்கிரஸ் கட்சியின் வேலை; அதற்கும் மேலாக அதன் தலைவர் காந்தியின் வேலை.'

பேச்சை முடித்த பின் அவர்களின் கொடிக்கு வணக்கம் செலுத்தும் 500 ஆதரவாளர்களுக்கு நாதுராம் கோட்சே தலைமை தாங்கினான். கட்டை விரல்கள் இதயப் பகுதிகளில் பதிந்திருக்க, சரியான கோணத்தில் வலது கைகளின் உள்ளங்கைகள் தரையை நோக்கியிருக்க அவர்கள் சபதமேற்றார்கள்: 'எனக்குப் பிறவி கொடுத்து வளர்த்தத் தாய் நாட்டுக்காக உயிரை விடவும் சித்தமாய் இருக்கிறேன்.'

இந்த வார்த்தைகளைச் சொல்லும் போது எப்போதும் போல் தனது உடல் முழுவதும் ஒரு பெருமித சிலிர்ப்பு பரவுவதை நாதுராம் கோட்சே உணர்ந்தான். பள்ளித் தேர்வுகள் தொடங்கி அவன் வாழ்நாளில் மேற்கொண்ட அரை டஜன் பணிகள் உட்பட நாதுராம் கோட்சே எடுத்தக் காரியமெல்லாம் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. பிறகு தான் ஆர்எஸ்எஸ்ஸின் தீவிரவாதக் கொள்கைகளை அவன் தழுவினான். அதன் கொள்கைகளிலும் இலக்கியங்களிலும் தாமாகவே மூழ்கிய அவன் எழுதவும் பேசவும் கற்றுக் கொண்டு அந்த இயக்கத்தின் முன்னணிக் கருத்தாளர்களில் ஒருவனானான். இப்போது தனக்கு ஒரு புதிய பங்களிப்பு இருப்பதாக அவன் தாமாகவே அறிந்தான். அவன் ஒரு பழிவாங்கும் சக்தியாக மாறப் போகிறான். தீவிர இந்து மறுமலர்ச்சிக்காக எதிரிகளை அழித்து இந்தியாவைத் தூய்மைப்படுத்தப் போகிறான். இந்தப் பணியில் முதல் முறையாக நாதுராம் கோட்சே தோல்வி அடையப் போவதில்லை.

## *புது டில்லி, 15 ஆகஸ்ட் 1947*

இந்தியாவில் 1947 ஆகஸ்ட் 15ஆம் நாளின் மகத்தான நினைவாகப் பல ஆண்டுகளுக்கு விட்டுச் செல்லப்படவிருப்பது மக்கள் கூட்டம் தான். புதிய தேசத்தின் சுதந்திரக் கொண்டாட்டங்களில் உச்சக்கட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிக்குப் பல தரப்பட்ட மக்கள் கூட்டம் கடலெனத் திரண்டிருந்தது. முதலாம் உலகப் போரின் போது பிரிட்டிஷ் பேரரசுக்காக உயிர்நீத்த, கடமைப்பற்றுள்ள 90,000 இந்திய வீரர்களின் நினைவாகக் கற்களால் அமைக்கப்பட்ட வளைவு புதுடில்லியின் இந்தியா கேட் (India Gate). இதன் அருகே திறந்த வெளியில் அன்று மாலை ஐந்து மணிக்கு அதிகாரபூர்வமாக இந்தியக் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெறவிருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் நடந்த மாபெரும் நிகழ்ச்சிகள் பற்றிய விவரத் தொகுப்பினைக் கொண்டு, இந்த நிகழ்ச்சியில் 30,000 மக்கள் கலந்து கொள்வார்கள் என்று லூயி மவுண்ட் பேட்டனும் அவரது ஆலோசகர்களும் மதிப்பிட்டிருந்தனர். இந்த எண்ணிக்கை தவறாகிப் போனது. ஒரு சில ஆயிரம் அல்ல; அரை மில்லியனுக்கும் (5 லட்சத்துக்கும்) அதிகமான மக்கள் பங்கேற்றனர். இந்தியத் தலைநகரில் இதற்குமுன் எப்போதும் எவரும் இவ்வளவு பெரிய கூட்டத்தைப் பார்த்திருக்கவில்லை.

எல்லாத் திசைகளிலும் பரந்து கிடந்த மக்கள் கூட்டத்துக்கிடையே கொடிக்கம்பத்துக்குப் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த அரசுத் தலைவர்களுக்கான சிறிய மேடை மக்களால் சூழப்பட்டிருந்தது. 'புயல் வீசும் கடல்

நடுவே சிறிய படகு போல் அது காட்சி அளித்தது' என்று ஒரு பார்வையாளர் வர்ணித்தார். அடர்த்தியான மக்கள் வெள்ளத்தில் கட்டப்பட்டிருந்த தடைகள், பேண்டு இசைக்குழு மேடை, கவனமாகத் தயாரிக்கப்பட்ட பார்வையாளர் கேலரிகள், ஒழுங்குபடுத்துவதற்காகக் கட்டப்பட்ட கயிறுகள் என எல்லாம் இருந்த அடையாளம் தெரியாமல் அடித்துச் செல்லப்பட்டன. தடைகள் தகர்க்கப்பட்ட போதும் ஒரு மனிதரின் காலில் பட்டு நாற்காலி சட்டங்கள் விறகுகள் போல் ஆனபோதும் ஏதும் செய்ய இயலாத காவலர்கள் வேடிக்கை பார்த்து நின்றிருந்தனர். சத்தர்பூர் கிராமத்திலிருந்து அதிகாலையில் புறப்பட்டு வந்த விவசாயி ரஞ்சித் லால் இந்த மாபெரும் மக்கள் கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்டார். இந்தியாவில் இவ்வளவு பெரிய மக்கள் கூட்டத்தை கங்கையில் புனித நீரோடும் மேளா - விழாக்களின் போது தான் பார்க்க முடியும் என்று அவர் நினைத்தார். எல்லாப் பக்கங்களிலும் கூட்டம் நெருக்குவதால், அவரும் அவரது மனைவியும் கிராமத்திலிருந்து கொண்டு வந்த சப்பாத்திகளைக் கூட சாப்பிட முடியாமல் போனது. அவர்களின் கைகளை விலாப்பக்கத்திலிருந்து நகர்த்தி வாய்க்குக் கொண்டு செல்ல முடியவில்லை.

ஐந்து மணிக்குப் பிறகு சீமாட்டி மவுண்ட் பேட்டனின் செயலாளர்களான எலிசபெத் காலின்சும் (Elizabeth Callins) முரீல் வாட்சனும் (Muriel Watson) அங்கு வந்தனர். தூய்மையான வெண்ணிறக் கையுறைகளையும் விருந்துக்காகவே அணியும் ஆடைகளையும் இறுகுகள் செருகிய வெள்ளை நிறத் தொப்பி களையும் அணிந்து அந்த நிகழ்ச்சிக்கு அவர்கள் வந்திருந்தனர். மகிழ்ச்சி நிறைந்த, வியர்த்துக் கொட்டும், அரை நிர்வாணக் கோலத்தில் அலைபாயும் மக்கள் கூட்டத்துக்கிடையே அகப்பட்டுக் கொண்டதாக அவர்கள் உணர்ந் திருந்தனர். உண்மையிலேயே அவர்களின் கால்கள் தரையில் பதியவில்லை. கூட்டத்தினர் முண்டியடித்துச் செல்லும் திசையில் அவர்களும் நகர்ந்தனர். ஆதரவுக்காக ஒருவர் கையை மற்றவர் பற்றிக் கொண்டனர். அவர்களின் தொப்பிகள் ஒருக்களித்துச் சாய்ந்தன. ஆடைகள் கசங்கின. நேராக நிற்பதற்கு அவர்கள் பெரிதும் போராடினர். சீமாட்டி மவுண்ட்பேட்டனுடன் போர்க் காலங்களிலெல்லாம் பயணம் செய்திருக்கும் எலிசபெத் அவரது வாழ்க்கையில் முதன் முறையாக இப்போது தான் அச்சம் அடைந்தார். முரீலின் கையை இறுகப் பற்றிய அவர் மூச்சிறைக்கக் கூறினார் 'நாம் மிதிப்பட்டுச் சாகத்தான் போகிறோம்!'

எல்லாப் பக்கங்களிலிருந்தும் தங்களை நெருக்கும் கூட்டத்தினரை முரீல் ஆய்வு செய்தார். நிம்மதிப் பெருமூச்சுடன் அவர் முணுமுணுத்தார். 'அவர்கள் கால்களில் ஷூக்களை அணியவில்லை. அதற்காகக் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்.'

கவர்னர் ஜெனரலின் 17வயது இளைய மகள் பமீலா மவுண்ட்பேட்டன் அவரது தந்தையின் இரண்டு ஊழியர்களுடன் வந்து சேர்ந்தார். மிகப் பெரும் சிரமத்துடன் அவர்கள் வழியேற்படுத்திக் கொண்டு மரத்தாலான மேடையை நோக்கிச் சென்றார்கள். நூறு கஜதூரம் சென்ற பிறகு வழியேற்படுத்த முடியாத அளவுக்கு மக்கள் தடையேற்படுத்தியிருந்த இடத்தை அடைந்தனர் அனைவரும் தரையில் அமர்ந்திருந்தனர். மூச்சுவிடுவதற்கான இடைவெளி மட்டும் தான் இருந்தது. அந்த அளவுக்கு நெருக்கமாக அவர்கள் இருந்தனர்.

மேடையிலிருந்த நேரு இதை கவனித்து விட்டார். மக்களைக் கடந்து மேடைக்கு வருமாறு அந்தப் பெண்ணை நோக்கிச் சத்தமிட்டார்.

'என்னால் எப்படி முடியும்? நான் ஹைஹீல் ஷூ போட்டிருக்கிறேனே' என்று அவர் பதிலுக்கு சத்தமிட்டார்.

'அவற்றைக் கையில் எடுத்துக் கொள்' நேரு சொன்னார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியில் மரியாதைக் குறைவான இத்தகைய செயலைச் செய்ய வேண்டியிருக்கும் என்று பமீலா கனவு கூட கண்டதில்லை. 'ஓ. என்னால் அப்படிச் செய்ய முடியாது' அவர் சிணுங்கினார்.

'இல்லையென்றால் அவை காலிலேயே கிடக்கட்டும், மக்களைத் தாண்டி நடந்து வா. அவர்கள் ஒன்றும் தவறாக நினைக்க மாட்டார்கள்' என்று நேரு கூறினார்.

'அப்படிச் செய்தால் ஷூவின் நீண்ட ஆணிகள் (ஹீல்ஸ்) அவர்கள் மீது பட்டு இம்சிக்கும்' என்று பமீலா பதில் கூறினார்.

'முட்டாள் பெண்ணாக நடந்து கொள்ளாதே' சற்றுக் கோபத்துடன் கூறிய நேரு 'அவற்றைக் கையில் எடுத்துக் கொண்டு அவர்களைக் கடந்துவா' என்றார்.

ஒரு பெருமூச்சுடன், இந்தியாவின் கடைசி வைஸ்ராயின் மகள் காலில் மாட்டிய ஷூக்களைக் கழற்றி கையில் எடுத்துக் கொண்டு, மேடையிலிருந்து அவரைப் பிரித்து வைத்திருந்த மனித விரிப்புகளின் மேலாக நடந்து சென்றார். அவர் தாண்டிச்செல்லும் வழியிலிருந்த மக்கள் மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டே அவருக்கு உதவி செய்தார்கள். தடுமாறும் கால்களை சரியாக வைக்கவும், விழாமல் நடந்து செல்ல தோள்களைத் தந்தும், உதவினார்கள். சிலர் அவர் கையிலிருந்த பளபளக்கும் ஹைஹீல் ஷூக்களைக் கண்டு வியந்தனர்.

மவுண்ட்பேட்டன் தம்பதியரின் அரச வாகனத்துக்குப் பாதுகாப்பாக வரும் மெய்க்காப்பாளர்களின் பளபளக்கும் தலைப்பாகைகள் தூரத்தில் தெரிந்தவுடனே மக்கள் கூட்டம் கடலலை போல முன்னேறிச் சென்றது. அவரது பெற்றோர் வருகை மெதுவாக இருப்பதைத் தொடர்ந்து மேடையில் இருந்தபடியே நம்ப முடியாத காட்சியை பமீலா கண்ணுற்றார். அந்த மனிதக் கடலில், மேடையைச் சுற்றியிருந்த மக்கள் கூட்டத்தில், ஆயிரக்கணக்கான பெண்கள் தங்களின் குழந்தைகளை மார்போடு அணைத்துப் பாதுகாத்தனர். மக்கள் கூட்டம் குழந்தைகளைக் கூழாக்கி விடுமோ என்று அஞ்சிய அவர்கள் முரட்டுத் துணிச்சலுடன் ஒரு செயலில் இறங்கினார்கள். குழந்தைகளை ரப்பர் பந்துகள் போல ஆகாயத்தில் தூக்கியெறிந்தார்கள். மீண்டும் குழந்தைகள் கைக்கு வந்த போது மீண்டும் வானில் வீசியெறிந்தார்கள். இதைப் போல் செய்ததால் வானத்தில் நூற்றுக்கணக்கான குழந்தைகள் நிறைந்தன. அதிசயத்தால் கண்கள் விரிந்த அந்த இளம் பெண் நினைத்தார்: 'அடக் கடவுளே! இதென்ன குழந்தைகள் மழையா!'

தாம் விரிவாகத் திட்டமிட்டபடி இந்தக் கொடியேற்றும் நிகழ்ச்சியை நடத்தி முடிக்கக் கொஞ்சமும் வாய்ப்பில்லை என்பதை மவுண்ட்பேட்டன் அவரது வாகனத்தில் இருந்தபடியே உணர்ந்து கொண்டார். வாகனத்திலிருந்து அவரால் வெளியே வரக்கூட முடியவில்லை.

'நாம் கொடியை மட்டும் ஏற்றி வைப்போம்' நேருவிடம் அவர் உரத்தக் குரலில் கூறினார். 'பேண்டு வாத்தியக் குழு மூழ்கி விட்டது. அவர்களால் இசைக்க முடியாது. காவலர்களால் அசையவும் முடியாது.'

அந்தக் கூட்டத்தின் மகிழ்ச்சிக் குரல்களுக்கிடையேயும், மேடையிலிருந்த வர்கள் அவர் கூறுவதைக் கேட்டு விட்டனர். காவி, வெள்ளை, பச்சை நிறங்கள் கொண்ட சுதந்திர இந்தியாவின் கொடி, கொடிக் கம்பத்தின் மேலே சென்றது. தனது வாகனத்தில் மிடுக்குடன் நின்ற விக்டோரியா மகாராணியின் கொள்ளுப் பேரன் அதன் நடைமுறையை அங்கீகரிக்கும் வகையில் முறைப்படி வணக்கம் செலுத்தினார்.

மக்கள் கூட்டத்தின் தலைகளுக்கு மேல் கொடி உயரும் போது ஐந்து லட்சம் மக்களின் குரல்வளைகளிலிருந்து கட்டுக்கடங்காத மகிழ்ச்சி ஆரவாரம் வெளிப்பட்டது. உன்னதமான உற்சாகம் நிறைந்த அந்தத் தருணத்தில், பிளாசி யுத்தத்தையும், 1857இன் பழிவாங்கல்களையும், அமிர்தசரஸ் படுகொலை களையும் இந்தியா மறந்து விட்டது. ராணுவ சட்டத்தின் கீழ் அனுபவித்தக் கொடுமைகளும், காவல் துறையினர் லத்தியைச் சுழற்றி நடத்திய தாக்குதல் களும், சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு அளித்த தூக்குத் தண்டனைகளும் கூட அந்தக் கணத்தில் மறந்து விட்டன. அந்த நேரத்தின் மகிழ்ச்சியை இந்தியா கொண்டாடுவதற்கு அனுமதித்து வேதனை நிறைந்த மூன்று நூற்றாண்டுகள் புறக்கணிக்கப்பட்டு விட்டன.

அதன் வரலாற்றுச் சிறப்பை மேலும் ஒளி பெறச் செய்ய வானுலகம் தயாராக இருந்தது போலும்! இந்தியாவின் புதிய கொடி, கம்பத்தின் உச்சியை நெருங்கிக் கொண்டிருக்கும் போது வானத்தில் திடீரென்று ஒரு வானவில் தோன்றியது. கிரக சஞ்சாரங்களால் மனிதனின் விதி முன் கூட்டியே தீர்மானிக்கப்படுவ தாகவும், எல்லாவற்றுக்கும் மேலான தெய்வீக சக்தி இருப்பதாகவும் நம்பும் அந்த மக்கள் வானவில்லின் தோற்றத்தையும் கடவுள் அருளாகவே கருதினார்கள். இதைவிட மிகவும் முக்கியமானது வானவில்லின் பச்சை, மஞ்சள், ஊதா நிறங்கள் இந்தக் கொடியின் வண்ணங்களை ஒத்திருப்பதாக அவர்கள் நினைத்தனர். வானவில்லின் மினு மினுப்பைப் பார்த்த முகம் தெரியாத மக்கள் கூட்டத்தில் சிலர் வியப்புடன் குரல் உயர்த்திக் கூறினார்கள்.

'கடவுளே நமக்கு இத்தகைய அடையாளத்தை வழங்கியிருக்கும் போது நமக்கு எதிராக யாரால் நிற்க முடியும்' என்று இந்தியில் முழங்கினார்கள்.

லூட்டியின்ஸ் மாளிகைக்குத் திரும்பிச் செல்லும் போது லூயி மவுண்ட் பேட்டனுக்கும் எட்வினா மவுண்ட்பேட்டனுக்கும் அவர்களது வாழ்க்கையில் மிக உன்னதமான அனுபவங்கள் ஏற்பட்டன. உணர்ச்சிப் பெருகிய, மகிழ்ச்சியும், உற்சாகமும் மிகுந்த மக்கள் கூட்டத்தின் நடுவே அவர்களின் தங்க முலாம் பூசிய வாகனம் வாழ்க்கைப் படகு போல் மிதந்தது. அந்த இருவரில் ஒருவருக்கும் இதற்கு முன் இத்தகைய அனுபவம் ஏற்பட்டதில்லை. அவர்களுடன் பயணம் செய்வதற்காக நேருவே வாகனத்தை நோக்கிச் சென்றார். உண்மையில் மக்கள் கூட்டம் அவரை நெருக்கி அங்கே தள்ளியது. 'ஏறத்தாழ ஒரு மிலியன் (பத்து லட்சம்) மக்களுடன் நடத்திய ஒரு வகையான உல்லாசப் பயணம் இது. அவர்கள் வாழ்க்கையில் வேறெப்போதும் அனுபவித்ததை விட

இப்போது அதிகம் மகிழ்ச்சியடைந்தார்கள்' என்று மவுண்ட்பேட்டன் நினைத்தார். தன்னெழுச்சியான, கட்டுக்கடங்காத ஆரவாரப் பெருமகிழ்ச்சியை வெளிப்படுத்திய இதுதான் இந்த நாளின் உண்மையான அர்த்தத்தைப் பிரதிபலித்தது. தாம் திட்டமிட்டிருந்த ஆடம்பரமும் பகட்டும் மிகுந்த நிகழ்ச்சியை விட இது சிறந்தது என்று அவர் புரிந்து கொண்டார்.

தன்னை நோக்கி கட்டுக்கடங்கா மகிழ்ச்சியுடன் அசைக்கும் கைகள் என்ற வனத்துக்கு நடுவே நின்றிருந்த மவுண்ட்பேட்டன் மனிதத் தலைகள் முடிவடையும் எல்லைப் பகுதியைக் காண முயற்சி செய்தார். அவரால் முடியவில்லை. அவரது கண்ணுக்கெட்டிய தூரம் வரை மக்கள் கூட்டம்; எங்கும் மக்கள் கூட்டம்.

மூன்றுமுறை மவுண்ட்பேட்டனும் அவரது மனைவியும் வாகனத்திலிருந்து வெளியே சாய்ந்து, மயக்கமுற்ற பெண் ஒருவர் தங்களின் வாகன சக்கரங்களின் அடியில் சிக்கி விடாமல் பாதுகாத்தனர். இங்கிலாந்தின் மன்னருக்காகவும் மகாராணிக்காகவும் என்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட கறுப்புத் தோலாலான மெத்தை போன்ற இருக்கையில் மூன்று பேரும் அமர்ந்து சவாரி செய்தனர். அவர்கள் அமர்ந்திருப்பதைக் கண்ட கரியவிழிகள் வியப்புடன் விரிந்தன. வாயில் பொங்கி வரும் சிரிப்பைப் புடைவைத் தலைப்பால் மூடிக் கொண்டனர். இந்தியாவின் கடைசி வைஸ்ராய்க்கும் வைஸ்ராயினிக்கும் பக்கத்தில் மகிழ்ச்சியோடு சிரித்துக்கொண்டே அவர்கள் சென்றனர்.

இதற்கெல்லாம் மேலாக இந்தப் புகழ் மிக்க நாளில் லூயி மவுண்ட்பேட்டனுக்கும் எட்வினா மவுண்ட் பேட்டனுக்கும் எப்போதும் நினைவில் நிலைக்கப் போவது மெய்சிலிர்க்க வைக்கும் முடிவில்லாத வாழ்த்தொலிகள் தான். புதுடில்லியில் அன்று பிற்பகலில் உணர்ச்சிப் பெருக்கோடும் உள்ளுணர்வோடும் எழுப்பிய ஒலிகளைக் கேட்கும் பெருமையை இந்திய வரலாற்றில் வேறெந்த ஆங்கிலேயரும் பெற்றிருக்க மாட்டார்கள். தொடர் இடிமுழக்கம் போல அந்த ஒலி கூட்டத்திலிருந்து மீண்டும் மீண்டும் எழுந்தது. மவுண்ட்பேட்டனின் சாதனைக்கு மக்களின் ஒப்புதலாக இது அமைந்தது. அசைந்தாடும் வாகனத்தில் நின்றிருந்த அவருக்கு அளிக்கப்பட்ட இந்திய மக்களின் புகழுரையை, உண்மையான புகழுரையை, அவரின் கொள்ளுப் பாட்டியோ, அவரது வழிவந்த வேறெவருமோ பெற்றதில்லை. 'மவுண்ட்பேட்டன் கி ஜே!' அந்த மக்கள் கூட்டம் மீண்டும் மீண்டும் உரத்தக் குரலில் கூறின. 'மவுண்ட்பேட்டன் கி ஜே - மவுண்ட்பேட்டன் நீடூழி வாழ்க!'

பேருவகை கொண்ட மக்கள் கூட்டம் நிறைந்த புதுடில்லியிலிருந்து ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால், ஸ்காட்லாந்தின் மையப்பகுதியில் உள்ள பால்மோரால் (Balmoral) அரண்மனைக்குள் அரசாங்கக் கார் ஒன்று நுழைந்தது. அந்தக் காரில் வந்த தனிமனிதர், ஆறாம் ஜார்ஜ் மன்னர் காத்திருந்த அலுவலக அறைக்கு உடனடியாக அழைத்துச் செல்லப்பட்டார் இந்தியாவுக்கான கடைசி வெளியுறவு அமைச்சர் லிஸ்டோவெல் கோமகன், விறைப்புடன் வளைந்து வணங்கினார். இந்தியர்களின் கைகளுக்கு அதிகார மாற்றம் செய்யும் பணி நிறைவேறிவிட்ட தகவலை மன்னருக்குப் பணிவுடன் தெரிவித்தார். பேரரசின் அதிகாரத்தன்மையில் மீட்க முடியாத மாற்றம் வந்து விட்டது. இனிமேலும்

ஆறாம் ஜார்ஜின் ரெக்ஸ் இம்பரேட்டர் என்ற பதவியை அவர் வகிக்க முடியாது. எனவே இந்திய அரசுக்கும் பிரிட்டிஷ் மன்னருக்கும் தொடர்பை ஏற்படுத்துவதற்குரிய அடையாளமாக விளங்கிய வெளியுறவு அமைச்சரின் அலுவலகத்தொன்மைவாய்ந்த முத்திரைகளை ஆறாம் ஜார்ஜ் மன்னரிடம் திருப்பி அளிக்க வந்திருப்பது பற்றி லிஸ்டோவெல் விளக்கினார்.

துரதிருஷ்டவசமாக, ஒப்படைக்கும் அளவு முத்திரைகள் இல்லை என்று பேச்சைத் தொடர்ந்தார். யாரோ சிலர் சில ஆண்டுகளுக்கு முன் அவற்றைத் தொலைத்து விட்டார்கள். இந்தியாவுக்கான கடைசி வெளியுறவு அமைச்சரால் அளிக்கக் கூடியது சடங்குப்படியான தலையசைத்தலும், வெறும் கையும் தான்.

இருளும், ஒரு மிலியன் (பத்து லட்சம்) பாதங்கள் கிளப்பிய புழுதியும் இந்தியத் தலைநகரின் மேல் படிந்திருந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம் தொடர்ந்து ஆடியும் பாடியும் கட்டியணைத்துக் கொண்டும் இருந்தது. பழைய டில்லியில் செங்கோட்டையின் மதில் சுவர்களுக்கு அருகே, பாம்பாட்டிக் காரர்கள், மாயவித்தைக்காரர்கள், அதிர்ஷ்டம் சொல்லும் ஜோஸியர்கள், நடனமாடும் கரடி வித்தை காட்டுவோர், மல்யுத்தக்காரர்கள், வாளினை வாய்க்குள் நுழைத்து வித்தை காட்டுவோர், கன்னங்களில் வேல் குத்திக் கொண்டு யாசிப்போர், குழல் ஊதுவோர் ஆகியோரின் பிரம்மாண்டமான வெளிப்புற விழாவை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர். மேலும் பல்லாயிரக்கணக்கானோர் நகரிலிருந்து புறப்பட்டு தங்களின் ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர். சத்தர்பூரிலிருந்து வந்திருந்த பிராமண விவசாயி ரஞ்சித் லாலும் அவர்களில் ஒருவர். லாலுக்குக் கவலை என்னவென்றால், ஊரிலிருந்து டில்லிக்குக் கொண்டு வந்து விட நாலணா கேட்ட டோங்கா வண்டிக்காரன் மீண்டும் ஊருக்கு செல்ல இரண்டு ரூபாய் கேட்டான். சுதந்திரத்திற்கு இவ்வளவு விலை கொடுப்பது அதிகம் என முடிவு செய்த லாலும் அவரது குடும்பத் தினரும் அவர்களின் கிராமத்திற்கான இருபது மைல் தூரத்தையும் நடந்தே கடந்தனர்.

லூயி மவுண்ட்பேட்டனும் எட்வினா மவுண்ட் பேட்டனும் தங்களின் அரண்மனையில் தன்னந்தனியாக அவர்களுக்குரிய அறையில் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டனர். ஆனந்தக் கண்ணீர் அவர்களின் முகங்களில் வழிந்தது. அவர்களின் வாழ்க்கைச் சக்கரம் ஒரு முழுச்சுற்றை முடித்திருந்தது. கால் நூற்றாண்டு காலத்துக்கு முன்னால் அவர்கள் காதல் வலையில் வீழ்ந்த அந்த நகரத்தின் வீதிகளில் இப்போது வெற்றிக்களிப்பைப் பகிர்ந்து கொண்டார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட பூரிப்பின் தன்மையை ஒரு சிலர் மட்டுமே அறிவார்கள். ஒரு மிலியன் (பத்து லட்சம்) ஜப்பானிய வீரர்களில் முக்கால் பகுதியினர் (ஏழரை லட்சம் பேர்) சரணடைந்த போது பெரு மகிழ்ச்சியடைந்தவர்தான் என்றாலும் அந்த அட்மிரலின் வாழ்க்கையில் இப்போதைய வெற்றிக்கு இணையான அனுபவத்தை இன்னொரு வெற்றி அளிக்கப் போவதில்லை. ஒரு போரின் முடிவில் எத்தனை உற்சாகமான கொண்டாட்டம் - 'இந்தப் போரில் மட்டும் தான் இழப்புகள் ஏதுமின்றி இரு தரப்பினருமே வென்றார்கள்' என்று மவுண்ட்பேட்டன் எண்ணினார்.

★

அடுத்த நாள் காலை, புது டில்லியிலிருந்து வந்த ஒரு பார்வையாளர் டவுனிங் தெரு 10ஆம் எண் இல்லத்தின் அழைப்பு மணியை அழுத்தினார். அந்த இல்லத்தில் இருக்கும் கிளமெண்ட் அட்லி எல்லா வகையிலும் திருப்தி அடைய காரணம் இருந்தது. பிரிட்டனுடன் நட்புணர்வோடும் நல்லெண்ணத்தோடும் இந்தியாவுக்கு சுதந்திரம் அளிக்கும் பணி முடிந்துள்ளது. ஆறு மாதங்களுக்கு முன் இது சாத்தியமாகும் என்று யாரும் நினைக்கவில்லை. இந்தோனேசியாவில் ஹாலந்தும், இந்தோ - சீனாவில் ஃபிரான்சும் செயல்பட்டதோடு ஒப்பிட்டுப் பார்த்த இந்தியாவின் பிரமுகர் ஒருவர் இப்படிக் கூறினார்: 'பிரிட்டிஷாரின் துணிவையும் அரசியல் திறமையையும் நாம் வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது.'

இருப்பினும் இப்படிப்பட்ட பாராட்டுரைகளால் மிகவும் மகிழ்ச்சி யடைந்து விடக்கூடாது என்று அட்லிக்கு எச்சரிக்கை செய்வதற்காகவே ஜார்ஜ் அபெல் என்ற தனது முன்னாள் செயலாளரை லூயி மவுண்ட்பேட்டன் அனுப்பி வைத்தார். இந்திய சுதந்திரம் எந்த முறையில் சாதிக்கப்பட்டது என்பதை அட்லி இல்லத் தோட்டத்தில் அபெல் விவரித்தார். அட்லியின் அரசுக்கும், இந்தியாவின் கடைசி வைஸ்ராயாகத் தெரிவு செய்யப் பட்டவருக்கும் இது பெரும் வெற்றி என்றும் அவர் கூறினார். ஆனால் இந்த வெற்றியை வெகு விரைவாகவும் மிகவும் வெளிப்படையாகவும் கொண்டாட வேண்டாம் என்று அவர் எச்சரித்தார். ஏனெனில் பிரிவினையின் விளைவாக 'மிகவும் மோசமான ரத்தக்களறியும் குழப்பமும்' ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

அட்லி புகைக்குழாயை உறிஞ்சியபடியே சோகத்துடன் தலையாட்டினார். டவுனிங் தெருவிலிருந்து தற்பெருமை கொண்ட எக்காள முழக்கமோ, சுயதிருப்தியுடனான அறிவிப்புகளோ வாரா என்று அவர் உறுதியளித்தார். அவர் மாயையில் இல்லை. அவர்கள் நிறைவேற்றியிருக்கும் பணி முக்கியமானது. ஆனால் அதற்கு விலை கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதையும் 'நாம் அங்கிருந்து வெளியேறியவுடன் ஏற்படும் பயங்கர ரத்தக்களறிதான்' அந்த விலை என்பதையும் அவர் நன்கறிந்திருந்தார்.

பண்டோரா பெட்டியைத் திறக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. லூயி மவுண்ட்பேட்டன் ஒரு நொடி தயங்கி நின்றார். அவரது பார்வை கையில் இருந்த இரண்டு பழுப்பு நிற உறைகளின் மேல் பதிந்தது. ஒவ்வொரு உறையிலும் துணைக் கண்டத்தின் வரைபடங்களும், ஒரு டஜனுக்கும் குறைவான தட்டச்சு செய்த சில காகிதங்களும் இருந்தன. பிரிட்டன் இந்தியாவிடம் ஒப்படைக்கப் போகும் அரசு முறையிலான கடைசி ஆவணங்கள் அவை. 1599இல் கிழக்கிந்திய கம்பெனிக்கு முதலாம் எலிசபெத் அளித்த அரச சாசனத்தில் தொடங்கி ஒரு மாதத்துக்கு முன் அது முடிவுக்கு வரும் வகையில் குமாஸ்தா ஒருவர் 'லே ராய் லே வெல்ட்' என்று முணு முணுத்தது வரை நீடித்த ஒரு சங்கிலித் தொடரின் கடைசிக் கண்ணிதான் இது. இருப்பினும் இந்த ஆவணம் ஏற்படுத்த இருப்பது போல் உடனடியான கோபத்தை அல்லது கொடிய நிகழ்வை இதற்கு முன் வேறெந்த ஆவணங்களும் ஏற்படுத்தியதில்லை. டவுனிங் தெரு தோட்டத்தில் பிரிட்டனின் பிரதம மந்திரிக்கு முன் கூட்டியே தெரிவிக்கப்பட்ட துயரத்துக்குத் தூண்டுகோல்களாக இவை அமைந்தன.

இவற்றை நேருவிடமும் பாகிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலி கானிடமும் மவுண்ட்பேட்டன் அளித்தார். இவற்றை அவர்கள் இரண்டு வேறு அறைகளில் தனியே இருந்து படித்து விட்டு இரண்டு மணி நேர அவகாசத்தில் கூட்டுக் கூட்டத்துக்கு வர வேண்டும் என்று அவர் யோசனை கூறினார். திரும்பி வந்தபோது அவர்களின் முகங்கள் கோபத்தால் விகாரப்பட்டிருந்ததன் மூலம் மவுண்ட்பேட்டனுக்குக் குறைந்த பட்சம் ஒரு விஷயம் உறுதியாகி விட்டது. சிரில் ராட் கிளிஃப் தனது நன்றி எதிர்பாராப் பணியைப் பாரபட்சமின்றி செய்திருக்கிறார் என்பது தான் அது. இரண்டு மனிதர்களும் சமஅளவில் சினம் கொண்டிருப்பதாகவே தெரிந்தது. அவர்கள் அமர்ந்தவுடனேயே ஆத்திர வெடிப்புடன் எதிர்ப்புகளைத் தெரிவித்தனர். இந்தியாவின் சுதந்திர தின விழாக்கள் நிறைவடைந்திருந்தன. சிரில் ராட் கிளிஃபுக்கு அளிக்கப்பட்ட அறிவுரைகளின்படி இந்திய வரைபடத்தில் அவரது கத்தரிக்கோலை கறாராகவே பயன்படுத்தியிருக்கிறார். ஒரு சில சிறிய குறைபாடுகள் தவிர, பஞ்சாபிலும் வங்காளத்திலும் அவர் வரைந்த கோடுகள் மத அடிப்படையில் பெரும்பான்மை மக்கள் தொகையைக் கணக்கிட்டதாக அமைந்திருந்தன. எல்லோரும் முன்கூட்டியே கணித்திருந்ததற்கு ஏற்பவே அதன் விளைவு இருந்தது. தொழில்நுட்ப ரீதியில் சரியானதுதான் ஆனால் நடைமுறையில் அழிவை ஏற்படுத்துவது.

அவர்கள் தங்களுக்குள் ஒத்துழைக்க முடியாமல் போனால் வங்கத்தில் வரைந்துள்ள கோடு பொருளாதாரச் சீரழிவை ஏற்படுத்தி விடும் என்று இரு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். உலகில் சணல் உற்பத்தியில் எண்பத்தைந்து சதவீதத்தைக் கொண்ட வங்கப்பகுதி பாகிஸ்தானுக்குச் செல்கிறது. ஆனால் அதனைப் பதப்படுத்தும் ஒரு தொழிற்சாலை கூட புதிய நாட்டிற்குள் இல்லை. இந்தியப் பகுதியிலோ நூற்றுக்கும் அதிகமான சணல் தொழிற்சாலைகளும், உலகத்துக்கு சணலை ஏற்றுமதி செய்யும் கல்கத்தா துறைமுகமும் இருந்தன. ஆனால் சணல் விளையும் நிலம் இல்லை.

ராட் கிளிஃப் மிகவும் சிரமப்பட்டு வரைந்த பஞ்சாப் எல்லைக்கோடு காஷ்மீரின் எல்லைப்பகுதியில் உள்ள பாதையற்ற வனப்பகுதியிலிருந்து தொடங்கியது. இங்கேதான் உஜ் (Ujh) என்று அழைக்கப்படும் நதியின் மேற்குக் கிளை பஞ்சாபுக்குள் நுழைகிறது. இந்த எல்லைக்கோடு ரவி அல்லது சட்லெஜ் நதிகளின் ஓரமாக தெற்கு நோக்கி 200 மைல் தூரம் சென்று வடக்குக் கோடியில் உள்ள மகா இந்தியப் பாலைவனத்தில் முடிவடைந்தது. லாகூர் பாகிஸ்தானுக்குச் சென்றது. பொற்கோவிலுடன் அமிர்தசரஸ் இந்தியாவுக்குச் சென்றது.

ஆரம்பத்தில் தீர்மானித்தபடியே ராட் கிளிஃபின் எல்லைக்கோடு இந்தியாவின் வீரம் செறிந்த போராளி சமூகமான சீக்கிய மக்களையும் அவர்களின் நிலங்களையும் இரு கூறாக்கியிருந்தது. பகையும் கோபமும் கொண்ட அவர்கள்தான் பஞ்சாப் துயரத்தின் முக்கிய பாத்திரங்களாக இருக்கப் போகிறார்கள்.

ராட் கிளிஃபின் தீர்ப்பால் ஒரு பெரும் முரண்பாடு ஏற்பட்டது. பெரும்பான்மை மக்கள் தொகை அடிப்படை என்ற அவரது கோட்பாட்டினை மீறி ஏற்பட்ட சிறிய குறைகளில் ஒன்றுதான் அது. பஞ்சாபின் வடக்குக் கோடியில்

இருந்த குருதாஸ்பூர் என்ற சிறு நகரம் சம்பந்தப்பட்டது தான் அந்தப் பிரச்சனை. ரவி நதியோரம் இயற்கையான எல்லைக் கோட்டினை ராட்கிளிஃப் வரைந்து சென்ற போது அந்த நகரையும் அதைச்சுற்றி முஸ்லீம்கள் வாழும் கிராமங்களை யும் சேர்த்து இந்தியப் பகுதிக்குள் ஒரு பாகிஸ்தான் ஆட்சிப் பகுதியாய் ஆக்குவதற்குப் பதிலாக இந்தியாவின் பகுதியாகவே ஆக்கிவிட்டார்.

இந்த முடிவுக்காகப் பாகிஸ்தானைச் சேர்ந்த லட்சக்கணக்கான மக்கள் அவரை ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள். குருதாஸ்பூரை பாகிஸ்தானுக்கு அளிக்க ராட்கிளிஃப் தீர்மானித்திருந்தால் அழுக்கேறிய, தொடர்பற்றுத் துண்டாக இருக்கும் நகரை மட்டும் ஜின்னாவின் நாடு வென்றிருக்காது. அத்தோடு, தவிர்க்க முடியாமல், மரணத் தருவாயிலும் 'காஷ்மீர் காஷ்மீர் மட்டுமே' என்று மொகலாயச் சக்ரவர்த்தி ஜஹாங்கீர் முணுமுணுத்த அந்தப் பள்ளத்தாக்குப் பகுதியும் கிடைத்திருக்கும்.

குருதாஸ்பூர் இல்லாமல் நடைமுறையில் காஷ்மீரை இணைக்கும் நிலப்பகுதி இந்தியாவில் இல்லை. ஊசலாட்டமான இந்து மகாராஜா ஹரி சிங்கிற்கு, காஷ்மீரின் தலைவிதியை பாகிஸ்தானுடன் இணைப்பதைத் தவிர வேறு வழியிருந்திருக்காது. வேண்டுமென்றே செய்யவில்லையென்றாலும், கவனக் குறைவாகச் செய்திருந்தாலும், ராட்கிளிஃபின் அறுவைக் கத்தி காஷ்மீரை உரிமை கோரும் நம்பிக்கையை இந்தியாவுக்கு அளித்தது.

இந்தியாவைப் பற்றி மிகவும் குறைவாகத் தெரிந்தவர் என்ற காரணத்திற்காக அதன் பிரிவினைக்குப் பணி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டவர் அந்த மனிதர். தம்மால் பிரிவினை செய்யப்பட்ட நாட்டின் நிலப்பகுதிகளை அவரது வாழ்நாளில் கடைசி முறையாகத் துயரமுடன் அப்போது அவர் பார்த்தார். சிரில் ராட்கிளிஃப் பலத்தப் பாதுகாப்புடன் தாயகம் திரும்பிக் கொண்டிருந்தார். அவருக்கு உதவி செய்வதற்கென்று நியமிக்கப்பட்ட ஐ.சி.எஸ் அதிகாரி கடைசிப் பணியாக அவரது விமானத்தில் குண்டு ஏதும் இருக்கிறதா என்று சோதனை யிட்டிருந்தார். சிந்தனையில் ஆழ்ந்த பிரிட்டிஷ் வழக்கறிஞர் விமானத்தின் ஜன்னல்கள் வழியாகப் பார்க்கும் போது பஞ்சாபின் எல்லையற்று விரிந்த கோதுமை மற்றும் கரும்பு வயல்கள் வேகமாகக் கடந்து சென்றன. அவற்றின் உழுசால்கள் வரைபடத்தில் அவரது பென்சில் வரைந்த கோடுகளால் மாற்றியமைக்கப்பட்டிருந்தன.

அவர் வரைந்த கோடுகள் துயரத்தையும் கிலியையும் ஏற்படுத்தக் காரணங் களாகப் போகின்றன என்பதை ராட் கிளிஃப் நன்றாகவே அறிந்திருந்தார். ஆனால் அவர்கள் கவலையையும் வருத்தத்தையும் அறுவடை செய்யாத ஒரு கோட்டை அவரால் வரைய முடியாமல் போனது. சிரில் ராட்கிளிஃபை இந்தியாவுக்கு அழைப்பதற்கு முன்பே, பிடிபடாத பல விஷயங்கள் பஞ்சாபை துயரத்தில் தள்ளிக் கொண்டு தான் இருந்தன. பஞ்சாபின் பருவ கால சுழற்சி எப்படி நிச்சயமானதோ அதேபோல் அவரது தீர்ப்பு பயங்கர ரத்தக் களறியையும், வன்முறையையும், அழிவையும் ஏற்படுத்தப் போவது நிச்சயம் என்பதை அறிந்தார். அதே போல் இவை எல்லாவற்றுக்கும் தம்மைப் பொறுப்பாக்கப் போவது நிச்சயம் என்பதையும் அவர் உணர்ந்தார்.

இந்தியாவில் தங்கியிருக்கும் போது டில்லியின் கடைவீதியில் வாங்கிய ஒரு ஜோடி கீழை நாட்டுத் தரைவிரிப்புகள் உடல் ரீதியான நினைவுப் பொருள்களாக ராட்கிளிஃப்பின் லக்கேஜுக்குள் வைக்கப்பட்டிருந்தன. அவரது உண்மையான நினைவுப் பொருள்கள் மனதில் இருந்தன. அவரது நியமனத்தின் போது, நேரு, ஜின்னா ஆகிய இருவரும் அவரது முடிவை ஏற்றுக் கொள்வதாகவும், அதனை செயல்படுத்த தங்களின் அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்துவதாகவும் உறுதியளித்தனர். இப்போதோ அவர்களுக்கு ஒத்துவராத விஷயங்கள் பற்றி இருவரும் தகுதிக்கு மீறிய வெறுப்புடனும் வேகமாகவும் கண்டனம் தெரிவிக்கிறார்கள். கடுகடுப்பான நடவடிக்கைகள் மூலம் கிட்டத்தட்ட அந்தத் தீர்மானத்தையே சீர்குலைக்கிறார்கள்.

ஒரு சில நாட்களுக்குப் பிறகு, எந்த வழக்கறிஞர் கூடங்களிலிருந்து இந்தியாவுக்குச் சென்றாரோ அங்கு திரும்பிச் சென்று அவர்களின் கோபத்துக்கு பதிலாக ராட்கிளிஃப் தனக்கு வாய்ப்பாய் இருந்த ஒரு செயலின் மூலம் அதிருப்தியை வெளிப்படுத்தினார். நவீன கால கட்டத்தில் மிகவும் சிக்கலான எல்லைக் கோட்டுத் தீர்ப்பை தயாரித்ததற்கான கட்டணமாய் பெற்றிருந்த 2000 பவுண்ட்களையும் வெறுப்புடன் திருப்பிக் கொடுத்து விட்டார்.

கீழேயிருந்த சமவெளிப் பகுதியில் ராட்கிளிஃப்பின் கண்களுக்குப் படாமல் மனித குல வரலாற்றின் மாபெரும் குடிபெயர்வு ஏற்கெனவே தொடங்கியிருந்தது. வரவிருக்கும் புயலை முன் கூட்டியே தெரிவிப்பவர்கள் போல் ஆதரவற்ற மக்கள் கூட்டத்தின் முதல் பிரவாகம் பஞ்சாபின் கால்வாய்க்கரைகள், அதன் கீழுள்ள சேற்றுப் பாதைகள், தடம் பதிக்காத வழிகள், அகன்ற ட்ரங்க் சாலைகள், அறுவடையாகாத வயல்கள் ஆகியவற்றின் வழியாகச் சென்றது. ஒரு சில மணி நேரத்தில் ராட்கிளிஃப்பின் அறிக்கை வெளியிடப்பட்டவுடன் மனித குலத்தின் பற்பல நிகழ்வுகளைக் கண்ட அந்தப் பகுதியைச் சூழ்ந்து கொள்ளும் கொடூரத்தின் அளவு அதிகரித்து விடும். பாகிஸ்தான் உதயமானபோது மகிழ்ச்சியடைந்த முஸ்லீம்கள் அதிகம் வாழும் கிராமங்கள் இந்தியாவுக்குள் இருப்பது அப்போதுதான் தெரியும். தங்களின் குடியிருப்புகள் இந்தியாவில் இருப்பதாகத் தவறாக எண்ணி சுதந்திரத்தையும் கொண்டாடிய சீக்கியர்கள், இப்போது பல ஆண்டுகளாகத் தங்களால் பயிர் செய்யப்பட்ட வயல்களைத் தாண்டி உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ராட்கிளிஃப் வரைந்த எல்லைக்கோட்டை நோக்கி ஓடிக் கொண்டிருந்தார்கள்.

அவசரப்பட்டால் எவையெல்லாம் நிகழும் என்று ராட்கிளிஃப் எச்சரித்தாரோ அந்தப் பாகுபாடுகள் எல்லாம் விரைவிலேயே வெளிப்படத் துவங்கின. சில இடங்களில், கால்வாயின் துவக்கம் ஒரு நாட்டிலும், அதன் தண்ணீரைப் பாதுகாக்கும் அணைகள் இன்னொரு நாட்டிலும் இருந்தன. சில இடங்களில் எல்லைக்கோடு கிராமத்தின் மையப்பகுதியில் ஓடியது. இதனால் அதன் ஒரு டஜன் குடிசைகள் இந்தியாவிலும் மற்றொரு டஜன் குடிசைகள் பாகிஸ்தானிலும் இருந்தன. அரிதான சந்தர்ப்பங்களில் ஒரு வீட்டையும் கூட அது பிரித்தது. முன் கதவு இந்தியாவைப் பார்த்து திறந்திருந்தது. பின்பக்க ஜன்னலோ பாகிஸ்தானைப் பார்த்துக் கொண்டிருந்தது. பஞ்சாபின் அனைத்து

சிறைச்சாலைகளும் பாகிஸ்தானுக்குள் அடைபட்டு விட்டன. அதேபோல் முதன் ஒரே ஒரு மனநோயாளிகள் புகலிடமும் கூட பாகிஸ்தானுக்குச் சென்று விட்டது.

அங்கே இருந்த அச்சம் மிகுந்த இந்துக்களும் சீக்கியர்களும் திடீரென மனநிலை தெளிந்து தங்களை இந்தியாவுக்கு அனுப்பி விடுமாறு பாதுகாவலர்களிடம் வேண்டினார்கள். தாங்கள் பாகிஸ்தானில் இருந்தால் முஸ்லீம்கள் தங்களைக் கசாப்பு செய்து விடுவார்கள் என்று அவர்கள் காரணம் கூறினார்கள். அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. தங்கள் பொறுப்பில் இருந்த பைத்தியக்காரர்களுக்குத் தெரிந்த அளவுக்குக் கூட சூழ்நிலையின் விபரத்தை அறியாத அந்தப் புகலிடத்தின் மருத்துவர்கள் அப்படிப்பட்ட ஆபத்து ஏதும் வராது என்று கூறினார்கள். 'அவர்களின் பயம் கற்பனையானது' என்று நோயாளிகளின் பாதுகாப்புக்குக் கருணையோடு மருத்துவர்கள் உறுதி கூறினார்கள். ஆனால் உண்மை இதற்கு மாறாகவே இருந்தது.

பதின்மூன்று

# ‘நமது மக்கள் பைத்தியமாகி விட்டார்கள்’

## *பஞ்சாப், ஆகஸ்ட் - செப்டம்பர் 1947*

*முன்னுதாரணம் இல்லாததும் நிகரற்றதுமாக, முன் எப்போதும் காண... அளவுடையதாக, நடைமுறையில் ஒழுங்கற்றதாக, கொடுமையில் கா... மற்றதாக இருந்தது பிரளயம் போன்ற அந்த அரசியல் கொந்தளிப்பு. பயங்... நிறைந்த ஆறு வாரங்களுக்கு, மத்திய கால பிளேக் நோயின் அழிவுகள் போ... வடஇந்தியா முழுவதும் கொலைவெறி அழிவுகளை ஏற்படுத்தியது. அத... கொடுமையிலிருந்து தப்பிக்க புகலிடம் இல்லை. அந்த வைரஸ் தொற்றிலிரு... விடுபட ஒரு மூலை முடுக்கும் இல்லை. இரண்டாம் உலகப்போரின் நா... ஆண்டுகளில் இறந்த அமெரிக்கர்களின் எண்ணிக்கையில் பாதி அ... இந்தியர்கள் இந்த விரைந்து பரவிய கொலை வெறிக்குப் பலியாகியிருப்பார்...*

*எங்கு பார்த்தாலும் எண்ணிக்கையில் மிகுந்த வலுவானவர்கள் குறை... வலுவிழந்த மக்களைத் தாக்கினார்கள். புது டில்லி அவுரங்கசீப் சாலை... பகட்டான வீடுகளில், பழைய டில்லியின் சாண்டி சவ்க்கின் வெள்ளி வியாபா... கடைகளில், அமிர்தசரசின் மகால்களில், லாகூரின் அழகியப் புறநகர்க... ராவல்பிண்டியின் கடைவீதிகளில், பெஷாவரின் அரண்மனை நகரில்; பெ... கடைகளில், சிறிய ஸ்டால்களில், மண்குடிசைகளில், கிராமத்தின் ச... வழிகளில், செங்கற் சூளைகளில், தொழிற்சாலைகளில், வயல்வெளிகளில், ர... நிலையங்களில், தேநீர் விடுதிகளில், தலைமுறை தலைமுறையாக அருகரு... வாழ்ந்த சமூகங்கள் இப்போது வெறுப்பின் வேகத்துடன் ஒருவர் மீது ஒரு... பாய்ந்தனர். அது ஒரு போர் அல்ல; உள்நாட்டுப் போரும் அல்ல; கொரி... யுத்தமும் அல்ல. அது ஒரு வெறியாட்டம்; திடீரென்று ஒரு சமூகத்தில் ஏற்ப... அழிவு. ஒரு செயல் மற்றொன்றுக்குக் காரணமானது; ஒரு கொடுஞ்செ... இன்னொன்றுக்குத் தீனியானது; ஒவ்வொரு கொலையும் இன்னொ... கொலைக்கு வழிவகுத்தது; ஒவ்வொரு வதந்தியும் அதே போன்ற எதிர் வதந்தி... உருவாக்கியது; ஒவ்வொரு தாக்குதலும் இன்னொரு தாக்குத... கொண்டிருந்தது. ஒரு பெரும் வெடிப்பினால் கட்டடம் தகர்ந்து மெல்ல சரி... விழும் காட்சி போல பஞ்சாப் சமூகத்தின் சுவர்கள் ஒன்று மற்றொன்றின் மீது... விழுந்து நொறுங்கின.*

இந்தப் பேரழிவு அதற்கான காரணங்களைக் கொண்டிருந்தது. இரட்டைக் குழந்தைகள் போல் இந்தியாவும் பாகிஸ்தானும் பிறந்த தருணத்தில் அவற்றைப் பஞ்சாப் என்ற கொடிய கட்டி இணைத்திருந்தது. சிரில் ராட்கிளிஃபின் அறுவைக் கத்தி அந்தக் கட்டியை வெட்டியது. ஆனால் இரு உடல்களையும் பாதித்த புற்றுநோய்க் கிருமிகளை அதனால் அகற்ற இயலாமல் போனது. புதிய எல்லைக்கோடு பஞ்சாபின் ஒரு பாதிப்பகுதியில் இருந்த ஐந்து மிலியன் (ஐம்பது லட்சம்) சீக்கியர் மற்றும் இந்துக்களை பாகிஸ்தானிலும், மற்றொரு பகுதியில் இருந்த ஐந்து மிலியனுக்கும் (ஐம்பது லட்சத்துக்கும்) அதிகமான முஸ்லீம்களை இந்தியாவிலும் விட்டு விட்டன. ஜின்னா மற்றும் முஸ்லீம் லீக் தலைவர்களின் கிளர்ச்சிப் பேச்சில் மயங்கிய, சுரண்டப்பட்ட பஞ்சாபின் முஸ்லீம்கள், எப்படியாவது, பரிசுத்த பூமியான பாகிஸ்தானிலிருந்து, இந்து லேவாதேவிக்காரர்களும், கடைக்காரர்களான சீக்கிய நிலப்பண்ணை யார்களும் மறைந்து விடுவார்கள் என்று நம்பினார்கள். ஆனால் இப்போதும் அவர்கள் அங்கே இருந்தார்கள். சுதந்திரத்துக்குப் பின்னும் வாடகையை வசூலிக்கத் தயாராய் இருந்தார்கள். கடைகளையும் பண்ணைகளையும் ஆக்ரமித்திருந்தார்கள். தவிர்க்க முடியாமல் ஒரு எளிய சிந்தனை முஸ்லீம் மக்களை ஆட்கொண்டது. பாகிஸ்தான் நம்முடையதென்றால் இந்துக்கள் மற்றும் சீக்கியர்களின் கடைகளும், நிலங்களும், வீடுகளும், தொழிற் சாலைகளும் நம்முடையவைதான்' எல்லைக்கு அந்தப் பக்கத்தில், போராளி களான சீக்கியர்கள், தங்களிடையே இருந்த முஸ்லீம்களை விரட்டத் தயாரானார்கள். அப்படிச் செய்து விட்டால் ராட்கிளிஃபின் அறுவைக் கத்தியால் பாகிஸ்தானில் விடப்பட்ட அவர்களின் சகோதரர்கள் விட்டுச் சென்ற நிலங்களையும் அவர்களே எடுத்துக் கொள்ள முடியும்.

இதேபோன்ற தடுமாற்றம் தரும் பைத்தியக்காரத்தனமான செயலில் இந்துக்களும் சீக்கியர்களும் முஸ்லீம்களும் பரஸ்பரம் ஈடுபட்டனர். இந்தியா எப்போதுமே தாராளத்தன்மை கொண்ட பூமி. பஞ்சாபின் கொலைவெறி பயங்கரங்களிலும், அவை மனிதர்களுக்கு அளவு மீறி ஏற்படுத்திய துயரத்திலும் வருத்தத்திலும் கூட அது பழைய பாரம்பரியத்தைக் கைவிட்டு விடவில்லை. ஐரோப்பாவின் மக்கள் ஒருவரை ஒருவர் வெடிகுண்டுகள், கையெறி குண்டுகள், விஷவாயு அறைக்குள் தள்ளுதல் போன்றவற்றால் கொலை செய்வார்கள். ஆனால் பஞ்சாபின் மக்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ள மூங்கில் கம்புகள், ஹாக்கி மட்டைகள், ஐஸ் குத்திகள், கத்திகள், குண்டாந்தடிகள், வாள்கள், சுத்தியல்கள், செங்கற்கள், விரல்களில் அணிந்த கூரிய விலங்கு நகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தினார்கள். அவர்களின் கசாப்பு தன்னெழுச்சி யானது, முட்டாள் தனமானது. உணர்ச்சிக் கொந்தளிப்பைக் கண்டு அஞ்சிய - யோசனையின்றிக் கட்டவிழ்த்து விட்ட வெறி கொண்ட தலைவர்கள், அவர்களை மீண்டும் சுயநிலைக்குக் கொண்டு வர முயற்சி செய்தார்கள். அது பயோகமற்றக் கூச்சல். இந்தியா பைத்தியமாகி விட்ட நிலையில் குறுகிய கொடூர செயல்களுக்கிடையே இவையெல்லாம் அர்த்தமற்றவை.

தமது கண்ணுக்கெதிரே நடந்த கொடூரத்தைக் கண்ட 2/8 கூர்க்கா படையின் கேப்டன் ஆர்.இ.அட்கின்ஸ் மலைத்துப் போனார். அடிக்கடி பேசப்படுவதும்

அவர் கேட்டிருப்பதும் ஆனால் ஒருபோதும் நம்பாததுமான அந்தச் சொல் அவர் கண்முன்னாலேயே நிகழ்ந்தது. லாகூரின் கழிவுநீர்க் கால்வாய் ரத்தமாக ஓடியது. கீழை நாடுகளின் பாரிஸ் என்று கூறப்படும் அந்த அழகிய நகரம் அழிந்தும் சூனியமாகவும் காட்சியளித்தது. இந்துக்களின் வீடுகள் இருந்த வீதிகள் முழுவதும் தீப்பற்றி எரிந்தன. முஸ்லீம் காவலர்களும் துருப்புகளும் வேடிக்கைப் பார்த்து நின்றிருந்தன. இரவு நேரத்தில் இந்த வீடுகளில் கொள்ளை யடிப்போர் புகுந்து அழிப்பது மரங்களில் கறையான்களின் கூட்டம் துளை யிட்டழிப்பது போல் அட்கின்ஸுக்குத் தோன்றியது. பிரகன்சா'ஸ் ஓட்டலில் உள்ள தலைமையகத்தில் அட்கின்ஸைச் சுற்றி துயரம் நிறைந்த அரை பைத்தியமான இந்து வணிகர்கள் கூட்டம் மொய்த்துக் கொண்டது. நரகமாகி விட்ட லாகூரிலிருந்து அவரது ஜீப்பின் மூலம் தப்பிக்க ஏற்பாடு செய்தால் போதும். அவருக்கு இருபத்தைந்து, முப்பது அல்லது ஐம்பது ஆயிரம் ரூபாயோ, அவர்களது மகள்களின், மனைவியரின் நகைகளையோ தர அவர்கள் தயாராக இருந்தனர்.

அருகே உள்ள அமிர்தசரசில் பெரும்பான்மையாக இருந்த முஸ்லீம் மக்களின் வீடுகள் கற்களும் குப்பைகளுமாகி விட்டன. அவர்களுக்கு மேல் ஆகாயத்தில் சுருள் சுருளாகப் புகைமூட்டம் எழுந்தது. இடிந்து மொட்டை யாகி நின்ற சுவர்களின் மேல் கழுகுகள் நோட்டமிட்டு அமர்ந்திருந்தன. இடிபாடுகளிலிருந்து அழுகிய உடல்களின் நாற்றம் வெளிப்பட்டது. பஞ்சாபின் முகம் இப்படிப்பட்ட காட்சிகளால் எல்லா இடங்களிலும் விகாரமடைந்திருந்தன. லியால்பூரில் (Lyallpur) ஒரு ஜவுளி ஆலையின் முஸ்லீம் தொழிலாளர்கள் தறிகளை இயக்கும் துயரத்தில் தங்களுடன் பங்கு கொண்ட சீக்கியர்களைக் கொன்றார்கள் இங்கே கேப்டன் அட்கின்ஸ் கண்ட காட்சி நம்ப முடியாத அளவுக்குப் படுபயங்கரமானது. இந்த முறை ஒரு பாசனக்கால்வாய் முழுவதும் நூற்றுக்கணக்கான சீக்கியர்கள் மற்றும் இந்துக்களின் பிணங்கள் குவிந்து ரத்தத்தால் சிவந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கோடைகாலத்தில் தங்கி தேநீர் அருந்தும் சிம்லாவில் உள்ள செசில் ஓட்டலின் தாழ்வாரத்தில் நின்றிருந்த மவுண்ட் பேட்டனின் பத்திரிகைத் தொடர்பாளரது மனைவியான ஃபே கேம்ப்பெல் ஜான்சன் கண்ட காட்சி விழிபிதுங்கச் செய்தது. தலையில் அணிந்த தலைப் பாகை துணி காற்றில் அசைய மிதிவண்டிகளில் சென்ற சீக்கியர்கள் மால் வீதி நோக்கி ஓடிவந்த முஸ்லீம்களை நரியைத் துரத்தும் வேட்டைக்காரர்கள் போல் துரத்தினர். மூச்சிரைக்க ஓடும் அவர்களின் தலைகளைத் தங்களின் நீண்ட வாள்களால் ஒரே வீச்சில் சாய்த்தனர். துருக்கிக் குல்லாய் உறுதியுடன் ஒட்டி யிருக்க பழிவாங்கப்பட்டவர்களில் ஒருவரின் தலை வீதியில் உருண்டதை மற்றொரு ஆங்கிலேயப் பெண்மணி பார்த்தார். அப்போதும் அவரை வெட்டிய சீக்கிய கொலையாளி ஆவேசத்துடன் அடுத்து ஒருவரைப் பழிவாங்கத் தேடி அலைந்தார். ரத்தம் தோய்ந்த வாளுடன், 'நான் இன்னும் பலரைக் கொல்வேன் நான் இன்னும் பலரைக் கொல்வேன்' என்று கூச்சலிட்டார்.

ஒரு மனிதரைக் கொன்றவர் அவரின் நண்பராகவோ அல்லது முன்பின் தெரியாதவராகவோ இருக்கலாம். மாண்ட்கொமேரி கடைவீதியில் கடை வைத்திருந்த முஸ்லீம் தோல் தொழிலாளியிடம் கடந்த பதினைந்து

ஆண்டுகளாக ஒரு பாத்திரத்தில் அசாம் தேயிலையைக் கொண்டு வந்து வியாபாரம் செய்யும் சீக்கியர் நிரஞ்சன் சிங். ஆகஸ்ட் மாதத்தின் ஒரு நாள் காலையிலும் அப்படியே கடைக்கு வந்து அந்த மனிதருக்குத் தேயிலை கொடுக்க தனது சிறிய பித்தளைத் தராசை எடுத்தார். அந்த வாடிக்கையாளரின் முகத்தைப் பார்த்த தொழிலாளியின் முகம் வெறுப்பால் கோணலானது. அவரைச் சுட்டிக்காட்டி 'அவனைக் கொல்லுங்கள்! அவனைக் கொல்லுங்கள்' என்று அலறினார்.

அந்த சந்திலிருந்து ஒரு டஜன் முஸ்லீம் தெருப் போக்கிரிகள் ஓடிவந்தனர். அவர்களில் ஒருவன் சிங்கின் முட்டியில் வாளால் வெட்டினான். அடுத்த சிறிது நேரத்துக்குள் அவரது 90 வயது தந்தையையும் ஒரே மகனையும் அவர்கள் கொன்றனர். அவர் சுய நினைவை இழப்பதற்கு முன் கடைசியாகக் கண்ட காட்சி இதுதான்: பதினைந்து ஆண்டுகளாக யாருக்கு அவர் தேயிலை வழங்கி வந்தாரோ அந்த மனிதர் அச்சத்தால் அலறும் அவரது 18 வயது மகளைத் தன் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு சென்றார்.

சில மாவட்டங்களில் வன்முறையால் பாதிக்கப்படாமல் ஒரு கிராமும் இல்லை; ஒரு கடைவீதியும் இல்லை. எல்லா இடங்களிலும் சிறுபான்மை சமூகத்தினர் அச்சம் மற்றும் பீதியின் பிடியில் சிக்கியிருந்தனர். லாகூர் - கராச்சி ரயில்பாதை அருகே முஸ்லீம்கள் அதிகமுள்ள தொழிற்சாலை நகரம் உகர்னா (Ukarna). இங்கே மதன்லால் பாவா என்ற குள்ளமான கட்டுடல் கொண்ட 20 வயது கடற்படை வீரர் அவரது மாமாவின் வீட்டுக்குள் பதுங்கியிருந்தார். இந்த நகரைச் சேர்ந்த முஸ்லீம்கள் மகிழ்ச்சியுடன் ஆடுவதை, பாடுவதை, கொடிகளை அசைப்பதை ஜன்னல்கள் வழியாக அவர் பார்த்தார். அவர்கள் புதிய கோஷம் ஒன்றை எழுப்பினார்கள். 'ஹம்கேல்யா பாகிஸ்தான், லர் கெலிங்கே ஹிந்துஸ்தான்' (Hamkelya Pakistan, Lar kelinge Hindustan) - சிரித்துக் கொண்டே பாகிஸ்தானை வென்றோம், போரிட்டு இந்தியாவை வெல்வோம்' மதன்லால் முஸ்லீம்களை வெறுத்தார். ஆர்எஸ்எஸ்எஸ்சின் கறுப்புப் பட்டை கொண்ட சீருடையில் அவர்களை அச்சுறுத்த உதவி செய்திருக்கிறார். இப்போது அவர் அச்சமடையும் முறை வந்திருக்கிறது. 'நாங்கள் அஞ்சிக் கொண்டிருக்கிறோம், கசாப்பு செய்பவனுக்காகக் காத்திருக்கும் ஆட்டு மந்தை போல இருக்கிறோம்' என்று அவர் எண்ணினார்.

சீக்கியர் எங்கே அதிகம் இருந்தார்களோ அங்கேயெல்லாம் அவர்கள் நன்கு திட்டமிட்டுக் கொடூரமாகக் கொலைகளைச் செய்தார்கள். ஃபெரோஸ்பூருக்கு அருகே உள்ள ஒரு சிறிய கிராமத்துக்குள் ஒரு நாள் இரவில் வந்த சீக்கியக் கும்பல் அகமத் ஸாருல்லா என்ற முஸ்லீம் குத்தகை விவசாயியைத் தாக்கியது. 'எலிகளைப் போல் கொல்லப்படப்போகிறோம் என்பதை நாங்கள் அறிந்தே இருந்தோம்' என்று பின்னாளில் நினைவு கூர்ந்த அவர் அந்நாளில் நடந்த சம்பவத்தை விவரித்தார். 'கயிற்றுக் கட்டில்களுக்குப் பின்னாலும் பசுமாட்டுச் சாணக் குவியலுக்குப் பின்னாலும் நாங்கள் ஒளிந்தோம். சீக்கியர்கள் கோடரிகளால் கதவை உடைத்துத் தள்ளினார்கள். எனது இடது தோளில் ஒரு துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது. நான் எழுந்து நிற்க முயற்சித்த போது எனது மனைவியைப் பார்த்தேன். அவள் மீது நான்கு துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருந்தன. அவளது தொடையிலிருந்தும் முதுகிலிருந்தும் ரத்தம் வழிந்து

*கொண்டிருந்தது. எனது 3 வயது மகனின் அடிவயிற்றில் குண்டு பாய்ந்திருந்தது. அவன் கத்தவில்லை. கீழே விழுந்து இறந்து போனான்.'*

*'எனது மனைவியையும் இரண்டாவது மகனையும் நான் கையில் பற்றிக் கொண்டேன். இறந்த குழந்தையை விட்டு விட்டு நாங்கள் மெல்லத் தவழ்ந்து வீதிக்கு வந்தோம். மற்ற குடிசைகளிலிருந்து வந்த முஸ்லீம்களை சீக்கியர்கள் சுட்டு வீழ்த்துவதை நான் பார்த்தேன். அவர்களில் சிலர் பெண்களைத் தங்களின் தோள்களில் தூக்கிச் சென்றார்கள். அங்கே கத்தல்கள், கதறல்கள், கூக்குரல்கள் இருந்தன. சீக்கியர்கள் என்மீது பாய்ந்தார்கள் இறந்து போன எனது மனைவியை எனது தோளிலிருந்து இழுத்தார்கள். இரண்டாவது மகனையும் கொன்றார்கள். அந்தப் புழுதியிலேயே கிடந்து சாகட்டும் என்று என்னை விட்டுச் சென்றார்கள். அழுவதற்கு எனக்கு சக்தியுமில்லை; ஒரு துளி கண்ணீருமில்லை. எனது கண்கள் பருவ காலத்துக்கு முந்தைய சிந்து நதிபோல் வறண்டு விட்டன. நான் நினைவிழந்து கீழே சாய்ந்தேன்'*

*லாகூருக்கு வடக்கே ஷேக்புரா என்ற வணிக நகரில் வங்கி அளித்த கடன்களுக்கு ஈடாகப் பெற்ற தானியங்களைக் கோணிப்பைகளில் கட்டி சேமித்து வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பெரிய கிடங்கு இருந்தது. இதற்குள் அந்த நகரின் ஒட்டுமொத்த இந்துக்களும் சீக்கியர்களும் ஆட்டு மந்தைபோல் அடைக்கப்பட்டனர். நிராதரவான இந்துக்களை முஸ்லீம் காவலர்களும், ராணுவத்திலிருந்து ஓடிவந்தவர்களும் எந்திரத்துப்பாக்கிகளால் சுட்டுத் தள்ளினார்கள். உயிர் பிழைத்தவர்கள் ஒருவரும் இல்லை.*

*இந்தியா அல்லது பாகிஸ்தான் ராணுவத்தில் பணி செய்வதற்காகத் தங்கி விட்ட பிரிட்டிஷ் அதிகாரிகளின் உதடுகள் ஒரே பல்லவியை மீண்டும் மீண்டும் பாடின. 'இரண்டாம் உலகப் போரில் நாங்கள் கண்டதை விட இது மிகவும் மோசமானது.'*

*நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையின் மூத்த நிருபர் ராபர்ட் ட்ரம்புல் (*Robert Trumbull*) இப்படிக் குறிப்பிட்டார்: 'தாராவா (*Tarawa*) கடற்கரையில் அடுக்கி வைக்கப்பட்ட சடலங்களைக் கண்டபோதும் வேறெந்த சமயத்திலும் நான் இப்படி அதிர்ச்சி அடைந்ததில்லை. இந்தியாவில் இப்போது மழையை விடச் சாதாரணமாக ரத்தம் பொழிகிறது. நூற்றுக்கணக்கானவர்கள் இறந்ததை நான் பார்த்திருக்கிறேன். அவற்றை விட மோசமாக ஆயிரக்கணக்கான இந்தியர்கள் கண்களும், கால்களும், கைகளும் இன்றி இறந்து கிடந்தார்கள். துப்பாக்கியால் சுட்டு இறப்பது கருணை மிக்கது. ஆனால் அது குறைவு தான். ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் பொதுவாகத் தடிகளாலும் கற்களாலும் அடித்துக் கொல்லப்பட்டார்கள். காயம் பட்டு சாகக் கிடந்தவர்களின் கொடுமையை வெயிலும் ஈக்களும் அதிகப்படுத்தின.'*

*சண்டையிடும் சமூகங்கள் கொடுமை செய்வதில் போட்டி போட்டுக் கொண்டன. சீக்கியர்களால் சூறையாடப்பட்ட ஒரு கிராமத்தில் நான்கு முஸ்லீம் குழந்தைகள் வாணலியில் போட்டு பன்றிக் குட்டிகள் போல் வறுக்கப் பட்டிருந்ததை, பஞ்சாப் எல்லைப் படையைச் சேர்ந்த பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் கண்டார். இந்துப் பெண்கள் சிலர் கொல்லப்படுவதற்கு முன் அவர்களின் மார்பகங்கள் ஒரேமாதிரியாக முஸ்லீம் வெறியர்களால் துண்டாடப்பட்டதை மற்றொருவர் கண்டார்.*

முஸ்லீம்கள் நிறைந்த பகுதிகளில் இந்துக்கள் முஸ்லீம் மதத்துக்கு மாறிட வாய்ப்பளிக்கப்பட்டனர். அல்லது பாகிஸ்தானிலிருந்து விரட்டப்பட்டனர். சியால்பூருக்கு மேற்கே ஒரு குக்கிராமத்தைச் சேர்ந்த இந்து விவசாயி பாக்தாஸ் (Bagdas). இவர் முந்நூறு இந்துக்களுடன் பக்கத்து கிராமத்தில் ஒரு குளத்துக் அருகே இருக்கும் மசூதிக்குப் பயணமானார். குளத்தில் அவர்கள் கால்களைக் கழுவினார்கள். பின்னர் மசூதிக்குள் மந்தை போல் நுழைந்தார்கள். தரையில் கால்களைக் குறுக்காக மடக்கி அமரும்படி அவர்கள் பணிக்கப்பட்டார்கள். குரானிலிருந்து ஒரு சில வாசகங்களை மவுல்வி வாசித்தார். 'முஸ்லீம்களாக மாறி சந்தோஷமாக வாழ்வதா அல்லது சாவதா என்பதை இப்போது நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்' என்று அவர்களிடம் அவர் சொன்னார்.

'முந்தையதையே நாங்கள் விரும்புகிறோம்' என்று தாஸ் பதிலளித்தார். மதம் மாறிய ஒவ்வொருவருக்கும் புதிதாக முஸ்லீம் பெயரிடப்பட்டது. குரானிலிருந்து ஒரு வாசகம் சொல்ல வைக்கப்பட்டது. பின்னர் அவர்கள் பசுவின் மாமிசம் வறுக்கப்படும் மசூதியின் முற்றத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள். ஒருவர் பின் ஒருவராக இந்துக்கள் அந்தக் கறியிலிருந்து ஒரு துண்டினை சாப்பிடச் செய்தனர். அந்த நிமிடம் வரை சைவ உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்த தாஸுக்கு 'வாந்தி வருவது போல் இருந்தது.' ஆனால் அதை அடக்கிக் கொண்டார். ஏனென்றால் 'அவர்கள் சொல்வதைக் கேட்காவிட்டால் நான் கொல்லப்பட்டு விடுவேன்' என்று அவர் எண்ணினார்.

அவரது அண்டை வீட்டுக்காரர் ஒரு பிராமணர். இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவம் கருதி அவரது சிறப்புக்குரிய திருமணத் தட்டுகளையும் கரண்டிகளையும் கொண்டு வர மனைவி மற்றும் மூன்று குழந்தைகளுடன் வீட்டுக்குச் சென்று வர அனுமதி கோரினார். புகழ்ந்து பேசி கெஞ்சியதால் அவரைப் பிடித்து வைத்திருந்த முஸ்லீம்கள் அவர் வீட்டுக்குச் சென்று வர ஒப்புக் கொண்டனர். பின்னர் நடந்ததை தாஸ் நினைவு கூர்ந்தார். 'அந்த பிராமணர் அவரது வீட்டில் ஒரு கத்தியை மறைத்து வைத்திருந்தார். வீட்டுக்குச் சென்றவுடன் ஒளித்து வைத்த இடத்திலிருந்து அதனை எடுத்தார். அவரது மனைவியின் கழுத்தையும், மூன்று பிள்ளைகளின் கழுத்தையும் அறுத்தார். பிறகு தன் நெஞ்சில் கத்தியால் குத்திக் கொண்டார். அந்த இறைச்சியைச் சாப்பிட அவர்களில் ஒருவரும் திரும்பி வரவில்லை.'

பாகிஸ்தானில் இருந்த இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் மீது முஸ்லீம்கள் அடிக்கடி நடத்திய தாக்குதல்களுக்குப் பின்னணியாக மத உணர்வுகளோடு சம்பந்தமில்லாத வேறொரு காரணமும் இருந்தது. அது தான் பேராசை. அவர்களின் அண்டை அயலில் உள்ள நிலங்களையும், கடைகளையும், சொத்துக்களையும் அபகரிக்க கவனமாக ஆட்களைத் திரட்டி தாக்குதல் முயற்சியில் ஈடுபடுவது மிகவும் எளிதாக இருந்தது.

சியால்கோட் அருகே ஒரு கிராமத்தில் இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பைச் செய்திருந்த சர்தார் ப்ரேன்சிங் (Sardar Pren Singh) என்ற சீக்கியரை வேறெவரை யும் விட அதிகமாக முஸ்லீம்கள் வெறுத்தனர். அவர் ஒரு லேவாதேவிக்காரர். 'நான் மிகப்பெரும் பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவன். வாசல் முகப்பில் உறுதியான இரும்புக் கதவுகளையும் இரண்டு மாடிகளையும் கொண்ட மிகப் பெரிய வீடு எனக்கு இருந்தது. நான் மிகவும் வசதியானவன் என்பது அந்தக்

கிராமத்தில் அனைவருக்கும் தெரியும். பல முஸ்லீம்கள் அவர்களின் நகைகளை என்னிடம் அடகு வைத்திருந்தார்கள். அவற்றை நான் ஒரு பெரிய இரும்புப் பெட்டியில் வைத்துப் பாதுகாத்தேன். இந்தக் கிராமத்தின் ஒவ்வொரு முஸ்லீமும் வாழ்நாளில் ஒரு முறையாவது அவரது நகைகளை என்னிடம் அடகுவைத்திருப்பார்' என்று ப்ரேன் சிங் கூறினார்.

சுதந்திரத்திற்குப் பிறகு ஒரு நாள் காலை குண்டாந்தடிகள், இரும்புக் குழாய்கள், கத்திகளுடன் ஆவேசம் கொண்ட முஸ்லீம்கள் வெள்ளம் போல் திரண்டு அவரது வீட்டுக்கு வருவதை ப்ரேன் சிங் பார்த்தார். அந்தக் கூட்டத்தில் வந்த ஒவ்வொரு ஆணையும் அவருக்கு அடையாளம் தெரியும். அவர்கள் அனைவரும் ஏதாவது ஒரு நேரத்தில் அவரிடம் கடன்பட்டிருந்தனர். 'அந்தப் பெட்டி, அந்தப் பெட்டி' என்று அவர்கள் ஆவேசமாகக் கத்தினார்கள்.

'வசதியான அறுவடையை நடத்த வேண்டும் என்று அவர்கள் எதிர் பார்ப்பது' ப்ரேன் சிங்கிற்குப் புரிந்தது. அவரது பெட்டிக்குள் முஸ்லீம்களின் நகைகளைத் தவிர வேறு பொருள்களும் இருந்தன. அதற்குள் இரட்டைக்குழல் துப்பாக்கியும் இருபத்தைந்து தோட்டாக்களும் வைத்துப் பூட்டப்பட்டிருந்தன. சிங் பெட்டியைத் திறந்து துப்பாக்கியை எடுத்துக் கொண்டு இரண்டாவது மாடியை நோக்கி விரைந்தார். வீட்டு வாசலில் தாக்குதல் நடத்த முயன்ற அந்த வெறிபிடித்த கும்பலிடமிருந்து அவரது வீட்டைக்காக்க ஒரு மணி நேரத்துக்கு மேல் அங்கும் இங்கும் அலைந்தார். அப்படி அவர் செய்யும் போது, கீழ் தளத்தில் ஒரு கோரச் சம்பவம் நடந்து கொண்டிருந்தது. வெறி கொண்ட முஸ்லீம் கும்பல் வீட்டை உடைத்து நுழைந்து விடுவது நிச்சயம் என்பதை உணர்ந்த ப்ரேன் சிங்கின் மனைவி, ஆறு மகள்களையும் அவரது அலுவலகத்துக்கு வருமாறு அழைத்தார். ஒரு பெரிய மண்ணெண்ணெய் டின்னை எடுத்து தன் மீது ஊற்றிக் கொண்டார். தன்னைப் போலவே செய்யுமாறு தனது மகள்களையும் வற்புறுத்தினார். சீக்கியர்களின் குருவான நானக்கின் கருணையை வேண்டிக் கொண்டு அவர் தனக்குத் தானே தீ வைத்துக் கொண்டார்.

மாடியின் மேலிருந்து இன்னமும் முரட்டுத் துணிச்சலுடன் போராடிக் கொண்டிருந்த அவரது கணவர், மாடிப்படிகளின் மேல் ஒரு வகையான துர்நாற்றம் வருவதை உணர்ந்தார். கடைசியாக அவரிடம் ஐந்து தோட்டாக்கள் மட்டும் இருந்த போது முஸ்லீம் கும்பல் வெளியேறி விட்டது. களைத்துப் போன அந்த சீக்கியர் மாடியிலிருந்து கீழிறங்கினார். பீதியடைந்த அந்த லேவாதேவிக் காரர் குடலைப் பிடுங்கும் துர்நாற்றத்துக்கான காரணத்தைக் கண்டறிந்தார். திறந்து கிடந்த அவரது பெட்டிக்கு முன்னால் தீயில் கருகிப் போன அவரது மனைவியும் மூன்று மகள்களும் பிணங்களாகக் கிடந்தார்கள். முஸ்லீம்களால் கற்பழிக்கப்படாமல் காப்பாற்றிக் கொள்வதற்காகவே அவர்கள் தீக்குளிப்பு செயலைத் தேர்ந்தெடுத்தார்கள்.

வீடுகளிலிருந்து விரட்டப்பட்ட சீக்கியர்கள் மற்றும் இந்துக்கள் அனைவருமே வசதிபடைத்தவர்கள் அல்ல. லாகூருக்கு வடக்கே ஒரு கிராமத்தில் அறுநூறு முஸ்லீம்கள் இருந்தனர். இந்த ஊரில் இருந்த ஐம்பது இந்து மற்றும் சீக்கிய குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்த, சீக்கிய குத்தகை விவசாயி ஒருவரின் மகன் குல்தீப் சிங் (Guldip Singh). அவனுக்கு வயது 14. இரண்டு அறைகளைக்

கொண்ட வீடு. பெற்றோர்கள், இரண்டு எருமைகள், ஒரு பசு ஆகியவற்றை மட்டும் கொண்ட அவனும் இது போன்ற துயரங்களை அனுபவித்தான். ஒரு நாள் அண்டை வீட்டார்களான முஸ்லீம்கள் அவர்களின் வீடுகளை முற்றுகையிட்டு 'பாகிஸ்தானை விட்டு வெளியேறுங்கள். இல்லையேல் உங்களை நாங்கள் கொன்றுவிடுவோம்' என்று சத்தமிட்டனர்.

அவர்கள் அந்தக் கிராமத்தின் மிக முக்கியமான சீக்கியரின் வீடு நோக்கி ஓடினார்கள். 'முஸ்லீம்கள் வாள்கள், கத்திகளுடனும், அவர்களை எரிப்பதற்கு மண்ணெண்ணெயில் நனைத்த துணிகள் சுற்றிய நீளமான இரும்புத் தடிகளுடனும் வந்தார்கள். அவர்கள் மீது நாங்கள் செங்கற்களையும் சரளைக் கற்களையும் வீசினோம். இருந்தாலும் அவர்கள் எங்களின் வீடுகளுக்குத் தீ வைத்தார்கள். சீக்கியர் ஒருவரைப் பிடித்து அவரது தாடியில் தீவைத்தனர். தாடி பற்றி எரியும் போது கூட அந்த சீக்கியர் ஒரு பெரிய செங்கல்லை எடுத்து வீசி மண்டையைப் பிளந்து ஒரு முஸ்லீமைக் கொன்று விட்டார். பின்னர் அவர் சீக்கிய குருவின் நாமத்தை ஜெபித்துக் கொண்டே கீழே விழுந்து இறந்தார்.

'அவர்கள் ஆண்களை வெளியே இழுத்துப் போட்டு, வீதிகளில் கொன்றார்கள். நான் வீட்டின் கூரைப்பகுதிக்கு ஓடினேன். அங்கே இருந்த பெண்கள் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார்கள். தாங்கள் பிடிக்கப்பட்டு கற்பழிக்கப்படுவோம் என்பதை அவர்கள் அறிந்தனர். அவர்களில் சிலரின் கைகளில் குழந்தைகள் இருந்தன. அவர்கள் வீட்டின் உச்சியில் நெருப்பு மூட்டினார்கள். தங்களின் குழந்தைகளுக்கு முலைப்பால் ஊட்டினார்கள். தங்களின் தலைவிதியை நினைத்து ஓலமிட்ட அவர்கள் பின்னர் தங்களின் குழந்தைகளைத் தூக்கி தீயில் வீசினார்கள், பின்னர் அவர்களும் நெருப்பில் குதித்தார்கள்.'

'இதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை' அந்த சீக்கிய இளைஞன் நினைவு கூர்ந்தான். கூரையிலிருந்து இறங்கினான். குழப்பத்தோடு அதிகரித்து வரும் இருளில் அங்கிருந்து தப்பி ஒரு மரத்துக்குச் சென்றான். அதன் கிளைகளில் அடுத்த ஆறு மணி நேரத்துக்குப் பதுங்கியிருந்தான்.

'உடல்கள் எரிவதால் ஏற்படும் துர்நாற்றம் அந்த வீட்டிலிருந்து வந்து கொண்டிருந்தது' என்பதை அவன் நினைவு கூர்ந்தான். 'எனது தந்தையும் தாயும் வெளியே வரவில்லை. அவர்கள் கொல்லப்பட்டிருப்பார்கள் அல்லது தீயில் குதித்திருப்பார்கள் என்பதை நான் அறிந்தேன். இரண்டு பெண்கள் தூக்கிச் செல்லப்பட்டார்கள். அவர்கள் அலறவில்லை; காரணம் அவர்கள் மூர்ச்சையாகி விட்டார்கள்.

'பின்னிரவில் அமைதி ஏற்பட்ட போது நான் மரத்திலிருந்து கீழே இறங்கினேன். வீட்டுக்குச் சென்றேன். எல்லோரும் இறந்து கிடந்தார்கள். என்னையும் இந்த இரண்டு பெண்களையும் தவிர கிராமத்திலிருந்த அனைவரும் கொல்லப்பட்டார்கள்.' அழுவதற்குக் கூட ஆற்றலற்ற அந்த 14 வயது சீக்கிய இளைஞன் எரிந்து எலும்புக்குவியல்கள் கிடந்த வீட்டுக்குள் இரவு நேரத்தைக் கழித்தான். விடியற்காலையில், தம்மால் வாழ்நாள் முழுவதும் நன்கறியப்பட்ட நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டார்களின் கருத்துப் போன உடல்களுக் கிடையே தனது பெற்றோரின் கருகிய உடல்களை அடையாளம் காண முயற்சி செய்தான். அவனால் முடியவில்லை. தரையில் ரத்தக் கறைபடிந்த ஒரு கத்தி

கிடப்பதைக் கண்டான். தன்னை ஒரு முஸ்லீம் போல் காட்டிக் கொள்வதற்காக இதுவரை வெட்டப்படாத தலைமுடியை அந்தக் கத்தியால் மழித்துக் கொண்டான். பின்னர் அங்கிருந்து அவன் தப்பியோடினான்.

கொடூரத்துக்கு இனப்பாகுபாடு இருக்கவில்லை. அந்த ஆகஸ்ட் மாத நாட்களில் ஏறத்தாழ பைபிளில் கூறப்பட்டது போன்றே பயங்கர செயல்கள் பஞ்சாபில் நடந்தன. கண்ணுக்குக் கண், கொலைக்குக் கொலை, கற்பழிப்புக்குக் கற்பழிப்பு, கண்மூடித்தனமான கொடூரத்துக்கு அதே போன்ற கொடூரம். குல்தீப் சிங்கிற்கும் முகமது யாகூபுக்கும் இடையேயான ஒரே வேறுபாடு அவர்களின் மதம் மட்டுமே. முகமதும் கூட 14வயது இளைஞன் தான். இந்தியாவில் அமிர்தசரஸுக்கு அருகே அவன் வாழ்ந்தான். அவனது பெற்றோர்கள் ஆறு சகோதர சகோதரிகள் ஆகியோருடன் ஒரு குடிசையில் அவன் குடியிருந்தான். சீக்கியர்கள் தாக்கிய போது அவன் இந்தக் குடிசைக்கு முன்னால் தான் கோலியாடிக் கொண்டிருந்தான். அந்தக் கிராமத்தின் ஒதுக்குப்புறமான பகுதியில் இருந்த கரும்புத் தோட்டத்துக்குள் மறைந்து அவன் தப்பித்தான்.

'சீக்கியர்கள் சில பெண்களின் மார்பகங்களை வெட்டினார்கள். பலர் அஞ்சி ஓடினார்கள்' என்பதை அவன் நினைவு கூர்ந்தான். 'சீக்கியர்கள் கைப்பற்றுவதிலிருந்து தடுப்பதற்காக கிராமவாசிகளில் சிலர் தங்களின் மனைவியரையும் மகள்களையும் தாங்களே கொன்றார்கள். எனது சிறிய சகோதரர்களின் உடம்புகளில் சீக்கியர்கள் ஈட்டியால் குத்தினார்கள். எனது தந்தையால் இந்தக் கொடிய காட்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஒரு வாளை உருவிக் கொண்டு பைத்தியம் பிடித்த மனிதர் போல் அங்கும் இங்கும் அவர் ஓடினார். திறந்த வெளியில் சீக்கியர்களால் அவரைப் பிடிக்க முடியவில்லை. எனவே அவருக்குப் பின்னால் கிராமத்து நாய்களை விரட்டி விட்டார்கள். அந்த நாய்கள் அவரின் கால்களில் கடித்தன. இதனால் எனது தந்தையின் ஓட்டத்தில் வேகம் குறைந்தது. பிறகு சீக்கியர்கள் அவரைப் பிடித்தார்கள். சிலர் இறுக்கமாகக் கட்டிப்பிடித்து அவரைக் கீழே தள்ளினார்கள். எனது தந்தை அவர்களின் வாள்களால் கண்ட துண்டமாக வெட்டப்பட்டார். அவரது தலையும், கைகளும், கால்களும் உடலிலிருந்து துண்டாடப்பட்டன. பிறகு நாய்களை விட்டு அந்த உடலைத் தின்னச் செய்தார்கள்.'

முகமதின் கிராமத்தில் வாழ்ந்த ஐநூறு முஸ்லீம்களில் ஐம்பது பேர் மட்டுமே படுகொலைகளிலிருந்து தப்பிப் பிழைத்தார்கள். பஞ்சாப் எல்லைப்படையின் ரோந்துப் பிரிவு ஒன்றின் தலையீட்டால் அவர்கள் காப்பாற்றப்பட்டனர். அவனது குடும்பத்தில் தப்பிப் பிழைத்த ஒரே நபரான முகமது, கூர்க்கா ராணுவ வீரர்களால் இயக்கப்பட்ட ஒரு ட்ரக்கில் ஏற்றப்பட்டு, முஸ்லீம்கள் நிறைய வாழ்வதாகத் தலைவர்கள் கூறிய, அறிமுகமில்லாத ஒரு பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

பொங்கி வெடித்த இந்தக் கலவரத்தின் நினைவுகள் லட்சக்கணக்கான மக்களிடம் மறையாதத் தழும்புகளையே விட்டுச் செல்லும். அறிவிழந்த இந்தப் படுகொலைகளின் போது உறவினரில் ஒருவரையாவது இழக்காத பஞ்சாபியர் குடும்பங்களைக் காண்பது அரிது. வருங்காலத்தில் இத்தகைய நினைவுகளின் குவியிடமாக பஞ்சாப் இருக்கும். ஒவ்வொரு நினைவும் மற்றொன்றைவிட பயங்கரமாகவும் பீதியேற்படுத்துவதாகவும் இருக்கும். பல ஆண்டுகாலம்

தொடர்பு கொண்டிருந்த நிலத்திலிருந்து திடீரெனப் பிடுங்கியெறியப்பட்டு உயிரச்சம் கொண்டு ஓடிவந்த பயங்கர நிகழ்வுகளை நினைவுபடுத்துவதாக அந்த மக்களுக்கு அவை இருக்கும். சாந்த் சிங் (Sant Singh) என்ற சீக்கியர் எந்த நிலத்திலிருந்து விரட்டப்பட்டாரோ அதற்கு ஒரு சிறப்பான வரலாறு இருந்தது. அந்த நிலத்தை அவர் ரத்தம் சிந்தி வாங்கினார். அந்த ரத்தம் பிரிட்டனுக்காக, முதலாம் உலகப் போரின் போது கல்லிபோலி (Gallipoli) கடற்கரையில் சிந்தப்பட்டது. (கல்லிபோலி என்பது துருக்கியில் உள்ள ஒரு தீபகற்பமாகும். மொ-ர்) ஆயிரக்கணக்கான சீக்கிய ராணுவ வீரர்களைப் போலவே அவருக்கும் வெகுமதியாய் அளிக்கப்பட்ட அந்த நிலத்தைச் சீர்ப்படுத்த பதினாறு ஆண்டுகள் ஆயின. லாகூரின் தென்மேற்குப் பகுதியில் ரவி மற்றும் சட்லெஜ் பாசனத் திட்டத்தின் மூலமே இந்தப் பகுதி பண்படுத்தப்பட்டு பயிர் செய்வதற்கு ஏற்றதாக மாற்றப்பட்டது. பத்தாண்டு காலத்துக்கு மேல் வாழ்ந்த கூடாரத்துக்குத் தான் அவரது மனைவியைக் கொண்டு வந்தார். இந்த நிலப்பகுதியில் தான் குழந்தைகளைப் பெற்று வளர்த்தார். ஐந்து அறைகளுடன் செங்கற்களைக் கொண்டு வீடு ஒன்றையும் அங்கே கட்டினார். இந்த இரண்டு செயல்களும் அவருக்குப் பெருமை அளித்தன. அவரது வாழ்க்கைச் சாதனை களின் அளவுகோல்களாக இருந்தன. அந்தப் பகுதியில் முஸ்லீம்களுக்கிடையே ரகசியமாக விநியோகிக்கப்பட்ட துண்டுபிரசுரம் ஒன்றை சாந்த் சிங்கின் வயலில் வேலை செய்யும் முஸ்லீம் தொழிலாளர்களில் ஒருவர், சுதந்திர தினத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தார்.

'சீக்கியர்களும் இந்துக்களும் இனி இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்களை விரட்டியடிக்க வேண்டும்' அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. மூன்று நாட்களுக்குப் பின் தாக்குதல் தொடங்கியது. சாந்த் சிங்கும் அவரது கிராமத்தைச் சேர்ந்த 200 சீக்கியர்களும் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அங்கிருந்து ஓடி விடுவதென்று முடிவு செய்தார்கள். அந்தக் கிராமத்துப் பெண்களுக்குப் பாதுகாப்பாக, 80 வயதான முன்னாள் ராணுவ அதிகாரி தலைமையில், மற்ற ஐந்து பேருடன், ஒரு ட்ரக் வண்டியில் செல்லும் பணி அவருக்கு அளிக்கப்பட்டது. அங்கிருந்து புறப்படுவதற்கு முன் அவர் குருத்வாராவுக்குச் சென்றார். அந்தக் கோயிலைக் கட்டுவதற்கு அவர் உதவி செய்திருக்கிறார். 'ஏதுமில்லாமல் தான் இங்கே நான் வந்தேன்; ஏதுமில்லாமல் தான் இங்கிருந்து நான் செல்கிறேன். உங்களிடம் பாதுகாப்பை மட்டுமே நான் வேண்டுகிறேன்' குருநானக்கிடம் அவர் இறைஞ்சினார்.

பிர்வல்லா (Birwalla) என்றழைக்கப்பட்ட ஒரு கிராமத்தின் வெளிப்புறத்தில் குருவின் பாதுகாப்பு முடிந்து விட்டது. சாந்த் சிங் வந்த ட்ரக் வண்டியில் பெட்ரோல் தீர்ந்து விட்டது. அவர் நினைவுகூர்ந்தார்: 'அது இருட்டு வேளை, முஸ்லீம்களின் பார்வையில் படாமல் இருப்பதற்காக சாலை வழியே செல்வதற்குப் பதிலாக ரயில் பாதையின் ஓரமாக நாங்கள் வண்டியை ஓட்டி வந்தோம். பிர்வல்லாவில் அவர்கள் பெரிய அளவில் சாலைத் தடையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கண்ணில் படும் இந்துக்களையும் சீக்கியர்களையும் கொல்கிறார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டிருந்தோம். அந்த இருட்டு நேரத்தில் கத்தல்களையும் கதறல்களையும் எங்களால் கேட்க முடிந்தது. காரணம், சில நூறு கஜ தூரத்தில் தான் அந்த நகரம் இருந்தது.

'எங்களைப் பார்த்த ஒரு வயதான முஸ்லீம் இருட்டுக்குள் ஓடி மறைந்தார். எங்களைப் பற்றி தகவல் தெரிவிக்கவே அவர் சென்றுள்ளார் என்பதை நாங்கள் அறிந்தோம். பிறகு அந்த சத்தங்கள் எங்களை நோக்கி வருவதைக் கேட்டோம். எங்களுக்கு குலைநடுக்கும் ஏற்பட்டது. எங்களுடன் வந்த பெண்கள் அனைவரையும் சுட்டு விடுவதென்று எங்கள் தலைவர் முடிவு செய்தார். ஒருவர் பக்கத்தில் ஒருவராய் மூன்று வரிசைகளில் அவர்கள் தரையில் அமர ஏற்பாடு செய்தோம். அவர்களின் கண்களைக் கட்டினோம். 2 மாதக் குழந்தை ஒன்று அதன் தாயிடம் முலைப்பாலருந்தி கொண்டிருந்தது. 'கடவுளே உண்மை யானவர்' என்ற சீக்கிய பிரார்த்தனை வாசகத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்கு மாறு அவர்களிடம் சொன்னோம்.

'எனது மனைவி நடுப்பகுதியில் இருந்தார். எனது இரண்டு மகள்களும் ஒரு மருமகளும் இரண்டு பேத்திகளும் அங்கே இருந்தார்கள். அவர்களைப் பார்க்காமல் இருக்க நான் முயற்சி செய்தேன். என்னிடம் ஒரு இரட்டைக் குழல் துப்பாக்கி இருந்தது. மற்றவர்களிடம் ஒரு 303 கைத்துப்பாக்கியும் இரண்டு ரிவால்வர்களும் ஒரு ஸ்டென்கன்னும் இருந்தன. 'எல்லாம் கடவுளின் விருப்பம். உங்களுக்கான நேரம் வந்து விட்டால் நீங்கள் இறக்க வேண்டும்' என்று குருவின் புனித நூலில் ஐந்தாம் பகுதியில் உள்ள வாசகங்களை நான் அவர்களுக்கு மேற்கோள் காட்டினேன். ஒரு வெள்ளை கைக்குட்டையை எடுத்து, மூன்று எண்ணிக்கைக்கு அடையாளமாக இதனை நான் மூன்று முறை அசைப்பேன்; பின்னர் நாம் சுட்டு விட வேண்டும் என்று மற்றவர்களிடம் கூறினேன்.

'நான் முதல்முறை அசைத்து ஏக் - ஒன்று என்று சொன்னேன். இரண்டாவது முறை அசைத்து தோ  இரண்டு என்று சொன்னேன். ஒவ்வொரு முறையும் 'கடவுளே என்னைக் கைவிட்டு விடாதே' என்று நான் வேண்டிக் கொண்டேன். மூன்றாவது முறைக்காகக் கைக்குட்டையை உயர்த்தினேன். அப்போது தூரத்தில் வாகனத்தின் முகப்பு விளக்குகளைப் பார்த்தேன். எனது வேண்டு தலுக்கு விடையாக இதனை நான் எடுத்துக் கொண்டேன். அவர்களிடம் உதவி கேட்க வேண்டும் என்று நான்கூறினேன்.

''அந்தக் காரில் வருபவர்கள் முஸ்லீமாக இருந்தால் என்ன செய்வது?'' வயது முதிர்ந்த சார்ஜன்ட் கேட்டார்.

'' எப்படியிருந்தாலும் நாம் உதவி கேட்க வேண்டும்'' என்று நான் கூறினேன்.

'அது ராணுவத்தின் ட்ரக் வண்டி. அதில் இருந்தவர்கள் முஸ்லீம் வீரர்கள். ஆனால் அதன் அதிகாரியான மேஜர் நல்ல மனிதராக இருந்தார். எங்களைக் காப்பாற்றுவதாக அவர் சொன்னார். அவரது பாதங்களை நாங்கள் முத்த மிட்டோம். பின்னர் அங்கிருந்து மீண்டும் பயணமானோம்'

## கல்கத்தா, 17 ஆகஸ்ட் 1947

அவர்கள் ஏறத்தாழ 1,00,000 பேர் இருந்தனர். நாரிகல்டோங்கா (Narikeldonga) சதுக்கத்தைச் சூழ்ந்து கொண்டும் அதைச்சுற்றியுள்ள வீடுகளின் கூரை உச்சிகளிலும், ஜன்னல்களில் தொற்றிக் கொண்டும், பால்கனிகளில் நெருக்கிக் கொண்டும் மாலை 5 மணியிலிருந்து அவருக்காக அவர்கள் காத்திருந்தனர்.

அங்கிருந்த ஒரு சில மரங்களில் ஏராளமான பழங்கள் பழுத்திருப்பது போல் மனிதத் தலைகள் அடர்த்தியாக அவற்றில் காணப்பட்டன. இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவரை ஒருவர் கொன்று குவித்தத் துயரம் நிறைந்த பஞ்சாப் சமவெளியிலிருந்து ஆயிரத்து எண்ணூறு மைல்களுக்கு அப்பால், பாகு பாடின்றி இந்துக்களும் முஸ்லீம்களும் கலந்திருந்தார்கள். ஆசியாவிலேயே மிக மோசமான வன்முறை நகரத்தில் வன்முறை நிகழாமல் தடுத்து நிறுத்திய அந்த சிறிய மனிதரின் தரிசனத்துக்காக அவர்கள் காத்திருந்தனர்.

சிறிய பிரார்த்தனை மேடையைச் சுற்றியிருந்த அந்தக் கூட்டத்தின் தலை களுக்கு மேலே காந்தியின் மெலிந்த உருவம் தோன்றிய போது, ஒரு வகையான அபூர்வ மின்சாரம் அந்த மக்கள் கூட்டத்தை ஆற்றல் பெறச் செய்வதாகத் தோன்றியது. மகிழ்ச்சியோடும் ஆர்வத்தோடும் ஆரவாரம் செய்யும் அந்தப் பெரும் கூட்டத்தைக் காணும் போது மகாத்மாவை திடீரென்று ஒரு சந்தேகம் சூழ்ந்தது. இது மிகவும் நல்லதாகவே தெரிகிறது; உண்மையானதாக இருக்க வேண்டும்.

'கல்கத்தாவில் அதிசயம் நிகழ்த்தியதற்காக எல்லோரும் என் மீது வாழ்த்து மழை பொழிந்தார்கள்' அவர் சொன்னார். 'கடவுளின் அளவற்ற கருணைக்காக அவருக்கு நாம் அனைவரும் நன்றி சொல்வோம். ஆனால் கல்கத்தாவின் ஒரு சில பகுதிகளில் நிலைமை முழுஅளவுக்கு நன்றாக இருக்கவில்லை என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது'

அனைத்துக்கும் மேலாக, 'கல்கத்தாவின் இந்த அதிசயம் ஒரு கணநேர திடீர் எழுச்சிதான் என்பதை நிரூபிப்பதாக அமைந்து விடக்கூடாது' என்று தன்னுடன் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும் தனது ஆதரவாளர்களையும் இந்துக்களையும் முஸ்லீம்களையும் அவர் கேட்டுக் கொண்டார்.

உலகின் இரக்கமற்ற அந்த நகரில் ஆயுதமற்ற அஹிம்சாவாதியான ஒற்றை மனிதர் பெற்றிருந்த வெற்றியை, பஞ்சாபில் பலத்த ஆயுதங்களைக் கொண்ட 55,000 ராணுவ வீரர்களால் பெற இயலவில்லை. வைஸ்ராய் மற்றும் இந்திய ராணுவத்தின் தளபதியால் அந்தப் பகுதியின் பாதுகாப்புக்காக மிகவும் கவனத் துடன் பஞ்சாப் எல்லைக் காவல் படையின் பணிகள் வடிவமைக்கப் பட்டிருந் தாலும் அங்கு நடந்த சம்பவங்கள் அவர்களைத் திணறடிக்கச் செய்தன. அது புரிந்து கொள்ளக் கூடியதாகவே இருந்தது. பஞ்சாபின் பன்னிரண்டு மாவட்டங்கள் தீக்கிரையாயின. அவற்றில் சில மாவட்டங்கள், அந்த இலையுதிர் காலத்தில் பணியில் இருந்த 1,00,000 பிரிட்டிஷ் ராணுவ வீரர்களால் ஒழுங்கை நிலைநாட்ட முடியாமல் போன பாலஸ்தீனத்தை விட அளவில் பெரியவை. பஞ்சாபில் குறுக்கும் நெடுக்குமாக ராணுவ ட்ரக்குகளும் டாங்குகளும் செல்வதற்கு ஏற்ற வகையில் பாதைகள் இல்லை. குதிரைப்படை தான் அந்தப் பகுதிக்குப் பொருத்தமானது. ஆனால் ஒரு காலத்தில் குதிரைப் படைக்காகப் பெருமையடைந்திருந்த அந்த ராணுவத்தில் இப்போது குதிரைப் படை இல்லை.

அந்த மாகாணத்தில் நிர்வாகம் சீர்குலைந்திருந்ததால் பாதுகாப்புப் படையின் பணி மிகவும் சிக்கலானது. தந்திக் கம்பிகள், தபால் மற்றும் தொலைபேசிகள் திடீரென்று செயலிழந்து போயின. போதிய அளவு இடவசதி இல்லாததால் தங்கள் வசம் இருந்த பஞ்சாபின் பாதிப்பகுதியை ஒரு வீட்டிலிருந்து நிர்வகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்தியர்களுக்கு ஏற்பட்டது.

அங்கு ஒரே ஒரு தொலைபேசி இணைப்பு தான் இருந்தது. அதன் கழிப்பறையில் ஒரு ரேடியோ வைக்கப்பட்டிருந்தது.

பாகிஸ்தானின் நிலைமை இன்னும் மோசம். அந்தப் புதிய நாடு குழப்பத்தில் மூழ்கிக் கொண்டிருந்தது. ஜின்னாவின் காணாமல் போன க்ரோகியு விளையாட்டுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் ஒரு சில இன்னமும் காணவில்லை. பொருள்கள் அடைக்கப்பட்டு புதிய நாட்டுக்காகப் புறப்பட்ட நூற்றுக்கும் அதிகமான ரயில் பெட்டிகள் மாயமாய் மறைந்தன. அவை கொள்ளையடிக்கப்பட்டிருக்கும் அல்லது தவறான திசையில் சென்றிருக்கும். கராச்சிக்கு நாற்காலிகளும் மேசைகளும் வந்து சேரவில்லை. உலகின் மிகப்பெரிய முஸ்லீம் நாட்டின் முதலாவது அதிகாரபூர்வ அறிக்கைகளை, அரசு ஊழியர்கள், தங்களின் அலுவலகங்களுக்கு முன்னால் இருந்த நடைபாதைகளில் அமர்ந்து, தட்டச்சு எந்திரங்களில் தட்டிக் கொண்டிருந்தார்கள். உள்பக்கத்தில் அவர்களின் மேலதிகாரிகள் பெட்டிகள் மீதும், பிரப்பங்கூடைகள் மீதும் அமர்ந்து புதிய தேசத்தை நிர்வாகம் செய்தனர்.

பொருளாதாரம் பெரும் சிரமத்தில் இருந்தது. தோல், சணல், பருத்தி ஆகியவற்றால் பருத்துப் போன கிடங்குகள் பாகிஸ்தானில் இருந்தன. ஆனால் இவற்றைப் பதப்படுத்துவதற்கான தோல் தொழிற்சாலைகளோ, சணல் தொழிற்சாலைகளோ, ஜவுளி ஆலைகளோ அங்கு இல்லை. துணைக் கண்டத்தின் கால்பங்கு புகையிலை அங்குதான் உற்பத்தியானது. ஆனால் அந்நாட்டில் புகைபிடிப்போரின் சிகரெட்டுகளைப் பற்ற வைப்பதற்கான தீக்குச்சிகள் தயாரிக்கும் தொழிற்சாலை அங்கு இல்லை. வங்கிகளில் பணிபுரிந்த இந்து மேலாளர்களும் குமாஸ்தாக்களும் இந்தியாவுக்கு ஓடி விட்டதால் வங்கிப் பணிகள் முடங்கிவிட்டன.

பழைய இந்திய ராணுவத்தின் பொருள்களைப் பங்கிட்டுக் கொள்வதில் பிரச்சனை ஏற்பட்டது. தனது நிலைத்தன்மையை சீர்குலைப்பதற்காக திட்டமிட்டே இந்தியா நம்பிக்கைத் துரோகம் செய்வதாக பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்தது. மொத்தமிருந்த 1,70,000 டன் ராணுவத் தளவாடங்களில் பிரிவினை ஒப்பந்தப்படி பாகிஸ்தானுக்கு ஒதுக்கப்பட்டது 6000 டன் தான். பாகிஸ்தானுக்கான ஆயுதங்களையும் பிற தளவாடப் பொருள்களையும் ஏற்றி வர முந்நூறு சிறப்பு ரயில் வண்டிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் மூன்று தான் வந்தன. பாகிஸ்தானின் அதிகாரிகள் குழு ஒன்று அவற்றைத் திறந்து பார்த்தபோது 5000 ஜோடி ஷூக்களும் பழுது நீக்கப்படாத 5000 சிறு துப்பாக்கிகளும், செவிலியர்களுக்கான ஆடைகளும், மரப்பெட்டிகள் சிலவற்றில் நோய் எதிர்ப்பு மருந்துகளும் இருந்ததை அவர்கள் கண்டனர்.

தந்திரமான இந்தச் செயல் பாகிஸ்தானில் கசப்புணர்வை ஏற்படுத்தியது. அண்டை நாடான இந்தியர்கள் தொட்டிலிலேயே நம்மை கழுத்தை நெரித்துப் போட முயற்சி செய்கிறார்கள் என்ற எண்ணம் அவர்களிடம் ஆழப்பதிந்து விட்டது. இந்த எண்ணம் அவர்களுக்கு மட்டும் ஏற்படவில்லை. ராணுவத்தின் பொருள்கள் பங்கிடப்படுவதை மேற்பார்வையிடுவதற்காக இங்கே தங்கியிருக்கும் படி கேட்டுக் கொள்ளப்பட்ட ஃபீல்ட் மார்ஷல் சர் கிளாட் ஆச்சின் லெக் (Sir Claude Auchinleck) பிரிட்டிஷ் அரசுக்கு அளித்த தகவல் இது: 'பாகிஸ்தான் டொமினியன் உருவாவதைத் தடுக்க தற்போதுள்ள இந்திய

அமைச்சரவை திட்டமிட்டு அதன் அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்துகிறது என்பது உறுதி. இதைக் கூற எனக்குத் தயக்கம் ஏதுமில்லை.'

இருப்பினும் இந்தியாவின் சூழ்ச்சிகள் பாகிஸ்தானுக்கு உண்மையான அச்சுறுத்தலாக இருக்கவில்லை. அருகே உள்ள இந்தியாவைப் போலவே இந்தப் புதிய நாடும் மனிதகுல வரலாறு காணாத மாபெரும் குடிபெயர்வுகளால் பிரச்சனைக்குள்ளாகப் போகிறது. பஞ்சாபை அழித்த வன்முறை தவிர்க்க முடியாத விளைவுகளை உருவாக்கிக் கொண்டிருந்தது. எல்லையின் இரண்டு பக்கங்களிலும் வன்முறைக்குப் பின்னாலிருந்த மனிதர்கள் விரும்பிய விளைவு தான் அது. பஞ்சாபின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை பீதியடைந்த மக்கள் தங்களால் எடுத்துக் கொள்ள முடிந்த பொருள்களை எடுத்துக் கொண்டு காரில், மிதி வண்டியில், ரயிலில், கோவேறு கழுதை மீது, மாட்டு வண்டியில் ஏறியும் கால்நடையாகவும் வீடுகளிலிருந்து தப்பித்து தங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என்று நம்பிய இடங்களை நோக்கி ஓடினார்கள். மக்கள் பரிவர்த்தனையை இவர்கள் ஏற்படுத்தினார்கள். அளவிலும் தன்மையிலும் இதுபோல் மனித குலத் தப்பியோடல் இதற்கு முன் எங்கும் பதிவானதில்லை. செப்டம்பர் கடைசியில் இத்தகைய செயல் உச்சக்கட்டத்தை அடைந்த போது, பஞ்சாபின் சாலைகளிலும் வயல்வெளிகளிலும் ஐந்து மிலியன் (ஐம்பது லட்சம்) மக்கள் குவிந்து கிடந்தனர். கைகோர்த்தால் கல்கத்தாவிலிருந்து நியூயார்க் வரை நீண்டு விடும் அளவுக்கான பத்தரை மிலியன் (ஒரு கோடியே ஐந்து லட்சம்) மக்கள் பரஸ்பரம் குடிபெயர்ந்திருக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் குடிபெயர்ந்தது கடந்த மூன்று மாதங்களுக்குள் தான். முன் எப்போதும் கண்டிராத இந்தக் குடிபெயர்வு மத்திய கிழக்குப்பகுதியில் இஸ்ரேல் அகதிகளைப் போல் பத்து மடங்காகும். போருக்குப் பின் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து தப்பியோடிய மக்களின் எண்ணிக்கையைப் போல் மூன்று, அல்லது நான்கு மடங்காகும். யாரோ சிலரால் லட்சக்கணக்கான வழிகளில் லட்சக்கணக்கான முறைகளில் இது தொடங்கி வைக்கப்பட்டது.

முஸ்லீம்களைப் பொறுத்த வரை டில்லிக்கு வடக்கே இந்திய நகரமான கர்னாலில் (karnal) தண்டோராக்காரன் நடந்து கொண்டே தண்டோராவை அடித்து உருது மொழியில் இந்த அறிவிப்பைச் செய்தான். 'முஸ்லீம் மக்களைப் பாதுகாப்பதற்காக அவர்களைப் பாகிஸ்தானுக்கு ஏற்றிச் செல்ல ரயில் வண்டிகள் வந்துள்ளன' தண்டோரா ஓசையைத் தொடர்ந்து ஒரே மணிநேரத்தில் இருபதாயிரம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி ரயில் நிலையத்துக்கு நடக்க ஆரம்பித்தார்கள். மற்றொரு இந்திய நகரமான கசவ்லி (Kasavli)யில் இருந்த 2000 முஸ்லீம்களிடம், இங்கிருந்து புறப்பட இன்னும் இருபத்து நான்கு மணி நேரமே இருப்பதாக ஒரு தண்டோராக்காரன் தகவல் சொன்னான். அடுத்த நாள் விடியற்காலையில் அவர்கள் ஒரு அணிவகுப்பு மைதானத்தில் கூட்டப்பட்டனர். ஒரு சிறு போர்வையும் அவர்கள் அணிந்திருந்த ஆடைகளையும் தவிர அவர்களின் அனைத்து உடைமைகளும் பறிக்கப்பட்டன. பின்னர் அந்த சோகம் ததும்பிய மக்கள் தங்களுக்கென்று உத்தரவாத மளிக்கப்பட்ட நாட்டை நோக்கி நடக்கத் துவங்கினார்கள்.

'கசாப்புக்காரனுக்காகக் காத்திருக்கும் ஆடுகள் போல் நாங்கள் இருக்கிறோம்' என்று எண்ணியபடி அத்தை வீட்டில் பதுங்கியிருந்த மதன்லால் பாவா

என்ற அந்த மனிதர், அவரது அத்தை மகனுக்குச் சொந்தமான பேருந்து ஒன்றில் புறப்பட்டு விட்டார். மரச்சாமான்கள், துணிகள், பணம், தங்கம், சிவனின் படங்கள் என குடும்பத்தின் பொருள்கள் அனைத்தும் அந்தப் பேருந்தில் ஏற்றப்பட்டன. அதன் முக்கியமான உறுப்பினர் மட்டும் விடுபட்டுப் போனார். அவர் மதன்லாலின் தந்தை. அவர் புறப்பட மறுத்து விட்டார். காரணம், 1947 ஆகஸ்ட் 20ஆம் தேதி பயணத்தைத் துவக்குவதற்கு உகந்த நாள் இல்லை என்று அவரின் சோதிடர் கூறியிருந்தார். இது தவிர அவரது முஸ்லீம் நண்பர் ஒருவரும் எச்சரித்திருந்தார். ஏற்கெனவே நடந்த கொலைகள், தீயிடல்கள் தவிர, இந்துக்கள் மீது மேலும் ஒரு தாக்குதலை அந்த தினத்தில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது என்பது தான் அந்த எச்சரிக்கை. மேலும் ஆகஸ்ட் 23 காலை 9.30 மணி தான் நல்ல நேரம் என்று அவரது சோதிடர் உறுதியாகத் தெரிவித்திருப்ப தால் அந்தக் கணம் வரை வீட்டிலிருந்து வெளியே வர அவர் மறுத்து விட்டார்.

எந்த ஒருவருக்கும் பாதுகாப்பு இல்லை. கசவ்லியில் உள்ள சீமாட்டி லின் லித்கோ காசநோய் மருத்துவமனையின் முஸ்லீம் நோயாளிகளை, அங்கிருந்து வெளியேறுமாறு இந்து டாக்டர்கள் கட்டளையிட்டனர். அவர்களில் சிலருக்கு நுரையீரலின் ஒரு பகுதி மட்டும் தான் இருந்தது. மற்றவர்கள் அறுவை சிகிச்சை மூலம் தேறி வந்தார்கள். ஆனால் அவர்கள் மருத்துவமனையின் வாசலில் கொண்டு விடப்பட்டு பாகிஸ்தானுக்கு நடந்து போகும் படி சொல்லப் பட்டார்கள். பாகிஸ்தானில் பாபாலால் (Babalal) ஆசிரமக் கட்டிடங்களிலிருந்து இருபத்தைந்து சாதுக்கள் விரட்டப்பட்டார்கள். பிரார்த்தனை, தியானம், யோகா, இந்து மத ஆய்வு ஆகியவற்றில் இங்கிருந்து வாழ்நாளை அர்ப் பணித்தவர்கள் அவர்கள். ஆசிரமத்தின் அற்புத வெள்ளைக்குதிரையின் மீதேறி குருவான சுவாமி சுந்தர் முன்செல்ல அவருக்குப் பின்னால் காவி உடை போர்த்திய சீடர்கள் மந்திரங்களை ஜெபித்துக் கொண்டே நடந்தார்கள் அவர்களுக்குப் பின்னால் ஒரு கும்பல் ஆசிரமத்தை தீக்கிரையாக்கியது.

அகதிகளில் பெரும்பாலோருக்கு ஏற்பட்ட மிகப்பெரும் கவலை என்னவென்றால், தங்களின் உடைமைகளில் எவ்வளவைப் பயணத்தின் போது பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பது தான். மாண்ட்கொமெரியைச் சேர்ந்த வசதிபடைத்த இந்து வணிகரான பி.ஆர். அதால்கா (B.R. Adalkha) தனது இடுப்பைச் சுற்றிக் கட்டியிருந்த பணப்பையில் 40,000 ரூபாயை வைத்திருந்தார். போகும் வழியில் எங்களைக் கொன்று விடாதீர்கள் என்று கேட்டு முஸ்லீம் களுக்கு லஞ்சம் கொடுப்பதற்காகத் தான் இந்தத் தொகை. பலரும், குறிப்பாக வசதி படைத்த இந்துக்கள், தங்களின் வாழ்க்கைச் சேமிப்புகளை நகைகளாக வும் தங்க வளையல்களாகவும் வைத்திருந்தனர். லாகூருக்கு வெளியே வாழ்ந்த ஒரு இந்து விவசாயி தனது மனைவியின் தங்கம் மற்றும் பிற ஆபரணங்கள் அனைத்தையும் ஒரு துணியில் மூட்டையாகக் கட்டி அவர் வீட்டுக் கிணற்றுக்குள் வீசியெறிந்தார். பின்னொரு நாளில் ஒரு நீச்சல்காரருடன் திரும்பி வந்து அதனை எடுத்துக் கொள்ளலாம் என்பது அவரது திட்டம். ராவல் பிண்டியைச் சேர்ந்த மதிதாஸ் (Mati Das) என்ற ஒரு இந்து தானிய வியாபாரி அவர் வாழ்நாள் முயற்சியின் பயன்களான 30,000 ரூபாயையும் நாற்பது தோலா தங்கத்தையும் ஒரு சிறிய பெட்டிக்குள் வைத்தார். இதற்கு இழப்பு ஏற்படாது என்பதை உறுதி செய்திட அந்தப் பெட்டியைத் தன் முன் கையில் கட்டிக் கொண்டார். அது பயனற்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகிப் போனது.

சில நாட்களில் முஸ்லீம் எதிரி ஒருவர் எளிதான முறையில் தாஸின் கையை வெட்டி அந்தப் பெட்டியைத் திருடிச் சென்று விட்டார்.

மியான் வல்லி (Mianwalli) மாவட்டத்தில் ஒரு ஏழை இந்து விவசாயியின் மனைவியான ரேணு பிராவ்ன் பாய் (Renu Brawn Bhai) வைத்திருந்தது வாகனத்தில் கொண்டு செல்ல முடியாத மிகவும் விலை மதிப்புள்ள ஒரு சொத்து. அது அவரின் பசுமாடு. இந்து பக்தையான அவருக்கு வயதான அந்த விலங்கின் மீது விசேஷ பக்தி இருந்தது. 'முஸ்லீம்கள் சாப்பிடுவதற்காக அதனைக் கொன்று விடுவார்கள்' என்பதில் உறுதியாக இருந்த அவர் அதனை அவிழ்த்து சுதந்திரமாக உலவ விட்டுவிட்டார். அதன் இரங்கத்தக்க பார்வையால் மனம் நெகிழ்ந்த அவர் அதற்குக் கடைசியாக ஒரு காரியம் செய்தார். அதற்கு அதிர்ஷ்டம் வர வேண்டும் என்பதற்காக குங்குமத்தை எடுத்துஅதன் முன் தலையில் சிவப்புத் திலகமிட்டார்.

லக்னோவைச் சேர்ந்த செல்வந்த முஸ்லீம் பெண்ணான அலியா ஹைதர் (Alia Hydr) தனது தாய் மற்றும் சகோதரியுடன் விமானத்தின் மூலம் தப்பிச் செல்ல முயன்றார். வாழ்நாள் முழுவதற்குமாக அவர்கள் அங்கிருந்து சென்று விட நினைத்தார்கள். ஆனால் பயணத்தின் போது சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதிப்பது போல இருபது கிலோ பொருள்களை மட்டுமே அனுமதித்தார்கள். இதனால் அவர்களின் விலையுயர்ந்த பொருள்களை வீட்டு வேலைக்காரர்கள் அரிசியையும் மாவையும் நிறுக்கப் பயன்படுத்தும் தராசில் போட்டு, சமையலறையில் நிறுத்துக் கொண்டு கழித்த, அந்த சோகமான காலைப் பொழுதை அவரால் ஒரு போதும் மறக்கவே முடியாது. கடைசியாக அவரின் சகோதரி சிவப்பு மற்றும் தங்க நிறப் பூவேலைப்பாடு கொண்ட திருமணப் புடைவையைத் தெரிவு செய்து கொண்டார். தாவீதின் நட்சத்திரத்துடன் அரிய பாரம்பரியக் கலைநயம் கொண்ட பிரார்த்தனைக்கான நீலநிற வெல்வெட் தரைவிரிப்பை அவரின் தாயார் எடுத்துக் கொண்டார். அலியா ஒரு குரானையும், முத்துக்கள் பதிக்கப்பட்டு கருங்காலி மரத்தால் செய்யப்பட்ட அதற்கான உறையையும் எடுத்துக் கொண்டார்.

மியான்வல்லா(Mian Wallah)வைச் சேர்ந்த இந்து செல்வந்த விவசாயியான பல்தேவ் ராஜின் (Baldev Raj) கவலை புறப்படுவதற்கு முன் அவரது சொத்துக்களை எப்படிக் காப்பது என்பதல்ல; எப்படி அழிப்பது என்பதுதான். தப்பியோடும் போது அவர்கள் தாக்கப்படுவதும் கொள்ளையடிக்கப்படுவதும் நிச்சயம். எனவே ராஜும் அவரது ஐந்து சகோதரர்களும் அவர்களின் குடும்ப சேமிப்பை வீட்டின் மேல் தளத்துக்குக் கொண்டு சென்றார்கள். 'என்னுடைய பணம் சில சோம்பேறி முஸ்லீம்களின் கைகளில் சிக்கி விடக் கூடாது' என்று அவர் நினைத்தார். பணக்கட்டுகளை, ஒரு குவியலாகக் குவித்தனர். பின்னர் அவர்கள் உணர்ச்சிப் பெருக்கால் அழுதார்கள். அவர்களின் கண்கள் இதுவரை கண்டிராத அந்த அசாதாரணமான பொருட்குவியலுக்குத் தீயிட்டார்கள். அவர்களின் ஆயுட்கால சேமிப்பு முழுவதும் நெருப்பில் கரைந்தன.

வெளியேறிய சிலர் திரும்பி வருவதில் தீர்மானமாக இருந்தனர். டில்லிக்கு வடக்கே பானிப்பட்டைச் சேர்ந்த முஸ்லீம் பத்திரிகையாளர் அகமது அப்பாஸ் (Ahmed Abbas). இவர் எப்போதும் பாகிஸ்தானை எதிர்த்தவர். இப்போதும் கூட இவர் செல்லத் தேர்ந்தெடுத்த இடம் ஜின்னாவின் வாக்குறுதி அளிக்கப்பட்ட

நாட்டுக்கல்ல. டில்லிக்கு, வீட்டுக்கு வெளியே செல்வதற்கு அடையாளமாக அப்பாஸின் தாயார் ஒரு அறிவிப்புப் பலகையைக் கதவில் தொங்கவிட்டார் 'இந்த வீடு பாகிஸ்தானுக்குச் செல்ல முடிவு செய்யாத அப்பாஸ் குடும்பத்துக்குச் சொந்தமானது. இந்தக் குடும்பம் தற்காலிகமாக மட்டுமே டில்லிக்குச் சென்றுள்ளது. மீண்டும் திரும்பி விடும்' என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

பாகிஸ்தானின் மிக முக்கிய மனிதர்களில் ஒருவரான சர் ஃபெரோஸ்கான் நூனின் (Sir Feroz Khan Noon) அழகிய ஆங்கிலேய மனைவி விக்கி நூன் (Viki Noon). அவர் குலுவில்(Kulu) உள்ள தனது விடுமுறை கால வீட்டில் இருந்த போது அறிமுகமில்லாத ஒருவர் வந்து கூறிய தகவலையடுத்து அச்சம் தரும் அவரது பயணம் தொடங்கியது. சிம்லா அருகே இந்துக்களின் பகுதியான அது இந்தியாவுக்குச் சென்றுவிட்டது.

'இன்றிரவு அவர்கள் உங்கள் வீட்டுக்கு வரப்போகிறார்கள்' என்று அந்த ஆள் சொன்னான். விக்கியிடம் இரண்டு துப்பாக்கிகளும், ஏற்கெனவே லாகூருக்குச் சென்று விட்ட அவரது கணவருக்குச் சொந்தமான ஒரு ரிவால்வரும் இருந்தன. அவரது நம்பிக்கைக்குரிய இரண்டு முஸ்லீம் ஊழியர்களிடம் இரண்டு துப்பாக்கிகளைக் கொடுத்து ஆயுதபாணியாக்கினார். அவரது வாழ்க்கையில் ஒரு போதும் துப்பாக்கியால் சுட்டதில்லை என்றாலும் ரிவால்வரை அவர் தன்னிடமே வைத்துக் கொண்டார். இருட்டியவுடன் அந்தப் பள்ளத்தாக்குப் பகுதியில் கொழுந்து விட்டெரியும் தீப்பந்தங்கள் அவரது வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்ததை அவரால் காண முடிந்தது. அருகே இருந்த முஸ்லீம் வீடுகள் இந்து மதக் கும்பலால் தீ வைக்கப்பட்டன. மெதுவாக அந்த நெருப்புச் சங்கிலி அவரது வீட்டை நோக்கிப் பரவியது. அந்த 22 வயதான பெண், பள்ளத்தாக்கில் தான் சந்தித்த ஒரு அமெரிக்க ஜோடி சொல்லிக் கொடுத்த ஒரு தொடரை நினைத்துக் கொண்டார். அவர்கள் புத்த மதத்துக்கு மாறியிருந்தவர்கள். அவர்களின் புதிய சமயத்தின் மிக முக்கியமான வாசகம் அது 'எல்லாம் நிலையாததே'. திடீரென்று இரவு 11 மணிக்கு பெய்த மழை அவருக்குக் கீழே எரிந்து கொண்டிருந்த நெருப்பை அணைத்தது. அவர் காப்பாற்றப் பட்டார். அடுத்த நாள் காலை அவர் பாதுகாப்புத் தேடி நெருங்கிய நண்பரான மண்டியின் இந்து ராஜாவின் அரண்மனைக்கு ஓடினார். இருப்பினும் அவருக்குக் கிடைத்த நிவாரணம் தற்காலிகமானதுதான். அந்த அழகிய ஆங்கிலேயப் பெண்ணுக்கு இப்போது தான் ஒரு சாகச அனுபவம் துவங்கி யிருக்கிறது.

அச்சத்திலும் கசப்புணர்விலும், வெறுப்பிலும் காழ்ப்புணர்விலும் அவர்கள் வெளியேறினார்கள். முதலில் ஆயிரக்கணக்கிலும் பிறகு பல்லாயிரக் கணக்கிலும் இறுதியாக பஞ்சாபின் சாலைகளில் ரயில் நிலையங்களில் லட்சக் கணக்கிலும் குவிந்தார்கள். அவர்கள் இரண்டு புதிய நாடுகளுக்கும் பயங்கரப் பிரச்சனையாகப் போகிறார்கள். வாழ்வதற்கான போராட்டம்; தொற்று நோயின் கொடுமை; பஞ்சம்; மறு குடியேற்றம் ஆகியவை மனம் மரத்துப் போகும் அளவுக்கு இருக்கும். தவிர்க்க முடியாதபடி அவர்கள் பயங்கரமான மனநோயைப் பஞ்சாப் முழுவதும் பரப்பினார்கள். தங்களின் கொடுமையான அனுபவங்களின் கதைகளைச் சொல்லி விஷக்கிருமிகளைப் பரப்பினார்கள். இதன் விளைவு புதிதாக வன்முறைகள் வெடித்தன. மேலும் பலர் ஆதரவற்றவர்களாக

வீதிகளுக்கு வந்தனர். ஏராளமான குடிபெயர்வுகளால் உலகின் வளம் மிக்க நிலப்பகுதிகளில் ஒன்றின் முகமும் தன்மையும் நிரந்தரமாக மாற்றமடைந்தன. இஸ்லாமியக் கலாச்சாரப்படி மொகலாயர்கள் பூந்தோட்டங்களை உருவாக்கியிருந்த பல பகுதிகளிலும் ஒரு முஸ்லீம் கூட தங்கியிருக்கவில்லை. லாகூரில் வாழ்ந்த 6,00,000 இந்துக்கள் மற்றும் சீக்கியர் களில் இப்போது வெறும் ஆயிரம் பேர்தான் இருப்பார்கள். சுதந்திரம் பெற்ற முதல் சில மணி நேரங்களில் பஞ்சாபியர்களில் பலர் கண்ட லாகூர் கனவுகள் கலைந்தன. ஆகஸ்ட் மாத இறுதியில் வன்முறை உச்சக்கட்டத்தை அடைந்தது. அவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டியிருந்தது. தங்கள் கனவுகள் கலைந்ததற்கு அடையாளமாய் மவுனத்தோடும் கசப்போடும் கல்லறை வாசகம் எழுதுவது போல் அடையாளம் தெரியாத சில கைகள் அந்தக் கடைசி காரியத்தைச் செய்தன. அந்த நகரின் புகழ்பெற்ற விக்டோரியா மகாராணி சிலையின் பீடத்தில் சிலர் துக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் கருப்பு மலர் வளையம் வைத்தனர்.

## *கல்கத்தா, ஆகஸ்ட் 1947*

இந்த முறை அரை மிலியன் (ஐந்து லட்சம்) மக்கள் அவருக்காகக் காத்திருந்தனர். 'கல்கத்தாவின் அதிசயம்' அப்போதும் நீடித்தது. ஒரு காலத்தில் போலோ குதிரைகளும், வெள்ளை நிறப் பின்னலாடையணிந்த கிரிக்கெட் வீரர்களும் நிறைந்த அந்தப் பரந்த பசுமை நிற கல்கத்தா மைதானத்தில், சகோதர நேயத்துடன் இந்துக்களும் முஸ்லீம்களுமாக கருப்பு முகம் கொண்ட ஐநூறாயிரம் (ஐந்து லட்சம்) மக்கள் நெருக்கமாகக் கூடியிருந்தார்கள். கருணை நிறைந்த விசாலப் பார்வையுடைய காந்தியே கூட இதற்கு இணையான கூட்டத்தைக் கற்பனை செய்திருக்கவும் முடியாது. ஆகஸ்ட் மாதத்தின் இந்த நாள், முஸ்லீம் நாட்காட்டியில் மாபெரும் இஸ்லாமியப் பெருவிழாவான ஈத்-அல்-கபீர் (Id-el-Kebir) என்று குறிக்கப்பட்டிருந்தாலும், அந்த மாலை நேர பிரார்த்தனைக் கூட்டத்துக்கு முன்னுதாரணம் இல்லாத எண்ணிக்கையில் மக்கள் கூடியிருந்தார்கள்.

அந்த மூத்தத் தலைவர் தங்கியிருந்த இல்லத்தின் இடிந்து விழும் நிலையில் சிதிலமடைந்திருந்த ஜன்னல்கள் வழியாக விடியற் காலையிலிருந்தே பல்லாயிரக் கணக்கான இந்துக்களும், முஸ்லீம்களும் அவரிடம் ஆசி பெற்றபடியும் அவருக்கு மலர்ச்செண்டுகளையும், இனிப்புகளையும் கொடுத்தபடியும் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். அன்று அவர் மவுன விரதம் மேற்கொள்ளும் திங்கட்கிழமை என்பதால், பெரும்பாலான நேரத்தைப் பார்வையாளர்களுக்கு வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவிப்பதற்கு சிறு குறிப்புகளை எழுது வதிலேயே காந்தி செலவிட்டார். அதே சமயத்தில் வீதிகளில் ஆயிரக்கணக்கான இந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றாக அணிவகுத்தனர். ஒற்றுமையையும் நட்பையும் வலியுறுத்தி அவர்கள் கோஷங்களை எழுப்பினார்கள். சிகரெட்டுகளைக் கைமாற்றிக் கொண்டார்கள். ஒருவர் மீது ஒருவர் பன்னீர் தெளித்துக் கொண்டனர். கேக்குகளையும் இனிப்புகளையும் பரிமாறிக் கொண்டனர்.

கடைசியாக மைதானத்தின் நடுவில் பிரார்த்தனைக் கூட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த மேடையை காந்தி அடைந்த போது பேரார்வத்தால் எழுந்த ஒலி கூட்டம் முழுவதும் பரவியது. மிதமிஞ்சிய அன்போடும் சகோதரத்துவத்தோடும் நம்ப முடியாத அளவுக்குக் கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் முன் சரியாக ஏழுமணிக்கு வந்த காந்தி, இந்தியர்களின் பாரம்பரிய முறைப்படி இரண்டு கைகளையும் உயர்த்தி கூட்டத்தினருக்கு வணக்கம் தெரிவித்தார். பின்னர் வயது முதிர்ந்த அந்த இந்துத் தலைவர் மவுன விரதத்தைக் கலைத்து இந்திய முஸ்லீம்களின் தாய்மொழியான உருதுமொழியில் உரக்கக் கூறினார்: 'ஈத் முபாரக்' (Id Mubarak) - (ஈத் வாழ்த்துக்கள்)

அவர்களின் மாகாணம் அரசியல் கொந்தளிப்பால் குலுங்கிய போது பல்லாயிரக் கணக்கான பஞ்சாபியர்களுக்கு முதல் புகலிடமாக இருந்தது அவர்கள் தேடி ஓடிய செங்கல் மற்றும் ஓடுகளாலான கட்டிடம்தான். ஒவ்வொரு முக்கியமான நகரிலும் கட்டமைப்பு மற்றும் ஒழுங்கின் அடை யாளத்துக்கு உத்தரவாதம் அளித்த அதுதான் ரயில்நிலையம். பல தலை முறைகளின் கடந்த காலத்தை நினைவுபடுத்தும் ரயில்வண்டிகளின் பெயர்களும், அவற்றுக்குரிய சிமெண்ட் பிளாட் பாரங்களும், இந்தியர்களின் கதைகளில் இடம் பெற்றன துணைக்கண்டத்தில் பிரிட்டிஷாரின் மிக முக்கியமான சாதனைகளை அளவிடுவதாகவும் அவை இருந்தன. ஓரியன்ட் எக்ஸ்பிரஸ், டிரான்ஸ் சைபீரியன் எக்ஸ்பிரஸ், மற்றும் யூனியன் பசிஃபிக் ரயில்வண்டிகள் போல, ஃபிரண்டைர் மெயில், கல்கத்தா - பெஷாவர் எக்ஸ்பிரஸ், பம்பாய் - சென்னை எக்ஸ்பிரஸ் ரயில் வண்டிகளும் இந்திய துணைக் கண்டத்தைச் சுற்றி அமைந்தன இவற்றின் பாதைகள் நெடுக தொழில் நுட்ப மற்றும் வளர்ச்சியின் பயன்கள் விதைக்கப்பட்டிருந்தன.

இப்போது, 1947இன் கோடை காலப் பிற்பகுதியில், தங்களைச் சூழ்ந்துள்ள பயங்கரத்திலிருந்து தப்பியோடுவதற்கு பல்லாயிரக்கணக்கான இந்தியர்களுக்கு நம்பிக்கையளிப்பதாக இருந்தன அந்த ரயில்கள். சில ஆயிரம் பேர்களுக்கு இந்த ரயில்கள் நடமாடும் கல்லறைகளாகவும் இருந்தன. பஞ்சாபின் பல ரயில் நிலையங்களில் ஒரு ரயில் வண்டியே இந்தக் கோரக்காட்சிகளுக்கு சாட்சியாய் இருந்தது. அலைவீசும் கடல் நீரைக் கிழித்துக் கொண்டு கப்பலின் சுக்கான் செல்வது போல, பிளாட் பாரங்களில் நிறைந்திருந்த மக்கள் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு ரயில் என்ஜின்கள் பிளாட்பாரங்களுக்கு வந்தன. இதன் வழியில் அகப்பட்ட மக்கள் தவிர்க்க முடியாமல் எலும்பும் சதையும் அரைபட்டு ரத்தக் கூழானார்கள். சில நேரங்களில் சுட்டெரிக்கும் சூரிய வெப்பத்தின் கீழ் உணவு, தண்ணீர் இன்றி பயணிகள் பல நாட்கள் காத்துக் கிடந்தனர். அழுது கொண்டும் அரற்றிக் கொண்டும் ஒவ்வொரு பெட்டியின் கதவுகளிலும் ஜன்னல்களிலும் அவர்களாகவே தொற்றிக் கொண்டனர் தங்களின் உடல்களையும் தாங்கள் கொண்டு வந்த பொருள்களையும் ரயில் பெட்டிகளுக்குள் திணிக்கும் போது அந்தப் பெட்டியே அழுத்தத்தால் விரிந்து விடுமோ என்று தோன்றும். ஒவ்வொரு கதவிலும் ஒரு பிடிப்பு கிடைப்பதற்காக டஜன் கணக்கான மனிதர்கள் சண்டையிட்டுக் கொண்டனர். படிக்கட்டு களிலும், பெட்டிகள் இணைக்கப்பட்டிருக்கும் இடங்களிலும், பலர் பயணம் செய்தனர். ஒவ்வொரு பெட்டியிலும் சர்க்கரைக்கட்டியை மொய்த்திருக்கும்

மக்களின் கூட்டம் போல் மக்கள் மொய்த்துக் கிடந்தார்கள். கையில் எதையும் பிடிக்கக் கிடைக்காத பலநூறு பேர் ரயில் வண்டியின் அரைவட்ட வடிவக் கூரைமேல் அமர்ந்தார்கள். நிச்சயமற்ற தன்மையுடனும் அச்சத்துடனும் வெயிலால் தகிக்கும் தகட்டின் மேல் அவர்களின் பயணம் அமைந்தது. அகதிகளின் சுவர்போல் அவர்கள் வரிசையாக அமர்ந்திருந்தனர்.

துயரங்களின் சுமையால் அழுத்தப்பட்ட அந்த மக்களின் உடல்கள் வெளிப்படுத்திய வியர்வை நிலக்கரிப் புகையின் நாற்றத்தை மட்டுப்படுத்தியது. அவர்களின் இரைச்சலில் அவர்களை ஏற்றிச் சென்ற ரயில்வண்டியின் இரைச்சல் அமுங்கிப் போனது. இரங்கத்தக்க அவர்களின் மரணத்தை நோக்கியோ அல்லது வாக்குறுதியளிக்கப்பட்ட நிலத்தை நோக்கியோ ரயில்பெட்டிகள் உருண்டோடிக் கொண்டிருந்தன.

பள்ளி ஆசிரியரான நிஹால் ப்ரான்பி (Nihal Bhranbi) என்ற இந்துவையும் அவரது மனைவி மற்றும் ஆறு குழந்தைகளையும் பொறுத்தவரை பாதுகாப்புத் தேடிய அவர்களின் பயணம் தொடங்கக்கூடவில்லை. கடந்த இருபது ஆண்டுகளாகப் பாடம் சொல்லிக் கொடுத்த பாகிஸ்தானைச் சேர்ந்த அந்தச் சிறிய நகரத்தின் ரயில் நிலையத்திலிருந்து ரயில் வண்டி புறப்பட ஆறு மணிநேரத்துக்கு மேல் காத்திருந்தனர். நிஹாலும் அவரது குடும்பத்தினரும் கடைசியாக ரயில் என்ஜினின் அலறல் சத்தத்தைக் கேட்டனர். ஆனால் வெறும் என்ஜின் மட்டுமே சத்தம் எழுப்பிக் கொண்டு புறப்பட்டது. அது ஓடி மறைந்தவுடன் அட்டகாச கூச்சலுடன் ஒரு முஸ்லீம் கூட்டம் தடிகள், ஈட்டிகள், கோடாரிகள் ஆகியவற்றுடன் ரயில் நிலையத்தில் நுழைந்தது. 'அல்லாஹ் அக்பர் - கடவுளே மகத்தானவர்' என்று கூவியவாறு அவர்கள் ரயில் பெட்டிகளுக்குள் புகுந்தனர். கண்ணில் படும் இந்துக்களைத் தாக்கினர் ஆதரவற்ற அந்தப் பயணிகளை சிலர் பெட்டியின் ஜன்னல்கள் வழியாக வெளியே வீசி எறிந்தனர். பிளாட்பாரத்தில் தயாராய் நின்றிருந்த அவர்களின் கூட்டாளிகள் அவர்களை வெட்டி வீழ்த்தினர். ஒரு சில இந்துக்கள் தப்பியோட முயற்சித்தனர். ஆனால் பச்சை சட்டை அணிந்த முஸ்லீம்கள் அவர்களைத் துரத்திப் பிடித்துக் கொன்றனர். இறந்து போன மற்றும் குற்றுயிராய் இருந்தவர்களை ரயில் நிலையத்துக்கு எதிரே இருந்த ஒரு கிணற்றுக்குள் வீசியெறிந்தனர். பள்ளி ஆசிரியரும் அவரது மனைவியும் குழந்தைகளும் அச்சத்தில் நடுங்கி ஒருவரையொருவர் பற்றிக் கொண்டு ரயில் பெட்டிக்குள் கிடந்தனர். முஸ்லீம்கள் அதற்குள் புகுந்து சுடத் தொடங்கினார்கள்.

'அதன் குண்டுகள் எனது கணவர் மற்றும் ஒரே மகன் மீது பாய்ந்தன' நிஹாலின் மனைவி நினைவு கூர்ந்தார். 'எனது மகன் ''தண்ணீர், தண்ணீர்!'' என்று கத்தினான். அவனுக்குக் கொடுக்க என்னிடம் ஏதுமில்லை. உதவி கேட்டு நான் கத்தினேன். எவரும் எங்கள் அருகே வரவில்லை. மெல்ல மெல்ல என் மகனின் சத்தம் அடங்கியது. அவனது கண்கள் மூடின. எனது கணவருக்குப் பேச்சு வரவில்லை. அவரது தலையிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. திடீரென்று அவர் கால்களை உதைத்துக் கொண்டார். பின்னர் அவர் அமைதியானார். அவர்களின் உடல்களைக் குலுக்கி எழுப்பிட முயற்சி செய்தேன். ஆனால் பயன் கிடைக்கவில்லை.

'எனது மகள்கள் என் சேலையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு என்னோடு ஒட்டிக் கிடந்தார்கள். முஸ்லீம்கள் எங்களை வெளியே விரட்டினார்கள். எனது

மூன்று மகள்களை அவர்கள் தூக்கிச் சென்றனர். மூத்தவளின் தலையில் அடித்தனர். என்னை நோக்கிக் கைகளை நீட்டியபடி அவள் அம்மா.. அம்மா என்று அலறினாள். என்னால் அசைய முடியவில்லை.

'சிறுது நேரம் கழித்து அந்த முஸ்லீம்கள் எனது கணவரையும் மகனையும் ரயில் பெட்டியிலிருந்து தூக்கிச் சென்று கிணற்றில் வீசி எறிந்தார்கள். அதுவே அவர்களுக்கு முடிவானது. நான் பைத்தியம் போல் ஆனேன். பைத்தியக்காரி போல் கத்தினேன். உயிருடனிருந்த இரண்டு குழந்தைகளைப் பற்றிய நினைவு கூட இல்லாமல் அனைத்து உணர்வுகளையும் இழந்தேன். நான் நடை பிணமானேன்.'

பள்ளியாசிரியரின் மனைவியைப் போல் அந்த ரயில் வண்டியிலிருந்த 2000 பேர்களில் ஒரு நூறு பேர் மட்டுமே தப்பிப் பிழைத்து தங்களின் பயங்கர பயணத்தை பஞ்சாபின் இன்னொரு எல்லையில் முடித்திருந்தார்கள்.

தனது சோதிடர் நல்ல நாள் என்று அறிவித்த நாள்வரை பயணத்துக்காகக் காத்திருந்த காஷ்மீரிலால் என்ற அந்த இந்து துரதிருஷ்டம் நிறைந்த இப்படிப் பட்ட ரயில் வண்டி ஒன்றில் பயணம் செய்த போது சோதிடம் அறிவியல் பூர்வமற்றது என்பதைப் புரிந்து கொண்டார். அவர் பயணம் செய்த ரயில் பத்திரமாக இந்திய எல்லைப் பகுதியை அடைய இன்னும் பதினான்கு மைல் தூரமே இருந்த போது மெல்ல சென்ற ரயில் பெட்டிக்குள் ஒரு முஸ்லீம் கும்பல் ஏறியது. பக்கத்தில் இருந்த பெண்கள் பெட்டிக்குள் அவர்கள் பாய்ந்தனர். அந்தப் பெண்களின் கணுக்கால்களிலும், மணிக்கட்டுகளிலும், கைகளிலும், மூக்குகளிலும் அணிந்திருந்த தங்க வளையங்கள், மோதிரங்கள் போன்றவற்றை உருவினார்கள். அரைடஜன் (ஆறு) இளம் பெண்களை ஜன்னல் வழியாக வெளியே வீசினார்கள். பின்னர் அவர்களில் சிலரும் குதித்தார்கள்.

மற்றவர்கள் லாலின் பெட்டி பக்கம் வந்தார்கள். அவர்களில் ஒருவன் வாளின் ஒரே வீச்சில் லாலுக்கு எதிரே அமர்ந்திருந்த பெண்ணின் தலையைத் துண்டித்தான். கற்பனை செய்யவும் முடியாத வகையில் கழுத்து நரம்புகள் சில இன்னமும் இற்றுப் போகாததால் அவளது தலை உடைந்த பொம்மை ஒன்றின் தலைபோல தோள் பக்கமாக சாய்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. தொடையில் கிடத்தி பாலூட்டிய அவளின் குழந்தை அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது. ஒரு ஜோடி கத்திகள் லாலைக் குத்தின. அவர் கீழே சாய்ந்து வீழ்ந்தார். உடனடியாக மற்ற பயணிகளின் உடல்கள் வீழ்ந்து அவரை மூடிக் கொண்டன. அவர் சுய நினைவை இழக்குமுன் அவருக்கு விசித்திரமான உணர்வு ஏற்பட்டது. ஒரு முஸ்லீம் கொள்ளைக்காரன் அவரது காலிலிருந்த ஷூக்களைத் திருடிச் சென்றான்.

ஒரு சில பெட்டிகளுக்கு அப்பால், அந்த ரயில் வண்டியின் மீது ஒரு கும்பல் தாக்கத் தொடங்கியவுடனேயே, வாசனைப் பொருள் வியாபாரியான தானி ரான் (Dhani Ran) தனது மனைவியையும் நான்கு குழந்தைகளையும் கீழே படுக்க வைத்தார். காயமடைந்த பலர் அவர்கள் மீதும் வீழுந்தனர். அவர்களின் ரத்தம் தன் மீது ஓடுவதைக் கண்ட ரானுக்கு ஒரு யோசனை தோன்றியது. கிட்டத்தட்ட இதுதான் அவரையும் அவரது குழந்தைகளையும் உயிருடன் காப்பாற்றியது எனலாம். குற்றுயிராய் கிடக்கும் சக பயணிகளின் காயங்களிலிருந்து பீறிட்ட ரத்தத்தைக் கையிலெடுத்து தனது முகத்திலும் குழந்தைகளின் முகத்திலும்

பூசிவிட்டார். இதனால் தாக்குதல்காரர்கள் தாங்களும் தாக்கப்பட்டதாகக் கருதி சாகட்டும் என்று விட்டு விடுவார்கள் என்பது அவரின் யோசனை.

இரு திசைகளிலும் தப்பியோடுதல் அதிகரித்த போது எல்லைப்பகுதிகளில் ரயில் பெட்டிகளில் கூட்டம் கூட்டமாய் வந்த அகதிகள் தான் தாக்குதலின் முக்கிய இலக்குகள் ஆயினர். ரயில் நிலையங்களில் நின்ற போதோ அல்லது வெட்டவெளிப்பகுதியிலோ அவர்கள் தாக்கப்பட்டனர். மக்களின் கண் முன்னாலேயே ரயில் பாதைகள் பெயர்க்கப்பட்டு வண்டிகள் கவிழ்க்கப்பட்டன. ரயில் பெட்டிகளில் புகுந்த வன்முறைக்கும்பல் அவசர காலத்துக்கான சங்கிலியை இழுத்து ஏற்கெனவே தேர்ந்தெடுத்து வைத்திருந்த பகுதியில் ரயிலை நிறுத்தியது. பயணிகள் தாக்குதலுக்கு ஆளாக பொறியாளர்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டது. அல்லது மிரட்டிப் பணிய வைக்கப்பட்டது. இரு பக்கங்களிலும் இருந்த எல்லைப்பகுதியில் ஆண்களின் பிறப்பு உறுப்புகள் உண்மையான பொருளில் அவர்களின் வாழ்க்கையைத் தீர்மானிப்பதாக இருந்தன. இந்தியாவில் இந்துக்களும் சீக்கியர்களும் ரயில்பெட்டிகளுக்குள் நுழைந்து யாருக்கெல்லாம் சுன்னத் செய்யப்பட்டிருக்கிறதோ அவர்களை யெல்லாம் கொன்றார்கள். பாகிஸ்தானில் முஸ்லீம்கள் ரயில்களுக்குள் புகுந்து யாருக்கெல்லாம் சுன்னத் செய்யப்படவில்லையோ அவர்களையெல்லாம் கொன்றார்கள்.

தொடர்ந்து நான்கு அல்லது ஐந்து நாட்கள் இறந்து போன மற்றும் காயமடைந்த மனிதர்களைக் கொண்டிராமல் ஒரு ரயில் கூட லாகூருக்கோ, அமிர்தசரஸுக்கோ வந்து சேரவில்லை. பிரிட்டிஷ் மேலதிகாரிகளால் இழிவு செய்யப்பட்ட, ராணுவ அதிகாரிகளின் உணவு விடுதியின் மேல், சுதந்திர தினத்தன்று தனது நாட்டின் கொடி பறப்பதைக் கண்டு மகிழ்ச்சியால் பொங்கி வழிந்த இந்திய ராணுவத்தின் கலோனல் அஸ்வினி துபே (Aswini Dubey), தற்போது லாகூரில் ஒருங்கிணைப்பு அதிகாரியாக இருந்து சுதந்திரத்தின் முழுமையான விலையைக் கண்ணுற்றார். இறந்து போன மற்றும் காயமடைந்த மக்களின் உடல்களை ஏற்றிய ரயில் வண்டியொன்று அந்த ரயில் நிலை யத்துக்குள் வந்தது. அது நின்றபோது, அரவமில்லாத ஒவ்வொரு பெட்டி யிலிருந்தும் கதவுகள் வழியாக ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. வெயில் நாள் ஒன்றில் குளிர் சாதன வசதி செய்த பெட்டியிலிருந்து தண்ணீர் சொட்டுவது போல் அந்த ரத்தம் தண்டவாளங்களில் சொட்டிக் கொண்டிருந்தது.

அந்த இலையுதிர் காலத்தில் மற்ற பல பகுதிகளில் நடந்தது போலவே, சீக்கிய குழுக்களும் தங்களின் தாக்குதல்களை அமைப்பு ரீதியாகவும் கொடூரமாகவும் நடத்துவதில் தனித்தன்மை பெற்றதாகக் கூறிக் கொண்டனர். தங்களின் கொடிய செயல்கள் மூலம் ஒரு மாபெரும் மக்கள் இனத்தின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தினார்கள். அமிர்தசரஸில் ஒரு ரயிலைத் தாக்கிய பிறகு, நிவாரணப் பணியாளர்கள் என்று ஒரு குழுவை அதே ரயிலில் அவர்கள் அனுப்பி வைத்தனர். ஏற்கெனவே நடத்திய படுகொலையில் தப்பித்தவர்களை மீண்டும் தேடிப் பழிவாங்குவதற்கே இந்தத் திட்டம். 'லைஃப்' இதழின் சிறந்த புகைப்படக்காரரான மார்கரெட் பூர்க்கே ஒயிட் (Margaret Bourke-White) இப்படிப்பட்ட சீக்கியர் குழுக்களை அமிர்தசரஸ் ரயில் நிலையத்தில் பார்த்த தாக நினைவு கூர்கிறார். 'நீண்ட தாடியுடனும் பளிச்சென நீலத் தலைப்பாகைகள் அணிந்தும் சாந்தமானவர்கள் போல் அகாலிகள் சப்பணமிட்டு பிளாட்பாரத்தில்

அமர்ந்திருந்தனர். அவர்களின் முழுங்கால்களுக்கிடையே நீண்டு வளைந்த வாள் இருந்தது. அடுத்த ரயிலுக்காக அவர்கள் அமைதியுடன் காத்திருந்தனர்.'

அந்த ரயில் பெட்டிகளில் ராணுவ வீரர்கள் காவலாக வந்தனர். ஆனால் அவர்கள் தாக்குதல்காரர்கள் மீது சுடத் தவறிவிட்டனர். ஒரு வேளை ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இருக்கலாம். அவர்களில் சில தீரர்களும் கூட இருந்தார்கள். பாகிஸ்தான் எல்லையைத் தொட அறுபது மைல்தூரம் இருக்கும் போதே எதிர்பாராத விதமாக ரயிலின் வேகம் குறைவதால் சந்தேகமடைந்த அகமது சஹூர் என்ற ரயில்வே ஊழியர், ரயில் என்ஜினுக்குள் ரகசியமாகப் புகுந்தார். அமிர்தசரஸ் ரயில் நிலையத்தில் வண்டியை நிறுத்துவதற்காக, இரண்டு சீக்கியர்கள் ஒரு கட்டு ரூபாய் நோட்டுகளை ரயிலின் இந்து என்ஜினீயருக்கு லஞ்சமாகக் கொடுப்பதை அவர் பார்த்தார். பயந்து போன அவர் அங்கிருந்து நழுவி பாதுகாப்புப் படையின் தளபதியான பிரிட்டிஷ்காரரிடம் தாம் பார்த்ததைக் கூறி எச்சரிக்கை செய்தார். உடனே அந்த இளம் பிரிட்டிஷ் அதிகாரியும் வேறு இரண்டு பேரும் மேலை நாட்டு ரயில் கொள்ளையர்கள் போல் ரயில் பெட்டிகளின் கூரை மேல் ஊர்ந்தபடி என்ஜின் பகுதியை அடைந்தார்கள். ரிவால்வரைக் காட்டி வண்டியின் வேகத்தை அதிகரிக்குமாறு பிரிட்டிஷார் என்ஜினீயருக்கு உத்தரவிட்டார்கள். அவரது பதில் பிரேக்கை அழுத்துவதாகவே இருந்தது. துப்பாக்கிக் கட்டையால் தட்டி அவரை அப்புறப்படுத்தினார் பிரிட்டிஷ் அதிகாரி. இரண்டு வீரர்களும் என்ஜினீயரைப் பிடித்துக் கொள்ள வண்டியின் கட்டுப்பாட்டை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டார் அந்த அதிகாரி. சில நிமிடங்களுக்குப் பின், சஹூரும் அவருடன் இருந்த 3000 முஸ்லீம் பயணிகளும் ஒரு அதிசய நிகழ்ச்சியைக் கண்டார்கள். பிரிட்டிஷ் அதிகாரி படிக்கட்டில் நின்றிருக்க, பயங்கர விசில் சத்தத்துடன் அவர்களின் ரயில் வண்டி மணிக்கு அறுபது மைல் வேகத்தில் அமிர்தசரஸ் ரயில் நிலையத்தைக் கடந்து சென்றது. அந்த ரயிலில் வருவோரைக் கசாப்பு செய்ய வாள்களுடன் காத்திருந்த சீக்கியர்கள் அசந்து போய் நின்றார்கள். பத்திரமாக பாகிஸ்தானுக்குக் கொண்டு வந்து சேர்த்ததற்காக அந்த ரயில் வண்டியின் நன்றி மிக்க முஸ்லீம் பயணிகள் ஆங்கிலேயரின் கழுத்தில் மாலையொன்றை அணிவித்தார்கள். அது வழக்கமாகத் தொடுக்கப் படும் சாமந்திப்பூ மாலை அல்ல; பணநோட்டுக்களால் தயாரித்த மாலை.

எந்த ரயில் வண்டிக்கும் பாதுகாப்பு இருக்கவில்லை. சிம்லாவில் இருந்த பழைய வைஸ்ராய் மாளிகையில் பணிபுரிந்த நூற்றுக்கும் அதிகமான முஸ்லீம் ஊழியர்களுடன் டில்லிக்குச் சென்று கொண்டிருந்த அந்த ரயில் வண்டி பட்டாக வெடிச்சத்தம் கேட்டதால் சோனிப்பட் நிலையத்தில் நிறுத்தப் பட்டது. இதற்குள் நூற்றுக்கணக்கான சீக்கியர்கள் நுழைந்தார்கள். பேரரசில் அருகருகே பணியாற்றிய போதிலும் ரயிலுக்குள் இருந்த இந்துக்கள் முஸ்லீம்களுக்கு எதிராகத் திரும்பினார்கள். இஸ்மே பிரபுவின் மகள் சாரா இஸ்மே(Sarah Ismay)யும் அவருக்கு நிச்சயம் செய்யப்பட்ட கணவரும் மவுண்ட்பேட்டன் பிரபுவின் மெய்க்காப்பாளர்களில் ஒருவருமான ஃபினைட் - லியூட்டனன்ட் வென்ட்டி பியூமன்ட்டும் (Wenty Beaumont) தங்கள் பெட்டியில் இரண்டு துப்பாக்கிகளை எடுத்துத் தயாராய் இருந்தனர். பிரத்யேக சூழ்நிலைகள் காரணமாக அங்கு அழைக்கப்பட்ட மூன்றாவது நபர் ஒருவர் அவர்களின் காலடியில் இருந்த பெட்டிகளின் குவியலுக்குள் மறைத்து வைக்கப்

பட்டிருந்தார். அவர்களின் முஸ்லீம் ஊழியரான அப்துல் ஹமீத் (Abdul Hamid) தான் அவர்.

நன்றாக உடையணிந்த, மரியாதையுடன் பேசும் ஒரு ஜோடி இந்துக்கள் அந்தப் பெட்டியின் கதவுகளைத் திறந்தார்கள் அவர்களுடன் முஸ்லீம் யாராவது பயணம் செய்கிறார்களா என்று பார்க்க வேண்டும் என்று கூறினர். இதைக் கேட்டதும் அச்சமுற்ற மனிதருக்கு ஏற்பட்ட உடல் நடுக்கத்தால் அவர் மறைந்திருந்த பெட்டிகளும் அசைந்தன.

'ஒரு அடி முன்னால் வந்தால் நீங்கள் செத்துப் போவீர்கள்' என்று ஸ்மித் அன்ட் வெஸ்ஸன் (Smith and Wesson) துப்பாக்கியைக் காட்டி அந்த இந்துக்களை சாரா எச்சரித்தார். அந்த ரயில் டில்லியை அடையும் போது அதில் உயிருடன் இருந்த ஒரே முஸ்லீம் அப்துல் ஹமீதாகத் தான் இருப்பார்.

வரவிருக்கும் ஆண்டுகளில் தங்களால் தெரிந்து கொள்ளப்பட்ட மரண ரயில் வண்டிகளும் பஞ்சாபின் அச்சமூட்டும் புனைகதைகளின் ஒரு பகுதியாகிவிடும். இப்படித் தொகுக்கப்படும் அதிர்ச்சி தரும் கதைகள் ஒவ்வொன்றும் அடுத்ததைக் காட்டிலும் ரத்தத்தை உறைய வைப்பதாக இருக்கும். அமெரிக்காவைச் சேர்ந்த கேட்டர் பில்லர் (Cater Pillar) டிராக்டர் நிறுவனத்தின் பிரதிநிதியான ரிச்சர்ட் ஃபிஷர், தப்பிப் பிழைத்த ஒரு சம்பவத்தின் நினைவு எஞ்சிய வாழ்நாள் முழுவதும் அவரைச் சுற்றிக் கொண்டிருந்தது. அவர் பயணம் செய்த ரயில் வண்டியை க்வெட்டாவுக்கும் லாகூருக்கும் இடையே நடுவழியில் முஸ்லீம்கள் கும்பல் ஒன்று நிறுத்தி விட்டது. ஒரு கும்பல் பெட்டிக்குள் நுழைந்து கண்ணில் தெரியும் சீக்கியர்களையெல்லாம் ஜன்னல் வழியாகத் தூக்கி வெளியே வீசியது. பிளாட்பாரத்தில் காத்திருந்த மற்றொரு கும்பல் ஒவ்வொருவரையும் அடித்துக் கொன்றது. இதற்கு அவர்கள் வித்தியாசமான ஒரு தடியைப் பயன்படுத்தினார்கள். மூன்றடி நீளமுள்ள அதன் ஒரு நுனியில் அரைச்சந்திரன் போல் வளைந்த பகுதி இருந்தது. பதின்மூன்று சீக்கியர்களைக் கொல்வதற்காகத் தூக்கி வீசிய போது அவர்கள் அச்சத்துடன் கூக்குரல் எழுப்புவதையும் அடிபட்டு எலும்புகள் நொறுங்குவதையும் அந்த அமெரிக்கர் பீதியுடன் பார்த்துக் கொண்டிருந்தார். பழிவாங்கப்படும் மக்களுக்கிடையே மேலும் பலரைப் பலிகேட்டு முஸ்லீம்கள் தங்களின் குருதி தோய்ந்த தடிகளைச் சுழற்றிக் கொண்டிருந்தார்கள். சிதைந்து போன பதின்மூன்று சீக்கியர்களின் உடலை விட்டு விட்டு அந்த ரயில் வண்டி அங்கிருந்து புறப்பட்டது. அவர்களை அழித்த கருவிகள் என்ன என்பதை ஒருவழியாக ஃபிஷர் தெரிந்து கொண்டார். அவை ஹாக்கி மட்டைகள்.

அவரது வியப்பு அத்துடன் முடிந்துவிடவில்லை. அந்த அமெரிக்கரைத் திடுக்கிடவைக்கும் மற்றொரு சம்பவம் லாகூர் ரயில் நிலையத்தில் காத்திருந்தது. பஞ்சாபின் எல்லா ரயில் நிலையங்களிலும் வைக்கப்பட்டிருப்பது போல் அங்கே ஒரு பலகை தொங்கியது. குழப்பங்களுக்கு நடுவே அது நம்ப முடியாத ஒரு விளக்கு போல் தோன்றியது. ரயில் நிலைய பிளாட்பாரத்தில் கிடந்த பிணக்குவியல்களுக்கு மேலே அது தொங்கியது. ஐந்து நதிகள் பாயும் மாகாணத்தின் மகிழ்ச்சிகரமான நாட்களை 'அமைதிக்கும் வளத்துக்கும் ஒரு முன்மாதிரி'யாக இருந்ததை அது நினைவு படுத்தியது.

'பயணிகளின் வசதிக்காக புகார்ப் புத்தகம் ஒன்று ஸ்டேஷன் மாஸ்டர் அலுவலகத்தில் உள்ளது. பயணத்தின் போது ஏற்பட்ட சேவைக்குறைபாடுகள் பற்றி புகார் தெரிவிக்க விரும்பும் எந்தப் பயணியும் அதனைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்' என்று அதில் எழுதியிருந்தது.

## கல்கத்தா, ஆகஸ்ட் 1947

இந்த முறை அவருக்காகக் காத்திருந்தவர்கள் ஏறத்தாழ ஒரு மிலியன் (பத்து லட்சம்) மக்கள். பயங்கரங்கள் நிறைந்த அரைமாத காலத்தில், பஞ்சாபில் வெறிபிடித்த சண்டைகள் நடக்கும் போது, கல்கத்தாவில் ஒவ்வொரு நாளும் காந்தியின் மாலை நேர பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது. நீடித்த, வியக்கத்தக்க இந்த மாற்றம், மூர்க்கத் தனமான பெரு நகரத்தை அமைதியும் சகோதரத்துவமும் நிறைந்த சோலை யாக்கிக் கொண்டிருந்தது. உலகிலேயே மிகவும் துயரம் தோய்ந்த நகரவாசி களான அவர்கள் அன்பின் தூதரான மெலிந்த மனிதரின் உரையை செவிமடுத்த னர். தங்களின் மூதாதையர் வற்புறுத்திய வன்முறையையும் வெறுப்புணர்வையும் வென்றடக்கினர். கல்கத்தாவின் அதிசயம் நீடித்தது. நியூயார்க் டைம்ஸ் இதழ் குறிப்பிட்டிருந்தது போல அந்த நகரம் 'இந்தியாவின் அற்புதமாக இருந்தது.'

காந்தி தனக்கேயுரிய பணிவான குணத்துடன் இந்த வெற்றிக்கான பெருமையை ஏற்க மறுத்தார். 'கடவுளின் கைகளில் நாமெல்லாம் பொம்மை கள்' என்று அவரது ஹரிஜன் பத்திரிகையில் எழுதினார். 'அவனது தாளத்துக் கேற்ப நம்மை அவன் ஆடவைக்கிறான்' என்றும் அவர் குறிப்பிட்டார். இருப்பினும் புது டில்லியிலிருந்து வந்த ஒரு கடிதம் அந்த அடக்கமான சீசருக்கு உரிய கவுரவத்தை அளித்தது. 'பஞ்சாபில் 55,000 ராணுவ வீரர்கள் இருக் கிறார்கள். ஆனால் அங்கே பெருமளவு கலவரங்கள் நடந்துள்ளன' லூயி மவுண்ட்பேட்டன் அவரது 'விரக்தியுற்ற சிட்டுக் குருவிக்கு' எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

'வங்காளத்தில் நமது படையில் ஒருவர் மட்டுமே இருக்கிறார். ஆனால் அங்கு கலவரமே இல்லை' ஒரு ராணுவத் தளபதியாகவும், ஒரு நிர்வாகியாகவும் கடைசி வைஸ்ராய் பணிவுடன் இந்த வேண்டுகோளை விடுத்தார். 'எனது ஒரு மனித எல்லைப்படைக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்க என்னை அனுமதிக்க வேண்டும்.'

## பஞ்சாப், ஆகஸ்ட் 1947

திறந்த காரில் அந்த இருவரும் அருகருகே அமர்ந்து பயணம் செய்தனர். பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து முப்பது ஆண்டுகள் போராடிப் பெற்ற புதிய நாடுகளான இந்தியா மற்றும் பாகிஸ்தானின் பிரதம மந்திரிகள் என்ற முறையில் தங்களது நாடுகளின் மக்கள் கூட்டத்தின் உற்சாகத்துக்கிடையே வெற்றி ஆர வாரத்துடன் பயணம் செய்யும் உரிமையை அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

இதற்கு மாறாக பயங்கரமும் துயரமும் நிறைந்த காட்சிகளுக்கிடையே இறுக்கமான அமைதியுடனேயே ஜவஹர்லால் நேருவும் லியாகத் அலிகானும் பயணம் செய்தார்கள். அவர்களது நாட்டு மக்களின் முகங்களில் பல வகையான உணர்ச்சிகளை அவர்கள் பார்த்தனர். ஆனால் தங்களுக்கு சுதந்திரம் பெற்றுத் தந்ததற்கு நன்றியாக வாழ்த்துகளை தெரிவிக்கும் முகபாவம் காணப்பட வில்லை. குழப்பம் நிறைந்த நிலப்பகுதியில் அமைதியை மீண்டும் கொண்டு வர ஏதாவது ஒரு வழிமுறையைக் காணலாம் என்ற முயற்சியுடன் அவர்கள் இருவரும் இரண்டாவது முறையாக பஞ்சாபில் பயணம் செய்தார்கள்.

எல்லாம் அவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து போய்விட்டது. அவர்களின் காவல்துறை சீர்குலைந்து விட்டது. ராணுவம் விசுவாசமாக இருக்கிறது. ஆனால் அந்த அளவுக்கு மட்டும் தான். கருத்து வேறுபாடு மற்றும் மெத்தனப் போக்கால் சிவில் நிர்வாகம் ஸ்தம்பித்துப் போனது. சில நேரங்களில் அது குற்றச் செயல்களுக்கும் துணை போனது. சூறையாடப்பட்ட கிராமம் கிராமமாக, அறுவடை செய்யப்படாத வயல்களின் வழியாக அவர்களின் கார் இப்போது விரைந்து சென்றது. சாரி சாரியாக அகதிகள் கூட்டம். சீக்கியர்களும் இந்துக் களும் கிழக்கு நோக்கியும் முஸ்லீம்கள் மேற்கு நோக்கியும் சோர்வுடன் நடந்தார்கள். இந்தச் சோகங்களின் சுமையால் அந்தத் தலைவர்கள் இருவரும் நிலை குலைந்து காரின் பின்னிருக்கையில் கூனிக்குறுகி அமர்ந்திருந்ததை அவர்களின் உதவியாளர் ஒருவர் கவனித்தார்.

கடைசியில் அழுத்திக் கொண்டிருந்த மவுனத்தை நேரு தான் கலைத்தார். 'இந்தப் பிரிவினை நமக்கு எவ்வளவு பெரிய கொடூரத்தைக் கொண்டு வந்து விட்டது' அவர் லியாகத்திடம் அரை முணுமுணுப்புடன் கூறினார். 'அதற்கு நாம் ஒப்புக் கொண்ட போது இது போன்ற எதையும் எப்போதும் நினைத்தும் பார்த்ததில்லை. நாம் சகோதரர்களாக இருக்கிறோம். பின் எப்படி இதெல்லாம் நடக்கின்றன?'

'நமது மக்கள் பைத்தியமாகிவிட்டார்கள்' லியாகத் பதில் கூறினார்.

திடீரென்று ஒரு உருவம் அகதிகளின் வரிசையிலிருந்து வெளியேறி அவர் களின் காரை நோக்கி ஓடியது. அது ஒரு ஆண் உருவம். இந்து. வேதனையால் அவரது முகம் விகாரமடைந்திருந்தது. தேம்பியழுததால் அவரது உடல் நடுங்கியது. அவர் நேருவை அடையாளம் கண்டு கொண்டார். நேரு ஒரு பெரிய மனிதர். டில்லியிலிருந்து, அரசாங்கத்திலிருந்து வரும் தலைவர். அவரால் ஏதாவது செய்ய முடியும். அவரது முகத்தில் வழிந்த கண்ணீர் மூக்கிலிருந்து ஒழுகிய சளியுடன் கலந்தது. அவரது நடுங்கிய விரல்கள் வெட்ட வெளியில் செய்த சைகைகள் வேண்டுதலுக்கான நடனம் போல் இருந்தது. முன்பின் அறிமுக மில்லாத அந்த இந்து தனக்கு உதவி செய்யுமாறு நேருவிடம் கெஞ்சினார். இந்த சாலையில் மூன்று மைல் தூரத்துக்கு அப்பால் கரும்புத் தோட்டத்திலிருந்து முஸ்லீம்களின் கும்பல் ஒன்று அவர் இருந்த அகதிகள் கூட்டத்துக்குள் புகுந்தது. அவரின் ஒரே ஒரு குழந்தையான 10 வயது மகளை அது பறித்துக் கொண்டு ஓடிவிட்டது. அவர் அந்தச் சின்னப் பெண்ணை நேசித்தார். அந்தப் பெண்ணை மிகவும் நேசித்ததாக நேருவிடம் கூறி கதறினார். 'அவளை மீண்டும் என்னிடம் ஒப்படையுங்கள். தயவு செய்து அவளை மீட்டுத் தாருங்கள்'

*நேரு காரின் பின்னிருக்கையில் சாய்ந்தார். அவரது நாட்டின் மக்கள் பட்ட பல துயரங்களில் ஒன்றினை நேரடியாகவே பார்த்த அவர் உடல் ரீதியாகவே சோர்ந்து போனதாக அவரது உதவியாளரிடம் கூறினார். அவர் 300 மிலியன் (30 கோடி) மக்களுக்குப் பிரதம மந்திரி. ஆனால் ஒரு அரிய செயலுக்காக, அவரது சிறிய மகளை மீட்டுத் தருவதற்காக அலறி அழும் அந்த ஒரு மனிதருக்கு உதவி செய்ய அவரால் இயலவில்லை. கவலை மிகுந்த நேரு கைகளால் தலையைத் தாங்கிப் பிடித்து முன்பக்கம் சாய்ந்தார். அப்போது அவரது காரில் கால் வைத்து ஏறும் பலகையிலிருந்து அழுது புலம்பும் தந்தையை காவலர்கள் மெதுவாக அப்புறப்படுத்தினார்கள்.*

*அவரது அனுபவம் இன்னமும் உலுக்கியதால் அன்றிரவு நேருவால் தூங்கமுடியவில்லை. லாகூரில் அவர் தங்கியிருந்த வீட்டின் தாழ்வாரத்தில் கவலையுடன் சிந்தனையில் ஆழ்ந்தபடி பல மணி நேரம் உலாவினார். தனது மக்கள் திடீரென்று வகுப்புவாதக் கொடூரத்தில் இவ்வளவு வல்லமையுடன் ஈடுபட்டது நேருவுக்கு அதிர்ச்சியளிக்கும் விஷயமாக இருந்தது. ஏற்கெனவே ஒரு கூட்டத்தின் போது, இதையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு தோள்களைக் குலுக்கியபடி 'ஆங்... இது நடக்க வேண்டியதுதான்' என்று கூறிய நேருவின் நட்புள்ள எதிரியான பட்டேலால் சகிக்க முடியும். ஆனால் நேருவால் முடியவில்லை. பஞ்சாபை ஆக்ரமித்திருந்த வெறுப்புணர்வை அவரின் நாடி நரம்பெல்லாம் எதிர்த்தது. தனது நாட்டு இந்துக்களின் ஆதரவை இழந்து விடும் அபாயம் இருந்த போதும் அதனை எதிர்ப்பதற்கு அவர் அஞ்சவில்லை.*

*எப்படி எதிர்ப்பது என்பதை அவர் அறியாதிருந்தது தான் பிரச்சனை. பஞ்சாபை உலுக்கிய அரசியல் கொந்தளிப்பு அவர் மீது பெரும் பொறுப்பை சுமத்தியது. அவரது வாழ்க்கையில் இப்படியொரு செயலுக்கு இதுவரை தயாராய் இருந்ததில்லை. குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வேகமாகவும் முன் கோபத்தோடும் பளிச்சென்று பேசி விடுவது அவர் இயல்பு. அன்று மாலை அமிர்தசரஸ் அருகே ஒரு கிராமத்தின் சீக்கியர்கள் அவர்களின் அண்டை அயலில் உள்ள முஸ்லீம்களைப் படுகொலை செய்யத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள் என்ற தகவல் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே சீக்கியத் தலைவர்களை ஒரு பெரிய ஆலமரத்தடிக்கு அழைத்து வருமாறு அவர் உத்தரவிட்டார்.*

*'உங்களுக்குப் பக்கத்தில் உள்ள முஸ்லீம்களை இன்றிரவு படுகொலை செய்ய நீங்கள் திட்டமிட்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அவர்களின் தலைமுடியில் ஒன்று தொடப்பட்டாலும் அடுத்த நாள் காலை உங்களையெல்லாம் இங்கே கூடுமாறு செய்வேன். உங்கள் அனைவரையும் சுட்டுத் தள்ளுமாறு நானே தனிப்பட்ட முறையில் எனது மெய்க்காப்பாளர்களுக்கு உத்தரவிடுவேன்' என்று நேரு அவர்களிடம் கூறினார்.*

*இது போன்ற தீவிரமான, தனிப்பட்ட நடவடிக்கைகளை உலகிலேயே அளவில் இரண்டாவது பெரிய நாட்டில் எப்படிச் செயல்படுத்துவது என்பதுதான் நேருவுக்குக் குழப்பமாக இருந்தது. ஒரு புதிய நாடு இது போன்ற பிரச்சனைகளை ஒரு போதும் எதிர்கொண்டிருக்காது. கவலையும் சோர்வும் கொண்ட அவர் இரவு 2.30 மணிக்கு அவரது மெய்க்காப்பாளரை எழுப்பி, டில்லியுடன் வயர்லெஸ் மூலம் தொடர்பு கொண்டு கடைசியாகத் தகவல்களைப்*

பெறுமாறு கூறினார். கெடுதலான செய்திகளின் குவியலில் ஒரு செய்தி அவருக்கு ஆறுதல் அளிப்பதாக இருந்தது. பிரிவினை பிரச்சனையில் அவரால் விலக்கி வைக்கப்பட்ட அந்த வயதான தலைவர் இன்னமும் அதிசயம் நிகழ்த்திக் கொண்டிருந்தார். கல்கத்தா அமைதியாக இருந்தது.

காதைக் கிழிக்கும் ஒரு விசில் சத்தம் தான் அதற்கு சமிக்ஞையாக இருந்தது. அந்தக் குறிப்பொலியைக் கேட்டவுடன் சாலையின் மையப் பகுதியில் அமைதியாக நடந்து கொண்டிருந்த இரண்டு நடுத்தர வயதுக்காரர்களின் பின்னால் ஆறு இந்துக்கள் அரவம் தெரியாமல் நடந்து சென்றார்கள். அந்த இருவரும் ஓடத் துவங்கினார்கள். ஆனால் தப்பிக்க வழியில்லை. ‘முஸ்லீம், முஸ்லீம்’ என்று கூவியபடி அந்த விடலைப் பருவ இந்துக்கள் அவர்கள் இரு வரையும் அடித்துக் கீழே வீழ்த்தினார்கள். அச்சுறுத்தப்பட்ட இரண்டு மனிதர் களும் தாங்கள் இந்துக்கள் என்று சத்தியம் செய்து இந்துப் பெயர்களையும் பக்கத்து வீடுகளில் உள்ள இந்துக்களின் முகவரிகளையும் தெரிவித்தார்கள். தாக்குதல்காரர்களின் தலைவனான சுனில்ராய் என்ற 17வயது மாணவனுக்கு இதற்கும் மேலான நல்ல நிரூபணம் தேவைப்பட்டது. அவர்கள் உடுத்தியிருந்த வேட்டிகளின் மடிப்புகளை இழுத்து உருவினான். முகமதிய மதச்சடங்கின் அடையாளத்தை இருவரும் பெற்றிருந்தார்கள். அவர்கள் சுன்னத் செய்து இருந்தனர்.

விடலைப் பருவத்தினரில் ஒருவன் அந்த இருவரின் தலைகளில் துண்டினைப் போட்டான். மற்றொருவன் அவர்களின் கைகளைக் கயிற்றால் கட்டினான். தடிகளையும், கத்திகளையும் இரும்புக் குழாய்களையும் வீசியபடி வந்த கூட்டம் பின் தொடர கலக்கமுற்ற மனிதர்கள் இருவரையும் வீதிகளின் வழியே நடத்திச் சென்றார்கள். கைகள் கட்டப்பட்ட இருவரின் பிள்ளைகள் வயதிருக்கும் இளைஞர்கள் அவர்களின் ரத்தம் கேட்டு சத்தமிட்டனர். 200 கஜ தூரத்தில் ஒரு புனிதமான ஆற்றின் வளைவுப் பகுதியில் தான் அவர்களுக்குரிய பலி பீடம் இருந்தது.

‘சாதாரண காலங்களில், முஸ்லீம் ரத்தத்தால் இந்தப் புனித நீரை நாங்கள் மாசுபடுத்த மாட்டோம்’ அவர்களை இழுத்து வந்த 17 வயது இளைஞன் பிறகு கூறினான். அந்த நதியின் கரைகளில் மதப்பற்று கொண்ட பல இந்துக்கள் பூஜை செய்து கொண்டிருந்தார்கள். சில பெண்கள் குளித்துக் கொண்டிருந்தார்கள்.

தாங்கள் பழிவாங்க இருப்பவர்களை இடுப்பளவு தண்ணீரில் அவர்கள் தள்ளினார்கள். ஒரு இரும்புக் கடப்பாரை வானத்தில் மின்னி வந்து, விசும்பிக் கொண்டிருந்த முதலாவது முஸ்லீமின் தலைக்குள் இறங்கியது. அவரின் மண்டை சிதறியது. அந்த அப்பாவி மனிதர் ஆற்றுக்குள் அமிழ்ந்து போனார். அவரது தலை நீருக்கடியில் அமிழ்ந்த போது தண்ணீரின் மேற்பரப்பில் சிவப்பு நிற வட்டங்கள் தோன்றின.

இன்னொரு மனிதர் உயிருக்குப் போராடினார். அதே இளைஞன் அவரது தலையில் அடித்தான். கொலைகாரர்களின் தலைவன் பின்னர் இப்படி நினைவு கூர்ந்தான். ‘அவரது முகத்தில் சிறுவர்கள் கற்களால் அடித்தார்கள். அவர் இறந்து விட்டார் என்பதை உறுதிசெய்ய இன்னொரு இளைஞன் கழுத்தில் கத்தியால் குத்தினான்.’

அந்த இடத்தைச் சுற்றியிருந்த இந்து பக்தர்கள் வழிபாட்டைத் தொடர்ந்தார்கள். சில கஜ தூரத்தில் நடத்தப்பட்ட கொலைச் செயல்களால் அவர்களின் வழிபாடு பாதிக்கவில்லை. ராய் அந்த இருவரின் உடல்களை இழுத்து நதியின் நடுப்பகுதிக்குள் தள்ளினான். நீரோட்டம் அந்த உடல்களை அடித்துச் சென்றது. அவை மறைந்த பின், அவர்களின் ரத்தம் சகதி நிறைந்த ஹூக்ளி நதியில் கலந்த பின் அவர்களைக் கொன்றவர்களிடமிருந்து கூக்குரல்கள் எழுந்தன மூன்று முறை கூவினார்கள். 'காளிமாயி கி ஜே - காளிமாதா வாழ்க!'

1947 ஆகஸ்ட் 31 விடியற்காலை நேரம் அது. அதிசயமான பதினாறு நாட்களுக்குப் பிறகு அந்த நோய்க்கிருமிகள் பயங்கர இரவின் நகரையும் பாதித்தன. கல்கத்தாவின் அமைதியும் தகர்ந்தது. மற்ற இடங்களைப் போலவே, பஞ்சாபிலிருந்து பயங்கரக் கதைகளுடன் ரயில்களில் நெருக்கியடித்து வந்து சேர்ந்த அகதிகளால் அங்கேயும் தொற்று நோய் பரப்பப்பட்டது. ஒரு ட்ராலி வண்டியில் ஒரு இந்து சிறுவன் முஸ்லீம்களால் அடித்துக் கொல்லப்பட்டதாகப் பரப்பப்பட்ட வதந்திதான் ஆரம்பத் தீயானது. அப்படியொரு சம்பவம் நடந்தது ஒரு போதும் நிரூபிக்கப்படவில்லை.

அன்றிரவு 10 மணிக்கு வெறிபிடித்த இந்து இளைஞர் கூட்டம் ஹைதாரி இல்லத்தின் முன் ஆவேசத்துடன் கூடியது. மகாத்மாவைப் பார்க்க வேண்டும் என்று அது கோரியது. அவரது நம்பிக்கைக்குரிய மனு மற்றும் இன்னொரு சகோதரியின் பேத்தியான ஆபா ஆகியோருக்கிடையே வைக்கோல் மெத்தையில் படுத்து காந்தி தூங்கிக் கொண்டிருந்தார். முஸ்லீம்களால் தாக்கப்பட்டதாகக் கூறி கலக்கமடைந்த, கட்டுப் போடப்பட்ட ஒரு இளைஞனை முன்னிறுத்தி அந்தக் கும்பல் கோஷங்களை எழுப்பியது. வீட்டின் மீது கற்களை வீசியது. மனுவும் ஆபாவும் எழுந்தார்கள். வீட்டின் வராண்டாவுக்கு ஓடி வந்தார்கள் அந்தக் கும்பலை அமைதிப்படுத்த முயற்சி செய்தார்கள். பயன் ஏதும் இல்லை. காந்தியின் ஆதரவாளர்களை விலக்கித் தள்ளிவிட்டு, அந்தக் கும்பல் வீட்டுக்குள் நுழைந்தது. அங்கு நடந்த அமளியால் விழித்துக் கொண்ட காந்தி அவர்களை சந்திக்கச் சென்றார். 'என்ன பைத்தியக்காரத்தனம் இது?' அவர் கேட்டார். 'என்னையே தருகிறேன் - தாக்குங்கள்.'

இந்த முறை அவரின் வார்த்தைகள் அந்தக் கும்பலின் கூச்சலுக்குள் அமிழ்ந்து போனது. அந்தக் கூட்டத்திலிருந்து தப்பித்த இரண்டு முஸ்லீம்கள், அவர்களில் ஒருவருக்கு அடிபட்டு ரத்தம் சிந்தியது, பாதுகாப்புக்காக காந்திக்குப் பின்னால் ஒளிந்து கொள்ள ஓடினார்கள். கூட்டத்திலிருந்து கொடி கட்டிய தடி ஒன்று அவர்களை நோக்கி வீசப்பட்டது. சில அங்குல இடைவெளியில் மகாத்மாவின் தலை தப்பியது. அந்தத் தடி சுவற்றில் பட்டு அவருக்குப் பின்னால் விழுந்தது.

அந்தச் சமயத்தில், கவலையடைந்த காந்தியின் ஆதரவாளர்களில் ஒருவரால் அழைக்கப்பட்ட காவல் துறையினர் அந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அதிர்ச்சியடைந்த காந்தி மீண்டும் தனது வைக்கோல் மெத்தையில் படுத்தார். அவரால் தூங்க முடியவில்லை. 'கல்கத்தாவின் அதிசயம் ஒன்பது நாளின் அதிசயம் தான் என்று நிரூபணமாகிவிட்டது' என்று காந்தி குறிப்பிட்டார்.

கல்கத்தாவின் அமைதி பற்றி மகாத்மா ஏதாவது சில மயக்கங்களைக் கொண்டிருந்தால் அவையும் அடுத்த நாள் அழிந்து போயின. காந்தியின்

அதிசயத்தால் கவரப்பட்டு தங்களின் வீடுகளுக்குத் திரும்பியிருந்த முஸ்லீம்களின் குடியிருப்புகள் இருந்த குடிசைப்பகுதியில் அன்று பிற்பகலில் ஒரு கூட்டம் திட்டமிட்டு தாக்குதல் நடத்தியது. பல இடங்களில் தாக்குதல் காரர்களுக்கு ஆர்எஸ்எஸ் வெறியர்கள் தலைமை தாங்கினர். இது ஒரு இந்து தீவிரவாத அமைப்பு. இதன் ஆதரவாளர்கள் தான் சுதந்திர தினத்தன்று பூனாவில் ஸ்வஸ்திக் சின்னம் பொறித்த தங்களின் காவிக் கொடிக்கு வணக்கம் செலுத்தியவர்கள். காந்தி தங்கியிருந்த வீட்டிலிருந்து சில நூறு கஜ தூரத்தில் பெலியகட்டா சாலையில், ஒரு ட்ரக் வண்டியின் மீது இரண்டு கையெறி குண்டுகள் வீசப்பட்டன. தங்களின் அண்டை வீட்டார்களிடமிருந்து விலகி ஓடும் அச்சமடைந்த முஸ்லீம்களை ஏற்றிச் சென்றது அந்த ட்ரக்.

காந்தி உடனடியாக அந்தப் பகுதிக்கு விரைந்தார். அந்தக் காட்சி அவருக்கு துயரத்தை ஏற்படுத்தியது. இறந்து போன இரண்டு பேரும் கிழிந்த உடையணிந்த ஏழை கூலித் தொழிலாளர்கள். வெறித்த கண்களுடன் அவர்கள் உறைந்து பிசுபிசுப்பான ரத்தச் சகதியில் கிடந்தார்கள். திறந்த காயங்களின் விரிந்த தோல் பகுதிகளில் ஈக்களின் கூட்டம் மொய்த்துக் கொண்டிருந்தது. அவர்களில் ஒருவனின் கிழிந்த சட்டையிலிருந்து உருண்டோடிக் கிடந்த நாலணா காசு அவனது உடலுக்குப் பக்கத்தில் நடைபாதை மீது மின்னிக் கொண்டிருந்தது. கல்நெஞ்சக்காரர்கள் செய்த சுசாப்பு கண்டு காந்தி திக்கித்து நின்றார். இந்தக் காட்சியால் மிகவும் தளர்ந்து போன அவர் மாலையில் சாப்பிட மறுத்தார். அவர் உணர்ச்சி மயமான மவுனத்தில் ஆழ்ந்தார். 'நான் வெளிச்சத்துக்காகப் பிரார்த்திக்கிறேன். என்னுள் அதை நான் ஆழமாகத் தேடுகிறேன். இதற்கு மவுனமே உதவி செய்கிறது' என்று அவர் சொன்னார்.

அன்று மாலை, கொஞ்ச நேர உலாவலுக்குப்பின், வைக்கோல் மெத்தையில் அமர்ந்து பிரகடனம் ஒன்றை அவர் தயாரிக்கத் தொடங்கினார். அவர் தேடிக் கொண்டிருந்ததற்கான விடையைக் கண்டு பிடித்து விட்டார். அவரது பத்திரிகையில் அறிவிக்கப்பட்ட முடிவு மாற்ற முடியாதது. கல்கத்தாவில் மீண்டும் அமைதியைக் கொண்டு வருவதற்காக, காந்தி தனது 78 வயதான உடலை சாகும் வரை உண்ணாவிரதம் என்பதற்கு ஒப்படைக்கவிருந்தார்.

பல நூற்றாண்டுகளாக பட்டினிச்சாவு நிரந்தரமாகவும் பொதுவான சாப மாகவும் உள்ள ஒரு நாட்டில், கல்கத்தாவில் அமைதி திரும்புவதற்காக ஒற்றை மனிதராகச் சுழன்ற காந்தி எடுத்திருக்கும் உண்ணாவிரத ஆயுதம், முரண்பட்ட ஒன்றுதான். இருப்பினும் இந்த ஆயுதம் இந்தியாவைப் போலவே பழமையானது. இந்து மதத்தின் முற்கால முனிவர்களான ரிஷிகள், 'நீங்கள் அப்படிச் செய்தால் நான் உயிரை மாய்த்துக் கொள்வேன்' என்று பிரார்த்தனை களில் கூறியது மற்றெதையும் விட மக்களைக் கவர்ந்தது. 1947ஆம் ஆண்டு இந்தியாவிலும், துன்பத்தில் உழன்ற விவசாயிகள், கடன்களைத் தள்ளுபடி செய்யுமாறு கோரி லேவாதேவிக்காரர்களின் வீடுகளுக்கு முன்னால் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். கடன் வாங்கியவர்கள் சொன்னபடி கடனைத் திருப்ப வேண்டும் என்பதை வலியுறுத்தி கடன் கொடுத்தவர்களும் கூட உண்ணாவிரதம் இருந்துள்ளனர். இப்படி தனி நபர்களின் நடைமுறையாக இருந்த ஒன்றுக்கு தேசியப் பரிமாணம் அளித்தது தான் காந்தியின் புத்திசாலித்தனம்.

நிராயுதபாணியான, கீழ் நிலையில் இருந்த மக்களில் சிலர் பயன்படுத்திய உண்ணாவிரதம், தந்திரம் நிறைந்த காந்தியின் கைகளில் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதமாக மாறியது. எதிராளிக்கு நிர்ப்பந்தம் அளித்து செயலை விரைவு படுத்துவதால், மிகப்பெரும் பிரச்சனையை சந்திக்க நேரிடும் போதெல்லாம், காந்தி தாமாகவே இந்த ஆயுதத்தை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அவரது வாழ்க்கையின் சாதனைகளில் பலவும் மாபெரும் உண்ணாவிரதங்களால் வென்றெடுப்பட்டவைதான். பெரிய அல்லது சிறிய காரணங்களுக்காக, பதினாறு முறை அவர் வெளிப்படையாக உணவருந்த மறுத்திருக்கிறார் இரண்டு முறை அவரது உண்ணாவிரதம் இருபத்தொரு நாள் வரை நீடித்திருக்கிறது. இவை அவரை வாழ்க்கையின் எல்லைக்குக் கொண்டு சென்றிருக்கின்றன. தென்னாப்பிரிக்காவில் நிறவெறிக்கெதிராக நீதி கோரிய போதும், இந்தியாவில் இந்து - முஸ்லீம் ஒற்றுமைக்காகவும், தீண்டாமைக் கொடுமையை முடிவுக்குக் கொண்டு வரவும், அல்லது பிரிட்டனின் வெளியேற்றத்தை விரைவுபடுத்தவும் காந்தி மேற்கொண்ட உண்ணாவிரதங்கள், உலகைச் சுற்றியுள்ள லட்சக்கணக்கான மக்களிடம் அசைவை ஏற்படுத்தின. அவரின் மூங்கில் தடியும், வேஷ்டியும், வழுக்கைத் தலையும் பொது மக்களிடம் ஏற்படுத்தியுள்ள சித்திரத்தின் ஒரு பகுதியாக உண்ணாவிரதங்களும் இருந்தன. படிக்க இயலாத, ஒரு வானொலிக்கும் வழியில்லாத 95 சதவீத மக்களைக் கொண்ட ஒரு நாடு காந்தியின் ஒவ்வொரு தியாகச் செயலையும் எப்படியோ கவனித்துக் கொண்டு தான் இருந்தது. மரணத்தால் அவருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போதெல்லாம் அபூர்வமான உள்ளுணர்வு ஒற்றுமையால் அது கலக்கமடைந்தது.

காந்தியைப் பொறுத்த வரை உண்ணாவிரதம் பிரார்த்தனையின் ஒரு வடிவம். உடல்பலத்தின் மீது ஆன்மீக பலம் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கும் ஒரு சிறந்த வழி. பாலுணர்வு வேட்கையைக் கட்டுப்படுத்துவது போலவே, மனிதனின் ஆன்மீக மேம்பாட்டுக்கு, இதுவும் ஒரு அத்தியாவசியமான சாதனம். 'உடல் மீதான கட்டுப்பாட்டை அதிகரிப்பதன் மூலமே உயிரின் சக்தியை அதிகரிக்க முடியும் என்று நான் நம்புகிறேன்' அவர் வலியுறுத்திக் கூறினார். உணவு என்பது வாய் ருசிக்காக அல்ல; உடலை நமது அடிமையாக வைத்துக் கொள்வதற்காகவே என்பதை நாம் மிகவும் எளிதாக மறந்து விடுகிறோம்.' தனிப்பட்ட வாழ்க்கையில் தவ வலிமைக்கான நிரந்தரத் தேவையைப் பூர்த்தி செய்ய உண்ணாவிரதங்கள் அவருக்கு சிறந்த கருவிகளாக இருந்தன.

பொது வாழ்க்கையில் தன்னைத்தானே வருத்திக் கொள்ளும் உண்ணாவிரதம் அஹிம்சையின் ஆயுதக்கிடங்கிற்கு மிக உறுதியான ஆயுதத்தை அளிப்பதாகக் காந்தி கூறினார். அதனைப் பயன்படுத்தும் தத்துவத்தை உருவாக்குவதில் அவர் உலகிலேயே மகத்தானவராக இருந்தார். சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே உண்ணாவிரதத்தை மேற்கொள்ள முடியும் என்று காந்தி நம்பினார். உண்ணாவிரதம் இருப்பவர் எதிராளியின் அன்பையும் அக்கறையையும் பெற முடியாத போது அவருக்கு எதிராக உண்ணாவிரதம் இருப்பது பயனற்றது. புஷன்வால்டில் (Buchenwald) அடைபட்டிருக்கும் யூதர் ஒருவர் அவரை சிறை வைத்திருக்கும் நாஜிகளுக்கு எதிராகவோ, சைபீரியாவின் சிறையில் இருக்கும் ஒருவர் ஸ்டாலின் படையினருக்கு எதிராகவோ, உண்ணாவிரதம் இருப்பது பைத்தியக்காரத்தனம்; அவரது கோட்பாடுகளுக்கு

எதிரானது. பிரிட்டிஷாருக்குப் பதிலாக இந்தியாவை ஹிட்லரோ ஸ்டாலினோ ஆண்டிருந்தால் அவரின் உண்ணாவிரதக் கருவி பயனற்றுப் போயிருக்கும் என்பதை காந்தி ஒப்புக் கொண்டார்.

காலத்துக்கேற்ப உண்ணாவிரதம் என்பது பிரச்சனையையும் ஏற்படுத்தும்; முக்கியப் பரிமாணத்தையும் கொடுக்கும். வியப்புக்குரிய அதன் தன்மை, காலம் காலமாய் ஒரே திசையில் ஓடும் சிந்தனைகளில் விடுபட்டுப் புதிய கருத்துகளை எதிர்கொள்ளுமாறு மக்களை நிர்ப்பந்திக்கும். சிறப்பாக இருக்க வேண்டு மானால் அரசியல் ரீதியான உண்ணாவிரதத்திற்கு விளம்பரம் செய்யப்படுகிறது. இந்தக் கருவியை ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு அரிதாகவே பயன்படுத்த வேண்டும்; அடிக்கடி பயன்படுத்தினால் இது கேலிக்குரிய பொருளாகிவிடும்.

காந்தி வெளிப்படையான உண்ணாவிரதங்களை இரண்டு வகைகளில் மேற்கொண்டார். முதலாவதும் மிகவும் வியப்புக்குரியதுமாயிருந்த வகை 'சாகும் வரை' உண்ணாவிரதம். இதில் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை சாதிக்க வேண்டும்; அல்லது பட்டினி கிடக்க வேண்டும் என்று அவர் உறுதியெடுத்துக் கொண்டார். இரண்டாவது வகை ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட காலம் வரை உண்ணாவிரதம் இருப்பது. சில நேரங்களில் இது தனிப்பட்ட தவத்துக்குரிய வடிவமாக சில நேரங்களில் அவரது ஆதரவாளர்கள் செய்த தவறுக்குக் கழுவாய் தேடியும், மகாத்மாவின் ஒழுக்க நெறிகளுக்கு அவர்களை மீட்டு வருவதற்கு நிர்ப்பந்தம் அளிக்கும் வழிமுறையாகவும் உண்ணாவிரதம் மேற்கொள்ளப் பட்டது.

இதற்கு கடுமையான விதிமுறைகள் இருந்தன. சிறிது சோடா உப்புக் கலந்த தண்ணீரை மட்டுமே காந்தி அருந்தினார். சில நேரங்களில் சுவைக்காக அந்தத் தண்ணீரில் சாத்துக்குடி அல்லது எலுமிச்சை சாற்றினை சேர்த்துக் கொள்ள தனது ஆதரவாளர்களுக்கு அவர் அனுமதி அளித்திருந்தார். சில சூழ்நிலைகளில் அந்தச் சுவையை அவர் விரும்புவதில்லை. 1924இல் முதன்முறையாக இருபத் தொருநாள் உண்ணாவிரதம் இருந்த போது, இறுதி நேரத்தில் பலவீனமானார். அப்போது குளுகோஸை உடலில் செலுத்த மருத்துவர்களை அவர் அனுமதித்தார். இது சாகும் வரை உண்ணாவிரதம் இல்லை என்பதாலும் ஒரு கால வரையறை செய்யப்பட்டது என்பதாலுமே அவர் ஒப்புக் கொண்டார்.

இப்போது எழுபத்தெட்டாவது பிறந்த நாளை நெருங்கிக் கொண்டிருக்கும் காந்தி, மீண்டும் ஒருமுறை தன்னைத் தானே வருத்திக் கொண்டு பொது இடத்தில் உண்ணாவிரதம் இருக்கத் தயாரானார். இந்தமுறை அவரது ஆயுதத்தை ஒரு புதுவகையான மோதலுக்குப் பயன்படுத்தினார். அவரது உண்ணாவிரதம் பிரிட்டிஷாருக்கு எதிராக அல்ல; அவரது சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகவும் அவர்களைப் பீடித்திருக்கும் அறிவற்ற வெறித் தனத்துக்கு எதிராகவுமே. கல்கத்தாவின் வன்முறைகளில் இறந்திருக்க வேண்டிய ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்களைப் பாதுகாக்க, அவர்களின் சார்பில், தனது வயதான உடம்பில் எஞ்சியிருக்கும் உயிரைப் பணயம் வைக்க அவர் தயாரானார்.

இந்த வயதில் மேற்கொள்ளும் உண்ணாவிரதத்தின் பயங்கர விளைவை அறிந்த காந்தியின் சீடர்கள் அதனைக் கைவிடச் செய்வதற்கு முயற்சி செய்தனர்.

'பாபு, குண்டர்களுக்கு எதிராக ஒருவர் எப்படி உண்ணாவிரதம் இருக்க முடியும்?' அவரது பழைய காங்கிரஸ் கூட்டாளியும், வங்காளத்தின் முதலாவது இந்திய கவர்னராக வந்திருப்பவருமான சி.ஆர்.ராஜகோபாலாச்சாரி வினவினார்.

'குண்டர்களுக்குப் பின்னால் இருப்போரின் இதயத்தைத் தொட நான் விரும்புகிறேன்' காந்தி பதிலளித்தார்.

'ஆனால், நீங்கள் இறக்க நேர்ந்தால், எந்த மோதலை முடிவுக்குக் கொண்டு வர முயற்சி செய்கிறீர்களோ அது மிகவும் மோசமாகும்' அவரின் பழைய ஆதரவாளர் பணிவாகக் கூறினார்.

'குறைந்தபட்சம் அதற்கு வாழும் சாட்சியாக நான் இருக்க மாட்டேன் அல்லவா?' காந்தி பதிலளித்தார்.

எதுவும் அவரிடம் அசைவை ஏற்படுத்தப் போவதில்லை. செப்டம்பர் 1 மாலை நேரப் பிற்பகுதியில் மனுவையும் ஆபாவையும் காந்தி எழுப்பினார். ஹைதாரி இல்லத்துக்கு முன்னால் இரண்டு பேர் கொல்லப்பட்டதைப் பார்த்த பின் அவரால் சாப்பிட முடியாமல் போன இரவு உணவு நேரத்திலிருந்தே தனது உண்ணாவிரதம் தொடங்கி விட்டது என்று அவர்களிடம் தெரிவித்தார். வெற்றி அல்லது மரணம். 'கல்கத்தாவில் அமைதி ஏற்பட வேண்டும்; அல்லது நான் சாக வேண்டும்' என்று அவர் சொன்னார்.

இந்த முறை தலைச்சுற்றும் அளவுக்கு வேகமாக காந்தியின் உடல் வலுவிழந்தது. புத்தாண்டு தினத்திலிருந்து அவர் பெற்ற உணர்ச்சிமயமான இறுக்கத்தின் சாயல் இப்போது வெளிப்பட்டது.

அடுத்த நாள் அவரது இதயத் துடிப்பு நான்கில் ஒரு பங்கு குறைந்து விட்டதை அவரது மருத்துவர் கண்டறிந்தார். நண்பகலில் மசாஜ் செய்ததாலும், வெந்நீர் கொண்டு இனிமா கொடுத்ததாலும், சோடா உப்பு கலந்து ஒரு லிட்டர் தண்ணீரை அவர் பருகினார். அதன் பிறகும் சிறிது நேரத்தில் அவரது குரல் பலவீனமாகி வெறும் முணு முணுப்பாகவே இருந்தது.

சில மணி நேரத்தில், அவர் வெளிப்படுத்திய சபதத்தின் செய்தி கல்கத்தா முழுவதும் பரவியது. கவலையடைந்த பார்வையாளர்கள் ஹைதாரி இல்லத்தைச் சுற்றியிருந்த வீதிகளில் ஏராளமாகக் கூடினார்கள். ஆனால் ஏற்கெனவே துவக்கப்பட்ட வன்முறை என்ற தொற்று நோயை ஒரே நாளில் கட்டுப்படுத்த முடியவில்லை. தீ வைப்பு, கொள்ளை, கொலை ஆகியவை தொடர்ந்து அந்த நகரை அழித்தன. மேலும் பல கொலைகள் நடப்பதற்கு அடையாளமாக அலறல் சத்தத்தையும், தூரத்திலிருந்து துப்பாக்கிச் சூட்டின் எதிரொலியையும் காந்தியே தனது படுக்கையில் இருந்தவாறு கேட்க முடிந்தது.

வேதனையுடன் அவர் படுத்துக் கிடந்த போது, அவரது ஆதரவாளர்கள் அந்த நகரின் இந்துத் தீவிரவாதிகளின் தலைவர்களை நாடிச் சென்றார்கள். நவகாளியில் ஆயிரக்கணக்கான இந்துக்கள் காப்பாற்றப்பட்டதற்குக் காரணம், நவகாளியில் இருந்த முஸ்லீம் தலைவர்களிடமிருந்து காந்தி பெற்ற வாக்குறுதி தான் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினர். கல்கத்தாவில் முஸ்லீம்கள் படுகொலை செய்யப்படுவது நீடித்து காந்தி இறந்தால், அதன் விளைவு நவகாளியில் உள்ள ஆயிரக்கணக்கான இந்துக்கள் படுகொலை செய்யப்படுவதாகவே இருக்கும் என்றும் அவர்கள் எச்சரித்தனர்.

அவரது உண்ணா விரதத்தின் இரண்டாவது நாள் காலையில், துப்பாக்கிச் சூடு சத்தத்தோடு ஒரு புதிய ஒலியும் கலக்கத் துவங்கியது. ஹைதாரி இல்லத்தை நோக்கி அதிகரிக்கும் எண்ணிக்கையில் வெள்ளம் போல் வரும் மக்கள் அமைதிக்காக எழுப்பிய குரல் தான் அது. காந்தியின் ரத்த அழுத்தம், இதயத்துடிப்பு, சிறுநீரில் அல்பமன் (Albumen) அளவு ஆகியவைப் பற்றி கல்கத்தாவின் கலவரக்காரர்களும் தங்களது செயலை நிறுத்தி கவனித்தார்கள். நகரில் அமைதியை மீண்டும் கொண்டு வருவதற்கான இயக்கத்தைப் பல்கலைக் கழக மாணவர்கள் துவங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க ராஜ கோபாலாச்சாரி அங்கு வந்தார். நலிந்து கொண்டிருந்த காந்தியின் அருகே அமர்ந்த இந்து மற்றும் முஸ்லீம் தலைவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு அவரை வேண்டிக் கொண்டார்கள். ஒரு முஸ்லீம், காந்தியின் காலில் விழுந்து கதறினார். 'உங்களுக்கு ஏதாவது நேர்ந்தால் முஸ்லீம்களாகிய எங்களுக்கு அது. முடிவுகாலம் ஆகிவிடும்' என்றார். இருப்பினும், காந்தியின் வற்றிப்போன உடலுக்குள் ஒளிவிட்ட உறுதியை இது போன்ற நம்பிக்கை யிழந்த வேண்டுகோள்களால் அசைக்க முடியவில்லை. 'கடந்த பதினைந்து நாட்களாக நிலவிய புகழ்மிக்க அமைதி திரும்பாத வரை நான் உண்ணா விரதத்தை நிறுத்தமாட்டேன்' அவர் அமைதியான குரலில் கூறினார்.

மூன்றாம் நாள் அதிகாலையில் காந்தியின் குரல் மிகவும் நலிந்தது. மிகவும் வேகமாக அவரது நாடித்துடிப்பு பலவீனமடைந்தது. அவரது மரணம் உடனே நிகழ்ந்துவிடும் நிலைமை இருந்தது. அவர் இறந்து கொண்டிருக்கிறார் என்ற வதந்தி பரவியதால் கல்கத்தாவை துயரமும் சோகமும் சூழ்ந்தது. இந்த நகருக்கு அப்பால் தேசத்தின் கவனம் முழுவதும், இந்தியாவின் மகாத்மா வேதனைப் பட்ட ஹைதாரி இல்லத்தில் விரிக்கப்பட்ட வைக்கோல் மெத்தையின் பக்கம் திரும்பியது.

மோகன்தாஸ் காந்தியின் சோர்ந்து போன உடலிலிருந்து உயிர் பிரியப் போகிறது என்று தோன்றியதால், தங்களைப் பாதுகாத்தவரைப் பாதுகாக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் நகரம் முழுவதும் அன்பும் சகோதரத்துவமும் கொண்ட மக்கள் கூட்டம் அலை மோதியது. மோசமாகக் கலவரங்கள் நடந்த குடிசைப்பகுதிகளில் அமைதியையும்-ஒழுங்கையும் மீண்டும் நிலைநாட்ட இந்துக்களும் முஸ்லீம்களும் கலந்து சென்ற ஊர்வலங்கள் அந்தப் பகுதிகளை ஆக்ரமித்தன. கல்கத்தாவில் உண்மையிலேயே மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மிகவும் வியப்புடன் நிரூபிக்கும் சம்பவம் நண்பகலில் நடந்தது. இருபத்தேழு குண்டர்களின் கும்பல் ஒன்று ஹைதாரி இல்லக் கதவின் முன் வந்து நின்றது. குனிந்த தலையுடன் தங்களின் செயல்களுக்கு வருந்திய குரலுடன், குற்றங்களை ஒப்புக் கொண்டார்கள். காந்தியிடம் மன்னிப்புக் கோரினார்கள். உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்ளுமாறும் அவரிடம் வேண்டினார்கள்.

காந்தியை மிகவும் வேதனைப்பட வைத்த, பெலியகட்டா சாலையில் செய்த படுகொலைகளுக்குப் பொறுப்பான போக்கிரிகள் அன்று மாலை காந்தி முன் தோன்றினார்கள். தாங்கள் செய்த குற்றங்களை அவர்கள் ஒப்புக் கொண்டனர். பின்னர் அவர்களில் ஒருவர் காந்தியிடம் சொன்னார்; 'நீங்கள் உண்ணா விரதத்தை முடித்துக் கொள்வதாக இருந்தால், நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் அதனை முழுமனதுடன் ஏற்றுக் கொள்ள நானும் எனது

ஆட்களும் தயாராக இருக்கிறோம்' இப்படி அவர் கூறியவுடன் மற்றவர்கள் மடித்துக்கட்டிய வேட்டிகளை அவிழ்த்தார்கள். அவற்றிலிருந்து கத்திகள், கோடரிகள், துப்பாக்கிகள், புலிநகங்கள் ஆகியவை தரையில் கொட்டின. அவற்றில் சில அவர்களால் கொல்லப்பட்டவர்களின் ரத்தக்கறை படிந்து கருப்பாக இருந்தன. இவற்றையெல்லாம் காந்தியும் அவரது சீடர்களும் வியப்புடன் பார்த்தார்கள். அவரது படுக்கையைச் சுற்றி நின்ற அவர்களிடம் காந்தி மெல்லிய குரலில் கூறினார். 'உங்களால் பழிவாங்கப்பட்ட முஸ்லீம் களுக்குப் பக்கத்து வீட்டுக்காரர்களாகத் தங்கியிருந்து அவர்களைப் பாதுகாக்க நீங்களாகவே உறுதி மொழி எடுத்துக் கொள்ளுமாறு உங்களைக் கேட்டுக் கொள்வது மட்டுமே நான் வழங்கும் தண்டனையாகும்.'

அன்று மாலை கையால் எழுதப்பட்ட செய்தி ஒன்று ராஜகோபாலாச் சாரியிடமிருந்து வந்தது. நகரில் முழு அளவு அமைதி திரும்பி விட்டது என்று அதில் அறிவிக்கப்பட்டிருந்தது. குண்டர்கள் கூட்டம் தாமாகவே முன்வந்து ஒப்படைத்த கையெறிகுண்டுகள், தானியங்கி துப்பாக்கிகள், கைத்துப்பாக்கி கள், கத்திகள் ஆகியவற்றுடன் ஒரு ட்ரக் வண்டி ஹைதாரி இல்ல வாயிலுக்கு வந்து சேர்ந்தது. இந்து, சீக்கிய மற்றும் முஸ்லீம் தலைவர்கள் கூட்டாக ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். பணிவுடன் காந்திக்கு அவர்கள் உறுதி யளித்திருந்தனர். 'மீண்டும் இந்த நகரில் வகுப்புக்கலவரம் நடக்க ஒருபோதும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இதனைத் தடுத்து நிறுத்த சாகும்வரைப் பாடுபடுவோம்.'

கடைசியாக, செப்டம்பர் 4 இரவு 9.15 மணிக்கு, துவங்கப்பட்ட எழுபத்திரண்டு மணி நேரத்துக்குப் பின், ஒரு கண்ணாடித் தம்ளரிலிருந்த ஆரஞ்சு சாற்றில் கொஞ்சம் அருந்தி காந்தி உண்ணாவிரதத்தை முடித்தார். அவர் இந்த முடிவை மேற்கொள்ளும் முன், அவரது படுக்கையைச் சுற்றியிருந்த இந்து, சீக்கிய, முஸ்லீம் தலைவர்களுக்கு எச்சரிக்கை செய்து பேசினார்.

'இந்தியாவின் அமைதிக்கான சாவியை இன்று கல்கத்தா வைத்திருக்கிறது இங்கே நிகழ்ந்தது குறைவான சம்பவங்கள் என்றாலும் மற்ற பகுதிகளில் எண்ணற்ற குழப்பங்களை இதனால் ஏற்படுத்த முடியும். நாடு முழுவதும் கலவரத்தீ பற்றி எரிந்தாலும் கல்கத்தா அந்தத் தீயிலிருந்து வெளியே இருக்குமாறு நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்?'

அவர்கள் செய்வார்கள். இந்த முறை கல்கத்தாவின் அதிசயம் உண்மை யானது. அது நீடித்திருக்கும்.

சித்திரவதைகள் நிகழ்ந்த பஞ்சாபின் சமவெளிப்பகுதிகளில், எல்லைப்புற மாகாணங்களில், கராச்சி, லக்னோ, டில்லி ஆகிய இடங்களில் மோசமானவை இன்னும் நடக்கவிருக்கின்றன. ஆனால் 'அச்சம் தரும் இரவின் நகரம்' அமைதியை மீட்பதற்கு உயிரைப் பணயம் வைக்க முன்வந்த முதியவரிடம் நம்பிக்கை கொண்டிருந்தது. காந்தியின் வாழ்நாள் முழுவதும் கல்கத்தா நகரின் நடைபாதைகளில் வகுப்புக் கலவரங்களால் ஒருபோதும் ரத்தம் சிந்தவே இல்லை. 'காந்தி பல சாதனைகளைப் படைத்திருக்கிறார். ஆனால் உண்மை யிலேயே அற்புதம் நிறைந்த, கல்கத்தாவில் கொடுமை நிகழாமல் அவர் கொண்ட வெற்றிக்கு, சுதந்திரம் கூட ஈடாகாது' என்று அவரின் பழைய நண்பர் ராஜகோபாலாச்சாரி குறிப்பிட்டார்.

இந்தப் புகழுரைகளால் காந்தி அசைந்து விடவில்லை. 'நாளை பஞ்சாபுக்குப் புறப்படலாமா என்று நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்' காந்தி அறிவித்தார்.

## புது டில்லி, செப்டம்பர் 1947

பஞ்சாபுக்கான பயணத்தை காந்தி முழுவதும் மேற்கொள்ள முடியவில்லை. புதிதாக வெடித்த வன்முறையால் அவரது பயணம் பாதி வழியிலேயே தடைப்பட்டது. இந்த முறை வெறிச் செயல் தலைகாட்டியது, நரம்பு மண்டலத்தின் மையப்பகுதி போன்ற டில்லியில். மறைந்த பிரிட்டிஷ் அரசு எங்கிருந்து இந்தியாவை ஆட்சி செய்ததோ அந்தப் பெருமை மிக்க செயற்கைத் தலைநகரில் தான். கல்கத்தா மற்றும் லாகூரின் குடிசைப்பகுதிகளில் பரவிய விஷம் உலகத்தின் மிகப்பெரிய அதிகார வர்க்கத்தின் சரணாலயமாக, ஆடம்பரமும் படாடோபமும் நிறைந்திருந்த இந்த நகரையும், விட்டு வைக்கவில்லை.

பஞ்சாபின் எல்லைப் பகுதியில் உள்ள, ஒரு காலத்தில் மொகலாயர்களின் கோட்டை நகராக இருந்த டில்லி, இன்னமும் பல வழிகளில் முஸ்லீம்களின் நகராகவே இருந்தது. பெரும்பாலான ஊழியர்கள் முஸ்லீம்கள். அந்த நகரின் டோங்கா ஓட்டுநர்கள்; காய்கனி வியாபாரிகள்; கடை வீதிகளின் கைவினைஞர்கள் என இவர்களிலும் பெரும்பாலோர் முஸ்லீம்கள் தான். கலவரங்கள் ஏற்பட்டதால், சுற்றியிருந்த கிராமங்களிலிருந்து புகலிடமும் பாதுகாப்பும் தேடி வந்த ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள் அந்த நகரின் வீதிகளில் குவிந்திருந்தனர். அந்த நகருக்குள் வந்த இந்து மற்றும் சீக்கிய அகதிகளால் தூபமிடப்பட்ட பயங்கரக் கதைகளால் சீக்கியர்களின் அகாலி பிரிவினரும் ஆர்.எஸ்.எஸ்.சின் இந்து வெறியர்களும் முஸ்லீம்களைக் கண்டு ஆத்திரமடைந்தார்கள். கல்கத்தாவில் காந்தி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்ட செப்டம்பர் 3 காலையில் இவர்கள் தங்கள் புதிய நாட்டின் தலைநகர் டில்லியில் அலைவீசும் பயங்கரத்தை ஆரம்பித்து வைத்தார்கள்.

ரயில் நிலையத்தில் ஒரு டஜன் முஸ்லீம் போர்ட்டர்கள் கொலையுடன் அது தொடங்கியது. சில நிமிடங்களுக்குப் பிறகு, புது டில்லியின் வர்த்தகக் கேந்திரமான கன்னாட் சர்க்கஸ் பகுதிக்குச் சென்ற ஃப்ரெஞ்ச் பத்திரிகையாளர் மாக்ஸ் ஒலிவியர் லே கேம்ப் (Max Olivier - Lacamp), அங்கு ஒரு இந்துக்கும்பல், முஸ்லீம்களின் கடைகளைச் சூறையாடி அவற்றின் உரிமையாளர்களை வெட்டிக் கொன்றதைப் பார்த்தார். அவர்களின் தலைகளுக்கு மேல் காங்கிரஸ் காரர்களின் வெள்ளைக் குல்லாய் அணிந்த அனைவருக்கும் நன்கு அறிமுகமான ஒருவர் லத்தியைச் சுழற்றி கலவரக்காரர்களைத் தாக்கியதையும் வசைமாரி பொழிந்ததையும் அவர் பார்த்தார். தனது இந்தச் செயல்களால், அவருக்குப் பின்னால் செயலற்று நிற்கும் காவலர்களைத் தூண்டிவிட அவர் முயற்சி செய்தார். அவர் ஜவஹர்லால் நேரு - பிரதம மந்திரி.

நகரம் முழுவதும் இதே போன்ற தாக்குதல்களை நடத்த, ஜொலிக்கும் நீல நிறத் தலைப்பாகைகள் அணிந்த அகாலி சீக்கியப் போராளிகளுக்கும்,

நெற்றியைச் சுற்றி கைக்குட்டைகளால் கட்டியிருந்த ஆர்.எஸ்.எஸ்.எஸ் காரர்களுக்கும் இந்தத் தாக்குதல் ஒரு சமிக்ஞையாகவே இருந்தது. பழைய டில்லியின் காய்கறிச்சந்தையில், ஆயிரக்கணக்கான முஸ்லீம்களின் காய் கனி கடைகளுக்குத் தீவைக்கப்பட்டன. ஹுமாயூன் பேரரசருக்கான சலவைக் கல் சமாதிக்கும், அக்பரின் படைத்தளபதிக்கான செங்கல் கல்லறைக்கும் அருகே புது டில்லியின் லோடி காலனியில் முஸ்லீம் சிவில் ஊழியர்களின் வீடுகளுக்குள் புகுந்த சீக்கிய கும்பல் கண்ணில் பட்ட ஒவ்வொருவரையும் கசாப்பு செய்தது.

இங்கிலாந்தின் ஆட்சியாளர்கள் எங்கிருந்து நிர்வாகம் செய்தார்களோ அந்த வீடுகளைச் சுற்றியிருந்த பசுமையான புல்வெளிப்பரப்பில் நண்பகலுக்குள் அவர்களால் கொல்லப்பட்டவர்களின் உடல்களை வீசியெறிந்தார்கள். அன்று இரவு விருந்து சாப்பிடுவதற்காக பழைய டில்லியிலிருந்து புது டில்லிக்குக் காரில் பயணம் செய்த பெல்ஜியம் நாட்டுத் தூதர், அவரது பாதைநெடுக எழுபது உடல்களை எண்ணினார். பழைய நகரின் இருளடைந்த சந்துகளுக்குள் புகுந்த சீக்கியர்கள் தங்களின் வேட்டைப்பொருளை வலைக்குக் கொண்டு வருவதற்காக 'அல்லாஹ் அக்பர்' என்று சத்தமிட்டார்கள். துரதிருஷ்டவசமாக இந்தக் குரலைக் கேட்டு பதிலுக்குக் குரல் கொடுக்க வெளியே வந்த முஸ்லீம்களின் தலைகள் வெட்டப்பட்டன.

ஆர்.எஸ்.எஸ்.எஸ். கும்பல் பர்தா அணிந்த ஒரு முஸ்லீம் பெண்ணைக் கடத்தியது. அந்தப் பெண் மீது பெட்ரோலை ஊற்றி, நேருவின் யார்க் சாலை வீட்டு வாசலுக்கு முன்னால் தீவைத்துக் கொளுத்தினார்கள். இந்தியாவில் முஸ்லீம்களைப் பாதுகாப்பதற்கான பிரதமரின் முயற்சிகளுக்கு தங்களின் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காகவே இப்படிச் செய்தார்கள். பின்னர், கூர்க்கா ராணுவ வீரர்களின் பாதுகாப்புடன், சுமார் இருபது முஸ்லீம் பெண்கள் நேருவின் தோட்டத்தில் தஞ்சம் புகுந்தனர்.

முஸ்லீமுக்கு அடைக்கலம் கொடுக்கும் எந்தவொரு வீடும் கொளுத்தப்படும் என்று சீக்கிய கும்பல் எச்சரிக்கை செய்தது. இதனால் நூற்றுக்கணக்கான இந்து, சீக்கியர், பாரசீகர், மற்றும் கிருத்தவர்களின் குடும்பங்களில் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்த ஊழியர்கள் வீதிகளுக்கு விரட்டப்பட்டனர். பின்னர் இவர்கள் சீக்கியர்களின் வாள்களுக்கு இரையானார்கள். அல்லது தற்காலிகமாக அமைக்கப்பட்ட அகதிகள் முகாமுக்கு வேக வேகமாக ஓடிப்போனார்கள்.

டில்லியில் அலை வீசிய அராஜகங்களால் பயனடைந்தவை, அந்த நகரை விட்டு ஓடிப்போன அல்லது படுகொலை செய்யப்பட்ட, டோங்கா வண்டி ஓட்டிய முஸ்லீம்களுடைய நோஞ்சான் குதிரைகள் மட்டும்தான். பேரரசின் தலைநகரில் காற்றோட்டமாய் இருக்க பிரிட்டிஷார் உருவாக்கிய பசுமையான புல்வெளிகளில், வண்டிகளிலிருந்து விடுபட்ட குதிரைகள் மகிழ்ச்சியுடன் சுதந்திரத்தைக் கொண்டாடின. அவற்றுக்கு அருகே மற்றொரு விலங்கு இருந்தது - புனிதப் பசு.

டில்லியை அலைக்கழித்த கலவரங்கள் அருகே இருந்த நகரை மட்டுமல்ல, அதைவிட அதிக நகரங்களை அச்சுறுத்தின. அவை அகில இந்தியாவையே அச்சுறுத்தின. டில்லியில் ஏற்படும் ஒழுங்குச் சீர்கேடு ஒட்டுமொத்த துணைக் கண்டத்தையும் பாதிக்கும். சரியாக அதுதான் நடந்து கொண்டிருந்தது. அந்த

நகரின் காவல்துறையில் பாதிக்கும் அதிகமாக இருந்த முஸ்லீம் காவலர்கள் அதிலிருந்து ஓடிப்போய் விட்டனர் அங்கே 900 காவலர்கள் மட்டுமே இருந்தார்கள். பஞ்சாப் சம்பவங்களின் தாக்கத்தால் ஏற்கெனவே தள்ளாடிக் கொண்டிருந்த நிர்வாகம் இப்போது ஸ்தம்பித்து நின்று விட்டது. நேருவின் அந்தரங்க செயலாளரான எச்.வி.ஆர். ஐயங்கார் பிரதமருக்கு வந்த தபால்களைத் தாமே தமது காரில் எடுத்துச் சென்று கொடுத்தார். நிலைமை அந்த அளவுக்கு மோசமாக இருந்தது.

செப்டம்பர் 4 பிற்பகலில், ஏற்கெனவே 1000க்கும் அதிகமானவர்கள் இறந்து விட்ட நிலையில், மவுண்ட்பேட்டனின் பிரிவினைத் திட்ட இறுதி நகலைத் தயாரித்த வி.பி.மேனன், முக்கியமான இந்திய சிவில் சர்வீஸ் ஊழியர்கள் சிலரின் ரகசியக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

டில்லியில் வலுவான நிர்வாகம் இல்லை. தலைநகரும் நாடும் சீரழிவை எதிர்நோக்கியுள்ளன என்பது அவர்களின் ஒருமனதான முடிவாக இருந்தது.

ஒரு சில மணி நேரத்துக்குப் பின், எல்லைப்பகுதியில் கட்டுக்கடங்காத கலகங்களைச் சமாளித்த மூத்த ராணுவ அதிகாரி கர்னல் எம்.எஸ்.சோப்ரா (M.S. Chopra)வும் அவருக்கேயுரிய பாணியில் இதே முடிவுக்கு வந்திருந்தார். ஒரு நண்பரின் வீட்டு மாடியில் நின்று கொண்டிருந்தபோது, இருள் கவிந்த அந்த இரவு நேரத்தில், அவரைச் சுற்றிலும் எந்திரத் துப்பாக்கிகளும், சிறு துப்பாக்கிகளும் ஓயாமல் வெடிக்கும் சத்தத்தை அவரால் கேட்க முடிந்தது.

எல்லைப் பகுதி 'டில்லிக்கு வந்து விட்டதாக' கர்னல் சோப்ரா நினைத்தார்.

## சிம்லா, 4 செப்டம்பர் 1947

மார்ச் மாதத்தில் பாலம் விமான நிலையத்தில் வந்திறங்கியபின் பணிகளால் களைத்துப் போன லூயி மவுண்ட்பேட்டனுக்கு முதல்முறையாக இப்போது தான் ஓய்வெடுக்க நேரம் கிடைத்தது. அவரின் தோள்களை அழுத்திக் கொண்டிருந்த சுமையை சுதந்திரம் இறக்கி வைத்தது. அந்த நள்ளிரவின் மணி ஒலித்த போது உலகின் மிகப்பெரும் சக்தி வாய்ந்த பொறுப்பிலிருந்து வெறும் அடையாளபூர்வமான ஒரு பொறுப்புக்கு அவர் மாற்றப்பட்டார். பஞ்சாபை உலுக்கிய வன்முறையால் அவர் மிகவும் கவலையடைந்தார். ஆனால் கவர்னர் ஜெனரல் என்கிற முறையில் அதற்காக எதையும் செய்யும் அதிகாரம் அவருக்கு இல்லை. அந்தப் பெரும் பொறுப்பு இப்போது இந்தியர்களின் கையில் இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு அவர்களின் நடவடிக்கைகளில் தலையிடு வதற்கு விருப்பமில்லாத அவர், முன் யோசனையுடன் டில்லியிலிருந்து புறப்பட்டு, இறந்து போன சாம்ராஜ்யத்தின் மேன்மை தங்கிய சொர்க்கமாக இப்போது விளங்கிய சிம்லாவுக்குச் சென்று விட்டார். வித்தியாசமான கவர்ச்சிமிக்க அந்தச் சிறிய நகரத்தை, அதற்குக் கீழேயுள்ள சமவெளிப்பகுதி களில் வீசிய புயலின் பாதிப்பு இன்னும் தொடவில்லை. ஃபிர் மரங்களிலும் மற்ற அழகிய செடி கொடிகளிலும் மலர்கள் பூத்துக் குலுங்கின. பனி படர்ந்த இமய மலையின் சிகரங்கள், கோடைகாலப் பிற்பகுதியின் தெளிவான வெளிச்சத்தில் மின்னிக் கொண்டிருந்தன. இந்த கோடைகாலத் தலைநகரில் அறுபது ஆண்டுகளுக்கு முன் கிப்ளிங்கை மகிழச் செய்த அமெச்சூர் நாடகக் கலைஞர்

களின் 'ஜேன் வெளியே வருகிறான்' என்ற நாடகம் சிம்லாவின் கெயிட்டி அரங்கில் நடந்து கொண்டிருந்தது.

முன்னாள் வைஸ்ராய் ஒரு வகையில் அந்த கிப்ளிங் யுகத்தில் இருக்கும் போது பழங்கால வைஸ்ராய் விடுதியின் நூலகத்தில் இரவு 10 மணிக்கு தொலைபேசி மணி ஒலித்தது. அன்று செப்டம்பர் 4, வியாழக்கிழமை. தொலை தூரத்தில் உள்ள ரைன் நதிக்கரையில் இப்போது அவர் சஞ்சரித்தார். ஜெர்மனியில் உள்ள ஹெஸ்ஸே (Hesse), பிரஸ்ஸியாவில் (Prussia) உள்ள சேக்ஸ் - கோபர்க் (Saxe - Coburg) ஆகியவற்றின் வழியாக, குடும்ப உறவு என்ற கிளைகளில் ஏறி அவர் தனது வம்சாவளிப் பட்டியலைத் தயாரித்துக் கொண்டிருந்தார். இது அவருக்குப் பிடித்தமான பொழுது போக்கு.

அவரை அழைத்தவர் வி.பி.மேனன். இந்தியாவில் அவரது யோசனைக்கு மதிப்பளித்தது போல் மவுண்ட்பேட்டன் வேறெவருக்கும் மதிப்பளித்ததில்லை.

'யுவர் எக்சலென்சி, நீங்கள் அவசியம் டில்லி திரும்ப வேண்டும்' மேனன் சொன்னார்.

'ஆனால் வி.பி., இப்போதுதான் நான் அங்கிருந்து வந்திருக்கிறேன். எதிலாவது நான் கையெழுத்திட வேண்டுமென்று எனது அமைச்சரவை நினைத்தால், அதனை இங்கே அனுப்பச் சொல்லுங்கள். நான் கையெழுத்திடுகிறேன்' மறுப்புத் தொனியில் மவுண்ட்பேட்டன் கூறினார்.

'விஷயம் அதுவல்ல' மேனன் தொடர்ந்தார். ' நீங்கள் புறப்பட்டுச் சென்றதிலிருந்து இங்கு நிலைமை மிக மோசமாகியுள்ளது. டில்லியிலேயே பிரச்சனை வெடிக்கத் துவங்கிவிட்டது. அது எவ்வளவு தூரம் செல்லும் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. பிரதம மந்திரியும், துணை பிரதம மந்திரியும் மிகவும் கவலையடைந்துள்ளனர். நீங்கள் திரும்பி வருவது அவசியம் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.'

'ஏன்?' மவுண்ட்பேட்டன் வினவினார்.

'இப்போது உங்களின் ஆலோசனையை விட மேலான ஒன்று அவர்களுக்குத் தேவைப்படுகிறது. அவர்களுக்கு உங்களின் உதவி தேவை' மேனன் சொன்னார்.

'வி.பி. அவர்களுக்கு அது தேவையென்று நான் நினைக்கவில்லை. அவர்கள் இப்போது தான் சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள். நாட்டின் அரசியல் சட்டப்படியான தலைவர் திரும்பி வந்து தேவையின்றி பிரச்சனைகளில் தலையிட வேண்டும் என்ற அவர்களின் விருப்பம் சரியல்ல. நான் வரப்போவதில்லை. அவர்களிடம் சொல்லி விடுங்கள்' மவுண்ட்பேட்டன் தெரிவித்தார்.

'ரொம்ப நல்லது. நான் சொல்லி விடுகிறேன். ஆனால் பின்னர் உங்கள் மனதில் மாற்றம் ஏற்பட்டால் அது பயனற்றுப் போகும். இருபத்து நான்கு மணி நேரத்தில் நீங்கள் வரவில்லையென்றால் பிறகு வருவது பற்றி கவலைப்பட வேண்டாம். அது மிகவும் காலம் கடந்ததாகி விடும். நாம் இந்தியாவை இழந்திருப்போம்' மேனன் பதிலளித்தார்.

தொலைபேசியின் மறுமுனையில் நீண்ட அசைவற்ற அமைதி நிலவியது. பிறகு மிகவும் நிதானமாக மவுண்ட்பேட்டன் கூறினார்: 'சரி வி.பி. நீங்கள் வயது முதிர்ந்த பிடிவாதக்காரர். ஜெயித்து விட்டீர். நான் வருகிறேன்.'

## *புது டில்லி, 6 செப்டம்பர் 1947*

*1947 செப்டம்பர் 6 சனிக்கிழமை காலை லூயி மவுண்ட்பேட்டன் அறையில் தொடங்கிய கூட்டத்தின் முடிவுகள் அடுத்த கால்நூற்றாண்டு காலத்துக்கு கடைசி வைஸ்ராயின் வாழ்க்கையில் மிகவும் பத்திரமாய் பாதுகாக்கப்படும் ரகசியமாக இருந்தன. அன்றைக்கு எடுக்கப்பட்ட முடிவுகள் வெளியுலகத்துக்குத் தெரிந்திருந்தால், பிற்காலத்தில் உலகின் பெரும் புகழ் பெற்றவர்களில் ஒருவராக விளங்கிய இந்திய அரசியல் வித்தகர் ஒருவரின் வாழ்க்கையே அதனால் பாழாகியிருக்கும்.*

*அங்கே மவுண்ட்பேட்டன், நேரு, படேல் என மூன்றுபேர் இருந்தனர். இரண்டு இந்தியத் தலைவர்களும் சோகமாகவும் சோர்ந்து போயும் இருந்தார் கள். 'தண்டனைக்குள்ளான பள்ளிச் சிறுவர்கள் இருவரைப் போல்' அவர்கள் கவர்னர் ஜெனரலைப் பார்த்தனர். பஞ்சாபில் நிலைமை கட்டுக்கடங்காமல் போயிருந்தது. மக்களின் குடிபெயர்வு அவர்களின் பேரச்சத்தையும் கடந்து போய்க் கொண்டிருந்தது. இப்போது டில்லியில் ஏற்பட்ட வன்முறை தலைநகரையும் வீழ்த்திவிடும் அச்சத்தை ஏற்படுத்தியது.*

*'இதனை எப்படி நிறுத்துவது என்று எங்களுக்குப் புரியவில்லை' நேரு ஒப்புக் கொண்டார்.*

*'நீங்கள் பிடியை இறுக்க வேண்டும்' மவுண்ட்பேட்டன் அவரிடம் சொன்னார்.*

*'எப்படிப் பிடியை இறுக்குவது? எங்களுக்கு அனுபவம் இல்லை. எங்கள் வாழ்நாளின் முக்கியமான பகுதிகளை உங்களின் பிரிட்டிஷ் சிறைகளில் கழித்து விட்டோம். எங்களின் அனுபவம் போராட்டம் தானே தவிர நிர்வாகம் அல்ல. இயல்பான சூழ்நிலையில் நன்கு கட்டமைக்கப்பட்ட அரசாங்கத்தை மட்டுமே எங்களால் நிர்வகிக்க முடியும். ஆனால் முழுமையாய் சீர்குலைந்த சட்டம் ஒழுங்கு நிலைமையைச் சமாளிக்க எங்களால் முடியாது' நேரு பதிலளித்தார்.*

*பின்னர் கிட்டத்தட்ட நம்பமுடியாத ஒரு வேண்டுகோளை அவர் முன் வைத்தார். தனது வாழ்நாள் முழுவதையும் சுதந்திரப் போராட்டத்துக்காக அர்ப்பணித்த அந்தப் பெருமை மிகு மனிதர், நிலைமையின் தன்மையையும் அவரது பெருந்தன்மையையும் கணக்கில் கொண்டே அதனைத் தெரிவித்திருக்க வேண்டும். மவுண்ட்பேட்டனின் நிர்வாகத் திறமையையும் விரைந்து முடிவெடுக்கும் ஆற்றலையும் கண்டு அவர் வியந்திருக்கிறார். இந்தியாவுக்கு இப்போது அந்தத் திறமைகள் தேவைப்படுகின்றன என்று அவர் கருதினார். அது கிடைப்பதற்குத் தடையாகத் தனது சுயமரியாதை இருக்கக்கூடாது என்று நேரு என்ற அந்த மாமனிதர் நினைத்தார்.*

*'போர்க்களத்தில் உயர்ந்த தளபதியாக நீங்கள் பணியாற்றிய போது நாங்கள் பிரிட்டிஷாரின் சிறையில் இருந்தோம்' அவர் சொன்னார். 'தொழில் ரீதி யாகவே நீங்கள் உயர்ந்த நிர்வாகி. லட்சக்கணக்கானவர்களுக்குத் தலைமை தாங்கியிருக்கிறீர்கள். காலனியாதிக்கம் எங்களுக்கு அளிக்க மறுத்த அனுப வத்தையும் அறிவையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். ஆங்கிலேயரான நீங்கள் எங்கள் வாழ்நாள் முழுவதும் இங்கேயே இருந்து விட்டு இப்போது நாட்டை*

எங்களிடம் விட்டு எளிதாக வெளியேறுவது முறையல்ல. நாங்கள் நெருக்கடியில் இருக்கிறோம். எங்களுக்கு உதவி தேவைப்படுகிறது. இந்த நாட்டை நீங்களே ஆள முடியுமா?'

'ஆமாம்' படேல் வழிமொழிந்தார். நேருவின் பக்கத்தில் இருந்த உறுதிமிக்க யதார்த்த வாதியான அவர் சொன்னார், 'அவர் சொல்வது சரிதான். நீங்கள் இந்தப் பொறுப்பை நிச்சயம் ஏற்க வேண்டும்'

மவுண்ட்பேட்டன் திகைத்துப் போனார். 'கடவுளே! நான் இப்போது தான் இந்த நாட்டை உங்களிடம் ஒப்படைத்தேன். அதனை மீண்டும் எடுத்துக் கொள்ளுமாறு நீங்கள் இருவரும் என்னிடம் கேட்கிறீர்களே!' அவர் கூறினார்.

'நீங்கள் நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும்' நேரு சொன்னார். 'நீங்கள் இதன் பொறுப்பை ஏற்க வேண்டும். நீங்கள் எது சொன்னாலும் கேட்க நாங்கள் உறுதி கூறுகிறோம்.'

'ஆனால் இது பயங்கரமானது' மவுண்ட்பேட்டன் சொன்னார். 'இந்த நாட்டை நீங்கள் மீண்டும் என்னிடம் ஒப்படைக்கிறீர்கள் என்பது தெரிந்தால் அத்தோடு உங்கள் அரசியல் முடிந்து விடும். ஒரு பிரிட்டிஷ் வைஸ்ராயை இந்தியர்கள் ஆதரித்து அவரிடம் மீண்டும் பொறுப்பை ஒப்படைப்பார்களா? நடக்காத காரியம்.'

'நல்லது. அதனை மறைத்து வைக்க நாங்கள் ஒரு வழி கண்டு பிடிக்கிறோம். ஆனால் நீங்கள் அதைச் செய்யாவிட்டால் எங்களால் சமாளிக்க முடியாது' நேரு சொன்னார்.

மவுண்ட்பேட்டன் சற்று நேரம் யோசித்தார். ஒரு சவாலை அவர் விரும்பினார்; அதிலும் இது மிகவும் கடுமையானது. தனிப்பட்ட முறையில் நேரு மீது வைத்திருந்த மதிப்பு, இந்தியா மீதான அவரின் நேசம், அவரின் பொறுப்புணர்வு ஆகியவற்றின் காரணமாக தப்பிக்க அவருக்கு வழியில்லாமல் போனது.

'சரி' அவர் ஒப்புக் கொண்டார். கடற்படை தளபதி மீண்டும் தனது பணிக்குத் திரும்பினார். 'நான் அதைச் செய்கிறேன். எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் நான் அறிவேன். ஆனால் இது பற்றி யாருக்கும் தெரியக்கூடாது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். நீங்கள் இந்த வேண்டுகோளை விடுத்தது பற்றியும் யாருக்கும் தெரியவேண்டாம். அமைச்சரவையின் அவசர காலக்குழுவை அமைக்கும்படி நீங்கள் இருவரும் என்னைக் கேட்டுக் கொள்ள வேண்டும். நானும் அதை ஏற்பேன். இதை நீங்கள் செய்ய முடியுமா?'

' செய்கிறோம்' நேருவும் படேலும் பதிலளித்தனர்.

'சரி' மவுண்ட்பேட்டன் சொன்னார். 'நீங்கள் என்னைக் கேட்டுக் கொண்டீர்கள். இப்போது, பொறுப்பை ஏற்றுக் கொள்ள நீங்கள் என்னை அழைப்பீர்களா?'

'ஆம்!' இரண்டு இந்தியர்களும் பதிலளித்தனர். மவுண்ட்பேட்டனின் வேகமான நடவடிக்கை கண்டு ஏற்கெனவே வியப்படைந்த அவர்கள் 'நாங்கள் உங்களை அழைக்கிறோம்' என்றனர்.

'அவசர காலக்குழு' மவுண்ட்பேட்டன் தொடர்ந்தார். 'நான் நியமிக்கும் நபர்களை மட்டுமே கொண்டிருக்க வேண்டும்.'

'ஓ, மொத்த அமைச்சரவையையும் நீங்கள் வைத்துக் கொள்ளலாம்' நேரு மறுப்புத் தெரிவித்தார்.

'அறிவீனம்! அது குழப்பத்தையே ஏற்படுத்தும்' மவுண்ட்பேட்டன் தெரிவித்தார். 'முக்கியமானவர்களை, உண்மையிலேயே காரியம் செய்யும் நபர்கள், விமானப் போக்குவரத்து இயக்குநர், ரயில்வே இயக்குநர், இந்திய மருத்துவ சேவை அமைப்பின் தலைவர் ஆகியோரையே நான் விரும்புகிறேன். தொண்டு அமைப்புகள் மற்றும் செஞ்சிலுவை சங்கப் பொறுப்பை எனது மனைவி ஏற்றுக் கொள்வார். குழுவின் செயலாளராக எனது மாநாட்டுச் செயலாளர் ஜெனரல் எர்ஸ்கின் க்ரம் இருப்பார். கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளை ஒருவர் பின் ஒருவராக பிரிட்டிஷ் தட்டச்சர்களே தட்டச்சு செய்வார்கள். எனவே கூட்டம் முடியும் வரை அவர் எப்போதும் தயார் நிலையிலேயே இருக்க வேண்டும். இதையெல்லாம் செய்வதற்குத்தானே என்னை நீங்கள் அழைத்திருக்கிறீர்கள்?'

'ஆமாம், நாங்கள் உங்களை அழைத்திருக்கிறோம்' நேரும் படேலும் பதிலளித்தனர்.

'அந்தக் கூட்டங்களின் போது' மவுண்ட்பேட்டன் தொடர்ந்தார், 'பிரதம மந்திரி எனக்கு வலது பக்கத்திலும், துணைப் பிரதம மந்திரி எனக்கு இடது பக்கத்திலும் அமர வேண்டும். நான் எப்போதும் உங்களுடன் கலந்தாலோசித்தே தீர்மானங்களைக் கொண்டு வருவேன். ஆனால் நான் எதைச் சொன்னாலும் அது பற்றி என்னுடன் நீங்கள் வாதம் செய்யக்கூடாது. அதற்கெல்லாம் நமக்கு நேரமிருக்காது. நான் சொல்வேன்; ''என் மூலம் இதனை செயல்படுத்த நீங்கள் விரும்புவதாக நான் நம்புகிறேன்'' நீங்கள் சொல்ல வேண்டும் ''ஆம்! தயவு செய்து செய்யுங்கள்'' அவ்வளவு தான். இதற்கு மேல் எதையும் நீங்கள் சொல்வதை நான் விரும்பவில்லை.'

'சரி, ஏதேனும் நாங்கள்.... படேல் மறுதலிப்பாக ஏதோ சொல்லத் தொடங்கினார்.

'இல்லை. அதெல்லாம் வேலைகளைத் தாமதப்படுத்தும். இந்த நாட்டை நான் ஆட்சி செய்ய நீங்கள் விரும்புகிறீர்களா இல்லையா?' மவுண்ட்பேட்டன் சொன்னார்.

'சரி சரி' மூத்த அரசியல் வாதி முணு முணுத்தார். 'நாட்டை நீங்களே ஆளுங்கள்.'

அடுத்த பதினைந்து நிமிடங்களில் அந்த மூன்று மனிதர்களும் ஒன்று சேர்ந்து, அவசர காலக்குழுவின் உறுப்பினர்கள் பட்டியலைத் தயாரித்தார்கள்.

'நண்பரே! நமது முதல் கூட்டத்தை இன்று மாலை ஐந்து மணிக்கு நடத்துவோம்' மவுண்ட்பேட்டன் சொன்னார்.

முப்பதாண்டு காலப் போராட்டங்களுக்குப் பின் - பல ஆண்டுகால வேலை நிறுத்தங்கள், மக்கள் இயக்கங்களுக்குப் பின் பிரிட்டிஷ் துணிகள் சொக்கப் பனைகள் போல் கொளுத்தப்பட்டபின் - எல்லாவற்றுக்கும் மேலாக சுதந்திரம் பெற்ற மூன்றே வாரங்களுக்குப் பின் கடைசி நேர சமாளிப்புக்காக இந்தியா மீண்டும் ஒரு முறை ஆங்கிலேயர் ஒருவரால் ஆளப்படவிருக்கிறது.

பதினான்கு

# வரலாற்றின் மாபெரும் புலம் பெயர்வு

## *புது டில்லி, செப்டம்பர் 1947*

*வாழ்க்கைச் சக்கரத்தின் வியப்புக்குரிய சுழற்சி லூயி மவுண்ட்பேட்டனுக்கு மீண்டும் முந்தைய அவதாரத்தை அளித்திருக்கிறது. மீண்டும் அவர் தலைமைத் தளபதி ஆகியிருக்கிறார். திறமையோடு அந்தப் பணியை நிறைவேற்ற அவர் நன்கறிவார். அவசர காலக் குழுவுக்குத் தலைமையேற்பதற்கான அழைப்பை ஏற்ற சில மணி நேரத்திற்குள் பேரரசின் விழாக்காலங்களுக்கான பின்னணியில் வடிவமைக்கப்பட்டிருந்த சிவப்பு மண் சுற்களாலான லுயூட்டன்ஸ் (Luytens) அரண்மனையைப் போர்க்கால ராணுவத் தலைமையகம் போல் மாற்றி விட்டார்.*

*மவுண்ட்பேட்டனின் உதவியாளர் ஒருவர் குறிப்பிட்டது போல, நேருவும், படேலும் அவரது அலுவலக அறையைவிட்டுப் புறப்பட்ட போதே 'அனைத்துத் துயரங்களும் மறையத் தொடங்கி விட்டன.' பழைய வைஸ்ராயின் நிர்வாக சபை அறையைக் குழுக் கூட்டங்களுக்கான அறையாக மவுண்ட் பேட்டன் மாற்றியமைத்தார். பக்கத்தில் இருந்த இஸ்மேயின் அலுவலகத்தை வரைபடங்கள் மற்றும் உளவுத் தகவல் மையமாக மாற்றிடுமாறு அவர் உத்தரவிட்டார். ராணுவத் தலைமையகத்திலிருந்து நேராகக் கொண்டு வந்து தரப்பட்ட, பஞ்சாப் பற்றிய சிறந்த வரைபடங்கள் அவரிடம் இருந்தன. இந்தியாவில் இருக்கும் பஞ்சாபின் பாதியளவு மாகாணத்தின் மீது, அதிகாலையிலிருந்து அந்திசாயும் நேரம்வரை பறந்து, வேவு பார்க்கும் பணிகளைத் துவக்குமாறு விமானப்படைக்கு அவர் உத்தரவிட்டார். ஒவ்வொரு குழுவிலும் இடம் பெற்று வரும் அகதிகளின் அளவு, நீளம், பயண வேகம், அதன் பாதை ஆகியவை பற்றி மணிக்கொரு தடவை வானொலி மூலம் அறிக்கை அளிக்குமாறு விமானிகளிடம் கூறினார்.*

*ரயில்வே பாதைகள் தீவிர வான்வழி கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டன. தகவல்களைப் பெறுவதில் பேரார்வம் கொண்ட மவுண்ட்பேட்டன், அரசு இல்லத்திலிருந்து பஞ்சாபின் முக்கியப் பகுதிகள் அனைத்தையும் வானொலி வசதியுடன் இணைக்கும் வரைபடத்தைத் தயாரித்தார். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் பாதிப் பாதியாகப் பிரித்தளிக்கப்பட்டு ஏற்கெனவே உடைந்து போன பஞ்சாப் எல்லைப்படையின் தலைவராக இருந்த மேஜர் ஜெனரல்*

பீட்ரீஸ், உளவு மையத்தின் பொறுப்பை ஏற்கவிருந்தார்.* தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண ஒவ்வொருவரும் ஏதாவது செய்ய முடியும் என்று தீர்மானித்த அவர், தனது 17 வயது மகள் பமீலாவை ரீசுடன் பணி செய்வதற்கு அவரின் செயலாளராக நியமித்தார்.

மவுண்ட்பேட்டன் அவசரகாலக் குழுவின் முதல் கூட்டத்தை நடத்தினார். அவரது உளவு மையத்தைச் சுற்றிலும் தொங்கவிடப்பட்டிருந்த வரைபடங்கள், விளக்க அட்டைகள் ஆகியவற்றின் மூலம் நிகழ்ந்து வரும் பயங்கரத்தின் உண்மை நிலவரத்தை இந்தியத் தலைவர்களுக்கு அவர் விளக்கினார். முதன் முறையாக இப்படிப்பட்ட விளக்கப் படங்களைப் பார்த்த பலருக்கு அவர்களை எதிர்நோக்கும் பிரச்சனையின் ஆழம் தெரிந்தது. மவுண்ட்பேட்டனின் புத்திசாலித்தனமான பத்திரிகைத் தொடர்பாளர் ஆலன் கேம்ப்பெல் - ஜான்சன், அவர்களின் முகபாவம் பற்றி இப்படிக் கூறினார்: 'அளவிட முடியாத ஒன்றின் முன் குழப்பத்தோடும் செய்வதறியாதும் அமர்ந்திருந்தனர்.' 'சொல்ல முடியாத சோகத்துடனும் அமைதியாகவும்' நேரு காணப்பட்டார்; படேல் 'அமைதி யற்று, ஆழ்ந்த கோபமும் விரக்தியும் கொண்டு' கொதித்துப் போயிருந்தார்.

மவுண்ட்பேட்டன் செயலில் இறங்கி விட்டார். அடுத்து வந்த வாரங்களில் அந்த மேசையைச் சுற்றி அமர்ந்திருந்தவர்கள் இந்தியாவின் கடைசி வைஸ்ராயுடைய இனிய கவர்ச்சிகரமான முகத்திலிருந்து வேறுபட்ட புதிய முகத்தைக் கண்டனர். இப்போது அதில் ஆதிக்கம் செலுத்தியது கடுமையும், சாதிக்க வேண்டும் என்ற வேகமும் தான். கூட்டம் முடியும் போது குழுவின் முதல் முடிவுகளை அவர்களுக்கு வழங்க அரசு இல்லத் தட்டச்சர்கள் அவற்றின் நகல்களுடன் தயாராய் இருந்தனர்; எஞ்சியவை மோட்டார் சைக்கிள் மூலம் ஒரு மணி நேரத்துக்குள் அவர்களின் வீடுகளில் சேர்ப்பிக்கப்படும். அவர்களுக்கு இடப்பட்ட உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்வது அடுத்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் முதல் விஷயமாக இருக்கும் என்று அவர் சொன்னார்.

அந்த அறையிலிருந்த தலைசிறந்த மனிதர்கள் மவுண்ட்பேட்டனின் கோபத்துக்கு ஆளானார்கள். ஏனெனில், அவரின் வேகத்துக்கு அவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. நேருவின் முதன்மைத் தனிச் செயலாளர் எச்.வி.ஆர். ஐயங்கார் நினைவு கூர்ந்தார்: ஒரு நாள் விமானப் போக்குவரத்து இயக்குநர்,

---

* இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசுகளின் வற்புறுத்தல்களால் பஞ்சாப் எல்லைப்படை இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அந்த ஆயுதந்தாங்கிய படையினர் தங்களின் கட்டுப்பாட்டில் இல்லாமல் மூன்றாவது நபரின் அதிகாரத்துக்கு உட்பட்டிருந்தால், பஞ்சாபில் அமைதியை மீட்பது சாத்தியமில்லாதது என்று இருவருமே கூறினார்கள். அவர்களின் வற்புறுத்தல் இன்னொரு பெரிய நெருக்கடியை விரைந்து ஏற்படுத்தியது. இந்தப் படையைப் பிரித்தால், தாம் ராஜினாமா செய்யப் போவதாக ஆச்சின் லெக் அச்சுறுத்தினார். இந்த ஆயுதம் தாங்கியப் படைகளை வகுப்புவாத நோக்கங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று இரு நாடுகளும் நினைப்பதாக ஆச்சின் லெக் நம்பினார். இந்திய ராணுவம் பற்றி நன்கறிந்த இஸ்மே பிரபு இப்படிக் குறிப்பிட்டார்: 'புதிய டொமினியன்களின் அரசியல் நடவடிக்கைகளைக் கருதாமல் ஆச்சின்லெக் அவரது கருத்திலேயே பிடிவாதமாக இருப்பாரானால், படையைப் பிரித்து விட்டு அவரது ராஜினாமாவை எதிர் கொள்ளலாம் என்று நான் உறுதியாக நம்பினேன்' இருப்பினும் 'இந்தச் சிக்கலான தருணத்தில் அவரை ராஜினாமா செய்ய அனுமதிப்பது அழிவையே ஏற்படுத்தும்' என்று மவுண்ட்பேட்டன் கூறினார்.

பஞ்சாபுக்கு உரிய காலத்தில் அவசர கால மருந்துப் பொருள்களைக் கொண்ட விமானத்தை அனுப்பி வைக்கத் தவறிவிட்டார்.

'மிஸ்டர் டைரக்டர்! நீங்கள் இந்த அறையை விட்டுச் செல்ல வேண்டும். உடனடியாக விமான நிலையத்துக்குப் போக வேண்டும். தனிப்பட்ட முறையில் அந்த விமானத்தை நீங்கள் பார்க்கிற வரை வேறெங்கும் செல்லவோ, உண்ணவோ, உறங்கவோ கூடாது. போங்கள். அதன் புறப்பாடு பற்றி திரும்பி வந்து எனக்குத் தகவல் கொடுங்கள்' என்று மவுண்ட்பேட்டன் கண்டிப்புடன் கூறினார். மனம் புண்பட்ட அந்த மனிதர் கவலையோடு அறையை விட்டு வெளியேறினார். ஆனால் விமானம் புறப்பட்டுச் சென்றது.

மவுண்ட்பேட்டன் எவ்வளவு கடுமையாக நடந்து கொள்வார் என்பதைக் குழுவின் முதல் கூட்டத்திலேயே திகைப்புடன் காண முடிந்தது. ரயில் வண்டிகளில் பாதுகாப்புக்காகச் செல்லும் காவலர்கள் தாக்குதல்காரர்கள் மீது சுடத் தவறினால் அதற்கான தீர்வு அவரிடம் இருந்தது. எந்த ஒரு நேரத்திலும் ரயில் வண்டியின் மீது வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தப்பட்டால் அதன் காவலர்களைச் சுற்றி வளைத்துக் கைது செய்யுங்கள். அவர்களில் காயம் அடைந்தவர்களைத் தனியே ஒதுக்கி விடுங்கள். மற்றவர்களை ராணுவ நீதிமன்ற விசாரணை நடத்தி அந்த இடத்திலேயே சுட்டுவிடுங்கள். இதுதான் காவலர்களின் ஒழுக்கத்தில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அந்தக் கூட்டத்தில் அவர் கூறினார்.

டில்லியின் நிலைமை மவுண்ட்பேட்டனுக்கு மிகவும் கவலையளிப்பதாக இருந்தது. 'டில்லியில் நாம் அமிழ்ந்து போனால் நம்மோடு ஒட்டு மொத்த நாடே அமிழ்ந்து போகும்' என்று அவர் சொன்னார். முதலில் இந்த நகருக்கு அனைத்து ஆதாரங்களையும் கிடைக்கச் செய்ய வேண்டும். நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குள் தலைநகருக்குக் கூடுதல் படைகளைக் கொண்டு வருமாறு ராணுவத்துக்கு அவர் உத்தரவிட்டார். அவருக்குரிய கவர்னர் ஜெனரலின் மெய்க்காப்பாளர்களையே பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தினார். மக்கள் பயன்படுத்தும் வாகனங்களைக் கேட்டுப் பெற்று, வீதிகளில் சிதறிக் கிடந்த உடல்களைச் சேகரித்து எரித்துவிட ஏற்பாடு செய்தார். ஞாயிறு மற்றும் பொது விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டன. அரசு ஊழியர்கள் மீண்டும் தங்களின் அலுவலகங்களுக்கு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மீண்டும் தொலை பேசி அமைப்புகள் செயல்படத் தொடங்கின. எல்லாவற்றுக்கும் மேலாக சீக்கிய மற்றும் இந்து அகதிகளை தலைநகரிலிருந்து வெளியேற்றவும் மேலும் அதிகமாக அகதிகள் உள்ளே வராமல் தடுக்கவுமான திட்டத்தைத் துவக்குமாறு உத்தரவிட்டார்.

வட இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பைச் சமாளிக்க, குழுவின் முயற்சிகள் பயனளிக்க சில வாரங்கள் தேவைப்பட்டிருக்கும். ஆனால் ஒரே இரவில் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. 'மாட்டு வண்டி வேகத்திலிருந்து ஜெட் விமான வேகத்தை அது அடைந்தது' என்று குழுவில் பங்கேற்ற இந்தியர் ஒருவர் குறிப்பிட்டார்.

அடுத்த இரண்டு மாதங்களுக்கு மனிதத் துயரத்தின் இணையற்ற அலைவீச்சு பஞ்சாப் முழுவதையும் துடைத்தெறிந்தது. இந்தச் சோகம் அரசு இல்லத்தின்

வரைபடங்களில், எறும்புகள் ஊர்ந்து செல்லும் தொகுதி போல சிறிய சிவப்புக் கொண்டை குண்டூசிகளால் குறித்துக் காட்டப்பட்டது. மனிதர்களின் கற்பனையையும் மிஞ்சிய, மனித உணர்வுகளின் தாங்கும் சக்திக்கு அப்பாற்பட்ட, பெரும் துன்பத்தையும் துயரத்தையும்தான் அந்தக் குண்டூசி முனைகள் காட்டின. இவற்றில் ஒன்று மட்டும் 8,00,000 மக்கள் அகதிகளாக வருவதைக் காட்டியது. மனித மனத்தால் எண்ணிப்பார்க்கவும் முடியாத, மனித குல வரலாற்றில் இதுவரைக் கண்டிராத மிகப்பெரிய அகதிகளின் தொகையாகும் அது. ஏதோ ஒரு மாபெரும் துயரம் காரணமாக, கிளாஸ்கோ (Glasgow) நகரைச் சேர்ந்த அனைத்து ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் மான்செஸ்டர் (Manchester) நகருக்குக் குடிபெயர்ந்து செல்லும் நிர்ப்பந்தம் ஏற்பட்டு அவர்கள் நடந்தே செல்லும் காட்சி போல் அது இருந்தது.

தங்களின் கோட்பாடுகளுக்கு முற்றிலும் எதிரான இந்த மாபெரும் குடி பெயர்வை ஜின்னா, நேரு, லியாகத் அலிகான் ஆகியோர் துவக்கத்தில் எதிர்த்தார்கள். பீதியடைந்திருக்கும் மக்களை அவரவர் பகுதிகளிலேயே இருக்குமாறு வலியுறுத்தினார்கள். இருப்பினும் பிரச்சனையின் கடுமை அவர்களை வென்று விட்டது. சுதந்திரத்தின் விலையாக இந்த மாபெரும் மக்கள் பரிவர்த்தனையை அவர்கள் அனுமதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பஞ்சாபின் இரண்டு பக்கங்களிலும் இருந்த சிவில் நிர்வாக அதிகாரிகள் இந்தப் பரிவர்த்தனையை விரைவுபடுத்தவே விரும்பினார்கள். தங்களை நோக்கி வெள்ளமென வரும் மனிதர்களுக்கு இடமளிப்பதில் அவர்கள் கவனம் செலுத்தினார்கள். அவர்களின் நேசத்துக்குரிய மாகாணத்தில் இன்னொரு துயரத்தை ஏற்படுத்தும் மழைக்காலத்துக்கு முன் இதனை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் அவர்கள் நினைத்தனர்.

ஒரு போர்ச் செயலுக்குத் திட்டமிடும் அதிகாரிகள் போல், இறுக்கமான சீருடையணிந்த ஆண்களும் பெண்களும் ராணுவ மிடுக்கோடும் திறனோடும் அரசு இல்ல வரைபடங்கள் அறையில் நடமாடிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு நாளும் வளைந்து நெளிந்த பாதையில் முன்னேறிவரும் அகதிகளின் ஒவ்வொரு அணி பற்றியும் அந்த வரைபடத்தில் மேலும் சிவப்புக் கொண்டை குண்டூசிகள் குத்திப் பதிவு செய்யப்பட்டன.*

---

* அரசு இல்லத்தில் மவுண்ட்பேட்டன் ஏற்படுத்தியிருந்த பயனுள்ள, தீர்க்கமான செய்கைகள் காந்தியையும் கவர்ந்திருந்தன. கடைசியாக புதுடில்லிக்கு வந்து சேர்ந்த அந்த 'ஒரு மனிதர் எல்லைப் பாதுகாப்புப் படை' முன்னாள் வைஸ்ராயை சந்திப்பதற்காக வந்திருந்தது. புதிய தலைமையகத்தைச் சுற்றிக் காண்பித்த பின் அவர் அலுவலக அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இங்கே தான் அவர் முன்பு, இந்தியப் பிரிவினை வேண்டாம் என்று மவுண்ட் பேட்டனிடம் மன்றாடினார்.

'நண்பரே! நீங்கள் காந்தியின் குரலை விடுத்து கடவுளின் குரலைக் கேட்டதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்' அவர் சொன்னார்.

'நல்லது காந்திஜி' சற்று வியப்புடன் மவுண்ட்பேட்டன் பதிலளித்தார். 'உங்களுடையதை விட அவனது குரலை மட்டுமே அடிக்கடி கேட்கிறேன். ஆனால் எந்த விஷயத்தில் உங்களுடையதற்கு எதிராக நான் கடவுளின் குரலைக் கேட்டிருக்கிறேன்?'

'வயதான ஒரு கோமாளியான காந்தி இந்த இல்லத்தைத் தவிர்க்குமாறு உங்களிடம் வற்புறுத்திய போது அவரின் குரலைக் கேட்காதே என்று கடவுளின் குரல் கூறியிருக்கலாம்.'

பாதுகாப்புத் தேடி பனி மூட்டம் நிறைந்த இரவு நேரத்தில் மேலும் பல மைல் தூரம் நடந்து வரும் அகதி மக்களை அழைத்து வருவதற்காக ஒவ்வொரு நாளும் அதிகாலை வேளையில் கண்காணிப்பு விமானிகள் விமானங்களைக் கொண்டு செல்வார்கள். மனிதர்களின் கண்கள் இதுவரை காணாத அளவுக்கு, அந்த செப்டம்பர் மாத காலை வேளைகளில், அவர்களது விமானங்களின் இறக்கைகளுக்குக் கீழ், அகதிகள் பரந்து கிடப்பதை அவர்கள் பார்ப்பார்கள். ஃப்ளைட் லெஃப்டினன்ட் பட்வந்த் சிங் (Patwant Sing) என்ற ஒரு விமானி தனது அனுபவத்தை இப்படி நினைவு கூர்ந்தார்: 'எறும்புக் கூட்டம் போல மனிதர்கள் சாரிசாரியாக நடந்து சென்றது மேற்கத்திய திரைப்படங்களில் மாடு விரட்டும் காட்சிகளில் இடம் பெற்ற மாடுகள் போல் தெரிந்தது. சுற்றியுள்ள கிராமங்களில் எரிந்த நெருப்புகளுக்கிடையே அவர்கள் விரைந்து செல்வதை நான் பார்த்திருக்கிறேன்.'

பகல் நேரங்களில், ஆயிரக்கணக்கான எருமைகளும், காளைகளும் எழுப்பும் தூசிப்படலம், வெளிறிய மேகம் போல் ஒவ்வொரு அகதிகள் அணி மீதும் படிந்திருக்கும். அகதிகள் முன்னேறி வருவதைக் காட்டுவது போல் அந்தத் தூசிப்படலம் அடிவானத்தில் பரவியிருக்கும். இரவு நேரங்களில், தங்களிடம் உள்ள கொஞ்சம் பொருள்களைக் கொண்டு உணவு சமைக்க ஆயிரக் கணக்கான சிறிய அடுப்புகளை அவர்கள் மூட்டுவார்கள். இந்த அடுப்புகளில் எரியும் நெருப்பின் ஒளியும், அவர்களுக்கு மேல் சூழ்ந்திருக்கும் புகை மண்டலமும் கலந்து மங்கலான செந்நிற ஒளிவட்டங்களை உருவாக்கும்.

ஆற்றலிழந்து கவலையில் ஆழ்ந்த அந்த மக்கள் கூட்டத்துக்கு மத்தியில் சென்று பார்த்தால்தான் அதன் பயங்கரம் நிதர்சனமாகும். கண்களும் கழுத்துகளும், தூசிப்படலத்தால் மூடிக்கிடந்த, கற்கள் குத்தி அல்லது தாரால் கொப்பளித்துப் பாதங்கள் புண்ணாகியிருந்த, பசியாலும் தாகத்தாலும் துன்பப்பட்ட, சிறுநீர், வியர்வை, மலக்கழிவு ஆகியவற்றின் நாற்றத்துடன் உடை உடுத்தியிருந்த அகதிகள் மவுனமாக நடந்து முன்னேறிக் கொண்டிருந்தார்கள். அழுக்கேறிய வேட்டிகள், சேலைகள், தொளதொளப்பான நிஜார்கள், அறுந்து தைத்த செருப்புகள் ஆகியவற்றுடன் நடந்தார்கள். சில நேரங்களில் ஒரு காலில் மட்டும் ஷூ இருக்கும். சில நேரங்களில் அதுவும் இருக்காது. வயதான பெண்கள் பிள்ளைகளையும் கருவுற்ற பெண்கள் அவரவர் கணவரையும் பற்றிக் கொண்டு நடந்தார்கள். நடக்க முடியாத மனைவியரையும், அன்னையரையும் தங்களின் தோள்களில் சுமந்தனர் ஆண்கள். பெண்கள் தங்களின் குழந்தைகளைச் சுமந்தார்கள். இந்தச் சுமைகளை அவர்கள் சுமந்தது ஒரு மைல் இரண்டு மைல் தூரமல்ல; நூறு, இருநூறு மைல் தூரம். அவர்களுக்கு வலுவளிக்க சத்தான உணவில்லாமல், சப்பாத்தியையும், கொஞ்சம் தண்ணீரையும் குடித்தபடி நாள் கணக்கில் நடந்தார்கள்.

ஊனமுற்றவர்கள், நோயாளிகள், இறந்து கொண்டிருப்பவர்கள் போன்றோரை, கொம்பின் மத்தியில் கட்டப்பட்ட துணித் தொட்டிலில் போட்டு அந்த

---

மகாத்மா சொன்னார், 'இப்போது இதை நான் இந்தியாவின் இதயமாகப் பார்க்கிறேன். இங்கிருந்து தான் இந்தியா நிர்வகிக்கப்படவுள்ளது. புயலில் இதுதான் புகலிடம். இதனை நாங்கள் பாதுகாக்க வேண்டும். உங்களுக்குப் பின் வருவோர் அனைவரும் இங்கே வாழ வேண்டும்.'

ஒவ்வொரு முனையையும் மகன் அல்லது நண்பர் தோளில் சுமந்து சென்றார்கள். ஒரு மனிதரின் எடைக்கும் அதிகமாகச் சுமைகளை ஏற்றியபோது கட்டப்பட்ட கொம்புகள் ஒடிந்தன. தங்களின் வீடுகளிலிருந்து எடுத்து வந்த சில சமையல் பாத்திரங்கள், சிவபெருமான் மற்றும் குருநானக் படம், குரான் போன்றவற்றைப் பெண்கள் தங்களின் தலைகளில் சுமந்து சென்றார்கள். சில ஆண்களின் தோள்களில் தராசுத் தட்டுகள் போல் இருபுறமும் சுமைகளுடன் கொம்புகள் இருந்தன. இந்தக் கொம்புகளின் ஒரு புறத்தில் கோணிக்குள் வைக்கப்பட்ட குழந்தை, மறுபுறத்தில் புதிய வாழ்வைத் தொடங்குவதற்கான மண் வாரும் கருவி, மரத்தாலான பிடியுள்ள மண்வெட்டி, ஒரு கோணிப்பைக்குள் தானிய விதைகள் தொங்கின.

காளைகள், எருமைகள், ஒட்டகங்கள், குதிரைகள், மட்டக்குதிரைகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள் ஆகியவற்றின் துயரங்கள் அவற்றை ஓட்டிச் செல்லும் உரிமையாளர்களின் துயரங்களோடு கலந்தன. கற்பனைக்கும் எட்டாத இந்தப் பயணத்துக்குரிய வண்டிகளைக் காளைகளும் எருமைகளும் தான் இழுத்துச் சென்றன, மரச்சக்கரங்களுக்கிடையே பொருத்தப்பட்ட பலகைகளின் மீது பொருள்கள் குவிக்கப்பட்டிருந்தன. இந்த வண்டிகளில் பிரமிடுகளைப் போல் கயிற்றுக் கட்டில்களும், வைக்கோல் மெத்தைகளும், பரம்புக் கருவிகளும், கலப்பைகளும், மண்வெட்டிகளும், கடந்த ஆண்டு அறுவடையில் கிடைத்த தானியங்களும் குவிக்கப்பட்டிருந்தன. தங்களது உரிமையாளர்களின் தகர்ந்து போன வாழ்க்கைக் கப்பல்களிலிருந்து கிடைத்த வாழ்க்கைப் படகுகள் போன்ற இந்த வண்டிகளில் துணி மூட்டைகள் இருந்தன. அழுக்கடைந்த மூட்டைக்குள்ளிருந்து தங்கம் மற்றும் வெள்ளிச் சரிகைகள் கொண்ட கல்யாணப் புடவைகளும் மின்னின. (புகை பிடிக்கும்) ஹூக்கா குழாய்கள், நல்ல சந்தர்ப்பத்தின் நினைவுப் பொருளான தம்பதியரின் திருமணப் பரிசுகள், குடங்கள், தட்டுகள் போன்றவையும் இருந்தன. இந்துக்களாக இருந்தால் இவற்றின் எண்ணிக்கை 9இல் முடிந்தது. மற்ற எண்களில் முடிவதை அவர்கள் அபசகுனமாகக் கருதினார்கள். அந்த அகதிகளின் வரிசையில் கைவண்டிகள், டோங்காக்கள், பர்தா அணிந்த முஸ்லீம் பெண்கள் பயன்படுத்தும் புர்க்கா (Burqa) வண்டிகள் தவிர நோஞ்சான் குதிரை அல்லது காளையை இணைத்துச் செலுத்தக்கூடிய சக்கரங்களைக் கொண்ட மேலும் பலவகை வண்டிகளும் இருந்தன.

ஆதரவற்ற அந்த இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் மேற்கொண்டது பக்கத்து கிராமத்துக்குச் செல்லும் குறுகிய பயணம் அல்ல. வேருடன் பிடுங்கி எறியப்பட்ட கூட்டத்தின் பயணம். மீண்டும் திரும்ப முடியாத பயணம்; பல நூறு மைல்களுக்கான பயணம்; ஒவ்வொரு மைல் பயணமும் களைப்பு, பட்டினி, காலரா, பாதுகாப்பில்லா வழிகளில் தாக்குதல்கள் என பயங்கரங்கள் நிறைந்த பயணம். இந்துவோ முஸ்லீமோ சீக்கியரோ அந்த அகதிகள் அப்பாவிகள்; நிராயுதபாணிகள்; எழுத்தறிவற்ற விவசாயிகள்; அவர்களின் வாழ்க்கை என்பது அவர்கள் வேலை செய்த விளை நிலங்கள் தான். அவர்களில் பலருக்கு வைஸ்ராயைத் தெரியாது; காங்கிரஸ் கட்சிக்கும் முஸ்லீம் லீகுக்கும் வேறுபாடு தெரியாது; பிரிவினை பற்றியோ எல்லைக்கோடுகள் பற்றியோ, எதன் பெயரால் இந்தத் துயரத்துக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்களோ அந்த சுதந்திரம் பற்றிக் கூட அவர்கள் ஒருபோதும் கவலைப்பட்டதில்லை.

வானத்தின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்லும் கொடிய, இரக்கமற்ற சூரியன் அவர்களின் துன்பங்களை அதிகரித்தபடி எப்போதும் பின்தொடர்ந்தான். இதனால் தங்களின் சோர்ந்து போன முகங்களை ஆகாயத்தை நோக்கி உயர்த்தி, ஆசுவாசப்படுத்த மழை வேண்டும் என்று அல்லாவையோ, சிவபெருமானையோ, குருநானக்கையோ வேண்டும் கட்டாயத்துக்கு ஆளானார்கள். ஆனால் மழை வர மறுத்தது.

இந்தியாவிலிருந்து வெளியேறிச் சென்ற முஸ்லீம் அகதிகள் கூட்டம் ஒன்றுக்குப் பாதுகாப்பாகச் சென்ற லெப்டினன்ட் ராம் சர்திலாலுக்கு (Ram Sardilal) பயங்கரமான அனுபவம் ஒன்றின் நிழல் எப்போதும் நினைவில் இருந்தது: 'அந்த அகதிகள் கூட்டத்தைக் கழுகுகள் போல சில சீக்கியர்கள் பின் தொடர்ந்தார்கள். மகிழ்ச்சியற்ற அந்த அகதிகள் தங்களுடன் கொண்டு செல்ல முயன்ற ஒரு சில பொருள்களுக்கும் அவர்கள் பேரம் பேசினார்கள். ஒவ்வொரு மைல் தூரம் கடக்கும் போதும் அந்தப் பொருள்களுக்கான விலை குறைந்து கொண்டே வரும். கடைசியில் வேறு வழியில்லாத அகதிகள் ஒரு கோப்பை தண்ணீருக்காகத் தங்களின் பொருள்கள் அனைத்தையும் கொடுக்கத் தயாராகி விடுவார்கள்.'

கேப்டன் ஆர். இ. அட்கின்சும் (Atkins) அவரது கூர்க்கா படையினரும் சீக்கிய அகதிகள் கூட்டத்தினரை இந்தியாவுக்கும், அதே பாதையில் முஸ்லீம்கள் கூட்டத்தை பாகிஸ்தானுக்கும் கொண்டு செல்லும் பாதுகாப்புப் பணியில் பல வாரங்களைக் கழித்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் இந்தப் பயணம் மகிழ்ச்சிகர மாக இருக்கும் என்று எண்ணியே அகதிகள் புறப்படுவார்கள். பின்னர் வெப்பம், தாகம், களைப்பு, முடிவில்லாத தூரம் ஆகியவற்றால் தாங்கள் கொண்டு வரும் பொருள்களை வீசி எறிவார்கள். கடைசியில் அவர்களின் கைகளில் பெரும்பாலும் ஒன்றும் இருக்காது. எப்போதாவது ஒரு சமயத்தில் உணவுப் பொட்டலங்களைப் போடுவதற்காக இரக்கமற்ற ஆகாயத்தில் விமானம் ஒன்று பறக்கும். பரபரப்படைந்த ஒரு கூட்டம் அதனைப் பின் தொடர்ந்து ஓடும். மிகவும் குறைவான ரேஷன் பொருள்களை நியாயமாக அவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதை உறுதி செய்வதற்காக, அட்கின்சின் கூர்க்கா படையினர் துப்பாக்கிகளுடன் பாதுகாப்புக்கு நிற்பார்கள். ஒரு முறை அவர் கண்ட காட்சி அவரைத் திடுக்கிட வைத்தது. கருப்பும் வெள்ளையுமான ஒரு நாய் சப்பாத்தி ஒன்றை கவ்விக் கொண்டு ஓடியது. ஒரு கூட்டம் அதனைத் துரத்தியது. சப்பாத்தியை அதனிடமிருந்து பெறுவதற்காக அந்த நாயைக் கொல்லவும் அவர்கள் தயாராக இருந்தார்கள்.

அந்தப் பயணத்தைத் தொடர முடியாதவர்களின் நிலைமைதான் எல்லா வற்றையும் விட மோசமானது. அப்படிப்பட்டவர்களில் மிகச் சிறியவர்களும், மிக வயதானவர்களும், நோயாலும், களைப்பாலும், பசியாலும் மிகுந்த பலவீனமடைந்தவர்களும் இருந்தார்கள். தொடர்ந்து வந்த அகதிகள் கூட்டத்தினர் குழந்தைகளின் இரங்கத்தக்க காட்சியைக் கண்டார்கள். அந்தக் குழந்தைகளைத் தூக்கிச் செல்லும் வலுவில்லாத பெற்றோர்கள் சாகட்டும் என்று விட்டுச் சென்று விட்டார்கள். இறந்து விடுவோம் என்று முடிவு செய்த முதியவர்கள் வயல்வெளிகளுக்குள் புகுந்து வாழ்க்கையை முடித்துக் கொள்ள அங்குள்ள மரங்களின் நிழலில் நின்று, தங்களது முடிவுக்காகக் காத்திருக்கும்

வசதியான மரக்கிளையை தேடினார்கள். மார்கரெட் புர்க்கே ஒயிட்டின் நினைவில் ஒரு காட்சி ஆழமாகப் பதிந்திருந்தது. அந்தச் சாலை ஓரத்தில் விடப்பட்ட ஒரு குழந்தையின் காட்சி தான் அது. இறந்து போன தாயின் கைகளை அது இழுத்துக் கொண்டிருந்தது. அந்தக் கைகள் மீண்டும் தன்னை ஏன் தூக்கிக் கொள்ளவில்லை என்பதை அந்தக் குழந்தையால் புரிந்து கொள்ள முடியவில்லை..

நரைத்தத் தாடியையுடைய அந்த வயதான சீக்கியரை குல்தீப்சிங் (Kuldip Singh) என்ற இந்தியப் பத்திரிகையாளரால் ஒரு போதும் மறக்க முடியாது. தனது பேரனைத் தூக்கிக் கொண்டு அவரது ஜீப்பை நோக்கி ஓடிவந்த அந்த முதியவர் குழந்தையைத் தூக்கிச் செல்லுமாறு மன்றாடினார். 'அவனாவது இந்தியாவைக் காண பிழைத்திருக்கட்டும்' என்பது அவரது எண்ணம். 1,00,000 அகதிகள் கூட்டத்துக்குப் பின்னால் ஒரு ஸ்டேஷன் வாகனில் பயணம் செய்த இந்திய ராணுவத்தின் லியூட்டனன்டுகள் இரண்டு பேரை எச்.வி.ஆர். ஐயங்கார் சந்தித்தார். புதிதாகப் பிறந்த குழந்தைகளையும் இறந்து போனவர்களையும் கவனிப்பது தான் தங்களின் பணி என்று அவர்கள் விளக்கினார்கள். ஒரு பெண்ணுக்கு மகப்பேற்றுக்கான வலி ஏற்பட்டால் அந்தப் பெண்ணையும் ஒரு மருத்துவச் சியையும் அவர்களது வண்டியின் பின்பக்கத்தில் ஏற்றுவார்கள். அந்தப் பெண்ணுக்குக் குழந்தை பிறப்பதற்குத் தேவையான காலம் வரை அந்த வண்டி நிறுத்தப்படும். அந்த நடமாடும் பிரசவ அறைக்கு வேறொரு பெண் வரத் தயாராகிவிட்டால் ஏற்கெனவே குழந்தை பெற்ற தாய் சில மணி நேரங்களே ஆகியிருந்தாலும் அந்தக் குழந்தையுடன் வண்டியிலிருந்து இறங்கி இந்தியாவுக்கு நடந்தே பயணத்தை மீண்டும் தொடங்க வேண்டியதுதான்.

இந்த அகதிகளின் வரிசைகளுக்குப் பின்னால் விட்டுச் செல்லப்பட்ட மனிதர்களின் அழுகிய உடல்கள் பயங்கரமாக இருந்தன. லாகூரிலிருந்து அமிர்தசரஸ் வரையிலான நாற்பத்தைந்து மைல் தூர சாலையோரத்தில் பலர் இறந்து போனார்கள். இதனால் அது நீண்ட, திறந்த வெளி மயானமாகக் காட்சி அளித்தது. கேப்டன் அட்கின்ஸ் அந்த வழியாகச் செல்வதற்கு முன் அந்த உடல்களிலிருந்து வரும் பயங்கர வாடையிலிருந்து தப்பிக்க, முகச்சவரம் செய்த பின் பயன்படுத்தும் திரவத்தை கைக்குட்டையில் தெளித்து அதனைத் தனது முகத்தைச் சுற்றி கட்டிக் கொள்வார். 'அந்த வழியில் ஒவ்வொரு கஜ தூரத்துக்கும் ஒரு உடல் கிடக்கும். சில வெட்டித் துண்டாடப்பட்டவை; சில காலரா நோயால் இறந்தவை. அவற்றை நிறைய சாப்பிட்டு விட்ட கழுகுகள் உப்பிப் பருத்தன. இதனால் அவற்றால் ரொம்ப நேரம் பறக்க முடியவில்லை. வெறி நாய்கள் அவற்றின் விருப்பம் போல் சாப்பிட்டன. சாலை ஓரத்தில் சிதறிக் கிடந்த உடல்களிலிருந்து கல்லீரல்களை மட்டும் அவை சுவைத்தன' என்று அவர் நினைவு கூர்ந்தார்.

சாலையிலும் வயல் வெளியிலும் பல மைல்தூரம் பரவிக் கிடந்த குழப்பம் மிகுந்த அகதிகள் கூட்டங்களைப் பாதுகாப்பது தலைசுற்றும் பிரச்சனையாக இருந்தது. அந்தப் பயணத்தின் போது எந்த இடத்திலும் அவர்கள் தாக்கப் படலாம் என்ற நிலை இருந்தது. எப்போதும் சீக்கியர்களின் தாக்குதல்கள் தான் மிகவும் கொடூரமாகவும்., சக்திவாய்ந்ததாகவும் இருந்தன. கரும்புத் தோட்டங்களிலிருந்தும் கோதுமை வயல்களிலிருந்தும் பெரும் அலறல்

சத்தத்துடன் கூட்டமாக வந்து ஆதரவற்ற கூட்டத்தினரைத் தாக்கினார்கள் அல்லது அந்தக் கூட்டத்திலேயே மிகவும் பலவீனமானவர்களைத் தாக்கினார்கள். ஒரு வயதான முஸ்லீமுக்கு நேர்ந்த கதியை லெப்டினன்ட் ஜி.டி.லால் (G.D. Lal) ஒரு போதும் மறக்கவில்லை. அந்த மனிதர் தனது வீட்டிலிருந்து பாதுகாக்க முடிந்த ஒரே ஒரு சொத்தான ஒரு வெள்ளாட்டினை பத்திரமாக பாகிஸ்தானை நோக்கி இழுத்துச் சென்றார். அவரது புதிய நாட்டின் எல்லைப் பகுதியை அடைய பன்னிரண்டு மைல்தூரம் இருக்கும் போது அவரின் ஆடு கரும்புத் தோட்டம் ஒன்றை நோக்கி ஓடியது. துயரமுற்ற அந்த முதியவர் அதனைப் பிடிக்க ஓடினார். திடீரென்று பழிவாங்கும் பேய் போல ஒரு சீக்கியர் அந்தக் கரும்புத் தோட்டத்திலிருந்து எழுந்தார். முதியவரின் தலையைத் துண்டித்து விட்டு, அவரது ஆட்டுக் குட்டியுடன் ஓட்டம் பிடித்தார்.

விரல் விட்டு எண்ணக் கூடிய சில தீரமிக்க சீக்கிய ராணுவ அதிகாரிகள், ஆதரவற்ற முஸ்லீம்களைப் பாதுகாப்பதன் மூலம் தங்களின் சொந்த சமூகத்து மக்களின் செயல்களுக்கே கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். ஃபெரோஸ்பூருக்கு வெளியே ஒரு இடத்துக்கு வந்த லெஃப்டினன்ட் கர்னல் குர்பா சிங் (Gurba Singh). அவர் இதுவரைக் காணாத மிகக்கோரமான காட்சியைக் கண்டார். சீக்கியர்களால் வெட்டிச் சாய்க்கப்பட்ட முஸ்லீம் அகதிகளின் உடல்களைக் கழுகுகள் பிடுங்கிக் கொண்டிருந்தன. அந்தப் பகுதிக்கு சீக்கியப் படைப்பிரிவு இரண்டினைக் கொண்டு சென்றார். அந்த வெப்பத்திலும் பிணவாடையிலும் அவர்களை அட்டென்ஷனில் நிற்கச் செய்தார். பிறகு அவர்களிடம் சொன்னார்: 'இந்தச் செயலை செய்த சீக்கியர்கள் அவர்களின் மக்களுக்கு அவமதிப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். உங்கள் பாதுகாப்பில் இருப்பவர்களுக்கு இதே போன்ற நிலை ஏற்பட அனுமதித்தால் நமது மக்களுக்கு இதைவிட மோசமான அவமதிப்பாக இருக்கும்.'

அகதிகள் கூட்டம் நடந்து செல்லும் போது, பெரும்பாலும் சாலைகளில் எதிரே வருகின்றவர்களைச் சந்தித்தபோது அமைதியாகவே சென்றனர். சில நேரங்களில் கசப்புணர்வு கொண்டவர்கள் ஒருவர் மீது ஒருவர் பாய்ந்தனர். வெறுப்புணர்வின் கடைசி முறுக்கினால் மேலும் பலர் பழிவாங்கப்பட்டு ஒவ்வொருவர் சோகப் பட்டியலிலும் எண்ணிக்கை உயர்ந்தது. மிக அபூர்வமாக ஒரு வித்தியாசமான காரியமும் நிகழ்ந்தது. இந்துவோ முஸ்லீமோ விவசாயிகள் ஒருவரை ஒருவர் அழைத்துக் கொண்டனர். தாங்கள் புலம் பெயர்ந்து வரும் இடத்தில் உள்ள தங்களின் சொந்த இடத்தைக் குறிப்பிட்டு அதனை உரிமையாக்கிக் கொள்ளுமாறு எதிர்த்திசையில் செல்வோரிடம் தெரிவித்தனர்.

அமிர்தசரஸுக்கும் ஜலந்தருக்கும் இடையேயான கிரேட் ட்ரங்க் (Great Trunk) நெடுஞ்சாலையில் வெள்ளம் போல் வந்து கொண்டிருந்த இரண்டு அகதிகள் கூட்டம் பற்றிய நினைவு அஸ்வினி குமார் என்ற இளம் காவல் துறை அதிகாரிக்கு எப்போதும் நிலைத்திருந்தது. மகா அலெக்சாண்டரின் மெசிடோனிய வீரர்களும், மொகலாய வீரர்களும் போரிட்ட அந்த இடத்தின் வழியாக, முஸ்லீம்களின் வரிசை பாகிஸ்தான் நோக்கியும், இந்துக்களின் வரிசை இந்தியாவை நோக்கியும் சென்று கொண்டிருந்தன. அச்சம் கலந்த அமைதியுடன் அவர்கள் நடந்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவில்லை. எதிரிகளுக்கான பாவனைகளையோ, அச்சுறுத்தும் பார்வை

களையோ அவர்கள் பரிமாறிக் கொள்ளவில்லை. சில சமயங்களில் ஒரு பசு ஒரு கூட்டத்திலிருந்து இன்னொரு கூட்டத்திற்கு ஒலியெழுப்பியபடி தாவிக்குதித்து ஓடும். மற்றபடி மரச்சக்கரங்களின் ஒலியும், ஆயிரக்கணக்கான வர்கள் நடந்து செல்வதால் ஏற்படும் காலடி ஓசையும் தான் கேட்டன. ஒரு திசையிலிருந்து இன்னொரு திசைக்கு நடந்து செல்லும் அவர்கள் தங்களின் துயரங்களை நன்கு உணர்ந்திருந்ததாகத் தோன்றியது.

★

அகதிகள் செல்லும் திசை கிழக்கோ மேற்கோ, பஞ்சாபின் மூன்று பெரிய நதிகளான ரவி, சட்லெஜ், பியாஸ் ஆகியவற்றின் கரையோரங்களில் அவர்களின் கூட்டம் அனைத்தும் மனிதக் குளங்கள் போல தேங்கிக் கிடக்க வேண்டியதாயிற்று. படகில் ஏறி அல்லது பாலங்களைக் கடந்து அந்த நதிகளைத் தாண்டிச் செல்ல அங்கே அவர்கள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. நம்பிக்கையிழந்து பாதைகளை நிறைத்துக் கொண்டு மக்கள் கூட்டம் அதிகமாக வந்து விட்டால் சில நாட்கள் கூட காத்திருக்க வேண்டியிருந்தது. சிரில் ராட்கிளிஃபின் பென்சில் வரைந்த அந்தப் பாதையில் இருந்த பாலங்களும் படகுகளும், அந்தக் கொடிய இலையுதிர் காலத்தில், பத்து மிலியன் (ஒருகோடி) இந்தியர்கள் மற்றும் பாகிஸ்தானியர்களுக்கு தப்பிச் செல்லும் பாதையாக இருந்தன. மேலும் தங்களது வாழ்க்கையையும் நிலங்களையும் விட்டு விட்டு நிச்சயமற்ற இடத்தை நோக்கிச் செல்லும் அவர்களுக்கு சந்திப்பு மையமாகவும் அது இருந்தது.

செப்டம்பர் மாதத்தின் ஒரு பிற்பகலில் சட்லெஜ் நதியைக் கடந்து செல்லும் சுலேமான்கி (Sulemanki) முனையில், முகம் தெரியாத மக்கள் கூட்டத்துக் கிடையே பருமனான 20 வயது இளைஞர் ஒருவர் இருந்தார். அவருக்கு அகன்ற கரிய கண்கள் இருந்தன. தடித்த உதடுகளின் மேல் மெல்லிதான மீசையும் இருந்தது. தலையில் அடர்த்தியான கரு நிற முடி. சோதிடக்காரர் குறித்த நல்ல நாள் வரும் வரைத் தங்கியிருக்கப் போவதாகக் கூறிய தந்தையை விட்டு விட்டு, தான் மட்டும் தனது மாமாவின் பேருந்து மூலம் தப்பி வந்தவர் அந்த இளைஞர். அவர் பெயர் மதன் லால் பாவா (Madanlal Pahwa)

பாலத்தின் மேற்கு எல்லைப் பகுதியில் அவர் வந்த பேருந்தையும் அதில் ஏற்றி வந்த மரச்சாமான்கள், துணிகள், தங்கம், பணநோட்டுகள், சிவபெருமானின் படங்கள் என அனைத்தையும் பாகிஸ்தானிய ராணுவத்தினர் பறிமுதல் செய்து விட்டனர். அந்த இலையுதிர் காலத்தில் லட்சக்கணக்கான மற்றவர்கள் போலவே மதன்லாலும் அவரது புதிய நாட்டுக்குள் வரும் போது சட்டைப் பைக்குள் பைசா இல்லாமல் தான் வந்தார். அவரிடம் மிஞ்சியிருந்தது அவர் அணிந்திருந்த ஆடைகள்தான். அந்தப் பாலத்திலிருந்து இந்தியாவுக்குள் நுழையும் போது, 'தாம் நிர்வாணமாய் இருப்பதாகவும் முழுவதும் கொள்ளையடிக்கப்பட்டு வீதியில் வீசியெறியப்பட்டிருப்பதாகவும்' மதன்லால் உணர்ந்தார். கோபம் கொண்ட அவர், தம்மைப் போலவே இந்தியாவில் உள்ள முஸ்லீம்களும் ஒரு பெட்டியோ கிழிந்து போன ரூபாய் நோட்டோ கூட இல்லாமல் ஓட வேண்டும் என்று சபதமெடுத்தார்.

பொதுவான வருத்தத்தால் பொதுத்தோற்றம் கொண்டிருந்த ஏராளமான கவலை தோய்ந்த முகங்களிலிருந்து அவரது கோபம் கொண்ட முகம் வேறுபட்டிருந்தது. மேலும் அவரோடு அந்தப் பாலத்தில் நெருக்கியடித்துக் கொண்டு வந்த, அடையாளம் தெரியாத உருவங்களிலிருந்து வேறுபட்ட மதன்லால், இந்தியா வழிபடும் கிரகங்களால் கண்டெடுக்கப்பட்டு வந்தவர் அவர் பிறந்த சிறிது காலத்துக்குப்பின், ஒரு நாள், அவரைப் பார்த்த சோதிடரும், அவரது பெயர் இந்தியா முழுவதும் அறியப்பட்டதாக இருக்கும் என்று ஆருடம் கூறினார். இது பற்றி அவர் தந்தை சொல்வார்:

'1928 டிசம்பரில் ஒரு நாள் எனக்குப் பின்னால் ஒரு தபால்காரர் நின்றிருந்தார் தந்தி ஒன்றைக் கொடுப்பதற்கு என்னைத் தட்டும்வரை நான் அவரைக் கவனிக்கவில்லை. அந்தத் தந்தி என் தந்தையிடமிருந்து வந்திருந்தது. முதல்நாள் இரவு எனக்கு ஒரு மகன் பிறந்திருந்தான். 19 வயதிலேயே நான் அப்பாவாகி யிருந்தேன். நல்ல செய்தியைக் கொண்டு வந்ததற்காக அந்தத் தபால்காரருக்கு இனாம் கொடுத்தேன். லட்டுகள் வாங்கி வந்து எனது அலுவலகத்தின் சக ஊழியர்களுக்குக் கொடுத்தேன். பிறகு நான் விரைந்து வீட்டுக்குச் சென்றேன்.

'வீட்டை அடைந்தவுடன் மரியாதையின் அடையாளமாக எனது தந்தையின் காலைத்தொட்டு வணங்கினேன். அது ஒரு மகிழ்ச்சிகரமான சந்திப்பாக இருந்ததால் அவர் என் வாயில் சர்க்கரை போட்டார். குழந்தையைத் தூக்கி என் மடியில் வைத்துக் கொண்டேன். "அவனுக்கு நல்ல கல்வி அளிப்பேன். குடும்பத்துக்கு நல்ல பெயரைக் கொண்டு வருவதற்காக அவனை என்ஜினியராகவோ டாக்டராகவோ ஆக்குவேன்" அவர் எண்ணினார்.

'அவனுக்குப் பெயர் ஒன்றைத் தெரிவு செய்வதற்காக கற்றறிந்த புலவர் களையும் சோதிடர்களையும் அழைத்தேன். 'ம' என்ற எழுத்துடன் பெயர் தொடங்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். 'மதன்லால்' என்ற பெயரை நான் தேர்ந்தெடுத்தேன். சோதிடர்கள் அவர்களின் சாதகக் குறிப்பு களைப் படித்தார்கள். மதன்லால் நன்றாக வளர்வான். ஒரு நாள் எனது மகனின் பெயர் இந்தியா முழுவதும் அறியப்படும் என்று அவர்கள் அறிவித்தார்கள்.

'இருப்பினும் என் மீது பொல்லாத கண்கள் பட்டன. மதன்லால் பிறந்த நாற்பது நாட்களுக்குப் பின் எனது மனைவி ஜன்னி கண்டு இறந்தாள். அவனது பள்ளிக் குழந்தைகளிலேயே எனது மகன் புத்திசாலியாகவும் குறும்புக் காரனாகவும் இருந்தான். ஆனால் காலப்போக்கில் அவன் பிரச்சனைக்குரிய குழந்தையானான். கலகக் குணங்கள் அவனிடம் உருவாயின. 1945இல் அவன் வீட்டை விட்டு ஓடி விட்டான். பஞ்சாபில் இருந்த எங்கள் உறவினர்கள் அனைவரையும் தொடர்பு கொண்டேன். ஆனால் அவன் எங்கே இருக்கிறான் என்பது யாருக்கும் தெரியவில்லை. சில மாதங்களுக்குப் பின் எனக்கு ஒரு கடிதம் வந்தது. கப்பற்படையில் சேர்வதற்காக அவன் பம்பாய்க்கு ஓடிப் போயிருந்தான். அவன் வீட்டுக்கு வந்த போது, ஆர்.எஸ்.எஸ்.எஸ்ஸுடன் சேர்ந்து அரசியல் நடவடிக்கைகளைத் தொடங்கினான். முஸ்லீம்களைத் தாக்கினான். அவனுக்காக நான் கவலை கொண்டேன். எனவே 1947 ஜூலையில் மாமனிதர் பண்டித நேருவின் செயலாளர்களில் ஒருவரும் எனது நண்பருமான சர்தார் தர்லோக் சிங்கைக் காண டில்லிக்குச் சென்றேன். எனது மகனின் பொல்லாத

கூட்டாளிகளிடமிருந்து அவனைக் காப்பாற்ற உதவி செய்யுமாறு அவரிடம் கேட்டேன். அவரும் ஒப்புக் கொண்டார். அவனுக்காக நான் கேட்டுக் கொண்டபடி, நல்ல நிலைமையை அடைவதற்காக, காவல்துறையில் உதவி சப் இன்ஸ்பெக்டர் பதவி நியமனத்துக்குப் பரிந்துரை செய்து எனக்குக் கடிதம் அனுப்புவதாக அவர் உறுதியளித்தார்.

*

மதன்லால் இந்திய மண்ணை அடைந்த சிறிது நேரத்திலேயே, அவனது தந்தை ரயில் வண்டித் தாக்குதலின் போது படுகாயமடைந்தார் என்பதை உறவினர் களிடமிருந்து தெரிந்து கொண்டான். ஃபெரோஸ்பூர் ராணுவ மருத்துவ மனையில் அவனது தந்தையை அவன் பார்த்தான். அங்கே ரத்தவாடையும், மருந்து வாடையும் வீசிய ஏராளமான வார்டுகளில் இந்தியாவின் சோகம் தெரிந்தது. திடீரென்று மதன்லாலுக்கு ஒரு முகம் தெரிந்தது. அது அவனின் அப்பாவுடையது. 'வெளிறி நடுங்கிக் கொண்டிருந்த அந்த முகம் முழுவதும் பேண்டேஜ் துணியால் மூடப்பட்டிருந்தது'

ஏதோ ஒரு அதிசயமாக, பஞ்சாபின் இத்தனைக் குழப்பங்கள் குளறுபடி களுக்கு மத்தியிலும், டில்லியில் காஷ்மீரிலால் கேட்டிருந்த கடிதம், அவருக்கு வந்து சேர்ந்தது. அதனைத் தன் மகனிடம் திணித்தார். 'டில்லிக்குப் போ', அவர் மன்றாடினார். 'புதிய வாழ்க்கையைத் தொடங்கு. நல்ல அரசு உத்தியோகத்தில் சேர்ந்து கொள்' என்றார்.

மதன்லால் அந்தக் கடிதத்தைப் பார்த்தான். ஆனால் அவனுக்கு அரசு வேலையில் சேரும் ஆர்வம் இல்லை. சோதிடர்கள் சொன்னது சரியானது. அடையாளம் தெரியாத ஒரு காவல்துறை ஊழியராக வருவதும் ஏதாவது ஒரு மாகாணக் காவல் நிலையத்தில் காலம் கழிப்பதும் அவனுக்கு விதியாக இருக்கவில்லை. உண்மையில் அவனது பெயர், இந்தியா முழுவதும் தெரியும் பெயராகவே இருக்கப் போகிறது.

மருத்துவமனையை விட்டு வெளியே வரும் போது சிதைக்கப்பட்ட அவனது தந்தையின் முகம் கண்களிலேயே இருந்தது. அந்த இலையுதிர் காலத்தில் இந்தியாவின் ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சி மதன் லாலுக்கும் ஏற்பட்டது. காவல்துறையில் சேர்வதோடு எந்த விதத்திலும் சம்பந்தப்பட்டதல்ல அது. 'நான் பழிவாங்க விரும்புகிறேன்' மதன்லால் உறுதி ஏற்றான்.

சர் ஃபெரோஸ்கான் நூனின் (Sir Ferozkhan Noon) அழகிய ஆங்கிலேய மனைவியான விக்கி நூனின் (Vikie Noon) வாழ்க்கை ஒரு சிறிய, வட்டமான தகர டப்பாவில் இருந்த பொருள்களைச் சார்ந்திருந்தது. அதில் செம்மண் நிறத்திலான கிவி (Kiwi) ஷூ பாலிஷ் இருந்தது. மண்டியில் உள்ள இந்து ராஜாவின் அரண்மனையில் தனக்குக் கிடைத்திருக்கும் அடைக்கலம் சிறிது காலத்துக்குத் தான் என்பதை விக்கி புரிந்து கொண்டார். அந்தப் பகுதி முழுவதும் அவர் தேடப்பட்டார். சீக்கியர் கூட்டம் ஒன்று அவரை வெளியே அனுப்பா விட்டால் ராஜாவின் குழந்தைகளைக் கடத்தப் போவதாக அச்சுறுத்தியது.

*ராஜாவும், விக்கியை மீட்டு வருவதற்காக அவரின் கணவரால் அனுப்பி வைக்கப்பட்ட கவுதம் சகால் (Gautam Sahgal) என்ற சிமெண்ட் வியாபாரியான இளம் இந்துவும் அவரது தோலைக் கருப்பாக்குவதற்காக பொட்டாசியம் பெர்மாங்கனேட்டில் குளிக்க வைத்தனர். இப்போது அவரின் முகத்தை ஷூ பாலிஷ் கொண்டு அழுக்கு நிறமாக்கினார்கள். சில மணி நேரங்களில் அவரை எதிர்கொள்ளப் போகும் எந்த ஒரு சீக்கியரும் அவரை ஒரு இந்தியர் என்று நம்புவதற்கான ஏற்பாடுதான் அது. அந்தி சாயும் நேரத்தில், ராஜாவின் ரோல்ஸ் காருக்கு ஒரு வித்தியாசமான தோற்றமளிக்கும் விதத்தில் திரைச்சீலைகள் தொங்கவிட்டு அரண்மனைக்கு வெளியே ஒரு வேட்டைப்பறவை போல அனுப்பப்பட்டது. புடைவையணிந்து, நெற்றியில் சிவப்புத் திலகமிட்டு இடது மூக்கில் ஒரு தங்க வளையம் மாட்டப்பட்ட விக்கியுடன், கவுதமின் 1947 மாடல் டாட்ஜ் கார் சில நிமிடங்களுக்குப் பின் புறப்பட்டது. முதல் கட்டத் தந்திரம் வெற்றிகரமாக முடிந்தது. பதற்றம் தணிந்த நிலையில் இயற்கை உபாதையைக் கழிக்க காரை நிறுத்துமாறு விக்கி கூறினார். அப்போது மழை பொழிந்து கொண்டிருந்தது. அவர் பழக்கமில்லாமல் கட்டியிருந்த சேலை மடிப்பு களிலிருந்து நழுவி ஷூ பாலிஷ் டப்பா இருட்டில் விழுந்து விட்டது. அது கூழாங்கற்களின் மேல் உருண்டோடி சாலையோரப் பள்ளத்தில் விழுவதை கவனித்த விக்கி தேம்பி அழுதார். மலைப்பகுதியில் பெய்த மழை அவரின் வேடத்தைக் கலைத்து விட்டது. அவர் ஒரு வரிக் குதிரை போலவோ அல்லது எளிதில் அடையாளம் காணக்கூடிய வெள்ளைக்காரப் பெண் போலவோ மாறிக் கொண்டிருந்தார். அவரைப் பாதுகாக்கும் அடையாளம் தெரியாத கருப்பு நிறத்தை மீண்டும் கொண்டு வருவதற்கான ஒரே நம்பிக்கையாக இருந்தது அந்த டப்பா மட்டும்தான். தன்னைத் தானே சபித்துக் கொண்டு, கூழாங்கற்களுக்கிடையேயும் முட்புதர்களுக்கிடையேயும் அவர் தட்டுத் தடுமாறி தேடினார். கடைசியாக அவர் அதைக் கண்டுபிடித்து விட்டதும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார். அந்த டப்பாவில் வைரக்கற்கள் இருப்பது போல அதனை மார்போடு அணைத்துக் கொண்டு காரை நோக்கி ஓடிவந்தார். அங்கே சகால் அவரது முகத்துக்கு மீண்டும் புதிதாகப் பாலிஷ் போட்டார்.*

*குருதாஸ்பூருக்கு சற்றுத் தொலைவில் அந்தக் கார் சென்ற பாதையில் சீக்கியர்கள் கூட்டம் ஒன்று தடைகளைப் போட்டிருந்தது. அவர்கள் காரைச் சூழ்ந்து கொண்டனர். தன்னுடன் சேர்ந்து வியாபாரம் செய்யும் சிமெண்ட் வியாபாரி ஒருவரை அந்தக் கூட்டத்தில் சகால் கண்டார்.*

*'என்ன நடக்கிறது?' சகால் வினவினார்.*

*'ஃபெரோஸ்கான் நூனின் ஆங்கிலேய மனைவி மண்டி மகாராஜாவின் அரண்மனையிலிருந்து தப்பி விட்டார்' என்று அந்த மனிதர் விளக்கினார். இந்தப் பகுதியில் உள்ள ஒவ்வொரு சீக்கியரும் அவரைத் தேடுகிறார்கள்.*

*அப்படியா! இந்த சாலையில் இருபது மைல்களுக்கு முன்னால் தாம் ராஜாவின் ரோல்ஸ் காரைக் கடந்து வந்ததாக சகால் கூறினார். தனது கர்ப்பிணி மனைவியுடன் அமிர்தசரஸுக்குச் சென்று கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அந்த மனிதர் காருக்குள் எட்டிப்பார்த்தார். அவர் அப்படிச் செய்யும் போது ஷூ பாலிஷ் பயன்தர வேண்டும் என்றும், அந்த சீக்கியர் அவரிடம் இந்தியில் பேசாமல் இருக்க வேண்டும் என்றும் விக்கி*

பிரார்த்தித்தார். அந்த மனிதர் கூர்ந்த கண்களால் அவரைப்பார்த்தார். பிறகு தலையை வெளியே இழுத்துக் கொண்டு, சாலைத் தடைகளுக்கிடையே செல்லுமாறு கைகளை அசைத்தார். பத்திரமாகத் தங்களின் கார் இந்திய ராணுவத்தின் தலைமையகத்தை நோக்கிச் சென்ற போது விக்கி தனது இருக்கையில் நிம்மதியுடன் சாய்ந்தார். அனாயசமாக தனது விரல் நகங்களால் அந்த ஷூ பாலீஷ் டப்பா மூடி மீது தாளம் தட்ட ஆரம்பித்தார். அவருடன் வந்தவர் பக்கம் அவர் திரும்பினார்.

'உங்களுக்குத் தெரியுமா கவுதம், எனது கணவர் இந்தத் தகர டப்பா அளவுக்கு விலையுயர்ந்த ஆபரணம் எதையும் எனக்கு வாங்கிக் கொடுக்கப் போவதில்லை' என்று அவர் புன்னகையுடன் கூறினார்.

விக்கி நூனின் அனுபவம் அபூர்வமானது. சீக்கியர்களின் வெறுப்புக்கு அவர் இலக்கானது அவர் ஒரு ஆங்கிலேயர் என்பதால் அல்ல; பிரபல முஸ்லீம் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார் என்பதால்தான். சீற்றம் மிக்க இலையுதிர் காலத்தில் மிகவும் அரிதாகவே ஆங்கிலேயர்கள் தாக்கப்பட்டனர். பஞ்சாப் பற்றி எரிந்த ஆகஸ்ட், செப்டம்பர் மாத மோசமான வாரங்களிலும் லாகூரில் உள்ள ஃபலேட்டி ஓட்டல் பாலைவனச் சோலை போலத்தான் இருந்தது. ஒவ்வொரு நாள் இரவிலும் நடன நிகழ்ச்சிக்காக அதன் இசைக்குழுக்கள் கருவிகளை இசைத்தன. ஆங்கிலேய ஆண்களும் பெண்களும் இரவு விருந்துக்கான அங்கியுடனும் மாலை நேர உடையுடனும் நிலவொளி சிந்தும் மேல் தளத்தில் கூடி மதுவருந்திக் கொண்டிருந்தனர். அங்கிருந்து சிறிது தூரத்தில் இந்துக்களின் வீடுகள் தீயில் அழிந்து கொண்டிருந்தன.

அந்த இலையுதிர் காலத்தில், நூற்றுக்கணக்கான அகதிகள் வரிசை பஞ்சாபின் முகத்தில் கிழித்த கோடுகளிலேயே, மிகவும் முரண்பாடானது இந்துக்கள், சீக்கியர்கள் அல்லது முஸ்லீம்களுடையது அல்ல; பிரிட்டிஷாருடையது. கூர்க்கா வீரர்களில் ஒரு பிரிவினரின் பாதுகாப்புடன், ஓய்வு பெற்ற டஜன் கணக்கான மூத்த பிரிட்டிஷார்கள், இரண்டு பேருந்துகளில் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டனர். தனித்து, பாதுகாப்பு மிக்கப் புகலிடமாக இருந்த சிம்லாவில்தான் அவர்கள் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்தனர். அவர்கள் சேவை செய்த பிரிட்டிஷ் ராஜ்யத்தின் சிறந்த அடையாளங்களாய்த் திகழ்ந்தவை ஒதுக்குப் புறமாக மலையுச்சியில் இருந்த கவர்ச்சிகரமான 'ட்ரெய்ல்ஸ் எண்ட்', 'சேஃப் ஹெவன்', 'மன் ரிப்போஸ்' ஆகிய குடில்கள். இவற்றின் முற்றப் பகுதிகள் கொடியில் மலரும் ரோஜாக்களும், ஊதாநிறப்பூக்களும் சூழ்ந்து எழுச்சியூட்டின. வாழ்நாளை முடித்துக் கொள்ள இந்த இடங்களைத் தான் அவர்கள் தேர்வு செய்திருந்தார்கள். பிரிட்டிஷ் ராஜ்யத்தின் ஓய்வு பெற்ற ரோமானியர்கள் அவர்கள். இந்திய ராணுவத்தின் சிறந்த படைப்பிரிவுகளின் முன்னாள் கலோனல்கள், முன்னாள் நீதிபதிகள், மற்றும் ஒரு காலத்தில் இந்தியர்களில் லட்சக்கணக்கானவர்களின் வாழ்க்கையை நிர்வகித்த மூத்த ஐ.சி.எஸ். அதிகாரிகள்.

கீழே சமவெளியில் இருந்த நிர்க்கதியான பஞ்சாபியர்கள் தப்பிச் செல்லத் தயாராவதற்குக் கிடைத்த கால அவகாசத்தை விட குறைவாகவே அவர்களுக்கும் அவர்களின் மனைவியருக்கும் கிடைத்தன. சிம்லாவின் நிலைமை மிகவும் மோசமடைந்ததால், அவர்களைப் பத்திரமாக டில்லிக்கு அழைத்து வருவதற்காக

அந்தப் பேருந்துகள் அனுப்பி வைக்கப்பட்டன. பெட்டிப் படுக்கைகளை எடுத்துக் கொண்டு வீடுகளைப் பூட்டிக் கொண்டு பேருந்துக்கு வந்து சேர அவர்களுக்கு ஒரு மணி நேர அவகாசமே அளிக்கப்பட்டது.

மவுண்ட்பேட்டனின் பத்திரிகைத் தொடர்பாளருடைய மனைவி ஃபே கேம்ப்பெல் - ஜான்சனும் அவர்களுடன் டில்லிக்குப் பயணம் செய்தார். தவிர்க்க முடியாமல், அந்தப் பேருந்தில் இருந்த ஆங்கிலேயர்களில் பெரும்பாலோருக்கு வயது 65க்கு மேல்தான். அந்த வயதுடைய மனிதர்களில் பலரைப் போலவே அவர்களும் சிறுநீர்ப்பை பலவீனமடைந்து அடிக்கடி சிறுநீர் கழிக்கும் பொதுவான உணர்வைப் பெற்றார்கள். இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறை பேருந்துகள் நிறுத்தப்பட்டன. அந்த மனிதர்கள் தள்ளாடியபடி வெளியே வந்தனர். ஒரு காலத்தில் இந்தியாவை ஆட்சி செய்த அந்த வயதான மனிதர்கள், வீரமும் துணிச்சலும் மிக்க கூர்க்கா காவலர்கள் கண்முன்னே சிறுநீர் கழித்ததை கவனித்த ஃபே கேம்ப்பெல் - ஜான்சனின் மனதில், வித்தியாசமானதும், மறுக்க முடியாத பொருத்தமுள்ளதுமான ஒரு எண்ணம் பளிச்சென்று தோன்றியது.

'கடவுளே, அந்த வெள்ளைக்கார மனிதர் உண்மையிலேயே அவரது சுமையை இறக்கி வைக்கிறார்!' அவர் தனக்குள் சொல்லிக் கொண்டார்.

★

மவுண்ட்பேட்டன் தம்பதியர் 1,00,000 பத்தான் பழங்குடியினரை எதிர்கொண்ட பெஷாவரில் இருந்த 22 வயது உளவுப் பிரிவின் பிரிகேட் கேப்டன் எட்வர்ட் பெரை (Edvard Behr)ப் பொறுத்தவரை அந்த ஞாயிற்றுக்கிழமை காலையில் கிடைத்த வாய்ப்புகள் பல ஆண்டுகளாக இந்தியாவில் இருந்த இளம் ஆங்கிலேய அதிகாரிகளுக்குக் கிடைத்ததற்கு ஒப்பானவைதான். அவரது இல்லத்தில் காலை உணவாகப் பணியாள் வழங்கிய பப்பாளிப்பழம், காஃபி, முட்டைகள் ஆகியவற்றைச் சாப்பிட்ட பிறகு பெர் கிளபுக்குச் சென்றார். அங்கு ஸ்குவாஷ் விளையாடினார்; நீந்தினார்; சாவகாசமாக மதிய உணவு சாப்பிடுவதற்கு முன் ஜின் மற்றும் டானிக்குகளை அருந்தினார்.

இந்தியப் பேரரசின் வடக்கு நுழைவாயில் நகரில் இருந்ததைவிடப் பெரிய மாற்றம் ஒன்றும் இந்த நகரில் இருக்கவில்லை. இந்திய ராணுவத்தில் இருந்த மற்ற பல சாகசம் நிறைந்த இளம் ஆங்கிலேய அதிகாரிகள் போலவே சுதந்திரத்துக்குப் பின் தாமாக வந்து பாகிஸ்தானில் சேவை செய்யும் விருப்புடன் பெர் இங்கே தங்கி விட்டார். பெஷாவரைப் பொறுத்தவரை, அதன் நுழைவாயிலில் கோபம் நிறைந்த பத்தான் பழங்குடியினர் இருந்த போதும் அந்த நகரம் அமைதியாகவே இருந்தது. இருப்பினும் அந்த ஞாயிறன்று பெர் திட்டமிட்டபடி நிகழ்ச்சிகள் நடக்கவில்லை. பப்பாளிப் பழத்தைச் சாப்பிடத் துவங்கிய போது தொலைபேசி மணி ஒலித்தது.

'பயங்கர சம்பவம் நடந்து விட்டது. நமது ராணுவத்தினர் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொள்கின்றனர்' ராணுவத் தலைமையகத்திலிருந்து லியூட்டனன்ட் ஒருவர் மூச்சிறைக்கக் கூறினார்.

முட்டாள் தனமான விபத்து இப்படியொரு மோதலுக்குக் காரணமாகி விட்டது. பெர் காலை உணவுக்காக உட்கார்ந்த அந்தச் சமயத்தில், இன்னும்

இந்தியாவுக்கு அனுப்பப்படாத ஒரு படைப்பிரிவில் இருந்த சீக்கியர் ஒருவர் துப்பாக்கியைத் துடைக்கும் போது எதிர்பாராத விதமாக அதிலிருந்து ஒரு தோட்டா வெளிப்பட்டு விட்டது. நம்ப முடியாத வகையில் அந்தத் தோட்டா முஸ்லீம் வீரர்கள் வந்து கொண்டிருந்த ஒரு ட்ரக் வண்டியின் கேன்வாஸ் துணியைக் கிழித்துக் கொண்டு பாய்ந்தது. பஞ்சாபின் பயங்கரங்களிலிருந்து தப்பித்து அவர்கள் அப்போதுதான் அங்கு வந்திருந்தனர். சீக்கியர்கள் தங்களைத் தாக்குகிறார்கள் என்று நினைத்த அந்த முஸ்லீம்கள் ட்ரக் வண்டியிலிருந்து குதித்து தங்களையொத்த ராணுவ வீரர்கள் மீது துப்பாக்கி களால் சுட்டார்கள்.

பெர், சீருடைகளை அணிந்து, ஒரு ஜீப்பில் ஏறி பிரிகேடுகளின் தளபதியான பிரிகேடியர் ஜி.ஆர். மோரிசின் இல்லத்துக்குச் சென்றார். அவர் வின்கேட்டின் படைப்பிரிவுகளில் பணியாற்றி பதக்கங்கள் வென்ற மூத்த அதிகாரி. உதடுகளில் ஒட்டியிருந்த காலை உணவான முட்டைத் துகள்களை அமைதியாகக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்ட மோரிஸ் காஃபியைக் குடித்தார். மேலே பளபளப்பான சிவப்பு நிற நாடா சுற்றிய பிரிகேடியரின் தொப்பியை அணிந்து கொண்டு, தனது வெள்ளை சட்டை மற்றும் கால் சட்டைகளைப் பற்றிக் கூட கவலைப்படாமல் பெரின் ஜீப்பில் ஏறி அவர் புறப்பட்டார்.

கண்டோன்ட்மெண்ட் பகுதிக்குள் இரண்டு பிரிட்டிஷ் அதிகாரிகளும் சென்ற போது, அணிவகுப்பு மைதானத்தின் ஒரு பக்கத்தில் இருந்த கற்களால் கட்டப்பட்ட தடையரணுக்குப் பின்னால் வரிசையாக நின்ற முஸ்லீம்கள் இதே போன்ற தடையரணுக்குப் பின்னால் நின்ற சீக்கியர்களை நோக்கி துப்பாக்கி யால் சுட்டுக் கொண்டிருப்பதைக் கண்டனர். மோரிஸ் சிறிது நேரம் நிலைமையை ஆய்வு செய்தார். பின்னர் காற்றைத் தடுக்க ஜீப்பில் பொருத்தப் பட்டிருக்கும் கண்ணாடித் திரையைப் பிடித்து எழுந்து நின்றார்.

'வலது பக்கம் செலுத்தி மைதானத்தின் மையப்பகுதிக்குச் செல்லுங்கள்' என்று கலங்கியிருந்த பெர்-ருக்குக் கட்டளையிட்டார்.

துணிவும் அபரிமிதமான தன்னம்பிக்கையும் கொண்ட நிராயுதபாணியான ஆங்கிலேய அதிகாரி, பிரிகேடியர் தொப்பியையும், ஞாயிற்றுக்கிழமை காலையில் டென்னிஸ் ஆட்டத்துக்கான உடையையும் அணிந்த அந்த அதிகாரி, தனது படையாட்களின் துப்பாக்கிச் சூடுகளுக்கு நடுவே நேராகச் சென்றார். 'சண்டையை நிறுத்துங்கள்' என்று உரக்கக் குரல் கொடுத்தார். சீக்கியர்களையும் முஸ்லீம்களையும் பிரித்த வெறுப்புணர்வை விட அந்த வார்த்தைகள் இந்திய ராணுவத்துக்கு வலுவான மந்திர சக்தியாக இருந்தன. துப்பாக்கிச் சத்தம் நின்று விட்டது.

இருப்பினும் அவ்வளவு எளிதாக பெஷாவர் தப்பித்து விடவில்லை. அந்த இலையுதிர் காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட ஏராளமான மரணங்களுக்கு காரணம் துப்பாக்கிகளை விட வதந்திகளாக இருந்தன. மோரிஸ் அமைதியை ஏற்படுத்திய அதே சமயம், சீக்கிய வீரர்கள் முஸ்லீம் தோழர்களைக் கொல் கிறார்கள் என்ற வதந்தி பழங்குடியினர் பகுதிகளில் பரவியது. மவுண்ட்பேட்டன் பயணத்தின் போது வந்தது போல, ட்ரக் வண்டிகளிலும், பேருந்துகளிலும், டோங்கா வண்டிகளிலும், குதிரைகள் மீதும் ஏறி ஏராளமான பத்தான்

பழங்குடியினர் நகருக்குள் புகுந்து பரவினர். ஆனாலும் இந்த முறை அவர்கள் வந்தது ஆரவாரம் செய்வதற்கல்ல; கொலை செய்வதற்கு.

அவர்கள் கொலைகளைச் செய்தனர். சீக்கிய வீரர் ஒருவர் தவறுதலாகச் சுட்ட ஒரு துப்பாக்கித் தோட்டா காரணமாக ஒருவார காலத்துக்குள் பத்தாயிரம் பேர் வாழ்க்கை பறிபோனது. தவிர்க்க முடியாமல் இதே போல் எல்லைப்புற மாகாணத்தின் இதர பகுதிகளிலும் கலவரங்கள் வெடித்தன. இதனால் இந்தியாவின் நெடுஞ்சாலைகளில் மீண்டும் அகதிகள் கூட்டம் அலைவீசியது. இவ்வளவு சிறிய சம்பவம் அவ்வளவு பெரிய பயங்கரத்தை உருவாக்க முடிந்திருப்பது, மனப்பரப்பின் அடியில் மறைந்து கிடக்கும் வெறியுணர்வுகளின் அடையாளமாகவே இருந்தது. பம்பாய், கராச்சி, லக்னோ, ஹைதராபாத், காஷ்மீர், வங்காளம் ஆகிய இடங்களில் பெஷாவருக்கு சமமாகக் கலவரங்கள் வெடித்து கொலை பாதகங்கள் நடக்க பெஷாவரின் ஒற்றைத் தோட்டா போல ஒரு சிறு பொறி மட்டுமே தேவைப்பட்டது.

## புது டில்லி, 9 செப்டம்பர் 1947

உண்ணாவிரதத்தால் ஏற்பட்ட பலவீனத்துடனேயே 1947 செப்டம்பர் 9 அன்று மகாத்மா காந்தி கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு வந்து சேர்ந்தார். பின்னர் ஒருபோதும் அவர் அங்கிருந்து வெளியே செல்லவில்லை. இந்த முறை பங்கி துப்புரவுத் தொழிலாளர்கள் காலனியில் தீண்டத்தகாதோர் மத்தியில் காந்தி தங்குவது பற்றிய கேள்வியே எழவில்லை. அந்தப் பகுதியில் இப்போது பஞ்சாபிலிருந்து வந்துள்ள, கவலை கொண்டு நம்பிக்கையிழந்த அகதிகள் குவிந்திருந்தனர். வருத்தமடைந்திருந்த வல்லபபாய் படேல் அந்தக் காலனிக்குப் பதிலாக காந்தியை வேறொரு இடத்தில் தங்க வைப்பது பற்றி வலியுறுத்தினார். ரயில்வே நிலையத்திலிருந்து காந்தியை அழைத்துச் சென்று, புதுடில்லியின் மிகச்சிறந்த குடியிருப்புப் பகுதியான, அகன்ற அழகான வீதியான, அல்புக்கர்க் சாலையின் 5ஆம் எண் இல்லத்தில் தங்க வைக்குமாறு அவர் கூறினார்.

பாதுகாப்பான மதில்சுவர், ரோஜா தோட்டம், அழகிய புல்வெளிகள், பளிங்குக்கல் பாவிய தரை, இட்டவேலையை விரைந்து செய்யும் ஏவலாள் பட்டாளம் ஆகியவற்றைக் கொண்ட பிர்லா மாளிகை, டில்லியில் காந்தி வழக்கமாகத் தங்கும் பரிதாபத்துக்குரிய துப்புரவுத் தொழிலாளர்களின் குடிசைகளைக் கொண்ட இந்தியச் சமூகத்தின் தோற்றத்திலிருந்து நேர் எதிர்நிலையில் இருந்தது. மூன்றாம் வகுப்பு ரெயில் பெட்டிகளில் பயணம் செய்த, சொத்துகளைத் தியாகம் செய்த அந்த மனிதர், நேரு, படேல் ஆகியோரின் நிர்ப்பந்தம் காரணமாக லட்சாதிபதியின் மாளிகைக்குள் செல்ல ஒப்புக் கொண்டார். புதிரான அவரது வாழ்க்கையில் இது இன்னொரு முரண்பாடாக இருந்தது.

அந்த மாளிகைக்குச் சொந்தக்காரரான ஜி. டி. பிர்லா, இந்தியாவின் இரண்டு பெரிய தொழில் அதிபர் குடும்பங்களில் ஒன்றின் தலைவராவார். ஜவுளி ஆலைகள், காப்பீடு, வங்கிகள், ரப்பர், மற்றும் பிற உற்பத்தித் தொழிலகங்களில் ஆர்வம் உள்ளவர் அந்தப் பெரும் பணக்காரர். அணிதிரட்டப்பட்ட இந்தியத்

*தொழிலாளர்களின் முதலாவது வேலைநிறுத்தத்தை அவரது தொழிற்சாலைகளில் ஒன்றில்தான் காந்தி நடத்தினார் என்றாலும் ஆரம்ப காலத்திலிருந்தே காந்தியின் ஆதரவாளர்களில் ஒருவராக அவர் திகழ்ந்தார். காங்கிரஸ் கட்சிக்கு நிதி உதவி செய்யும் முதன்மையானவர்களில் அவரும் ஒருவர். இப்போது அவரது அரண்மனை போன்ற மாளிகையின் இரண்டு பகுதிகளில் ஒன்றில் உள்ள நான்கு அறைகளை மகாத்மாவுக்கு அவர் வழங்கினார். இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு காந்தி வாழப்போகும் மிக ஆடம்பரமான இடம் அதுவாகத்தான் இருக்கும். கடைசி இடமாகவும் கூட இருக்கும்.*

*காந்தியின் புதிய இருப்பிடத்துக்கு அப்பால் இந்தியத் தலைநகரில் வன்முறையின் கோரம் நீடித்தது. அந்த நகரில் சேகரிக்கப்படாத மனித உடல்கள் குப்பைகள் போல் ஏராளமாகக் கிடந்தன. பல நேரங்களில் இறந்து கிடந்த மனிதன், குதிரை, எருமை ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு காண்பது சாத்தியமில்லாமல் இருந்தது என்று காவலர் ஒருவர் கூறினார். பிண ஆய்வுக் கிடங்கில் வந்து குவியும் பிணம் ஒவ்வொன்றுக்கும், அதிகார வர்க்க முறைப்படியான படிவங்களைப் பூர்த்தி செய்யுமாறு காவல் துறையினர் தொடர்ந்து வற்புறுத்தியதால் பிண ஆய்வாளர் கோபமுற்று எதிர்ப்புத் தெரிவித்தார் 'ஒவ்வொரு உடலுக்கும் 'இறப்புக் காரணம்' பற்றி ஆய்வு செய்யுமாறு காவல்துறை ஏன் என்னிடம் கூற வேண்டும்? அவர்களுக்கு என்ன நேர்ந்திருக்கிறது என்பது எல்லோருக்கும் கண்கூடு' என்று அவர் எதிர்ப்புக்குரல் எழுப்பினார்.*

*இந்தியாவில் நிலவும் சாதிமத கட்டுப்பாடுகள் காரணமாக வீதிகளில் சிதறிக் கிடக்கும் உடல்களை எடுத்துப் போட ஆள் தேடுவதும் பிரச்சனையாக இருந்தது. ஒரு நாள் எட்வினா மவுண்ட்பேட்டனும் அவரது கணவரின் கடற்படை உதவியாளருமான லெஃப்டினன்ட் கமாண்டர் பீட்டர் ஹோவெஸும் புதுடில்லியின் மையப்பகுதியில் உப்பிக் கிடக்கும் ஒரு உடலைக் கடந்து சென்றனர். காரை நிறுத்துமாறு ஹோவெஸிடம் அவர் கூறினார். மேலும் அந்தப் பக்கமாகச் சென்ற ஒரு ட்ரக் வண்டியையும் கையசைத்து நிறுத்தினார். அந்த வண்டியின் ஓட்டுநர் ஒரு சாதி இந்து என்பதால் அந்த உடலைத் தொட மறுத்து விட்டார். மனம் கலங்காத இந்தியாவின் கடைசி வைஸ்ராயினி ஹோவெஸின் உதவியுடன் தாமே அந்த உடலைத் தூக்கி ட்ரக் வண்டிக்குள் போட்டார்.*

*இப்போது அதனைப் பிண ஆய்வுக் கிடங்கிற்கு எடுத்துச் செல்லுமாறு திகைத்து நின்ற அந்த ஓட்டுநருக்கு அவர் உத்தரவிட்டார்.*

*பாகிஸ்தானுக்குத் தப்பியோட விரும்பும் டில்லி முஸ்லீம்களில் பலர் அகதிகளுக்கான பல முகாம்களில் கூடியிருந்தனர். ஜின்னாவின் வாக்குறுதியளிக்கப்பட்ட நிலத்துக்குச் செல்வதற்கான வாகனங்களை எதிர்பார்த்த அவர்கள் உறவினர்களின் பாதுகாப்பில் இருந்தனர். உலகிலேயே மிக அழகிய நகரமாக டில்லியை உருவாக்கிய அவர்களின் முன்னோர்கள் குறுகிய காலத்தில் கட்டி முடித்த ஹுமாயூன் கல்லறை, புராண க்விலா (*Purana Qila *பழைய கோட்டை) என்ற இரண்டு பிரமாண்டமான நினைவிடங்களில் அந்த முஸ்லீம்கள் கூட்டம் கூட்டமாகத் தங்கியிருந்தனர். இது முரண்பாடான விதிநிலைதான்! இஸ்லாமியர்களின் பண்டைய பெருமையின் மிச்ச*

சொச்சங்களாக இருந்த அவற்றில் 1,50,000 முதல் 2,00,000 மக்கள் தங்கியிருந்தனர். சூரிய வெப்பத்திலிருந்தோ கொட்டும் பருவ மழையிலிருந்தோ பாதுகாப்புக் கிடைக்காத அவர்களின் நிலைமை விவரிக்க முடியாத சோகமாய் இருந்தது. பாதுகாப்பான சுவர்களைத் தாண்டினால் தீர்ந்தோம் என்ற அச்சத்தால் இறந்து போனவர்களைப் புதைக்கக் கூட அவர்கள் வெளியே செல்ல மறுத்தனர். மாறாக அந்த உடல்களை மதில் சுவர்கள் மேலிருந்து நரிகளுக்கு இரையாக வீசி எறிந்து விட்டார்கள். துவக்கத்தில், பழைய கோட்டையில் 25,000 மக்களுக்கு இரண்டு தண்ணீர்க் குழாய்கள் இருந்தன. அங்கே தங்கியிருந்த பெண்கள் தங்களின் சமையல் பாத்திரங்களைச் சுத்தம் செய்த அதே நீர்நிலையில் வாய்க்கொப்பளிக்கவும் மலம் கழுவவும் செய்தனர் என்று பார்வையாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

திறந்தவெளியில் தான் இவர்கள் மலஜலம் கழித்தனர். இந்தியச் சமூகத்தின் கட்டு திட்டங்கள் இதிலும் கடுமையாகவே இருந்தன. துர்நாற்றம் அதிகரித்த போதும் பழைய கோட்டையில் இருந்த அகதிகள் தங்களின் கழிப்பறைகளைச் சுத்தம் செய்ய மறுத்தார்கள். டில்லியில் பிரச்சனைகள் உச்சக்கட்டத்தை அடைந்த போது, அந்தக் கோட்டையில் தங்கியிருந்த முஸ்லீம்கள் செய்ய மறுத்த வேலையை செய்வதற்காக ஆயுதம் தாங்கிய காவலர்களின் உதவியுடன் இந்து துப்புரவுத் தொழிலாளர்கள் 100 பேரை, அவசரகாலக் குழு கோட்டைக்குள் அனுப்பி வைத்தது.*

டில்லியின் இன்னொரு சாபம் அதன் அதிகார வர்க்கம். பேரழிவுக் காலத்திலும் அது அசைந்து கொடுக்கவில்லை. ஹுமாயூன் கல்லறையில் இருந்த அகதிகள் கூடுதலாகக் கழிப்பறைகளை அமைக்கத் துவங்கியபோது புது டில்லி ஆணையாளர் அலுவலக அதிகாரி ஒருவர் கறாராக அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். 'அவர்கள் புல்வெளிகளின் அழகைக் கெடுப்பதாக' அவர் காரணம் சொன்னார். தவிர்க்க முடியாமல் காலரா பரவியது. பழைய கோட்டை பகுதியில் இந்தக் கொள்ளை நோயால் நாற்பத்தெட்டு மணி நேரத்தில் அறுபது பேர் இறந்தார்கள். உரிய நேரத்தில் தடுப்பூசி போடத் தவறியதை மறைப்பதற்காக அவர்களின் மரணம் வயிற்றுப் போக்கு நோயினால் ஏற்பட்டது என்று சுகாதாரத்துறை காரணம் கண்டுபிடித்துக் கூறியது. கடைசியாக அந்தத் துறையின் பிரதிநிதிகள் வந்து சேர்ந்தார்கள். 327 தொகுதி தடுப்பூசி மருந்துகளை

---

* இதே போன்ற நிகழ்வுகள் வேறு சில பகுதிகளிலும் இருந்தன. பாகிஸ்தானில் ஒரு அகதி முகாமில் இருந்த இந்துக்களும் சீக்கியர்களும் தங்களின் முஸ்லீம் பாதுகாவலர்களிடம் கசப்புணர்வுடன் ஒரு புகார் தெரிவித்தனர். தங்களின் கழிப்பறைகளைச் சுத்தம் செய்ய தீண்டத்தகாதவர்கள் இல்லாததால் தாங்கள் துர்நாற்றத்துக்கிடையே வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் கூறினர். ஜின்னாவின் தலைநகரமான கராச்சியிலிருந்து இந்துக்களில் தீண்டத்தகாதோர் வெளியேறி விட்டதால் அந்த நகரின் துப்புரவுப் பணிகளும் தெருக்களைச் சுத்தம் செய்யும் வேலைகளும் சீர்குலையத் துவங்கி விட்டன. இந்தச் சீர்கேட்டைத் தடுத்து நிறுத்த நகரின் முஸ்லீம் அதிகாரிகள் இந்து சமூகத்தில் இருந்தது போலவே தீண்டத்தகாதோர் பிரிவு ஒன்றை அறிவித்தனர். இருப்பினும் அவர்களைப் பறையர் என்று ஒதுக்கி வைப்பதற்குப் பதிலாக சலுகை பெற்ற பிரிவாக உருவாக்கினார்கள். பிறரிடமிருந்து அவர்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக, முஸ்லீம் தேசியக் காவலர்கள் அணிவது போல கைகளில் பச்சை மற்றும் வெள்ளை நிற துணிப்பட்டைகளை அணிந்து கொள்ள அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இந்தப் பட்டைகளை அணிந்தவர் யாராக இருந்தாலும் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்குமாறு காவல்துறையினருக்குக் கடுமையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

அவர்கள் கொண்டு வந்தனர். ஆனால் ஊசிகளையோ சிரஞ்சிகளையோ கொண்டு வரவில்லை.

இவ்வளவு பிரச்சனைகள் இருந்தபோதும் மவுண்ட்பேட்டன், நேரு, படேல் ஆகியோரால் அமைக்கப்பட்ட அவசர காலக் குழுவின் முயற்சிகள் பலன் அளிக்கத் துவங்கின. நகரம் முழுவதும் துருப்புகள் பணியமர்த்தப் பட்டார்கள். 24 மணி நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தொடர்ச்சியாக ஆயுத சோதனைகள் நடத்தப்பட்டன. மெல்ல மெல்ல வன்முறையின் வீச்சு குறையத் தொடங்கியது.

இந்த நாட்களில் ஏற்பட்ட சோதனைகள் மவுண்ட்பேட்டனையும் நேருவையும் மேலும் நெருக்கமாக்கின. தினமும் இரண்டு அல்லது மூன்று முறை முன்னாள் வைஸ்ராயை நேரு சந்தித்தார். 'சாதாரணமாக தனிப்பட்ட முறையில் நட்பு பாராட்டவும், அவரது இதயச் சுமையை இறக்கி வைக்கவும், என்னால் இயன்ற அளவு அவருக்குத் தர முடிந்த ஆறுதலைப் போல் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளவுமே' அந்த வரவு இருந்ததாக மவுண்ட் பேட்டன் அந்த நாட்களில் குறிப்பிட்டார். 'எனது இதயத்தில் உள்ள துயரங்களைப் போக்க யாருக்காவது எழுத வேண்டும் என்ற உணர்வைத் தவிர வேறெதற்காக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன் என்பதை நான் அறியேன்' என்ற தொடக்கத்துடன் சில நேரங்களில் நேரு அவருக்குக் கடிதங்களை எழுதி யிருக்கிறார்.

அந்தக் காலகட்டத்தில் தன்னைப் பற்றிய கவலையில்லாமல் அந்த இந்தியத் தலைவர் ஓடியாடி பணி செய்தார். ஒரு சில மாதங்கள் சென்ற பின் அவரது பெண் ரசிகைகளில் ஒருவர் இப்படிக் குறிப்பிட்டார்: '33 வயது டைரோன் பவர் (Tyrone Power) போலக் காட்சி அளித்த ஒரு மனிதர் இப்போது பெல்செனில் (Belsen - வடமேற்கு ஜெர்மனியில் லூனேபர்க் அருகே - 1943-45 - நாஜிகளால் அமைக்கப்பட்ட மரண முகாம் - மொ-ர்) மூன்றாண்டுகள் கழித்தவரைப் போல் ஆகிவிட்டார்.' ஒரு நாள் மார்பில் படும்படியாகத் தலையைத் தொங்கப் போட்டு ஐந்து நிமிடம் அவர் தூங்கியதை அவரது செயலாளர் எச்.வி.ஆர். ஐயங்கார் கண்டார்.

'நான் களைத்துப் போயிருக்கிறேன்' நேரு சொன்னார். 'இரவில் ஐந்து மணி நேரம் மட்டுமே நான் தூங்குகிறேன். ஆறுமணி நேரம் தூங்க விரும்புகிறேன். நீங்கள் எவ்வளவு நேரம் தூங்குவீர்கள்?' அவர் வினவினார்.

'ஏழு அல்லது எட்டு' என்பது அவரது செயலாளரின் பதில்.

முகச்சுளிப்புடன் நேரு அவரைப் பார்த்தார். 'இது போன்ற நேரங்களில், ஆறுமணி நேரம் அவசியம். ஏழு என்பது ஆடம்பரம். எட்டு என்பது கடும் குற்றம்' என்று அவர் சொன்னார்.

பிர்லா மாளிகையில் இருந்த காந்திக்கு டில்லி வன்முறையின் பரிமாணங்கள் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தன. பாகிஸ்தான் உருவாவதை மிகவும் உறுதியுடன் எதிர்த்த அந்த மனிதர், இப்போது இந்தியாவில் தங்கிவிட்ட முஸ்லீம்களுக்கு, ஜின்னாவுக்கு மாற்றான தெய்வமாகி விட்டார். காந்தி டில்லிக்கு வந்தவுடனேயே முஸ்லீம்களின் பிரதிநிதிகள் பிர்லா மாளிகைக்குள் வெள்ள

மென புகுந்தனர். சீக்கியர்கள் மற்றும் இந்துக்களின் கைகளில் தாங்கள் பட்ட துயரங்களை அவர்கள் பட்டியலிட்டனர். தலைநகரிலேயே தங்கியிருக்கு மாறும் காந்தியிடம் அவர்கள் வேண்டினர். அவர் இருப்பது தங்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதம் என்று கண்மூடித்தனமாக அவர்கள் கருதினர். திகைப்புற்ற மகாத்மா, 'டில்லியில் முன்பிருந்த அமைதி நிலை மீண்டும் திரும்பும் வரை அங்கிருந்து பஞ்சாபுக்குச் செல்லப் போவதில்லை' என்று ஒப்புக் கொண்டார்.

எந்தக் கொள்கைகளுக்காக காந்தி வாழ்ந்தாரோ அவற்றின் மீது, அன்றைய மங்கிய மாலை நேரத்தில் நம்பிக்கை வைத்தது போல் வேறெப்போதும் அவர் நம்பிக்கை கொண்டதில்லை. அவரது போதனைகள் மீது வேறெப்போதும் அவர் அவ்வளவு உறுதி கொண்டதில்லை. அவர் முன்பே கணித்திருந்தது போல் ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பிலிருந்து அவர் முரண்பட்டார். தென்னாப் பிரிக்காவில் கடைப்பிடித்த அன்பு, அஹிம்சை, மனிதகுலம் அனைத்துக்குமான கடவுள் நம்பிக்கை ஆகிய கொள்கைகளை அவர் பற்றி நின்றார். காந்தியைப் பொறுத்தவரை அவற்றின் தேவையில் மாற்றமில்லை; அவற்றின் மீதான அவரின் நம்பிக்கை இன்னமும் உறுதியாகவே இருந்தது. மாறியிருந்தது என்ன வென்றால் இந்தியாதான்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை எதிர்ப்பதற்குரிய வழியாக இந்தியாவின் மக்களிடம் அன்பையும் அஹிம்சையையும் போதிப்பது ஒரு வகையான தன்மையைப் பெற்றிருந்தது. கண்முன்னாலேயே குழந்தைகள் கொல்லப் படுவதை, மனைவியர் கற்பழிக்கப்படுவதைக் கண்ட ஆண்களுக்கு; தங்கள் கண்முன்னாலேயே தங்களின் உறவினர்களது தொண்டைகள் அறுக்கப் பட்டதைக் கண்ட பெண்களுக்கு; தங்களிடமிருந்த அத்தனையையும் இழந்து தவித்த மக்களுக்கு அன்பையும் மன்னிக்கும் குணத்தையும் போதிப்பது வேறு வகை தன்மையாக இருந்தது. வெறுப்பு வளையத்திலிருந்து தப்பிக்க தனது போதனைகள் மட்டுமே பயன்படும் என்று காந்தி முழுமையாக நம்பினார். ஆனால் அந்தப் போதனைகள் துறவிகளுக்குரியவை; இந்தியாவின் அந்த இலையுதிர்கால அகதி முகாம்களில் துறவிகள் யாரும் இருக்கவில்லை.

உடல் நிலை மோசமாக இருந்தபோதும் ஒவ்வொரு நாளும் காந்தி அந்த முகாம்களுக்குச் சென்றார். அங்கே பழிவாங்கத் துடித்துக் கொண்டிருப் போரைத் தன் வழிக்குக் கொண்டு வர அவர் பல வழிகளிலும் முயற்சி செய்தார். 'ஓ! அஹிம்சையின் தேவதூதரே! சொல்லுங்கள், நாங்கள் எப்படி வாழ்வது? ஆயுதங்களைக் கைவிடுமாறு நீங்கள் எங்களிடம் சொல்கிறீர்கள். ஆனால் பஞ்சாபில் கண்ணில் படும் இந்துக்களையெல்லாம் முஸ்லீம்கள் கொல்கிறார்கள். செம்மறியாடுகள் போல் எங்களைக் கசாப்பு செய்ய வேண்டும் என்பது தான் உங்கள் விருப்பமா?' அகதி முகாம்களில் இருந்த ஒருவர் இப்படி அலறினார்.

'யாரையும் கொல்லாமல், பஞ்சாபியரில் கடைசி மனிதனும் இறப்பதாக இருந்தால், பஞ்சாப் என்றும் அழிவற்ற புகழ் பெற்று விடும்' என்று காந்தி பதிலளித்தார். எத்தியோப்பியர்களுக்கும், யூதர்களுக்கும், செக் நாட்டவர் களுக்கும், பிரிட்டிஷாருக்கும் முன்பு அவர் அறிவுரை கூறியது போல இப்போது ஆத்திரம் அடைந்திருக்கும் அவரது நாட்டு இந்துக்களுக்கும்

அறிவுரை கூறினார்: 'தியாகத்தில் உறுதி கொண்டு அஹிம்சைக்கு உங்களை அர்ப்பணியுங்கள்.'

கோபம் மீறிடும் கூட்டமான சிரிப்பொலிதான் அவருக்குப் பதிலாகக் கிடைத்தது. 'பஞ்சாபுக்குப் போங்கள். நீங்களே பாருங்கள்.' கல்கத்தாவில் அவர் சாதனை செய்திருந்தாலும், முஸ்லீம் முகாம்களில் பல நேரங்களில் அவருக்கு நல்ல வரவேற்பு கிடைக்கவில்லை. ஒரு இடத்தில் ஒரு மனிதர் ஆதரவற்ற 2 மாதக் குழந்தையை அவரிடம் காட்டினார். அவரது கண்களில் கண்ணீர் வழிந்தது. அந்த முஸ்லீம்களுக்கு காந்தியால் ஆறுதல் கூற மட்டுமே முடிந்தது. 'தேவைப்பட்டால் கடவுளின் பெயரை உச்சரித்துக் கொண்டே இறந்து போங்கள்; ஆனால் அன்பை இழந்து விடாதீர்கள்.' இதைக்கேட்டு திகைத்த முஸ்லீம்கள் எள்ளி நகையாடுவதையே அவருக்குப் பதிலாக அளித்தனர்.

பழைய கோட்டை முகாமுக்குப் பாதுகாவலர்கள் யாருமின்றி அவர் சென்ற போது முஸ்லீம் அகதிகள் கும்பல் ஒன்று அவரது காரைச் சூழ்ந்து கொண்டு அவரைச் சபித்தது. சிலர் அதன் கதவை இழுத்துத் திறந்தார்கள். மனம் கலங்காத அவர் காரிலிருந்து வெளியே வந்து அவர்கள் மத்தியில் சென்றார். உண்ணாவிரதத்திலிருந்து அவரது குரல் மிகவும் சன்னமாகி விட்டதால், ஆத்திரமுற்ற அந்தக் கும்பலிடம் அவர் பேசியதை வேறொருவர் உரத்தக் குரலில் திருப்பிக் கூறினார்.

தன்னைப் பொறுத்தவரை 'இந்து, முஸ்லீம், சீக்கியர், கிருத்தவரிடையே வேறுபாடு இல்லை. எனக்கு அனைவரும் சமம்தான்' என்று அவர் சொன்னார். அந்த சகோதரத்துவ போதனைக்குக் கிடைத்த பரிசு - அவரைச் சுற்றியிருந்த, கோபம் கொண்ட முஸ்லீம்களிடமிருந்து கர்ஜனைக் குரலில் எழுந்த எதிர்ப்பு தான்.

அவர்களின் வன்முறையால் பழிவாங்கப்பட்ட முஸ்லீம்களுக்கான காந்தியின் இரக்கம், துன்பத்துக்கும் துயரத்துக்கும் மதமில்லை என்ற அவரின் வற்புறுத்தல், முஸ்லீம்களின் காயங்களும் இந்துக்களின் காயங்களைப் போல் கடுமையானவை தான் என்ற அவரது போதனை ஆகியவை இந்துக்களுக்கு ஏற்படுத்திய கோபத்தைப் போல் வேறெதுவும் இருக்கவில்லை. கல்கத்தாவின் அதிசயம் என்பது இந்திய முஸ்லீம்களிடம் அந்தச் சிறிய மனிதருக்கு நன்மதிப்பைப் பெற்றுத் தந்துள்ளது. ஆனால் அதே காரியம் பல இந்துக்களின் இதயத்தை அவருக்கு எதிராக மாற்றியிருக்கிறது.

உணர்ச்சி வசப்பட்டு, தனது சொந்தக் கொள்கைகளின் மீது தான் வைத்திருக்கும் விசுவாசத்திலிருந்து நழுவி விடும் மனிதரல்ல காந்தி. அவரது பிரார்த்தனைக் கூட்டங்களில் கிருத்துவ இந்து வழிபாட்டுப் பாடல்களை ஒன்றுகலப்பதும், கீதையின் வாசகங்களோடு குரானிலிருந்தும், புதிய - பழைய ஏற்பாடுகளிலிருந்தும் வாசகங்களைப் படிப்பதும் எப்போதும் அவருக்கு வழக்கம். பதற்றம் இருந்தாலும் டில்லி கூட்டங்களிலும் குரான் வாசகங்களைப் படிப்பதை அவர் தொடர்ந்தார்.

திடீரென்று ஒரு நாள் அவரது கூட்டத்திலிருந்து ஒரு வெறி பிடித்த குரல் வெளிப்பட்டது: 'அந்த வாசகங்களோடுதான் எங்களின் அன்னையரும் சகோதரிகளும் கற்பழிக்கப்பட்டனர். எங்கள் மக்கள் கொல்லப்பட்டனர்.'

'காந்தி முர்தாபாத் காந்தி ஒழிக' இன்னொரு குரல் அலறியது. அங்கிருந்த மற்றவர்களும் அவர்களோடு சேர்ந்து கோஷமிட்டார்கள். குழப்பம் ஏற்பட்டது. உறைந்து போன காந்தியால் மேலே தொடர முடியவில்லை. ஓங்கியெழுந்த எதிர்ப்புக்குரல்களால் அவர் பேச முடியாமல் அமைதியானார். பிரிட்டிஷாரும், தென் ஆப்பிரிக்காவின் போயர்களும் சாதிக்க முடியாததை, காந்தியின் சொந்த நாட்டு மக்கள் சாதித்து விட்டார்கள். அவரது வாழ்க்கையில் முதன் முறையாக பொதுவில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தை முழுமையாய் முடிக்க முடியாமல் போனது.

ஒரு நாள் இந்தியா முழுவதற்கும் அவன் பெயர் தெரியும் என்று கூறப்பட்ட மதன்லால் பாவா என்ற அந்த இளைஞனுக்குப் பழிவாங்குவதற்கான பாதை, தொடங்கியது ஒரு டாக்டரின் அலுவலகத்தில்தான். இந்த அலுவலகம் டில்லிக்குத் தென்கிழக்கே 194 மைல் தூரத்தில் குவாலியர் நகரில் இருந்தது. இந்த நகர்தான் மின்சார ரயில்கள் மீது மோகம் கொண்ட மகாராஜாவின் மாநிலத்திற்குத் தலைநகராக இருந்தது. மேலேறி உயர்ந்த வழுக்கைத் தலையோடும், பல்லில்லாத புன்னகையோடும் அந்த அலுவலகத்தில் இருந்த அந்த ஹோமியோபதி டாக்டர் தோற்றத்தில் காந்தியை ஒத்திருந்தார். தத்தாத்ரேயா பார்ச்சூர் ( Dattatraya Parchure ) என்ற அந்த டாக்டர் சீதா ஃபலாடி என்ற மருந்துக்காக குவாலியர் முழுவதும் புகழ் பெற்றிருந்தார். ஏலக்காய் விதைகள், வெங்காயம், மூங்கில் தளிர்கள், சர்க்கரை, தேன், ஆகியவற்றைக் கலந்து தயாரிக்கப்பட்ட இந்த இயற்கை வைத்திய மருந்தின் மூலம் மார்புச்சளி, நிமோனியா ஆகிய நோய்களுக்கு வைத்தியம் செய்தார்.

இதே போல் வேறு சில விஷயங்களிலும் அவர் புகழ் பெற்றவர். மார்புச் சளி பிரச்சனைக்காக மதன்லால் அந்த அலுவலகத்துக்குக் கூட்டி வரப்படவில்லை. பார்ச்சூருக்கு உண்மையான ஆர்வம் அரசியலில்தான். குவாலியரில் உள்ள இந்துத் தீவிரவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.எஸுக்கு அவர்தான் தலைவர்.

முஸ்லீம் எதிர்ப்பு வெறியரான பார்ச்சூர் 1000 ஆதரவாளர்களைக் கொண்ட தனி ராணுவம் ஒன்றைப் பராமரித்து வந்தார். இதைக் கொண்டு 60,000 முஸ்லீம்களை இந்தியாவிலிருந்து விரட்டுவேன் என்று அவர் பெருமையடித்துக் கொள்வார். அவரிடம் வரும் நோயாளிகளிடம் வசூலிக்கும் ஆறு அணாக்களில் (தற்போதைய 37 பைசாவுக்கு சமம் மொ-ர்) பெரும் பகுதியையும், அவர் திரட்டும் அரசியல் நிதிகளையும் கொண்டு தனது சிறிய ராணுவத்துக்கு தடிகளையும், கத்திகளையும், புலி நகங்களையும், துப்பாக்கிகளையும் வாங்கினார். இந்தப் படைக்குப் புதிய ஆட்களை அவர் எப்போதும் தேடிக் கொண்டேயிருப்பார். முஸ்லீம்கள் மீது வெறுப்போடும் ஆர்.எஸ்.எஸ்ஸில் இருந்த அனுபவத்தோடும் வந்துள்ள அந்த திடகாத்திரமான அகதி அவருக்குப் பொருத்தமான நபராகவே தோன்றினார். விரும்பியபடி பழி தீர்க்கும் வாய்ப்பை அளிப்பதாக மதன்லாலுக்கு பார்ச்சூர் உறுதியளித்தார். தன் மீதுள்ள பற்றுக்குப் பிரதிபலனாக மதன்லாலுக்கு உணவும் தங்கும் இடமும், அவனால் கொல்ல முடியும் அளவுக்கு முஸ்லீம்களையும் தருவதாக அந்த ஹோமியோபதி டாக்டர் கூறினார்.

மதன்லால் இதற்கு ஒப்புக் கொண்டான். பார்ச்சூரின் 'படைப்பிரிவுகளில்' ஒன்றினை அடுத்த ஒரு மாதத்துக்கு அவன் இயக்கினான். பாகிஸ்தானில்

அவனது தந்தையை முஸ்லீம்கள் கசாப்பு செய்ய முயற்சி செய்த அதே முறையில், போபாலிலிருந்து டில்லிக்கு ஓடிக் கொண்டிருந்த ஆதரவற்ற முஸ்லீம்களை அவன் கொன்றான். 'நிலையத்தில் நாங்கள் காத்திருந்தோம். ரயிலை நிறுத்தினோம். உள்ளே புகுந்தோம் அவர்களைக் கொன்றோம்' என்று மதன்லால் நினைவு கூர்ந்தான்.

அவர்களின் நடவடிக்கைகள் வெளிப்படையாகத் தெரியவந்த போது, டில்லியின் கோபத்துக்கு அவர்கள் ஆளானார்கள். ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியே கூட அவர்களைக் கண்டித்தார். கடைசியாக குவாலியரின் இந்து மகாராஜாவே அவர்களைக் கட்டுப்படுத்தி வைக்குமாறு பார்ச்சூருக்கு யோசனை கூறினார்.

விரக்தியடைந்த மதன்லால் பம்பாய்க்குப் புறப்பட்டான். தொழில்முறை அகதியாக அங்கு அவன் வாழ்க்கையை அனுபவிக்கத் தொடங்கினான். இந்த முறை தலைவனாக பாத்திரம் வகிப்பது தான் தனது வேலை என்று அவன் முடிவு செய்தான். அகதிகள் முகாம் ஒன்றில் பதிவு செய்து கொண்டான். ஐம்பது பேருள்ள இளம் ஆதரவாளர்கள் குழுவை சேர்த்துக் கொண்டான். பிறகு செயலில் இறங்கினான்.

'ஒவ்வொரு நாளும் பம்பாயில் உள்ள முஸ்லீம் குடியிருப்புகளுக்கு நாங்கள் செல்வோம். சிறந்த ஓட்டலுக்குள் நுழைவோம். இதற்கு முன் சாப்பிட்டிராத பொருள்களைக் கொண்ட உயர்ந்த வகை உணவுக்கு ஆர்டர் கொடுப்போம். அவர்கள் பணம் கேட்கும் போது, நாங்கள் அகதிகள் எங்களிடம் எதுவும் இல்லை என்று சொல்வோம். அவர்கள் அதை ஏற்காவிட்டால் நாங்கள் அவர்களை அடிப்போம். பொருள்களைப் போட்டு உடைப்போம்.

'மற்ற நேரங்களில் வீதிகளில் முஸ்லீம்களை அடிப்போம். அவர்களிட மிருந்து பணம் பறிப்போம். அல்லது முஸ்லீம் வியாபாரிகளின் தட்டுகளைப் பறித்துச் சென்று அவற்றில் உள்ள பொருள்களை விற்றுப் பணத்தை எங்களுடையதாக்கிக் கொள்வோம். ஒவ்வொரு நாள் இரவிலும் முகாமுக்கு வரும் எனது ஆட்கள் என்ன நடந்தது என்று சொல்வார்கள். அவர்கள் எடுத்துக் கொண்டு வந்ததை என்னிடம் கொடுப்பார்கள். நான் அதனைப் பங்கிடுவேன். அது ஒரு சுகமான வாழ்க்கை. மெல்ல மெல்ல நான் வசதியாகி விட்டேன்.'

விரைவிலேயே தலைமைப் பதவிக்கான உரிமையை நியாயப்படுத்த சிறிய திருட்டிலிருந்து பெரும் நடவடிக்கைகளுக்கு மாற வேண்டிய கட்டாயம் மதன்லாலுக்கு ஏற்பட்டது. முஸ்லீம்களின் பைராம் ( Bairam ) திருவிழாவுக்காக, இரண்டு ஆதரவாளர்களை அழைத்துக் கொண்டு மூன்று கையெறி குண்டுகளை எடுத்துக் கொண்டு, 132 மைல் தூரத்தில் உள்ள அகமத் நகர் என்ற நகரத்துக்கு அவன் பயணமானான். அங்கே சென்று கொண்டிருந்த முஸ்லீம் ஊர்வலத்தின் மீது குண்டுகளை வீசினார்கள். குண்டு வெடித்த போது, சிலமணி நேரம் பதுங்கியிருப்பதற்கு ஒரு இடம் தேடி முன்பின் அறியாத அந்த நகரின் சந்துகளுக்குள் மதன்லால் ஓடினான். திடீரென்று அவனுக்கு மிகவும் பரிச்சயமான ஒன்றைப் பார்த்தான். ஸ்வஸ்திக் சின்னம் பொறிக்கப்பட்ட ஆர். எஸ். எஸ். ஸின் காவி நிறக்கொடி தான் அது. டெக்கான் கெஸ்ட் ஹவுஸ் என்று அழைக்கப்பட்ட இடிந்து சிதைந்த ஓட்டல் ஒன்றின் முதல் மாடி பால்கனியிலிருந்து அது பறந்து கொண்டிருந்தது. அந்த ஓட்டலுக்குள் அவன் ஓடினான்.

அந்த ஓட்டல் நடத்துபவரின் அறைக்குள் திடுமென நுழைந்து 'ஒளிய எனக்கு இடங்கொடுங்கள்' என்று அவன் கேட்டான். 'முஸ்லீம்கள் ஊர்வலத்தில் இப்போது தான் நான் ஒரு குண்டினை வீசினேன்' என்றும் அவன் கூறினான்.

அந்த அலுவலகத்தின் மேசை முன் அமர்ந்திருந்தவர் உள்ளூர் ஆர்.எஸ். எஸ்.எஸ் தலைவர். உடல் பருத்து சற்று குள்ளமாயிருந்த விஷ்ணு கார்க்கரே (Vishnu Karkare) என்ற அந்த 37 வயது நபர்தான் டெகான் கெஸ்ட் ஹவுசின் உரிமையாளர். கார்க்கரே குதித்து எழுந்தார். நன்றி சொல்லும் பாவனையாக அவனது கைகளை மேல் நோக்கி உயர்த்தினார். பிறகு அவற்றை விரித்து குண்டு வீசிய இளைஞனை சகோதர பாசத்துடன் கட்டித் தழுவிக் கொண்டார். பழிவாங்கும் பாதை இனிமேல் மதன்லாலுக்குத் தனிமையுடையதாக இருக்காது.

## புது டில்லி, 2 அக்டோபர் 1947

சுதந்திர இந்தியாவும் அதனுடன் சேர்ந்து உலகமும், வாழ்ந்து கொண்டிருக்கும் மகத்தான இந்தியரின் எழுபத்தெட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடின. அவரது மக்களிடமிருந்தும் உலகம் முழுவதும் உள்ள நண்பர்களிடமிருந்தும் அன்பு நிறைந்த வாழ்த்துக்களைத் தாங்கிக் கொண்டு ஆயிரக்கணக்கான தந்திகளும், கடிதங்களும், செய்திகளும் பிர்லா மாளிகையில் உள்ள காந்தியின் அறைக்குள் வெள்ளமென குவிந்தன. ஒரு ஊர்வலமாக அகதிகளும், இந்து, சீக்கிய, முஸ்லீம் தலைவர்களும் அவரது அறைக்குள் வந்தனர். அவர்களின் காணிக்கையாக மலர்களையும், பழங்களையும் இனிப்புகளையும் அவரது காலடியில் சமர்ப்பித்தனர். நேரு, படேல், மவுண்ட்பேட்டனின் மனைவி, அமைச்சர்கள், செய்தியாளர்கள், அரசியல் தலைவர்கள் என இவர்களின் வருகையுடன் அந்த நாளுக்கு தேசிய விடுமுறை என்ற ஒரு முத்திரையும் பதிக்கப்பட்டது.

இருப்பினும் காந்தி தங்கியிருந்த இடத்தில் விடுமுறை நாளுக்கான உற்சாகம் இல்லை. இந்தியாவின் வயது முதிர்ந்த தலைவரின் உடல் பலவீனத்தைக் கண்டு பார்வையாளர்கள் அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். இதற்கும் மேல் வழக்கமான அவரது உற்சாக உணர்வைத் துயரம் சூழ்ந்து கொண்டிருப்பதையும் அவர்கள் கண்டனர். தாம் 125 ஆண்டுகள் வாழப் போவதாக ஒரு காலத்தில் சபதம் செய்தவர்தான் அந்த மனிதர். அஹிம்சை வீரன் ஒருவன் தனது பணியை நிறைவு செய்ய அவ்வளவு காலம் தேவை என்று அவர் காரணம் கூறினார். இப்போது அவரது வாழ்க்கையில் மேலும் ஓர் ஆண்டு கடந்து விட்டதைக் குறிக்கும் வகையில் அந்த நாளின் பெரும்பகுதியை பிரார்த்தனையிலும், உண்ணாவிரதத்திலும், நேசத்துக்குரிய ராட்டையுடனும் கழிக்க அவர் முடிவு செய்தார். தனது பிறந்த நாள் விழா அந்தப் பழங்காலக் கருவிக்கும் அது பிரதிநிதித்துவப் படுத்தும் சிறந்த பண்புகளுக்குமான விழாவாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். சுதந்திர இந்தியா இந்தப் பண்புகளை பழிவாங்கல் மற்றும் வன்முறையில் மூழ்கி மறந்து விட அவசரம் காட்டுகிறது என்றும் அவர் நினைத்தார்.

எல்லோரும் எனக்கு வாழ்த்துக்களை ஏன் சொரிகிறார்கள் என்று அன்று மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் வினவினார். 'அனுதாபங்களைத் தெரிவிப்பதுதான்' மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

'தற்போதைய பேரழிவு முடிவுக்கு வர வேண்டும் அல்லது 'அவன்' (கடவுள்) என்னைக் கொண்டு செல்ல வேண்டும் என்று பிரார்த்தியுங்கள். எரிந்து கொண்டிருக்கும் இந்தியாவில் இன்னொரு பிறந்த நாள் எனக்கு வருவதை நான் விரும்பவில்லை' என்று அவரது ஆதரவாளர்களிடம் சொன்னார்.

'வெற்றிப் பெருமிதத்துடன் தான் நாங்கள் அவரிடம் சென்றோம். வீட்டுக்கு கனத்த இதயங்களோடு திரும்பினோம்' என்று வல்லபபாய் படேலின் மகள் அந்த நாள் பற்றி அவரது நாட் குறிப்பில் எழுதியுள்ளார்.

சுதந்திர இந்தியாவின் வானொலி, அன்று மாலை சிறப்பு நிகழ்ச்சி ஒன்றின் மூலம் அவரது பிறந்த நாளை கவுரவித்தது. காந்தி அதனைக் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக தனிமையில் இருக்கவும், ராட்டையைச் சுழற்றவும், அதன் விர்ரெனும் கழற்சியில் மெல்ல வெளிப்படும் மனித குலத்தின் சோக கீதத்தைக் கேட்கவுமே அவர் விரும்பினார்.

## பஞ்சாப், செப்டம்பர் - அக்டோபர் 1947

வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து ஒவ்வொரு மோதலின் போதும், நிகழ்ந்தது போலவே பாவியல் கொடுமைகள் நிகழாமல் பிரிவினையின் துயரங்களும் முழுமையடையாது. மகிழ்ச்சியற்ற அந்த மாகாணத்தின் சாபமான அனைத்து அராஜகங்களும் அவர்களின் கற்பழிப்புக் களியாட்டங் கள் மூலம் மேலும் அழகூட்டப்பட்டன. அகதிகளின் வரிசைகளிலிருந்தும், கூட்டம் நிரம்பிய ரயில் வண்டிகளிலிருந்தும், தனியாக இருந்த கிராமங் களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான சிறுமிகளும் பெண்களும் கடத்தப் பட்டனர். நவீன காலத்தில் மிக அதிக அளவிலான கடத்தல் இதுவாகத்தான் இருக்கும்.

கடத்தப்பட்ட பெண் சீக்கியராகவோ, இந்துவாகவோ இருந்தால், அதனைத் தொடர்வது வழக்கமாக ஒரு மதச்சடங்காக இருக்கும். அந்தப் பெண், கடத்திய முஸ்லீமின் வீட்டுக்கோ அல்லது அந்தப்புரத்துக்கோ செல்லத் தகுதி பெறுவதற்காக பலவந்தமாக மதமாற்றம் செய்யப்படும். பாகிஸ்தான் நகரான மியான்வாலா அருகே ஒரு வழக்கறிஞரின் மகளான 16 வயது சந்தோஷ் நந்த்லால் என்ற இந்துப் பெண் கடத்தப்பட்ட பிறகு அந்தக் கிராமத்தின் மேயர் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

'சில தடவை என்னை அறைந்தார்கள்' அவர் நினைவு கூர்ந்தார்: 'பிறகு சிலர் மாட்டிறைச்சியுடன் என்னை நெருங்கி அதனைச் சாப்பிடுமாறு கட்டாயப்படுத்தினார்கள். எனது வாழ்நாளில் எப்போதும் நான் இறைச்சி சாப்பிட்டதில்லை. எல்லோரும் என்னைப் பார்த்து சிரித்தனர். நான் அழுதேன். ஒரு முல்லா வந்து குரானிலிருந்து சில வாசகங்களைக் கூறினார். அவற்றைத் திருப்பிச் சொல்லுமாறும் என்னைக் கட்டாயப்படுத்தினார்.'

பிறகு அவர் அந்தப் பெண்ணுக்குப் புதிய பெயர் சூட்டினார். சந்தாஷ் 'அல்லா ராக்கி' ஆனார். அதாவது 'கடவுள் காப்பாற்றிய பெண்.' கடவுள் காப்பாற்றிய அந்தச் சிறுமியை கிராமத்து ஆண்கள் மத்தியில் ஏலத்துக்கு விட்டனர். அந்தப் பெண்ணை வாங்கியவர் ஒரு மரம் வெட்டி. 'அவர் கெட்ட மனிதர் அல்ல'. அவருக்கு ஏற்பட்ட கால் நூற்றாண்டு கால சோதனைக்குப் பின் நன்றியோடு நினைவு கூர்ந்தார்: 'அவர் என்னை இறைச்சி சாப்பிடுமாறு ஒரு போதும் வற்புறுத்தவில்லை'

பஞ்சாபில் இப்படி நடப்பதைத் தடுப்பதற்காக, சீக்கியர்களின் பத்தாவது குரு, முஸ்லீம் பெண்களுடன் உடலுறவு கொள்வதற்கு எதிராகத் தனது ஆதரவாளர்களுக்கு சில சிறப்பான கட்டுப்பாடுகளை விதித்தார். இதன் விளைவு என்னவாக இருந்தது என்றால், முஸ்லீம் பெண்கள் ஒரு குறிப்பிட்ட வகையான பாலியல் வல்லமையைப் பெற்றிருக்கிறார்கள் என்ற கதை சீக்கியர்களிடம் பரவிவிட்டது. இதன் காரணமாக சீக்கியர்கள் குருவின் அறிவுரைகளை மறந்தனர். தங்களின் வல்லமையைக் கட்டவிழ்த்து விட்டனர். மனநிலை திரிந்து வெறிபிடித்த அவர்கள் எல்லா இடங்களிலும் முஸ்லீம்களைத் தேடினர். கடத்தப்பட்ட முஸ்லீம் பெண்களின் விற்பனை, பஞ்சாபில் அவர்கள் வாழ்ந்த பகுதிகளில் அதிகரித்து விட்டது.

மவுண்ட்பேட்டனின் பர்மா முகாமில் இருந்த மூத்த வீரரான பூட்டாசிங் என்ற 55 வயதான சீக்கியர், செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் மாலை அவரது வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது அவருக்குப் பின்னால் பயங்கரமான ஒரு அலறல் சத்தத்தைக் கேட்டார் சீக்கியர் ஒருவரால் துரத்தப்படும் ஒரு இளம் பெண் அவரை நோக்கி ஓடி வருவதைப் பார்த்தார். பூட்டாசிங்கின் மீது விழுந்த அந்தச் சிறுமி, 'என்னைக் காப்பாற்றுங்கள், என்னைக் காப்பாற்றுங்கள்!' என்று வேண்டினாள்.

அந்தப் பெண்ணுக்கும் அவரைத் துரத்தி வந்தவருக்கும் இடையே அவர் நின்றார் என்ன நிகழ்ந்துள்ளது என்பதை அவர் உடனடியாகப் புரிந்து கொண்டார். நடந்து செல்லும் ஒரு அகதிகள் வரிசையிலிருந்து சீக்கியர் ஒருவரால் துரத்தப்பட்ட முஸ்லீம் சிறுமி அவர் அந்த மாகாணத்தின் துயரங்களால் அவரது நிலத்துக்கு அழையாமல் வந்திருக்கும் அந்த வரவு முற்றிலும் எதிர்பார்க்காத ஒன்று. மிகவும் வருத்திக் கொண்டிருக்கும் அவரது தனிமைப் பிரச்சனைக்குத் தீர்வாகக் கடவுளே இந்தச் சந்தர்ப்பத்தை அளித்திருப்பதாக பூட்டாசிங் கருதினார். கூச்ச சுபாவம் கொண்ட அவர் கல்யாணம் செய்து கொள்ளாதவர். முதல் காரணம் அவருக்கு ஒரு மனைவியை வாங்கும் திறன் அவரது குடும்பத்துக்கு இல்லை. அடுத்தது அவரது இயல்பான கூச்ச சுபாவம்.

'எவ்வளவு பணம்?' பெண்ணைத் துரத்தி வந்தவரிடம் அவர் கேட்டார்.

'ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்' என்பது பதிலாக இருந்தது.

பூட்டாசிங் பேரம் கூட பேசவில்லை. அவர் குடிசைக்குள் சென்று அழுக்கேறிய ரூபாய் நோட்டுக் கட்டுகளுடன் திரும்பி வந்தார். வங்கி நோட்டுகளால் வாங்கிய அந்தப் பெண்ணுக்கு வயது 17 அவரை விட முப்பத்தெட்டு ஆண்டு இளைய பெண். அவள் பெயர் ஸெனீப் (Zenib).

*ராஜஸ்தானைச் சேர்ந்த சிறு நில உடைமையாளரின் மகள். தனிமையில் இருந்த வயதான அந்த சீக்கியருக்கு அவள் ஒரு விருப்பமிகு விளையாட்டுப் பொருள் ஆனாள். பாதி மகள்; பாதி மனைவி; விசித்திரமான அவளின் பழக்கம் அவரது வாழ்க்கையை முழுமையாக மாற்றிவிட்டது. இதுவரை அவரால் யார் மீதும் பொழியப்படாத அன்பு ஸெனீப் மீது வெள்ளமெனப் பாய்ந்தது. அவளுக்கு புடைவை, சோப்புக்கட்டி, பூவேலைப்பாடுகள் நிறைந்த செருப்புகள் என விதவிதமாக ஏதாவது பொருள்கள் வாங்க, பூட்டாசிங் ஒரு நாள் விட்டு ஒரு நாள் அருகே உள்ள கடைவீதிக்குச் சென்று விடுவார்.*

*நாட்டை விட்டு ஓடிவருவதற்கு முன் அடிக்கப்பட்டும் கற்பழிக்கப்பட்டும் அல்லலுற்ற ஸெனீபுக்கு தனிமையில் இருந்த, வயதான அந்த சீக்கியர் அன்பும் ஆதரவும் அளித்தார். இது அவளைத் திக்குமுக்காடச் செய்தது. எதிர்பாராத தாகவும் இருந்தது. தவிர்க்க முடியாமல் அவளும் அவரிடம் பேரன்பு செலுத்தி னாள். விரைவிலேயே பூட்டாசிங்கின் வாழ்க்கை சுழல்வதற்கு அச்சாணியாக அவள் மாறினாள். பகல் நேரத்தில் அவருடன் வயல் வெளிகளில் இருப்பாள். அதிகாலையிலும் அந்தி மாலையிலும் அவரது எருமை மாடுகளிடம் பால் கறப்பாள். இரவில் அவருடன் படுத்துக் கொள்வாள். அவர்களது குடிசை யிலிருந்து பதினாறு மைல் தூரத்திலிருந்த கிரேண்ட் ட்ரங்க் நெடுஞ்சாலையில் கவலையடைந்த அகதிகள் கூட்டம் அங்கும் இங்கும் அலைபாய்ந்து கொண்டிருந்தன. பூட்டாசிங்கின் பன்னிரண்டு ஏக்கர் நிலம் வெறுப்பு நிறைந்த பனிப்பாறையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட ஒரு பனித்துண்டாக இருந்தது.*

*அந்த இலையுதிர்காலத்தில் ஒரு நாள், சீக்கியர்களின் பாரம்பர்ய முறைப்படி காலைப் பொழுது விடிவதற்கு மிக முன்னதாகவே, வித்தியாசமான புல்லாங்குழல்கள் இசைப்போர் அந்தச் சாலையின் வழியாக பூட்டாசிங்கின் இல்லத்துக்கு வந்தார்கள். பாடகர்களும், தீப்பந்தங்களை ஏந்திக் கொண்டு வளவளவென்று பேசியபடி அண்டை வீட்டார்களும் புடைசூழ, வளையங்களாலும் வெல்வெட் துணியாலும் அலங்கரிக்கப்பட்டு, குதிரை மீது அமர்ந்து பூட்டாசிங் அவரது வீடு வரை பயணம் செய்தார். அழுக்கு ரூபாய் நோட்டுக் கட்டுகளைக் கொடுத்து வாங்கப்பட்ட அந்த முஸ்லீம் சிறுமி அவரது மணப்பெண்ணாக இருந்தாள்.*

*பூட்டாசிங்கைத் தொடர்ந்து குரு ஒருவர் சீக்கியர்களின் புனித நூலான கிரந்த சாஹிபைக் கையில் ஏந்தியபடி அந்த வீட்டுக்குள் வந்தார் அங்கே அவர் வாங்கிவந்த புதிய சேலையை அணிந்து பதற்றத்துடன் ஸெனீப் காத்திருந்தாள். புதிய ஊதாநிற தலைப்பாகை அணிந்து மகிழ்ச்சியுடன் காணப்பட்ட பூட்டாசிங் ஸெனீபுக்குப் பக்கத்தில் தரையில் அமர்ந்தார் திருமண வாழ்க்கையின் கடமைகளை குரு அவர்களுக்கு விளக்கினார். பிறகு புனித நூலிலிருந்து சில பகுதிகளை அவர் படித்தார். அவரைத் தொடர்ந்து அங்கே கூடியிருந்தவர்களும் அந்த வாசகங்களை முணுமுணுத்தனர்.*

*இந்தச் சடங்கு முடிந்ததும் பூட்டாசிங் எழுந்து நின்றார். பூவேலைப்பாடு கொண்ட நீண்ட வஸ்திரம் ஒன்றின் ஒரு முனையை பூட்டாசிங்கும் மற்றொரு முனையை ஸெனீபும் பற்றிக் கொண்டனர். அவரைப் பின் தொடர்ந்து அந்தப் புனித நூலை ஸெனீப் நான்கு முறை சுற்றி வந்தாள். நான்காவது சுற்று*

முடிந்தவுடன் அவர்களின் திருமணச் சடங்கு முடிந்தது. வெளியே அவர்களின் வயல்வெளிகள் மீது அடுத்த நாளின் சூரியன் உதித்து எழுந்திருந்தான்.

ஒரு சில வாரங்களுக்குப் பின், பஞ்சாபியர்களுக்கு துன்பத்தையும் துயரத்தையும் கொண்டு வந்த பருவகாலம், பூட்டாசிங்கிற்கு கடைசியான அன்பளிப்பைக் கொடுத்திருந்தது. அவரது வாரிசைத் தாம் கொண்டிருப்பதாக அவரது மனைவி தெரிவித்தாள். எப்போதாவது இதைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்ததில்லை. வயதான சீக்கியரையும் முஸ்லீம் சிறுமியையும் தனித்துப் பிரித்து தனிக்கருணை காட்டியது போல் இது அமைந்தது. ஆனால் பிரிவினையால் லட்சக்கணக்கான மக்களுக்கு ஒரு நாள் நடக்கப்போகும் நீண்ட கொடிய சோதனை அவர்கள் வாழ்க்கையிலும் விரைவில் துவங்கவிருந்தது.

அரசு இல்ல வரைபடங்களின் மீதிருந்த சிவப்புக் குண்டூசிகளின் வளைந்து நெளிந்த பாதை மெதுவாக ஒரு அகதிகள் முகாமுக்கு வந்திருந்தது. எந்த ஒரு நாடும் சந்தித்திராத பிரச்சனைகளை இந்தியாவும் பாகிஸ்தானும் அவற்றின் எல்லைப்பகுதிகளில் சந்தித்தன. ஊழி வெள்ளம் போல் லட்சக்கணக்கான மக்கள் வீடின்றி திரிந்தனர். அவர்கள் ஒரு அதிசயத்தை எதிர்பார்த்திருந்தனர் அவர்கள் சுதந்திரம் என்ற சர்வரோக நிவாரணியைப் பெற்றிருக்கிறார்கள் தங்களின் துன்பங்களைத் துடைக்கும் சக்தியை அது எப்படியாவது தங்களின் தலைவர்களுக்கு அளிக்கும் என்று நம்பினார்கள்.

ஜலந்தர் அகதி முகாமில் திகைப்புற்ற, வயதான ஒரு சீக்கியர் சுற்றித் திரிந்து கொண்டிருப்பதை டி.எஃப்.கராக்கா (D.F.Karaka) என்ற ஒரு இந்தியப் பத்திரிகையாளர் கண்டார். பள்ளிக் குழந்தைகளின் நோட்டுப் புத்தகங்களி லிருந்து கிழிக்கப்பட்ட ஒரு கத்தை காகிதங்களை அந்த முதியவர் கையில் வைத்திருந்தார். பாகிஸ்தானில் அந்த சீக்கியர் இந்துக்கள் கைவிட்ட பசுமாடு, குதிரை, கட்டில், குடங்கள், தட்டுகள் ஆகியவற்றின் பட்டியலை அந்தக் காகிதங்களில் ஒரு பொது நல ஊழியர் எழுதிக் கொடுத்திருந்தார். ஒவ்வொரு பொருளுக்கு எதிரேயும் அதன் மதிப்பையும் அவர் குறித்திருந்தார். மொத்த மதிப்பு 45,000 ரூபாய். இந்தப் பட்டியலை அரசுக்கு அளிக்கப் போவதாகவும் அரசு அவருக்குப் பணம் கொடுக்கும் என்றும் அவர் கராக்காவிடம் கூறினார்.

'எந்த அரசிடம்?' கராக்கா கேட்டார்.

'எனது அரசிடம்' அந்த வயதான சீக்கியர் பதிலளித்தார். பிறகு தனது அறியாமையை உணர்ந்து, 'சாஹிப், எனது அரசாங்கத்தை நான் எங்கே காண்பதென்று தயவு செய்து எனக்குச் சொல்வீர்களா?' என்று கேட்டார்.

வசதிப் படைத்தவர்களும் வறியவர்கள் போலவே வருந்தினார்கள் அமிர்தசரஸில் ஒரு சீக்கிய அதிகாரி தனது காரையே தனியார் அகதிமுகாமாக மாற்றியிருந்தார். அந்தக் காருக்குள் அவரின் அரை டஜன் நண்பர்கள் அடைந்திருந்தார்கள். இரண்டு மாதங்களுக்கு முன் லாகூரில் அவர்கள் லட்சாதிபதிகள். இப்போது அவர்கள் பிச்சாதிபதிகள். டில்லி நோக்கிச் சென்ற அகதிகள் ரயில் வண்டிக்குப் பாதுகாவலராகச் சென்ற ஒரு அதிகாரி, அடக்க முடியாமல் அழுது கொண்டிருந்த ஒரு அகதி பற்றி நினைவு கூர்ந்தார். நன்றாக

உடையணிந்த அந்த மனிதர் தாம் அனைத்தையும் இழந்து அழிந்து விட்டதாக அவரிடம் கூறினார்.

'உங்களிடம் உண்மையிலேயே ஒன்றுமில்லையா?' அந்த அதிகாரி கேட்டார்.

'5,00,000 ரூபாய் மட்டும் வைத்திருக்கிறேன்.' அந்த மனிதர் பதில் கூறினார்.

'அப்படியானால் இன்னமும் நீங்கள் பணக்காரர்தானே!' அதிகாரி திருப்பிக் கேட்டார்.

'இல்லை' பதிலளித்த அவர் தொடர்ந்தார், 'நேருவையும் காந்தியையும் கொல்வதற்கு இந்தப் பணம் முழுவதையும் நன்கொடையாகத் தரப் போகிறேன்.'

நம்ப முடியாத அளவுக்கு வந்து குவிந்த அகதிகளை சமாளிப்பது சிரமமான காரியமாகவே இருந்தது. லட்சக்கணக்கான போர்வைகள், கூடாரங்கள், தடுப்பூசிகளைத் தேடி சேகரித்து அவற்றை விநியோகிக்க வேண்டியிருந்தது. அவர்கள் உயிரோடிருக்கத் தேவையான பெருமளவு உணவை வழங்குவதற்கு கடின முயற்சி தேவைப்பட்டது. முகாம்கள் நிரம்பி வழிந்ததால், நிலைமை மிகவும் சமாளிக்க முடியாததாக இருந்தது. இறந்த உடல்கள், அழுகிய பொருள்கள், நோயாளிகள் ஆகியவற்றிலிருந்து எழுந்த துர்நாற்றம் ஏரிக்கரைக்கு அப்பால் காலை நேரத்தில் ஏற்படும் மூடுபனிபோல் எங்கும் பரவியிருந்தது.

'சுதந்திரத்தின் நாற்றம் தான் இது' என்று அமிர்தசரஸ் அருகே இதே போன்ற முகாமுக்குக் காரில் சென்று கொண்டிருந்த ஒரு சீக்கிய கலோனல் கசப்புணர்வோடு கூறினார். காருக்குள் இருந்த இன்னொருவரான இந்தியப் பத்திரிகையாளர் குறிப்பிட்டார்: 'இறந்து கொண்டிருக்கும் தாயாருக்குப் பக்கத்தில் அமர்ந்து விழிப்போடு கவனித்துக் கொண்டிருந்தான் ஒரு இளைஞன். ஆனால் இது அவளது கடைசி காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அல்ல. அவள் இறந்தவுடன் உடல் மீது போர்த்தியிருக்கும் போர்வையைப் பறித்துச் செல்லலாம் என்பதே அவனது நோக்கமாக இருந்தது'

செயின்ட் ஜான் அமைப்பின் விறைப்பான சீருடையும் பழுப்பு நிறத் தலைமுடியும் கொண்ட அந்த ஆங்கிலேயப் பெண்மணி அகதி முகாம்களில் இருந்தவர்களுக்குப் பரிச்சயத்துடன் இருந்தார் அவர்களால் அந்தப் பெண்மணி நேசிக்கப்பட்டார். காந்தியைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால் டில்லியின் மற்ற அரசியல் தலைவர்கள் எவருக்கும் அகதிகளிடம் பரிச்சயமோ அவர்களிடமிருந்து நேசமோ இருக்கவில்லை. பிரிவினைக்கு முந்தைய வாரங்கள் ஒரு வகையில் அவரது கணவருக்குச் சொந்தமாக இருந்தது போல இந்தியாவின் சோதனைக் காலமான பிந்தைய வாரங்கள் எட்வினா மவுண்ட்பேட்டனுடையதாக இருந்தன. இரக்கமின்றி வெயில் எரிக்கும் அந்தக் கோடை காலத்தில், அவரது கணவராலும் மிஞ்ச முடியாத சுயகட்டுப்பாட்டுடன் அவர் பணிகளைச் செய்தார். அழுக்கடைந்த அந்த முகாம்களில், நோயுற்றவர்களுக்கும் இறந்து கொண்டிருப்பவர்களுக்கும் அவர் செய்யும் பணிவிடைகள் இளமைக்காலத்தில் மனம்போன போக்கில் ஆடம்பரமாக வாழ்ந்ததற்கான பிராயச்சித்தங்கள் போல் இருந்தன. இயல்பான நிர்வாகத் திறனுடன் கூடிய அவரது இரக்க குணம், அவரது ஞானத்தால் விரிவடைந்த அர்ப்பணிப்பு, அணி திரட்டும் திறமை ஆகியவை ஆயிரக்கணக்கான

இந்தியர்களுக்கு எட்வினா மவுண்ட்பேட்டனை மறக்க முடியாத மங்கையாக ஆக்கியிருந்தன.

தினம்தோறும் காலை 6 மணிக்கு அவரது மேசைக்கு வந்து விடுவார். அதற்கு முன் அவர் சுமார் ஐந்து மணி நேரமே தூங்கியிருப்பார். எல்லாநாட்களும் அவர் ஒவ்வொரு முகாமுக்கும், ஒவ்வொரு மருத்துவமனைக்கும் செல்வார் அங்கேயெல்லாம் விசாரணை செய்வார்; ஆய்வு செய்வார், விமர்சனம் செய்வார், குறைகளை சரி செய்வார். இவையெல்லாம் அக்கறையின்றி சடங்குத்தனமான செயல்களாக இருக்கவில்லை. ஆயிரம் பேர் தங்கியிருக்கும் ஒரு முகாமுக்கு எத்தனைத் தண்ணீர்க் குழாய்கள் இருக்க வேண்டும் என்பதும், ஒருவரும் விடுபட்டுப் போகாமல் எப்படித் தடுப்பூசி போடுவது என்பதும், தூய்மையையும் சுகாதாரத்தையும் எப்படிப் பராமரிப்பது என்பதும் அவருக்கு நன்கு தெரியும்.

அகதிகள் முகாம்களிலிருந்து சுட்டெரிக்கும் வெயிலில் சுமார் பன்னிரண்டு மணிநேரம் பயணம் செய்து ஒரு நாள் மாலை ஆறு மணிக்கு அவசரகாலக் குழு கூட்டத்துக்கு அவர் வந்திருந்ததை எச்.வி.ஆர். ஐயங்கார் நினைவு கூர்ந்தார் எட்வினாவின் உதவியாளர், அந்தக் குழு கூடியிருக்கும் அறைக்குப் பக்கத்து அறையில் தூக்கத்தில் மூழ்கிவிட்டார். எட்வினாவோ, 'அமைதியாகவும், சுருக்கமாகவும், நம்பிக்கையோடும், துல்லியமாகவும், அனைத்து வகையான பிரச்சனைகள் மீதான தனது கருத்துக்களையும் தீர்வுக்கான பரிந்துரைகளையும்' கூறிக் கொண்டிருந்தார்.

விமானப் பயணத்தை அவர் வெறுத்தார். அப்படியே பயணம் செய்தாலும் அந்தச் சமயங்களிலெல்லாம் அவர் மிகவும் சுகவீனமுற்றார். இருப்பினும் நேரத்தை மிச்சப்படுத்த முடியும் என்று நினைக்கும் போதெல்லாம் அவர் விமானத்தில் பயணம் செய்தார். தரையிறங்குவதற்கு முன் வாந்தியெடுத்து அழுக்கடைந்த உதடுகளைக் கழுவி மீண்டும் சாயம் பூசிக் கொள்வார். அவசரமான பிரச்சனை அவருக்காகக் காத்திருந்தால் அனைத்துப் பாதுகாப்பு விதிகளையும் புறக்கணித்து விட்டு, விமானத்தைச் செலுத்துமாறு ஆர்.ஏ.எஃப். போர் வீரர்களுக்கு உத்தரவிடவும் அவர் தயங்கியதில்லை.

இந்தக் காரியத்தை நீங்கள் செய்வது பொருத்தமானதாக எனக்குத் தோன்றவில்லை என்று அவரிடம் சொல்வது முட்டாள் தனமான ஒன்றாகவே இருக்கும். 'அப்படி நீங்கள் சொல்லிவிட்டால் உடனே அந்தக் காரியத்தை அவர் செய்து விடுவார்' என்று அவரது கணவரின் உதவியாளராக இருந்த லெஃப்டினன்ட் கமாண்டர் ஹோரவெஸ் நினைவு கூர்ந்தார்.

எந்தக் காட்சியும் அவருக்கு அருவருக்கத் தக்கதல்ல; எந்தக் குடிசையும் அழுக்கானதல்ல; எந்தச் செயலும் இழிவானதல்ல; எந்த இந்தியரும் தீயவரல்ல. கணுக்கால் அளவு சேறு நிறைந்த பகுதியில் மரணப்படுக்கையில் இருக்கும் மிகக்கொடிய காலரா நோய் கண்டிருக்கும் ஒருவரின் அருகே அமர்ந்து அவரது வாழ்க்கையின் கடைசி நேரத்தில் அமைதியாக நெற்றியை வருடி விடுவார் எட்வினா என்று ஹோரவெஸ் கூறியிருக்கிறார்.

துயரம் மிகுந்த அந்த வாரங்கள் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் பீதியை ஏற்படுத்தும் காலகட்டமாக இருந்தது. அதே சமயம் இது சாகசங்களைச்

செய்வோரின் காலமாகவும் இருந்தது. இவர்களில் பலரும் அறியப்படாத, நன்றி கூறப்படாத வீரர்கள், அவர்களின் செயல்கள் முடிந்தவுடனேயே மறக்கப் பட்டு விட்டனர். அவர்களின் உணர்வுகள் பற்றி அமிர்தசரஸைச் சேர்ந்த அஸ்வினி குமார் என்ற ஒரு இந்து காவல்துறை அதிகாரி தொகுத்துரைத்தார். 'அந்தக் கொடுமையான காலகட்டத்தில் ஒருவர் தீய செயல்களிலிருந்து விலகியிருக்க ஒரே வழி தினமும் ஒருவரையாவது பாதுகாக்க முயற்சி செய்வதுதான்' என்று அவர் கூறினார். குறிப்பிடத்தக்க முறையிலும், வெற்றிகர மாகவும் இந்தச் சீரிய பணியில் அவர் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். பல மாதங்களுக்கு முஸ்லீம் நண்பர்களுக்கு அடைக்கலம் அளித்த அல்லது கொலைவெறி கும்பலிடமிருந்து பாதுகாத்த சீக்கியர்கள் இருந்தனர். அகமது அன்வர் என்ற 22 வயதான ரயில்வே குமாஸ்தாவை ஒரு கூட்டம் கொல்ல முயற்சி செய்த போது 'அவர் ஒரு கிருத்தவர்' என்று குரல் கொடுத்து காப்பாற்றிய, பெயர் தெரியாத, ஒரு வியாபாரி போன்ற இந்துக்களும் இருந்தனர். தனது நாட்டுக்காரர்களால் அழிக்கப்படவிருந்த சீக்கியர்கள் குழு ஒன்றைக் காப்பாற்றுவதற்காக உயிரிழந்த எல்லைப்புற துப்பாக்கி படைப்பிரிவின் கேப்டன் போன்ற முஸ்லீம்களும் இருந்தார்கள்.

அந்தப் பெரும் குழப்பத்திலிருந்து மெல்ல மெல்ல ஒழுங்கும் அமைதியும் உருவாகத் தொடங்கியது. இருபக்க ராணுவங்களிலும் கட்டுப்பாட்டுணர்வு மேம்பட்டது. ரயில் வண்டிகளையும் அகதிகளின் கூட்டத்தையும் பாதுகாப்பதற்கான தீவிர திட்டங்கள் வகுக்கப்பட்டன. 'ஒரு புதிய அரசுக்கு நிர்வாக ரீதியில் கிடைத்த சிறந்த பாடம்' என்று நேருவால் வர்ணிக்கப்பட்ட அவசர காலக்குழு பஞ்சாபில் தனது பிடிமானத்தை ஏற்படுத்தத் துவங்கியது. அப்போதும் லட்சக்கணக்கான அகதிகள் தப்பிச் செல்வது நடந்தது. ஆனால் அவர்கள் தப்பிச் செல்வதற்குக் காரணமாக இருந்த வன்முறைகள் குறைந்தன. அவசரகாலக் குழுவுக்கு அளிக்கப்பட்ட ஒரு உளவுப் பிரிவு அறிக்கையில் இடம் பெற்ற ரத்தினச்சுருக்கமான தொடர் ஒன்று அதன் கடுமைக்குறைவை அடையாளப்படுத்தியது.

'ரெயில் பெட்டியின் ஜன்னல்கள் வழியாக முஸ்லீம்கள் தூக்கியெறியப் படுவது குறைந்து வருகிறது' என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

துரதிருஷ்டமான அந்தக் கூட்டங்களுக்குக் கடைசியான ஒரு சாபமும் காத்திருந்தது. மழைக்காலம் வந்து விட்டது. ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் சுட்டெரிக்கும் வெயிலிலிருந்து பாதுகாக்க பஞ்சாபின் துயரம் தோய்ந்த லட்சக்கணக்கான மக்கள் மழையை வேண்டினார்கள். கடைசியாக வானம் இதுவரை மறைத்துச் சேமித்து வைத்திருந்த மழை முழுவதையும் சீற்றத்தோடு கொட்டித் தீர்த்து விட்டது. கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் இந்தியா இது போன்ற மழையைக் கண்டதில்லை. சினம் நிறைந்த பஞ்சாபின் கடவுளர் கூட்டம் தங்களை திருப்திப்படுத்தாத மக்கள் மீது பொழிந்த சாபம் போல் அது இருந்தது. அடைமழையால் பஞ்சாபின் ஐந்து நதிகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்தது. அந்த மாகாணத்துக்குப் பெயர் கொடுத்த அந்த ஐந்து நதிகள், அதன் மக்களைப் பாதுகாத்து, உணவளித்து, ஆக்கம் செய்த ஐந்து நதிகள் இப்போது அவர்களின் அழிவுக்கான கடைசிக் கருவிகளாகி விட்டன.

இமயமலையின் மாபெரும் சரிவுகளிலிருந்து இறங்கி உருகும் பனியால் வெள்ளம் பெருகி சமவெளிப் பகுதிகளில் பாய்ந்தது. வீட்டின் உயரத்துக்குத் தண்ணீர் சுவர்போல் எழுந்தது. கோடை சூரியனால் வறண்டு தாரை போல் ஓடிய ஆறுகளில் இப்போது நுங்கும் நுரையுமாய் வெள்ளம் பெருக்கெடுத்தது. பிரிட்டிஷ் ஆட்சியில் அமைக்கப்பட்ட வெள்ள அபாய அறிவிப்பு முறை பிரிவினையாலும் பஞ்சாபின் குழப்பங்களாலும் பாதிக்கப்பட்டிருந்தன. முன்னறிவிப்பு ஏதுமின்றி செப்டம்பர் 24 மாலையில் பஞ்சாபின் மையப்பகுதிக்குள் அந்தப் பெருவெள்ளம் புகுந்தது. உலகத்தின் இறுதியான ஊழிக்காலம்போல் உறுமியபடி ஆறுகளில் கரைபுரண்ட வெள்ளத்தில் ஆயிரக்கணக்கான அகதிகள் மூழ்கினார்கள். அன்று இரவு தூங்குவதற்காக ஆற்றுப் படுகைகளில் படுத்திருந்தவர்கள் அவர்கள்.

அப்துர் ரஹ்மான் அலி என்ற சிறு நில உடைமையாளரான ஒரு முஸ்லீம், தனது கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்களுடன், வறண்டு கிடந்த பியாஸ் நதிக்கரைகளில் அன்றைய இரவைக் கழிக்க தங்கினார். பாகிஸ்தானும் பாதுகாப்பான அதன் எல்லைப் பகுதியும் இன்னும் ஐம்பது மைல் மட்டுமே இருந்தது. இதனால் அந்த முகாமில் இருந்தவர்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் ஏற்பட்டிருந்தது. ஆனால் அவர்களில் பலருக்கு எல்லைப் பகுதி ஒரு கனவாகவே முடிந்தது. அன்றிரவு பியாஸ் நதியில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்திலிருந்து ஒரு சிலர் மட்டுமே பிழைத்தார்கள்.

முகாமுக்கு வெளியே உயரமான நிலப்பகுதியில் அவரது மாட்டு வண்டி நிறுத்தப்பட்டிருந்தது. பாய்ந்து வரும் தண்ணீரின் இடி போன்ற சத்தத்தாலும் மக்களின் அலறல் சத்தத்தாலும் அவர் விழித்துக் கொண்டார். தனது குடும்பத்தினருடன் வண்டி மீது தாவி ஏறினார். தண்ணீர் மட்டம் வண்டியின் சக்கரங்கள் இணைக்கப்பட்ட அச்சாணி வரை உயர்ந்தது. பிறகு அதன் சட்டங்கள் வரை, அவர்களின் முழங்கால் வரை, கடைசியாக அவர்களின் மார்பு வரை என அதிகரித்து தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டது. உணவின்றி, குளிரில் நடுங்கியபடி, தண்ணீரையே பார்த்துக் கொண்டு இரண்டு நாட்களுக்கு அலியின் குடும்பம் வண்டியில் தொற்றிக் கொண்டிருந்தது. தாறுமாறாக ஓடும் வெள்ளத்தின் வேகத்தில் மாட்டு வண்டிகள் உடைந்து நொறுங்கின. உப்பிப் போன விலங்குகளும், அவர்களின் நண்பர்கள் மற்றும் அண்டை அயலாரின் உடல்களும் அடித்துச் செல்லப்பட்டன.

பாய்ந்து வரும் தண்ணீரின் வேகத்துக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் பல பத்தாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பாலங்கள் அவற்றின் தூண்களிலிருந்து சரிந்து வீழ்ந்தன. சில பாலங்கள் மூழ்கின. அமிர்தசரஸுக்கு வெளியே பியாஸ் ஆற்றின் மேல் கட்டப்பட்டுள்ள ரயில்வே பாலம் அதன் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதை இந்திய ராணுவத்தின் கர்னல் அஸ்வினி துபே பார்த்தார். மாட்டு வண்டிகள், அவற்றில் கட்டப்படும் காளைகளோடு அவற்றின் உரிமையாளர்களும் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். ஆற்று நீரின் வேகத்தோடு சென்று பாலத்தின் அடிக்கட்டுமானப் பகுதிகளில் மோதும் போது 'வண்டிகள் தீப்பெட்டிகள் போல சிதறின. மாடுகளும் மனிதர்களும் கொல்லப்பட்டனர்.'

இந்திய அதிகாரி ஒருவர் கவலையுடன் எச்சரித்து சத்தம் போட்டதால் லைஃப் பத்திரிகையின் ஊழியர் மார்கரெட் புர்க்கே ஒயிட் இடுப்பளவு தண்ணீரில் ஓடி ரவி ஆற்றின் கரைகளில் ஏறி உயிர் பிழைத்தார். கடைசியாக வெள்ளம் வடிந்த போது அவர் மீண்டும் அந்த இடத்துக்குச் சென்றார். ஒரு ரயில் பாதை வளைவுக்கும் ஆற்றுக்கும் இடைப்பட்ட புல்வெளிப் படுகையில் அன்றிரவு 4000 முஸ்லீம்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். ஆனால் ஆயிரத்துக்கும் குறைவானவர்கள் தான் பிழைத்தார்கள். அந்தப் புல்வெளிப் படுகை தற்போது 'போர்க்களம் போல் காட்சியளித்தது. வண்டிகள் குடை சாய்ந்து கிடந்தன. வீட்டு உபயோகப் பொருள்களும் விவசாயக் கருவிகளும் இடிபாடுகளுக்கிடையேயும் சேற்றுக்குள்ளேயும் செருகிக் கிடந்தன.'

குர்சரண் சிங் என்ற காவல்துறையின் சீக்கிய அதிகாரி நினைவில் அந்தக் கடைசி சோகத்தின் அடையாளமாக எப்போதும் ஒரு காட்சி நிழலாடியது. தண்ணீர் வற்றி வடியத் தொடங்கிய அந்த நாளின் அதிகாலையில், மேலெழுந்த சூரிய வெளிச்சத்தில் அதனை அவர் பார்த்தார். அவரின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்த அகதிகளின் உடற்கூறுகளுக்கு மேலே அரசமரத்தின் கிளைகளில் கூர்க்காப் படைவீரரின் உடல் தோரணம் போல் தொங்கிக் கொண்டிருந்தது. அவரின் அங்க அவயவங்களைக் கழுகுகள் ஒவ்வொன்றாய் சுவைத்துக் கொண்டிருந்தன.

*

அச்சம் நிறைந்த அந்த வாரங்களில் எவ்வளவு பேர் உயிரிழந்தார்கள் என்பதை எப்போதும் எவராலும் கணக்கிட இயலாது. அவர்களைச் சுற்றி அவ்வளவு குழப்பங்கள் நிறைந்திருந்தன. அந்த அளவுக்கு அந்த மாகாணத்தின் நிர்வாகம் சீர்குலைந்திருந்தது. எனவே துல்லியமான ஆய்வு செய்வது சாத்தியமில்லாதிருந்தது. சாலையோரங்களில் இறந்து கிடந்தவர்கள், கிணறுகளில் வீசி எறியப்பட்டவர்கள், கொளுத்தப்பட்ட வீடுகளிலும் கிராமங்களிலும் தகனமாகிப் போனவர்கள் கணக்கெடுப்புக்கு அப்பாற்பட்டவர்கள் ஆனார்கள். மிகைப்படுத்தப்பட்ட மதிப்பீடுகள் மரணத்தின் எண்ணிக்கையை ஒன்று அல்லது இரண்டு மிலியன் (பத்து அல்லது இருபது லட்சம்) என்றன. இந்தப் படுகொலைகள் பற்றி முதன் முதலில் ஆய்வு செய்த இந்தியரான நீதிபதி ஜி.டி.கோஸ்லா* இந்த எண்ணிக்கையை 5,00,000 என்றார். அந்தக் காலகட்டத்தின் இரண்டு முன்னணி பிரிட்டன் வரலாற்றாசிரியர்களான பெண்டரல் மூன்+, அந்தச் சமயத்தில் இவர் பாகிஸ்தானில் பணியாற்றிக் கொண்டிருந்தார், எச்.வி.ஹாட்சன்# ஆகியோர் சாவு எண்ணிக்கை 2,00,000க்கும் 2,50,000க்கும் இடைப்பட்டதாக இருக்கும் என்கின்றனர். பஞ்சாபுக்கு இந்தியாவைச் சேர்ந்த ஆளுநரும், அந்த மாகாண நிகழ்வுகளில் மிகவும் தொடர்புடைய அதிகாரியுமான சர் சந்துலால் திரிவேதி சாவு எண்ணிக்கையை 2,25,000 என்று மதிப்பிட்டுள்ளார்.

---

* Stern Reckoning by Gopal Das Khosla, Bombay : Jaico Books 1963.

\+ Divide and Quit by Penderlel Moon, London : Chatto & Windus Ltd., 1961.

\# The Great Divide by H.V. Hodson, London : Hutchinson and Co., 1969.

*ஆனால் அகதிகளின் எண்ணிக்கையை சரியாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அந்த இலையுதிர் காலத்திலும் அதை அடுத்த குளிர்காலத்திலும் வாகா வழியாகவும், சுலமாங்கி, பல்லோக்கி மலை முகடுகளைக் கடந்தும் ஒரு வாரத்தில் 5,00,000 அடுத்த வாரத்தில் 7,50,000 என அகதிகள் வெள்ளமென வந்து கொண்டிருந்தனர். அவர்களின் வருகை முழுமை அடைந்தபோது எண்ணிக்கை பத்தரை மிலியனை (ஒரு கோடியே ஐந்து லட்சத்தை) எட்டியது. வங்காளத்தில் மிகவும் அமைதியான சூழ்நிலை இருந்த போது எல்லைப்பகுதிகளைக் கடந்து மேலும் ஒரு மிலியன் (பத்துலட்சம்) பேர் வந்தனர். தவிர்க்க முடியாமல், பஞ்சாபின் துயரங்கள் காரணமாக கடைசி வைஸ்ராய் மீதும் இந்தியத் தலைவர்கள் மீதும் விமர்சன அலைகள் வீசின. நீண்டகாலம் இந்திய விடுதலைக்கு எதிரியாக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் மக்களின் நிலையைப் பார்த்து ஒளிவு மறைவற்ற திருப்தியோடு விமர்சனம் செய்தார். 'பரந்த மனப்பான்மையும், சகிப்புத் தன்மையும், பாரபட்சம் இல்லாமலும் நடந்த பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்' பல தலைமுறைகளுக்கு அமைதியாக வாழ்ந்த மக்கள் இப்போது 'தன் இனத்தைத் தானே தின்றழிக்கும் அரக்கர்களைப் போல் இரக்கமின்றி ஒருவர் மீது ஒருவர் பாய்ந்து அழித்துக் கொள்கிறார்கள்' என்று அவர் கூறினார்.*

*'ஒருவேளை பிரிட்டன் தவறான வழியில் சென்று மிகுந்த வேகத்துடன் செயல்பட்டு விட்டதோ' என்று அக்டோபர் துவக்கத்தில் கிளமெண்ட் அட்லி, இஸ்மே பிரபுவிடம் கேட்டார் ஒன்று மட்டும் நிச்சயம். முடிந்த அளவு விரைவுபடுத்த வேண்டும் என்ற மவுண்ட்பேட்டனின் கொள்கையை இந்தியத் தலைவர்கள் அங்கீகரித்தது மட்டுமின்றி, விதிவிலக்கின்றி, அவர்களும் அப்படிச் செய்யுமாறு வற்புறுத்தினார்கள். 'விரைவுதான் ஒப்பந்தத்தின் சாரம்' என்று மீண்டும் மீண்டும் கூறுவதை ஜின்னா நிறுத்திக் கொள்ளவே இல்லை. உடனடியாக அதிகாரம் கைமாற்றப்பட்டால்தான் காமன்வெல்தில் உறுப்பினராவதை காங்கிரஸ் ஒப்புக் கொள்ளும் என்பதைத் தெளிவுபடுத்தியதன் மூலம் வல்லபபாய் படேலும் விரைவு என்பதைத்தான் பேரத்துக்கான பொருளாகக் கையாண்டார். ஒரு முடிவுக்கு வருவதைத் தாமதம் செய்வதால் இந்தியாவில் உள்நாட்டுப் போர் ஏற்படும் அபாயம் இருக்கிறது என்று நேரு தொடர்ந்து வைஸ்ராயை எச்சரித்தார். பிரிவினைக்கு எதிர்ப்புத் தெரிவித்த காந்தி கூட ஒரு விஷயத்தை மவுண்ட்பேட்டனிடம் தொடர்ந்து வலியுறுத்தினார்: இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேறுங்கள். என்ன விலை கொடுத்தேனும் மாகாணம் மாகாணமாக மக்களின் விருப்பமறிந்து வெளியேற்ற வேண்டும் என்ற ஆபரேஷன் மேட்ஹவுஸ் என்ற திட்டத்தை வலியுறுத்தி வந்தவர் வேவல் பிரபு; மவுண்ட்பேட்டனுக்கு முன் வைஸ்ராயாக இருந்த இவரும் கூட விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை இதே அளவுக்கு ஏற்றுக் கொண்டிருந்தார்.*

*1947இல் இந்தியாவுக்கு வந்த போது கண்டறிந்த நிலைமைகள் காரணமாக, வேறு ஏதாவது வழிமுறையைப் பின்பற்றினால் அது இந்தியாவை முன் எப்போதும் கண்டிராத உள்நாட்டுக் கலகத்தில் மூழ்கடித்து விடும் என்றும் இதனைக் கட்டுப்படுத்தும் ஆற்றலோ ஆதார வளங்களோ பிரிட்டனுக்கு இல்லாமல் போய் விடும் என்றும் மவுண்ட்பேட்டன் பிரபு உறுதியாக நம்பினார்.*

பிரிவினை ஒப்பந்தம், பஞ்சாபில் உருவாக்கிய வன்முறையின் அளவு, மவுண்ட்பேட்டனோ அல்லது அவருக்கு ஆலோசனை கூறிய நிபுணர்களோ எதிர்பார்த்ததை விட மிக மோசமாக இருந்தது. அந்த மாகாணத்தில் அமைதி ஒழுங்கைப் பராமரிப்பதற்காக 55,000 வீரர்களுடன் உருவாக்கப்பட்ட பஞ்சாப் எல்லைப் பாதுகாப்புப் படை, முன்மாதிரி இல்லாத அளவுக்கு திடீரென்று எழுந்த அரசியல் கொந்தளிப்பில் மூழ்கிப் போனது. பொங்கியெழுந்த கலவரத்தின் விளைவுகள் எவ்வளவு பயங்கரமானதாக இருந்தாலும் அவை இந்தியாவின் ஒரு மாகாணத்துக்குள், இந்திய மக்கள் தொகையின் பத்தில் ஒரு பகுதிக்குள் அடங்கி விட்டன. வேறு ஏதாவது ஒரு வழிமுறையைக் கையாண்டு இருந்தால், இப்போதைய பிரிவினை பஞ்சாபில் மட்டும் ஏற்படுத்திய பயங்கரத்தை, அது அகில இந்தியா முழுவதும் ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்ற அச்சம் இருந்தது.

பிரிவினையால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான மக்கள் மறுவாழ்வு பெறுவதற்கும் ஒருங்கிணைவதற்கும் பல மாதங்கள் கஷ்டப்பட வேண்டியிருந்தது. சுதந்திரத்திற்கு அவர்கள் விலை கொடுத்தார்கள். ஆனால் அந்த விலை வருங்காலங்களுக்கு அதன் கசப்பான தடங்களையே பதித்து விட்டுச் சென்றது. அந்த இலையுதிர் காலத்தில் வேகத்தோடும் விரக்தியோடும் எழுந்த கூச்சலில் நம்ப முடியாத அதன் வெளிப்பாட்டைக் காண முடிந்தது. பஞ்சாபின் ஒரு முகாமில் பட்டினியால் அவதிப்பட்ட அகதிகளில் ஒரு குழுவினர் பிரிட்டிஷ் அதிகாரியைப் பார்த்து ஆவேசத்துடன் அலறினார்கள்: 'மீண்டும் பிரிட்டிஷ் ராஜ்யத்தைக் கொண்டு வாருங்கள்!'

## பதினைந்து

# 'காஷ்மீர் – காஷ்மீர் மட்டுமே!'

### *காஷ்மீர், 22-24 அக்டோபர் 1947*

*ஸ்ரீநகரில் உள்ள காஷ்மீர் மகாராஜா அரண்மனையில், ஜெகஜோதியான விளக்கொளியுடன் திகழ்ந்த தர்பார் மண்டபத்தில் நடந்த அந்தச் சடங்கு இந்து பஞ்சாங்க முறைப்படியான மிகப் பழமையான விழாக்களில் ஒன்றின் உச்சக்கட்டமாகும். ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாத வளர்பிறை காலத்தில், சிவபெருமானின் துணைவியான துர்க்காதேவி எருமைத் தலை கொண்ட அரக்கன் மகிஷாசுரனுடன் ஒன்பது நாட்கள் போர் புரிந்ததாகக் கூறப்படும் இந்து புராணக்கதையைக் குறிக்கும் வகையில் ஒன்பது நாள் விழா நடத்தப்படும். நூற்றாண்டு காலமாக அவரது முன்னோர்கள் செய்தது போலவே, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்து கூடியிருந்த செல்வந்தர்களும், பிரமுகர்களும், கடமையுணர்வுடனும் முறைப்படியும் அன்பின் அடையாள மாகவும் அளித்தவற்றைப் பெற்றுக் கொண்டதுடன், 1947 அக்டோபர் 24 அன்று மாலை, காஷ்மீர் மகாராஜா ஹரிசிங் அந்த விழாவை நிறைவு செய்தார் ஒருவர் பின் ஒருவராக அவர்கள் மகாராஜாவின் சிம்மாசனத்தை நெருங்கி, அன்பின் அடையாளமாகப் பட்டுக் கைக்குட்டையில் சுற்றப்பட்ட தங்க நாணயத்தை மன்னரின் உள்ளங்கையைப் பற்றி அளித்துச் சென்றனர்.*

*வெடுவெடுப்பான மகாராஜா என்றாலும் அதிர்ஷ்டக்கார மனிதர். ஊதாரித்தனமான மன்னர் பரம்பரையில் தங்களின் சிம்மாசனங்களில் இன்னமும் அமர்ந்திருக்கிற மூன்று மன்னர்களில் இவரும் ஒருவர். மற்ற இரண்டு பேர்களில் ஒருவர் ஜுனாகடின் நவாப். இங்கே மனிதனாய்ப் பிறப்பதை விட நாயாய் பிறப்பது நல்லது (இந்த மகாராஜா நாய்க்கு விமரிசையாகத் திருமணம் செய்து வைத்தவர் என்பது நூலின் முற்பகுதியில் உள்ள செய்தி. மொ-ர்) இன்னொருவர் ஹைதராபாத் நிஜாம். இந்தியாவின் முக்கியப் பகுதியில் அமைந்த ஜுனாகட் என்ற சிறிய தேசத்தை புவியியல் மற்றும் தர்க்க நியாயங்களுக்கு மாறாக பாகிஸ்தானில் சேர்த்து விட முயற்சி செய்யப்பட்டது. இந்த தேசத்து மன்னரின் நாட்கள் எண்ணப்படுகின்றன. இன்னும் இருவார காலத்துக்குள் இந்திய ராணுவம் அவரது தேசத்துக்குள் நுழையப் போகிறது. அவரது மனைவிகள், ஆசையுடன் வளர்த்த பிராணிகள் ஆகியவற்றை விமானத்தில் நிறைத்துக் கொண்டு பாகிஸ்தானுக்குப் பறந்து செல்ல அவருக்குப் போதிய அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இதே போல் நிஜாமின் நாட்களும் எண்ணப்படுகின்றன. பிரிட்டனும் இந்தியாவும் தனது தேசத்தின் சுதந்திரத்தை*

அங்கீகரிக்க வேண்டும் என்பதற்கு நீண்ட காலமாக அவர் போராடினாலும் கடைசி வைஸ்ராய் புறப்பட்ட சிறிது காலத்திலேயே சுதந்திர இந்தியாவில் அவரது தேசம் வலுக்கட்டாயமாக இணைக்கப்படுவதை அவர் காணப் போகிறார்.

தந்திரமான வயிற்றுவலியிலிருந்து ஹரிசிங் வெகுநாட்களுக்கு முன்பே குணமாகி விட்டார். இவர் இணையப் போவது இந்தியாவிலா பாகிஸ்தானிலா என்பதை ஆகஸ்ட் 15க்குள் அறிய விரும்புவதாக லூயி மவுண்ட்பேட்டன் கூறிய போது இந்தத் தந்திரமான வயிற்று வலியைக் காரணம் காட்டிதான் முடிவை ஒத்தி வைத்தார். தங்கக் குடையின் கீழ் தாமரைப் பூ போன்ற சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த அவர் தலையில் வைரம் பதித்த தலைப்பாகை அணிந்திருந்தார். அவரது வம்சத்தின் பெருமைமிகு சொத்தான, பவழம் பதித்த ஒரு டஜன் முத்துக்களைக் கொண்ட மாலையைக் கழுத்தில் அணிந்திருந்தார். ட்ரிக்கா நதிக்கரையில் அவரது பழைய நண்பருடன் இணைந்திருந்த கனவுலகிலேயே ஹரிசிங் இன்னமும் சஞ்சரித்தார். அழகான இந்தப் பள்ளத்தாக்கினை ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் கிழக்கிந்திய கம்பெனி அவரது மூதாதையரிடம் விற்றது. இதற்கு அவர்கள் பெற்றது ஆறு மிலியன் (அறுபது லட்சம்) ரூபாய். மேலும், காஷ்மீர் மலைப்பகுதிகளில் மேய்ந்த வெள்ளாடுகளின் கழுத்தில் வளர்ந்த மென்மையான ரோமங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆறு கம்பளிகளையும் ஆண்டுதோறும் காணிக்கையாக வழங்க வேண்டும். அந்தப் பள்ளத்தாக்கின் சுதந்திரத்தைப் பாதுகாக்க சிம்மாசனத்தில் நீடிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். இருப்பினும் அது கனவாகிப் போனது. நாற்பத் தெட்டு மணி நேரத்துக்குள் ஒரு அராஜகமான செயல்மூலம் அவருக்கு விழிப்பேற்படுத்தப்பட்டது.

ஜெகஜோதியாய் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ஹரிசிங்கின் தர்பார் மண்டபத்தில் காஷ்மீரின் செல்வந்தர்கள் ஆட்சியாளரிடம் தங்களுக்குள்ள விசுவாசத்தைக் காட்டும் வகையில் சில சடங்குகளைச் செய்து கொண்டிருந்த அதே சமயத்தில், மற்றொரு கூட்டத்தினர் ஜீலம் நதிக்கரையில் ஸ்ரீநகருக்கு ஐம்பது மைல் கிழக்கே எந்திரங்கள் நிறைந்த அறைக்குள் நுழைந்தார்கள். அவர்களில் ஒருவன் வெடிமருந்துக் குச்சிகளை விசைக்கோல்கள் மற்றும் அளவு காட்டும் கருவிகள் கொண்ட எந்திரக் குவியல்களுடன் சேர்த்துக் கட்டினான். பிறகு எச்சரிக்கை ஒலியுடன் தீக்குச்சியால் பற்றவைத்து விட்டு அந்தக் கட்டிடத்திலிருந்து வெளியே ஓடினான். பத்து நொடிகளுக்குப் பின், காதைப் பிளக்கும் ஒரு சத்தம், மஹுரா மின் நிலையத்தை ஆட்டம் காணச் செய்தது. அதன் பிறகு பாகிஸ்தான் எல்லைப்பகுதியிலிருந்து லடாக் மற்றும் சீனாவின் மலைச்சுவர்கள் வரை விளக்குகள் அணைந்தன.

பயங்கரமான ஒரு தாக்குதலால், ஹரிசிங்கின் அரண்மனையில் படிகங் களாலான சரவிளக்குகளில் ஒளி வீசிக்கொண்டிருந்த நூற்றுக்கணக்கான பல்புகளும் கண்மூடின. அரண்மனை இருளில் மூழ்கியது. அதே சமயத்தில் அவரது அழகிய தலைநகரம் முழுவதும் மின்சாரம் மாயமாய் மறைந்தது. தால் ஏரியின் பளபளக்கும் நீர்ப்பரப்பில் நிலைத்திருந்த, மலர்களால் அலங்கரிக்கப் பட்ட படகு வீடுகளிலிருந்த இருபதுக்கும் அதிகமான ஆங்கிலேய ஆண்களும் பெண்களும் மருட்சி ஏற்படுத்தும் இந்த இருளுக்கான காரணத்தை

ஆராய்ந்தார்கள். ஓய்வு பெற்ற கலோனல்கள், சிவில் ஊழியர்கள் ஆகியோரால் காரணத்தை அறிய முடியவில்லை. ஆனால் விளக்குகள் அணைந்த சம்பவம், மாதத்துக்கு முப்பது பவுண்ட் ஸ்டெர்லிங் கொடுத்தால், ஜஹாங்கீர் பேரரசர் கனவு கண்ட மலர்களும் சூரிய ஒளியும் உள்ள சொர்க்கத்தில் ஒரு மனிதர் வாழ முடியும் என்ற அவர்களின் பிரச்சனையற்ற வாழ்க்கைக்கு முடிவை அறிவிக்கும் அபசகுனமாக இருந்தது.

மகாராஜாவின் மூத்த மகனான கரன்சிங் காலில் அறுவை சிகிச்சை செய்திருந்ததால் அவரது தந்தையின் அரண்மனையில் இருந்த அவரது படுக்கை அறையில் இருந்தார். அப்போது இமய மலையின் பனிச்சரிவுகளிலிருந்து காஷ்மீர் பள்ளத்தாக்கு நோக்கி வீசும் காற்றின் சோகக் குரலை அவர் கவனித்தார். பிறகு அவரது தந்தையும், அவரின் விருந்தினர்களும், ஆயிரக்கணக்கான காஷ்மீர் மக்களும் போல், இளம் கரன்சிங்கும், காற்றின் கசப்பான ஓட்டத்தோடு கலந்து இன்னொரு ஒலி வருவதையும் கேட்டார். இருட்டில் படுத்திருந்த அவருக்கு அதனைக் கேட்கும் போது ரத்தமே உறைந்து போனது. நகரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கும் குள்ளநரிகள் தூரத்தில் எழுப்பும் ஊளைச்சத்தம் தான் அது.

1947 அக்டோபர் 24 இரவில் காஷ்மீர் பள்ளத்தாக்கையும் ஸ்ரீநகரையும் நோக்கி இன்னொரு வகையான நரிகளின் கூட்டமும் வந்து கொண்டிருந்தன. ஹரிசிங்கின் சுதந்திரக் கனவுக்கு முற்றுப்புள்ளி வைக்க கடந்த நாற்பத்தெட்டு மணி நேரத்தில் நூற்றுக்கணக்கான பத்தான் பழங்குடியினர் அவரது தேசத்துக்குள் நுழைந்தனர். தன்னைப் பாதுகாக்கும் என்று எண்ணி தனிப்பட்ட முறையில் அவர் ஏற்படுத்தியிருந்த ராணுவத்திலிருந்த பெரும்பாலோர் தப்பியோடி ஆக்ரமிப்பாளர்களுடன் சேர்ந்து கொண்டனர் அல்லது மலைப் பகுதிகளுக்குள் ஓடி மறைந்து விட்டனர்.

முன்னறிவிப்பில்லாத, காட்டு மிராண்டித்தனமான, இந்தத் தாக்குதலுக்கு மூல காரணம், இரண்டு மாதங்களுக்கு முன், ஆகஸ்ட் 24 வெள்ளியன்று, முகமது அலி ஜின்னா அவரது பிரிட்டிஷ் ராணுவ செயலாளர்களிடம் விடுத்த அப்பாவித்தனமான வேண்டுகோள் தான் என்று நிச்சயமாகக் கூறலாம். சிக்கல் நிறைந்த ஒரு வார கால பேச்சுவார்த்தைகளால் களைத்துப் போயிருந்த ஜின்னா அவரது நுரையீரலில் இருந்த கடுமையான நோயினால் பலவீனமடைந்து தனக்கு ஓய்வு தேவை என்று முடிவு செய்தார். எனவே காஷ்மீருக்குச் சென்று, செப்டம்பர் மத்தியில் இரண்டு வாரம் தங்கி ஓய்வெடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறு அவரது செயலாளர் கர்னல் வில்லியம் பிர்னியைப் (Col.William Birnie) பணித்தார்.

ஓய்வெடுக்க அவர் காஷ்மீரைத் தேர்ந்தெடுத்தது முற்றிலும் இயற்கையானதே. முக்கால் பங்கு முஸ்லீம் மக்கள் தொகையைக் கொண்ட காஷ்மீர் பாகிஸ்தானின் பகுதியாக இல்லாமல் போனது எப்படி என்று அவரது நாட்டு மக்களில் பெரும்பாலோரைப் போல் ஜின்னாவுக்கும் நம்ப முடியாததாகவே இருந்தது.

அந்த பிரிட்டிஷ் அதிகாரி ஐந்து நாட்களுக்குப் பிறகு திரும்பினார். அவர் கொண்டு வந்த பதில் ஜின்னாவைத் திடுக்கிடச் செய்தது. சுற்றுலாப் பயணியாகக்

கூட அவர் தனது மண்ணில் காலடி வைப்பதை ஹரிசிங் விரும்பவில்லை. பாகிஸ்தான் தலைவர்கள் கருதியது போல் காஷ்மீரில் நிலைமை உருவாக வில்லை என்பதன் முதல் அறிகுறியாக இந்த பதில் இருந்தது. காஷ்மீர் நிலைமை யைக் கணிக்கவும், மகாராஜாவின் உண்மையான நோக்கத்தைத் தீர்மானிக்கவும் ஜின்னாவின் அரசு நாற்பத்தெட்டு மணி நேரத்தில் ஒரு ஒற்றரை காஷ்மீருக்குள் ஊடுருவச் செய்தது.

அவர் திரும்பி வந்து அளித்த அறிக்கை அதிர்ச்சியளிக்கும் ஒன்றாக இருந்தது. ஹரிசிங்குக்கு அவரது தேசம் பாகிஸ்தானுடன் சேர்வதில் விருப்பமில்லை. பாகிஸ்தானை நிறுவியவர்களுக்கு இதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே மகாராஜாவை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்பது பற்றி முடிவு செய்ய, தேர்ந்தெடுக்கப்பட்ட குழு உறுப்பினர்களின் ரகசியக் கூட்டத்தை, லியாகத் அலிகான் லாகூரில், செப்டம்பர் மாத மத்தியில் நடத்தினார்.

நேரடியாகத் தாக்குதல் நடத்துவதென்ற யோசனையை அந்த சூழ்ச்சிக் காரர்கள் உடனடியாக நிராகரித்து விட்டனர். இது இந்தியாவுடன் போரிட வழிவகுக்கும். ஆனால் அத்தகைய செயலில் ஈடுபட பாகிஸ்தான் ராணுவம் தயாராக இல்லை. மற்ற இரண்டு வாய்ப்புகள் பற்றி அவர்களுக்குள் விவாதித்த னர். சாந்தர்ஸ் பல்கலைக்கழகப் பட்டதாரியும் சதித் திட்டத்தில் ஆர்வமுள்ள வருமான கர்னல் அக்பர்கான் முதல் யோசனையைத் தெரிவித்தார். காஷ்மீரில் கருத்து வேறுபட்டிருக்கும் முஸ்லீம் மக்களுக்கு பாகிஸ்தான் ஆயுதங்களையும் பணத்தையும் கொடுத்து அவர்களின் கோபத்தைத் தூண்டி விட வேண்டும் என்று அவர் யோசனை கூறினார். இதற்குப் பல மாதங்கள் தேவைப்படலாம். ஆனால் இறுதியில், நாற்பது அல்லது ஐம்பதாயிரம் காஷ்மீரிகள் ஸ்ரீநகருக்குள் புகுந்து, பாகிஸ்தானுடன் இணைப்பதை ஒப்புக் கொள்ளுமாறு மகாராஜாவுக்கு நெருக்கடி கொடுப்பதைக் காண முடியும் என்று அவர் உறுதியளித்தார்.

இரண்டாவது யோசனை இதை விட மிகவும் சூழ்ச்சி நிறைந்தது. இதனைத் தெரிவித்தவர் எல்லைப் புற மாகாணத்தின் முதலமைச்சர். துணைக்கண்டத்து மக்களுக்கு அச்சுறுத்தலாகவும் மிகவும் தொல்லை தருவோராகவும் விளங்கிய வடமேற்கு எல்லைப் பகுதியில் உள்ள பத்தான் பழங்குடி மக்களை ஈடுபடுத்தும் திட்டம் அது. அடங்கா குணம் கொண்ட பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டும் உரிமை பிரிட்டனிடமிருந்து பாகிஸ்தானிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கராச்சியில் உள்ள அவர்களின் முஸ்லீம் சகோதரர்கள் நடத்தும் அரசு மீது பழங்குடி மக்களின் விசுவாசமும் கணக்கிலெடுக்கப்பட்டது. இந்த மாகாணத்துக்கான பிரிட்டனின் கடைசி கவர்னர் சர் ஓலஃப் கரோ கணித்திருந்தது போல, ஆஃப்கானிஸ்தான் மன்னர் தனது ஆட்சிப் பரப்பை பெஷாவர் மற்றும் சிந்து நதிக்கரைகள் வரை விரிவுபடுத்துவதற்கு அவரின் பிரதிநிதிகள் ஏற்கெனவே பழங்குடி மக்களின் ஆதரவைக் கோர ஆரம்பித்து விட்டார்கள். ஆபத்து நிறைந்த இந்தக் கூட்டத்தை ஸ்ரீநகருக்கு அனுப்புவது சரியானதாகவே பட்டது. இந்த நட வடிக்கை மகாராஜாவின் வீழ்ச்சியையும் அவரது தேசத்தை பாகிஸ்தானுடன் இணைப்பதையும் விரைவுபடுத்தும். பிறர் பொருள்கள் மீது பேராசை

கொள்ளும் அவர்களின் கண்களை பெஷாவர் கடைவீதிகளிலிருந்து காஷ்மீர் கடைவீதிகளுக்குத் திருப்பி விட்டு அங்கே கொள்ளையடிக்கும் சந்தர்ப்பத்தைப் பழங்குடியினருக்கு அளிக்கலாம்.

பிரதமரின் உறுதியான எச்சரிக்கையுடன் அந்தக் கூட்டம் முடிந்தது. இந்த நடவடிக்கை ரகசியமாக நிறைவேற்றப்பட வேண்டும். அவரது அலுவலகத்தின் ரகசிய நிதிகளிலிருந்து பொருளுதவி செய்யப்படும். பாகிஸ்தானின் ராணுவ அதிகாரிகளுக்கோ சிவில் ஊழியர்களுக்கோ இதற்கும் மேலாக பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கோ புதிய நாட்டில் பணிபுரியும் நிர்வாகிகளுக்கோ இந்த ரகசியத்தின் விவரம் தெரியக்கூடாது.

மூன்று நாட்களுக்குப் பிறகு பழமைவாய்ந்த மதில்சுவர் நகரான பெஷாவரின் பாழடைந்த கட்டடம் ஒன்றின் நிலவரையில், உணர்ச்சிகளைத் தூண்டி விடவும் ஸ்ரீநகருக்குச் செல்லவிருக்கும் கூட்டத்துக்குத் தலைமை தாங்கவும் தெரிவு செய்யப்பட்டுள்ள மேஜர் குர்ஷித் அன்வர் என்பவரை பழங்குடியின மக்களின் தலைவர்கள் சந்தித்தனர். விசித்திரமான முறையில் தோற்றங்களை மாற்றிக் கொள்வதில் ஆர்வம் கொண்டிருக்கும் அன்வர் சீக்கிரமே உணர்ச்சி வசப்படுபவர் என்பதால் இந்த வேலைக்குப் பொருத்தமில்லாதவராகவே தோன்றினார். உணவு விடுதிக்காக ஒதுக்கப்பட்ட நிதியை சொந்த உபயோகத்துக்காகக் கையாடல் செய்ததன் மூலம் இந்திய ராணுவத்தில் அவரது பணி முடிவுக்கு வந்தது. தொளதொளப்பான ஆடையுடனும், வெட்டப்படாத தாடியுடனும் அவரைச் சுற்றியிருந்த தலைவர்கள் சவுல் மற்றும் தாவீதின் போர் வீரர்கள் போல் இருந்தனர். நறுமணம் வீசும் தேநீரைப் பருகியபடியும், ஹுக்கா புகையை உறிஞ்சியபடியும், காஷ்மீர் பற்றி அன்வர் தெரிவித்த சோகம் நிறைந்த மதிப்பீடுகளை அவர்கள் கவனித்துக் கொண்டிருந்தனர். புறச்சமயத்தவரான இந்து மகாராஜா அவரது தேசத்தை இந்தியாவுடன் இணைக்க விரும்புகிறார் உடனடியாய் ஏதாவது செய்யாவிட்டால் விரைவிலேயே இந்தியா காஷ்மீரை கைப்பற்றிக் கொள்ளும். அங்குள்ள லட்சக்கணக்கான முஸ்லீம் சகோதரர்கள் இந்துக்களின் ஆட்சிக்குள் தள்ளப்படுவார்கள் என்று அவர் எச்சரிக்கை செய்தார். எனவே காஷ்மீரில் உள்ள சகோதரர்களுக்காகப் புனிதப் போரைத் துவக்க பழங்குடியின ஆட்களை அவர்கள் திரட்ட வேண்டும் என்று கூறினார் நாட்டுப்பற்று மிக்க தியாகத்தில் இணைத்துக் கொள்ள கடவுளின் பேரால் அழைப்பு விடுத்த அவர், இதற்குச் சமமாய்ப் பழமை வாய்ந்ததும், தீரமற்றதுமான ஒரு செயலுக்கும் ஊக்கமளித்தார். ஆன்மீக அழைப்பை விட அது பத்தானியர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது கொள்ளை யடிப்பதற்கான வாக்குறுதி தான் அது.

சில மணி நேரத்துக்குள், மண்ணாலான சுற்றுச்சுவர்களைக் கொண்ட அவர்களின் கிராமங்களிலும், கைபர் கணவாய் பகுதியில் லாண்டி கோட்டாலின் இருந்த முகாம்களிலும், பல பத்தாண்டுகளாகத் துப்பாக்கிகள் தயாரிக்கும் அவர்களின் மறைவிடங்களான குகைகளிலும், கள்ளக்கடத்தல்காரர்களின் ரகசியக் கிடங்குகளிலும், இஸ்லாமின் மிகப்பழமையான ஜிகாத் எனும் புனிதப் போர் நடத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதை பத்தானியர்கள் தெரிவித்தனர் கடைவீதிகள் தோறும் சென்ற ரகசிய ஒற்றர்கள், சோளம், சணகம் என்ற ஒருவகைப் பயறு, சர்க்கரை ஆகியவற்றைக் கலந்து தயாரித்த


ஜம்மு – காஷ்மீர்
மாகாணங்கள்
வரையறுக்கப்பட்ட எல்லைக்கோடு
வரையறுக்கப்படாத எல்லைக்கோடு
பழங்குடியினர் ஊடுருவிய பாதை
சா
இரயில்வே
சிலாஸ்
பால்டிஸ் தான்
காஷ் மீர்
கார்கில்
ட்ராஸ்
பாராமுல்லா
ஸ்ரீநகர்
அபோடாபாத்
லே
லடாக்
பூஞ்ச்
பூன்ச்
பனிஹால் கணவாய்
ராவல் பிண்டி
சிந்து நதி
திபெத்
ஜம்மு
மிர்பூர்
ரிஸ்லி
சினோனி
உத்தம்பூர்
சியால்கோட்
கதுவா
பதன்கோட்
ரவி நதி
குர்தாஸ்பூர்
இந்தியா
அமிர்தசரஸ்
பா
கி ஸ்
தான்

*கெட்டியான மாப்பணியாரத்தை வாங்கி சேகரிக்கத் துவங்கிவிட்டனர். இந்தக் கலவையை தண்ணீர் அல்லது தேநீருடன் சேர்த்து ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை வாய் நிறைய சாப்பிட்டு விட்டால் பத்தானியர்களால் பல நாட்களுக்கு தாக்குப் பிடிக்க முடியும். காஷ்மீர் சகோதரர்களைப் பாதுகாக்கவும், பழமைவாய்ந்த தங்களின் கொள்ளையடிக்கும் தாகத்தைத் தணித்துக் கொள்ளவும், எங்கிருந்து புனிதப் போரைத் துவக்கப் போகிறார்களோ அந்த ரகசியமான மையப்பகுதிகளுக்கு படிப்படியாக ஆட்களுடன், ஆயுதங்களும் மற்ற பொருள்களும் போய்ச் சேரத் துவங்கின.*

*அந்தத் தொலைபேசியின் இரண்டு முனைகளிலிருந்தும் வந்த குரல்கள் ஆங்கிலத்தில் இருந்தன. அது மட்டுமல்ல மிக முக்கியமான அந்த இரண்டு மனிதர்களும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள், ஒருவர் வடமேற்கு எல்லைப் பகுதி மாகாணத்தின் 'கவர்னராக இருந்த சர் ஜார்ஜ் கன்னிங்காம். பெஷாவரில் உள்ள அலுவலகத்திலிருந்து அவர் தொலைபேசி மூலம் அழைத்த மற்றொருவர் பாகிஸ்தான் ராணுவத்தின் தலைமைத் தளபதி லெஃப்டினன்ட் ஜெனரல் சர் ஃபிராங்க் மெஸெர்வி.*

*'இங்கு ஏதோ வித்தியாசமான ஒன்று நடப்பதாகக் கருதுகிறேன் நண்பரே' என்று கன்னிங்காம், மெஸெர்வியிடம் கூறினார். பல நாட்களாக, 'அல்லாஹு அக்பர்' என்று கோஷமிட்டபடி பழங்குடி இனமக்கள் ட்ரக் வண்டிகளில் கூட்டம் கூட்டமாக பெஷாவர் வழியாகச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றார் அவர். தனது பகுதியின் முதன்மை அமைச்சரே பத்தானியர்களைத் தூண்டி விடுவதாகத் தோன்றுகிறது. அவரைத் தவிர இந்த நகரில் உள்ள அனைவரும் பேரெழுச்சி கொண்ட படையணிவகுப்பின் முடிவு பற்றி அறிந்திருப்பதாகவே தெரிகிறது என்றார் கன்னிங்காம்.*

*'காஷ்மீரில் பழங்குடியினர் ஆக்ரமிப்பை அரசு எதிர்க்கிறது என்பதில் இன்னமும் நீங்கள் உறுதியுடன் இருக்கிறீர்களா?' அவர் மெஸெர்வியிடம் கேட்டார்.*

*பயணத்துக்கான தயாரிப்பு வேலைகளுக்கு நடுவே தான் கன்னிங்காமின் தொலைபேசி அழைப்பு ஜெனரலுக்கு வந்தது. பழங்குடி இனத்தவரின் ஆக்ரமிப்பு தொடங்கும் போது தலைமைத் தளபதியான பிரிட்டிஷ் அதிகாரியை 6000 மைல்களுக்கு அப்பால் லண்டனில் இருக்கும்படி செய்வது பாகிஸ்தான் அரசின் உறுதியான ஏற்பாடு. இந்தியா வழங்கத் தவறிய ஆயுதங்களைக் கொள்முதல் செய்வது அவரின் பணி.*

*'அப்படிப்பட்ட திட்டத்தை எதிர்க்கிறேன் என்பதை நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்ல முடியும். மேலும் பிரதம மந்திரியும் இதே போன்ற உறுதிமொழியை தனிப்பட்ட முறையில் என்னிடம் அளித்திருக்கிறார்' என்று மெஸெர்வி, அவரது சக ஊழியரிடம் தெரிவித்தார்.*

*'நல்லது! இருப்பினும் இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அவருக்கு நீங்கள் தகவல் தெரிவித்து விடுவது நல்லது' என்றார் கன்னிங்காம்.*

*ஒரு சில மணி நேரங்களுக்குப் பின் லண்டன் செல்லும் வழியில், லியாகத் அலிகானை மெஸெர்வி சந்தித்தார். காந்தாரத்தில் உள்ள கோயில்களில்*

இருக்கும் புத்தர் சிலையில் தவழும் அமைதியுடன், லியாகத் அலிகான் அவரது ராணுவத் தளபதிக்கு மீண்டும் உறுதியளித்தார். உங்களின் அச்சம் ஆதாரமற்றது என்று அவர் சொன்னார். அப்படிப்பட்ட செயலை பாகிஸ்தான் ஒருபோதும் பொறுத்துக் கொள்ளாது. அந்த மாகாணத்தின் முதன்மை அமைச்சரை உடனடியாகத் தொடர்பு கொண்டு, மட்டுமீறிய செயல்களை நிறுத்துமாறு உத்தரவிடுகிறேன் என்றும் அவர் சொன்னார். இவ்வாறு உறுதியளித்ததும், பீரங்கிகளும் குண்டுகளும் வாங்குவதற்காக, மெஸெர்வி லண்டனுக்குப் பறந்து சென்றார். அவர் இல்லாதபோது நடத்துவதற்கு கவனத்துடன் திட்டமிடப் பட்டிருந்த மோதலுக்கு இவை மேலும் தூண்டுதலாக இருக்கும்.

## *பாகிஸ்தான் - காஷ்மீர் எல்லை, 22 - 24 அக்டோபர் 1947*

பனி உறைந்த இரவில் மெல்ல ஊர்ந்து வந்த போர்க்காலத்துக்கு முந்தைய ஃபோர்ட் கார், விளக்குகளை அணைத்து விட்டு, மோட்டாரை நிறுத்தி விட்டு, அந்தப் பாலத்திலிருந்து நூறு கஜ தூரத்தில் நின்றது. அதன் பின்னால், கருமையான நிழல்களின் தொடர்ச்சி போல, ட்ரக் வண்டிகள் வரிசையாக நின்றன. அவற்றில் அமைதியுடன் மனிதர்கள் நிறைந்திருந்தனர். அவை நின்ற இடத்துக்குக் கீழே பாறைகளில் மோதிப் பாய்ந்தோடும் ஜீலம் நதியின் வெள்ளப்பெருக்கு ஏற்படுத்தும் சத்தம் இரவு நேரத்தை வியாபித்திருந்தது. அந்தக் காரில் முஸ்லீம் லீகின் பச்சை நிற சட்டைகளுடன், உணர்ச்சி வசப்பட்ட நிலையில் மேல் நோக்கி நின்ற மீசையின் நுனியை முறுக்கியபடி, 23 வயதான சைரப் கயத்கான் (Sairab Khayat Khan) இருந்தார். அவருக்கு முன்னுள்ள பாலத்தின் மறுமுனையில் காஷ்மீர் தேசத்தின் பகுதி இருந்தது.

மறுபக்கத்தில் உள்ள ஹரிசிங்கின் ராணுவத்தைச் சேர்ந்த முஸ்லீம் துருப்புகள், அவர்களின் இந்து அதிகாரிகளைக் கொன்று கூறுபோட்டு, ஸ்ரீநகருக்குச் செல்லும் தொலைபேசி கம்பியைத் துண்டித்து, பாலத்தின் விளிம்பில் உள்ள பாதுகாவலர்களைக் கைப்பற்றி விட்டதைச் சொல்வதற்குரிய ஒரு ஒளிக்காட்சியை கவனித்தபடி அவர் பாலத்தின் மீது பார்வையைப் பதித்திருந்தார். திடீரென்று அந்த இரவின் கருவானத்தில் தோன்றிய ரோஜா நிற ஒளிக்கீற்றினை அவர் பார்த்தார். சைரப்கான் தனது காரை இயக்கி பாலத்தைக் கடக்க ஆயத்தமானார். காஷ்மீருக்கான போர் தொடங்கி விட்டது.

ஒரு சில நிமிடங்களுக்குப் பின் அவரது படையணி சிறிய நகரான முஸாஃபராபாதில் உள்ள சுங்கத்துறை கொட்டகை வரை எந்தவித எதிர்ப்புமின்றி சென்று விட்டது. தூங்கிக் கொண்டிருந்த சுங்கத்துறை ஊழியர்கள் சிலர் விழித்தெழுந்து தங்களின் சோதனைக்காக வண்டிகளை நிறுத்துமாறு கையசைத்தனர். போர்க்குரல்களுடன் பத்தான்கள் அவர்கள் மீது பாய்ந்தனர். ஊழியர்களில் ஒருவர் கொட்டகைக்குத் திரும்பிச் சென்று இயங்காத தொலைபேசியை இயங்கச் செய்வதற்கு முயற்சி செய்வதை அவர்கள் பார்த்தனர். கோபமுற்ற பத்தான்கள் உபயோகமற்ற தொலைபேசியின் ஒயரைக் கொண்டே அந்த நபரைக் கட்டிப்போட்டார்கள்.

ஆக்ரமிப்பாளர் படையின் முன்வரிசையில் இருந்த இளம் தலைவர் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டார். இதைவிட வெற்றிகரமாக வேறெந்த

படையெடுப்பும் இருக்க முடியாது. ஸ்ரீநகருக்குச் செல்லும் அந்த 135 மைல் தூரமுள்ள பாதை பத்தான்களுக்குத் திறந்து கிடந்தது. இருபுறமும் நடைபாதை அமைந்த, பாதுகாவல் இல்லாத, அபாயம் இன்றி உலவும் இடமாக விளங்கிய சாலையில் அவர்களின் பயணம் ஒரு நாளைக்குள் பூர்த்தியடைந்து விட்டது. விடியலின் முதல் வெளிச்சம் தெரியும் போது ஆயிரக்கணக்கான பத்தான் பழங்குடியினர் உறங்கிக் கொண்டிருக்கும் ஹரிசிங்கின் தலைநகருக்குள் புகுந்து விடுவார்கள். சைரப் கயத்கானும் அவரது முன்னணிப் படையினரும் அரண்மனையை முற்றுகையிடுவார்கள். மகாராஜாவுக்குக் காலைச் சிற்றுண்டி தட்டினை அவர் கொண்டு வருவார். அத்துடன் ஒரு செய்தியும் 1947 அக்டோபர் 22ம் தேதி உலகம் முழுவதும் பரவப்போகிறது. காஷ்மீர் பாகிஸ்தானுக்குச் சொந்தமானது.

அந்த இளைஞரின் கனவு மிக விரைவிலேயே கலைந்து போனது. ஆக்ரமிப்புக்கான உத்திகளை வகுத்தவர்கள் ஒரு அபாயகரமான தவறு செய்து விட்டார்கள். ஸ்ரீநகருக்கு செல்லும் சாலையில் தனது படையை நடத்திச் செல்ல சைரப் கயத்கான் விரும்பிய போது அது மறைந்து போயிருப்பதை அவர் கண்டார். அவரைச் சுற்றியிருந்த வாகனங்களில் ஒரு பத்தானியர் கூட இல்லை. அவர்கள் இருட்டுக்குள் சென்று மறைந்து விட்டனர். காஷ்மீரின் முஸ்லீம் சகோதரர்களை விடுவிக்கும் அவர்களின் புனிதப் போர், முஸாஃபராபாதில் இருந்த இந்துக்களின் கடைவீதியில் நடத்திய இரவு நேரச் சுற்றுலாவுடன் தொடங்கியது.

அங்கிருந்த ஏராளமான கடைகளில் அடித்த கொள்ளை காரணமாக காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஒரு போதும் முகமது அலி ஜின்னாவால் பயணம் செய்ய முடியாமல் போனது. ‘ஒவ்வொரு மனிதரும் அவரவர் வேலையை கவனித்துக் கொண்டனர்’ சைரப் கான் நினைவு கூர்ந்தார். ‘அந்தப் பழங்குடியினர் பூட்டுக்களைச் சுட்டுத் திறந்தனர். கதவுகளை உடைத்து விலைமதிப்புள்ள பொருள்களையெல்லாம் எடுத்துச் சென்றனர்.’

ஏமாற்றமடைந்த சைரப் கானும் அவரது படையின் அதிகாரிகளும் அவர்களைத் தடுத்து நிறுத்த முயற்சித்தனர். கொள்ளையடிப்பதிலிருந்து அவர்களை விலக்கும் முயற்சியாக தொளதொளப்பான அவர்களின் சட்டைகளைக் கூட இழுத்தனர். ‘நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நாம் ஸ்ரீநருக்குப் போக வேண்டும்’ என்று அவர் சொல்லிக் கொண்டேயிருந்தார்.

அவரது கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்கானது. கொள்ளையடிப்பதில் அவர்களுக்கு இருந்த பாரம்பரிய ஆர்வத்தைக் கட்டுப்படுத்த எதனாலும் முடியவில்லை. அந்த அக்டோபர் மாத இரவில், ஸ்ரீநகர் பத்தான் பழங்குடியினருக்கு வசப்படப் போவதில்லை. கொள்ளையடித்ததால் அவர்களின் பயணம் தடைப்பட்டதையடுத்து, ஹரிசிங்கின் அரண்மனையை இருளில் மூழ்க வைப்பதற்காகத் தகர்க்கப்பட்ட மின்சார நிலையம் இருக்கும் இடத்தை அடைவதற்கான 75 மைல் தூரத்தைக் கடக்க இன்னும் 48 மணி நேரம் அவர்களுக்குத் தேவைப்படும்.

## புது டில்லி, 24 அக்டோபர் 1947

ஜீலம் நதியின் மீதிருந்த முக்கியமான பாலத்தை சைரப் கயத் கானின் படையினர் கைப்பற்றிய 48 மணி நேரத்துக்குப் பின்னர் தான் பழங்குடியினரின் காஷ்மீர் ஆக்ரமிப்பு பற்றிய முதல் தகவல் புது டில்லிக்குக் கிடைத்தது. அதையும் கூட இந்திய அரசு பெற்றது திகைத்துப் போன மகாராஜாவிடமிருந்து அல்ல; குறிப்பிடத்தக்க ஒரு இடத்திலிருந்து அதிகாரபூர்வமற்ற முறையில்தான். பஞ்சாபிலிருந்து கடந்த எட்டு வாரங்களாக ஆதரவற்று லட்சக்கணக்கான மக்கள் வெளியேறிச் சென்ற சாலையின் ஓரத்தில் உடல்பருத்த கழுகுகள் அமர்ந்து கொண்டிருக்கும் கம்பிகள் செல்லும் தொலைபேசிக் கம்பங்கள் இன்னமும் நின்று கொண்டிருந்தன. இவை இந்தியாவையும் பாகிஸ்தானையும் இணைத்தன. இந்தக் கம்பிக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். 1704 என்ற எண்களைக் கொண்டு ராவல் பிண்டிக்கும், உலகத்திலிருந்து அப்பாற்பட்ட தாகக் கருதப்படும் புது டில்லிக்கு 3017 என்ற எண்களைக் கொண்டும் தொடர்பு கொள்ள வாய்ப்பு இருந்தது. இவை பாகிஸ்தான் மற்றும் இந்திய ராணுவத் தளபதிகளுக்குரிய தனிப்பட்ட எண்களாகும். அவர்கள் இருவரும் பிரிட்டிஷ்காரர்கள்; நெருங்கிய நண்பர்கள்; பழைய இந்திய ராணுவத்தின் முன்னாள் தோழர்கள்.

லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஜெனரல் மெஸெர்விக்குப் பதிலாகப் பொறுப்பேற்றிருக்கும், மேஜர் ஜெனரல் டக்ளஸ் கிரேசே (Douglas Gracey)வுக்கு, காஷ்மீரில் என்ன நடந்தது என்பது பற்றிய முதல் தகவல், ரகசியப் புலனாய்வு அறிக்கை மூலம், அக்டோபர் 24 வெள்ளிக்கிழமை பிற்பகல் ஐந்து மணி ஆவதற்கு சற்றுமுன் கிடைத்தது. அந்த அறிக்கையில் ஆக்ரமிப்பாளர் களின் எண்ணிக்கை, ஆயுதபலம், இருப்பிடம் ஆகிய விவரங்கள் இருந்தன. கிரேசே தயக்கம் காட்டவில்லை. உடனடியாக மெஸெர்வியின் குடியிருப்பில் உள்ள தனிப்பட்ட தொலைபேசியை நாடிச் சென்றார். விலைமதிப்பில்லாத இந்தத் தகவலை இந்திய ராணுவத்தின் தலைமைத் தளபதிக்குத் தெரிவித்தார். காஷ்மீருக்குள் ஆக்ரமிப்பாளர்கள் நுழைய முடியாமல் தடுக்கும் ஆற்றல் பெற்ற ஒரே படையின் தளபதி என்ற முறையில் அவருக்கு இந்தத் தகவலைத் தெரிவிப்பதை ஜின்னாவும் விரும்புவார்.

ஸ்காட்லாந்துக்காரரும், சாந்தர்ஸ் கல்லூரியில் கிரேசேயின் வகுப்புத் தோழருமான லெஃப்டினன்ட் ஜெனரல் சர் ராப் லாக்ஹார்ட் (Sir Rob Lockhart) தனது பழைய நண்பரின் அறிக்கையால் திகைத்துப் போனார். அவர் இந்தத் தகவலை மேலும் இரண்டு பேருக்குத் தெரிவித்தார். அவர்கள் இருவரும் ஆங்கிலேயர்கள். ஒருவர் கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன் பிரபு; இன்னொருவர் ஃபீல்ட் மார்ஷல் ஆச்சின் லெக்.

அன்று மாலை கிரேசேயின் தொலைபேசி அழைப்பு மூலம் தொடங்கிய பேச்சுவார்த்தை மிக முக்கியமான தொடர் கலந்துரையாடல்களின் துவக்கமாக அமைந்தது. அப்போது ஏற்பட்டிருந்த மோதல் அதனோடு தொடர்புடைய பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு திகைக்க வைக்கும் தார்மீகக் குழப்பத்தை உருவாக்கியது. மனிதர்கள் என்ற முறையில் இந்த மோதல் பரவாமல் தடுக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறை காட்டினார்கள். தங்களின்

தோழர்களாக இருந்த இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் ஆயுதங்களைக் கொண்டு தங்களுக்குள் கொன்று மாய்வதைத் தடுக்கவும் அவர்கள் விரும்பினார்கள். அதிகாரிகள் என்ற முறையில் அவர்களின் விருப்பங்களுக்கு மாறாக நேரடி மோதலுக்கான உத்தரவுகளையே பெற்றனர்.

காஷ்மீரின் பனிப்பரப்பில் அவர்கள் தலைமை தாங்கிய ராணுவங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டாலும், கிரேசே மற்றும் லாக்ஹார்ட் இடையேயான பேச்சுவார்த்தைத் தொடர்ந்தது. மகிழ்ச்சியற்ற அந்த ஆங்கிலேயர்களின் செயல்கள் அவர்கள் பணியாற்றிய அரசுகளின் கடுமையான எதிர்ப்பை சம்பாதிக்கும். துணைக்கண்டத்திலிருந்து அவர்கள் புறப்படுவதைத் துரிதப்படுத்தும். அந்த இலையுதிர் காலத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சண்டை நடந்திருந்தால் அதில் ஈடுபட்டவர்கள் எல்லோரும் அழிந்திருப்பார்கள்; அறிவழிந்து ஏராளக் கொலைகள் விழுந்திருக்கும். ஆனால் அப்படி நடக்காமல் இருந்ததற்கு ராவல் பிண்டியின் 1704 என்ற எண்ணையும் புதுடில்லியின் 3017 என்ற எண்ணையும் கம்பி மூலம் இணைத்த தொலைபேசி வழியாக நடந்த ரகசிய உரையாடல்களின் பங்கு குறைவானதல்ல என்பதுதான் உண்மை.

தாய்லாந்தின் வெளியுறவுத் துறை அமைச்சரை கவுரவிப்பதற்கான விருந்து நிகழ்ச்சிக்கு உடையணிந்து தயாராகிக் கொண்டிருக்கும் போதுதான் மவுண்ட்பேட்டனுக்கு அந்தத் தகவல் கிடைத்தது. கடைசி விருந்தினரும் சென்ற பிறகு நேருவை அங்கேயே இருக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார். அந்தச் செய்தியை அறிந்த பிரதம மந்திரி திகைத்துப் போனார். இதை விட வேறெந்தத் தகவலும் அவரை நிலைகுலையச் செய்துவிட முடியாது. வெளித் தோற்றத்துக்கும் ஆசைக்கும் அப்பாற்பட்டதாக இருக்கும் தெய்வீக அழகைக் கொண்ட பெண்ணைப் போல விளங்கும் அவரது மூதாதையரின் தேசத்தை மற்றெல்லா இடங்களையும் விட அவர் அதிகம் நேசித்தார். 'பெண்ணியல்பு கொண்ட அதன் ஆறு, பள்ளத்தாக்கு, ஏரி, அழகான மரங்கள் ஆகியவற்றின் அழகையும்' அவர் நேசித்தார். சுதந்திரப் போராட்ட காலத்திலும், அதன் வலிமை வாய்ந்த மலைகளையும், செங்குத்தான பாறைகளையும், பனிமூடிய சிகரங்களையும், பனிக்கட்டிகளையும், பள்ளத்தாக்குகளில் பாய்ந்தோடும் பயங்கரமான வெள்ளப் பெருக்கையும் கண்டு ரசிக்க அடிக்கடி சொந்த ஊருக்கு அவர் சென்று விடுவார்.

காஷ்மீர் பிரச்சனையில் கவர்னர் ஜெனரல் பார்த்தது மற்றொரு நேருவைத்தான். மவுண்ட்பேட்டனால் மதிக்கப்பட்ட, அமைதியான, விருப்பு வெறுப்பில்லாத, புத்திசாலியான, நேருவுக்குப் பதிலாக, ஒரு சார்புடைய, உணர்ச்சிப் பெருக்கெடுத்த, கோபம் நிறைந்த நேருவையே காண முடிந்தது. அந்தக் காஷ்மீர் பிராமணரால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவரது செயல் குறித்து ஒரு நாள் நேரு உரத்தக் குரலில் மவுண்ட்பேட்டனுக்கு விளக்கமளித்தார். 'உங்கள் ராணி மேரியின் இதயத்தில் காலே (Calais) நகரம் பதிந்திருப்பது போல எனது இதயத்தில் காஷ்மீர் பதிந்திருக்கிறது.'

மவுண்ட்பேட்டனுக்கு இன்னொரு புயல் கிளப்பும் பேட்டி காத்திருந்தது. அது ஃபீல்ட் மார்ஷல் ஆச்சின் லெக்குடனானது. ஓய்வு பெற்ற நூற்றுக்

கணக்கான பிரிட்டிஷ்காரர்களைப் பாதுகாக்கவும் வெளியேற்றி அழைத்து வரவும் உடனடியாக பிரிட்டிஷ் துருப்புகளின் ஒரு பிரிவை ஸ்ரீநகருக்கு அனுப்ப தாம் விரும்புவதாக அந்தத் தளபதி, கவர்னர் ஜெனரலிடம் கூறினார். அவர்கள் வெளியே கொண்டு வரப்படாவிட்டால், கோரமான கொலைகளுக்கும் கற்பழிப்புகளுக்கும் இலக்காகி விடுவார்கள் என்று அவர் எச்சரித்தார்.

'நான் வருத்தப்படுகிறேன். என்னால் இதை ஏற்க முடியாது' மவுண்ட்பேட்டன் பதிலளித்தார். நிலைமை எவ்வளவு பயங்கரமானதாக இருந்தாலும், சுதந்திரம் அடைந்து விட்ட ஒரு துணைக்கண்டத்தின் மண்ணில் பிரிட்டிஷ் துருப்புகள் பயன்படுத்தப்படுவதைத் தாம் அங்கீகரிக்க முடியாது என்றார் அவர். காஷ்மீரில் ராணுவத் தலையீடு தேவைப்பட்டால் தன்னைப் பொறுத்தவரை இந்தியப் படைகளுடையதாக அது இருக்கலாமே தவிர பிரிட்டிஷ் படைகளுடையதாக இருக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

'அங்கே உள்ள மக்கள் அனைவரும் கொல்லப்படுவார்கள். அவர்களின் ரத்தம் உங்களின் கைகளைத்தான் களங்கப்படுத்தும்' கோபத்துடன் ஆச்சின்லெக் மறுப்புத் தெரிவித்தார்.

'நல்லது' வருத்தத்துடன் மவுண்ட்பேட்டன் பதிலளித்தார். 'அதற்கான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். அது நான் வகிக்கும் பதவிக்கான தண்டனையாகும். ஆனால் பிரிட்டிஷ் துருப்புகள் தலையிட்டு ஏதாவது நடந்தால் அதற்குப் பதில் சொல்ல நான் விரும்பவில்லை.'

அடுத்த நாள் பிற்பகலில், ராயல் இந்திய விமானப்படையின் டிசி 3 விமானம் ஸ்ரீநகர் விமான நிலையத்தின் கைவிடப்பட்ட, புழுதி நிறைந்த ஒரு பகுதியில் வந்திறங்கியது. மன்னராட்சியில் இருந்த பகுதிகளை இந்தியாவுடன் இணைக்கும் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கியவரும் சிவில் ஊழியருமான வி. பி. மேனன், இந்திய ராணுவத்தின் கலோனல் சாம் மனேக்ஷா மற்றும் ஒரு விமானப்படை அதிகாரி ஆகியோரை அந்த விமானம் சுமந்து வந்தது.

அன்று காலை நடந்த அமைச்சரவையின் பாதுகாப்புக் குழுவின் சிறப்புக் கூட்டத்தில் தான் இந்த மூன்று பேரையும் ஸ்ரீநகருக்கு அனுப்பவதென்று முடிவு செய்யப்பட்டது. சிக்கவில் அகப்பட்டுள்ள மகாராஜாவிடமிருந்து உதவி கோரி வந்துள்ள கோரிக்கைக்கு அந்தக்கூட்டத்தில் எதிரும் புதிருமான கருத்துக்கள் வந்தன. ஆச்சின் லெக்குடன் நடந்த உரையாடலால் கவலையடைந்திருந்த நேருவின் உணர்வுகள் எவ்வளவு ஆழமானவை என்பதைப் புரிந்திருந்த மவுண்ட்பேட்டன், ராணுவத் தலையீடு தேவைப்படலாம் என்பதை உணர்ந்தார். ஆனால் அதற்கு சட்டபூர்வ அங்கீகாரம் தேவை என்பதில் உறுதியாக இருந்த அவர் தனது கருத்தை அரசும் ஏற்குமாறு செய்தார். அந்த மகாராஜா தனது தேசம் சட்டப்படியாக இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதை அதிகாரபூர்வமாக ஏற்காதவரை இந்தியா காஷ்மீருக்குத் துருப்புகளை அனுப்பக் கூடாது என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் ஒரு படி கூடச் சென்றார். ஆறாம் ஜார்ஜ் மன்னரிடம் பணி செய்த போது கடைப்பிடித்த அதே ஜனநாயக மாண்புகளை இந்தியாவின் பணிகளிலும் கடைப்பிடித்தார் இந்தியாவின் விருப்பத்துக்கு எதிராக இந்தியாவில் நீடிப்பது பிரிட்டனுக்கு சாத்தியமற்றதாகவே இருக்கும் என்று

அவர் எப்போதும் நம்பினார். அதே போல் காஷ்மீரிலும் பெரும்பான்மையாக வுள்ள முஸ்லீம் மக்களின் உணர்வுகளுக்கு எதிராகக் காஷ்மீர் பிரச்சனைக்குத் தீர்வு காண இயலாது என்றும் அவர் நம்பினார். அவர்களின் உணர்வு என்ன என்பதில் அவருக்கு சந்தேகம் இருக்கவில்லை. 'மக்கள் தொகையில் அதிக எண்ணிக்கையில் இருப்பவர்கள் முஸ்லீம்கள் என்பதால், அவர்கள் பாகிஸ் தானுடன் இணைவதற்கே ஆதரவளிப்பது நிச்சயம் என்பதே எனது எண்ணம்' என்று நவம்பர் 7ஆம் தேதி அவரது மைத்துனரான மன்னருக்கு அறிக்கை அனுப்பப் போகிறார்.

நேருவின் தயக்கங்களையும் மிஞ்சி, ஒரு முக்கியமான நிபந்தனையுடன் தான் காஷ்மீரின் இணைப்பு இருக்க வேண்டும் என்பதை பிரதம மந்திரியையும் அமைச்சரவையையும் அவர் ஏற்கச் செய்து விட்டார். மகாராஜாவின் ஒப்புதல் தற்காலிகமாகவே கருதப்படும். சட்டம் ஒழுங்கு நிலைமை முற்றிலுமாக சீர்பட்ட பின்னரே அது நிரந்தரமானதாகக் கொள்ளப்படும். காஷ்மீர் மக்களின் விருப்பத்தைத்தான் அது பிரதிபலிக்கிறதா என்பதற்கு வாக்கெடுப்பு நடத்திய பின்னரே அது உறுதி செய்யப்படும்.

அமைச்சரவையின் நிபந்தனைகளை மகாராஜாவிடம் தெரிவிக்கவே ஸ்ரீநகருக்குச் செல்லுமாறு வி.பி.மேனன் பணிக்கப்பட்டார். அவருடன் சென்றி ருந்த அதிகாரிகள் ராணுவ நிலைமையை ஆய்வு செய்தார்கள். அவர்கள் பறந்து சென்ற அதே சமயத்தில், தென்கிழக்கு ஆசியாவின் கூட்டு ராணுவப்படையின் முன்னாள் தளபதி, விமானம் மூலம் காஷ்மீருக்கு வரலாற்று சிறப்பு மிக்கப் பயணம் மேற்கொள்ளத் தயாராகிக் கொண்டிருந்தார். அகில இந்தியாவிலும் சிவில் விமானங்கள் ஏற்றிச் சென்ற பயணிகளை, இப்போது அவை எங்கிருக்கின்றனவோ அங்கேயே இறக்கி விட்டு விட்டு டில்லிக்குத் திரும்புமாறு அவர் கட்டளையிட்டார்.

★

அக்டோபர் 26 சனிக்கிழமை நள்ளிரவுக்குச் சற்று முன்னர், வரலாற்றின் மாபெரும் குடிபெயர்வில் மேலும் ஒரு அகதி சேர்ந்து கொண்டார். அந்த இலையுதிர் காலத்தில் தங்களின் வீடுகளை விட்டு ஓடிய பத்தரை மிலியன் (ஒரு கோடியே ஐந்து லட்சம்) இந்து, சீக்கிய, முஸ்லீம் அகதிகளில் மேலும் ஒருவராகச் சேர்ந்தவர் ஹரிசிங் - காஷ்மீர் மகாராஜா. அவரது மாட்டு வண்டி வசதிமிக்க அமெரிக்க ஸ்டேஷன் வாகன் போல இருந்தது. அவரது விலை மதிப்பற்ற பொருள்களால் நிறைக்கப்பட்ட ட்ரக்குகள் மற்றும் கார்களுக்கு முன் அது சென்றது. அவரது தப்பியோடலுக்கு அச்சுறுத்தலாகக் கொள்ளைக் கும்பல் ஏதும் வராத வகையில், அவரது பயணப் பாதையில் ஆயுதந்தாங்கிய மெய்க்காப்பாளர்கள் கண்காணித்து வந்தனர். மகாராஜாவின் பயணம் காலரா நோயால் பாதிக்கப்பட்ட அகதிகள் முகாமை நோக்கியதல்ல. மகிழ்ச்சியோடு குடிபெயரவிருப்பது மற்றொரு அரண்மனைக்குத்தான். ஜம்முவில் உள்ள அவரது குளிர்கால அரண்மனைக்கு. இங்கேதான் ஒரு காலத்தில் வேல்ஸ் இளவரசருக்கும் அவரது இளம் உதவியாளரான லூயி மவுண்ட்பேட்டனுக்கும் அவர் விருந்தளித்தார். அவரது குடிமக்களில் இந்துக்கள் பெரும்பான்மையாக

உள்ள இங்கே தமது வாழ்க்கைப் பாதுகாப்பாக இருக்கும் என்று அவர் நம்பியிருக்கலாம்.

மிஸ்டர் 'ஏ'வும் அவரது பயனற்றுப் போன சுதந்திர ஆசைகளும் ஏமாற்றமளிக்கும் நிகழ்வுகளின் வெள்ளத்தால் சூழப்பட்டன. ஹரிசிங்கின் அனைத்துத் தந்திரங்களும், வெறும் மூன்று மாதங்களுக்குத்தான் மவுண்ட் பேட்டனின்-ஆப்பிள் கூடைக்கு வெளியே அவரை நிறுத்தி வைப்பதில் வெற்றி பெற்றன. வி.பி.மேனன் ஆலோசனைப்படி அவர் அச்சம் நிறைந்த தலைநகரில் இருந்து வெளியேறி விட்டார். டில்லிக்குத் திரும்பி வந்த மேனன், அவரது சக ஊழியர்களிடம் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அவர்களின், உதவியைப் பெறுவதற்காக அவர்கள் முன்வைக்கும் எந்தவித நிபந்தனைகளை யும் ஏற்றுக் கொள்ள மகாராஜா தயாராக இருக்கிறார்.

அந்த இரவு நேரத்தில் அரண்மனையிலிருந்து வெளியேறி தப்பிய அவர், பின் எப்போதும் அங்கே காலடி வைக்கவில்லை. இன்னும் சில ஆண்டுகளில் இந்த அரண்மனை சொகுசு ஓட்டலாக மாற்றப்படும் போது, அதன் தாழ்வாரங்கள் குபேரர்களான அமெரிக்க சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதாக இருக்கும். விசுவாசத்தில் உறுதியற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்ட அவரின் ராணுவ அதிகாரிகளுடன் கூடி அவர் கும்மாளம் போட்டது இந்தத் தாழ்வாரங்களில் தான். பணியாட்கள் அவரின் கஜனாக்களைத் திறந்து முத்துக்களையும், பவழங்களையும், வைரங்களையும் வெளியே எடுத்துப் பெட்டிகளை காலி செய்தனர். ஆனால் ஹரிசிங், அவர் மிகவும் போற்றிப் பாதுகாக்கும் இரண்டு பொருள்களைத் தேடிக் கொண்டிருந்தார். வாத்து சுடுவதில் அவருக்கு உலக சாதனை ஏற்படுத்திக் கொடுத்த கரு நீலக் குழல்களைக் கொண்ட புர்டே (Purdey) சிறு துப்பாக்கிகள் தான் அவை. பாகங்களில் நன்றாக எண்ணெயிடப்பட்ட அவற்றை முகத்தில் வாட்டத்துடன் கவனித்தார். பிறகு அவற்றை அவற்றுக்குரிய தோல் பைகளில் வைத்துப் பூட்டி தாமே எடுத்துக் கொண்டு அவருக்காகக் காத்திருக்கும் காரை நோக்கி நடந்தார்.

சிக்கல் மிகுந்த பதினேழு மணி நேரப் பயணத்துக்குப் பின் மகாராஜாவின் வாகனங்கள் ஜம்முவை அடைந்தன. களைத்துப் போயிருந்த ஹரிசிங் ஓய்வெடுத்துக் கொள்ள தனக்குரிய குடியிருப்புப் பகுதிக்கு உடனடியாகச் சென்றார். தூங்கச் செல்வதற்கு முன் ஆளும் மகாராஜா என்ற முறையில் உதவியாளரை அழைத்துக் கடைசி உத்தரவைப் பிறப்பித்தார். 'டில்லியிலிருந்து வி.பி.மேனன் திரும்பினால் மட்டுமே என்னை எழுப்ப வேண்டும். ஏனெனில் எனது உதவிக்கு வர இந்தியா முடிவு செய்துள்ளது என்பது அதற்கு அர்த்தம். விடியற்காலை நேரத்துக்கு முன் அவர் வரவில்லையென்றால், தயாராக உள்ள எனது கைத்துப்பாக்கியை எடுத்து தூக்கத்திலே என்னைச் சுட்டு விடுங்கள். ஏனெனில் அவர் வரவில்லையென்றால் எல்லாம் பறிபோனது என்று தான் அதற்கு அர்த்தம்.'

வி.பி.மேனனும் அவருடன் சென்ற இரண்டு அதிகாரிகளும் ஸ்ரீநகரிலிருந்து டில்லி திரும்பியவுடன், அமைச்சரவையின் பாதுகாப்புக்குழு கூட்டத்தில் அவர்களின் அறிக்கையை அளித்தனர். அவர்களின் வார்த்தைகள் கேட்க மிகவும் சோகமாக இருந்தன. கடைசியாகக் காஷ்மீரை இந்தியாவுக்கு அளிக்க

மகாராஜா தயாராயிருந்தார். ஆனால் ஆக்ரமிப்பாளர்களான பத்தான்கள் ஸ்ரீநகரிலிருந்து 35 மைல் தூரத்தில்தான் இருந்தார்கள். இந்தியா தனது துருப்புகளை இறக்குவதற்கு காஷ்மீரில் உள்ள ஒரே விமான நிலையத்தை அவர்கள் எந்த நேரத்திலும் கைப்பற்றக்கூடும்.

இந்திய ராணுவம் மற்றும் விமானப்படையின் பிரிட்டிஷ் தளபதிகள் இருவருமே ராணுவத் தலைமீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எதிர்ப் புணர்ச்சியுள்ளவர்கள் என்று நன்கறியப்பட்ட மக்கள் மத்தியில் வெகுதூரம் சென்று நடவடிக்கையில் ஈடுபடுவது ஆபத்தாகவே முடியும் என்று அவர்கள் கூறினர். இந்தப் பிரச்சனையில் இந்தியர்களுடைய உணர்வின் ஆழத்தைக் கருத்தில் கொண்ட மவுண்ட்பேட்டன் அவர்களின் பேச்சைப் புறக்கணித்தார். அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் ராணுவ நடவடிக்கை முடிய நீண்டகாலம் ஆகலாம். இதற்கு முன் கண்டிராத அளவுக்கு மிக அதிக எண்ணிக்கையில் துருப்புகளையும் பிற தளவாடங்களையும் ஈடுபடுத்த வேண்டியிருக்கலாம் என்று எச்சரிக்கை செய்தார். ஆனால், செயல்படுத்துவது என்று அமைச்சரவை தீர்மானித்திருந்ததால் மவுண்ட்பேட்டன் தனது சொந்த ராணுவ அனுபவத்தை முழுமையாக அளிக்க முன்வந்தார்.

அடுத்த நாள் விடியற்காலையிலேயே துருப்புகளை ஏற்றிக் கொண்டு விமானங்கள் ஸ்ரீநகருக்குச் செல்ல வேண்டும் என்று அவர் உத்தரவிட்டார். சிவில், ராணுவம் என்றில்லாமல் நாட்டில் கிடைத்த அனைத்து வாகனங்களும் இந்த நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டன. ஸ்ரீநகருக்கும் விமான நிலையத்துக்கும் தரைவழியாக பீரங்கிகளும் டாங்குகளும் வந்து சேரும்வரை என்ன விலை கொடுத்தேனும் துருப்புகள் அந்த இடங்களில் இருந்தாக வேண்டும். அந்தத் தளவாடங்களை உடனடியாக அனுப்ப உத்தரவிடப்பட்டது. இந்தியாவுடன் காஷ்மீரை இணைக்கும் ஒரே தரைவழிப்பாதை, முஸ்லீம்கள் அதிகமாக வாழும் குருதாஸ்பூர் நகரின் ஊடாகவே சென்றது. இந்தக் குறுகிய சாலைதான் சிரில் ராட்கிளிஃபின் பென்சில் இந்தியாவுக்கு அளித்ததாகும்.

ராணுவ நடவடிக்கைக்கு வேகவேகமாகத் தயாரிப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கும் போதே ஜம்முவுக்குப் பறந்து செல்லுமாறு வி. பி. மேனனுக்கு மவுண்ட்பேட்டன் உத்தரவிட்டார். இதனால் தப்பியோடிய முதல் நாள் இரவிலேயே தலையில் தோட்டாவை ஏந்தி ஹரிசிங் இறக்காமல் இருக்க நேர்ந்தது. மகாராஜா தனது உதவியாளருக்குத் தெரிவித்திருந்த கால அவகாசம் முடிவதற்கு முன் வி.பி.மேனன் அவரது படுக்கையருகே சென்று விட்டார். இந்தியாவின் நடவடிக்கைக்கு சட்ட அங்கீகாரம் அளிப்பதற்கான இணைப்பு இணக்க ஒப்பந்தம் அவரிடம் இருந்தது. ஹரிசிங்கின் கையெழுத்துக்காக மட்டும் அது காத்திருந்தது.

அதே நாளான அக்டோபர் 26 ஞாயிற்றுக்கிழமை மாலையில் வி. பி. மேனன் டில்லிக்குத் திரும்பினார். அவர் திரும்பி வந்த சில நிமிடங்களில் பிரிட்டன் துணை ஹை கமிஷனரான அலெக்சாண்டர் சைமன் மது அருந்த அவருடன் சேர்ந்து கொண்டார். மேனன் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தார். ஒவ்வொரு முறையும் அவரே மதுவை ஊற்றிக் கொடுத்தார். அவர்கள் இருக்கையில் அமர்ந்த போது அவரது முகம் முழுவதும் புன்னகை பரவியது. அவரது மதுக்குவளையை சைமனை நோக்கி உயர்த்தினார். பின்னர் அவரது கோட்டுப் பையிலிருந்து

காகிதம் ஒன்றை எடுத்தார். மகிழ்ச்சி பொங்க அதனை அந்த ஆங்கிலேயர் முகத்துக்கெதிரே அசைத்துக் காட்டினார்.

'இதோ பாருங்கள்' அவர் சொன்னார். 'நாங்கள் காஷ்மீரைப் பெற்று விட்டோம். அந்த வேசி மகன் இணைப்பு இணக்க ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டு விட்டான். இப்போது நாங்கள் அதை அடைந்து விட்டோம். இனி ஒரு போதும் அதை விட்டு விட மாட்டோம்.'

★

இந்தியா, வி.பி. மேனனின் உறுதிமொழிக்கு விசுவாசமாகவே இருக்கப் போகிறது. முதலாவது சீக்கியப் படைப்பிரிவைச் சேர்ந்த 329 சீக்கியர்களுடனும் எட்டு டன் இதரத் தளவாடங்களுடனும், ஒன்பது டிசி 3 விமானங்கள், அதிசயக்கத்தக்க வகையில், வெறுமையான ஸ்ரீநகர் விமான தளத்திற்கு, அக்டோபர் 27 திங்கட்கிழமை விடியற்காலையில் வந்து சேர்ந்தன. காஷ்மீருக்குள் இந்தியா இடையீடின்றி அனுப்பவிருந்த துருப்புகள் மற்றும் ராணுவத் தளவாடங்களில் முதல் தவணையாகவே இது இருந்தது. நன்னீர் மீன்களைப் பிடிக்கும் மீனவர்களுக்கும், தந்திரமாக நழுவித் தப்பிக்கும் மலையாடுகளை வேட்டையாடும் வேட்டைக்காரர்களுக்கும் சொர்க்க பூமியாக இருந்த, பனி படர்ந்து உயர்ந்திருக்கும் பூமியில் சுமார் 1,00,000 இந்திய வீரர்கள் போரிடப் போகிறார்கள்.

வியக்கத்தக்க வகையில் காஷ்மீரில் இந்தியர்களுக்குக் கிடைத்த ஆரம்ப வெற்றிக்கு அவர்களின் ராணுவத் திறமையோ பலமோ அல்லது வீரர்களின் உறுதியோ அவ்வளவு பெரிய காரணம் என்று சொல்ல முடியாது. ஃபிரான்சிஸ்கன் மிஷனரிஸ் ஆஃப் மேரி (Franciscan Missionaries of Mary) என்ற அமைப்பில் இருந்த ஃபிரான்ஸ், ஸ்காட்லாந்து, ஸ்பெயின், இத்தாலி, போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பதினான்கு கன்னியாஸ்திரிகள் தான் காரணம் என்று சொல்ல வேண்டும். ஸ்ரீநகரிலிருந்து 30 மைல் தூரம் மட்டுமே உள்ள பாரமுல்லாவில் அவர்களின் கான்வென்ட் இருந்தது. காஷ்மீரின் தலைநகருக்கும் அதன் முக்கியமான விமான தளத்துக்கும் விரைந்து செல்ல வேண்டிய பத்தான் ஆக்ரமிப்பாளர்கள் அதற்கிடையில் இந்தக் கான்வென்ட் டைச் சூறையாட நின்று விட்டார்கள். இதனால் ஜஹாங்கீர் நேசித்தப் பள்ளத்தாக்கைத் தனது நாட்டுடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஜின்னாவின் கனவும் முடிவுக்கு வந்தது. அக்டோபர் 27 திங்கட்கிழமை முழுவதும், சீக்கிய வீரர்கள் காஷ்மீரின் ஒரே ஒரு விமான நிலையத்தில் தங்களது பலவீனமான பிடிப்பை வலுப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் பாரமுல்லாவில் இருந்த பத்தான்கள் கற்பழிப்பு, கொள்ளை என்ற பாரம்பரிய பசிக்குத் தீனி போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கன்னியாஸ்திரீகளைக் கற்பழித்தனர். அவர்கள் நடத்திய சிறிய மருத்துவமனையில் இருந்த நோயாளி களைக் கொன்றனர். கான்வென்ட்டுக்கு அருகே இருந்த வழிபாட்டுக் கூடத்தில் கதவின் பித்தளைக் கைப்பிடி இறுதியாக அனைத்தையும் கொள்ளையடித்தனர்.

அன்று மாலை சிலுவையை மார்பில் அணைத்தபடி காஷ்மீரின் மன மாற்றத்துக்காகப் பிரார்த்தனை செய்த அந்தக் கான்வென்டின் பேரன்னையான

(மதர் சுப்பீரியர்) பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த சகோதரி மேரி அடெல்ட்ருட் (Adeltrude) படுகாயங்களால் பலியானார். அவரின் தியாகமோ மற்ற கன்னியாஸ்திரீகளான சகோதரிகளின் தியாகமோ, நோயாளிகளின் மரணமோ இமயமலை அடிவாரத்தில் பழமை வாய்ந்த காஷ்மீரிகள் பலமாக உள்ள அந்தப் பகுதியில் இருந்த முஸ்லீம்களின் உறுதியை அசைத்து விடவில்லை. ஆனால் இவையெல்லாம் அந்த இக்கட்டான தருணத்தில் ஜவஹர்லால் நேருவின் ராணுவ வீரர்கள் காஷ்மீர் பள்ளத்தாக்கில் தங்களை நிலை நிறுத்திக் கொள்வதற்குத் தேவையான அவகாசத்தை அளித்தன.

அதனை அவர்கள் மீண்டும் விட்டுவிடவில்லை. மிகவும் காலதாமதமாகி விட்ட நேரத்தில் பத்தான்கள் தங்களின் தாக்குதலை மீண்டும் தொடுத்தார்கள். அவர்களின் முன்னேற்றத்தை இந்தியர்கள் உறுதியுடன் தடுத்து நிறுத்தினார்கள். ராட்கிளிஃபின் சாலை வழியாக ஆயுதங்களைக் கொண்டு வந்த முதல் வாகனம் ஸ்ரீநகருக்குள் வந்தபோது அதற்கு வெளியே ஆக்ரமிப்பாளர்கள் விரட்டி யடிக்கப்பட்டனர். ஒரு தோட்டாவைக் கூட கடாமல் காஷ்மீர் முழுவதையும் கைப்பற்றி விடலாம் என்ற நம்பிக்கையுடன் அக்டோபர் மாதத்தின் குளிர் நிறைந்த இரவு நேரத்தில் ஸ்ரீநகருக்குள் செல்வதற்காகக் கைப்பற்றிய பாலத்திலிருந்தும் காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதிலுமிருந்தும் பத்தான்களைப் படிப்படியாக விரட்டினார்கள். கோபத்துடன் பொங்கியெழுந்த ஜின்னா, அவரது ராணுவத்திலிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகளை விலக்கி விட்டு பாகிஸ் தானியர்களை சாதாரண குடிமக்களாக வேடமணியச் செய்து, மனம் தளர்ந்து போயிருந்த ஆக்ரமிப்பாளர்களுக்கு ஊக்கமளிப்பதற்காகக் காஷ்மீருக்குள் அனுப்பி வைத்தார். மேலும் பல பழங்குடியின மக்களும் அனுப்பப்பட்டனர். கொடுமையான அந்தக் குளிர்காலத்தில் மேலும் சில மாதங்கள் சண்டை நடக்கவே செய்தது.

கடைசியில் பிரச்சனை ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றது. இறந்து கொண்டிருந்த மொகலாயரின் உதடுகள் கடைசி வார்த்தைகளாக எந்தப் பெயரை உச்சரித்தனவோ அந்த அழகிய பள்ளத்தாக்கின் பெயர், உலகின் தீர்க்கப்படாத பிரச்சனைகளான பெர்லின், பாலஸ்தீனம், கொரியா ஆகியவற்றின் பட்டியலில் சேர்ந்தது. மக்களிடம் வாக்கெடுப்பு என்பதற்கு மவுண்ட்பேட்டன் மிகவும் சிரமப்பட்டு நேருவின் ஒப்புதலைப் பெற்றிருந்தார். ஆனால் அதுவும் மறக்கப்பட்ட நல்ல கருத்துகளின் பெரும் குவியலுக்குள் தள்ளப்பட்டு விட்டது. 1948 சண்டைக்கோடுகளின்படி அந்த மாநிலம் பிரிந்தே இருக்கிறது. காஷ்மீர் பள்ளத்தாக்கு இந்தியாவிடமும், சில்ஜிட்டைச் சுற்றி யுள்ள வடக்குப்பகுதிகள் பாகிஸ்தானிடமும் உள்ளன. கால் நூற்றாண்டுக்குப் பிறகும் காஷ்மீரின் பிரச்சனைக்குரிய பகுதிகள் இந்தியாவுக்கும் பாகிஸ் தானுக்கும் இடையேயுள்ள கருத்து வேற்றுமையின் பிரதான விஷயமாக உள்ளன. இவர்களிடையே சமரசம் ஏற்பட முடியாத வகையில் கடக்க இயலாதத் தடைகளாகவும் அவை தோன்றுகின்றன.

## பதினாறு

# பூனாவிலிருந்து இரண்டு பிராமணர்கள்

### *பூனா, 1 நவம்பர் 1947*

*ஆகஸ்ட் 15 அன்று ஸ்வஸ்திக் சின்னம் பொறித்த ஆர்.எஸ்.எஸ்.கொடிக்கு வணக்கம் செலுத்தும் தனது ஆதரவாளர்களுக்குத் தலைமை தாங்கிய அந்த இந்து தீவிரவாத இளைஞன் வெள்ளையடிக்கப்பட்ட கொட்டகையை வியப்பால் விரிந்த கண்களுடன் பார்த்தான். இந்தக் கொட்டகை தான் அவனது இந்து ராஷ்ட்ரா (இந்து தேசம்) என்னும் செய்திப் பத்திரிகையின் புதிய அலுவலகமாக மாறவிருக்கிறது. இதில் சிறிய அச்சு எந்திரமும், ப்ரஸ் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா (பி.டி.ஐ)வின் தொலைத் தட்டச்சுக் கருவியும் இருந்தன. அதற்குப் பக்கத்தில் மேல் நோக்கி நிறுத்தப்பட்ட சில பெட்டிகளும், சாய்வான கால்களைக் கொண்ட மேசைகளும் வரிசையாகப் போடப்பட்டிருந்த இடம் பத்திரிகையின் ஆசிரியர் குழு அலுவலகமாக இருந்தது.*

*அங்கே நிறுவப்பட்டவை வியப்படையத் தக்க ரோத்தர்மெரி அல்லது ஹேரார்ஸ்ட் அச்சு எந்திரங்கள் அல்ல. இருப்பினும் கண்ணாடி மற்றும் இரும்பாலான அலுவலகங்களைக் கொண்ட ஆங்கிலோ சாக்ஸன் பத்திரிகைத் துறை பிரபுவை விட நாதுராம் கோட்சேயின் முகத்தில் பரிசுத்தமான மகிழ்ச்சி ஒளி வீசியது. எளிமையும் வீரமும் கொண்ட கிரேக்க நாட்டின் ஸ்பார்ட்டா நகரத்தவர் போல அவன் உடையணிந்திருந்தான். அது தான் அவனது சீருடை தொளதொளப்பான வெள்ளை சட்டை, அதன் மீது பருத்தி நூலால் நெய்யப்பட்ட இடுப்பு வரையிலான கோட், கீழே மகாராஷ்ட்ரா பாணியில் மிகவும் கவனமாக பாரம்பரிய முறைப்படி கட்டப்பட்ட வேட்டி. இதன் இடது நுனி காலுக்குக் கீழே கொண்டு செல்லப்பட்டிருந்தது. அதன் பெரும்பாலான மடிப்புகள் இடுப்பின் வலது பக்கத்தில் செருகப்பட்டிருந்தன. வழக்கம் போல் கோபம் நிறைந்த அவனது முகத்தில் பதற்றம் காணப் பட்டாலும் புன்னகை படர்ந்திருந்தது. விருந்தினர்கள் ஒவ்வொருவரையும் சந்தித்து தனது பத்திரிகையை இந்துக்கள் நலனுக்காக அர்ப்பணிக்கவிருக்கும் முடிவை பணிவோடு உறுதி செய்தான்.*

*வண்டிகள் நிறுத்தும் இடத்திற்கு நடுவே ஒரு சிறிய மேசை போடப் பட்டிருந்தது. தேநீர் விருந்துக்கு ஒரு பணக்கார விதவையின் வருகைக்காக*

இன்னொரு பெண் ஏற்பாடு செய்வதைப் போல அதன் மீது சில பொருள்களை கோட்சே தாமே ஏற்பாடு செய்து கொண்டிருந்தான். அது ஒரு மங்களகரமான நிகழ்ச்சி என்பதால், அங்கே ஏராளமான இனிப்புகள் கலையம்சத்துடன் அடுக்கப்பட்டிருந்தன. பர்ஃபிகள், அல்வா துண்டுகள், மஞ்சள் மற்றும் பச்சை நிறத்திலான சர்க்கரை தூவப்பட்ட சதுர வடிவிலான மிட்டாய்கள் ஆகியவை குன்றுபோல் குவிக்கப்பட்டிருந்தன. அவற்றுக்குப் பின்னால் ஒரு பெரிய பாத்திரத்தில் காஃபி வைக்கப்பட்டிருந்தது. அதன் மணம் மெல்லப் பரவிக் கொண்டிருந்தது. அவனது சொந்த ஊரான பூனாவில் மூன்று விஷயங்களுக்காக கோட்சே நன்கறியப்பட்டான். அவனது அரசியல்; துறவி போன்ற அவனது வாழ்க்கை முறை; அவனது காஃபி மோகம். அவனது மனதுக்குப் பிடித்தமான ஒரு கோப்பை காஃபி பருக மைல் கணக்கில் கூட அவன் நடந்து செல்வான்.

காஃபி கோப்பைகளை அவன் பரிமாறிக் கொண்டிருக்கும் போது இன்னொரு உருவம் விருந்தினர்களிடையே நகர்ந்து சென்று அவர்களின் வாழ்த்துக்களைப் பெற்றது. நாராயண் ஆப்தே எனப்படும் அவன் உடை ஸ்பார்ட்டா வீரர்களுக்கு உரியது போல் இருக்கவில்லை. அன்றிரவு அவனுக்கு மிகவும் பிடித்தமான கம்பளியாலான அங்கியும், சாம்பல் நிற ஸ்லாக் சட்டையும், அவற்றின் மீது விளையாட்டு வீரர்களைப் போல் மிருதுவான வெள்ளைநிற சட்டையும் அணிந்திருந்தான். அந்த சட்டையின் காலர்கள் மடித்து விடப்பட்டு உள்ளிருந்த அங்கியின் கழுத்துப் பகுதியில் பொருந்தி யிருந்தன. அந்தக் கூட்டத்தினிடையே கோட்சே அவ்வப்போது பெரும்பாலும் நயமில்லாத வகையில் வந்து சென்றான். விருந்தாளிகளிடம் ஆப்தே முன்னேறிச் செல்லும் போது அவனிடம் ஒரு கள்ளத்தனம் இருந்தது. அவனது புன்னகையில் முழுமைத்தன்மை இல்லை. ஆனால் அவ்வப்போது இதழ் விரிந்தது. அவன் கோட்சேயின் பங்காளி; வியாபார மேலாளர்; இந்து ராஷ்ட்ராவின் நிர்வாகி, அவர்கள் ஓருயிரும் ஈருடலும் பெற்றவர்கள் போல் இருந்தனர். அவனது வறண்ட கருநிற தலைமுடி அவனது நெற்றிக்கு மேல் உள்ள பகுதி முழுவதும் பரவி பின்னோக்கிச் சென்றது. தலையின் பின் பகுதியில் அது சுருண்டு வளைந்திருந்தது. ஏறிய நெற்றியுடனும், நீண்ட அழகிய மூக்குடனும் பக்கவாட்டில் ஆப்தேயைப் பார்க்கும் போது ஆண்மை நிறைந்த நெஃபர்டிடி (Nefertiti) யின் தோற்றம் போலிருந்தது. அவனது முகத்தோற்றத்தில் சிறப்புக் குரியவை கண்கள் மென்மையும் கருமையும் உடைய அந்தக் கண்களைக் காண்பவர்களின் முகம் வேறுபக்கம் திரும்பாது. 'அவன் கண்களாலேயே பேசினான். அவனது கண்கள் பேசியதை மக்கள் கவனித்தார்கள்' என்று ஆப்தேயின் நண்பர்களில் ஒருவர் கூறினார்.

34 வயதான ஆப்தே அவனது பங்காளியை விட மூன்று ஆண்டுகள் இளையவன். உலக வாழ்க்கையிலிருந்து கோட்சே எந்த அளவுக்கு விலகியிருந்தானோ அந்த அளவுக்கு ஆப்தே மூழ்கியிருந்தான். அவன் செய்து முடிப்பவன்; செய்ய வைப்பவன். அணி திரட்டும் ஆற்றலாளன்; திட்டமிடுவதில் வல்லவன். விருந்தினர்களுக்கு அனைத்தும் வழங்கப்பட்டு விட்டன. மையப்பகுதிக்கு அவன் விரைந்தான். கவனத்தை ஈர்க்க கைகளைத் தட்டினான்.

இந்து ராஷ்ட்ராவின் வரலாற்றைப் பரிசீலிக்கும் வகையில், நிர்வாகக் குழுவின் தலைவனான ஆப்தே பங்குதாரர்களிடையே சிறிது நேரத்துக்கு

வருடாந்தர அறிக்கையை வாசித்தான். பின்னர் அந்த மாலை நிகழ்ச்சியின் உவர்ச்சிகர அம்சமாகத் தனது பங்காளியைப் பேச அழைத்தான். பாடல் அரங்கேற்றத்துக்காக பதற்றத்துடன் காத்திருக்கும் பாடகன் போல கோட்சே மையப்பகுதிக்குச் சென்றான். அமைதி ஏற்படுவதற்காகக் காத்திருந்தான்.

அவன் அப்படிச் செய்யும் போது, கீழே கூடியிருக்கும் மக்கள் பார்வையில் படாத வகையில் எதிரே இருந்த ஒரு கட்டிடத்தின் நான்காவது மாடியிலிருந்த ஒரு ஜன்னல் கதவு மெல்ல திறக்கப்பட்டது. அந்த ஜன்னலின் சட்டத்துக்கு அருகே ஒரு உருவம் மறைந்திருந்தது. சாதாரண மக்கள் உடையில் இருந்த பூனா சிஐடி பிரிவைச் சேர்ந்த ஒரு காவலர்தான் அவர். பணியார்வத்துடன், கோட்சேயின் பேச்சைக் கேட்க அவர் முன்னோக்கி நகர்ந்தார். ஆகஸ்ட் 15 லிருந்து பூனா காவல்துறையினர் அந்த நகரின் மற்ற இந்துத் தீவிரவாதிகளைப் போலவே கோட்சே, ஆப்தே ஆகியோரையும் உன்னிப்பாக கவனித்து வந்தனர். இவர்களின் நடவடிக்கைகள் பற்றிய வாராந்தர அறிக்கை பம்பாய்க்கும் டில்லிக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. சிஐடி பிரிவின் ரகசியக் கோப்புகளில் ஒவ்வொருவரின் பெயர், தொழில், அரசியல் சார்பு ஆகியவை குறித்து வைக்கப்பட்டிருந்தன. கோட்சே பற்றிய குறிப்பில் இடம் பெறாத ஒன்று ஆப்தே பற்றிய குறிப்பில் கூடுதலாக இடம் பெற்றிருந்தது : 'மிகவும் ஆபத்தான நபர்.'

கோட்சேயின் பேச்சு விஷம் கக்கும் வகையிலும் உணர்ச்சியைத் தூண்டுவதாகவும் அமைந்தது. லூயி மவுண்ட்பேட்டன் அவரது பிரிவினைத் திட்டத்தை வெளியிட்டதிலிருந்து நடக்கும் சம்பவங்களை மிகவும் கவனத்துடன் தொகுத்து அவனை ஏற்கெனவே ஆக்ரமித்த கருத்துகளுடன் காந்தி, காங்கிரஸ், இந்தியப் பிரிவினை என்ற பொருளில் அவன் பேசினான். 'அவரது இறந்த உடலின் மீதுதான் இந்தியா பிரிக்கப்படும் என்று காந்தி கூறினார். இந்தியா பிரிக்கப்பட்டு விட்டது. ஆனால் காந்தி வாழ்கிறார். காந்தியின் அஹிம்சை இந்துக்களை அவர்களின் எதிரிகளுக்கு முன் நிராயுதபாணிகளாக்கி விட்டது. இப்போது இந்து அகதிகள் பட்டினி கிடக்கும் போது அவர்களை அடக்கி ஒடுக்கும் முஸ்லீம்களை காந்தி பாதுகாத்து வருகிறார். கற்பழிக்கப்படுவதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இந்துப் பெண்கள் கிணறுகளுக்குள் விழுந்து சாகிறார்கள். ஆனால் காந்தி சொல்கிறார். "பலியாவதில் தான் வெற்றி இருக்கிறது." பலியானவர்களில் ஒருவராக எனது தாயும் இருக்கலாம்!

'தாய் நாடு கூறு போடப்பட்டுள்ளது' என்று அவன் கூறும் போது அவனது குரல் தழுதழுப்புடன் ஓங்கி ஒலித்தது. 'கழுகுகள் அவளின் சதைகளைக் கொத்திக் கிழிக்கின்றன. நட்ட நடுவீதியில் இந்துப் பெண்களின் கற்பு சூறையாடப்படுகிறது. இந்தக் கற்பழிப்பு நடக்கும் போது காங்கிரஸ் அலிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எத்தனைக் காலம், ஓ... எத்தனைக் காலம் இதனைப் பொறுத்துக் கொள்ள முடியும்?'

அவனது கடைசி வார்த்தைகளின் எதிரொலி மறைந்த போது, கோட்சேயின் விறைத்து நின்ற உடல் உணர்ச்சியால் குலுங்கியது. பின்னர் உடலுறவின் உச்சகட்டம் முடிந்த பின் தளர்ந்து போகும் அனுபவத்தை அவன் அடைந்தான். முழக்கமிடும் பேச்சாளர் நிலையிலிருந்து சாதாரணப் பத்திரிகையாளனானான்.

அவன் பேச்சை முடிக்கும் போது கரவொலி அதிர்ந்தது. அப்படி நடப்பது ஒன்றும் ஆச்சரியமாக இருந்ததில்லை. பம்பாயிலிருந்து 119 மைல் தூரத்தில்

உட்புறமாக இருக்கும் பூனா நகரின் பணி கடந்த மூன்றரை நூற்றாண்டுகளாக தீவிர இந்து தேசியவாதமாகவே இருந்துள்ளது. பூனாவுக்குப் பின்னால் உள்ள மலைப்பகுதிகளில் தான் இந்து மதக் கதாநாயகன் மாவீரன் சிவாஜி பிறந்தார். மொகலாயப் பேரரசர் அவுரங்க சீபுக்கு எதிரான கொரில்லா யுத்தப் பயிற்சி முகாம்களை இங்கேதான் அவர் துவக்கினார். அவரது வாரிசுகளான பேஷ்வாக்கள், தீயால் புனிதம் பெற்றவர்களான சித்பவன் குழுவினர் பிராமணர்கள் ஆகியோர் 1817 வரை இந்தியாவின் பிரிட்டிஷ் ஆட்சியாளர் களை எதிர்த்தனர். தேசியவாத இயக்கத்தை அஹிம்சைப் பாதைக்குத் திருப்பிய காந்திக்கு முன்னர் இந்திய தேசிய வாதத்தின் தீவிரவாதத் தலைவராக இருந்த பாலகங்காதர திலகர் போன்றவர்கள் பூனாவின் வீதிகளிலிருந்துதான் வெள்ளம் போல் வெளிப்பட்டார்கள்.

பூனாவின் இந்து மத வெறியர்களுக்கு இப்போது ஒரு புதிய தலைவர் கிடைத்திருக்கிறார். சிவாஜி, பேஷ்வாக்கள், திலகர் வரிசையில் அவர் வழிபாட்டுக்குரியவரானார். இந்து ராஷ்ட்ரா அலுவலகத்துக்கு அவர் நேரில் வந்திருக்கவில்லை. ஆனால் அவரது உருவம், 16 எம்.எம். திரைப்பட புரஜக்டர் மூலம், சிமெண்ட் சுவரின் மீது பதிந்து மின்னியபோது எதிர்பார்த்த அமைதி ஏற்பட்டது. கூடியிருந்தவர்கள் அசைவற்றிருந்தனர். கேமராவின் படப் பிடிப்பில் ஆட்டம் இருந்தாலும், நல்ல ஒலி அமைப்பு இல்லாததால் இடை யிடையே தடைப்பட்டு அவரது பேச்சொலிக்கு இடையூறு ஏற்பட்டாலும் வினாயக் தாமோதர் வீர் 'வீர சவார்க்கரின்' குரலைக் கேட்க ஏதோ ஒரு தூண்டுதல் இருந்தது.

அவர் கனல் பறக்கும் ஆற்றல் மிக்க பேச்சாளர். மகாராஷ்ட்ராவின் சர்ச்சில் என்று அவரது ஆதரவாளர்கள் அவருக்குப் பட்டம் கொடுத்திருந்தனர். அவருக்கு செல்வாக்குள்ள பூனாவிலும் பம்பாயிலும் நேருவை விட அதிகமான கூட்டத்தை சவார்க்கரால் கூட்ட முடிந்தது. நேரு, ஜின்னா, காந்தி, ஆகி யோரைப் போலவே சவார்க்கரும் தனது கல்வியை லண்டனில் உள்ள இன்னர் கோர்ட்டில் முடித்தவர்தான். இருப்பினும் சட்டம் கற்பிக்கும் அந்த உயர்ந்த இடத்தில் இவர் கற்ற பாடங்கள் அவர்கள் கற்றதைப் போல் இருக்கவில்லை.

பிரிட்டிஷ் அதிகாரி ஒருவரின் படுகொலைத் திட்டத்தை தூரத்திலிருந்து செயல்படுத்திய சதிக் குற்றத்துக்காக 1910ஆம் ஆண்டு லண்டனில் கைது செய்யப்பட்டார். விசாரணைக்காக இந்தியாவுக்கு மார்செல்ஸ் கப்பலில் கொண்டு வரப்பட்ட போது அதன் ஜன்னல் துவாரம் வழியே குதித்துத் தப்பி விட்டார். இருப்பினும் பின்னர் ஃபிரான்சிலிருந்து நாடு கடத்தப்பட்டு அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தமான் தீவுகளிலிருந்த சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். போருக்குப் பின் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளிக்கப்பட்ட போதுதான் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இந்து முஸ்லீம் ஒற்றுமை என்ற கொள்கைக்காகவும், காந்தியின் அஹிம்சைக்காகவும் காங்கிரசை சவார்க்கர் வெறுத்தார். அவரது கொள்கை இந்து இனமே உயர்ந்தது எனும் இந்துத்வா கொள்கை. அவரது கனவு- சிந்து நதியிலிருந்து பிரம்மபுத்திரா வரை, கன்னியாகுமரியிலிருந்து இமயமலைவரை மீண்டும் மகா இந்து சாம்ராஜ்யத்தை உருவாக்குவது. அவர் முஸ்லீம்களை

வெறுத்தார். அவர் கனவு காணும் இந்துச் சமூகத்தில் அவர்களுக்கு இடமே இல்லை.

தேசம் தழுவிய வலதுசாரி இந்து அரசியல் கட்சியான இந்து மகா சபாவுக்கு அவர் இரண்டு முறை தலைவராக இருந்திருக்கிறார். இருப்பினும் அவரது உண்மையான ஈடுபாடு, அதன் ஃபாசிஸத்தன்மை கொண்ட அரை ராணுவ அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.ஸில்தான். அதன் மைய அமைப்பாக இருந்தது இந்து ராஷ்ட்ர தளம் என்ற ரகசிய சங்கம். பூனாவில் 1942 மே 15இல் சவார்க்கரால் நிறுவப்பட்டது. அதன் ஒவ்வொரு உறுப்பினரும் சவார்க்கருக்கு தனிப்பட்ட முறையில் விசுவாசமாக இருப்பேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். அவர் அந்த இயக்கத்தின் சர்வாதிகாரி என்று குறிப்பிடப் பட்டார். அவர்களின் 'சர்வாதிகாரியிடம்' கண்மூடித்தனமாக வைத்த விசுவாசத்தை விட இன்னொரு மறைமுகமான பிணைப்பு அந்த தளத்தின் தலைவருக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் இடையே இருந்தது. இந்தியர்களின் உறவுகளில் மிகவும் கட்டுப்பாடு மிக்கதும் அர்த்தமுள்ளதுமான சாதியை அவர்கள் பின்பற்றினர். அவர்கள் அனைவரும் பூனாவின் உயர்குடியைச் சேர்ந்த பேஷ்வாக்களின் வாரிசுகளான சித்பவன் பிராமணர்கள். இந்து ராஷ்ட்ராவின் ஆசிரியரும் நிர்வாகியும் அவர்களைச் சார்ந்தவர்கள்தான்.

சவார்க்கர் பற்றிய திரைப்படம் முடிந்த போது வணக்கத்துக்குரிய அமைதி நிலவியது. இந்துக்களின் தேவதூதர் திரைப்படத்தில் தோன்றியதுதான் அந்த மாலை நேர நிகழ்ச்சியின் முக்கிய அம்சம். தோளோடு தோள் சேர்ந்து ஆப்தேயும் கோட்சேயும் அவர்களின் அச்சுக் கூடத்துக்கு சென்றனர். சவார்க்கர் கொடுத்த பதினைந்தாயிரம் ரூபாய் முன்பணத்தைக் கொண்டுதான் அவர்கள் இந்தப் பத்திரிகையைத் துவக்கியிருந்தனர். இந்துத் தீவிரவாதக் கோட்டையில் அவரது எஜமானரின் குரல் (His Master's Voice) தான் ஒலித்தது என்பதில் எவருக்கும் ஐயமில்லை. விருந்தினர்கள் கைதட்டியபோது அந்த இளைஞர்கள் இருவரும் புகைப்படத்துக்கு போஸ் கொடுத்தனர். பின்னர், உற்சாகமான முழக்கத்துடன், அவர்கள் சிவப்புப் பொத்தான் ஒன்றை விரல்களால் அழுத்தினர். அவர்களது அச்சு எந்திரத்தின் முதலாவது ஓட்டத்தை அது துவக்கி வைத்தது.

காந்தி மற்றும் காங்கிரஸ் கட்சியின் பொல்லாச் செயல்கள் பற்றிய தொடர் தாக்குதல்களை வெளியிடவிருக்கும் இந்து ராஷ்ட்ராவின் அச்சு எந்திரம் கலகலப்பான ஓசையுடன் இயங்கிய போது அங்கே கூடியிருந்த சிறிய கூட்டம் கலையத் துவங்கியது. இந்த நிகழ்ச்சிகளை ஜன்னல் ஓரமாக இருந்து கவனித்துக் கொண்டிருந்த காவலர் புறப்படும் போது அவரது நோட்டுப் புத்தகத்தை மூடினார். அப்போது அவர் விழா நடந்த இடத்தில் ஒரு மூலையின் நிழல் படர்ந்த பகுதியில் ஆப்தே இன்னொருவருடன் உரையாடிக் கொண்டிருப்பதை பார்த்தார். அவரும் காவல்துறையினரால் நன்கு அறியப்பட்டவர்தான். அவரைப் பற்றிய குறிப்பேட்டிலும் ஆப்தேவுக்கு இருப்பது போலவே இருந்தது: 'மிகவும் அபாயகரமான நபர்' அங்கே நடந்ததை காவலர் வேகவேகமாக நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொண்டார். அச்சு எந்திரத் திறப்பு விழாவில் கலந்து கொள்ள அறுபது மைல் பயணம் செய்து வந்திருக்கும் அந்தப் பார்வையாளரின் பெயரும் பூனா காவல்துறை கோப்புகளில் இனிமேல் ஆப்தேயின் பெயரோடு

சேர்த்தே குறிக்கப்படும். அவன் பெயர் விஷ்ணு கார்காரே. அஹமது நகரின் டெக்கான் கெஸ்ட் ஹவுஸின் உரிமையாளர். முஸ்லீம் ஊர்வலம் ஒன்றில் குண்டு வீசி விட்டு ஓடிவந்த, ஒரு நாளில் இந்தியா முழுவதும் பெயர் அறியப்படப் போகிற, மதன்லால் பாவாவைக் கட்டித் தழுவிக் கொண்டு காப்பாற்றியவன் இவன்தான். இந்து ராஷ்ட்ராவின் அச்சு எந்திரத்தை இயக்கப் பொத்தானை விரல்களால் இணைந்து அழுத்திய அந்த இரண்டு இளைஞர்களுக்கும் இரண்டு விஷயங்கள் மட்டும் பொதுவாக இருந்தன. ஒன்று அவர்களின் உறுதியான அரசியல் கொள்கை. இன்னொன்று இந்தியச் சமூகத்தின் மிகவுயர்ந்த பிராமண சாதியில் அவர்கள் பிறந்தது.

இந்துப் புராணக் கதைகளின்படி பிராமணர்கள் பிரம்மாவின் தலையிலிருந்து பிறந்தவர்கள். இவர்கள் சொர்க்கத்தில் ஆன்மாக்களைக் கொண்டிருக்கும் சப்த ரிஷிகளின் வழிவந்தவர்கள். முற்காலத்தில் முனிவர்களாகவும், தத்துவ ஞானிகளாகவும் உலகியல் வாழ்க்கைக்கும் அதன் ஆசாபாசங்களுக்கும் அப்பாற்பட்டு விளங்கினார்கள். பின்வந்த நூற்றாண்டுகளில் புரோகிதர்களாகவும் சமூகத்தில் உயர்குடியினராகவும் மாறினார்கள். இந்து மரபுப்படி இவர்கள் பறவைகள் போல 'இரு பிறப்பாளர்கள்' இடப்படும் முட்டைக்குள் ஒன்றும் அதன் ஓடு அலகினால் கொத்தப்பட்டு குஞ்சாக வெளிப்படும் போது மற்றொன்றுமாக பறவைகள் இரு பிறப்பெடுக்கின்றன. அதேபோல் ஒரு பிராமணன் பிறக்கும் போது ஒன்றும், ஆறுவயதில் இரண்டு புரி கொண்ட புனித நூலைக் கழுத்தில் அணிந்து அதிகாரபூர்வமாகப் பிராமணனாக அறிவிக்கப் படும் போது ஒன்றுமாக இரு பிறப்பு எடுக்கிறான்.

நாதுராம் கோட்சேயின் வாழ்க்கை உண்மையில் ஆரம்பமானது, அவனது தந்தையும் மற்ற சில பிராமணப் புரோகிதர்களும் அவனது இடது பக்கத் தோளில் இரட்டைப்புரி நூலைப் போட்டு, இந்தியாவின் மாபெரும் மக்கள் தொகையில் 2 சதவீதமாக இருந்த ஒரு சமூகத்தில், அவனை உறுப்பினராக்கிய போதுதான். பிரமிட் போன்ற இந்திய சமூக அமைப்பின் மேல் தட்டில் இளம் கோட்சேயை அவர்கள் அமர்த்தினர். இனிமேல் அவனது வாழ்க்கையை நிர்வகிப்பது விரிந்த கட்டமைப்புள்ள சலுகைகளும் கட்டுப்பாடுகளுமாகவே இருக்கும்.

பிராமண சாதிக்கான சலுகைகள் பொருளாதார ரீதியாக மட்டுமே இருக்க வேண்டிய அவசியமில்லை. கோட்சேயின் தந்தை ஒரு தபால்காரர். அவரது வருவாய் மாதத்துக்குப் பதினைந்து ரூபாய். ஆனால் அந்தப் பணிவான சிவில் ஊழியர், தனது மகன்களை மிகவும் கண்டிப்பான இந்து ஆசாரத்துடனேயே வளர்த்தார். பூணூலை அணிந்தவுடன் ரிக்வேதம், கீதை போன்ற இந்துக்களின் புனித நூல்களிலிருந்து சமஸ்கிருத ஸ்லோகங்களை தினமும் கற்கவும் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கவும் கோட்சே நிர்ப்பந்திக்கப்பட்டான்.

பெரும்பாலான ஆசார பிராமணர்கள் போலவே அவனது தந்தையும் காய்கறி உணவு உண்பவர்தான். பிராமணர் அல்லாத யாருடனும் அவர் ஒரு போதும் உணவருந்தமாட்டார். கோட்சேயின் தாயார் அவனது தந்தைக்கு உணவு பரிமாற மட்டுமே வெளியே வருவார். சாப்பிடுவதற்கு முன் அவர் நீராடினார். தூய்மையாக உடை உடுத்தினார். ஆடைகளைத் துவைத்து உலர வைக்கும் போது தூய்மையற்ற ஒரு கழுதையோ, பன்றியோ, மாதவிடாய்ப்பட்ட

பெண்ணோ அவற்றைத் தொட்டுவிடக்கூடாது. ஒரு நல்ல பிராமணர் என்கிற முறையில் சாப்பிடுவதற்கு முன் தண்ணீரை எடுத்து தட்டைச் சுற்றி சுடிகாரத் திசையில் (வலது புறத்திலிருந்து இடது புறமாக - மொ-ர்) தெளிப்பார். பிறகு உணவில் சிறு பகுதியை பறவைகளுக்கோ அல்லது தேவைப்படும் பிற வற்றுக்கோ ஒதுக்கி வைப்பார். பின்னர் வலது கை விரல்களைக் கொண்டு சாப்பிடுவார். அவர் சாப்பிடும் போது படிக்கவே மாட்டார். ஏனென்றால் மை என்பது அசுத்தப் பொருள்.

ஆசாரமான இந்துவாக வளர்வது இளம் கோட்சேக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இறையுணர்வில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டான். அவனது வீட்டில் இருப்பவர்களுக்கு வியப்பு ஏற்படும் வகையில், கபாலிக பூஜை என்ற அரிய வழிபாட்டு முறையைச் செய்து காட்டி திறமையை வெளிப்படுத்தினான். குடும்ப வீட்டின் சுவர் ஒன்றில் பசுவின் புது சாணியை நாதுராம் தடவினான். பிறகு கரியையும் எண்ணெயையும் கலந்து ஒரு வட்ட வடிவமான தகரத் தட்டின் மீது தடவி அந்தச் சுவரில் சாய்த்து வைத்தான். அவன் எதிரே ஒளிவிடும் ஒரு விளக்கை வைத்தான். 12 வயதான கோட்சே ஒரு வகையான மோன நிலையில் அந்தத் தகட்டின் முன் அமர்ந்தான். கரியும் எண்ணெயும் கலந்த குழம்பின் அசைவில் அவன் இதற்கு முன் படித்திராத எழுத்துகளையும் ஸ்லோகங்களை யும், உருவங்களையும் சிலைகளையும் பார்த்தான். மோன நிலை முடிவுக்கு வந்த போது அவன் காதில் விழுந்ததையோ காட்சியாய்க் கண்டதையோ மீண்டும் நினைவு கூர முடிந்ததில்லை. அந்தக் கரிப்பூச்சில் தெரிந்த அடையாளங்களை அவனால் மட்டுமே படிக்க முடிந்தது. அவனது வாழ்க்கை மாபெரும் சாதனைக்காக விதிக்கப்பட்டுள்ளது என்று குடும்பத்தினர் நம்பினார்கள்.

இருப்பினும் அந்த நம்பிக்கையை நியாயப்படுத்துவது போல் கோட்சேயின் இளமைக்காலத்தில் எதுவும் நடக்கவில்லை. மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஆங்கிலப் பாடத்தில் தேறவில்லை. இதனால் பல்கலைக் கழகத்துக்குள் நுழைய முடியவில்லை. பள்ளியை விட்டு வெளியே வந்தபின் ஒவ்வொரு வேலையாக மாறிக் கொண்டேயிருந்தான். கப்பலுக்கு சரக்குகள் ஏற்றும் கிடங்கில் பெட்டிகளுக்கு ஆணியடித்தல், பழங்கள் விற்றல், டயர்களைப் பழுது பார்த்தல் என பல வேலைகள் செய்தான். அமெரிக்க மிஷனரிக் குழு ஒன்று கற்றுக் கொடுத்த தொழிலில் மட்டும் தான் அவன் தேர்ச்சியடைந்தான். 1947 வரை அதே தொழிலில் தான் நீடித்தான் - அது தையல் தொழில்.

அவன் அரசியலில் அதிக ஆர்வம் கொண்டிருந்தான். அவன் காந்தியின் தீவிர ஆதரவாளனாக மாறினான். சட்டமறுப்புக்கு அழைப்பு விடுத்த போது காந்தியின் சார்பில் சிறைக்குச் சென்றது தான் நாதுராம் கோட்சேக்கு முதல் சிறைவாசம். ஆனாலும் 1937இல் சித்பவன் பிராமணரான வீரசவார்க்கர் என்ற அரசியல் தலைவரைப் பின்பற்றுவதற்காக, காந்தியின் இயக்கத்தை கோட்சே கைவிட்டான்.

எந்தவொரு தலைவருக்கும் இவ்வளவு விசுவாசமான சீடர் கிடைத்திருக்க மாட்டார். தனது குருநாதரின் மிகச்சிறிய தேவைகளையும் கூட கவனித்தபடி, உண்மையானவனாகவும், விடா முயற்சியுடையவனாகவும், இந்தியா முழுவதற்கும் சவார்க்கரின் நிழல் போல பின் தொடர்ந்தான் கோட்சே. குருநாதரின் அரவணைப்பில், சிறுவயதில் கரித்தகட்டில் தாம் படித்த

*அடையாளங்களின் உண்மைகளை உணரும் அளவுக்கு கோட்சே வளர்ந்தான். சவார்க்கரின் இந்துத்துவா கொள்கையால் ஈர்க்கப்பட்ட அவன் அது சம்பந்தமான அனைத்தையும் படித்தான்; ஆய்வு செய்தான். ஒரு சிறந்த பேச்சாளனாகவும் எழுத்தாளனாகவும் தன்னைத்தானே வளர்த்துக் கொண்டான். சவார்க்கரிடமும் அவரது கொள்கைகளிடமும் வெறிபிடித்த பக்தி வைத்திருந்தபோதும் நுட்பமான ஒரு அரசியல் சிந்தனையாளனாக அவன் மாறினான். 1942 வாக்கில், மிகவும் ஆசாரமான குடும்பத்தில் வளர்ந்து வந்த அந்த இளைஞனுக்கு பிரம்மா, சிவா, விஷ்ணு கடவுள்களாகத் தோன்றவில்லை. மாறாக மொகலாயர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் எதிராக இந்துக்களைத் தட்டியெழுப்பிய அழியாப்புகழ் பெற்ற தலைவர்களும் அவர்களின் உருவங்களுமே தெய்வங்களாயினர். இளமைக்காலத்தில் வழிபட்ட கோயில்களைக் கைவிட்டான். உலகியல் சார்ந்த புதிய கோயிலை அவன் கண்டறிந்தான். அது தான் ஆர்.எஸ்.எஸின் தலைமையகம்.*

*இந்தக் கோயில்களில் ஒன்றில் தான் முதன்முறையாக நாராயண் ஆப்தேயை கோட்சே சந்தித்தான். 1944இல் சவார்க்கரின் வேண்டுகோளுக்கிணங்க துவக்கப்பட்ட அவர்களின் பத்திரிகை பூனாவில் மிகவும் அனல் கிளப்புவதாக இருந்தது. முதலில் இது 'தி அக்ரானி' என்று அழைக்கப்பட்டது. பிரிவினைக்கு எதிராக 1947 ஜூலை 3 இல் சவார்க்கரும் இந்து மகாசபாவும் 'கருப்பு தினம்' அறிவித்த போது அதற்கு ஆதரவு தெரிவித்து நச்சுக்கருத்துக்களைப் பரப்பிய தால் பம்பாய் மாகாண அரசால் அந்தப் பத்திரிகை மூடப்பட்டது. நிர்வாகத்தில் இருந்த யாரோ சிலரின் தயவுடன் பத்து நாட்களுக்குள் கோட்சேயும் ஆப்தேயும் இந்து ராஷ்ட்ரா என்ற புதிய பெயரில் ஒரு பத்திரிகையைத் துவக்கி விட்டனர்.*

*பத்திரிகையில் அவர்களின் பங்கு என்பது அவர்களின் தன்மைகளுக்கு ஒத்திசைந்ததாக இருந்தது. ஆப்தே மிகவேகமாக செயல்படும் வியாபாரி; கோட்சே பரபரப்பாக எழுதும் பத்திரிகையாளன்; ஆப்தே கூட்டத்துக்குத் தலைவன் அதன் வேகத்தைக் கட்டுப்படுத்தக் கூடியவன்; கோட்சே அனல் பறக்கும் பேச்சாளன்; ஆப்தே - அரசியல் திட்டங்களுக்கு வடிவம் கொடுப்ப வன்; கோட்சே - அவற்றை விரிவாக விளக்கிக் கூறுபவன்.*

*கோட்சே தனது தார்மீக நெறிகளிலிருந்து வளைந்து கொடுக்காமல் பிடிவாதமாக இருப்பவன். ஆனால் ஆப்தே வளைந்து கொடுத்தே எதனையும் ஏற்றுக் கொள்ளும் குணமுடையவன். ஆப்தேயின் கண்கள் முக்கிய விஷயத்திலேயே குறியாக இருக்கும். காலம் அறிந்து செயல்பட்டு பணம் பண்ணுவதற்கும் அதற்காக ஏற்பாடு செய்வதற்கும் பேரம் பேசுவதற்கும் எதையும் ஏற்பதற்கும் ஆப்தே தயாராக இருந்தான். கோட்சே உறுதிமிக்க துறவியாக இருந்தவன். காஃபி மீதான அவனின் தணியாத தாகத்தைத் தவிர உணவு விஷயத்தில் அதிக அக்கறை கொள்ளாதவன். தனது தையல் கடைக்கு எதிரே ஒரு துறவியின் குடிலில்தான் அவன் வசித்தான். அதற்குள் இருந்த ஒரே பொருள் கயிற்றுக் கட்டில்தான். விசேஷமான ஒரு கடிகார அலாரத்தின் உதவியால் தினமும் காலை ஐந்தரை மணிக்கு எழுந்து கொள்வான். அவனது தண்ணீர்க் குழாய் திறந்தே இருக்குமாதலால், நகராட்சியின் காலைநேரத் தண்ணீர் விநியோகம் எழுப்பும் முதல் சத்தத்தில் அவன் விழித்துக் கொள்வான்.*

ஆப்தே நல்ல வாழ்க்கை வாழ்ந்தவன். கொஞ்சம் பணம் சேர்ந்து விட்டால் உடனே தனது தையல்காரரைப் பார்க்க பம்பாய்க்குப் புறப்பட்டு விடுவான். நல்ல வசதியான உணவு, விஸ்கி, மற்றும் வாழ்க்கையைச் சந்தோஷமாக்கும் அனைத்து அம்சங்களையும் அவன் விரும்பினான். சவார்க்கரின் தத்துவ செல்வாக்கினால் இந்துத்துவத்தை ஒரு மதமாகக் கொள்ளும் ஆர்வத்தை இழந்தான் கோட்சே. ஆனால் உலகியல் பற்றுக் கொண்ட ஆப்தே, ஏதாவது ஒரு கோயிலுக்குச் செல்வான்; கண்ணில்பட்ட தெய்வத்தின் காலடியில் சில ரோஜாப்பூக்களை வைத்து மணியடித்து வழிபடுவான். சோதிடத்திலும் கைரேகையிலும் அதிக நம்பிக்கை வைத்திருந்தான்.

இந்து மக்களை மீண்டும் விழிப்படையச் செய்வதற்கு வன்முறையை கோட்சே ஆதரித்தாலும், அவனால் ரத்தத்தைக் காண முடியாது. ஒரு நாள், ஆப்தேயின் ஏ மாடல் ஃபோர்ட் காரை ஓட்டிச் சென்றபோது, மிகவும் மோசமாகக் காயமடைந்த ஒரு சிறுவனை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுமாறு ஒரு கும்பல் அவனைக் கேட்டுக் கொண்டது. 'என் கண்ணில் படாமல் அவனைப் பின் இருக்கையில் வையுங்கள் ரத்தத்தைப் பார்த்தால் எனக்கு மயக்கம் வந்துவிடும்' என்று கோட்சே கலக்கத்துடன் கூறினான்.

இருப்பினும் கோட்சேக்கு பெர்ரிமேசனின் (Perry Mason) துப்பறியும் கதைகளைப் படிப்பதிலும், வன்முறை மற்றும் சாகசம் நிறைந்த திரைப்படங் களைப் பார்ப்பதிலும் ஆர்வம் இருந்தது. பெரும்பாலான மாலைப் பொழுது களை பூனாவின் கேபிடல் திரையரங்கின் இரண்டு ரூபாய் கட்டண வரிசையில் தனியாகச் செலவிடுவான். ஸ்காா்ஃபேஸ், தி சார்ஜ் ஆஃப் தி லைட் பிரிகேட் போன்ற திரைப்படங்களை விரும்பிப் பார்ப்பான்.

கூடிவாழ்வதில் விருப்பம் கொண்ட ஆப்தே, கூட்டங்களையோ விருந்து நிகழ்ச்சிகளையோ ஒருபோதும் தவற விட்டதில்லை. ஆனால் சமூக வாழ்க்கையை சுமையாக நினைத்த கோட்சே முடிந்தவரை இதையெல்லாம் தவிர்த்தான். அவனுக்கு ஒரு சில நண்பர்களே உண்டு. 'இந்த சமூகத்தை நான் காண விரும்பவில்லை. ஏனென்றால் எனது பணியில் நான் தனியாக இருப்பதையே விரும்புகிறேன்' என்று அவன் கூறுவான்.

இதற்கெல்லாம் மேலாக பெண்கள் விஷயத்திலும் இவர்கள் இருவரும் பெருமளவு மாறுபட்டிருந்தனர். உடலுறவுக்கு வாய்ப்புக் கிடைத்தால், எந்த வேலையும், அது எவ்வளவு அவசரமானதாக இருந்தாலும், ஆப்தேக்கு அது தடையாக இருந்ததில்லை. திருமணமான அவனுக்குப் பிறந்த முதல் குழந்தை உடல் ஊனமுற்றது. இதனால் தனது மனைவி மீது கெட்ட ஆவியின் கண்பட்டு விட்டது என்று அவன் நம்பினான். எனவே அவளுடன் உடலுறவு வைத்துக் கொள்வதையே விட்டுவிட்டான். ஆனால் வேறு பல இடங்களில் இந்த வேலையை அதிகமாகவே செய்தான். அகமது நகரில் உள்ள அமெரிக்கன் மிஷன் உயர்நிலைப்பள்ளியில் பல ஆண்டுகள் அவன் கணித பாடம் கற்பித்தான். அங்கே படித்த மாணவிகளுக்கு அல்ஜிப்ரா கோட்பாடுகளைக் கற்றுக் கொடுப்பதை விட சிற்றின்ப செய்தி சொல்லும் காமசூத்ராவை சொல்லிக் கொடுப்பதில்தான் அவன் உண்மையான ஆர்வம் செலுத்தினான். அவனது கருநிற விழிகள், அரசியல் நண்பர்களைக் கவர்ந்தது போலவே பெண்களையும் கவர்ந்தன. விளைவுகளும் அதற்கேற்பவே இருந்தன.

எந்த ஒன்றை கடைப்பிடிக்க காந்தி மிகவும் கவலைப்பட்டாரோ, துயரங்களுக்கு ஆளானாரோ அந்த பிரம்மச்சரியத்தை, எல்லாவகையிலும் தானாகவே முன்வந்து பாலுணர்வைக் கைவிடும் இந்து மதத்தின் தொன்மை வாய்ந்த சபதத்தை கோட்சே தனது 28வது வயதில் மேற்கொண்டான். பின்னர் அவன் வாழ்நாள் முழுவதும் அதனை உண்மையுடன் கடைப்பிடித்தான்.

டில்லிக்கு வடக்கே ஐம்பத்தைந்து மைல் தூரத்தில் உள்ள சிறிய நகரமான பானிப்பட்டு அதன் கொந்தளிப்பான வரலாற்றில் மூன்று முறை போர்க் களங்களைக் கண்டிருக்கிறது. மொகலாயக் கூட்டத்தினருக்கு இந்தியாவின் தலைநகரை அடைய அது பாதை அமைத்துக் கொடுத்தது. இப்போது, மவுண்ட்பேட்டன் குழுவின் உத்தரவுகளையடுத்து பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு ரயில் பெட்டிகளில் அடைத்துக் கொண்டும் துயரத்தோடும் வந்து கொண்டேயிருக்கும் அகதிகளை, ஆக்ரமிப்பாளர்களின் புதிய அலையை வரவேற்கும் மையமாக அது மாறியிருந்தது.

அகதிகள் முகாமுக்குச் செல்லும் வழியில் அந்த நகரைக் கடந்து சென்ற அவர்கள் பல கொடூரமான சம்பவங்கள் பற்றி விவரித்தார்கள். ஆனால் நவம்பர் மாதக் கடைசியில் ஒரு மாலைவேளையில் பானிப்பட்டில் கதிகலங்கிய இந்துவான தேவிதத்தா என்ற ஸ்டேஷன் மாஸ்டர் எதிர்கொண்ட சம்பவத்துக்கு ஈடாக எதுவும் இருந்ததில்லை. பாகிஸ்தானில் வெறிபிடித்த முஸ்லீம்களின் தாக்குதலால் பழிவாங்கப்பட்டவர்களான சீக்கிய அகதிகள், அந்த ரயில் நிலையத்தின் பிளாட்பாரத்துக்கு வந்து சேர்ந்த ரயிலுக்குள் பழிவாங்கும் அலறல் சத்தத்துடன் புயலெனப் புகுந்தார்கள். அவர்கள் பாதையில் முதலில் தென்பட்டவர் தத்தாவின் உதவியாளரான ஒரு முஸ்லீம். ஆவேசமடைந்த சீக்கியர்கள் அந்த ஆதரவற்ற மனிதரைப் பிடித்துக் கொண்டு கிர்பான் எனப்படும் அவர்களின் புனித வாள்களை உருவினார்கள். கதிகலங்கிப் போன அந்த இந்து ஸ்டேஷன் மாஸ்டருக்கு, ஒரு நல்ல அதிகாரி என்ற முறையில், வாழ்நாள் முழுவதும் சொல்லிப் பழக்கப்பட்ட ஒரு வார்த்தை மட்டுமே, அலறும் போதும் மூளையில் உதித்தது.

'ப்ளீஸ்.. ப்ளீஸ்... என்று அவர் கதறினார். 'இந்த நிலையத்தின் பிளாட் பாரத்தில் கொல்லாதீர்கள்!'

அவர் வேண்டுகோளுக்கு சீக்கியர்கள் செவிசாய்த்தனர். அவரின் நண்பரை நிலையத்தின் பின்புறத்துக்குக் கொண்டு சென்று தலையை வெட்டினார்கள். பிறகு அவர்கள் பானிபட் நகர முஸ்லீம் குடியிருப்புகளுக்குச் சென்றனர்.

தொண்ணூறு நிமிடங்களுக்குப் பிறகு ஸ்டேஷன் வேகன் கார் ஒன்று ரயில் நிலையத்தின் நுழைவாயில் நோக்கி வந்தது. அந்த மாலை நேரத்தில் பானிபட் முஸ்லீம்களைப் பாதுகாக்கக் கூடிய ஒரே படை - மகாத்மா காந்தி - அதிலிருந்து இறங்கியது. யமுனை நதிக்கரைகளில் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருந்து டில்லிக்கு வழி திறந்து விட்ட நாளிலிருந்து பானிபட் முஸ்லீம் மக்கள் தொகை முக்கியத்துவம் பெற்றிருந்தது. அந்த மக்கள் தொகை கல்கத்தாவின் காவலருக்கு ஒரு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உடையதாக இருந்தது.

அந்த ரயில் நிலையத்தைச் சுற்றி துன்ப துயரங்களோடு வாடிக் கொண்டிருந்த அகதிகள் கூட்டத்தை நோக்கி பாதுகாப்பு ஏதுமின்றி அவர்

நடந்தார். 'செல்லுங்கள், இந்த சமூகத்தைச் சேர்ந்த முஸ்லீம்களைக் கட்டித் தழுவுங்கள், இங்கேயே தங்கியிருக்குமாறு கேளுங்கள்' அவர் சொன்னார். 'பாகிஸ்தானுக்குச் செல்லாமல் அவர்களைத் தடுத்து நிறுத்துங்கள்'

அதிர்ச்சியும் ஆத்திரமும் கொண்ட மக்களின் கர்ஜனைக் குரல்கள் தான் அவரின் வார்த்தைகளுக்கு வரவேற்பாய் அமைந்தன. 'உங்கள் மனைவியையா அவர்கள் கற்பழித்தார்கள்?' 'உங்கள் பிள்ளையையா அவர்கள் வெட்டிக் கூறு போட்டார்கள்?'

'ஆமாம்' காந்தி பதிலளித்தார். 'அவர்கள் கற்பழித்தது என் மனைவியைத் தான்; அவர்கள் கொன்றது என் மகனைத்தான். ஏனென்றால் உங்களின் பெண்கள் எனது பெண்கள், உங்களின் பிள்ளைகள் எனது பிள்ளைகள்' அவர் பேசிய போது அவரைச் சுற்றி வாள்களும் கத்திகளும் வேல்கம்புகளும் மாலைகளாக சூரிய ஒளியில் ஜொலித்தன. 'வன்முறைக்கான இந்த ஆயுதங்கள், வெறுப்பை வளர்க்கும் இந்த ஆயுதங்கள் எந்தப் பிரச்சனைகளையும் தீர்க்காதவை' அவர் பெருமூச்சுடன் கூறினார்.

அவர் வந்திருக்கும் செய்தி பானிபட் முழுவதும் விரைந்து பரவியது. ரயில் நிலைய சதுக்கத்தில் திடீரென்று நடத்தவிருக்கும் பிரார்த்தனைக் கூட்டத்துக்காக பானிபட் நகராட்சி அதிகாரிகள் அவசர அவசரமாக ஒலி பெருக்கிகளை அமைத்தனர். தடுப்புகளைக் கொண்டிருந்த குடியிருப்புகளிலி ருந்து முஸ்லீம்கள் அங்கே வந்து சேர்ந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து இந்துக்களும் சீக்கியர்களும் வந்தனர். இரண்டரை மாதங்களுக்கு முன் ஈத்-எல்-கபீர் விழாவின் போது கல்கத்தா மைதானம் இருந்தது போல், பானிப்பட்டின் மையப்பகுதியில் இருந்த மைதானத்தில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. புதிய அதிசயத்தை நிகழ்த்தும் என்ற எதிர்பார்ப்புடன் அந்த வயதானவரின் வார்த்தைகளுக்காக அவர்கள் காத்திருந்தனர். அவரது உள்ளத்துக்குள் ஏற்பட்ட கலக்கம் அவரைத் தடையின்றி பேச அனுமதிக்காததால் தொடர்ந்து தொண்டையைக் கனைத்து சரி செய்து கொண்டார். பின்னர் காந்தி தனது ஆயுதச் சாலையிலிருந்த ஒரே ஆயுதத்தை கூட்டத்தினர் பக்கம் திருப்பினார். அது அவரின் பேச்சு. மீண்டும் தனது அரசியல் கோட்பாட்டின் சாரத்தை வலியுறுத்தினார். 'அந்தப் பரிபூரணம்தான் நம் அனைவரையும் படைத்தது. இந்துக்கள், கிருத்துவர்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் என்ற அனைவரும் பொதுவான இந்திய அன்னையின் புதல்வர்கள்; புதல்விகள்.' குடிபெயர்ந்து செல்வதற்காக பானிபட் ரயில்நிலைய பிளாட்பாரத்தில் துயரத்துடன் வந்து குவிந்திருந்த அகதிகளுக்கு அவர் தனது மனப்பூர்வமான பரிவினை வெளிப்படுத் தினார். அவர்களின் இதயங்களை மனிதத் தன்மையற்ற தாக்கிவிடும் கொடூரங்களையும் பழிவாங்கல்களையும் அனுமதிக்காதீர்கள் என்று அவர் வேண்டினார். அவர்களின் துன்பங்களிலிருந்து மிக உயர்ந்த வெற்றிக்கான விதையைக் கண்டறியுமாறும் அவர் கோரினார்.

கூச்சத்துடனான ஒரு கருத்தோட்டம் அந்தக் கூட்டத்துக்குள் பரவத் தொடங்கியது. அங்கும் இங்குமாக, ஆயுதம் தாங்கிய சீக்கியர் முஸ்லீமுக்குக் கை கொடுத்தார். குளிர்க் காற்றால் நடுங்கிய சீக்கிய அகதிக்கு ஒரு முஸ்லீம் முழு கோட் அல்லது அரை கோட் வழங்கினார். மற்ற முஸ்லீம்கள் தங்களின் வீடு களிலிருந்து அகதிகளுக்காக உணவையும் தண்ணீரையும் கொண்டு வந்தார்கள்.

சாபங்களால் வரவேற்கப்பட்ட அந்தச் சிறிய மனிதர் இரண்டு மணி நேரத்துக்குப் பின் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அங்கிருந்து புறப்பட்டார். வாழ்த்தொலிகளுடன் அவரைக் காருக்கு அழைத்துச் சென்றனர். இருப்பினும் அவரது வெற்றி நிலையாமையை நிரூபித்தது. அவருக்கு ஆழ்ந்த மனவருத்தத்தை அளித்தது. அன்று மாலை அவரது செயல் பலரின் உயிர்களைப் பாதுகாத்தது. இருப்பினும் பானிபட் முஸ்லீம்களின் இதயங்களிலிருந்து அச்சத்தை முழுவதுமாக அகற்ற அதனால் முடியவில்லை. மகாத்மா பயணம் செய்து ஒரு மாதம் முடிவதற்குள்ளேயே, தொன்மையான இந்திய முஸ்லீம் சமூகத்தினரின் வாரிசுகளான 20,000 பேர் தங்களின் பிறந்த ஊரை விட்டு விட்டு பாகிஸ்தானுக்குச் செல்வதென்று முடிவு செய்தனர். அவர்கள் புறப்பட்டுச் சென்ற நாளினை காந்தி கவலையுடன் இப்படிக் குறிப்பிட்டார். 'இஸ்லாம் நான்காவது பானிபட் யுத்தத்தில் தோற்றுப் போனது' அது காந்திக்கும் தோல்வியாகவே இருந்தது.

## பூனா, நவம்பர் 1947

அழுக்கேறிய காவி வேட்டியோடும் ஒழுங்கற்று வளர்ந்த கருநிற தாடியோடும் வந்த அந்த சாதுவிடம், வழக்கமாகத் தனது மாணவிகளிடம் பேசுவதற்கு மட்டுமே பயன்படுத்தும் ஆர்வமான குரலில் நாராயண் ஆப்தே பேசிக் கொண்டிருந்தான். உண்மையில் அவன் ஒரு சாது அல்ல. பம்பாய் மாகாணத்தில் நன்கு அறியப்பட்ட திகம்பர் பாட்கே. கடவுள் பக்தியை விட முக்கியமாகக் காவல்துறை குறிப்பேட்டுக்காகத்தான் 'சாது'வாகியிருந்தான். ஆயுதக் கடத்தல் காரனான அவனுக்கு அந்த வேலைகளைச் செய்து முடிக்க, காவி உடையும் ஆன்மீகத் தோற்றமும் விருப்பமான மாறுவேடமாகவே இருந்தன.

கடந்த பதினேழு ஆண்டுகளில், வங்கிக் கொள்ளையிலிருந்து கொலைவரை யிலான குற்றச்சாட்டுகளுக்காக, தீவிரத்தாக்குதலுக்காக, ஒரு டஜன் அளவுக்கு ஆயுதச் சட்டங்களை மீறியதற்காக என சாதனை அளவாக 37 முறை பாட்கே கைது செய்யப்பட்டிருக்கிறான். இந்தக் குற்றச்சாட்டுகளில் எல்லாம் ஒன்றே ஒன்றை மட்டும் தான் காவல்துறையினரால் நிரூபிக்க முடிந்தது. காந்தியின் சட்டமறுப்பு இயக்கங்கள் நடந்த 1930இல் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் மரங்களை வெட்டிய வழக்குதான் அது. இதற்காக பாட்கே ஒரு மாதம் சிறை தண்டனை பெற்றான்.

பூனாவில் எளிமையான முகத்தோற்றம் கொண்ட ஒரு புத்தகக் கடைக்குப் பின்னால் தனது ஆயுத விற்பனைக் கடையை அவன் நடத்தினான். அவனது புத்தகக்கடையின் பின்பக்கம் இருந்த அறையில், நாட்டு வெடிகுண்டுகள், வெடிமருந்துகள், பட்டாக்கத்திகள், கோடரிகள், புலிநகங்கள், கைமுட்டிகளில் பொருத்தும் பித்தளை ஆயுதங்கள், பேனாக்கத்திகள், பஞ்சாபில் பிரபல மாயிருந்த, கசாப்பு செய்வதற்கான அனைத்து வகையான கோரக் கருவிகள் ஆகியவை குவிக்கப்பட்டிருந்தன. வாடிக்கையாளர்களுக்கிடையேயும் பூனாவைச் சுற்றியுள்ள வழிப்பறிக்காரர்கள், கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், கூட்டுக் கொள்ளையர் ஆகியோர் மத்தியிலும் பிரபலமாகும் வகையில்

பாட்கேயும் அவனது வயது முதிர்ந்த தந்தையும் ஒரு வகை ஆடையைத் தயாரித்து வந்தனர். குண்டு துளைக்காத அந்த உடையை அணியும் போது மத்திய காலப் படை வீரனின் தோற்றத்தைத் தரும்.

பாட்கேயின் மிகச் சிறந்த வாடிக்கையாளர்களில் ஆப்தேயும் ஒருவன். இந்து ராஷ்ட்ராவின் நிர்வாகி கடந்த ஜூன் மாதத்திலிருந்து அவனிடம் 3000 ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்களை வாங்கியிருக்கிறான். ஆப்தே ஏதாவது ஒரு சதித் திட்டம் தீட்டிக் கொண்டிருப்பவன் என்பது பாட்கே அறிந்ததுதான். ஜின்னாவைக் கொன்று விட முடியும் என்ற நம்பிக்கையோடு ஒரு முறை டில்லியில் நடந்த முஸ்லீம் லீக் கூட்டத்தின் போது அவரின் மீது கையெறி குண்டு வீசப்பட்டது. பின்னர், ஜெனீவா பயணத்தின் போது ஜின்னாவைக் கொல்ல வேண்டும் என்பதற்காக கொலைக் கும்பல் தலைவனாக ஆப்தே ஸ்விட்சர்லாந்து செல்லத் தீர்மானித்தான். ஆனால், ஆப்தேக்கு சோர்வு ஏற்படும் வகையில், உடல் நலம் பாதித்த ஜின்னா பாகிஸ்தானை விட்டு எங்கும் செல்லவில்லை. மிகச் சமீபத்தில், நிஜாமைக் கொல்லும் முயற்சிக்கான வாய்ப்பைத் தேடி, ஹைதராபாதில் கெரில்லாத் தாக்குதலுக்கு அவன் ஏற்பாடு செய்திருந்தான்.

'நான் இப்போது ஒரு திட்டம் தீட்டியிருக்கிறேன்' இப்போது அவன் பாட்கேயிடம் கிசுகிசுத்தான். 'அந்தத் திட்டம் மிகப்பெரியது. அதற்கு எனக்கு கையெறி குண்டுகளும், வெடிப்பாற்றலுள்ள மருந்துகளில் தோய்த்த பஞ்சுப் பாளங்களும், சில கைத்துப்பாக்கிகளும் தேவைப்படுகின்றன.'

ஒரு கணம் பாட்கே திகைத்துப் போனான். அந்த நேரத்தில் இந்தப் பொருள்களில் எதுவும் அவனது கிடங்கில் இல்லை. மேலும் கைத்துப்பாக்கி கள் கிடைப்பது மிகவும் கடினம். இருப்பினும் பாட்கே தன்னிடம் வந்த வியாபாரத்தை விட்டு விடக் கூடியவனல்ல. 'எப்படியாவது பணம் சம்பாதிக்கும் பேராசைதான் அவனது மிக முக்கியமான தனித்தன்மை' என்று அவனை நெருக்கமாக இருந்து கவனித்த ஒருவர் பின்னாளில் கருத்து தெரிவித்தார். பொறுத்திருங்கள், தனக்கு அந்தப் பொருள்கள் எல்லாம் டிசம்பர் இறுதிக்குள் கிடைத்து விடும் என்று அவன் கூறினான். ஆப்தே சற்றுத் தயங்கினான். பிறகு அவன் சம்மதித்துத் தலையாட்டினான். அவனது 'பெரிய திட்டம்' மேலும் கொஞ்ச காலம் காத்திருக்க வேண்டியிருக்கும்.

பல ஆண்டு காலம் விசுவாசமுள்ள செயலாளராகப் பணியாற்றிய பியாரேலால் நய்யாருக்கு, 1947 டிசம்பர் மாதத் துவக்க நாட்களில் மகாத்மா காந்தியின் உருவம் 'ஒருவராலும் சித்தரிக்க முடியாத சோகத்துடன்' இருப்பதாகத் தோன்றியது. வெகுகாலமாக ஆசைப்பட்டு வந்த அதிகாரப் பதவிகளில் அவர்கள் இப்போது அமர்ந்து விட்டார்கள். தாம் தலைமை தாங்கி நடத்திய சுதந்திரப் போராட் டத்தில் தம்முடன் இருந்தவர்களுக்கும் தமக்கும் இடையே மனரீதியில் தடை எழுந்து விட்டதாக காந்தி உணர்ந்தார். எந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்க வெகுவாகப் பாடுபட்டாரோ அந்த நாட்டுக்குப் பொருத்தமற்ற நபராகி விட்டோமோ; தனது நண்பர்களுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்துகிறோமோ என்ற எண்ணம் காந்தியிடம் வளர்ந்து வந்தது.

'இனி இந்தியாவுக்கு அஹிம்சை பயன்படாதென்றால் என்னால் இந்தியாவுக்கு என்ன பயன்?' என்று அவர் எண்ணினார். 'இந்தக் கிழவரால் நாங்கள் பட்டதெல்லாம் போதும். எங்களை ஏன் அவர் தனியே விடக்கூடாது' என்று இந்தியாவின் தலைவர்கள் ஒரு நாள் கேட்டாலும் அவருக்கு அது ஆச்சரியமாக இருக்காது.

இருப்பினும் அப்படி ஒரு நாள் வரும் வரை அவர்களுக்கு ஓய்வளிக்க காந்தி விரும்பவில்லை. இந்தியாவில் வளர்ந்து வரும் ஊழல்களையும், அகதிகள் பட்டினிக் கிடக்கும் போது அமைச்சர்கள் அளிக்கும் ஆடம்பர விருந்துகளில் அவர்கள் கலந்து கொள்வதையும் உதாரணங்களுடன் காட்டி நேருவையும் படேலையும் அவர் தாக்கினார். 'மேற்கத்திய நாடுகளின் பொருளாதார விரிவாக்கம், அறிவியல் வளர்ச்சி என்ற கவர்ச்சியில் அவர்கள் மயங்கி விட்டதாகக் குற்றம் சாட்டினார். அதன் தாக்கத்தால், அதிகாரங்களைக் குவித்துக் கொண்டு வளமான நாட்டை உருவாக்குவோம் என்ற நேருவின் கனவை அவர் குறை கூறினார். 'இப்படிப்பட்ட செயல், மக்களை ஆட்டு மந்தைகளாக்கும். பின்னர் நல்ல மேய்ச்சல் நிலங்களுக்கு மேய்ப்பர்களையே நம்பியிருக்கும் நிலை ஏற்படும். மேய்ப்பனின் ஊழியர்களிடம் உள்ள கொம்பு விரைவிலேயே இரும்புத் தடி ஆகிவிடும். மேய்ப்பர்கள் ஓநாய்களாகி விடுவார்கள்' என்றும் அவர் சொன்னார்.

இந்தியாவின் நகரங்களில் பிறந்த அறிவு ஜீவிகள், புதிய உயர்குடி ஒன்றை உருவாக்குகிறார்கள். அவரின் நேசத்துக்குரிய கிராமவாசிகளின் நலன்களைக் கருத்தில் கொள்ளாமல் தேசத்தின் தொழில் மயத்திட்டங்களை அவர்கள் தீட்டுகிறார்கள். நகரத்தில் பிறந்த உடல்களோடு இந்த உயர் குடியினரை கிராமங்களுக்கு அனுப்ப வேண்டும் என்ற மாசேதுங்கின் சிந்தனையோடு ஒட்டிய யோசனையை காந்தி முன் மொழிந்தார். 'கிராமவாசிகள் குளிப்பதோடு அவர்களின் கால்நடைகளும் குளிப்பாட்டப்படுகிற, விழுந்து புரள்கிற குட்டைகளிலிருந்து அவர்கள் தண்ணீர் அருந்தட்டும். அந்த கிராமவாசிகள் போல் அவர்களும் சுட்டெரிக்கும் சூரியனுக்குக் கீழ் முதுகு வளைந்து வேலை செய்யட்டும்' பிறகு அவர்கள் கிராமவாசிகளின் கஷ்டங்களைப் புரிந்து கொள்வார்கள்.

ஒரு வேளை இந்தியாவின் தலைவர்கள் காந்தியைப் புறக்கணித்தால் அவரும் அவர்களைப் புறக்கணிக்கக்கூடும். டிசம்பரில் ஒரு நாள், பம்பாயின் பருத்தி தரகர் ஒருவரை அவர் பிர்லா மாளிகைக்கு அழைத்திருந்தார். 1944இல் பிரிட்டிஷ் சிறையிலிருந்து விடுதலையடைந்த பின் கடற்கரையோரம் இருக்கும் அவரது எளிய வீட்டில்தான் காந்தி களைப்பாறினார். நேரு, படேல் உட்பட இந்தியா வில் எவருக்கும் சொல்லக்கூடாது என்ற கட்டளையுடன் காந்தி ஒரு ரகசிய பயணம் பற்றி அவரிடம் எடுத்துரைத்தார். பல வாரங்களாகப் பாதுகாத்து வைத்திருந்த ஒரு கனவை நனவாக்கும் திட்டம் தான் அது. 'கராச்சிக்கு செல்லுங்கள். பாகிஸ்தானில் காந்தி பயணம் செய்வதற்கான திட்டங்களைத் தயாரியுங்கள்' என்று அவர் உத்தரவிட்டார்.

அந்தத் தரகர் அசந்து போனார். இந்த யோசனைப் பைத்தியக்காரத் தனமானது என்று அவர் காந்தியிடம் சொன்னார். இதனைச் செயல்படுத்த அவர் முயற்சி செய்தால் அவர் படுகொலை செய்யப்படுவது நிச்சயம்.

'எனது வாழ்க்கையின் ஒரு நிமிடத்தைக் கூட யாராலும் குறைக்க முடியாது. அது கடவுளுக்குச் சொந்தமானது' காந்தி பதிலளித்தார்.

இருப்பினும் பாகிஸ்தானுக்குச் செல்வதற்குமுன், முதலில் இந்தியாவில் ஒழுங்கை ஏற்படுத்த இன்னொரு முறை முயற்சி செய்ய வேண்டியுள்ளது என்று அவர் கருதினார். 'இங்கே தொடர்ந்து பேரழிவு நடந்து கொண்டிருந்தால், எந்த முகத்தோடு பாகிஸ்தானியர்களைக் காணமுடியும்' என்று அவர் வினவினார்.

வேறெங்கேயும் நடந்ததை விட டில்லியில் நடந்த பேரழிவு தான் அவருக்கு மிகவும் கவலையை ஏற்படுத்தியது. தலைநகருக்கு அவர் வருவதுதான் தங்களின் பாதுகாப்புக்கான ஒரே உத்தரவாதம் என்று முஸ்லீம் தலைவர்கள் தொடர்ந்து வற்புறுத்தி வந்தனர். பஞ்சாபிலிருந்து வந்த இந்து மற்றும் சீக்கிய அகதிகளால் நிரம்பியிருந்த காவல்துறையினர் மிகக் கொடுமையான முஸ்லீம் எதிர்ப்பாளர்களாக இருந்தனர். இந்து மற்றும் சீக்கிய அகதிகள் தங்களின் சொந்த உபயோகங்களுக்கு மசூதிகளையும் முஸ்லீம்களின் வீடுகளையும் கைப்பற்றிக் கொண்டார்கள். இவற்றில் சில கைவிடப்பட்டவை, சில அப்படிப்பட்டவை அல்ல.

செப்டம்பரில் நடந்தது போன்ற இன்னொரு வன்முறை வெறியாட்டம் தலைநகரில் வெடிக்காமல் பாதுகாக்க ஒரு பெரிய ராணுவப் படையால் மட்டுமே முடிந்திருக்கிறது என்ற உண்மை அவரை மிகவும் வருத்தமடையச் செய்தது. சுதந்திர இந்தியாவின் தலைநகரில் அமைதி நீடிப்பது ஆயுத பலத்தினால் மட்டுமே சாத்தியமாகியிருக்கிறது. காந்தி பயிற்றுவித்துப் பாதுகாத்த ஆன்மீக பலத்தினால் அல்ல. இந்தியத் தலைநகரில் தார்மீக அதிகாரத்தை செயல்படுத்த இயலாத அவர் பாகிஸ்தானில் அதனைச் செயல்படுத்த இயலும் என்று நம்புவது எவ்வாறு? அவரது பங்கிற்கு முக்கியமான முடிவு எடுக்கும் போது இது போன்ற சிந்தனைகள் முன்வந்து அவரைச் சோர்வுறச் செய்வது அதிகரித்து விட்டது. அந்த ஆண்டின் இறுதி நெருங்கி வரும் போது அவரது கவலைகளும் வளர்ந்தன.

'தேவ தூதர்கள் மீது கல்லெறிவதும் பின்னர் அவர்கள் நினைவாக ஆலயங்கள் எழுப்புவதும் காலம் காலமாக இந்த உலகம் கடைப்பிடித்து வரும் வழிதான்' ஒரு நாள் இரவு ஆங்கிலேயக் குழு ஒன்றிடம் அவர் இவ்வாறு கூறினார். 'இன்று நாம் கிருத்துவை வழிபடுகிறோம், ஆனால் கிருத்து உயிரோடு இருந்த போது அவரை நாம் சிலுவையில் அறைந்தோம்'

தன்னைப் பொறுத்தவரை எந்தக் காரியமானாலும் பழங்கால கன்ஃபூசியஸ் வாக்கியத்தை வழிகாட்டியாய்க் கொள்ளவிருப்பதாக அவர் சொன்னார்; 'சரியானது எது என்று தெரிந்த பின் அதைச் செய்யாமல் இருப்பது கோழைத்தனம்.'

## கராச்சி, அக்டோபர் - டிசம்பர் 1947

ஒரு மருத்துவரின் எக்ஸ்ரே-யில் 'பிங் பாங்' (Ping - Pong) பந்துகளின் அளவுக்கு இருந்த கருமையான வட்டங்கள் முகமது அலி ஜின்னாவின் நுரையீரல்

முழுவதும் உயிர் குடிக்கும் வகையில் கடுமையாகப் பரவுவது தொடர்ந்தது. பம்பாயைச் சேர்ந்த அவரது மருத்துவ நண்பரின் கணிப்பை மறுக்க முடியாது. ஜின்னாவின் மனவுறுதி காரணமாக சிறிது காலத்துக்கு அந்த நோயின் வளர்ச்சி கட்டுப்பட்டு இருந்தது போல் தோன்றியது. இப்போது அவரது கனவு நனவாகி விட்டதால், உற்சாகம் அதிகரித்த போது அந்த நோய் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது.

அக்டோபர் 26 ஞாயிறன்று குறுகிய கால பயணமாக ஜின்னா கராச்சி யிலிருந்து புறப்பட்டு லாகூர் சென்றார். போகும் போது அவரைப் பார்த்த ராணுவ செயலாளர் கர்னல் வில்லியம் பெர்னி (Col. William Birnie) என்ற ஆங்கிலேயர், அவருக்கு 60 வயதிருக்கும் என்று நினைத்தார். ஐந்து வாரங்கள் கழித்து திரும்பி வரும் போது அவருக்கு 80 வயதிருக்கும் என்பது போல் தோன்றியது. இருமல் மற்றும் வலுவிழக்கச் செய்யும் காய்ச்சலுடன் அந்த ஐந்து வாரங்களும் ஜின்னா படுக்கையில் கழித்தார். இதனால் அவர் பலவீனமடைந்து சோர்ந்து போய்விட்டார்.

அவரது பலம் குறைந்து வருகிறது என்பதை உணர்ந்ததால் ஒரு வித்தியாச மான மனச்சோர்வு நோய் அந்த முஸ்லீம் தலைவரைப் பற்றிக் கொண்டு விட்டது. முன்பை விட தன் ஆதரவாளர்களிடமிருந்தும் பரிவாரங்களிட மிருந்தும் அவர் மிகவும் விலகிப் போனார் பெரும்பாலும் அவரது வாழ்க்கையின் இறுதி மாதங்களில், தாம் நனவாக்கிய கனவை மற்றவர் கைகளில் ஒப்படைப்பதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பாகிஸ்தானின் அதிகாரக் கயிறுகள் அத்தனையையும் தனது மெலிந்த விரல்களில் சேர்த்து வைத்துக் கொண்ட அவர், அவற்றைப் பகிர்ந்தளிக்க மறுத்தார். நோய்வாய்ப் பட்டு கிடந்த அவர் அதிகாரத்தை யாருக்கும் அளிக்காததால் அவரது முடிவுக்காகக் கோப்புகள் காத்துக் கிடந்தன. படிக்காமலும் நகராமலும் அவரது அலுவலகத்தில் அவை குவிந்து கிடந்தன. விமர்சனத்தைக் கண்டு அவர் சினம் கொண்டார். 'ஏதோ ஒரு அதிசயத்தால் நிலவைப் பெற்று விட்ட குழந்தை ஒரு கணம் கூட வேறெவருக்கும் இரவல் கொடுக்காதது போல் அவர் இருந்தார்' என்று பெர்னி தனது நாட்குறிப்பில் குறித்திருந்தார்.

அந்த மனிதருக்கு அற்பத்தனமான உணர்வு ஏற்பட்டதால், தனது கிராக்கெட் (ஒரு வகை விளையாட்டு) செட்டினை மீண்டும் கொண்டு வருமாறு உதவியாளர்களுக்கு உத்தரவிட்டார். அவரின் தனி விமானம் வாரக்கணக்கில் பயன்படுத்தப்படாமலேயே நிற்கிறது. அதன் ஊழியர்களும் வேலையின்றி இருக்கிறார்கள். அவரது சொந்த மக்களான அகதிகளை அப்புறப்படுத்திக் கொண்டு வருவதற்குக் கூட அதனைக் கொடுக்க மறுக்கிறார். ஏனென்றால் 'முன்னுதாரணத்தை ஏற்படுத்த' அவர் விரும்பவில்லையாம். ஒரு பக்கத்தில் செலவை மிச்சப்படுத்துவதற்காக வீட்டில் உள்ள ஊழியர்களிடம் ஒவ்வொன் றுக்கும் விவரம் கேட்டு அவர்களைத் திகைப்பில் ஆழ்த்திய அவர் மறுபக்கத் தில், இரவு நேரத்தில் அவரது மேசை மேல் மிகவும் சத்து நிறைந்த உணவுப் பொருள்களையும், மிக உயர்ந்த போர்டெக்ஸ் மதுவையும் வைக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, காங்கிரசில் உள்ள தனது பழைய இந்து எதிரிகள் தனது மரணத்துக்குப் பின் தனது நாட்டை வளரவிடாமல் தடுக்கவும் அழித்து

விடவும் தீர்மானித்திருக்கிறார்கள் என்ற எண்ணம் ஜின்னாவைப் பேயாக ஆட்டி வைத்தது. ஜுனாகட், காஷ்மீர், பஞ்சாப் என அனைத்துப் பகுதிகளி லிருந்தும் பிரிவினையின் சாதனையைச் சீர்குலைக்க இந்தியர்கள் விரிவாகத் திட்டமிடும் அறிகுறிகள் இருப்பதாக அவர் அறிந்தார். சிகரம் வைத்தாற்போன்ற தாக்குதல் டிசம்பர் மத்தியில் நடந்தது. வாரக்கணக்கில் நீடித்தப் பேச்சு வார்த்தைகளுக்குப் பின் கடைசியாகத் தங்களிடம் எஞ்சியிருந்த நிதி மற்றும் பிற சொத்துக்கள் பிரிவினை சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. சுதந்திரம் அடைந்த போது இந்தியாவின் பணக்கையிருப்பு மொத்தம் நான்கு பில்லியன் (நானூறு கோடி) ரூபாயாக இருந்தது. பாகிஸ்தானுக்கு உடனடி முன்பணமாக 200 மிலியன் (20 கோடி) ரூபாய் வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி பாகிஸ்தான் தனது பங்கின் எஞ்சிய பகுதியான 550 மிலியன் (55 கோடி) ரூபாயைக் (சுமார் 45 மிலியன் பவுண்டுகள்) கூடுதலாகப் பெறவிருந்தது. ஆனால் இந்தத் தொகை ஆயுதங்களை வாங்கி இந்திய ராணுவத்தினரைக் கொல்லவே பயன்படுத்தப்படும் என்று வாதிட்ட இந்தியா, காஷ்மீர் பிரச்சனைத் தீரும் வரை இதனைக் கொடுக்க மறுத்தது.

இந்த முடிவு ஜின்னாவுக்கு ஏமாற்றத்தை அளித்தது. அவரது புதிய நாடு பெரும்பாலும் திவாலாகிப் போனது. உண்மையில் இருக்க வேண்டிய 200 மிலியன் (20 கோடி) ரூபாயில் 20 மிலியன் (2 கோடி) ரூபாய் மட்டுமே மீதியிருந்தது. சிவில் ஊழியர்களின் ஊதியங்கள் வெட்டப்பட்டன. இறுதியாக கர்வம் நிறைந்த ஜின்னாவை வெட்கப்படச் செய்யும் ஒரு சம்பவமும் நிகழ்ந்தது. அகதிகளை ஏற்றி வருவதற்காக அமர்த்தப்பட்ட விமானத்துக்கென்று பிரிட்டிஷ் ஓவர்சீஸ் ஏர்வேஸ் கார்ப்பரேஷனுக்கு அவரது அரசால் வழங்கப் பட்ட காசோலை போதிய நிதியில்லை என்று திரும்பி விட்டது.

மதன்லால் பாவா அகமது நகரில் தங்கியிருந்த சிறிது காலம் மிகவும் மகிழ்ச்சிகரமாகவே இருந்தான். பதிவு செய்து கொண்ட அகதியாக வாழ்ந்த அவனது வாழ்க்கை காவல்துறை வேலையை விட மிகவும் ஏற்புடையது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. டெகான் ஹெரால்ட் கெஸ்ட் ஹவுசின் உரிமை யாளரான விஷ்ணு கார்காரே என்ற புதிய புரவலரின் மறைவிடத்திலிருந்து கொண்டு, நகருக்கு ஐந்து மைல் தூரம் வெளியே உள்ள ஒரு முகாமைச் சேர்ந்த 10,000 அகதிகளை மதன்லால் திரட்டியிருந்தான்.

கார்காரே உதவியுடன், அகதிகளுக்கு நிதி சேர்ப்பதற்காக, அனைத்து வியாபாரங்களுக்கும், குறிப்பாக முஸ்லீம்கள் செய்யும் வியாபாரங்களுக்கு வரி விதிக்க மதன்லால் முடிவு செய்தான். அவர்களிடமிருந்து வரி வசூலிக்க நவீனமான, அதே சமயம் எளிமையான உத்தி கையாளப்பட்டது. 'யார் வரி கொடுக்கவில்லையோ அவர்களின் கடைகளை நாங்கள் தீயிட்டு அழித்தோம்' என்று மதன்லால் பின்னாளில் குறிப்பிட்டான்.

அவர்கள் குவித்த நிதி அகதிகளின் துன்ப துயரங்களைத் துடைப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்படவில்லை. அவர்களின் சொந்த வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளவும் தீவிர ஆர்.எஸ்.எஸ்.எஸ்.காரனான கார்காரேயின் கனவை நனவாக்கவும் பயன்படுத்தினர். அந்த கெஸ்ட் ஹவுசின் சிறைக் கூடம்

போன்ற சிறிய அறைகள் வந்து போகும் வியாபாரிகளால் மட்டும் அல்ல வாங்கி சேர்த்த ஆயுதங்களாலும் நிறைந்திருந்தன. பூனாவில் உள்ள இந்து ராஷ்ட்ரா வின் வியாபார மேலாளரான அவனது நண்பன் ஆப்தே போலவே கார்காரேயும் ஹைதராபாத் நிஜாமுக்கு எதிராக கெரில்லா இயக்கம் நடத்தும் திட்டத்தை மனத்துக்குள் வளர்த்து வந்தான்.

இருப்பினும் சிவாஜியின் வீரசாகசச் செயல்களைப் பின்பற்ற விரும்பிய கார்காரேயின் ஆசைகள் 1948 புத்தாண்டு தினத்தன்று தகர்ந்து போயின. ஒரு கொலை வழக்குத் தொடர்பாக கார்காரேயின் ஓட்டல் நிர்வாகி அறையைக் காவல் துறையினர் சோதனையிட்ட போது, ஆயுதக் குவியல்கள் வெளிப் பட்டன. அச்சமடைந்த நிர்வாகி இவையெல்லாம் கார்காரேயுடையவை என்பதை உடனடியாக ஒப்புக் கொண்டார். நான்கு நாட்களுக்குப் பின் அராஜகக் கும்பலுக்குத் தலைமை தாங்கிச் சென்ற கார்காரேயும் மதன்லாலும், இந்தியாவில் உள்ள முஸ்லீம்களிடம் சகிப்புத் தன்மையுடன் இருக்க வேண்டு கோள் விடுத்த இந்திய சோஷலிஸ்ட் கட்சிக் கூட்டத்தில் கலகம் செய்தனர். இதனால் அவர்கள் கைது செய்யப்பட்டு கண்டித்து விடுவிக்கப்பட்டனர்.

குவித்து வைத்திருந்த ஆயுதங்களை விட்டு விட்டு கார்காரேயும் மதன்லாலும் அடுத்த நாள் காலையில் அகமது நகரிலிருந்து ஓட்டம் பிடித்தனர். அவர்கள் சென்றடைந்தது 60 மைல் தூரத்துக்கு அப்பாலிருந்த நகரமான பூனா. இங்கே தங்களால் புகலிடத்தைக் கண்டறிய முடியும் என்றும், அவர்களின் உணர்வை யொத்தவர்கள் இருப்பார்கள் என்றும் கார்காரே மதன்லாலுக்கு உறுதி யளித்தான்.

## புதுடில்லி, 12 ஜனவரி 1948

1947 வசந்த காலத்தில் இதே வைஸ்ராய் மாளிகையில் அலுவலக அறையில் அவர்களிடையே நடைபெற்ற முக்கிய சந்திப்புகளுக்குப் பின் எவ்வளவோ மாற்றங்கள் வந்து விட்டன. பின்னர் 400 மிலியன் (40 கோடி) மக்களின் தலைவிதி தங்களின் கைகளில் இருப்பதாகத்தான் லூயி மவுண்ட்பேட்டனுக்கும் மகாத்மா காந்திக்கும் தோன்றியது. இப்போது நடந்து வரும் நிகழ்வுகள் இவ்விருவரையும் மிஞ்சிப் போய்விட்டதாகவே தோன்றியது. அவசரமாகவும் ரகசியமாகவும் மீண்டும் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவுக்கு அளிக்க மவுண்ட்பேட்டனால் ஏற்படுத்தப்பட்ட அவசரகாலக் குழு கலைக்கப்பட்டு விட்டது. எப்போதும் அவர் விரும்பிக் கொண்டிருந்த அரசியல் சட்டப்படியான அரசுத் தலைவராக மீண்டும் பொறுப்பேற்றார். இந்தியத் தலைவர்களின் நட்புறவு காரணமாக அவரால் அதிகாரங்களை அதிகம் பெறமுடியும் என்றாலும் அவரின் அதிகாரங்கள் பெரும்பாலும் வரம்புக்குள்ளேயே இருந்தன.

அந்த வயது முதிர்ந்த தேவதூதனின் வெறுங்கால்கள் அவரது போர்த்தப் பட்ட ஆடைக்குள் மறைந்து ஒதுங்கியிருந்தன. சற்று முன்புறம் சாய்ந்தும் வருத்தத்தோடும் மவுண்ட்பேட்டனுக்கு எதிரே அவர் அமர்ந்திருந்தார் நாட்டின் துயரம் அனைத்தையும் அவர் முகத்தில் தேக்கியிருப்பதாகத் தோன்றியது. அவரது போதனைகள் அவரின் பழைய ஆதரவாளர்கள் பலரால்

நிராகரிக்கப்பட்டு விட்டன. அவரது கோட்பாடுகள் நாட்டு மக்கள் பலரால் எதிர்க்கப்படுகின்றன. அடிக்கும் அலைகளுக்கிடையே மிதக்கும் ஒரு மரத்துண்டு போல் அவர் காட்சியளித்தார்.

இந்தியப் பிரிவினைக்கு அந்த ஆங்கிலேயர்தான் காரணம் என்பது வருத்தமளித்தாலும், இந்தியாவின் மீது அதனைத் திணித்தது அவரது கடமை என்று உணர்ந்ததால் அவர் மீதான மதிப்பு காந்தியிடம் வளர்வது நின்று விடவில்லை. சுதந்திரம் அடைந்ததிலிருந்து தனது நடவடிக்கைகளின் அர்த்தங்களை மவுண்ட்பேட்டன் மட்டுமே 'உண்மையில் புரிந்து கொண்டிருப்பதாக காந்தி கருதினார். ஒரு சில வாரங்களுக்கு முன், மவுண்ட்பேட்டன் தம்பதியினர் லண்டனுக்கு விமானம் மூலம் சென்றனர். அவர்கள் குழந்தையிலிருந்தே வளர்த்த இளவரசி எலிசபெத்துக்கும் அவர்களின் மருமகனான பிலிப்புக்கும் நடக்கவிருந்த திருமண நிகழ்ச்சிக்கான பயணம் அது. இவர்களிடம் தனக்குள்ள அன்பை வெளிப்படுத்தும் வகையில் சில பரிசுப் பொருள்களை காந்தி வழங்கினார். யானைத் தந்த சிற்பங்கள், மொகலாயர்கள் கால வேலைப் பாடமைந்த ஆபரணங்கள், வெள்ளித் தட்டுகள் ஆகியவற்றை, இந்தியாவின் முன்னாள் ஆட்சியாளரான இளவரசரின் அரச குடும்ப மணமக்களுக்கு இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத் தந்தவர் திருமணப் பரிசுகளாக அளித்தார். ஒரு நாளில் விக்டோரியாவின் மகுடத்தை அணியப் போகிற மணமகளுக்கு தாமே நூற்ற நூலிலிருந்து தயாரிக்கப்பட்ட தேநீர் தட்டுக்கான விரிப்பினை வழங்கினார். இவையெல்லாம் மவுண்ட்பேட்டன் தம்பதியர் பயணமான யார்க் எம் டபிள்யூ 102 விமானத்தில் ஏற்றப்பட்டன.

மவுண்ட்பேட்டனின் நேர்மையில் காந்தி அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார். அவர் கவர்னர் ஜெனரலாக இருக்கும் வரை இந்திய அரசால் மதிப்புக் குறைவான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதிக்கமாட்டார் என்றும் நம்பினார் உண்மையில் கடந்த மாதம் மவுண்ட்பேட்டனின் செயல்கள் எல்லாம் மிகவும் மதிப்பு வாய்ந்தவையாகவே காந்தியின் கண்களுக்குப் பட்டன. காஷ்மீர் பிரச்சனை காரணமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சண்டை ஏற்படாமல் தடுக்கும் நடவடிக்கைகளே அவை. இந்தப் பிரச்சனையை ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தியா கொண்டு செல்ல ஒப்புதல் பெறுவதற்கு நேருவுடனான அவரின் நட்புறவில் கூட பெரும் பிரச்சனை ஏற்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தராக இருக்க கிளமெண்ட் அட்லி இந்தியாவுக்கு வர வேண்டும் என்று கூட அவர் யோசனை கூறினார். பாகிஸ்தானுக்குச் சேர வேண்டிய 550 மிலியன் (55 கோடி) ரூபாயைத் தராமல் நிறுத்தி வைக்க வேண்டும் என்ற இந்தியாவின் முடிவையும் அவர் எதிர்த்தார். இந்தச் செயல், ஏமாற்றமடைந்து திவாலாகிவிட்ட ஜின்னாவைப் போருக்கு உந்தித்தள்ளக் கூடும் என்று அவர் அஞ்சினார். இந்த முடிவுக்குத் தார்மீக அடிப்படை இல்லை என்றும் அவர் நம்பினார். பாகிஸ்தானுக்குச் சொந்தமான பணத்தை வழங்க மறுப்பது கிட்டத்தட்ட சர்வதேச மோசடிச் செயல் என்பது அவர் கருத்து. இருப்பினும் அவரது வாதங்களால் நேருவிடமும் படேலிடமும் அசைவை ஏற்படுத்த முடியவில்லை. இந்தப் பணம் பெரும்பாலும் ஆயுதங்கள் வாங்கவே பயன்படுத்தப்படும். அந்த ஆயுதங்கள் தங்கள் சொந்த நாட்டுத்

துருப்புக்களையே சுட்டு வீழ்த்தும். 'எனவே பாகிஸ்தானுக்குப் பணம் கொடுப்பதன் மூலம் ஏற்கெனவே கோபமுற்றிருக்கும் மக்களிடம் மேலும் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை.

இப்போது, கைவைத்த நாற்காலியில் அமர்ந்திருக்கும் அந்த முதியவர் மெல்லிய குரலில், எதிரே இருந்த மவுண்ட்பேட்டனிடம் ஒரு விஷயம் பற்றி சொன்னார். ஆனால் இது பற்றி அவரது இரண்டு சகாக்களில் ஒருவரிடமும் இதுவரை விவாதிக்கவில்லை. டில்லியில் உள்ள அவரது முஸ்லீம் நண்பர்கள் அவரிடம், இந்தியாவிலேயே தங்கி மரண அபாயத்தை எதிர்கொள்வதா அல்லது அதற்கான போராட்டத்தைக் கைவிட்டு விட்டு பாகிஸ்தானுக்குச் செல்வதா? யோசனை கூறுங்கள் என்று வாரக்கணக்காக அவரிடம் வேண்டிக் கேட்பது பற்றி தான் மவுண்ட்பேட்டனிடம் கூறினார்.

'அஞ்சி ஓடுவதை விடத் தங்கியிருந்து மரணத்தை எதிர்கொள்ளலாம்' என்பதே எப்போதும் எனது ஆலோசனையாகும். தாமே அப்படியொரு ஆபத்தைச் சந்திக்காமல் ஆலோசனை மட்டும் கூற இயலாது என்று அவர் கருதினார்.

மவுண்ட்பேட்டன் கோபப்பட மாட்டார் என்று அவர் நம்பினார். டில்லியில் உள்ள அனைத்து சமூகத்தவர்களிடமும் இதய பூர்வமான இணைப்பு ஏற்படுவதற்காக சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்ள முடிவு செய்துள்ளதாகவும், இந்த 'இணைப்பு வெளியேயிருந்து வரும் நிர்ப்பந்தத்தால் ஏற்படக்கூடாது'; 'உணர்விலிருந்து உருவாக வேண்டும்' என்றும் அவர் கவர்னர் ஜெனரலிடம் கூறினார்.

கவர்னர் ஜெனரல், நாற்காலியின் பின்பக்கம் சாய்ந்தார். காந்தியுடன் விவாதிப்பதில் பயனில்லை என்பதை மவுண்ட்பேட்டன் அறிவார். அது மட்டுமல்ல, அவர் இது பற்றி அந்தச் சமயத்தில் குறிப்பிட்டிருப்பது போல, வாழ்க்கை முழுவதுமான கொள்கை கோட்பாடுகள் அடிப்படையில் இந்த முடிவை எடுத்த காந்தியின் உச்சக்கட்ட தைரியம் கண்டு அவர் வியப்படைந்தார்.

'நான் ஏன் கோபப்பட வேண்டும்? எந்த ஒருவரும் செய்யத்தக்க மகத்தான நல்ல செயலாகவே இதனை நான் நினைக்கிறேன். உங்களை நான் பெரிதும் மதிக்கிறேன். மேலும் எல்லாம் தோற்றுப் போன நிலையில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்றே நான் நினைக்கிறேன்' என்று அவர் சொன்னார்.

இந்த வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மவுண்ட்பேட்டனுக்குத் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. காந்தியின் செயல் அவருக்கு நிகரற்ற தார்மீக பலத்தை அளிக்கக் கூடும். அந்த மணி நேரங்களில் அல்லது நாட்களில், பிர்லா மாளிகையில் அவரின் வைக்கோல் மெத்தையில் மரணத்தை நோக்கிச் செல்லும் போது இந்திய அரசாங்கத்தின் மீது தம்மால் ஆதிக்கம் செலுத்த முடியும். இதனை எவரும் எதிர்க்க முடியாது. கவர்னர் ஜெனரலுக்கு நேருவும் பட்டேலும் எதைத் தர மறுக்கிறார்களோ அதனை உண்ணாவிரதக் கஷ்டத்துக்குள் இறந்து கொண்டிருக்கும் காந்திக்குத் தர அவர்களால் மறுக்கவே முடியாது.

தனது அரசு தெரிந்தே செய்துள்ள நேர்மையற்ற செயல் என்பது பாகிஸ்தானுக்கு அதற்குரிய ரூபாயைக் கொடுக்க இந்தியா மறுப்பது மட்டும் தான் என்று மவுண்ட்பேட்டன் காந்தியிடம் தெரிவித்தார்.

காந்தி நிமிர்ந்து உட்கார்ந்தார். ஆமாம், அது நேர்மையற்றதுதான், அவர் ஒப்புக் கொண்டார். இந்தியா இந்த விஷயத்தில் செய்ததைப் போல, ஒரு நபரோ அல்லது அரசோ சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் ஒப்பந்தம் செய்து கொண்டால் அதிலிருந்து பின்வாங்க முடியாது. மேலும் உலகம் முழுவதற்கும் ஆன்மீக பலத்தின் உயர்வை வெளிப்படுத்தும் வகையில் சர்வதேச நன்னடத்தையில் ஈடுபட்டு உலகத்துக்கே இந்தியா உதாரணமாகத் திகழ வேண்டும் என்று விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்தியா பிறந்த வுடனேயே இப்படிப்பட்ட நெறியற்ற செயலில் ஈடுபட்டு குற்றச்சாட்டுக்கு ஆளாவதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

தனது உண்ணாவிரதம் ஒரு புதிய பரிமாணத்தை அளிக்கும் என்று அவர் மவுண்ட்பேட்டனிடம் சொன்னார். டில்லியில் அமைதி ஏற்படுவதற்காக மட்டுமின்றி இந்தியாவின் கவுரவத்துக்காகவும் தான் அவர் உண்ணாவிரதம் இருக்கப் போகிறார். பாகிஸ்தானுக்குரிய ரூபாயை வழங்கி இந்தியா தனது சர்வதேச ஒப்பந்தத்துக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதும் உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்வதற்கான நிபந்தனைகளில் ஒன்றாக இருக்கும். நேர்மையும் தைரியமும் உள்ள முடிவாக அது இருந்தது. அது ஆபத்தான ஒன்று என்பதும் நிரூபிக்கப்படவுள்ளது.

அவர் முகத்தில் குறும்புத்தனமான ஒரு புன்னகை தவழ, மவுண்ட்பேட்டனிடம் கூறினார்: 'இப்போது நான் சொல்வதை அவர்கள் கேட்கமாட்டார்கள். ஆனால்', ஏளனப் புன்னகையுடன் அவர் தொடர்ந்தார். 'எனது உண்ணாவிரதம் துவங்கி விட்டால் என்னை அவர்கள் புறக்கணிக்கவும் மாட்டார்கள்.'

## பதினேழு

# 'காந்தி இறக்கட்டும்!'

### *கடைசி உண்ணாவிரதம், புது டில்லி, 13-18 ஜனவரி 1948*

*மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் கடைசி உண்ணாவிரதம் ஜனவரி 13 செவ்வாய்க்கிழமை காலை 11.55க்குத் துவங்கியது. எல்லா நாட்களையும் போல, நடுங்கும் குளிர்காலத்தின் அந்த நாளும் விடியற்காலப் பிரார்த்தனையுடனேயே துவங்கியது. வெப்பமில்லாத இருள் நிறைந்த அறையில் காந்தி பிரார்த்தனைப் பாடலைப் பாடினார். 'கடவுளின் பாதை வீரர்களுக்குரியது; கோழைகளுக் கல்ல.'*

*10.30மணிக்குக் கடைசி உணவை அவர் உட்கொண்டார்: இரண்டு சப்பாத்தி, ஒரு ஆப்பிள், வெள்ளாட்டின் பால் பதினாறு அவுன்ஸ், கொஞ்சம் திராட்சைப் பழங்கள். உணவருந்திய பின், அவரது உண்ணாவிரதம் துவங்கிவிட்டதன் அறிகுறியாக பிர்லா மாளிகையின் தோட்டத்தில் முன்னேற்பாடு ஏதுமின்றி சமயச் சடங்கு ஒன்றை அவர் செய்தார். நெருங்கிய நண்பர்கள் சிலரும் அவரது கட்சியினர் சிலருமே அங்கே இருந்தனர். பிர்லா மாளிகையின் தரையில் ஒவ்வொரு நாள் இரவும் அவருக்குப் பக்கத்தில் வைக்கோல் மெத்தையில் படுத்திருக்கும் மனு, அவரது இன்னொரு 'ஊன்றுகோலும்' சகோதரியின் பேத்தியுமான ஆபா, அவரது செயலாளர் பியாரேலால் நய்யார், நய்யாரின் சகோதரியும் உண்ணாவிரதத்தின் போது காந்தியை கவனித்துக் கொள்ள வேண்டிய டாக்டருமான சுசீலா, ஆன்மீக வாரிசான ஜவஹர்லால் நேரு ஆகியோர் அவர்கள். கிருத்தவப் பாடல் ஒன்றை சுசீலா பாடியதுடன் அந்தப் பிரார்த்தனை முடிவடைந்தது. 'அந்த அற்புத சிலுவையை நான் கண்ணுற்ற போது' என்று தொடங்கும் அந்தப் பாடலை தென் ஆப்பிரிக்காவில் முதன் முறையாகக் கேட்டதிலிருந்து அதன் வார்த்தைகளில் காந்தி கட்டுண்டு போனார்.*

*அந்தப் பாடலின் கடைசி வரிகளை அவர் பாடி முடித்த பின்னர் அந்த வெயில் காயும் நண்பகல் நேரத்தில் சிறிது கண்ணயர்வதற்காக காந்தி தனது கட்டிலில் படுத்தார். கடந்த சில வாரங்களாக மிகுந்த சோகம் பிரதிபலித்த அவரது முகத்தில் வித்தியாசமாக மகிழ்ச்சி பரவியது போல் தோன்றியது. உண்ணாவிரதத்தைத் துவக்கியுள்ள இந்த நேரத்தில் காந்தியிடம் காணப்படும் உற்சாகமும் நிம்மதியும், செப்டம்பர் மாதம் டில்லிக்குத் திரும்பியதிலிருந்து காணப்பட்டதில்லை என்று அவரது செயலாளர் நினைத்தார்.*

டில்லியில் இருந்த இந்திய மற்றும் சர்வதேசப் பத்திரிகைகள், கல்கத்தா உண்ணாவிரதத்துக்கு அளிக்காத முக்கியத்துவத்தை காந்தியின் இந்தப் புதிய சோதனை முயற்சிக்கு அளித்தன. ஆனால், கல்கத்தாவில் நிகழ்ந்தது போல், உண்ணாவிரதத்தைத் திடீரென்று துவக்கும் அவரது முடிவுக்கு முன்னால் வன்முறைகள் ஏதும் வெடிக்கவில்லை என்பதால் இந்த உண்ணாவிரதம் பலருக்கு வியப்பை ஏற்படுத்தியது. டில்லி பதற்றமாக இருந்தது. ஆனால் வகுப்புவாதப் படுகொலைகள் நின்று போயிருந்தன. ஒரு வேளை காந்தியின் உள்ளுணர்வுக்கு மற்றவர்களால் அறிய முடியாத மக்களின் வேறு ஏதாவது மனநிலை தெரிந்திருக்கலாம். இந்தியாவில் இன்னொரு வன்முறை வெடிப்பு அபாயகரமாய் எழுவதற்கான வாய்ப்புப் பற்றி அவர் அறிந்திருக்கலாம்.

அவர் உண்ணாவிரதம் இருக்கும் செய்தி கேட்டு நாட்டு மக்கள் வாழ்த்தினார்கள். ஆனால் அதனை முடித்துக் கொள்ள அவர் வைத்துள்ள நிபந்தனைகள் குழப்பத்தையும் திகைப்பையும் ஏற்படுத்தின. வெறுப்பையும் கூட ஏற்படுத்தியிருந்தன. கல்கத்தாவைப் போலன்றி டில்லியில் உண்ணாவிரதம் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலை அவ்வளவு கனிவானதாக இருக்கவில்லை. தலைநகரில் அகதிகள் நிரம்பி வழிந்தனர். முஸ்லீம்களை மோசமாக வெறுத்தனர். அகதி முகாம்களின் கஷ்டங்களிலிருந்தும் குளிரிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்காக அவர்கள் நகரம் முழுவதும் உள்ள மசூதிகளையும் முஸ்லீம் வீடுகளையும் கைப்பற்றினார்கள். இப்போது அவர்களின் மகாத்மா, அவர்களால் வெறுக்கப்படும் முஸ்லீம்களின் இடங்களை அவற்றுக்கு உரியவரிடமே மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்று விரும்புகிறார். துயரம் தோய்ந்த முகாம்களுக்கே திரும்பச் சொல்கிறார். பாகிஸ்தானுக்குச் சேர வேண்டிய 550 மில்லியன் (55 கோடி) ரூபாயை அதற்குக் கொடுக்க வேண்டும் என்பதையும் உண்ணாவிரதத்தை முடிப்பதற்கான நிபந்தனைகளில் ஒன்றாக ஆக்கியிருக்கும் காந்தியின் முடிவு பொது மக்களில் பலருக்கும் கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்திய அரசையும் பிளவுபடுத்தியிருந்தது.

ஆனாலும் பிர்லா மாளிகையின் வெளிப்புற சூரிய ஒளியில் உறங்கிக் கொண்டிருந்த - எண்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்த தோல் வற்றிய உடலைக் கொண்ட அந்த மனிதருக்கு இவையெல்லாம் ஒரு பொருட்டாக இல்லை. காந்தி இந்தியாவின் மறக்கப்பட்ட மனிதர், அவரின் போதனைகள் வசதியாகக் கைவிடப்பட்ட கொள்கைகளாகி விட்டன என்று சில வாரங் களாக, சில மாதங்களாகக் கூட சிலருக்குத் தோன்றியது. அந்த நிலை இனி இருக்காது. பிரிட்டிஷாருக்கு எதிராக விசித்திரமான முறையில் அவர் பயன்படுத்திய ரிஷிகளின் பண்டைக்கால ஆயுதத்தை தனது சொந்த நாட்டு மக்களை நோக்கியே திருப்பியதன் மூலம், தாம் யார், தமது வாழ்க்கை எதற்காக என்பதை திடீரென்று இந்தியா முழுவதையும் காந்தி அறியச் செய்து விட்டார். கடைசி தடவையாக, அவரது வாழ்க்கையின் பொருளையும், மக்களுக்கு அவர் வழங்க விரும்பும் செய்தியையும் அறிந்து கொள்ளும் கட்டாயத்தை நாட்டு மக்களுக்கு உருவாக்கினார்.

## பூனா, 13 ஜனவரி 1948

இந்தியத் தலைநகரிலிருந்து எழுநூறு மைல்களுக்கு அப்பால், பத்து வாரங்களுக்கு முன் இந்து ராஷ்ட்ரா செய்திப் பத்திரிகையின் புதிய அலுவலகங்கள் துவக்கப்பட்ட, வெள்ளையடிக்கப்பட்ட கொட்டகையில் கண்ணாடிக் கூடு பொருத்தப்பட்ட தொலை தட்டச்சுக் கருவியின் முன் நின்ற இரண்டு பேர், அதனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். தொலை அச்சுக்கருவியில் வந்து குவிந்து கொண்டிருந்த அவசரச் செய்திகள், நாதுராம் கோட்சே, நாராயண் ஆப்தே ஆகியோரின் மாற்ற முடியாத விதிகளையும் மாற்றக்கூடும். காந்தியின் உண்ணாவிரதத் துவக்கம், அதனை முடிப்பதற்கு அவர் முன்வைத்துள்ள நிபந்தனைகள் ஆகியவற்றை அந்தச் செய்திகள் அறிவித்தன. அவற்றில் ஒன்று அந்த இந்துத் தீவிரவாதிகளின் வெறியுணர்வுகளைத் தூண்டியது. உலகத்தை உலுக்கியக் குற்றச் செயலுக்கு அதுதான் அவர்களுக்கு வழி வகுத்தது. பாகிஸ்தானுக்கு 550 மிலியன் (55 கோடி) ரூபாயை வழங்க வேண்டும் என்ற காந்தியின் கோரிக்கைதான் அது.

நாதுராம் கோட்சே கோபத்தால் வெளிறிப் போனான். இது அரசியல் அச்சுறுத்தல் (Blackmail). எந்த மனிதருக்காக ஒரு காலத்தில் அவன் சிறை சென்றானோ அந்த மனிதர், எவர் இப்போது அவனால் மிகக்கடுமையாக வெறுக்கப்பட்டிருக்கிறாரோ அந்த மனிதர், கற்பழிப்புக்காரர்களும் கொலைகாரர்களுமான முஸ்லீம்களிடம் சரணடையச் செய்வதற்கு இந்திய அரசுக்கு நெருக்குதலை ஏற்படுத்த முயற்சி செய்கிறார். இந்திய அரசியல் அரங்கிலிருந்து காந்தி பலவந்தமாக அகற்றப்பட்டால் அது ஒரு புண்ணியமாக இருக்கும் என்று ஆப்தேயைப் போல, பூனாவில் உள்ள மற்ற அனைத்து இந்து மத வெறியர்களைப் போல, கோட்சேயும் அடிக்கடி கூறியிருக்கிறான். மற்றவர்களுடையதைப் போலவே அவனது வார்த்தைகளும் அரசியல் வெறியனின் பிதற்றல்களாக இருந்தனவே தவிர வேறல்ல.

கோட்சே, ஆப்தேயின் பக்கம் திரும்பினான். ஹைதராபாதில் கெரில்லாப் பயிற்சி முகாம்கள் அமைப்பது, ஜின்னாவைக் கொல்வது என்ற ஆரவாரமான திட்டங்கள் எல்லாம் இனி இரண்டாம் பட்சம் தான் என்று அவன் சொன்னான். இப்போது ஒரே ஒரு செயல் மட்டுமே அவர்கள் முன் உள்ளது. அவர்களின் அனைத்து சக்திகளையும் அவர்களின் அனைத்து ஆதாரங்களையும் பயன்படுத்தி இந்த உயர்ந்த நோக்கத்தில் தான் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். 'நாம் காந்தியைக் கொல்ல வேண்டும்' கோட்சே அறிவித்தான்.

பிர்லா மாளிகையில் அழகாக வெட்டிவிடப்பட்ட புல்வெளியினூடே, சீராக அடியெடுத்து வைத்து நடந்து கொண்டிருந்த மகாத்மா காந்தியின் மெலிந்த மாநிற மேனியை டில்லியின் குளிர்காலச் சூரியனின் கடைசி ஒளிக் கீற்றுகள் சூடேற்றின. ஒரு கையை மனுவின் தோளிலும் மறு கையை ஆபாவின் தோளிலும் லேசாகப் போட்டுக் கொண்டு, தோட்டத்தின் மையப் பகுதியில் செங்கற்களால் அமைக்கப்பட்டிருந்த நான்கு படிகளின் மீது ஏறினார். அங்கே இரண்டு டென்னிஸ் கோர்ட் அளவுக்கு மிகப்பெரிய மேடையும் அதைச்சுற்றி முழங்கால் அளவுக்கு உயரமான சுற்றுச்சுவரும் அமைக்கப்பட்டிருந்தன.

அருகே செந்தூரத் துணி போர்த்தியது போல் ரோஜாக்கள் மலர்ந்திருந்தன. டில்லியில் இருக்கும் போது நாட்டு மக்களை வழக்கமாகச் சந்திக்கும் மாலை நேரப் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு அமைதியும் அழகும் நிறைந்த அந்த இடத்தைத்தான் காந்தி தேர்ந்தெடுத்தார்.

சற்று உயரமான புல்வெளியின் ஒரு மூலையில் அழகான வளைவுகளின் கீழே கற்களாலான மண்டபம் இருந்தது. அதற்கு நடுவே காந்தியின் ஆதரவாளர்கள் ஆறு அங்குல உயரத்திற்கு மரத்தாலான மேடை அமைத்திருந்தனர். அதன் மீது மகாத்மாவுக்கான வைக்கோல் மெத்தையும் ஒரு மைக்ரோ ஃபோனும் வைக்கப்பட்டிருந்தன. பிரார்த்தனை மைதானத்துக்கு வழக்கமாகக் கொண்டு வரும் மூன்று பொருள்களை மனு கவனத்துடன் அவரது மெத்தைக்குப் பக்கத்தில் வைத்தார். அவை அவரது கீதை நூல், உரைக்குறிப்பு கொண்ட நோட்டுப் புத்தகம், எச்சில் துப்புவதற்குப் பித்தளையாலான பாத்திரம். அந்த நாளின் முக்கியத்துவம் காரணமாக 600க்கும் அதிகமான மக்கள் மேடைக்கு முன் கூடியிருந்தனர். காந்தி பிரார்த்தனையைத் துவக்கினார். தாகூரின் பாடலைத் தன்னோடு சேர்ந்து பாடுமாறு கூட்டத்தினரை அவர் கேட்டுக் கொண்டார். ஓராண்டுக்கு முன் நவகாளியின் சதுப்பு நிலப் பகுதிகளில் கழுவாய் தேடிய பயணம் மேற்கொண்ட போது தினமும் பாடிய பாடல்தான் அது: 'உனது அழைப்புக்கு அவர்கள் செவி சாய்க்காவிட்டால் தனியே நட, தனியே நட'

அவர் பேசத் தயாரான போது கூட்டத்தில் அமைதி நிலவியது. தனது உண்ணாவிரதம் அனைவரின் ஆன்மாக்களையும் அதே போல் அவர்களையும் பரிசுத்தம் செய்யுமாறு கடவுளை வேண்டியதாகும் என்று அவர் சொன்னார். இந்துக்களும் சீக்கியர்களும் முஸ்லீம்களும் இங்கே சகோதரர்களாக அமைதியுடன் வாழத் தீர்மானிக்க வேண்டும் என்றார் அவர்.

உறுதியுடன் உச்சரிக்கப்பட்ட அவரின் வார்த்தைகளை லைஃப் பத்திரிகையின் நிருபர் மார்கரெட் புர்க்கே - ஒயிட் கவனித்துக் கொண்டிருந்தார். 'இதுதான் உண்மையான நிலை. மக்கள் பாதுகாப்புக்கு தனக்கேயுரிய ஒரு கொள்கை நிலையை அவர் கொண்டிருக்கிறார். மனிதர்களிடையே சகோதரத் துவம் என்ற நம்பிக்கைதான் அது' என்று அவருக்குப் பட்டது. 'மங்கும் மாலைவேளையில் மக்கள் மனம் கவரும் முறையில் பேசிக் கொண்டிருக்கும் அந்த மெலிந்து போன சிறிய மனிதருக்குப் பின்னால் ஒரு மகோன்னதம் இருப்பதாக' பிர்லா மாளிகையின் தோட்டத்தில் கூடியிருந்த மற்றவர்களைப் போலவே அவரும் உணர்ந்தார்.

'டில்லி இப்போது சோதனைக் கட்டத்தில் உள்ளது' என அவர் எச்சரித்தார். 'நான் என்ன வேண்டுகிறேன் என்றால், இந்தியாவிலோ அல்லது பாகிஸ் தானிலோ எவ்வளவு படுகொலைகள் நடந்தாலும் டில்லியில் உள்ள மக்கள் கடமை வழியிலிருந்து விலகிவிடக்கூடாது என்பதுதான்.' பாகிஸ்தானில் உள்ள அனைத்து இந்துக்களும் சீக்கியர்களும் கொல்லப்பட்டாலும் 'இந்த நாட்டிலுள்ள முஸ்லீமின் சிறு குழந்தையின் உயிர் கூட பாதுகாக்கப்பட வேண்டும்.' அனைத்துச் சமூகத்தினரும், அனைத்து இந்தியர்களும் விலங்கு நடத்தையிலிருந்து மனிதாபிமானத்துக்கு மாறி மீண்டும் 'உண்மையான இந்தியர்களாக வேண்டும். அவர்கள் அப்படிச் செய்யவில்லையென்றால், இந்த உலகில் நான் வாழ்வதில் ஒரு பயனுமில்லை.'

மனதை வருத்தும் ஒருவித மவுனம் அந்தத் தோட்டத்தில் நிலவியது. கீதையையும் எச்சில் பாத்திரத்தையும் மனு எடுத்துக் கொண்டார். பின்னர், மவுனமாக மக்கள் கூட்டம் கலைந்து சென்றது. அதனிடையே சிறு வழியை ஏற்படுத்திக் கொண்டு, அந்தச் சிறிய மனிதர் புல்வெளியிலிருந்து மீண்டும் பிர்லா மாளிகைக்குச் சென்றார். அவர் செல்வதை மார்கரெட் புர்க்கே ஒயிட் கவனித்துக் கொண்டிருந்தார். அன்பு நிறைந்த கண்களுடன் அவரைப் படம் பிடித்தார். அவரது மெலிந்த மாநிற மேனி அந்தத் தோட்டத்திலிருந்து மறைந்து கொண்டிருந்தது. 'காந்திஜியை மீண்டும் எப்போதாவது நம்மால் பார்க்க முடியுமா' மற்றவர்களைப் போல புர்க்கே - ஒயிட்டும் நினைத்தார்.

## பூனா, 13 ஜனவரி 1948

இந்த முறை இந்து ராஷ்ட்ரா அலுவலகத்தில் அந்த நான்கு மனிதர்கள் சந்தித்ததை எந்தத் துப்பறியும் கண்களும் கவனிக்கவில்லை. மூன்று மாதங்களுக்கு முன் அந்தப் பத்திரிகையின் அச்சு எந்திரத் துவக்கவிழாவை விழிப்புடன் கண்காணித்த காவல்துறை அதிகாரிக்கு அவரது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. அதுதான் அவலமானது. அன்று இரவில் ஒரு இந்தியப் போலீஸ் அதிகாரி கேட்டிருக்க வேண்டிய மிக முக்கியமான வார்த்தைகளை நாதுராம் கோட்சே பேசினான். அவனுக்குப் பக்கத்தில் இயல்புக்கு மாறான அமைதியுடன் அவனது பங்காளி ஆப்தே இருந்தான். அவனுக்கு எதிரே டெகான் கெஸ்ட் ஹவுசின் உரிமையாளர் விஷ்ணு கார்காரேயும், பிரபலமாவதற்கென்றே விதிக்கப்பட்டவனும் பஞ்சாபி அகதியுமான மதன்லால் பாவாவும் அமர்ந்திருந்தனர்.

இந்திய அரசியல் நிலவரத்தை கோட்சே அவர்களுக்கு விவரித்தான். பிறகு அவன் சபதம் செய்தான். 'நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.'

'நாம் காந்தியைத் தடுத்து நிறுத்த வேண்டும்' அவன் அறிவித்தான்.

அவனது வார்த்தைகளுக்கு மதன்லால் பாவாவின் அங்கீகாரம் உடனடியாகக் கிடைத்தது. ஆறு மாதங்களுக்கு முன் ஃபெரோஸ்பூர் மருத்துவமனையில் அவனது தந்தையைப் பார்த்து விட்டுத் திரும்பியதிலிருந்து அவன் கொண்டிருந்த பழிவாங்கும் விருப்பத்தை நிறைவேற்ற மதன்லாலுக்கு ஒரு கடைசி வாய்ப்பாக அது இருந்தது. கார்காரேயும் அவனைப் போலவே ஒப்புதல் அளித்தான்.

அந்த நான்கு பேரும் இந்து ராஷ்ட்ரா அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, பம்பாய் மாகாணத்தில் சாது வேடத்துடன் சுற்றும் ஆயுத வியாபாரி வீட்டுக்குச் சென்றனர். ஒரு நகை வியாபாரி கருப்பு நிற வெல்வெட் துணியின் மீது தோடுகள் மற்றும் அட்டிகைகளைப் பரப்பி வைப்பதுபோல், திகம்பர் பாட்கே தனது ஆயுதக் கிடங்கிலிருந்து தெரிவு செய்த ஆயுதங்களை ஒரு துணி மீது பரப்பி வைத்தான். அவனிடம் எல்லாம் இருந்தன. இவையனைத்தையும் விட முக்கியமான ஒன்று, எளிதாக மறைத்து வைக்கக் கூடிய தானியங்கி கைத்துப்பாக்கி அவனிடம் இல்லை. கையெறி குண்டுகள், டெடனேட்டர்கள், வெடிபொருள்கள் ஆகியவற்றை அவர்கள் தேர்ந்தெடுத்தனர். பின்னர் ஜனவரி 14

*புதன்கிழமையன்று இருட்டிய பிறகு, பம்பாயின் உழைக்கும் வர்க்கக் குடியிருப்புப் பகுதியான தாதரில் உள்ள இந்து மகாசபா அலுவலகத்தில் தம்மை சந்திக்குமாறு ஆப்தே மற்றவர்களைக் கேட்டுக் கொண்டான். பிறகு, அந்த இரவு நேர இருளில், அரவம் படாமல் அவர்கள் அங்கிருந்து நழுவினார்கள்.*

*அவன் பிறந்த, மதவெறி தத்துவத்தைக் கற்றறிந்த அந்த நகரத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன், கோட்சேக்கு நிறைவேற்ற வேண்டிய இறுதிக் கடமைகள் இருந்தன. அவன் கொலை செய்ய விரும்பிய தலைவரைப் போலவே, நாதுராம் கோட்சேக்கும் சில சொத்துக்கள் இருந்தன. அவனது சொத்துக்கள் இரண்டு துண்டுக் காகிதங்களில் இருந்தன. இவற்றை ஓரியண்டல் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் பூனா அலுவலகக் குமாஸ்தாவின் முன் வைத்தான். அவை இரண்டு ஆயுள் காப்பீட்டு பாலிசிகள். இவற்றில் வாரிசுதாரர்கள் என்று யாரையும் கோட்சே குறிப்பிடவில்லை. இவற்றில் ஒன்றான 3000 ரூபாய்க்கான 1166101 எண்ணிட்ட பாலிசியின் வாரிசு உரிமையை அவனது இளைய சகோதரன் கோபாலின் மனைவிக்கு அளித்தான். இந்தச் சகோதரன்தான் கைத்துப்பாக்கியுடன் டில்லி வந்து அவனுடன் சேர்ந்து கொள்வதாக ஒப்புக் கொண்டிருந்தான். 2000 ரூபாய்க்கான 1166102 எண்ணிட்ட மற்றொரு பாலிசியின் வாரிசு உரிமையை அவனது பங்காளியான ஆப்தேயின் மனைவிக்கு அளித்தான். தூக்குத் தண்டனை பெற்ற மனிதன் தனது கடைசி விருப்பத்தை ஆவணமாக (உயில்) எழுதி வைத்து விட்டு இறப்பதற்குத் தயாராவது போல் கோட்சே, உலகத்தின் பாதி மக்களால் ஒரு துறவி என்று கருதப்பட்ட மனிதரைக் கொலை செய்யும் முயற்சியில் சாவதற்கு இப்போது தயாரானான்.*

*உண்ணாவிரத காலத்தில் உடல் நலம் ஒத்துழைக்கும் வரை வழக்கமான தினசரிக் கடமைகளைச் செய்ய வேண்டும் என்று காந்தி வற்புறுத்தினார். அதன்படி புதன்கிழமையன்று விடியற்காலை குளிரிலும் எழுந்து வழக்கம் போல் கீதை வாசித்தார். ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு, வாயில் மிச்ச மீதியிருந்த ஒரு சில பற்களையும் ஈறுகளையும், கவனமாக நசுக்கி நாறாக்கப்பட்ட பற்குச்சியால் தேய்த்துக் கொண்டிருந்த போது, 'உண்மையில் இன்று உண்ணாவிரதம் இருப்பது போலவே எனக்குத் தோன்றவில்லை!' என்று அவர் வியப்புடன் கூறியதை மனு கேட்டார்.*

*இந்த வார்த்தைகளைக் கேட்ட அந்த இளம் பெண், குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முறையாகப் போர்வை போர்த்தியிருக்கிறாரா மகாத்மா என்று இரவு நேரத்தில் இரண்டு முறை எழுந்து பார்த்த அந்தப் பெண், பகல் நேரத்துக்கு காந்தியின் முதல் 'உணவான' ஒரு குவளையில் சோடா உப்புக் கலந்த இளம் சூடுள்ள வெந்நீரை காந்தியிடம் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்ட காந்தி ஏளனப் புன்னகையுடன் விழுங்கி வைத்தார்.*

*இதை முடித்த பின் காந்தி அடுத்தப் பணிக்குத் திரும்பினார். உண்ணா விரதத்தை கைவிடுமாறு அவரது இளைய மகன் தேவதாஸ் உருக்கமுடன் எழுதிய கடிதத்துக்குப் பதில் எழுதுவது பற்றி முந்தின நாளிலிருந்து யோசித்துக் கொண்டிருந்தார். 'நீங்கள் உயிருடன் இருந்து சாதிக்க முடிந்த ஒன்றை, உயிரை விடுவதன் மூலம் சாதிக்க முடியாது' என்று அவரது மகன் எழுதியிருந்தார். மனுவை அருகே அழைத்து இதற்கான பதிலை எழுதிக் கொள்ளுமாறு கூறினார்.*

'இந்த உண்ணாவிரதத்துக்குக் கட்டளையிட்ட கடவுள் மட்டுமே அதனைக் கைவிடுமாறும் கட்டளையிட முடியும்' என்று அவர் எழுதினார். 'நீங்களும் மற்ற அனைவரும் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். கடவுள் எனது வாழ்க்கையை முடிக்கப் போகிறாரா அல்லது வாழ அனுமதிக்கப் போகிறாரா என்ற இரண்டுமே ஒரே அளவு முக்கியத்துவம் இல்லாதவை. நான் கடவுளிடம் பிரார்த்திப்பது ஒன்றே ஒன்று தான்: "கடவுளே! வாழ வேண்டும் என்ற விருப்பம் காரணமாக, உண்ணாவிரதத்தை விரைந்து முடித்துக் கொள்ளாத உறுதி எனக்கு வேண்டும்."

அவர் பிழைப்பதற்கான வாய்ப்புகள் பற்றிய கவலை அந்த இளம் பெண்ணுக்கு, அவரை கவனித்து வந்த டாக்டருக்கு ஏற்கெனவே ஏற்பட்டு விட்டது. டில்லிக்குத் திரும்பியதிலிருந்தே அவரது உடல் நலம் சீர்கேடடையத் துவங்கிவிட்டது. கல்கத்தாவில் உண்ணாவிரதம் இருந்த போது பாதிக்கப்பட்ட அவரது சிறுநீரகங்கள், இன்னும் சீர்படவில்லை. பஞ்சாபின் சம்பவங்களால் ஏற்பட்ட ஆதங்கம் அவரின் பசியைக் கெடுத்திருந்தது. இதனால் ரத்த அழுத்தம் சீராக இல்லை. அதன் ஏற்ற இறக்கத்தால், ரத்தக் குழாய்களில் அயர்ச்சி ஏற்பட்டது. சர்ப்பகந்தி மரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு மருந்தினை மட்டுமே டாக்டர் சுசீலா நய்யாரால் அவருக்குக் கொடுக்க முடிந்தது. அதையும் இப்போதைய உண்ணாவிரதக் கட்டுப்பாடுகளால் கொடுக்க முடியாமல் போனது. எப்படியிருப்பினும் எந்த மருந்தாலும் அவரது 78 வயது என்ற முதுமையைக் குறைக்க முடியாது. எடை பார்த்து அறிவுரை கூறும் பணியை அன்றாடம் செய்யும் சுசீலா நய்யார் துயரத்துடன் ஒன்றை ஒப்புக் கொண்டார். அவரது கவனிப்பையும் மீறி காந்தி எவ்வளவு காலம் இந்த முறைமைக்குள் வாழ்வார் என்பதை அறிய முடியவில்லை.

எடைபார்க்கும் கருவியின் முன் அவரது கேள்விக்கு வருத்தமளிக்கும் பதிலையே அளித்தது. உண்ணாவிரதத்தின் முதல் இருபத்து நான்கு மணி நேரத்தில் காந்தி தனது பொன்னான இரண்டு பவுண்ட் எடையை இழந்திருந்தார். அன்று காலை அவரது எடை 109 பவுண்டாக இருந்தது. அவரது மெலிந்த உடலில் கொழுப்புச் சத்து கொஞ்சம் கூட இல்லை. கொஞ்ச நேரத்தில் அவரது உடல் வலிவும் குறைந்து விடும் என்பதை சுசீலா அறிந்திருந்தார். உண்ணாவிரதம் இருக்கும் எவருக்கும் உடலில் கொழுப்புச் சத்துக் குறைந்தால் புரதச்சத்தினை உடற்கூறு அரிக்கத் தொடங்கும். அது தான் காந்திக்கும் நேரப்போகிறது. இதனை நிறுத்தாவிட்டால் காந்தி மரணத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். காந்தியின் பலவீனமான உடல்நிலையால் இந்த நிலை அசுர வேகத்தில் துவங்கி விடும் என்றும் சுசீலா நய்யார் அறிந்திருந்தார்.

இப்படிப்பட்ட சோதனை மிகுந்த ஒரு கால கட்டத்தில் காந்தி தன்னை மருத்துவ ரீதியில் கவனித்துக் கொள்ள இந்தியத் தலைநகரில் உள்ள தலைசிறந்த மருத்துவர்களில் ஒருவரிடம் பொறுப்பை ஒப்படைக்காமல் ஒரு இளம் பெண்ணிடம் நம்பிக்கை வைத்தது ஓரளவே வெளியே தெரிந்தது. ஆனால் இது அவரது தத்துவத்தின் மிக முக்கியமான பகுதியாகும். தென் ஆப்பிரிக்காவில் முதன் முறையாக சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கிய அந்த நேரத்தி லிருந்து அவரது இயக்கத்தில் எப்போதுமே பெண்கள் முன்னணிப் பாத்திரம் வகித்திருக்கிறார்கள்.

இந்தியப் பெண்கள் விடுதலை பெறும் காலம் வரை இந்தியாவுக்கு விடுதலை கிடைக்க வாய்ப்பில்லை என்ற கருத்தை ஒரு போதும் அவர் கைவிட்டதில்லை. மனித குலத்தில் பாதியான பெண்கள் ஒடுக்கப்பட்டவர்களாக உள்ளனர். ஆணாதிக்க சமுதாயத்தில் வீட்டு வேலைகள் என்ற குறுகிய வட்டத்துக்குள் தள்ளப்பட்டதில்தான் அவர்களது அடிமைத்தனத்தின் வேர்கள் உள்ளன. தென் ஆப்பிரிக்காவில் அவரது முதலாவது ஆசிரமத்தை நிறுவியதிலிருந்து, வீட்டுப் பணிகளை ஆண்களும் பெண்களும் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அவர் உத்தரவிட்டார். பொதுவான சமையலறையை ஆதரித்த அவர், தனித்தனியான சமையல் அறைகளை அகற்றினார். இதன் மூலம் அடிமைத்தனமான வீட்டு வேலைகள் என்ற சுமைகளிலிருந்து விடுபட்டு, ஆண்களோடு சரிநிகர் சமானமாக சமுதாயத்தின் பொதுவான சமூக அரசியல் நடவடிக்கைகளில் பெண்களும் ஈடுபடுவார்கள் என்று கருதினார்.

அப்படியே அவர்கள் ஈடுபட்டனர். இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பிரிட்டிஷ் காவல் துறையினரின் தாக்குதல்களை ஆண்களோடு பெண்களும் சமமாக எதிர்கொண்டனர். சிறைகளை நிரப்பினர். மக்கள் இயக்கங்களுக்குத் தலைமை தாங்கினர்.

இருப்பினும் இந்தியப் பெண்களுக்காக அவர் மேற்கொண்ட முயற்சிகள் விசித்திர முரண்பாடுகளுடன் இருந்தன. அப்படி இருந்திராவிட்டால் காந்தி காந்தியாக இருந்திருக்க மாட்டார். பல்லைக் கடித்துக் கொண்டும், மூச்சைப் பிடித்துக் கொண்டும் சாகும் வரை போராடுமாறு பஞ்சாபில் கற்பழிப்புக் கொடுமைக்கு ஆளான பெண்களுக்கு அவர் அறிவுரை கூறினார். இந்தியாவின் பெருகிவரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த நவீன குடும்பக் கட்டுப்பாட்டு முறையை அவர் நிராகரித்தார். ஏனெனில் இதற்குத் தேவையான சாதனங்கள் அவரின் இயற்கை வைத்தியக் கோட்பாடுகளுக்குப் பொருத்தமாக இல்லை என்று அவர் கருதினார். குடும்பக் கட்டுப்பாட்டுக்கு அவர் ஏற்றுக் கொண்டது அவரே கடைப்பிடித்த ஒன்றை மட்டும்தான் பாலுணர்வில் சுய கட்டுப்பாடு கொண்ட புலனடக்கம்.

பல நூற்றாண்டு காலமாக இறந்து போன கணவன்மார்களின் கொழுந்து விட்டெரியும் சிதை நெருப்பில் விதவை மனைவியரைக் குதிக்கச் செய்த ஒரு சமூகம், காந்தியின் தூண்டுதலால், சுதந்திர இந்தியாவின் முதல் அமைச்சரவையில் ஒரு பெண் அமைச்சராக இருந்தார் என்ற அளவுக்கு பரிணாம வளர்ச்சி அடைந்திருந்தது.

நண்பகலுக்குச் சற்று முன் அந்த அமைச்சரவையின் உறுப்பினர்கள் மீண்டும் இந்தியாவின் மனச்சாட்சியாக மாறிக் கொண்டிருக்கும் அந்த மனிதரைச் சூழ்ந்திருந்தார்கள். நேரு மற்றும் படேல் தலைமையிலான அவர்கள் தங்களின் ஆடம்பரமான அலுவலகக் கட்டிடங்களைக் கைவிட்டு, அவற்றின் கதவுகளைத் தங்களுக்குத் திறந்து விட்ட மனிதரின் கயிற்றுக் கட்டிலைச் சுற்றி அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தவிருந்தார்கள். பாகிஸ்தானுக்குரிய 550 மில்லியன் (55 கோடி) ரூபாயைக் கொடுத்து விட வேண்டும் என்ற கோரிக்கைதான் அவர்களை காந்தியின் பக்கத்தில் கொண்டு வந்த விஷயமாகும்.

இந்தக் கோரிக்கை அமைச்சரவையில் இருந்த பலருக்கும் குறிப்பாக வல்லபபாய் படேலுக்கு அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. இந்தப்

பணத்தை நிறுத்தி வைப்பதென்ற முடிவை நியாயப்படுத்த நேருவும் பின்னர் படேலும் முயற்சி செய்தார்கள். அவர்களின் வாதங்களை வற்புறுத்திக் கொண்டிருந்த போது பலவீனமாகவும் களைத்துப் போயும், வைக்கோல் மெத்தையில் படுத்திருந்த காந்தி அமைதியாகக் கட்டிடத்தின் மேல் தளத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் ஒன்றும் பேசவில்லை. படேல் தொடர்ந்து வற்புறுத்தினார். மெதுவாகவும், கவலையோடும், கண்களில் கண்ணீரோடும் முழங்கைகளை ஊன்றித் தாமாகவே எழுந்த காந்தி, பல கடுமையான போராட்டங்களில் தம்முடன் இணைந்து நின்ற அந்த மனிதரைப் பார்த்தார்.

'ஒரு காலத்தில் நான் அறிந்திருந்த சர்தார் அல்ல நீங்கள்' என்று கரகரத்த குரலில் கூறிய அவர், மீண்டும் அவரது மெத்தையில் சாய்ந்தார்.

அந்த நாள் முழுவதும் ஏராளமான முஸ்லீம், இந்து, சீக்கியத் தலைவர்கள் அவரது படுக்கையருகே வந்து உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு காந்தியிடம் வேண்டினார்கள். பிர்லா மாளிகையின் பாதுகாப்பான இடத்தில் காந்தியைச் சுற்றி கூடியிருந்தவர்களுக்குத் தெரியாமல், அவர்களுக்குத் தெரிந்திருந்த ஒரு விஷயத்திலிருந்துதான், அந்தக் கவலை வெளிப்பட்டது. முதல் முறையாக இந்தியத் தலைவரின் உண்ணாவிரதம் நாட்டு மக்களில் பெரும்பாலோரது தீவிர எதிர்ப்புக்கு ஆளாகியிருந்தது. புது டில்லியின் வர்த்தக மையமான கன்னாட் சர்க்கஸ், கூட்டம் நிரம்பி வழியும் சந்துகளைக் கொண்ட பழைய டில்லியின் சாந்தி சவுக் என எல்லா இடங்களிலும் உண்ணாவிரதம் பற்றிய உரையாடல்கள் நிகழ்ந்தன. ஆனால் அந்தக் கூட்டங்களுடன் ஒன்றிக் கலந்து கவனித்த காங்கிரஸ் கட்சியின் நிர்வாகி ஜி. என். சின்ஹா அதிர்ச்சி அடைந்தார். காந்தியின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆர்வமுடையவையாக அவர்களின் வார்த்தைகள் இருக்கவில்லை என்பதை அவர் அறிந்தார். பிர்லா மாளிகையின் கயிற்றுக் கட்டிலில் அவதிப்படும் அந்த மனிதரின் செயல் முஸ்லீம்களுக்கு உதவி செய்வதற்காகத் திட்டமிட்டு செய்யப்படும் ஒரு ஏற்பாடாகவே பலருக்குத் தோன்றியது. ஜனவரி மாத மாலை வேளையில் டில்லியின் கடைவீதிகளில் சின்ஹாவின் காதுகளில் அதிக அளவில் விழுந்த கேள்வி, 'காந்தியின் உயிரை எப்படிக் காப்பாற்றுவது' என்பதாக இருக்கவில்லை. 'இந்தக் கிழவர் எப்போது நமக்குத் தொல்லை கொடுப்பதை நிறுத்துவார்?' என்பதாகத்தான் இருந்தது. காந்தியின் உயிரைக் காப்பாற்றுவதற்கு வகுப்பு நல்லிணக்கத்தை வலியுறுத்தி நகரின் மையப்பகுதியில் நடத்தப்பட்ட ஊர்வலம் ஒன்றை ஆத்திரம் கொண்ட அகதிகள் கும்பல் ஒன்று அடித்து விரட்டவும் செய்தது.

அந்த மாலை நேரத்தில் தெளிவற்றதாக இருந்தாலும் பரிச்சயமான ஒலி பிர்லா மாளிகையை நோக்கி வந்து கொண்டிருந்தது. காந்தியைச் சுற்றியிருந்தவர்கள் அதனை நம்பிக்கையோடும் ஆர்வத்தோடும் கவனித்தார்கள். கல்கத்தாவில் இந்த ஒலியை அவர்கள் கேட்டுள்ளனர். உண்ணாவிரதத்தை கைவிடுமாறு தங்களின் மகாத்மாவிடம் இரந்து முறையிடுவதற்காக துயரத்திலாழ்ந்த மக்கள் கூட்டத்தினர் எழுப்பிய கோஷங்களின் ஒலிதான் அது. காந்தியின் செயலாளர்களில் ஒருவர் வாசலுக்கு ஓடினார். தெருவிளக்குகளின் மங்கலான ஒளியில் அல்புக்கர்க் சாலை வழியாகத் தன்னை நோக்கி ஒரு ஊர்வலம் வருவதை அவரால் பார்க்க முடிந்தது. தெளிவற்ற உருவங்களும் காடுகள் போல் அசைந்து வரும் கொடிகளும் தெரிந்தன.

*உள்ளே காந்தி படுத்திருந்த இருளடர்ந்த அறைக்குள் அந்த ஒலி பரவியது. பலவீனமாகவும் களைப்படைந்தும் இருந்த காந்தி கட்டிலில் அரைத் தூக்கத்துடன் படுத்திருந்தார். கடைசியாக அந்த ஊர்வலத்தினர் வாசலை அடைந்த போது அவர்கள் எழுப்பிய கோஷங்கள் அறை முழுவதும் அதிர்ந்தன. காந்தி தனது செயலாளர் பியாரேலாலை சைகை செய்து அழைத்தார்.*

*'என்ன நடக்கிறது?' அவர் வினவினார்.*

*'அகதிகள் கூட்டத்தினர் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்' பியாரேலால் பதிலளித்தார்.*

*'நிறைய பேரா?'*

*'இல்லை, அவ்வளவு நிறைய இல்லை.'*

*'அவர்கள் என்ன செய்கிறார்கள்?'*

*'கோஷமிடுகிறார்கள்'*

*சிறிது நேரம் அவர்கள் எழுப்பும் கோஷம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலுடன் காந்தி உன்னிப்புடன் கவனித்தார்.*

*'அவர்கள் என்ன சொல்கிறார்கள்' அவர் வினவினார்.*

*பியாரேலால் தயங்கினார்; என்ன பதில் சொல்வதென்று யோசித்தார். பின்னர் மென்று விழுங்கி சொன்னார்.*

*'அவர்களின் கோஷம் "காந்தி இறக்கட்டும்!" என்பதாகும்' அவர் சொன்னார்.*

## *பம்பாய், 14 ஜனவரி 1948*

*காந்தி இறக்க வேண்டும் என்று விரும்பிய அந்த மூன்று மனிதர்கள் பம்பாயின் வடகோடி புறநகர்ப் பகுதியில், ஆடம்பரமான ஆனால் தட்ப வெப்பத்தால் சிமெண்ட் பூச்சுகள் பாதிக்கப்பட்ட, இரண்டு மாடிக் கட்டிட வாசலில், தடை போல் இருந்த இரும்புக் கதவுகளுக்கு முன்னால், இருளில் நின்று கொண்டிருந்தார்கள். ஆடம்பரத்தின் அடையாளமாக இருந்தது, கட்டிட முகப்பின் ஒரு சுவற்றில் பதிக்கப்பட்ட ஒரு பளிங்குக்கல் பலகை மட்டும் தான். மராத்தி மொழியில் அந்தக் கட்டிடத்தின் நடவடிக்கை அதில் பொறிக்கப் பட்டிருந்தது: 'சவார்க்கர் சதன் - சவார்க்கர் மாளிகை.'*

*இந்த மாளிகையில் குடியிருந்த, இந்துத் தீவிரவாதிகளின் சர்வாதிகாரியாகத் தன்னையே அறிவித்துக் கொண்ட இந்த மனிதரோடு ஒப்பிடும் அளவுக்கு, பிர்லா மாளிகையில் கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கிடக்கும் காந்தியை வேறெவரும் தீவிரமாக வெறுத்திருக்க மாட்டார்கள். கிட்டத்தட்ட காந்தியின் அனைத்துக் கொள்கைகளையும் வீர சவார்க்கர் வெறுத்தார் பிர்லா மாளிகையையும் அவர் வாழ்ந்த பிற இடங்களையும் காந்தி அஹிம்சையின் கோயில்களாக ஆக்கினாரென்றால், பம்பாயின் கெலுஸ்கர் சாலையில் தென்னை மற்றும் பழம் தரும் மரங்களுக்கிடையே அப்பாவி போல் இருந்த சவார்க்கர் சதன் வன்முறையின் கோயிலாக விளங்கியது. காந்தியைக் கொல்ல வேண்டும் என்று விரும்பிய அந்த மனிதர்கள், பம்பாய்க்கு வந்தவுடன் முதல்*

செயலாக, இந்த மாளிகையின் வாசலை நோக்கிப் பயணம் செய்ததைவிட இயல்பானது வேறெதுவும் இருக்க முடியாது.

அந்த மூவரில் ஒருவன் இந்திய இசைக்கருவியான தபலாவை கக்கத்தில் வைத்திருந்தான். அன்று மாலை திகம்பர் பாட்கே தேர்ந்தெடுத்திருந்தது சாது வேடமல்ல; இசைக்கலைஞன் வேடம். பழங்கால இந்தியாவில் பாட்டுப்பாடி ஆட்டம் ஆடி நாடோடிகளாக அலைந்து திரிந்த சாதியில் பிறந்த அவனுக்கு அந்த வேடம் இயற்கையாக இருந்தது. பூனாவில் இருந்த அவனது கடையில் சதிகாரர் தெரிவு செய்த ஆயுதங்கள் தபலாவுக்குள் மறைத்து வைக்கப் பட்டிருந்தன.

காவலாளி ஒருவன் அந்த மூன்று பேருக்கும் ஆரவாரம் மிகுந்த சவார்க்கரின் வரவேற்பு அறையைக் காட்டினான். மாடியில் இருந்த இந்து ராஷ்ட்ரா தள சர்வாதிகாரியின் தனி அறைக்குள் உடனடியாக செல்லும் உரிமை ஒரு சிலருக்கு மட்டுமே இருந்தது. அவர்களில் நாதுராம் கோட்சேயும், நாராயண் ஆப்தேயும் இடம் பெற்றிருந்தனர். திகம்பர் பாட்கே அதில் இல்லை. எனவே அவனை விட்டு விட்டு பாட்கேயின் தபலாவை மட்டும் எடுத்துக் கொண்டு அவர்கள் மாடிக்குச் சென்றனர்.

அந்த ஜனவரி நாளில் வீர சவார்க்கரின் குடியிருப்புக்கு வந்த முதல் சிறிய குழுவல்ல கோட்சேயும் ஆப்தேயும் பாட்கேயும். ஏற்கெனவே கார்காரே அந்தத் தலைவர் முன் மதன்லாலைக் கொண்டு வந்து நிறுத்தியிருந்தான். 'மிகவும் துணிச்சலான ஊழியன்' என்று அந்தப் பஞ்சாபி இளைஞனை கார்காரே வர்ணித்தான். மதன்லால் மீதான இறுகியப் புன்னகை வீச்சு இதற்கு சவார்க்கரின் பதிலாக அமைந்தது. பின்னர் பூனைக் குட்டியின் முதுகைத் தடவுவது போல் மதன்லாவின் முன் கையைத் தடவிய அவர், 'நல்ல வேலையைத் தொடர்ந்து செய்' என்று வற்புறுத்தினார்.

சவார்க்கருடனான அவர்களின் சந்திப்பு முடிந்ததும் இரவு நேரத் தங்கலுக்காக மூவரும் பிரிந்து சென்றனர். இந்து மகா சபாவின் பொது விடுதிக்கு பாட்கே சென்றான். சித்பவன் பிராமணர்களான ஆப்தேயும் கோட்சேயும் சற்று வசதியான சீ கிரீன் ஓட்டலுக்குச் சென்றார்கள்.

ஓட்டலுக்குச் சென்றவுடனே பொறுமையற்ற ஆப்தே ஒரு இடத்துக்குத் தொலைபேசி செய்தான். இந்த நூற்றாண்டில் இந்தியாவிலேயே மிகப் பெரிய குற்றத்தைப் புரிய சபதமேற்றுள்ள ஒரு மனிதன் அந்தத் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கேட்பான் என்று உலகில் யாரும் எதிர்பார்க்கமாட்டார் கள். அது, பம்பாய் காவல்துறையின் மைய இணைப்பகம். ஆப்தே எக்ஸ்டென்ஷன் (விரிவாக்கம்) 305 கேட்டான். அடுத்த முனையில் அவனுடன் உற்சாகத்துடன் பேசியது ஒரு பெண். அன்று இரவு ஆப்தேயின் படுக்கையைப் பகிர்ந்து கொள்ள இருப்பவள். பம்பாய் காவல்துறையின் தலைமை அறுவை சிகிச்சை மருத்துவரின் மகள்.

காந்தி உண்ணாவிரதம் தொடங்கிய காலத்திலிருந்தே அவரை கவனித்து வந்த இளம் டாக்டருக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் அந்த நெருக்கடியான தருணம் வெகுவிரைவாக வந்து விட்டது. இப்படி வரும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. ஜனவரி 15 வியாழக்கிழமை காலை அவரது சிறுநீரின்

ஆய்வு செய்த சுசீலா நய்யார், அச்சம் தரும் அளவில் அசிட்டோனும் அசிட்டிக் அமிலமும் அதில் இருப்பதைக் கண்டறிந்தார். மரண அபாயத்தின் அறிகுறிகள் துவங்கி விட்டன. காந்தியிடம் கார்போஹைட்ரேட் இருப்புகள் கரைந்து விட்டன. உயிர் காக்கும் புரதச்சத்துக்களை நுகர்வதற்காக அவரது குடல்களே அவரது உடலை அரிக்கத் துவங்கிவிட்டன. 78 வயதாகிக் களைத்துப் போன அவர் உண்ணாவிரதம் துவங்கிய நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குப் பின் மருத்துவ ரீதியில் ஆபத்தான பகுதிக்குள் நழுவிச் செல்ல ஆரம்பித்து விட்டார்.

அமெரிக்காவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அளித்த கல்வி உதவித் தொகையை (ஃபெலோஷிப்) ஒதுக்கித்தள்ளி விட்டு காந்தியை கவனித்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணுக்குக் கவலையளித்தது இந்த ஒரு அறிகுறி மட்டுமல்ல. அவரது சிறுநீரை நுட்பமாக ஆராய்ந்த போது இன்னொரு ஆபத்தும் தெரிந்தது. கடந்த இருபத்து நான்கு மணி நேரத்தில் அவரால் மிகவும் வெறுக்கப்பட்ட இளஞ்சூட்டு நீருடன் கலந்த சோடாவை அறுபத்தெட்டு அவுன்ஸ் குடித்திருக்கிறார். கவனத்துடன் செய்த ஆய்வு அட்டவணை காட்டுவதன்படி அதில் இருபத்தெட்டு அவுன்ஸ் மட்டுமே வெளியேறி யிருக்கிறது. கல்கத்தா உண்ணாவிரதத்தின் போது பாதிக்கப்பட்ட காந்தியின் சிறுநீரகங்கள் திரும்பவும் முறையாகச் செயல்படவில்லை. மிகவும் கவலை யடைந்த சுசீலா, நிலைமையின் தீவிரத்தையும், இந்த முறை சோதனையிலிருந்து மீள்வது ஏன் சிரமமாக இருக்கக்கூடும் என்பது பற்றியும் காந்திக்கு விளக்க முயற்சி செய்தார். அவர் அதனை கவனிக்கவில்லை.

'எனது சிறுநீரில் அசிட்டின் இருந்தால், ராமன் மீதான எனது நம்பிக்கை முழுமையாக இல்லாதது தான் காரணம்' என்று அவர் முணு முணுத்தார்.

'ராமன் இதற்கு ஒன்றும் செய்ய இயலாது' சுசீலா பதிலளித்தார். அவர் வெளியேற்றும் சிறுநீரில் வேற்றுப் பொருள்கள் இருப்பதற்கான காரணங்கள் தொடங்கி அறிவியல் நடைமுறைகள் அனைத்தையும் பொறுமையுடன் அவர் விளக்கினார். அவர் சொல்லி முடித்த போது, காந்தி தனது கண்களை அவரது முகத்தில் பதித்தார்.

'உண்மையில் உங்கள் அறிவியல் அனைத்தையும் அறியுமா?' அவர் வினவினார். 'கீதையின் பத்தாவது அத்தியாயத்தில் பகவான் கிருஷ்ணன் கூறிய வார்த்தைகளை நீங்கள் மறந்து விட்டீர்களா?' - "எனது உடலின் மிக நுண்ணிய சிறு பகுதியால் இந்த உலகத்தை நான் தாங்குகிறேன்."

அறிவியலின் வரம்பெல்லைகளை இளம் டாக்டருக்கு காந்தி நினைவூட்டிய அடுத்த நாள் காலை 7 20 மணிக்கு நன்றாக உடையணிந்த நாராயண் ஆப்தே பம்பாயில் உள்ள ஏர் இந்தியா நிறுவன அலுவலகத்துக்கு வந்தான். டி.என். கர்மார்க்கர், எஸ். மராத்தே ஆகியோர் ஜனவரி 17, சனிக்கிழமை பிற்பகல் பம்பாய் - டில்லி டி.சி 3 விமானத்தில் பயணம் செய்வதற்காக அவன் இரண்டு பயணச்சீட்டுகள் கேட்டான். கட்டணத்துக்கான 308 ரூபாயை அவன் எண்ணத் துவங்கிய போது, திரும்பி வருவதற்கும் பயணச்சீட்டு வேண்டுமா என்று அந்த குமாஸ்தா இதமாகக் கேட்டார்.

அவரைப் பார்த்த நாராயண் ஆப்தே புன்னகைத்தான். 'வேண்டாம்' அவன் சொன்னான். அவனுக்கும் அவனது நண்பர்களுக்கும் திரும்பி வரும் திட்டம் இல்லை. ஒருவழிக்கான பயணச் சீட்டுகள் மட்டுமே அவர்களுக்குத் தேவை.

மிகவும் பலவீனமடைந்து விட்ட நிலையிலும், அவரின் தூய்மைக் கோட்பாட்டின் ஒரு பகுதியாக உண்ணாவிரத நாட்களில் முறைப்படி செய்து வந்த இனிமா அளிக்கும் சடங்கை இப்போதும் செய்ய வேண்டும் என்று காந்தி வற்புறுத்தினார். பிரார்த்தனை உயிரைத் தூய்மை செய்வது போல இனிமாவின் தண்ணீர் உடலைத் தூய்மை செய்வதாக அவர் நம்பினார். இந்த நெருங்கிய, நுட்பமான பணியைச் செய்வதற்கு தன்னையே இழந்து விட்ட சிறிய பெண் மனுதான் பொறுப்பானவர். 'இந்த மாபெரும் தியாகத்தில் எனது ஒரே பங்காளி நீதான்' என்று உண்ணாவிரதத்தைத் துவக்கும் போது காந்தி அறிவித்திருந்தார்.

அந்தப் பெண்ணின் பங்கு அவ்வளவு எளிதானது அல்ல. வெளித்தோற்றத் துக்கு சாந்தமானவராகவும் பற்றற்றவராகவும் இருந்த அந்த மனிதரின் வியக்கத்தக்க பல அற்பக் கோரிக்கைகளையும் வெடுவெடுப்பான கோபப் பேச்சுக்களையும் அந்த மெலிந்த பெண் தாங்க வேண்டியிருந்தது. இனிமா கொடுப்பதற்கான வெந்நீர் கொண்டு வர சிறிது தாமதம் ஆகிவிட்டதால் காந்தி நச்சரித்து விட்டார். பின்னர் தனது பொறுமையின்மைக்காக வருத்தம் தெரிவித்த அவர், களைத்துப் போய் மீண்டும் படுக்கையில் வீழ்ந்தார். 'உண்ணாவிரதம் போன்ற சோதனையை ஒருவர் சந்திக்கும் போது மட்டும்தான் அவரின் குறைகள் பற்றி மற்றவர் அறிய முடியும்' என்று குற்றவுணர்வுடன் மனுவிடம் முணு முணுத்தார்.

இனிமா கொடுத்து முடித்த போது அவர் சோர்ந்து துவண்டு போனார். 'பஞ்சுச் சுருள் போல் அவர் வெள்ளைத் துணிக்குள் சுருண்டு கிடந்தார்' என்று மனு குறிப்பிட்டார். அவர் இறந்து கொண்டிருப்பதாக அஞ்சிய அந்தப் பெண் உதவி நாடிச் சென்றார். அவர் என்ன செய்கிறார் என்பதை உணர்ந்து கொண்ட காந்தி, தனது தளர்ந்து போன மணிக்கட்டுகளைக் கொண்ட முன் கையால் சைகை செய்து அழைத்தார்.

'வேண்டாம்', காந்தி அவரிடம் கூறினார். 'இங்கே நான் இருப்பது தேவை யென்று கடவுள் கருதினால் அவர் என்னை வாழ வைப்பார்.'

அவர் உண்ணாவிரதத்தைத் துவங்கி மூன்று நாட்கள் ஆகியிருந்த இப்போது இந்தியத் தலைநகர் மக்களின் மனநிலை பாதிக்கப்பட்டது. நேருவின் பேச்சைக் கேட்க பத்தாயிரம் மக்கள் செங்கோட்டைக்கு வந்தார்கள். 'மகாத்மா காந்தியை இழந்தால் இந்தியாவின் ஆன்மாவை இழந்ததாக அர்த்தம்' என்று அவர் கூறினார். அது ஒரு முக்கியமான கூட்டம். ஆனால் சென்ற ஆண்டு ஆகஸ்ட் 15இல் இதே இடத்தில் அரை மிலியன் (ஐந்து லட்சம்) மக்கள் திரண்டிருந்தனர். தன்னால் மதிக்கப்பட்ட மெலிந்த மனிதர் துயரத்தில் ஆழ்ந்திருப்பதால் அனைத்து வரவேற்பு நிகழ்ச்சிகளையும் அரசு விருந்துகளையும் ரத்து செய்யுமாறு அரசு மாளிகையிலிருந்து லூயி மவுண்ட்பேட்டன் உத்தரவிட்டார். வகுப்பு நல்லிணக்கத்தை வலியுறுத்தி டில்லியின் வீதிகளில் ஒரு சில ஊர்வலங்களும், நடைபெற்றன. இருப்பினும், கல்கத்தாவோடு ஒப்பிடும் அளவுக்கு இவை இல்லை. அங்கே காந்தி உண்ணாவிரதமிருந்த முதல் நாளிலிருந்தே நகர மக்களின் மனநிலையில் வியக்கத்தக்க வகையில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. தலைநகரின் அக்கறையின்மையை உணர்ந்த மனுவின் மனதில் அமைதி குலையும் எண்ணம் பரவியது. 'காந்தி இறக்கட்டும்' என்று டில்லி விட்டு விடுமோ என்று அவர் அஞ்சினார்.

*பாகிஸ்தானின் உணர்வுகள் வலுவுடன் இருப்பதாகவே தோன்றியது. லாகூரிலிருந்து வந்த ஒரு தந்திச் செய்தி காந்திக்குத் தெரிவிக்கப்பட்டது. 'இங்கே எல்லோரும் ஒன்றை மட்டுமே கேட்கிறார்கள்: 'காந்தியின் உயிரைக் காப்பாற்ற எந்த வகையில் நாம் உதவ முடியும்?' புதிய நாட்டின் அனைத்துப் பகுதியிலிருந்த முஸ்லீம் லீக் தலைவர்களும், அவர்களின் பழைய எதிரியை, 'சகோதரத்து வத்தின் தேவதூதன்' என்று திடீரெனப் புகழத் துவங்கி விட்டார்கள். அந்த நாட்டின் மசூதிகள் அனைத்திலும் காந்திக்காகப் பிரார்த்தனை குரல்கள் ஓங்கி ஒலித்தன. இந்திய முஸ்லீம்களுக்கு சகோதரத்துவ கரம் நீட்டிய 78 வயதான இந்து மீது அல்லா கருணை பொழிய வேண்டும் என்று பிறர் கண்களில் படாமல் பர்தாவுக்குள் இருந்த ஆயிரக்கணக்கான முஸ்லீம் பெண்கள் வேண்டினார்கள்.*

*டில்லியிலிருந்து வந்த வேறு எந்தச் செய்தியும் பாகிஸ்தானில் இவ்வளவு அசைவை ஏற்படுத்தியதில்லை. வியாழனன்று மாலை செய்தி நிறுவனங்களின் தொலை தட்டச்சுக் கருவிகள் மூலம் துணைக்கண்டம் முழுவதும் அந்தச் செய்தி பரவியது. காந்தி முதல் வெற்றியைப் பெற்று விட்டார். பசிக்கும் நோவுக்கும் ஒப்படைக்கப்பட்ட அவரது உடல் முகமது அலி ஜின்னாவின் நாட்டை திவாலாவதிலிருந்து பாதுகாத்தது. துணைக் கண்டத்தில் அமைதியை ஏற்படுத்தும் செயலாக, அதற்கும் மேலாக, தேசத்தின் ஆன்மாவுடைய உடல் வருத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, இந்திய அரசு அந்த அறிவிப்பை வெளியிட்டது. பாகிஸ்தானின் 550 மிலியன் (55 கோடி) ரூபாயை உடனடியாக வழங்குவதற்கு அது உத்தரவிட்டது.*

## *பம்பாய், 15 ஜனவரி 1948*

*இந்த ரூபாய்க்காக காந்தியைக் கொல்ல வேண்டும் என்று முடிவு செய்த அந்த மனிதர்கள், ஒரு இந்துக் கோயிலின் திடலில் 'பகடை' சூதாட்டக் குழுவினர் போல வட்டமாக மண்டியிட்டு அமர்ந்திருந்தனர். இங்கேதான் கடந்த நாள் மாலையில் ஆயுதங்கள் மறைக்கப்பட்ட தபலாவை பாட்கே மறைத்து வைத்திருந்தான். அந்தப் போலி சாமியார் தபலாவைத் திறந்து அதற்குள் இருப்பவற்றை அவர்கள் முன் பரப்பினான். நாட்டுப்புறச் சந்தையில் சமையலறையில் பயன்படும் புதுவகைக் கத்தி பற்றி வியாபாரி செயல் விளக்கம் காட்டுவது போல், உயர் சக்தி கொண்ட வெடிகுண்டுகளுக்குள் எப்படி ஒயர்களைச் செருக வேண்டும், கையெறி குண்டுகளை எப்படி கையில் பிடிக்க வேண்டும் என்பது பற்றியெல்லாம் பொறுமையாக அவன் விளக்கிக் கொண்டிருந்தான்.*

*பாட்கே பேசிக் கொண்டிருந்த போது தபலாவிலிருந்து அவன் கடைசியாக எடுத்த ஆயுதத்தை, அவர்களுக்கு மிகவும் தேவைப்பட்ட ஆயுதமான சிறு கைத்துப்பாக்கியை ஆப்தே திகைப்புடன் பார்த்தான். அது வீட்டில் தயாரிக்கப்பட்ட பழைய பாணியில் இருந்தது. கோட்சேயிடம் ஆப்தே முணு முணுத்தது போல, அது காந்தியைக் கொல்வதற்குப் பதிலாக அவர்களின் கைகளிலேயே வெடித்து விடும். அவர்கள் திட்டமிட்டுள்ள கொலையைச் செய்து முடிக்க மிக எளிமையான கைத்துப்பாக்கி வேண்டும். அதனைக் கண்டு*

பிடிப்பது பைத்தியமாக்கும் அளவுக்கு சிக்கலானதாகத் தெரிந்தது. மூன்று மாடிக் கட்டிடத்தைத் தகர்க்கத் தேவையான அதிக சக்தி வாய்ந்த வெடிபொருள்களை அவர்களால் கண்டறிய முடிந்தது. ஆனால் அவர்களின் வெற்றிக்குத் தேவையான அந்த ஆயுதத்தை அடைவது இன்னும் சிரமமாகவே இருந்தது. கைத்துப்பாக்கியைத் தேடுவதை விட பணம் தேடுவது எளிதாகத் தோன்றியது. ஒரு நாள் பணத்துக்காகவும் கைத்துப்பாக்கிக்காகவும் தனது தீவிரவாத நண்பர்களைத் தேடிச் சென்ற ஆப்தேயின் பைக்குள் ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் ஒரு கத்தை சேர்ந்தன. ஆனால் கைத்துப்பாக்கி கிடைக்கவில்லை.

பாட்கேயின் சுறுசுறுப்பான விரல்கள் வெடிமருந்துகளின் மேல் நடனமாடுவதைக் கவனித்த ஆப்தே, அவனது ஞானம் டில்லியில் சில காரியத்துக்கு உதவும் என்று நினைத்தான். அவர்களின் சதித் திட்டத்தில் பாட்கேவுக்குப் பங்கு இல்லை. ஆப்தேயோ கோட்சேயோ அவன் மீது முழு நம்பிக்கை வைக்கவில்லை. இருப்பினும் அவனது உதவி இப்போது அவசியமாக இருக்கும் என்று தோன்றியது. எனவே அவனைக் கோயிலின் முன்புறத்துக்கு ஆப்தே அழைத்துச் சென்றான். அவன் தோள் மீது கையை வளைத்துப் போட்ட ஆப்தே பாட்கேயிடம் முணுமுணுத்தான். 'எங்களுடன் டில்லிக்கு வா.' காந்தி, நேரு, சுஹ்ரவர்தி ஆகியோரைத் 'தீர்த்துக் கட்ட' சவார்க்கர் விரும்பினார் என்று அவன் கூறினான். இந்தப் பணி அவனிடமும் கோட்சேயிடமும் ஒப்படைக்கப் பட்டிருந்தது. பாட்கேயின் பணத்தாசை உணர்வை திருப்திப்படுத்த இன்னொரு வார்த்தை யையும் சொன்னான். 'செலவுகளுக்கு நாங்கள் பணம் கொடுப்போம்.'

ஆயுத நிபுணர் ஒருவரைப் பட்டியலில் சேர்த்துக் கொண்டதன் மூலம் சதிகாரர்களின் வட்டம் முழுமையடைந்தது. துணைக் கண்டத்தில் பாதியைக் கடந்து இந்தியாவின் தலைநகருக்குப் பயணத்தைத் துவக்குவதற்கும், அங்கே இந்திய சுதந்திர சிற்பியைச் சந்திப்பதற்கும் நேரம் வந்து விட்டது. பாட்கே வழங்கிய ஆயுதங்கள் மதன்லாலின் படுக்கைச் சுருளுக்குள் பத்திரமாக மறைத்து வைக்கப்பட்டன. அவனும் கார்காரேயும் விக்டோரியா சந்திப்பிலிருந்து ஃபிரண்டைர் மெயில் வண்டியைப் பிடித்து இரண்டு நாள் பயணத்தைத் துவக்கவுள்ளனர். இந்த சந்திப்பில்தான், இந்தியாவை ஆளவந்த பல இளம் ஆங்கிலேயர்கள் தங்கள் முதல் அறிமுகத்தைச் செய்து கொண்டனர். 48 மணி நேரத்துக்குப் பின் வேறொரு ரயிலில் பாட்கேயும், நாதுராம் கோட்சேயின் இளைய சகோதரனான கோபால் கோட்சேயும், பின்தொடரவிருக்கிறார்கள். அன்று காலையில் ஆப்தே வாங்கிய பயணச்சீட்டுகளுடன் அவனும் கோட்சேயும் பொருத்தமான முறையில் விமானத்தில் பயணம் செய்வார்கள். அவர்கள் சந்திக்கும் இடம் இந்து மகாசபா பவன் எனும் இந்து மகா சபா விடுதியாக இருக்கும். இது கலை நயமிக்க இந்துக் கோயிலான பிர்லா கோயிலையொட்டி இருந்தது. பிர்லா குடும்பத்தினரால் இது டில்லிக்கு வழங்கப்பட்டது. இந்த இல்லத்தில் தான் அவர்கள் கொல்லத் திட்டமிட்டுள்ள அந்த மனிதர் வாழ்ந்து கொண்டிருந்தார்.

ஏதாவது ஒரு அதிசயத்தால் அந்த உணர்வூட்டும் தலைவர் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொள்வார் என்ற நம்பிக்கையுடன் வியாழக்கிழமை மாலையில் பிர்லா மாளிகையின் பின்னால் உள்ள புல்வெளிப் பரப்பில் விசுவாசமுள்ள நூற்றுக்கணக்கான மக்கள் கூடினர். அது பயனற்ற

நம்பிக்கையாக இருந்தது. காந்திக்கு எழுந்து நடக்கவோ அல்லது வேறொரு ஆதரவின்றி அமரவோ கூட சக்தி இல்லை. அவரது வாழ்க்கை லட்சியங்களின் ஒரு பகுதியை முடிந்த அளவுக்கு ஒரு சில வார்த்தைகளில் அவரது படுக்கைக்கு அருகே வைக்கப்பட்டிருந்த மைக்ரோஃபோனில் அவர் சொன்னார் பிரார்த்தனை மைதானத்தில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கி மூலம் கூடியிருந்த மக்கள் அதனைக் கேட்டனர். கடந்த முப்பது ஆண்டுகளாக இந்திய மக்களுக்கு உத்வேகம் அளித்த, பரிச்சயமான அந்தக் குரல் இப்போது மிகவும் நலிந்து போயிருந்தது. அந்த மாலை வேளையில் புல்வெளிப் பரப்பில் அமர்ந்திருந்த சிலருக்கு அவர் கல்லறைக்குப் பின்னாலிருந்து பேசுவது போல் தோன்றியது.

அவர்களின் நாட்டைப் பற்றியும் அதற்குத் தேவையான சகோதரத்துவம் பற்றியுமே சிந்திக்க வேண்டும்; அவரது துன்பங்களைப் பற்றி அல்ல என்று அவர் வலியுறுத்தினார். 'எனது நிலை பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம். இந்த உலகத்தில் பிறந்த எவரும் மரணத்திலிருந்து தப்ப முடியாது'

'மரணம் அனைவருக்கும் சிறந்த நண்பன். அது என்றைக்கும் நமது நன்றிக்குரியது. ஏனெனில் அனைத்துத் துயரங்களிலிருந்தும் முற்றிலுமாக நம்மை அது விடுவிக்கிறது.' அவர் பேசிக் கொண்டே போனார்.

பிரார்த்தனைக் கூட்டம் முடிந்த போது அவரை தரிசிக்க வேண்டும் என்ற ஆரவாரம் கூட்டத்திலிருந்து எழுந்தது. தங்களின் அன்புக்குரிய தலைவரை ஒரு கணமாவது பார்க்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். முதலில் பெண்கள் பிறகு ஆண்கள் என்று பார்வையாளர்கள் நீண்ட வரிசையில் நின்றனர். ஒரு சில வார்த்தைகள் பேசியதாலேயே சோர்ந்து போய் கண்ணாடி பொருத்தப்பட்ட தாழ்வாரத்தில் படுத்திருக்கும் காந்தியை துயரம் நிறைந்த மவுனத்துடன் பார்த்து இரு கைகளையும் கூப்பி வணக்கம் தெரிவித்தபடி மக்கள் கூட்டம் நகர்ந்தது. கருப்பையிலிருக்கும் குழந்தை போல அவர் உடலைக் குறுக்கிய நிலையில் இருந்தார். மெலிந்த உடல் மீது வெள்ளை துணி போர்த்தப்பட்டு கண்கள் மூடியிருந்தாலும் அவரது முகத்தில் இயல்பு மீறிய ஒளி ரேகைகள் தெரிந்தன. அந்த மயக்கத்திலும் துயரத்துடன் தன்னைப் பார்த்துச் செல்லும் ஆதரவாளர் களுக்குப் பதில் வணக்கம் செலுத்துவது போல் கைகள் கூப்பியிருந்தன.

மனுவால் தனது கண்களையே நம்ப முடியவில்லை. கணித்தறிய முடியாத அந்த முதியவர், நேற்று மாலை படுக்கையிலிருந்து தனது உடலை உயர்த்தக் கூட சக்தியில்லாமல் இருந்தவர், இப்போது எழுந்து நின்றார். சிரமப்பட்டு நடந்து காலை நேரப் பிரார்த்தனை செய்வதற்கான இடத்தைத் தேடினார் பிரார்த்தனைக்குப் பின், மிகவும் ஆச்சரியமான முறையில் அவருக்கு ஆர்வமான ஒரு வேலையில் ஈடுபட அமர்ந்தார். நான்கு நாட்களாக உணவு தண்ணீர் இல்லாமல் மரண அபாயத்திலிருந்தவர்தான் அந்த மனிதர். அன்றாடம் செய்வது போல் வங்கமொழி பயிற்சியைத் தொடங்கினார். நவகாளியில் பயணம் செய்ததிலிருந்து அந்த மொழியில் தேர்ச்சி பெற வேண்டும் என்று அவர் பாடுபட்டார். பின்னர் வியப்பளிக்கும் வகையில் உறுதியான குரலில் மாலை நேர பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் படிக்க விரும்பிய செய்தியை குறிப்பெடுத்துக் கொள்ளும் வகையில் சொல்லத் துவங்கினார்.

இருப்பினும் அவரது இந்தச் சக்தி மாயத்தோற்றம் போலவும், முற்றிய புற்று நோயாளி மரணத் தறுவாயில் தெம்பு பெற்றது போலவும் இருந்தது. ஒரு சில நிமிடங்களுக்குப் பின், தாமாகவே எழுந்து குளியலறைக்குச் செல்ல முயன்ற போது, தலைச்சுற்றல் ஏற்பட்டு சுய நினைவிழந்து தரையில் வீழ்ந்தார்.

சுசீலா நய்யார் விரைந்தோடி அவரை மீண்டும் படுக்கைக்குக் கொண்டு வர உதவி செய்தார். என்ன நடந்தது என்பதை அவர் அறிவார். காந்தியின் மெலிந்த மாநிற உடலில் தேவைக்கு அதிகமாக நீர் சேர்ந்து விட்டது. ஏனெனில் அவரது சிறுநீரகங்கள் பழுது பட்டு விட்டதால் உட்கொள்ளும் அளவுக்கு தண்ணீரை வெளியேற்ற இயலவில்லை. அதனால் ஏற்பட்ட சிக்கல் இப்போது இதயத்தை பாதித்துள்ளது. ஒரு சில நிமிடங்களுக்கு முன் உடல் எடையைப் பரிசோதனை செய்த போது அவர் இதனை அறிந்திருந்தார். 48 மணி நேரமாக எடைக்கருவியின் முள் ஒரே நிலையிலேயே இருந்தது - 107 பவுண்டுகள். அந்த இளம் பெண் க்ண்டறிந்த நோய் அறிகுறிகளை, ரத்த அழுத்தம் மற்றும் நாடித்துடிப்பு பரிசோதனைகளும் உறுதி செய்தன. பிர்லா மாளிகைக்கு விரைந்து வந்த இதய நோய் நிபுணரின் கார்டியோகிராம் கருவியும், 78 வயதான காந்தியின் முக்கிய உறுப்பு சேதமடைந்திருப்பதற்கு சாட்சியாக இருந்தது. காந்தியின் உண்ணாவிரதம் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தியிருப்பதால் திடீரென முடிந்து விடுவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தன. உண்ணாவிரதம் மேலும் நீடித்தால், அது வெற்றிகரமாக முடிந்தாலும் கூட, காந்தியின் முக்கியமான உறுப்புகள் நிரந்தரமாகவும் பழுது நீக்க முடியாத அளவுக்கும் சேதமடைந்து விடும் அபாயம் உள்ளது.

சுசீலாவின் இதயம் வலித்தது. அவர் பென்சிலை எடுத்து காந்தியின் உடல் நலம் குறித்து தினமும் இரண்டு முறை எழுதும் அறிக்கையில் முதலாவது அறிக்கையை எழுதினார். அது துயரம் நிறைந்த அபாய அறிவிப்பாக இருந்தது. உடனடியாக அவரது துயரங்களை முடிவுக்குக் கொண்டு வராவிட்டால், உடலுறுப்புகளின் செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல், இந்தியாவின் அன்புக்குரிய மகாத்மாவை வாழ்நாளின் எஞ்சிய நாட்களில் பயனற்றவராக்கி விடும் என்று அவர் எழுதினார்.

லட்சக்கணக்கான இந்திய மக்கள் தங்களின் மகாத்மாவுடன் வைத்திருந்த அசாதாரணமான பிணைப்பு பிர்லா மாளிகையிலிருந்து மீண்டும் வெளிப்படத் தொடங்கியது. சுசீலா நய்யாரின் எச்சரிக்கை அறிக்கை இல்லாமலேயே அந்த வெள்ளிக்கிழமை காலையில் காந்தியின் உயிருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது என்பதை இந்தியா உணர்ந்தது. முன்பு அவரது உண்ணாவிரதங்களின் போது நடந்தது போலவே மக்களின் மனநிலை மிக வேகமாக மாறியது. பிர்லா மாளிகையில் ஒரு மனிதருக்கும் அவரது மனசாட்சிக்கும் இடையேயான போராட்டத்தின் மீது உலகத்தில் இரண்டாவது பெரிய மக்கள் தொகையைக் கொண்ட இந்தியா தொங்கிக் கொண்டிருந்தது.

அகில இந்திய வானொலி நிலையம் காந்தியின் உடல்நிலை பற்றிய செய்தி அறிக்கையை மணிக்கொரு தடவை அல்புக்கர்க் சாலையிலிருந்து நேரடியாக ஒலிபரப்பத் துவங்கியது. அவரது மரணத்தை எதிர்பார்த்து டஜன் கணக்கான இந்திய மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் பிர்லா மாளிகை வாசலில்

குவிந்தனர் 'சகோதரத்துவம்,' 'இந்து முஸ்லீம் ஒற்றுமை' 'காந்தியைக் காப்பாற்றுங்கள்', என்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளுடனும், எழுப்பிய குரல்களுடனும் அனைத்துப் பெருநகரங்களிலும் சிறு நகரங்களிலும் உள்ள மைதானங்களில் திடீரென மக்கள் கூட்டம் மொய்த்தது. 'காந்தியின் உயிரைக் காப்பாற்றுங்கள்' என்ற பெயருடன் இந்தியா முழுவதும் குழுக்கள் உருவாயின. அனைத்து அரசியல் கருத்துக்களையும், மதச்சமூகங்களையும் முழுமையாகப் பிரதிபலிக்கும் வகையில் இவற்றின் உறுப்பினர்கள் கவனத்துடன் தெரிவு செய்யப்பட்டனர். இந்தியா முழுவதும் உள்ள தபால்துறை ஊழியர்கள் அந்த தினத்தில் லட்சக்கணக்கான கடிதங்களின் மேல், 'வகுப்பு நல்லிணக்கம் காப்போம் காந்தியின் உயிரைக் காப்பாற்றுங்கள்' என்று எழுதப்பட்ட முத்திரைகளைப் பதித்தனர். பொதுப் பிரார்த்தனைக் கூட்டங்களில் ஆயிரக் கணக்கானவர்கள் கூடி அவர் உரை நிகழ்த்த வேண்டினார்கள் அந்த வெள்ளிக்கிழமையன்று இந்தியாவில் காந்திக்காகத் தொழாத ஒரு மசூதி கூட இல்லை. பம்பாயைச் சேர்ந்த தீண்டத்தகாதோர், நெஞ்சை நெகிழவைக்கும் தந்தியை காந்திக்கு அனுப்பினார்கள். 'உங்கள் உயிர் எங்களுக்குச் சொந்த மானது.'

எல்லாவற்றையும் மிஞ்சியதாக டில்லி இருந்தது. இதுவரை அக்கறை யற்றிருந்த டில்லியில் மாற்றங்கள் மிகவும் வியப்பூட்டும் வகையில் இருந்தன. எல்லாக் குடியிருப்புகளிலிருந்தும், எல்லாக் கடைவீதிகளிலிருந்தும், எல்லா மகால்களிலிருந்தும், கோஷங்கள் எழுப்பியபடி மக்கள் கூட்டம் இப்போது முன்னேறிச் சென்றது. காந்தியின் துயரங்களில் பங்கேற்பது போல் கடைகளும் வியாபார நிறுவனங்களும் மூடப்பட்டன. இந்துக்களும், சீக்கியர்களும், முஸ்லீம்களும் அமைதிப்படைகளை அமைத்து, கைகளைக் கோர்த்து தலைநகரில் அணிவகுத்தனர். காந்தி உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று கோரும் துண்டுப்பிரசுரங்களை நடந்துசெல்லும் மக்களிடம் அளித்தனர். கையொலியெழுப்பிய படியும் ஆரவாரமாகக் கூச்சலிட்டபடியும் இளைஞர்கள் பயணம் செய்த ஏராளமான ட்ரக் வண்டிகள் தலைநகருக்குள் வந்து போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்தன. 'காந்தியின் உயிர் எங்க ளுடையதை விட மதிப்பு மிக்கது' என்று அந்த இளைஞர்கள் கோஷமிட்டனர். பள்ளிகளும் பல்கலைக் கழகங்களும் மூடப்பட்டன. மனதை மிகவும் நெகிழச் செய்யும் இன்னொரு சம்பவமும் நடந்தது. பஞ்சாப் படுகொலை சம்பவங்களால் விதவைகளான, ஆதரவற்றுப் போன 200 பெண்களும் குழந்தைகளும் பிர்லா மாளிகைக்கு வந்தனர். மிகக்குறைந்த அளவே தரப்படும் அகதிகளுக்கான ரேஷனையும் நிராகரித்து விட்டு காந்தியுடன் சேர்ந்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அவர்கள் அறிவித்தனர்.

இது உணர்ச்சிப் பெருக்கின் உச்சக்கட்டமாக இருந்தது. ஆனால் பிர்லா மாளிகையில் கட்டிலில் படுத்திருந்த அந்த மனிதரிடம் இது ஒரு அசைவையும் ஏற்படுத்தவில்லை. காந்தியின் உண்ணாவிரதம் அவரது நாட்டு மக்களிடம் எழுச்சியை உருவாக்க, எவரும் எதிர்பார்க்காத அளவுக்குக் கால அவகாசம் தேவைப்பட்டுள்ளது. ஆனால் இப்போது அந்த எழுச்சி ஏற்பட்டுள்ளது. இதனை வீணாக்கிவிடக் கூடாது என்றும், அவரது நாட்டு மக்களின் இதயங்களில் அவர் விரும்பும் ஆழமான அர்த்தமுள்ள மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நிர்ப்பந்தம் அளிக்கும் வகையில் எவ்வளவு முடியுமோ

அவ்வளவு தூரம் மரணத்தின் எல்லைக்குச் சென்று விடுவதென்றும் அவர் தீர்மானித்தார்.

'எனக்கு எந்தவித அவசரமும் இல்லை' பிரார்த்தனைக் கூட்டத்தில் கூடியிருந்த கவலை மிகுந்த மக்களிடம் அவர் கூறினார். ஒலி பெருக்கிகள் மூலம் என்னதான் உயர்த்தப்பட்டாலும் முணு முணுப்பது போலவே அவரது குரல் இருந்தது. 'அரை குறையாகப் பணிகள் செய்வதை நான் விரும்பவில்லை.' ஒவ்வொரு வார்த்தைக்கும் இடை இடையே மூச்சு முட்ட அவர் பேசினார். 'நம்மைச் சுற்றிலும், இந்தியா முழுவதும், பாகிஸ்தான் முழுவதும் அமைதி ஏற்படாவிட்டால் வாழ்வதில் எனக்கு எந்த விருப்பமும் இருக்காது. இந்தத் தியாகத்தின் பொருள் அது தான்.'

டில்லியின் சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உறுதி செய்வதற்காக தலைவர்கள் குழு ஒன்றை அழைத்துக் கொண்டு அவரது படுக்கையருகே நேரு வந்தார். பெரும்பாலும் உற்சாக நிலையில் அவர்களிடம் காந்தி சொன்னார். 'கவலைப்படாதீர்கள். நான் அவசரப்பட்டு எதையும் செய்ய மாட்டேன். நீங்கள் எது செய்தாலும் அது உண்மையுடைய தாக இருக்க வேண்டும். முழுமையான பணியையே நான் விரும்புகிறேன்.'

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது கராச்சியிலிருந்து ஒரு தந்தி வந்தது. டில்லியிலிருந்த வீடுகளிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லீம்கள் இப்போது திரும்பி வந்து மீண்டும் குடியேற முடியுமா என்று அதில் கேட்கப்பட்டிருந்தது.

தந்தி வாசகம் அவருக்குப் படித்துக் காட்டப்பட்டவுடன் 'இது ஒரு சோதனை' என்று காந்தி முணு முணுத்தார்.

இந்தத் தந்தியை எடுத்துக் கொண்டு காந்தியின் நம்பிக்கைக்குரிய செயலாளர் பியாரேலால் நய்யார் தலைநகரில் உள்ள அகதி முகாம்களுக்கு விரைந்தார். கோபத்துடன் இருந்த இந்துக்கள் மற்றும் சீக்கியர்களைச் சந்தித்து காந்தியின் உயிர் அவர்கள் கையில்தான் உள்ளது என்பதை விளக்கினார். அவர்களில் சுமார் 1000 பேர் அன்றிரவு ஒரு உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். குளிர் காலத்தின் நடுங்கும் குளிரில் கூடாரத்திலோ அல்லது வீதிகளிலோ தாங்களும் தங்களின் குடும்பங்களும் கஷ்டப்பட வேண்டியிருந்தாலும், திரும்பி வரும் முஸ்லீம்களை வரவேற்று அவர்களின் வீடுகளை மீண்டும் ஒப்படைக்க அவர்கள் வாக்குறுதி தந்தனர். உண்மையான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று காந்தியை நம்பச் செய்வதற்கு அவர்களின் தலைவர்கள் குழு ஒன்று பிர்லா மாளிகைக்கு வந்தது.

'உங்களின் உண்ணாவிரதம் உலகம் முழுவதும் உள்ளவர்களின் இதயங்களைத் தொட்டுள்ளது' படுக்கையில் கிடந்த தோல் சுருங்கிய அந்த சிறிய உருவத்திடம் அவர்கள் கூறினார்கள். 'இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் இந்தியா தாயகமாக இருப்பது போலவே முஸ்லீம்களுக்கும் இருக்க நாங்கள் பாடுபடுவோம். இந்தியாவைத் துயரத்திலிருந்து பாதுகாக்க உங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டுகிறோம்.'

★

வேதனை நிறைந்த விழிகளுடன் சுசீலா நய்யார் அந்த முள்ளின் ஏற்ற இறக்கங்களை கவனித்துக் கொண்டிருந்தார். ஆனால் அது முரண்பட்டதாகவே இருந்தது. மகாத்மா காந்தி உண்ணாவிரதத்தின் ஐந்தாவது நாளான அன்று பலவீனமடைந்த அவரது நோயாளியின் எடை குறைந்திருப்பதை அந்தக் கருவி காட்ட வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் அப்படி நடக்கவில்லை. ஏற்கெனவே காட்டிய எண்ணிக்கையிலிருந்து சற்றுக் கூட நகராமல் மூன்று நாட்களாகக் காட்டிய அதே இடத்தில் அந்த அடையாள முள் நின்றது - 107 பவுண்டு. தினமும் அருந்தும் 70 அவுன்ஸ் தண்ணீரை காந்தியின் சிறு நீரகங்கள் வெளியேற்ற மறுத்து விட்டன. ஐந்து நாட்களாக உணவின்றி இருந்ததாலும், தண்ணீரை சிறுநீரகங்கள் வெளியேற்ற இயலாததாலும் அவரது உடலின் எடை அதிகரித்தது; இதயத்திலும் பாதிப்பு ஏற்பட்டது.

அவரும் அவருடன் சேர்ந்து மற்ற மூன்று மருத்துவர்களும் அன்று காலை நடத்திய மற்ற பரிசோதனைகளின் முடிவுகளும் அச்சம் தருபவையாகவே யிருந்தன. அவரது சிறுநீரில் அசிட்டிக் அமிலம் மித மிஞ்சியிருப்பது மிகப் பெரும் பிரச்சனையாகும். காந்தியின் மூச்சுக்காற்றில் கூட அமில வாடை வீசியது. அவரது ரத்த அழுத்த அளவு 184 ஆக இருந்தது. அவரது நாடித்துடிப்பு படபடப்பாகவும் நலிந்தும் இருந்தது. 78 வயதான அவரின் இதயத் துடிப்பு சீராக இல்லை.

உண்மையில் காந்தியின் நிலைமையைத் தீர்மானிக்க அந்த நான்கு டாக்டர்களுக்கும் கருவிகள் தேவைப்படவில்லை. அவரின் நிலை மோசமாக இருக்கிறது என்பதைச் சொல்வதற்குக் கண்களே போதும். அவர்கள் விரைந்து ஒரு பொதுவான முடிவுக்கு வந்தனர். உண்ணாவிரத காலத்தில் 7 மணி நேரத்துக்கு மேல் காந்தியால் உயிர்வாழ இயலாது. அனைத்து நிலைமைகளும் மிக மோசம். இப்போதுள்ள நிலைமையில் அவர் 24 மணி நேரத்துக் குள்ளாகவே மரணமடையலாம். சனிக்கிழமையன்று அவர்களின் முதல் செய்தி அறிக்கை கருக்கமாகவும் வெளிப்படையாகவும் இருந்தது.

அவர்கள் எழுதினர்: 'தாமதமின்றி உண்ணாவிரதத்தை முடிப்பதற்குத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்களிடம் சொல்ல வேண்டியது எங்கள் கடமை.'

## பூனா, 17 ஜனவரி 1948

சீற்றத்துடன் கக்கிய நீராவிப் புகையால் மேகத்தை உருவாக்கியபடி பம்பாய் எக்ஸ்பிரஸ் பூனா ரயில் நிலையத்தில் வந்து நின்றது. அங்கேயிருந்த பருத்துக் குள்ளமான அந்தப் பெண்ணுக்கு உணர்ச்சி வயப்பட்ட படபடப்பினால் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. 'நான் மட்டும் தான் இருக்கிறேன்' அவள் எண்ணினாள். அந்த ரயிலின் மூன்றாம் வகுப்புப் பெட்டியை நோக்கி அவளது கணவன் கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு சென்றான். அந்தக் கூட்டத்தினரின் முகங்களை அவரது கண்கள் நோட்டமிட்டன. 'எனது கணவர் ஏன் டில்லிக்குச் செல்கிறார் என்பதை அறிந்தவளாக நான் மட்டும் தான் இருக்கிறேன்.'

மகாத்மா காந்தியைக் கொல்வதற்காக அன்று காலை கோபால் கோட்சே டில்லிக்குச் சென்று கொண்டிருந்தான். அவனது சகோதரர் நாதுராமுக்கு

*கொடுத்த வார்த்தையைக் காப்பாற்றியிருந்தான். அவனது படுக்கைக்குள் .32 காலிபர் கைத்துப்பாக்கி இருந்தது. பூனா ராணுவ அங்காடியில் பணியாற்றிய ஒருவரிடம் 200 ரூபாய்க்கு அதனை அவன் வாங்கினான். அவனது வீட்டின் அருகே இருந்த காட்டுக்குள் சென்று அதனை அவன் சோதித்திருந்தான். தீவிரவாதக் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் அவனது மனைவிக்கு மட்டுமே இந்தக் கைத்துப்பாக்கி எதற்குப் பயன்படுத்தப்படப் போகிறது என்பதை அவன் சொல்லியிருந்தான். அவனது மனைவியும் அதற்காக வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தாள்.*

*தங்களின் 4 மாதப் பெண் குழந்தை அசிலதாவை - 'கத்தி முனை' - அவன் கடைசியாய்த் தழுவிக் கொள்வதற்காகக் கையை மேலே உயர்த்தினான். 'நாங்கள் இளமையின் மலர்ச்சியில் இருந்தோம்' 25 ஆண்டுகளுக்குப் பின் கூட்டம் நிறைந்த ரயில் நிலையத்தில் நடந்ததை அந்தப் பெண் நினைவு கூர்ந்தாள். 'காதலும் புரட்சியும்தான் எங்களின் கனவுகளாக இருந்தன.'*

*கோபால் அந்தப் பெட்டியின் கதவருகே வந்த போது அவனைத் தன் பக்கம் இழுத்த அந்தப் பெண், 'என்ன நடந்தாலும் கவலைப்படாதீர்கள். என்னையும் குழந்தையையும் கவனித்துக் கொள்ள நான் ஏதாவது ஒரு வழி தேடிக் கொள்வேன்' என்று மெதுவாகக் கூறினாள். பயணத்தின் போது சாப்பிடுவதற் காகத் தயாரித்த சப்பாத்திப் பொட்டலத்தை அவனது கைகளில் திணித்தாள். பிறகு பின் பக்கமாக நகர்ந்து அவன் தனது இருக்கையில் அமர்ந்து விட்டதை கவனித்தாள். ரயில் வண்டி இணைப்புகள் உராய்ந்து எழுப்பும் கரகர ஓசையுடனும், வழியனுப்பும் குரல்களுடனும் ரயில் வண்டி நிலையத்திலிருந்து நகர்ந்து முன்னோக்கிச் சென்றது. பெண் குழந்தையின் தளிர்க்கைகளை அசைத்தபடி அவள் பிளாட்பாரத்தில் குத்திட்டப் பார்வையுடன் நின்று வழியனுப்பி வைத்தாள். அவனது பெருமைக்குரிய உருவம் மறையும் வரை கவனித்தாள். போர்க்குணமுள்ள இதயத்திலிருந்து 'வெற்றிக்கான வாழ்த்துக் களை' அவள் மவுனமாகத் தெரிவித்தாள்.*

*மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த போதும் அந்த சனிக்கிழமை காலையில் காந்தியின் மனம் மிகத்தெளிவாக இருந்தது. அவர் உண்ணாவிரதத்தின் மூன்றாவது மற்றும் இறுதிக் கட்டத்துக்குள் நுழைந்தார். முதல் 48 மணி நேரத்தில் கடுமையான குடல் பிசைவாலும் பசியாலும் வலியேற்பட்டது. பிறகு பசி இல்லாமல் போனது. இதைத் தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு குமட்டலும் மயக்கமும் இருந்தது. இவற்றின் நடவடிக்கை களுக்குப் பதிலாக அவரிடம் சாந்தமே பரவியது. அவரது மூட்டுகளில் தொடர்ந்து ஏற்பட்ட வலியைத் தவிர வேறெந்த நோவும் அவருக்கு இல்லை. மூட்டுவலியைப் போக்க மனுவும் மற்றொரு உதவியாளரும் நெய்யால் மசாஜ் செய்தனர். அவரிடம் உயிர் எத்தனை மணி நேரம் தங்கியிருக்கும் என்று சுசீலாவும் மற்ற மூன்று டாக்டர்களும் விவாதித்துக் கொண்டிருந்தபோது அவர் பழைய உறைகளின் பின்பக்கத்தில் ஒரு சில வங்க மொழி வார்த்தைகளை அமைதியுடன் எழுதிக் கொண்டிருந்தார்.*

*எழுதி முடித்தவுடன் அவரது செயலாளர் பியாரேலால் நய்யாரை சைகையால் அழைத்தார். காலம் அறியும் உணர்வை அவர் எப்போதும்*

இழந்திருக்கவில்லை... அவரின் ஆதரவாளர்கள் உறுதியளித்தபடி இந்த உண்ணாவிரதத்தின் நோக்கம் நிறைவேறக் கூடிய நிலையில் இருந்தால் அதனை உறுதி செய்து கொள்ளும் காலம் வந்திருக்கிறது என்று அவர் கருதினார். அது நிரந்தரமானதாக இருக்க வேண்டும். அவரது உயிரைக் காப்பாற்றுவதற்கான கருணையின் விளைவாக இருக்கலாகாது. அவர் உண்ணாவிரதத்தை முடிக்க வேண்டுமென்றால் அவர் நிறைவேற்றப்பட வேண்டும் என்று விரும்புகிற ஏழு அம்ச நிபந்தனைகள் பட்டியலை பியாரேலாலிடம் தெரிவித்தார். அவரது எதிரிகளான இந்து மகா சபாவினர் உட்பட டில்லியில் உள்ள அனைத்து அரசியல் அமைப்புகளின் தலைவர்களும் அதில் கையெழுத்திட வேண்டும். அதன் பிறகே தனது நிபந்தனைகள் முழுவதும் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலிப்பேன் என்றார் அவர். அந்த நிபந்தனைகள் கொள்கை யளவில் ஆட்சேபமற்றவை. அது மட்டுமின்றி கிட்டத்தட்ட நகர வாழ்க்கையின் அனைத்து அம்சங்களும் இதில் இடம் பெற்றிருந்தன. அகதிகளால் கைப்பற்றப் பட்டு வீடுகளாகவோ கோயில்களாகவோ மாற்றப்பட்டுள்ள 117 மசூதிகளைத் திரும்பி வரும் முஸ்லீம்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதிலிருந்து, பழைய டில்லி கடைவீதியில் முஸ்லீம் கடைக்காரர்கள் புறக்கணிக்கப்படுவது முடிவுக்கு வர வேண்டும், முஸ்லீம்களின் பயணத்துக்குப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்பது வரை அதில் இருந்தன.

காந்தியின் உயிரைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள அமைதிக் குழுவிடம் காந்தியின் நிபந்தனைகளைத் தெரிவிக்க நய்யார் விரைந்தார். டில்லியின் மனநிலை பதற்றத்திலும் வியப்பிலும் மூழ்கியிருந்தது. சுதந்திர தினத்திலிருந்து இதுவரை இப்படி இருந்ததில்லை. கன்னாட் சர்க்கசிலிருந்து நகரின் மிகத் தொலைவிலிருந்த சந்து பொந்துகள் வரை பொதுமக்களின் உணர்ச்சி அலை பரவியிருந்தது. எல்லா இடங்களிலும் கோஷங்கள் எழுப்பும் மக்கள் கூட்டங்கள் அணிவகுத்தன. டில்லியின் வர்த்தக வாழ்க்கை முடங்கிப் போனது. அலுவலகங்கள், கடைகள், தொழிற்சாலைகள், கடைவீதிகள், உணவு விடுதிகள் என அனைத்தும் மூடப்பட்டன. அனைத்து சாதி மற்றும் சமூகங்களையும் சேர்ந்த சுமார் நூறாயிரம் (ஒரு லட்சம்) மக்கள் பழைய டில்லியின் ஜுமா மசூதி முன்னால் மாபெரும் பேரணியாகக் கூடினர். காந்தியின் கோரிக்கைகளை ஏற்கவேண்டுமென்று கோஷமிட்டனர். தலைநகரின் பதற்றமிக்கப் பகுதிகளில் ஒன்றான சப்ஸி மண்டியைச் சேர்ந்த பழ வியாபாரிகளான இந்துக்கள், தங்களின் முஸ்லீம் நண்பர்களுக்கு எதிரான புறக்கணிப்பை முடித்துக் கொண்ட தகவலை காந்தியிடம் தெரிவிக்க பிர்லா மாளிகைக்கு விரைந்தனர்.

மாளிகையின் உள்ளே விழிப்பு நிலைக்கும் மயக்க நிலைக்கும் இடையே காந்தி ஊசலாடிக் கொண்டிருந்தார். அவருக்கு அளிக்கும் தண்ணீரில் சில கரண்டி ஆரஞ்சு சாறினைக் கலக்கலாம் என்று சிலர் யோசனை கூறினார்கள். உஷாராக இருந்த அவர் கண்களைத் திறந்தார். இது ஒரு அவச்செயலாகும் என்றும் இதைச் செய்தால் மேலும் 21 நாட்களுக்கு உண்ணாவிரதம் இருக்க தாம் உறுதியேற்க வேண்டியிருக்கும் என்றும் கூறினார். அவரது சிறுநீரகங் களின் செயல்பாட்டை அதிகரிக்க உறிஞ்சும் கருவி ஒன்றைப் பொருத்திட சுசீலா நய்யார் கெஞ்சிக் கேட்டார். காந்தி மறுத்து விட்டார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அவர், 'பாபு, நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் இயற்கை சிகிச்சையின் ஒரு பகுதிதான் இது' என்றார்.

'இப்போது', அவர் பலவீனத்துடன் முணுமுணுத்தார், 'கடவுள் மட்டுமே எனது இயற்கை வைத்தியர்'

அவரின் அர்ப்பணிப்பு மிக்க சீடரான ஜவஹர்லால் நேரு பிரதமர் அலுவலகத்தைக் கைவிட்டு காந்தியின் படுக்கை அருகே அமர்ந்திருந்தார். பல ஆண்டு காலம் ஒன்றிணைந்து போராடிய அவரின் அன்புக்குரிய மகனாகத் திகழ்ந்த அந்தத் தலைவருக்கு அந்த முதியவரின் நலிவைக் காண்பது மிகுந்த கவலையை அளித்தது. இதனைத் தாங்கிக் கொள்ள முடியாத நேரு, முகத்தை ஒரு மூலையின் பக்கம் திருப்பிக் கொண்டு அழுதார்.

தங்கள் பங்கிற்கு லூயி மவுண்ட்பேட்டனும் அவரது துணைவியாரும் அங்கு வந்தனர். கடுமையான வேதனைக்கிடையிலும் காந்தியிடம் அழகிய ஒளி தென்பட்டதையும், அவரால் இன்னமும் கூட நகைச்சுவையுடன் பேச முடிந்ததையும் கண்டு முன்னாள் வைஸ்ராய் வியப்படைந்தார்.

அவரை வரவேற்ற காந்தி கூறினார்: 'ஆகா... மலையை மகமதுவிடம் வரவழைப்பதற்கு எனது உண்ணாவிரதம் உதவியிருக்கிறது.'

எட்வினா ஆழ்ந்த துயரம் அடைந்தார். அந்த அறையிலிருந்து வெளியேறும் போது அவர் அழுதே விட்டார். 'வருத்தப்படாதே' அவரது கணவர் கூறினார். அந்தக் காட்சி அவரை நெகிழச் செய்தது. 'அவர் எதைச் செய்ய விரும்புகிறாரோ அதைத்தான் செய்கிறார். அவர் மிகவும் தைரியமுள்ள சிறிய மனிதர்' என்று அவர் சொன்னார்.

தரிசனம் என்பது இந்தியர்களின் மனதில் வேரூன்றி இருப்பது போல் வேறெதுவும் இல்லை. வெறும் கால்களுடன் நூறு மைல்கள் நடந்து வந்து புனித கங்கைத் தாயைக் காணும் விவசாயி அந்த தரிசன அனுபவத்தை அடைகிறான். அந்தப் புனித நீரின் முதலாவது நீர்த்தாரைகள் அவனது உடல் மீது படும் போது மீண்டும் அந்த அனுபவத்தை அடைகிறான். இந்துயிசத்தின் மிகப்புனிதமான கோயில்களில், உடல் தகனத்தில், அரசியல் பேரணியில், மாபெரும் தலைவரைச் சூழ்ந்துள்ள கூட்டத்தில், அனைத்துக்கும் மேலாக ஒரு புனிதமான மனிதரைக் காண்பதில் அந்தத் தரிசன அனுபவத்தை அடைகிறான். தரிசனம் விவரிக்க இயலாத ஒரு உணர்வோட்டத்தை உருவாக்குகிறது. இது அளிப்பவரிட மிருந்து பெறுபவருக்குப் பாய்கிறது. வாழ்த்து, ஆசி போன்ற ஆன்மீகத் தாக்கத்தின் பயன்கள் இதன் மூலம் வெளிப்படுகின்றன.

பழமையான, வீறாப்பு மிக்க இந்தியர்களுக்குத் தேவையாய் இருந்த தரிசனம், ஜனவரி 17 சனிக்கிழமை மாலை நேரத்தில் 700 மைல் இடைவெளியில் பிரிக்கப்பட்டிருந்த இரண்டு மனிதர்களால் வெளிப்படுத்தப்பட்டது. உணர்வு அடிப்படையில் இவர்கள் பெரும்பாலும் இணைக்கப்படவே முடியாத வளைகுடாக்கள் என்றாலும் இவர்களின் பெயர்கள் விரைவில் வரலாற்று அலைகள் மூலம் இணைக்கப்படவுள்ளன.

பிர்லா மாளிகையின் புல்வெளியில் அன்று மாலை, காந்தியின் பிரார்த்தனைக் கூட்டத்துக்காகக் கூடியிருந்த விசுவாசமிக்க மக்களுக்கு அவரின் குரல் மிக

மெல்லிதாக மூச்சுக் காற்று போலத்தான் கேட்டது. மூன்று நிமிட நேரம் பேசும் சக்திதான் காந்திக்கு இருந்தது. அந்த நிமிடங்களிலும் கூட தொடர்ந்து பேசும் சக்தியைத் திரட்டுவதற்காக இடைஇடையே மவுனம் நிலவியது. 'எனது உயிரைப் பாதுகாப்பதோ முடிப்பதோ எவரின் அதிகாரத்துக்கும் உட்பட்டது அல்ல. அது கடவுளின் அதிகாரம் மட்டும்தான்' என்று அவர் சொன்னார்.

அவரது உண்ணாவிரதத்தை முடிப்பதற்கான காரணம் எதையும் காண வில்லை என்று அங்கே கூடியிருந்தவர்களிடம் அன்று அவர் கூறினார். அந்தக் கூட்டத்தில் வேதனை முணுமுணுப்பு பரவியது. பிரார்த்தனைக் கூட்டம் முடிந்ததும், மாலை நேர தரிசனத்துக்காக அனைவரும் வரிசையில் நின்றனர். அங்கிருந்த ஆண்களிடமும் பெண்களிடமும் நிறைந்திருந்த துயர உணர்ச்சி பயங்கரமாக இருந்தது. காந்தி மரணத்தை மிகவும் நெருங்கி விட்டார் என்ற செய்தி அதற்குள் அனைவரையும் நெகிழச் செய்து விட்டது. சூரியன் வேகமாக மறைந்து கொண்டிருக்கும் நேரத்தில் பிர்லா மாளிகையின் புல்வெளியில் மெதுவாக வருத்தத்துடன் நடந்து கொண்டிருந்த இந்தியர்களில் பலரும் இந்தியாவின் மகாத்மாவைக் காண்பது இதுவே கடைசி முறையாக இருக்குமோ என்று அஞ்சினர். மனதைத் தொடும் அவர்களின் தரிசனம் ஒரு மணி நேரத்துக்கு மேல் நீடித்தது. நீண்ட, அமைதியான வரிசையில் உரசியபடி செல்லும் பலரின் முகங்களில் கண்ணீர் வழிந்தது. அவர்களது கவனத்தின் மையமாக இருந்த, மெலிந்த, பிழைக்குமா என்ற ஐயம் உடைய சிறிய உருவம் வெள்ளைப் போர்வைக்குள் முடங்கிப் படுத்திருந்தது.

எல்லாம் இப்போது தயார். மதன்லாலும் கார்காரேயும் இப்போது டில்லியில் இருந்தனர். அவர்களிடம் கையெறி குண்டுகள், குறித்த காலத்தில் வெடிக்கும் குண்டுகள், பாட்கே அவர்களுக்காகக் கண்டறிந்த உள்ளூரில் தயாரித்த கைத்துப்பாக்கி ஆகியவை இருந்தன. இரண்டாவது கைத்துப்பாக்கியுடன் அவர்களோடு இணைந்து கொள்ள கோபால் கோட்சே பயணத்தில் இருக்கிறான். பாட்கே அன்று மாலை புறப்படுவான். இன்னும் சரியாக ஒரு மணி நேரத்தில் ஆப்தேயும் நாதுராம் கோட்சேயும் ஏர் இந்தியா டி.சி.3 விமானத்தில் புறப்படுவார்கள். இந்தப் பயணம் அவர்களை மாற்றம் ஏதுமின்றி பிர்லா மாளிகைக்குச் செல்லும் சாலையில் கொண்டு சேர்க்கும்.

கடந்த புதன்கிழமை மாலையில் அளிக்கப்பட்ட அதே மரியாதையுடன் சவார்க்கர் சதனில் அந்த இரண்டு மனிதர்களும் வரவேற்கப்பட்டனர். இப்போது அவர்கள் தங்கும் நேரம் மிகக்குறைவு. சவார்க்கர் அவர்களுடன் மாடிப்படிகளில் இறங்கி வந்து சதனின் இரும்புக் கதவுகள் வரை வந்தார். வீர சவார்க்கர் அவரது வெறி கொண்ட மனதுடன் எவ்வளவு முடியுமோ அவ்வளவு மூர்க்கத்துடன் வெறுத்த அந்த மனிதரைக் கொல்வதற்கு அவரின் பேரார்வமிக்க சீடர்கள் புறப்பட்டு விட்டனர். இருப்பினும் அந்த நேரத்தின் மாபெரும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் அவரின் தோற்றம் இருக்க வில்லை. அவரது இறுக்கமான பார்வையில், மடிந்த உதடுகளில் எவ்வித உணர்ச்சியும் இல்லை. கோட்சே மற்றும் ஆப்தேயின் தோள்களில் அவர் கைபோட்டார்.

'வெற்றி பெறுங்கள்' அவர் முணுமுணுத்தார்– 'திரும்பி வாருங்கள்'

புது டில்லியில் கட்டுக் கடங்காத மக்கள் வெள்ளம் பிர்லா மாளிகை நோக்கிப் பாய்ந்து சென்றது. காந்தி உண்ணாவிரதத்தை முடிக்க வேண்டும் என்று அதில் சென்றவர்கள் கூறினர். அவர்கள் அல்புக்கர்க் சாலையில் நுழைந்தனர். 1,00,000 பேர் கொண்ட வலுவான கூட்டம் மூன்று மைல் தூரத்துக்கு இருந்தது. வண்ண வண்ணக் கொடிகள், பதாகைகளை அவர்கள் அசைத்தபடி வந்தனர். 'காந்தி வாழ்க!' என்று அவர்கள் எழுப்பிய கோஷம், ஐந்து நாட்களுக்கு முன் இதே சாலையில் 'காந்தி இறக்கட்டும்!' என்று எழுப்பப்பட்ட கோஷத்தை விட பத்தாயிரம் மடங்கு வலுவாக இருந்தது.

'டோங்கா ஓட்டுநர்கள் சங்கம்', 'ரயில்வே தொழிலாளர்கள் சங்கம்', 'தபால் மற்றும் தந்தி ஊழியர்கள்', 'பங்கி துப்புரவு தொழிலாளர் காலனியின் ஹரிஜன்கள்', 'டில்லி மகளிர் லீக்' என அனைத்துப் பகுதி மக்களின் அடையாளங்களையும் பெற்றிருந்த அவர்கள், மகாத்மா காந்தி படுத்திருந்த படுக்கையை நோக்கி விரைந்து செல்ல வேண்டியதன் அவசியத்தை உணர்ந்திருந்தனர். அலைகள் போல் தலைகள் அசைய, பூஞ்செடிகளையும் ரோஜாத் தோட்டங்களையும் மிதித்தழித்தபடி, பிர்லா மாளிகையின் கதவுகள் வழியாக அவர்கள் வெள்ளமெனப் புகுந்தார்கள். சகோதரத்துவத்தை வலியுறுத்தியும், காந்தியைக் காப்பாற்ற உயிரையும் கொடுக்கத் தயார் என்றும் அவர்கள் முழக்கமிட்டனர்.

அவர்களின் மனநிலையை உணர்ந்து, ஒருவேளை காந்தியின் முயற்சி உச்சக்கட்ட நிலையை அடைந்திருப்பதாக உணர்ந்து, அந்தப் பிரார்த்தனை மைதானத்தில் தமது ஆதரவாளர்களுக்கு மகாத்மா உரையாற்ற வைக்கப் பட்டிருந்த மைக்ரோ ஃபோன் நோக்கி நேரு நடந்தார்.

'இந்திய சுதந்திரத்தை ஒரு தொலை நோக்காக நான் பார்த்தேன். ஆசியாவின் எதிர்காலம் பற்றி என் இதயத்தில் ஒரு சித்திரம் இருந்தது. அதுதான் காந்தி. எளிமையான, ஆடம்பரமாக உடையணியாத, பேச்சில் அலங்கார வார்த்தைகள் இல்லாத', அந்த மனிதர்தான் அந்தத் தொலைநோக்குப் பார்வையை அளித்ததாக அவர் கூட்டத்தாரிடம் கூறினார்.

'நமது நாட்டு மண்ணில் ஏதோ சில மகத்துவமும் ஆற்றலும் உள்ளன. அவைதான் காந்தியைத் தோற்றுவித்தன.' அவர் உணர்ச்சிப் பொங்க கூறினார். 'அவரைக் காப்பாற்றுவதற்கு செய்யும் எந்தத் தியாகமும் பெரிதல்ல. ஏனெனில் அவரால் மட்டுமே உண்மையான இலக்கை நோக்கி நம்மை வழி நடத்த முடியும். நமது தவறான நம்பிக்கைகளால் அல்ல'

பிர்லா மாளிகையின்முன் முண்டியடித்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்திலிருந்த அகதி ஒருவர், திடீரென்று அவரது பேச்சுக்குக் கோபத்துடன் எதிர்ப்பைத் தெரிவித்தார். அந்த எதிர்ப்பு வந்தது மதன்லால் பாவாவின் வாயிலிருந்துதான். தாங்கள் கொல்வதற்காக டில்லிக்கு வந்திருக்கும் அந்த மனிதரிடம் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு மக்கள் கூட்டம் கோருவதை, வேடிக்கைப் பார்ப்பதற்காக ஏதோ ஒரு கோளாறான ஆர்வம் தூண்ட, கார்காரேயும் மதன்லாலும் கூட்டத்தைப் பின் தொடர்ந்து பிர்லா மாளிகைக்கு வந்து சேர்ந்தனர். நேருவின் பேச்சைக் கேட்டு உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாத அந்த 20 வயது மதன்லால், தனது எதிர்ப்புக் குரலை எழுப்பி முட்டாள்தனமான காரியத்தைச் செய்து விட்டான்.



இந்தியாவின் நெருக்கடி பற்றி தங்களின் கடுஞ்சினத்தை வெளிப்படுத்திய 1,00,000 பத்தானியர்களை பெஷாவரில் எதிர்கொண்ட மவுண்ட்பேட்டன் தம்பதியர் ரயில் பாதை ஓரத்தில் உள்ள மணல்மேட்டில் தட்டுத் தடுமாறி நடந்து வந்தனர். அந்தக் கூட்டத்தினரிடம் அவர்களால் பேச முடியவில்லை. ஆனால் மவுண்ட்பேட்டன் அணிந்திருந்த சீருடையின் நிறம் இஸ்லாமின் நிறமான கரும்பச்சை நிறம் என்பதால் ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர். அவர்களின் நம்பிக்கைக்கு மதிப்பளிக்கும் வகையில் அந்தச் சீருடையை அவர் அணிந்திருப்பதாகப் பழங்குடியினர் எண்ணினார்கள்.



பயங்கர விலை கொடுத்தே இந்தியாவின் சுதந்திரம் பெறப்பட்டது. முதலாவது வன்முறை அலை வீச்சில் அழிந்து போன ஒரு கிராமத்தின் இடிபாடுகளை மவுண்ட்பேட்டன் தம்பதிகள், பஞ்சாபின் கவர்னர் சர் இவான் ஜென்கின்ஸனுடன் சென்று பார்த்தார்கள்.



ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் ராணி மேரியும் பம்பாயில் வந்திறங்கியதை நினைவு கூரும் வகையில் கட்டப்பட்ட இந்திய நுழைவாயிலின் வழியாக 1948 பிப்ரவரியில், இந்திய மண்ணிலிருந்த பிரிட்டிஷ் ராணுவத்தினரின் கடைசி அணியினர் புறப்பட்டுச் சென்றார்கள்.



காந்தி தனது 'கைத்தடிகளாக' கருதிய தமக்கை பேத்திகளான ஆபா (இடது) மனு ஆகியோரின் தோள்களில் கைகளைப் போட்டபடி மாலை நேரப் பிரார்த்தனைக் கூட்டத்துக்காக பிர்லா மாளிகையிலிருந்து வருகிறார். இந்தப் புகைப்படம் எடுத்த இரண்டு நாட்களுக்குப் பின் 1948 ஜனவரி 30இல் காந்தி கொலை செய்யப்பட்டார்.



*கொலை முயற்சிக்கு முன் காந்தியைக் கொன்றவர்கள் எடுத்துக் கொண்ட படம். முன் வரிசையில் இடமிருந்து வலம்: நாராயண் ஆப்தே (வயது 34) பெண்பித்தர்; சதிக்கு மூளையாக இருந்தவர்: தூக்கிலிடப்பட்டார்; வீரசவார்க்கர் (வயது 65) ஓரினச் சேர்க்கை பழக்கமுள்ள இந்து மதவெறியர்; இவரின் தூண்டுதலால் தான் குற்றமிழைக்கப்பட்டது; விடுவிக்கப்பட்டார்; நாதுராம் கோட்சே (வயது 39) கொலையைச் செய்தவர்; பெண்களை வெறுப்பவர். ஒரு டஜனுக்கும் அதிகமான வேலைகள் பார்த்துத் தோல்வியுற்றவர்: தூக்கிலிடப்பட்டார். விஷ்ணு கார்காரே (வயது 34) முஸ்லீம் எதிர்ப்பாளர்; வெளித் தோற்றத்துக்கு பயணிகள் ஓட்டலின் உரிமையாளராக இருந்தவர்: ஆயுள் தண்டனை; திகம்பர் பாட்கே (வயது 37) ஆயுத வியாபாரி; சாமியார் வேடத்தில் இதைச் செய்தவர்; அரசு சாட்சியாக (அப்ரூவராக) மாறியவர்: விடுதலை செய்யப்பட்டார்.*

*பின் வரிசையில் (இடமிருந்து வலம்): சங்கர் கிஸ்தயா, பாட்கேயின் பணியாள்: விடுவிக்கப்பட்டார்; கோபால் கோட்சே (வயது 29) கொலைகாரனின் சகோதரர்: ஆயுள் தண்டனை; மதன்லால் பாவா (வயது 30) பஞ்சாபி அகதி, உடல் சிதைக்கப்பட்ட தனது தந்தைக்காகப் பழிவாங்க சபதம் செய்தவர்: ஆயுள் தண்டனை.*



கொலை செய்யப்பட்ட மகாத்மா காந்தி மேல் போர்த்தப்பட்டிருந்த துணியின் மீது வீழ்ந்து கிடக்கும் ரோஜா இதழ்கள். மரத்தாலான அவரது ராட்டையில் அவரே நூற்ற பருத்தி நூலிலிருந்து தயாரிக்கப்பட்ட துணிதான் அவர் மீது போர்த்தப்பட்டிருந்தது.



டில்லியின் எல்லைச் சுவர்களுக்கு அப்பால் மன்னர்களின் உடல்களை தகனம் செய்யும் ராஜ்கட்டில், ஓட்டாண்டிகளின் உடையணிந்த முடிசூடா மன்னரின் இறுதிச் சடங்குகளின் போது சிதைக்கு முன்னால், லட்சக்கணக்கான இந்தியர்கள், அரசியல் தலைவர்கள், காங்கிரஸ் காரர்கள் ஆகியோருடன் மவுண்ட்பேட்டன் தம்பதியரும் அவர்களின் மகள் பமீலாவும் சேர்ந்து இருந்தனர்.

அவனை இரண்டு காவலர்கள் பிடித்துச் செல்வதை கார்காரே ஏமாற்றத்துடன் கவனித்தான். அந்த மாளிகைக்குள் இருக்கும் வெறுக்கப்பட்ட மனிதர் உண்ணாவிரதத்தை நீடித்தால்தான் இப்போதைக்கு இறக்கக்கூடும். ஏனெனில் மதன்லாலின் முட்டாள் தனமான செய்கையால் அவரைக் கொல்லும் முயற்சியை அவன் சந்திக்கப் போவதில்லை என்று கார்காரே தனக்குள் சொல்லிக் கொண்டான்.

கார்காரேயின் அச்சத்துக்கு அடிப்படை ஏதுமில்லை. ஒரு சில நிமிடங் களுக்குப் பின், கூட்டம் கலையத் துவங்கியதும், மதன்லால் விடுவிக்கப் பட்டான். டில்லியில் அகதிகள் கோபம் கொள்வது வழக்கமானதுதான். அவனிடம் விசாரிக்க வேண்டும் என்பது பற்றியோ பெயரைக் குறிக்க வேண்டும் என்பது பற்றியோ காவல்துறையினர் கவலைப்படவில்லை.

அந்த பின் மாலை நேரத்தில் ஒரு மனிதர் பிர்லா மாளிகைக்குள் வேகமாகச் சென்றார். பியாரேலால் நய்யாரின் கைகளில் இருந்த ஒரு செய்தி, விரைவில் இறந்து விடுவார் என்று டாக்டர்களின் அச்சத்திலிருந்து காந்தியைக் காப்பாற்ற முடியும். அன்றிரவு காந்தியின் உயிர் ஒரு நூலிழையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. அவரது நாடித்துடிப்பு பலவீனமடைந்தது; சீராகவும் இல்லை. முன்னதாக மாலையிலேயே அவர் மயக்கமடைந்திருந்தார். தொடர்ந்து அவரால் சிறுநீர் கழிக்க இயலாதிருந்தது, அவரின் உடலியக்க முறை சீர்குலையப் போகிறது என்பதை எச்சரிக்கை செய்தது.

அந்த அறைக்குள் பியாரேலால் நுழைந்தபோது காந்தி உறக்கத்தில் இருந்தார். ஆனால் அங்கே மயான அமைதி நிலவியது. அவரது அன்புக்குரிய தலைவரிடம் பியாரேலால் முணுமுணுத்தார். அவர் அசையவில்லை. கடைசியாக அவரின் தோள்களை அசைத்தார். காந்தி அசைந்து கண்களைத் திறந்தார். பியாரேலால் அவரது பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துப் பிரித்து மகாத்மாவின் முகத்தெதிரே காட்டினார். சற்று முன் அமைதிக்குழு கையெழுத் திட்ட சாசனம்தான் அது. சமூகங்களுக்கிடையே அமைதி, நல்லிணக்கம், சகோதரத்துவம் ஆகியவற்றை மீண்டும் கொண்டு வருவதற்கு உறுதியேற்ற சாசனம் என்று அவர் விளக்கினார்.

காந்தி திருப்தியுடன் பெருமூச்சு விட்டார். நகரின் அனைத்துத் தலைவர்களும் கையெழுத்திட்டிருக்கிறார்களா என்று அவர் வினவினார். பியாரேலால் தயங்கினார். இருவர் இன்னும் கையெழுத்திடவில்லை என்று அவர் ஒப்புக் கொண்டார். அவரது மாறாத எதிரிகளான இந்து மகாசபா, ஆர்.எஸ்.எஸ். ஆகிய அமைப்புகளின் உள்ளூர் தலைவர்கள்தான் கையெழுத்திடாதவர்கள்.

அவர்கள் நாளை கையெழுத்திடுவார்கள் என்று பியாரேலால் சொன்னார். மற்றவர்கள் கையெழுத்திடுவதையும் கோரிக்கைகளை ஏற்பதையும் உறுதி செய்திருக்கிறார்கள். உண்ணாவிரதத்தை இப்போதே முடித்துக் கொள்ளு மாறும், வரும் இரவு வரை உயிர்வாழ்வதற்கேனும் ஏதாவது சாப்பிடுமாறும் பியாரேலால் மன்றாடினார்.

பொறுமையற்ற சிறிய சைகையுடன் காந்தி தலையசைத்து மறுத்தார் சிரமப்பட்டு அவரது செயலாளர் பக்கம் திரும்பினார்.

'வேண்டாம்', அவர் மெல்லிய குரலில் கூறினார். 'எதையும் அவசரப்பட்டு செய்ய வேண்டாம். கல்நெஞ்சு கரையும் வரை நான் உண்ணாவிரதத்தை நிறுத்தப் போவதில்லை'

காங்கிரஸ் கட்சித் தலைவர் டாக்டர் ராஜேந்திரபிரசாதின் அலுவலகத்தில் அலறிய தொலைபேசியின் மணியோசை அந்தக் கூட்டத்துக்கு இடையூறு செய்தது. அந்த அழைப்பு பிர்லா மாளிகையிலிருந்து வந்தது. காந்தியின் நிலைமை மிகவும் மோசமடைந்தது. அவரால் கேட்டுக் கொள்ளப்பட்ட கையெழுத்துக்களையும் உள்ளடக்கி, அனைத்துத் தலைவர்களும் கையெழுத் திட்டு, அவரது கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் உடனடியாக அவரது படுக்கைக்கு வந்து சேராவிட்டால், அது காலம் கடந்ததாகவே ஆகிவிடும். அப்போது ஜனவரி 18 ஞாயிறு காலை 11.00 மணி ஆகியிருந்தது. இன்னும் ஒரு மணி நேரத்தில் காந்தி ஆபத்தான கோமா நிலைக்குப் போய் விடுவார்.

கலக்கம் நிறைந்த முகத்துடன் இந்தச் செய்தியைத் தனது அலுவலகத்தில் கூடியிருக்கும் மனிதர்களிடம் பிரசாத் தெரிவித்தார். நேற்று காந்தியின் செயலாளர் அவரிடம் காட்டிய முக்கியமான ஆவணத்தில் கடைசி கையெழுத் துக்களைப் போடுவதற்கே அவர்கள் அங்கே கூடியிருந்தார்கள். சில முக்கியத் தலைவர்களைத் தன்னோடு அழைத்துக் கொண்டு, எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாகப் பின் தொடருங்கள் என்று மற்றவர்களிடம் கூறிவிட்டு பிரசாத், பிர்லா மாளிகைக்கு விரைந்தார். சுயநினைவின்றி காந்தி படுக்கையில் கிடந்தார். மரணப்படுக்கையில் கிடக்கும் நோயாளியைச் சுற்றி செவிலியர்கள் நிற்பது போல அவரது பயணக்குழுவின் உறுப்பினர்கள் தயக்கத்தோடு நின்றார்கள். நேற்று மாலை செய்தது போலவே பியாரேலால் அவரை எழுப்ப முயன்றார். பிறகு அவரது நெற்றியை மெல்ல வருடிக் கொடுத்தார். அவரிடமிருந்து பதில் இல்லை. யாரோ ஒருவர் ஈரத்துணியைக் கொண்டு வந்து தலையில் வைத்து அழுத்தினார். அதிலிருந்த ஈரம் அவரது உடலுக்குள் பரவியதால் காந்தி அசைந்தார்; கண்களைத் திறந்தார். அவரைச் சுற்றியிருந்த கூட்டத்தைப் பார்த்த அவரது முகத்தில் லேசான புன்னகை அரும்பியது. அவரால் மட்டுமே நிறைவேற்ற முடிந்த ஒரு அதிசயத்தை அவர் நிகழ்த்தி யிருந்தார். அவரது படுக்கையருகே நின்று கொண்டிருந்தவர்கள் நூற்றாண்டு காலமாக முரண்பட்டவர்கள்; ரத்த ஆறுகளால் பிரிக்கப்பட்டவர்கள். நீலத் தலைப்பாகைகள் அணிந்த போராளிகளான அகாலி பிரிவைச் சேர்ந்த சீக்கியர்களும்; அவர்களுக்கு அருகிலேயே துருக்கித் தொப்பிகளையும் நீண்ட அங்கிகளையும் அணிந்த முஸ்லீம்களும்; வேட்டிகளை உடுத்திய காங்கிரஸ் காரர்களும்; லண்டனில் தயாரிக்கப்பட்ட பகட்டான சூட்டுகளை அணிந்த பார்சிகள் மற்றும் கிருத்தவர்களும்; பங்கி துப்புரவுத் தொழிலாளர் காலனி யிலிருந்து வந்த இந்துக்களில் தீண்டத்தகாதோரும்; காவியுடையில் சாதுக்களும்; இந்து மகாசபாவின் தீவிரவாதத் தலைவர்களும்; அரிதாகவே காணப்படும் மதவெறி அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.ஸின் பிரதிநிதிகளும் அங்கே அமைதியுடன், பாகிஸ்தான் ஹைகமிஷனர் அருகில் நின்றிருந்தனர்.

கயிற்றுக் கட்டிலில் சுருண்டு படுத்திருந்த அந்த உருவத்தின் அருகே ராஜேந்திரபிரசாத் குனிந்தார். தேவைப்பட்ட அனைவரின் கையெழுத்தும் ஏழு

அம்ச கோரிக்கைப் பட்டியலில் பெறப்பட்டுவிட்டது என்று அவர் காந்தியிடம் சொன்னார். அவர் உண்ணாவிரதத்தை முடிக்க வேண்டும் என்று அவர்கள் முழுமனதுடன் விரும்புகிறார்கள். அவரைச் சுற்றிலுமிருந்தவர்கள் ஒருவர் பின் ஒருவராக, பிரசாதின் வார்த்தைகளைத் தங்களின் வார்த்தைகளாய் உறுதி செய்தனர். அவர்கள் அனைவரும் ஒப்புதல் தெரிவித்தபோது மகாத்மாவின் முகத்தில் அமைதி தவழ்ந்தது. தாம் பேச விரும்புவதாக அவர் சைகை செய்தார்.

மனு காதுகளை அவரின் உதடுகளுக்கு அருகே கொண்டுபோனார். அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் குறிப்பேட்டில் எழுதி பியாரேலாலிடம் கொடுத்தார். அவர் அதனைக் கூடியிருந்தவர்களுக்கு உரத்துப் படித்தார்.

அவர் கேட்ட அனைத்தையும் அவர்கள் அளித்து விட்டனர். ஆனால் மிகவும் நம்பிக்கை இழந்த நிலையில் அவர்கள் கேட்க விரும்பிய வார்த்தைகளை அவர் உச்சரிக்க இன்னமும் தயாராக இல்லை. டில்லியில் அவர்கள் பெற்ற வெற்றியை இந்தியா முழுவதும் பெற முயற்சி செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். டில்லியில் அமைதி ஏற்படுத்த உறுதியேற்று விட்டு மற்ற இடங்களில் வன்முறைகள் நடந்தால் அவர்களின் உறுதிமொழிக்கு மதிப்பிருக்காது. அவர் உண்ணாவிரதத்தை நிறுத்தியதும் தவறாகி விடும்.

மோசமான உடல்நிலையிலும், சகோதரத்துவத்தை வலியுறுத்தும் அந்தத் தந்திரசாலி, அவரைச் சுற்றியிருந்த மனிதர்களைத் தாம் கொண்டு வர விரும்பிய இடத்துக்குக் கொண்டு வந்து விட்டதாக அறிந்தார். இருப்பினும் தனது நோக்கத்தின் கடைசித் துளியையும் அவர்களிடமிருந்து பிழிந்து விட வேண்டும் என்று அவர் விரும்பினார். மூச்சுத் திணறிய அவர், மீண்டும் பேச்சைத் துவங்குவதற்கு முன், சக்தியைத் திரட்டிக் கொள்வதற்காக இரண்டு நிமிடம் ஓய்வெடுத்தார். உணர்ச்சி வசப்பட்டிருந்த பியாரேலால், காந்தியின் கட்டிலிலிருந்து மனு எழுதிக் கொடுத்த துண்டுச் சீட்டுகளைத் தொடர்ந்து படிக்க இயலாதவரானார். அந்தப் பணியை அவரது சகோதரி சுசீலாவிடம் ஒப்படைத்தார்.

'இந்தியா இந்துக்களுக்காக மட்டும் பாகிஸ்தான் முஸ்லீம்களுக்காக மட்டும் இருக்க வேண்டும் என்று நினைப்பதை விட முட்டாள்தனம் வேறொன்றும் இருக்க முடியாது. ஒட்டுமொத்த இந்தியாவையும் பாகிஸ்தானையும் சீரமைப்பது சிக்கலாக இருக்கும். ஆனால் சிலவற்றில் நாம் மனம் வைத்தால் அது நிச்சயம் நடக்கும்.

'இதையெல்லாம் கேட்டபிறகும் எனது உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் நான் அப்படியே செய்கிறேன். ஆனால், சிறந்ததொரு நிலைக்கு இந்தியா மாறவில்லையென்றால் நீங்கள் சொன்னதெல்லாம் கேலிக் கூத்தாகிவிடும். பிறகு இறப்பதைத் தவிர வேறெதுவும் எனக்கு மிஞ்சியிருக்காது.'

ஆறுதலின் அதிர்வு அந்த அறை முழுவதும் பரவியிருந்தது. அவருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் முழுமையான முக்கியத்துவத்தைத் தாங்கள் புரிந்து கொண்டிருப்பதை உறுதி செய்ய காந்தியின் படுக்கை அருகே ஒவ்வொருவராக வந்து நின்றார்கள். காந்தியைக் கொல்வதற்காக டில்லிக்கு வந்து சேர்ந்துள்ள ஆயுதந்தாங்கிய குழுவின் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.ஸின்

தலைவரும் மற்றவர்களுடன் சேர்ந்து உறுதியளித்தார். 'ஆம். உங்கள் கட்டளைகளை நிறைவேற்ற நாங்கள் முழுமனதுடன் உறுதியேற்கிறோம்' அவர் சபதம் செய்தார்.

நல்லெண்ணத்தின் உறுதிமொழிகளை அவர்கள் கடைசியாகக் கூறி முடித்த போது மனுவைத் தன்னருகே வருமாறு காந்தி சைகை செய்தார். 'நான் உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்கிறேன். கடவுளின் விருப்பம் நிறைவேறட்டும்.' மனு தனது குறிப்பேட்டில் எழுதினார். கூடியிருந்தோரிடம் அந்த வார்த்தைகளைப் படித்தபோது அவரது உதடுகளிலிருந்து தூய்மையான மகிழ்ச்சி புறப்பட்டு பெரும் குரலானது.

எல்லையற்ற ஆறுதலும் வெற்றிக் களிப்பும் அந்த அறையில் நிறைந்தது. மக்கள் ஆதரவு மிக்க வேட்பாளரின் தேர்தல் வெற்றிக்கான செய்தியை வரவேற்பது போல் அதனை உற்சாகக் கொண்டாட்டத்துடன் வரவேற்றனர். ஆரவாரம் அடங்கியபோது, தன்னுடன் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் காந்தி அழைத்தார். புத்தர்களின் மந்திரம் ஒலித்தது. கீதை, குரான், பைபிள் ஆகியவற்றிலிருந்து வாசகங்கள் படிக்கப்பட்டன. மாஸ்டா (Mazdah) எனும் பார்சிகளின் பிரார்த்தனை நடந்தது. கடைசியாக சீக்கியர்களின் மகா குருவான கோவிந்த் சிங்கின் பாடல்கள் இசைக்கப்பட்டன. அன்று அவரின் பிறந்த நாளாகும். காந்தியின் கண்கள் மூடியே இருந்தன. பிரார்த்தனைகளை கவனித்த போது வாடியிருந்த அவரின் சிறிய முகத்தில் மகிழ்ச்சியின் ஒளி பரவியது. ஒவ்வொரு பிரார்த்தனையின் போதும் அவரது உதடுகள் அசைந்தன.

காந்தி உண்ணாவிரதத்தை முடிக்கப் போகிறார் என்ற செய்தியைக் கேட்டதும் செய்தியாளர்களும் புகைப்படக்காரர்களும் அந்த அறைக்குள் மொய்த்திருந்தனர். அந்தக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஆபா உள்ளே நுழைந்தார். ஒரு கண்ணாடித் தம்ளரில் குளுகோஸ் கலந்த ஆரஞ்சு சாறினை அவர் காந்தியின் படுக்கை அருகே கொண்டு வந்தார். முன்னாள் காங்கிரஸ் தலைவரும் முஸ்லீமுமான மவுலானா ஆசாத், ஜவஹர்லால் நேரு ஆகிய இருவரும் உணர்ச்சியால் உடல் நடுங்க தங்களின் கைகளில் அந்தக் கண்ணாடி தம்ளரை எடுத்து காந்தியின் உதடுகளுக்கு அருகே கொண்டு சென்றனர். காந்தி முதலாவது மிடறைக் குடித்தபோது கண்ணைப் பறிக்கும் வெளிச்சத்துடன் ஃப்ளாஷ் பல்புகளின் மின்னல் ஒளி அறை முழுவதும் வெண்மை பாய்ச்சி நிறைந்தது. அப்போது மணி 12.45 . 121 மணி 30 நிமிட நேரத்துக்கு இளம் சூடான சோடா உப்புக் கலந்த வெந்நீர் மட்டும் அருந்தி உயிர் வாழ்ந்த 78 வயதான மோகன்தாஸ் காந்தி, இப்போது முதலாவதாக சத்துணவை ஏற்றுக் கொண்டார்.

காந்தி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார் என்று உறுதி செய்யப்பட்ட செய்தி அந்த மாளிகையிலிருந்து வந்த பின் அங்கே தோட்டத்தில் கூடியிருந்த மக்களிடமும், வெளியே சாலைகளில் சந்துகளில் திரண்டிருந்த மக்களிடமும் மகிழ்ச்சி ஆரவாரம் பொங்கி எழுந்தது. உள்ளே காந்தியின் பயணக்குழுவில் இருந்த பெண்கள் ஆரஞ்சு சுளைகளைத் தட்டுகளில் ஏந்தி அவரது படுக்கை அருகே சென்றனர். அதுதான் பிரசாதம் - கடவுளின் பரிசு. அந்தப் பரிசுக்கு மகாத்மா தனது பலவீனமான கைகளை அசைத்து ஆசி வழங்கினார். தங்களின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிய அந்தப் பெண்கள் கூட்டத்துக்குள் புகுந்து மலைபோல் குவிக்கப்பட்ட ஆரஞ்சு சுளைகளை

விநியோகித்தார்கள். மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடுகளுடன் பிளவு பட்டுக் கிடந்த மனிதர்கள் அங்கே பெருமளவிலும் அதிசயிக்கத்தக்க வகையிலும் ஒன்றுசேர்ந்திருந்தார்கள்.

அந்தப் பணி முடிந்த நேரத்தில், உணர்ச்சி வசப்பட்டதாலும், கூடியிருந்தவர்களிடையே பேசுவதற்கு சக்தியை செலவிட்டதாலும் காந்தி களைத்து விட்டதால் அங்கே இருந்தவர்களையெல்லாம் டாக்டர்கள் அப்புறப்படுத்தினர். ஒருவர் மட்டும் அங்கே இருந்தார். அவரது முகம் மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தது. ஜவஹர்லால் நேரு தனது பழைய குருவின் படுக்கையில் கால்களை மடக்கி அமர்ந்தார். மற்றவர்கள் வெளியே சென்றபின், மகாத்மாவின் காதருகே நெருங்கிச் சென்று குனிந்து ஒரு ரகசியத்தை அவர் கூறினார். அவரது மகள் உட்பட வேறு யாரிடமும் அந்த ரகசியத்தை அவர் சொல்லவில்லை. அவரது ஆன்மீகத் தந்தையோடு அனுதாபத்தைப் பகிர்ந்து கொள்ளும் அடையாளமாக முந்தைய நாளிலிருந்து அவரும் உண்ணாவிரதத்தைத் துவக்கியிருந்தார்.

குளுகோஸ் மூலம் உடலும் வெற்றியின் மூலம் ஆன்மாவும் மீண்டும் வலுப் பெற்றன. 36 மணி நேரத்துக்கு முன் முணுமுணுப்புக் குரலில் பேசிய காந்தி மீண்டும் பழைய சக்தியைப் பெற்றிருந்தார். அன்று மாலை புல்வெளிப் பரப்பில் கூடியிருந்த அவரின் விசுவாசமிக்க ஆதரவாளர்களிடம் உரையாற்றினார்.

'நீங்கள் என் மீது காட்டிய அக்கறையை என் வாழ்நாள் முழுவதும் நான் மறக்க மாட்டேன்' என்று அவர் கூறினார். 'டில்லியையும் மற்ற இடங்களையும் வேறுபடுத்திப் பார்க்கக் கூடாது' என்றும் அவர்களிடம் வேண்டினார். இந்தியா முழுவதிலும், அதேபோல் பாகிஸ்தானிலும் அமைதி திரும்பட்டும். 'அனைத்து உயிர்களும் ஒன்றுதான் என்பதை நாம் நினைவில் கொண்டால், நாம் ஏன் ஒருவரை ஒருவர் எதிரிகளாகக் கருத வேண்டும். அதற்குக் காரணமே இல்லை. ஒவ்வொரு இந்துவும் குரான் படிக்க வேண்டும். கீதை மற்றும் சீக்கியர்களின் கிரந்த் சாகிப் பொருளை முஸ்லீம்கள் அறிய வேண்டும்.

'நமது மதத்துக்கு நாம் மதிப்பளிப்பது போல மற்றவர்களின் மதத்துக்கும் நாம் மதிப்பளிக்க வேண்டும். நீதி நேர்மை என்பது எப்போதும் நீதி நேர்மைதான். சமஸ்கிருதம், உருது, பாரசீகம் அல்லது வேறெந்த மொழியில் எழுதப்பட்டாலும் பொருள் அதுதான்.

'நமக்கும் ஒட்டுமொத்த உலகத்துக்கும் கடவுள் நல்லறிவை வழங்கட்டும். இறைவன் நம்மை விவேகம் உள்ளவர்களாக்கித் தமக்கு நெருக்கமாக வைத்துக் கொள்ளட்டும். இதன் மூலம் இந்தியாவும் உலகம் முழுவதும் மகிழ்ச்சி யோடிருக்கும்' என்று அவர் உரையை முடித்தார்.

அன்று மாலை அவரின் தரிசனம் எப்போதும் இல்லாத அளவுக்கு நெஞ்சைத் தொடுவதாக இருந்தது. புதிதாகப் பிறந்த குழந்தையைப் போல் வெதுவெதுப்பான கம்பளியால் போர்த்தி ஒரு நாற்காலியில் அமர வைத்து அந்த மெலிந்த உருவத்தை மக்கள் கூட்டம் முழுவதும் காணும் வகையில் மேல் தளத்திற்குத் தூக்கிச் சென்றார்கள். பிறகு அவரை ஆதரவாளர்கள் தங்களின் தோள்களில் தூக்கினார்கள். எதிரியை ஒரே குத்தில் வீழ்த்தி உலகின் ஹெவி வெயிட் சாம்பியனான குத்துச் சண்டை வீரரைப் போல் அந்தச் சிறிய மனிதர்

உற்சாகம் கரைபுரண்ட ஆதரவாளர்களை நோக்கி மகிழ்ச்சியுடன் கையசைத்தார். பரவசமடைந்த அவரின் மனுவுக்கு பகவான் ராமச்சந்திரன் பற்றிய மிகப் பழமையான இந்து மதப் புராணக்கதை தான் நினைவுக்கு வந்தது. பதினான்கு ஆண்டுகள் வனவாசம் முடித்து தனது நாட்டு மக்களிடம் திரும்பி வந்த போது அவர் கேட்டது இதைத்தான்: 'பிரபு! நாங்கள் கேட்பது ஒரே வரு வரம் தான் உங்களுக்கு சேவை செய்ய வேண்டும்.'

மூன்று மணி நேரத்துக்குப் பிறகு, அவர் உண்ணாவிரதம் முடித்ததை டில்லி மகிழ்ச்சியுடன் கொண்டாடிய போது, காந்தி முதன்முறையாக உணவு உண்டார். எட்டு அவுன்ஸ் வெள்ளாட்டுப் பால் மற்றும் நான்கு ஆரஞ்சுப்பழம் சாப்பிட்டு முடிந்ததும், அவரது கொள்கைகளுக்கு செயலுருவம் கொடுத்த புராதனக் கருவியைக் கொண்டு வருமாறு கூறினார். அதுதான் அவரது ராட்டை. அவரது மருத்துவர்கள் அல்லது பயணக்குழுவினரின் வேண்டுகோள்கள் அவரைத் தடுக்க இயலவில்லை. அவரது உடலுக்கு வந்த முதலாவது தெம்புடன், நடுங்கும் அவரது விரல்களைக் கொண்டு ராட்டையைச் சுழற்றினார்.

'உழைக்காமல் பெற்ற உணவு திருட்டு உணவு' என்று அவர் முணுமுணுத்தார். 'நான் இப்போது சாப்பிடத் துவங்கி விட்டேன். எனவே நான் உழைக்க வேண்டும்.'

பதினெட்டு

# மதன்லால் பாவாவின் வஞ்சம்

*புது டில்லி, 19-20 ஜனவரி 1948*

உண்ணாவிரதத்துக்குப் பின் உணர்ச்சிப் பெருக்கோடும் ஈடுபாட்டோடும் உற்சாகமாகவும் ஒளியோடும் இருப்பதைப் போல் காந்தியைப் பார்த்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்று பியாரேலால் நய்யார் நினைத்தார். உண்ணாவிரதம் வெற்றிகரமாக முடிந்தது காந்தியிடம் எல்லையற்ற கனவுகளையும் ஏராளமான எதிர்ப்பார்ப்புகளையும் ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை நய்யார் அறிந்தார். 1929 உப்புச் சத்தியாக்கிரக யாத்திரைக்குப் பின் அவரது வேறெந்த நடவடிக்கைகளும் உலகில் இவ்வளவு கிளர்ச்சியை ஏற்படுத்தியதில்லை.

பிர்லா மாளிகைக்குப் பிரளயம் போல் பாராட்டுச் செய்திகளும், தந்திகளும் வந்து குவிந்து கொண்டிருந்தன. உலகம் முழுவதும் உள்ள செய்தி ஏடுகள் காந்தியின் திறமையைப் பாராட்டின. '78 வயதான நலிந்த மனிதரின் ஆற்றலும் அதிசயமும் உலகத்தை அசைத்திருக்கிறது. புதிய எதிர்பார்ப்புடன் அதனைக் கவர்ந்திருக்கிறது' என்று எழுதியது நியூஸ் க்ரோனிக்கல். 'அணு குண்டையும் மிஞ்சும் மகாசக்தியை காந்தி நிரூபித்துக் காட்டியிருக்கிறார். மேற்கத்திய நாடுகள் இதனைப் பொறாமையோடும் நம்பிக்கையோடும் கவனிக்க வேண்டும்' என்றும் அதில் எழுதப்பட்டிருந்தது. அவரை ஒரு போதும் வியந்து பாராட்டாத தி டைம்ஸ் கூட, 'காந்தியின் தைரியம் மிக்கக் கோட்பாடுகள் இவ்வளவு தெளிவாக எப்போதும் வெளிப்பட்டதில்லை' என்று குறிப்பிட்டிருந்தது. 'காந்தி துறவிகளிடையே ஒரு அரசியல்வாதியாக இருக்கிறாரோ இல்லையோ அரசியல்வாதிகளிடையே அவர் ஒரு துறவி என்பது நிச்சயம்' என்று வர்ணித்திருந்தது மான்செஸ்டர் கார்டியன். அவர் கவசமாகக் கொண்டிருந்த தவ வலிமையின் பலத்தால் அவரது உயிர் காப்பாற்றப்பட்டதன் காரணமாக ஆதரவு அலை உலகம் முழுவதும் பரவியது என்று அமெரிக்காவில் வெளியாகும் வாஷிங்டன் போஸ்ட் குறிப்பிட்டது. 'அமைதி, சகிப்புத்தன்மை, சகோதரத்துவம் ஆகியவற்றுக்கு வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட கீழை நாட்டின் மகத்தான மைந்தர்' என்று எகிப்து பாராட்டியது. 'அனைத்து ஆசியாவுக்குமான விடுதலையின் விடியல்' என்று அவரது வெற்றியை இந்தோனேஷியா கணித்தது.

*பிர்லா மாளிகையில் இருந்த அந்தச் சிறிய மனிதர் இந்தப் புகழுரைகளின் குவியலால் பற்றற்ற நிலையிலிருந்து பிறழ்ந்துவிடவில்லை. அனைத்துத் திங்கள் கிழமைகளைப் போல் ஜனவரி 19 அன்றும் அவரது மவுனவிரத நாள்தான். இருப்பினும் அவரின் குறும்புத்தனமான உற்சாகம் அங்கிருந்த குழு முழுவதையும் தொற்றிக் கொண்டது. அவரது உண்ணாவிரதத்தின் கடைசி நாட்களின் போது பிர்லா மாளிகையை மூடி வைத்திருந்த துயரமும் ஏமாற்றமும் விலகி ஒருவகையான உற்சாகமும் உறுதியும் சூழ்ந்திருந்தது. இது காந்திக்கும் அவரது அஹிம்சை கொள்கைக்கும் ஒரு புதிய அனுபவத்தை அளித்திருந்தது.*

*மகாத்மா இன்னமும் பலவீனமாகவே இருந்தார். பழச்சாறு, பார்லி தண்ணீர், குளுகோஸ் போன்ற திரவ உணவையே உட்கொண்டார். இருப்பினும் அவரது குடியிருப்பில் பரவியிருந்த புத்துணர்வு அவரது ஆரோக்கியத்திலும் பிரதிபலித்தது போல் தோன்றியது. அவரது உண்ணாவிரதத்தின் போது ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியது எடை பிரச்சனை. அன்றாடப் பணிகளில் ஒன்றாக இப்போதும் அவரது ஆதரவாளர்களுக்கு அதனை உறுதி செய்யும் தருணம் வந்தது. அன்று காலை அவரது எடை ஒரு பவுண்டு குறைந்து 106 பவுண்டாக இருந்தது. பிர்லா மாளிகையிலிருந்த அவரின் விசுவாசிகளுக்கு இது மிகவும் நற்செய்தியாக அமைந்தது. நீர் நிரம்பியிருந்த காந்தியின் சிறு நீரகங்கள் மீண்டும் செயல்படத் துவங்கின. ஆற்றலும் பிடிவாத குணமும் கொண்ட இந்தியாவின் மகாத்மா மீண்டும் ஒரு முறை துன்பங்களிலிருந்து விடுபட்டு மேலெழுந்தார்.*

*எடையளவு பார்க்க காந்தி கருவிமீது ஏறிய அதே சமயத்தில், புது டில்லியின் பிர்லா கோயிலுக்குப் பின்னால், அடர்ந்த புதர்களிலிருந்து, ஆறு மனிதர்கள், செடிகள் வெட்டப்பட்டு காலியாக இருந்த சிறிய இடத்தை நோக்கி முன்னேறினர். ஆர்வமுடன் அங்கே வரும் பார்வையாளர்கள் எவருக்கும் தாங்கள் பேசுவது கேட்காத இடத்தில் அவர்கள் இருந்தனர். எங்கே எப்படி காந்தியின் உயிருக்குக் குறி வைப்பது என்பது பற்றி முடிவு செய்வதற்கு முன்னால் அவரைக் கொல்லும் திட்டத்திற்குப் பயன்படுத்தவிருக்கும் ஆயுதங்களை சோதிக்க வேண்டும் என்று நாதுராம் கோட்சேயும், நாராயண் ஆப்தேயும் விரும்பினார்கள்.*

*பூனாவில் 200 ரூபாய்க்கு வாங்கிய .32 ஒற்றைக் குழல் கைத்துப்பாக்கியை கோபால் கோட்சே அவனது சட்டைக்குள்ளிருந்து வெளியே எடுத்தான். அதில் தோட்டாக்களை நிறைத்து ஒரு மரத்தைக் குறிபார்த்து 25 அடி தூரம் பின்னால் நின்று குதிரையை அழுத்தினான். எதுவும் நடக்கவில்லை. அதனை உதறினான் மீண்டும் குதிரையை அழுத்தினான். மீண்டும் எதுவும் நடக்கவில்லை.*

*ஆப்தே, பாட்கேயை நோக்கி நடந்தான். அவனது துப்பாக்கியை எடுத்தான் பதற்றத்துடன் மற்ற சதிகாரர்கள் கவனித்துக் கொண்டிருந்த போது, கோபால் குறிபார்த்த அதே மரத்தின் மீது பாட்கே தனது துப்பாக்கியால் குறிபார்த்தான் குதிரையை இழுத்தான். இந்த முறை குண்டு வெடித்தது. தோட்டா உருவாக்கிய அடையாளத்தைப் பார்ப்பதற்காக அந்தச் சதிகாரர்கள் மரத்தை நோக்கி ஓடினார்கள். அங்கே ஒன்றுமில்லை. மரத்திற்குப் போவதற்குள் பாதி வழியிலேயே அது விழுந்து விட்டது. பாட்கே மீண்டும் சுட்டான். இந்த முறை*

தோட்டா மரத்தின் வலது பக்கத்தில் பாய்ந்தது. அவன் மேலும் நான்கு முறை சுட்டான். ஒரு தோட்டா கூட குறியிலக்கைத் தாக்கவில்லை. பம்பாயில் ஆப்தே அஞ்சியது போலவே, பாட்கேயின் துப்பாக்கி காந்தியைக் கொல்வதற்குப் பதிலாக அவர்களைத்தான் கொல்லும் போலும்.

சதிகாரர்களிடம் சோர்வான அமைதி குடிகொண்டது. அனுபவமில்லாத விரல்களால் தனது தம்பி துப்பாக்கியை எடுப்பதை அமைதியான கோபத்துடன் நாதுராம் கோட்சே கவனித்தான். எல்லா பணிகளும் ஒழுங்காக நடக்கின்றன. முக்கியமான ஒன்றைத் தவிர - 25 அடி தூரத்திலிருந்து ஒரு மனிதரைக் கொல்லக் கூடிய ஆயுதம் வேண்டும் என்ற அவர்களது பணியின் மையமான விஷயத்தைத் தவிர. அவர்களும் அவர்களின் பொருள்களும் கண்டு பிடிக்க முடியாதவகையில் டில்லி சேர்ந்தாயிற்று. அந்த வேலையை முடிப்பதில் அவர்கள் அனைவரும் உறுதியோடிருந்தனர். ஆனால் இப்போது, அவனது சகோதரன் துப்பாக்கியைச் சரி செய்ய முடியாமல்போனால், வேலை செய்யாத ஒரு துப்பாக்கி அல்லது குறியிலக்கு எதையும் தாக்காத இன்னொரு துப்பாக்கியைக் கொண்டுதான் காந்தியை அவர்கள் கொல்ல வேண்டியிருக்கும்.

அன்று பிர்லா மாளிகைக்குள் நுழைந்த மிக முக்கியமான பார்வையாளர் பம்பாயின் பருத்தி தரகர். இவரைத்தான் காந்தி தனது பாகிஸ்தான் பயணத்துக்கு ஏற்பாடு செய்யுமாறு கராச்சிக்கு அனுப்பிவைத்திருந்தார். காந்தி அவரது சோதனைக் கட்டத்தில் வாழ்ந்தபோது, இந்தப் பயணம் பற்றி ஜின்னாவுடன் ஜஹாங்கீர் படேல் ரகசியப் பேச்சுக்களை நடத்தியிருந்தார். ஒவ்வொரு நாள் கடந்த போதும் இதற்கான வாய்ப்பு குறைந்து கொண்டு வருவதாகவே தோன்றியது. ஜின்னாவின் முதல் கருத்தே சந்தேகமும் விரோதமும் உடையதாயிருந்தது. அந்த மனிதர் மீதான அவநம்பிக்கை ஜின்னாவிடம் ஆழமாக வேரூன்றியிருந்தது. அவரது தந்திரமான நடவடிக்கைகளால்தான் பல ஆண்டுகளுக்கு முன் காங்கிரஸ் கட்சியின் முக்கிய இடத்திலிருந்து தாம் விரட்டப்பட்டோம் என்ற எண்ணம் அவரிடம் அசைக்க முடியாததாக இருந்தது. இதற்கும் மேலாக இந்தியாவின் நோக்கங்களைப் பொறுத்தவரை அவரிடம் சித்தப்பிரமை பிடித்தது போல் ஒரு சந்தேகம் இருந்தது. ஒரு காலத்தில் 'தந்திரம் நிறைந்த இந்து நரி' என்று தம்மால் முத்திரைக் குத்தப்பட்ட அந்த மனிதரின் திட்டத்தில் ஏதாவது உள்நோக்கம் இருக்கும் என்றும் அவர் நினைத்தார்.

அவருக்கு மிகவும் தேவைப்பட்ட ரூபாயைக் கொடுக்க இந்தியா எடுத்த முடிவு, இந்தியாவில் உள்ள தங்களின் முஸ்லீம் சகோதரர்களைப் பாதுகாக்கத்தானே காந்தி தன்னையே வருத்திக் கொள்கிறார் என்று அவரது நாட்டு மக்களிடமே வளர்ந்து வரும் கருத்து ஆகியவை ஜின்னாவின் நிலையை மென்மையாக்கியுள்ளது. காந்தியின் உண்ணாவிரதம் அவரது இதயக் கதவைத் திறக்காமல் போனாலும் குறைந்த பட்சம் அவரது புதிய தேசத்தின் கதவுகளைத் திறந்தது. உண்ணாவிரதம் முடிக்கப்பட்ட அன்று, ஒரு வழியாக அவரது பழைய அரசியல் எதிரியைப் பாகிஸ்தான் மண்ணில் வரவேற்க ஜின்னா ஒப்புக் கொண்டார்.

இந்த முடிவு மகாத்மா காந்தியிடம் உற்சாகத்தையும் நோக்கம் நிறைவேறும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. அவரது வாழ்க்கையில் மிகப் பெரும் திருப்புமுனையை அடைந்திருக்கிறார். அவரின் அஹிம்சை கொள்கையை இந்தியாவுக்கு வெளியேயும் கொண்டு செல்ல முடிந்துள்ளது. இதற்குமுன் இத்தகைய செயலைச் செய்ய அவர் மறுத்தார். காரணம் இந்திய சுதந்திரம் தான் அவரின் முதல் பணியாக இருந்தது. இப்போது சுதந்திரம் கிடைத்து விட்டது. மேலும் உண்ணாவிரதத்தின் மூலம், தனது நாட்டு மக்களை அவர்களுக்காக வகுத்தப்பாதையில் மீண்டும் திருப்ப முடிந்திருக்கிறது. புதிய பணியைத் துவக்க பாகிஸ்தானை விடச் சிறந்த இடம் எதுவாக இருக்கும்? இந்தியத் துணைக் கண்டம் உடல் ரீதியான அதன் ஒற்றுமையைத் தொலைத்து விட்டது. குறைந்த பட்சம் ஆன்மீக ரீதியான ஒற்றுமையை மீட்க அவரால் பாடுபட முடியும்.

பாகிஸ்தானுக்குச் செல்ல வேண்டும் என்பது மட்டுமல்ல, எவ்வாறு செல்ல வேண்டும் என்பது பற்றிய பார்வையும் அவரிடம் இருந்தது. பல வாரங்களாக அவருக்குள் அந்தக் கனவு சுற்றிச் சுழல்கிறது. பம்பாயிலிருந்து கராச்சிக்கு படகு மூலம் அவர் வரவேண்டும் என்று ஜின்னா விரும்பினார். வியக்க வைக்கும் செயலில் ஈடுபடும் காந்தியின் யோசனைக்கு அது சிறப்பானதாகப் படவில்லை. டிரான்ஸ்வால் எல்லைப் பகுதிகளில் பயணம் செய்ததுபோல், ஒரு பிடி உப்பு எடுப்பதற்காக கடற்கரைக்குச் சென்றதுபோல், சகோதரத்துவம், அஹிம்சை, முறையான சுகாதாரம் ஆகியவற்றைப் போதிக்க ஆயிரம் கிராமங்களுக்குச் சென்றதுபோல், பாகிஸ்தானுக்கும் நடந்தேதான் செல்ல வேண்டும். காயம் பட்டு ரத்தம் சிந்திய பஞ்சாப் வழியாக, குடிபெயர்வின் போது அவரின் மக்கள் துன்பப்பட்டு இறந்துபோன சாலைகளின் வழியாகவே நடந்து அவர் ஜின்னாவின் புதிய தேசத்துக்குச் செல்லவிருந்தார். ஓராண்டுக்கு முன்புதான், அவரது பிராயச்சித்த பயணத்தின்போது, நவகாளியின் சதுப்பு நிலங்களில் நடந்து ஒவ்வொரு அடி வைக்கும்போதும், அன்பின் செய்தியைப் பரப்பினார். இப்போது மீண்டும் அவர் ஒரு புதிய பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறார். அவரது நாட்டின் காயங்களுக்குக் கட்டுப்போடவும், பிரிவினை முறித்துப் போட்டுவிட்ட உடல் ரீதியான பிணைப்புகளுக்கு மாற்றாக, சகோதரத்துவம், நீதி ஆகிய ஆன்மீகப் பிணைப்பை உருவாக்குவதற்குமான நம்பிக்கைப் பயணம் இது.

தன்னை பாகிஸ்தானுக்கு சுமந்து செல்ல வேண்டும் என்று காந்தி விரும்பும் பாதங்களால், தற்போது அவரை பிர்லா மாளிகையின் புல் வெளிக்குக்கூட சுமந்து செல்ல இயலவில்லை. இருப்பினும் இந்த பலவீனம் காரணமாக, மிகவும் முறையாக நடப்பதும், மிகவும் போற்றக்கூடியதும், அவரது நாட்டு மக்களுடன் தினமும் சந்தித்துப் பேச வாய்ப்பளிப்பதுமான மாலை நேரப் பிரார்த்தனைக் கூட்டத்தை ஒதுக்கிவிட அவர் விரும்பவில்லை. அவர் இன்னமும் பலவீனமாகவே இருக்கிறார். தானாகச் சென்று கூட்டத்தில் பங் கேற்க இயலாது என்று அவரின் குழுவினர் கூறினாலும், நாற்காலியில் வைத்து தூக்கிச் செல்லுமாறு காந்தி வற்புறுத்தினார். அவரது ஆதரவாளர்கள் இருவரின் தோள்களில் அமர்ந்து ஏதோ மாவீரர் போல மக்கள் கூட்டத்தினூடே பயணம் செய்தபோது ஏராளமாகக் கூடியிருந்த மக்களுக்கு கைகளைக் குவித்து தலை வணங்கி வணக்கம் தெரிவித்தார். வாழ்த்துக் கூறினார். மறு பிறவியெடுத்த

இந்தியாவின் தேவதூதனைப் புதிய தரிசனம் செய்வதற்காக அவர்கள் காத்திருந்தனர்.

ஒரு வாரத்துக்கு முன் மரணம்வரை நெருங்கிய உண்ணாவிரதத்தை அவர் அறிவித்த மேடைக்கு பிர்லா மாளிகையின் நீண்ட கம்பி வேலிகளையும், ஆரஞ்சு மற்றும் சிவப்பு நிறத்தில் அலை அலையாகப் பூத்துக் குலுங்கும் போகன்வில்லா மலர்களைக் கொண்ட புல்வெளியில் அமைக்கப்பட்ட படிக்கட்டுகளையும் கடந்து அந்தச் சிறிய மேடைக்கு காந்தி செல்லும் வரை மக்கள் கூட்டத்தினரின் கண்கள் அவரது பயணத்தையே பின் தொடர்ந்தன. இருப்பினும் அந்தக் கூட்டத்தைப் பார்ப்பதற்காக அவர் வைக்கோல் மெத்தையின் மீது அமர்ந்த போது அவரின் நடவடிக்கைகளை அனைத்துக் கண்களும் பயபக்தியோடு ஆய்வு செய்யவில்லை. அந்தப் புல்வெளியின் தொலைதூரத்திலிருந்த மூன்று ஜோடி கண்கள், கொலை வெறியோடு பார்த்தன. நாதுராம் கோட்சே, அவனது தம்பி கோபால், நாராயண் ஆப்தே ஆகியோர் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு காந்தியைத் தரிசிக்க வரவில்லை. பிர்லா மாளிகையின் புல்வெளியை ஆய்வு செய்யவும், அவரைக் கொல்வதற்கான வழியைக் கண்டறியவுமே அவர்கள் வந்திருந்தனர்.

கோபால் கோட்சே வாழ்க்கையில் காந்தியைப் பார்ப்பது இதுதான் முதல் தடவை. பிரார்த்தனை மண்டபத்தில் அமர்ந்திருந்த அந்த மெல்லிய உருவம் அவனைக் கவரவில்லை. கோபாலைப் பொறுத்தவரை அவர் 'சுருங்கிப் போன ஒரு முதியவர் மட்டும்தான்.' அவரைப் பார்க்கும் போது வெறுப்பு அதிகரிக்கும் உணர்வும் அவனுக்கு ஏற்படவில்லை. 'அவரைக் கொல்வது எனக்குத் தனிப்பட்ட விஷயம் அல்ல; அவர் மக்களிடம் கொண்டிருந்த மோசமான செல்வாக்குதான்' என்று ஒரு நாளில் கோபால் கூறினான். அந்தக் கூட்டத்தில் சாதாரண உடையில் ஏராளமான காவலர்கள் இருப்பதை எச்சரிக்கை உணர்வுள்ள கோபால் கோட்சே புரிந்து கொண்டான். பிரார்த்தனை திடலை விட்டு வெளியேறும்போது, வாசல் அருகே இருந்த கூடாரத்தில் காவலரின் மேசை மீது ஒரு எந்திரத் துப்பாக்கி இருந்ததை அவன் கவனித்தான்.

'நாம் தப்பிச் செல்ல வாய்ப்புக் குறைவுதான்' என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

நாற்பத்தைந்து நிமிட நேரத்துக்குப்பின், தங்களை யாரும் பின் தொடர வில்லை என்பதை எச்சரிக்கையோடு கவனித்த பின், ஒவ்வொருவராக புது டில்லியின் கன்னாட் சர்க்கஸில் உள்ள மெரினா ஓட்டலின் 40ஆம் எண் அறைக்குள் சென்றனர். ஆப்தேயும், கோட்சேயும் இங்கே எஸ். தேஷ்பாண்டே, என். தேஷ்பாண்டே என்று பெயர்களைப் பதிவு செய்திருந்தார்கள். ஆப்தேக்கும் தனக்கும் விஸ்கி கொண்டு வர கார்காரே உத்தரவிட்டான்.

ஒரு முடிவெடுப்பதற்கான காலம் வந்து விட்டது என்று ஆப்தே அறிவித்தான். காந்தியின் அருகே செல்லவும் அவரைக் கொல்லவும் ஒரே ஒரு சந்தர்ப்பம்தான் உள்ளது என்பதை பிர்லா மாளிகை ஆய்வின்போது கண்டதாக அவன் கூறினான். அதுதான் அவர்களின் தாக்குதலுக்கு சரியான சந்தர்ப்பம்.

மறுநாள், ஜனவரி 20 செவ்வாய் மாலை ஐந்து மணிக்கு மக்களுக்கு மிகவும் விசுவாசத்துடன் மகாத்மா காட்சி அளிக்கும் பிரார்த்தனைக் கூட்டத்தில், காந்தியை அவர்கள் கொல்ல வேண்டும் என்றும் அவன் கூறினான்.

அடுத்த நாள் காலை 9 மணிக்குப் பிறகு பிர்லா மாளிகையின் பின்புறத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட சுவரை ஒட்டி ஓடிய ஒரு டாக்சி பொது வழியாகப் பயன்படும் வெள்ளையடிக்கப்பட்ட ஒரு மரக்கதவு வாசலின் முன் நின்றது. அதிலிருந்த இரண்டு பயணிகள் எந்தவிதத் தொல்லையுமின்றி அந்தக் கதவு வழியே உள்ளே சென்று ஒரு சிறிய முற்றத்தை அடைந்தனர். அதன் ஒரு பக்கத்தில் சிறைக் கூடங்கள் போல சிறு சிறு அறைகளைக் கொண்ட ஒற்றை மாடி சிமெண்ட் கட்டடம் ஒன்று இருந்தது. பிர்லா எஸ்டேட் ஊழியர் களுக்கான குடியிருப்பு அது. இந்தக் குடியிருப்பின் பின்பக்கத்தில்தான் செங்கற்களால் கட்டப்பட்ட மண்டபம் இருந்தது. இதன் முன்பிருந்தே காந்தி மாலை நேர பிரார்த்தனைகளை நடத்தினார்.

அந்த இரண்டு மனிதர்கள் தோட்டத்திற்குள் மேலும் பயணத்தைத் தொடர்ந்தனர். அது அந்தக் காலை நேரத்தில் அமைதியாகவும் ஆள் அரவமின்றியும் இருந்தது. அந்தப் பசுமையான புல்வெளியிலும் அதன் வெளிவட்டமாக செங்கற்களால் நீளமாகக் கட்டப்பட்டுள்ள சிறிய தாழ்வாரம் போன்ற பகுதியில் வளர்க்கப்பட்டிருந்த ரோஜா செடிகளிலும் இன்னமும் பனித்துளிகள் இருந்தன. தங்களது சிக்கலான பணியை நிறைவேற்றுவதற்கு யாரும் இடையூறாக இல்லை என்பதை நாராயண் ஆப்தேயும் அவனது போலிச் சாமியாரான திகம்பர் பாட்கேயும் மீண்டும் உறுதி செய்து கொண்டனர். அன்று மாலை இந்தத் தோட்டத்திலிருந்து நடத்த தாங்கள் திட்டமிட்டிருக்கும் கொலை பாதகத்தை எப்படி நிறைவேற்றுவது என்பது பற்றி துல்லியமாக அவர்கள் முடிவு செய்து கொண்டிருந்தனர். காந்தியின் பிரார்த்தனை மேடைக்கு முன்னால் இருந்த மண்டபத்தைப் பார்த்தபோது ஆப்தே மலைத்துப் போனான். பிரார்த்தனை மைதானத்தை நோக்கி ஒரு சுவரில் வெட்டப்பட்ட சிறுசிறு ஓட்டைகள் கொண்ட ஜன்னல்கள் இருந்தன. மண்டபத்துக்குப் பின்புறம் இருந்த ஊழியர்கள் குடியிருப்பின் ஜன்னல்கள்தான் அவை என்பது தெளிவாயின. அவற்றில் ஒன்று பொது மக்களுக்கு காந்தி உரையாற்றப் பொருத்தப்பட்டுள்ள மைக்ரோ ஃபோனுக்கு நேர் பின்புறமாக இருந்தது.

ஆப்தே அதை நோக்கி நடந்து, விரைவாக ஒரு கணக்குப் போட்டான். அந்தத் திறந்த ஜன்னலுக்கும் உரையாற்றும்போது காந்தியின் தலைக்கும் இடையேயான தூரம் வெறும் பத்து அடியாகத்தான் இருக்கும். இங்கிருந்து சுடுவது மிக எளிது. பாட்கேயின் குறைபாடுடைய துப்பாக்கி கூட அந்த இலக்கைத் தவறவிடாது.

பிர்லா மாளிகைக்கு வந்ததிலிருந்து அவனுக்கு வெளிப்பட்ட வியப்புக்குரிய விஷயம் இது. இப்போது அவன் செய்ய வேண்டியதெல்லாம் அந்த ஜன்னலுக்குப் பின்னால் உள்ள அறையில் பாட்கேக்கு ஒரு இடம் பிடிப்பது தான். அவனுடன் இறுதிக் கட்ட முயற்சிக்காக இந்த அறைக்குள் கோபால் கோட்சேயையும் ஆப்தே அனுப்ப வேண்டும். பாட்கே துப்பாக்கியால் சுடும் நேரத்தில், குறுக்கும் நெடுக்குமாக இரும்புக் கம்பிகள் போடப்பட்டுள்ள ஜன்னல் வழியாக அவன் கையெறி குண்டுகளை வீச வேண்டும். இரும்புக் கம்பிகளுக்கு இடையேயான தூரத்தை நூல் ஒன்றால் ஆப்தே அளந்தான். அது ஐந்து அங்குல சதுரமாக இருந்தது. காந்திக்கும் அவரது குழுவினருக்கும் மத்தியில் குண்டு வீசத் தேவையான அளவை விட அது அதிகமாகவே இருந்தது.

ஒரு கடைசிக் கணக்கு எஞ்சியிருந்தது. அவர்கள் பிரார்த்தனை மைதானத்துக்குள் வந்த வழியாகத் திரும்பிச் செல்லும் போது ஆப்தே அதையும் போட்டு முடித்தான். மைக்ரோ ஃபோனுக்கு நேர் பின் புறத்திலிருந்த அந்த ஜன்னல், பணியாளர்களின் அறைகளில் இடது பக்கக் கடைசியிலிருந்து மூன்றாவதாக இருந்தது. திருப்தி அடைந்த இருவரும் அவர்களுக்காக காத்திருந்த டாக்சிக்குச் சென்றனர். இன்னும் சுமார் எட்டு மணி நேரத்தில், தாங்கள் அடையாளம் கண்டுள்ள ஜன்னலுக்குக் கீழேயுள்ள பிரார்த்தனை மேடையில் காந்தி சிதைந்த பிணமாகக் கிடப்பார் என்று பாட்கேயிடம் ஆப்தே உறுதியாகக் கூறினான்.

பாட்கேயின் திறமை வாய்ந்த விரல்களின் ஒவ்வொரு அசைவையும் ஐந்து ஜோடி கண்கள் மிகுந்த ஆர்வத்துடன் கவனித்தன. ஓட்டல் மெரினாவின் 40ஆம் எண் அறையில் உள்ள குளியலறையில் அமர்ந்து கொண்டு அன்று மாலை அவர்கள் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ள கையெறி குண்டுகளில் மெதுவாக டெட்டனேட்டர்களை அவன் செருகிக் கொண்டிருந்தான்.

இதனை வெளிறிய முகத்தோடும், தடுமாற்றத்தோடும் கதவருகே நின்று நாதுராம் கவனித்தான். ‘பாட்கே, இதுதான் நமது கடைசி வாய்ப்பு. இவை ஒழுங்காக வேலை செய்வதை உறுதி செய்து கொள்’ என்று அவன் கடுமையான குரலில் முணுமுணுத்தான்.

பாட்கே தனது பணியை முடித்தபோது நீளமாக ஃப்யூஸ் வயரைக் கத்தியால் வெட்டினான். பிறகு செயல்பாட்டை கவனிக்குமாறு ஆப்தேயிடம் கூறினான். அது எவ்வளவு விரைவில் வெடிக்கும் என்பதை அவர்கள் கணக்கிட்டனர். பாட்கே அதன் முனையில் தீ வைத்தான். அது எரிந்த போது அறை முழுவதும் புகை மேகம் சூழ்ந்தது. சதிகாரர்கள் ஏழு பேருக்கும் இதனால் இருமலும் தொண்டை அடைப்பும் ஏற்பட்டது. குளியலறை முழுவதும் பரவிய அந்தக் காரமான புகை தங்களைக் காட்டிக் கொடுத்துவிடும் என்று தோன்றியதால் அதனை மூடிமறைக்க அவர்கள் ஏராளமான சிகரெட்டுகளை ஊதித் தள்ளினார்கள்.

அமைதி திரும்பியபோது, அனைவரையும் படுக்கை அறையில் கூட்டிய ஆப்தே, ஒவ்வொருவருக்கும் உரிய பணியை ஒப்படைத்தான். காந்தியைக் கொல்ல வேண்டுமென்று திடீரெனத் தீர்மானித்து அவர்களையெல்லாம் டில்லிக்குக் கொண்டுவந்துள்ள அந்த மனிதன் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. கடுமையான தலைவலியால் பாதிக்கப்பட்டு நாதுராம் கோட்சே படுக்கையில் கிடந்து அரற்றிக் கொண்டிருந்தான். பிர்லா மாளிகையில் பிரார்த்தனைக் கூட்டம் நடக்கும் இடத்துக்கு அருகே உள்ள செங்கற் சுவரின் வெளிப்பக்க ஓரத்தில் குறித்த காலத்தில் வெடிக்கும் குண்டினை (டைம்பாம்) மதன்லால் மறைத்து வைக்க வேண்டும் என்று ஆப்தே விளக்கினான். இதன் வெடிப்பால் மக்களிடம் குழப்பமும் பீதியும் ஏற்படும் போது அவர்களின் படுகொலைத் திட்டம் செயல்படத் துவங்க வேண்டும்.

இதற்கிடையே, அன்று காலையில் சென்று வேவு பார்த்த, பணியாளர்கள் அறைக்கு பாட்கேயும் கோபால் கோட்சேயும் செல்ல வேண்டும். யாராவது அவர்களைத் தடுத்து நிறுத்தினால், பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும் காந்தியைப் பின் பக்கத்திலிருந்து புகைப்படம் எடுக்கப் போவதாக அவர்கள் விவரித்துச் சொல்ல வேண்டும். மதன்லாலின் குண்டு

வெடித்தவுடனேயே ஏறத்தாழ நெருக்கமான இடத்திலிருந்து காந்தி மீது பாட்கே துப்பாக்கியால் சுட வேண்டும். அவனுக்குப் பின்னால் இருக்கும் கோபால் ஜன்னல் துவாரம் வழியாகக் கையெறி குண்டுகளை வீச வேண்டும்.

அவர்களின் பழிவாங்கலுக்குரிய நபர் எவ்வகையிலும் தப்பிவிடக் கூடாது என்பதற்காக, கார்காரே எறி குண்டுடன் காந்திக்கு முன்னால் அவரின் விசுவாசமிக்க மக்களுடன் கலந்திருக்க வேண்டும். மதன்லாலின் குண்டு வெடித்த உடனேயே அவனும் காந்தி மீது குண்டினை வீச வேண்டும். நாதுராமும் ஆப்தேயும் இந்தச் செயல்திட்டங்களைக் கண்காணிப்பார்கள். காந்திக்கு எதிரே கார்காரே சரியான இடத்தில் இருக்கிறான் என்பதை நாதுராம் சைகை மூலம் ஆப்தேவுக்கு தெரிவிப்பான்; உடனே குண்டினை வெடிக்கச் செய்யுமாறு மதன்லாலுக்கு ஆப்தே சமிக்ஞை செய்வான்.

காந்தியை உருக்குலைத்து ஒழிக்கும் அவர்களின் முடிவால், அப்பாவி மக்களுக்கும் இழப்பு இருக்கும் என்பதை ஆப்தே அங்கீகரித்தான். ஆனால் அது தவிர்க்க இயலாதது. பஞ்சாபில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப் படுவதற்குக் காரணமான அந்த மனிதரைக் கொல்வதற்கு விலையாக ஒரு சில அப்பாவி இந்திய மக்களின் உயிர் போகத்தான் செய்யும்.

வேதனை மிகுந்த ஒரு பதற்றம் அந்த அறைக்குள் குடி கொண்டது. தலைவலி காரணமாக படுக்கையில் கைகால்களைப் பரப்பிக் கிடந்த நாதுராம் கோட்சே வலியால் முனகிக் கொண்டிருந்தான். தோற்றத்தில் அவர்களுக்கிடையே தொடர்பு இருப்பது தெரியாமல் இருப்பதற்காக இயன்றவரை அவர்கள் வேறு வேறு விதமான உடைகளை அணிந்தனர். எப்போதும் கம்பளியாலான சூட்டினையே விரும்பும் ஆப்தே, இப்போது தனது வாழ்க்கையின் உயர்ந்தபட்ச லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக வேட்டி உடுத்தி இருந்தான். கார்காரே இமைகளில் மை தீட்டிக் கொண்டு நெற்றியில் சிவப்புத் திலகம் இட்டிருந்தான். மதன்லால் பம்பாயில் வாங்கிய புதிய நீல நிற சூட்டினை அணிந்து கொண்டான். பஞ்சாபிலிருந்து வந்த அகதியான அவன், தான் பிறந்த போது ஜோதிடர் கணித்ததை நிரூபிக்கும் இடத்துக்குச் செல்லும் போது சீமான் போல உடையணிந்திருந்தான். மதன்லால் பாவா வாழ்க்கையிலேயே முதன்முறையாக இப்போது தான் கோட் அணிந்து டை கட்டிக் கொண்டிருந்தான்.

நேரம் மெல்ல மெல்ல கடந்து கொண்டிருந்தது. 40ஆம் எண் அறையில் பதற்றம் அதிகரித்தது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளாமல் அமைதி யாகத் தரையில் அமர்ந்திருந்த சதிகாரர்கள் நிமிடங்களை எண்ணிக் கொண்டிருந்தனர். கடைசிச் சடங்காக கடவுளின் பெயரால் ஒரு பானத்தை அருந்தலாம் என்று நாதுராம் கோட்சே யோசனை தெரிவித்தான். அவர்கள் அனைவருக்கும் காஃபி கொண்டுவருமாறு அறை பணியாளரிடம் அவன் கூறினான். அருந்தி முடிந்தபின் புறப்படும் நேரம் வந்தது. மதன்லால், கார்காரே, நாதுராம் கோட்சே ஆகியோர் முதலில் சென்றனர் ஐந்து நிமிட இடை வெளியில் பிர்லா மாளிகைக்குச் செல்லும் வகையில் தனித்தனி டோங்கா வண்டியில் ஒருவர்பின் ஒருவராக சென்றனர். பத்து நிமிடங்கள் கழித்து ஒரு வாடகைக் கார் மூலம் அவர்களைப் பின்தொடர ஆப்தேயும் மற்றவர்களும் புறப்பட்டனர். கண்ணில்பட்ட முதல் டாக்சியிலேயே ஏறிச் செல்வதற்குப் பதிலாக, பிர்லா மாளிகைக்குச் சென்று திரும்ப எவ்வளவு கட்டணம் என்று

பேரம் பேசுவதற்கு ஆப்தே தீர்மானித்தான். கன்னாட் சர்க்கஸைச் சுற்றி இருந்த ஒவ்வொரு டாக்சியாகப் போய் பதினைந்து நிமிடங்களுக்கு அவன் பேரம் பேசிக் கொண்டிருந்தான். கடைசியாக ரீகல் சினிமா அரங்கத்துக்கு எதிரே நின்றிருந்த பி.பி.எஃப் (PBF) 671 எண் கொண்ட பச்சை நிற செவ்ரோலெட் காரினை பேரம் பேசி முடித்தான். அப்போது மணி 4.15. இந்தியாவின் தேவ தூதருக்கான கல்வாரிக்கு (கல்வாரி மலை என்பது ஏசுநாதரை சிலுவையில் அறைந்த இடம். மொ-ர்) செல்வதற்குரிய பயணக் கட்டணத்தை பதினாறு ரூபாயிலிருந்து பன்னிரண்டு ரூபாயாகக் குறைத்துப் பேரம் பேசுவதில் அவன் வெற்றி பெற்றான்.

பிர்லா மாளிகையில் இன்னமும் மிக நலிந்து காணப்பட்ட காந்தி பிரார்த்தனைக் கூட்டத்துக்கு நடக்க இயலாததால் ஒரு நாற்காலியில் அமர வைத்து புல்வெளி வழியாக பிரார்த்தனை மேடைக்குத் தூக்கிவரப்பட்டார். அவரது சிறிய உருவம் தங்கள் அருகே வரும் போது மரியாதையுடன் முன்பக்கம் வளைந்து கைகளைச் சேர்த்து வணங்கும் மக்கள் கூட்டத்துக்குள் மதன்லால் பாவா சிக்கியிருந்தான். அவனும் கூட கைகளைக் கூப்பினான். அவன் கொல்லத் திட்டமிட்டிருக்கும் அந்த மனிதரைக் கண்டு பக்தியுடன் தலை வணங்கினான். அவனுக்குப் பின்னால் இருந்த கவற்றின் கீழ்ப்பகுதியில் தழைகள் மற்றும் புல்லுக்கு அடியில் குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டு (டைம்பாம்) மறைத்து வைக்கப்பட்டிருந்தது. காந்தி அவனைக் கடந்து சென்றபோது அவன் கண்களை உயர்த்தி அவரைப் பார்த்தான். காந்தியை முதன் முறையாகப் பார்த்த அவனிடம் வெறுப்புணர்வு அதிகரித்தது. 'அவர் எனது எதிரி' என்று பாவா நினைத்தான். உண்மையில் அசைந்தாடியபடி பிரார்த்தனை மேடைக்கு தூக்கிச் செல்லப்படும் உடல் சுருங்கிய காந்தியின் உருவத்தை அவன் காணவில்லை. மாறாக ஃபெரோஸ்பூர் மருத்துவமனை படுக்கையில் கிடந்த இன்னொரு மனிதரை அவனின் தந்தையை - அவன் கண்டான்.

காந்தி அவரது இடத்தில் சரியாக அமர்வதற்குமுன், பார்வையாளர் களிடமிருந்து ஓடிவந்த ஒரு நபர், காந்தியின் காலடியில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி, கடவுளின் அவதாரமாக தன்னைத்தானே அறிவித்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார். இருப்பினும் அந்த மனிதரைப் பார்த்துப் பொறுமையுடன் புன்னகை செய்தார் காந்தி. 'கீழே அமருங்கள்; அமைதியாக இருங்கள்' என்று அவர் சொன்னார். 'நானும் உங்களைப் போல் சாகக் கூடிய சாதாரண மனிதன்தான்.'

பிர்லா மாளிகையின் பின்பக்கத்தில் உள்ள பொது வழியின் நுழைவாயில் அருகே ஆப்தே பயணம் செய்த பச்சை நிற செவ்ரோலெட் வந்து நின்றது. அவனது வாழ்க்கையின் மிக முக்கியமான குறியிடத்துக்கு ஆப்தே தாமதமாகவே வந்து சேர்ந்தான். காரணம் நான்கு ரூபாயை சேமிக்க வேண்டும் என்ற அவனது விருப்பம்தான். மதன்லாலின் குண்டில் மருந்து நிறைக்கப்பட்டு உரிய இடத்தில் பொருத்தப்பட்டு விட்டது என்பதை கார்காரே அவனிடம் தெரிவித்தான். காந்தியின் தலைக்குப் பின்புறமுள்ள ஊழியர்கள் அறையின் ஜன்னலுக்குச் செல்வதிலும் பிரச்சனை இருக்கவில்லை. அதனைப் பயன்படுத்திக் கொள்ள அங்கே குடியிருந்த நபருக்கு கார்காரே பத்து ரூபாய் கொடுத்திருந்தான். அந்த நபரை அவனுக்கும் காட்டினான். பின்னர், கூட்டத்துக்கு மத்தியில் காந்தியின்

முன் என்ற அவனது திட்டப்படியான இடத்துக்கு டெக்கான் கெஸ்ட்ஹவுசின் உரிமையாளன் புறப்பட்டுச் சென்றான்.

பாட்கேயைக் கைகாட்டி அழைத்த ஆப்தே, கார்காரே பணம் கொடுத்திருந்த நபரைச் சுட்டிக் காட்டி அவனது அறைக்குள் செல்லுமாறு கூறினான். கதவை நோக்கி சில அடிகள் எடுத்து வைத்த பாட்கே அசந்து போய் நின்று விட்டான். இனி யாராலும் திகம்பர் பாட்கேயை அந்த அறைக்குள் அனுப்ப இயலாது. வெறுப்போ, அடங்காக் கோபமோ, அச்சுறுத்தும் செய்தியோ எதுவாயினும் அந்த வாயிற்படியைத் தாண்டிச் செல்லுமாறு தூண்டிவிடும் ஆற்றல் பெற்றிருக்க முடியாது. உள்ளுணர்வு பாட்கேயிடம் பேசியது. ரிஷிகளைப் போலவும் மழைக் காடுகளைப் போலவும் தொன்மையான இந்தியாவின் - குறியீடுகள் மற்றும் சகுனங்களைக் கொண்ட இந்தியாவின் - குரல் அது. வெயிலில் குளிர்காய்ந்தபடி அமர்ந்திருந்த அந்த அறையின் உரிமையாளருக்கு ஒரு கண்தான் இருந்தது. இதைப்போல் ஒரு அபசகுனம் வேறு எதுவும் இல்லை. நடுங்கியபடி பாட்கே ஆப்தேயிடம் வந்தான். 'அவருக்கு ஒரு கண்தான் இருக்கிறது. நான் அவரது அறைக்குள் செல்லமாட்டேன்' என்று பாட்கே முணுமுணுத்தான்.

ஆப்தே தயங்கினான்; பிரார்த்தனை மைதானத்தில் பக்திப் பாடல்கள் முடிந்து காந்தி பேசத் துவங்கினார். அவரது குரல் மிகவும் பலவீனமாக இருந்ததால் அவர் பேசும் ஒவ்வொரு தொடரையும் கூட்டத்தினருக்கு சுசீலா நய்யார் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தார். களைப்புற்றிருந்த காந்தியின் பேச்சு வெகுநேரம் நீடிக்காது என்பது தெளிவு. விவாதம் செய்து கொண்டிருக்க நேரம் இல்லை என்பதை ஆப்தே உணர்ந்தான். திட்டமிட்டபடி அந்த அறைக்குள் செல்லுமாறும், மதன்லாலின் குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டவுடன் ஜன்னல் வழியாகக் கையெறிக் குண்டினை வீசி எறியுமாறும் கோபால் கோட்சேயிடம் ஆப்தே கூறினான். தயங்கிய பாட்கேக்குப் புதிய வேலையை அவன் அளித்தான். காந்திக்கு முன்னால் கூட்டத்தோடு கலந்து விடுங்கள் என்று அவன் சொன்னான். எவ்வளவு முடியுமோ அவ்வளவு நெருக்கமாகச் செல். நேரம் வரும் போது காந்தியைத் தலையில் சுட்டுவிடு.

கோபால் கோட்சே அந்த ஊழியரின் அறைக்கு நடந்தான். அதன் உரிமையாளரான ஒற்றைக் கண் மனிதரைப் பார்த்துத் தலையசைத்தான். உள்ளே சென்று அவருக்குப் பின்னாலிருந்த கதவைச் சாத்தினான். அந்த இருளில் ஜன்னல்கள் வழியாக வந்துவிழும் வெளிச்சத்தில் அதனை நோக்கியே நடந்தான். இங்கிருந்துதான் அவன் மகாத்மாவின் பின்பக்கத்தில் குண்டு வீச வேண்டும்.

பிரார்த்தனை மைதானத்தில் காந்தி உரையைத் தொடர்ந்தார். 'முஸ்லீமின் எதிரி இந்தியாவின் எதிரி' என்று அவர் அறிவித்தார். இருளின் வழியே இரும்புத் துவார ஜன்னல்களை அடைந்த போது இந்த வார்த்தைகளை சுசீலா நய்யார் திருப்பிக் கூறுவதை கோபால் கோட்சே கேட்டான். அந்த ஜன்னலை நெருங்கிய போதுதான் ஆப்தேயின் திட்டத்தில் பயங்கரமான குறைபாடு இருப்பதை அவன் கண்டறிந்தான். அன்று காலையில் சோதனை செய்தபோது, அந்த அறைக்குள் சென்று பார்ப்பது பற்றி ஆப்தே கவலைப்படவில்லை. எங்கிருந்து கோட்சே குண்டினை வீச வேண்டுமோ அந்த ஜன்னல், அறையின் தளத்திலிருந்து எட்டடி உயரத்தில் இருந்தது. பணியாளர்கள் குடியிருப்பு இருந்த இடத்தின்

முற்றப்பகுதியின் மட்டம் பிரார்த்தனை மேடையுள்ள புல்வெளியை விட உயரத்தில் இருந்தது என்பது ஆப்தேயின் கணக்குகளில் தவறிவிட்டது. கோபால் தனது கையை முழு அளவுக்கு நீட்டிய போதும் அவனின் விரல் நுனி கூட ஜன்னலின் விளிம்பைத் தொட முடியவில்லை. ஏமாற்றத்துடன் அவன் அந்த ஒற்றைக் கண் மனிதரின் கட்டிலைக் கண்டுபிடிக்க இருட்டில் தடவினான். ஒரு வழியாக அதனைக் கண்டுபிடித்த அவன், அதன் மீது ஏறினால் ஜன்னலின் அடிப்பகுதியைப் பிடித்து விட முடியும் என்ற எண்ணத்துடன் அதனைப் பரபரப்பாக ஜன்னலை நோக்கி இழுத்தான்.

வெளிப்புறத்தில் எல்லாம் தயாராக இருந்தது. அமெரிக்காவில் கருப்பு இனத்தோர் 'கொடுமையாக நடத்தப்படுவது பற்றி' பேசிக் கொண்டிருந்த அந்த மனிதர் மீது குண்டினை வீச கார்காரே அவனது இடத்தில் தயாராக இருந்ததை நாதுராம் கோட்சே பார்த்தான். சரியான சந்தர்ப்பம் வந்தது. நாதுராம் தாடையில் கையை வைத்துச் சொரிந்தான். ஆப்தே இதனை கவனித்தான். இதற்குப் பதில் சமிக்ஞையாக அவன் மதன்லாலுக்குத் தெரியும்படி கையை உயர்த்தினான். அந்தப் பஞ்சாபியும் தயாராக இருந்தான். அந்த ஆகஸ்ட் மாத மாலை நேரத்தில் சுலேமாங்கியில் பாலத்தைக் கடந்து வந்தபோதிலிருந்து அந்தச் சந்தர்ப்பத்துக்காகத்தான் அவன் காத்துக் கொண்டிருக்கிறான். அவன் இப்போது பழிவாங்கப் போகிறான். இந்தச் சந்தர்ப்பத்தை அவன் தவறவிடப் போவதில்லை. அமைதியாகவும் ஒரு திட்டத்துடனும் அவன் சிகரெட்டை உறிஞ்சினான். பின்னர் குனிந்து கனன்று கொண்டிருக்கும் அதன் முனையை அவனது காலடியில் இருக்கும் வெடிகுண்டின் திரி மீது வைத்து அழுத்தினான்.

'நாம் மேற்கொண்ட மிகச் சிறந்த முடிவுகளைக் கடவுள் சாட்சியாகப் பற்றி நின்றோமானால் நாம் தார்மீக ரீதியில் மிக உயர்ந்த இடத்தை அடைந்து விடுவோம்.' என்ற (காந்தியின்) வார்த்தைகளை சுசீலா கூடியிருந்தவர்களிடம் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் பிரார்த்தனை மைதானத்தில் மதன்லாலின் டைம்பாம் வெடித்து அனைவரையும் அச்சத்தில் ஆழ்த்தியது. குண்டு வெடித்த இடத்திலிருந்து மேகக்கூட்டம் போல் புகை மண்டலம் எழுந்தது. 'ஓ.. அம்மா!' சுசீலா அலறி நடுங்கினார்.

'பிரார்த்தனையின் போது இறப்பதை விட வேறெந்த சிறந்த மரணத்தை நீ விரும்புகிறாய்?' என்று காந்தி தனது பலவீன குரலில் மெதுவாக அவரிடம் கேட்டார்.

அவருக்கு நேர் பின்னால் உள்ள அறையில் அவருக்கு மேலே உள்ள ஜன்னலை அடைவதற்கு கோபால் கோட்சே கட்டில் மீது ஏறிக் கொண்டிருந்தான். ஜன்னலை அடைய ஒரு மேடை போல் இருக்கும் என்று கணக்குப் போட்ட அந்தக் கட்டிலின் கயிறுகள் தொளதொளப்பாக இருந்ததால் பெரும்பாலும் அழுக்கடைந்த தரையைத் தொட்டுக் கொண்டிருந்தது. இந்த முயற்சியால் அவனால் முன்பிருந்ததைவிட மூன்று அங்குல உயரம்தான் அதிகரிக்க முடிந்தது. கட்டிலின் மரச் சட்டத்தின் மீது காலூன்றிய கோபால், முடிந்த அளவுக்கு மேலே தாவினான். அப்போதும் கூட ஜன்னலின் திறந்த பகுதியை அவனது கண்கள் காணமுடியவில்லை. உட்கார்ந்திருப்பவர் யார் மீதாவது விழட்டும் என்று கண்மூடித்தனமாக ஜன்னலிலிருந்து குண்டினை

வீசுவதுதான் அவனால் செய்ய முடிந்தது. ஆனால் அப்படி அவன் செய்வதற்கு குண்டு வெடித்த சத்தம் எதையும் அவன் கேட்கவில்லை. பிரார்த்தனை மைதானத்திலிருந்து கார்காரே வெடித்த எறிகுண்டின் வெடிப்புச் சத்தமும் கேட்கவில்லை. அவனால் கேட்க முடிந்ததெல்லாம் கூட்டத்தினரை அமைதிப்படுத்தும் காந்தியின் குரலைத்தான்.

நலிந்த உடலின் மொத்த சக்தியையும் திரட்டி காந்தி மக்கள் கூட்டத்துக்கு வேண்டுகோள் விடுத்தார். 'கவனியுங்கள்! கவனியுங்கள்! ஒன்றுமில்லை. ராணுவத்தினர் ஏதோ சில பயிற்சி செய்கிறார்கள். அமருங்கள். அமைதியாய் இருங்கள். பிரார்த்தனை தொடரும்' என்று அவர் கூறினார்.

மதன்லாலின் குண்டு காரணமாக அந்தத் தோட்டத்தில் இருந்த மக்களிடம் பீதி ஏற்பட்டது. அந்தக் குண்டு வெடிப்பில் ஒருவருக்கும் காயம் ஏற்படவில்லை. ஆனால் சதிகாரர்கள் கணித்தபடி படுகொலையை மூடிமறைக்க பீதியை மிகத்துல்லியமாக அதனால் ஏற்படுத்த முடிந்தது. இந்தக் குழப்பத்தில் காந்திக்கு பதினைந்து அடி சமீபத்துக்கு கார்காரே சென்றான். நலிவுற்ற அந்த மனிதர் சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கும் பாதுகாப்பில்லா முடவரைப் போல் ஆதரவற்ற இலக்காக இருந்தார்.

கார்காரே அவனது குண்டுகளை வெளியே எடுக்கத் தொடங்கினான். அந்தச் சமயத்தில் காந்தியின் தலைக்குப் பின்னால் இருந்த ஜன்னலில் கைத் துப்பாக்கியின் குழல் தெரிகிறதா அல்லது கையெறி குண்டின் கறுப்பு வடிவம் தெரிகிறதா என்பதை உறுதி செய்வதற்காக அந்தப் பக்கம் அவன் நோட்டமிட்டான். அங்கே எதுவும் இல்லை. கார்காரே உறைந்து போனான்.

கோபால் கோட்சே கட்டிலிலிருந்து கீழே குதித்தான். அவன் அந்தக் காரியத்தைச் செய்யப் போவதில்லை. மற்றவர்கள் தாக்குதல் நடத்தட்டும் என்று அவன் எண்ணினான். யாரைக் கொல்வது என்ற ஒரு நோக்கம் இல்லாமல் குண்டினை வீச அவன் தயாராக இல்லை. இருட்டினூடே கதவருகே அவன் விரைந்தான். அதன் தாழ்ப்பாளைத் தேடினான். அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. நடுங்கிய அவனின் விரல்கள் அதனைக் கண்டுபிடித்தபோது அவற்றால் திறக்க முடியவில்லை. ஒருவித அச்ச உணர்வு அவனிடம் பரவியது. அந்த ஒற்றைக் கண் மனிதரின் அறைக்குள் அவன் சிக்கிக் கொள்ளத்தான் போகிறான்.

தோட்டப் பகுதியில் கையெறி குண்டுகளை விரல்களால் மூடிப்பிடித்துக் கொண்டு, அந்தச் சிறிய ஜன்னல் துவாரத்தில் கைத்துப்பாக்கியின் பளபளப்பு ஏதாவது தெரிகிறதா என்று கார்காரே தொடர்ந்து கவனித்தான். கடந்து சென்ற ஒவ்வொரு நொடியிலும் டெகான் கெஸ்ட் ஹவுஸ் உரிமையாளனின் தைரியம் மங்கிக் கொண்டே வந்தது. திடீரென அவன் பாட்கேயைப் பார்த்த போது அவன் கூட்டத்திலிருந்து 30 அடி தூரம் விலகியிருந்தான். 'அவன் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறான்? அவன் ஏன் எதையும் செய்யவில்லை?' கார்காரே நினைத்துப் பார்த்தான்.

ஓட்டம் பிடிப்பதைத் தவிர வேறெதையும் செய்யும் நோக்கத்தில் பாட்கே இல்லை. 37 முறை கைதாகியிருந்த அந்த மனிதனுக்கு மேலும் ஒரு முறை கைதாகும் உத்தேசம் இல்லை. அவன் ஒரு லட்சியவாதியோ அரசியல் தீவிரவாதியோ அல்ல; ஒரு வியாபாரிதான். அவனது வேலை ஆயுதங்களை

விற்பதுதான்; அவற்றைப் பயன்படுத்துவதில்லை என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். கார்காரேயின் பார்வையில் படாமல் அவன் கூட்டத்துக்குள் நழுவினான்.

பிர்லா மாளிகையின் பின்புறத்தில் செங்கல் சுவருக்குப் பின்னால் விளையாடிக் கொண்டிருந்த 3 வயது சிறுவனின் தாயார், மதன்லால் வெடிகுண்டில் தீயை வைத்துவிட்டு அங்கிருந்து நடந்து செல்வதைப் பார்த்து விட்டார். அவனை விமானப்படை அதிகாரி ஒருவரிடம் அந்தப் பெண் சுட்டிக்காட்டினார். 'அவன் தான்! அவன் தான்!' அவர் அலறினார்.

கதவின் தாழ்ப்பாளைத் திறக்கும் போராட்டத்தில் ஒரு வழியாக வெற்றி பெற்ற கோபால் அறையிலிருந்து வெளியேறி சூரிய வெளிச்சத்தைக் கண்டான். அந்தப் பெண்ணின் அலறலையும் கேட்டான். நீலச் சீருடையில் இருந்த ஒருவர் உட்பட இரண்டு பேர் மதன்லாலை மைதானத்துக்கு இழுத்துச் செல்வதையும் அவன் பார்த்தான். அவனது சகோதரனையும் ஆப்தேயையும் கூட அந்தக் கூட்டத்தில் அவன் கண்டுபிடித்து விட்டான். அவர்கள் குழப்பத்துடன் காணப்பட்டனர். ஆனால் அவர்களின் தோல்வி பற்றி முழுமையாக இன்னும் உணரவில்லை. கோபால் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். தங்களின் முயற்சி படுதோல்வியடைந்ததை உணர்ந்த அந்த மூன்று சித்பவா பிராமணர் களும் ஒரு நொடி கூட தயக்கம் காட்டாமல், ஆப்தே வாடகைக்கு அமர்த்தி யிருந்த பச்சைநிற செவ்ரோலெட் டாக்சியை நோக்கிச் சென்றார்கள். தங்களுடன் வந்த மற்ற சதிகாரர்கள் பற்றி யோசிக்காமல், காருக்குள் ஏறினர். எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாக டில்லி நகருக்குச் செல்லுமாறு ஓட்டுநரிடம் கூறினர்.

ஒரு சில நொடிகளுக்குப் பின் அந்தத் தோட்டத்தின் ஓர் ஓரமாகக் கார் சென்று கொண்டிருந்தபோது அந்த மாளிகையின் முன்பக்கத்தில் அமைந்தி ருந்த கூடாரத்துக்கு மதன்லாலைக் காவல்துறையினர் கொண்டு செல்வதைக் கார்காரே கண்டான். அவனிடமிருந்த எல்லாத் தீர்மானங்களும் இப்போது மறைந்துவிட்டன. எறி குண்டின் மீதான அவனது பிடியைத் தளர்த்தினான். அவனது ஒரே எண்ணம் எப்படித் தப்பிப்பது என்பது மட்டும்தான்.

பிரார்த்தனை மேடையில் காந்தி ஒரு வழியாக மீண்டும் அமைதியை ஏற்படுத்தினார். 'பைத்தியக்காரனான ஒரு பஞ்சாபி அகதி' அவருக்கு எதிராக ஏதோ ஒரு காரியத்தைச் செய்து விட்டான் என்ற வதந்தி கூட்டத்தில் பரவிய போது அவர் அமைதியாக அறிவித்தார். 'நான் இப்போது பாகிஸ்தானுக்குப் புறப்படக் கூடும். அரசும் டாக்டர்களும் எனக்கு அனுமதி அளித்துவிட்டால் நான் உடனடியாகப் புறப்பட்டுவிடுவேன்.'

சற்றுமுன் அவருக்கு நிகழவிருந்த அபாயத்திலிருந்து அதிசயிக்கும் வகையில் தப்பித்தது பற்றி ஏதும் அறியாதவராய், மகிழ்ச்சி நிறைந்த புன்னகையுடன் இருந்த காந்தி மீண்டும் அவரது நாற்காலியில் அமரவைக்கப்பட்டு பிரார்த்தனைக் கூட்டத்திலிருந்து வெற்றிகரமாகத் தூக்கிச் செல்லப்பட்டார்.

நகரை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த டாக்சியில் அமர்ந்திருந்த ஆப்தேயை யும் கோட்சேயையும் தோல்வியுணர்வு சூழ்ந்து கொண்டு தாக்கியது. கைகளுக்குள் தலையைப் புதைத்துக் கொண்ட நாதுராம் கோட்சேக்குத்

தலைவலி தாங்க முடியவில்லை. அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்க வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கு எந்தவித யோசனையும் இல்லை. ஆப்தேயின் திட்டம் முழுமையானது என்பதில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்ததால் அதன் தோல்விக்கான வாய்ப்பு பற்றி அவர்கள் கற்பனை செய்திருக்கவுமில்லை. அவர்கள் இப்போது மிகப் பெரும் ஆபத்தில் சிக்கியுள்ளனர். அவர்களின் பெயர்கள் மதன்லாலுக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் பூனாவிலிருந்து வருகிறார்கள் என்பதும், அவர்கள் நடத்தும் செய்தித்தாள் பற்றியும் அவனுக்குத் தெரியும். இவற்றைக் கொண்டு அவர்களைக் கண்டுபிடிக்க காவல் துறைக்கு வெகுநேரம் பிடிக்காது.

கசப்பான தோல்வியின் துன்பத்தோடு அவமானமும் சேர்ந்து அவர்களை வாட்டியது. இந்த முக்கியமான பணிக்குப் பணம் பெற்று வந்த பம்பாயிலுள்ள வெறியர்களுக்கு அளித்த வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்றத் தவறி விட்டனர். அனைத்துக்கும் மேலாக சவார்க்கர் சதனில் அந்தப் பிடிவாதக்காரர் முன் ஏற்றுக் கொண்ட சபதத்தையும் அவர்கள் நிறைவேற்றவில்லை.

மயக்க நிலையிலிருந்து விழித்துக் கொண்ட நாதுராம் அவனது தம்பியிடம் பேசினான். பூனாவுக்குச் சென்று தாங்கள் அங்கே இருந்தது போன்ற ஆதாரங்களை உருவாக்குமாறு மராத்தி மொழியில் தெரிவித்தான். கவலைப்பட கோபாலுக்கு குடும்பம் இருந்தது. அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி ஆப்தேயும் நாதுராமும் முடிவு செய்ய விரும்தனர். காரை நிறுத்துமாறு ஆப்தே ஓட்டுநரிடம் கூறினான். கோபால் காரிலிருந்து இறங்கினான். அவனது சகோதரன் மற்றும் ஆப்தேயுடன் டாக்சி, போக்குவரத்துக்குள் புகுந்து மறைந்தது.

இரண்டு நாட்களுக்கு முன் உண்ணாவிரதத்தை முடித்து மரணத்திலிருந்து காந்தி தப்பித்த போது இருந்த மன நிலையே இப்போதும் பிர்லா மாளிகையில் இருந்தது. மகாத்மாவுக்கு வாழ்த்து தெரிவித்து தந்திகள் வந்து குவிந்தன. தொடர்ந்து தொலைபேசி மணி ஒலித்தது. அவரைத் தழுவி மகிழ்ச்சி தெரிவிக்க நேருவும் படேலும் விரைந்தனர். ஏராளமான பார்வையாளர்களும் அவர் தங்கியிருந்த இடத்துக்கு வந்தார்கள். அவர்களில் முதலில் வந்தவர் எட்வினா மவுண்ட்பேட்டன்.

'நான் தீரச் செயல் எதையும் செய்து விடவில்லை' என்று முன்னாள் வைஸ்ராயினியிடம் காந்தி புன்னகையோடு கூறினார். உண்மையில் மதன்லாலின் குண்டு வெடிப்பை ராணுவப் பிரிவு ஒன்றின் பயிற்சி என்றுதான் அவர் எண்ணினார்:

'ம்.. அவர் பெரு மூச்சு விட்டார். 'ஒருவேளை யாராவது ஒருவர் என்னை மிக அருகேயிருந்து துப்பாக்கியால் சுட்டு, ராமநாமத்தைத் தொடர்ந்து உச்சரித்துக் கொண்டே, அவரது தோட்டாக்களை நான் மகிழ்ச்சியோடு எதிர் கொள்ள நேர்ந்தால் அப்போதுதான் நான் உங்களின் வாழ்த்துக்களுக்கு அருகதை உள்ளவனாவேன்!'

டில்லி காவல் துறையின் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் டி. டபிள்யூ. மெஹ்ரா (D.W. Mehra)வின் படுக்கைக்கு மூன்று தகவல்கள் வந்தன. அன்று மாலை காந்தியைக் கொல்ல நடந்த முயற்சி பற்றி விசாரணை நடத்த வேண்டிய பொறுப்பு முறைப்படி அவருக்குத்தான் இருந்தது. இப்போது அவர் ஃப்ளூ

நோய் பாதித்து 103 டிகிரி ஜுரத்தில் படுக்கையில் கிடந்தார். காந்தியின் பிரார்த்தனைக் கூட்டத்தில் யாரோ ஒருவர் குண்டினை வெடிக்கச் செய்தார்; இதில் சம்பந்தப்பட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று முதல் செய்தி வந்து இரண்டு மணி நேரத்துக்குப்பின் வந்த இரண்டாவது செய்தியில், குண்டு வீசியவர் விசாரணைக்கு ஒத்துழைக்க மறுக்கிறார் என்ற தகவல் இருந்தது. மூன்றாந்தர நடவடிக்கைகளுக்கு, சித்திரவதைகளுக்கு மெஹ்ரா அனுமதி அளித்தார்.

புலனாய்வு முறையைத் தீர்மானிக்கப் போவதாக இருந்தது அவர் பெற்ற மூன்றாவதும் கடைசியுமான செய்தி. டில்லி காவல்துறையில் பெயரளவுக்குத் தலைவராக இருந்த டி.ஜே. சஞ்சீவி (D.J.Sanjevi) யிடமிருந்துதான் அந்தச் செய்தி வந்திருந்தது. அவர் அரசியல் சார்ந்த காவல்துறை அதிகாரியாக இருந்தார். அவரது உண்மையான பணி இந்தியாவின் மத்திய புலனாய்வுக் குழுவுக்கு வழிகாட்டுவதாகும். இரண்டு பேருக்கும் இடையே வெளியே சொல்ல முடியாத ஒரு ஒப்பந்தம் இருந்தது. டில்லி நகரின் உயர்பதவிக்கு சஞ்சீவி ஏற்பாடு செய்யப் பட்டவர்தான். இதற்கான காரணத்தை மெஹ்ராவுக்கு அவர் இப்படி விளக்கியிருந்தார். 'நான் ஓய்வு பெறுவதற்கு முன் எனது காரில் கொடி பறக்க வேண்டும்; ஒரு ஜீப்பில் பாதுகாவலர்கள் வர வேண்டும்; அலுவலகத்துக்கு நான் செல்லும் போது ஆயுதங்களைக் கொண்ட காவலர்கள் மரியாதை செலுத்த வேண்டும் என்பதே என் விருப்பம்.' டில்லி நகரக் காவல்துறைத் தலைவர் என்று தன்னைத்தானே ஆக்கிக் கொண்டதன் மூலம் இதையெல்லாம் அவர் பெற்றார். ஆனாலும் காவல்துறையை நிர்வகிக்கும் பொறுப்பை அவர் மெஹ்ராவிடமே விட்டிருந்தார். இப்போது மெஹ்ரா வியப்படையும்படி சஞ்சீவி அவருக்கு வெளிப்படையாகவே தெரிவித்தார். 'மதன்லால் வழக்குப் பற்றி கவலைப்பட வேண்டாம். இதன் புலன் விசாரணையை நானே கவனித்துக் கொள்கிறேன்.'

பார்லிமெண்ட் தெரு காவல்நிலையத்தில் உள்ள அறையில், மதன்லால் அவனது குற்றச் செயலுக்கான விலையைப் பெறத் துவங்கியிருந்தான். அந்த அறைக்கு அவனைக் கொண்டு வந்த மூன்று காவலர்கள் நடத்திய இரண்டு மணி நேர விசாரணையின் போது பட்ட அடிகளால் களைத்துப் போன அவன் காவலர் களின் நெருக்குதலுக்கு உட்பட்டு ஒத்துழைக்க ஆரம்பித்தான். தன்னுடன் வந்த சதிகாரர்களுக்கு இன்னமும் மதன்லால் விசுவாசமாகவே இருந்தான். அவன் மட்டுமே செயல்பட்டான் என்பதுதான் உண்மை என்றாலும், அவர்கள் மீண்டும் முயற்சிப்பார்கள் என்பதில் அவன் உறுதியாக இருந்தான். அவர்களுக்கு வெற்றி கிடைக்கும் வகையில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நேரம் பேச மறுப்பதென்று அவன் தீர்மானித்திருந்தான்.

இதையும் மீறி அவன் ஆரம்பத்திலேயே ஒரு முக்கியமான தகவலைத் தெரிவித்து விட்டான். ஒரு பைத்தியக்கார பஞ்சாபி அகதியாகத் தான் மட்டுமே இந்தக் காரியத்தில் ஈடுபடவில்லையென்பதையும் கொலைகாரர்கள் குழுவில் தானும் ஒருவன் என்பதையும் அவன் ஒப்புக் கொண்டான். இதில் ஏழுபேருக்குத் தொடர்பிருக்கிறது என்பதையும் அவன் தெரிவித்தான். அவர்கள் காந்தியைக் கொல்ல ஒப்புக் கொண்டார்கள். காரணம் 'அவர் மசூதிகளை விட்டுத் தரும்படி அகதிகளை வற்புறுத்தினார், பாகிஸ்தானுக்குரிய ரூபாயைக் கொடுப்பதற்குப்

பொறுப்பேற்றார்.' அவரால் முடிந்த அனைத்து வழியிலும் முஸ்லீம்களைப் பாதுகாக்க அவர் உதவி செய்தார்.

பின்னர் மற்றவர்கள் தப்பிச் செல்ல இவ்வளவு நேரம் போதுமென்று கணக்கிட்ட அவன் டில்லியில் அவர்கள் மேற்கொண்ட தீங்கற்ற நடவடிக்கைகள் பற்றி விவரித்தான். திடீரென்று தற்பெருமையைக் காட்டுவது போல், இரண்டாவது தகவல் ஒன்றைக் காவல்துறைக்குக் கொடுத்தான். தனது சகாக்களுடன் சவார்க்கர் சதனில் இருந்ததை அவன் ஒப்புக் கொண்டான். புகழ் பெற்ற அந்த அரசியல் தலைவரைத் தான் தனிப்பட்ட முறையில் சந்தித்தது பற்றியும் அவன் பெருமைபட்டுக் கொண்டான். பின்னர் அவனது கூட்டாளிகள் ஒவ்வொருவர் பற்றியும் விவரிக்குமாறு காவலர்கள் நெருக்கினர். அவனது தகவல்கள் அவ்வளவாகப் பயன்படவில்லை. அவன் கார்காரேயின் பெயரை மட்டும் தெரிவித்தான். அதையும் கூட 'கிர்க்ரீ' என்று தவறாகத் தெரிவித்துச் சமாளித்தான்.

கோட்சே பற்றி அவன் அளித்த விவரம் மூன்றாவது முக்கியத் தகவலாக இருந்தது. அவனது தொழில் பற்றிய தகவலை அவன் கூறினான். அவன் 'ராஷ்ட்ரீய அல்லது அக்ரானி மராத்தி மொழி செய்தித்தாளின் ஆசிரியராக' இருந்தான் என்றும் அவன் கூறினான். செய்தித்தாளின் பெயர் அரை குறையாக இருந்தது; உச்சரிப்பும் தவறாக இருந்தது. இருப்பினும் இந்த வார்த்தைகள் காவல்துறையினருக்குக் கிடைத்த மிகவும் மதிப்பு மிக்கத் தகவல்களாக இருந்தன.

விசாரணைத் தொடர்ந்து கொண்டிருந்த போதே, காவல்துறையினர் இந்து மகாசபா, மெரீனா ஹோட்டல் ஆகிய இடங்களில் தேடுதலைத் தீவிரமாக்கினர் அவர்கள் எதையும் கண்டுபிடிக்கவில்லை. பாட்கேயும் அவனது ஊழியரும் பல மைல் தூரத்துக்கு அப்பால் பூனாவை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தனர். கார்காரேயும் கோபால் கோட்சேயும் தவறானப் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு பழைய டில்லியில் ஒரு ஹோட்டலில் இருந்தனர். ஆப்தேயும் நாதுராம் கோட்சேயும், சில மணி நேரங்களுக்கு முன் மெரீனாவிலிருந்து மறைந்து விட்டார்கள். இருப்பினும் அதன் 40ஆம் எண் அறையிலிருந்த மேசை மீது நான்காவது முக்கிய தகவல் ஒன்றைக் காவல்துறையினர் கண்டறிந்தனர். காந்தி உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்வதற்காக டில்லியின் தலைவர்கள் உருவாக்கிய ஒப்பந்தத்தைக் கண்டனம் செய்யும் அறிக்கை அது. இதில் அஷுதோஷ் லஹரி (Ashutosh Lahiri) என்பவரின் கையெழுத்திருந்தது. இவர் இந்து மகாசபாவின் நிர்வாகிகளில் ஒருவர் ஆப்தேயையும் கோட்சேயையும் இவர் எட்டு ஆண்டுகளாக நன்கு அறிவார் இவர்கள் இருவரும், சவார்க்கர் ஆதரவு மராத்தி செய்தி ஏடான இந்து ராஷ்ட்ராவின் நிர்வாகி மற்றும் ஆசிரியர் என்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும்.

இரவு நேரம் என்பதற்காக மதன்லாலிடம் மேற்கொண்ட விசாரணையைக் காவலர்கள் நள்ளிரவில் முடித்துக் கொண்டனர். அந்த வழக்கில் அன்றாடப் பதிவின் முதல் பணியையும் அவர்கள் முடித்தனர். அவர்களின் ஏழுமணி நேரப் பணிக்கு நல்ல பலன் கிடைத்ததாக அவர்கள் திருப்தி அடைந்ததில் நியாயம் இருந்தது. சதித்திட்டம் ஒன்றை சந்திக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்தனர்

இதில் எவ்வளவு பேர் ஈடுபட்டுள்ளனர் என்பதும் அவர்களுக்குத் தெரிந்தது. மே மாதத்திலிருந்து காவல்துறை கண்காணிப்பில் இருந்து வரும் வீர சவார்க்கரின் ஆதரவாளர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் தெரிந்துள்ளது. கொஞ்சம் பொறுமையுடன் முயற்சி செய்தால், நாதுராம் கோட்சே அவளது கூட்டாளி ஆப்தே ஆகியோரை அடையாளம் கண்டு பிடிப்பதற்கான தகவலையும் காவல்துறையினர் பெற்றுள்ளனர். இது உற்சாக மளிக்கும் செயல்பாடுதான். அன்றிரவே சதிகாரர்கள் பற்றிய அடையாளங்கள் அறியப்பட்ட நிலையில் அவர்களைக் கைது செய்ய டில்லியில் இருந்த சாதாரண காவலருக்குக் கூட வெகுநேரம் பிடித்திருக்காது. ஆனால் நன்றாகத் தொடங்கப்பட்ட இந்த விசாரணை பின்னர் முறையாகத் தொடரப்படாமலும், தீவிரமிழந்தும் போனது. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தியாவில் இது கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது.

பத்தொன்பது

# ‘போலீஸ் நம்மைப் பிடிக்கும் முன் நாம் காந்தியை முடித்துவிட வேண்டும்’

*புது டில்லி மற்றும் பம்பாய், 21-29 ஜனவரி 1948*

*பாதியளவு சாப்பிட்ட பிஸ்கட் கோபால் கோட்சேயின் வாயில் மேல் அண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. அவன் கண்முன் தோன்றிய காட்சி திடீரென்று வாயை உலரச் செய்துவிட்டது. கையில் விலங்கிடப்பட்ட, கண்களுக்கு மட்டும் ஓட்டைகள் விடப்பட்டு தலையை மறைத்து முக்காடு போடப்பட்ட ஒரு மனிதனும் அவனைச் சூழ்ந்த சில காவலர்களும், பழைய டில்லி ரயில் நிலையத்தில் உணவு உண்ணும் இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அங்கேதான் கோபால் கோட்சேயும், கார்காரேயும் நின்றிருந்தனர். அந்த நபரின் கசங்கிய நீல நிற சூட்டினைக் கொண்டு அடையாளம் அறிந்த கோபால் சிலையாகிப் போனான். காந்தியைக் கொல்வதற்காக ஒரு நாளைக்குமுன் மதன்லால் பெருமையுடன் அணிந்த சூட்தான் அது.*

*முடிந்தவரை யாருக்கும் தெரியாத வகையில் அந்த உணவு மேசைக்குப் பின்னால் உள்ள கருநிற மரப்பலகைகளினூடே மறைந்து கொள்வதற்காக அவன் சென்றான். இறுக்கமான முக்காட்டுடன் மதன்லால் தொடர்ந்து நடந்தான். அவனுடன் சேர்ந்து சதி செய்தவர்களைக் கண்டுபிடிப்பதற்காக டில்லி நிலையத்தில் ரயில் ஏறும் பயணிகளை நோட்டமிட அன்று அதிகாலையிலிருந்து ஐந்தாவது முறையாக காவலர்கள் அவனை நிர்ப்பந்தம் செய்து அழைத்து வந்தனர்.*

*பசியோடும், களைப்பால் சோர்ந்தும் காணப்பட்ட அவன், தலையில் சாக்குத் துணி கட்டப்பட்டிருந்ததால் மங்கலானப் பார்வையுடன் பம்பாய் எக்ஸ்பிரசின் பெட்டிகளை நோக்கி ஓடிவரும் மக்கள் கூட்டத்தை உற்று கவனித்துக் கொண்டிருந்தான். உணவு உண்ணும் கவுண்டர் மீது முதுகைச் சாய்த்தபடி நின்றிருந்த பரிச்சயமான கார்காரேயைக் கண்கள் கண்டதும் அந்தப் பக்கம் நடக்கத் துவங்கினான். அவன் தப்ப நினைக்கிறான் என்று எண்ணிய ஒரு காவலர் அவனது கையைப் பிடித்துக் கொண்டார். கவனக் குறைவாகத் தான் நடந்து கொண்டதை மறைப்பதற்காக மதன்லால் இருமி சமாளித்தான். பின்னர் கோட்சேயையும் கார்காரேயையும் கடந்து, காத்துக் கொண்டிருக்கும் பம்பாய்*

ரயிலை நோக்கி நேராகச் சென்றான். டில்லியிலிருந்த அந்தக் கடைசி இரண்டு சதிகாரர்களும் யாரும் கண்டுபிடிக்காத வகையில் தப்பிச் சென்றனர்.

மதன்லாலின் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் பின் காவல்துறையினரின் மிக முக்கிய பணியாக இருந்தது காந்தியின் பாதுகாப்பை உறுதி செய்வதுதான். பெயரளவுக்குத் தலைவராக இருந்த சஞ்சீவி புலன்விசாரணைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாலும், காந்தியின் பாதுகாப்புப் பொறுப்பு, ஃப்ளூ நோயால் பாதிக்கப்பட்ட டி.டபிள்யூ மெஹ்ராவிடம் தான் இன்னமும் இருந்தது. அவரது காய்ச்சல் இப்போதும் கூடுதலாக இருந்தபோதும் கம்பளி மேலங்கிக்குள் தன்னை மறைத்துக் கொண்டு அன்று நண்பகலில் பிர்லா மாளிகைக்கு மெஹ்ரா நேரில் வந்திருந்தார்.

இந்தியாவின் தலைவருக்கு வாழ்த்துத் தெரிவிக்க அவர் வணங்கியபோது 'இரட்டை வாழ்த்துக்கள்' என்றார்.

'ஏன் இரட்டை வாழ்த்துக்கள்?' காந்தி வினவினார்.

'ஏனென்றால், உங்கள் உண்ணாவிரதத்தை வெற்றிகரமாக முடித்தீர்கள். இதன் மூலம் எங்கள் காவல்துறை செய்ய முடியாததை நீங்கள் செய்தீர்கள். டில்லியில் அமைதியைக் கொண்டு வந்தீர்கள். இரண்டாவதாக, குண்டு வெடிப்பிலிருந்து நீங்கள் தப்பினீர்கள்' என்று மெஹ்ரா சொன்னார்.

'சகோதரரே, எனது உயிர் கடவுளின் கையில் இருக்கிறது' என்று பொக்கைவாய் புன் சிரிப்புடன் காந்தி பதிலளித்தார். மகாத்மாவின் பாதுகாப்புப் பொறுப்பை தன்கையில் எடுத்துக் கொள்வதற்காகத்தான் மெஹ்ரா பிர்லா மாளிகைக்குச் சென்றார். அவரைக் கொல்வதற்கு முயற்சி செய்த மனிதன் தனியாகச் செயல்படவில்லை என்பது பற்றி காந்தியிடம் மெஹ்ரா விளக்கினார். ஏழு பேர் கொண்ட சதிகாரக் குழுவில் அவனும் ஒருவன். மற்றவர்கள் மீண்டும் முயற்சி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே பிர்லா மாளிகைக்கான பாதுகாப்பை அதிகரிக்கவும், பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வரும் சந்தேகத்துக் குரியவர்களை சோதனையிடவும் அவரின் அனுமதியை மெஹ்ரா கோரினார்.

'இதற்கு நான் ஒப்பமாட்டேன்' காந்தி ஆவேசத்துடன் கூறினார். 'கோயிலுக்கோ அல்லது தேவாலயத்துக்கோ வழிபாட்டுக்குச் செல்லும் மக்களை நீங்கள் சோதனை செய்வீர்களா?'

'செய்யமாட்டோம் ஐயா' மெஹ்ரா பதிலளித்தார். 'ஆனால், ஒரு கொலைகாரனின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இலக்காக அங்கு ஒருவரும் இருக்கமாட்டார்களே?'

'ராமன் தான் எனக்கு ஒரே பாதுகாப்பு' காந்தி சூடாகப் பதில் கூறினார். 'அவன் எனது வாழ்வை முடிக்கவிரும்பினால், எவராலும் என்னைப் பாதுகாக்க முடியாது. இங்கே எனக்குக் காவலாக ஒரு மில்லியன் (பத்துலட்சம்) காவலர்களை நிறுத்திவைத்தாலும் கூட அது நடக்காது. இந்த நாட்டை ஆள்கின்றவர்கள், எனது அஹிம்சை மீது நம்பிக்கை வைக்கவில்லை. அவர்கள் நினைக்கிறார்கள் எனது வாழ்வைக் காவல்துறை பாதுகாத்து விடும் என்று. சரி, எனக்குப் பாதுகாப்பு ராமன்தான். உங்களின் காவலர்களை நிறுத்தியோ உள்ளே வரும் மக்களைத் தடுத்து நிறுத்தியோ எனது பிரார்த்தனைக்

*கூட்டத்தின் புனிதத்தை நீங்கள் கெடுக்க வேண்டாம். அப்படி நீங்கள் செய்தால், நான் டில்லியை விட்டுச் சென்றுவிடுவேன். நான் சென்றதற்கு நீங்கள் தான் காரணம் என்பதையும் வெளிப்படையாக அறிவித்து விடுவேன்.'*

மெஹ்ரா சோர்வடைந்தார். காந்தியைப் பற்றி அவர் நன்கறிவார். அவரது மனதை மாற்ற முடியாது என்பதை அவர் புரிந்து கொண்டார். மகாத்மா விரும்பாவிட்டாலும் அவரைப் பாதுகாக்க ஒரு வழியை அவர் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

'குறைந்தபட்சம், தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு நாளும் பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வர எனக்காவது அனுமதி அளிப்பீர்களா?' மெஹ்ரா வினவினார்.

'ஓ... தனி நபர் என்கிற முறையில் நீங்கள் எப்போதும் வரவேற்கப்படுவீர்கள்' என்று காந்தி கூறினார்.

காய்ச்சல் இருந்தபோதும், ஐந்து மணியாகப் பத்து நிமிடம் இருக்கும் போது மெஹ்ரா சாதாரண உடையில் மீண்டும் பிர்லா மாளிகைக்கு வந்தார். இந்த மாளிகையைச் சுற்றி காவலர்களின் எண்ணிக்கையை ஐந்திலிருந்து முப்பத்தாறாக அவர் ஏற்கெனவே அதிகரித்திருந்தார். பெரும்பாலும் சாதாரண உடையில் இருந்த இவர்களுக்கு மக்கள் கூட்டத்தோடு கலந்து விடுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. வெப்பர் அன்ட் ஸ்காட் .38 ரக துப்பாக்கி, தோட்டாக்கள் நிறைக்கப்பட்டு தயார் நிலையில் மெஹ்ராவின் கோட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. எல்லைப்புறத்தில் பணியாற்றிய அந்த மூத்த அதிகாரி ஐந்தே நொடிகளில் இடுப்பிலிருந்து துப்பாக்கியை எடுத்து இலக்கு மையத்தில் மூன்று தோட்டாக்களை நிறைத்து இருபது அடி தூரத்தில் உள்ளவரைக் குறிபார்த்துச் சுட்டுவிடும் திறமையுள்ளவர். மகாத்மா வீட்டை விட்டு பிரார்த்தனை மைதானத்துக்குப் புறப்பட்ட போது மெஹ்ரா அவரது இடத்தை அடைந்தார். காந்தி டில்லியில் இருக்கும்வரை ஒவ்வொருநாள் மாலையிலும் இந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளவே அவர் திட்டமிட்டிருந்தார். அது காந்தியின் வலப்பக்கத்தில் இருந்த இடம். அங்கே தாம் இருக்கும் வரை எந்தக் கொலைகாரனும் காந்தியைக் கொல்லப் போவதில்லை என்று அந்த மூத்தக் காவல்துறை அதிகாரி நம்பிக்கை கொண்டிருந்தார்.

காந்தி மீண்டும் பிரார்த்தனை மேடைக்குத் தூக்கிச் செல்லப்பட்டார். அவரின் முதல் வார்த்தைகள் பிரிவினையால் தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் ஏற்படுத்திய துன்பங்களால் வெறுப்புற்றுப் பழிவாங்குதலுக்குச் சபதமேற்ற இளம் அகதி பற்றியதாக இருந்தன. 'வெடி குண்டு வீசிய அந்த நபரை வெறுக்கவோ கண்டிக்கவோ செய்யாதீர்கள்' என்று காந்தி வேண்டுகோள் விடுத்தார். மதன்லாலை விடுதலை செய்யுமாறு காவலர்களை அவர் வற்புறுத்தினார். 'நாம் தீயவர் என்று நினைப்பதாலேயே ஒருவரைத் தண்டிக்கும் உரிமை நமக்கு இல்லை'

காந்தி மீதான கொலை முயற்சி பற்றி எதிர்பாராத விதமாகப் புலனாய்வை மேற்கொண்ட அந்த அதிகாரிக்கு ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்தது. அவர் விசாரிக்க வேண்டிய சதித்திட்டம் பம்பாய் மாகாணத்தில் உருவாக்கப்பட்டிருந்தது. சதிகாரர்கள் அனைவரும் மகாராஷ்ட்ராக்காரர்கள் என்பதை மதன்லால் கோடி காட்டியிருந்தான். சவார்க்கரின் இல்லத்துக்குச் சென்றதை

அவன் ஒப்புக் கொண்டிருப்பதால், அவனே பம்பாயிலிருந்துதான் டில்லிக்கு வந்திருக்கிறான். எனவே சஞ்சீவியின் முதல் நடவடிக்கை, பம்பாய் காவல் துறையினரை உஷார்ப்படுத்தி இந்த வழக்கு விசாரணையை யாராவது ஒருவரிடம் ஒப்படைக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்வதாக இருந்தது. பம்பாய் புலன்விசாரணையை அவருடன் ஒருங்கிணைப்பதற்காகவும், டில்லியில் கண்டறியப்பட்ட 'அனைத்து உண்மைகளையும்', இந்த வழக்கிற் காகப் பம்பாய் காவல்துறையில் நியமிக்கப்படுபவருக்கு அளிப்பதற்காகவும், டில்லியைச் சேர்ந்த இரண்டு சி.ஐ.டி. அதிகாரிகளை பம்பாய்க்கு விமானத்தில் புறப்படுமாறு சஞ்சீவி உத்தரவிட்டார்.

காந்தி மீதான கொலை முயற்சிப் புலன் விசாரணையில் இவர்களின் பயணம் விவரிக்க முடியாத முதலாவது பெரும் தவறை ஏற்படுத்தியது. முதல்நாள் நள்ளிரவில் மதன்லால் அளித்த பூர்வாங்க வாக்கு மூலம் முழுமையாக்கப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. மிக முக்கியமான அந்தப் புலன் விசாரணை அறிக்கையின் நகலை டில்லி காவல்துறையின் இரண்டு அதிகாரிகளும் தங்களுடன் கொண்டுசெல்லத் தவறிவிட்டனர். அவர்கள் கொண்டு சென்ற ஒரே ஆவணம், நான்குக்கு இரண்டு என்ற அளவுள்ள ஒரு அட்டையில் கையால் எழுதப்பட்ட சில முக்கிய தகவல்கள் மட்டும்தான். இந்தத் தகவல்களில், கார்காரேயின் பெயரை 'கிர்க்ரீ' எனத் தவறாக உச்சரித்ததும் அடங்கும். ஆப்தே மற்றும் கோட்சேயின் செய்தி ஏடு பற்றி ஓரளவு அடையாளம் காட்டும் வகையில் டில்லி காவல்துறையிடம் இருந்த மிக முக்கியமான தகவலை அவர்கள் எடுத்துச் செல்ல தவறிவிட்டனர்.

அவர்களின் அறிக்கை யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ, அவரிடம் அவர்கள் கொண்டு சென்ற சிறிய துண்டுக் காகிதத்தை விடவும் அதிகமான அளவிலும் சிறப்பானதாகவும் தகவல்கள் ஏற்கெனவே இருந்தன. 32 வயதான ஜாம்ஷிட் 'ஜிம்மி' நகர்வாலா பம்பாய் காவல்துறை துணை ஆணையராக இருந்தார். உள்ளூர் அரசியல் புலனாய்வு சேகரிப்பு மற்றும் வெளிநாட்டுக் காரர்கள் கண்காணிப்புக்குரிய பம்பாய் சிஐடி சிறப்புப் பிரிவின் ஒன்று மற்றும் இரண்டாவது துணைப் பிரிவுகளுக்கு இவர் அதிகாரியாகப் பொறுப்பு வகித்தார். மதன்லால் வழக்கு விசாரணைக்கு நகர்வாலா நியமிக்கப்பட்டிருந்தார். இருப்பினும் புலனாய்வில் உள்ள அவரது திறமைக்காக இது ஒப்படைக்கப் படவில்லை. புலனாய்வுக்கு அதிகாரிகளைத் தெரிவு செய்யும்போது இந்தியக் காவல்துறையில் இருந்த மாபெரும் ஊசலாட்டமே இதற்குக் காரணம். இது அவரின் மதம் சம்பந்தப்பட்டதாக இருந்தது. இந்த வழக்கை ஒரு முஸ்லீமிடம் ஒப்படைப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. இந்து ஒருவரிடம் இதனை ஒப்படைத்தால், அவரிடம் ரகசியமாக காந்தி எதிர்ப்பு உணர்வுகள் இருக்கக்கூடும். நல்ல வேளையாக நகர்வாலா இரண்டில் எதையும் சேர்ந்தவர் இல்லை. அவர் ஒரு பார்சி.

பம்பாய் மாகாணத்தின் உள்துறை அமைச்சராக இருந்த மொரார்ஜி தேசாய், விலை மதிப்பற்ற அந்தச் சிறிய தகவல் காகிதத்துடன் இந்த வழக்கின் விசாரணையை அவரிடம் ஒப்படைத்தார். ஒரு வாரத்துக்கு முன்புதான் காந்தியைக் கொல்லும் திட்டம் பற்றி மதன்லால் பெருமைப்பட்டுக் கொண்ட

*தகவல் ஒரு வட்டாரத்திலிருந்து தேசாய்க்குக் கிடைத்தது. மதன்லாலின் பிரதானக் கூட்டாளியின் பெயர் கார்காரே என்று அந்த வட்டாரம் தெரிவித்தது. இவன் அகமது நகரைச் சேர்ந்தவன்.**

*அவனை அடையாளம் காணுமாறு காவல் துறையை நகர்வாலா முடுக்கிவிட்டார். காந்தியைக் கொல்ல முயற்சி செய்தவர்கள் உடனேயோ சற்றுத் தாமதமாகவோ, தென்னை மற்றும் பேரீச்சை மரங்கள் நிறைந்த கெலுக்சர் சாலை வீட்டுக்குச் சென்றிருப்பார்கள் என்பதில் அந்த இளம் அதிகாரிக்குக் கொஞ்சமும் சந்தேகம் இருக்கவில்லை. ஒரு வாரத்துக்கு முன் மதன்லால் பயணம் செய்த அடிப்படையில் சவார்க்கரைக் கைது செய்ய அனுமதி அளிக்குமாறு தேசாயிடம் நகர்வாலா கேட்டுக் கொண்டார். கோபம் கொப்பளிக்கும் கேள்வியுடன் இந்தக் கோரிக்கையை தேசாய் நிராகரித்தார். 'நீங்கள் என்ன பைத்தியமா? இந்த மாகாணம் முழுவதும் கொழுந்து விட்டு எரிவதை நான் விரும்புவேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?'*

*சவார்க்கரை சிறைச் சாலை அறைக்குள் அடைத்துவைக்க நகர்வாலாவால் முடியாமல் போனாலும், குறைந்தபட்சம் பிரிட்டிஷார் ஏற்படுத்தியிருந்த ஒரு சாதுர்யமான அமைப்பிடம் அவரை ஒப்படைக்க முடிந்தது. அதுதான் பம்பாய் சிஐடி துறையின் பெருமைமிகு கண்காணிப்புப் பிரிவு. இந்தப் பிரிவில் ஆண்களும் பெண்களுமாக 150 பேர் இருந்தார்கள். இவர்கள் யார் யார் என்பது அவர்களின் தலைவருக்கு மட்டுமே தெரியும். பார்வையற்றோர், உடல் ஊனமுற்ற பிச்சைக்காரர்கள், பர்தா அணிந்த முஸ்லீம் பெண்கள், பழம் விற்போர், துப்புரவுத் தொழிலாளர்கள் என்று பல வகையில் இருந்த இவர்கள், கடந்த கால் நூற்றாண்டு காலமாக பம்பாயின் அரசியல் போராளிகளைத் தங்களின் கண்காணிப்பில் வைத்திருந்தார்கள். இந்தக் காலகட்டத்தில், அவர்களின் கண்காணிப்புக்கென்று விடப்பட்டவர்களில் ஒருவரும் தப்பிச் சென்றதில்லை என்று அவர்கள் பெருமைப்பட்டுக் கொண்டனர். நகர்வாலா புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்டபின் எடுத்த முதல் நடவடிக்கை வீர சவார்க்கரையும் அவர் பம்பாய் இல்லத்தையும் இவர்களின் கண்காணிப்புக்கு உள்ளாக்கியதுதான்.*

*டில்லியில் நடந்தது போலவே நகர்வாலாவின் புலன் விசாரணையும் வேகமாகத் தொடங்கியது. சில மணி நேரத்துக்குள் விஷ்ணுகார்காரேயின் தொழில், ஜனவரி*

---

* ஒரு விசித்திரமான ஒற்றுமையாக ஜனவரி 12 அன்று அகமது நகர் காவல் நிலைய அறிக்கையை தேசாய் காண நேர்ந்தது. ஜனவரி 1 அன்று கார்காரேயின் ஒட்டல் நிர்வாகி அறையிலிருந்து ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்ட தகவல் அந்த அறிக்கையில் இருந்தது. ஏன் கார்காரே கைது செய்யப்படவில்லை என்று தேசாய் உடனடியாகக் கேட்டார். அவரது விசாரணை இந்திய காவல்துறையில் முறைப்படியாக சென்று சேர்வதில் ஏற்பட்ட தாமதம் பிர்லா மாளிகையில் குண்டுவெடிப்புப் பற்றி விசாரணையைத் தாமதப்படுத்திய இன்னொரு சங்கடமான உதாரணமாகும். சிவப்பு நாடா முறை காவல்துறை நடைமுறைகளுக்குப் பெரும் சுமையாக இருந்தது. அகமது நகர் சிஐடி பிரிவை தேசாயின் கேள்வி சென்றடைய, ஜனவரி 19 வரை, ஏழு நாட்கள் ஆயின. அங்கே மேலும் ஐந்து நாட்கள் உட்கார்ந்திருந்த பிறகு கார்காரேயைக் கைது செய்ய ஜனவரி 24 அன்று தான் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் இதேபோல் நூற்றுக்கணக்கான அறிக்கைகளைப் பார்க்கும் தேசாய்க்கு, மதன்லாலுடைய சகாவின் பெயர் அந்த அறிக்கையில் இருந்தது, அந்தச் சமயத்தில் நினைவுக்கு வரவில்லை.

6 ஆம் தேதி முதல் அவன் அகமது நகரிலிருந்து காணாமல் போனது உட்பட முழு விவரங்களையும் அவர் பெற்றார். 'மகாத்மாவைக் கொல்லும் சதித்திட்டத்தில் கார்காரேயின் கூட்டாளியாக, ஆயுத விற்பனையாளனான 'பூனாவைச் சேர்ந்த பாட்கே என்பவனும்' இருந்தான் என்பதை காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கும் ஒரு நபர் (இன்ஃபார்மர்) மூலம் அவர் அறிந்திருந்தார்.

இந்தத் தகவல் கிடைத்தவுடனேயே, பூனா காவல்துறையினர் பாட்கேயின் கடைக்குச் சென்றனர். அவன் காணாமல் போய்விட்டான் என்பதை அவர்கள் அறிந்தனர்.'நகரைச் சுற்றியுள்ள வனப்பகுதிகளில்' அவன் மறைந்திருக்கக் கூடும் என்று அவர்கள் நகர்வாலாவிடம் தெரிவித்தனர்.

துரதிருஷ்டவசமாக, தேடப்படும் அந்த ஆயுத வியாபாரி தொடர்ந்து காணப்படாமலேயே இருப்பது பற்றி பூனா காவல்துறையினர் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. முதல் விசாரணை முடிந்த ஒரு சில மணி நேரத்துக்குப் பிறகு டில்லிக்குச் சென்றிருந்த பாட்கே பூனாவுக்குத் திரும்பியிருந்தான். அடுத்த பத்து நாட்களுக்கு, அவனது ஆயுதக் கடையின் பின்பக்க அறையில் அமர்ந்து, அவன் பெருமைப்பட்டுக் கொள்ளும், குண்டு துளைக்காத ஆடையைப் பின்னிக் கொண்டிருந்தான். மதன்லாலின் குண்டுவெடித்த நாற்பத்தெட்டு மணி நேரத்தில், அவனது கூட்டாளியாகப் பெயர் குறிப்பிட்டு, காவல்துறையினரால் தேடப்பட்டவன்தான் அந்தப் போலி சாது.

அவரது சொந்த முயற்சியிலான புலன் விசாரணையில் முன்னேற்றம் இருந்ததால், டில்லி காவல்துறையினர் ஒப்படைத்தத் தகவல்கள் நகர் வாலாவுக்கு அப்படியொன்றும் திருப்தி அளிக்கவில்லை. மேலும் தகவல் கொண்டு வந்த இரண்டு அதிகாரிகளில் ஒருவர் சீக்கியர். இவர் தங்குவதற்குத் தெரிவு செய்த ஓட்டலின் உரிமையாளர், பம்பாய் சி.ஐ.டிக்கு நன்கு தெரிந்த ஒரு சீக்கியத் தீவிரவாதியாவார். காந்தியைக் கொல்வதற்கான சதி பற்றிப் புலனாய்வு செய்ய நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் இந்தச் செயல் புத்திசாலித்தனமாக நகர்வாலாவுக்குத் தோன்றவில்லை.

அவர்களின் உதவி தனக்குத் தேவையில்லை என்ற முடிவுக்கு அவர் வந்திருந்தார். அவர்களை ஓட்டலுக்கே திரும்பிச் செல்லுமாறும், ஆள் அனுப்பும் வரை யார் கண்ணிலும் படாமல் அங்கேயே தங்கியிருக்குமாறும் அவர் திடீர் உத்தரவு பிறப்பித்தார். அடுத்த நாள், ஜனவரி 23 அன்று அவர்களை அழைத்து அவர் கண்டுபிடித்தத் தகவல்களை அவர்களிடம் அளித்தார். டில்லிக்குத் திரும்புமாறும் அவர்களைப் பணித்தார்.

டில்லி திரும்பிச் சென்ற அவர்களில் மூத்த அதிகாரியான ஒருவர் அவர்களின் பம்பாய் பயணம் பற்றிய கேஸ் டைரியை (வழக்கு விவரக் குறிப்புகளை) சமர்ப்பித்தார். அதில் வியப்பளிக்கும் ஒரு தகவல் இருந்தது. இந்து ராஷ்டிரா அல்லது அக்ரானியின் ஆசிரியரை 'உடனடியாகக் கைது' செய்யுமாறு தாங்கள் அதிகம் அழுத்திக் கூறியதாகவும் அதில் அவர் குறிப்பிட்டிருந்தார். இந்த அறிக்கையில் உள்ளதைச் செயல்படுத்த நகர்வாலாவிடம் காண்பித்ததாக அவர் சொல்லிக் கொண்ட, அந்தத் தகவல் அடங்கிய ஒரு ஆவணத்தை கேஸ்

டைரியின் பின்னிணைப்பாக அவர் சேர்த்திருந்தார். பம்பாய் காவல்துறை அதிகாரி அப்படி ஒரு கடிதத்தையே கண்ணால் கூடக் கண்டதில்லை. டில்லி அதிகாரிகள் பம்பாய்க்குப் புறப்பட்ட பிறகுதான் இந்த ஆவணம் தயாரிக்கப் பட்டது என்பதும், அவர்கள் டில்லிக்குத் திரும்பிய பிறகு, டைரியில் ஒரு பின்னிணைப்பாக அது சேர்க்கப்பட்டது என்பதும், சில ஆண்டுகளுக்குப் பின் நிரூபிக்கப்பட்டது.

கொலை முயற்சி நடந்ததைத் தொடர்ந்து அந்த வெள்ளிக்கிழமை நண்பகலில், இந்தியத் தலைநகரில் நடந்த சதித் திட்டம் குறித்த புலன் விசாரணையில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. கடைசியாக மதன்லால் அடிபணிந்து, முழுமையான வாக்குமூலம் அளிக்கத் தயார் என்று விசாரணை அதிகாரிகளிடம் தெரிவித்தான். சித்ரவதை காரணமாகவே இந்த முடிவுக்கு வந்ததாக அந்தப் பஞ்சாபி அகதி கூறினான். ஆனால் இந்தக் குற்றச்சாட்டை டில்லி காவல்துறை மறுத்துள்ளது.* அவனது 54 பக்க ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவு செய்து தட்டச்சு செய்ய விசாரணை அதிகாரிகளுக்கு முழுமையாக இரண்டு நாட்கள் தேவைப்பட்டன. மதன்லால், கடைசியாக, மீண்டும் அதனைப் படித்து விட்டு, ஜனவரி 24 இரவு 21.30 மணிக்கு அவனது சிறைக் கொட்டடியிலிருந்து கையெழுத்திட்டான். உடனடியாக இது வெற்றிகரமான உற்சாகத்துடன் சஞ்சீவியின் மேசைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்த முறை மதன்லால் எதையும் மறைத்து வைக்கவில்லை. அவனுக்குத் தெரிந்த அனைத்தையும் வாக்குமூலத்தில் தெரிவித்து விட்டான். பாட்கேயைப் பெயர் குறிப்பிட்டு அவன் அடையாளம் காட்டவில்லை என்றாலும், பூனாவில் உள்ள சாஸ்த்ர பந்தரின் உரிமையாளர் என்று கூறியிருந்தான். கார்காரேயின் பெயர் மற்றும் அவனது அரசியல் நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை அவன் அளித்தான். அனைத்துக்கும் மேலாக கோட்சே மற்றும் ஆப்தே நடத்தும் பத்திரிக்கையின் பெயரை இந்த முறை மதன்லால் எழுத்து சுத்தமாகத் தெரிவித்திருந்தான். இந்து ராஷ்ட்ரியா. இதை விட முக்கியமாக, அது இருக்கும் இடம் பூனா என்ற தகவலையும் கொடுத்தான்.

இப்போது அதன் உரிமையாளரையும் ஆசிரியரையும் கண்டுபிடிக்கும் பணி, ஒரு குழந்தை கூட செய்து முடிக்கும் அளவுக்கு, சஞ்சீவிக்கு மிக எளிதாக இருந்தது. டில்லியில் உள்ள உள் துறை அல்லது செய்தி ஒலிபரப்புத் துறை என்ற இரண்டு துறைகளில் ஒன்றில் இருக்கும் பம்பாய் மாகாண செய்தி ஏடுகளின் வருடாந்தர அறிக்கை என்ற சிறிய தொகுப்பை ஆய்வு செய்து விவரம் அறிய

* 1973 வசந்த காலம் மற்றும் இலையுதிர் காலங்களில் இந்த நூலின் ஆசிரியர்கள் எடுத்த தொடர்ச்சியான பேட்டிகளின் போது மதன்லால் ஒன்றைக் கூறினான். அதாவது அவனைப் பேச வைப்பதற்காக நூலில் ஐஸ் கட்டிகளைக் கட்டி அவனது விதைகளில் தொங்கவிட்டதாக அவன் கூறினான். மற்றொரு சமயத்தில் சர்க்கரை கலந்த தண்ணீர் அவனது முகத்தில் ஊற்றப்பட்டு அதன் மீது ஏராளமான எறும்புகள் விடப்பட்டதாகவும் அவன் கூறினான். இதெல்லாம் மதன்லாலின் கற்பனைகள் என்று டில்லி காவல்துறையினர் மறுத்து விட்டனர். ஜனவரி 21 மற்றும் 22 தேதியிட்ட அவர்களின் ஆவணங்கள்படி, புலன் விசாரணையின் போது அவன் தொடர்ந்து தவறான தகவல் அளித்துக் கொண்டிருக்கிறான். இது பற்றிய 'உரிய முறையில் அவனுக்கு அறிவுறுத்துமாறு' விசாரணை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஒரு ஆய்வாளரை மட்டுமே அவர் அனுப்பவேண்டியிருந்தது. அதன் பக்கங்களில் ஒன்றில் கீழ்க்காணும் விவரம் இருந்தது:

'இந்து ராஷ்ட்ரா, மராத்தி நாளேடு, பூனா
ஆசிரியர் : என். வி. கோட்சே.
உரிமையாளர் என்.டி.ஆப்தே
சவார்க்கர் ஆதரவு குழுவினரின் செய்தித்தாள்'

அவர்கள் தேடிக் கொண்டிருப்பது 'என்.வி. கோட்சே'யைத்தான் என்பதற்கு முடிவான ஆதாரம் மதன்லால் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கத் தொடங்கிய போதே டில்லிக் காவல்துறையின் மடியில் வந்து விழுந்து விட்டது. மெரினா ஓட்டல் 40ஆம் எண் அறையில் தங்கியிருந்தவர்கள் ஜனவரி 20 அன்று அவசர அவசரமாகப் புறப்பட்டுச் சென்று விட்டதால், ஒரு கட்டுத் துணி சலவை யகத்தில் விடப்பட்டிருந்தது. வீரர்களின் ஆடைகள் போன்ற துணி மூட்டை அந்த ஓட்டலின் சலவைக் கடைக்காரர் மூலம் காவல்துறையிடம் ஒப்படைக் கப்பட்டது. எல்லாத் துணிகளிலும் ஒரு பொதுவான சலவைக் குறி இருந்தது. அவை முதலெழுத்துக்களான **என்.வி.ஜி.** (N.V.G)

இந்த வழக்கு விசாரணையை மேற்கொண்ட நேரத்திலிருந்தே அதனைக் கையாள்வதில் டி.ஜே.சஞ்சீவிக்கு ஒரு வகையான உற்சாகமின்மை காணப் பட்டது. தற்பெருமையும் மறைக்கும் குணமும் கொண்ட அவர், இந்த விசாரணையை கவனித்துக் கொண்டதே ஒரு பொறாமையால்தான். இதில் அவரது கீழதிகாரிகள் ஈடுபட மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் தடையாக இருந்தார். புலன் விசாரணையில் மேலதிகாரியின் உதவியை நாடுவதிலும் அவர் முயற்சியற்றிருந்தார்.

இந்த சதித்திட்டத்தில் தொடர்புடையவர்களில் குறைந்தது ஐந்து அல்லது ஆறுபேரின் அடையாளங்களை விரைந்து கண்டுபிடிப்பதற்குத் தேவையான விவரங்களை மதன்லாலின் ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து இப்போது அவர் பெற்றிருந்தார். இருப்பினும், கோட்சேயின் பெயரைக் கண்டுபிடிக்கும் வகையில் பம்பாய் மாகாண நாளேடுகளின் பட்டியல் பற்றி விவாதிப்பதற்கான அடிப்படை நடவடிக்கைகளைக் கூட டில்லி காவல்துறையிலிருந்தோ அல்லது அவரது அலுவலகத்திலிருந்தோ எவரும் மேற்கொள்ளவில்லை. மெரினா ஓட்டலில் கண்டெடுக்கப்பட்ட அறிக்கையில் இடம் பெற்ற இந்து மகாசபா நிர்வாகியைக் கூட யாரும் விசாரிக்கவில்லை. இவருக்கு ஆப்தேயையும் கோட்சேயையும் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாகத் தெரிந்திருக்கும். மதன்லாலின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள தகவல்களைக் கூட அவசர உணர்வுடன் பம்பாயில் உள்ள நகர்வாலாவுக்கு அவர் அனுப்பிவைக்கவில்லை. இதைவிட மோசம் என்னவென்றால், இந்து ராஷ்ட்ராவின் ஆசிரியர் பற்றி கேட்டறிவதற்குப் பூனா காவல்துறையினருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும் அவர் முயற்சி செய்யவில்லை. அவரது தொடர்ச்சியான செயல்கள் திறமையின்மையைக் காட்டுவதாகவும், தடைகளை ஏற்படுத்துவதாகவும், இறுதியாக குற்றச் செயல் தன்மையுடையதாகவும் இருந்தன. இவையெல்லாம்

எப்படி நடந்தன என்பது பற்றி அரை நூற்றாண்டுக்குப் பிறகும் இந்தியா ஆச்சரியம் அடைந்து கொண்டிருக்கிறது.*

திருப்திகரமாக விளக்க முடியாத அளவுக்கு நடவடிக்கைகளைக் கொண்டவராக அந்த அதிகாரி மட்டும் இருக்கவில்லை. டில்லியில் ஜனவரி 25 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட பூனா காவல்துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பு வகித்த துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் யு.எச்.ராணாவும் அப்படிப்பட்டவர்களில் இருந்தார். பூனாவிலிருந்த அவரது கோப்புகளில் கோட்சே, ஆப்தே, பாட்கே, கார்காரே ஆகியோரை உடனடியாகக் கண்டறிவதற்குத் தேவையான தகவல்கள் இருந்தன. அந்தக் கோப்புகளில் கார்காரே, ஆப்தே ஆகியோரின் புகைப்படங்கள் இருந்தன. மகாத்மாவின் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு அந்தச் சதிகாரர்கள் மீண்டும் வராமல் தடுக்கும் வகையில் பிர்லா மாளிகைக் காவலர்களுக்கு அந்தப் புகைப்படங்களைக் கொடுத்திருக்க முடியும். அவரின் கீழ் பணி செய்த அதிகாரிகளே பல மாதங்களாகத் தொடர்ந்து திரட்டிய, இந்துத் தீவிரவாத நடவடிக்கைகள் பற்றிய அனைத்துத் தகவல்களும் அவற்றில் இருந்தன.

சஞ்சீவி அவரைத் தனது அலுவலகத்துக்கு வரவழைத்தார். சுமார் இரண்டு மணி நேரத்துக்கு மதன்லாலின் ஒப்புதல் வாக்கு மூலத்தை அவரிடம் ஒவ்வொரு பக்கமாகப் படித்துக் காட்டினார். கிட்டத்தட்ட அந்த வாக்குமூலத்தில் இருந்த ஒவ்வொரு வரியும் பூனா காவல்துறை அதிகாரியை எச்சரிப்பதாய் இருந்திருக்க வேண்டும். காந்தியைக் கொல்வதற்கு முயற்சி செய்தவர்களில் குறைந்தது இரண்டு பேர் பூனாவில் அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட பகுதியிலிருந்து வந்தவர்கள் என்ற உண்மையை அது விளக்கியது. 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' போல இந்து ராஷ்ட்ரா என்ற பெயர் அவருக்குப் பரிச்சயமில்லாதது என்று சொல்வது நம்பக் கூடியதல்ல. இதன் சீர்குலைவுக் குரல் காரணமாக இதனை மூடிவிட கடந்த ஜூலை மாதம் உத்தரவிடப்பட்டது. மேலும் இதன் ஆசிரியர் மற்றும் நிர்வாகி மீதான காவல்துறை கண்காணிப்பை ரத்து செய்து நவம்பர் மாதம் உத்தரவிட்டதும் இவரேதான். இதற்கு முந்தைய கோடை காலத்தில் பூனாவில் நிகழ்ந்த ஒரே ஒரு குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஆப்தேயின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

---

* மகாத்மா காந்தி படுகொலைக்கான சூழ்நிலைகள், 1948 ஜனவரி 20 அன்று மதன்லால் குண்டு வெடிப்புக்குப்பின் கொலைகாரர்களைக் கைது செய்ய காவல்துறை தவறியது ஆகியவைபற்றி விசாரிப்பதற்கு, நீண்ட காலத்துக்குப் பின் பொறுமையான முயற்சி 1960களில் மேற்கொள்ளப்பட்டது. அதிகாரப்பூர்வ விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஜே.எல்.கபூர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கமிஷனின் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. காரணம், புலன் விசாரணை செய்த சஞ்சீவி உட்பட முக்கியமான காவல்துறை அதிகாரிகள் பலர் இறந்து போய்விட்டனர். பம்பாயிலிருந்து திரும்பியபின் டில்லி அதிகாரிகள் கேஸ் டைரியில் முறைகேடாகத் தகவல்கள் இணைக்கப்பட்டதைக் கமிஷன் கண்டுபிடித்தது. ஆனால் இதற்குப் பொறுப்பான அதிகாரி இறந்து விட்டார்.

கமிஷனின் ஆறு தொகுப்பு அறிக்கை 1969 செப்டம்பர் 30இல் இந்திய அரசிடம் அளிக்கப்பட்டது. இந்தியாவின் தேசியத் தலைவரான மகாத்மா காந்தியைக் கொலை செய்வதற்கான சதித்திட்ட விஷயத்தில் தேவையான அல்லது தகுதி நிலைக்கு ஏற்பவோ ஆர்வத்துடனோ சுறுசுறுப்பாகவோ எந்தக் கட்டத்திலும் விசாரணை நடத்தப்படவில்லை என்ற மகிழ்ச்சியற்ற முடிவுக்குத்தான் அது வந்திருந்தது.

*அவரது எல்லையோடு சம்பந்தப்பட்ட முக்கியமானத் தகவல்கள் குவிந்ததைக் கண்டபோது அவரது முகபாவம் விவரிக்க முடியாததாக இருந்தது. இந்தத் தகவல் பற்றி பூனாவில் உள்ள அவரது கீழ் அதிகாரிகளுக்குத் தொலைபேசியில் தெரிவிக்க வேண்டும் என்பதில் அவர் அக்கறைகாட்டவில்லை. உடனடியாகப் புலனாய்வைத் துவக்குமாறும் அவர் உத்தரவுகளை அனுப்பவில்லை. அல்லது தானே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்காக இந்தத் தகவலுடன் அவர் விமானத்தில் திரும்பிப் பறந்துவிடவும் இல்லை. அவர் விமானத்தில் செல்வதை விரும்புபவர் அல்ல. அது அவரது உடல்நலத்தைப் பாதிக்கும். அவர், நீண்டநேரம் பிடிக்கும், மெதுவாகச் செல்லும், ரயில் பயணத்தைத்தான் மேற்கொண்டார். துணைக்கண்டத்தின் பாதியளவு தூரமிருந்த டில்லியிலிருந்து பம்பாய் செல்லும் பாதையைக் கடந்து செல்ல ஏறத்தாழ முப்பத்தாறு மணி நேரமாகியது. விரைந்து செல்லும் ரயிலைக் கூட அவர் பயன்படுத்தவில்லை. மாறாக சுற்றுப்பாதையில் சென்றதால் அவரது பயணத்துக்கு ஆறுமணி நேரம் கூடுதலாகத் தேவைப்பட்டது.*

*இந்தப் புலன் விசாரணைக்குப் பொறுப்பான மனிதரின் அணுகுமுறைதான் தனது மெத்தனமான நடவடிக்கைக்குக் காரணம் என்று அவர் கூறிக் கொள்ளலாம். சஞ்சீவியின் நடவடிக்கைகளை தீர்மானித்த ஒரு விஷயம் இருந்ததென்றால் அது அவரின் நம்பிக்கை. கொலைகாரர்கள் மீண்டும் வரவே மாட்டார்கள். அவர்களை ஒரு பைத்தியக்காரக் கும்பல் என்று கருதி புறக்கணித்தார். ஜனவரி 20 அன்று ஏற்பட்ட வருந்தத்தக்கப் படுதோல்விக்குப் பின் மீண்டும் தாக்குதல் நடத்த அவர்களுக்கு ஒருபோதும் தைரியம் வராது என்ற உள்ளார்ந்த நம்பிக்கை அவருக்கு இருந்தது. ஆனால் அது தவறானது. சஞ்சீவிக்கும் ஐந்து நாட்களுக்கு முன் பிர்லா மாளிகையில் நூலிழையில் உயர்தப்பிய அந்த 78 வயது தலைவருக்கும் நேரம் கடந்து கொண்டிருந்தது. சஞ்சீவியின் புலனாய்வுக்குத் தேவையானதும் ஆனால் குறைவாக இருப்பதும் என்னவென்றால் அவசர உணர்வு.*

*பம்பாயின் புறநகர்ப் பகுதியில் உள்ள சிறிய தானா ரயில் நிலையத்தின் பிளாட்பாரத்தின் கடைசி விளக்குக் கம்பத்திலிருந்து விழுந்த மங்கலான ஒளி படாமல் வெளிப்புறத்தில் இருந்த இருளில் நான்குபேர் அமர்ந்திருந்தனர். இவர்களின் தலைவன் ஒருவித உணர்ச்சியால் உத்வேகமடைந்தான். அதுதான் அவசர உணர்வு. டில்லி காவல்துறையின் உயரதிகாரி எதனை நடக்க முடியாது என்று புறக்கணித்தாரோ அது நடக்கப்போகிறது. கொலைகாரர்கள் திரும்பி வருகின்றனர். இந்த முறை அவர்களின் வேலை ஒழுங்கற்ற ஒரு கும்பலின் வேலையாக இருக்காது. அது மிகவும் நவீன முறையிலான அரசியல் படுகொலையாக இருக்கும். ஒரு மனிதன்; ஒரு ஆயுதம்; வெறிபிடித்த ஒருவன் கொலை செய்வதற்குத் தனது வாழ்க்கையைத் தியாகம் செய்யத் தயாராய் இருப்பான்.*

*டில்லியை விட்டுத் தப்பிச் சென்றதிலிருந்து நாதுராம் கோட்சேயும், நாராயண் ஆப்தேயும் எந்த நேரமும் கைது செய்யப்படலாம் என்ற நிரந்தர அச்சத்தில் வாழ்ந்தனர். இந்திய வரலாற்றில் மிகவும் தீவிரமாகத் தேடப்பட்டவர்களாக இவர்கள்தான் இருப்பார்கள் என்று நம்பலாம். இவர்கள் தங்களின் முடிவைத் தெரிவிப்பதற்கு கோபால் கோட்சேயையும் ஒட்டல்*

உரிமையாளனும் நண்பனுமான கார்காரேயையும் ரகசிய இடம் ஒன்றுக்கு வருமாறு அழைத்தனர். மிகவும் மெல்லிய குரலில் நாதுராம் அவர்களுக்கு முடிவைத் தெரிவித்தான்.

'நாம் டில்லியில் தோற்றுவிட்டோம்; ஏனெனில் அதில் நிறையப் பேர் ஈடுபட்டோம்,' என்று அவன் உறுதியான குரலில் கூறினான். காந்தியைக் கொல்வதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. 'எவ்வளவு ஆபத்து நேர்ந்தாலும் ஒருவர் மட்டும்தான் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்'

ஒரே தொழிலில் ஒருபோதும் பற்றி நிற்க இயலாத, வாழ்நாள் முழுவதும் தோல்விகளையே கண்ட தனது சகோதரனை கோபால் வெறித்துப் பார்த்தான். காஃபி மீது அளவற்ற விருப்பமும் பெண்களிடம் மூர்க்கத்தனமான வெறுப்பும் கொண்ட அவனது விசித்திரமான சகோதரனிடம் பெரிய மாற்றம் காணப்பட்டது. டில்லியில் வெளிறியும், நடுக்கத்தோடும், மண்டையைப் பிளக்கும் தலைவலியால் ஏறத்தாழ அசைய முடியாமலும் இருந்த நாதுராம் முகத்தில் இப்போது தெளிவு காணப்பட்டது. அவனிடம் இப்படி ஒரு நிலையை இதற்கு முன் ஒருபோதும் கோபால் பார்த்ததில்லை. வழக்கமாக உணர்ச்சி வசப்பட்டு காரியங்களைச் செய்யும் ஆப்தே கூட அவனை வியப்புடன் பார்த்தான்.

நாதுராமின் குரல் அமைதியாகவும் தீர்மானகரமாகவும் இருந்தது. புகைக் கரியில் வியத்தகு விஷயங்களைக் கண்ட அவன், தனது சொந்த வாழ்க்கையின் பொருளையும் புரிந்து கொண்டிருந்தான். பிரிவினையால் கோடைகாலத்தில் குழப்பம் ஏற்பட்டதிலிருந்து அவனது உள்மனப் பேச்சுக்கள் அவனை அறைகூவி அழைத்த பணியை கோட்சே நிறைவு செய்யப் போகிறான். வெட்டித் துண்டாடப்பட்ட இந்தியா, கற்பழிக்கப்பட்ட இந்தியா பழிவாங்கும் உணர்வோடு வெளிவர அழைக்கிறது. அந்த உணர்வாக அவன் மாறப் போகிறான்.

'நான்தான் அதைச் செய்யப் போகிறேன்' அவன் அறிவித்தான். யாரும் அவன் மீது அந்த முடிவைத் திணிக்கவில்லை. 'ஒருவரின் உயிர்த்தியாகத்துக்கான முடிவு திணிக்கப்படுவதில்லை'

வெகு விரைவில் அவன் காந்தியைக் கொல்வான். அவனுக்கு இரண்டு உதவியாளர்கள் தேவைப்பட்டனர். ஆப்தே அவனுடன் இருக்க வேண்டும். கார்காரேயையும் தங்களுடன் இருக்குமாறு அவன் அழைத்தான். அவர்கள் சேர்ந்து புதிய திரிமூர்த்தி ஆனார்கள். இந்து மத புராணத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ள விஷ்ணு, பிரம்மா, சிவன் போல, நிலம், நீர், நெருப்பு ஆகிய தெய்வீக மும்மூர்த்தி போல இவர்கள் பழிவாங்கும் மும்மூர்த்தி ஆனார்கள்.

கார்காரே இதற்கு ஒப்புக் கொண்டான். இயன்றவரை விரைந்து டில்லி செல்லுமாறு அவனிடம் கோட்சே கூறினான். ஒவ்வொரு நாளும் நண்பகலில் பழைய டில்லி ரயில் நிலையத்தின் வெளியே உள்ள பொதுக் குடிநீர்க் குழாய் அருகே அவன் நிற்க வேண்டும். தலைநகரை அவர்கள் அடையும் அந்த நாளின் பிற்பகலில் அந்தக் குழாய் அருகே அவனுடன் அவர்கள் சேர்ந்து கொள்வார்கள்

இதற்கிடையே துல்லியமான நம்பகத் தன்மையும், எளிதாக மறைத்து வைக்கக் கூடியதுமான கைத்துப்பாக்கியைத் தேடிக் கண்டுபிடிக்க கோட்சேயும்

ஆப்தேயும் முழு சக்தியையும் திரட்டி கவனம் செலுத்துவார்கள். இந்த முறை சிறு பிழையும் இருக்கக் கூடாது.

'எல்லாவற்றுக்கும் மேலாக மிக முக்கியமான விஷயம் என்பது வேகம்' என்று அவனிடம் நாதுராம் உறுதியான குரலில் தெரிவித்தான். 'இப்போது மதன்லால் காவலர்களிடம் சிக்கியிருக்கிறான். அவர்கள் நம்மையும் உடனேயோ கொஞ்சம் தாமதமாகவோ பிடித்துவிடுவார்கள்.'

'காவலர்கள் நம்மைப் பிடிப்பதற்கு முன் நாம் காந்தியை முடித்து விட வேண்டும்' என்று அவன் சொன்னான்.

புது டில்லியில் காந்தியின் பிரார்த்தனைக் கூட்டங்களில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் நடைமுறையோடு ஜனவரி 25 மாலையில் சிறிய மாற்றம் ஒன்றை சேர்த்திருந்தார்கள். ஒவ்வொரு நாள் இரவிலும் தயார் நிலையுடன் ஒரு கைத்துப்பாக்கியை இடுப்பில் செருகிக் கொண்டு காந்தியின் பக்கத்தில் நடக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்த டில்லி காவல்துறை அதிகாரி டி.டபிள்யூ. மெஹ்ரா, மீண்டும் ஃப்ளூ காய்ச்சலால் பாதிக்கப்பட்டு படுக்கையில் வீழ்ந்து விட்டார். அந்தப் பொறுப்பை டில்லியின் இன்னொரு அதிகாரியான ஏ.என்.பாட்டியா (A.N.Bhatia) விடம் அவர் ஒப்படைத்தார். மெஹ்ராவைப் போல அவ்வளவு குறி தவறாமல் சுடும் திறமை பாட்டியாவுக்கு இல்லை என்றாலும், காந்தியைத் தனிப்பட்ட முறையில் அறிந்தவர் என்பதால் அவர் அந்த வாய்ப்பைப் பெற்றார். இந்த அறிமுகம்தான் ஒவ்வொரு நாள் இரவிலும் காந்தியின் பக்கத்தில் முக்கியமான நிலையில் அவரால் இருக்க முடியும் என்பதை உறுதி செய்தது.

1948 ஜனவரி 26 மகாத்மா காந்திக்கும் அவரது நாட்டு மக்களுக்கும் நினைவில் நிற்கும் முக்கியமான நாளாகும். சரியாகப் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன், 1930 ஜனவரி 26 அன்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த லட்சக்கணக்கான ஆண்களும் பெண்களும் தங்களின் நாட்டுச் சுதந்திரத்திற்கு முதன் முறையாக உறுதி மொழியேற்றார்கள். இந்தியா முழுவதும் காங்கிரஸ் கட்சிக்கென இருந்த பல்லாயிரக்கணக்கான கிராமங்களிலும் மற்றும் நகரங்களிலும் பெரு நகரங்களிலும் இந்த உறுதிமொழி ஏற்கப்பட்டது. அந்த நாளில் ஏற்ற உறுதிமொழி வாசகத்தை காந்தியே எழுதியிருந்தார். அதன் பிறகு ஜனவரி 26 என்பது, இந்திய தேசபக்தர்களுக்கு சுதந்திர தினமாக மாறியது. இறுதியில் அந்த வாசகங்கள் உண்மையாகியிருந்த இந்தியாவில் அந்த உறுதிமொழியேற்றபின் இன்னொரு ஆண்டு விழாவை லட்சக்கணக்கான இந்தியர்களைப் போலவே காந்தியும் இப்போது கொண்டாடினார்.

அந்தக் குளிர்கால நாளில் பிர்லா மாளிகையில் இருந்த காந்தியின் முதன்மைப் பணியாக இருந்தது, காங்கிரஸ் கட்சிக்கு புதிய அமைப்புச் சட்டத்தைத் தயாரிப்பதாகும். முற்றிலும் பொருத்தமான முறையில் நேருவின் வேண்டுகோள்படி அவர் அதைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அவரால் வழிகாட்டப்பட்ட அதன் பங்களிப்பும் நோக்கமும் சுதந்திர இந்தியாவில் எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்குவதற்கான ஒரு அறிக்கையாகும் அது.

ஏமாற்றமளிக்கும் வகையில் வெளித்தோற்றத்தில் மெலிந்திருந்தாலும் அந்த உடலுக்குள் மீண்டும் வீரியத்தன்மை உருவாகியிருந்தது. இன்னும் 24 மணி நேரத்தில் இறந்து விடுவார் என்று ஒரு வாரத்துக்கு முன் டாக்டர்களால் அறிவிக்கப்பட்ட அந்த 78 வயது மனிதர் அன்று காலை திட உணவை அருந்தத் துவங்கினார். காலை நேரத்தில் நடப்பது என்ற அவரது நீண்ட நாளைய, மிகவும் விருப்பமான பழக்கத்தையும் மீண்டும் துவக்கியிருந்தார். பிர்லா மாளிகையில் அமைக்கப்பட்டிருந்த புல் வெளியில் அவர் சுறுசுறுப்பாக எடுத்து வைத்த அந்த அடிகள் ஒருவிதத்தில் மாபெரும் தொலைநோக்கு செயலுக்கான முதல் அடிகளாகவும் தோன்றின. அதுதான் ரத்தக் களறியால் பாதித்த பஞ்சாப் வழியாக பாகிஸ்தானுக்கு செல்வதென்ற அவரின் கிளர்ச்சியூட்டும் நடைபயணத் திட்டமாகும்.

பாகிஸ்தானிலிருந்து வந்த ஒரு முஸ்லீம் பார்வையாளர் முந்தைய நாள் வேண்டிக் கொண்ட ஒரு காட்சி காந்தியின் வாழ்க்கையில் மாபெரும் கடைசிக் கனவாக மாறியது. 'காந்திஜி தலைமையில், இந்துக்களும் சீக்கியர்களுமாக பாகிஸ்தானுக்குத் திரும்பிச் செல்லும் 50 மைல் தூர நீண்ட பயணத்தைத் தான் காண விரும்புவதாக' அந்தப் பார்வையாளர் கூறினார்.

என்ன ஒரு மகத்தான காட்சி அது! நீண்ட நாட்களாக இந்தியாவுக்கு வழிகாட்டி வந்த அந்த மெலிந்த உருவம் மீண்டும் ஒரு வழியைத் திறக்கிறது; கையில் மூங்கில் கொம்புடன், சொத்துக்களை இழந்த ஏராளமான மக்கள் தொடருக்குத் தலைமை தாங்கி, குடிபெயர்வால் கொடூரங்களை அனுபவித்த சாலைவழியே, மீண்டும் அவர்களை அவரவர் வீட்டுக்குக் கொண்டுசெல்லும் லட்சியப் பயணம்தான் அது. ஒரு வேளை இதில் அவர் வெற்றி பெற்று விட்டால், வீடிழந்துள்ள முஸ்லீம்களை அங்கிருந்து அழைத்துக் கொண்டு இந்தியாவில் அவர்களுக்குரிமையாயிருந்த நிலங்களுக்கும் வீடுகளுக்கும் அவர் பயணம் மேற்கொள்வதை எந்த சக்தியால் தடுக்க முடியும்? என்ன நடக்கும் என்று யார் அறிவார்! அப்படி நடந்தால் அவரது அஹிம்சைக்கும், அன்பு, சகோதரத்துவம் என்ற அவரது கோட்பாடுகளுக்கும் அது எவ்வளவு பெரிய வெற்றியாகும். அவரது வாழ்க்கை முழுவதுமான சாதனைக்கு மகுடம் வைத்ததாக இது இருக்கும். அவரது பரவசமான ஆதரவாளர்கள் அவருக்குரியதாகப் புகழ்ந்துரைக்கும் அற்புதங்களையெல்லாம் அளவிலும் தன்மையிலும் இந்த அற்புதம் சிறியதாக்கி விடும். காந்தியின் பணிவான ஆன்மா கூட இதைக் கண்டு பரவசமடையும். இந்தக் கனவு நனவாக நேரத்தையும், பலத்தையும், நம்பிக்கையையும் கடவுள் அளிக்க வேண்டும் என்பதைத் தவிர ஆர்வமிக்க பிரார்த்தனை எதையும் அவர் மேற்கொள்ளவில்லை.

நடைப்பயிற்சி முடித்துத் திரும்பிய அவர் அவரது டாக்டர் சுசீலா நய்யாரை அழைத்தார். இருப்பினும் அவரை அருகே அழைத்தது மருத்துவ ஆலோசனைக்காக அல்ல; பாகிஸ்தான் பயணத்துக்கான தயாரிப்பின் ஒரு பகுதியாக அவரை அங்கு செல்லுமாறு பணித்தார். எதையும் நியதிப்படி செய்யும் காந்தி தமக்கும் தமது குழுவினருக்கும் எப்போதும் கட்டளையிடுவது போலவே கவர்ச்சிகரமான அவரது இளம் டாக்டருக்கும் அவரது பணியை முடித்துத் திரும்புவதற்கான காலவரம்பை நிர்ணயித்தார். மூன்று நாட்கள் காந்தி மாலை நேரப் பிரார்த்தனைக்குச் செல்லும்போது அவருக்கு முன்னால்

நேராக நடந்து செல்வார் சுசீலா. கடவுளின் திருவுளம் இருந்தால், ஜனவரி 30 வெள்ளிக்கிழமை மாலை பிரார்த்தனையின் போதும் இந்த வழக்கமான பணியைச் செய்திட உரிய நேரத்தில் அவர் மீண்டும் டில்லிக்குத் திரும்பிவிட வேண்டும்.

மகாத்மாவைக் கொலை செய்வதற்காகக் கடந்த பத்து நாட்களில் நாதுராம் கோட்சேயும், நாராயண் ஆப்தேயும் இரண்டாவது முறையாக டில்லிக்குப் பறந்தனர். ஏர் இந்தியா வைக்கிங் விமானத்தில் கடைசிவரிசையில் ஒருவர் பக்கத்தில் ஒருவராக அவர்கள் அமர்ந்திருந்தனர். தங்களின் குணாம்சங்களை வெளிப்படையாகக் காட்டும் வகையில் அவர்களின் செயல்பாடுகள் அமைந்தன. கோட்சே அவனது வாழ்க்கையில் உத்வேகமளித்த அந்தப் புத்தகத்தில் முகத்தைப் புதைத்துப் படிப்பதில் மூழ்கியிருந்தான். அது வீர சவார்க்கரின் இந்துத்துவா. ஆப்தே இன்னும் கூடுதலான உணர்ச்சி ததும்பும் வேலையில் ஈடுபட்டிருந்தான். காலை நேர சிற்றுண்டித் தட்டுகளைக் கையிலேந்தி, மேலும் கீழும் நளினமாக அசைந்து நடந்து கொண்டிருக்கும், கவர்ச்சிகரமான பணிப் பெண்ணை வைத்த கண் வாங்காமல் அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த இரண்டு இளைஞர்களுக்கும் பம்பாயில் இருந்த கடைசி நாள் மிகவும் அபசகுனமானதாக இருந்தது. அவர்களின் முதலாவது கொலை முயற்சிக்கு முன் அந்தப் பொருளை வாங்க எவ்வளவு துன்பங்கள் நேர்ந்ததோ அதே போல் மீண்டும் நம்பமுடியாத அளவுக்குப் பிரச்சனை ஏற்பட்டது. அங்கே இருந்த நாள் முழுவதும் பணத்துக்காகவும் ஒரு துப்பாக்கிக்காகவும் மத வெறிபிடித்த நண்பர்களிடம் மாறிமாறிச் சென்றனர். அந்த நாள் முழுவதுமான அவர்களின் முயற்சியில், அபரிமிதமான அளவில் 10,000 ரூபாய் (சுமார் 1000 பவுண்ட்) கிடைத்தது. இதனை ஆப்தே தனது பையில் திணித்து வைத்திருந்தான். இருப்பினும், ஒரு துப்பாக்கியை வாங்குவதற்கான வாக்குறுதியைக் கூட எவரிடமிருந்தும் பெறவில்லை.

காவல்துறையினர் தங்களை நெருங்கி வருவது போன்ற குற்ற உணர்வால் உறுத்தப்பட்ட அவர்கள் தாக்குதலை விரைந்து முடிக்க வேண்டும் என்பதற்காக கைத்துப்பாக்கி இல்லாமலேயே பம்பாயிலிருந்து வெளியேற முடிவு செய்தனர். தலைநகர் டில்லியில் வெறுப்பும் வேதனையும் சூழ்ந்த அகதி முகாம்களில் உள்ள ஏதாவது ஒரு அங்காடியில் அதனை வாங்கிக் கொள்ளலாம் என்று அவர்கள் நினைத்தனர்.

அந்தச் சமயத்தில் ஆப்தேயின் மனம் வேறொரு விஷயத்தில் நாட்டம் கொண்டது. காலைச் சிற்றுண்டி அளிக்கும் பணியை முடித்த அந்த அழகான பணிப் பெண்ணை அவன் தன்னருகே அழைத்தான். தமக்கு நன்றாகக் கைரேகை பார்க்கவரும் என்று அவளிடம் கூறினான். அவளின் கவர்ச்சிகரமான முகம் கவர்ச்சிகரமான உள்ளங்கையிலும் பிரதிபலித்தது. கைரேகையைப் பார்த்து அவளுக்குப் பலன் சொல்வதாக ஆப்தே தெரிவித்தான். மகிழ்ச்சியடைந்த அந்தப் பெண், அவனது இருக்கையின் கைப்பிடி மீது அமர்ந்து கையை நீட்டினாள். அவள் அப்படிச் செய்தபோது, அடுத்த இருக்கையில் புத்தகம் படிப்பதில் மூழ்கியிருந்த அந்த நபர், அவர்களின் நடவடிக்கைகள் பிடிக்காமல், விமானத்தின் ஜன்னல் ஓரத்துக்கு நகர்ந்து செல்வதை அவள் பார்த்தாள்.

கடைசிப் புணர்ச்சிக்கு உத்தரவாதமளிக்கும் ஏற்பாட்டை நாராயண் ஆப்தே அமைத்துக் கொண்டான். அவர்களின் விமானம் டில்லியை அடைவதற்குள், அந்தப் பெண்ணுக்குரிய எதிர்காலத்தைச் சொல்வதாகக் கூறி, ஆப்தே, தான் விரும்பிய எதிர்காலத்தை உடனடியாகப் பெற்றுவிட்டான். டில்லி இம்பீரியல் ஓட்டலில் அன்று இரவு எட்டு மணிக்கு அவனைச் சந்திக்க அந்த விமானப் பணிப்பெண் ஒப்புக் கொண்டாள்.

ஜனவரி 27 காலைப் பொழுதின் நடுப்பகுதியில், டில்லிக்குத் தெற்கே ஏழுமைல் தொலைவில் இருக்கும் மெஹ்ராலியில் உள்ள, இஸ்லாமின் பேராற்றல் என்ற பொருள்படும் குவ்வத்-உல்-இஸ்லாம் மசூதியில் அவருக்கு வரவேற்பு காத்திருந்தது. உண்ணாவிரதத்தின் போது மகாத்மாகாந்தி அடைந்த துன்பத்தை நியாயப்படுத்த இதைவிட சிறந்த காட்சி இருக்க முடியாது. 27 இந்து மற்றும் சமணக் கோயில்களின் இடிபாடுகளுக்குமேல் கட்டப்பட்ட அது இந்தியாவில் உள்ள மசூதிகளிலேயே பழமையானதாகும். ஆண்டுக்கு ஒரு முறை இந்த மசூதியைச் சுற்றியுள்ள கிராமங்களின் மக்கள் ஒரு மகத்தான மதத் திருவிழாவுக்காக அங்கே ஆயிரக்கணக்கில் கூடுவார்கள். இந்த மசூதியைக் கட்டியவரும், அடிமை வம்ச அரசரும், டில்லியின் முதலாவது முஸ்லீம் சுல்தானுமான, குத்-உத்-தின் (Quth-ud-din) (குத் ஃபுதின் என்பது போல - மொ-ர்) என்பவரின் நினைவு நாளாகும் அது.

காந்தி உண்ணாவிரதத்தை முடிக்க முன் வைத்த ஏழு நிபந்தனைகளில் ஒன்று, இந்த மசூதியின் திருவிழா தடங்கலின்றி நடக்க வேண்டும்; இங்கே கூடும் முஸ்லீம்களின் உயிருக்கும் எந்த வித ஆபத்தும் இருக்கக் கூடாது என்பதாகும். அவரது உண்ணாவிரதம் பெற்ற வெற்றி, இவ்வளவு முழுமையானதாக இருக்கும் என்று அவரே கூட கற்பனை செய்து பார்த்திருக்க முடியாது.

இரு வாரங்களுக்கு முன்னால் மெஹ்ராலிக்கு வரும் முஸ்லீம்களை கட்டாரிகளாலும் வாள்களாலும் (கிர்பான்கள்) வரவேற்ற இந்துக்களும் சீக்கியர்களும், இப்போது அலங்கரிக்கப்பட்டிருக்கும் மசூதி வாசலில் நின்று கொண்டு அங்கு வரும் முஸ்லீம் யாத்ரிகர்களுக்கு சாமந்திப்பூக்கள் மற்றும் ரோஜாப் பூக்களாலான மாலைகளை அணிவித்து வரவேற்றார்கள் மசூதிக்குள்ளே சில சீக்கியர்கள் சிறு சிறு கடைகளை அமைத்திருந்தனர் இங்கே வரும் யாத்ரிகர்களுக்கு இலவசமாகக் கோப்பைகளில் தேநீர் வழங்கினார்கள். முஸ்லீம்களும், சீக்கியர்களும், இந்துக்களும் ஒன்று கலந்து ஏராளமாகக் கூடியிருக்கும் அந்தக் கூட்டத்துக்குள், மனு மற்றும் ஆபாவின் தோள்களில் கைகளைப் போட்டபடி நடந்த காந்தி உணர்ச்சிப் பெருக்கால் கிட்டத்தட்ட அழுதுவிட்டார் என்றே சொல்லலாம்.

தங்களின் நன்றியை வெளிப்படுத்தும் விதமாக காந்தியை வரவேற்ற அந்த மசூதியின் மவுல்விகள், அதன் மையப் பகுதியிலிருந்து விசுவாசிகளுக்கு உரையாற்றுமாறு கேட்டுக் கொண்டார்கள். மசூதியின் மையப்பகுதிக்கு மகளிர் வருவதற்குத் தடை விதிக்கும் கடுமையான இஸ்லாமிய மரபைக் கூட மனு மற்றும் ஆபாவுக்காகக் கைவிட்டுவிட்டனர். ஏனெனில் அவர்களை 'காந்தியின் புதல்விகளாக' அவர்கள் கருதினர்.

மகிழ்ச்சி நிறைந்த காந்தி, இந்துக்களும் சீக்கியர்களும் முஸ்லீம்களும் இப்போது இருப்பது போல், நண்பர்களாகவும் சகோதரர்களாகவும் வாழ

இந்தப் புனித இடத்தில் சபதமேற்க வேண்டும் என்று மன்றாடி கேட்டுக் கொண்டார். 'நாம் தனித்தனியாக வாழலாம்; ஆனால் நாம் ஒரே மரத்தின் இலைகள்' என்று அவர் சொன்னார்.

அளவுக்கு மீறிய முயற்சியாலும், உணர்ச்சிப் பெருக்காலும் சோர்வடைந்த காந்தி பிர்லா மாளிகைக்குத் திரும்பினார். களிமண் குளியலில் ஓய்வெடுத்த அவர் ஆர்வமிக்க ஏக்கச் சிந்தனைக்குள் மூழ்கினார். மதன்லாலின் குண்டிலிருந்து தப்பித்ததன் பொருள் என்ன என்பது பற்றி எண்ணும்போதெல்லாம் சமீப காலமாக இப்படியொரு சிந்தனை அவருக்கு ஏற்பட்டது.

அவர் தப்பித்தது 'கடவுளின் கருணையால்தான்' ஆனால் 'அவனது கட்டளை வரும்போது அதனை ஏற்றுக் கொள்ள நான் தயாராகவே இருக்கிறேன். பிப்ரவரி 2 அன்று டில்லியிலிருந்து புறப்படப் போவதாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால், இங்கிருந்து வெளியே செல்ல முடியும் என்ற எண்ணம் எனக்கே இல்லை. நாளை நடப்பதை யார் அறிவார்?' என்று அவர் கூறினார்.

நாதுராம் கோட்சேயின் உத்தரவுக்கிணங்க, ஜனவரி 27 பிற்பகலில் வெகுநேரம், பழைய டில்லி ரயில் நிலையத்துக்கு முன்னால் உள்ள குடிநீர்க் குழாயைச் சுற்றியிருக்கும் வட்டமான தோட்டப்பகுதியில் கார்காரே மெதுவாக நடந்தபடி இருந்தான். தூங்கிக் கொண்டும், மலஜலம் கழித்தபடியும், யாசித்துக் கொண்டும், சில சமயங்களில் இறந்து வீழ்ந்தும் வெறுப்பை ஏற்படுத்தும் அகதிகள் ஏராளமாக இருந்த அந்த மைதானத்தின் வழியே இரண்டு நண்பர்களும் அவனை நோக்கி நடந்து வருவதைக் கண்டான்.

முழுவதும் ஊக்கமிழந்தவர்களாக அவர்கள் காணப்பட்டனர். டில்லி அகதி முகாம்களில் மணிக்கணக்கில் நடத்திய தேடுதலில் ஒரு பயனும் கிடைக்கவில்லை. கைத்துப்பாக்கியைக் கண்டுபிடித்துவிடலாம் என்று அவர்கள் நினைத்த, சோகம் வழிந்த கடைகளில் இருந்ததெல்லாம் வேதனையும் வெறுப்பும் மட்டுமே. ஆயுதத்தைத் தேடும் பயனற்ற முயற்சியில் ஒரு நாள் வீணாகிப் போகும்; காவலர்கள் அவர்களைக் கண்காணிப்பதால் இன்னொருநாள் கழியும்; மற்றொருநாளோ காந்திக்குக் காவலர்கள் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்துவிடுவார்கள். அவர்களின் காலம் ஓடிக் கொண்டிருந்தது. இந்தப் படுகொலையைச் செய்வதற்குத் தேவையான கைத்துப்பாக்கியைக் கண்டுபிடிக்கலாம் என்பதற்குக் கடைசி நம்பிக்கையாக ஒரு இடம் பாக்கியிருந்தது. அது 194 மைல் தூரத்தில் உள்ள குவாலியர். அங்கேயும் ஆயுதம் கிடைக்காவிட்டால் அவர்களின் முயற்சியைக் கைவிட்டுவிட்டு பம்பாயில் உள்ள சவார்க்கர் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களிடம் அவமானத்துடன் தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான்.

24 மணி நேரத்தில் மீண்டும் சந்திக்குமாறு கார்காரேயிடம் அவர்கள் கூறினர். பின்னர் உடைந்த உள்ளத்தோடு குவாலியர் செல்லும் கடைசி ரயிலைப் பிடிக்க நிலையத்துக்குள் புகுந்து மறைந்தனர். அன்று இரவு எட்டு மணிக்கு இம்பீரியல் ஓட்டலுக்கு வரச்சொல்லியிருந்த அழகான ஏர் இந்தியா விமானப் பணிப் பெண்ணுடன் நாராயண் ஆப்தேயின் சந்திப்பு பறிபோனது. மகாத்மா

*காந்தியைக் கொல்வதற்கு ஒரு துப்பாக்கியைத் தேடி குவாலியருக்குப் பயணம் செய்ததால் அவனது காதல் விளையாட்டு வாழ்க்கையில் கடைசிப் புணர்ச்சியை அவன் தியாகம் செய்தான். அவனது உயிருக்கு விலையாகப்போகும் அந்தப் பயணமும் கடைசியாகவே இருக்கப் போகிறது.*

*ஜனவரி 27 அன்று நள்ளிரவுக்குச் சற்று முந்தைய அவசரமான அழைப்பு மணி சத்தம் குவாலியர் ஹோமியோபதி மருத்துவர் தத்தாத்ரேயா பார்ச்சூரை எழுப்பியது. நிமோனியா காய்ச்சலுடன் குழந்தையைச் சுமந்து கொண்டு பதற்றத்துடன் நிற்கும் ஒரு தாயை எதிர்பார்த்து தூக்கக் கலக்கத்தில் தடுமாறியபடி அவர் தனது மருத்துவமனைக் கதவருகே வந்தார். மாறாக, ஒரு ஜோடி பழைய நண்பர்களை, தீவிரவாதிகளை அவர் கண்டார். இந்துயிசம் மீதான இவர்களின் ஈடுபாடு அவருக்கு இருந்ததையும் மிஞ்சியதாகும். இந்த டாக்டர் நாலரை மாதங்களுக்கு முன் மதன்லாலுக்கு ஒரு வழி காட்டினார். அது டில்லி சிறைச்சாலை அறையில் முடிந்துவிட்டது. இப்போது மனம் தளர்ந்த நிலையில் ஒரு கைத்துப்பாக்கியைத் தேடும் நாதுராம் கோட்சேயின் கடைசி நம்பிக்கை இவர்தான்.*

*அடுத்த நாள் முழுவதையும் ஆப்தேயும் கோட்சேயும் பார்ச்சூரின் பார்வையாளர்கள் அறையில் குறுகலான மரப்பலகைகளில் அமர்ந்து கழித்தனர். அங்கே டாக்டரின் குருவுடைய பழங்கால எண்ணெய் ஓவியம் இருந்தது. புலிகள் நிறைந்த குவாலியர் காடுகளில் வாழ்நாள் முழுவதையும் தியானத்தில் கழித்த இந்து மதத் துறவிதான் அவரது குரு. நிமோனியா அல்லது மார்புச்சளி நோயால் நுரையீரலே வெளியே வருவதுபோல் இருமிக் கொண்டு அவர்களைச் சுற்றி அவதிப்படுவோர் அளவுக்கு முகம் வாடி சோர்வடைந்திருக்கும் அந்த இரண்டு இளைஞர்களுக்கும் டாக்டரின் கவனிப்பு தேவையாய் இருந்தது. பயன்தரும் மருந்துகளில் அன்றாடம் கலப்பதற்குத் தேவையான ஏலக்காய், வெங்காயம், மூங்கில் துளிர்கள் மற்றும் சில செடிகளை அவரின் மருத்துவ உதவியாளர்கள் குவாலியர் கடைகள் முழுவதும் தேடியலைந்தார்கள். அவரின் அரசியல் உதவியாளர்களோ கோட்சே, ஆப்தே ஆகியோருக்குத் தேவையான மருந்தை நகர் முழுவதும் தேடினார்கள்.*

*இறுதியாக ஜனவரி 28 இரவு 10 மணிக்குப் பிறகு, மாலை நேர எக்ஸ்பிரசில் ஏறி அவர்கள் இருவரும் குவாலியரிலிருந்து புறப்பட்டார்கள். நீண்டதும் சிக்கல்கள் நிறைந்ததுமான அவர்களின் பயணம் முடிந்தது. இதற்கான தேடலில், துணைக் கண்டத்தின் பாதி தூரத்தை அவர்கள் இரண்டு முறை சுற்றிவிட்டனர். அகதி முகாம்கள், இந்துக் கோயில்கள், பம்பாயின் குடிசைப் பகுதிகள், சலவையகங்கள், அச்சகங்கள், சவார்க்கர் சதன் என பல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தேடல், குவாலியரில் ஹோமியோபதியின் அலுவலகத்தில் மூலிகைகள் மற்றும் மருந்துப் பொருள்களின் வாடையில் முடிவடைந்தது. மங்கலான கறுப்பு நிறம் கொண்ட 606824-பி (P) எண்ணுள்ள பெரெட்டா (Beretta) தானியங்கி கைத்துப்பாக்கியை பழைய துணியில் சுற்றி காகிதப் பைக்குள் வைத்து கோட்சே கக்கத்தில் வைத்திருந்தான். அத்துடன் இருபது தோட்டாக்களும் இருந்தன. இப்போது நாதுராம் கோட்சேக்குத் தேவைப்படுவதெல்லாம் அதனைப் பயன்படுத்துவதற்கான திறமையும் மன உறுதியும் தான்.*

*ஆப்தேயும் கோட்சேயும் குவாலியர் நிலையத்தில் ரயில் ஏறிய அதே சமயத்தில் 800 மைல்களுக்கு அப்பால் இன்னொருவர் பயணத்தை முடித்திருந்தார். பூனா சிஐடி பிரிவின் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் யு. எச். ராணாவின் நெடிய மெதுவான வீடு திரும்பும் பயணம் முடிவடைந்தது. கோட்சேயையும் ஆப்தேயையும் அடையாளம் கண்டு பிர்லா மாளிகைக்குள் நுழைய முடியாமல் தடுப்பதற்குத் தேவையான தகவல்கள் அடங்கிய கோப்புகளை வைத்திருக்கும் அந்த அதிகாரி மீண்டும் அவரது அதிகார எல்லைக்கு வந்தார். இருப்பினும் எந்த விதமான அவசர உணர்வும் இல்லாமல் அவர் பூனா ரயில் நிலையத்தில் ரயிலைவிட்டு இறங்கினார். மாலை நேரத்தில் அலுவலகம் செல்ல வேண்டும் என்பது பற்றி அவர் கவலைப்படவில்லை. நீண்ட பயணத்தால் அவர் களைப்பாக இருந்தார். அலுவலகத்துக்குப் பதிலாக படுப்பதற்காக அவர் வீட்டுக்குச் சென்றார்.*

*'நமக்கு கிடைத்து விட்டது! ஓ. கார்காரே, இந்த முறை உண்மையிலேயே நமக்குக் கிடைத்து விட்டது!' மகிழ்ச்சியில் திளைத்த நாதுராம் கோட்சே, பழைய டில்லி ரயில் நிலையத்துக்கு எதிரே தண்ணீர்க் குழாயைச் சுற்றியுள்ள கூட்டத்திலிருந்து அந்த டீகான் கெஸ்ட் ஹவுஸ் உரிமையாளரை இழுத்துச் சென்றான். கடத்தல்காரன் ஒருவன், மறைத்து வைத்திருக்கும் பொருள்களை விரைந்து காட்டி மறைத்துக் கொள்வது போல், பாழடைந்த பழுப்பு நிறக் கோட்டிற்குள் மடித்து வைத்திருந்த அந்தப் பொருளை அவன் காட்டினான். பலகாலமும் கண்டுபிடிப்பதில் அவர்கள் ஏமாற்றமடைந்த கருப்பு நிற கைத்துப்பாக்கி, பளபளப்புடன் அவனது இடுப்புப் பட்டையில் செருகப் பட்டிருபபதை கார்காரே பார்த்தான்.*

*கடைசியாக கொலைக்கருவி அவர்களின் கையில் கிடைத்து விட்டதால், ஆர்வம் மிக்க வேகத்தோடு, தீர்மானித்து விட்ட முடிவை நோக்கி மூவரும் இப்போது முன்னேறிச் சென்றனர். அந்த மும்மூர்த்திகளில் எஞ்சியிருந்த ஒருவன் பிந்தைய நிகழ்வுகளை நினைவு கூர்ந்தான்:*

> ***தனணீர்க்குழாய் அருகே நின்றிருந்த எங்களிடம் ஆப்தே கூறினான். 'இந்த முறை தவறு செய்வதை நாம் விரும்பவில்லை. கைத்துப்பாக்கி நமது நோக்கத்தை நிறைவேற்றும் விதத்தில் வேலை செய்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ள நாம் விரும்புகிறோம். இதோ பாருங்கள்! தேவையான தோட்டாக்கள் இருக்கின்றன.'***
>
> ***சொல்லி முடித்தவுடன் அவன் அணிந்திருந்த கோட்டின் பைகளைத் திறந்தான். அவன் சொன்னது சரிதான். உள்ளே ஏராளமான தோட்டாக்களை நான் பார்த்தேன். எனவே சுடுவதற்கான பயிற்சி செய்யும் ஓர் இடத்தைத் தேடுவதென்று மூவரும் முடிவு செய்தோம். ஆனால் நாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் நிறைந்திருந்தார்கள். டில்லி முழுவதும் அகதிகள் அந்த அளவுக்குப் பரவலாக இருந்தார்கள்.***
>
> ***ஒவ்வொரு இடமாகச் சென்று கொண்டிருந்த எங்களிடம் நாதுராம் சின்ன கதையொன்றை சொன்னான். மராட்டா பிரதமர்களில் ஒருவரான ராஜாராவ் பேஷ்வா என்பவரைப் பற்றியது அது. அந்த நாளில் மொகலாயச் சக்கரவர்த்திகளை எதிர்த்துப் பல சண்டைகளை அவர் நடத்தியிருக்கிறார்.***

அதனால் அவருக்கு எப்போதும் பணம் தேவையாயிருக்கும். ஒரு சண்டை முடிவதற்கு முன் இன்னொன்று தொடங்கி விடும் என்பதால் அவர் மேலும் பணத்தைக் கடன் வாங்க வேண்டியிருக்கும்.

'அதுதான் நம்முடைய நிலையும். இந்தக் காரியத்துக்காக நாம் பணத்தை யாசித்துப் பெற்றிருக்கிறோம். ஆனால் எதையும் செய்து முடிக்கவில்லை. இதில் வெற்றி பெறவில்லையென்றால் அது நமக்குப் பெருத்த அவமானமாகும்' என்று நாதுராம் கூறினான்.

கடைசியாக பிர்லா மந்திர் அல்லது பிர்லா கோயிலுக்குப் பின்பக்கத்தில், ஏற்கெனவே ஒரு முறை சுடுவதற்குச் சென்றிருந்த இடத்துக்கு மீண்டும் செல்வதென்று நாங்கள் முடிவு செய்தோம். அங்கே சென்றோம். துப்பாக்கியால் சுடுகிற நேரத்தில் காந்திஜி உட்கார்ந்திருப்பாரா அல்லது நின்று கொண்டிருப்பாரா என்பது பற்றி நாங்கள் கற்பனை செய்தோம். எதுவாக இருக்கும் என்பதை எங்களால் அறிய முடியவில்லை. அது அந்த நேர நிலையைப் பொறுத்தது. எனவே இரண்டு வழிகளுக்கேற்பவும் வியூகம் வகுத்தோம்.

இதன்படி, மற்றவற்றிலிருந்து விலகி இருந்த ஒரு வேலமரத்தை ஆப்தே தெரிவு செய்தான். அதற்குப் பின்னால் அவன் கீழே அமர்ந்தான். காந்திஜி அமர்ந்திருந்தால் அவரது உயரம் எவ்வளவு இருக்கும் என்று அவன் கற்பனை செய்து பார்த்தான். அவரது தலை எங்கு இருக்குமோ அந்த உயரத்துக்கு மரத்தின் மீது கத்தியால் சில அடையாளங்களை அவன் செய்தான். 'சரி! இது காந்திஜியின் தலையென்று நினைத்துக் கொள்; இது அவரது உடல். இப்போது இலக்கைப் பார்த்துச் சுடு' என்று அவன் நாதுராமிடம் கூறினான்.

20லிருந்து 25 அடி தூரம் வரை நாதுராம் பின்னால் நகர்ந்து சென்றான். அங்கிருந்து இலக்கு நோக்கி அவன் சுட்டான். ஒன்றுக்குப் பின் ஒன்றாக நான்கு முறை அவன் சுட்டுக் கொண்டே இருந்தான். அவன் இலக்கைச் சரியாக அறிந்தான்; அது மிகத் துல்லியமாக இருந்தது. ஆப்தே மரத்தருகே சென்றான். காந்திஜியின் தலைக்குக் குறி வைத்து சுடப்பட்டுள்ள அடையாளங்களை அவன் பார்த்தான். தோட்டாக்கள் எல்லாம் அங்கே இருந்தன.

'நாதுராம்! மிகச் சரியாக இருக்கிறது' அவன் கூறினான்.

டில்லியில் காந்தியின் மகத்தான பணி பெரும்பாலும் முடிந்து விட்டது. மயானமாக இருந்த நகருக்குத்தான் நான்கு மாதங்களுக்கு முன் அவர் வந்து சேர்ந்தார். அப்போது அந்த நகரின் அகன்று விரிந்த சாலை ஓரங்களில் மனித சடலங்கள் சிதறிக் கிடந்தன. அச்சமும் பீதியும் அண்டை அயலாரிடம் நிலைத்திருந்தன. அங்கிருந்த ஆட்சியும் அச்சமடைந்து அலங்கோலமாக இருந்தது. இப்போது தலைநகர் அமைதியானது. ஒழுங்கு மீண்டும் நிலைநாட்டப்பட்டுள்ளது. வேதனை நிறைந்த அவரது உண்ணாவிரதம் அதன் தார்மீகச் சூழ்நிலையில் விசித்திரமான மாற்றத்தை விளைவித்துள்ளது. அங்கிருந்து அவர் செல்வதற்கு இதுதான் சரியான தருணம்.

அருகே உள்ள காட்டுப் பகுதியில் அவரது தலையாகக் கருதப்பட்ட மரத்தின் அடிபாகத்தில் ஒருவர் நான்கு தோட்டாக்களால் அடையாளம் செய்த போது, காந்தி புது டில்லியிலிருந்து புறப்படுவதற்குத் தற்காலிகமாக ஒரு தேதியை நிர்ணயித்தார். அவர் தெரிவு செய்தது பிப்ரவரி 3. முதலில் அவர் வார்தாவுக்கு

வெளியே இருக்கும் ஆஸ்ரமத்துக்குச் செல்வார். பத்து நாட்களுக்குப் பின் அந்த முதியவரின் பாதங்கள் பயணத்தைத் தொடங்கும். படுகொலைகள் பல நடந்த பாதையில், மனித குல வரலாற்றில் மாபெரும் குடிபெயர்வு என்ற மக்கள் வெள்ளத்தை அன்பு எனும் சக்தியால் திருப்பி விட முடியும் என்ற நம்பிக்கையோடு அவர் பாகிஸ்தானுக்குப் புனித யாத்திரை மேற்கொள்ள விருந்தார். பாலைவனப் பகுதியில் தூரத்தே தோன்றும் கானல் நீர் போல, அந்தக் கடைசி மகா அதிசயம் அவருக்கு சைகை காட்டியது.

எப்போதும் போலவே காந்திக்குரிய நாளின் ஒவ்வொரு நிமிடமும் கவனத்துடன் திட்டமிடப்பட்டு பயன்படுத்தப்பட்டது. அவர் நூல் நூற்றார். மண்குளியல் செய்து இனிமா பயன்படுத்தினார். வங்கமொழி படித்தார். பல கடிதங்களை எழுதினார். காங்கிரஸ் கட்சிக்குப் புதிய அமைப்புச் சட்ட நகல் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார். ஏராளமான பார்வையாளர்களை வர வேற்றார். இந்திராகாந்தியோடும் அவரது அத்தை மகள் தாரா பண்டிட் உடனும் நகைச்சுவையுடன் பேசி மகிழ்ந்தார். மார்கரெட் புர்கே - ஒயிட்டுக்கு ஒரு படத்தில் கையொப்பமிட்டு அளித்தார். அப்போது அணுகுண்டினை அமெரிக்கா அழிக்க வேண்டும் என்று அவரிடம் சொன்னார். அணுகுண்டா லும் அழிக்க முடியாத ஒரே சக்தி அஹிம்சைதான் என்று அவர் கூறினார். அணுகுண்டு தாக்குதல் நடத்த வந்தால், உறுதியாக நின்று 'மேலே பார்த்து அச்சம் இன்றி கவனித்து, விமானிக்காக வேண்டிக் கொள்ளுங்கள்' என்று தான் அவரின் ஆதரவாளர்களை அவர் வலியுறுத்துவார்.

திடீரென்று பருவமழையின் வேகத்தோடு மகிழ்ச்சியும் சுறுசுறுப்பும் நிறைந்த அந்த நாளில் ஒரு அபஸ்வரம் ஊடுருவியது. எல்லைப்புற மாகாணத்திலிருந்து இந்துக்கள் மற்றும் சீக்கியர்களைக் கொண்ட ஒரு குழுவினர் அவரைச் சந்திக்க வந்தனர். அவர் உண்ணாவிரதத்தை அறிவித்த அன்று நடந்த பயங்கர படுகொலை சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள். காந்தி தனது வருத்தத்தின் வெளிப்பாடாக அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்கு முன், ஆவேசம் கொண்ட அந்தக் கூட்டத்திலிருந்து ஒருவர் கத்தினார்: 'போதுமான அளவு எங்களுக்கு நீங்கள் தொல்லைக் கொடுத்து விட்டீர்கள். எங்களை முற்றிலுமாக அழித்து விட்டீர்கள். எங்களைத் தனித்து விடுங்கள். ஓய்வெடுக்க இமய மலைக்குச் செல்லுங்கள்.'

இந்த வார்த்தைகள் காந்தியை நிலைகுலையச் செய்தன. ஏதோ ஒரு பயங்கரமான பாரம் விழுந்து அவரது மெலிந்த உடல் ஒடிந்து நொறுங்குவது போல் தோன்றியது. பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் செல்லும் போது அவரது நடையில் தளர்ச்சி இருந்தது. வழக்கமாக மனு மற்றும் ஆபாவின் தோள்களில் கதர் இழைகள் போல் லேசாக இருக்கும் அவரது கைகள் அன்று உதவிக்காக மிகவும் இறுக்கிப் பற்றியிருந்தன.

அவரது குரல் மெலிந்தும் பலவீனமாகவும் இருந்தது. ஒவ்வொரு வார்த்தையிலும் அதீதமான சோகம் இழையோடியது. இந்தியாவின் மகாத்மா அவரது நாட்டு மக்களுக்குக் கடைசி முறையாக உரை நிகழ்த்தினார். அவர் பேசும் போது குளிர்கால அந்திப் பொழுதின் ஒளிமங்கிய நிழல் அந்தப் புல் வெளிப்பரப்பில் பரவத் தொடங்கியது. அவரை மிகவும் நிலைகுலையச்

செய்திருந்த கோபக்கார அகதியின் வார்த்தைகளுக்குப் பதில் சொல்வது தவிர்க்க முடியாததாகி விட்டது.

'யார் பேச்சை நான் கேட்பது?' அவருக்கு எதிரே அமைதியாகக் கூடியிருந்தவர்களிடம் அவர் கேட்டார். 'என்னை இங்கே இருக்குமாறு சிலர் கேட்கிறார்கள். மற்ற சிலரோ வெளியேறுமாறு கூறுகிறார்கள். சிலர் என்னைத் திட்டவும் கண்டிக்கவும் செய்கிறார்கள். மற்ற சிலரோ என்னை மெச்சுகிறார்கள். நான் என்னதான் செய்வது?' உணர்ச்சிகளைக் கொட்டி அவர் வினவினார். அவரது குரல் மென்மையாகவும் வேதனை நிறைந்ததாகவும் இருந்தது. 'கடவுள் எனக்கிடும் கட்டளைகளையே நான் செய்கிறேன். ஒழுங்கின்மைக்கிடையே நான் அமைதியைத் தேடுகிறேன்.'

நீண்ட, சிந்தனை நிறைந்த அமைதிக்குப் பின் காந்தி பேச்சை முடித்த போது, 'எனது இமயமலை இங்கே தான் இருக்கிறது' என்றார்.

காந்தியின் பிரார்த்தனைக் கூட்டம் முடிந்த சற்று நேரத்தில், அவரைக் கொல்வதற்கு நடந்த முயற்சி பற்றிய விசாரணைக்குப் பொறுப்பான காவல்துறை அதிகாரிக்கு வெகு தூரத்திலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. மதன்லால் சித்ரவதைக்கு அஞ்சி விரிவான ஒப்புதல் வாக்குமூலம் அளித்த பிறகும் சஞ்சீவியின் விசாரணையில் கொஞ்சமும் முன்னேற்றம் இல்லை. கொலைகாரர் கள் திரும்பமாட்டார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவரிடம் இன்னமும் இருந்ததால் இந்த விசாரணை அவரது கட்டுப்பாட்டின் கீழ் வந்தபோது இருந்த அதே மந்த நிலை மேலும் நீடித்தது.

அவரைத் தொலைபேசியில் அழைத்தவரிடமும் மிகவும் குறைவான முன்னேற்றத் தகவலே இருந்தது. 'ஜிம்மி' நகர்வாலாவின் பம்பாய் விசாரணையிலும் முதல் 48 மணி நேரத்தில் புதிய தகவல் எதுவும் இல்லை. பம்பாய் கண்காணிப்புப் பிரிவு அதன் கண்காணிப்பை சவார்க்கர் சதன் வாயிலில் தொடர்ந்தது. ஆனால் அந்த சூழ்ச்சிக்கார தலைவர் மிகவும் திறமையாக, சதியில் அவரது பங்கு பற்றி எதையும் வெளிக்காட்டவில்லை. இருப்பினும் அந்த வீட்டிலிருந்து தீமையின் கதிர்கள் வெளிப்படுவதற்கான அறிகுறி தெரிந்தது. அந்த வீட்டுக்கு சவார்க்கரின் ஆதரவாளர்கள் தொடர்ந்து வந்து சென்று கொண்டிருப்பது நகர்வாலாவின் போலீஸ்கார புத்திக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

'ஏன் எப்படி என்று என்னிடம் கேட்காதீர்கள்; ஆனால் இன்னொரு முயற்சி நடக்கப் போகிறது என்பதை நான் சற்று முன் அறிந்தேன். ஏதோ ஒரு வகையில் அதற்கான சூழ்நிலை இங்கே இருப்பதாக நான் உணர்கிறேன்' அவர் சஞ்சீவி யிடம் கூறினார்.

'என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?' சஞ்சீவி வெடித்துச் சீறினார். 'பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வரும் பொது மக்களைக் காவல்துறையினர் சோதிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று நேருவும் படேலும் காந்தியை வற்புறுத்தினார்கள். பிரார்த்தனைக் கூட்டத்தில் சீருடையில் ஒரு காவலரைப் பார்க்க நேர்ந்தாலும் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்பதுதான் காந்தியின் பதிலாகும். நாம் என்ன செய்ய முடியும்?' கோபத்துடன் சஞ்சீவி விளக்கினார்.

*சஞ்சீவியின் கேள்விக்கான பதில், டில்லியிலிருந்து 700 மைல்களுக்கு அப்பாலுள்ள இன்னொரு இந்தியக் காவல்துறை அதிகாரியின் மேசை மீது இருந்தது. மிக எளிமையாக ஒரு தொலைபேசி அழைப்பு மூலம் நான்கு நாட்களுக்கு முன்பே பெற்றிருக்க வேண்டிய தகவலை, பூனா சிஐடி பிரிவுக்குப் பொறுப்பு வகிக்கும் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் யு.எச். ராணா கடைசியாக இப்போதுதான் பெற்றார். மதன்லால் முதல் வாக்கு மூலம் அளித்த ஒன்பது நாட்களுக்கும் முழுமையாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்த ஐந்து நாட்களுக்கும் பிறகு பிர்லா மாளிகையின் எல்லைப்பகுதிகளுக்குள் ஊடுருவ உறுதி பூண்டிருந்த வஞ்சக மும்மூர்த்திகளின் அடையாளங்கள் காவல்துறை அதிகாரி ஒருவரிடம் இருந்தன.*

*இருந்தாலும் ஆப்தே, கோட்சே பற்றிய விவரத்தை, தொலைபேசியிலோ, தந்தியிலோ ராணா டில்லிக்கு அனுப்பி வைக்கவில்லை. அவர்களின் புகைப்படங்களை பிர்லா மாளிகையின் வாசலில் காவலிருப்போருக்கு அனுப்பி வைக்கவும் அவர் முயற்சி செய்யவில்லை. ராணாவின் கட்டுப்பாட்டில் உள்ள காவலர்களால் ஒரு தொந்தரவும் இல்லாமல், பூனாவில் உள்ள ஆயுதக் கடையில் குண்டு துளைக்காத ஆடையை தைத்துக் கொண்டு காலத்தைக் கழித்தான் பாட்கே. டில்லியில் சஞ்சீவியின் மந்த நிலைக்கு எந்த நம்பிக்கை அடிப்படையாக இருந்ததோ அதே தான் கிட்டத்தட்ட இந்துத் தீவிரவாதத் தலைநகரில் இருந்த ராணாவின் செயல்களுக்கும் காரணமாக இருந்தது. ஜனவரி 20இன் சதித்திட்ட நாயகர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்பதில் அவருக்கு முழு நம்பிக்கை இருந்தது போல் தோன்றியது. இந்தியக் காவல்துறை வைத்திருந்த மிக முக்கியமான தகவல் அவரது மேசையை விட்டு வெளியே செல்லவே இல்லை.*

★

*திரும்பி வரமாட்டார்கள் என்று நம்பப்பட்ட அந்த மூன்று பேரும், பழைய டில்லி ரயில் நிலையத்தின் வசதிகள் குறைந்த ஆறாம் எண் ஓய்வு அறையில் நின்றபடி சாலையில் கூட்டம் கூட்டமாகச் செல்லும் டோங்காக்களையும், வண்டிகளையும், கிரீச் ஒலியுடன் ஓடும் பேருந்துகளையும் பார்த்துக் கொண்டிருந்தனர். மகாத்மா காந்தியின் உயிரைக் காப்பாற்ற இந்திய காவல்துறைக்கான அவகாசம் நாள் கணக்கில் இல்லை. மணிக்கணக்கில் மட்டுமே இருந்தன. மங்கலான ரயில் நிலைய அறையில் இருந்த கோட்சே, ஆப்தே, கார்காரே ஆகியோர் வரலாற்றுடனான சந்திப்புக்கு நேரம் குறித்து விட்டனர். மோகன்தாஸ் காந்தியை எத்தனை மணிக்குக் கொல்வது என்பதை அவர்கள் தீர்மானித்து விட்டனர். ஏற்கெனவே அவர்கள் முயற்சி செய்து தோற்றுப் போன அதே பிர்லா மாளிகையின் தோட்டத்திலிருந்து, ஜனவரி 30 வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு அவர்கள் காந்தியைக் கொல்லப் போகிறார்கள்.*

***நாதுராம் நல்ல மனநிலையில் இருந்தான்.** (கார்காரே நினைவு கூர்ந்தான்) **அவன் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டான். அமைதியுடன் இருந்தான். சுமார் 8.30 மணிக்கு நெகிழ்ச்சியான மனநிலையுடன் அவன் சொன்னான். 'வாருங்கள். நமது கடைசி உணவை அனைவரும் சேர்ந்து உண்போம். நாம் நல்ல***

சாப்பாடு, விருந்து உண்ண வேண்டும். இன்னொரு முறை நாம் இப்படி சாப்பிடுவதற்கு ஒருபோதும் வாய்ப்பிருக்காது.'

நாங்கள் கீழே இறங்கினோம். ரயில் நிலையம் வழியாக நடந்து பிராண்டன்ஸ் (Brandon's) என்று பெயரிடப்பட்ட ஒரு உணவு விடுதிக்குச் சென்றோம். எல்லா ரயில் நிலையங்களிலும் இந்தப் பெயரில் ஓர் ஒப்பந்தக்காரர் உணவு விடுதிகள் நடத்திக் கொண்டிருந்தார். 'கார்காரே சைவ உணவுக்காரர் என்பதால் நாம் அங்கே செல்ல முடியாது' என்று ஆப்தே சொன்னான்.

நாதுராம் எனது தோள் மீது கைபோட்டுக் கொண்டு சொன்னான், 'நீ சொல்வது ரொம்ப சரி. இன்றிரவு நாம் எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டும்' எனவே, வேறோர் இடத்தைத் தேடிச் சென்றோம்.

சாதம், காய்கறி பதார்த்தங்கள், சப்பாத்திகள் என்று விலையுயர்ந்த முதல்தரமான உணவைக் கொண்டு வருமாறு கேட்டோம். சைவ உணவுக்குச் சிறப்புச் சேர்க்கும் புளித்த வெள்ளாட்டுத் தயிர் இல்லையென்று பரிமாறுபவர் கூறினார். நாதுராம் தலைமை சர்வரை அழைத்து அவரிடம் ஐந்து ரூபாயைக் கொடுத்தான். 'இதோ பார், இது ஒரு விருந்துச் சாப்பாடு. தயிர் வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நீ எங்கு வேண்டுமானாலும் போ; எவ்வளவு வேண்டுமானாலும் விலைகொடு; ஆனால் எங்களுக்குத் தயிரோடு தான் திரும்பி வர வேண்டும்' என்று அவன் சொன்னான்.

திருப்தியாக சாப்பிட்டு விட்டு ஓய்வு அறைக்கு மீண்டும் நடந்தோம். நாங்கள் அங்கே தங்கி அரட்டைப் பேச தயாரானோம். ஆனால் நாதுராம் சொன்னான்: 'வேண்டாம். என்னை இப்போது ஓய்வாக விடுங்கள். நான் தனித்திருக்க விரும்புகிறேன்.'

ஆப்தேயும் கார்காரேயும் அறையை விட்டு வெளியேறும் போது, கார்காரே திரும்பி கடைசி முறையாக கோட்சேயைப் பார்த்துக் கொண்டான். காந்தியைக் கொல்லப் போகும் அவன் படுக்கையில் படுத்தபடி டில்லிக்கு வரும் போது எடுத்து வந்த இரண்டு புத்தகங்களில் ஒன்றினைப் படித்துக் கொண்டிருந்தான். எர்ல் ஸ்டேன்லி கார்ட்னர் பெரி மேசனின் துப்பறியும் கதைப் புத்தகம் அது.

மகாத்மா காந்தி தனது வாழ்க்கையின் கடைசி மாலைப் பொழுதை, இந்திய தேசத்திற்கு அவரின் கடைசி விருப்புறுதி சாசனமாக விளங்கப் போகிற, காங்கிரஸ் கட்சிக்கான புதிய அமைப்புச் சட்ட நகலை இறுதி செய்யும் பெரும் முயற்சியில் கழித்தார். 9 .15 மணிக்கு அந்த வேலை முடிந்து அவர் எழுந்தார்.

'தலை சுற்றுகிறது' அவர் பெருமூச்சு விட்டார்.

மனுவின் மடி மீது அவரது வழுக்கைத் தலையை வைத்து வைக்கோல் மெத்தையில் படுத்தார். எண்ணெயைக் கொண்டு அவரது தலையை மனு நீவி விட்டார். காந்தி தூங்குவதற்கு முந்தைய கால் மணி நேரம், பணிகள் முடித்துத் தனித்திருக்கும் அந்தப் பொழுது, அவரின் வாழ்க்கையில் ஒரு பகுதியாகி விட்ட விசுவாசம் மிக்க சீடர்களுக்குரியது; உலகத்திற்கு அல்ல. விளையாட்டாக அரட்டைப் பேச்சுடன் காந்தி அந்த நாள் முழுவதுமான செயல்களைப் பற்றி விமர்சனம் செய்வார். அவருக்குப் பிடித்தமான நகைச்சுவை துணுக்குகளையும் சொல்வார்.

ஆனாலும் அன்று மாலை அவரது முகத்தில் மகிழ்ச்சி இல்லை. வெறுப்போடும் வேதனையோடும் அந்த அகதியின் வாயிலிருந்து வந்த சாப வார்த்தைகளை அவரது நினைவிலிருந்து அழிக்க முடியவில்லை. மனுவின் மெல்லிய விரல்கள் அவரது மண்டையோட்டுத் தோலின் மீது வருடிக் கொண்டிருந்த போது இரண்டு அல்லது மூன்று நிமிடங்களுக்கு அவர் அமைதியாக இருந்தார். பின்னர், அவரது நினைவுக்கு வந்த நகல் அமைப்புச் சட்ட விஷயம் பற்றி அவர் பேசத் தொடங்கினார். ஒரு காலத்தில் யாருக்கெல்லாம் ஒப்பற்றத் தலைவராக விளங்கினாரோ அவர்களிடம் ஊழலின் அறிகுறிகள் வளர்ந்து வருவது பற்றியதாக அது இருந்தது.

'இது இப்படியே போனால் உலகத்தின் முகத்தில் நாம் எப்படி விழிக்க முடியும்?' அவர் வினவினார். 'சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற இவர்களைச் சார்ந்து தான் நாட்டின் கவுரவம் இருக்கிறது. இவர்களே அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தினால், நாம் நமது அடித்தளத்தை இழந்து விடுவோம்.'

அவர் மீண்டும் சோகமான மவுனத்தில் ஆழ்ந்தார். பின்னர், ஏமாற்றம் நிறைந்த குரலில், அலகாபாத் நகரின் உருதுக் கவிஞர் ஒருவரின் கவிதை வரிகளை லேசாக முணுமுணுத்தார்.

'உலகப் பூந்தோட்டத்தில் வசந்த கால வாழ்வு குறுகியது. அது நிலைத்திருக்கும் போது அதன் அழகிய காட்சியைக் கண்டு மகிழுங்கள்' என்று கூறி பெருமூச்சு விட்டார்.

★

கோட்சேயைப் பிரிந்து வந்தபின், ஆப்தேயும் கார்காரேயும் பதற்றமாக இருந்தார்கள். அவர்கள் ஒரு சினிமாவுக்குச் செல்ல முடிவு செய்தனர்.

> நாங்கள் சுற்றியலைந்து முதலில் பார்த்த திரையரங்கில் நுழைந்தோம். (கார்காரே நினைவு கூர்ந்தான்). மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் கதையை அடிப்படையாகக் கொண்ட ஒரு திரைப்படம் அது. இடைவேளையின் போது வராந்தாவில் நின்று பேசிக் கொண்டிருந்தோம். எங்களது கடைசி விருந்தின் போது 'எல்லாம் நாளையோ, நாளை மறுநாளோ முடிந்து விடும்' என்று நாதுராம் சொன்னது பற்றி நான் கவலை கொண்டிருந்தேன்.
>
> 'நாதுராம் சொன்னது உனக்கு நினைவிருக்கிறதா ?' நான் ஆப்தேயிடம் கேட்டேன்.
>
> 'இருக்கிறது' அவன் சொன்னான்.
>
> 'அது சரி, அவன் ஏன் அப்படிச் சொன்னான் ? மிகப்பெரிய அந்தப் பணியை உண்மையில் அவனால் செய்து முடிக்க முடியுமா ?' என்று நான் கேட்டேன்.
>
> ஆப்தே என்னை உறுத்துப் பார்த்தான்: 'இங்கே பார் கார்காரே. உன்னை விட நாதுராமை நான் நன்கு அறிவேன். நடந்த சம்பவம் ஒன்றை உனக்குச் சொல்கிறேன். பிறகு ஒரு முடிவுக்கு வா. ஜனவரி 20ஆம் தேதி நாங்கள் டில்லியை விட்டுப் புறப்பட்ட போது முதல் வகுப்புப் பெட்டியில் கான்பூருக்குச் சென்றோம். நீண்ட நேரம் நாங்கள் அரட்டை அடித்தோம். நல்ல தூக்கம் இல்லை. காலை ஆறுமணி இருக்கும். கான்பூரை நெருங்கிக் கொண்டிருக்கும் போது நாதுராம்

மேல்படுக்கையிலிருந்து கீழே குதித்தான். என்னை உலுக்கினான் - "ஆப்தே உனக்கு ஒன்று தெரியுமா ?" அவன் வினவினான். "இங்கே பார். நான் தான் அந்தக் காரியத்தைச் செய்யப் போகிறேன். நான் மட்டுமே; வேறு யாருமல்ல. தன்னையே தியாகம் செய்யத் தயாராயிருக்கும் மனிதன் மட்டுமே அதனைச் செய்ய வேண்டும். அந்த மனிதன் நான் தான். நான் தனியாக அதனைச் செய்து முடிப்பேன்" என்று அவன் சொன்னான்.'

ஆப்தே என்னைப் பார்த்தான். மிகவும் உறுதியாக, அதே சமயம் எங்களைச் சுற்றியிருப்பவரால் கேட்க இயலாத அளவுக்கு மிகவும் மெதுவாக அவன் சொன்னான்: 'கவனி கார்காரே, நாதுராம் அந்த வார்த்தைகளைச் சொன்ன போது, மரணமடைந்த மகாத்மா காந்தியின் உடல் மோட்டார் வண்டியின் மேல் தளத்தில் கிடத்தப்பட்டிருப்பதை எனது (மனக்) கண்களால் நான் பார்த்தேன். அந்த அளவுக்கு நான் நாதுராம் மீது நம்பிக்கை வைத்திருக்கிறேன்.'

பிர்லா மாளிகையில் வைக்கோல் மெத்தையில் சுருண்டு கிடந்த அந்த மெலிந்த உருவம் கடுமையான இருமலால் அவதிப்பட்டது. கடந்த காலத்தில் காந்தியின் கஷ்டமான நேரங்களில் எல்லாம் உடனிருந்து தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட அந்தப் பெண்ணின் அருகே அந்தச் சிறிய உடல் துடித்துக் கொண்டிருப்பதைக் காணும் போது அவரது கண்களில் கண்ணீர் நிறைந்தது.

இது போன்ற சந்தர்ப்பங்களில் காந்தி பயன்படுத்துவதற்காக இனிப்பு கலந்த பெனிசிலின் மாத்திரைகளை சுசீலா நய்யார் வைத்துச் சென்றுள்ளார் என்பது மனுவுக்குத் தெரியும். ஆனால் இந்தியாவின் மகாத்மாவுக்கு சேவை செய்வதுஅவ்வளவு எளிதாக இருக்கவில்லை. அந்த மாத்திரையில் ஒன்றைச் சாப்பிடுமாறு அவரிடம் சொல்ல மனு அஞ்சினார். அப்படிச் செய்தால் அவரை அது கடுமையாகப் பாதிக்கும் என்பது நிச்சயம். பாபுவின் கஷ்டத்தை வெகு நேரத்துக்குத் தாங்கிக் கொள்ள முடியாத அவர் கடைசியாக ஒரு மாத்திரையைச் சாப்பிடுமாறு அவரிடம் கூறினார்.

மனுவின் அக்கறையான செயலுக்கு காந்தியின் பதில் அவர் அஞ்சியது போலவே வசை மொழிதான். தனது ஒட்டுமொத்தப் பாதுகாவலரான ராமனின் மீது வைத்த நம்பிக்கையில் கறையிருப்பதை அந்தப் பெண் வெளிப்படுத்தி விட்டதாக அவர் கூறினார்.

நெஞ்சைப் பிளக்கும் இருமலுக்கிடையே மூச்சிறைத்தபடி அவர் கூறினார்:

'ஒரு சிறு கட்டி வந்தோ அல்லது நோய் வாய்ப்பட்டோ நான் இறக்க நேர்ந்தால், நான் ஒரு போலி மகாத்மா ஆவேன். இதனைக் கூரையின் உச்சியில் நின்று உலகறிய உரக்கச் சொல்வது உனது கடமை. அப்போதுதான் எங்கிருந்தாலும் எனது ஆத்மா சாந்தியடையும்.'

கடந்த சில மாதங்களில் அவரின் பல போராட்டங்களில் 'பங்குதாரராகவும் உதவியாளராகவும்' இருந்த, அவருக்குத் தாயாக வேண்டும் என்று முயற்சி செய்த, அந்தப் பெண்ணின் மீது காந்தியின் கண்கள் சோகத்துடன் பதிந்தன. 'ஆனால் கடந்த வாரம் நடந்தது போல், ஒரு குண்டு வெடித்தால், அல்லது யாராவது என்னைச் சுட்டு அதன் குண்டுகளை எனது திறந்த மார்பில் அச்சமின்றியும், ராமநாமத்தை உச்சரித்துக் கொண்டும் ஏற்றுக் கொண்டால்,

அப்போதுதான் நான் உண்மையான மகாத்மா என்று நீ சொல்ல வேண்டும். அது தான் இந்திய மக்களுக்குப் பயனளிக்கும்.'

கார்காரேயும் ஆப்தேயும் ஆறாம் எண் ஓய்வு அறையின் கதவை மெதுவாகத் திறந்து உள்ளே எட்டிப்பார்த்தனர். அந்த அறையின் ஒரு ஓரத்தில் நாதுராம் கோட்சே அவனது படுக்கையில் படுத்து நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். 'அவனது மனதிலோ மூளையிலோ எதைப் பற்றியும் கவலை இல்லாதது போல்' கார்காரேக்குத் தோன்றியது. அவனுக்குப் பின் பக்கம் அன்று மாலை அவன் படித்து முடித்த துப்பறியும் கதைப் புத்தகம் தரையில் கிடந்தது.

## இருபது

# இரண்டாவது சிலுவையேற்றம்

*புது டில்லி, 30 ஜனவரி 1948*

*மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி வாழ்க்கையின் கடைசிநாள் எப்போதும் போலவே துவங்கியது. தென் ஆப்பிரிக்காவில் இருந்த காலத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டது போல் விடியலுக்கு முந்தைய இருளில் அவர் பிரார்த்தனை செய்தார். கால்களை மடக்கி படுக்கையில் அமர்ந்திருந்த அவரின் முதுகு குளிர்ச்சியான பளிங்குச் சுவரில் சாய்ந்திருந்தது. அவரும் அவரது சிறிய குழுவின் உறுப்பினர்களும் சேர்ந்து இந்து மதத்தின் புனித நூலான பகவத் கீதையின் ஸ்லோகங்களைக் கடைசி முறையாக உச்சரித்தனர். அந்த வெள்ளிக்கிழமை காலையில், அவர்கள் பாடியது கீதையின் பதினெட்டு பாடல் பகுதிகளில் முதலாவதும், இரண்டாவதுமான பகுதிகளில் இருந்தவை. காந்தியின் மெல்லிய குரல், அவரது ஆதரவாளர்களின் குரலுடன் கலந்து மிகவும் பழக்கமான அந்த வரிகளைப் பாடியது.*

> *பிறந்தவற்றுக்கு இறப்பு நிச்சயம்*
> *இறந்தவற்றுக்குப் பிறப்பு நிச்சயம்*
> *எனவே தவிர்க்க முடியாதது பற்றி*
> *நீ கவலை கொள்ள வேண்டாம்.*

*பிரார்த்தனை முடிந்ததும் அவர் பணியாற்றும் தனியறைக்கு காந்தியை மனு அழைத்துச் சென்றார். அவர் பாகிஸ்தானுக்கு நடந்து செல்வதாய்க் கனவு கண்டார். ஆனால் உதவி ஏதும் இல்லாமல் ஒரு அறையிலிருந்து இன் னொன்றுக்கு நடந்து செல்லும் ஆற்றல் இன்னும் அவருக்கு வரவில்லை. அவருக்கு எழுதும் மேசையாகப் பயன்பட்ட, கால்களின் உயரம் குறைந்த, ஒரு மேசை அருகே அமர்ந்தார். அந்த நாள் முழுவதும் இரண்டு வரிகளைத் தனக்காகப் பாடிக் கொண்டே இருப்பதைத் தாம் விரும்புவதாக மனுவிடம் கூறினார். 'களைத்திருந்தாலும் இல்லாவிட்டாலும், ஓ மனிதா, ஓய்வெடுக்காதே!'*

*முந்தைய நாள் மாலையில் ஒப்புக் கொண்டதற்கேற்ப பழைய டில்லி ரயில் நிலையத்தில் உள்ள ஆறாம் எண் ஓய்வு அறைக்கு காலை 7 மணிக்குப் பின் ஆப்தேயும் கார்காரேயும் வந்து சேர்ந்தார்கள். இதற்கு முன் கோட்சே எழுந்து விட்டான்.*

அந்த அறையில் நாங்கள் சுமார் இரண்டு மணி நேரம் அமர்ந்து அரட்டை அடித்தோம். ஒன்றுசேர்ந்து தேநீரும் காஃபியும் அருந்தினோம். ஜோக் அடித்தோம்; பேசினோம்; விவாதித் தோம். பிறகு நாங்கள் காரியத்தில் கவனம் செலுத்தத் துவங்கினோம். இதற்குக் காரணம் இருந்தது. அன்று மாலை காந்திஜியைக் கொல்வதென்று நாதுராம் முடிவு செய்து விட்டாலும், அதனை அவன் எப்படிச் செய்து முடிக்கப் போகிறான் என்பது பற்றி எங்களுக்கு எந்த யோசனையும் இல்லை.

இதற்காக ஒரு திட்டத்தை நாங்கள் உருவாக்க வேண்டி யிருந்தது. 20ஆம் தேதி குண்டு வெடிப்புக்குப் பிறகு பிர்லா மாளிகையில் காந்தியைச் சுற்றி பலத்தப் பாதுகாப்பு இருக்கும்; எனவே உள்ளே செல்வது எங்களுக்கும் சிரமமாக இருக்கும் என்று நாங்கள் கற்பனை செய்திருந்தோம். பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் செல்வோரிடம் ஆயுதம் ஏதும் இருக்கிறதா என்று சோதனை செய்ய வாய்ப்புள்ளது. அதனால், துப்பாக்கியை உள்ளே எடுத்துச் சென்று காரியத்தை முடிக்க பாதுகாப்பானதும் நிச்சயமானதுமான ஒரு வழியைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதை அறிந்தோம்.

சிறிது நேரம் நாங்கள் விவாதித்தோம். பின்னர் நாதுராம் இந்த யோசனையைக் கூறினான். கடைவீதிக்குச் சென்று மூன்று கால்களில் நிற்க வைத்து கருப்புத் துணியால் மூடி அதற்குள் புகைப்படக்காரர் இருந்து படம் பிடிக்கும் பழைய பாணி கேமராவை வாங்குவது என்பது அந்த யோசனை. அந்தக் கேமராவின் அடிப்பகுதிக்குள் துப்பாக்கியை நாங்கள் ஒளித்து வைக்க வேண்டும். காந்தி பேசப் போகும் மைக்ரோ ஃபோனுக்கு முன்னால் அந்தக் கோமராவை நாதுராம் பொருத்தி வைப்பான். கேமராவின் கருப்புத் துணியை அவனது தலைமேல் போட்டு மூடிக் கொண்டு துப்பாக்கியை எடுக்க வேண்டும். காந்தி பேசிக் கொண்டிருக்கும் போது, மூடியிருக்கும் துணிக்கு உள்ளேயிருந்து அவரைச் சுட்டு விட வேண்டும்.

இந்த யோசனைப்படி நாங்கள் எத்தகைய கேமராவை வாங்க வேண்டுமோ அதற்குரிய புகைப்படக்காரரைத் தேடி வீதிகளில் நடந்தோம். ரயில் நிலையம் அருகே ஒரு கேமராவைப் பார்த்தோம். ஆனால் சிறிது நேரம் யோசித்த பிறகு, இந்த யோசனை மோசமானது என்று ஆப்தே கூறிவிட்டான். இது போன்ற கேமராக்களை இப்போது யாரும் பயன்படுத்துவதில்லை. காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டத்தில் அவரைப் படம் பிடிக்கச் செல்லும் எவரும், சிறிய அளவிலான ஜெர்மன் அல்லது அமெரிக்கக் கேமராவையே பயன்படுத்து வார்கள்.

வேறு ஏதாவது திட்டம் பற்றி சிந்திக்க நாங்கள் மீண்டும் ஓய்வு அறைக்குச் சென்றோம். வீதிகளில் நடக்கும் போது பொதுவாக முஸ்லீம் பெண்கள் அணியும் பர்தாவைப் பயன்படுத்தலாம் என்ற ஒரு யோசனை உதித்தது. முஸ்லீம் பெண்களின் பாதுகாவலர் என்பதால் காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு அந்த நாட்களில் அவர்கள் அதிக எண்ணிக்கையில் வந்தார்கள். மேலும் இந்தப் பெண்கள் வழக்கமாக அவருக்கு மிக அருகில் இருப்பார்கள். இதனால் இந்த வகையில் நாதுராம் மிக அருகேயிருந்து சுட முடியும். இந்த யோசனை எங்களுக்கு திருப்தியாக இருந்தது. கடைவீதிக்குச் சென்று, இருந்ததிலேயே மிகப் பெரிய பர்தாவை வாங்கினோம். அதனை மீண்டும் நாங்கள் ஓய்வு அறைக்குக் கொண்டு வந்தோம்.

நாதுராம் அதனை அணிந்த போது, இந்தத் திட்டம் வேலைக்கு ஆகாது என்பதை அவன் உடனடியாகப் புரிந்து கொண்டான். அதன் மடிப்புகள் அவனுக்குத் தடையாக இருந்தன. 'கைத்துப்பாக்கியை என்னால் வெளியே எடுக்கவே முடியாது. காந்திஜியைக் கொல்லாதது மட்டுமின்றி பெண்ணின் உடையில் மாட்டிக் கொள்ளும் பெருத்த அவமானமும் ஏற்படும்' என்று அவன் சொன்னான்.

எனவே இப்போது நாங்கள் மேலும் ஒரு திட்டம் பற்றி யோசிக்க வேண்டியதாயிற்று. மோசமான யோசனைகளில் காலை நேரத்தின் பெரும் பகுதியை வீணாக்கி விட்டோம். கொல்வதற்கான நேரம் வர இன்னும் ஆறு மணி நேரம்தான் இருந்தது. ஆனால் அதைச் செய்ய இதுவரை எங்களிடம் திட்டம் ஏதும் இல்லை. கடைசியாக ஆப்தே கூறினான்: 'நல்லது நாதுராம். சில சமயங்களில் எளிதான ஒன்று சிறந்ததாக அமைந்து விடும். அந்த நாளில் மக்கள் அதிகம் பயன்படுத்திய ஒரு வகையான சாம்பல் நிற ராணுவ மேலங்கியை நாதுராமுக்கு நாம் அணிவித்து விடுவோம்' என்று அவன் கூறினான். தொள தொளப்பான அந்த மேல் சட்டை முழங்கால் சட்டையின் கீழ்ப்பகுதி வரை தொங்கும். இதனால் அவன் இடுப்பில் வைத்திருக்கும் துப்பாக்கி உப்பிக் கொண்டு வெளியே தெரியாமல் மறைந்து விடும். ஒருவித ஏமாற்றத்துடன் இருந்த நாங்கள் அதுதான் சிறந்த திட்டம் என்று முடிவு செய்தோம். இதற்கேற்ப மீண்டும் கடைவீதிக்கு வந்து நாதுராமுக்கு ஏற்ற உடையை வாங்கினோம்.

பிறகு நாங்கள் அன்று காலையில் வாங்குவதற்காகப் பார்க்கச் சென்ற கேமராவுக்கு உரியவரிடம் மீண்டும் சென்றோம். அங்கே நாங்கள் மிகவும் முட்டாள்தனமான, கற்றுக் குட்டித்தனமான, உணர்ச்சி வய வெளிப்பாடாக ஒரு காரியம் செய்தோம். படம் பிடித்துக் கொண்டோம்.

ஆசுவாசப்படுத்திக் கொள்ளவும் எங்களின் திட்டம் பற்றி முடிவு செய்யவும் நாங்கள் மீண்டும் அறைக்கு வந்தோம். பிர்லா மாளிகைக்கு முதலில் நாதுராம் செல்ல வேண்டும். பிறகு ஆப்தேயும் அதற்கப்புறம் நானும் பின் தொடர வேண்டும். காரியத்தை நிறைவேற்றும் காலம் வரும்போது, நாதுராமின் இரண்டு பக்கங்களிலும் நாங்கள் நின்று கொள்ள வேண்டும். அவன் சுடுவதை யாராவது தடுக்கத் தலையிட்டால் நாங்கள் அவர்களைத் தடுக்க வேண்டும். சுடுவதற்கு முன் நாதுராம் மிகவும் கவனமாகக் குறி பார்த்திட இதன் மூலம் நேரம் கிடைக்கும். அந்த இடத்தின் விதிமுறைகள்படி ஓய்வு அறையைக் காலி செய்யும் நேரம் வந்தது. நாதுராம் துப்பாக்கியை எடுத்தான். அதற்குள் கவனமாக ஏழு தோட்டாக்களைப் பொருத்தினான். பின்னர் அதனை அவன் இடுப்பில் செருகிக் கொண்டான். நாங்கள் புறப்பட்டோம்.

கீழே சென்ற நாங்கள், முன்பின் அறியாத அந்த இடத்தில் உரிய நேரம் வரும் வரை ரயில் நிலையத்தில் பயணிகள் காத்திருக்கும் அறையில் தங்கினோம். சிறிது நேரம் அங்கே தங்கியிருந்த போது வேர்க்கடலை சாப்பிட வேண்டும் என்ற விருப்பத்தை நாதுராம் எங்களிடம் தெரிவித்தான். அவன் கேட்டது மிகவும் சாதாரண பொருள். அவனிடம் இளகிய மனதோடு நடந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம். அவன் தன்னைத்தானே தியாகம் செய்திட இருந்தான். எந்த ஒன்றும் அவனைத் தொந்தரவு செய்யவோ திசை திருப்பவோ கூடாது என்று விரும்பினோம். அவன் எதை விரும்பினாலும் அவனுக்காக நாங்கள் அதைச் செய்வோம்.

அதன்படி வேர்க்கடலையைத் தேடி ஆப்தே வெளியே சென்றான். சிறிது நேரத்தில் திரும்பி வந்த அவன், 'டில்லியில் வேர்க்கடலை கிடைக்கவில்லை' என்று கூறிவிட்டு அதற்குப் பதிலாக 'முந்திரிப்பருப்பு வேண்டுமா ? அல்லது பாதாம் பருப்பு வேண்டுமா ?' என்று வினவினான்.

'இல்லை. எனக்கு வேர்க்கடலை மட்டும்தான் வேண்டும்' என்று நாதுராம் சொன்னான்.

மாபெரும் பணி அவனுக்கு முன்னால் இருப்பதையடுத்து அவனைச் சோர்வடையச் செய்வதற்கு நாங்கள் விரும்பவில்லை. எனவே, ஆப்தே வேர்க்கடலையைத் தேடி மீண்டும் புறப்பட்டான். கடைசியாக, சற்று நேரத்தில், ஒரு பெரிய பை நிறைய வேர்க்கடலையை வாங்கிக் கொண்டு திரும்பினான். நாதுராம் அவற்றை எடுத்து கொறிக்கத் தொடங்கினான்.

அவன் சாப்பிட்டு முடித்த போது அங்கிருந்து புறப்படும் நேரம் வந்தது. முதலில் நாங்கள் பிர்லா மந்திருக்குச் செல்வதென்று முடிவெடுத்தோம். அங்குள்ள தெய்வங்களைத் தரிசித்து வணங்க, குறிப்பாக நானும் ஆப்தேயும் விரும்பினோம். இருப்பினும், நாதுராமுக்கு இத்தகைய செயல்களில் ஈடுபாடு இல்லை. நாங்கள் துப்பாக்கிச் சுடும் பயிற்சி செய்த காட்டுப் பகுதிக்கு அருகே உள்ள கோயிலின் பின்பக்கத்தில் இருக்கும் தோட்டத்தில் உலாவியபடி எங்கள் வருகைக்காக அவன் காத்திருந்தான்.

நாங்கள் வாயிலில் காலணிகளைக் கழற்றி விட்டு வெறுங்காலோடு உள்ளே சென்றோம். நுழைவாயிலில் எங்கள் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த பித்தளை மணியை அடித்தோம். எங்களின் வருகையைக் கடவுள்களுக்கு உணர்த்தும் அடையாளமாகும் அது. கோயிலின் நடுநாயகமாக இருந்த லட்சுமி நாராயண் சிலையருகே முதலில் சென்றோம். இந்துக்களுக்கு மிகவும் பிடித்த தெய்வத் தம்பதிகள் இவர்கள். அந்த வழிபாட்டிலிருந்து அடுத்த வழிபாட்டிடமான காளி கோயிலுக்குச் சென்றோம். அழிவுத் தேவதையை தரிசித்தோம். முதலில் கைகளைக் கூப்பி தலைகள் வணங்கி மவுனமானோம்.

தேவதையின் காலடிகளில் சில நாணயங்களைப் போட்டோம். பின்னர் அங்கே இருந்த பிராமண அர்ச்சகர்களுக்கு கொஞ்சம் காசு கொடுத்தோம். இதற்குக் கைம்மாறாக சில பூக்களையும், யமுனை நதியின் புனித நீரான கொஞ்சம் தீர்த்தத்தையும் அந்த பிராமணர் எங்களுக்கு அளித்தார். எங்கள் முயற்சியில் வெற்றி பெற வேண்டும் என்று விண்ணப்பித்து அந்த தேவதையின் காலடிகளில் மலர்களைத் தூவினோம். பின்னர் அந்த யமுனை நதியின் புண்ணிய நீரைக் கண்களில் ஒற்றிக் கொண்டோம்.

வெளியே தோட்டத்தில் நாதுராம் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தோம். அவன் இந்து சமய மாவீரன் சிவாஜி சிலைக்கு அருகே நின்று கொண்டிருந்தான். 'உங்களின் தரிசனம் முடிந்ததா ?' என்று அவன் கேட்டான்.

'முடிந்தது' என்று நாங்கள் சொன்னோம். 'நல்லது நானும் கூட எனது தரிசனத்தை முடித்தேன்' என்று நாதுராம் சொன்னான்.

நாதுராம் கோட்சே தரிசித்தது, மணம் கமழும் மல்லிகை மற்றும் நறுமணப் புகை சூழ்ந்த கருவறைக்குள் இருக்கும் இந்து மதக் கடவுள்களின் கூட்டத்தில் ஒரு உருவம் இல்லை. அவனின் தெய்வம் அவனுக்கு மேலே உள்ள தூணில்

இருந்த நெஞ்சுரமிக்க வீரனின் உருவம். இவர்தான் பூனாவின் மலைப் பகுதிகளிலிருந்து மொகலாயர்களை விரட்டியடித்தார். அவரது பெயரால், அவரது சாதனைகளால் கவரப்பட்ட கோட்சே தீரம் மிக்க இந்து சாம்ராஜ்யக் கனவுகளுடன், இன்னும் ஒரு மணி நேரத்தில் உலகையே நடுங்க வைக்கப் போகும் கொலையைச் செய்யத் தீர்மானித்திருந்தான்.

அந்த மூன்று பேரும் பல நிமிட நேரம் அந்தத் தோட்டத்தைச் சுற்றி வந்து நோட்டமிட்டனர். கடைசியாக ஆப்தே தனது கடிகாரத்தைப் பார்த்தான். மணி நாலரை.

'நாதுராம், நேரம் நெருங்குகிறது' அவன் சொன்னான்.

ஆப்தேயின் கடிகாரத்தை நாதுராம் பார்த்தான். பிறகு தனது சகாக்கள் இருவரையும் பார்த்தான். தனது இரண்டு கைகளையும் சேர்த்து நெஞ்சுக்கருகே வைத்து அவர்களுக்குத் தலைதாழ்த்தி வணக்கம் தெரிவித்தான்.

'நமஸ்தே. எங்காவது எப்படியாவது நாம் மீண்டும் ஒன்று சேர்வோமா என்பது நமக்குத் தெரியாது' என்று அவன் சொன்னான்.

கோயிலின் படிகளில் இறங்கி மக்கள் கூட்டத்தின் ஊடே டோங்காவைத் தேடி அவன் சென்றபோது அவனை கார்காரே மதிப்புடன் பின் தொடர்ந்தான். நாதுராம், ஒரு வண்டியைப் பிடித்து ஏறினான். 'திரும்பிப் பார்க்காமல், காந்திஜி பிரார்த்தனை நடத்தும் பிர்லா மாளிகை நோக்கிப் புறப்பட்டான்.'

'ஓ மனிதா, ஓய்வெடுக்காதே! என்ற பாடல் வரியை மீண்டும் மீண்டும் பாட வேண்டும் என்று மனுவிடம் உத்தரவிட்டதற்கேற்பவே மகாத்மா காந்தியின் ஜனவரி 30 வெள்ளிக்கிழமை வாழ்க்கை நிகழ்ச்சிகள் அமைந்தன. அவரின் குழுவினர் சந்தோஷப்படும் வகையில் உண்ணாவிரதத்துக்குப் பின் முதன் முறையாக, அவர் உதவியேதுமின்றி நடந்தார். அவரது எடையில் அரை பவுண்ட் கூடியிருந்தது. அவரது மெலிந்த உடலுக்கு மீண்டும் வலு சேர்ந்து கொண்டிருப்பதற்கும், காந்தியிடம் கடவுள் மேலும் பல பெரும் பொறுப்புகளை ஒப்படைக்கப் போகிறார் என்பதற்கும் இது சாட்சியமாக இருந்தது.

நண்பகல் ஓய்வுக்குப் பின் அவர் சுமார் ஒரு டஜன் பேட்டிகள் அளித்திருந்தார். கடைசி ஒன்று மிகவும் சிக்கலானதாக இருந்தது. அதுதான் இப்போது அவரை துன்புறுத்தியது. அவரைப் பேட்டி கண்டவர், அவரின் பழைய நண்பர்களிலும், மிகவும் விசுவாசமான சீடர்களிலும் ஒருவர். காந்தியின் காங்கிரசை வார்த்தெடுத்தவரும் அதிகம் பேசாதவரும் இருபதாம் நூற்றாண்டின் பேரரசர் எனப்படுபவருமான வல்லபபாய் படேல் தான் அவர். பிடிவாதக்காரரும் எதார்த்த வாதியுமான படேலுக்கும், சோஷலிச சிந்தனையாளரான நேருவுக்கும் இடையேயான முரண்பாடு தவிர்க்க முடியாத வகையில் வெடித்து வெளிப்பட்டு விட்டது. நேருவின் அரசிலிருந்து ராஜினாமா செய்யும் படேலின் கடிதம் காந்தியின் சிறிய எழுது மேசைமேல் இருந்தது. காந்தி உண்ணாவிரதம் இருப்பதற்கு முன், இவர்களின் வாய்த் தகராறு பற்றி, காந்தியும் மவுண்ட்பேட்டன் பிரபுவும் நடத்திய உரையாடலின் போது விவாதித்துள்ளனர். படேல் ராஜினாமா செய்ய அனுமதிக்காதீர்கள் என்று காந்தியிடம் கவர்னர் ஜெனரல் வலியுறுத்தினார்.

*'இவரையோ, நேருவையோ நீங்கள் விட்டு விட முடியாது. இருவரும் இந்தியாவுக்குத் தேவை. அவர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றப் பழகிட வேண்டும்' என்று மவுண்ட்பேட்டன் அறிவுறுத்தினார்.*

*காந்தி இதனை ஏற்றார். ராஜினாமாவை வலியுறுத்தாமல் இருப்பதற்கு படேலை அவர் இணங்க வைத்தார். சுதந்திரப் போராட்ட காலத்தின் சிக்கலான நேரங்களில் செய்தது போலவே அவரும் படேலும் நேருவும் மீண்டும் அமர்ந்து பேசி பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் என்று அவர் கூறினார்.*

*அவர் பேசிக் கொண்டிருந்த போது அவரின் மாலை நேர உணவான வெள்ளாட்டுப்பால், காய்கறிச்சாறு, ஆரஞ்சுப் பழங்கள் ஆகியவற்றை ஆபா கொண்டு வந்தார். எளிமையான அந்த உணவைச் சாப்பிட்டு முடித்ததும், நூல் நூற்கும் ராட்டையை எடுத்து வரச் சொன்னார். படேலுடன் உயிரோட்டமான பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டே கீறிச்சிடும் சத்தத்துடன் சுழலும் மரத்தாலான ராட்டையில் நூல் நூற்கத் தொடங்கினார். இந்தக் கருவிதான் உலகின் லட்சக்கணக்கான மக்களுக்கு அவருக்குரிய சின்னமாக விளங்கியது. 'உழைக்காமல் உண்ணும் உணவு திருடி உண்பதாகும்' என்ற அவரின் கோட்பாட்டை, அவரது கொள்கைகளை வழி நடத்திய அந்தக் கோட்பாட்டை, வாழ்க்கையின் கடைசி நொடிகள் வரை விசுவாசத்துடன் கடைப் பிடித்தார்.*

*காந்தி ராட்டைச் சக்கரத்தைச் சுற்றிக் கொண்டிருந்த அறைக்குப் பின்னால் இருந்த தோட்டத்தில் கொலையாளிகள் சுற்றிக் கொண்டிருந்தார்கள். நாதுராம் புறப்பட்ட ஐந்து நிமிடங்களுக்குப் பின் பிர்லா மாளிகைக்குச் செல்ல ஆப்தேயும் கார்காரேயும் டோங்கா வண்டியில் புறப்பட்டனர்.*

*பிர்லா மாளிகையின் நுழைவாயிலில் ஒரு பிரச்சனையும் இல்லை என்பது எங்களுக்கு நிம்மதியாகவும் வியப்பாகவும் இருந்தது. (கார்காரே நினைவு கூர்ந்தான்) பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஆயுதங்களோடு வருகிறார்களா என்று கூட்டத்தினரை எவரும் சோதனை செய்யவில்லை. நாங்கள் நிம்மதி அடைந்தோம். நாதுராம் பத்திரமாக உள்ளே சென்று விட்டான் என்பதைப் பின்னர் நாங்கள் அறிந்தோம். அங்கிருந்து தோட்டத்தை நோக்கி நடந்தோம். கூட்டத்தோடு நாதுராம் ஒன்றிக்கலந்து விட்டதை நாங்கள் பார்த்தோம். அமைதியாகவும் நல்ல உற்சாகத்தோடும் அவன் காணப்பட்டான். நாங்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை. கூட்டத்தினர் அந்தப் புல்வெளியில் பரவலாக இருந்தனர். பிரார்த்தனைக்குரிய நேரமான ஐந்து மணி நெருங்கும்போது, மக்கள் ஒன்றுசேர ஆரம்பித்தனர். நாங்கள் நாதுராமின் இரண்டு பக்கத்திலும் இடம் பிடித்தோம். எங்களின் ரகசியம் வெளிப்படாமல் இருப்பதற்காக, அவனை நாங்கள். பார்க்கவும் இல்லை; அவனுடன் பேசவுமில்லை. அவன் தன்னை மறந்திருந்ததால் எங்களையும் மறந்து நாங்கள் எங்கே இருக்கிறோம் என்பதையும் மறந்து விட்டான் போல் தோன்றியது.*

*கூட்டத்தை நோக்கியவாறு பிரார்த்தனை மண்டபத்தின் சிறிய மேடையில் உட்கார்ந்த பிறகு காந்தியைக் கொல்வது எங்களின் திட்டம். அதைச் செய்வதற்கு கூட்டத்தின் வெளிவட்டத்தில் வலது புறமாக மேடையை நோக்கி நாங்கள் நின்று கொண்டோம். முப்பத்தைந்து அடி தூரத்திலிருந்து குறி தவறாமல் சுட வேண்டும் என்பது அதன் பொருள். தூரத்தைக் கணக்கிட்ட நான் மவுனமாக*

**வியப்படைந்தேன். 'நாதுராமால் இதை நிறைவேற்ற முடியுமா ?' அவன் அனுபவசாலியோ, நன்றாகத் துப்பாக்கிச் சுடுபவனோ அல்ல. பதற்றமடைந்து குறி தவறி விடுவானோ ? என்று நான் ஐயுற்றேன். நாதுராமை ஓரக்கண்ணால் பார்த்தேன். அவனது பார்வை நேராக இருந்தது. அமைதியாக இருப்பது போல் தோன்றினாலும் உள்ளுக்குள் முழுமையான ஈடுபாட்டுடன் இருந்தான். நான் எனது கடிகாரத்தைப் பார்த்தேன். காந்தி வருவதில் தாமதம் ஏற்பட்டது. இது ஏன் என்று ஆச்சரியப்பட்டேன். லேசான படபடப்பும் ஏற்பட்டது.**

மனுவும் ஆபாவும் கூட பதற்றமடைந்தனர். ஏற்கெனவே ஐந்து மணி கடந்து பத்து நிமிடம் ஆகியிருந்தது. அவர்களின் வாழ்க்கை வழிகாட்டியாயிருந்த சாந்தமுள்ள சர்வாதிகாரி, தாமதத்தை வெறுக்கும் அளவுக்கு வேறெதையும் வெறுத்ததில்லை. அனைத்துக்கும் மேலாக, மாலை நேர பிரார்த்தனையில் தாமதம் என்பது கூடவே கூடாது. இருப்பினும் படேலுடன் அவர் நடத்திய பேச்சு மிகவும் சோகமானதாகப் பட்டதால், குறுக்கிட்டு நேரத்தை நினைவுபடுத்த இருவரில் ஒருவரும் துணியவில்லை. இறுதியாக, மனு அவரின் கண்களைப் பார்த்து, அவரது கடிகாரத்தைச் சுட்டிக்காட்டினார்.

காந்தி தனது பழைய இங்கர்சால் கடிகாரத்தைப் பார்த்து மெத்தையிலிருந்து துள்ளி எழுந்தார். 'நீங்கள் என்னைப் போக அனுமதிக்க வேண்டும். கடவுளின் சந்திப்புக்குச் செல்ல வேண்டிய நேரம் இது' என்று அவர் படேலிடம் கூறினார்.

அலுவலகத்திலிருந்து தோட்டத்துக்குள் அவர் நுழைந்த போது, காந்திக்கு எப்போதும் பாதுகாப்பாக வரும் ஒரு குழு கடைசி முறையாகப் பிரார்த்தனை நடந்த மைதானத்துக்கு அவருடன் சென்றது. அவர்களில் இரண்டு பேரைக் காணவில்லை. ஒருவர் சுசீலா நய்யார். அந்த டாக்டர் எப்போதும் காந்திக்கு முன்னால் நடந்து செல்வார். இப்போது அவர் பாகிஸ்தானில் இருந்தார். உடல் நலமின்றி படுக்கையில் இருந்த டிடபிள்யூ. மெஹ்ரா அங்கு இருக்கவில்லை. காந்தியின் பக்கத்தில் பாதுகாப்புக்கு இருக்குமாறு அவரால் நியமிக்கப்பட்ட மற்றொரு அதிகாரியும் இல்லை. அடுத்த நாள் பொது நல ஊழியர்கள் பொது வேலைநிறுத்தம் நடத்தவிருந்தனர். இதையொட்டி செய்ய வேண்டிய ஏற்பாடுகள் பற்றி விவாதிப்பதற்கு டில்லி நகரில் நடந்த அவசரக் கூட்டத்துக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

ஒவ்வொரு நாள் மாலையிலும் செய்வது போலவே அவரது எச்சில் துப்பும் பாத்திரம், மூக்குக் கண்ணாடி, உரையாற்றக் குறிப்புகள் எழுதி வைத்திருந்த நோட்டுப்புத்தகம் ஆகியவற்றை மனு எடுத்துக் கொண்டார். வழக்கம் போல் காந்தியின் ஊன்றுகோல்களாயிருக்கும் பணியினைச் செய்யும் பொருட்டு, மனுவும் ஆபாவும் தங்களின் தோள்களை அவருக்கு அளிக்கச் சென்றனர் இவர்களின் இரண்டு தோள்களிலும் இரண்டு கைகளையும் போட்டபடி காந்தி தனது கடைசி பயணத்தைத் தொடங்கினார்.

தாமதமாகி விட்டதால், பிர்லா மாளிகையின் பல வண்ணப் பூக்கள் மலர்ந்த பூங்கொடிப் பந்தலின் கீழ் நடப்பதற்குப் பதிலாக புல்வெளியின் குறுக்கே போய் பிரார்த்தனை மண்டபத்தை அடைய அவர் தீர்மானித்தார். அந்தப் புல்வெளிப் பாதை முழுவதும் தாமதமானதற்குக் காரணமான இரண்டு பெண்களையும் அவர் கடிந்து கொண்டே வந்தார்.

'நீங்கள்தான் எனது கடிகாரங்கள். பிறகு நான் ஏன் இன்னொரு கடிகாரத்தைப் பார்க்க வேண்டும்? இப்படிப்பட்ட காலதாமதத்தை நான் விரும்பவில்லை. பிரார்த்தனைக்கு ஒரு நிமிடம் தாமதமாவதையும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது' என்று அவர் கூறினார்.

மக்கள் கூட்டம் காத்திருக்கும் பிரார்த்தனை மைதானத்துக்குச் செல்வதற்கான நான்கு படிக்கட்டுகள் உள்ள இடத்துக்கு வந்த பிறகும் கூட அவர் பேசிக் கொண்டேயிருந்தார். மறையும் சூரியன் வழக்கம் போல் மங்கிய செங்கிரணங்களை அந்தப் பரிச்சயமான பழுப்பு நிறத் தலைமீது பரப்பிக் கொண்டிருந்தான். அந்த இரண்டு பெண்களின் தோள்களிலிருந்தும் கைகளை எடுத்த காந்தி, மக்கள் கூட்டத்தை நோக்கிக் கையசைத்தபடி, யாருடைய உதவியுமின்றி படிக்கட்டுகளில் ஏறினார். மேல் படிகளை அவர் அடைந்த சமயத்தில், தனக்குப் பின்பக்கம் இருந்த கூட்டத்திலிருந்து மெல்லிய குரலில் அலை அலையாக அந்த வார்த்தைகள் வருவதை கார்காரே கேட்டான்: 'பாபுஜி, பாபுஜி'

**நான் திரும்பினேன். நாதுராமும் கூட பாதியளவு வலப்பக்கம் திரும்பினான். மக்கள் கூட்டத்தில் ஒரு பிரிவினர், பிரிந்து நின்று காந்திக்கு சிறிய பாதை ஒன்றினை அமைத்துக் கொடுத்தனர். அதன் வழியாக அவர் எங்களை நோக்கி நடந்து வருவதை நாங்கள் பார்த்தோம். நாதுராமின் கைகள் பைகளுக்குள் இருந்தன. ஒரு கையை வெளியே எடுத்தான். அதில் ஒன்றுமில்லை. மற்றொரு கையை தான் பைக்குள் ஒளித்து வைத்திருக்கும் ஆயுதத்தின் மீது வைத்திருந்தான். அந்தச் சிறிய தானியங்கி துப்பாக்கியின் மீது பாதுகாப்பாக இருந்த பிடியை இறுக்கினான்.**

**மின்னல் வேகத்தில் அவன் கணக்குப் போட்டு விட்டான். 'இதுதான் அவரைக் கொல்வதற்குச் சரியான நேரம்.' பிரார்த்தனை மேடையில் காந்திஜி அமர்ந்த பின் கிடைப்பதை விட இது ஒரு மகத்தான சந்தர்ப்பம்; கடவுள் தனக்கு அளித்த சந்தர்ப்பம் என்று அவன் புரிந்து கொண்டான். அங்கிருந்த மக்களை விலக்கி முன்செல்ல இரண்டு அடிகள் மட்டும் எடுத்து வைத்தால் போதும். இரண்டே அடிகள்; மூன்று நொடிகள்; பிறகு கொலை செய்வது எளிது. எந்திர கதியில் அது நடந்து விடும். அந்த வேலையைச் செய்வதற்கான மனஉறுதி அவனை ஊந்தித் தள்ளுவதுதான் பிரச்சனையாக இருந்தது. இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தால், கொலைச் செயல் தவிர்க்க முடியாததாகி விடும்.**

'காக்கி உடையணிந்த சற்றுப் பருமனான ஒரு இளைஞன் அடியெடுத்து வைப்பதை' மனு பார்த்தார். எடுத்து வைத்த அந்த அடி, விலகி நின்று அவர்களின் குழுவினருக்கு வழிவிடும் மக்கள் கூட்டத்தின் முனைக்கு அவனைக் கொண்டு வரச் செய்தது.

கார்காரேயின் கண்கள் நாதுராம் மீது இருந்தன. 'அவன் தனது பையிலிருந்து துப்பாக்கியைக் கையில் எடுத்து விட்டான். அதனைத் தனது உள்ளங்கைகளுக்குள் மறைத்து வைத்தான். தனது நாட்டுக்கு அவர் செய்திருக்கும் மிகப் பெரிய சேவைக்காக காந்தியை வணங்குவதென்று அவன் முடிவு செய்தான். எங்களிடமிருந்து மூன்றடி தூரத்தில் மட்டுமே காந்தி இருந்தார். நாதுராம் நடைபாதைக்கு வந்தான். கைகளுக்குள் துப்பாக்கியை ஒளித்து வைத்திருந்த அவன் மெதுவாக இடுப்பு வரை வணங்கி "நமஸ்தே காந்திஜி" என்று கூறினான்.'

அவன் காந்தியின் பாதங்களை முத்தமிட விரும்புவதாக மனு நினைத்தார். அவனைத் தள்ளி விலக்குவதற்காக அந்தப் பெண் நயமாகக் கையை நீட்டினார். 'சகோதரரே! பாபு பிரார்த்தனைக்குச் செல்வதில் ஏற்கெனவே பத்து நிமிடம் தாமதம் ஆகிவிட்டது' என்றும் அவர் சொன்னார்.

அப்போது நாதுராமின் இடது கை முரட்டுத்தனமாக அவரைப் பிடித்து அப்புறந்தள்ளியது. அவனது வலதுகையில் இருந்த கருப்பு நிற பெரெட்டா கைத்துப்பாக்கி வெடித்தது. நாதுராம் அதன் குதிரையை மூன்று முறை இயக்கினான். மூன்று குண்டுகள் பிரார்த்தனை மைதானத்தை உறையச் செய்து விட்டன. நாதுராம் கோட்சேயின் குறி தப்பவில்லை. அவனை நோக்கி வந்த அந்த மெலிந்த உருவத்தின் திறந்த மார்பை மூன்று குண்டுகளும் துளைத்து விட்டன.

அவளின் கைகளிலிருந்து நாதுராம் தட்டி விட்ட எச்சில் துப்பும் கிண்ணத்தையும் நோட்டுப் புத்தகத்தையும் குனிந்து தேடி எடுக்கும் போது மனு இந்த துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டார். நிமிர்ந்து பார்த்தார். அவரது அன்புக்குரிய பாபு மக்களுக்கு வாழ்த்து தெரிவிக்கக் கைகளை அசைத்தபடி, திறந்த மார்போடு, பிரார்த்தனை மண்டபத்தை நோக்கி கடைசி அடியை அவர் எடுத்து வைப்பதாகவே தோன்றியது. பளிச்சிடும் வெள்ளை நிறக் காதி துணியில் சிவப்பு நிறக் கறையை அவர் கண்டார். காந்தி திணறியபடி உச்சரித்தார்: 'ஹே ராம் - ஓ கடவுளே'! உயிரற்ற அவரின் உடல் மெதுவாக ஒரு பொட்டலம் போல் பிரார்த்தனை மைதானத்தில் மனுவின் பின்னால் சாய்ந்தது. அவரின் ஆத்மா அவற்றுக்கிட்ட கட்டளையின் வெளிப்பாடாக காந்தியின் கைகள் கடைசியாகத் தன்னைக் கொன்றவருக்கும் வாழ்த்து தெரிவிக்கும் சைகையைச் செய்தன. பத்து மாதங்களுக்கு முன் காணாமல் போனதற்காக காந்தியைக் கலங்கச் செய்த, எட்டு ஷில்லிங் மதிப்புள்ள இங்கர்சால் கடிகாரத்தை மனு எடுத்துப் பார்த்தார். அப்போது நேரம் ஐந்து மணி கடந்து பதினேழு நிமிடங்கள் ஆகியிருந்தன.

★

மாலை நேரப் பயணம் முடித்து அரசு இல்லத்திற்கு வந்த போதுதான் காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி லூயி மவுண்ட்பேட்டனுக்குத் தெரிந்தது. அடுத்த சில மணி நேரத்தில் லட்சக்கணக்கான மக்கள் கேட்கப் போகும் கேள்விதான் அவரின் முதல் வார்த்தைகளாக இருந்தன: 'இதைச் செய்தது யார்?'

அவருக்கு இந்தச் செய்தியைத் தெரிவித்த நேர்முக உதவியாளர், 'தெரியாது சார்' என்று பதிலளித்தார். மவுண்ட்பேட்டன் உடை மாற்ற விரைந்தார். சில நிமிடங்களுக்குப் பின், அரசு இல்லத்திலிருந்து புறப்பட்ட அவர், தனது பத்திரிகைத்துறை உதவியாளர் கேம்ப் பெல் ஜான்சனைப் பார்த்தார். தனக்காகக் காத்திருக்கும் காரில் அவரையும் ஏறிக் கொள்ளுமாறு பணித்தார்.

அந்த இரண்டு பேரும் பிர்லா மாளிகையை அடைவதற்குள் மைதானத்தில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். கூட்டத்தை விலக்கிக் கொண்டு காந்தி இருக்கும் இடத்தை நோக்கி அவர் சென்ற போது, வெறித்தனமும் ஆவேசமும்

நிரம்பிய முகத்தோடு ஒரு நபர் கூச்சலிட்டார். 'இதைச் செய்தது ஒரு முஸ்லீம் தான்.'

அந்தக் கூட்டத்தில் திடீரென்று அமைதி நிலவியது. அந்த மனிதரின் பக்கம் மவுண்ட்பேட்டன் திரும்பினார்.

'முட்டாளே, இதைச் செய்தது ஒரு இந்து என்று உனக்குப் புரியவில்லையா?' அவரால் முடிந்த அளவு உரத்தக் குரலில் அவர் கத்தினார்

சில நிமிடங்களுக்குப் பின், அவர்கள் அந்த மாளிகைக்குள் சென்றபின், கேம்ப்பெல் - ஜான்சன், அவர் பக்கம் திரும்பினார். 'இதைச் செய்தது ஒரு இந்து என்பது உங்களுக்குத் தெரிவதற்கான வாய்ப்பு என்ன?' என்று அவர் கேட்டார்.

'எனக்குத் தெரியாது. ஆனால் உண்மையில் இதைச் செய்தது ஒரு முஸ்லீம் என்றால், உலகம் இதுவரைக் கண்டிராத, மிகக் கோரமான படுகொலைகள் நடக்கும் இடங்களில் ஒன்றாக இந்தியா ஆகிவிடும்' என்று மவுண்ட்பேட்டன் பதிலளித்தார்.

மவுண்ட்பேட்டனின் மனக்கவலையை ஆயிரக்கணக்கான மக்களும் பகிர்ந்து கொண்டனர். காந்தியைக் கொலை செய்தது ஒரு முஸ்லீமாக இருந்தால், இந்தியாவை மாபெரும் துயரம் சூழ்ந்து கொள்வது நிச்சயம் என்பதறிந்த, அகில இந்திய வானொலியின் இயக்குநர், மிக முக்கியமான பொறுப்புள்ள ஒரு முடிவை மேற்கொண்டார். இந்தியாவின் இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய செய்தியை, வானொலியின் நாடு தழுவிய நிகழ்ச்சிகளை இடைநிறுத்தி முன் கூட்டியே சொல்வதற்குப் பதிலாக, வழக்கம் போல் நிகழ்ச்சிகள் தொடரப்படும் என்று உத்தரவிட்டார். இந்தியாவில் உள்ள மிக முக்கியமான ராணுவ மற்றும் காவல்துறை முகாம்கள் அவசரகால உஷார் நிலையில் இருக்க ராணுவ மற்றும் காவல்துறை தலைமையகங்கள் அவசர காலத் தொலைபேசி மூலம் தகவல் அளித்தன. பிர்லா மாளிகையிலிருந்து மிக முக்கியமான இந்தச் செய்தியை காவல்துறை வானொலிக்குத் தெரிவித்தது: நாதுராம் கோட்சே பிராமண சாதியைச் சேர்ந்த ஒரு இந்து. சரியாக (மாலை) 6 மணிக்கு ஒவ்வொரு வார்த்தையும் கவனத்துடன் படிக்கப்பட்ட ஒரு அறிவிப்பின் மூலம், தங்களுக்கு சுதந்திரத்தைக் கொண்டு வந்த மாமனிதர் கொல்லப்பட்ட செய்தியை இந்திய மக்கள் அறிந்தனர்.

'மகாத்மா காந்தி இன்று பிற்பகல் மணி ஐந்து இருபதுக்கு புது டில்லியில் படுகொலை செய்யப்பட்டார். அவரைப் படுகொலை செய்தது ஒரு இந்து' என்று வானொலி அறிவித்தது.

கூட்டுக் கொலைகள் தவிர்க்கப்பட்டன; இந்தியா இப்போது துயரத்தில் ஆழ்ந்தது.

மகாத்மா காந்தியின் உடல் அவர் சுட்டுக் கொல்லப்பட்ட தோட்டத்திலிருந்து பிர்லா மாளிகைக்குக் கொண்டு வரப்பட்டது. ஒரு சில நிமிடங்களுக்கு முன் கடைசி முறையாக அவர் சுழற்றிய ராட்டைக்குப் பக்கத்தில் அவர் படுத்துறங்கும் வைக்கோல் மெத்தை மீது அந்த உடல் வைக்கப்பட்டது. ரத்தத்தால் நனைந்த வேட்டியின் மீது ஆபா ஒரு கம்பளியைப் போர்த்தினார். அவருக்குச் சொந்தமாயிருந்த சில பொருள்கள் அவரது படுக்கை அருகே வைக்கப்பட்டன.

அவர் சுடப்பட்ட போது அணிந்திருந்த மரத்தாலான காலணிகள்; அவரது மூன்று குரங்கு (பொம்மை)கள்; கீதை; இங்கர்சால் கடிகாரம்; நன்றாக மெருகேற்றப்பட்ட எச்சில் துப்பும் பாத்திரம்; எரவாடா சிறையின் நினைவாக இருந்த தகரத்தட்டு.

அந்த அறைக்கு லூயி மவுண்ட்பேட்டன் வருவதற்கு முன்பே துக்கம் விசாரிப்போர் நிறைந்திருந்தனர். தரையில் கால்மடக்கி அமர்ந்திருந்த நேருவின் முகம் வெளிறிப் போயிருந்தது. தலையைச் சுவரில் சாய்த்தபடி அழுது கொண்டிருந்தார். கண்ணீரால் அவரது அழகிய உடல் நனைந்தது. சில அடி தூரத்தில் இடி விழுந்த அதிர்ச்சியுடன் புத்தரின் கற்சிலை போல படேல் அமர்ந்திருந்தார். சற்று நேரத்துக்கு முன் பேசிக் கொண்டிருந்த அந்த மனிதரின் உடல் மீது அவரின் பார்வை அசையாமல் பதிந்திருந்தது.

சோகம் இழையோடிய மெல்லிய குரல் ஓசை அந்த அறை முழுவதும் வியாபித்திருந்தது. தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த காந்தியின் சவ மேடையைச் சுற்றி அமர்ந்திருந்த பெண்கள் கீதையைப் பாராயணம் செய்தனர். மகாத்மாவின் உடலைச் சுற்றி வைக்கப்பட்டிருந்த ஒரு டஜன் எண்ணெய் விளக்குகளின் திரிமுனையிலிருந்து சோகம் நிறைந்ததுபோல் லேசாக ஆரஞ்சு நிற ஒளி பரவியிருந்தது. சாம்பிராணியின் நறும்புகை காற்றில் கலந்திருந்தது. ஓசை வெளிவராமல் அழுது கொண்டிருந்த மனு தனது நேசத்துக்குரிய பாபுவின் தலையைத் தொடை மீது வைத்திருந்தார். முந்தைய நாள் மாலையில் எண்ணெயால் நீவி விட்ட அவரின் விரல்கள், இப்போது இறந்த உடலின் தலையை மெல்ல வருடின. இந்தத் தலையிலிருந்துதான் மனித குலத்துக்கு ஏராளமான புதிய சிந்தனைகள் வெளிப்பட்டன.

'விரக்தியுற்ற சிட்டுக்குருவி' என்று அவரால் வர்ணிக்கப்பட்டவரின் உடல் சுருங்கி வைக்கோல் மெத்தையில் கிடப்பது ஒரு குழந்தையின் உடல் சிறிய இடத்தைப் பிடித்துக் கொண்டு தரையில் கிடப்பது போல் மவுண்ட்பேட்டனுக்குத் தோன்றியது. காந்தியின் சிறப்பு அம்சங்களில் ஒரு பகுதியாக இருந்த இரும்பு விளிம்புள்ள வட்டமான மூக்குக் கண்ணாடியை யாரோ கழற்றியிருந்ததால் மங்கலான மெழுகுவர்த்தி ஒளியில் அவரை சட்டென்று மவுண்ட்பேட்டனுக்கு அடையாளம் தெரியவில்லை. வியக்கத்தக்க அமைதி அவரது முகத்தில் தவழ்ந்தது. மரணத்தில் தெரிவது போன்ற அமைதியையும் சாந்தத்தையும் அவரது வாழ்க்கையில் இதற்கு முன் எப்போதும் பார்த்ததில்லை என்று மவுண்ட்பேட்டன் கருதினார். ரோஜாப் பூக்களின் இதழ்களை யாரோ ஒருவர் மவுண்ட்பேட்டனின் கைகளில் கொடுத்தார். தனது கொள்ளுப் பாட்டியின் சாம்ராஜ்யத்தை முடிவுக்குக் கொண்டு வந்த அந்த மனிதரின் உடலுக்கு அடியில் இந்தியாவின் கடைசி வைஸ்ராய் இறுதி அஞ்சலியாக இளஞ்சிவப்பு நிற ரோஜா இதழ்களை சோகத்துடன் தூவினார். அவை வீழ்வதை கவனித்த மவுண்ட்பேட்டனுக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டது. ஒரு சில மணி நேரத்தில் அதனை நெருங்கிய நண்பர் ஒருவரிடம் சொல்லவும் செய்தார்.

'மகாத்மா காந்தி புத்தருக்கும் யேசு கிருத்துவுக்கும் இணையாக வரலாற்றில் இடம் பெறுவார்' என்று அவர் தனக்குள் சொல்லிக் கொண்டார்.

துக்கம் நிறைந்த அறைக்குள் மெல்ல நடந்த மவுண்ட்பேட்டன் நேரு, படேல் ஆகியோரிடம் சென்றார். இருவரின் தோள் மீதும் கைபோட்ட அவர், 'நான் காந்திஜியை எவ்வளவு நேசித்தேன் என்பது உங்களுக்குத் தெரியும்' என்றார்.

'உங்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்கிறேன்', அவர் தொடர்ந்தார். 'அவரின் மிகச்சிறந்த நண்பர்களும், ஆதரவாளர்களும், உலகிலேயே மிக அதிகமாக நேசித்து மதிப்பு வைத்திருப்பவர்களுமான நீங்கள் இருவரும், கருத்து வேறுபாடுகளுடன் பிளவு பட்டு நிற்பது பற்றி, அவர் எவ்வளவு கவலைப் படுகிறார் என்பதை, நாங்கள் கடைசியாகப் பேசிக் கொண்டிருந்த போது என்னிடம் கூறினார்.

'அவர் என்னிடம் சொன்னது இதுதான். "இப்போதெல்லாம் எனது பேச்சை விட அதிகமாக உங்கள் பேச்சைத்தான் அவர்கள் கவனிக்கிறார்கள். எனவே அவர்களை ஒன்று சேர்க்க உங்களால் ஆனதைச் செய்யுங்கள்". அவரின் மரண கால விருப்பம் இது. உங்களின் துயரத்தில் இருக்குமளவுக்கு அவரின் நினைவுக்கு முக்கியத்துவம் இருக்குமானால் உங்களின் கருத்து வேறுபாடுகளை மறந்து கட்டித் தழுவுங்கள்' என்றார். அவரின் வார்த்தைகளால் உண்மை யிலேயே நெகிழ்ந்து போய், அழுது கொண்டிருந்த அந்த இரண்டு தலைவர் களும் கட்டித் தழுவிக் கொண்டனர்.

அதிர்ச்சியிலும் துயரத்திலும் ஆழ்ந்திருந்த எவரும் காந்தியின் இறுதிச் சடங்குகள் பற்றி நினைக்கவில்லை. தன்னை முதல் கவர்னர் ஜெனரலாக இருக்குமாறு கேட்டுக் கொண்ட நாட்டுக்குச் செய்யும் மிக முக்கிய சேவையாக சக்தி முழுவதையும் திரட்டி இந்தச் சடங்கினைச் செய்ய வேண்டும் என்று மவுண்ட்பேட்டன் விரைவில் உணர்ந்திருந்தார்.

நேரு, படேல் ஆகியோரின் ஒப்புதலுடன் மவுண்ட்பேட்டன் ஒரு யோசனையை முன் மொழிந்தார். காந்தியின் உடலை வாசனை திரவியங்களால் பதப்படுத்தி சிறப்பு ரயில் மூலம் இந்திய நாடு முழுவதும் இறுதி யாத்திரையை மேற்கொள்ள வேண்டும் என்பதும், அவரால் நேசிக்கப்பட்ட, சேவை செய்யப்பட்ட லட்சக்கணக்கான மக்கள் அவர்களின் மகாத்மாவை கடைசியாகத் தரிசிக்க ஒரு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதும் அவரின் யோசனை. ஆனால் காந்தியின் வார்த்தை பிசகாத செயலாளரான பியாரேலால் நய்யார் அந்த யோசனையை நிராகரித்தார். கறாரான இந்து வழக்கப்படி தாம் இறந்த 24 மணி நேரத்துக்குள் தமது உடலை தகனம் செய்து விட வேண்டும் என்பதை காந்தி உறுதியுடன் தெளிவுபடுத்தியிருந்தார் என்று அவர் கூறினார்.

'இந்தியா இதுவரைக் கண்டிராத மக்கள் கூட்டம் நாளை டில்லியில் இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த நிலைமையில் இறுதி ஊர்வலத்தை ஒழுங்காகவும் கட்டுப்பாட்டோடும் நடத்திச் செல்ல நாட்டில் ஒரே ஒரு அமைப்பு மட்டும்தான் இருக்கிறது. அது ராணுவம்' என்று நேருவிடமும் படேலிடமும் மவுண்ட்பேட்டன் கூறினார்.

அவரது வார்த்தைகளைக் கேட்ட இந்தியத் தலைவர்கள் இருவரும் திகைப்படைந்தனர். போரையே தொழிலாகக் கொண்டவர்களை வைத்து காந்தியின் இறுதி யாத்திரையை நடத்துவது என்ற யோசனைதான் அவர்களைத் திடுக்கிட வைத்தது.

முப்படைகளின் கட்டுப்பாடான நடவடிக்கைகளை காந்தி வியந்து பாராட்டவே செய்திருக்கிறார் என்று அந்த இரண்டு தலைவர்களிடமும் மவுண்ட்பேட்டன் உறுதியளித்தார். இந்தப் பணியைச் செய்வதில் அவருக்கு

ஆட்சேபம் ஏதும் இருந்திருக்காது. இறுதியில் நேருவும் படேலும் தயக்கத்துடன் ஒப்புதல் தெரிவித்துத் தலையசைத்தனர். இந்தியாவின் அஹிம்சைத் தூதரின் இறுதிப் பயணம், அவரது மக்களிடையே ஒரு ராணுவ நடவடிக்கையாகத்தான் அமையவிருந்தது.

ராணுவத்தைப் பணியில் ஈடுபடுத்திய மவுண்ட்பேட்டன் நேருவின் பக்கம் திரும்பினார். 'நீங்கள் நாட்டு மக்களுக்கு உரையாற்ற வேண்டும் என்பதை அறிவீர்களா! இப்போது உங்களின் தலைமையை மக்கள் எதிர்பார்த்துள்ளனர்' என்று அவர் கூறினார்.

'என்னால் முடியாது' நேரு விசும்பினார். 'நான் மிகவும் நொந்து போயிருக்கிறேன். நான் அதற்குத் தயாராக இல்லை. என்ன சொல்வதென்றும் எனக்குத் தெரியவில்லை.'

'கவலைப்படாதீர்கள். என்ன சொல்ல வேண்டும் என்பதைக் கடவுள் உங்களுக்குத் தெரிவிப்பார்' என்று மவுண்ட்பேட்டன் பதிலளித்தார்.

காந்தியின் மரணச் செய்தி கேட்ட இந்தியாவின் பிரதிபலிப்பு தன்னெழுச்சியாகவும் உளப்பூர்வமாகவும் மிகப் பொருத்தமான முறையிலும் இருந்தது. சுதந்திரப் போராட்டத்துக்குத் தேசம் தழுவிய அளவில் தங்களின் துயரத்தை வெளிப்படுத்தும் நாளாக ஹர்த்தால் நடத்த மக்களுக்கு காந்தி வழிகாட்டினார். இப்போது அவரது மறைவையடுத்து சோகம் நிறைந்த அமைதியுடன் இந்தியா உண்மையான ஹர்த்தால் அனுசரித்தது.

பரந்து விரிந்த சமவெளிகள், வயல்வெளிகள், இரைச்சல் நிறைந்த குடிசைப் பகுதிகள், கடுமையான காட்டுப் பகுதிகள் ஆகியவற்றின் மேல் வானம் படிகம் போல் தெளிவாக இருந்தது. இந்தியாவில் அன்றிரவு பல லட்சக்கணக்கான அடுப்படிகளில் வரட்டி எரிந்து எழும் புகை மெலிதாக வானத்தில் பரவியிருக்கவில்லை. மகாத்மாவுக்கு அஞ்சலி செலுத்துவது போல் அந்த அடுப்புகள் எல்லாம் அணைந்திருந்தன.

பம்பாய் நகரம் களையிழந்திருந்தது. மலபார் ஹில் பகுதியின் அழகிய பங்களாக்களிலிருந்து பரேல் குடிசைப் பகுதி வரை மக்கள் கதறி அழுதனர். கல்கத்தாவின் மைதானம் பெரும்பாலும் காலியாகக் கிடந்தது. அதன் வீதிகளில் வெறுங்கால்களுடனும் முகத்தில் சாம்பலைப் பூசிக் கொண்டும் நடந்த சாது ஓலமிட்டார். 'மகாத்மா இறந்து விட்டார். அவரைப் போல இன்னொருவர் எப்போது பிறப்பார்?'

பாகிஸ்தானில் லட்சக்கணக்கான பெண்கள் தங்களின் வளையல்களை உடைத்தும் ஆபரணங்களைக் களைந்தும் பாரம்பரிய முறைப்படி துக்கத்தை வெளிப்படுத்தினர். முழுவதும் முஸ்லீம்கள் வாழ்ந்த லாகூரில் செய்திகளைத் தெரிந்து கொள்ள செய்தித்தாள் அலுவலகங்களை மொய்த்தனர். பிரச்சனைக்குரிய இடங்களும் கூட இருந்தன. பூனாவில் இந்து ராஷ்ட்ரா பத்திரிகை அலுவலகம் இருந்த வெள்ளையடிக்கப்பட்ட கொட்டகைக்குக் காவல்துறை பாதுகாப்பு அளிக்க வேண்டியிருந்தது. பம்பாயில் சவார்க்கர் சதனை ஆயிரக்கணக்கான மக்கள் முற்றுகையிட முயன்றனர். நாடு முழுவதும் பல நகரங்களில் இருந்த இந்து மகாசபா, ஆர்.எஸ்.எஸ் அலுவலகங்களை கும்பல்கள் தாக்கின.

சுதந்திர தின விழாவுக்குச் சென்று திரும்பும் போது டோங்கா கட்டணம் மிக அதிகமாக இருக்கிறது என்பதால் நடந்தே வீடு திரும்பிய, டில்லிக்கு வெளியே ஒரு கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ரஞ்சித்லால், வானொலியில் இந்தச் செய்தியைக் கேட்டார். இந்த வானொலி வேளாண் அமைச்சகத்தின் மூலம் அவருக்கும் அவரது கிராம மக்களுக்கும் சுதந்திரத்திற்கான பரிசாகக் கிடைத்ததாகும். காந்தியின் மரணம் பற்றி கேட்டதும் லாலும் அந்தக் கிராமத்தின் மொத்த மக்களும் அதிர்ச்சியடைந்து எழுந்தனர். சத்ரபூரின் மக்களும் மற்ற கிராமங்களின் மக்களும் இரவு நேரத்தின் கருப்பு உருவங்களாக குன்றுகளைக் கடந்து டில்லிக்கு நடக்கத் தொடங்கினர். சுதந்திரத்தைக் கொண்டாடிய வீதிகளில் அதன் சிற்பிக்கு சோக அஞ்சலியை செலுத்த அவர்கள் சென்றனர். மவுண்ட்பேட்டனின் கணிப்புக்கு ஏற்ப, மனித குல வெள்ளத்தின் முன்னோட்டமாக, விடியற்காலை வேளையில், தலைநகருக்குள் மக்கள் குவியத் தொடங்கினர்.

ரோஜா இதழ்களிலும் மல்லிகைப் பூக்களிலும் புதைந்திருந்த காந்தியின் உடல் பிர்லா மாளிகையின் இரண்டாவது மாடியில் உள்ள பால்கனிக்கு எடுத்து வரப்பட்டது. நிலம், நீர், வான், வளி, தீ எனும் ஐம்பூதங்களின் ஐக்கியமாக நான்கு எண்ணெய் விளக்குகள் அவரது தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்தன. தாங்கள் இழந்து விட்ட மகாத்மாவை கீழே கூடியிருந்த மக்கள் கடைசியாக ஒரு முறை பார்த்துக் கொள்ள அவரது உடல் ஒரு மரப்பலகையில் வைக்கப்பட்டிருந்தது.

அவர்கள் அங்கே மணிக்கணக்கில் காத்திருந்தனர். காந்தியின் பெயரால் பிரிட்டிஷ் போலீசாரின் லத்தி அடியைத் தாங்கிக் கொள்ள ஒரு காலத்தில் தயாராய் இருந்தது போல, இப்போது பிர்லா மாளிகையின் ஒரு அறையில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலை கண்ணாடிக் கதவுகள் வழியாக ஒரு முறை பார்த்துக் கொள்வதற்கு மாலை முழுவதும் காத்து நிற்கும் கஷ்டத்தை மக்கள் தாங்கிக் கொண்டனர். காந்தி சுடப்பட்ட தோட்டத்துக்குள் ஆயிரக் கணக்கானவர்கள் புகுந்தனர். இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத் தந்தவரை தனிப்பட்ட முறையில் நினைவு கொள்வதற்காக அங்கிருந்த செடிகளின் இதழ்களைப் பறித்து வைத்துக் கொண்டனர். இறந்து போன படைத்தளபதிக்கு அஞ்சலி செலுத்த அலை மோதும் ராணுவ வீரர்கள் போல, கண்கூசும் கண்காணிப்பு விளக்குகளின் வெளிச்சத்தில் மினு மினுக்கும் கதர்வேட்டி சட்டைகளுடன் ஆயிரக்கணக்கான மக்கள் பால்கனியில் அலை அலையாகக் கடந்து சென்றனர்.

டில்லியின் மற்றொரு பகுதியில், மனமொடிந்து சோகத்தின் ஆழத்தில் மூழ்கியிருந்த அந்த மனிதர் வருத்தத்தை வெளியிட வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருந்தார். அகில இந்திய வானொலியின் மைக்ரோ ஃபோன் முன்னால் சென்ற போது ஜவஹர்லால் நேருவின் கண்கள் குளமாயின. சுதந்திர தின விழாவைப் போலவே இப்போதும் அவரது வார்த்தைகள் தன்னெழுச்சியாக வெளிப்பட்டன. ஆனால் இவற்றில் மறைக்கமுடியாத அழகு மிளிர்ந்தது.

'நமது வாழ்க்கைத் தீபம் அணைந்து விட்டது. எங்கும் இருள் சூழ்ந்துள்ளது. பாபு என்று நம்மால் அழைக்கப்பட்ட அன்புத் தலைவர், தேசப்பிதா நம்மிடையே இல்லை' என்று அவர் கூறினார்.

*'தீபம் அணைந்ததாக நான் சொன்னேன். அது தவறு. நமது நாட்டில் ஒளி விட்ட அந்த தீபம் சாதாரண தீபம் அல்ல. அந்த தீபம் இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒளிவிடும்' என்று அவர் கணித்துக் கூறினார். 'உலகம் அதன் ஒளியைக் காணும்; எண்ணற்ற இதயங்களுக்கு அது ஆதரவளிக்கும். அந்த தீபம் உடனடித் தேவைக்கும் மேலாக சிலவற்றை பிரதிபலித்தது. வாழ்க்கை நெறியை, அழியாத சத்தியத்தை, தவறுகளிலிருந்து விடுவித்து நன்னெறிப் பாதையைக் காட்டி இந்தப் பழம் பெரும் நாட்டை சுதந்திரத்திற்கு இட்டுச் சென்றது.'*

நேரு துயரத்துடன் குறிப்பிட்ட அந்த மறைந்து போன ஒளி இந்தியாவைப் போலவே எஞ்சியுள்ள உலகத்துக்கும் சொந்தமானது. அதிர்ச்சியடைந்த உலகத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் இரங்கல் செய்திகள் புதுடில்லிக்கு வந்து குவிந்து கொண்டிருந்தன.

யுத்தம் முடிந்த பிறகு காந்தியின் மரணம் பற்றிய செய்திகளைப் போல் வேறெதுவும் லண்டனை இந்த அளவுக்கு உலுக்கியதில்லை. தங்கள் சாம்ராஜ்யத்தின் மணிமகுடத்தைத் திரும்பக் கேட்பதற்காக, இடுப்பில் ஒரு துண்டுடனும் ஒரு வெள்ளாட்டுடனும், பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தங்கள் நகருக்கு வந்த அந்த வியப்புக்குரிய மனிதர் கொல்லப்பட்ட செய்தியை வெளியிட்ட மாலைப் பத்திரிகைகள் விற்றுத் தீர்ந்ததால் லண்டன் நகரவாசிகள் படித்த பத்திரிகைகளை ஒருவரோடு ஒருவர் பரிமாறிக் கொண்டனர். ஆறாம் ஜார்ஜ் மன்னர்; பிரதமர் கிளமெண்ட் அட்லி; காந்தியின் பழைய எதிரி வின்ஸ்டன் சர்ச்சில்; ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ், கேண்டர்பரி பேராயர்; மற்றும் ஆயிரக்கணக்கானவர்கள் இரங்கல் செய்திகளை அனுப்பினர். 1931இல் லண்டனில் காந்தி சந்தித்த அயர்லாந்து நாடக எழுத்தாளரான ஜார்ஜ் பெர்னார்ட்ஷாவின் ரத்தினச் சுருக்கமான அஞ்சலி போல் வேறெதுவும் நினைவில் நிற்கவில்லை. 'நல்லவராக இருப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை அவரது மரணம் காட்டுகிறது' என்று ஷா கூறியிருந்தார்.

'மனித குல சகோதரத்துவத்தில் நம்பிக்கையுள்ள அனைவரும் காந்தியின் மரணத்துக்காக வருந்துவார்கள்' என்று பாரிசில் பிரதமர் ஜார்ஜ் பிடால்ட் (Georges Bidault) கூறினார். தென் ஆப்பிரிக்காவிலிருந்து காந்தியின் முதலாவது அரசியல் எதிரி ஃபீல்ட் மார்ஷல் ஜான் ஸ்மட்ஸ் (Jan Smuts) ஒரு எளிய அஞ்சலி செய்தியை அனுப்பியிருந்தார்: 'நம்மில் ஒரு இளவரசர் மறைந்து விட்டார்' என்று அதில் குறிப்பிட்டிருந்தார். வாடிகனில் பன்னிரண்டாம் பயஸ் (Pius) இப்படிப் புகழஞ்சலி செலுத்தினார். 'அவர் ஒரு சமாதானத் தூதர்; கிருத்துவத் தின் நண்பர்.' ஆசிய நாடுகளின் சுதந்திரத்திற்கு முன்னோடியாக இருந்த அந்த மனிதரின் மறைவு குறித்து சீன நாட்டினரும், இந்தோனேஷியா நாட்டினரும் அதிர்ச்சி தெரிவித்தனர். 'இந்தியாவுடன் இணைந்து இந்த உலகமே துயரம் கொள்கிறது' என்று வாஷிங்டனில் அதிபர் ஹாரி ட்ரூமன் (Harry Truman) அறிவித்தார்.

மாஸ்கோவில் புதிதாகத் திறக்கப்பட்ட தூதரகத்தில் ஜவஹர்லால் நேருவின் சகோதரி திருமதி வி.எல். பண்டிட் இரங்கல் செய்திக்காக ஒரு பதிவேட்டை வைத்தார். ஜோசஃப் ஸ்டாலினின் வெளியுறவு அலுவலகத்திலிருந்து ஒருவர் கூட அந்தக் குறிப்பேட்டில் பெயரைப் பதிவு செய்யவில்லை.

'மரணத்தின் போது கருத்து வேறுபாடுகள் இருக்க முடியாது' என்று காந்தியின் முதன்மையான அரசியல் எதிரி முகமது அலி ஜின்னா அவரது இரங்கல் செய்தியில் எழுதினார். 'இந்து சமூகம் உருவாக்கிய மாமனிதர்களில் அவரும் ஒருவர்' என்றும் குறிப்பிட்டார். இந்த இரங்கல் செய்தியின் வாசகத்தைப் படித்த ஜின்னாவின் ஆதரவாளர்களில் ஒருவர், காந்தியின் பரிமாணங்கள் அவரது சொந்த சமூகத்துக்கும் மேலானது என்றார். இதனை ஜின்னா மறுத்தார். இரண்டு வாரங்களுக்கு முன்புதான் இந்திய முஸ்லீம் களுக்காகவும், ஜின்னாவின் அரசை திவால் நிலையிலிருந்து பாதுகாப்பதற்காக வும் காந்தி தனது உயிரைப் பணயம் வைத்தார். ஆனால் எப்போதும் போலவே இப்போதும் காயிதே ஆஸம் வளைந்து கொடுக்கவில்லை.

'இல்லை. எப்படியாயினும் அவர் மாபெரும் இந்துவாகவே இருந்தார்' என்று அவர் சொன்னார்.

ஏராளமாக வந்து குவிந்த புகழஞ்சலிகளில் இந்தியர்கள் தயாரித்தது எல்லாவற்றையும் விட பொருத்தமாகவும் மிகவும் நினைவு கூரும் வகையிலும் இருந்தது. இந்துஸ்தான் ஸ்டாண்டர்ட் பத்திரிகையின் தலையங்கப் பக்கத்தில் அமைந்திருந்ததுதான். கருப்பாகக் கட்டம் கட்டப்பட்டு அந்தப் பக்கம் முழுவதும் வெறுமையாக விடப்பட்டிருந்தது. அதன் மையப்பகுதியில் கொட்டை எழுத்துக்ளில் ஒரு பத்தி மட்டும் அச்சிடப்பட்டிருந்தது. அதன் வாசகம்:

'எவரின் மீட்புக்காக காந்திஜி வாழ்ந்தாரோ அந்த மக்களாலேயே அவர் கொல்லப்பட்டார். உலக வரலாற்றில் இரண்டாவது சிலுவையேற்றம் வெள்ளிக்கிழமையிலேயே நடந்துள்ளது இதே நாளில்தான் ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் யேசுநாதர் மரித்தார். பிதாவே எங்களை மன்னியும்'

நள்ளிரவிற்குப் பின் காந்தியின் உடல் பிர்லா மாளிகையின் பால்கனியிலிருந்து கீழே கொண்டு வரப்பட்டது. அவரது எளிமையான வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்ட அந்தச் சிறிய குழுவினருக்கு உரியதாக அவரது உடல் சில மணி நேரம் இருந்தது. மனு, ஆபா, காந்தியின் செயலாளரான பியாரேலால், காந்தியின் இரண்டு மகன்களான தேவதாஸ் மற்றும் ராமதாஸ், கடந்த ஆண்டு காந்தியின் வாழ்க்கையில் ஏற்பட்ட வெற்றிகளின் போதும் வேதனைகளின் போதும் அருகேயிருந்த மற்ற சிலருமே அந்தக் குழுவினர்.

கடுமையான இந்து சமய ஆசாரத்தைப் பின்பற்றி, காந்தியின் உடலை வைப்பதற்கான தயாரிப்புப் பணிகளின் பகுதியாக பிர்லா மாளிகையின் பளிங்குக்கல் பதித்த தரையை பசுமாட்டுச் சாணத்தால் மனுவும் ஆபாவும் மெழுகினார்கள். காந்தியின் புதல்வர்களும் செயலாளர்களும் அவரது உடலைக் குளிப்பாட்டினார்கள். வீட்டில் நெய்த பருத்தித் துணியால் அவரது உடலைப் போர்த்தி தரையில் போடப்பட்ட மரப்பலகை மீது கிடத்தினர். ஒரு பிராமணப் புரோகிதர் அவரது மார்பில் சந்தனத்தையும் குங்குமத்தையும் பூசினார். அவரது நெற்றியில் மனு குங்குமத் திலகமிட்டார். பின்னர் அவரது தலைமாட்டில் வாகை இலைகளால் 'ஹே ராம்' என்பதையும் கால்மாட்டில் ரோஜா இதழ்களால் 'ஓம்' என்பதையும் மனுவும் ஆபாவும் எழுதினார்கள். அப்போது அதிகாலை மணி 3.30. அது தான் வழக்கமாக காந்தி பிரார்த்தனைக்கு எழுந்திருக்கும் நேரம். குரல்

வராமல் அழுதபடி அவரின் சீடர்கள் பாடைக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு எதிரே கிடத்தப்பட்ட அந்த மனிதரை வழியனுப்பி வைக்கும் அவர்களின் பாடல் ஒலி அறை முழுவதும் நிறைந்திருந்தது.

'நீங்களாகவே மண்ணைப் பூசிக் கொள்ளுங்கள், காரணம் கடைசியில் நீங்கள் மண்ணாகத்தான் வேண்டும். நன்றாகக் குளித்து புத்தாடை அணியுங்கள். நீங்கள் போகும் இடத்திலிருந்து மீண்டும் திரும்பப் போவதில்லை' என்று அவர்கள் பாடினர்.

அவர்களின் அன்புக்குரிய பாபுவின் உடலைக் காத்திருக்கும் உலகத்துக்கு அளிப்பதற்கு முன் கடைசியாக ஒரு சடங்கைச் செய்தனர். இறந்தவர்களின் உடலுக்கு மலர் மாலைகள் சூட்டப்படும் இந்து சமய வழக்கத்தை காந்தி எவ்வளவு கடுமையாக எதிர்த்தவர் என்பதை அவர்கள் அறிவர். எனவே அழிவில்லாப் பயணத்தை மேற்கொள்ளவிருக்கும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் கழுத்தில், அவரது மகன் தேவதாஸ் பருத்தி நூலினை வெட்டி மாலையாக்கி அணிவித்தார். இந்த நூல் கடைசிப் புரட்சியாக காந்தி மதித்த ராட்டையில் முந்தைய நாள் மாலையில் அவரால் நூற்கப்பட்டதாகும்.

★

மரணத்தின் சாந்தத்துடன் உறைந்து போன மகாத்மா காந்தியின் முகத்தைக் கடைசியாகவும் இரங்கத் தக்க வகையிலும் மக்கள் தரிசனம் செய்தனர். ஏராளமான ரோஜாப்பூக்கள் மற்றும் மல்லிகை மலர்களுடன் மரப்பலகையில் வைக்கப்பட்ட அவரது உடல் மீண்டும் காலை நேரத்தில் பிர்லா மாளிகையின் பால்கனிக்குக் கொண்டு வரப்பட்டு பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. தங்களின் மகாத்மாவைக் கடைசியாக ஒரு முறைக் கண்டுவிட வேண்டும் என்ற தணியாத ஆவலுடன் காலைக் கதிரவனின் முதல் ரேகைகள் விழுவதற்கு முன்பிருந்தே மக்கள் அந்த மாளிகையைச் சுற்றிச் சூழ்ந்தனர். கடல் போன்ற அன்பும் ஏமாற்றமும் கொண்ட மக்கள் கூட்டம் வெள்ளை யடிக்கப்பட்ட கவர்களின் மீது தொடர்ந்து அலைமோதிக் கொண்டே இருந்தது.

அன்று காலை பதினொரு மணிக்குப் பிறகு, அவரின் உடலை மரப்பலகை யில் வைத்து சீடர்கள் பால்கனியிலிருந்து கீழே கொண்டு வந்து ஒரு வண்டியின் மீது மெதுவாக வைத்தனர். சோகம் சூழ்ந்தத் தலைநகரிலிருந்து, இந்த மண்ணுலகின் இறுதிப் பயணத்திற்கு, யமுனா நதிக்கரையில் மன்னர்களுக்குரிய மயானமான ராஜ்கட்டில் அவரை வரவேற்கக் காத்திருக்கும் சிதைக்கு அது கொண்டு செல்லும். அது டாட்ஜ் நிறுவனத்தின் ராணுவ வாகனமாகும். எந்திர யுகத்தின் எதிரியாகத் தன்னைத் தீர்மானித்துக் கொண்ட அவரது நினைவைப் போற்றும் வகையில் இறுதிப் பயணத்தின் போது அந்த வாகன என்ஜினின் இயக்கம் நிறுத்தப்படும். அவரது நாட்டுமக்கள், மாலுமிகள், ராணுவ வீரர்கள், விமானிகள் என 250 பேர் கூடி அதன் பம்பரில் கட்டப்பட்ட நான்குக் கயிறுகளைக் கொண்டு இழுத்துச் செல்வார்கள்.

ஜவஹர்லால் நேருவின் கண்கள் அழுதழுது சிவந்திருந்தன. சோகத்தால் பாதிக்கப்பட்ட வல்லபபாய் படேல், மனு மற்றும் ஆபாவோடு சேர்ந்து சில கடைசிச் சடங்குகளைச் செய்தார். இறந்து போனவர் அவரது வாழ்க்கையில்

முழுமைப் பெற்றார். மரணத்துக்குப் பின் அழிவற்ற உலகை நோக்கிய அவரது பயணம் இனிமையானது என்பதைக் குறிக்கும் வகையில் காந்தியின் உடல் மீது அவர்கள் சிவப்பு மற்றும் வெள்ளை நிற லினன் துணிப்பட்டைகளை வைத்தனர். பின்னர் அந்த வறுமையின் தூதரின் தகனத்தின்போது, அவருக்கு மிகவும் பொருத்தமாயிருக்கும் ஒரு போர்வையை, சிறிய உருவத்தின் மீது போர்த்தினார்கள். அதுதான் காவி, வெள்ளை, பச்சை நிறம் கொண்ட சுதந்திர இந்தியாவின் கொடி.

இறுதி ஊர்வல ஏற்பாடுகளுக்குப் பொறுப்பான இந்திய ராணுவத்தின் பிரிட்டிஷ் அதிகாரியாக இருந்த லெஃப்டினன்ட் ஜெனரல் சர் ராய் புக்கர் (Sir Roy Bucher) அங்கே காத்திருந்த ராணுவப் பிரிவுகளை கடைசி முறையாகப் பார்வையிட்டார். வரலாற்றின் ஒரு விநோத சம்பவமாக, மோகன்தாஸ் காந்திக்கு இரண்டாவது முறையாக ராய் புக்கர், இறுதி யாத்திரைக்கான ஏற்பாடுகளைச் செய்தார். முன்பு 1942ஆம் ஆண்டு எரவாடா சிறையில், இந்தச் சிறிய மனிதர் புகழ் பெற்ற 21 நாள் உண்ணாவிரதம் இருந்த போதுதான் முதல் ஏற்பாடு நடந்தது. ஆனால் அந்த இறுதி யாத்திரையில் காந்தி பங்கேற்க மறுத்துவிட்டார்.

புக்கரிடமிருந்து சமிக்ஞை வந்தவுடன், பிர்லா மாளிகைக்கு வெளியே இருந்த மக்கள் கடலுக்குள் மெதுவாக அந்த ஊர்வலம் புகுந்தது. ஆயுதம் தாங்கிய நான்கு கார்களோடு, கவர்னர் ஜெனரலின் மெய்க்காவல் படையைச் சேர்ந்த ஒரு குழுவினரும். ஊர்வலத்தின் முன் சென்றார்கள். வெறுத்தாலும் பின்னர் அன்பு செலுத்திய 'விரக்தியுற்ற சிட்டுக் குருவி'க்கு மவுண்ட்பேட்டன் செலுத்திய கடைசி மரியாதையாகவே அவரின் மெய்க்காப்பாளர்கள், காந்தியின் இறுதி ஊர்வல வண்டியில் இடம் பெற்றார்கள். பழைய வைஸ்ராயின் மெய்க்காவல் படைப்பிரிவினர் ஒரு இந்தியருக்கு இப்படி மதிப்பளிப்பது இதுவே முதல்தடவையாகும்.

அமைச்சர்கள், கூலிக்காரர்கள், மகாராஜாக்கள், தீண்டத்தகாதவர்களான துப்புரவு தொழிலாளர்கள், கவர்னர்கள், முகத்திரையிட்ட முஸ்லீம் பெண்கள். இந்தியாவின் அனைத்து சாதி, வர்க்கம், இனம், நிறம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் தங்களின் பொதுவான துயரச் சுமையை வெளிப்படுத்த ஒன்றுபட்டனர். இதற்குப் பொருத்தமாகவே ஒழுங்குபடுத்தப்படாத மக்கள் வெள்ளமெனச் சென்ற ஊர்வலத்தில் அவர்கள் பின் தொடர்ந்தனர்.

யமுனா நதிக்கரைக்குச் செல்லும் சவ ஊர்வலத்தின் ஐந்து மைல் தூரப் பாதை முழுவதும் கம்பளம் விரித்தது போல் ரோஜாக்களும் சாமந்திப் பூக்களும் குவிந்து கிடந்தன. அந்தப் பாதை முழுவதும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. மரங்களின் மீதும், ஜன்னல்களில் தொற்றிக் கொண்டும் வீட்டுக் கூரைகளின் மேல் வரிசையாக நின்றும், விளக்குக் கம்பங்களில் அமர்ந்தும், தொலைபேசிக் கம்பங்களைப் பற்றிக் கொண்டும், சிலைகளின் தோள்களில் உட்கார்ந்து கொண்டும் மக்கள் அந்த ஊர்வலத்தைப் பார்த்தனர். கிங்ஸ்வே பாதையின் மக்கள் கூட்டத்தில் காணாமல் போன ரஞ்சித் லால் ஒரு விளக்குக் கம்பத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தார். காந்தியின் படுகொலை செய்தியைக் கேட்டவுடன் முந்தைய நாள் மாலையில் கிராமத்தை விட்டுப் புறப்பட்ட விவசாயி இவர். அவர் தொங்கிக் கொண்டிருக்கும் கம்பத்துக்குக் கீழ்ப்பகுதியில் சவஊர்வல வண்டி மெல்ல நகர்ந்த போது, மலர் மெத்தையில் கிடத்தப்பட்டிருந்த காந்தியின் புகழ் முகத்தை ரஞ்சித்லால் வாழ்க்கையில் முதன் முறையாகப்

பார்த்தார். அவரது கண்களில் நீர் வழிந்தது. காந்தியின் கடந்து செல்லும் உருவத்தைப் பார்த்ததும் அவருக்கு நன்றியுடன் எழுந்த எண்ணம் இதுதான்: 'இவர் எனக்குச் சுதந்திரம் அளித்தவர்.'

தர்பார் மண்டபத்தின் உச்சியிலிருந்து லூயி மவுண்ட்பேட்டனின் பத்திரிகைத் தொடர்பாளர் ஆலன் கேம்ப் பெல் - ஜான்சன் இந்த ஊர்வலத்தைப் பார்த்தார். ஏராளமாக மொய்த்திருந்த மக்கள் கூட்டத்தின் மையப்பகுதியில் அந்த ராஜபாட்டை வழியாக சவ வண்டி அணு அணுவாக அசைந்து முன்னேறியது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் வெற்றி ஊர்வலங்களுக்காக வடிவமைக்கப்பட்ட அந்தப் பாதையில் எந்த ஒரு வைஸ்ராயும் கனவிலும் கண்டிராத வகையில் காந்தியின் சவ ஊர்வலத்துக்கு மகத்தான மரியாதை கிடைத்துள்ளதாக அவர் உணர்ந்தார்.

ஒரு மைல் தூரத்தைக் கடந்து செல்ல ஒரு மணி நேரம் என ஐந்து மணி நேரத்துக்கு அந்த ஊர்வலம், காந்தியின் இறுதிச் சடங்குகள் நடைபெறவுள்ள யமுனா நதிக்கரையை நோக்கி, சோகம் ததும்பும் மக்கள் கூட்டத்துக்கிடையே தொடர்ந்து சென்றது. அங்கே பிரமிடு போல குவிக்கப்பட்டிருந்த மரக்கட்டைகளுக்கு அப்பால் பரந்து விரிந்துள்ள ஆற்றுப்படுகையில் மேலும் பத்து லட்சம் மக்கள் நிறைந்திருந்தனர். நம்பமுடியாத மக்கள் கூட்டத்தைக் கண்ணுற்ற மார்கரெட் புர்க்கே ஒயிட், 'இந்தப் புவியுலகம் கண்டிராத மாபெரும் மக்கள் திரளை' அவரது லெய்க்கா கேமராவில் பதிவு செய்துவிட வேண்டும் என்று நினைத்தார்.

அந்த மாபெரும் மக்கள் கூட்டத்தின் மையப்பகுதியில் ஒரு சிறிய திட்டாக இருந்த இடத்தில் இந்திய விமானப்படை வீரர்களின் ஒரு சிறிய குழுவினரின் பாதுகாப்பில், சவ ஊர்வல வண்டிக்காக சுமார் நூறு பிரமுகர்கள் காத்திருந்தனர். தலையில் கப்பற் படைத் தளபதியின் வெள்ளை நிறத் தொப்பியுடன் மெலிந்த மவுண்ட்பேட்டனின் உருவம், எல்லோரையும் விட உயர்ந்து சிதையின் அருகே காணப்பட்டது.

கடைசியாக மக்கள் கூட்டத்தின் தலைகளுக்கு மேலே கைக்குக் கைமாறி காந்தியின் உடல், சிதைக்குக் கொண்டுவரப்பட்டது. அடக்க முடியாத அலறல் சத்தம் அலைமோத மக்கள் கூட்டம் முண்டியடித்து முன்னேறியது. 'இந்த வேகத்தில் மவுண்ட்பேட்டனும் அவரது துணைவியாரும், மகள்களும், ஊழியர்களும் காந்தியுடன் சேர்ந்தே எரிந்து போனார்கள் என்றொரு செய்தி லண்டனுக்குக் கிடைத்தால் அங்கு பூகம்பமே ஏற்படும்' என்று ஊழியர்களில் ஒருவரான மேஜர் மார்டின் கிளியாட் நினைத்தார்.

அச்சம் தரும் நிலைமையை உணர்ந்த மவுண்ட்பேட்டன் அங்கிருந்த பிரமுகர்களை, ஏராளமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கட்டைகளிலிருந்து சுமார் இருபது கஜ தூரம் அமைதியாகப் பின்னுக்குத் தள்ளி நிறுத்தினார். ஏற்கெனவே கால்கள் மிதித்துச் சேறாகியிருந்த தரையில் அமருமாறு அவர்களுக்கு சைகை செய்தார். மிகவும் தூய்மையான தனது கப்பல் படை சீருடையைப் பற்றியும் கவலைப்படாமல் முன்னுதாரணமாக தனது துணைவியார் மற்றும் மகள்களுடன் அவர் தரையில் அமர்ந்தார்.

இறுதியாக, காந்தியின் உடல் வைக்கப்பட்டிருந்த பலகை அந்த வட்டத் துக்குள் வந்தது. சந்தனக் கட்டைகள் அடுக்கப்பட்ட சிதையில் அதனை அவரின்

புதல்வர்கள் பக்குவமாக வைத்தனர். இந்து மதச் சடங்கு முறைப்படி அவரின் தலை வடக்குப் பார்த்தும் கால் தெற்குப் பார்த்தும் இருந்தது. அப்போது நேரம் நான்கு மணி. அவரின் உடல் தீக்கிரையாகும்போது முகத்தின் மீது சூரியக்கதிர்கள் விழுந்து கடைசி வாழ்த்துக்களை வழங்க வேண்டும் என்பது வழக்கமாதலால் அவசரம் காட்ட வேண்டிய நேரமாகி விட்டது.

காந்தியின் மூத்த மகன் ஹரிலால் இல்லாததால் இந்து பாரம்பரியப்படி சடங்குகளைச் செய்யும் பொறுப்பு இரண்டாவது மகன் ராமதாசுக்கு வந்தது. அவர் பிரமிடுபோல் அமைக்கப்பட்டிருந்த சிதைமேல் ஏறினார். இளைய சகோதரர் தேவதாசுடன் சேர்ந்து, தேங்காய் எண்ணெய், கற்பூரம், சாம்பிராணி கலந்த நெய்யை சிதையின் கட்டைகளில் ஊற்றினார்.

ஒரு வருட காலத்துக்குள் நன்கு பழக்கமாகி விட்ட அந்த மனிதரின் உருவத்தைப் பார்த்த போது லூயி மவுண்ட்பேட்டன் துக்கத்தில் ஆழ்ந்தார். 'நமது கண்களுக்கு முன் அவர் அமைதியாக உறங்குவது போல் காணப்பட்டாலும், இன்னும் சிறிது நேரத்தில் நம் கண் முன்னாலேயே அவர் தீப்பிழம்புகளில் மறைந்து விடப் போகிறார்' என்பதை அவர் நினைத்துப் பார்த்தார்.

காவி உடையில் இருந்த புரோகிதர்கள் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்த போது, ராமதாஸ் காந்தி சோகமுடன் ஐந்து முறை சிதையைச் சுற்றி வலம் வந்தார். பின்னர் மரணக் கோயிலின் அணையா விளக்கில் பற்ற வைத்துக் கொண்டு வந்த தீப்பந்தத்தை ஒருவர் அவரிடம் கொடுத்தார். ராமதாஸ் அதனைத் தனது தலைக்கு மேல் உயர்த்திப் பின்னர் அவரது தந்தையின் சிதையில் செருகினார். முதலில் அசைந்தாடி சந்தனக்கட்டைகளில் மெல்லத் தீப்பற்றத் தொடங்கியது. அப்போது நடுக்கத்துடன் ஒரு குரல் பண்டைய வேதவாக்கியங்களை ஒலித்தது. அவற்றின் வார்த்தைகள் சிதை நெருப்போடு கலந்தன.

*அசத்தியத்திலிருந்து சத்தியத்துக்கும்*
*இருளிலிருந்து ஒளிக்கும்*
*மரணத்திலிருந்து அமரத்துவத்துக்கும் என்னை வழி நடத்து*

சிதையிலிருந்து சுருள் சுருளாகப் புகை மேலெழுந்ததைப் பார்த்த மக்கள் நதிக்கரையின் ஓரத்திலிருந்து முன்னோக்கி நகர்ந்தனர் தனக்குப் பின்னால் டஜன் கணக்கிலான பெண்கள் பைத்தியம் பிடித்தது போல் அழுது கொண்டிருப் பதையும், முடியைப் பிய்த்துக் கொள்வதையும், புடவையைக் கிழித்துக் கொள்வதையும் பமீலா மவுண்ட்பேட்டன் பார்த்தார். பின்னர் அவர்கள், சூழ்ந்திருந்த காவலர்களை விலக்கிக் கொண்டு, இந்தியாவின் புராதன சடங்கான சதி எனும் உடன்கட்டையேற, கணவனின் சிதையில் தாங்களாகவே விழுந்து விதவை மனைவியர் தற்கொலை செய்து கொள்ளும் பாரம்பரிய பழக்கத்தை நிறைவேற்ற முற்படுவது போலத் தோன்றியது. அவரது தந்தையின் தொலை நோக்கு சிந்தனையால், சகதியான தரையில் உட்கார வைக்கப்பட்டு பிரமுகர்கள் காப்பாற்றப்பட்டார்கள். இல்லையென்றால் கட்டுக்கடங்காத மக்கள் கூட்டம் அவர்களை நெருப்பில் தள்ளி விருப்பமில்லாமலேயே பெரும் கூட்டம் உடன்கட்டையேறும் நிலை ஏற்பட்டிருக்கும்.

நெய் விரைந்து தீப்பற்றக் கூடியது என்பதால் சிதையில் நெருப்பு கொழுந்து விட்டெரிந்தது. சந்தனக் கட்டைகளின் குவியல் சடசடவென்ற ஒலியுடன் தீப்பற்றியெரிந்தபோது அதிலிருந்து எழுந்த ஒளி ஆகாயத்தில் கொதிக்கும் நீரூற்று போல் காட்சியளித்தது. ஆரஞ்சு நிற நெருப்புத் திரைக்குப் பின்னால், அந்தச் சிதையின் மையப்பகுதியிலிருந்த பழுப்பு நிற உருவம் மறைந்து விட்டது. யமுனை நதி தீரத்தில் சுழன்று வீசிய குளிர்காலக் காற்று தீயை உயர்ந்து எரியச் செய்தது. சிதையிலிருந்து எண்ணெய்ப் பிசுக்கோடு கூடிய புகையை அந்தப் பகுதி முழுவதும் பரப்பியது. அஸ்தமன சூரியனின் ஒளிக்கதிர்களால் சிவப்புச் சாயம் பூசப்பட்ட ஆகாயத்தை நோக்கிப் புகைத்தூண்கள் எழுந்தன. யமுனை நதியின் படுகையில் லட்சக்கணக்கான மக்கள் சோகமுடன் எழுப்பிய குரல் நெஞ்சை உலுக்குவதாக இருந்தது: 'மகாத்மா காந்தி அமர் ஹோ கயே - மகாத்மா காந்தி அமரரானார்.'

★

முன்பு மாமனிதராக இருந்து இப்போது புகைந்து கொண்டிருப்பவரின் சிதையைச் சுற்றி இரவு முழுவதும் மக்கள் வரிசை வரிசையாக அமைதியாகக் கடந்து சென்றனர். அவர்களுக்கிடையே யாருக்கும் அடையாளம் தெரியாமலும், கவனிப்புக்கு உட்படாமலும் ஒருவர் இருந்தால், அவர்தான் இந்தச் சிதைக்குத் தீ மூட்டியிருக்க வேண்டும். மகாத்மா காந்தியின் மூத்த மகனான ஹரிலால், அபரிமிதமான குடிப்பழக்கத்தாலும் காச நோயாலும் அவர் அழிந்து கொண்டிருந்தார்.

தன்னால் மிகவும் நேசிக்கப்பட்ட, மதிக்கப்பட்ட அந்த மனிதர் தீக்கிரையாவதைக் கண்டு இரவு முழுவதும் எரியும் நெருப்பைப் பார்த்து அழுது கொண்டிருந்ததால் முகம் வீங்கிப் போன இன்னொரு மனிதரும் கூட இருந்தார். ஜவஹர்லால் நேருவின் வாழ்க்கையில் ஒரு சகாப்தம் அந்தத் தீயில் அழிந்தது. அவரை அது ஆதரவற்றவராக்கியது. அதிகாலையின் முதல் வெளிச்சத்தின் போதும் கனன்று கொண்டிருந்த சாம்பலின் மீது ரோஜாக்களாலான சிறிய மலர்க் கொத்தை அவர் வைத்தார்.

'பாபுஜி - சிறிய தந்தையே - இங்கு மலர்களை வைக்கிறேன். குறைந்த பட்சம் இன்று உங்களின் எலும்புகளுக்கும் அஸ்திக்கும் நான் மலர்களை வைக்கிறேன். நாளை நான் எங்கே வைப்பேன்? யாருக்கு வைப்பேன்?' என்று அவர் கூறினார்.

★

இந்து வழக்கப்படி, மகாத்மா காந்தியின் அஸ்தி அவரது தகனம் முடிந்து பன்னிரண்டு நாட்களுக்குப் பின், கடலில் கலக்க ஓடுகிற நதி நீரில் கரைக்கப்படவுள்ளது. இதற்குத் தெரிவு செய்யப்பட்ட இடம் இந்து சமய நம்பிக்கைப்படி மிகவும் புனிதமான இடங்களில் ஒன்றாகக் கருதப்படும் அலகாபாத் சங்கமம். நித்யமாதா கங்கையின் சகதி நிறைந்த நீரும், யமுனையின் தெளிந்த நீரும், கற்பனையான சரஸ்வதி ஆறும் இங்கே தான் சங்கமிக்கின்றன. இந்திய வரலாற்றில் காலம் காலமாய் நிலைபெற்று விட்ட பெயர்களைக் கொண்ட அந்த மகாநதிகள் சங்கமிக்கும் இடத்தில் அமைதி தவழும் அலைகளில், முகம்

தெரியாத பல லட்சக்கணக்கான மக்களின் அஸ்தி கரைக்கப்பட்டுள்ளது. அவர்களின் இன்ப துன்பங்களைத் தனதாக்கிக் கொண்ட காந்தி அவரது மக்களின் ஆத்மாக்களோடு ஒன்றுகலக்கப் போகிறார் - எல்லையற்ற கடலில் தண்ணீர்த் துளிகள் கலப்பது போல.

அவரது அஸ்தியைக் கொண்டிருந்த செம்புக்கலசம், புது டில்லியிலிருந்து அலகாபாத் வரை ஒரு ரயிலில் 368 மைல் தூரம் பயணம் செய்தது. அந்த ரயில் முழுவதும் மூன்றாம் வகுப்புப் பெட்டிகளை மட்டுமே கொண்டிருந்தது. அந்த ரயில் வந்த வழி முழுவதும் லட்சக்கணக்கான இந்தியர்கள் மனிதத் தொடர்போல நின்று இந்தியாவின் மகாத்மாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். அலகாபாத் ரயில் நிலையத்திலிருந்து அந்தக் கலசம் ஒரு ட்ரக் வண்டிக்குக் கொண்டு செல்லப்பட்டது. அந்த வண்டி மாபெரும் மக்கள் கூட்டத்துக்கிடையே ஊர்ந்து நதிக்கரைக்கு சென்றது. அங்கே கலசத்தைப் பெற்று நதியின் மையப்பகுதிக்குக் கொண்டு செல்ல, 'டக்' (வாத்து) என்று பெயரிடப்பட்ட, நிலத்திலும் நீரிலும் பயன்படக்கூடிய இந்திய ராணுவத்தின் வெள்ளை நிற வாகனம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு காத்திருந்தது.

நேரு, படேல், காந்தியின் புதல்வர்களான தேவதாஸ் மற்றும் ராமதாஸ், மனு, ஆபா மற்றும் நெருக்கமானவர்கள் கலசம் வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் அமர்ந்திருந்தனர். ஆற்றின் இரு கரைகளிலும் கூடி நின்ற மூன்று மிலியன் (முப்பது லட்சம்) மக்கள் அதன் பயணத்தைப் பின் தொடர்ந்து சென்றனர்.

சரியான நேரம் வந்தவுடன், கூட்டாக ஒலித்த வேத முழக்கங்களும், மணிகளின் ஒலியும், இந்தியக் குழலிசையின் ஒழுங்கற்ற ஓசையோடு கலந்து மக்கள் கூட்டத்தின் மேல் எழுந்தன. துக்கம் நிறைந்த ஆயிரக்கணக்கானவர்கள் தங்களின் நெற்றியில் திருநீறு அணிந்து சந்தனப் பொட்டு வைத்திருந்தனர். இவர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து கொள்ள ஆற்றில் இறங்கினர். அவர்களின் கைகளில் இருந்த கொட்டாங்கச்சிகளில் பூக்கள், பழங்கள், இனிப்புகள், பால், ரோமத்துண்டுகள் ஆகியவற்றை வைத்து ஆற்று நீரில் விட்டனர். பின்னர் உள்ளங்கைகளைக் குழித்து நீருக்குள் முக்கி புனித நதியிலிருந்து மூன்று மிடறு தண்ணீர் எடுத்துப் பருகினர்.

டக் என்ற வாகனம் புராண மரபுப்படி மூன்று நதிகளின் சங்கம இடத்துக்கு வந்தவுடன், ராமதாஸ் காந்தி தனது தந்தையின் அஸ்தி உள்ள கலசத்தில் புனிதப் பசுவின் பாலை ஊற்றி நிரப்பினார். பின்னர் அதனை மெதுவாக கலக்கிக் கொண்டிருக்கும் போது, வாகனத்தில் இருந்தவர்கள் கடைசிப் பாடலைப் பாடினார்கள்: 'புனித ஆத்மாவே, சூரியன், ஆகாயம், நெருப்பு ஆகியவை உனக்கு நன்மையளிக்கட்டும்; அனைத்து நதிகள் மற்றும் கடல்களின் நீர் உனக்கு உதவியாக இருக்கட்டும்; உனது நற்செயல்களில் இவை எப்போதும் உனக்குச் சேவை செய்யட்டும்.'

அவர்களின் மந்திரப்பாடல்கள் முடிந்த பிறகு அவர் அந்தப் படகின் விளிம்புப் பலகைக்குச் சென்று அஸ்திக் கலசத்தில் இருந்த கலவையைத் தண்ணீருக்குள் அமிழ்த்தினார். ஆற்று நீரின் வேகத்தால் அஸ்தியின் வெண்மை கலந்த சாம்பல் நிற ஆடைப்பகுதிகள் படகின் பின்புறத்தை நோக்கிச் சென்றன. அதில் பயணம் செய்தவர்கள் குனிந்து, தங்களின் கைநிறைய ரோஜா

இதழ்களை, ஒரு போது மனிதனாக இருந்த சாம்பலின் மீது அன்புடன் சொரிந்தார்கள்.

ரோஜாப்பூக்களை மகுடமாகச் சூடிய சாம்பல் நிறப்படலம், ஆற்றின் எல்லையற்ற வேகத்தில் அடித்துச் செல்லப்பட்டு கண்ணுக்கெட்டாத தூரத்தில் மறைந்தது. மோகன்தாஸ் காந்தியின் அஸ்தி ஆழ்ந்த பற்றுடைய ஒரு இந்துவின் கடைசி புனிதப் பயணமாக அமையும். நித்ய மாதாவான கங்கை அதனைக் கொண்டு சென்று கடலின் அழிவற்ற தன்மையோடு கலந்து விடும். காந்தியின் ஆத்மாவோ, 'இரவின் நிழல்களிலிருந்து விடுபட்டு', 'மகத்' எனப்படும் எல்லாம் வல்ல, கீதையின் நாயகனான கடவுளுடன் ஒன்றிக்கலந்து விடும்.

# முடிவுரை

*மகாத்மா காந்தி வாழ்க்கையின் கடைசி மாதங்களில் எதற்காகப் பாடுபட்டாரோ அதனை மரணத்தில் சாதித்துவிட்டார். பிரிவினையைத் தொடர்ந்து இந்தியாவின் கிராமங்களிலும் நகரங்களிலும் ஒருவரை ஒருவர் கொன்று குவித்த அறிவற்ற வகுப்புவாதக் கொலைகள் அவரது மரணத்தால் முடிவுக்கு வந்தன. துணைக்கண்டத்தில் குரோதம் நீடிக்கும். ஆனால் இனிமேல் அது இரு நாடுகளுக்கிடையே போர்க்களத்தில் சந்திக்கும் ராணுவங்களின் மோதலாக இருக்கும். 1947-48இல் இந்தியத் துணைக்கண்டத்தைத் தழுவிய வெற்றி தோல்விகளின் உச்சக்கட்டமாக பிர்லா மாளிகையின் தோட்டத்தில் நிகழ்ந்த தியாகம் இருக்கும்.*

*இதன் காரணகர்த்தாவான நாதுராம் கோட்சே கையில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டான். கைது செய்யும் போது எதிர்ப்பு முயற்சி எதையும் செய்யவில்லை. இந்த சதித்திட்டத்தின் மற்ற உறுப்பினர்களும் விரைவிலேயே கைது செய்யப்பட்டனர். நாராயண் ஆப்தேயும், விஷ்ணு கார்காரேயும் ஆப்தேயின் பெண் மோகம் காரணமாக காவல் துறையிடம் சிக்கிக் கொண்டனர். (மிகவும் பொருத்தமாகவே) செயின்ட் வேலென்டின் தினமான (காதலர் தினமான - மொ-ர்) பிப்ரவரி 14 அன்று பம்பாய் ஓட்டலில் தங்கியிருந்த அறைக்கதவு தட்டப்பட்ட போது ஆப்தே பதிலளிக்கத் திறந்தான். இங்கேதான் 48 மணி நேரமாக அவன் ஒளிந்திருந்தான். வாசலில் ஒரு பெண்ணைக் காணலாம் என்று தான் எதிர்பார்த்தான். மாறாக பம்பாய் காவல் துறையின் மூன்று காவலர்களைத்தான் அவன் கண்டான். காவல்துறை தலைமை மருத்துவரின் மகளுடன் அவனுக்கு இருக்கும் தொடர்பைக் காவல்துறையினர் கண்டுபிடித்தனர். இவர்களின் தொலைபேசி உரையாடல் ஒட்டுக் கேட்கப்பட்டது. அதில் தான் அந்தப் பெண்ணைத் தனது ஓட்டல் அறைக்கு வருமாறு சில நிமிடங்களுக்கு முன் கேட்டுக் கொண்டான்.*

*ஆப்தே, நாதுராம் கோட்சே, கோபால்கோட்சே, மதன்லால், கார்காரே, சவார்க்கர், பார்ச்சூர், திகம்பர் பாட்கேயின் பணியாள் என எட்டுப் பேர், மகாத்மா காந்தி கொலைக்குச் சதி செய்ததாக 1948 மே 28இல் விசாரணைக்கு அனுப்பப்பட்டனர். அரசியல் நோக்கங்களுக்காக, இந்தக் கொலைக்குத் தாமே தனிப்பொறுப்பு என்றும், மற்ற எவருக்கும் சதித் திட்டத்தில் பங்கு இல்லை என்றும் ஆரம்பத்திலிருந்தே நாதுராம் கோட்சே கூறிவந்தான்.*

*37 தடவை கைது செய்யப்பட்டும் ஒரே ஒரு தடவை மட்டுமே தண்டனை பெற்ற திகம்பர் பாட்கேயின் சாதனை இந்தக் கொலையில் பங்கேற்றதன் மூலம் முறியடிக்கப்படவில்லை. அந்தப் போலி சாது அரசுத் தரப்பு சாட்சியாக மாறினான். எனவே இந்தக் குற்றச் செயலுக்காக அவன் கூண்டில் ஏறவில்லை. குற்றம் சாட்டப்பட்ட எட்டுப்பேரில் ஏழுபேருக்கு பெரும்பாலும் அவனது சாட்சியத்தின் அடிப்படையிலேயே தண்டனை வழங்கப்பட்டது. போதிய சாட்சிகள் இல்லாததால் வீர சவார்க்கர் விடுதலை செய்யப்பட்டார்.*

*இந்தக் குற்றச் செயலுக்காக நாதுராம் கோட்சே, நாராயண் ஆப்தே ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 1948 ஜனவரி 27 அன்று மாலை புதுடில்லியில் ஏர் இந்தியா விமானப் பணிப் பெண்ணை சந்திப்பதாகக் கூறி அதனைத் தவற விட்டதற்கு விலையாகவே ஆப்தேக்கு இந்தத் தண்டனை கிடைத்தது. கொலைக்குரிய ஆயுதத்தை குவாலியரில் வாங்கும் போது ஆப்தே உடனிருந்தான் என்ற காரணத்துக்காகத்தான் அவனுக்கு மரணதண்டனை கிடைத்தது. மற்ற ஐந்து பேருக்கும் நீதிபதி ஆயுள் தண்டனை விதித்தார். இருப்பினும் பார்ச்சூரும், பாட்கேயின் பணியாளரும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால், தண்டனையிலிருந்து தப்பித்தனர்.*

*நாதுராம் கோட்சே, நாராயண் ஆப்தே ஆகியோரின் மேல்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டு, அவர்களுக்கான தண்டனையை நிறைவேற்றும் நாள் 1949 நவம்பர் 15 என்று குறிக்கப்பட்டது. அஹிம்சைக்கான தேவ தூதரை மிகவும் நேசித்த சீடரான ஜவஹர்லால் நேருவுக்கு, காந்தியின் இரண்டு புதல்வர்களும், அவரின் நெருங்கிய நண்பர்களும் தோழர்களும் சேர்ந்து கருணை மனுவை அனுப்பினார்கள். அந்த மனுவும் ஏற்கப்படவில்லை. இந்தியக் குற்றவியல் தண்டனைச் சட்டத்தின்படி, நாராயண் ஆப்தேயையும், நாதுராம் கோட்சேயையும் 'கழுத்தில் சுருக்கிட்டு சாகும் வரை தொங்க விடுவதற்காக' 1949 நவம்பர் 15 விடியற்காலையில் அவர்கள் சிறைக் கூடங்களிலிருந்து, அம்பாலா சிறையின் திறந்த வெளிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.*

*அவன் இருந்த அறையின் கதவை, தூக்கிடுபவரின் உதவியாள் அன்று காலையில் திறக்கும் வரை, மகாத்மா காந்தியின் கொலைக்காகத் தாம் இறக்கப் போகிறோம் என்பதை ஆப்தே நம்பவேயில்லை. கடைசி நேரத்தில் தண்டனை ரத்து செய்யப்படும் என்று அவன் நம்பினான். காரணம், அவனது கைரேகை அப்படி இருப்பதாக அவன் அறிவித்தான். கைரேகையை விஞ்ஞான பூர்வமானதாக நம்பியது எவ்வளவு பெரிய தவறு என்பதை தூக்குமரத்தின் அருகே நிற்கும் போது அறிந்து கொண்ட ஆப்தே மயங்கி விழுந்தான். காத்திருக்கும் கயிற்றுக்கு அவனைத் தூக்கிச் செல்ல வேண்டியதாயிற்று.*

*தனது குடும்பத்துக்கு விட்டுச் செல்லும் ஒரே ஆஸ்தி தனது அஸ்தி மட்டும் தான் என்று நாதுராம் கோட்சே உயில் பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தான். எந்தக் கனவுக்காகக் கொலை செய்ய உறுதி பூண்டானோ அது நிறைவேறும் வரை தனது அமரத்துவப் பயணத்தை ஒத்தி வைக்க அவன் விரும்பினான். இந்து மத வழக்கப்படி தனது அஸ்தியைக் கடலில் கலக்கும் நீரில் கரைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தான். மாறாக இந்து ஆட்சியின் கீழ் துணைக்கண்டம் ஒன்றிணைக் கப்பட்டு அதன் வழியாகப் பாயும் சிந்து நதியில் கரைக்கப்படும் வரை தனது அஸ்தி தலைமுறை தலைமுறையாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவன் விரும்பினான்.*

*தத்தாத்ரேய பார்ச்சூர் தனது தண்டனை ரத்து செய்யப்பட்ட பின் ஹோமியோபதி மருத்துவமனைக்குத் திரும்பி வந்தார். குவாலியர் குடிமக்களின் நுரையீரல் பாதிப்புக்கு, ஏலக்காய் விதைகள், மூங்கில் தளிர்கள், வெங்காயம், தேன் ஆகியவற்றைக் கலந்து மருந்து தரும் தொழிலைப் பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்தார்.*

பூனாவில் உயிருக்குப் பாதுகாப்பிருக்காது என்று அஞ்சிய திகம்பர் பாட்கே, விசாரணைக்குப் பிறகு, பம்பாயில் காவல்துறை அளித்த குடியிருப்புக்கு சென்றான். அந்த மாகாணம் முழுவதும் ஏற்கெனவே புகழ் பெற்றிருந்த குண்டு துளைக்காத ஆடை தயாரிப்புத் தொழிலை மீண்டும் நிறுவினான். தங்களின் உயிருக்கு ஆபத்து என்று அஞ்சிய அரசியல்வாதிகள் தான் அவனின் அதிகபட்ச வாடிக்கையாளர்களாக இருந்தனர்.

இந்தியச் சட்டங்களின் படி தண்டனை அனுபவித்த கார்காரே, மதன்லால், கோபால்கோட்சே ஆகியோர் 1960களின் பிற்பகுதியில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். கார்காரே அகமது நகருக்குத் திரும்பி வந்து டெக்கான் கெஸ்ட் ஹவுசின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றான். பயணிகளுக்கு அவனது கட்டில்களில் ஒன்றில் சுமாரான வசதி செய்து கொடுத்தான். அறையில் ஏழு கட்டில்கள் போட்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு இரவுக்கு 1 . 25 ரூபாய் (10 ஷில்லிங்) என்று வசூலித்தான். 1974 ஏப்ரலில் மாரடைப்பால் காலமானான். மதன்லால் பாவா பம்பாயில் குடியேறினான். அவனது குடியிருப்புக்குப் பின்னால் இருந்த கொட்டகையில் பொம்மைகள் தயாரிக்கும் குடிசைத் தொழிலை நிறுவினான். பிர்லா மாளிகையில் குண்டு வீசி காந்தியை அழிக்க முயற்சி செய்த அவனின் தயாரிப்புகளில் சிறந்ததாக இருந்தது ஒரு ராக்கெட். அழுத்தப்பட்ட காற்றைக் கொண்ட அந்த ராக்கெட் ஆகாயத்தில் 100 கஜ தூரம் சென்று பின்னர் அதில் உள்ள பாராசூட்டின் உதவியுடன் மீண்டும் பூமிக்கே திரும்பி விடும்.

கோபால் கோட்சே அவனது சொந்த ஊரான பூனாவுக்கே திரும்பினான். நகரின் மையப்பகுதியில் ஒரு எளிய வீட்டின் மூன்றாவது மாடியில் தங்கினான். அந்த வீட்டின் ஒரு சுவரில், வார்ப்பு இரும்பினால் ஓரம் அமைக்கப்பட்ட, ஒட்டுமொத்த இந்திய துணைக் கண்டத்தின் (இதைத்தான் அகண்டபாரதம் என்று ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் இப்போதும் கூறுகின்றனர். மொ-ர்) பிரமாண்ட மான வரைபடம் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 15ஆம் தேதியன்று, அவனது சகோதரனுக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட நினைவு நாளன்று, வெள்ளிக்கலசத்தில் வைக்கப்பட்டுள்ள நாதுராமின் அஸ்தி அந்த வரை படத்தின் முன் வைக்கப்படுகிறது. அந்த வரைபடம் ஒளியுமிழும் விளக்குகளால் அலங்கரிக்கப்படுகிறது. மிகவும் வெறிபிடித்த வீர சவார்க்கரின் பழைய சீடர்களை அதன் முன் கோபால் கோட்சே ஒன்றுதிரட்டுகிறான்.

இங்கே கூடுகின்றவர்களிடம் மனசாட்சியின் உறுத்தலோ, செய்த செயலுக்காக வருந்தும் அறிகுறியோ இல்லை. 'தியாகி' நாதுராம் கோட்சேயின் நினைவைப்போற்றவும், அவனது குற்றச் செயலை எதிர்காலச் சந்ததியினருக்கு நியாயப்படுத்தவுமே அவர்கள் கூடுகிறார்கள். தீய செயலுக்கு வருந்தாத அந்தத் தீவிரவாதிகள், சிதார் இசையால் கிளர்ச்சியுற்று கோபாலின் வார்ப்பு இரும்புச் சட்டம் போட்ட வரைபடத்தின் முன்னால் கூடி நிற்பார்கள். வலது கைகளை வானில் உயர்த்தி நாதுராம் கோட்சே அஸ்தியின் முன் நின்று, 'வேதங்களின் புனித ஸ்லோகங்கள் இயற்றப்பட்ட சிந்து நதிக்கரைகளிலிருந்து பிரம்மபுத்ரா வுக்கும் அப்பாலுள்ள வனப்பகுதிகள் வரை, பாகிஸ்தான்களாகத் துண்டாடப் பட்ட பகுதிகளையும் தாய்நாட்டோடு இணைத்து, இந்து ஆட்சியின் கீழ் இந்தியாவை மீண்டும் வென்றிடச் சபதமேற்பார்கள்.'

நியமனத்தை ஒப்புக் கொண்ட நேரத்திலிருந்து கூறியது போலவே சுதந்திர இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனரல் பதவியை லூயி மவுண்ட்பேட்டன் 1948 ஜூனில் கைவிட்டார். அப்போதும் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த, ஒரு இந்திய மன்னரான ஹைதராபாத் நிஜாமிடம், சுதந்திரமாக ஆட்சி செய்யும் உரிமையைக் கைவிட்டு, இந்திய டொமினியனை ஏற்றுக் கொள்ளுமாறு செய்ய, அவர் இந்தியாவில் இருந்த கடைசி வாரங்களில் அமைதி வழியில் முயற்சி செய்தார். ஆனால் அது வெற்றி பெறவில்லை.

அவரது மனைவி எட்வினாவின் அதிகாரபூர்வமான கடைசி நடவடிக்கை இரண்டு பெரிய அகதி முகாம்களுக்குச் செல்வதாக அமைந்தது. இங்கே இருந்தவர்களுக்காக அவர் அதிக நேரத்தையும் சக்தியையும் செலவிட்டிருந்தார். அவரை வழியனுப்ப அந்த முகாம்களில் இருந்த ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். ஏழ்மையில் வாழும் அந்த மக்களால் அவரை கவுரவிக்க ஒரே ஒரு பரிசைத்தான் அளிக்க முடிந்தது. உண்மையான துயரத்துடன் அவர்களின் கண்களில் நிறைந்த கண்ணீர்தான் அது.

அவர்கள் புறப்படுவதற்கு முந்தைய நாள் மாலையில், அந்தத் தம்பதியரை கவுரவித்து, பழைய வைஸ்ராய் மாளிகையின் உணவருந்தும் மண்டபத்தில், ஜவஹர்லால் நேரு பிரிவுபச்சார விருந்தளித்தார். அவரது வாழ்க்கையில் மிகவும் நினைவிற் கொள்ளத்தக்க அந்த ஆண்டில் தம்முடன் நட்பு பிரியம் எனும் தளைகளால் பிணைக்கப்பட்ட அந்தத் தம்பதியருக்கு வாழ்த்துக்களை தெரிவித்து கண்ணாடிக் குவளைகளை உயர்த்தினார்.

'நீங்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் ஆறுதலையும், நம்பிக்கையையும், ஊக்கத்தையும் கொண்டு சென்றிருக்கிறீர்கள். எனவே இந்திய மக்கள் தங்களில் ஒருவராக உங்களைப் பார்ப்பதிலும் உங்களிடம் அன்பு செலுத்துவதிலும் ஆச்சர்யம் என்னவிருக்கிறது?' என்று அவர் எட்வினா மவுண்ட்பேட்டனிடம் கூறினார்.

'சார், உயர்ந்த பெருமையோடு நீங்கள் இங்கே வந்தீர்கள். இந்தியாவில் பலரின் பெருமை சிதைந்திருக்கிறது. மிகுந்த சிக்கலும் நெருக்கடியும் நிறைந்த காலத்தில் நீங்கள் இங்கே வாழ்ந்தீர்கள். ஆனால் உங்களின் புகழ் இன்னமும் சிதைய வில்லை. இதுவே குறிப்பிடத்தக்க வெற்றியாகும்' என்று அவரின் கணவரிடம் நேரு சொன்னார்.

நேருவின் எதிரியான படேல் தனது வார்த்தைகளையும் பாராட்டில் சேர்த்துக் கொண்டார். 'நட்பு மற்றும் நல்லெண்ணப்பாதையில் நீங்கள் சாதித்தது எதை வலியுறுத்துகிறது என்றால், உங்களுக்கு முன்பிருந்தவர்கள், யாரோடும் ஒட்டாமலும், மக்கள் கருத்தறிந்த தலைவர்களின் நம்பிக்கையைப் பெறத் தவறியதாலும் தோல்வியடைந்தார்கள் என்பதைத்தான்' என்று மவுண்ட்பேட்டனிடம் அவர் தெரிவித்தார்.

அடுத்த நாள் காலையில் மவுண்ட்பேட்டன் தம்பதியினர் லூட்டன்ஸ் மாளிகையிலிருந்து புறப்பட்டனர். பதினைந்து மாதங்களுக்கு முன் விழாக்கோலத்தோடு அந்த மாளிகை வாசலில் அவர்களைக் கொண்டு வந்து விட்ட தங்க முலாம் பூசிய வாகனத்தில் ஏறினர். அதில் பூட்டப்பட்டிருந்த ஆறு

குதிரைகளில் ஒன்று முரண்டு பிடித்தது. முன்னேறிச் செல்ல ஒரு குதிரை மறுத்ததைப் பார்த்த மக்கள் கூட்டத்திலிருந்து எழுந்த ஒரு குரல், புதுடில்லியின் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் குழப்பங்கள் நிறைந்ததுமான மாதங்களில் அவர்கள் ஆற்றிய பணிகளுக்கு உச்சகட்டப் புகழுரையாக இருந்தது: 'இது கடவுளிடமிருந்து வரும் ஒரு அறிகுறி. நீங்கள் இந்தியாவிலேயே தங்க வேண்டும்.'

முகமது அலி ஜின்னாவின் நுரையீரல்களில் பம்பாய் மருத்துவர் ஒருவர் கண்டறிந்து கூறிய கொடிய நோய் அவரது வாழ்க்கையை 1948 செப்டம்பரில் முடித்தது. அவரது பழைய அரசியல் எதிரி கொல்லப்பட்ட எட்டு மாதங்களுக்குப் பின்னும், அவரது மருத்துவ நண்பர் அவருக்கு மரணம் நேரும் என்று அறிவித்து சரியாக மூன்று மாதங்கள் கழித்தும் இது நடந்தது.

அனைத்து நடவடிக்கைகளிலும் தன் சொந்த பலத்தைக் காட்டுவது போலவே, அவர் மிகவும் நேசித்த பாகிஸ்தானுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதற்காக உடலில் தெம்புள்ளவரை ஜின்னா அரும்பாடுபட்டார். தனது உருக்கு போன்ற உறுதியால் பெற்ற மாபெரும் இஸ்லாமிய தேசத்தின் தற்காலிகத் தலைநகரும் அவரது பிறப்பிடமுமான கராச்சியில் 1948 செப்டம்பர் 11இல் அவர் இறந்தார். மரணத்திலும் கூட ஜின்னா தன்முனைப்பு என்ற குணத்திலிருந்து மாறவில்லை. அன்று இரவு பத்து மணியாவதற்குப் பத்து நிமிடம் இருக்கும் போது, இறந்து கொண்டிருக்கும் காயித் அருகே அவரின் டாக்டர் குனிந்து முணுமுணுத்தார். 'சார், நான் உங்களுக்கு ஒரு ஊசி போட்டி ருக்கிறேன். கடவுளின் கருணையால் நீங்கள் பிழைத்துக் கொள்வீர்கள்.'

அவரது கண்களில் இனி காண முடியாத கடைசியான ஒளியுடன் கூடிய சஞ்சலமற்ற பார்வையை டாக்டரின் முகத்தில் பதித்தார் ஜின்னா.

'இல்லை, நான் பிழைக்கமாட்டேன்' அவர் உறுதியுடன் பதிலளித்தார். அரை மணி நேரத்துக்குப் பின் அவர் இறந்தார்.

அவரது நாடு உதயமான பின், பல சிக்கலான காலகட்டத்திலும் உயிர் பிழைத்தது. ஆனால், அதற்கு ஆதாரமாக இருக்க வேண்டிய ஜனநாயக அமைப்பு முறை பிழைக்கவில்லை. 1958இல் ஃபீல்ட் மார்ஷல் அயூப்கான் நடத்திய ராணுவப்புரட்சி, தொடர்ச்சியாக நடந்த ஊழல் எனும் கொள்ளை நோய் மக்கள் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஒரு பத்தாண்டுக்குப் பின் சர்வாதிகாரமான ஆனால் திறமையான கானின் ஆட்சி மற்றொரு ராணுவப் புரட்சியால் தூக்கியெறியப்பட்டது.

பாகிஸ்தானின் இரண்டு பகுதிகளுக்கு இடையேயான ஒற்றுமை கால் நூற்றாண்டு காலம் கூட நீடிக்காது என்ற லூயி மவுண்ட்பேட்டனின் கணிப்பை உண்மையாக்குவது போல் 1971இல் பங்களாதேஷ் யுத்தம் நடந்தது. இந்தப் போரில் காயம்பட்ட அனுபவம் ஸுல் ஃபிகர் அலி புட்டோவின் தலைமையில் பாகிஸ்தானில் மீண்டும் மக்களாட்சியைக் கொண்டு வந்தது. ஆறு ஆண்டுக் காலம் நீடித்த புட்டோவின் அரசை 1977 கோடை காலத்தில், ஜெனரல் முகமது ஜியா-உல்-ஹக் இன்னொரு ராணுவப் புரட்சியை நடத்தி தூக்கியெறிந்தார். பின்னர் புட்டோ தூக்கிலிடப்பட்டார். உல்-ஹக் பாகிஸ்தானில் ராணுவ சட்டத்தை அமல்படுத்தினார். அமெரிக்காவோடும்

சவூதி அரேபியாவோடும் கூட்டுச் சேர்ந்து ஆஃப்கானிஸ்தானுடன் போர் தொடுத்தார். அதே சமயம், பாகிஸ்தானின் முக்கிய அமைப்புகளை இஸ்லாம் மயமாக்க முயற்சி செய்தார். குரானின் விதிமுறைகளைக் கொண்ட ஷரியத் சட்டத்தை நாட்டில் அமல்படுத்தவும் அவர் கொள்கையளவில் ஒப்புக் கொண்டார்.

1988 ஆகஸ்ட் 17 அன்று அரசு விமானம் வெடித்துச் சிதறி அதில் பயணம் செய்த ஜெனரல் உல் ஹக் மரணமடைந்தார். அவரது விமானத்தைச் சின்னாபின்னமாக்கிய வெடி விபத்துக்கான காரணம் கண்டு பிடிக்கப்படவே யில்லை. உலகின் முதலாவது இஸ்லாமிய நாட்டில், அதன் ஷியா மற்றும் சன்னி பிரிவுகளின் ஆதரவாளர்களுக்கிடையேயான மோதல்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இதில் விநோதம் என்னவென்றால், மொகலாய சாம்ராஜ்யத்தின் கடைசித் தலைவரும், பாகிஸ்தானின் நிறுவனருமான, முகமது அலி ஜின்னாவின் பெருமைமிகு கல்லறை அமைந்திருக்கும் கராச்சியின் குன்றுப் பகுதியில் தான் அவரின் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டு ரத்தம் சிந்துகிறார்கள்.

மகாத்மா காந்தி கணித்துக் கூறியது போல, பிரிவினை என்பது பல ஆண்டு காலத்திற்கு இந்தத் துணைக் கண்டத்தில் தொல்லைகள் விளைவிப்பதாகவே இருக்கும். ஒரே கருப்பையிலிருந்து பிறந்த இரண்டு நாடுகளும், 1965, 1971 என இரண்டு முறை ஒன்றையொன்று போர்க்களத்தில் சந்தித்துக் கொண்டன. இவற்றின் தொடர்ச்சியான மோதல்கள், இரு நாடுகளையுமே செலவின் சுமையால் தடுமாறச் செய்கின்றன. ஓரளவே உள்ள செல்வாதாரங்கள் வளர்ச்சிப் பணிகளுக்கில்லாமல் போர்த்தளவாடங்களுக்காகத் திருப்பி விடப்படுகின்றன.

லட்சக்கணக்கான அகதிகளை ஒருங்கிணைத்து அவர்கள் தங்குவதற்கும் புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்குமான நடவடிக்கைகளை இருநாடு களுமே வியப்புக்குரிய வகையில். ஒரு பத்தாண்டுகளுக்குள் முடித்து விட்டன. 1947 இலையுதிர் காலத்தில் ஏராளமான அப்பாவி மக்களின் ரத்தத்தால் நனைந் திருந்த பஞ்சாபின் வளமார்ந்த வயல்களில் மீண்டும் தங்கநிற கோதுமையும், கடுகுச்செடிகளும், வெள்ளைநிற பருத்திப் பயிர்களும், பச்சை நிற கரும்புத் தோட்டங்களும் நிறைந்து மகிழ்ச்சியான நாட்களைக் கொண்டு வந்தன. அதிக எண்ணிக்கையில் சீக்கிய மக்களைக் கொண்டுள்ள இந்த மாகாணம், இந்தியாவின் பசுமைப்புரட்சிக்கு மாபெரும் பங்களிப்பைச் செய்துள்ளது. எழுபதுகளின் மத்தியில் மரங்களும் இலைகளும் கருகியக் கடுமையான வறட்சி நிலவியபோதும், உலகில் பெட்ரோலிய பொருட்களுக்கு நெருக்கடி ஏற்பட்ட போதும், தலைமுறைகளின் கனவாக இருந்த செல்வத்தை இது இந்தியாவுக்குக் கொண்டு வந்தது. அதுதான் உணவு தானியங்களின் உற்பத்தியில் தன்னிறைவு.

வளம் திரும்பி வந்தபோதும், கோரமான குடிபெயர்வின் போதும் ஏற்பட்ட கசப்பான நினைவுகள் அழியவில்லை. சிரில் ராட் கிளிஃபின் பென்சில் உருவாக்கிய எல்லைக் கோடுகளின் இரு பகுதியிலும் ஆழமாகவும் கடுமையாகவும் வெறுப்பு உணர்வு நிலைபெற்றிருந்தது. தன்னைக் கடத்திய வனால் துரத்தப்பட்டு வந்த பெண்ணை விலைக்கு வாங்கிய துரதிருஷ்ட சாலியான பூட்டாசிங் என்ற சீக்கிய விவசாயி மோதலுக்குப் பின் லட்சக்

கணக்கான பஞ்சாபிகளுக்கு ஏற்பட்ட துயரத்துக்கு உதாரணமாய் இருந்தார். அதே போல் அவர்களைப் பிரித்து விட்ட வெறுப்பை வென்று மகிழ்ச்சியை அடைய முடியும் என்ற மனித குல நம்பிக்கையின் அடையாளமாகவும் அவர் விளங்கினார்.

1500 ரூபாய்க்கு வாங்கப்பட்ட ஸெனீபுக்கும் பூட்டா சிங்கிற்கும் திருமணமாகிப் பதினொரு மாதம் கழித்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குப் பெயர் வைப்பதற்கு, சீக்கிய முறைப்படி சீக்கியர்களின் புனித நூலான கிரந்த சாஹிபைத் திறந்து பக்கத்தைப் புரட்டினார். அந்தப் பக்கத்தின் உச்சியில் இருந்த எழுத்தைத் தொடக்கமாகக் கொண்டு அவரது மகளுக்குப் பெயர் சூட்டினார். அந்த எழுத்து 'த'. அவர் தெரிவு செய்த பெயர் தன்வீர் - வானத்தின் அதிசயம்.

சில ஆண்டுகளுக்குப் பின், இதனைத் தெரிந்து கொண்ட பூட்டாசிங்கின் மைத்துனர்கள். அவரின் சொத்துக்கள் தங்களுக்குக் கிடைக்காது என்பதை உணர்ந்தனர். எனவே குடிபெயர்வின் போது கடத்தப்பட்ட பெண்களின் இருப்பிடத்தைக் கண்டறிய முயற்சி செய்யும் அதிகாரிகளிடம் ஸெனீப் பற்றி தகவல் அளித்தனர். பூட்டாசிங்கிடமிருந்து ஸெனீப் பிரிக்கப்பட்டு முகாமில் தங்க வைக்கப்பட்டார். பின்னர் இவரின் குடும்பத்தினர் பாகிஸ்தானில் இருக்குமிடத்தைக் கண்டறிய முயற்சிகள் நடந்தன.

மூர்க்கத்தனமாக புது டில்லிக்கு விரைந்த பூட்டாசிங், ஒரு சீக்கியர் செய்யத் துணியாத காரியத்தை பெரிய மசூதியில் செய்து முடித்தார். தனது தலைமுடியை மழித்துக் கொண்டு முஸ்லீமாக மாறினார். ஜமீல் அகமது என்று பெயர் மாற்றிக் கொண்ட பூட்டாசிங் தாமாகவே பாகிஸ்தானின் ஹைகமிஷன் அலுவலகத்துக்குச் சென்று, தனது மனைவியைத் திருப்பித் தருமாறு கோரினார். இது பயனற்ற வேலையானது. கடத்தப்பட்ட பெண்களைப் பரிமாறிக் கொள்ளும் விஷயத்தில் விதிகளைக் கறாராக அமல் செய்வதென்று இரு நாடுகளும் ஒப்புக் கொண்டிருந்தன. அதாவது திருமணமாகி விட்டதோ இல்லையோ, பலவந்தமாகப் பிரிக்கப்பட்டவர்கள் மீண்டும் அவர்களின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

தனது மனைவி தங்க வைக்கப்பட்டிருந்த முகாமுக்கு பூட்டாசிங் ஆறு மாத காலத்திற்கு தினமும் சென்றார். அந்தப் பெண்ணின் பக்கத்தில் மவுனமாக அமர்ந்து இன்பக்கனவுகளை இழந்து விட்டதற்காக அழுதார். அந்தப் பெண்ணின் குடும்பத்தினர் கண்டறியப்பட்டனர் என்பதை அவர் தெரிந்து கொண்டார். அந்தத் தம்பதியர் கட்டித் தழுவி கண்ணீர் மல்க விடைபெற்றனர். அவரை ஒரு போதும் மறக்கப் போவதில்லை என்றும், முடிந்த அளவு சீக்கிரமாக அவரிடமும் குழந்தையிடமும் திரும்பி வருவதாகவும் ஸெனீப் சபதம் செய்தார்.

பாசம் நிறைந்த பூட்டாசிங் தான் ஒரு முஸ்லீம் என்பதால் பாகிஸ்தானுக்குக் குடி பெயர உரிமை கோரி மனுச் செய்தார். அவரது மனு தள்ளுபடியானது. விசாவுக்கு மனுச் செய்தார். அதுவும் நிராகரிக்கப்பட்டது. கடைசியாக, சுல்தானா என்று பெயர் மாற்றப்பட்ட மகளைத் தூக்கிக் கொண்டு சட்டவிரோதமாக எல்லையைக் கடந்து சென்றார். சிறுமியை லாகூரில் விட்டு விட்டு, ஸெனீபின் குடும்பம் தங்கியிருக்கும் கிராமத்துக்குச் சென்றார். அங்கே

அவர் கடுமையான அதிர்ச்சிக்குள்ளானார். இந்தியாவிலிருந்து ஒரு ட்ரக் மூலம் அந்தக் கிராமத்தில் கொண்டு வந்து விட்ட சில மணி நேரத்திலேயே அவரது மனைவிக்கு மறுமணம் நடந்திருந்தது. 'என் மனைவியை என்னிடம் கொடுங்கள்' என்று அந்த அப்பாவி மனிதர் அழுதார். ஸெனீபின் சகோதரர்களும் மைத்துனர்களும் அவரைக் கண்மூடித்தனமாக அடித்து நொறுக்கி சட்ட விரோதமாக உள்ளே புகுந்து விட்டதாக காவல்துறையிடம் ஒப்படைத்து விட்டனர்.

விசாரணைக்குக் கொண்டு வந்த போது, தாம் ஒரு முஸ்லீம் என்றும், தனது மனைவியைத் திருப்பித் தருமாறும் நீதிபதியிடம் பூட்டாசிங் கெஞ்சினார். தனது மனைவியைப் பார்க்க அனுமதித்தால் மட்டுமே, தன்னோடும் தன் மகளோடும் இந்தியாவுக்குத் திரும்ப வருகிறாயா என்று அவரிடம் கேட்க முடியும். அப்போதுதான் தனக்கும் திருப்தி ஏற்படும் என்று அவர் கூறினார்.

இந்தக் கோரிக்கையால் நெகிழ்ந்து போன நீதிபதி இதற்கு ஒப்புதல் தெரிவித்தார். ஒரு வாரத்துக்குப் பின் நீதிமன்றத்தின் ஒரு அறையில் இவர்களின் சந்திப்பு நிகழ்ந்தது. இந்த வழக்கு பற்றிய செய்தி பத்திரிகைகளில் வந்து பரபரப்பை ஏற்படுத்தியதால் அந்த அறை பார்வையாளர்களால் நிரம்பி வழிந்தது. உரிமையும் கோபமும் கொண்ட உறவினர்களின் பாதுகாப்புடன் அச்சம் நிறைந்த ஸெனீப் அந்த அறைக்குக் கொண்டு வரப்பட்டார். நீதிபதி பூட்டாசிங்கைச் சுட்டிக்காட்டினார்.

'இவரை உங்களுக்குத் தெரியுமா?' அவர் வினவினார்.

'தெரியும்' நடுக்கத்துடன் அந்தப் பெண் பதிலளித்தார் 'அவர் பூட்டாசிங். எனது முதல் கணவர்' என்று கூறிய பின், வயதான சீக்கியரின் பக்கத்தில் நின்ற தன் மகளையும் ஸெனீப் அடையாளம் காட்டினார்.

'இவர்களுடன் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல நீங்கள் விரும்புகிறீர்களா?' நீதிபதி கேட்டார்.

தனது வாழ்க்கையில் பெருமளவு மகிழ்ச்சியைக் கொண்டு வந்த அந்த இளம் பெண்ணை பூட்டாசிங் கெஞ்சும் கண்களுடன் திரும்பிப் பார்த்தார். ஸெனீபுக்குப் பின்னாலிருந்த மற்ற கண்கள் அவரின் நடுங்கும் உடலைப் பார்த்தன. பார்வையாளர் கூட்டத்திலிருந்தும் அவர் மீது எரிக்கும் பார்வை விழுந்தது. ரத்த சம்பந்தத்தை முறித்து விடும் முயற்சிக்கு எதிராக எச்சரிக்கை விடுவது போல் அவரது சமூகத்தின் ஆண்கள் முறைத்தனர். மிகக் கொடூரமான பதற்றம் அந்த அறையில் சூழ்ந்திருந்தது. கடைசி நேர நம்பிக்கையுடன், முகத்தில் சுருக்கம் விழுந்த பூட்டாசிங் ஸெனீபின் உதடுகளையே கவனித்தார். சாதகமான பதில் நிச்சயம் வரும் என்று காத்திருந்தார். பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்கு நீண்ட நேரம் அந்த அறையில் அமைதி நிலவியது.

ஸெனீப் தலையை அசைத்தார். 'இல்லை' என்று அவர் மெதுவாகக் கூறினார்.

வேதனை மிகுந்த பெருமூச்சு பூட்டாசிங்கிடம் வெளிப்பட்டது. அவருக்குப் பின்னால் இருந்த கம்பிகளின் மீது சாய்ந்து விட்டார். நினைவு திரும்பியபின் தனது கையில் மகளைப் பிடித்தபடி அறைக்குள் குறுக்கே நடந்து ஸெனீபை நெருங்கினார்.

'ஸெனீப், உனது மகளைப் பிரிந்து வாடும் துயரத்தை உனக்கு நான் அளிக்கமாட்டேன். இவளை உன்னுடனேயே விட்டு விடுகிறேன்' என்று அவர் சொன்னார். கத்தைப் பணத்தைப் பையிலிருந்து எடுத்து அவரது மனைவியிடம் அளித்தார். குழந்தையையும் கொடுத்தார். 'எனது வாழ்க்கை இப்போது பூர்த்தியடைந்து விட்டது' என்று அவர் சுருக்கமாகக் கூறினார்.

குழந்தையை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று ஸெனீபிடம் நீதிபதி கேட்டார். மீண்டும் அந்த அறையில் வேதனை மிகுந்த அமைதி நிலவியது. தங்களின் இருக்கைகளில் அமர்ந்தவாறே ஸெனீபின் ஆண் உறவினர்கள் கோபத்துடன் தலைகளை ஆட்டினார்கள். தங்களின் சிறிய சமூகத்தை சீக்கிய ரத்தம் அசுத்தமாக்கிவிடக் கூடாது என்று அவர்கள் விரும்பினார்கள்.

தனது மகளை ஸெனீப் ஏமாற்றத்துடன் பார்த்தார். இவளை ஏற்றுக் கொள்வது வாழ்நாள் முழுவதும் துயரத்தையே தரும். அச்சத்தால் அவர் உடல் நடுங்கியது. 'வேண்டாம்' அவர் ஏக்கத்துடன் பதிலளித்தார்.

பூட்டாசிங் கண்களில் கண்ணீர் பொங்கி வழிய நீண்ட நேரம் அங்கே நின்றிருந்தார். அழுது கொண்டிருக்கும் தன் மனைவியைப் பார்த்தார். ஒரு வேளை ஒளி வீசும் அந்த முகத்தை எப்போதைக்குமாக அவர் மனதில் பதியவைத்துக் கொள்ள முயற்சித்தார் போலும். பிறகு சோகத்தோடு தன் மகளை அழைத்துக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் அந்த அறையை விட்டு வெளியேறினார்.

ஏமாற்றமடைந்த அந்த மனிதர், முஸ்லீம் துறவியான தத்தா கூங் பக்ஷின் கல்லறை இருந்த இடத்தில் தங்கி இரவெல்லாம் அழுது கொண்டும் தொழுது கொண்டும் இருந்தார். அவரின் மகள் அங்கே ஒரு தூணுக்கு அருகே தூங்கினாள். பொழுது புலர்ந்ததும், அந்தச் சிறுமியோடு அருகே உள்ள கடைவீதிக்குச் சென்றார். முந்தைய நாள் மாலையில் தனது மனைவிக்கு வழங்க முன் வந்த ரூபாயைக் கொண்டு, அந்த சிறுமிக்குப் புதிய சட்டையையும், தங்கச் சரிகையால் பூ வேலைப்பாடு செய்யப்பட்ட ஒரு ஜோடி செருப்புகளையும் வாங்கினார். பின்னர் அந்த வயதான சீக்கியரும் அவரது மகளும் கைகளைக் கோர்த்துக் கொண்டு, அருகேயுள்ள ஷதாரா ரயில் நிலையத்துக்கு நடந்தார்கள். ரயிலுக்காகக் காத்திருந்த பூட்டாசிங், அம்மாவை மீண்டும் பார்க்க முடியாது என்பதைத் தன் மகளிடம் அழுதுகொண்டே விளக்கினார்.

தூரத்தில் ரயில் என்ஜினின் விசில் சத்தம் அலறியது. பூட்டாசிங் அன்போடு மகளை அழைத்து முத்தமிட்டார். பிளாட்பாரத்தின் விளிம்பை நோக்கி நடந்தார். அந்த என்ஜின் வேகமாக நிலையத்துக்குள் பாய்ந்து நுழைந்தது. தனது தந்தையின் கை தன்னைப் பற்றியிருப்பதாகக் கருதிக் கொண்ட சிறுமி ரயிலை நோக்கி நடந்தாள். விரைந்து வந்த என்ஜினின் பாதையில் பூட்டாசிங் பாய்ந்தார். மீண்டும் அந்தச் சிறுமி விசிலின் அலறல் சத்தத்தைக் கேட்டாள். ஆனால் இப்போது அந்தச் சத்தம் அவளின் அலறலோடு கலந்திருந்தது. அவள் என்ஜினுக்கு அடியில் இருட்டுக்குள் கிடந்தாள்.

பூட்டாசிங் அந்த இடத்திலேயே இறந்து போனார். அதிசயமாக அவரின் மகள் காயமின்றி தப்பினாள். வயதான சீக்கியரின் சிதைந்த உடலில் ரத்தம் தோய்ந்த ஒரு கடிதத்தைக் காவல்துறையினர் கண்டெடுத்தனர். அவரை நிராகரித்து விட்ட இளம் மனைவிக்கு எழுதிய இறுதிக் கடிதம் அது.

'அன்புள்ள ஸெனீப், திரண்டு நின்ற உறவினர்களின் குரலைத்தான் நீ கேட்டாய். ஆனால் அந்தக்குரல் ஒரு போதும் உண்மையானதல்ல. இப்போதும் உன்னோடு இருக்க வேண்டும் என்பதுதான் எனது கடைசி ஆசை. தயவு செய்து என்னை உனது கிராமத்தில் அடக்கம் செய். எனது கல்லறையில் ஒரு மலரை வைக்க அவ்வப்போது வா' அதில் எழுதியிருந்தது.

பூட்டாசிங்கின் தற்கொலை பாகிஸ்தானில் உணர்ச்சி அலைகளை எழுப்பியது. அவரின் இறுதி நிகழ்ச்சி தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாயிற்று. பஞ்சாப் பற்றி யெரிந்த அந்தப் பயங்கர நாட்களைப் போலவே அந்த முதிய சீக்கியரின் மரணமும் கூட ஒரு நல்ல அடையாளமானது. இருப்பினும் அந்தக் கிராமத்தின் மயானத்தில் பூட்டாசிங்கின் உடலை அடக்கம் செய்ய ஸெனீபின் குடும்பத்தினரும் கிராமவாசிகளும் மறுத்துவிட்டனர். ஸெனீபின் இரண்டாவது கணவர் தலைமையில் அந்தக் கிராமத்து ஆண்கள் கூடி, 1957 பிப்ரவரி 2இல் அவரது சவப்பெட்டி அங்கே நுழைய விடாமல் தடுத்தனர்.

கலவரம் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக, சவப்பெட்டியையும், பூட்டாசிங்கின் செயலால் நெகிழ்ந்த ஆயிரக்கணக்கான பாகிஸ்தானியர்களையும் லாகூருக்குத் திரும்புமாறு அதிகாரிகள் உத்தரவிட்டனர். அங்கே மலைபோல் குவிந்த மலர்களுக்கடியில் பூட்டாசிங்கின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

பூட்டாசிங்கிற்கு அளிக்கப்பட்ட மரியாதையால் ஆத்திரமடைந்த ஸெனீபின் குடும்பத்தினர் அவரது கல்லறையைத் தோண்டி உடைத்துச் சிதைப்பதற்காக ஒரு கும்பலை அனுப்பினர். நாகரிகமற்ற அவர்களின் செயலால் நகர மக்கள் கடும் கோபம் அடைந்தனர். மலைபோல் குவிந்த மலர்களுக்கடியில் மீண்டும் பூட்டாசிங் அடக்கம் செய்யப்பட்டார். மதம் மாறிய அந்த சீக்கியரின் கல்லறையைப் பாதுகாக்க இப்போது நூற்றுக்கணக்கான முஸ்லீம்கள் ஆர்வத்துடன் முன் வந்தனர் 1947இல் பஞ்சாபில் நடந்த சம்பவங்களின் கசப்புணர்வுகளைக் காலம் அழித்து அகற்றிவிடும் என்ற நம்பிக்கையைப் படம் பிடிப்பதாக இருந்தது அவர்களின் பெருந்தன்மையான செயல்.

இறந்து விட்ட மகாத்மாவுக்கு இந்தியாவின் நினைவுச் சின்னமாக கருப்புக் கல்லில் எளிய மேடை ஒன்று அமைக்கப்பட்டது. 1948 ஜனவரி 31இல் ராஜ்கட்டில் அவரது சிதை எரியூட்டப்பட்ட இடத்தில் அது அமைந்தது. அதற்கும் அருகே சுதந்திர இந்தியாவுக்கு மோகன்தாஸ் காந்தியின் வழிகாட்டு ஆணை வாசகங்கள் ஒரு கல்லில் இந்தியிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டிருந்தன.

'சுதந்திரமான வலுவான இந்தியாவை நான் காண விரும்புகிறேன். உலக நன்மைக்காகத் தூய்மையான தியாகத்தையும் உறுதியான எண்ணத்தையும் அது சுயமாகவே கொண்டிருக்க வேண்டும். தனிநபர் தூய்மையாக இருந்து குடும்பத்துக்காகத் தியாகம் செய்ய வேண்டும்; இது பின்னர் கிராமத்துக்காகவும், கிராமம் மாவட்டத்துக்காகவும், மாவட்டம் மாநிலத்துக்காகவும், மாநிலம் தேசத்துக்காகவும், தேசம் அனைத்து மக்களுக்காகவும் தியாகம் செய்வதாய் அமையும். இப் புவியுலகில் கடவுளின் ராஜ்யத்தை நான் விரும்புகிறேன்.'

இருப்பினும் காந்தியின் எண்ணம் ஈடேறாத கனவாகியது. தொழில் நுட்பம் மற்றும் தொழில்களின் வளர்ச்சியை அங்கீகரிக்கும் மயக்கத்தில் மற்றெவருக்கும்

சளைத்தவர்களாக அவரது நாட்டு மக்கள் இருக்கவில்லை. அவரது வாழ்க்கையின் கடைசி ஆண்டில் அவர் அஞ்சியது போலவே அவரது சீடர்கள் அவரின் அறிவுரையை நிராகரித்தனர் தனது ராட்டையின் மூலம் கட்டிக்காட்ட முயற்சித்த காந்தியின் பாதைக்குப் பதிலாக, இந்தியா இருபதாம் நூற்றாண்டின் பலவகை சக்திகளையும் வெற்றிகளையும் பெறுவதற்குரிய வலுவான தொழில்சார்ந்த சமூகம் என்ற பாதையையே தேர்ந்தெடுத்தது. மத்திய திட்டமிடல், வளர்ச்சி விகிதம், அடிப்படை தொழில் கட்டமைப்பு வசதிகள், மேலெழுந்து செல்வதற்கான தருணம், அதிகரிக்கும் எதிர்பார்ப்புகளுக்கேற்ற மாற்றம் என்பது போன்ற லோகாயத வளர்ச்சிக்கு உலகப் பொது மொழியாக இருந்த வார்த்தைகளே சுதந்திர இந்தியாவின் முதல் தலைமுறைத் தலைவர்களுக்கும் விருப்பமானவையாயின. தேசத்தின் பிரச்சனைக்குத் தீர்வு இங்கேதான் இருக்கிறது என்று காந்தி அறிவித்த அரைமிலியன் (ஐந்து லட்சம்) கிராமங்களின் நலன் இரண்டாம் பட்சமானது. காந்தியின் (அரசியல்) வாரிசுகள் விரும்பியவாறு சிறு நகரங்களும் பெரு நகரங்களும் மெல்ல மெல்ல பெரும் தொழிற்சாலைகளால் நிரப்பப்பட்டன. மக்கள் சேவை அமைப்பாக மாறிவிடும் என்று காந்தி நம்பிக்கை வைத்த காங்கிரஸ் கட்சி, இந்தியாவின் செல்வாக்கு மிக்க அரசியல் சக்தி என்ற வகையில் மிகவும் மரபு சார்ந்த, வசதி மிக்க பங்களிப்பைத் தொடர்ந்தது. சுதந்திரத்துக்குப் பிந்தைய முதல் மாதங்களில் அதனைத் தொற்றிய நோய் மெல்ல அதிகரித்து சில பத்தாண்டுகளில் அதற்கே இரையாகும் நிலை ஏற்பட்டது அதுதான் ஊழல். பல ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்து அராஜகத்தை ஈன்று ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான அந்தக் கட்சி 1996 இலையுதிர் காலத்தில் இந்திய நாடாளுமன்றத்துக்கு நடந்த தேசம் தழுவிய பொதுத் தேர்தலில் பெரும்பான்மை பலத்தை இழந்து, அதன் அரசியல் எதிரிகளிடம் அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எல்லாவற்றையும் விட மிக முரண்பாடான ஒரு செயல் 1974 வசந்த காலத்தில் ராஜஸ்தான் பாலைவனப்பகுதியில் நிகழ்ந்தது. எந்த நாட்டின் பெரும் புகழ் வாய்ந்த குடிமகன், இறப்பதற்கு ஒரு நாளைக்கு முன், அணு குண்டினை அழிக்க வேண்டுமென்று அமெரிக்காவை வலியுறுத்தினாரோ, எந்த நாடு தனது மக்கள் தொகை முழுவதற்கும், இப்போதும் உணவளிக்க இயலாத நிலையில் உள்ளதோ, அந்த நாடு, செல்வாதாரங்களை செலவழித்து அணுவெடிப்புச் சோதனையை நிகழ்த்தியது. அதன் எதிரொலி அஹிம்சைக் கொள்கையை முற்றிலும் நிராகரிப்பதாகத் தோன்றியது. அணுகுண்டு என்ற அராஜக அழிவு ஆயுதத்தை வைத்திருக்கும் சில குறிப்பிட்ட நாடுகளின் வட்டத்துக்குள் அஹிம்சையின் தேவதூதனை சொத்தாகக் கொண்டிருந்த நாடும் நுழைந்து விட்டது. இதன் பின் விளைவாக, எல்லைக்கு அப்பாலிருந்த பாகிஸ்தானில் (ஆட்சியில் இருந்த) ஸுல் ஃபிகர் அலி புட்டோ அந்நாட்டு மக்களிடம் சபதம் செய்தார். அதற்காக நாம் 'புல்லைத் தின்ன வேண்டியிருந்தாலும்' நாமும் அணு ஆயுதங்களைத் தயாரிப்போம் என்பது அவரின் சபதம். மிகப் பெரும் அளவில் நிதியை செலவிட்டு 1990களின் துவக்கத்தில் பாகிஸ்தானும் அணு ஆயுதங்களைப் பெற்றது. (1999ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் தேதி மீண்டும் ராஜஸ்தான் மாநிலம் பொக்ரானில் அணுவெடிப்புச் சோதனை செய்யப் பட்டதும் இதற்குப் போட்டியாக பாகிஸ்தான் அரசும் அணுவெடிப்புச் சோதனைகளை நடத்தியதும் இங்கே நினைவு கூரத்தக்கது - மொ-ர்)

மோகன்தாஸ் காந்தியின் சாத்தியமற்ற கனவுப் பாதையை இந்தியா பின்பற்றவில்லையென்றாலும் அவரின் அனைத்து லட்சியங்களையும் கைவிட்டு விடவில்லை. அவர் தனது நாட்டு மக்களிடம் வலியுறுத்திய எளிமையான கதராடை இன்னும் இந்திய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் சீருடையாக இருக்கிறது. இதனைப் பரிந்துரை செய்தவரின் அறிவுரையைக் கேட்காவிட்டாலும் அவரின் நினைவாக இதையாவது ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். மனிதர்களிலேயே நனி நாகரிகரான ஜவஹர்லால் நேரு, காந்தி அவருக்கு அளித்த எளிமையான ஆடைகளையே இறக்கும் வரை அணிந்தார் அரசுத் தலைவர்கள் நடைமுறையில் எளிமையாகவும், கட்டுப்பாடாகவும் இருந்து முன்னுதாரணமாக விளங்க வேண்டும் என்ற காந்தியின் அறிவுரைக்கேற்ப, அவர் தலைநகரில் பயணம் செய்த போது ரோல்ஸ் ராய்ஸ், மெர்சிடஸ்பென்ஸ், கடிலாக் போன்ற கார்களைப் பயன்படுத்தாமல் எளிமையான இந்தியக் காரையே பயன்படுத்தினார். அவரது காரில் இருந்த ஒரே பாதுகாவலர் அதன் ஓட்டுநர் மட்டும்தான்.

பிரிட்டிஷ் ஆட்சியால் உருவாக்கப்பட்ட ஒற்றுமை, இந்தியாவின் பல மொழி, கலாச்சாரங்கள், மதங்கள், மக்கள் பிரிவுகள் காரணமாக சிதைந்து போகும் என்று ஆங்கிலேயர்களில் சிலர் அவநம்பிக்கையோடு கூறியபோதும், காந்தியின் இந்தியா, 1947 ஆகஸ்ட் 15இல் இருந்தது போலவே ஒற்றுமையுடன் உள்ளது. பஞ்சாபின் சீக்கியப் பிரிவினைவாதிகள், அசாமின் அதிருப்தியாளர்கள், இவர்களுக்கும் மேலாக தொடர்ந்து மோதலில் ஈடுபடும் இந்து மற்றும் முஸ்லீம் மக்களைச் சேர்ந்த தீவிரவாதிகள் ஆகியோரால் அதன் ஒற்றுமைக்கு சோதனை ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் அது உதயமான போது உறுதியேற்ற ஒற்றுமையில் விசுவாசத்துடனேயே நீடிக்கிறது. சுதந்திரமடைந்த அரை நூற்றாண்டு காலத்தில் அதன் மக்கள் தொகை அரை பில்லியன் (ஐம்பது கோடி) அளவுக்குப் பெருகி விட்டது. இருந்தாலும், காலனி ஆட்சியில் அடுத்தடுத்து பஞ்சங்களால் பாதிக்கப்பட்ட இந்தியா இப்போது உணவு தானியங்களை ஏற்றுமதி செய்யும் நாடாகி விட்டது. ஆசியாவிலேயே மாபெரும் தொழில் துறை சக்தியாக அது மாறியிருக்கிறது. அதன் சாதனைகளில் இந்தியர்கள் பெருமை கொள்வது நியாயமானதே.

வயதான மனிதரின் பிதற்றல்கள் என்று ஒரு காலத்தில் கருதப்பட்ட காந்தியின் கொள்கைகள் பல, அவர் மறைந்து ஐம்பதாண்டுகளுக்குப் பின், உலக மக்கள் தொகை அதிகரிப்பாலும் வளங்கள் சுருங்குவதாலும், பொருத்தமானவையாகத் தோன்றுகின்றன. காகிதங்களை வீணாக்காமல் பழைய உறைகளை வெட்டி குறிப்பேடுகளைத் தயாரித்தல், ஒருவரின் உடலுக்கு சக்தி அளிப்பதற்குத் தேவையான உணவை மட்டும் உண்ணுதல், தேவையில்லாத தொழில்துறை பொருள்களைக் கணக்கின்றி உற்பத்திச் செய்வதைத் தவிர்த்தல், நாம் சுவாசிக்கும் காற்றையும் பருகும் தண்ணீரையும் பாதுகாத்தல் போன்றவை, புத்தாயிரமாவது ஆண்டுக்கு மாறிச் செல்லும் உலகத்துக்கு விசித்திரமான யோசனைகளாக இருக்கவில்லை; உறிஞ்சப்படும் புவிக்கோளில் நிச்சயமற்ற எதிர்காலத்தை சந்திக்கும் மனிதர்களுக்குத் தேவையான அறிவுரையாகவே இருந்தன.

லட்சக்கணக்கான பஞ்சைகளை சுதந்திரத்துக்கு வழிநடத்திய, மூங்கில் கொம்பூன்றிய, அந்த மாநிறமான, மெலிந்த உருவத்தின் நினைவாக இந்தியா ஒரு

விஷயத்தில் விசுவாசமாக இருக்கிறது. இந்தியா சுதந்திர நாடாகப் பிறந்தது; சுதந்திர நாடாகவே இருக்கிறது. போராட்டங்களோடும் வேதனைகளோடும் ஆண்டுகள் பல கடந்தாலும், கடுமையாக மக்கள் தொகை அதிகரித்து நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டாலும், 1947 ஆகஸ்ட் 14 நள்ளிரவில் நிகழ்ந்த மந்திர சக்தி இந்தியாவில் நிலை கொண்டுள்ளது. உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட ஜனநாயக நாடாக அது திகழ்கிறது. பழைய காலனியாட்சிகளிடம் கட்டுண்டிருந்த அடிமைச் சங்கிலிகளை உடைத்தெறிந்த பல நாடுகளில் ஏறத்தாழ இந்தியா மட்டும்தான் சுதந்திரமான சமூகத்தைக் கொண்டுள்ளது. மக்களின் உரிமைகளுக்கு அது மதிப்பளிக்கிறது. கவுரவத்தைக் காக்கிறது. அதன் குடிமக்கள் கருத்து வேறுபடவும், எதிர்ப்பு தெரிவிக்கவும், சுதந்திரமாகக் கருத்துக் கூறவும், வெளிப்படையாகப் பத்திரிகைகளில் அச்சிடவும், நேர்மையான, ரகசிய வாக்கெடுப்பு முறையில் சுதந்திரமான தேர்தல் மூலம் அரசைத் தேர்ந்தெடுக்கவும் உரிமை பெற்றிருக்கிறார்கள். அண்டை நாடான சீனாவின் உதாரணத்தைப் பின்பற்றத் தூண்டும் அனைத்து எண்ணங்களையும் அது எதிர்த்து வந்துள்ளது. முன்னேற்றத்தை விலைக்கு வாங்க லட்சக்கணக்கான மக்களை இயக்க இயங்கும் ரோபோக்களாக மாற்றவோ, ராணுவ சர்வாதிகாரத்துக்கு அஞ்சி அடங்கி ஒரு பக்கத்தில் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் மக்களைக் கைத்தட்டச் செய்து மறுபக்கத்தில் சித்திரவதைக் கூடங்களை மறைத்து வைக்கும் எண்ணற்ற உதாரணங்களை உருவாக்கவோ இந்தியா முற்படவில்லை.

இந்தியாவின் சாதனை எல்லையற்றது. உலகின் மதிப்புக்கு உரியது. அதற்கும் மேலாக அதன் சுதந்திரத்துக்கு வழிகாட்டிய மாபெரும் தலைவருக்கு மதிப்பளிக்கிறது. அதனை விட்டுக் கொடுக்காமல் பாதுகாக்கிறது. 1975 ஜூனில் பிரதமர் இந்திராகாந்தி அதிரடியாக நாட்டின் மீது திணித்த அவசர நிலைப் பிரகடனத்தால் அந்தச் சாதனை சிறிது காலம் கேள்விக்குறியானது. ஆனாலும், இந்திராகாந்தி படுகொலை செய்யப்படுவதற்கு முன்பே, இந்தியா ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி விட்டது.

மகாத்மா காந்தியின் அஸ்தி கரைக்கப்பட்ட பதினைந்து நாட்களுக்குப் பின் கேட் வே ஆஃப் இந்தியா எனும் நுழைவாயில் நிழலில் நடந்த ஒரு சடங்கு நிகழ்ச்சியோடு அவர் துவக்கி வைத்த சகாப்தம் முடிவுக்கு வந்தது. 1915 ஜனவரியில் இந்த நுழைவாயில் வளைவு வழியாகத்தான் ஹிந்த் ஸ்வராஜ் (இந்திய சுயராஜ்யம் - மொ-ர்) என்ற அவரது சஞ்சிகையைக் கையில் எடுத்துக் கொண்டு தென் ஆப்பிரிக்காவிலிருந்து தாயகத்துக்கு வந்தார். சீக்கியர்களும் கூர்க்காக் களும் அணிவகுப்பு மரியாதை செலுத்த, இந்தியக் கப்பற்படையைச் சேர்ந்த பேண்டு வாத்தியக் குழுவின் இசை ஒலிக்க, பிரிட்டிஷ் ராணுவத்தின் கடைசிப் பிரிவினர் சுதந்திர இந்திய மண்ணிலிருந்து வெளியேறிச் சென்றார்கள். சோமர்செட் லைட் இன்ஃபேண்டரி (Somerset Light Infantry) என்ற காலாட் படை வீரர்கள் உயர்ந்து நின்ற நுழைவாயிலின் கீழே நடந்து சென்று, கான்கிரீட் தளத்தை அடைந்தனர்.

வாகை சூடலுக்குரிய அந்த வளைவின் வழியே அவர்களின் உருவங்கள் மறைந்த போது, அவர்கள் செல்வதைப் பார்த்துக் கொண்டு பம்பாயின்

கடலோரத்தில் கூட்டமாக நின்று கொண்டிருந்த இந்தியர்கள் இசைப் பொருத்தமில்லாத ஒலியை எழுப்பினார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக சிலரிடமிருந்து தான் முதலில் இந்தக் குரல் எழுந்தது. பின்னர் மற்றவர்கள் தொடர இறுதியில் ஆயிரக்கணக்கானவர்களிடமிருந்து அது எழுந்தது. துயரமாக ஒலிக்கும் 'அவுல்ட் லேங் சைனே (Auld Lang Syne) எனும் பாடல்தான் அது. (இனிய பழைய நாட்கள்; நட்புறவு நீடூழி வாழ்க எனும் பொருளுடையது இந்தப் பாடல் - மொ-ர்) பிரிட்டிஷாரின் லத்திகள் தாக்கியத் தழும்புகளைத் தலையில் கொண்ட சிலர் உட்பட காங்கிரஸ் தலைவர்களும், புடைவை உடுத்தி அழுது கொண்டிருந்த பெண்களும், விடலைப்பருவ மாணவர்களும், பல்போன கிழ வயது பிச்சைக்காரர்களும், அவ்வளவு ஏன், மிகவும் கட்டுப்பட்டாக வரிசையில் அட்டென்ஷனில் நின்று அணிவகுப்பு மரியாதை செலுத்தும் இந்தியப் படைவீரர்களும் கூட, அந்தச் சமயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து குழு பாடலில் சேர்ந்து கொண்டார்கள். கடலில் காத்திருந்த அலங்கரிக்கப்பட்ட கப்பற்படைக் கப்பலில், சோமர்செட் படைப்பிரிவின் கடைசி வீரர் அடியெடுத்து வைத்த போது, தன்னெழுச்சியாக எழுந்த பாடலின் ஒலி இந்திய நுழைவாயிலுக்கு அப்பாலுள்ள எஸ்பிளனேட் (கோட்டை மதிலுக்கும் நகருக்கும் இடைப்பட்ட மொ-ர்) பகுதியிலும் பரவியது. கடல் வழியே பயணம் புறப்படும் ஆங்கிலேயருக்கு அது கிளர்ச்சியூட்டும் துதிப்பாடலாக அமைந்தது.

வெகு காலத்துக்கு முன் ஒரு குளிர்காலக் காலைவேளையில் அந்தக் கான்கிரீட் தளத்தின் மேல் நடந்த சிறிய உருவத்தை நினைவுகூர்வதாகவும் அந்தப் பாடல் அமைந்தது. இந்திய நுழைவாயிலில் ஒரு சகாப்தம் முடிந்ததென்றால் இன்னொரு சகாப்தம் துவங்கியது. உலகின் முக்கால் பகுதி மக்களைக் காலனியாதிக்கத்திலிருந்து விடுவிக்க காந்தி துவக்கி வைத்த சகாப்தம் அது. மன்னர்கள் மற்றும் தளபதிகள் என்ற இனத்தின் கடைசித் தொகுதி விடை பெற்றுச் செல்கிறது. தாயகத்துக்குத் திரும்பும் அவர்களின் பயணத்தைத் துரிதப்படுத்திய புதிய கடற்காற்று மாற்றங்களுக்கான காற்றின் முன்னோடியாக இருந்தது. அடுத்த அரை நூற்றாண்டில் இது உலக வரைபடத்தையும் படைபலத்தையும் மாற்றியமைக்கும். மகாத்மா காந்தியாலும் அவரின் போராட்டத்தாலும் இந்தியாவில் என்ன நடந்ததோ அது உலகத்தின் பல இடங்களிலும் நடக்கும். 1948 பிப்ரவரி 28இல் பம்பாயில் நடந்தது போன்ற சடங்கு நிகழ்ச்சியும் நடக்கும்.

இருப்பினும் ஒரு காலத்தில் சாம்ராஜ்யத்தின் வெற்றிக்காக அமைக்கப்பட்ட அந்த வளைவின் நிழலில் அன்று காலையில் வெளிப்பட்டது போன்ற நல்லெண்ணத்தைக் குறிப்பதாக அவற்றில் பல அமையா. இது இந்தியாவின் கொலையுண்ட மகாத்மாவுக்கு சூட்டப்பட்ட இறுதிப் புகழாரம். அவரது போதனையின் கடினமான தர்க்க நியாயத்தை உள்வாங்கிக் கொண்ட இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இது சிறப்புச் சேர்ப்பதாகும்.

# அவர்கள் என்னவானார்கள்?

## வல்லபபாய் படேல்

*காந்தியின் படுகொலைக்குப் பிந்தைய வாரங்களில் மறைமுகமாகக் குற்றம் சாட்டி மேற்கொள்ளப்பட்ட கிசுகிசுப்புப் பிரச்சாரத்தால் படேல் மிகவும் வேதனைப்பட்டார். மகாத்மாவைக் கொன்றவர்களை, ஜனவரி 20க்கும் அவர் கொல்லப்பட்ட நாளுக்கும் இடையே காவல்துறையினர் கைது செய்யத் தவறியதற்கு உள்துறை அமைச்சர் என்ற முறையில் அவரும் பொறுப் பாக்கப்பட்டார். காந்தியுடன் அவருக்கிருந்த சொந்தக் கருத்து வேறுபாடுகள் காரணமாக காந்தியின் கொலை பற்றி அக்கறை காட்டவில்லை என்ற உறுதி செய்யப்படாத குற்றச்சாட்டை அவரின் அரசியல் எதிரிகள் சிலர் பரப்பினர். அந்தக் கொலை ஏற்படுத்திய உண்மையான துயரமும் தன்னைப் பற்றி செய்யப்பட்ட தவறான பிரச்சாரமும் 1948 மார்ச் மாதத்தில் அவருக்குக் கடுமையான நெஞ்சுவலியை ஏற்படுத்தியது. இதிலிருந்து குணமடைந்த படேல், துணைப் பிரதமர், உள்துறை அமைச்சர் என்ற பதவிகளை மீண்டும் ஏற்றார். மவுண்ட்பேட்டன் பிரபு சென்ற பிறகு, ஹைதராபாத்துக்கு எதிராகக் 'காவல் துறை நடவடிக்கையை'த் திட்டமிட்டு நடத்தினார். பழைய மன்னராட்சிப் பகுதிகளில் ஒன்றான இது கட்டாயப்படுத்தி கடைசியாக இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. அவரது பழைய எதிரி நேருவுடனான மோதல், காந்தியின் படுகொலைக்குப் பிந்தைய மாதங்களில் தற்காலிகமாக முடங்கியிருந்தாலும் மீண்டும் 1950இன் துவக்கத்தில் வெளிப்பட்டது. இருப்பினும் 1950 டிசம்பர் 15இல் மாரடைப்பால் படேலுக்கு ஏற்பட்ட மரணம், இரு மனிதர்களும் வெளிப்படையாகப் பிரிந்து செல்வதைத் தவிர்த்தது.*

## ஜவஹர்லால் நேரு

*1964 மே 27 அன்று புது டில்லியில் அவர் மரணமடையும் வரை 1947 ஆகஸ்ட் 15 அன்று ஏற்றுக் கொண்ட பதவியிலேயே நேரு இருந்தார். சர்வதேச அளவில் மதிக்கத்தக்க அரசியல் தலைவராக அவர் வளர்ந்தார். மூன்றாம் உலகம் என்று அறியப்பட்ட நாடுகளில் நன்கு அறிமுகமானத் தலைவர்களில் ஒருவரானார். அணி சேராக் கொள்கையை உருவாக்குவதில் முதன்மையானவராக விளங்கினார். ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் காலனியாதிக்கப் பிடியிலிருந்து விடுபட்ட ஆஃப்ரோ - ஆசிய நாடுகளில் பலவும் இதற்கு ஆதரவு தெரிவித்தன. ஐரோப்பாவின் தலைநகரங்கள், யு.எஸ்.ஏ. (அமெரிக்க ஐக்கிய நாடுகள்), யு.எஸ், எஸ்ஆர் (சோவியத் சோஷலிசக் குடியரசுகள்), சீனா உட்பட உலகம் முழுவதும் அவர் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார். உள்நாட்டில், தொழில் மற்றும் சமூக வளர்ச்சிக்கும் இந்தியாவின் ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்தவும் உருவாக்கப்பட்ட மூன்று ஐந்தாண்டு திட்டங்களுக்கும் போர்ச்சுகலின் ஆதிக்கத்திலிருந்த கோவாவை வலுக்கட்டாயமாக இந்தியக் குடியரசில் இணைக்கும் நடவடிக்கைக்கும் அவர் தலைமை தாங்கினார்.*

*அவரது மயக்கத்தைத் தெளிய வைத்த மிகவும் கசப்பான அனுபவம் 1962 அக்டோபரில் ஏற்பட்டது. அவரது நாட்டின் எல்லையில், காஷ்மீருக்கு மேலே உள்ள லடாக் பகுதியிலும், திபெத்துக்கும் அசாமுக்கும் இடையே உள்ள வடகிழக்கு எல்லைப் பகுதியிலும், பெருமளவில் நடந்த சீன ஆக்ரமிப்பு தான் அது. கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவரது வெளியுறவுக் கொள்கையில் திருப்புமுனையாக அமைந்த, ஒரு நட்பு நாட்டின் செயலால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து முழுவதுமாக நேரு விடுபடவேயில்லை: அப்போதிலிருந்து அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டது. 1964 ஜனவரியில் அவர் மிகவும் நோய் வாய்ப்பட்டார். பின்னர் குணமடைந்தார்; ஆனாலும் நான்கு மாதங்களுக்குப் பின் அவர் மரணமடைந்தார். அவரது உடல் தகன நிகழ்ச்சியில் கலந்து கொள்ள ஓடோடி புது டில்லிக்கு வந்தவர்களில் ஒருவர் லூயி மவுண்ட்பேட்டன். தேசத் தலைவர்களில் பேச்சாற்றல் மிக்க அவர் விடைபெற்ற போதும் நாட்டு மக்களுக்கு வார்த்தைகளையே பரிசாக அளித்தார். கடைசியாக அவர் எழுதிய மரண சாசனத்தின் வாசகங்கள் இப்போது நேரு நினைவு நூலகத்திற்கு வெளியே கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. புதுடில்லியில் இந்திய ராணுவத்தின் முன்னாள் தலைமைத் தளபதி இல்லம் இருந்த இடத்தில் தான் இந்த நூலகம் உள்ளது. இந்திய விவசாயிகள் உழைக்கும் வயல் வெளிகளின் மீது தனது அஸ்தியை விமானத்தின் மூலம் தூவ வேண்டும் என்று அவர் உயிலில் எழுதி வைத்திருந்தார். இதனால் இந்திய மண்ணோடு அஸ்தி கலந்து பிரிக்க முடியாத அதன் பகுதியாகி விடும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.*

## *மவுண்ட்பேட்டன் தம்பதியர்*

*1948 அக்டோபரில் ரியர் அட்மிரல் லூயி மவுண்ட்பேட்டன் மீண்டும் கப்பல்படை சேவையில் தீவிரமாக ஈடுபட்டார். மால்டாவில் உள்ள முதல் கப்பற்படை பிரிவின் தளபதியாக அவர் பொறுப்பேற்றார். இந்திய வைஸ்ராயாக நியமிக்கப்பட்ட போது இந்தப் பொறுப்புதான் அவருக்குத் தரப்படவிருந்தது. வைஸ்ராயாக இருந்த போது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் பேரரசருக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இருந்தவர், மால்டாவின் சமூக ஒழுங்குப்படி இப்போது பதின்மூன்றாவது இடத்தில் இருந்தார்.*

*கப்பற்படையில் வேகவேகமாக முன்னேறி, 1955 ஏப்ரல் 18இல் அவரது வாழ்நாள் கனவு நனவானது. அவர் முதலாவது கடற்படை பிரபு* (First Sea Lord) *ஆனார். இந்தப் பதவியிலிருந்துதான் 1914இல் குறுகிய பார்வை கொண்ட சில பொது மக்களின் கூச்சல் காரணமாக அவரது தந்தை வெளியேற்றப்பட்டார். இவரது தலைமையில் பிரிட்டனின் கப்பற்படை நவீனமயமானது. அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் இணைக்கப்பட்டது. ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கும் சாதனங்களும் இடம் பெற்றன. 1958இல் பாதுகாப்புப் படைகளின் தளபதி என்ற முறையில் அவரது அதிகாரபூர்வ கடைசி பணிகளைத் துவக்கினார். பிரிட்டிஷ் ஆயுதப்படைகளை சீரமைப்புச் செய்தார். அவற்றை ஒருங்கிணைத்து ஐக்கிய பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்கினார்.*

*1965இல் மவுண்ட்பேட்டன் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ரோம்சே எல்லையில் உள்ள அவரின் பிராட்லேண்ட்ஸ் எஸ்டேட், லண்டனில் உள்ள ஒரு வீடு, அயர்லாந்தில் உள்ள அரண்மனை என அவரது நேரத்தைப் பகிர்ந்து*

செலவிட்டார். 200க்கும் அதிகமான அமைப்புகளில் அவர் தீவிர உறுப்பினராக இருந்தார். கப்பற்படை கட்டுமான கல்விக்கழகம், எலக்ட்ரிகல் என்ஜினியர்கள் கழகம், லண்டன் விலங்கியல் சங்கம், மரபு வரலாறு ஆய்வு சங்கம், மால்டா நாட்டினர் நீச்சல் பயிற்சிக் குழு, ஹாம்ப்ஷைர் கிரிக்கெட் கிளப் எனப் பல தரப்பட்ட அமைப்புகளில் அவர் அங்கம் வகித்தார். சுமார் நாற்பத்திரண்டு சங்கங்களில் அவர் தலைவராக இருந்தார். அவரது வாழ்க்கையின் கடைசி ஆண்டுகளில் அவர் தீவிர கவனம் செலுத்தியது ஐக்கிய உலகக் கல்லூரி விஷயத்தில்தான். இதற்கு ஆதரவாளராக இருந்ததோடு நிதி திரட்டவும் செய்தார்.

அவரது ஓய்வுக்காலம் முழுவதும் இந்தியா மீதும் இந்தியா சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களிலும் நெருக்கமாகவும் ஆர்வத்துடனும் பங்கேற்றார். 1969இல் காந்தி நூற்றாண்டு விழாக்குழுவின் தலைவராக இருந்தார். அந்த ஆண்டு ஜனவரி 30இல் செயின்ட் பால் திருச்சபையின் நினைவு பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார். தனது பழைய நண்பரின் நினைவைப் போற்றும் வகையில் ஜவஹர்லால் நேரு நினைவு நிதியை உருவாக்கி நிதி திரட்டி நிர்வகிக்கவும் செய்தார். இதன் மூலம் இந்தியக் கல்வியாளர்கள் பிரிட்டனில் ஆய்வு மேற்கொண்டனர்.

பெரும்பாலான நாட்களில் இந்தியரின் கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை தபால்காரர் அவருக்கு அளித்துச் சென்றார். மகாராஜாக்கள், கவர்னர்கள், வங்கியாளர்கள் அவருக்கு எழுதும் கடிதங்கள் இங்கிலாந்தில் உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்யக் கோருபவையாக இருக்கும். வயதானவர்கள், ஓய்வூதிய நிதி பெறுவதில் இருக்கும் சிக்கல்களைத் தீர்க்க உதவி நாடியிருப்பார்கள். இந்திய ராணுவத்தின் மூத்த வீரர்களோ பிரிட்டனுக்கு வருவதற்கான விதிமுறைகளில் உள்ள பிரச்சனைகளைத் தீர்க்கக் கோரியிருப்பார்கள். வெவ்வேறு வகையினதாய், நெஞ்சைத் தொடுவதாய், முடிவின்றி வந்து கொண்டே இருந்த கடிதங்கள் வித்தியாசமான ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்டின. இந்தியாவின் கடைசி வைஸ்ராய், ஒரு விதத்தில், இந்தியாவின் முதல் ஓம்புட்ஸ்மேனாக (Ombudsman குறைகளை விசாரித்துத் தீர்த்து வைப்பவராக மொ-ர்) மாறியிருந்தார்.

1979 ஆகஸ்டில், வருடாந்தர விடுமுறையைக் குடும்பத்துடன் கழிப்பதற்காக அயர்லாந்தில் உள்ள அரண்மனைக்கு மவுண்ட்பேட்டன் சென்றார். சரியாக இரண்டு வாரங்களுக்குப் பின், அவரது மோட்டார் படகில் காலை நேர சவாரிக்காகக் கடலில் சென்ற போது ஐ.ஆர்.ஏயின் (IRA - அயர்லாந்து புரட்சி ராணுவம் - மொ-ர்) குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.

எட்வினா மவுண்ட்பேட்டன் செஞ்சிலுவை மற்றும் செயிட் ஜான் ஆம்புலன்ஸ் பிரிகேட் அமைப்புகளுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு தொடர்ந்து பணி செய்தார். அவர் உடல் மிகவும் இளைத்து சோர்ந்து போய் விட்டதாக டாக்டர்கள் எச்சரித்ததையும் ஏற்காமல் உடலில் எஞ்சியிருந்த சக்தியைக் கொண்டு அவர் பணி செய்தார். அவரது இளைய மகள் பமீலாவின் திருமணம் நடந்து நான்கு நாட்களுக்குப் பின், 1960 பிப்ரவரியில், செயின்ட் ஜான் அமைப்பின் கண்காணிப்பாளர் என்ற முறையில் தூரக்கிழக்கு நாடுகளுக்கு அவர் பயணமானார். உடல் நிலை மோசமடைந்த போதும், திட்டமிட்ட பயணத்தை ரத்து செய்ய ஒப்புக் கொள்ளாத அவர் 1960 பிப்ரவரி 21இல்

போர்னியோவில் அவரை கவுரவித்து அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின் மரணமடைந்தார். அவரது மரணச் செய்தி இந்திய நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட போது, அதன் உறுப்பினர்கள் எழுந்து நின்று அவரது நினைவுக்கு ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினார்கள்.

அவர் மரணமடைந்து நான்கு நாட்கள் கழித்து, அவரது உயிலில் கோரியிருந்தபடி, ஸ்பிட் ஹெட் (Spit head) என்ற கடற்கரைக்கு அப்பால் கடலுக்குள் இறக்கப்பட்டார். பிரிட்டிஷ் போர்க்கப்பலான வேக்ஃபுல் (Wake ful) பாதுகாப்புடன், அவரது உடலை இறக்கும் இடத்துக்குக் கொண்டு சென்றது. இந்திய போர்க்கப்பலான திரிசூல். ஐரோப்பிய சீமாட்டிகளில் கடைசியான வருக்கு அவரால் நேசிக்கப்பட்ட நாடு வழங்கிய பிரிவுபசாரமாகும் இது.

## மகாராஜாக்கள்

இந்தியாவின் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினரை ஒரு காலத்தில் ஆட்சி செய்து புகழின் உச்சியிலிருந்த மன்னர்கள், மொகலாயர்கள் போலவே முற்றிலும் மங்கிப் போனார்கள். அவர்களின் அரண்மனைகள் அருங்காட்சியகங்களாக வும், பள்ளிகளாகவும், உணவு விடுதிகளாகவும் மாறின. அல்லது இடிந்து சிதிலமாயின. இவர்களில் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றனர்; சிலர் வியாபாரத்தில் ஈடுபட்டனர். அல்லது அரசுப் பணியில் சேர்ந்தனர். மேலும் சிலர் தீவிர அரசியலில் புகுந்தனர். இந்திராகாந்தி அரசால் கொண்டு வரப்பட்ட அரசியல் சட்டத்திருத்தத்தை மூன்றாண்டுகாலப் போராட்டத்துக்குப் பின், 1973 வசந்த காலத்தில் இந்திய உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. சமாதானமான முறையில் இந்திய ஒன்றியத்துடன் இணைந்து கொள்வதற்கு 1947இல் மன்னர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை ரத்து செய்வதே அந்தத் திருத்தம். இந்தியச் சூழலிலிருந்து தங்க சிம்மாசனங்கள் நிரந்தரமாக மறைந்து விட்டன.

# நன்றியுரை

*எங்களின் முந்தையப் புத்தகங்களான, இஸ் பாரிஸ் பர்னிங்? (பாரிஸ் எரிந்து கொண்டிருக்கிறதா?) ஓ ஜெரூசலம் ஆகியவற்றைப் போலவே நள்ளிரவில் சுதந்திரம் என்ற இந்த நூலும் ஏறத்தாழ மூன்றாண்டு கால முயற்சி மற்றும் பொறுமையான ஆய்வின் விளைவாகும். இதற்கான எங்களின் பணி மிகவும் சிக்கலானதாக இருந்தது. பல நேரங்களில் அது உடல் ரீதியாகவும் இருந்தது. ஆனால் ஒரு போதும் சோர்ந்து விடவில்லை. எங்கள் முயற்சியின் பயனாக, இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள், ஆங்கிலேயர்களில் ஆண், பெண் என ஏறத்தாழ 500 பேருடன் தொடர்பு கொண்டோம். கைபர் கணவாயிலிருந்து சென்னையில் உள்ள செயின்ட் ஜார்ஜ்கோட்டை வரையிலும், கல்கத்தாவின் குடிசைப்பகுதிகளிலிருந்து சஸ்ஸெக்ஸ், கென்ட் ஆகியவற்றின் குக்கிராமங்கள் வரையிலும் என சுமார் 6000 மைல் தூரம் பயணம் செய்தோம்.*

*தவிர்க்க முடியாத வகையில், இந்தப் பயணம் 1947இல் இந்தியத் துணைக் கண்டத்தின் விதியை நிர்ணயிப்பதில் பெரும் பொறுப்பாக இருந்த மாமனிதர்களில், உயிரோடிருக்கும் ஒரே ஒரு மனிதரும், பர்மாவில் இருந்த பிரிட்டிஷ் படைக்குத் தளபதியாக இருந்தவருமான மவுண்ட்பேட்டனின் வாசலிலிருந்து தான் துவங்கியது. 1972-73இல் அவரிடமிருந்து பதினைந்து பேட்டிகளை டேப் ரெக்கார்டரில் பதிவு செய்தோம். இந்தியாவின் கடைசி வைஸ்ராயான அவர், வேதனை நிறைந்த இந்திய அனுபவங்களை ஒன்று விடாமல் கூறினார். இந்தப் பேட்டிகள் மட்டும் ஏறத்தாழ முப்பது மணி நேரத்துக்குப் பதிவாகியிருந்தது. தட்டச்சில் 600 பக்கங்கள் இருந்தன. ஒரு வைஸ்ராய் என்ற முறையில் மவுண்ட்பேட்டனைப் பற்றிய அபூர்வமான தகவல்கள் அடங்கிய ஆவணங்களாகவே அவை இருந்தன.*

*உலகின் மிகப்பெரிய தொகுப்பு என்று கூறும் அளவுக்கு அவரது வைஸ்ராய் காலத்தோடும் மற்றும் இந்திய சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தோடும் தொடர்புடைய ஆவணங்களையும், பேப்பர்களையும் கடைசி வைஸ்ராய் தன் பொறுப்பில் வைத்திருந்தார். ஒவ்வொரு செயலிலும் மிகவும் கவனம் செலுத்தும் மவுண்ட்பேட்டன் பிரபு, அந்தக் காலகட்டத்தோடு தொடர் புடைய சின்னச் சின்ன காகிதங்களைக் கூட வைத்திருந்தார். இந்தியாவுக்குப் புறப்பட்ட போது அவரது மைத்துனரான மன்னர் கைப்பட எழுதி அவருக்கு அனுப்பிய காகிதம், அரச விருந்துகளில் அமரும் இட ஏற்பாடுகள், பரிமாறப்பட்ட உணவுகள் பற்றிய குறிப்புகள் உட்பட வகைவகையான தகவல்கள் அவரிடம் இருந்தன. இருப்பினும், ஐந்து வகை ஆவணங்கள் அந்தக் காலகட்ட வரலாற்றுப் பதிவுக்கு மிக முக்கிய ஆவணங்களாக இருந்தன. அவையாவன:*

*(1) அவரது அலுவலகத்துக்கு வந்தவர்களுடன் குறிப்பாக இந்தியாவின் முக்கியத் தலைவர்களான காந்தி, நேரு, படேல் ஆகியோருடன் மவுண்ட்பேட்டன் நடத்திய உரையாடல்கள் பற்றிய பதிவேடு. இந்த*

நூலின் 103-4 பக்கங்களில் தமிழ்ப் பதிப்பில் பக்கம் -குறிப்பிட்டுள்ளபடி இந்தத் தலைவர்களுடன் தனித்தனியாகத்தான் பேசினார். பேச்சுவார்த்தைக்கான நேரத்தை 45 நிமிடங்கள் என வைத்திருந்தார். ஒவ்வொருவரும் சென்றவுடன் பேச்சுவார்த்தையின் சாரத்தை அவரது செயலாளரிடம் குறிப்பெடுத்துக் கொள்ளக் கூறினார். மங்காமலும் விவரமாகவும் அவை சொல்லப்பட்ட நேரத்தில் இருந்தது போலவே இப்போதும் இருக்கும், அந்தக் குறிப்புகள்;

(2) மனச்சுமையைக் குறைத்துக் கொள்வதற்காக திறந்த மனதுடன் பேசும் இயல்புள்ள வைஸ்ராய் பெரும்பாலும் தனது ஊழியர்களுடன் தினந்தோறும் நடத்திய கூட்டங்களின் நடவடிக்கைக் குறிப்புகள்;

(3) பஞ்சாபில் நெருக்கடி நிலவிய போது அவர் தலைமை தாங்கிய இந்திய அமைச்சரவையின் அவசர காலக் குழு கூட்டங்களின் நடவடிக்கைக் குறிப்புகள்;

(4) அவர் வைஸ்ராயாக இருந்தபோது வெளியுறவு அமைச்சருக்கு அனுப்பிய பதினேழு வாராந்தர அறிக்கைகள்; அவற்றின் பின் இணைப்புகள்;

(5) அவர் கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில் மன்னருக்கு அனுப்பிய மாதாந்தர அறிக்கை.

ஒருங்கிணைந்து நாங்கள் செயல்பட்ட நேரங்களில், சரிசெய்து கொள்வதற்காக, மவுண்ட்பேட்டன் பிரபு அடிக்கடி இந்த ஆவணங்களை புரட்டிப் பார்த்துக் கொண்டு இந்தியாவில் அவரது செயல்பாடுகள் தொடர்பான தகவல்களை ஆதாரபூர்வமாகவும், வரலாற்று மதிப்புள்ளதாகவும் வழங்கி வழிகாட்டினார். எனவே எங்களின் முதலாவதும் முக்கியமானதுமான நன்றியை மவுண்ட் பேட்டனின் நினைவாற்றலுக்குத்தான் தெரிவிக்க வேண்டும்.

அவரின் தனி அலுவலர்களில் இரண்டு பேருக்கும் கூட நாங்கள் பிரத்யேக நன்றி சொல்ல வேண்டும். ஒருவர் ஜான் பர்ராட் - அவரது தனிச்செயலாளர், மற்றொருவர் திருமதி மோலி ட்ராவிஸ் - பிராட்லாண்ட்ஸ் ஆவணக்காப்பக ஊழியர். இவர்கள் இருவருமே எங்கள் பணிக்காலத்தில் பெருந்தன்மையோடும் அர்ப்பணிப்போடும் ஒத்துழைத்தார்கள். மவுண்ட்பேட்டனின் இரண்டு மகள்களான சீமாட்டி பிரபோர்னும், சீமாட்டி பமீலா ஹிக்ஸும் தங்களின் பெற்றோர்கள் பற்றிய பழைய நினைவுகளைக் கூறுவதில் போதிய அளவு உதவினர். சீமாட்டி பமீலாவைப் பொறுத்தவரை அவர்களுடனான இந்திய அனுபவங்களையும் கூறினார். ஒரு மாத காலம் வைஸ்ராயாக இருந்தவரும், பம்பாய் மற்றும் வங்காள மாகாணங்களின் முன்னாள் கவர்னருமான ஒருவரின் மகன் பிரபோர்ன் பிரபு. இவர் பிராட்லாண்ட்ஸ் ஆவணக் காப்பகத்தின் முதன்மை அறங்காவலர் என்ற முறையில், நாங்கள் சம்பந்தப்பட்ட பகுதியில் பணிபுரிவதற்கு கனிவுடன் அனுமதி அளித்தார்.

1947-48இல் மவுண்ட்பேட்டன் பிரபுவின் ஊழியர்களாக இருந்தவர்களில் உயிருடன் இருந்து கொண்டிருந்தவர்கள் விதிவிலக்கின்றி பெருந்தன்மையோடு தாமாகவே முன்வந்து ஒத்துழைப்பு அளித்தார்கள். நீண்ட நெடியதும்,

சோர்வடையச் செய்வதுமான பல பேட்டிகளை, ஒவ்வொன்றும் குறைந்த பட்சம் இரண்டு மணி நேரம் உடையதான மூன்று அல்லது நான்கு டேப் ரிக்கார்டர் பதிவுப் பேட்டிகளை அவர்கள் பதிவு செய்தனர். அந்தக் காலத்தின் நினைவுகளைப் பொறுமையாகத் தேடி வெளிப்படுத்தியது மட்டுமின்றி, வீட்டின் சிறு அறைகளிலும் பிற வீடுகளிலும் 1947ஆம் ஆண்டின் நாட்குறிப்பு களையும் தங்களின் அனுபவங்களை நினைவுபடுத்தி மனைவியருக்கும் பெற்றோர்களுக்கும் எழுதிய கடிதங்களையும் அவர்கள் தேடினார்கள். மிக முக்கியமான அந்த நாட்களின் சூழ்நிலையை மீண்டும் உருவாக்குவதற்கு இவையெல்லாம் எங்களுக்கு மதிப்பு மிக்கவையாக இருந்தன.

1947-48இல் மவுண்ட்பேட்டன் பிரபுவின் பத்திரிகைத் தொடர்பாளராக இருந்தவரும், அந்தக் காலகட்டம் பற்றி விவரிக்கும் முதலாவது முக்கிய நூலான மிஷன் வித் மவுண்ட்பேட்டன் (மவுண்ட்பேட்டனுடன் மேற்கொண்ட பணி) என்பதன் ஆசிரியருமான ஆலன் கேம்ப் பெல் ஜான்சனும் குறிப்பிடத்தக்க உதவி புரிந்தார். இதேபோல், அவரது மதி நுட்ப தனிச் செயலாளர் சர் ஜார்ஜ் அபெல்; வைஸ்ராயின் தனிச் செயலாளராக இருந்த வைஸ் அட்மிரல் சர் ரொனால்ட் பிராக்மன்; மவுண்ட்பேட்டன் பிரபுவின் முதுநிலை உதவியாளர் அட்மிரல் பீட்டர் ஹோவஸ்; கடைசி வைஸ்ராயினி பற்றி மிகவும் பயனுள்ள தகவல்களை நினைவு கூர்ந்த எட்வினா மவுண்ட்பேட்டனின் செயலாளர் களான எலிசபெத் காலின்ஸ் மற்றும் முரீல் வாட்சன்; மிகவும் பயனுள்ள விளக்கங்களை எங்களுக்கு அளித்தவரும் வைஸ்ராயின் செயலக உறுப்பினரு மான ஜி.வெர்னன் மூர்; ராணுவ உதவி செயலாளர் லெஃப்டினன்ட் கர்னல் மார்டின் கிளியாட்; அவரின் உதவியாளர்களான லெஃப்டினன்ட் கர்னல் ஃபிரடெரிக் பர்னபி அட்கின்ஸ், ஃபிளைட் லெஃப்டினன்ட் மாண்புமிகு டபிள்யூ. எச்.சி. வென்ட் வொர்த் ப்யூமன்ட், இப்போதைய அலெண்டேல் பிரபு, மற்றும் சர் ஜேம்ஸ் ஸ்காட் ஆகியோரும் எங்களுக்கு உதவி செய்தனர். 1947இல் வைஸ்ராய் மாளிகையில் பணியாற்றியது பற்றிய அரைகுறையான தகவல் களோடு சில முக்கிய தகவல்களையும் இவர்கள் தந்தனர்.

தனது காலத்தின் மிக முக்கியமான பல சட்ட ஆய்வுகளை வெளியிடுவதற்கு இசைவாணை வழங்கிய குறிப்பிடத்தக்க அசாதாரண மனிதரான ரைட் ஹானரபிள் வைகவுண்ட் ராட் கிளிஃப்புக்கும் நாங்கள் மிகவும் நன்றிக்கடன் பட்டவர்களாவோம். எல்லைக்கோட்டை வரைவதில் குறிப்பிட்ட முடிவுக்கு வரக் காரணமாக இருந்தது எது என்பது பற்றி விவாதிப்பதில்லை என்ற எல்லைக்குள் இருந்து கொண்டு அவர் எங்களுடன் வெளிப்படையாகப் பேசினார். அவர் அளித்த நீண்ட இரண்டு பேட்டிகள் உதவியாக இருந்தன.

இந்திய ராணுவம் பற்றிய எங்களின் பணிக்கு சிறப்பு மிக்க அந்த அமைப்பின் எண்ணற்ற முதியவர்களைத் தொடர்பு கொண்டோம்: ஜெனரல் ராபர்ட் லாக்ஹார்ட்; ஜெனரல் சர் ராய் புக்கர்; பாகிஸ்தான் ராணுவத்தின் முதல் தளபதியாக இருந்த காலம் சென்ற ஜெனரல் சர் ஃப்ராங்க் மெஸர்வி; சுதந்திர இந்தியாவை விட்டுக் கடைசியாக வெளியேறிய பிரிட்டிஷ் ராணுவத்தின் படைப்பிரிவான சோமர்செட் லைட் இன்ஃபேண்ட்ரிக்குத் தலைமை தாங்கிய லெஃப்டினன்ட் கர்னல் ஜான் ஆர். ப்ளாட்; (பாகிஸ்தானின்) முதலாவது ராணுவ செயலாளராகப் பணிபுரியும் மதிப்பு பெற்றவரும், முகமது அலி ஜின்னா

வாழ்க்கையின் கடைசி மாதங்கள் குறித்த தகவல்களை எங்களுக்கு அளித்தவருமான கர்னல் இ. எஸ். பிர்னி ஆகியோர் அவர்கள்.

முக்கால் நூற்றாண்டு காலத்துக்கு இந்தியாவின் தலைவிதிகளுக்கு வழிகாட்டிய அந்தக் குழுவினரை சந்திக்கவும் பேட்டி காண முடிந்ததும் எங்களுக்கு சந்தோஷத்தையும் கவுரவத்தையும் அளித்தது. வர்கள் ஐசிஎஸ் அதிகாரிகள். முக்கியமாக நாங்கள் சர் ஓலஃப் கரோவுக்கு நன்றி சொல்ல வேண்டும். இவர் மிகவும் விரும்பிய, அதிக காலம் பணியாற்றிய வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் கடைசி கவர்னர். அநேகமாக பத்தான் பழங்குடி மக்கள் பற்றி அறிந்து கொள்ள மேலை நாட்டினருக்கு இவர்தான் வலுவான ஆதாரகர்த்தா. அடுத்தவர் சர் கொனார்ட் கோர் ஃபீல்ட் இந்திய மன்னர்களின் கடைசி மேய்ப்பராக இருந்தவர் இவர். இவரது முதன்மை துணைச் செயலர் சர் ஹெர்பெர்ட் தாம்ப்சன்; ஹம்ப்ரே ட்ரெவெலியன் என்ற பெயரில் இந்தியாவில் இளம் ஐசிஎஸ் அதிகாரியாக இருந்த வாழ்க்கை அனுபவங்களை தி இந்தியா வி லெஃப்ட் (அந்த இந்தியாவை நாங்கள் விட்டுச் செல்கிறோம்) என்ற நூலில் எழுதியுள்ள ட்ரெவெலியன் பிரபு; ராட்கிளிஃபின் உதவியாளராக இருந்த ஐசிஎஸ் அதிகாரியான நீதிபதி எச்சி. ப்யூமண்ட்; மவ்ரிஸ் மற்றும் தாயா ஸின்கின் ஆகியோருக்கும் நன்றியுடையவர்களாவோம். 1947 செப்டம்பரில் டில்லியில் ஏற்பட்ட குழப்பங்கள் பற்றிய மெய்சிலிர்க்க வைக்கும் தங்களின் நாட்குறிப்புகளை இவர்கள் எங்களைப் படிக்க அனுமதித்தார்கள்.

விலை மதிப்பற்ற உதவிகளைச் செய்த ஏராளமானவர்களில் சிலர்: இந்தியாவுக்கான பிரிட்டனின் கடைசி வெளியுறவு அமைச்சர் லிஸ்டோவெல் கோமகன்; சுதந்திர இந்தியாவுக்கான பிரிட்டனின் முதலாவது துணை ஹைகமிஷனர் சர் அலெக்சாண்டர் சைமன்; 1947 ஆகஸ்ட் 14 அன்று கராச்சியில் ஜின்னாவையும் மவுண்ட்பேட்டனையும் கொல்ல சதித்திட்டம் தீட்டப்பட்டது குறித்து தகவல் அளித்த திரு ஜி.ஆர்.சாவேஜ்; போருக்குப் பிந்தைய லண்டன் நிலை பற்றி ஏராளமான விஷயங்களைத் தெரிவித்த ஜெரால்ட் மெக்னைட்

ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற பரோனுக்கும் அவரது துணைவியார் பரோனெஸ் ஜியோஃப்ராய் டி கோர்சலுக்கும் நாங்கள் தனிப்பட்ட முறையில் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். லண்டனில் ஃபிரான்சு நாட்டின் தூதர்களாக இருந்த இவர்கள் தான் மவுண்ட்பேட்டன் பிரபுவுடனான எங்களின் முதல் சந்திப்புக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தனர். இதேபோல் அலெய்ன் மற்றும் ஃப்ரான்ஸ்டேனெட் ஆகியோரும் கூட எங்களுக்குப் பல கதவுகளைத் திறந்து விட்டனர்.

ஃபிரான்சிஸ் டிலோக் டி நோயல் மற்றும் காய் டிஓர்சேயின் ஜீன் பேட்டெடாட் ஆகியோரின் உதவிக்கும் கூட நாங்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். மேலும் மேக்ஸ் ஆலிவர் லேகேம்ப் மற்றும் பால் குரியன் ஆகியோர் 1947இல் இந்தியாவில் செய்தியாளர்களாக இருந்த அனுபவங்களை எங்களுக்கு அளித்தனர். இவர்கள் அந்தக் காலகட்டம் குறித்து சிறப்பான இரண்டு நூல்களையும் வெளியிட்டுள்ளனர். இம்பேஸ் இந்தியானே (Impasse Indienne) என்ற நூலை ஆலிவர் - லே கேம்பும், லெஸ் இன்டெஸ் ஃபெமிலியர்ஸ் (Les Indes Familieres) என்ற நூலை குரியனும் வெளியிட்டுள்ளனர்.

இந்தியாவில் நாங்கள் முதலாவதாக பிரதம மந்திரி இந்திரா காந்திக்குத்தான் நன்றிக்கடன் பட்டுள்ளோம். அவரது தந்தை ஜவஹர்லால் நேரு பற்றியும் 1947ஆம் ஆண்டின் அவரது சொந்த அனுபவங்கள் பற்றியும் எங்களிடம் மிகவும் கனிவுடன் நினைவு கூர்ந்தார். அவரது அத்தையும், நேருவின் சகோதரியுமான வி.எல். பண்டிட் தனது சகோதரரின் குணநலன்கள் பற்றி மிகவும் மதிப்புள்ள தகவல்களை எங்களுக்கு அளித்ததற்காக அவருக்கும் நன்றி சொல்ல வேண்டும். நேருவின் தனி செயலாளர்களாக இருந்த எம்.ஏ.பெய்க், ஜான் மத்தாய், தர்லோக்சிங், எச்.வி.ஆர். அய்யங்கார் ஆகிய நால்வரும் கூட அவரைப் பற்றிய முக்கியமான தகவல்களைத் தெரிவித்தனர். கே. ருஸ்ஸி, அய்லீன் கரஞ்சியாவும் கூட உதவி செய்தனர்.

மறைந்த கிருஷ்ணமேனன்; வி.பி.மேனனின் மகன் மெஹ்ரா மற்றும் மருமகள் டி.டபிள்யூ. மெஹ்ரா; தனது தந்தை பற்றி விலை மதிப்பற்ற அனுபவங்களை நினைவு கூர்ந்த வல்லபபாய் படேலின் மகள் மணிபென் படேல்; பாட்டியாலாவின் மறைந்த மகாராஜா யாதவீந்திர சிங்; ஜெய்ப்பூர் மற்றும் குவாலியரின் ராஜமாதாக்கள்; காஷ்மீர் மகாராஜாவின் மகன் டாக்டர் கரன்சிங்; 1947இல் பஞ்சாபில் பணிபுரிந்த போது நெஞ்சில் நிறைந்த அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்ட இளம் காவல்துறை அதிகாரி இன்ஸ்பெக்டர் ஜெனரல் அஸ்வினி குமார்; 1947 படுகொலைகள் பற்றி ட்ரெயின் டூ பாகிஸ்தான் (பாகிஸ்தானுக்கு சென்ற ரயில் வண்டி) என்ற சிறப்பு மிக்க புதினத்தைப் படைத்த குஷ்வந்த் சிங்; தனது தந்தை பற்றிய தகவல்களை நினைவு கூர்ந்த முகமது அலி ஜின்னாவின் மகள் தினா வாடியா; ஜின்னாவின் டாக்டர் கே.ஏ.எல். படேல்; இந்திய சுதந்திர தின விழா பற்றிய தகவல்களை நெகிழ்ச்சியுடன் கூறிய சுலோச்சனா பாணிகிரஹி; சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட முதன்மையான இந்தியர்களில் ஒருவரும் வாழ்ந்து கொண்டிருந்த கடைசி தலைவருமான ஆசாரிய கிருபளானி; கூர்மையான பல கருத்துக்களை அளித்த பத்மஜா நாயுடு; பழைய சிம்லாவின் வாழ்க்கை அனுபவங்கள் குறித்துத் தகவல் அளித்த எம்.எஸ்.ஒபராய்; இந்தியரின் பார்வையில் ஒரு ஐசிஎஸ் அதிகாரி பற்றி ருசிகரமான தகவல்களைத் தந்த ராஜேஷ்வர் தயாள்; பழங்குடியினர் ஆக்ரமிப்பு செய்திகளை நினைவு கொண்டு வந்து கூறிய 'காஷ்மீர் சிங்கம்' ஷேக் அப்துல்லா; பஞ்சாபுக்கு முதலாவது இந்திய கவர்னரும், குடி பெயர்வு மற்றும் படுகொலைகள் பற்றி பல முக்கியத் தகவல்களை அளித்தவருமான ஐசிஎஸ் அதிகாரி சர் சந்துலால் திரிவேதி ஆகியோர் எங்களுக்குப் பயனுள்ள பல தகவல்களைத் தந்து உதவியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். நாவல் டாடா, சைமோன் டாடா, நாரி எச். தஸ்தூர், ஹாரி நீடு, சலீனா நீடு, பத்வந்த் சிங் ஆகியோரும் தங்களின் உதவியாலும் நட்புறவாலும் எங்களுக்கு ஊக்கம் அளித்தனர்.

காந்தி பற்றி எங்களுக்குத் தகவல்கள் தந்த அவரின் செயலாளர் பியாரேலால் நய்யாருக்கு மிகச் சிறப்பான நன்றியுடையவர்களாவோம்; தொடர்ச்சியாக ஐந்து முக்கியமான பேட்டிகளை அவர் அளித்தார். காந்தி வாழ்க்கையின் கடைசி கட்டம் பற்றிய 'மகாத்மா காந்தி தி லாஸ்ட் பேஸ்' என்ற சிறப்பு மிக்க மூன்று தொகுதிகளின் ஆசிரியர் அவர். சந்தேகத்துக்கு இடமின்றி இவை காந்தியின் கடைசிக் கட்ட வாழ்க்கை பற்றிய முழுமையான நூல்களாகும். அவரின் சகோதரியும், காந்தியின் மருத்துவருமான சுசீலா, அவரின் உதவியாளர்

பிரிக்ஷென் சந்திவாலா ஆகியோருக்கும் குறிப்பாக நாங்கள் நன்றி செலுத்த வேண்டும். காந்தியைக் கொன்ற குழுவில் எஞ்சி வாழ்ந்தவர்கள் பற்றிய தகவல்களை குறிப்புகள் என்ற பகுதியில் அவரது படுகொலை குறித்த அத்தியாயத்தில் காணலாம்.

எங்களின் பணிகளில் பெருமளவுக்கு உதவி செய்தது மட்டுமின்றி, எங்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளித்த நண்பர்களாகவும் விளங்கிய மிகவும் சிறப்பான குழு ஒன்றுக்கு நாங்கள் நன்றி சொல்ல விரும்புகிறோம். அவர்கள் இந்திய ராணுவத்தின் பல அதிகாரிகள்; என்றும் நினைவு கூரும் வகையில் விருந்தோம்பிய ஜெனரல் ஜாங்கு டி.சத்தரவாலா; ஜெனரல் கே.என்.சவுத்ரி; இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே எல்லையைக் கடக்கும் இடமான வாகாவில் பெயர் பொறிக்கப்பட்டுள்ள ஜெனரல் எம்.ஜே.சோப்ரா; ஜெனரல் ஹர்பக்ஷ் சிங் ஆகியோர் அவர்கள். கடைசியாக, அந்த சமயத்தில் ஃபிரான்ஸ் நாட்டின் கவர்ச்சி மிகு பிரதிநிதியாகப் புது டில்லியில் இருந்தவரும், எங்களை அன்புடன் உபசரித்தவர்களுமான தூதர் ஜீன் டேனியல் ஜூர்கென்செனுக்கும் அவரது துணைவியாருக்கும், இந்தியத் தலைநகரில் ஃபிரான்ஸ் கலாசார தூதராக இருந்த ஃபிரான்சிஸ் டோரேக்கும், எங்களின் நீண்ட கால நண்பரும், புது டில்லியில் ஃபிரான்ஸ் நாட்டுத் தூதரகத்தின் பத்திரிகைத் தொடர்பு அதிகாரியாக இருந்தவருமான ஃபிளாரென்ஸ் புரூவெர்லிக்கும், எங்களின் பம்பாய் பயணத்தை மிகவும் ஏற்கத்தக்கதாக்கிய ரேனே, கிளாட் டி சாய்ஸ்யல் - பிராஸ்லின், ஃபிரான்சிஸ், அன்னிக் வாஸீரக் ஆகியோருக்கும், எங்களின் சிறப்பான நன்றியைச் சொல்லாமல் போனால் இந்தியாவில் நாங்கள் தங்கியிருந்தது பற்றிய செய்தி முழுமையடையாது.

எங்களின் பணிக்கு முக்கியப் பங்களிப்புச் செய்த பாகிஸ்தானியர்கள் பலருக்கும் நாங்கள் நன்றிக்கடன் பட்டுள்ளோம். அவர்களிலும் சிலருக்குக் குறிப்பிட்டு நன்றி கூற நாங்கள் விரும்புகிறோம். மவுண்ட்பேட்டன் பிரபுவுக்கும் முகமது அலி ஜின்னாவுக்கும் கப்பற்படை பிரிவு உதவியாளராக இருந்தவரும், தனது புதிய நாட்டுக்குப் பயணம் மேற்கொண்ட போது காயித்-இ-ஆசமின் நெகிழ்ச்சியான உள்ளுணர்வுகள் பற்றிய விவரங்களை எங்களுக்கு அளித்த வருமான அட்மிரல் சையத் அசன்; 'எல்லை காந்தி' பாஷாகான்; உற்சாகமும் உபசரிப்பும் நிறைந்த நண்பரும், 1947 கோடை காலத்திலும், இலையுதிர் காலத்திலும் லாகூரில் நடந்த சம்பவங்கள் குறித்த மதிப்பு மிக்க, அபூர்வ தகவல்களைத் தந்தவருமான ஏ.ஐ.எஸ்.தாரா; பாகிஸ்தானுக்குச் செல்வதென்ற முடிவுக்கு என்ன காரணம் என்பதை நெஞ்சைத் தொடும் வகையிலும், கூர்மையாகவும் எங்களிடம் விவரித்த தூதர் யாகூப் கான்; காஷ்மீரை மலைவாசி மக்கள் ஆக்ரமித்தது பற்றி ஒப்பற்ற முதல் நிலைத் தகவல்களை வழங்கிய தூதர் அக்பர்கான் மற்றும் சைரப் கயாத்கான்; 1947இல் பஞ்சாபில் நிகழ்த்திய குறிப்பிடத்தக்க சாகசச் செயல்களை அன்புடன் நினைவு கூர்ந்து விளக்கிய விமான பணிப்பெண் பேகம் ஃபெரோஸ்கான் நூன்; துணைக்கண்டத்தின் சொத்துக்களைப் பிரிப்பதென்ற மகத்தான பணியைச் செய்யும் பொறுப்பேற்ற சவுத்ரி முகமது அலி மற்றும் அவருடன் இந்தியாவில் பணியாற்றிய நண்பர் எச்.எம்.படேல் ஆகியோர் அவர்கள்.

உண்மையில், எங்களுக்கு உதவி புரிந்த ஏராளமானவர்களில் சிலரைப் பற்றி மட்டும் தான் இங்கே கூறியிருக்கிறோம். அவர்களின் உதவியும், ஊக்கமும், பல கால உழைப்பும் கிடைத்திருக்காவிட்டால் இந்தப் புத்தகம் உருவாகும் வாய்ப்பே இருந்திருக்காது. புத்தகத்தின் இடநெருக்கடி கருதியே, அவர்கள் அனைவரையும் குறிப்பிட்டு நன்றி கூறமுடியாமல் போனது. ஆங்கிலேயத் தொண்டு அமைப்புகள்; ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள், வணிகர்கள், சிவில் ஊழியர்கள், கல்விமான்கள், காங்கிரஸ் கட்சி மற்றும் முஸ்லீம் லீகின் தலைவர்கள், பள்ளி ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், 1947இல் மாபெரும் குடிபெயர்வு நிகழ்ந்த காலத்துப் பயங்கரங்களை மனக்கவலையோடு நினைவு கூர்ந்த இருதரப்பு முகாம்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான அகதிகள், தங்களின் பெயர்களைக் குறிப்பிட வேண்டாம் என்று எங்களிடம் வேண்டிக் கொண்ட, இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த பல நண்பர்கள் ஆகியோரே அவர்கள். எங்கிருந்தாலும் இவர்களுக்கு எங்களின் நன்றி உரித்தாகும்; அவர்களின் உதவியை ஒரு போதும் மறக்க மாட்டோம் என்று உறுதி கூறுகிறோம்.

எங்கள் ஆய்வில் சிதறிக் கிடந்த தகவல்களை ஒழுங்குபடுத்தி சரி செய்தல், முறைப்படியாக அவற்றைத் தொகுப்பாக்குதல், கையெழுத்துப் படியை எழுதுதல், போன்ற மகத்தான பணிகளில், திறமைமிக்க உதவியாளர்களையும், தோழர்களையும் நாங்கள் பெற்றது எங்களின் நற்பேறேயாகும். நள்ளிரவில் சுதந்திரம் என்ற எங்களின் மூன்றாவது புத்தகப் பணியில் எங்களுக்கு மிகவும் ஒத்துழைப்பு அளித்தவர், மேஸி டொமினிக் கோன்சோன் ஆவார். அவரது உழைப்பு விலை மதிப்பற்றது; உணர்வு தளர்ச்சியடையாதது. எங்களின் ஆய்வுத் தகவல் குறிப்புகளை ஒழுங்குபடுத்துவதைக் கண்காணிக்கும் சிக்கல் மிக்க பணியை அவர் செய்தார். இதனால் ஓராண்டு காலம் எழுதித் தொகுத்த 6342 பக்க ஆய்விலிருந்து ஒரு சிறு பக்கம் கூடத் தவறவிடாமல் பாதுகாக்கப்பட்டது.

இவருடன் இணைந்து பணியாற்றியவர் ஜூலியா பிஸ்ஸு. பல மாதங்கள் நடந்த எங்களின் ஆய்வின் போதும் எழுத்துப் பணியின் போதும் ஒரு போதும் சோர்வடையாத நல்ல உற்சாகத்துடன் செயல்பட்ட அவர் நல்ல நண்பராகவும் திகழ்ந்தார். மேஸி கோன்சோனுக்குத் திறமைமிக்க உதவியாளராக இருந்த அவர், எந்தப் பெரும்பணியையும் ஏற்று செயல்படுத்தத் தயாராகவிருந்தார். எங்களின் ஆய்வாளர்களில் நாங்கள் சிறப்பாக நன்றி கூற வேண்டியவர் ரென்னஸ் பல்கலைக்கழக ஆங்கில இலக்கியப் பேராசிரியர் மைக்கேல் ரெனார்ட் ஆவார். மகா பிரிட்டனில் பல பேட்டிகள் எடுப்பதற்கு, 1972 கோடைகால விடுமுறையை அர்ப்பணிப்பு உணர்வோடு இவர் செலவிட்டார்.

இஸ் பாரிஸ் பர்னிங்? என்ற நூலின் பணியைத் துவக்கிய போது எங்களுடன் இணைந்து பணியாற்றிய முதல் ஆய்வாளரான 17வயது மாணவர் மைக்கேல், இந்த நூலுக்கான பணியின்போதும் மீண்டும் ஒன்றுசேர்ந்ததை நாங்கள் நெகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறோம்.

ஃபிரான்ஸ் நாட்டின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ஸ்காட்லாந்துக் காரர்களைப் போன்று மிகவும் கூர்மையான செவிபடைத்த, ஜீனி நேகி, டேப்ரெக்கார்டரில் பதிவு செய்யப்பட்ட பேட்டிகளை எங்களுக்காகப் படியெடுக்கும் பணியில் ஈடுபட்டார். ஜீன் கோன்சோன், மைக்கேல் ஃபுச்சர்,

ஜேக்குலின் டி லா குரூஸ், மார்ஜோரி ரோல்ட் ஆகிய அனைவரும் நாங்கள் இறுதியாகக் கையெழுத்துப் படியைத் தயாரித்தபோது வெவ்வேறு கட்டங்களில் ஒத்துழைப்பு அளித்தனர்.

பாரிஸ் மேட்சைச் சேர்ந்த காலஞ்சென்ற ரேமாண்ட் கார்டீருக்கு சோகத்துடன் எங்களின் நன்றியைத் தெரிவிக்க வேண்டும். நள்ளிரவில் சுதந்திரம் என்ற நூலுக்கான பணியைத் துவக்க முதல் நிலை ஊக்கம் அளித்தவர் இவர். இவரது வாழ்க்கையின் கடைசி மாதங்களில் கையெழுத்துப் படிகளை இரண்டு முறை வாசித்தார். இரண்டு தருணங்களிலும் அவர் மிகவும் உதவியாக இருந்ததோடு, ஆக்கபூர்வ விமர்சனங்களையும் அளித்தார். அதிக அளவில் பங்களிப்பு செய்த அவர், இறுதியான கையெழுத்துப்படிகளைப் படிப்பதற்கு போதிய காலம் வாழ இயலாமல் போனதற்காக நாங்கள் வருந்துகிறோம்.

ஆங்கில மொழியிலான எங்கள் மூலப்பிரதியை ஃபிரஞ்ச் மொழியில் திறமையாகவும் அழகாகவும் மொழி பெயர்ப்பு செய்ய வெகுகாலத்தை அர்ப்பணித்த நாடியா காலின்ஸுக்கும் எங்கள் சிறப்பான நன்றி உரியதாகும். பால் ஆன்ட்ரியோடா, பீரே பேச்மார்ட், சீனாவின் இருபது பதவிப் பித்தர்கள் (Twenty Snobs in China) என்ற நூலின் ஆசிரியரான கோலெட் மோதியானோ, பீரே அமாடோ, ஃபிரான்சிஸ் டோரே ஆகியோர் நேரம் ஒதுக்கி, நள்ளிரவில் சுதந்திரம் நூலின் ஃபிரஞ்ச் மொழி கையெழுத்துப் பிரதிகளைப் படித்தனர். ஒவ்வொருவரும் பயனுள்ள கருத்துக்களையும், விமர்சனங்களையும் தெரிவித்தனர்.

இறுதியாக, இந்த நூல் பதிப்புக்குச் சென்ற சிக்கல் நிறைந்த மாதங்களில் தங்களின் முழுமையான ஆதரவை நல்கிய தொகுப்பாளர்களுக்கு எங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**எல்.சி.**
*(லேரிகாலின்ஸ்)*

**டி.எல்.பி**
*(டொமினிக் லேப்பியர்)*

# நூல் பட்டியல்

*(இந்த நூல் எழுத குறிப்புகளைத் தேடிக் கண்டறிந்த நூல்கள், ஆவணங்கள் பெரும்பாலும் ஆங்கில மொழியில் இருப்பவை என்பதால் அந்த நூல் பட்டியல் விவரத்தை ஆங்கிலத்திலேயே வெளியிட்டிருக்கிறோம் - ப. ர்)*

## *I Books*


Abbas, K. Ahmad, *A Report to Gandhi.* Bombay: Hind Kitabs, 1947. I Write as I Feel - I - The Atom Bomb

II - Lahore

Ackerley, J.R., *Interme'de Hindou.* Paris: Gallimard, 1935.

Ali, Chaudhri Muhammad, *The Emergence of Pakistan.* New York: Columbia University Press, 1967.

Anand, Balwant Singh, *Cruel Interlude.* Inde: Asia Publishing House, 1961.

Anaryan, *A Group of Hindoo Stories.* London: W.H. Allen & Co., 1881.

Anwar, Muhammed, *Jinnah Quaid-e-Azam, A Selected Biography.* Karachi: National Publishing House Limited, 1970.

Ashe, Geoffrey, *Gandhi - A Study in Revolution.* Bombay: Asia Publishing House, 1968.

Atal, Amarnath, *The Maharajah of Jaipur* - 1922 - 1947. Allahabad: The Allahabad Law Journal Press.

Azad, Maulana Abul Kalam, *India Wins Freedom.* New York: Longmans, Green & Co., 1960.

Baig, M.R.A., *Muslim Dilemma in India.* Delhi: Vikas Publishing House PVT Ltd, 1974.

Bamm, Peter, *Alexandre le Grand.* Bruxelles: Elsevier - Sequoia, 1969.

Bareau, Andre, *Bouddha.* Paris: Editions Seghers, 1962.

Bary de, The'odore, *Sources of Indian Tradition.* New York: Columbia University Press, 1968 (2 volumes)

Bettelheim, Charles, *L'Inde Inde'pendante.* Paris: Armand Cohen, 1962.

Bhatacharya, Sachchindananda, *A Dictionary of Indian History.* New York: George Braziller, 1967.

Biardeau, Madeleine, *Clefs pour la Pense'e Hindoue.* Paris: Seghers, 1972.

Birkenhead, Lord, *Walter Monckton - The Life of Viscount Monckton of Brenchley.* London: Weidenfeld & Nicolson, 1969.

Bolitho, Hector, *Jinnah - The Creator of Pakistan.* London : John Murray, 1954.

Bourke-White, Margaret, *Halfway to Freedom.* New York: Simon & Schuster, 1949.

Brecher, Michael, *Nehru - A Political Biography:* Boston: Beacon Press, 1970.

Brecknock, The Countess of, *Edwina Mountbatten - Her Life in Pictures.* London: Macdonald, 1961.

Cameron, James, *An Indian Summer.* London: Macmillan and Co. Ltd., 1973.

Campbell, Alexander, *The Heart of India.* New York: Alfred A. Knopf, 1958.

Campbell - Johnson, Alan, *Mission with Mountbatten.* London: Robert Hale Ltd, 1951.

Caroe, Olaf, *The pathans.* London Macmillan & Co. Ltd, 1964.

Chandiwala, Brijkrishna, *At the Feet of Bapu.* Ahmedabad: Navajivan Publishing House, 1954.

Chatterji, Usha, *La Femme dans L'Inde.* Paris: Plon, 1964.

Connell, Brian, *Manifest Destiny - A Study in Five Profiles of the Rise and Influence of the Mountbatten Family.* London: Cassell and Co. Ltd, 1953.

Coolidge, Olivia, *Gandhi,* Boston: Houghton Mifflin Co., 1971.

Coomaraswamy, Ananda K., *The Dance of Shiva.* New York: H.Wolff, 1957.

Corbett, Jim, *Man-Eaters of Kumaon.* London: Geoffrey Cumberlege Oxford University Press, 1946.

Coupland, R., *The Cripps mission.* New York: Oxford University Press, 1942.

Crocker, Walter, *Nehru - A Contemporary's Estimate.* New York: Oxford University Press, 1966.

Danielou, Alain, *Histoire de L'Inde.* Paris: Fayard, 1971.

Das, Durga, *India from Curzon to Nehru and, After.* London: Wm. Collins Sons & Co., 1969.

Dass, Diwan Jarmani, *Maharaja- Lives and Loves and Intrigues of Indian Princes.* Allied Publishers (P) Ltd, 1970.

Dass, Diwan Jarmani and Rakesh Bhan, *Maharani - Love Adventures of Indian Maharanis and Princesses.* New Delhi: S.Chand & Co., 1972.

Dore, Francis, *L'Inde d' Aujourd'hui.* Paris: Presses Universitaires de France, 1974.

*Les Re'gimes Politiques en* Asie. Paris: Presses Universitaries de France, 1973.

Dowson, John , *A Classical Dictionary of Hindu Mythology and Religion, Geography, History and Literature.* London: Routledge & Kegan Paul Ltd, 1968.

Drieberg, Trevor, *Indira Gandhi - A Profile in Courage.* New Delhi: Vikas Publishing House PVT Ltd, 1973.

Dube, S. C., *Indian Village.* London: Routledge & Kegan Paul Ltd, 1955.

Dubois, J. A., *Hindu Manners, Customs and Ceremonies.* Oxford: At the Clarendon Press, 1906.

Duggal, Kartar Singh, *Banked Fires and Other Stories.* Bombay: Pearl Publications Private Ltd, 1969.

*Death of a Song and Other Stories.* New Delhi: Arnold-Heinemann, 1973.

*Nails and Flesh.* Bombay: Pearl Publications Private Ltd, 1969.

Edwardes, Michael, *The Last Years of British India.* London: Cassell & Co. Ltd, 1963.

Eglar, Zekige, *A Punjabi Village in Pakistan.* New York: Columbia University Press, 1960.

Elliott, Maj. Gen. J.G., *The Frontier 1839 - 1947.* London: Cassell, 1968.

Erikson, Erik H., *Gandhi's Truth - On the Origins of Militant Non Violence.* New York, W.W. Norton & Co. Inc., 1969.

Escarpit, Robert, *Rudyard Kipling.* Paris: Hachette, 1970.

Fischer, Louis, *The Life of Mahatma Gandhi.* New York: Harper & Row, 1950.

Forbes, Rosita, *India of the Princes.* London: The Book Club, 1939.

Frederic, Louis, *L'Inde au Fil des Jours.* Paris: S.C.E.M.I., 1963.

Gandhi., Manuben, *Last Glimpses of Bapu.* Delhi: Shiva Lal Agarwala & Co., 1962.

Gandhi, Mohandas Karamchand, *An Autobiography or The Story of My Experiment with Truth.* Boston: Beacon Press, 1970.

Gauba, K.L., *Assassination of Mahatma Gandhi.* Bombay: Jaico Publishing House, 1969.

Gavi, Philippe, *Le Triangle Indien - De Bandoeng au Bangladesh.* Paris: Le Seuil, 1972.

Ghosh, Sudhir, *Gandhi's Emissary - A Nonconformist's Inside Story of India's Past Twenty Years.* Boston: Houghton Miffin Co, 1967.

Golish, Vitold de, *L'Inde Impudique des Maharajahs*, Paris: Robert Laffont, 1973.

*Splendeur et Cre'puscule des Maharajahs.* Paris: Hachette, 1963.

Gorwala, A.D., *The Queen of Beauty and Other Tales.* Bombay: A.D. Gorwala, 1971.

Grant, W.J. *The Spirit of India.* London: B.T. Batsford Ltd, 1938.

Griffiths, Percival J., *The British Impact on India.* London: Mac Donald, 1952.

*The British in India.* London: Robert Hale Ltd, 1946.

Gross, John, *Rudyard Kipling - The Man, His Work and His World.* London: Weidenfeld and Nicolson, 1972.

Guerin, Paul, *A l'Affut de Gandhi.* Paris: (Emission de la Radiodiffusion Francaise du 30/01/49)

*Les Indes Familieres.* Paris: Edition des Deux Artisans, 1950.

Hodiwala, Shapurji Kavasji, *History of Holy Iranshan (Extracts).* Bombay: Godrej M. Printing Press, 1966.

Hodson, H.V., *The Great Divide - Britain - India - Pakistan.* London: Hutchinson and Co., 1969.

Hutton, J.H. *Caste in India - Its Nature, Function, and Origins.* Cambridge University Press, 1946.

Ismay, Lord, *The Memoirs of General Lord Ismay.* London: Heinemann, 1960.

Jain, J.C., *The Murder of Mahatma Gandhi - Prelude and Aftermath.* Bombay: Chetana Ltd, 1961.

Jones, Stanley, *Mahatma Gandhi - An Interpretation.* London: Hodder & Stoughton, 1948.

Kamensky, Anna, *La Bhagavad - Gita (Le Chant 'du Seigneur).* France: Editions J.B. Janin, 1947.

Karanjia, R.K.., *The Mind of Mr Nehru.* London: George Allen & Unwin Ltd, 1960.

*The Philosophy of Mr. Nehru.* London: George Allen & Unwin Ltd, 1966.

Khan, Akhbar, *Raiders in Kashmir - Story of the Kashmir War 1947 - 48.* Karachi: Pakistan Publishers Ltd. 1970.

Khosla, Gopal Das, *The Murder of the Mahatma and Other Cases from a Judge's Notebook.* Bombay: Jaico Books, 1963.

Kincaid, Dennis, *British Social Life in India - 1608 - 1937.* London and Boston: Routledge & Kegan Paul Ltd, 1973.

Kipling, Rudyard, *Le Chat Maltais.* Paris: Mercure de France, 1927.

*Le Livre de la Jungle and Le Second Livre de la Jungle (2 vols).* Paris: Mercure de France, 1930.

Kripalani, Krishna, *Gandhi, A Life.* New Delhi: Orient Longmans, 1969.

Lacombe, O., *Gandhi ou la Force de l'Ame.* Paris: Plon, 1964.

Lacy, Creighton, *The Conscience of India.* New York: Holt, Rinehart and Winston, 1965.

Lakshmanna, C., *Caste Dynamics in Village India.* Bombay: Nachiketa Publications Ltd, 1973.

Lassier, Suzanne, *Gandhi et la Non-Violence.* Paris: Editions du Seuil, 1970.

Le Bourgeois, Jacques, *L'Inde aux Cent Couleurs.* Paris: Hachette, 1935.

Llewellyn, Bernard, *From the Back Streets of Bengal*. London: George Allen & Unwin Ltd, 1955

Lord, John, *The Maharajahs*. New York: Random House, 1971.

Lothian, Arthur Cunningham, *Kingdoms of Yesterday*. London: John Murray, 1951.

Mahadevan, T.M.P; *Outlines of Hinduism*. Bombay: Chetana Ltd, 1956.

Majumdar, S.K., *Jinnah and Gandhi - Their Role in India's Quest for Freedom*. Calcutta: Firma K.L. Mukhopadhyay, 1966.

Malraux, Andre' *Antime'mories*. Paris: Gallimard NRF, 1967.

Masani, R.P., *Britain in India*. London: Oxford University Press, 1960.

Mason, Philip, *Matter of Honour - An Account of the Indian Army - Its Officers and Men*. London: Jonathan Cape, 1974.

Masson, Madeleine, *Edwina, The Biography of the Countess Mountbatten of Burma*. London: Robert Hale Ltd, 1958.

Maule, Henry, *Spearhead General - The Epic Story of General Sir Frank Messervy and his Men in Eritrea, North Africa and Burma*. London: Transworld Publishers, 1961.

Megret, Christian, *Les Chimeres Bleues de Chandernagor*. Paris: Robert Laffont, 1964.

Mehta, Krishna, *This Happened in Kashmir*. Delhi: Publications Division, 1966. (Ministry of Information and Broadcasting, Government of India.)

Mehta, Ved, *Portrait of India*. New Delhi : Vikas Publications, 1971. Walking the Indian Streets. New Delhi: Vikas Publications, 1972.

Menon, V.P., *The Transfer of Power in India*, Princeton: Princeton University Press, 1957.

Mitra, Asok, *Delhi Capital City*. New Delhi: Thomson Press, 1970.

Moon, Penderel, *Divide and Quit*. London: Chatto and Windus, 1961. *Gandhi and Modern India*. New York: W.W. Norton & Co. Inc., 1969.

Moorhouse, Geoffrey, *Calcutta*. London: Weidenfeld and Nicolson 1971.

Moris, James, *Pax Britannica*. London: Faber & Faber 1968

Mosley, Leonard, *The Glorious Fault*. New York: Harcourt, Brace and Company, 1960.

*The Last Days of the British Raj*. London: Weidenfeld & Nicolson, 1961.

Nair, Kusum, *Blossoms in the Dust - The Human Element in Indian Development*. India: Allied Publishers Private Ltd, 1961.

Nanda, B.R., *Mahatma Gandhi - A Biography*. London: George Allen & Unwin Ltd, 1965.

Nayar, Kuldip, *Distant Neighbours - A Tale of the Subcontinent*. Delhi: Vikas Publishing House, 1972.

*India - The Critical Years,* Delhi: Vikas Publications - (c) Weiden-feld & Nicolson, 1971.

Nayar, Pyarelal, *Mahatma Gandhi - The Early Phase.* Ahmedabad: Navajivan House, 1965.

*Mahatma Gandhi - The Last Phase.* Ahmedabad: Navajivan House, 1965. (2 vols)

Nehru, Jawaharlal, *An autobiography.* India: Allied Publishers Private Ltd, 1962.

*The Discovery of India.* New York: The John Day Company, 1946.

*India's Freedom.* London: Unwin Books, 1965.

*Ma Vie et mes Prisons,* Paris: Denoel, 1952.

*Toward Freedom - The Autobiography of J.Nehru.* New York: The John Day Company, 1941.

Nichols, Beverley, *L'Inde Secrete.* Paris: Jules Tallandier, 1946.

Noon, Feroz Khan, *From Memory.* Lahore: Editions Feroz Sons Ltd, 1969.

Olivier-Lacamp, Max, *Impasse Indienne.* Paris: Flammarion, 1963. Les Deux Asies Paris: Grasset, 1966.

Paymaster, Rustom Burjorji, *Early History of the Parsees in India.* Bombay: Zartoshti Dharam Sambandhi, 1954.

Privat, Edmond, *Aux Indes avec Gandhi.* Paris: Denoel, 1960.

*Vie de Gandhi.* Geneve: Labor et Fides, 1949.

Rai, Satya M., *Partition of the Punjab - A Study of Its Effects On the Politics and Administration of the Punjab. 1947-1956.* New Delhi: Indian School of International Studies, 1965.

Rao, Shiva B., *India's Freedom Movement.* Delhi: Orient Longmans, 1972.

Robinson, Donald H., *The Raj. Greenwich* (Conn.): Fawcett Publications, Inc., 1971.

Rolland, Romain, *Gandhi et Romain Rolland (Correspondence, Extraits du Journal et Textes Divers)* Paris: Albin Michel, 1960.

Sahni, J.N., *The Lid Off.* New Delhi: Allied Publishers, 1971.

Satprem, *Par le Corps de la Terre ou le Sannyasin.* Paris: Robert Laffont, 1974.

Savarkar, V.D. *Hindutva - Who Is a Hindu?* Bombay: Veer Savarkar Prakashan, 1969.

Sayeed, Khalid B., *Pakistan - The Formative Phase 1857 1948.* London: Oxford University Press, 1968.

Schmid, Peter, *India - Mirage and Reality.* London: George G. Harrap, 1961.

Sen, L.P., *Slender Was the Thread.* Bombay: Orient Longmans, 1969.

Sheean, Vincent, *Lead, Kindly Light.* London: Cassell & Co., 1950.

*Mahatma Gandhi - A Great Life in Brief.* New York: Alfred Knopf, 1970.

Shujauddin, Muhammad, *The Life and Times of Noor Jahan.* Lahore: The Caravan Book House, 1967.

Singh, Joginder, *Sikh Ceremonies.* Chaudigarh: Sikh Religious Book Society, 1968.

Singh, Karan, *Contemporary Essays.* Bombay: Bharatiya Vidya Bhavan, 1971.

*Prophet of Indian Nationalism.* Bombay: Bharatiya Vidya Bhavan, 1970.

Singh, Kushwant, *India - A Mirror For its Monsters and Monstrosities.* Bombay: IBH Publishing Company, 1969.

*The Sikhs Today.* Bombay: Orient Longmans, 1967.

*Last Train to Pakistan.* London: Chatto & Windus Ltd, 1956.

Singh, Parkash, *Guru Nanak and His Japji.* Jullundur: Swan Printing Press, 1969.

Sinha, Durganaud, *Indian Villages in Transition - A Motivational Analysis.* New Delhi: Associated Publishing House, 1969.

Spear, Percival, A History of India. London: Penguin Books, 1970.

Srinivas, M.N., India's Villages. Bombay: Asia Publishing House. 1960.

Stocqueller, J.H., *The Hand Book of British India.* London: W.M.H. Allen & Co, 1854.

Swinson, Arthur, Mountbatten, War Leader Book No.6 New York: Ballantine Books Inc. (c) 1971, Arthur Swinson.

Symington, J.M.D., *In a Bengal Jungle - Stories of Life on the Tea Gardens of Northern India.* chapel Hill, N.C., 1935 chez Kegan Paul, London No.1708.

Tandon, Prakash, *Punjabi Century - The Fascinating Story of a Virile People.* Delhi: Hind Pocket Books, 1961.

Tendulkar, D.G., *Mahatma - Life of Mohandas Karamchand Gandhi* (In 8 volumes). New Delhi: The Publications Division, Ministry of Information and Broadcasting, Government of India, 1963. (Volume III, 1947 -1948.)

Terraine, John, *The Life and Times of Lord Mountbatten.* London: Arrow Books, 1970.

Tinker, Hugh, *Experiment with Freedom - India and Pakistan 1947.* London: Oxford University Press, 1967.

Tournaire, Helene, *Poivre Vert - L'Inde aux Rayons X.* Paris: Raoul Solar, 1965.

Trevelyan, Humphrey, *The India We Left.* London: Macmillan, 1972.

Trotter, L.J., *The Life of Hodson of Hodson's Horse.* London: Sweepman's Library, 1912.

Tuker, Francois, *While Memory Serves.* London: Cassell & Co Ltd, 1950.

Vasto, Lanza del. *Le Pe'lerinage aux Sources.* Paris: Denoel, 1943.

Verne, Jules, *La Maison a Vapeur - Voyage a Travers I'Inde Septentrionale.* Paris: Hachette, 1968.

Wainwright, Mary, and C.H. Philips, *The Partition of India.* London: George Allen & Unwin Ltd, 1970.

Woodruff, Philip, *The Men who Ruled India.* Vol. I: *The founders;* Vol. II; *The Guardians;* London: Jonathan Cape, 1954.

Yeats - Brown, F., *Les Trois Lanciers du Bengale.* Paris: Hachette, 1955.

Young, Desmond, *All the Best Years.* New York: Harper & Brothers, 1961.

## *II Official Documents*

ACTS OF PARLIAMENT

The Government of India Act
23 December 1919.
9& 10 Geo. V, c.101.

The Government of India Act
2 August 1935.
Geo. V. c.2.

The Indian Independence Act
18 July 1947.
10 & 11 Geo. VI, c.30.

INDIAN STATUTORY COMMISSION REPORT

(Vol. 1 Survey)
H.M. Stationery Office. 1930.

PARLIAMENTARY PAPERS

Cmd 6835 (1946)
India: Statement by the Cabinet Mission, 25 May 1946.

Cmd 6861 (1946)
India : Statement by the Cabinet Mission
Cmd 6862 (1946)
India (Cabinet Mission): Papers relating to:
(a) the Sikhs,
(b) the Indian States,
(c) the European Community,
May - June 1946.

Cmd 7047 (1947) Indian Policy Statement
20 February 1947.

Cmd 7136 (1947) Indian Policy Statement
3 June 1947.

TIME ONLY TO LOOK FORWARD

Speeches of the Earl Mountbatten of Burma as Viceroy of India and Governor - General of the Dominion of India 1947-1948, by Nicholas Kaye, London, 1949.

## III. *Newspapers and Periodicals*

ENGLAND

*The Round Table*, London.
*The Times*, London.
*Time Magazine*, London.

FRANCE

*Histoire pour Tous*
No.146-147 - Juin/Juillet 1972.
Extract: 'L'Inde Dechiree'
by Patrick Turnbull and Albert Vulliez.

*Histoire pour Tous*
No.150 - October 1972.
Extract: 'Lord Mountbatten en Birmanie'
by Albert Vulliez.
Boulogne Billancourt, Editions Rouff, 1972.

*Le Monde*, Paris.

INDIA

*Harijan*, Ahmedabad
*Illustrated Weekly of India*, Bombay.
*The Times of India*, Bombay.
*Dawn*, New Delhi.
*The Hindustan Times*, New Delhi.
*The Hindustan Times Weekly Review*, New Delhi.
*The Statesman*, New Delhi.

PAKISTAN

*Civil and Military Gazette*, Lahore.
*Pakistan Times*, Karachi

UNITED STATES

*The New York Times*, New York.

## *IV. Special Documents Relating to Gandhi's Murder and the Trial of his Assassins made available to Authors*

CRIME REPORTS

by J.D. Nagarvalla
30/01/48 to 28//0548.
Special Branch, CID, Bombay

GANDHI'S ASSASSINATION AND I

by Gopal Godse.
Asmita Prakashan, Poona, 1967.
(Available only in Maharathi)

REPORT OF INVESTIGATION MURDER

Sec. 302 IPC and Articles 4 & 5
Explosive Substances Act into the Conspiracy to Murder Mahatma Gandhi.
Dossier No. 663/A.
Office of the Deputy Commissioner of Police, Special Branch, CID, Bombay.

REPORT OF THE COMMISSION OF ENQUIRY INTO CONSPIRACY TO MURDER MAHATMA GANDHI

by J.L. Kapur, Judge of the Supreme Court of India. (6. Volumes) Government of Inida Press, New Delhi, 1970.

# குறிப்புகள்

## *அத்தியாயம் 1*

## ‘ஆளவும் அடிமைப்படுத்தவும் விதிக்கப்பட்ட ஒரு இனம்’

*கிளமெண்ட் அட்லியுடனான மவுண்ட்பேட்டன் பிரபுவின் பேச்சுக்கள், கடைசி வைஸ்ராயின் பேட்டியையும், அவர்களின் உரையாடல்கள் பற்றி அந்தச் சமயத்தில் அவரே எழுதி வைத்திருந்த குறிப்புகளையும் பெருமளவு ஆதாரமாகக் கொண்டவை. மவுண்ட்பேட்டன் பிரபுவின் நியமன முடிவுக்கான ஆதாரம், இந்தியாவுக்கான கடைசி வெளியுறவு அமைச்சரான லிஸ்டோவெல் பிரபுவின் பேட்டியிலிருந்து பெறப்பட்டது. புது டில்லியில் கிருஷ்ணமேனன் அளித்த ஒரு பேட்டியில், சர் ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸுடன் அவர் நடத்திய உரையாடல் விவரங்களைத் தெரிவித்தார். மவுண்ட்பேட்டனின் நியமனத்துக்கு நேருவும் காங்கிரசும் ஆதரவாக இருப்பார்கள் என்பதை அந்த உரையாடலின் போது அவர் வெளிப்படுத்தியிருந்தார்.*

*1947இல் லண்டன் நிலை பற்றிய வர்ணனை அந்தக் கால செய்தி ஏடுகள் மற்றும் பாரிஸ் மேட்சின் ரேமாண்ட் கார்டீர் அந்தச் சமயத்தில் லண்டன் நகர் பற்றி எழுதியிருந்த கோப்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை.*

*இந்தியாவில் பிரிட்டிஷாரின் அனுபவங்கள், இந்தியாவில் இருந்த பிரிட்டிஷார், ஐசிஎஸ் அதிகாரிகள், ராணுவ அதிகாரிகளின் வாழ்க்கை முறை பற்றிய விளக்கங்கள் எண்ணற்ற பேட்டிகளை ஆதாரமாகக் கொண்டவை. அவற்றில் முக்கியமானவை பின்வரும் முன்னாள் ஐசிஎஸ் அதிகாரிகளின் தொடர்ச்சியான பேட்டிகளாகும். ட்ரெவெலியன் பிரபு, சர் ஜார்ஜ் அபெல், கிறிஸ்டோஃபர் பீமண்ட், சர் ஓலஃப் கரோ, சர் கொனார்ட் கோர்ஃபீல்ட், சர் ஹெர்பெர்ட் தாம்ப்சன், ராஜேஷ்வர் தயாள், எஸ்.இ. அபோட், சர் ஜான் காட்டன் ஆகியோர் அவர்கள். பிரிட்டிஷ் இந்தியாவின் கடைசி ஆண்டுகள் (*The Last Years of British India*); இந்தியாவில் பிரிட்டன் (*Britain in India*); இந்தியாவில் பிரிட்டிஷ் சமூக வாழ்க்கை (*British Social Life in India*); பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், ஆட்சி முறையின் வீழ்ச்சி (*The Fall of the British Empire*); ஐசிஎஸ் தேர்வுகளுக்கான கையேடு 1892, (*A Hand book to the ICS Examinations, 1892*); பிரிட்டிஷ் இந்தியா பற்றிய கையேடு, 1854 (*The Hand book of British India, 1854*) ஆகிய நூல்களில் எழுதப்பட்ட ஆதாரங்களும் இதில் அடங்கும்.*

## *அத்தியாயம் 2*

## ‘தனித்து நட, தனித்து நட’

*காந்தியின் நவகாளி பயணம் பற்றிய பகுதிகள், பெரும்பாலும் அவருடன் பயணத்தில் பங்கேற்ற தனிச் செயலாளர் பியாரேலால் நய்யார், பியாரேலாலின்*

*சகோதரியும் மருத்துவருமான சுசீலா நய்யார் ஆகியோரின் பேட்டிகளை அடிப்படையாகக் கொண்டவை. காந்தியுடன் சென்ற குழுவில் இடம் பெற்றிருந்த குர்சரண் சிங், பிரிக்ஷன் சந்திவாலா, பத்மஜா நாயுடு, கேரங்காசாரி உட்பட காந்தியுடன் பயணம் செய்த குழு உறுப்பினர்களின் பேட்டிகளி லிருந்தும் கூட தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எழுத்து பூர்வமான ஆதாரங்களில் 'மகாத்மா காந்தி, இறுதிக் கட்டம்'* (Mahathma Gandhi, Last Phase) *என்ற நய்யாரின் 2000 பக்க காவியம் போல் பயன்பட்ட நூல் வேறொன்றும் இல்லை. அந்த நாட்களில் வெளிவந்த டைம்ஸ் ஆஃப் இந்தியா, தி ஹிந்துஸ்தான் டைம்ஸ், தி ஸ்டேட்ஸ்மேன் ஆகிய செய்தி ஏடுகளின் தகவல்களும் பயனளித்தன.*

*ரஹ்மத் அலி பற்றி ஆய்வு செய்யக் கணிசமான நேரத்தைச் செலவிட்ட லாகூரைச் சேர்ந்த வழக்கறிஞர் அன்வர் அலிதான் பாகிஸ்தான் பற்றிய அவரது மூலப்படியை எங்களுக்கு அளித்தார். அதிலிருந்துதான் 32 -33ஆம் பக்கங்களில் நாங்கள் மேற்கோளினைப் பயன்படுத்தியிருக்கிறோம். பாகிஸ்தான் என்ற லட்சியத்துக்கு மூலகாரணமாக இருந்த அந்த மனிதரின் பல உள் விவகாரங் களையும் நாங்கள் பெற்றோம்.*

## *அத்தியாயம் 3*
## 'இந்தியாவைக் கடவுளிடம் விடுங்கள்'

*அவரது மைத்துனரான ஆறாம் ஜார்ஜ் மன்னருடன் மவுண்ட்பேட்டன் நடத்திய உரையாடல்களுக்கான ஆதாரங்கள் மவுண்ட்பேட்டன் பிரபுவின் ஒரு பேட்டியிலிருந்தும், அவர்களுடைய பேச்சுவார்த்தை பற்றி அப்போது அவர் எழுதிய குறிப்புகளிலிருந்தும், மன்னரிடமிருந்து அவருக்குத் தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்ட கடிதத்திலிருந்தும் எடுக்கப்பட்டன. கடைசி வைஸ்ராயின் குணநலன்கள் பற்றிய படப்பிடிப்புக்கான தகவல்கள் மவுண்ட்பேட்டனே அளித்த பேட்டி, அவரது மகள்களான சீமாட்டி பிரபோர்ன், சீமாட்டி பமீலா ஹிக்ஸ், அவரின் பணியாளர் சார்லஸ் ஸ்மித், லெஃப்டினன்ட் கமாண்டர் பீட்டர் ஹோவெஸ், ஆலன் கேம்ப்பெல் ஜான்சன், அட்மிரல் ரொனால்ட் பிரோக்மன், கேப்டன் சர் ஜேம்ஸ் ஸ்காட் உட்பட அவரின் பல ஊழியர்கள் மற்றும் தோழர்களுடனான பேட்டி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. ஸ்வின்சன் எழுதிய மவுண்ட்பேட்டன், டெர்ரய்ன் எழுதிய மவுண்ட்பேட்டன் பிரபுவின் வாழ்க்கையும் காலங்களும்,* (Life and Times of Lord Mountbatten), *1921ஆம் ஆண்டு வேல்ஸ் இளவரசருடன் மேற்கொண்ட இந்தியப் பயணத்தின் போது மவுண்ட்பேட்டன் பிரபு எழுதிய நாட்குறிப்புகள் ஆகியவை எழுத்துப் பூர்வ ஆதாரங்களாக அமைந்தன*

*நவகாளியில் காந்தி பற்றி இடம் பெற்றுள்ள இரண்டு பகுதிகள் அத்தியாயம் 2இல் கூறப்பட்ட பேட்டிகளையும் எழுத்துப்பூர்வ தகவல்களையுமே அடிப்படையாகக் கொண்டவை. வாழ்க்கை வரலாறு பற்றிய பத்திகள் கீழ்க் குறிப்பிட்டுள்ளவர்களின் பேட்டிகளை ஆதாரமாகக் கொண்டவை. அவர்கள் விபரம்: நய்யார்கள் (பியாரேலால் நய்யார், சுசீலா நய்யார் - மொ-ர்), பிரிக்ஷன்*

*சந்திவாலா, குர்சரண்சிங், ஆச்சார்ய கிருபளானி, ஜெஹாங்கீர் படேல், பத்மஜா நாயுடு, வி.எல்.பண்டிட், வாலிகான், 'எல்லைகாந்தி' பாஷாகான், கிருஷ்ணமேனன், ரேமாண்ட் கார்டீர். எழுத்துப்பூர்வ ஆதாரங்கள்: ஷியானின், லெட் கைண்ட்லி லைட் அன்ட் காந்தி ; ஏ கிரேட் லைஃப் இன் ப்ரீஃப்; கூலிட்ஜ் எழுதிய, காந்தி; ஆஷே எழுதிய, காந்தி : எ ஸ்டடி இன் ரெவல்யூஷன்; பேனே எழுதிய, காந்தி; நய்யார் எழுதிய, காந்தி: தி லாஸ்ட் ஃபேஸ்; ஃபிஷர் எழுதிய, தி லைஃப் ஆப் மகாத்மா காந்தி; காந்தி எழுதிய, ஆன் ஆட்டோ பயோகிராஃபி ஆப் தி ஸ்டோரி ஆஃப் மை எக்ஸ்பிரிமெண்ட் வித் ட்ருத்; கிருபளானியின் காந்தி ஏ லைஃப்; மஜூம்தாரின், ஜின்னா அன்ட் காந்தி.*

*பிரிட்டிஷ் நாடாளுமன்ற விவாதம் பற்றிய பகுதிகள் ஹன்சார்டையும் (பிரிட்டிஷ் நாடாளுமன்ற நடவடிக்கைகள் பற்றிய அதிகார பூர்வ அறிக்கை ஹன்சார்ட் எனப்படும் - மொ-ர்) அந்தக் காலகட்டத்தின் செய்தி ஏடுகளையும் ஆதாரமாகக் கொண்டவை. மவுண்ட்பேட்டனின் புறப்பாடு பற்றிய வர்ணனை, மவுண்ட்பேட்டன் பிரபு, அட்மிரல் ப்ரோக்மேன், லெஃப்டினன்ட் கமாண்டர் ஹோவெஸ், சார்லஸ் ஸ்மித் ஆகியோரின் பேட்டிகளை அடிப்படையாகக் கொண்டவை.*

## *அத்தியாயம் 4*
## 'அழிந்து கொண்டிருக்கும் அரசுக்கு இறுதி முரசு'

*காந்தியின் அக்காள் பேத்தியான மனுவுடனான அவரது உறவு பற்றி விளக்கும் பகுதிகள், பியாரேலால் நய்யார், சுசீலா நய்யார் ஆகியோரின் பேட்டிகள் மற்றும் நய்யாரின் நூலினை ஆதாரமாகக் கொண்டவை. காந்தியின் சில மேற்கோள்கள் குறிப்பாக பம்பாயில் அவர் கனவு கண்டது பற்றிய தகவல்கள், அப்போது காந்தியே நடத்திக் கொண்டிருந்த ஹரிஜன் ஏட்டின் மூலப்பிரதிகளில் இருந்த அவரின் தலையங்கங்களிலிருந்து எடுக்கப்பட்டவை.*

*வேவல் பிரபுவுடன் மவுண்ட்பேட்டனின் சந்திப்பு பற்றிய விவரங்கள், மவுண்ட்பேட்டனின் பேட்டியிலிருந்தும், அவர்களின் உரையாடல்கள் பற்றி அப்போது அவர் எழுதிய சுருக்கமான குறிப்புகளிலிருந்தும் எடுக்கப்பட்டவை. மவுண்ட்பேட்டனின் துணைவியார் பற்றிய குறிப்புகள் பெரும்பாலும் அவரின் கணவர், இரண்டு மகள்கள், இந்தியாவில் அவருக்கு இருந்த மூன்று செயலாளர்களான மூரில் வாட்சன், எலிசபெத் வார்ட் காலின்ஸ், ஜெயா ததானி ஆகியோரின் பேட்டிகளை அடிப்படையாகக் கொண்டவை. 1921ஆம் ஆண்டு மவுண்ட்பேட்டனின் இந்தியப். பயணம் பற்றிய மேற்கோள்களும் நினைவுகளும் அவரின் தனிப்பட்ட நாட்குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டவை.*

*வைஸ்ராயே அளித்த பேட்டி மற்றும் சார்லஸ் ஸ்மித், கேப்டன் சர் ஜேம்ஸ் ஸ்காட், கேப்டன் எஃப். ஜே. புர்னபி - அட்கின்ஸ், லெஃப்டினன்ட் கமாண்டர் ஹோவெஸ், அட்மிரல் ப்ரோக்மேன் ஆகியோரின் பேட்டிகளே வைஸ்ராய் மாளிகைக்கு அவரின் வருகை, வைஸ்ராயாகப் பதவியேற்பு, இந்த விழாவுக்கான ஏற்பாடுகள் ஆகியவற்றுக்கு ஆதாரமானவை. அந்தக் காலகட்டத்து செய்தி ஏடுகளின் தகவல்கள், கேப்டன் ஸ்காட்டின் நாட்குறிப்பு, கேம்ப் பெல் ஜான்சனின் மிஷன் வித் மவுண்ட்பேட்டன் (என்ற நூல்), இந்த நூலின்*

*ஆசிரியர்களுக்கு எலிசபெத் காலின்ஸ் அளித்த விழா சம்பந்தமான கட்டளைக் காகிதங்கள், நிகழ்ச்சி நிரலின் மூலப்படி ஆகியவை எழுத்துப்பூர்வ ஆதாரங்களாக அமைந்தன. வைஸ்ராய் மாளிகை பற்றிய விவரங்களை லெஃப்டினன்ட் கமாண்டர் ஹோவெஸ் இந்நூலாசிரியர்களுக்கு வழங்கினார்.*

*தனது பணி பற்றி மவுண்ட்பேட்டனின் முதல் கருத்துகளுக்கான ஆதாரம், கடைசி வைஸ்ராயுடனான பேட்டிகள் மற்றும் ஆலன் கேம்ப்பெல் - ஜான்சன், லெஃப்டினன்ட் கமாண்டர் ஹோவெஸ், அட்மிரல் ப்ரோக்மேன், வைஸ்ராயின் ஐசிஎஸ் ஊழியர்களில் ஒருவரான பீட்டர் ஸ்காட் ஆகியோருடனான பேட்டி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். சர் ஜார்ஜ் அபெல் உடனான மவுண்ட்பேட்டனின் உரையாடலும் ஆதாரமாகும். அபெலுடைய பேட்டி இதற்கு அடிப்படையானது. இதனை மவுண்ட்பேட்டனும் உறுதி செய்தார்.*

## *அத்தியாயம் 5*

## ‘ஒரு முதியவரும் அவரின் தகர்ந்த கனவும்’

*நன்றியுரை பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி, இந்தியத் தலைவர்கள் ஒவ்வொருவரையும் சந்தித்து அவர்கள் தமது அலுவலக அறையைவிட்டுச் சென்ற உடனேயே மவுண்ட்பேட்டன் அந்தச் சந்திப்பு விவரங்களைத் தொகுத்துச் சொல்லி குறிப்பெழுதச் செய்திருக்கிறார். படேல், ஜின்னா, நேரு, காந்தி ஆகியோருடனான அவரது பேச்சுவார்த்தைக்கு இந்தக் குறிப்புகளே ஆதாரமாகக் கொள்ளப்பட்டன. எங்களது பேட்டிகளின் போதும் மவுண்ட்பேட்டன் இதையெல்லாம் நினைவு கூர்ந்தார். நேரடியான மேற்கோள்களும் அவற்றிலிருந்து பெறப்பட்டவையே.*

*நேரு குறித்த சித்தரிப்புக்கு, அவரின் மகளும் பிரதம மந்திரியுமான இந்திராகாந்தி, நேருவின் சகோதரி வி.எல். பண்டிட், மவுண்ட்பேட்டன் பிரபு மற்றும் நேருவின் செயலாளர்களான எச்.வி.ஆர்.ஐயங்கார், எம்.ஓ.மத்தாய், தர்லோக்சிங், எம்.ஏ.பெய்க் ஆகியோர் அளித்த பேட்டிகளே அடிப்படையாயின. பத்மஜா நாயுடு, துர்காதாஸ், ஆச்சார்ய கிருபளானி, கிருஷ்ணமேனன், ஆலன் கேம்ப் பெல் ஜான்சன், ஜெயா ததானி, உடன்பிறந்தார் மகனான ஆர்.கே. நேரு, ஆகியோர் அளித்த தகவல்களும் உதவியாக இருந்தன. தாஸ் எழுதிய, இந்தியா ஃப்ரம் கர்ஸன் டூ நேரு அன்ட் ஆஃப்டர், ஆர்.கே. கரஞ்சியாவின், தி மைன்ட் ஆஃப் மிஸ்டர் நேரு; நேரு எழுதிய, ஆன் ஆட்டோபயோ கிராஃபி, தி டிஸ்கவரி ஆஃப் இந்தியா; சானி எழுதிய, தி விட் ஆஃப் ஆகியவை எழுத்துப் பூர்வ ஆதாரங்களாக அமைந்தன.*

*படேல் பற்றிய சித்தரிப்புக்கு முதன்மையாக அமைந்த ஆதாரங்கள் அவரது மகள் மணிபென், அவரது செயலாளர் எஸ்.சங்கர் ஆகியோரின் பேட்டிகளேயாகும். துர்காதாஸ். சி.எச். பாபா, ஜெனரல் ஜே.என். சவுத்ரி, சர் ஜார்ஜ் அபெல், சர் கொனார்ட் கோர்ஃபீல்ட், ஆச்சார்ய கிருபளானி, ரேமாண்ட் கார்டீர், ஆகியோர் அளித்த தகவல்களும் உதவியாக இருந்தன.*

*மிக முக்கியமான எழுத்து ஆதாரங்களாக இருந்தவை தாசின், இந்தியா ஃப்ரம் கர்ஸன் டூ நேரு அன்ட் ஆஃப்டர், இதே ஆசிரியர் வெளியிட்டுள்ள விளக்கக் குறிப்புகளைக் கொண்ட, படேலின் கடிதங்கள் ஆகியவையே.*

*ஜின்னாவைப் பற்றிய சித்தரிப்புக்கு முக்கிய அடிப்படையாக அமைந்தவை அவரது மகள் தினா வாடியா, அவரது உடன்பிறந்தார் மகன் அக்பர் பீர்பாய், அவரது முதலாவது கடற்படை அதிகாரி வைஸ் அட்மிரல் சையத் அசன், பம்பாயைச் சேர்ந்த அவரது மருத்துவர் டாக்டர் ஜே.ஏ.எல். படேல், அவரது முதலாவது ராணுவ செயலாளரும் பாகிஸ்தான் தலைவருடன் அவர் பணிபுரிந்த காலத்தின் விவரமான நாட்குறிப்பைத் தந்தவருமான கர்னல் வில்லியம் பூர்னீ ஆகியோரது பேட்டிகளேயாகும். யூசுஃப் புர்ச், சையத் பின்ஸாடா, அன்வர் அலி, எம்.ஏ.பெய்க், மற்றும் அவரின் ஊழியர்கள், தோழர்கள், அவரது நண்பர்களில் சிலரான துர்காதாஸ், ஜே.என்.சாரி, ஜே.எம்.தாயீப் ஜி, அவரது மனைவிக்கு மிக நெருங்கிய தோழியான பத்மஜா நாயுடு ஆகியோரின் தகவல்களும் உதவியாக அமைந்தன.*

*அவரது நோய் பற்றிய விவரங்கள் அவரது மருத்துவர் மற்றும் மகளால் தெரிவிக்கப்பட்டவை. எழுத்துப்பூர்வ ஆதாரம் ஹெக்டர் போலிதோ எழுதிய ஜின்னா - தி கிரியேட்டர் ஆஃப் பாகிஸ்தான்.*

*கவர்னர்கள் மாநாடு பற்றிய பகுதிக்கு அடிப்படை ஆதாரமாக இருந்தது இந்த மாநாட்டின் நடவடிக்கைக் குறிப்புகளைத் தம் வசம் கொண்டிருந்த மவுண்ட்பேட்டன் பிரபுவின் பேட்டியாகும். இந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் எங்களால் பேட்டி காணப்பட்டவர்கள் சர் ஓலஃப் கரோ, சர் சந்துலால் திரிவேதி, சர் ஜார்ஜ் அபெல் ஆகியோர். மவுண்ட்பேட்டனின் பெஷாவர் மற்றும் பஞ்சாப் பயணம் பற்றிய வர்ணனைகளுக்கு ஆதாரங்களாக அமைந்தவை மவுண்ட்பேட்டன் மற்றும் சர் ஓலஃப் கரோ, பெஷாவர் காவல்துறையின் துணை கண்காணிப்பாளராக இருந்த அப்துல் ரஷீத், மக்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்திய அந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்த கர்னல் முகமதுகான் ஆகியோரின் பேட்டிகளாகும். ஜின்னாவுடனான காந்தியின் விவாதங்களுக்கு அடிப்படையாக இருந்தவை பியாரேலால் நய்யார், ஆச்சார்ய கிருபளானி ஆகியோரின் பேட்டிகளாகும்.*

## *அத்தியாயம் 6*
## ‘மதிப்புக்குரிய ஒரு சிற்றிடம்’

*சிம்லா பற்றிய வர்ணனைகளுக்கு அடிப்படையாக அமைந்தவை எம்.எஸ். ஓபராய், திருமதி பென் மாண்டேகு, சர் சந்துலால் திரிவேதி ஆகியோருடனான பேட்டிகள் மற்றும் 1895இல் வெளியிடப்பட்ட அந்த நகர் பற்றிய கவர்ச்சிகரமான விளக்கக் கையேடு, அந்த நகருக்கே சென்ற நேரடிப் பயணம். வைஸ்ராயின் ‘உள்ளுணர்வுகள்’ பற்றிய விவரங்கள் மவுண்ட்பேட்டன் பிரபு, ஆலன் கேம்ப்பெல் ஜான்சன், விஸ்டோவெல் கோமகன், அட்மிரல் ப்ரோக்மேன் ஆகியோரின் பேட்டிகளிலிருந்து பெறப்பட்டவை. நேருவின் கருத்து பற்றி தகவல் தெரிவித்தவர் அவருடனேயே இருந்த கிருஷ்ணமேனன். இந்தச் சம்பவம் பற்றிய மேலும் விவரங்களுக்கு அவரின் தனிப்பட்ட முறை யிலான குறிப்புகளைத் தந்துதவியவர் வி.பி.மேனனின் மகள் திருமதி டி. மிஸ்ரா.*

## அத்தியாயம் 7

## 'அரண்மனைகளும் புலிகளும், யானைகளும் அணிகலன்களும்'

*சர் கொனார்ட் கோர்ஃபீல்டின் லண்டன் பயணம் பற்றிய விளக்கங்கள் இதனோடு தொடர்பு கொண்ட இரண்டு முக்கியப் பிரமுகர்களான கோர்ஃபீல்ட் மற்றும் விஸ்டோவெல் கோமகனின் பேட்டிகளை அடிப்படையாகக் கொண்டவை.*

*மகாராஜாக்களின் வாழ்க்கை முறை, விசித்திரமான பழக்கவழக்கங்கள் ஆகியவை பற்றிய வர்ணனைகளுக்கு கோர்ஃபீல்ட், அவருக்குத் துணையாக இருந்த சர் ஹெர்பெர்ட் தாம்ப்ஸன், ஜெய்ப்பூர் மற்றும் குவாலியரின் ராஜ மாதாக்கள், பாட்டியாலா, ஃபரீத்கோட், கபூர்தலா, புந்தி, பரோடா, தீவாஸ் ஆகிய பகுதிகளின் மகாராஜாக்கள், மலெர்கோட்லாவின் நவாப் ஆகியோர் அளித்த பேட்டிகள் ஆதாரங்களாய் இருந்தன. ஹைதராபாத் நிஜாமின் சட்ட ஆலோசகரது விதவை மனைவி சீமாட்டி ருத்வென், சர் வால்டர் மாங்க்டன், சர் வால்டரின் உதவியாளர் ஜான் பைடன், நிஜாமின் ஊழியராக இருந்த பம்பாயைச் சேர்ந்த ஜெனரல் அலி யவர் ஜங், காலஞ்சென்ற காஷ்மீர் மகாராஜாவின் புதல்வரும், இந்தப் பட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் துறந்தவரும், இந்திய அரசில் அமைச்சராக இருந்தவருமான கரன்சிங், ராபின் டஃப் ஆகியோர் கொடுத்த தகவல்களும் பெருமளவு உதவிகரமாக இருந்தன. லார்ட் எழுதிய, தி மகாராஜாஸ், ஃபோர்பெஸ் எழுதிய, இந்தியா ஆஃப் தி பிரின்சஸ், மற்றும் டி கோலிஷ் எழுதிய, ஸ்ப்ளென்டர் எட் க்ரபெஸ்க்யூல் டெஸ் மகாராஜாஸ் ஆகியவை எழுத்துப்பூர்வ ஆதாரங்களாயின.*

## அத்தியாயம் 8

## 'கிரகங்களால் சபிக்கப்பட்ட ஒரு நாள்'

*மவுண்ட்பேட்டன் பிரபுவின் லண்டன் பயணம், அமைச்சரவை மற்றும் சர் வின்ஸ்டன் சர்ச்சிலுடனான அவரின் சந்திப்பு ஆகியவற்றுக்கான ஆதாரங்கள், மவுண்ட்பேட்டனின் பேட்டி, இந்தச் சந்திப்புகளுக்குப் பின் அவர் சொல்லி எழுதப்பட்ட குறிப்புகள், அப்போது லண்டனில் இருந்த சர் ஜார்ஜ் அபெல், இந்தியாவுக்கான வெளியுறவு அமைச்சராக இருந்தவரும், (அமைச்சரவையில்) முதலாவது கூட்டத்தில் கலந்து கொண்டவருமான லிஸ்டோவெல் கோமகன் ஆகியோருடனான பேட்டி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை.*

*மகாராஜாக்களின் செயல்கள் பற்றிய ஆவணங்களும் அவர்களின் பொருள்களும் அழிக்கப்பட்டது பற்றிய தகவல்கள் சர் கொனார்ட் கோர்ஃபீல்ட், அவரின் துணையாக இருந்த சர் ஹெர்பெர்ட் தாம்ப்ஸன் ஆகியோரது பேட்டிகளை அடிப்படையாகக் கொண்டவை. இந்திய மன்னர்களுடன் தனது சொந்த அனுபவங்கள், அவர்களின் செயல்கள், தனது வாழ்க்கை முறை பற்றி வெளியிடப்படாத கையெழுத்துப் பிரதிகளை இந்நூலாசிரியர்களில் ஒருவர் படிப்பதற்கும் சர் கொனார்ட் அனுமதித்தார்.*

*ஜூன் 2, 3 ஆகிய தேதிகளில் இந்தியத் தலைவர்களை மவுண்ட்பேட்டன் சந்தித்த விவரங்கள் அவரது பேட்டிகளிலிருந்தும், அவரது ஆவணக்*

*காப்பகத்திலுள்ள துல்லியமான நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்தும் திரட்டப்பட்டவை. இந்தக் குறிப்புகளிலிருந்துதான் நேரடியான மேற்கோள்கள் எழுதப்பட்டுள்ளன. காந்தி ஜின்னா ஆகியோருடன் மவுண்ட்பேட்டனின் உரையாடல்கள் அவரின் பேட்டிகளிலிருந்தும், அந்தச் சமயத்தில் அவர் எழுதிய குறிப்புகளிலிருந்தும் எழுதப்பட்டவை. பிரார்த்தனைக் கூட்ட காந்தியின் மேற்கோள்கள் 'ஹரிஜன்' இதழிலிருந்து எடுக்கப்பட்டவை. பத்திரிகையாளர் சந்திப்பு பற்றிய விவரங்கள் அந்தக் கூட்டத்தின் கையெழுத்துப்படி, மவுண்ட்பேட்டன் மற்றும் ஆலன் கேம்ப்பெல் - ஜான்சன் பேட்டிகள் ஆகியவற்றிலிருந்து ஒழுங்குபடுத்தி எழுதப்பட்டன. சோதிடர் களின் கருத்துகளுக்கு ஆதாரங்களாக அமைந்தவை மவுண்ட்பேட்டன் பிரபு, எம்.ஓ.மத்தாய், சுவாமி மனாரன் ஆகியோரின் பேட்டிகள், ஜோதிடச் சக்கரத்தின் மூலப்படியையும், வைஸ்ராய்க்கு அவர் எழுதிய கடிதத்தின் நகலையும் சுவாமி மனாரன் வைத்திருந்தார்.*

## *அத்தியாயம் 9*
## 'வரலாற்றில் பெரும் சிக்கலான பிரிவு'

*இந்தியாவின் சொத்துக்கள் பிரிக்கப்பட்ட விதம் பற்றிய விளக்கங்கள் இதற்குப் பொறுப்பாக இருந்த எச்.எம். படேல், சவுத்ரி முகமது அலி ஆகியோரின் பேட்டிகளை அடிப்படையாகக் கொண்டவை. இவர்களிடம் சமர்ப்பிக்கப் பட்ட முழுமையான அறிக்கைகள், இவர்களின் பரிந்துரைகள், கூட்டங்களின் நடவடிக்கைக் குறிப்புகள் ஆகியவை இந்நூலின் ஆசிரியர்களுக்குக் கிடைத்தன. வைஸ்ராய் மாளிகை வாகனங்கள் பிரிக்கப்பட்டது பற்றிய விவரம், லெஃப்டினன்ட் கமாண்டர் ஹோவெஸ், ஜெனரல் யாகூப் கான் ஆகியோரின் பேட்டிகளிலிருந்து எடுக்கப்பட்டது. இந்திய ராணுவம் பிரிக்கப்பட்டது சம்பந்தமான பகுதிகள் ஜெனரல் ராய் புக்கர், கர்னல் முகமது இத்ரிஸ், ஜெனரல் ஜே.என்.சவுத்ரி, ஜெனரல் ஃபிராங்க் மெஸெர்வி, ஃபீல்ட் மார்ஷல் சாம் மானெக்ஷா, ஜெனரல் டி.எம். மிஸ்ரா, ஜெனரல், ஜே.டி. சத்தரவாலா, மேஜர் ஜெனரல் ஏ. துபே ஆகியோரின் பேட்டிகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டவை. இந்திய ராணுவத்தின் சமீப கால வரலாறு மேசனின், மேட்டர் ஆஃப் ஹானர் என்ற நூலில் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. அதன் யுத்த தந்திரங்கள் மற்றும் போர் ஏற்பாடுகள் பற்றி சுவாரசியமான தகவல்கள் எலியட்ஸ் எழுதிய தி ஃ பிரண்டைர் 1839 - 1947 என்ற நூலில் காணப்பட்டவை.*

*ராட் கிளிஃபின் செயல்பாடுகள், சான்சலர் பிரபு மற்றும் கிளமெண்ட் அட்லி ஆகியோருடன் அவரது சந்திப்பு ஆகியவை அவரே நினைவு கூர்ந்து அளித்த ஒரு பேட்டி, அவரது நியமனம் தொடர்பாக லண்டனுக்கும் வைஸ்ராய் மாளிகைக்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரத்து ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. மவுண்ட்பேட்டன் பிரபுவுடனான அவரது முதல் சந்திப்புப் பற்றிய விவரங்கள் இவ்விருவரின் பேட்டிகளிலிருந்து எடுக்கப்பட்டவை. மன்னர்கள் பிரச்சனை குறித்த மவுண்ட்பேட்டனின் அணுகுமுறை விளக்கங்கள், மவுண்ட்பேட்டன் பிரபு, சர் கொனார்ட் கோர்ஃபீல்ட், படேலின் மகள், செயலாளர் ஆகியோருடனான பேட்டிகள்*

*மற்றும் வி.பி. மேனனின் தனிப்பட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டவை.*

*சுதந்திர இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக மவுண்ட்பேட்டன் பிரபு நியமிக்கப்பட்டது, இரண்டு புதிய நாடுகளுக்கும் இணைந்து கவர்னர் ஜெனரலாக இருந்தது பற்றிய எண்ணத்துக்கான முன்னோட்டம் ஆகியவை மூன் எழுதிய 'டிவைட் அன்ட் க்விட்' என்ற நூலிலும் கேம்ப்பெல் - ஜான்சனின் மிஷன் வித் மவுண்ட்பேட்டன் என்ற நூலிலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மேலும் இது பற்றிய விவரங்கள் மவுண்ட்பேட்டனின் பேட்டிகள், அவரது ஊழியர்கள் மற்றும் இந்தியத் தலைவர்களுடன் அவர் நடத்திய விவாதம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டவை.*

*பஞ்சாபில் பிரிவினைக்கு முன் ஏற்பட்ட பிரச்சனைகள், பஞ்சாப் காவல்துறையின் முன்னாள் அதிகாரிகளான ஜெரால்ட் சேவேஜ், ரூல்மூன், டபிள்யூ. எச்.ரிச், பேட்ரிக் ஃபார்மர் ஆகிய நால்வரின் பேட்டிகளிலிருந்து எடுக்கப்பட்டவை. பஞ்சாப் சிஐடி பிரிவின் வாராந்தர அறிக்கைகளின் நகல்களும் இந்த நூலாசிரியர்களுக்குக் கிடைத்தன. அகதிகளுடன் காந்தியின் முதல் தொடர்பு பற்றிய விவரம் பியாரேலால் நய்யாரிடமிருந்து பெறப்பட்டது.*

## *அத்தியாயம் 10*
## 'நாம் எப்போதும் சகோதரர்களாகவே இருப்போம்'

*பிரிட்டிஷ் அரசின் அனுமதிகளுக்கான ஆதாரம் அந்த நாளின் செய்தி ஏடுகளை அடிப்படையாகக் கொண்டது. மன்னர்கள் சபையில் மவுண்ட்பேட்டனின் இறுதியுரை, அவர்களின் பிரிவுபச்சார விருந்து, புதிய டொமினியன்களுள் ஒன்றில் சேருவதற்கு சில மன்னர்களுக்கு இருந்த தயக்கம் ஆகியவை பற்றிய விவரங்கள், மவுண்ட்பேட்டனின் பேட்டிகள் அவரது நடைமுறை குறிப்பேடுகள், இந்தப் பிரச்சனையை மிகவும் நெருங்கி கவனித்த இந்திய அதிகாரியான வி.பி.மேனனின் தனிப்பட்ட ஆவணங்கள், குவாலியர் மற்றும் ஜெய்ப்பூரின் ராஜமாதாக்கள், பாட்டியாலா, கபூர்தலா, மலெர்கோட்லா மகாராஜாக்கள், சர் கொனார்ட் கோர்ஃபீல்ட், சீமோட்டி மாங்க்டன், சர் ஹெர்பெர்ட் தாம்ப்ஸன், ஜான் பைட்டன் ஆகியோருடனான பேட்டிகள் ஆகியவற்றிலிருந்து எழுதப்பட்டவை. மவுண்ட்பேட்டன் பிரபுவின் காஷ்மீர் பயணம் பற்றிய விளக்கம், அவரது பேட்டிகளையும், அந்தச் சமயத்தில் அவர் சொல்லி எழுதப்பட்ட நினைவுக்குறிப்புகளையும், இந்தப் பயணம் பற்றி அவரது ஊழியர்களுடன் விவாதித்த நடவடிக்கைக் குறிப்புகளையும் அவரது பேச்சுவார்த்தை விவரம் குறித்து அட்லி அரசுக்கு அனுப்பிய அறிக்கையையும் ஆதாரங்களாகக் கொண்டது. ஜின்னாவைப் படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி பற்றிய விவரம், இந்தத் தகவலை டில்லிக்குக் கொண்டு வந்த ஜி.ஆர்.சேவேஜ், மவுண்ட்பேட்டன் பிரபு, இந்த சதித்திட்டம் சம்பந்தமாகக் கடைசி வைஸ்ராய் தனது ஆவணக் காப்பகத்தில் கண்டறிந்த சில ஆவணங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.*

*காந்தியைக் கல்கத்தாவுக்குச் செல்லுமாறு மவுண்ட்பேட்டன் கேட்டுக் கொண்டது பற்றிய பகுதி மவுண்ட்பேட்டனுடனான பேட்டிகள், பியாரேலால்*

நய்யார், பிரிக்ஷென் சந்திவாலா, கே. ரங்கசாமி ஆகியோருடனான பேட்டிகள் மற்றும் இவர்களுடன் மவுண்ட்பேட்டன் நடத்திய விவாதப் பதிவுகள் ஆகியவற்றிலிருந்து எழுதப்பட்டது.

ஜின்னா கராச்சிக்குப் புறப்பட்டது, அவரது விமானம் மறுசீரமைக்கப் பட்டது போன்ற விவரங்கள் அவரின் தனி நிலை உதவியாளர்களாக இருந்த அட்மிரல் அ்சென், விங் கமாண்டர் அட்டா ரபானி, கர்னல் வில்லியம் பிர்னி ஆகியோரின் பேட்டிகளிலிருந்து எழுதப்பட்டவை. ராட்கிளிஃப் பிரபுவின் எல்லைக்கோடு பற்றிய தீர்ப்பினை சுதந்திரப் பிரகடனம் வரை நிறுத்தி வைப்பதென்று மவுண்ட்பேட்டன் முடிவு செய்தார். இது பற்றிய விவரங்கள் மவுண்ட்பேட்டன், ராட்கிளிஃப் பிரபு, சர் ஜான் அபெல், ஆகியோரிடம் விவாதித்து எழுதப்பட்டன. இதற்காக ராட்கிளிஃப் பிரபு எப்படிப் பணியாற்றினார் என்ற விவரங்களுக்கு ராட்கிளிஃப் மற்றும் அவரது உதவியாளராக இருந்த ஐசிஎஸ் அதிகாரி எச்.சி. பீமண்ட் ஆகியோரின் பேட்டிகளே ஆதாரங்கள்.

டில்லி ஜிம்கானா கிளப்பில் நடந்த பிரிவுபச்சார விருந்து நிகழ்ச்சி பற்றிய தகவல்கள் இதில் கலந்து கொண்ட பலரின் பேட்டிகளிலிருந்து தொகுக்கப் பட்டவை.

## அத்தியாயம் 11
## உலகம் உறங்கிய வேளையில்

காந்தியின் கல்கத்தா நடவடிக்கைகள் பற்றிய விளக்கம், பியாரேலால் நய்யார், ஆர்.என்.பானர்ஜி, ராம் கோபர்பூன் ஆகியோரின் பேட்டிகளை அடிப்படை யாகக் கொண்டது. எழுத்துப்பூர்வ ஆதாரங்கள் தி லாஸ்ட் ஃபேஸ் என்ற நூல், ஹரிஜன் இதழ், மற்றும் அந்தக் காலத்தின் செய்தி ஏடுகள் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்டன. கராச்சி நகர வீதிகளில் ஜின்னாவுடனான மவுண்ட்பேட்ட னின் சவாரி பற்றிய செய்திகள் பெரும்பாலும் கடைசி வைஸ்ராயின் பேட்டிகளை அடிப்படையாகக் கொண்டவை. மிஷன் வித் மவுண்ட் பேட்டன் என்ற நூலும், அந்தக் காலகட்ட செய்தி ஏடுகளும் எழுத்துப்பூர்வ ஆதாரங்களாகும்.

கைபர் கணவாய், லாகூர், புதுடில்லி, பம்பாய் உள்ளிட்ட பல இடங்களில் சுதந்திரத்தின் இரவு பற்றிய வர்ணனைகள் ஏகப்பட்ட ஆதாரங்களிலிருந்து திரட்டப்பட்டவை. மவுண்ட்பேட்டன், ஆலன் கேம்ப்பெல் ஜான்சன், ஜெனரல்கள் யாகூப்கான், மெஸெர்வி, லாக்ஹார்ட், புச்சர் மற்றும் சௌத்ரி, கர்னல் பிர்னி, பிரிகேடியர் முகமது இத்ரிஸ், ஆர்.இ. டபிள்யூ அட்கின்ஸ், அன்வர் அலி, காஜா மொஹிதீன், நாடாளுமன்றத்தில் அன்று தேசிய கீதம் பாடிய திருமதி சுசேதா கிருபளானி, எச்.வி.ஆர். ஐயங்கார், திருமதி வி.எல். பண்டிட், ஜெனரல் டி. மிஸ்ரா, அவரது துணைவியார், டாக்டர் சுசீலா நய்யார், கர்னல் முகமது ஷரீஃப் கான், ரூல்டீன், டபிள்யூ. எச். ரிச் உள்ளிட்ட பலரது பேட்டிகளை அவை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இந்த விழாவுக்கான அரசு நிகழ்ச்சி நிரல்கள், அந்தக் காலகட்டத்து செய்தி ஏடுகள், மவுண்ட்பேட்டன் பிரபு மற்றும் அவரது துணைவியார், இந்த விழா பற்றி

*தயாரித்த சிறப்பு அறிக்கைகள், இந்த நூலாசிரியர்களுக்குக் கிடைத்த ஏராளமான கடிதங்கள் மற்றும் நாட்குறிப்புகள் போன்றவை எழுத்துப் பூர்வ ஆதாரங்களாகப் பயன்பட்டன. நேருவின் தொலைபேசி உரையாடல் பற்றிய தகவல்கள், அன்று இரவு நடந்த விருந்து நிகழ்ச்சியில் விருந்தாளியாக இருந்த பத்மஜா நாயுடுவால் நினைவுகூரப்பட்டவை. மவுண்ட்பேட்டனைத் தலைவர்கள் சந்தித்தது பற்றி எழுதப்பட்டுள்ள பகுதி, அவரே அந்தத் தருணம் பற்றி நினைவுப்படுத்திக் கூறிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டது.*

*அத்தியாயம் 12*

## 'சுதந்திரத்தின் அழகிய விடியல்'

*பனாரஸ் மற்றும் சத்ராபூர் கிராமம் குறித்த வர்ணனைப் பகுதி சில பேட்டிகளையும் அந்த இரண்டு இடங்களுக்குச் சென்று நடத்திய ஆய்வுகளையும் அடிப்படையாகக் கொண்டது. ஆகஸ்ட் 15 அன்று டில்லியிலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் நடைபெற்ற சுதந்திர தின விழாக்கள் பற்றிய வர்ணனைகள் அலெண்டேல் பிரபு, எலிசபெத் காலின்ஸ், கமோடோர் ருசிகாந்தி, லெஃப்டினன்ட் கர்னல் சர் மார்டின் கில்லியாட், லெஃப்டினன்ட் கமாண்டர் ஹோவெஸ், ஜெனரல் வாக்ஹார்ட், கேப்டன் ஸ்காட், துக்கால் சிங், இந்திராகாந்தி, மவுண்ட்பேட்டன் பிரபு, ராம் கோபர்பன், குஷ்வந்த் சிங், ஜெனரல் ஷாஹித் ஹமீத், ஜெனரல் ஹபிபுல்லா, பத்மஜாநாயுடு, அகமது ஸாகூர் ஆகியோரின் பேட்டிகளிலிருந்து திரட்டப்பட்டவை. லண்டனுக்கு வைஸ்ராய் அனுப்பிய இறுதி அறிக்கை, கேப்டன் ஸ்காட்டின் நாட்குறிப்பு, அந்தக் காலகட்டத்தில் எலிசபெத் காலின்ஸ் எழுதிய கடிதங்கள், அந்நாளின் செய்தி ஏட்டுத் தகவல்கள், அரசு நிகழ்ச்சி நிரல்கள் ஆகியவை இதற்கு எழுத்துப்பூர்வ ஆதாரங்களாய் இருந்தன. பமீலா மவுண்ட்பேட்டனின் அனுபவங்கள் அவரது பேட்டி மற்றும் புதுடில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு நூலகத்தில் அந்தச் சம்பவம் பற்றி கிடைக்கும் அவரது கையெழுத்துப் பிரதி வரலாற்றுத் தொகுப்பிலிருந்தும் எழுதப்பட்டவை.*

*அமிர்தசரஸ் ரயில் நிலையத்திற்கு வந்த ரயில்கள் பற்றிய கதை ரயில் நிலைய அதிகாரியான சானிசிங் நினைவுப்படுத்திக் கூறியவை. பூனாவில் ஆர்எஸ்எஸ் கொடியேற்றப்பட்டது பற்றிய பகுதி, அந்த நிகழ்ச்சி பற்றி இந்து ராஷ்ட்ராவில் இடம் பெற்ற செய்தி, நாதுராம் கோட்சேயின் சகோதரர் கோபால் கோட்சேயின் பேட்டி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. காணாமல் போன சீல்கள் இல்லாமல் பால்மோரலுக்குப் பயணம் செய்த சம்பவம் பற்றி லிஸ்டோவெல் பிரபுவே கூறினார். கிளமெண்ட் அட்லியின் பயணம் பற்றிய தகவல்களை சர் ஜார்ஜ் அபெல் அளித்தார். ராட் கிளிஃபின் எல்லை வரையறையை இந்தியத் தலைவர்களிடம் மவுண்ட்பேட்டன் அளித்த சந்திப்பு பற்றிய வர்ணனை மவுண்ட்பேட்டன் பிரபுவின் பேட்டி, அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்டவை. ராட்கிளிஃபின் பயணம் பற்றிய விளக்கம், அவரிடமும், எச்.சி. பியூமான்ட் உடனும் எடுத்தப் பேட்டிகளை அடிப்படையாகக் கொண்டது.*

## *அத்தியாயம் 13*
## 'நமது மக்கள் பைத்தியமாகி விட்டார்கள்'

## *அத்தியாயம் 14*
## வரலாற்றில் மாபெரும் புலம் பெயர்வு

*பஞ்சாபில் இரு வகுப்பாரிடையேயான கொலைச் சம்பவங்கள், அகதிகளின் தப்பியோடல், ரயிலில் நடந்த படுகொலைகள், இரு சமூகங்களிலிருந்தும் பெண்கள் கற்பழிப்பு, கடத்தல் ஆகியவை பற்றி இவ்விரண்டு அத்தியாயங் களிலும் உள்ள பகுதிகள், இந்த நூலுக்கான பணியில் ஈடுபட்ட போது இரு தரப்பிலும் பேட்டி காணப்பட்ட 400 அகதிகள் நினைவுபடுத்திக் கூறிய வற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட சில அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டவை. தேவைப்படும் இடங்களில் மிகவும் ஆதாரபூர்வமாக இருந்த தனிப்பட்ட அனுபவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மற்றவை இரண்டாவது ஆதாரங்களுடன் சரிபார்த்து அளிக்கப்பட்டுள்ளன. இந்த நூலின் 13, 14 ஆகிய அத்தியாயங்களில் பெயர் குறிப்பிடப்பட்ட அகதிகள் தவிர மேலும் பலருடன் காணப்பட்ட பேட்டிகளையும் கலந்து எழுதப்பட்டுள்ளது. இந்தியப் பகுதியில் இருந்த பஞ்சாபின் பாதி மாகாணத்து கவர்னரான சர் சந்துலால் திரிவேதி; இந்திய எல்லைப் பகுதியிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்ற அகதிகளுக்கு ராணுவப் பாதுகாப்பை மேற்பார்வையிட்ட மேஜர் ஜெனரல் எம்.எஸ்.சோப்ரா; பாகிஸ்தானின் ஜெனரல் ராஸா, ஷாஹித் ஹமீத், அக்பர்கான்; வன்முறைக்கு மூலகாரணம் பற்றி வெளியிடப்படாத பல தகவல்களை அளித்த லெஃப்டினன்ட் கர்னல் நவாப் சர் மாலிக் காஸர்கான் திவானா; ஜி.டி. ஹாரிங்டன் ஹோவெஸ்; கர்னல் ஏ. டி. இலிஃப்; ஆர். இ. டபிள்யூ. அட்கின்ஸ், எட்வர்ட் பெர் ஆகியோரின் பேட்டிகளும் சேர்க்கப்பட்டன. சமகாலச் செய்தி ஏடுகளின் தகவல்கள்; இந்திய எழுச்சி பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ள ஜி.டி. கோஸ்லாவின் ஸ்டெர்ன் ரெக்கனிங் என்ற நூல்; அவசரக்காலக் குழுவின் பதிவேடுகள் மற்றும் நடவடிக்கைக் குறிப்புகள்; மவுண்ட்பேட்டனின் துணைவியாரால் செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் அமைப்புக்காக அகதிகள் பிரச்சனை பற்றி விரிவாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை; டி.எஃப் கரலாவின் நூலான ஃப்ரீடம் மஸ்ட் நாட் ஸ்டிங்க்; மூன் எழுதிய டிவைட் அன்ட் க்விட்; கேம்ப்பெல் - ஜான்சனின் மிஷன் வித் மவுண்ட்பேட்டன்; ஹாட்சனின் தி கிரேட் டிவைட்; குல்தீப் நய்யாரின் டிஸ்டன்ட் நெய்பர்ஸ் ஆகியவை எழுத்துப்பூர்வமான ஆதாரங்களாகும். அந்தக் கட்டம் பற்றிய சிறந்த புதினமான குஷ்வந்த் சிங்கின் லாஸ்ட் ட்ரெயின் டு பாகிஸ்தான் என்பதிலும் தகவல்கள் கிடைத்தன.*

*கல்கத்தாவில் காந்தி நிகழ்த்திய அற்புதம் பற்றிய தகவல்கள், பியாரேலால் நய்யாருடனான பேட்டி, அவரது நூலான தி லாஸ்ட் ஃபேஸில் இடம் பெற்ற தகவல்கள், பிரிக்ஷன் சந்திவாலா, நிர்மல் குமார் போஸ், ராம் கோபர்பன் ஆகியோரின் பேட்டிகள், சமகால செய்தி ஏடுகளின் தகவல்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. பஞ்சாபில் நேருவும் லியாகத் அலிகானும் சுற்றுப் பயணம் செய்தது பற்றிய விளக்கம், அவர்களுடன் சென்ற எச்.வி.ஆர்.*

ஐயங்கார், மேஜர் ஜெனரல் துபே ஆகியோருடனான பேட்டிகளை அடிப்படையாகக் கொண்டதாகும். சிம்லாவிலிருந்து மவுண்ட்பேட்டன் டில்லிக்கு அழைக்கப்பட்டது சம்பந்தமான பகுதிகள், முதலாவதாக அவரது பேட்டிகளையும் அந்தச் சமயத்தில் அவர் தயாரித்த ரகசிய அறிக்கையையும் அடிப்படையாகக் கொண்டவை. இரண்டாவதாக வி. பி. மேனனின் கடிதங்கள், அவரது மகள் மற்றும் இந்தியா நெருக்கடியை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று அரசின் மூத்த அதிகாரிகள் அறிந்து கொண்டபோது அவருடன் இருந்த எச்.வி.ஆர். ஐயங்கார் ஆகியோருடனான பேட்டிகள் அடிப்படையாகும்.

அவசரக்காலக் குழுவின் ஆரம்பக் கூட்டம் மற்றும் செயல்பாடு பற்றிய தகவல் அதன் நடவடிக்கைக் குறிப்புகள், கேம்ப்பெல்-ஜான்சனின் மிஷன் வித் மவுண்ட்பேட்டன் என்ற நூலின் பகுதிகள், மவுண்ட்பேட்டன் பிரபு, சி.எச் பாபா, எச்.வி.ஆர். ஐயங்கார் ஆகியோருடனான பேட்டிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

மதன்லால் பாவா தப்பி வந்த நிகழ்ச்சி, பின்னர் டாக்டர் பார்ச்சூர், விஷ்ணு கார்காரே ஆகியோருடனான அவனின் தொடர்புகள் ஆகியவை இந்த மூன்று பேரின் நேர்காணலிலிருந்து எழுதப்பட்டவை. பூட்டாசிங் மற்றும் அவரது மகள் சம்பந்தப்பட்ட கதை இந்த அத்தியாயத்திலும் முடிவுரையிலும் கூறப்பட்டுள்ளது. அவரது மகளின் வளர்ப்புத் தாயான ரபியா சுல்தான் க்வாரியுடனான பேட்டி, அவரது விசாரணை மற்றும் மரணம் பற்றி லாகூர் செய்தித் தாள்களில் வெளியான தகவல்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

## அத்தியாயம் 15
## 'காஷ்மீர் – காஷ்மீர் மட்டுமே!'

மகாராஜாவின் தீபாவளிக் கொண்டாட்டங்களின் போது விளக்குகள் அணைந்து போனது பற்றி எழுதப்பட்டிருப்பதற்கான ஆதாரம், அவரது மகன் டாக்டர் கரன்சிங், ஸ்ரீநகரில் அப்போது குடியிருந்த பிரிட்டிஷ்காரரான ஃபிளாரன்ஸ் லாட்ஜ் ஆகியோரின் பேட்டிகளாகும். காஷ்மீரில் ஓய்வெடுக்க ஜின்னா மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய குறிப்புகள் அப்போது கர்னலாக இருந்த பிர்னியின் நாட்குறிப்பிலிருந்து பெறப்பட்டவை. காஷ்மீரைப் பழங்குடி மக்கள் ஆக்ரமிப்பு செய்ய பாகிஸ்தான் அரசு எவ்வாறு திட்டம் தீட்டியது என்பது பற்றிய விவரத்தை இந்தத் திட்டத்துடன் துவக்கத்திலிருந்தே தொடர்புடைய ஜெனரல் அக்பர் கான் தெரிவித்தார். ஆக்ரமிப்பு மற்றும் தாக்குதலுக்கான தயாரிப்புகள் பற்றிய தகவல்களைத் தந்தவர்கள் இதில் பெருமளவு நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்த சைரப் கயாத்கான், கர்னல் முகமது ஷரீஃப் கான் ஆகியோர். இரு நாடுகளின் ராணுவத்தில் இருந்த பிரிட்டிஷ் தளபதிகளுக்கிடையேயான தொலைபேசித் தொடர்புகள் பற்றிய வர்ணனைகள் ஜெனரல்கள் மெஸெர்வி, லாக்ஹார்ட், புச்சர் ஆகியோர் அளித்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. மகாராஜாவின் வெளியேற்றம் பற்றி அவரது மகன் டாக்டர் கரன்சிங் விவரித்தார். இது பற்றி டில்லியில் ஏற்பட்ட பிரதிபலிப்புகள், மகாராஜாவை இணைப்புக்கு இணங்கச்

*செய்வதற்கு வி.பி.மேனனின் பயணம் ஆகியவை, மவுண்ட்பேட்டன் பிரபு, ஃபீல்ட் மார்ஷல் சாம் மானக்ஷா, ஷேக்அப்துல்லா, சர் அலெக்சாண்டர் சைமன்ஸ், வி.பி.மேனனின் மகள் திருமதி டி.மிஸ்ரா ஆகியோருடனான பேட்டிகளும், 1973ஆம் ஆண்டு இந்த நூலின் ஆசிரியர்களால் காணப்பட்ட வி.பி.மேனனின் தனிப்பட்ட குறிப்புகள், மகாராஜாவின் இணைப்புக்குப் பிறகு இதில் தலையிடத் தீர்மானித்த இந்தியப் பாதுகாப்புக் குழுவின் நடவடிக்கைக் குறிப்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. மோதலுக்கான மூலக்கூறுகள் பற்றிய சுவாரசியமானத் தகவல்கள், இருதரப்பிலும் ராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகத் திகழ்ந்த இந்தியாவின் ஜெனரல் எல்.பி. சென் எழுதிய 'ஸ்லெண்டர் வாஸ் தி கிரேட்' என்ற நூலிலிருந்தும், ஜெனரல் அக்பர்கான் எழுதிய ரெய்டர்ஸ் இன் காஷ்மீர் என்ற நூலிலிருந்தும் எடுக்கப்பட்டவை. ஸ்ரீநகரைச் சுற்றி நடந்த துவக்க நிலை ராணுவ நடவடிக்கைகள் பற்றிய சிறப்பு மிக்க விரிவான தகவல்களை ஜெனரல் ஹர்பக்ஷ் சிங் அளித்தார்.*

## *அத்தியாயம் 16*
## பூனாவிலிருந்து இரண்டு பிராமணர்கள்

*காந்தியைக் கொலை செய்தவர்கள் பற்றி எழுதப்பட்டிருப்பதற்குரிய ஆதாரங்கள் அத்தியாயம் 17க்கான குறிப்பில் விரிவாகத் தரப்பட்டுள்ளன. இந்து ராஷ்ட்ரா திறப்பு விழா பற்றிய வர்ணனை கோபால் கோட்சே, விஷ்ணு கார்காரே ஆகியோரின் பேட்டிகளையும், அந்த நிகழ்ச்சி பற்றி அந்தப் பத்திரிகையிலேயே இடம் பெற்றக் குறிப்புகளையும் ஆதாரமாகக் கொண்டது. காவலரின் கண்காணிப்பு பற்றிய தகவல் கபூர் கமிஷனால் விவரிக்கப்பட்டது.*

*பானிப்பட்டில் காந்தியின் நடவடிக்கைகள் பற்றி எழுதப்பட்டிருப்பது, பியாரேலால் நய்யாரின் பேட்டிகள், அந்த நகரில் இதனை நேரில் கண்டவர்கள், தி லாஸ்ட் ஃபேஸ் என்ற நூல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். ஜின்னாவின் உடல்நிலைத் தளர்வு, 1947 வசந்த காலத்தில் அவரது கவலைகள் பற்றிய பகுதிகள் அவரின் முன்னாள் உதவியாளர் அட்மிரல் அசன், ராணுவ செயலாளர் கர்னல் பிர்னி ஆகியோரின் நாட் குறிப்பை ஆதாரங்களாகக் கொண்டவை. இந்த அத்தியாயத்தை நிறைவு செய்யும் காந்தியுடனான மவுண்ட்பேட்டனின் உரையாடல்கள் பற்றிய விவரம் மவுண்ட்பேட்டனின் பேட்டிகளிலிருந்தும் அது பற்றிய அவரின் சொந்தக் குறிப்புகளிலிருந்தும் பெறப்பட்டது.*

## *அத்தியாயம் 17*
## 'காந்தி இறக்கட்டும்!'

*காந்தியின் கடைசி உண்ணாவிரதம் பற்றிய தகவல்கள், அவருக்கு மருத்துவராக இருந்த டாக்டர் சுசீலா நய்யாரின் இரண்டு நீளமான பேட்டிகள், அந்தச் சமயத்தில் அவர் எழுதி வைத்திருந்த குறிப்புகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டவை. காந்தியின் செயலாளர் பியாரேலால் நய்யார், அவரது நெருங்கிய*

*சகாவான பிரிக்ஷன் சந்திவாலா, டில்லியில் அவரது ஊழியர்களுக்குச் சேவை செய்த குர்சரண் சிங் ஆகியோரும் குறிப்பிடும்படியாக உதவி செய்தனர். டிடபிள்யூ. மெஹ்ரா, பத்மஜா நாயுடு, மவுண்ட்பேட்டன் பிரபு, ஜி.என். சின்ஹா ஆகியோரும் இந்தப் பகுதிக்காகப் பேட்டி காணப்பட்டனர். எழுத்துப்பூர்வ ஆதாரங்களாக இருந்தவற்றில், அந்தக் காலகட்ட செய்தி ஏடுகளின் குறிப்பாக காந்தியின் சொந்த வெளியீடான ஹரிஜன் பத்திரிகையின் குறிப்புகள், நய்யாரின் தி லாஸ்ட் ஃபேஸ், சந்திவாலாவின் அட் தி ஃபீட் ஆஃப் பாபு, மனுவின் லாஸ்ட் கிளிம்ப்சஸ் ஆஃப் பாபு ஆகிய அவரின் சகாக்கள் எழுதிய மூன்று நூல்கள் ஆகியவையும் அடங்கும்.*

## *அத்தியாயம் 18*
## 'மதன்லால் பாவாவின் வஞ்சம்'

## *அத்தியாயம் 19*
## 'காவலர்கள் நம்மைப் பிடிக்கு முன் நாம் காந்தியை முடிக்க வேண்டும்'

## *அத்தியாயம் 20*
## இரண்டாவது சிலுவையேற்றம்

*காந்தியைக் கொலை செய்தவர்களான நாதுராம் கோட்சேயும், நாராயண் ஆப்தேயும் 1949இல் தண்டனை விதிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்கள். இந்தக் கொலைக்குத் தூண்டுதலாயிருந்த வீர சவார்க்கர் 1966இல் மரணமடைந்தார். இந்தக் கொலைச் சதியில் பங்கேற்ற மற்றவர்களான கோபால் கோட்சே, விஷ்ணுகார்காரே, மதன்லால் பாவா, திகம்பர் பாட்கே, தத்தாத்ரேய பார்ச்சூர் ஆகியோர் இந்த நூலுக்கான ஆய்வுப்பணி துவங்கிய போது உயிரோடிருந்தனர். இவர்களில் முதல் மூன்று பேர் சிறைத் தண்டனையை முடித்து வெளியே இருந்தனர். அனைவரையும் கண்டுபிடித்து விரிவாகப் பேட்டி காணப்பட்டது. மேலும் வழக்கு விசாரணைக்குப் பின் முதன் முறையாக கோட்சேயும், கார்காரேயும் இந்த நூலின் ஆசிரியர்களால் மீண்டும் டில்லிக்கு அழைத்து வரப்பட்டனர். இரண்டு முறை கொலை முயற்சி செய்தபோது டில்லியில் அவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் அவர்களுடன் நாங்களும் சென்று திரும்பினோம். ரயில் நிலையத்தின் ஓய்வு அறை, பிர்லா கோயில், இலக்குக்காகப் பயிற்சி மேற்கொண்ட வனப்பகுதி, அவர்கள் கொலைச் செயலை நிறைவேற்றிய பிர்லா மாளிகையின் மைதானம் ஆகியவற்றுக்குச் சென்றிருந்தோம். இங்கே கொலைச் சம்பவத்தை மீண்டும் விளக்கிக் காட்டினார்கள். அவர்களது பத்திரிகையின் தலைமையிடமான பூனாவில் கோட்சே மற்றும் ஆப்தேயின் பல நண்பர்களிடமும் அடிக்கடி அவர்கள் செல்லும் பிற இடங்களுக்கும் இந்த நூலாசிரியர்களை அவர்கள் அழைத்துச் சென்றார்கள். கோபால் கோட்சே தனது சகோதரர் பற்றி மராத்தி மொழியில் தயாரித்திருந்த வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளையும் அளித்தார்.*

காந்தியைக் கொன்றதற்கான சதிச்செயல் பற்றி புலன் விசாரணையில் ஈடுபட்டிருந்த ஜிம்மி நகர்வாலா, டி.டபிள்யு. மெஹ்ரா ஆகிய இரண்டு காவல்துறை அதிகாரிகளை விரிவாகப் பேட்டி கண்டோம். பம்பாய் காவல்துறை நாட்குறிப்பையும், அவரே பராமரித்த கோப்புகளையும் நகர்வாலா அளித்தார். டில்லியில் நடைபெற்ற புலன் விசாரணை தொடர்பான தகவல்களைப் பெயர் கூற விரும்பாத ஒரு அதிகாரி இந்த நூலாசிரியர்களிடம் அளித்தார். இந்த வழக்கு விசாரணையின் முழுமையான குறிப்புகளை புதுடில்லி நேரு நூலக இயக்குநர்கள் எங்களுக்குத் தந்து உதவினர். அந்தக்காலத்தில் இதைக் கொடுப்பதில் கட்டுப்பாடுகள் இருந்தன. காரணம் இதிலே நாதுராம் கோட்சே தனது செயலை நியாயப்படுத்தி மிகவும் உணர்ச்சிபூர்வமாக அளித்திருந்த வாக்குமூலம்தான். கொலைகாரர்கள் சம்பந்தமாகவும், காவல்துறையினரின் புலனாய்வு சம்பந்தமாகவும் இந்தப் பகுதியில் உள்ள தகவல்கள் இவற்றை ஆதாரமாகக் கொண்டவையே.

பாகிஸ்தானுக்குப் பயணம் செய்யும் காந்தியின் திட்டம் பற்றிய செய்திக்கு ஆதாரம் ஜஹாங்கீர் படேல், சுசீலா நய்யார், பியாரேலால் நய்யார் ஆகியோரின் பேட்டிகளாகும். காந்தியின் கடைசி நாட்கள் பற்றிய வர்ணனைகள் இந்த மூன்று பேரின் பேட்டிகளோடு, குர்சரண் சிங், காந்தியுடன் படேல் கடைசியாகப் பேசிக் கொண்டிருந்த போது உடனிருந்த அவரின் மகள் மனுபென் படேல், அப்துல் கனி ஆகியோரின் பேட்டிகளையும் அடிப்படையாகக் கொண்டவை. தி லாஸ்ட் ஃபேஸ், அட் தி ஃபீட் ஆஃப் பாபு, லாஸ்ட் கிளிம்ப்சஸ் ஆஃப் பாபு ஆகிய நூல்கள் எழுத்துப் பூர்வ தகவல் ஆதாரங்களாகும்.

காந்தியின் இறுதிச் சடங்குகள் அவற்றுக்கான ஏற்பாடுகள் பற்றிய விளக்கப் பகுதிக்கு ஆதாரங்களாக அமைந்தவை, மவுண்ட்பேட்டன் பிரபு, பியாரேலால் நய்யார், ஆலன் கேம்ப் பெல் - ஜான்சன், ஜெனரல் சர் ராய் புக்கர், ஜெனரல் ஜே.என். சவுத்ரி, எலிசபெத் காலின்ஸ், ஃபீல்ட் மார்ஷல் சாம் மானக்ஷா மற்றும் பலரின் பேட்டிகளாகும். சமகாலத்து நாளேடுகளின் செய்திகள், தி லாஸ்ட் ஃபேஸ், மிஷன் வித் மகாத்மா உள்ளிட்ட நூல்கள் எழுத்துப்பூர்வ ஆதாரங்களாகும்.

அவரது அஸ்தி அலகாபாதில் கரைக்கப்பட்டது பற்றிய செய்தி பத்மஜா நாயுடுவின் பேட்டியை அடிப்படையாகக் கொண்டது. அது பற்றிய மேலும் தகவல்கள் ஷியான் எழுதிய லீட் கைன்ட்லி லைட் என்ற நூலிலிருந்து கிடைத்தன.

# பெயர் முதற் குறிப்பகராதி


அகமது அப்பாஸ் 411
அகமதாபாத் 85, 91, 151, 360
அகமது அன்வர் 469
அகமது நகர் 132, 461, 499, 507, 508, 568, 615
அகமது ஸாருல்லா 399, 400
அகமது ஸாஹூிர் 418
அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி 103
அகில இந்திய வானொலி 235, 528, 599, 603
அக்பர்கான் 477
அசாம் 43
அசோகா 282
அச்மெட் சுகர்னோ 36
அட்லாண்டிக் சாசனம் 101
அடால்கா 410
அந்தமான் தீவுகள் 494
அப்துல் கபார்கான் 176
அப்துல்ரஹ்மான் அலி 470
அப்துல்ஹமீத் 419
அம்பாலா சிறை 614
அம்பேத்கர் 210
அமிர்தசரஸ் 86, 274, 467
அமிர்தசரசில் வன்முறை 86, 309, 379, 396, 398, 417
அமிர்தசரஸ் பொற்கோவில் 274, 276, 302, 379, 392
அமிர்தசரசில் சுதந்திரதினம் 343, 365, 379, 381
அமிர்தசரசில் பிரிவினை 305, 392
அமிர்தசரஸ் அகதிகள் முகாம் 467
அமைதிக்குழு 533, 541
அயர்லாந்து ஜே.ஆர். 347
அயூப்கான் 617
அரசியல் அமைப்பு சபை 349, 351, 352, 357, 358, 363
அரசு இல்லம் 363, 438, 441
அலகாபாத் 133, 611
அலியாஹைதர் 411
அலெக்சாண்டர் சிமோன் 488
அனிஸ் கித்வாய் 378
அஸ்வினிகுமார் 446, 469
அஷுதோஷ் லகிரி 562

ஆகாராஸா–பிரிகேடியர் 327
ஆக்டேவியன் ஹ்யூம் 87
ஆக்ரா 40
ஆச்சார்யா கிருபளானி 226
ஆபரேஷன் ஸிப்பர் 69
ஆபா 424, 428, 512, 544, 595, 596, 599, 605, 606, 611
ஆஃப்கானிஸ்தான் 173, 477
ஆயிஷா அலி 359
ஆரியர்கள் 383
ஆர்ச்சிபால்ட் வேவல் 37, 38, 39, 51, 115, 116, 143, 171, 212, 350, 472
ஆர்ச்சிபால்ட் ஹிப்பெர்ட் 46
ஆர்எஸ்எஸ் 301, 303, 334, 383, 385, 425, 431, 432, 460, 461, 495, 498, 541, 542, 543, 602
ஆலன் கேம்ப் பெல் ஜான்சன் 158, 282, 439, 598, 608
ஆல்வார் மஹாராஜா 202, 223, 224
ஆற்காடு முற்றுகை 250

இணைப்புக்கான பணி 262, 294, 297
இந்திய அமைச்சரவை 519
இந்திய பாதுகாப்புக் குழு 485, 487
இந்திய அவசரநிலைக் குழு 436, 440, 456, 457, 468, 469, 508
இந்தியாவுக்கு அமைச்சரவைப்பயணம் 105, 143, 226
இந்திய அரசுச் சட்டம் (1935) 100
இந்திய அலுவலகம் 37, 259
இந்தியக் கடற்படை 358
இந்திய கென்னல் கிளப் 318
இந்திய சிப்பாய்க் கலகம் 42, 58, 86, 124, 151, 250, 317
இந்திய சிவில் சர்வீஸ் 42, 44, 48, 123, 129, 184, 361
இந்திய சுதந்திர மசோதா 291, 292
இந்திய சோஷலிஸ்ட் கட்சி 508

இந்தியப் பேரரசு 34, 40, 238
இந்தியப் பேரரசில் ஆங்கிலோ இந்தியர்கள் 46, 451
இந்தியப் பேரரசில் அகதிகளாக பிரிட்டிஷார் 451
இந்தியப் பேரரசில் கல்லறைகள் 317
இந்தியப் பேரரசு-இந்தியா மீதான வெற்றி 41
இந்தியப் பேரரசு-பொருளாதார சுரண்டல்கள் 87
இந்தியப் பேரரசின் முடிவு 35, 37, 315, 317, 318, 345, 357, 364, 376, 625, 626
இந்தியப் பேரரசின் மாகாண கவர்னர்கள் 171, 172, 174, 175
இந்தியப் பேரரசின் ரயில்வேக்கள் 414
இந்தியப் பேரரசின் ராஜ்யம் 34, 43, 44, 45, 47, 48, 58, 61, 65, 94, 123, 124, 172, 184, 221, 316, 318, 324, 357
இந்தியப் பேரரசின் சிம்லா 183, 185, 186
இந்தியப் பேரரசின் அதிகாரமாற்றம் 239, 240, 282, 325, 389
இந்தியப் பேரரசின் விக்டோரியன் 42, 43, 44, 45, 47, 48
இந்திய மன்னர்கள் சபை 195, 260, 292
இந்திய ராணுவம் 130, 249, 251, 254, 255, 276, 310, 311, 318, 483
இந்திய ராணுவத்தில் பிரிட்டிஷார் 42, 451, 452, 453
இந்திய ராணுவத்தில் கூர்க்காக்கள் 310, 348, 444
இந்திய ராணுவமும் சுதந்திரமும் 325, 326, 346, 375, 376, 377, 408
இந்திய ராணுவம் காஷ்மீரில் 488, 489
இந்திய இராணுவம் சுதந்திரத்துக்குப் பின் 469, 474
இந்திய ராணுவ அகாடமி 254
'இந்தியன் ஹோம்ரூல்'(காந்தி) 85
இந்தியா சுதந்திரத்துக்குப்பின் 622, 623, 625
இந்தியா 244
இந்தியாவில் சோதிடம் 240, 241, 242, 282
இந்தியா எல்லை மாற்றங்கள் 258, 266, 303, 304, 306, 324, 325, 391, 392, 393, 394, 395
இந்தியாவில் சாதிமுறை 56, 57, 77, 153, 154, 155, 210, 455, 456, 494, 495, 496, 497
இந்தியா-உள்நாட்டுப்போர் அச்சுறுத்தல் 129, 130, 472
இந்தியா-பருவநிலை 354
இந்தியா-அரசியலமைப்பு 263, 358
இந்தியா-டொமினியன் அந்தஸ்து 216, 220, 226, 236
இந்தியா-சொத்துக்கள் பிரிப்பு 244, 248
இந்தியாவில் பொருளாதாரப் போட்டி 58, 59
இந்தியப் பொருளாதாரம் 354
இந்தியா-கூட்டாட்சி யோசனை 106
இந்தியக்கொடி 282, 346
இந்திய அரசு 133, 281, 364
இந்திய சுதந்திர தினம் 240, 241, 242, 282, 315, 341, 355, 363, 370, 390
இந்தியத் தொழில் 354, 504
இந்திய மொழிகள் 353
இந்திய தேசியம் 36, 60, 85, 494
இந்தியப் பிரிவினை 37, 60, 61, 143, 144, 156, 161, 165, 174
இந்திய மக்கள் தொகை 353, 354
இந்தியாவில் வறுமை 354
இந்தியாவின் மன்னர்கள் 195, 214, 221, 225, 260, 262, 292, 295, 361, 474, 630
இந்தியா-பாகிஸ்தான் உறவுகள் 409, 506, 509, 511, 525, 618
இந்திய-மதங்கள் 55, 56, 57, 352, 354
இந்தியாவும் 2ம் உலக யுத்தமும் 101, 102
இந்திரா காந்தி 255, 263, 347, 583, 625
இந்துமகாசபா 315, 495, 498, 517, 526, 533, 541, 542, 562, 571
இந்துதேசியவாதம் 61, 494, 495
இந்துயிசம் 55, 56, 57, 58, 59, 60, 77, 110, 329, 344, 345, 349, 353, 366, 367, 368, 369, 370, 371, 474, 534, 610
இந்துராஷ்ட்ரா 384, 491, 492, 498, 571, 572, 602
இந்துராஷ்ட்ரதள் 495, 522
இந்துஸ்தான் ஸ்டாண்டர்ட் 605
இந்தோ-சீனா 36
இந்தோனேசியா 36, 604
இரண்டாம் உலகயுத்தம் 100, 254
இர்வின் பிரபு 96
இளவரசர் பிலிப்ஸ் 509
இனாயத் ஹபிபுல்லா 255
இஸ்மே பிரபு 129, 164, 167, 174, 182, 215, 217, 226, 251, 254, 318, 439, 472
இஸ்லாம் 55, 56, 57, 61, 62, 63, 162, 168, 353

ஈனா-ஸ்பெயின் ராணி 337

உகர்னா 399
உணவு, வேளாண்துறை 245
உதய்ப்பூர் மகாராஜா 203, 207
உப்பு யாத்திரை 91, 92, 96, 98, 135, 140, 547
உள்துறை அமைச்சகம் 149, 152, 246, 627

எட்டாம் எட்வர்ட் மன்னர் 65, 119, 138
எட்வர்ட் பெர் 452, 453
எட்வினா மவுண்ட் பேட்டன் 105, 116, 117, 120, 373, 455, 462
எட்வினா மவுண்ட் பேட்டன் வாழ்க்கை குறிப்புகள் 70, 120, 122
எட்வினா மவுண்ட்பேட்டனும்- காந்தியும் 534, 560
எட்வினா மவுண்ட் பேட்டன் திருமணம் 70, 122
எட்வினா மவுண்ட் பேட்டனும் நேருவும் 188
எட்வினா மவுண்ட் பேட்டன் ஆளுமை 120, 121, 122
எட்வினா மவுண்ட் பேட்டன் பிற்கால இந்தியாவில் 629, 630
எட்வினா மவுண்ட் பேட்டனும் செஞ்சிலுவையும் 437, 467, 468, 616, 629
எட்வினா மவுண்ட் பேட்டன் வைஸ்ராயினியாக 122, 127, 141, 142, 157, 177, 178, 334, 388, 389, 390
எத்தியோப்பியா 100
எம்பைர் அரங்கு-ஜொகனஸ்பர்க் 83
எரவாடா சிறை 90, 92, 99, 103, 142, 607
எர்ஸ்கின் க்ரூம் 437
எலிசபெத் இளவரசி 40, 509
எல்லைப்புற சண்டைகள் 251
எலிசபெத் காலின்ஸ் 386

ஏழாம் எட்வர்ட் மன்னர் 209

ஐக்கிய நாடுகள் சபை 490, 509
ஐக்கிய மாகாணங்கள் 58, 172, 353
ஐயங்கார் எச்.வி.ஆர் 433, 439, 445, 457, 468

ஒரிசா 172
ஒரிசா மகாராஜா 204, 298

ஓபெராய் எம்.எஸ் 186

ஃபாத்திமா ஜின்னா 160, 170, 171
ஃபிராங்க்ளின் ரூஸ்வெல்ட் 101
ஃபெரோஸ்பூர் ராணுவ மருத்துவமனை 449
ஃபே கேம்ப்-பெல் ஜான்சன் 398, 452

கங்கை நதி 366, 610
கசவ்லி 409
கடையருக்கும் கடைத்தேற்றம் 81
கபூர்தலா மகாராஜா 198, 203
கரன்சிங் 476
கராச்சி 301, 315, 322, 430, 454, 456, 504, 505, 617
கராச்சி அரசு இல்லம் 323, 343
கராச்சியில் அதிகாரக் கையளிப்பு 343, 408
கராச்சி சுதந்திர கொண்டாட்டங்கள் 325, 334, 336, 337
கராச்சிக்கு ஜின்னா திரும்புதல் 322, 323
கராக்கா டி.எஃப். 466
கரியப்பா (பிரிகேடியர்) 327
கர்சன் பிரபு 167
கர்த்தார் துகல்சிங் 359
கர்னல் எம்.எஸ்.சோப்ரா 433
கர்னல் வில்லியம் பிர்னி 476, 506
கர்னால் 409
கல்கத்தா 52, 87
கல்கத்தாவில் பிரிட்டிஷார் 43, 46
கல்கத்தாவில் வன்முறை 52, 62, 129, 161, 330, 424, 428
கல்கத்தாவில் காந்தி 314, 329, 341, 365, 381, 407, 413, 414, 420, 424, 425, 427, 429, 430, 524
கல்கத்தாவில் சுதந்திர தினம் 358, 362, 376, 381, 382, 407, 420
கல்கத்தாவும் பிரிவினையும் 124, 168, 187, 226, 304, 311, 392
கல்கத்தா குடிசைப்பகுதிகள் 330
கவுதம்சகால் 450
கவ்தா 179, 270
கஸ்தூர்பாகாந்தி 78, 82, 103, 108

காங்கிரஸ் கட்சி 37, 38, 50, 114
காங்கிரஸ் அமைப்புச்சட்டம் 575, 583, 586
காங்கிரஸ் உதயம் 86, 87
காங்கிரசும் காந்தியும் 54, 87, 90, 113, 137, 156, 180, 575

காங்கிரசும் இந்துமதமும் 62
காங்கிரசும் சுதந்திர இயக்கமும் 575
காங்கிரஸ் இடைக்கால அரசில் 281
காங்கிரசும் ஜின்னாவும் 159
காங்கிரஸ் தலைவர் சிறைவைப்பு 103
காங்கிரசும் முஸ்லீம் லீகும் 130, 144, 159
காங்கிரசும் நேருவும் 134, 135
காங்கிரசும் அமைதிக்கோட்பாடும் 86, 87, 101
காங்கிரசும் பிரிவினையும் 144, 156, 181, 182, 244
காங்கிரசும் படேலும் 151
காங்கிரஸ் சுதந்திரத்துக்குப்பின் 623
காங்கிரசும் மன்னர்களும் 196, 262, 263
காங்கிரஸ்-மாகாணங்களில் 176
காங்கிரசும் அதிகாரமாற்றமும் 190, 215, 216, 220, 226, 227, 231, 232, 233
காந்தி-இர்வின் ஒப்பந்தம் 97
காந்தி ஐரோப்பாவில் 99
காந்தியின் நூற்றாண்டு 629
காளிகட் 329
கான்பூர் 317, 360
காஷ்மீர் 61, 392, 393, 454, 474, 475, 476, 477, 478, 480, 481, 486, 487, 509
காஷ்மீர் இணைப்பு பிரச்சனை 189, 295, 296, 475, 486, 488
காஷ்மீரில் ராணுவத்தலையீடு 488, 489
காஷ்மீர் பிரிவினை 490
காஷ்மீர்-பத்தான் ஆக்ரமிப்பு 476, 477, 478, 480, 481, 482, 488, 489, 490
காஷ்மீர் மகாராஜா 209, 213, 222, 296, 393, 474, 475, 476, 477, 478, 483, 485, 486
காஷ்மீரிலால் 416, 449
காஜா மொஹைஹதீன் 342

கிருஷ்ணமேனன் 38, 190
கிரேண்ட்டச்சஸ் மேரி 68, 262
கிரேண்ட் ட்யூக் செர்ஜ் 337
கில்ஜிட் 490
கிழக்கிந்திய கம்பெனி 40, 42, 124, 250, 376
கிழக்கு பாகிஸ்தான் 342
கிழக்கு வங்காளம் 168, 191, 247, 342
கிளமெண்ட் அட்லி 52, 115, 217, 264, 509, 604
கிளமெண்ட் அட்லியும் காமன்வெல்தும் 67
கிளமெண்ட் அட்லியும் இந்திய சுதந்திரமும் 34, 93, 94, 291, 292, 391, 472
கிளமெண்ட் அட்லியும் மவுண்ட்பேட்டன் நியமனமும் 35, 39, 105
கிளமெண்ட் அட்லியும் மவுண்ட்பேட்டன் திட்டமும் 187, 190, 215, 217, 219, 227, 231
கிளமெண்ட் அட்லியும் ராட்கிளிஃபும் 259
கிளமெண்ட் அட்லியும் வேவலும் 115
கிறிஸ்டோபர் கொலம்பஸ் 356

குமரிமுனை 124
குமார்போஸ் 363
குருதாஸ்பூர் 393, 488
குர்சரண்சிங் 97, 471
குர்பாசிங் 446
குல்தீப்சிங் 402
குல்தீப்சிங் 445
குல்மார்க் 254
குவாத்உல் இஸ்லாம் மசூதி 578
குவாலியர் 298, 460, 579, 580, 614
குவாலியர் மகாராஜா 200, 201, 202, 205, 209, 210
குஷ்வந்த்சிங் 379

கூச்பிகார் மகாராஜா 209
கூட்டுச் செயல்பாடுகள் 72

கெல்லி எச்.எம்.எஸ் 71, 72

கேண்டர்பரி ஆர்ச் பிஷப் 317, 604
கேப்டன் ரொனால்ட் ப்ராக்மேன் 106
கேப்டன் கென்னத் டான்ஸ் 346, 360
கேப்டன் ராபர்ட் அட்கின்ஸ் 348, 362, 397, 398, 444, 445
கேம்பிரிட்ஜ் 133, 134

கைபர்கணவாய் 346, 360

கோபால்தாஸ் கோஸ்லா 471
கோபால் கோட்சே-கைதும் விசாரணையும் 613, 615
கோபால் கோட்சே-படுகொலை முயற்சி 525, 526, 531, 535, 548, 551, 552, 553, 554, 556, 557, 558, 559, 560, 573
கோபால் கோட்சே-காவல்துறை புலனாய்வு 562, 564
கோபிந்த் சிங் 275

க்வெட்டா 318, 362

சகோதரி மேரி 46
சகோதரி மேரி அடெல்ட்ருட் 490
சஞ்சீவி. டிஜெ 561, 567, 570, 571, 572, 573, 584
சத்தரவாலா.ஜே.டி 362
சத்தர்பூர் 370, 372, 603
சந்தாஷ் நந்த்லால் 463
சந்துலால் திரிவேதி 471
சரோஜினிநாயுடு 155

சர் எரிக் மீவிலே 226
சர் சிரில் ராட்கிளிஃப் 258, 259, 266, 267, 270, 273, 303, 304, 306, 324, 325, 392, 394, 488, 618
சர்தார் தர்லோக்சிங் 448
சர்தார் ப்ரேன்சிங் 401, 402
சர் ராபர்ட் லாக்ஹார்ட் 281, 483
சர் ஜான்லேங் 351
சர் இவான் ஜென்கின்ஸ் 173, 178, 270, 302
சர் எர்னஸ்ட் கேசல் 120
சர் ஓலஃப்கரோ 173, 176, 177, 477
சர் கான்ராட்கோர்ஃபீல்ட் 196, 211, 212, 221, 260, 262, 293
சர் கிளாட் ஆச்சின்லெக் 130, 266, 408, 439, 483, 485
சர் ஃபிரடெரிக் பர்ரோ 168, 174, 376
சர் ராய்புச்சர் 607
சர் வில்லியம் கிராஃப்ட் 350, 351, 352
சவுத்ரி முகமதுஅலி 244
சர் ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ் 38, 101, 102, 105, 143, 215, 604
சர் ஜார்ஜ் கன்னிங்காம் 480

சானி சிங் 380, 381
சாந்த்சிங் 405
சாம் மானெக்ஷா 485
சாரா இஸ்மே 418
சார்லஸ் ஸ்மித் 105, 118, 119
சார்லி சாப்ளின் 98

சிங்கப்பூர் 36, 119, 132, 133
சிட்டி ஆஃப் ட்ரெட் ஃபுல் நைட்(கிப்ளிங்) 329
சிந்து 61, 172, 247
சிம்லா 124, 170, 184, 377
சிம்லாவில் பிரிட்டிஷார் 43, 45, 184, 185, 451
சிம்லாவில் வகுப்புவாத வன்முறை 398
சிம்லாவில் சுதந்திரதினம் 358, 377
சிம்லாவில் வைஸ்ராய்விடுதி 186, 433
சில்லியன்வாலா 275
சிவில் சட்டமறுப்பு(தோரு) 83
சின்ஹா-ஜி.என் 520

சீக்கியர்கள் 166, 274, 275, 276, 392, 444
சீக்கிய அகாலிபிரிவு 431, 542
சீக்கியர்களும் பிரிவினைத் திட்டமும் 166, 174, 227, 230, 233
சீக்கியர்கள்-வன்முறையில் பலிகளாக 270, 398, 399, 401, 403, 404, 406
சீக்கியர்களால் வன்முறை 307, 379, 396, 397, 399, 400, 403, 404, 417, 418, 430 432, 445, 446, 464
சீனா 260, 604

சுகாதாரத்துறை 456
சுசீலா நய்யார் 362, 512, 523, 528, 530, 532, 543, 556, 557, 577, 596
சுலெமாங்கி ஹெட் 447
சுவாமி சுந்தர் 410
சுவாமி மதமானந்த் 241
சுனில் ராய் 423, 424

சூபா 377
சூரட் 377

செசில் ஓட்டல்(சிம்லா) 185

சேத் டால்மியா 322

சையத் அசன் 322
சைரப் கயத்கான் 481, 482

சோவியத் யூனியன் 604
சோனிபட் 418

டக்ளஸ் கிரேசி 483

டாக்கா 342, 378

டிர்ஃபிராங்க் மெஸ்ஸெர்வி 270, 480
டில்லி 54, 325, 359, 455
டில்லியில் வகுப்புவாத வன்முறை 396, 431, 432, 440, 455, 513

டில்லியில் காந்தி 454, 457, 505, 524, 528, 533
டில்லியில் காந்தியின் இறுதிச் சடங்கு 601, 603
டில்லியில் சுதந்திரதினம் 344, 345, 358, 359, 372, 385, 390
டில்லியில் காவல்துறை 560, 561, 564, 567, 596
டில்லியில் அகதிகள் 455, 456
டில்லியில் ஜிம்கானா கிளப் 326

டெக்கான் 43

ட்ரான்ஸ்வால் 83
ட்வைட் ஐசனோவர் 69

தத்தாத்ரேயா பார்ச்சூர் 460, 580, 613, 614
தனிரான் 416
தாமஸ் ஹென்றி பட்லர் 46

தாமெர்லேன் 55
தாராசிங் 281, 301, 303
தாராபண்டிட் 583
தால் ஏரி 475

திகம்பர் பாட்கே 502, 516, 522, 525, 613
திகம்பர் பாட்கேயும் கொலை முயற்சியும் 552, 554, 556, 558, 559
திகம்பர் பாட்கேயும் காவல் துறை
புலனாய்வும் 562, 569, 570, 585
திகம்பர் பாட்கே அரசு சாட்சியாக 613, 615
தி டைம்ஸ் 342, 547
திராவிடர்கள் 55, 57
திருக்கழுகுன்றம் 377
திருவாங்கூர் மகாராஜா 298
தினா ஜின்னா 378

தீண்டத்தகாதோர் 153, 154, 155, 210, 456, 529, 542

தெங்கனால் ராஜா 200
தென் ஆப்பிரிக்கா 79, 80, 82, 83, 84, 96, 103, 113, 140, 519, 604
தென்கிழக்கு ஆசிய கூட்டுப்படை 35, 36, 38, 69, 73, 106, 119, 132

தேவதாஸ்காந்தி 517, 606, 609, 611
தேவிதத்தா 500
தோல்பூர் ரானா 297

நவகாளி 51, 52, 53, 58, 62, 74, 76, 95, 108, 109, 110, 112, 156, 312, 313, 332, 369, 428

நாகர்கள் 353
நாடாளுமன்ற அவை 92, 94, 95, 219, 291
நாதுராம் கோட்சே-தோற்றம் 384
நாதுராம் கோட்சே கைதும் தண்டனையும் 613, 614
நாதுராம் கோட்சே பிராமணராக 496, 497
நாதுராம் கோட்சே பத்திரிகை ஆசிரியராக 384, 491, 492, 495, 498
நாதுராம் கோட்சேயின் குறிதவறிய கொலை முயற்சி 514, 516, 517, 522, 523, 535, 548, 549, 551, 553, 554, 557, 559, 560
நாதுராம் கோட்சேயும் காந்தி படுகொலையும் 573, 574, 577, 579, 585, 599
நாதுராம் கோட்சே இந்து தீவிரவாதியாக 384, 385, 498
நாதுராம் கோட்சேயின் தியாகம் 517, 615
நாதுராம் கோட்சேயின் ஆளுமை 497, 499
நாதுராம் கோட்சே மீது காவல்துறை
விசாரணை 493, 562, 570, 571
நாராயண் ஆப்தே 492, 495, 498
நாராயண் ஆப்தே கைதும் தண்டனையும் 613, 614
நாராயண் ஆப்தேயும் படுகொலையும் 573, 574, 577, 582, 585, 595
நாராயண் ஆப்தேயும் கொலை முயற்சியில் தோல்வியும் 514, 516, 526, 535, 548, 551, 560
நாராயண் ஆப்தே இந்து தீவிரவாதியாக 503, 508
நாராயண் ஆப்தே காவல்துறை புலனாய்வு 495, 562, 570, 580
நாராயண் ஆப்தேயும் இந்து ராஷ்ட்ராவும் 494, 496
நாராயண் ஆப்தேயின் காம இச்சை 498, 499, 500, 522, 577, 613
நானா சாஹிப் 317
நாஜிக்கள் 100

நிரஞ்சன்சிங் 399
நியூஸ் குரோனிக்கல் 547
நியூயார்க் டைம்ஸ் 128, 420
நிஹால்பிரான்பி 415

நீதிபதி கபூர் ஜே.எல் 572

நேரடி நடவடிக்கை நாள் 62, 63, 187, 313, 330, 331
நோயல் கவர்ட் 70, 72

பகவத் கீதை 81, 166, 370, 590
பங்களாதேஷ் 168, 191
பங்களாதேஷ் யுத்தம் 254, 342, 617
பங்கி துப்புரவாளர்கள் காலனி 181, 358, 454, 542
பசுவதை எதிர்ப்பு லீக் 322
பஞ்சாப் 172, 268, 269, 270, 272, 273, 274, 295, 353, 618, 622
பஞ்சாபின் பிரிட்டிஷ் கவர்னர் 129, 172, 174
பஞ்சாப் சிஐடி 301
பஞ்சாபில் வகுப்புவாத வன்முறை 86, 270, 272, 274, 281, 288, 303, 307, 309, 310, 396, 397, 398, 399, 400, 401, 402, 403, 404, 406, 407, 409, 412, 414, 415, 416, 417, 422, 430, 463, 464, 469, 473
பஞ்சாபில் இறந்தோர் எண்ணிக்கை 471
பஞ்சாபும் அவசரநிலைக் குழுவும் 438
பஞ்சாபுக்கு வெள்ள அபாயம் 470, 471
பஞ்சாபின் வரலாறு 165
பஞ்சாபில் சுதந்திரதினம் 342, 379
பஞ்சாப் மகாராஜா 297
பஞ்சாபுக்கு மவுண்ட்பேட்டன் பயணம் 178, 179
பஞ்சாபின் பிரிவினை 162, 164, 166, 167, 182, 259, 267, 304, 305, 324, 379, 380, 381, 392, 393, 394, 397
பஞ்சாப் அகதிகள் முகாம் 288, 359, 362, 379, 414, 421, 424, 440, 441, 442, 443, 444, 445, 446, 447, 466, 467, 472, 500, 507
பஞ்சாபில் சமய சமூகங்கள் 58
பஞ்சாப் மரண ரயில்கள் 414, 415, 417, 418, 419, 440
பஞ்சாப் எல்லைப்படை 310, 311, 312, 348, 400, 404, 438, 439, 473
படேல் எச்.எம் 244
படேல் ஜே.ஏ.எல் 169, 170
பட்வந்த் சிங் 442
பண்டிட் ப்ரவாணி சங்கர் 367, 368
பத்தானியர்கள் 173, 176, 178, 251, 452, 453
பத்தானியர்கள்-காஷ்மீர் ஆக்ரமிப்பு 476, 477, 478, 480, 481, 482, 488, 489
பத்மஜா நாயுடு 347
பமீலா மவுண்ட் பேட்டன் 176, 386, 387, 439, 609, 629
பம்பாய் 461, 521, 602, 615
பம்பாயில் பிரிட்டிஷார் 43, 45, 172, 318, 320, 357, 376
பம்பாயில் வகுப்புக் கலவரம் 63, 129, 454
பம்பாயில் காந்தி 78, 84, 103
பம்பாயில் சுதந்திரதினம் 358, 361, 376
பம்பாய் காவல்துறை 522, 567, 568, 584, 613
பம்பாய் ருக்பி கிளப் 320
பரத்பூர் 204, 338
பரத்பூர் மகாராஜா 198, 201
பரோடா மகாராஜா 198, 199, 210, 224, 225, 297
பர்தோலி 151
பர்மா 36, 69, 209
பலான்பூர் நவாபும் பேகமும் 350
பலீந்திரசிங் 379
பலுச்சிஸ்தான் 61
பல்தேவ்சிங் 226, 227
பல்தேவ்ராஜ் 411
பனாரஸ் 361, 366, 367, 369
பனாரஸ் மகாராஜா 208

பாகிஸ்தான்-காந்தியின் அணுகுமுறை 525, 602
பாகிஸ்தான்-திவாலா அச்சுறுத்தல் 507
பாகிஸ்தான்-எல்லைகள் 259, 266, 324, 325, 391, 392, 393, 394, 395
பாகிஸ்தான்-டொமினியன் அந்தஸ்து 216
பாகிஸ்தான்-பிரிந்த நாடாக 164, 341, 342
பாகிஸ்தான்-காந்தியின் பயணத் திட்டம் 505, 549, 550
பாகிஸ்தான்-சுதந்திரக் கொண்டாட்டங்கள் 315, 325, 334, 335, 336, 337, 339, 341, 378
பாகிஸ்தானுடன் இந்திய உறவுகள் 409, 618
பாகிஸ்தான்-ஜின்னாவின் கனவு 159, 161, 163
பாகிஸ்தானும் காஷ்மீரும் 477, 482
பாகிஸ்தான்-முஸ்லீம்களின் கனவாக 61, 106, 158, 159, 161
பாகிஸ்தான்-மவுண்ட் பேட்டனின்
பார்வையில் 174
பாகிஸ்தான்-சுதந்திரத்துக்குப்பின் 397, 400, 401, 402, 408, 617

பாகிஸ்தான்-அகதிகள் முகாம் 456
பாகிஸ்தான்-சொத்துக்களின் பங்கு 245, 246, 507, 509, 510, 511, 525
பாகிஸ்தான்-சிறப்பு ரயில்கள் 301, 303
பாகிஸ்தான்-டைம்ஸ் 378
பாகிஸ்தான்-ராணுவம் 249, 255, 258, 326, 477, 480, 483
பாக்தாஸ் 401
பாட்டியா 575
பாட்டியாலா 379
பாட்டியாலா மகாராஜா 199, 201, 205, 206, 209, 210, 225, 260
பாட்ரிக் ஃபார்மர் 308
பாரமுல்லா 489
பாரிஸ் 99
பார்க்கர் அன்ட் கம்பெனி 374
பார்சிக்கள் 58, 308
பாலகங்காதர திலக் 494
பால்மர்ஸ்டோன் பிரபு 120
பானிபட் 500, 502

பிகானிர் மகாராஜா 209, 210
பியாரேலால் நய்யார் 382, 503, 512, 521, 530, 533, 541, 543, 547, 601, 605
பியாஸ் நதி 470
பிராமணர்கள் 496
பிரிகேடியர் ஆர்.இ.டையர் 86
பிரிட்டனின் கடன் இந்தியாவுக்கு 244
பிரிட்டன் போருக்குப்பின் 31, 32
பிரிட்டிஷ் காமன்வெல்த் 67, 105, 216, 217, 220, 472
பிரிட்டிஷ் பேரரசு 32, 33, 34, 66, 92, 93, 290
பிரிட்டிஷ் ராணுவம் 309, 485, 625
பிரிட்டிஷ் வழக்கங்கள் 318, 319, 351
பிரிட்டிஷ் வெளிநாட்டு விமான நிறுவனம் 507
பிரிட்டிஷ் ஹைகமிஷன் 317
பிரிவினைக் கவுன்சில் 244
பிரிவினையின் நிர்வாக விளைவுகள் 234
பிர்லா 287, 454
பிர்லா கோயில் 526, 548, 582, 593
பிர்லா மாளிகை 454, 514, 515, 526, 551, 552, 554, 565, 566, 603, 605, 606
பிர்வாலா 405

பில் ரிச் 308, 342, 364
பிளாசி 41

பீகார் 52, 58, 63, 85, 114, 156, 172
பீட்டர் புல்லக் 377
பீட்டர் ஹோவஸ் 106, 248, 455, 468

புதுடில்லி 124, 179, 372, 385, 456
புத்தமதம் 353
புந்தி மகாராஜா 209
புராணகுய்லா முகாம் 455, 456, 459
புலாகிஷா 272
புனித ஜார்ஜ் கோட்டை 124

பூட்டாசிங் 464, 465, 618, 619, 620, 621
பூபிந்தர்சிங் 205, 206, 207, 210, 297
பூனா 124, 383, 492, 493, 495, 502, 508, 531, 602, 615
பூனா காவல்துறை 493, 569, 572, 585

பெண்டெரல் மூன் 471
பெஷாவர் 124, 173, 175, 176, 396, 452, 453, 478, 480

பொற்கோயில் 274, 276, 302, 379, 392

போபால் நவாப் 210, 298
போப் 12ஆம் பயூஸ் 604
போயர் யுத்தம் 80, 87, 140
போர்பந்தர் 77
போனிக்ஸ் 81

ப்ரீதம்சிங் 340

மகாபாரதம் 55
மண்டிமன்னர் 412, 449
மதராஸ் (சென்னை) 172, 353, 377
மதன்லால் பாவா 496, 516
மதன்லால் பாவா கைதும் விசாரணையும் 559, 560, 561, 562, 564, 570, 613, 615
மதன்லால் பாவாவும் கொலை முயற்சியும் 516, 526, 535, 541, 553, 554, 555, 557, 567
மதன்லால் பாவா பஞ்சாபுக்குத் தப்பியோட்டம் 409, 447, 448, 449
மதன்லால் பாவா ஆர்எஸ்எஸ்எஸ் உறுப்பினராக 399, 448, 460, 461, 507, 508, 522

மதிதாஸ் 410
மதுரா 377
மத்திய அரசு 163
மத்திய மாகாணம் 172
மரியா மாண்டிசோரி 98
மலாயா 36, 69, 121
மவுலானா ஆசாத் 544
மவ்ட் பென் மாண்டேகு 377, 378
மனிபென் படேல் 150
மனு 54, 76, 108, 110, 112, 113, 114, 193, 228, 424, 512, 524, 543, 544, 546, 586, 588, 596, 598, 600, 605, 606, 611
மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் 69, 114, 374
மன்னர் ஆறாம் ஜார்ஜ் 64, 65, 66, 67, 264, 291, 364, 389, 390, 485, 604
மஹாசிரா 475

மாக்ஸ் ஆலிவர் லேகேம்ப் 431
மாக்ஸ் பீவர் ப்ரூக் 218
மார்கரெட் புர்கே – ஓயிட் 417, 445, 471, 515, 583, 608
மார்க்கஸ் ஹேஸ்டிங்ஸ் 42
மார்க்சிஸம் 134, 286
மாரிட்ஸ்பார்க் 80
மான்செஸ்டர் கார்டியன் 94, 547

முகமது அலி ஜின்னா 310, 341, 397
ஜின்னா தோற்றம் 160, 161
ஜின்னாவைக் கொல்ல முயற்சி 301, 302, 303, 333, 334, 336, 337, 339, 340, 503
ஜின்னா வாழ்க்கைக் குறிப்புகள் 158, 159
ஜின்னாவும் காங்கிரஸ் கட்சியும் 159
ஜின்னாவின் மரணம் 617, 618
ஜின்னாவும் காந்தியும் 63, 144, 156, 159, 160, 605
ஜின்னா பாக்.கவர்னர் ஜெனரலாக 264, 506
ஜின்னாவும் சுதந்திரக் கொண்டாட்டங் களும் 335, 336, 337, 339, 378
ஜின்னாவும் சுதந்திர இந்தியாவும் 507
ஜின்னாவும் காஷ்மீரும் 476, 477, 490
ஜின்னா திருமணம் 320, 321
ஜின்னாவும் மவுண்ட்பேட்டனும் 157, 158, 161, 162, 163, 164, 181, 264, 315
ஜின்னாவும் முஸ்லீம் லீகும் 161, 231, 232
ஜின்னாவும் நேருவும் 160
ஜின்னாவும் பிரிவினையும் 63, 158, 159, 161, 162, 163, 164, 215, 227, 249, 263, 264, 267, 310, 394
ஜின்னாவும் படேலும் 152
ஜின்னாவின் ஆளுமை 158, 159, 160, 161
ஜின்னாவும் இளவரசியும் 298
ஜின்னா கராச்சி திரும்பல் 322, 323, 344
ஜின்னாவும் அதிகார மாற்றமும் 226, 227, 231, 232, 233, 235, 472
ஜின்னாவும் காசநோயும் 169, 170, 505, 506, 617

முகமது இத்ரிஸ் 326
முகமது சவுத்ரி அலி 244
முகமது யாகூப் 404
முகமது ஜியா உல் ஹக் 617
முசாஃபராபாத் 481, 482
முதலாம் எலிசபெத் ராணி 40
முதல் உலக யுத்தம் 48, 69, 211, 254, 405
முரீல் வாட்சன் 386
முஸோலினி பெனிடோ 99
முஸ்லீம் லீக் 54, 61, 63, 102, 113, 397, 503
முஸ்லீம் லீகும் காங்கிரஸ் கட்சியும் 130, 144, 159
முஸ்லீம் லீகும் இந்திய வடிவங்களும் 359
முஸ்லீம் லீகும் காந்தியும் 144, 525
முஸ்லீம் லீகும் பச்சைச்சட்டையும் 481
முஸ்லீம் லீக் இடைக்கால அரசில் 281
முஸ்லீம் லீகும் ஜின்னாவும் 161, 231, 232
முஸ்லீம் லீகும் தேசியத் தலைவர்களும் 326
முஸ்லீம் லீக் வடமேற்கு எல்லையில் 176
முஸ்லீம் லீகும் பாகிஸ்தானும் 174
முஸ்லீம் லீக் பஞ்சாபில் 269, 270, 308, 309
முஸ்லீம் லீகும் அதிகார மாற்றமும் 226, 227, 231
முஸ்லீம் லீகும் போர் முயற்சியும் 103

மெஹ்ரா. டிடபிள்யூ 560, 561, 565, 566, 575
மெஹ்ராலி 578

மேஜர் அஸ்வினி துபே 376, 417, 470
மேஜர் குர்ஷித் அன்வர் 478
மேஜர் கோவிந்த் சிங் 248
மேஜர் மார்ட்டின் கில்லியாட் 608

மேஜர் யாகூப் கான் 248, 256, 257
மேஜிக் சர்க்கிள் மியூசியம் 300
மேஜர் ஜெனரல் பீட்ரீஸ் 310, 438, 439

மைசூர் மகாராஜா 199, 200, 203, 204, 207, 209

மொகலாயப் பேரரசு 40, 55, 57, 166, 274, 275, 281, 393, 413, 455
மொரார்ஜி தேசாய் 567, 568

மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி 49, 50, 51, 52, 53, 54, 55, 60, 95
காந்தியின் தோற்றம் 49, 50, 78
காந்தியைக் கொல்ல முயற்சி 555, 558, 559
காந்தி படுகொலை 596, 597, 598
காந்தி வரலாறு 77, 91, 96
காந்தி பிறந்த நாள் விழாக்கள் 462
காந்தி கல்கத்தாவில் 312, 329, 340, 341, 365, 381, 407, 413, 420, 424, 427
காந்தி கற்பு நிலை 82, 90, 109
காந்தியும் சிவில் ஒத்துழையாமையும் 83, 84, 89, 99, 135, 151
காந்தியும் காங்கிரஸ் கட்சியும் 50, 54, 87, 90, 113, 137, 156, 180, 575, 583 586
காந்தி டில்லியில் 454, 457, 459, 505, 512, 582
காந்தியின் குடும்பம் 113
காந்தியின் உண்ணாவிரதம் 103, 426, 427, 429, 430, 510, 511, 512, 513, 515, 517, 518, 520, 522, 523, 524, 525, 527, 528, 544
காந்தியின் பெண் மயக்கம் 518
காந்தியின் இறுதிச்சடங்குகள் 601, 603, 606, 607, 610, 611
காந்தியின் சுகவீனம் 104
காந்தி மீதான செல்வாக்குகள் 81, 82, 83
காந்தியின் சிறைவாசம் 90, 91, 97, 99, 103
காந்தியும் சுதந்திரமும் 90, 220, 234, 369, 370, 472, 504
காந்தியும் இந்தியக் கொடியும் 282
காந்தியும் ஜின்னாவும் 63, 159
காந்தியின் கடைசி நாள் 590, 594, 596
காந்தியின் கடைசி விருப்பம் 624, 626
காந்தியின் வாழ்க்கைமுறை 80, 87, 139, 155, 283, 286, 341, 545, 606
காந்தியும் மனுவும் 54, 76, 108, 109, 110, 112, 113, 114, 192, 193, 229
காந்திக்கு நினைவிடம் 622
காந்தியும் மவுண்ட்பேட்டனும் 138, 149, 227, 228, 229, 230, 236, 237, 264, 265, 312, 420, 441, 508, 509, 510
காந்தியும் தேசிய வாதமும் 60, 77, 85, 86, 102
காந்தி பேச்சுவார்த்தை தூதராக 142, 143
காந்தியும் நேருவும் 135, 136, 137
காந்தியும் ஒத்துழையாமையும் 87, 89
காந்தியும் அஹிம்சையும் 50, 52, 53, 54, 82, 83, 84, 87, 90, 100, 102, 109, 144, 458, 547, 548, 583
காந்தியின் பாக்.பயணத்திட்டம் 504, 505, 549, 550, 576, 582, 583
காந்தி பானிப்பட்டில் 500, 501
காந்தியும் பிரிவினையும் 143, 144, 156, 181, 228, 229, 237, 311
காந்தியும் படேலும் 151, 504
காந்தியும் பிராயச்சித்த யாத்திரையும் 53, 54, 74, 75, 76, 95, 108, 109, 110, 112, 113, 114, 137, 180, 312, 515, 550
காந்தியின் பிரார்த்தனை கூட்டங்கள் 341, 382, 414, 420, 460, 515, 526, 527, 530, 534, 545, 550, 551, 556, 575, 583
காந்தி பஞ்சாபில் 287
காந்தியும் ஆர்எஸ்எஸ்எஸ்சும் 383, 384, 461, 493, 495
காந்தியின் தந்திரோபாயங்கள் 50, 85, 87, 89, 91, 92
காந்திக்கு அஞ்சலி 603, 604, 605
காந்தியும் சத்தியப்படையும் 83
காந்தியும் தீண்டத்தகாதோரும் 153, 154, 155
காந்தி பார்வையில் இந்தியா 283, 284, 287, 622

மோரிஸ் ஜி. ஆர் 453

யமுனை நதி 606, 608, 610

யாதவீந்திரசிங் 195, 196, 260

யூனிஸ்கான் 258

ரஞ்சித்லால் 370, 372, 373, 376, 386, 390, 603, 607
ரட்டன்பாய் ஜின்னா 321
ரட்யார்ட்கிப்ளிங் 42, 197, 329, 434
ரவீந்திரநாத் தாகூர் 54, 85, 167, 359, 515
ரவுலட் சட்டம் 85
ரஹ்மத் அலி 61, 158, 296, 343

ராணி விக்டோரியா 33, 39, 42, 68, 77
ராபர்ட் எஸ்னால்ட் பெல்டெரி 71
ராபர்ட் கிளைவ் 41, 124, 345
ராபர்ட் ட்ரம்புல் 400
ராப் நிஷாதர் 226
ராமதாஸ் காந்தி 609, 611
ராம்சர்திலால் 444
ராம்பூர் 256
ராம்பூர் நவாப் 204, 208, 221, 222
ராயல் இந்திய விமானப்படை 485
ராயல் நேவி 69, 70, 71, 351, 352, 628
ராவல் பிண்டி 129, 326, 396
ரானா.யு.எச் 572, 581, 585
ராஜகோபாலாச்சாரி.சி.ஆர் 191, 428, 429, 430
ராஜஸ்தான் 43, 198, 210, 623
ராஜாராவ் பேஷாவ் 581
ராஜேந்திர பிரசாத் 349, 363, 542
ராஜேஸ்வர் தயாள் 360

ரிச்சர்ட் ஃபிஷர் 419

ரீடிங் சீமாட்டி 123
ரீடிங் பிரபு 138, 322

ரூல் டீன் 309, 343, 365

ரேனுபிரான்பாய் 411

ரொமன் ரோலண்ட் 99

ரோம் 99

லக்னோ 124, 250, 255, 360, 378, 430, 454
லக்னோ இல்லம் 347, 360
லண்டன் 31, 67, 78, 98, 133, 151, 158

லாகூர் 90, 268, 269, 271, 272, 274, 276, 301, 419, 602
லாகூரில் பிரிட்டிஷார் 45, 273, 364
லாகூரில் வகுப்புவாத வன்முறை 307, 348, 364, 396, 398, 417
லாகூரில் சுதந்திரதினம் 315, 342, 362
லாகூரும் பிரிவினையும் 305, 413

லியாகத் அலிகான் 171, 226, 301, 302
லியாகத் அலிகானும் காஷ்மீரும் 477, 480
லியாகத் அலிகான் பாக். பிரதமராக 392, 421
லியால்பூர் 398
லியோடால்ஸ்டாய் 83, 84
லிஸ்டோவெல் கோமகன் 197, 389, 390

லூயி பேட்டன் பர்க் 68, 70
லூயி மவுண்ட் பேட்டன் தோற்றம் 35, 138
மவுண்ட் பேட்டன் வைஸ்ராயாக நியமனம் 35, 36, 37, 38, 64, 65, 93
மவுண்ட் பேட்டன் இந்தியா வருகை 105, 106, 114, 115, 116, 117
மவுண்ட்பேட்டனைக் கொல்ல முயற்சி 333, 334, 336, 337, 339, 340
மவுண்ட்பேட்டன் பின்னணி 68, 69, 70
மவுண்ட்பேட்டனும் எல்லைத் தீர்ப்புகளும் 325
மவுண்ட்பேட்டனும் சர்ச்சிலும் 217, 218, 219
மவுண்ட்பேட்டனும் காமன் வெல்தும் 67, 68
மவுண்ட்பேட்டன் கோமகனாக 364
மவுண்ட்பேட்டன் தலைமையில் அவசரநிலைக்கு 436, 438, 439, 440
மவுண்ட்பேட்டனின் பதவியேற்பு 117, 118
மவுண்ட்பேட்டனின் குடும்பவரலாறு 337
மவுண்ட்பேட்டனும் காந்தியும் 138, 139, 140, 141, 142, 143, 144, 149, 227, 229, 236, 237, 264, 265, 312, 420, 441, 508, 509, 510, 511, 524, 534, 598, 600, 601, 607, 608, 628
மவுண்ட்பேட்டன் கவர்னர் ஜெனரலாக 263, 265, 363, 373, 374, 375, 433, 435, 508, 509, 510, 616
மவுண்ட்பேட்டனின் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் 335, 336, 338, 339, 340, 373, 374, 375, 387, 388, 389, 390
மவுண்ட்பேட்டனும் இந்திய மன்னர்களும் 260, 261, 262, 263, 292, 293, 294, 295, 296, 297, 299
மவுண்ட்பேட்டனும் ஜின்னாவும் 157, 158, 161, 162, 163, 164, 181, 231, 232, 233, 263
மவுண்ட்பேட்டனும் காஷ்மீரும் 483, 484, 485, 486, 488, 490

மவுண்ட்பேட்டன் இந்தியாவிலிருந்து விடைபெறுதல் 616, 617
மவுண்ட்பேட்டனுடன் மாகாண கவர்னர்கள் சந்திப்பு 171, 172, 174, 175
மவுண்ட்பேட்டனின் கடற்படைப்பணி 70, 71, 72, 189, 628
மவுண்ட்பேட்டனும் நேருவும் 38, 132, 133, 136, 137, 188, 189, 190, 263, 456, 509, 628, 629
மவுண்ட்பேட்டனும் பிரிவினையும் 131, 137, 143, 144, 161, 163, 164, 174, 179, 182
மவுண்ட்பேட்டனும் படேலும் 149, 150, 152, 153, 595
மவுண்ட்பேட்டனின் ஆளுமை 72, 73
மவுண்ட்பேட்டனின் அதிகார மாற்றத் திட்டம் 187, 188, 189, 190, 192, 215, 216, 217, 226, 227, 231, 233, 234, 235, 236, 237, 238, 258, 472
மவுண்ட்பேட்டன் இந்திய சுதந்திரத்துக்குப்பின் 628, 629
மவுண்ட்பேட்டனும் வேல்ஸ் இளவரசர் பயணமும் 65, 119, 138, 201, 261, 338, 350
மவுண்ட்பேட்டனின் மாகாணப்பயணம் 175, 177, 178, 179
மவுண்ட்பேட்டன் தென்கிழக்கு ஆசிய கூட்டுப்படைத் தளபதியாக 35, 36, 38, 69, 73, 106, 119, 132
மவுண்ட்பேட்டன் சிம்லாவின் 183, 186, 187, 188, 433
மவுண்ட்பேட்டன் வைஸ்ராயாக 123, 124, 125, 126, 127, 129, 130, 131, 132, 133, 136, 137, 138, 139, 140, 141, 142, 143, 144, 149, 150, 152, 153, 157, 158, 161, 162, 163, 164, 171, 172, 174, 175, 349, 350

லெஃப்டினன்ட் ஜி.டி.லால் 446

லேண்டி கோடால் 124, 346, 360, 478

வங்காளம் 172, 174, 314, 454
வங்காளமும் இணைப்பும் 187, 189, 191, 281
வங்காள வரலாறு 167
வங்காளப் பிரிவினை 162, 164, 167, 168, 182, 259, 266, 267, 304, 324, 392, 472
வடமேற்கு எல்லை மாகாணம் 61, 175
வடமேற்கு எல்லை மாகாணத்தில் வகுப்புவாத வன்முறை 431, 453, 454
வடமேற்கு எல்லை மாகாண கவர்னர்கள் 172
வடமேற்கு எல்லை மாகாணமும் காஷ்மீரும் 477, 480
வடமேற்கு எல்லை மாகாணத்தில் கருத்துக் கணிப்பு 281, 314
வல்லபாய் படேல் வாழ்க்கைக் குறிப்புகள் 150, 151
படேலும் அவசர நிலைக்குழுவும் 435, 436, 439
படேலும் காந்தியும் 151, 287, 454, 462, 504, 510, 519, 560, 584, 600, 607, 611
படேலும் சுதந்திர இயக்கமும் 151, 152
படேலும் ஜின்னாவும் 152
படேலும் மவுண்ட்பேட்டனும் 150, 152, 153, 262, 263, 616
படேலும் நேருவும் 151, 152, 600, 601, 627
படேலும் பிரிவினையும் 156, 164, 180, 422
படேலின் ஆளுமை 150
படேல் சுதந்திரத்துக்குப்பின் 627
படேலும் மன்னர்களும் 297, 298
படேல் ராஜினாமா 594
படேலும் அதிகார மாற்றமும் 216, 226, 472

வாடியா ஜின்னா 171
வாஷிங்டன் போஸ்ட் 547

விக்கி நூன் 412, 449, 450
விக்டர் மேத்யூஸ் 318, 319
விசாரணைக்கமிஷன் 572
வி.பி.மேனன் 191, 192, 215, 217, 297, 299, 360, 433, 434, 485, 486, 487, 488
வில்லியம் விட்ச்சர் 319
வில்லியம் ஹாக்கின்ஸ் 40, 377
வில்லியம் ஹட்சன் 250
வின்ஸ்டன் சர்ச்சில் 34, 69, 72, 92, 264, 316, 604
சர்ச்சில் வன்முறைபற்றி 472
சர்ச்சிலும் காந்தியும் 93, 96, 97, 98, 101, 103, 104, 112
சர்ச்சிலும் இந்திய சுதந்திரமும் 93, 94, 96, 100, 101, 103, 219, 220, 291
சர்ச்சிலும் மவுண்ட் பேட்டனும் 217, 218, 219, 220

விஷ்ணு கார்காரே 496
கார்காரே கைதும் விசாரணையும் 613, 615
கார்காரே கொலைமுயற்சி தோல்வி 516, 528, 535, 541, 554, 555, 557, 558, 559
கார்காரேயும் காந்தி படுகொலையும் 573, 574, 579, 581, 585, 586, 587, 589, 591, 592, 593, 594, 595, 596, 597
கார்காரே - காவல்துறை புலனாய்வு 562, 564, 567, 568, 570
கார்காரேயும் ஆர்எஸ்எஸ்எஸ்சும் 462, 507, 522
விஜயலட்சுமி பண்டிட் 604

வீரசவார்க்கர் 584, 602
வீரசவார்க்கர் கைதும் விசாரணையும் 568, 613, 615
வீரசவார்க்கரின் கொலை முயற்சி 521, 522, 526, 535, 551
வீரசவார்க்கரும் கோட்சேயும் 497
வீரசவார்க்கர் இந்துத் தீவிரவாதத்தலைவராக 494, 495, 577

வெலிங்டன் பிரபுவும் சீமாட்டியும் 223, 224
வெல்ஸ்.எச்.ஜி 350
வென்ட்டி பீமன்ட் 418
வெள்ளையனே வெளியேறு இயக்கம் 102, 103, 135

வைஸ்ராய் மாளிகை 114, 117, 118, 123, 126, 175, 247, 265, 351, 363
வைஸ்ராய்த்தனம் 119, 120, 127
வைஸ்ராய் லின்லித்கோ 357

ஜப்பானின் சரணாகதி 119, 121, 240
ஜம்மு 486, 487, 488
ஜலந்தர் 466
ஜவஹர்லால் நேரு 123, 227, 267, 310, 348, 614
நேருவின் உலகாயதம் 134
நேருவும் அவசரநிலைக் குழுவும் 435, 436, 439, 457, 469
நேருவின் வாழ்க்கை குறிப்பு 132, 133, 134, 135, 136
நேருவும் வன்முறையும் 431
நேருவும் காந்தியும் 135, 136, 137, 287, 454, 462, 504, 512, 519, 524, 530, 534, 536, 544, 545, 560, 584, 600, 601, 602, 603, 606, 610, 611, 624
நேரு சிறைவாசம் 133, 134, 214
நேருவும் சுதந்திரதினமும் 352, 355, 357, 364, 374, 388
நேருவும் ஜின்னாவும் 160
நேருவும் காஷ்மீரும் 484, 490
நேருவும் மவுண்ட்பேட்டனும் 38, 127, 128, 132, 133, 136, 137, 138, 263, 456, 616
நேருவும் பிரிவினையும் 156, 164, 181, 310, 392, 394
நேருவும் படேலும் 151, 152, 600, 601
நேரு சுதந்திரத்துக்குப் பின் 627
நேரு பஞ்சாபில் 288, 421, 422
நேரு பிரதமராக 133
நேருவும் மன்னர்களும் 196
நேருவும் அதிகார மாற்றமும் 188, 189, 190, 215, 216, 220, 226, 227, 235, 346, 472
நேருவின் இந்தியப்பார்வை 134

ஜஹாங்கீர் சக்ரவர்த்தி 40
ஜஹாங்கீர் படேல் 549

ஜாம்ஷித் ஜிம்மி நகர்வாலா 567, 568, 569, 584
ஜார் அலெக்சாண்டர் II 337
ஜார் இரண்டாம் நிகோலஸ் 68, 71, 261
ஜார்ஜ் அபெல் 129, 391
ஜார்ஜ் நோயல் ஸ்மித் 318
ஜார்ஜ் பிடால்ட் 604
ஜார்ஜ் பெர்னார்ட்ஷா 98, 604
ஜாலியன்வாலாபாக் 86
ஜான் நிக்கல்சன் 317
ஜான் பேட்டன் 361
ஜான் பேனட் 273
ஜான் மேனார்ட் கெனெஸ் 32
ஜான் மோர்லீ 197
ஜான் ரஸ்கின் 84
ஜான் வார்ட்ஓர் 319
ஜான் ஷாவே 46

ஜேன் ஸ்மட்ஸ் 98, 604

ஜூனாகட் நவாப் 202, 300

ஜெங்கிஸ்கான் 55
ஜெய்சால்மர் மகாராஜா 298
ஜெய்ப்பூர் மகாராஜா 198, 199, 203, 209, 210

ஜெரால்ட் சேவேஜ்-டி 301, 302, 308, 339
ஜெனீவா 503

ஜேம்ஸ் மில் 43

ஜைன சமயம் 354

ஜோத்பூர் மகாராஜா 208, 298

ஸூல்பிக்கர் அலிபுட்டோ 617, 623

ஸோராஸ்ட்ரீய தத்துவம் 354

ஸ்விட்சர்லாந்த் 99

ஷாஃப்ட்ஸ்பரி கோமகன் 120
ஷாஹீத் சுஹ்ரவர்த்தி 187, 312, 314, 333, 382

ஷில்லட் 314
ஷில்லாங் 377

ஷேக்புரா 400
ஷேக்முஜிபுர் ரஹ்மான் 255

ஹரிசிங் 213, 214, 222, 296, 297, 393, 474, 475, 476, 477, 486, 487, 488
ஹரிலால் காந்தி 610

ஹரிஜன் 114, 420
ஹரோல்ட் லஸ்கி 98
ஹாட்சன்.எச்.வி 471
ஹாரிஸ் மேக்குயித் 46
ஹார்டிங் பிரபு 205

ஹூமாயூன் கல்லறை 455, 456

ஹெக்டார் 40
ஹென்றி எம்.டூரண்ட்46
ஹென்றி தோரா 83, 84
ஹெஸ்ஸே இளவரசி விக்டோரியா 68

ஹேரி ட்ரூமன் 604

ஹைதராபாத் 190, 454, 627
ஹைதராபாத் நிஜாம் 201, 209, 211, 212, 213, 222, 223, 300, 361, 508, 616
ஹைதாரி இல்லம் 331, 365, 424
ஹைம்சார் 114

ஹோ-சி-மின் 36

ஸ்ரீநகர் 254, 295, 474, 477, 478, 482, 485, 487
ஸ்ரீராம்பூர் 51, 52, 53, 54, 59

28124

# நள்ளிரவில் சுதந்திரம்

- இந்தியாவின் கவிதை... ஓவியக்கூடத்தில் அலங்கரிக்கப்பட்ட காட்சிகள்போல் உள்ளன.

[illegible]

- இந்த நூலுக்கு மாற்று இல்லை.

[illegible]

- ஆர்வத்தைத் தூண்டுவது - சிறந்த அறிவுத் தெளிவைத் தருவது.

[illegible]

- இந்தியாவைப் புரிந்துகொள்வதற்குச் சிறந்த நூல்.

[illegible]

- கிளர்ச்சியூட்டுவது... கற்பனையில் ஆழ்த்துவது.

[illegible]




**அலைகள் வெளியீட்டகம்**
25, தெற்குச் சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
தொலைபேசி : 4815474